முத்துலட்சுமி ராகவன்

அம்மம்மா கோடி தோழி...

பாகம் - 1

வணக்கம்...

உங்களிடம் சொல்லியிருந்தபடி முத்துலட்சுமி ராகவனின் ஐந்துபாக நாவலை வெளியிட்டு விட்டேன்... லட்சுமி பாலாஜி பதிப்பகத்தின் பதினைந்தாவது நாவலாக இந்த ஐந்துபாக நாவல் வெளியாகிறது... இனி அவருடைய ஆறுபாக நாவலை வெளியிட ஆயத்தமாக வேண்டும்... இதை உங்களின் பேராதரவிலேயே சாதித்திருக்கிறேன்... இதே ஆதரவை தொடர்ந்து நல்கும்படி கேட்டுக்கொள்கிறேன்...

தி. ராகவன்
பதிப்பாளர்

அழைக்க : 95669 42486
மின்னஞ்சல் : bchandar24@yahoo.com

ஆசிரியர் கடிதம்...

'கோவிலைப் பாதுகாப்போம்...'

என் பிரியத்துக்குரிய... வாசக.. வாசகிகளே...!

நமது இந்தியா ஆன்மீக நாடு...! மேலை நாடுகள் எல்லாம் நமது தேசத்தின் ஆன்மீகத்தில் ஈர்க்கப்பட்டு அலையலையாய் இங்கே வருவதை நீங்களும் அறிந்திருப்பீர்கள்.. நமது இந்திய தேசத்தின் ஆன்மீகத்தின் வேரை யாராலும் அடையாளம் காண இயலாது....

அப்படிப்பட்ட உன்னதமான ஆன்மீகத்தின் உறைவிடமான நமது பாரம்பர்யப் பெருமை மிக்க கோவில்கள் ஒவ்வொன்றும் நமது தேசத்தின் பொக்கிசம்... அந்தப் பொக்கிசத்தை நாம் பத்திரமாக பாதுகாவல் செய்து கொண்டிருக்கிறோமா...?

என் பயணங்களின் இடையினில் பாழடைந்த கோவில்களை நான் காண நேரிடும் போது என் மனதில் வலி ஏற்படுகின்றது. நம் இந்தியக் கோவில்களின் தூண்களில் செதுக்கப் பட்டிருக்கும் சிற்பங்களையும்.. அவற்றின் மேற்கூரையில் வரையப் பட்டிருக்கும் சித்திரங்களையும் ஒருமுறையேனும் நீங்கள் ஊன்றிக் கவனித்திருக்கிறீர்களா..?

அவை நம் பண்பாட்டின் ஜீவநாடியை உணர்த்தும் கலைக்களஞ்சியங்கள்...! கேட்பாரில்லாமல் அவை புதையுண்டு போக நாம் விட்டு விடக் கூடாது...

வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம் என்று சொல்வதைப்போல.. ஊருக்கொரு கோவிலை நாம் பாதுகாக்க வேண்டும்...

எந்தெந்த ஊரில் கோவில்கள் சிதிலமடைய ஆரம்பிக்கின்றனவோ... அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அந்தக் கோவிலை பராமரிக்கும் பொறுப்பை கையில் எடுத்துக் கொள்ள வேண்டும் செடி முளைக்காத கோவில் மதில் சுவர்களையும்... புதர்மண்டாத அதன் சுற்றுப் புறத்தையும் நாம் தரவேண்டும்... ஆலய வழிபாடு ஆயிரம் நன்மைகளைத் தரும்...

'கோவிலைப் பாதுகாப்போம்...'

என்ற கோரிக்கையை இந்த முதல் பாகத்தின் ஆசிரியர் கடைசியில் நான் உங்கள் முன் வைக்கின்றேன்...

நட்புடன்

- முத்துலட்சுமி ராகவன் -

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

"அம்மம்மா... கோடி தோழி..!"

பாகம் – I

அந்தரங்க மனதினிலே
உன் முகம் தான் அதை அறிவாயா?

வெண்மேகங்கள் பஞ்சுப் பொதியைப் போல மிதந்து கொண்டிருந்தன.. அதன் மேற்பரப்பு பஞ்சுப் பொதியைப் போல இருக்க... அதில் உட்கார்ந்து சவாரி செய்ய ஆசைப்பட்டாள் ராதிகா... அவளது ஆசையை அறிந்ததைப் போல... ஒரு மேகம் அவளருகில் வேகம் குறைந்து நின்றது...

'ஆஹா...' என்று மகிழ்ந்து போனவளாக... அதில் ஏறி அமர்ந்து கொண்டாள் ராதிகா...

மேகம் மீண்டும் பயணத்தைத் தொடர... ராதிகா விண்ணில் பறந்தபடி.. பூலோகத்தை பார்வையிட்டாள்..

'அதென்ன.. அருவிக்கரையைப் போல இருக்கே..'

அவளது பார்வை படிந்த இடத்தில் பச்சைப் பசோலன்று செடி.. கொடிகள் அடர்ந்திருந்தன... உயரமான

பாறையின் திட்டின் மேல் சுழித்தோடி வந்த ஆறு... அருவியாக மாறி கொட்டிக் கொண்டிருந்தது...

அது கொட்டிக் கொண்டிருந்த இடத்தில் பெரும் பள்ளம் இருக்க அதில் வழிந்து நிரம்பிய அருவிநீர்.. ஆறாக பெருகி ஓடிக் கொண்டிருந்தது...

ஆற்றங்கரையின் அருகில் பெரிய அரசமரம் இருந்தது... அதனடியில் பெரியசிமிண்ட் மேடை இருந்தது.. மேடையின் மேல் பிள்ளையார் வீற்றிருந்தார்...

ஆற்றங்கரைக்கும்.. அரசமரத்தடி பிள்ளையார்க்கும்... காலம் காலமாக இருந்து வரும் சம்பந்தத்தை உணராதவளாக...

'அது எப்படி.. எல்லா ஆற்றங்கரையிலும்.. ஒரு அரச மரத்தடி பிள்ளையார் இருக்கிறாரு...?' என்று நெற்றியில் ஒற்றை விரலைத் தட்டி யோசித்தாள் ராதிகா...

அவளது யோசனையை.. நிறுத்தி.. இறக்கி விடச் சொல்லும் சமிக்ஞையாக மேகம் நினைத்ததோ என்னவோ... 'டகார்' என்று பூமிக்கு இறங்கி விட்டது...

'இதென்ன இங்கே இறக்கி விடுது...'

என்னவோ... இறங்க வேண்டிய இடத்தை அவள் மேகத்திடம் சொல்லியிருந்ததைப் போலவும்... அது அதை மறந்து.. வேறு இடத்தில் இறக்கி விடுவதைப் போலவும்.. நினைத்தபடி.. வேறு வழியின்றி மேகத்தைவிட்டு இறங்கி.. அருவிக் கரையில் கால் பதித்தாள் ராதிகா...

'இந்த இடம் டக்கரா இருக்கே...'

அவள் ரசித்துக் கொண்டிருந்தபோது... மேகம் உயர்ந்து... வானில் மிதந்து பறந்து விட...

'ஏய்.. என்னை எதுக்காக இங்கே விட்டுட்டுப் போகிற...' என்று கூவியபடி... அருவிக்கரையில் ஓடினாள் ராதிகா...

அவளது கூச்சலை மதிக்காமல் மேகம் போயே.. போய்விட... நின்று.. அருவிக்கரையைச் சுற்றிப் பார்த்தாள்...

'இனி என்ன செய்கிறது...?'

கண்களை மூடி யோசித்துக் கொண்டிருந்தவளை... யாரோ தோள் பற்றி உலுக்கினார்கள்...

"ராது... ஏய்.. ராது..."

"த்சு... யாரது..? நானே அருவிக் கரையில் நின்னுக்கிட்டு அடுத்து என்ன செய்கிறதுன்னு யோசிச்சுக்கிட்டு இருக்கேன்.. இதில.. ராதுவாவது.. கீதுவாவது..."

"என்னது... அருவிக்கரையா..? அடியேய் கீது.. இங்கேவாடி... இவ என்னவோ புலம்பறா..."

"கீதுவும் வந்தாச்சா.. விளங்கினாப்புலதான்... ஹீ ஆர் யு மேன்..?"

"இது மேன் இல்லைடி... வுமன்.. மேனுக்கு உன்னை எழுப்பி காலேஜீக்கு அனுப்புற 'ளொள்ளு' பிடிச்ச

வேலையெல்லாம் கிடையாதே.. அவரு நிம்மதியா எழுந்திருச்சு... காபியைக் குடிச்சுக்கிட்டே பேப்பரைப் படிச்சுக்கிட்டு இருக்கிறாரு... வுமன் தலையில அப்படியா எழுதி வைச்சிருக்கு.. ? கொஞ்சம் படுத்தாம எழுந்திருச்சுத் தொலைடி..."

"என்னடா இது பெருந்தொல்லையாய் போச்சு..."

மேகத்தை தேடியபடி கண் விழித்த ராதிகாவின் முன்னால் கோப முகத்துடன் ராஜேஸ்வரி நின்று கொண்டிருந்தாள்...

அருவிக்கரை மறைந்து.. நான்கு சுவர்களும்.. ஜன்னலும் தட்டுப்பட... அவசரமாக எழுந்து கட்டிலில் அமர்ந்தாள் ராதிகா...

"நான் எங்கேயிருக்கேன்.. ?"

"ம்ம்... உன் அப்பா கட்டி வைச்சிருக்கிற அரண்மனையில் இருக்கிற... போதுமா.. ? காபியைப் பிடி.. எனக்கு அடுப்படியில் ஆயிரம் வேலை இருக்கு..."

"அருவிக்கரை எங்கேம்மா.. ?"

காபியை வாங்கியபடி ராதிகா கேட்டுவைக்க.. ராஜேஸ்வரியின் கண்களில் தீப்பொறி பறந்தது...

"வேண்டாம்டி... காலங்கார்த்தாலே வம்பைக் கட்டி இழுக்காதே எனக்கு நல்லா வந்திரும் வாயிலே..."

"எதுக்கும்மா கோபிச்சுக்கறிங்க... ?"

"ஏழுகழுதை வயசாகுது... என்ஜினியருக்கு படிக்கிறேன்னுதான் பேரு.. ஒரு நாளைக்காவது நேரத்தோடு எழுந்திருச்சு கிளம்புகிறயாடி.. ? எனக்கு உதவிதான் செய்ய வேணாம்... உபத்திரமாவது.. பண்ணாமல் இருக்கலாமில்ல.. ?"

"நான் என்னம்மா செய்தேன்..."

"பேசாதே.. எனக்கு நல்லா வந்திரும் வாயிலே... தண்ணியில்லாக் காட்டுல இருந்துக்கிட்டு.. இவ அருவிக்கரையில் நிற்கிறாளாம்.. அதைக் காணோமுன்னு கேள்வி வேற கேட்கிறா..."

"என்னவோ.. மெட்ராஸ் மாப்பிள்ளைதான் வேணும்ன்னு நீங்க ஒற்றைக் காலில் நின்று அப்பாவைக் கட்டிக் கிட்டிங்களாம்.. அப்புறம் எதுக்காக... இந்த சிங்காரச் சென்னையை தண்ணியில்லாக் காடுன்னு சொல்கிறிங்க.. ?"

காபியை உறிஞ்சியபடி ராதிகா புருவங்களை உயர்த்த... அவள் தலையில் ஒரு போடு போட்டாள் ராஜேஸ்வரி...

"யாரு ஒற்றைக் காலில் நின்னது.. ? நானா.. ? உன் அழகு மன்மத அப்பாவைக் கல்யாணம் பண்ணிக்க நான் ஒற்றைக் காலில் நின்னேனா... ? தேவைதான் எனக்கு.. உனக்கு யாருடி இந்தக் கதையை அள்ளி விட்டது.. ?"

"வேற யாரு அள்ளி விட்டது... எல்லாம்

ராதிகா காபியைக் குடித்து விட்டு காலி தம்ளரை ராஜேஸ்வரியிடம் நீட்டி விட்டு.. அதற்கும் ஒரு அடியை தலையில் வாங்கினாள்...

"காபி போட்டுத்தான் குடிக்கத் தெரியாதுன்னா.. காலி தம்ளரைப் போய் கிச்சனில் இருக்கிற சின்க்கில் போடக் கூடவா உனக்குத் தெரியாது...?"

"எனக்கு காலேஜீக்கு நேரமாச்சும்மா..." ராதிகா சிணுங்க...

"எதுக்கெடுத்தாலும் இதையொண்ணைச் சொல்லிருவியே... எனக்கு நல்லா வந்திரும் வாயிலே... போடி... எனக்குன்னு வந்து வாய்ச்சதும் சரியில்ல... பிறந்ததும் சரியில்ல..."

தலையில் அடித்துக் கொண்டு.. காலி காபித் தம்ளரை எடுத்தபடி ராஜேஸ்வரி நகன்று விட.. கட்டிலில் அமர்ந்து ஒயிலாக சோம்பல் முறித்த ராதிகா... அழகாக இருந்தாள்...

ஒல்லியாக.. உயரமாக.. வட்ட முகத்தில் பெரிய கண்களுடன் இருந்தவளின் அழகுக்கு அழகு சேர்த்தது.. அவளின் கூடவே பிறந்ததைப் போல ஒட்டிக் கொண்டிருந்த அந்த துறுதுறுப்பு...

கட்டிலை விட்டு எழுந்தவளின் இடுப்புக்கு கீழே படர்ந்து பரவித் தொங்கிக் கொண்டிருந்தது.. அடர்ந்த கருமையான முடி...

ராதிகாவுக்கு... நீண்ட கூந்தலைக் கொண்டிருப்பதில் சங்கடங்கள் சில இருந்தன...

அதற்கு தினந்தோறும் எண்ணை தடவி பராமரிக்க வேண்டும்.. வாரம் இருமுறை... ஷாம்பூ போட்டு அலசி உலர வைக்க வேண்டும்..

நீண்டு.. அடர்ந்த முடி.. அவ்வளவு சீக்கிரத்தில் உலர்ந்தும் தொலைக்காது.. ஈரமுடியுடன் தலையைப் பின்னிவிட்டு தலைவலி வந்து அவஸ்தைப் படவேண்டும்...

ராதிகாவின் குட்டை முடித் தோழிகள்.. மாதந்தோறும் பியூட்டி பார்லருக்கு சென்று.. முடியை வெட்டி விட்டு சீராக்கிக் கொள்வார்கள்...

அவர்கள் முடியை விரியவிட்டு.. சின்னத்திரையில் வரும் விளம்பர மாடல்களைப் போல அலட்டலாக வரும்போது.. ராதிகா நீண்ட பின்னலுடன்.. அம்சமாக வந்து சேருவாள்...

"அம்மா... இந்த முடியாலே பெருந்தொல்லைம்மா.."

"யாருக்கு...?"

"வேற யாருக்கு..? எல்லாம் உங்களுக்குத்தான்.. இந்த முடியை பின்னல் போட்டு விட நீங்க தினமும் படுகிற சிரமத்தைப் பார்த்து எனக்கு மனசே தாங்கலைம்மா..."

ராதிகா இமை கொட்டி மூக்கை உறிஞ்ச...

'இதைப்போல எத்தனை நாடகத்தை நான் பார்த்திருப்பேன்...' என்ற ரீதியில் பார்த்து வைப்பாள் ராஜேஸ்வரி...

"காலையில் ஐந்து மணிக்கெல்லாம் அலாரம் வைச்சு எழுந்திருச்சு.. இந்த வீட்டில் அத்தனை வேலைகளையும்.. நான் ஒருத்தியாய் பார்த்துக்கிட்டு கிடக்கிறேன்... அதுக்கு உன் மனசு தாங்குது.. இந்த ஒற்றைப் பின்னலை ஒரு நிமிசத்தில் நான் பின்னி விடுகிற சிரமத்தைப் பார்த்துத்தான் உன் மனசு தாங்காம போச்சா..?"

இருந்தாலும்.. இந்த அம்மா இத்தனை புத்திசாலியாய் இருந்து வைக்கக் கூடாது என்று ராதிகாவுக்கு தோன்றியது...

அது என்னவோ.. அந்த வீட்டில் யார் என்ன வார்த்தை அஸ்திரங்களை விட்டாலும்.. சளைக்காமல் மறுநொடியில் பதில் அஸ்திரத்தை பிரயோகித்து.. அவற்றை முறியடிப்பதில் ராஜேஸ்வரிக்கு நிகர் ராஜேஸ்வரிதான்...

"நான் அதுக்கு சொல்லலைம்மா..."

"நீ எதுக்கு சொல்கிறேன்னு எனக்குத் தெரியும்டி மகளே.. நீ விடிய விடிய ராமாயணம் படிச்சாலும்.. உன் முடியை கந்தலகோலமா... கீத்துமாத்தா.. வெட்டிக்க ஒருநாளும் நான் சம்மதிக்க மாட்டேன்.. நான் வாழ்க்கைப்

பட்டதுதான் சென்னை... பிறந்துவளர்ந்தது காமலாபுரம்.. அதனால.. இந்த சென்னைப் பட்டினத்து டகால்பாச்சா வேலையையெல்லாம் விட்டுட்டு.. ஒழுங்காய் முடியை பின்னிக்கிட்டு காலேஜிக்கு கிளம்புகிற வழியைப் பாரு.."

"இது இர்ரிட்டேட்டா இருக்கும்மா..."

"எனக்கு நல்லா வந்திரும் வாயிலே.. எதுடி இர்ரிட்டேட்டா இருக்குது..? நானா.. இல்லை உன் முடியா..?"

'லேடி ஹிட்லர்...'

தன் செல்ல அம்மாவிற்கு ராதிகா வைத்திருக்கும் பட்டப் பெயர் இது...

ராஜேஸ்வரியைத் தவிர.. அந்த வீட்டிலிருக்கும் மற்ற ஜீவன்களுக்கு அந்தப் பட்டப் பெயரைப் பற்றித் தெரியும்...

பேஸ்டும்.. பிரஷ்ஷீமாக வாசல் பக்கம் போன ராதிகாவைப் பார்த்து...

"என்ன ராது... காலையில அருவிக்கரையில குளியல் போட்ட போல..." என்று கண்சிமிட்டிச் சிரித்தாள் கீதா... குளித்து முடித்து... பள்ளிக்குச் செல்ல சீருடையுடன் தயாராக நின்றாள்...

"ம்ஹீம்.. கனவிலதான் நாம அருவிக்கரையைப் பார்க்கமுடியும்.. நிஜத்தில் முடியுமா..? அது நம்மவீட்டு லேடி ஹிட்லருக்குத் தெரியுதா..? தூக்கத்தைக் கெடுத்து..

கனவைக் கலைச்சிட்டாங்கடி..." பல்லைத் தேய்த்தபடி கீதாவை மேலும்... கீழுமாக பார்வையிட்டாள் ராதிகா...

"என்னடி நீ.. என்னைப் போயி இப்படிப் பார்க்கிற.. இந்தப் பார்வையை.. எதிர்த்த வீட்டுத் தடியன்தான் பார்க்கனும்..." கீதா புருவங்களை உயர்த்திச் சிரித்தாள்...

"அவன் எப்படிப் பார்ப்பான்..? அவன் பார்க்கிறதுக்கு முன்னாடியே.. நம்ம வீட்டு லேடி ஹிட்லர்.. அவனை அனல் பார்வை பார்த்து வைச்சிருக்காங்களே.. இவங்களாலே இந்தத் தெருவில் ஒருத்தன் கூட நம்மளை சைட் அடிக்க மாட்டேன்கிறாங்கடி... அவ்வளவு பயம்.."

"அதைச் சொல்லு..."

"எதைச் சொன்னாலும்.. நல்லா வந்திரும் வாயிலே.. நல்லா வந்திரும் வாயிலேன்னு.. சொல்லியே விரட்டியடிக்கிறாங்களேடி..."

"இப்ப பேசறதை விட.. எதை நல்லாப் பேசிறப் போறாங்க ராது..."

"வேணும்னா இதை அவங்ககிட்டயே கேட்டுச் சொல்லவா..?"

"எதுக்கு இந்த கொலைவெறி...?"

"தெரியுதில்ல...? அலம்பல் பண்ணாம அடங்கு.. என்ஜினியரிங் படிக்கிறவளே.. அடக்கி வாசிக்கிறேன்.. நீ

ப்ளஸ்டூவைப் படிச்சுக்கிட்டு.. எதிர்த்த வீட்டுத் தடியனைப் பத்திப் பேசறியா..?"

"என்னடி ஆச்சு..? ஒளவையாரைப் போல ஆரம்பிச்சுட்ட..?"

"உன்னை யாருடி... இத்தனை சீக்கிரமாய் குளிச்சு... ரெடியாகச் சொன்னது...?"

"அதான் விசயமா..? என்னடா.. வேதாளம்.. தேவாரம் பாடுதேன்னு நினைச்சேன்..."

"நீ இதைமட்டுமா நினைப்ப...? இன்னும் என்னென்னவோ நினைப்ப.. இரு.. லேடி ஹிட்லர்கிட்ட பற்ற வைக்கிறேன்..."

ராதிகா தங்கையை மிரட்டிக் கொண்டிருந்த போது...

"அக்கா... என் பேனாவை ஏன் எடுத்த..?" என்று கேட்டபடி சுந்தர் அங்கு வந்து நின்றான்...

தினமும் ஒரு பேனாவைத் தொலைத்து விட்டு.. தம்பி... தங்கையின் பேனாவில் கை வைக்கும் ராதிகா அசடு வழிந்தாள்...

தேவதையாய் என் கண்களுக்கு...
தேன்மொழியே..! நீ தெரிவதென்ன...

"சுந்தர்... என் கண்ணில்ல..." தம்பியின் முகவாயைப் பிடித்து ராதிகா கொஞ்ச ஆரம்பிக்க.. அவள் கையை விலக்கி...

"இல்லை..." என்று நிர்தாட்சண்யமாக சொன்னாள் சுந்தர்...

"ஏண்டா.. ஒரு பேனாவுக்காக.. கூடப் பிறந்தவளின் பாசத்தையே தூக்கி எறிவியாடா...?" ராதிகா வராத கண்ணீரைத் துடைத்துக் கொள்ள..

"நடிக்காதே.. ஒரு பேனாவா..? ஓராயிரம் பேனா.. தினமும் ஒரு பேனான்னு என் பேனாவைச் சுட்டு வைக்கறியே.. பாக்கெட் மணி கட்டாகிறது.. உனக்கா இல்லை எனக்கா.." என்று எரிந்து விழுந்தான் அவள் தம்பி...

"எனக்காக இந்தச் சின்னச் செலவை நீ செய்ய கூடாதாடா...?"

"அதை நீ செய்ய வேண்டியது தானே..."

"காலேஜ் போகிறவளுக்கு ஆயிரம் செலவு இருக்கும்டா கண்ணா... அதில கையை வைச்சா... கையைக் கடிக்கும்டா..."

"எனக்கு மட்டும் கடிக்காதா...?"

"இப்ப என்ன...? உன் பேனாவை நான் எடுக்கக் கூடாது... அவ்வளவு தானே... நாளையில இருந்து எடுக்க மாட்டேன்.. போதுமா..."

"அப்ப.. இன்னைக்கு...?"

சுந்தரின் கேள்வி காதில் விழாததைப் போன்ற பாவனையுடன் ராதிகா வீட்டுக்குள் சென்றுவிட.. கீதா சிரித்தாள்...

"இது நாளை முதல் குடிக்க மாட்டேன்னு.. குடிமகன்கள் சொல்கிற வசனம்டா சுந்தர்.. உன் பேனாவை அவ கைவைக்கிறதை நிறுத்தவே மாட்டா... நாளைக்கு நீ கேட்டா.. இதே டயலாக்கை திருப்பிச் சொல்லுவா... அவள் ஒரு தொடர்கதைடா சுந்தர்.."

"இன்னைக்கு இதை விடப் போறதில்லை..."

"என்னடா செய்யப் போகிற...?"

"பஞ்சாயத்தைக் கூட்டப் போறேன்..."

காலை டிபன் சாப்பிட டைனிங் ஹாலுக்கு வந்த கிருஷ்ணமூர்த்தியிடம் வழக்கு வந்தது....

அவர் நிதானமாக இட்லி.. தோசையைக் காலி பண்ணியபடி சுந்தரின் மனக் குமுறலைக் கேட்டார்... ராதிகாவை நிமிர்ந்து பார்த்தார்... அவள் ஒன்றுமறியாத பச்சைக் குழந்தையைப் போல முகத்தை வைத்துக் கொண்டாள்...

"ஏம்மா ராதிகா... உன் தம்பி பாவம் சின்னவன்..."

"ஆமாம்ப்பா..."

"அவனுக்கு ஒரு சிக்கலை நீ உண்டாக்கலாமா..?"

"கூடாதுப்பா..."

"இனிமே.. இப்படிச் செய்யாதே..."

"ஆகட்டும்ப்பா..."

விசாரணையை முடித்து.. தீர்ப்பு வழங்கி விட்ட நீதிபதியைப் போல மகனின் முகத்தைப் பார்த்தார் கிருஷ்ணமூர்த்தி... அவன் பல்லைக் கடித்தான்...

"பார்வையைப் பாரேன்.. சின்னக்கவுண்டர் கூட இவர் கிட்ட வரமுடியாதுங்கிறதைப் போல... என்னமாய் பார்த்து வைக்கிறாரு..." கீதாவின் காதருகில் முணுமுணுத்தான்...

"அக்காகிட்ட சொல்லிட்டேன் சுந்தர்.. அவ இனி உன் வழிக்கு வரமாட்டா..." கிருஷ்ணமூர்த்தி எழுந்து கொள்ள முயல...

"அப்பா.. தீர்ப்பை மாத்திச் சொல்லுங்க.." என்றான் சுந்தர்..

ராதிகா அப்பாவியாய் தந்தையைப் பார்க்க.. கீதா சிரிப்பை அடக்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்டாள்...

"என்னடா..?" கிருஷ்ணமூர்த்திக்கு எதுவும் புரியவில்லை...

அவர் மத்திய அரசாங்கத்தில்.. முக்கியமான பதவியில் இருந்தார்..பொறுப்புக்கள் அதிகம் என்பதால்.. சினிமாக்களை அதிகமாக பார்க்கமாட்டார்... அப்படியே பார்த்தாலும்.. வசனங்களை நினைவில் வைத்துக் கொள்ளமாட்டார்..

ஆகையால்.. சுந்தர் சொல்லிய வார்த்தைகளின் சாராம்சம் புரிந்தாலும்.. அது ஒரு திரைப்படத்தின் முக்கியமான வசனம் என்று அவருக்குப் புரியவில்லை...

"இவள்லாம்... சொன்னால் கேட்டுக்கிற பிறவியில்லை..."

"அதுக்காக...?"

"இனி பேனாவைத் தொலைச்சா.. உங்க பாக்கெட்டில் கை வைக்கச் சொல்லுங்க..."

"ஏண்டா.. எனக்கு பேனா வேண்டாமா...?"

"உங்களுக்கு எதுக்குப்பா பேனா..? அதுதான் கடைவீதியில இருந்து எல்லா இடத்திலயும் கம்யூட்டர் ஆட்சி பண்ண ஆரம்பிச்சிருச்சு... நீங்க கையெழுத்துக் கூடப் போட வேண்டியதில்லை.. அட்டென்டன்ஸ் ரிஜிஸ்டருக்குப் பதில் நீங்க கைநாட்டைப் பதிக்க ஒரு மெஷினிருக்கு..."

"கைநாட்டா..?"

கிருஷ்ணமூர்த்தி.. ஒரு முதுகலைப் பட்டதாரி.. அவரை அவரது செல்லமகன் கைநாட்டாக்கி விட்டதில் அவருக்கு ஏகப்பட்ட வருத்தம்..

"அதுக்குப் பெயர் கைநாட்டு மெஷின்தானேப்பா..."

அவர் வருத்தத்தை கண்டுகொள்வேனா என்று... இரக்கமில்லாமல் சொன்னான் சுந்தர்...

ஏதோ சொல்ல வாய்திறந்த கிருஷ்ணமூர்த்தி.. மகனிடம் தர்க்கம் செய்து ஜெயிக்க முடியாது என்று கடந்தகால வரலாற்றை நினைவு படுத்திக் கொண்டவராக வாய் மூடிக் கொண்டார்..

"அப்பா கூட ஏண்டா மல்லுக்கு நிற்கிற..?" ராஜேஸ்வரி கணவன் பாசத்தில் மகனை அதட்டினாள்...

"வேறு யாருகூட மல்லுக்கட்டறதும்மா..? நீங்களே சொல்லுங்க..." தாயிடம் நியாயம் கேட்டான் சுந்தர்...

"அப்படியொரு நேர்த்திக்கடன் இருக்காடா உனக்கு..?"

"இல்லைதான்.. ஆனா.. எனக்கு முதல்ல பிறந்திருக்கிற உங்க மூத்த மகள் தினமும் அப்படியொரு நேர்த்திக்கடனை எனக்கு உண்டாக்கி வைக்கிறாளே.. அதை ஏன்னு கேட்க மாட்டிங்களா..?"

"அவளை கேட்டுட்டாலும்..." ராஜேஸ்வரி அலுத்துக் கொண்டாள்...

"நல்லா வருது வாயிலே.. நல்லா வருது வாயிலேன்னு பேசுகிற உங்களாலேயே அவளைக் கேட்க முடியலைன்னா.. யாரும்மா அவளைக் கேட்கிறது..? நம்ம குடும்பத்தலைவர்தானே கேட்கனும்..?"

சேவல் கூவுவதற்கு முன்னாலே எழுந்து.. சேவலை எழுப்பிவிட்டு நாள் முழுவதும் அந்தக் குடும்பத்திற்காக உழைத்துவிட்டு நள்ளிரவில் துயில் கொள்ளும் தன்னை விட்டுவிட்டு... சூரியன் புறப்பட்டு வெகு நேரம் ஆனபின்னால் ஹாயாய் கண் விழித்து... கையில் பேப்பரோடு காபியை உறிஞ்சி.. குளித்து முடிக்கும் மிகப் பெரிய வீட்டு வேலையை செய்து முடித்து.. காலை டிபனை உள்ளுக்கு தள்ளிவிட்டு.. ராஜேஸ்வரி செய்து வைத்திருக்கும் மதிய உணவு கேரியரை தூக்கிக் கொண்டு.. வேலைக்குப் போகிறேன் பேர்வழியென்று... வீட்டுப் பிரச்னைகளில் இருந்து தப்பித்து.. மாலையில் வீடு திரும்பி... ஒருகுளியல் போட்டு..

ராஜேஸ்வரி செய்து வைத்திருக்கும் பலகாரத்
மொக்கிவிட்டு... காபியை வயிற்றுக்குள் சரித்து
டிவியின் முன்னே அமர்ந்து ஒரு சேனைல கூ
மற்றவர்களை பார்க்க விடாமல் நியுஸ் சேனை
வைத்து.. உலக நடப்பை விமரிசனம் செய்து விட்டு
இரவு டிபனை ஒரு கைபார்த்து விட்டு... சுகமா
தூங்கப் போய்விடும் கொடுத்து வைத்த பிறவியா
கிருஷ்ணமூர்த்தியை சுந்தர் குடும்பத்தலைவனாக்கியதி
ராஜேஸ்வரிக்கு கொஞ்சம்கூட உடன்பாடில்லை...

"அடேங்கப்பா.. சம்பாதித்துப் போட்டுட்டா மட்டு
தலைவராகி விட முடியுமா...?" என்று நொடித்தாள்...

"டேய் சுந்து... நாற்காலிச் சண்டையை கிளப்பி
விட்டுட்டயேடா..."

சுந்தர் தனக்கெதிராகத்தான் பிராது
கொடுத்திருக்கிறான் என்பதை மறந்து தம்பியின்
காதில் கிசுகிசுத்தாள் ராதிகா...

அதை செவிமடுத்த சுந்தர் அவளை முறைக்க...
அருகிலிருந்த கீதா.. வாயைப் பொத்திக் கொண்டு
'களுக்' கென்று சிரித்தாள்...

"சிரிப்பென்னடி வேண்டிக்கிடக்கு..?" ராஜேஸ்வரியின்
கண்களில் அனல் பறந்தது...

குடும்பத்தினரின் பேச்சைக் கவனித்தபடி சந்தடி
சாக்கில் நழுவப் பார்த்த கிருஷ்ணமூர்த்தியை...

"அப்பா.." என்று சுந்தரின் குரல் தடுத்து
நிறுத்தியது..

"என்னை என்னடா செய்யச் சொல்கிற..?"
கிருஷ்ணமூர்த்தி அழமாட்டாத குறையாய் வினவினார்...

"அக்காவை என்னன்னு கேளுங்கன்னா...
'என்ன'ன்னு ஒற்றைவார்த்தையில் கேட்டுட்டு அப்படியே
எஸ்கேப் ஆகிவிடப் பார்க்கறிங்களே.. உங்ககிட்ட
இந்தப் பஞ்சாயத்தை கொண்டு வந்ததுக்கு பேசாம
அம்மா கிட்டயே இந்தப் பஞ்சாயத்தை கொண்டு
போயிருக்கலாம்..."

தீர்ப்பு வழங்கும் உரிமை.. கணவனிடமிருந்து
கைமாறி தன்கைக்கு வந்ததில் ராஜேஸ்வரி உற்சாகமானாள்...

"இப்ப உனக்கு என்னடா செய்யனும்...?"

"இவளை அடக்கனும்மா..."

"அது முடியாத காரியம்டா மகனே.. இவ அப்படியே
உங்க அப்பாவைக் கொண்டு பிறந்திருக்கிறா..
இவளாவது.. அடங்குகிறதாவது..."

கணவனைத் திட்ட இந்த முறையைத்தான்
கையாளுவாள் ராஜேஸ்வரி.. அதைத் தெளிவாக உணர்ந்து
வைத்திருந்த கிருஷ்ணமூர்த்தி...

'போதுமாடா..?' என்ற அர்த்தத்தில் மகனைப்
பார்த்தார்...

"இது வேலைக்காது போல... அக்கா.. இனிமே என் பேனாவை எடுக்கிற வேலையை வைத்துக்காதே..."

"அதுக்கென்னடா சுந்து... நீதான் எனக்கொரு வழியை காட்டிட்டயே... இனிமே அப்பா பேனாவையே கை வைக்கிறேன்..."

"அஃ்து... அதை விட்டுட்டு என்பக்கம் திரும்பாதே.."

"ஊஹரீம்... நான் ஸ்டெரயிட் பார்வர்டா.. அப்பா பக்கம் மட்டுமே பார்ப்பேன்.. கவலையே படாதே..."

ராதிகா.. உத்திரவாதம் அளிக்க... பேச்சு வார்த்தை முடிந்து விட்ட பாவனையில்...

"பஞ்சாயத்து கலைஞ்சிருச்சு..." என்று அறிவித்து விட்டு சுந்தர் பள்ளிக்கு கிளம்பி விட்டான்...

"அம்மா... நானும் ஸ்கூலுக்கு கிளம்பறேன்.." கீதா கையசைத்து விட்டு.. சுந்தரைத் தொடர்ந்து வெளியேறினாள்...

"ம்மா... என் லன்ச் பாக்ஸ்..." ராதிகா மட்டும் கிளம்பாமல் ராஜேஸ்வரியின் முகம் பார்க்க... அவள் சிடுசிடுத்தாள்...

"ஏண்டி... அதுக ரெண்டும் உனக்கு இளையதுக தானே..? அதுக எப்படி தானாய் லன்ச் பாக்ஸை எடுத்துக்கிட்டு போகுதுக.. உனக்கு மட்டும் நான் கையிலெடுத்துக் கொடுக்கனுமாக்கும்..?"

ராஜேஸ்வரியை தொடர்ந்து பேச விட்டால்... அவள் வாயில் நல்லதாக நான்கு வார்த்தைகள் வந்து விழுந்து விடும் அபாயம் இருந்ததால் அவசர.. அவசரமாக.. ராதிகா தன் மதிய உணவு டப்பாவை கையில் எடுத்துக் கொண்டு பறந்தாள்...

புயலடித்தபின் நிலவும் அமைதி அந்த வீட்டில் படர்ந்திருக்க... கிருஷ்ணமூர்த்தி.. மனைவியை பருகுவதைப் போலப் பார்த்தபடி நின்றார்...

"என்னாச்சு..? ஒருமார்க்கமாய் பார்த்துக்கிட்டு நிக்கறிங்க...? ஆபிஸிக்கு கிளம்பும் உத்தேசமில்லையா..?" கணவரை சந்தேகமாகப் பார்த்தாள் ராஜேஸ்வரி...

"ராஜி...." கிருஷ்ணமூர்த்தியின் குரல் குழைந்தது...

"ராஜிக்கு என்ன வைச்சிருக்கீங்க..." ராஜேஸ்வரியின் முகத்தில் மென்மை வந்தது...

"மூன்று பிள்ளைகளைப் பெத்து வளர்த்தவளைப் போலவே நீ இல்லைடி..."

"அப்புறம்... வேற எப்படி இருக்கேனாம்..?"

"உன்னைப் பொண்ணுப் பார்க்க வந்தப்போ.. எப்படி இருந்தியோ... அப்படியே இருக்கேடி..."

"ஆபிஸிக்குப் போகலையா..?"

"போகலை..."

"ஏன்..?"

"உனக்குத் தெரியாதா..?"

"கல்யாண வயசிலே பொண்ணுக இருக்காங்க.. நினைப்பிருக்கட்டும்..."

"சீச்சி.. அதுக பாவம் பச்சைக் குழந்தைக..."

கிருஷ்ணமூர்த்தியின் கைகள் தாபத்துடன் ராஜேஸ்வரியை அணைத்துக் கொண்டிருந்த போது.. அவரால் 'பச்சைக் குழந்தை...' என்று விளிக்கப்பட்ட ராதிகா.. கல்லூரிக்கு நுழைந்து கொண்டிருந்தாள்...

"என்னடி.. உன் ஸ்கூட்டி எங்கே போச்சு..?" எதிரே வந்த ஹேமா விசாரித்தாள்..

"ரிப்பேர்..." ராதிகா சுவாதீனமாக பதில் சொன்னாள்...

"ரிப்பேர்ன்னா.. மெக்கானிக் ஷாப்பில் விட்டிருக்கியா..?"

"ஊஹூம்... எங்க வீட்டு காம்பவுண்டுக்குள் விட்டிருக்கேன்..."

"ஏண்டி..?"

"அப்பாவுக்கு தெரியாது..."

"உன் அம்மாவுக்கு தெரியுமா..?"

"அவங்களுக்குத்தான் முக்கியமாகத் தெரியக் கூடாது... அம்மாவுக்கு.. அப்பாவே மேல்.."

"அப்பான்னா மேலாத்தான் இருப்பார்..."

ஹேமா சிரிக்காமல் சொன்னாலும்.. அவள் கண்களில் சிரிப்பிருக்க.. சட்டென்று ராதிகா அதன் உட்பொருளை உணர்ந்து கொண்டாள்...

"அப்போ.. அம்மா ஃபீமேலா இருப்பாங்கன்னு சொல்லப்போகிறயாக்கும்..."

"கண்டு பிடிச்சிட்டயா..?"

"இதை பிரிகேஜி படிக்கிற பப்பா கூட கண்டுபிடிச்சிரும்..."

"ஆனா.. நம்ம ஷோபாகிட்ட நேத்து இதைச் சொன்னேன்... அவளால கண்டு பிடிக்க முடியல..."

"அவளை பிரிகேஜியில கூடச் சேர்த்துக்க மாட்டாங்க... இவளெல்லாம்... எப்படித்தான் என்ஜினியரிங் காலேஜ் வாசலை மிதித்தாளோ..."

"ஹா..ஹா..."

அவர்கள் இருவரும் சிரித்துக் கொண்டே வகுப்பறைக்குள் போனபோது.. அங்கே அந்த ஷோபா சுற்றிலும் இருந்த தோழிகளிடம் பெருமை பேசிக் கொண்டிருந்தாள்...

"யு ஸீ.. இது என் டாடி சிங்கப்பூர் போனப்போ வாங்கி வந்தது.. இது மம்மி... மலேசியா போனப்போ வாங்கி வந்தது..."

இதே ரீதியில் அவள் பேசிக்கொண்டிருக்க.. ராதிகா.. 'சூள்' கொட்டினாள் "பெரிய பெருமை பீற்றல் களஞ்சியம் தான்... எப்படிடி.. இவளுக இந்தப் பீற்றலை பொறுமையாய் கேட்கிறாங்க...?"

தேடுதல்கள் பல உண்டு..
உனக்கான தேடுதலும் என் நெஞ்சில் உண்டு...

இதைச் சொன்ன ராதிகா மெதுவாக அதை சொல்லியிருக்கலாம்... ஹேமாவுக்கு மட்டும் அ கேட்டிருந்தால்... அவள்.. வழக்கப்படியான தனது சிரிப்ப உதிர்த்து விட்டு பேசாமல் இருந்திருப்பாள்...

ராதிகா அதைச் செய்யாமல் சத்தமா சொல்லிவைத்ததில்.. ஷோபாவைச் சுற்றியிருந் அத்தனை பெண்களும் சிரிப்பை உதிர்த்து வைக்க ஷோபா அதீதமான மனப்பாதிப்புக்கு ஆளானாள்...

"ஏய்ய்... என்கிட்ட இருக்குது... நான் பெருமையாய் சொல்லிக்கிறேன்.. உனக்கேண்டி பொறாமையா இருக்கு..?" என்று சண்டைக்கு வந்தாள்...

உண்மையில் ராதிகா அப்படி அவளைப் பார்த்து பொறாமைப் படவில்லை என்பதில்தான் அவளுக்கு ஏகப்பட்ட எரிச்சல் இருந்தது...

ஷோபாவிடம் இருக்கும் வெளிநாட்டுக் காராக இருக்கட்டும்... அவளிடம் இருக்கும் இறக்குமதிப் பொருள்களாக இருக்கட்டும்.. விழா நாள்களில் அவள் அணிந்து வரும் வைர நகைகளாக இருக்கட்டும்.. எதைப் பார்த்தும் ராதிகாவிற்கு அவள் மேல் பொறாமை வந்ததே இல்லை...

அதைக்கூட ஷோபாவினால் தாங்கிக் கொள்ள முடிந்தது.. மாறாக இதெல்லாம் எனக்கு ஒரு பொருட்டே இல்லை என்ற பார்வையை அவள் வீசுவதைத்தான் ஷோபாவினால் தாங்கிக்கொள்ள முடிவதே இல்லை...

அதனால்.. அவளும் பல்வேறு வழிமுறைகளில் ராதிகா அவளைப் பார்த்துப் பொறாமைப் படுகிறாள் என்பதை நிலைநிறுத்தப் பார்த்தாள்...

ராதிகா அசைந்து கொடுத்ததே இல்லை...

அன்றும் அதைப்போல ஒரு கேள்வியைக் கேட்டு.. அவளை பொறாமைக்காரியாக்க ஷோபா முயல... ராதிகா...

"போடி.. இவளே..." என்றாள்...

இவள் எங்கே போகச் சொல்கிறாள் என்று ஷோபா விழிக்க...

"இந்த செமஸ்டரில் நீ பர்ஸ்ட் மார்க் வாங்கியிருந்தால்... நான் உன்மேல் பொறாமைப்படலாம்.. பட்.. நீதான் நம்ம பேட்ஜிலேயே கடைசி மார்க்... உன்னைப் பார்த்து நான் ஏண்டி பொறாமைப் படப் போறேன்..?" என்று கேட்டாள்...

மற்ற பெண்களின் சிரிப்பு இப்போது உரத்து ஒலிக்க ஆரம்பிக்க ஷோபாவின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது... முகமெல்லாம் சிவக்க... அவள் சட்டென்று வெளியே போய் விட்டாள்...

"அவ்வளவுதான்.. இன்னைக்கு கிளாஸிக்கு மட்டம் போட்டு விடுவா... இனி நாளைக்குத்தான் வருவான்னு நினைக்கிறேன்..." ஹேமா சொன்னாள்...

"விடுடி.. அவளுக்கு இது ஒரு சாக்கு.. அவளெல்லாம் கிளாஸில் உட்கார்ந்து என்னத்தைப் படித்துக் கிழிக்கப் போறா..? வெளியே போனாலாவது உருப்படியாய் ஊரைச் சுற்றுவா.." ராதிகா அலட்டிக் கொள்ளாமல் உட்கார்ந்தாள்...

"நல்லவேளை.. நீ வந்து எங்களைக் காப்பாற்றின ராதிகா.. இல்லைன்னா.. எங்க காது ஜவ்வே கிழிஞ்சு போயிருக்கும்..." ஷிலா மகா நன்றியுடன் ஒரு பார்வை பார்த்தாள்...

"ஆமாண்டி.. எனக்குத்தான் வாய் இருக்கு.. உங்களுக்கெல்லாம் அது இல்லவே இல்லை பாருங்க... ஏன்..? அவகிட்டச் சொல்லவேண்டியதுதானே.. இதெல்லாம் உங்களுக்குப் பிடிக்காதுன்னு.. அவளைப் பேச விட்டுக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியது.. அப்புறம்.. அவபோன பின்னாலே முதுகுக்கு பின்னாடி அவ சொன்னதைச் சொல்லி கமெண்ட் பண்ணிச் சிரிக்க வேண்டியது.. உங்களுக்கு இதே பிழைப்பா போச்சுடி..." அதற்கும் ராதிகா கோபப்பட்டாள்...

"கூல்டவுன் ராதி... அவ முகத்துக்கு நேரே எப்படிடி சொல்கிறது..?"

"ஏன்..? வாயால்தான் சொல்லனும்.. உனக்கு வாய் இல்லையா..?"

"அதுக்கில்லைடி... முகத்துக்கு நேரே பேசினா.. முகத்திலடித்ததைப் போல இருக்காதா..?"

"முதுகுக்கு பின்னாலே பேசினா... அது அவங்க மனசில அடித்தைப் போல இருக்கும் ஷிலா..."

"ஏய்ய்.. என்னடி நீ.. இப்படிச் சொல்கிற..."

"நிஜமாய்த்தான் சொல்கிறேன்... ஒருத்தங்க மனசில் அடிக்கிறதை விட... முகத்திலடித்தைப் போலப் பேசறது பெட்டர்..."

உருண்ட முகமும்.. துறுதுறுத்த கண்களுமாக... இதைச் சொல்லிய ராதிகா.. ஷிலாவை வசீகரித்தாள்...

ராதிகாவின் இது போன்ற பேச்சுக்களைக் கே
ஷிலாவுக்கு மிகவும் பிடிக்கும்...

ஒரு பட்டாம் பூச்சியைப் போல.. அழகா
இளமையின் வேகத்துடன் துள்ளிக் குதித்து சுற்றி வ
ராதிகாவின் மனதில்.. ஆழ்கடலின் ஆழத்தைப் போ
ஆழமான தன்மைகள் நிறைய உண்டு...

அந்தத் தன்மைகளை உணர்ந்தவர்களால் அவ
நேசிக்காமல் இருக்கவே முடியாது.. ராதிகாவு
பழகுபவர்கள் சில நொடிகளிலேயே அவளால் வசீகரி
படுவதற்கான அடிப்படைத் தாத்பர்யம் இதுதான்...

ராதிகா வசீகரி... அதை உணர்ந்திருந்ததால்தா
அவளது தோழிகள் அவள்மேல் உயிராய் இருந்தார்க
ஷோபா அவள் மீது வெறுப்பாக இருந்தாள்...

'எப்படி இவளாலே.. அத்தனை பேரையும் அ
பின்னால் வர வைக்க முடியுது...'

ராதிகாவைக் கண்ட நாள்முதல் அந்த நாள் வ
ஷோபாவிற்கு அதற்கான விடை கிடைக்கவே இல்ல

அவளும் எத்தனையெத்தனை வழிமுறை
உலகத்தில் உண்டோ.. அவை அத்தனையை
பிரயோகித்துப் பார்த்துவிட்டாள்...

ராதிகாவைச் சூழ்ந்து கொள்பவர்க
கவனத்தைக் கவர்ந்து அவள் பக்கம் இழுத்துக் கொள்
அவளால் முடியவே இல்லை...

'ஏதாவது ஒரு விசயத்தில் அவளைத் தோற்கடித்தே ஆகனும்...'

ஷோபாவின் மனதின் அடி ஆழத்தில்... அல்லும்.. பகலும்.. துடித்துக் கொண்டிருக்கும் ஆவேசம் இது...

தினமும் ஒரு காரில் காலேஜிக்கு சென்று பார்த்தாள்... ஓட்டை ஸ்கூட்டியில் வந்து இறங்கும் ராதிகாவைக் கண்டதும்...

'ஹாய்...' சொல்லி ஆர்ப்பரிக்கும் தோழியர் கூட்டம்.. இவளைக் கண்டதும்..

'ஏய்... பெருமைப் பீற்றல் களஞ்சியம் வந்துருச்சுடி..' என்று சொல்லி மாயமாய் மறைந்தனர்...

அந்தப் பட்டப் பெயரையும் ராதிகாதான் அவளுக்கு சூட்டியிருந்தாள் என்பதை அறிந்தபோது ஷோபா இன்னும் மனம் கொதித்தாள்...

'எப்படி டீ நீ எனக்கு நிக்நேம் வைக்கலாம்...' என்று அவளிடம் நேரடியாக மோதலாம்..

ஆனால் அதன் பின் விளைவுகள் வேறு மாதிரியாக இருக்கும்...

அதநாள்வரை... அவளது முதுக்குப் பின்னால் அந்தப் பட்டப்பெயரைச் சொல்லி அழைத்து வருபவர்கள்..

'இவளுக்குத்தான் இது தெரிஞ்சுருக்சே...' என்ற எண்ணத்தில் அவளது முகத்துக்கு நேரேயே அதைச் சொல்லி அழைத்து விடும் அபாயம் இருந்தது...

அதனால்... அதைக் கண்டும்.. காணாமல் அறிந்தும்.. அறியாதவளைப் போல அகன்று விட வேண்டும் நிர்பந்தம் ஷோபாவுக்கு ஏற்பட்டு விட்டது...

இதைப் போன்ற எண்ணற்ற நிர்பந்தங்களை ஷோபாவுக்கு உருவாக்கி.. அவளுக்கு எதிரியென்னும் பந்தத்தில் சிக்குண்டு விட்டாள் ராதிகா...

விளைவு... இமை மூடித் தூங்கினால் கூட.. அதில் ராதிகாவின் முகம் மறையாமல் வந்து கண்களை உறுத்த இடைவிடாத மனஉளைச்சலுக்கு ஆளானாள் ஷோபா...

"ஷோபி.. வாட் இஸ்திஸ்..? இப்போத்தானே காலேஜீக்கு போன...?"

அவளுடைய தந்தை பரந்தாமன் ஆச்சரியமாக புருவங்களை உயர்த்தினார்..

"ஹெட் ஏக் டாடி..." சோர்வாக பதில் சொன்னாள் ஷோபா...

"ஓ.. காட்.. சுசி... வந்து குழந்தைக்கு என்னன்னு பாரு..."

பரந்தாமனின் பதட்டம் சுசிலாவையும் தொற்றிக் கொள்ள.. அவள் அவசரமாக வந்து மகளின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்..

"வாடா செல்லம்... வந்து ரெஸ்ட் எடு.. மரகதம்.. ஷோபாக்கு சூடாய் ஒரு கப் காபி கொண்டுவா..."

அடுத்த சில நிமிடங்களில் அந்த வீடே பரபரப்பாக.. தனக்கான அங்கீகாரம் கிடைத்துக் கொண்டிருக்கும் நிறைவில் ஷோபாவின் மனம் மெதுமெதுவாக அமைதி நிலைக்கு திரும்பியது...

"தூங்குடா செல்லம்..."

சுசிலா.. அறையில் ஏஸியை போட்டுவிட்டு வெளியேற.. ஷோபா கண்மூடித் தூங்க முயன்றாள்...

"தூங்கிட்டாயா.."

அறைக்குள் வந்த பரந்தாமனைப் பார்த்து...

"உஷ்ஷ்..!" என்று வாயின் மீது விரலை வைத்து எச்சரித்தாள் சுசிலா...

"என்ன..?" அவளுக்குப் புரியவில்லை..

"குழந்தை இப்போதுதான் தூங்க ஆரம்பிக்கிறா.. சத்தமாய் பேசாதீங்க..."

"நீ சொல்கிறதும் சரிதான்.."

பரந்தாமன்.. ஷோபாவின் தலைப்பக்கம் அமர்ந்து கொள்ள.. சுசிலா.. மகளின் மீது கை போட்டபடி... 'என்ன..?' என்று கண்களினாலேயே வினவினாள்...

"ஷோபிக்கு பார்த்தே வருதே..."

"ஆமாம்.. அதுக்கென்ன..?"

"எனக்கு ஒரு எண்ணம் சுசி..."

"சொல்லுங்க..."

"அதுக்கு.. சங்கரை இன்வைட் பண்ணினால் என்ன..?"

பரந்தாமன் சொன்னதைக் கேட்டதும் சுசிலாவின் முகம் மலர்ந்தது..

"குட் ஐடியா.." என்று குதூகலித்தாள்..

கண்மூடிப் படுத்திருந்த ஷோபாவின் மனமும் குதூகலமடைந்தது...

சங்கர்... பரந்தாமனின் நண்பனின் மகன்.. பார்க்க வெகு அழகாகவும்.. கவர்ச்சியாகவும் இருப்பான். வெளிநாட்டில் படித்தவன்.. நுனிநாக்கு ஆங்கிலத்தை வெகு சரளமாக பேசுபவன்.. கோடிஸ்வரன்...

ஆனானப்பட்ட அலட்டல் ஷோபாவையே.. ஒ பார்வையில் தள்ளி நிறுத்துபவன்..

அவனைத் திருமணம் செய்து கொள்ளும் கன ஷோபாவுக்கு இருந்தது..

அதே கனவு பரந்தாமனுக்கும்... சுசிலாவுக்கும் இருந்ததினால் தன் மனோரதம் எப்படியும் நிறைவே விடும் என்ற நிச்சயத்தில் அவள் இருந்தாலும்.. சங்கரிட பேசிப் பழக முடியாத ஏக்கம் அவள் மனதில் நி கொண்டிருந்தது...

அப்படிப்பட்ட சங்கர் அவளது பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தில் பங்கேற்க வருவானா..?

"சுசி... இந்த பர்த்தே பங்சன் எப்போதையும் விட ரொம்ப கிராண்டா இருக்கணும்..."

"ஷ்யூர்... நானும் அதையேதான் நினைச்சேன்..."

"சொல்லு.. புதிதாய் என்ன பண்ணலாம்...?"

"சங்கருக்கு நேச்சர்ன்னா ரொம்ப இஷ்டமாம்.. அவனோட அம்மா சொல்லிக்கிட்டு இருந்தா..."

"இதில்கூடப் பெருமையா...?"

தனது மகளுக்கு 'பெருமைப் பீற்றல் களஞ்சியம்' என்ற பட்டப் பெயர் இருப்பதை அறியாத பரந்தாமன் வினவினார்...

"அவளுக்கு எல்லாமே பெருமைதான்... சங்கரைப் போல ஒரு மகனைப் பெற்று வைத்திருக்கிற மகராசியாச்சே... அவள்.. எதை வேண்டும்ன்னாலும்.. பெருமை பேசுவா..."

சுசிலாவின் குரலில்.. ஷோபாவைப் போல ஒரு மகளை பெற்று வைத்திருக்கிற ஆற்றாமை மறைந்திருந்தது...

அதை பரந்தாமனும் உணரவில்லை.. ஷோபாவும் உணரவில்லை...

"ஸோ... அவனை அட்ராக்ட் பண்ணுகிறதைப் போல எதைச் செய்யலாம்...?"

வியாபாரத்தை மேம்படுத்தக்கூட.. இவ்வள
தீவிரமாய் பரந்தாமன் யோசித்திருக்க மாட்டார்
அவ்வளவு தீவிரமாய் அதை யோசித்தார்...

அவர் மூளையைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்
அப்படிப்பட்ட கடினமான முயற்சிகளைக் கையாளாமலே
சுசிலா இயல்பாக ஒரு வழியைச் சொன்னாள்..

"நம்ம வீட்டு கார்டனில் பங்சை
வைத்துக்கலாமா..?"

ஒரு நொடியில் வழியைச் சொல்லி விட்
மனைவியை ஆச்சரியத்துடன் பார்த்தார் பரந்தாமன்...

'இது எப்படி எனக்குத் தோணாம போயிருச்சு...?'

"பெண்டாஸ்டிக் சுசி..."

"ஈவினிங் முடிகிற சமயம்தான் பங்சை
ஆரம்பிக்கப் போகிறோம்.. அதனால.. கார்டனில்
பூச்செடிகளின் மேலே.. சீரியல் லைட்டை பரத்தி
எரிய விடலாம்... பக்கத்து வீட்டிலிருக்கிற முயல்
குட்டிகளை அன்னைக்கு மட்டும் நம்ம கார்டனில்
ஓட விடலாம்... செடிகளுக்கு மத்தியில் ரப்பர் டியூபை
செருகி... செயற்கையாய் ஊற்று நீர் வருகிற மாதிரி
செய்யலாம்.. மண் பொம்மைக் குதிரைகளை வாங்கி
நிப்பாட்டலாம்.. இன்னும் செயற்கையாய் நேச்சரை
காட்ட.. எத்தனையே வழிகள் இருக்கு..."

செயற்கையான இயற்கையைக்காட்ட அவர்கள் வழிமுறைகளை யோசித்துக் கொண்டிருக்க.. எப்போதையும் விட... ஆடம்பரம் அதிகமாக இருக்கப் போகும் அந்தப் பிறந்தநாள் கொண்டாட்டத்தை வைத்து தன் தோழிகளின் மத்தியில் தன் பெருமையை நிலை நிறுத்திக் கொள்ளும் வழிமுறையை யோசிக்க ஆரம்பித்தாள் ஷோபா...

கோடைவெயிலின் கடுமைதனிக்க..
குளிர் நீழலாய் நீ வந்தால் என்ன..?

என்றைக்கும் இல்லாத திருநாளாய்.. ஷோபா சிரித்த முகத்துடன் ராதிகாவைத் தேடி... அருகில் வந்தாள்...

"இவ என்னத்துக்குடி இப்படி சிரிச்சுக்கிட்டே வர்றா..?" ஹேமா புரியாமல் கேட்டாள்..

"அப்போ.. டேன்ஜர் சிக்னல் எரிய ஆரம்பிக்குதுன்னு அர்த்தம்.. இவ யூசுவலாய் இப்படி சிரிச்ச முகமாய் இருக்க மாட்டாளே..."

ராதிகாவுக்கு சந்தேகம் தட்டியது...

"ஏண்டி.. ஒருத்தி சிரிச்சாக் கூடத் தப்பா..?" ஹேமாவுக்கு சிரிப்பு வந்தது...

"இவசிரிச்சாத் தப்பு..." தீவிரமான முக பாவனையுடன் சொன்னாள் ராதிகா...

அதற்குள் ஷோபா அவர்களை சமீபித்து விட்டாள்..

"ஹாய்.. ராதிகா..." என்று வேறு சொன்னாள்...

பதிலுக்கு 'ஹாய்' சொல்லாமல் ஷோபாவின் முகத்தையே கூர்ந்து பார்த்தாள் ராதிகா...

"என்னடி.. அப்படிப்பார்க்கிற..?" ஷோபாவுக்கு புரியவில்லை...

"என்ன சொல்ல வந்த...?" ராதிகா நிதானமாகக் கேட்டாள்..

"ஏன்..? எதுவும் சொல்லித்தான் ஆகனுமா...?"

"ஷ்யூர்.. ஏதும் விசயம் இல்லாமல் நீ ஒரு 'ஹாயை' எனக்காக வேஸ்ட் பண்ண மாட்ட.. ஸோ.. எதைச் சொல்ல வந்தியோ.. அதைச் சொல்லு..."

அவளின் அந்த அதீத புத்திசாலித்தனத்தில் ஷோபாவின் மனதில் எரிச்சல் மண்டியது... ஆனாலும்.. பேச வந்ததைப் பேசியாக வேண்டுமே.. அதனால்.. பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு இயல்பாக பேச முயன்றாள்...

'இவ எதுக்கு இத்தனை கஷ்டப்படறா..?'

வராத இயல்பை வரவைக்க.. ஷோபா எதற்காக மெனக்கெட வேண்டும் என்று ராதிகாவுக்கு சுத்தமாகப் புரியவில்லை....

ஆனாலும்.. அவள் பேச வந்துவிட்டாள்.. கேட்டுவைத்துத் தொலைப்போம் என்ற நினைவுடன் ஷோபாவின் முகம் பார்த்தாள்...

"எனக்கு பர்த்டே வருது ராதிகா..." அவள் உற்சாகமாகச் சொல்ல...

"இதைச் சொல்லவா இத்தனை பில்ட் அப் பண்ணின..? நான் பெரிசா எதையோ சொல்லப் போகிறேன்னு நினைச்சுட்டேன்.. அதான் வருசாவருசம் உனக்கு பர்த்தேட வருதே.. அதை எதுக்கு என்கிட்ட வந்து சொல்ற..?" என்று புருவம் உயர்த்தினாள் ராதிகா...

ஷோபாவுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.. எந்தப் பக்கம் போனாலும்.. அந்தப் பக்கம் வந்து வழி மறிக்கும் ராதிகாவிடம் பேசுவது என்பது அவளைப் பொறுத்தவரை மிகக் கடினமான ஒன்று...

அதையும் மீறி அவள் ராதிகாவுடன் பேச வேண்டியிருந்தது... அவளது பிறந்தநாள் விழாவிற்கு அவளை அழைக்க வேண்டி இருந்தது...

'பார்.. இதுதான் என் வீடு.. உன் அகராதியில் இதற்கு மாளிகை என்று பெயர்... இவர்கள் என்னைப்

பெற்றவர்கள்.. என் தோழி என்பதற்காக மட்டுமே உன்னுடன் நின்று ஒருவார்த்தை பேசுகிறார்கள்.. இல்லையென்றால் உன்னால் இவர்களின் கிட்ட நின்று பார்க்கக் கூட முடியாது... என் பிறந்தநாள் விழாதான் இவர்களுக்கான முக்கியமான விழா.. அதை அவர்கள் கொண்டாடும் பிரம்மாண்டத்தைப் பார்...'

ராதிகாவிற்கு ஷோபாவின் உயரத்தை அறிவுறுத்த இதை விட்டால் சிறந்த வேறு வழியெதுவும் அவளுக்குத் தெரியவில்லை..

அதற்கு முன்னால் வந்த பிறந்த நாள் விழாக்களுக்கு அவள் ராதிகாவை அழைத்ததில்லை...

'அன்னைக்கும் என்னை இவ மூட்அவுட் ஆக்குவா. இவளெல்லாம் நான் இன்வைட் பண்ண வேண்டிய அளவுக்கு பெரிய ஆளா..?'

இதுதான் நேற்றுவரை ஷோபாவின் எண்ணமாக இருந்தது.. அதையெல்லாம் தாண்டித்தான் அவள் ராதிகாவை பிறந்தநாள் விழாவிற்கு அழைத்தாள்..

"அதை எங்க வீட்டில் செலிபரேட் பண்ணப் போறோம்..."

"பண்ணு..."

"பங்சனுக்கு நம்ம பிரண்ட்ஸையெல்லாம் இன்வைட் பண்ணியிருக்கேன் ராதிகா..."

"உன் பிரண்ட்ஸை இன்வைட் பண்ணியிருக்கேன்னு சொல்லு... எதுக்கு நம்ம பிரண்டுன்னு... என்னையும் உன்கூட கூட்டுச் சேர்த்துக்கிற..."

இப்படிப் பேசுகிறவளை எப்படி விழாவுக்கு அழைப்பது என்று ஷோபாவிற்கு தலைவலியே வந்துவிட்டது...

ஆனாலும்.. மனம் தளர்ந்து விடாமல் முயற்சியைத் தொடர்ந்தாள்....

"நீயும் என் பர்த்டே பார்ட்டிக்கு வரனும் ராதிகா..."

"நானா..?" ராதிகாவின் குரலில் ஆச்சரியமிருந்தது...

"யெஸ்..." அவளது ஆச்சரியத்தை உணர்ந்த மிதப்பில் சொன்னாள் ஷோபா...

'இவளையெல்லாம் நான் இன்வைட் பண்ணுவேன்னு இவ நினைச்சுக்கூடப் பார்த்திருக்க மாட்டா... இப்ப கூப்பிட்டதும் நம்ப முடியாமல் திகைச்சுப் போயிட்டா...'

அவளுக்கு மகாப் பெருமையாக இருந்தது...

அதைத் தகர்க்கும் வார்த்தைகளை ராதிகா சொல்லப் போகிறாள் என்பதை அறியாமல் அவள் கர்வத்துடன் கித்தாய்ப்பாய் ஒரு பார்வையை பார்த்துவைக்க...

"இதுக்கெல்லாம் எங்க வீட்டிலே அலோப் பண்ண மாட்டங்க ஷோபா.. ஸோ.. ஐ ஆம் வெரி ஸாரி... உ பர்த்டே பங்சனுக்கு என்னால் வரமுடியாது..." என் அவள் அழைப்பை நிராகரித்தாள் ராதிகா...

"வாட்..?" ஷோபாவிற்கு என்னவோ போ ஆகிவிட்டது...

"யெஸ்.. பர்த்டேன்னா கோவிலுக்குப் போ அர்ச்சனை பண்ணனும்.. வீட்டில் வடை பாயாசத்தோ விருந்து சாப்பிடனும்.. புது டிரெஸ் போடனும் பிரண்ட்ஸீக்கு இனிப்பு கொடுக்கனும்.. இதுதான் எங் வீட்டுப்பழக்கம்..."

"மிடில் கிளாஸ்ன்னா அப்படித்தான் இருப்பாங்க

தன் அழைப்பை ராதிகா மறுத்து விட்ட கோபத்தி அவளை மட்டம் தட்டினாள் ஷோபா...

ராதிகாவா.. அவள் குட்டுவதற்கு தலையை கொடுப்பாள்...?

"இந்தக் கிளாஸ் விசயமெல்லாம் எனக்கு தெரியாது... இருட்டின பின்னாலே.. எல்லோரையு கூப்பிட்டுவைச்சுக் கூத்தடிக்கிறதுதான் ஹைகிளா பழக்கம்ன்னா... அப்படியொரு பழக்கமே எங்களுக் வேண்டாம்..." என்று இமைக்கும் பொழுதிற்கு ஷோபாவை மட்டம் தட்டி விட்டாள் ராதிகா...

'இவளுக்கு எவ்வளவு திமிர்...'

ஷோபா பல்லைக் கடித்தாள்.. அவளுக்கு ராதிகாவை எப்படியும் தன் வீட்டு விழாவிற்கு வரவைத்து விடவேண்டுமென்று வெறியாக இருந்தது...

அழகான உடையுடுத்தி.. வைரங்கள் மின்ன.. தேவதை போல விழா நாயகியாக சிரித்து.. சங்கரின் அருகே அவள் நிற்க வேண்டும்..

'பார்.. இவன்தான் என் வருங்காலக் கணவன்.. இப்படியொருவனை நீ கனவிலும் நினைத்துப் பார்க்க முடியுமா..?' என்ற கர்வத்துடன் ராதிகாவின் முன்னால் சங்கருடன் கை கோர்த்து அவள் வலம் வரவேண்டும்...

ராதிகாவைப் போன்ற வாழ்க்கைத்தரத்தை உடைய ஒரு பெண்ணுக்கு சங்கரைப் போன்ற மணமகன் எட்டாக்கனி...

'இவ படிச்சு முடிச்சு.. கேம்பஸ் இன்டர்வியூவில் வேலை வாங்கி.. சம்பாதிச்சு.. இவளைப் போல மாதச் சம்பளம் வாங்குகிற எவனையாவது கல்யாணம் பண்ணி குடும்பம் நடத்தி... பேங்கில் லோனைப் போட்டு வீடு வாங்கி.. பிள்ளைகளைப் பெத்து.. வளர்த்து படிக்க வைச்சு.. அதுகளோட எதிர்காலத்துக்கு சேமிச்சுன்னு இவ வாழப்போகிற வாழ்க்கையை மனசுக்குள் சொல்லிப் பார்க்கும் போதே மூச்சு இரைக்குது.. இந்த லட்சணத்தில் இவ என்னைப் பார்த்து மட்டம் தட்டறா..'

காலேஜிற்குள் ஷோபாவை பிரமிப்பாக ராதிகா பார்க்க மாட்டாள் என்று ஆகிவிட்டது.. பாடங்களில் அவள்

முதல் மதிப்பெண் எடுத்து வைப்பாள்.. ஷோபாவோ.. பொழுது போக காலேஜிற்கு வந்து போகிற ரகம் என்பதால் கடைசி மதிப்பெண்களில் நின்றாள்.. மற்ற வசதிகளைக் காட்டி அவள் தன்னை பெரிய ஆளாக நிருபிக்க முயன்றால் ராதிகா அவற்றை சட்டை பண்ணவே மாட்டாள்..

'இவளை ஒருநாளாவது என் வீட்டுப்பக்கம் இழுத்து என் வசதியென்ன.. வாழ்க்கையென்னங்கிறதை காட்டிடனும்...'

ஷோபாவின் மனதில் ஆவேசக் கனல் மூண்டிருந்தது.. அதன் விளைவாக அவள் ஏறக்குறைய ராதிகாவை வற்புறுத்தினாள்..

"ஆயிரம்தான் இருந்தாலும் நான் உன் பிரண்ட்..."

"ஊஹீம்.. நீ என் கிளாஸ்மேட்.."

"இரண்டும் ஒன்றுதானே ராதிகா..?"

"ஊஹீம்.. இரண்மே வேறு வேறு..."

"அப்படியே இருக்கட்டும்.. உன் கிளாஸ் மேட்டின் பர்த்டே பார்ட்டிக்கு நீ வரக்கூடாதா..?"

'இவ ஏன் இந்த அளவுக்கு இறங்கி வந்து வற்புறுத்துகிறா..?'

இதில் ஏதோ இருக்கிறது என்று ராதிகாவிற்கு தோன்றிவிட்டது... என்னவாக இருக்கும் என்று அவளும்

மண்டையை உடைத்துக் கொள்ளாத குறையாய் யோசித்துப் பார்த்தாள்.. ஒரு மண்ணும் விளங்கவில்லை...

'நான் இவ பர்த்டே பார்ட்டிக்கு போறதினாலே இவளுக்கு என்னவந்துவிடப் போகுது...?'

ராதிகாவின் பிரசன்னத்தால் ஷோபாவிற்கு நிச்சயமாய் எதுவும் லாபம் வந்துவிடப் போவதில்லை என்பதை தெளிவாகப் புரிந்து வைத்திருந்ததினால் அந்தச் சந்தேகத்தை புறம் தள்ளினாள் ராதிகா...

அவளுக்கு ஷோபாவின் மனதிலிருக்கிற எண்ணத்தைப் பற்றி என்ன தெரியும்..?

'ஒருவேளை.. இவ நிஜமாகவே குணம் மாறிட்டாளோ என்னவோ.. என்கூட பிரண்டா இருக்கனும்னு ஆசைப்படுகிறாளோ என்னவோ.. அதுக்கு இந்த பர்த்டே பார்ட்டியை சாக்காக வைத்துக் கொண்டிருக்கிறாளோ என்னவோ...'

ஆயிரம் 'என்னவோ'களை யோசித்து விட்டு.. அரை மனதாக அந்தப் பிறந்தநாள் விழாவிற்கு வர ஒப்புக் கொண்டாள் ராதிகா...

"நீ இவ்வளவு தூரத்துக்கு வற்புறுத்திக் கூப்பிடுகிறதாலே நான் வருகிறேன் ஷோபா.. பட்.. அதிக நேரம் அங்கே இருக்க மாட்டேன்..."

'இவ பெரிய வி.ஐ.பி.. அதிகநேரம் இருக்க மாட்டேன்னு கண்டின் போடறா..'

மனதுக்குள் குமைந்து கொண்டாலும்.. வெளி
வரிசைப் பற்கள் தெரிய சிரித்தபடி...

"தேங்க்யு ராதிகா... தேங்க்யு வெரிமச்..." என்றா
ஷோபா...

செய்தியை அறிந்த ஹேமா ஆச்சரியப்பட்டு
போனாள்...

"அவளுக்கும்.. உனக்கும்தான் ஆகவே ஆகா
ராதிகா... அவ வீட்டு பங்சனுக்கா போகிற...?"

"போகிற... இல்லை.. போகிறோம்... நீயும் என்கூ
வர்ற..."

"நான் எதுக்குடி...?"

"எனக்குத் துணையாகத்தான்.. ஆமாம்.. நா
என்னவோ உன்னை ஊர்.. பெயர் தெரியாத இடத்துக்
அழைக்கிறதைப் போல இவ்வளவு கேள்வி கேட்கிறயே
அவ உனக்கும் பிரண்ட்தானே.. உன்னை இன்வை
பண்ணலியா..?"

"பண்ணினா.. பண்ணினா..."

"அப்புறம் எதுக்குடி கேள்வி கேட்கிற...?"

"இவகூடல்லாம் கிளாஸ் ரூமில் பார்க்கிறப்போ நா
வார்த்தை பேசுகிறதோட நிப்பாட்டிரனும் ராதிகா..."

"அதை எனக்கு சொல்லுறயா..? எனக்கே அ
தெரியுமே..."

"தெரிஞ்சும் எப்படிடி அவவீட்டுக்குப் போக ஒப்புக்கிட்ட..?"

"ரொம்ப கெஞ்சறாடி.. போய்த்தான் பார்ப்போமே..."

"அதுக்கு என்னையும் ஏண்டி இழுத்தடிக்கிற..?"

"எனக்காக வா.. ஹேமா..."

"நீ சொன்னாலும்.. சொல்லாட்டியும் உனக்காத்தான் நான் வரனும்.. அவளுக்காக யாருடி வருவா..?"

"அதுக்கும் ஒரு கூட்டமிருக்கு..."

அன்று இரவு உணவுநேரத்தின் போது.. ஷோபாவின் பிறந்தநாள் விழாவிற்குப் போக பெற்றவர்களிடம் அனுமதி கேட்டாள் ராதிகா...

"இருட்டின பின்னாலேயா..? இது என்னடி புதுப் பழக்கம்..?" ராஜேஸ்வரி அதட்டினால்...

"அந்த ஷோபா ரொம்பக் கெஞ்சறாம்மா..." ராதிகா கெஞ்சினாள்...

"யாரைச் சொல்ற ராது...? அந்தப் பெருமை பீற்றல் களஞ்சியத்தையா சொல்ற...?" கீதா ஆச்சரியத்துடன் கேட்டாள்...

"ஆமாண்டி..." ராதிகா தண்ணீரைக் குடித்தபடி சொன்னாள்..

"அவ வீட்டுக்கு நீ போக மாட்டயே..." கீதா

"நேத்து வரைக்கும் அப்படித்தான் இருந்தது.. சலிப்புடன சொன்னாள் ராதிகா...

"இன்னைக்கு மாற்றம் வந்திருச்சா..? மாற்றம் ஒன்றுதானே மாற்றமில்லாதது..." கிதா இயல்பாக கூறியபடி எழுந்து கொண்டாள்...

ராதிகாவிற்கு ஷோபாவின் பிறந்தநாள் விழாவிற்கு போய்வர அனுமதி கிடைத்துவிட்டது.. அவளுக்குத் தெரியாது.. கீதா சொன்ன மாற்றம் அங்கே அவளுக்காக காத்திருக்கிறது என்பது...

மாலையிலே நீகொண்ட...
மயக்கமெல்லாம் யாருக்காக..?

"குட்மார்னிங் எவ்ரிபடி..."

அந்த ஏஸி ஹாலின் உள்ளே நுழைந்த சங்கர் கம்பீரமாகச் சொன்னான்... நீண்ட மேஜையின் இருபக்கமும் அமர்ந்திருந்தவர்கள் பதிலுக்கு வணக்கம் சொன்னார்கள்.. மேஜையின் நடு மையத்தில் இருந்த மேனேஜிங் டைரக்டரின் இருக்கையில் சங்கர் அமர்ந்ததும் போர்டு மீட்டிங் துவங்கியது...

அழகாய்.. அளவான உயரத்துடன் இருந்த சங்கரின் முகத்தில் சிரிப்பில்லை.. கண்டிப்பான முகபாவனையுடன் அவன் தீவிரமாக தன் கருத்துக்களை அங்கே சொல்லிக் கொண்டிருந்தான்.. மேஜையின் இருபக்கத்திலும் அமர்ந்திருந்த டைரக்டர்கள் அதைக் கூர்மையாக கேட்டுக் கொண்டிருந்தார்கள்..

ராமாமிர்தத்திற்கு அதைப் பார்க்க வெகு பெருமையாக இருந்தது.. அவரும் டைரக்டர்களில் ஒருவராக அமர்ந்திருந்தார்.. மகன் வெளிநாட்டுப் படிப்பை முடித்து விட்டு வந்ததும்.. அவன் கையில் கம்பெனியின் பொறுப்பை ஒப்படைத்து அவனை எம்.டியாக்கி விட்டு.. அவர் வெறும் டைரக்டராக ஒதுங்கிக் கொண்டார்..

சங்கரின் கைக்கு கம்பெனி போன பின்னால் ஏற்பட்டிருக்கும் விசுவரூப வளர்ச்சியில் அவர் பிரமித்துப் போயிருந்தார்...

"அவன் தகப்பனுக்கே பாடம் சொல்கிற சுப்பிரமணியக் கடவுள்டி..."

மனைவி வனஜாவிடம் அவர் பெருமைப் பட்டுக் கொள்ளும் வார்த்தைகள் இவை...

"ஓகே ஜென்டில் மென்.. தி மீட்டிங் இஸ் ஓவர்.."

போர்டு மீட்டிங் முடிந்து... டைரக்டர்கள் கலைந்து வெளியே போக ஆரம்பித்தனர்.. சிலர் அவனிடம் வந்து அவன் பேசியவிதம் நன்றாக இருந்ததாகக் கூறி கை கொடுத்தனர்..

ஒரு வழியாக சங்கரும் ராமாமிர்தமும் தனிமையா
போது... "மே ஐ கமின்..?" என்றபடி பரந்தாமன் உள்
வந்தார்...

உள்ளே வர அனுமதி கேட்டுவிட்டு.. பதி
எதிர்பார்க்காமல் உள்ளே வரும் அவரது செய்கைய
கண்டு சங்கரின் மனதில் எரிச்சல் மண்டியது...

சும்மாவே அவனுக்கு அவரைக் கண்டா
பிடிக்காது...

"அவர் சுத்த போர் டாட்.. நம்ம டைமை வேஸ்
பண்றார்..."

நிறையமுறை ராமாமிர்தத்திடம் இத
சொல்லியிருக்கிறான் சங்கர்...

"ஹி இஸ் மை பெஸ்ட் பிரண்ட் சங்கர்..."

"ஸோ வாட்..? அதுக்காக உங்களைத்தான் அ
டிஸ்டர்ப் பண்ணனும்.. என்னையும் எதுக்காக டிஸ்டர்
செய்யனும்...?"

"பிரண்டோட மகன்ங்கிற உரிமைதாண்டா..."

"அதுக்கு ஓர் அளவிருக்கு டாடி.. இவர் அதி
உரிமை எடுத்துக்கிறார்..."

பரந்தாமன் எதற்காக அந்த உரிமையை எடுத்து
கொள்கிறார் என்று ராமாமிர்தத்திற்கு மிக நன்றாக
தெரியும்.. சங்கருக்கு ஓரளவு தெரியும்...

அது தெரிய வந்ததினாலேயே.. சங்கர் அதிகமாக பரந்தாமனை புறக்கணிக்கிறானோ என்ற சந்தேகம் ராமாமிர்தத்தின் மனதில் உண்டு.

சங்கர் எப்படியோ.. ராமாமிர்தம்.. பரந்தாமனின் மனதிலிருந்த அந்த ஆசையை ஆதரித்தார்... சங்கரோ அதை ஜாடையாகக் கூட கேட்க மறுத்தான்...

"ஷோபா என்ஜினியரிங் படிக்கிறா சங்கர்..."

"ஹீ இஸ் ஷி..."

"வாட் இஸ்திஸ் சங்கர்..? ஷி இஸ் பரந்தாமன்ஸ் டாட்டர்..."

"ஓ.. இது எனக்கெப்படித் தெரியும் டாடி..? மொட்டையாக ஷோபான்னு சொல்லாம.. அவ யாருங்கிறதை சொல்லிட்டு.. அதுக்கப்புறம் நீங்க மேட்டரைச் சொல்லியிருக்கனும்.. ஓகே.. லீவ் இட்.. அவ இன்ஜினியரிங் படித்தா எனக்கென்ன டாட்..? அதை எதுக்கு என்னிடம் சொல்கிறீங்க..?"

இப்படிப் பட்டுக் கத்தரிக்கிறவனிடம் எப்படிச் சொல்வார் ராமாமிர்தம்..?

'சங்கர்.. அந்த ஷோபா பரந்தாமனின் சொத்துக்கெல்லாம் ஒரே வாரிசு... அவளை நீ கல்யாணம் பண்ணிக்கிட்டா.. பணம்.. பணத்தோடு சேரும்.... அவன் கம்பெனி நம்ம கம்பெனியோடு சேரும்...'

சொல்லத்தான் ஆசைப்பட்டார் ராமாமிர்த
ஆனால்.. இன்றுவரை அந்த வார்த்தைகளை சங்கரி
சொல்ல அவரால் முடியவே இல்லை...

அவரைப் போல மிதவாதியாக இரு
பரந்தாமன் தயாராக இல்லை... அவர்களின் தொழி
வட்டாரத்தில் பிரசித்தி பெற்ற தொழிலதிபனான சங்க
மருமகனாக்கிக் கொள்ள வேண்டும் என்பது அவரி
குறிக்கோளாக இருந்ததால் அவர் தீவிரவாதத்
கையில் எடுத்தார்...

"ஹாய் சங்கர்... இதுதான் என் மகள் ஷோபா..."

ஒரு சுபயோக சுபதினத்தில்.. சங்கரின் வீட்டுக்
மகளை அழைத்துக்கொண்டு சென்று அவனுக்
அறிமுகப் படுத்திவைத்தார்...

அப்போது சங்கர் முக்கியமான பிஸினெ
லன்ச்சிற்கு புறப்படும் அவசரத்தில் இருந்தான்.. அதனா
ஷோபாவின் முகத்தைக்கூடப் பார்க்காமல்...

"ஹாய்..." என்று சொல்லிவிட்டு நிற்காம
போய்விட்டான்...

அவனைப் பார்க்கப் போகும் நினைவில் கவனமா
அலங்கரித்துக்கொண்டு வந்திருந்த ஷோபாவின் முக
விழுந்து விட்டது..

அதே சமயத்தில்.. கம்பீரமாக அவளைக் கண்
கொள்ளாமல் போனவனை அவளுக்கு மிகவும் பிடித்
போய்விட்டது..

அடுத்தடுத்து பரந்தாமன் அவளுக்கு ஏற்படுத்திக் கொடுத்த அனேக சந்தர்ப்பங்களில் சங்கரின் கவனத்தை ஈர்க்க பகீரத பிரயத்தனம் செய்ய ஆரம்பித்தாள் ஷோபா...

பலன்தான் கிடைக்கவில்லை.. கல்லையும்.. மண்ணையும் பார்ப்பதைப் போல.. அவளையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு உணர்ச்சிகளைத் துடைத்த முகத்துடன் சென்று விடுபவனை அவளால் கவர முடியவில்லை...

இருந்தும் அவள் தன் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்தாள்.. சிலசமயம் அவன் அவளிடம் நின்று பேசுவதுண்டு...

அந்த சந்தர்ப்பங்களில் ஷோபா.. மடமடவென்று நிறையப் பேசுவாள்.. லேசான சிரிப்புடன் அதைக் கேட்பவன்.. ஓரிரு வார்த்தைகள் பதிலளிப்பதோடு.. நகர்ந்து விடுவான்..

"உங்களுக்கு பிரண்டுன்னா.. நானும் அவர்கிட்ட பேசனும்னு நினைக்கிறதும்.. அவர் மகள் அபத்தமாக பேசுகிறதை கட்டாயம் காது கொடுத்து கேட்கனும்கிறதும் கொடுமை டாடி..."

"இதெல்லாம் ஒரு கர்ட்டசி சங்கர்..."

"அந்தக் கர்ட்டசி அவங்களுக்கில்லையா...?"

"என்னடா இப்படிக் கேட்டுட்ட..? அவன் உனக்கு ரொம்பவும் மரியாதை கொடுக்கிற வனாச்சே..."

"த்ச்சு.. அதில் ஒரு குறைச்சலும் இல்லை... என் பிள்
ஷெட்யூலைக் கண்டுக்காம.. மணிக்கணக்கில் என்னிடம்
ரம்பம் போடுகிறது தான் எனக்குப் பிடிக்கலை..."

இதைத் தடுக்க தன்னால் முடியாது என்பதை
ராமாமிர்தம் உணர்ந்தே இருந்தார்..

பெண்ணைக் கொடுக்க வேண்டும் என்ற
கனவிலிருக்கிற நண்பனிடம் போய் என் மகனிடம் அதிகம்
பேசாதே என்று எப்படிச் சொல்வது..?

அதோடு.. அவரால்தான் சங்கரிடம் பேச
முடிவதில்லை... நண்பனாவது பேசி.. அவனை சரிக்கட்டி
விட்டால் சரிதானே என்ற எண்ணம் அவருக்கு..

"விட்டுத்தள்ளுடா.. அவனுக்குத் தெரிந்தது
அவ்வளவுதான்..."

"உங்களுக்குத் தெரிந்தது எவ்வளவு டாடி..."

"எதுக்குடா கேட்கிற..?"

"இல்லை.. இப்படி அவரைப் பேச விட்டுவிட்டு
வேடிக்கை பார்க்கறிங்களே அதனால்தான் கேட்டேன்.."

மகன் கண்டுபிடித்து விட்டானோ என்ற
சம்சயத்துடன் அவன் முகத்தை உற்றுப் பார்த்தால்... அதில்
ஏதும் இருந்து தொலைக்காது...

மண்டைகாய்ந்து போய் விட்டிருந்த ராமாமிர்தம்...
பாரந்தாமனைத் தடுப்பதாகவே இல்லை...

அன்றும் அதைப்போல.. அனுமதி கேட்டுவிட்டு..
அதை எதிர்பார்க்காமல் அறைக்குள் வந்த நண்பனின்
கையைப் பிடித்து குலுக்கினார் ராமாமிர்தம்...

"வா பரந்தாமா.. பார்த்து ரொம்ப நாளாச்சு..."

அவர் ஒரு பேச்சிற்காக சொல்லிக் கொண்டிருந்த
போது..

"நேற்றுத்தானே இவரைப் பார்த்தோம்ப்பா..." என்று
விசித்திரமாக தகப்பனைப் பார்த்தான் சங்கர்...

"மாப்பிள்ளை அதிலெல்லாம் கெட்டி ராம்.."

அதற்கும் மெச்சிப் போய் சிரித்தார் பரந்தாமன்...

அசுவராஸ்யமாக கைக்கடிகாரத்தைப் பார்த்தான்
சங்கர்...

அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டால்..
அடுத்த நொடியில் அறையை விட்டு வெளியேறப்
போகிறான் என்று அர்த்தம் என்று புரிந்து வைத்திருந்த
ராமாமிர்தம்.. அவசரமாக பரந்தாமனை பேச வைத்தார்...

"என்ன பரந்தாமா.. ரொம்ப பிஸியாய் இருக்க
போல.. என்ன விசேசம்..?"

அவருக்குத் தெரியும்.. அந்த விசேசம் எது என்பது..

அதை அவர் அறிந்தால் மட்டும் போதுமா..? சங்கரும்
அறிய வேண்டாமா..?

"ஷோபாவோட பர்த்டே பார்ட்டி வரப் போகுது ராம்.. அதுக்கான ஏற்பாட்டில்தான் பிஸியாய் இருக்கேன்..."

"ஓ.. ஹௌ நைஸ்... ஹௌ நைஸ்..."

ராமாமிர்தம் மகிழ்ந்து போக.. இதில் இந்த அளவுக்கு இவர் மகிழ்ந்து போக என்ன இருக்கிறது என்ற கடுப்புடன் அவர்மீது ஒரு பார்வையை செழுத்தினான் சங்கர்..

"அந்தப் பார்ட்டிக்கு இன்வைட் பண்ண வந்தேன் ராம்..."

"என்னையா..?"

"உன்னைக் கூப்பிட.. போர்டு மீட்டிங் நடக்கிற இடத்துக்கு தேடி வரனுமா..? வீட்டிற்கு வந்து கூப்பிட்டிருப்பேனே..."

"வேற யாரை இன்வைட் பண்ண வந்த ராம்...?"

அறியாப்பிள்ளை போல ராமாமிர்தம் வினவிவைக்க சங்கருக்கு பற்றிக் கொண்டு வந்தது...

'இவர் எப்போதிருந்து இப்படி பூடகமாய் பேச கற்றுக் கொண்டார்...?'

பூடகமாய் பேசிய தந்தையின் மேல் கோபம் வருவதற்குப் பதிலாக அவனுக்கு பரந்தாமனின் மேல் கோபம் வந்தது...

அது ஏனென்று அவனுக்குத் தெரியவில்லை...

"இது என்ன கேள்வி ராம்..? நான் என் மாப்பிள்ளையை இன்வைட் பண்ண வந்தேண்டா..."

'மாப்பிள்ளையா..? நானா..? இவருக்கா..? ஓ..நோ..'

சங்கருக்கு ஷோபாவின் மேல் வெறுப்பொன்றும் இல்லை.. அதே சமயம் அவளை வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்ளும் விருப்பமும் இல்லை...

இயல்பில்லாத பேச்சும்.. அதிகப்படி அலங்காரமுமாக இருக்கும் அவளிடம் ஒரு வினாடிக்கு மேல் அவனால் பேச முடிந்ததே இல்லை...

'இவ ஏன் இப்படியொரு ஆர்ட்டிபிஷியல் ஜீரோவா இருக்கா..?'

ஷோபாவை சந்திக்க நேரும் ஒவ்வொரு தருணங்களிலும் இந்தக் கேள்வி அவன் மனதில் எழுந்து நிற்கும்...

அப்படிப்பட்ட ஒரு பிரகிருதியுடன் தன் வாழ்வை இணைத்துப் பேசும் காரணத்திற்காகவே அவனுக்கு பரந்தாமனை இன்னமும் பிடிக்காமல் போனது...

"ஐ ஹேவ் நோ டைம் டாடி..."

"த்சு.. இன்வைட் பண்ணுவது பந்தாமன்.. அவனிடம் பேசாம என்னிடம் பதில் சொன்னா என்ன அர்த்தம் சங்கர்...?"

அதில் ஆயிரம் அர்த்தங்கள் உண்டு.. அ
ராமாமிர்தத்திற்கும் தெரியும்... இருந்தும் அவர்.. அறிந்தும்
அறியாதவரைப் போல கேட்டுவைத்தார்...

"நீங்கதானே சொல்வீங்க.. உங்களுக்கும்
உங்க பிரண்டுக்கும் வேவ்லெந்த் ஒன்னு போல
இருக்குன்னு... அதான் உங்களிடம் சொன்னா.. அவரிட
சொன்னதைப் போலவே இருக்கும்ன்னு சொன்னேன்.."

ராமாமிர்தம் இந்தப் பதிலைக் கேட்டதும்
செய்வதறியாதவராக நண்பனை நோக்கினார்.. அவ
ஒன்றும் ராமாமிர்தம் அல்லவே... பரந்தாமன் ஆயிற்றே
இதைப் போல எத்தனையை அவர் பார்த்திருப்பார்..?

அவர் சங்கரின் மறுப்பைக் கண்டு கொள்வேன
என்று அடம் பிடித்தவராக.. அவனிடம் நே
கெஞ்சுதலாக கோரிக்கை வைத்தார்..

"நீங்க கட்டாயம் பங்ஷனுக்கு வரனும் மாப்பிள்ளை.

'இந்த ஆளுக்கென்ன காது செவிடா..?
சங்கருக்கு கோபம் வந்தது...

"அதைத்தான் டாடியிடம் சொன்னேன் அங்கிள்.. ஹே
ஹேவ் நோ டைம்.. என் பர்த்டே பார்ட்டியை அட்டெண்
பண்ணவே எனக்கு டைம் கிடையாது.. இதில மத்தவங்
பார்ட்டியை அட்டெண்ட் பண்ண நேரத்துக்கு எங்
போகிறது..?"

"நீங்க அப்படியெல்லாம் சொல்லக்கூடாது மாப்பிள்ளை..."

'இதென்னடா வம்பாப் போச்சு.. நேரமில்லைன்னா.. நேரமில்லைன்னுதானே சொல்ல முடியும்..? இந்த மனிதர் என்னடான்னா.. நீ அப்படியெல்லாம் சொல்லக் கூடாதுங்கிறாரு.. வேற எப்படித்தான் சொல்லனுமாம்..?'

வந்த எரிச்சலில்.. தகப்பனாரின் நண்பரை விட்டுவிட்டு.. தகப்பனையே நேரடியாக முறைத்தான் சங்கர்...

அவர் அசைந்து கொடுப்பதாகவே இல்லை..

'ஒரு வார்த்தையாவது இவர் என்பக்கம் பேசுகிறாரா..?'

ராமாமிர்தம் மகனின் பக்கம் பேசவேயில்லை.. பரந்தாமன் வற்புறுத்தி.. வற்புறுத்தி.. சங்கருக்கு தலைவலியை வரவைத்து.. ஒருவழியாக அவனிடம் கட்டாயம் அவர்கள் வீட்டு விருந்திற்கு வருவதாக வாக்குறுதியையும் வரவைத்து விட்டார்...

6

உன்னைப் போல ஒருத்தியைத்தான்..
உலகம் முழுதும் தேடினேனா..?

"காத்திடுவாய் நீயென்று...
கைகூப்பி வணங்கி நின்றேன்...
காத்திடவே நீயும் வந்தாய்...
கருணை செய்தாய் பெருமானே...!"

பூஜையறையில் மேகலாவின் குரல் கேட்டது.. அதில் பொதிந்து தளும்பி.. வழிந்து கொண்டிருந்த பக்தியில் நனைந்து போனான் பாலமுரளி...

பூஜையறையின் வாசலில் போய் அவன் நிற்பதற்கும்.. தீபாதரனைத் தட்டுடன் மேகலா வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது...

"சாமியைக் கும்பிட்டுக்கப்பா..."

மகனைப் பார்த்து ஆதுரமாக சொன்னாள் மேகலா- தீபாதரனைத் தட்டின் ஜோதியைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்ட மகனின் மேல் அவளின் பார்வை.. படிந்து வருடிக் கொடுத்தது...

'இவன் என் மகன்..!' அவளது நெஞ்சம் பெருமிதத்தில் மூழ்கி கூவியது...

மகன்மீதான கர்வம் என்றும் போல அன்றும் அவள் மனதில் நிறைய.. கற்பூர ஆரத்தித்தட்டை.. கடவுளின் முன் வைத்துவிட்டு.. அந்தப் பெருமையை நிலைக்கச் செய்யுமாறு கைகூப்பி வணங்கி கடவுளிடம் வேண்டிக் கொண்டாள் மேகலா...

"ஐயா..."

வாசலில் யாரோ அழைக்கும் சத்தம் கேட்டு வாசலுக்குப் போன பாலமுரளி மாநிறத்தில் இருந்தான்.. ஆறடி உயரத்தில் கம்பீரமான தோற்றத்துடன் இருந்தான்.. அவனின் கருத்த சிகையும்.. அடர்ந்த மீசையும் அவனது ஆண்மை மிகுந்த தோற்றப் பொழிவை அதிகப்படுத்திக் காட்டியது...

"யாரு..?" என்றபடி வாசலுக்குப் போன பாலமுரளியிடம்...

"நான்தானுங்க ஐயா..." என்றான் நாச்சியப்பன்...

"என்ன நாச்சியப்பா..?"

"இன்னைக்கு தோப்பில காய் இறக்கனுமுன்னு சொன்னீங்களேய்யா..."

"ஆமாம்.. அதுக்கென்ன..?"

"காய் இறக்க ஆள் வந்திருக்குய்யா..."

"அப்படியா..? ஒன்னு செய்யி.. நீ அவங்கள தோப்புக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போயி வேலைய ஆரம்பித்து வைய்யி.. நான் பின்னாடியே வந்துடறேன்..."

"ஆகட்டுங்கய்யா..." நாச்சியப்பன் விரைந்தான்..

உள்ளே போகத் திரும்பிய பாலமுரளி... அடுத்த

"ஐயா..." என்ற அழைப்பைக் கேட்டு நின்றான்...

வயலில் வேலை செய்யும் மருதமுத்து வந்திருந்தான்

"என்ன மருதமுத்து..?"

"இன்னைக்கு நாத்து நடவு ஆரம்பிக்குதுங்கய்யா.."

"அதான் தெரியுமே.. நீ நடவு வேலைய ஆரம்பிச்சுரு... பாவியிருக்கிற நாத்தெல்லாம் சரியா போகுமில்ல..."

"மிச்சம்.. மிச்சம்ங்கய்யா.. என்னைக்கு நம் வயலுக்கு நாத்து பத்தாம போயிருக்கு...? நாம நட்ட போக மிச்சம் மீதியை சுத்துப்பட்டு வயலுக் கொடுத்துத்தானேங்க நமக்குப் பழக்கம்.. வாங்கி பழக்கமில்லையேய்யா..."

மருதமுத்துவின் வார்த்தைகளில் பெருமை தொனித்தது.. அவனின் பாசத்தின் மீதான பெருமை பாலமுரளியின் மனதில் தோன்றியது..

"தோப்பில காய் இறக்க ஆரம்பிச்சாச்சு மருதமுத்து நான் அதைப் பார்த்துட்டு வயல்பக்கம் வர்றேன்.. வேலையை ஆரம்பிச்சுரு..."

மருதமுத்து அகன்றுவிட.. பாலமுரளியும் வீட்டுக்குள் நகரப் போனான்...

"ஐயா..."

அழைப்புக்குரல் வந்துவிட்டது.. அகல முடியாமல் இப்போது வந்திருப்பது யாராக இருக்கும் என்ற நினைவில் அவன் திரும்பினான்..

செங்கல் சூளையிலிருந்து... ஆவுடையப்பன் வந்திருந்தான்...

"என்ன ஆவுடையப்பா...?"

"இன்னைக்கு செங்கலை அறுக்கனும் முதலாளி..."

"அறுத்துட்டாப் போச்சு... நீ வேலையை ஆரம்பி... கல்லை எண்ண ஆரம்பிக்கிறதுக்குள்ள நான் வந்திருவேன்..."

ஆவுடையப்பனையும் அனுப்பிவிட்டு.. 'அக்கடா' என்று வயிற்றுக்கு எதையாவது போட அவன் வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்கப் போன சமயத்தில் அடுத்த குரல் அவனை அழைத்துவிட்டது...

"சார்..."

ஹீரோ ஹோண்டாவை நிறுத்தி விட்டு.. சதீஷ் மரியாதையுடன் அவன் முன்னால் வந்து நின்றான்..

"சொல்லுங்க சதீஷ்..."

"கரும்பு மில்லில் இன்னைக்கு ஆடிட்டிங் ஆரம்பிக்குது..."

"நினைவிருக்கு.. எல்லா டாகுமென்டையும் பக்காவா வைச்சிருக்கீங்களா..?"

"தயாரா இருக்கு சார்..."

"ஆடிட் பார்ட்டியை நல்ல முறையில் ரிஸீவ் பண்ணுங்க.. எந்தக் குறையுமில்லாம கவனிச்சுக்கங்க.. அவங்க கேட்கிற.. ஃபைலையெல்லாம் உடனுக்குடன் எடுத்துக் கொடுங்க.. நான் வந்துடறேன்..."

"ஓகே சார்..."

சதீஷின் ஹீரோ ஹோண்டா கிளம்பிவிட.. வேறு ஒரு டிவிஎஸ் பிப்டி பால முரளியின் வீட்டு வளாகத்திற்குள் நுழைந்தது..

'இப்போ யாரு...?'

ஜவுளிக்கடையின் கணக்குப் பிள்ளை சுதர்சனம் வந்திருந்தார்...

"என்ன சார்...?"

"லோடு வந்து இறங்கியிருக்குங்க முதலாளி..."

"சாயந்திரம் வந்து பார்க்கிறேன்... நீங்க எத்தனை பண்டல்ன்னு மட்டும் செக் பண்ணி வாங்கி நம்ம கொடவுனில் அடுக்கி வையுங்க..."

அவரையும் அனுப்பி விட்டு.. அவன் உள்ளே போனபோது விசாலாட்சி.. சாப்பாட்டு மேஜையில் அவனுக்கு தட்டை வைத்து விட்டுக் காத்திருந்தாள்..

"பசிக்குதும்மா... சீக்கிரமாய் டிபனைப் போடுங்க..."

வேகத்துடன் கைகழுவி விட்டு வந்து.. அதைவிட வேகத்துடன் இட்லிகளை உள்ளே தள்ளிய மகனைப் பார்த்த மேகலாவுக்கு அவனின் அதிக உழைப்பைக் குறித்த கவலை எழுந்தது...

'இவன் வயசில இருக்கிறவனுக எல்லாம் பெண்டாட்டி... பிள்ளை குட்டின்னு குடும்பம் நடத்திக்கிட்டு இருக்கிறானுக... இவன் மட்டும் காலையில இருந்து.. நடுச்சாமம் வரைக்கும்... வேலை.. வேலைன்னு அலையறானே...'

ஒரே நாளில்.. தோப்பிலேயும் காயை இறக்கி... வயலின் நாற்று நடவையும் மேற்பார்வை பார்த்து... செங்கல் சூளையின் அறுக்கப்பட்ட செங்கல்களையும் கணக்கில் எடுத்து... லாரிகளில் ஏற்றி அனுப்பி வைத்து.. ஜவுளிக் கடையில் வந்து இறங்கியிருக்கும் ஜவுளிமூட்டைகளை உடைத்து சரிபார்த்து அடுக்க வைத்து... கரும்பு மில்லுக்கும் ஆஜராகி.. வந்திருக்கும் ஆடிட்டிங் பார்ட்டிகள் கேட்கும் விளக்கத்தையும் கொடுத்து என்று இவன் எப்படி அத்தனை வேலைகளையும் திறமையாக செய்து முடிக்கிறான் என்ற ஆச்சரியம் அவளுக்குள் எழுந்தது...

தண்ணீரைக் குடித்தபடி தாயைப் பார்த்த முரளியின் புருவங்கள் என்னவென்று வினவும் பாவனையில் மேலே உயர்ந்து இறங்கின...

"ஒத்த ஆளா இத்தனை சோலியையும் இழுத்து போட்டுக்கிட்டா எப்படிப்பா..?"

"பார்க்கிற சோலியை பார்த்துத்தானே ஆகனும்..?"

"அதுக்காக எம்புட்டு பாரத்தைத்தான் சுமக்கனும்னு வரைமுறை இல்லையா ராஜா..?"

தாயின் ஆதங்கம் மனதைத் தொட... அவளை சமாதானப்படுத்தும் விதமாக இதமான சிரிப்பொன்றை உதிர்த்தான் பாலமுரளி...

"இது நம்மளோட சோலிம்மா... இதைச் சுமைன்னு நினைக்கலாமா..? அப்படிப் பார்த்தா அப்பாவும் தாத்தாவும்... இதைப் போலத்தானே சுமந்திருப்பாங்க... அவங்க ரத்தம்ம்மா நானு.. சுமையைக் கண்டு நான் பயப்பட முடியுமா..?"

"உன் தாத்தாவும்.. அப்பாவும்.. தோப்பு துரவோட நிறுத்திக்கிட்டாங்க முரளி.. நீ அதையும் தாண்டி.. செங்கல் சூளை,.. கரும்பு மில்லு.. ஜவுளிக்கடைன்னு இழுத்து விட்டுக்கிட்டியேப்பா..."

"அப்பன்.. பாட்டன் சொத்தில் மட்டும் அரசாண்டா அவனுக்குப் பெயர் ஆம்பளையில்லைம்மா... அவன் பெயரைச் சொல்லுகிறதைப் போல எதையாவது சாதிக்கனும்... அவன்தான் ஆம்பளை..."

பாலமுரளி சாப்பாட்டை முடித்தவனாக எழுந்துக் கொள்ளப் போனான்...

"இன்னும் ரெண்டு இட்லியைச் சாப்பிடுப்பா..."

அவசரமாக அவன் தட்டில் இட்லிகளை வைத்தாள்... மேகலா...

"இதுக்கும் மேலே சாப்பிட்டா வயிறு தாங்குமாம்மா..?"

"எல்லாம் தாங்கும்... இப்பப் போறவன் பொழுது சாயற வேளையில மதியச் சாப்பாட்டுக்கு வர்ற... உன்னைச் சொல்லிக் குத்தமில்லைடா மகனே... அம்மா கையில சாப்பிட்டா அப்படித்தான் இருக்கும்.. இதுவே பெண்டாட்டின்னு ஒருத்தி வந்து அவள் கையில் சாப்பிடுறதா இருந்தா நேரா நேரத்துக்கு நீயாய் ஒடி வந்திருவ இல்ல...?"

இது தினமும் மேகலா பாடும் பல்லவிதான்.. அடுத்து வரப்போகும் அனுபல்லவி எதுவாக இருக்கக்கூடும் என்று அறிந்து வைத்திருந்த பாலமுரளி... பதில் சொல்லாமல் தட்டிலிருந்த இட்லிகளைக் காலி செய்வதில் கவனமாகி விட்டான்...

"அக்கா போன்மேல போனா போடறா தம்பி..."

"எதுக்காம்..? ஏதாவது சீர் செனத்தி செய்யனுமா...?"

"அதை அவ கேட்கிற நிலைமையிலா வைச்சிருக்க..?"

"அப்புறம் என்னவாம்..?"

"அவளோட சின்ன மாமியா அவளைப் போட்டு அனத்துறாளாம்..."

எதற்காக அனத்துகிறாள் என்று பாலமுரு கேட்கவில்லை... அவனுக்கே அதற்கான விடை தெரியும்...

"என்னப்பா பேசாம இருக்கிற...?"

"என்னத்தைப் பேசச் சொல்றிங்க.. இதில் எனக்கு இஷ்டமில்லைன்னு எத்தனை வாட்டி சொன்னாலும் உங்க மனசில ஏற மாட்டேங்குதே..."

"அப்படிச் சொல்லாதே ராஜா... உன் அக்காவுக்கு உன்னை விட்டா யாரிருக்கா...? அவ மாமியா வீட்டுப் பக்கம் பெண்ணை எடுத்தா அவளுக்கும் அவ புருசன் வீட்டிலே மரியாதை கிடைக்கும்... பிறந்த வீட்டிலேயும் அவளுக்கு கடைசிவரை கவனிப்பு இருக்கும்..."

"ஏம்மா.. இப்ப என்ன என் அக்காவுக்கு அது வீட்டிலே மரியாதை கிடைக்காம போயிருச்சா..? இல்லை.. அதோட சின்ன மாமியா பொண்ணை நான் கட்டினாத்தான் இந்த வீட்டிலே அதுக்கு கவனிப்பு இருக்கும்... இல்லைன்னா... இல்லாம போயிருமா..? என் அக்காவுக்கு அது வீட்டிலே ஏதாச்சும் ஒரு சின்னக்குறை இருக்குன்னு அது சொல்லிப் பார்க்கட்டும்...

அந்த வீட்டையே உண்டு... இல்லைன்னு பண்ணிட்டு வந்திருவேன்.. அதே போல எனக்கு பெண்டாட்டியாய வருகிறவ என் அக்காவை கவனிக்காம இருந்தான்னு வைய்யுங்க அவளையும் உண்டு இல்லைன்னு பண்ணிருவேன்... அது என் ஒத்தை உடன்பிறப்பும்மா.. அதை நான் விட்டுக் கொடுத்திருவேனா...?"

"அதுக்காக சொல்லலை ராஜா..."

"நீங்க எதுக்காக சொன்னாலும் சரி... இதுக்காக வெல்லாம் நான் எனக்கு இஷ்டமில்லாத கல்யாணத்தை பண்ணிக்க மாட்டேன்..."

"இப்படிச் சொல்லியே காலத்தை கடத்து... உனக்கும் வயசு முப்பத்திஒன்னாகிருச்சு.. உன் கூடப் படிச்சவனெல்லாம் கல்யாணத்தைப் பண்ணி... பிள்ளைகுட்டியை பார்த்துட்டானுக.. நீ மட்டும் இன்னும் இதே வியாக்கினத்தைப் பேசிக்கிட்டே... அசைஞ்சு கொடுக்காம நிற்கிற..."

"வேற என்னத்தை பண்ணச் சொல்றிங்க..? எந்தப் பெண்ணைப் பார்க்கப் போனாலும் உங்களுக்கு பிடிக்க மாட்டேங்குது..."

"எவளாவது உன் அக்காவோட சின்ன மாமியா பெத்த பொண்ணைப் போல இருக்காளாடா..?"

"அப்புறம் எதுக்கு என்னைக் குத்தம் சொல்றிங்க.."

"சரி உனக்குத்தான் உன் அக்காவோட நாத்தனாளைப் பிடிக்கல... மத்த பொண்ணுகளையாவது பிடிக்குதாடா...?"

"உங்களுக்கு பிடிச்சதா..?"

"என்னைவிடு.. கட்டிக்கப் போகிறவன் நீ.. உனக்குப் பிடிச்சிருந்தா நான் மாட்டேன்னா சொல்லப் போறேன்..? என் மனசுக்கு பட்டதைச் சொன்னேன்.. உனக்கு இஷ்டமில்லைங்கிற... அப்ப.. உனக்கு யார்மேல இஷ்டமோ... அவளை கண்ணில் காட்டு.. அவளையே உனக்கு கட்டி வைக்கிறேன்..."

"அப்படியொருத்தி என் கண்ணில் பட்டா... உங்க கண்ணுக்கு காட்டறேன்..."

"எப்படா..?"

"தெரியலையே..."

"இந்த வாரக் கடைசியில தென்காசிக்கு போகனும்ப்பா..."

"எதுக்கு...? பொண்ணு பார்க்கவா...?"

"அதுக்குத்தான்.. நீதான் உன் அக்காவோட நாத்தனா வேண்டாம்கறியே..."

"இந்த வாரக் கடைசியில நான் சென்னைக்கு போகனும்மா..."

"எதுக்குடா..?"

"கரும்பு மில்லு சம்பந்தமா சென்னையில ஒரு வேலையிருக்கும்மா..."

"அப்ப.. மறக்காம உன் அக்காவோட சின்ன மாமியா வீட்டுக்கும் ஒரு நடை போயிட்டு வந்துருப்பா..."

"பார்க்கலாம்..."

"அப்படிச் சொல்லாதே... நீ அந்தப் பெண்ணைக் கட்டு.. இல்ல.. கட்டாம போ... அது வேற பிரச்னை... ஆனா மெட்ராஸிக்குப் போனா உன் அக்காவோட சொந்தக்காரங்க வீட்டில கால்வச்சிட்டுத்தான் வரனும்.. அதுதான் அவளுக்கு மரியாதை..."

ஒரு சின்னஞ்சிறு பார்வையிலே..
சிறை பிடித்தாய் என் மனதை...

பாலமுரளியின் அக்காவான பால சரஸ்வதியை திருநெல்வேலியில் திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள்.. அவளது மாமியாரின் கூடப்பிறந்த தங்கையான சுசிலாவை சென்னையில் பரந்தாமனுக்கு திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள் அவர்கள் பெற்ற குணக்குன்றான

ஷோபாவை பாலமுரளியின் தலையில் கட்டிவி
வேண்டுமென்று பாலசரஸ்வதியும் எத்தனையோ
பிரயத்தனங்களைச் செய்து பார்த்து விட்டாள்...

பாலமுரளி அசைந்து கொடுக்கவே இல்லை...

"ஏய்ய்.. அவளுக்கென்னடா குறைச்சல்..? ஆள்
பார்க்க மூக்கும்... முழியுமா.. ரதியைப் போலவே
இருக்கா.."

"நீ ரதியைப் பார்த்திருக்கியாக்கா...?"

"ஷோபாவைப் பார்த்திருக்கேனே.. இது
போதாதா..?"

"ஆனாலும்.. இது ரொம்பவும் அதிகப்படிக்கா.. உன்
சின்ன மாமியாரின் மகள்ங்கிறதுக்காக... யார் கூட
வேணும்னாலும் அவளை இணை கூட்டிருவியா..?"

சரஸ்வதிக்கு தம்பியின் பேச்சைக் கேட்டு சிரிப்பு
வந்துவிடும்.. அவள் அவனருகில் வந்து.. நாடியைப் பிடித்து
கெஞ்சுதலாக கேட்பாள்...

"ஏண்டா.... எவ்வளவு நல்லவன் நீ..?"

"போச்சுடா.. ரொம்ம்ப நல்லவன்னு சொல்லிட்ட..
எதை டின்கட்டப் போகிற உத்தேசத்தில இதைச்
சொல்ற...?"

"எனக்காக எம்புட்டோ செஞ்சிருக்கே..."

"இப்பவும் கேளு செய்யறேன்..."

"அதைத்தானேடா நானும் கேட்கிறேன்.. எனக்குப்
பணம்.. நகையெல்லாம் வேண்டாம்..."

"அடேங்கப்பா.. உன்னை என்னவோ
வெறுங்கையோட விரட்டி விட்டதைப் போலல்ல பேசி
வைக்கிற.. வண்டி வண்டியாய் சீர்வரிசையோட... வைர
நகைகளோட உன்னை அனுப்பி வைச்சேன்.. மறந்து
போயிருச்சா..."

பாலமுரளியும் அப்படித்தான்.. அவனுடைய அப்பா
மாணிக்க வாசகத்துடன் காடுகரை.. தோப்பு.. வயல் என்று
சென்று பழகியவன் அவன்...

வீட்டுக்குள்ளேயே இருந்து பழக்கப்பட்ட மேகலா
தடுமாறிப் போனபோது...

"நான் பார்த்துக்கறேம்மா..." என்று சொன்னவன்
அவன்...

அப்போது தோப்பு... வயல் என்று விவசாயம் மட்டுமே
அவர்களது குடும்பத் தொழிலாக இருந்தது.. கை
கொடுக்க வேலையாள்கள் இருந்தார்கள்.. கணக்கைப்
பார்க்க கணக்குப்பிள்ளை இருந்தார்..

இருந்தபோதும்.. பாலமுரளி அதிகாலையிலேயே
எழுந்து தோப்புப் பக்கம் போய்விடுவான்.. அங்கே காவல்
காக்கும் சின்னான் குடும்பத்துடன் பேசியபடியே
தோப்பைச் சுற்றிவிட்டு.. வயல்பக்கம் வருவான்.. அங்கே
வேலை நடப்பதை பார்வையிட்டு விட்டு வீட்டுக்கு வரும்
போது.. சுள்ளென்று வெயில் அடிக்க ஆரம்பித்திருக்கும்...

"நேரமாச்சுடா..."

அவனுடனே பள்ளிக்குச் செல்ல தயாராக கிளம்பி நிற்கும் பதினேழு வயது பாலசரஸ்வதி அவசரப் படுத்துவாள்...

"பொறுக்கா..." என்றபடி குளித்து முடித்து இரண்டு இட்லிகளை பிய்த்து வாயில் போட்டுக் கொண்டு மோட்டார் சைக்கிளை எடுப்பான்.. தமக்கையை பின்னால் அமர வைத்துக் கொண்டு.. பக்கத்து டவுனிலிருக்கும் பள்ளிக்கு பறந்து விடுவான்...

சாயங்காலம் வந்ததும்.. முகம் கழுவி உடைமாற்றி மேகலா கையால் காபி.. பலகாரம் வாங்கி சாப்பிட்டு விட்டு ஒய்வெடுக்க வேண்டிய கொடுப்பினை பாலசரஸ்வதிக்கு மட்டுமே உண்டு...

பாலமுரளி.. அயர்ந்து உட்காரமாட்டான்.. மீண்டும் தோப்பு... வயல் என்று சுற்றி விட்டு வர கிளம்பிச் சென்றுவிடுவான்...

வாரத்தில் ஐந்து நாள்கள் மட்டுமே பள்ளி இருந்ததும்... வாரக் கடைசியான இரண்டு நாள்களில் விடுமுறை என்பதும் அவனுக்கு வசதியாக இருந்தது...

கூடுதலாக காலாண்டு.. அரையாண்டு.. முழுஆண்டு என்று விடுமுறை நாள்கள் வந்து சேர.. அவன் பள்ளியிறுதிவரை எந்த விதத் தடையுமில்லாமல் படித்து முடித்து விட்டான்...

பாலசரஸ்வதியை ப்ளஸ்டுவிற்கு பிறகு வீட்டில் நிறுத்திக் கொள்ள மேகலா முயன்றபோது.. பாலமுரளி அதை வன்மையாக கண்டித்தான்...

"இப்ப எதுக்கு அக்காவோட படிப்பை நிறுத்தறிங்க..?"

"பொம்பளப் புள்ளைக்கு இதுக்கு மேல படிப்பு எதுக்குடா..?"

"பொம்பளப் புள்ளைக்குத்தான் படிப்பு அவசியம்... ஒரு வீட்டின் அச்சாணியே பெண்தான்... அவள் படிப்பறிவோடு இருந்தால் தான் அந்தக் குடும்பம் முன்னேறும்..."

"அவதான் பனிரெண்டாவது வரைக்கும் படிச்சிருக்காளேடா..."

"அது போதுமா..?"

"பின்னே..? இவளை பட்டம் வாங்கவா அனுப்பப் போற...?"

"ஆமாம்..."

பாலமுரளி அதில் உறுதியாக நின்றான்.. பக்கத்து டவுனில் இருக்கும் பெண்கள் கல்லூரியிலேயே பாலசரஸ்வதியை சேர்த்தும் விட்டான்...

"நீ ப்ளஸ் ஒன் படிக்கிற சின்னப் பையன்னு சொன்னால் யாரும் நம்ப மாட்டாங்கடா முரளி.. நீ எனக்கு தம்பியில்ல.. அண்ணன்...!"

பாலசரஸ்வதி அழுதுவிட்டாள்.. தமக்கையின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் துளிகளை ஆதாரவுடன் துடைத்து விட்டான் பாலமுரளி...

"இதுக்குப் போய் ஏன்க்கா அழுகறே..? இது சின்ன விசயம்.."

"இதுவாடா தம்பி சின்ன விசயம்..? எவ்வளவு பெரிய விசயத்தை நீ சாதிச்சிருக்கிற.. நீ மட்டும் இல்லைன்னா.. அப்பா போன பின்னாலே அம்மா என்படிப்பை நிறுத்தி மூலையிலே உட்கார வைச்சிருப்பாங்க..."

மேகலா அதைத்தான் செய்வதாக இருந்தாள்.. ஊருக்குள்ளே பெரிய குடும்பம் என்று பெயர் வாங்கிவிட்டு.. குடும்பத் தலைவன் இல்லாத போது.. வயதுப் பெண்ணை வெளியே விட்டால்.. அந்தக் குடும்பப் பெருமைக்கு குறைவு வந்து விடுமோ என்று பயந்தாள்...

"நீ ஆம்பளைப் பையன்டா.. நீ படிக்க பக்கத்து டவுனுக்குப் போனா ஒன்னுமில்லை.. அதுவே உன் அக்கா போனா சரிவராதுடா..?"

"ஏன் சரிவராது...?"

"இது ஆம்பளையில்லாத குடும்பம்டா முரளி.. வயசுப் பெண்ணை வெளியே அனுப்பிட்டு வயித்துக்குள்ளே நெருப்பைக் கட்டிக்கிட்டு உட்காரச் சொல்றியா..? அவ படிச்சது போதும்டா.. அடுத்த வருச வாக்கிலே என்

தம்பிக்கு அவளை கட்டிக் கொடுத்துட்டு நிம்மதியாய் இருக்கலாம்..."

"என்னது பதினேழுவயசில கல்யாணமா..?" பாலமுரளிக்கு கோபம் வந்துவிட்டது...

"இதுவே அதிகம்டா.. எனக்கு பதினாறு வயசிலேயே கல்யாணம் ஆகிருச்சு..."

"அது உங்க காலம்... இப்ப காலம் மாறிப்போச்க.."

"என்னை என்னதாண்டா பண்ணச் சொல்ற..?"

"என்னைப் பார்த்தா உங்களுக்கு ஆம்பளையா தெரியலையா..?"

பதினைந்து வயது பாலமுரளி கேட்டபோது மேகலாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை...

தாயின் கண்களுக்கு அவள் பெற்ற பிள்ளைகள் என்றுமே குழந்தைகள்தான்.. அந்த நினைவில்...

"நீ பச்சைப் புள்ளைடா..." என்றாள்...

"ஊஹூம்... பத்தாவது படிக்கிற பிள்ளை... இப்ப உங்க கவலை என்ன..? அக்கா.. பத்திரமாய் ஸ்கூலுக்கு போயிட்டு வரனும்.. அவ்வளவுதானே.. நானும் டவுனுக்குத்தானே படிக்கப் போறேன்..? அக்காவை அதோட ஸ்கூலில் விட்டுட்டு.. நான் என் ஸ்கூலுக்குப் போறேன்.. திரும்பி வரும்போது கூப்பிட்டுக்கிட்டு வர்றேன்..."

அவர்கள் வீட்டில் கார் இருந்தது... "கூட்டு வண்டி" என்று சொல்லப்படும் 'வில் வண்டி' ஒன்று அவர்களிடம் இருந்தது... மாணிக்கவாசம் உயிரோடு இருந்தவரை அவர்கள் காரிலும்.. அந்த வில் வண்டியிலுமாகத்தான் பள்ளிக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள்... கனவனின் மறைவுக்குப் பின்னால் மேகலா.. அவர்களின் மகன் பள்ளிக்குப் போய் வருவதை ஆட்சேபித்தான்...

"முனி... காலம் கெட்டுகிடக்கு.. உனக்கு கார் ஓட்டற வயசில்லை.. மாட்டு வண்டியை நீ ஓட்டிக்கிட்டு பள்ளிக்கூடம் போய் வர முடியுமா..?"

"புரியலைம்மா..."

"டிரைவரையும்.. வண்டி ஓட்டுகிறவனையும் நம்பி என் பொண்ணை நான் வெளியே அனுப்ப மாட்டேன்..."

"என்னை நம்பி அனுப்புறீங்கள்ல..."

பாலமுரளி மோட்டார் சைக்கிளை வெளியில் எடுத்தான்... அதுநாள் வரை உள்ளூரில் சுற்ற மட்டும் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளில்.. பாலசரஸ்வதியை பின்னால் உட்கார வைத்துக் கொண்டு பள்ளிக்கு போய்வர ஆரம்பித்தான்...

பாலசரஸ்வதி வெற்றிகரமாக பள்ளியிறுதி வகுப்பை முடித்தாள்... பாலமுரளி ப்ளஸ் ஒன்னில் காலை வைத்தான்.. பாலசரஸ்வதி கல்லூரியில் சேர்வதற்கு மீண்டும் மேகலை எதிர்பார்க்க... அதையும்

முறியடித்து... பாலசரஸ்வதியை பெண்கள் கல்லூரியில் சேர்த்து விட்டு... பட்டப்படிப்பை படிக்கவைத்தான்...

பாலசரஸ்வதி பட்டம் வாங்கிய போது... பாலமுரளி பட்டப் படிப்பின் முதலாண்டை முடித்திருந்தான்... இப்போது... அவனால் காரை ஓட்ட முடிந்திருந்தது... அதனால்... தாயையும்.. தமக்கையையும் காரில் அழைத்துப் போய் வர ஆரம்பித்திருந்தான்.. அவன் தனியாகப் போகும் போது மட்டும் டிவிஎஸ் அப்பாச்சியில் பறப்பான்... குடும்பத்துடன் போகும் போது... புதுக்காரில் போய் வருவான்...

பழைய காரும்.. பழைய மோட்டார் சைக்கிளும் போய்.. புதிதாக டிவிஎஸ் அப்பாச்சியும்.. புதுக்காரும் வீட்டில் குடிபுகுந்தன... இதற்கிடையில் மேகலாவின் தம்பியாகப்பட்ட.. அவருடைய சித்தப்பாவின் மகனான சிவநேசனின் திருமணமும் நடந்து முடிந்திருந்தது...

"இதுக்குத்தான் படிச்சப் படிச்சச் சொன்னேன்..." மேகலா ஆதங்கப்பட்டாள்...

"படிச்சப் படிச்ச..? நீங்க சொன்னீங்க...? ம்ஹீம்.. எதை யார் சொல்றதுன்னு விவஸ்தையே இல்லாமப் போச்சு..." பாலமுரளி தோளைக் குழுக்கினான்..

"உனக்கு என் கவலை புரியதா..?"

"என்னம்மா உங்க கவலை..?"

"உங்க அக்காவை படிக்க வைக்க வேணாம்ன்னு தலைப்பாடாய் அடிச்சுக்கிட்டேன்.. நீதான் கேட்கலை..

இப்பப் பாரு.. படிச்சபொண்ணு வேணாம்ன்னு என்தம்
சொல்லிட்டான்..."

"சொல்லாம எப்படி இருப்பாரு... அவ
ஐந்தாவதைத் தாண்டலை.. ஆனாவுக்கு அடுத்த எழுத்
மட்டும்தான் அவருக்குத் தெரியும்... அவருக்கு போ
அக்காவைக் கொடுக்கனுமுன்னு சொன்னா.. மனுச
பயந்தடிச்சு ஓடிற மாட்டாரா...?"

"அதான் நீ ஒட்டிட்டயே..." மேகலா மனத்தாங்கலுட
சொல்ல...

"கண்டுபிடிச்சிட்டாங்க..." என்று தமக்கையி
காதோரமாக ஒதினான் பாலமுரளி...

"ம்ஹீம்.. தகப்பனில்லாத பொண்ணு.. அந்நியத்தி
கொடுக்காம சொந்தத்திலே கொடுத்தா அவளுக்கு
ஆதரவிருக்கும்ன்னு நினைச்சேன்..."

மேகலா முணுமுணுத்த போது பாலமுரளிக்
கோபம் வந்துவிட்டது..

"அதென்ன எடுத்ததுக்கெல்லாம் இதை
சொல்கிறீங்க.. அக்கா தகப்பனில்லாத பெண்தான்
ஆனால் தம்பியில்லாத பெண்ணில்லை... அதுக்
தகப்பனுக்கு தகப்பனா நானிருக்கேன்.. அப்
இருந்திருந்தால் அக்காவுக்கு என்னவெல்லா
செய்திருப்பாரோ.. அதைவிட பத்துமடங்கு அதிகமா நா
அதுக்குச் செய்வேன்..."

சொன்னதைப் போலவே செய்து காட்டினான் பாலமுரளி...

திருநெல்வேலியிலேயே பெரிய பணக்காரரான கனகராஜின் மகனுக்கு பாலசரஸ்வதியை பேசி முடித்தான்...

"மாப்பிள்ளை பெயர் ராஜ ராஜன்.. இன்ஜினியரிங் படிச்சிருக்கார்.. சொந்தமா அவங்களுக்கு பேக்டரி இருக்கு... அதுக்கு மாப்பிள்ளைதான் எம்டி.."

"ஏண்டா தம்பி.. அந்த கனகராஜ் குடும்பம் பெரிய இடம்ன்னு எல்லாரும் சொல்றாங்களேடா..."

"நாமளும் பெரிய இடம்தான்ம்மா..."

"அவங்களுக்கு இணையா.. நிறக்க சீர் செஞ்சு அனுப்ப நம்மால முடியுமாடா முரளி..."

"முடியும்..."

அவனால் முடிந்தது.. அவனின் சக்தியை அன்றுதான் மேகலா உணர்ந்தாள்.. மாணிக்கவாசகம் இருந்திருந்தால் கூட மகளுக்கு அவ்வளவு சீர் செய்திருக்க மாட்டார்.. அதைவிட பலமடங்கு அதிகமாக சீர்செய்தான் பாலமுரளி...

பூவாசம் மனம் மயக்கும்..
உன் நினைவை அது இழுக்கும்..

பரம்பரையாய் இருந்த தோப்பு துரவையும் தான் வியாபாரத்தில் அவன் கால் பதித்தபோது மேகலா பயந்தாள்...

"வேண்டாம்டா மகனே... தராசுத்தட்டுக்கு நமக்கும் ரொம்ப தூரம்..."

தொட வேண்டும் என்று நினைப்பவள் தொடுவானைக் கூட தொட்டு வருவான்.. அஷ்டலட்சுமிகளில் தைரிய லட்சுமி எந்த இடத்தில் இருக்கிறாளோ.. அதே இடத்தில்தான் மற்ற லட்சுமிகளும் வாசம் செய்வார்களாம்...

பாலமுரளி தைரியத்தை தன்வசம் வைத்திருந்தான். அவன் தொட்டதெல்லாம் துலங்கியது.. அவன் நினைத்ததை நடத்தியே முடித்தான்...

பட்டப்படிப்பை முடித்ததும்.. முதலில் செங்கல் சூளையில் கால் பதித்தான்.. அதற்கடுத்து டவுனில் ஜவுளிக்கடையை ஆரம்பித்தான்...

'என்னடா இது.. பெரிய வீட்டுப் புள்ள எதையெதையோ செய்ய ஆரம்பிக்குதே...' என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் போது... அனைவரும் மூக்கின்மீது விரலை வைக்கும் வண்ணம் கரும்புமில்லை ஆரம்பித்து விட்டான்...

மகனின் வெற்றிகளில் மேகலாவுக்கு சந்தோசம் தான்....

ஆனால் உயரே.. உயரே பறக்கும் வேகத்தில் அவன் திருமணத்தைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் இருப்பதைக் கண்டுதான் அவளுக்கு மனம் கொள்ளாத வருத்தமாக இருந்தது...

"ஏண்டா முரளி... ஊருல.. உலகத்திலே.. உன் வயசிலே இருக்கிறவனுக எல்லாம் பெண்டாட்டியைக் கட்டிட்டு.. பிள்ளைகுட்டியை பெத்துக்கிட்டு இருக்கிறப்போ... நீ மட்டும் ஏண்டா இப்படி இருக்கே.."

"அதுக்கெல்லாம் எனக்கு நேரமில்லைம்மா..."

இப்படிச் சொல்கிற ஆண்மகனை இப்போதுதான் பார்க்கிறாள் மேகலா... அவளறிந்த ஆண்பிள்ளைகள் எல்லாம்... திருமணவயது வந்தஉடனேயே.. தாயிடம்..

'ஏம்மா.. வீட்டுக்கு விளக்கேற்ற உனக்கு ஒரு மருமக வேண்டாமா..?' என்றுதான் கேட்டு வைப்பார்கள்...

வருகிற மகராசி விளக்கேற்றி வைக்காமல்.. வீட்டிலிருக்கும் மாமியாருடன் சரிமல்லுக்கு நிற்பாள்.. அதெல்லாம் வேறுகதை...

இப்படிப்பட்ட ஜீவன்கள் இருக்கும் உலகில்.. ஒ
பெண்ணுக்கு தாலிகட்டி குடும்பம் நடத்த நேரமில்ல
என்று சொல்லும் மகனை.. ஏதோ ஒரு விசித்திர
பிறவியைப் பார்ப்பதைப் போல வினோதமாக பார்த்
வைத்தாள் அவள்...

"உன் தம்பியை நீதான் ஏன்னு கேட்க மாட்டி
சரசு..."

மகளிடம் அவள் முறையிட்டபோதுதான் அவ
தனது சின்ன மாமியாரின் மகளை... தம்பிக்கு மண
முடித்து வைக்க நினைத்த தன் அபிலாஷையை வெள
படுத்தினாள்...

"அம்மா.. நானோ அந்நியத்தில் வாழ்க்கை
பட்டிருக்கேன்..."

"அதைச்சொல்லு.. உன் மாமன்தான் உன்னை
கட்டிக்க மாட்டேன்னு சொல்லிட்டானே..."

வழக்கமான தனது பிலாக்கணத்தை விசாலாட்
வெளிப்படுத்த.. பால சரஸ்வதி பல்லைக் கடித்தாள்...

'இந்தம்மாவோட ஐந்தாவது படிச்ச தம்
என்னைக் கை விட்டுட்டான்னு பெயர் கட்டிக்கிட்
இருக்கிறாங்களே.. இந்தப் பேச்சை இவங்க விட
மாட்டாங்களா..?'

"அதை விடுங்கம்மா... என் மாமியாரோட தங்
பொண்ணை நீங்க பார்த்திருக்கீங்களா..?"

"உன் மகனுக்கு காது குத்தறப்போ பாத்திருக்கேன்..
முடியை வெட்டி விட்டுக்கிட்டு.. ஆம்பளையாட்டம்..
பேன்டு சட்டையிலே அலைஞ்சுச்சே.. அந்தப்
பெண்ணுதானே..."

'இந்த ஷோபா.. காதுகுத்துக்கு வந்தப்ப
ஜீன்ஸ் பேன்டையும்.. டிசர்ட்டையும் அவாய்டு
பண்ணியிருக்கலாம்...'

"அது சென்னையில் பிறந்து வளர்ந்த
பொண்ணும்மா... அப்படித்தான் இருக்கும்..."

"அப்படி.. இப்படி இருக்கிறதையெல்லாம் அந்தப்
பொண்ணு மெட்ராஸோட விட்டுட்டு வரக்கூடாதோ..?
திருநெல்வேலிச் சீமையிலேயும் அப்படி இருந்தா நாடு
தாங்குமா சரசு...?"

இப்படிக் கேட்கிறவளிடம் அந்தப் பெண்ணை
'தம்பிக்கு கல்யாணம் பண்ணி வை' என்று சொன்னால்...
'தென்காசி பட்டினத்திலேயும் அப்படி இருந்தா
வீடு தாங்குமா..?' என்ற கேள்வியை எழுப்புவாள்
என்று தோன்ற பாலசரஸ்வதி பேச்சின் போக்கை
மாற்றிவிட்டாள்...

சென்னையில் அவளுடைய சின்ன மாமியார்
சீரும்.. சிறப்புமாக வாழ்கிறாள்.. அத்தனை சொத்துக்கும்
அந்தப் பெண் ஷோபாதான் ஒரே வாரிசு.. அப்படி..
இப்படி இருந்தால்தான் என்ன.. கல்யாணம் பண்ணி
மேகலாவின் மருமகளாக அவள் வந்து விட்டால்..

மேகலா அவளை தென்காசிப் பட்டினத்திற்கு ஏற்ற பெண்ணாக மாற்றிவிட மாட்டாளா என்ன..? பாலசரஸ்வதி பாவம்... மேகலாவின் தம்பிக்கு வாழ்க்கைப்பட முடியாமல் அந்நியத்தில் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள்.. அவளுடைய சின்ன மாமியாரின் பெண்ணை தம்பி திருமணம் செய்து கொண்டால் அவளுக்கும் புகுந்த வீட்டில் மரியாதையும் பிடிப்பும் அதிகமாக கிடைக்கும்.. பிறந்த வீட்டிலும் கடைசிவரை அவளுக்கு பிடிமானம் இருக்கும்...

மேகலா கரைந்து விட்டாள்.. அதன் விளைவாக அதுவரை ஏதாவது ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ளச் சொல்லி மகனை வற்புறுத்தியவள்.. சென்னையில் வசிக்கும் ஷோபாவைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி மகனை வற்புறுத்த ஆரம்பித்தாள்...

பாலமுரளி முதலில் அதைக் கேட்டதும் அயர்ந்து விட்டான்... மேகலாவுக்கென்று சில கோட்பாடுகள் உண்டு... அவள் எப்படி ஷோபாவைப் போன்ற பெண்ணொருத்தியை தேர்வு செய்தாள் என்று ஆச்சரியப்பட்டுப் போனான்.. தொடர்ந்து பேசிய மேகலாவின் மனதில் மகளைப்பற்றிய கவலை மலையளவு மண்டியிருப்பதைப் புரிந்து கொண்டவனுக்கு தாய் மனம் புரிந்து விட்டது... வரப்போகும் மனைவியைப் பற்றி நினைக்க நேரமில்லாமல் அவன் அலைந்து கொண்டிருந்தாலும்.. அவனுக்கும் சில கனவுகளும்.. எதிர்பார்ப்புகளும் இருந்தன.. அவற்றில் ஒன்றில் கூட அந்த ஷோபா பொருதி வரவில்லை...

"இந்தப் பேச்சை விட்டு விடுங்கம்மா..."

அவன் தீர்மானமாக சொல்லி விட்டபோதும்.. மேகலா அந்தப் பேச்சை விடவில்லை.. சமயம் கிடைக்கும் போதெல்லாம் அதை வலியுறுத்தி மகனிடம் பேசிக் கொண்டுதான் இருந்தாள்...

மேகலா இந்த அளவுக்கு மகனுடன் போராடிக் கொண்டிருக்க.. சென்னையிலிருந்த சுசிலா.. ஆற்றில் ஒரு கால்.. சேற்றில் ஒரு கால் என்ற ரீதியில் மகளுக்கு நாலாபக்கமும் பணக்கார இடங்களில் மாப்பிள்ளை தேடிக் கொண்டிருந்தாள்...

அக்கா மகனுக்கு திருமணம் பேசிய போது பெண்ணின் ஊர் தென்காசியின் அருகிலிருக்கும் 'தேனூத்து' கிராமம் என்று கேள்விப்பட்டு..

"ஏன்க்கா நம்ம ராஜராஜனுக்கு பெண்ணே கிடைக்காதா..? இருந்திருந்து ஒரு பட்டிக்காட்டில போய் பெண்ணெடுக்கப் போகிற..?" என்று ஆதங்கப்பட்டாள்...

"பொண்ணோட குடும்பம் அந்த ஊருக்கே பெரிய குடும்பமாம் சுசி... உங்க மாமா சொன்னாரு..." அவளின் அக்கா அகிலா சொன்னாள்...

"அப்போ சுண்டும்.. நண்டும்மா வீடு பூரா கூட்டமிருக்குன்னு சொல்லு..."

"ஊஹீம்.. அக்கா.. தம்பின்னு இரண்டு பேர்தானாம்.. அப்பா இல்லையாம்.. அம்மா மட்டும்தானாம்..."

சுசிலா பிரயோகித்த முதல் அஸ்திரம் பயனற்றுப் போக... அவள் அடுத்த அஸ்திரத்தை பிரயோகித்தாள்...

"தகப்பனில்லாத பெண்ணா..? உனக்கெதுக்கு இந்த தலைவிதி..?"

"தம்பி இருக்கானில்லையா..?"

"அவன் என்னத்தை செய்து கிழித்து விடப் போகிறான்..? பரம்பரை நிலத்தை விற்று சீர் செய்வானாயிருக்கும்.. இப்படி ஒவ்வொரு செய்முறைக்கும் அவன் சொத்தை விற்றுச் செஞ்சா கடைசியில் என்ன மிஞ்சப் போகுது..? அவனுக்கு தகப்பனுக்கு தகப்பனா நம்ம ராஜராஜன்தான் நிற்க வேண்டிவரும்...."

"அப்படியில்லைன்னு உன் மாமா சொல்கிறாரு சுசீ.. அவன் அவங்க அப்பாவை விட ஆயிரம் மடங்கு கெட்டிக்காரனாம்.. பத்தாவது படிக்கிற போதே குடும்பப் பொறுப்பை கையில் எடுத்துட்டானாம்.. சொல்வாக்குக்கும்... வசதிக்கும் ஒரு குறைச்சலு மில்லைன்னு உங்க மாமா சொல்கிறாரு..."

சுசிலாவிடம் இல்லாத ஒரு குணம்... அகிலாவிடம் உண்டு...

அது... கணவன் சொன்னால் மிகச் சரியாக இருக்கும் என்று நம்பும் அதீத நம்பிக்கை...

அந்த நம்பிக்கையை உடைத்து காட்ட வேண்டுமென்ற கனவு சுசிலாவுக்கு நிறைய உண்டு..

அதற்காகவே... அவள் ராஜராஜனுக்கு பெண் பார்க்கப் போனபோது.. வேலை மெனக்கெட்டு சென்னையிலிருந்து கிளம்பிவந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டாள்...

"உனக்குத்தான் நம்ம ராஜா மேலே எவ்வளவு பாசம் சுசி..."

அவள் வந்திருக்கும் நோக்கம் புரியாமல் அகிலா மகிழ்ந்து போனாள்.. அவர்கள் பெண் பார்க்க கிளம்பினார்கள்...

தேனூத்து கிராமத்திற்குள் கார்கள் நுழைந்த போதே சுசிலா அசந்து விட்டாள்...

பட்டிக்காடுதானே.. என்ற நினைவோடு வந்த சுசிலாவின் கண்முன்னால்.. அழகான பெரிய வீடுகளோடு.. வரிசையாக இருந்த தெருக்களோடு.. வளமையாக.. நகர்புறத்தின் பணக்காரர்கள் வசிக்கும் பகுதியை நினைவுறுத்தும் விதத்தில் அமைந்திருந்தது அந்தக் கிராமம்...

"இவ்வளவு வசதியா இருக்கே..."

"ஊரைச் சுத்திப் பார்த்தியில்ல... பச்சைப் பசேல்ன்னு தோப்பும்.. வயலுமா இருக்கிற ஊர்.. மூணு போகம் நெல்லடிக்கிறாங்க.. வசதிக்கா குறைவிருக்கப் போகுது...?"

அவர்கள் கிளம்பி வந்த ஆறு கார்களும்.... பாலமுரளியின் வீட்டுக் காம்பவுண்டிற்குள் கட்டப்

பட்டிருந்த நீண்ட அகன்ற... பெரிய வழுவழுப்பான தூண்களை உடைய போர்டிகோவில் வரிசையாக நின்று பின்னும்.. நிறைய இடம் மீதமிருப்பதை உணர்ந்து கொண்ட சுசிலாவின் கண்களில் முதன்முதலாக யோசனை வந்தது..

அவள் அந்த வீட்டை பார்வையிட்டாள்... அந்த ஊரில் பாதியாவு அந்த வீடே இருக்கும் என்று அவள் மனம் கணக்கிட்டது...

வாசலின் பிரதானக் கேட்டிலிருந்து.. வீடுவரை.. வழுவழு சிமெண்ட் பாதை போட்டிருந்தாலும்.. வீட்டின் முன்புறம் அகன்று நீண்டு.. நாலுகால் மண்டபம் போல.. நான்கு அகன்ற பெரிய தூண்களுடன் தென்பட்ட போர்டிகோவைப் போன்ற இடம் பூராவும் பளிங்கினால் இழைத்திருந்தார்கள்...

நீண்ட சிமின்ட் பாதையின் இருபுறமும் தோட்டம் இருந்தது... அதன் ஓரமாக நீச்சல் குளம் அமைந்திருந்தது- தோட்டத்தின் மையத்தில் செயற்கை நீருற்று இருந்தது..

அவர்களின் சென்னை வீட்டை விட பதினைந்து மடங்கு அதிக விஸ்தீரனத்துடன் அமைந்திருந்த அந்த வீட்டின் அரண்மனை போன்ற அமைப்பில் பிரமித்து விட்டாள் சுசிலா...

பெண் பார்க்க முன்புறமிருந்த ஹாலில் அமர்ந்திருந்த போதே அந்த வீட்டின் செல்வச் செழிப்பை

கணக்கில் எடுத்து விட்டாள்.. திருமணம் முடிவாகி.. பாலசரஸ்வதிக்கு செய்யப்பட்ட சீர்வரிசைகளில் அவளது பிரமிப்பு அதிகரிக்க ஆரம்பித்தது...

அப்போது ஷோபாவிற்கு பதிமூன்று வயதுதான் இருக்கும்.. இருந்தும்.. இருபது வயதான பாலமுரளியின் மீது அவள் பார்வையை பதித்து வைத்துக் கொண்டாள்...

ஷோபா படிப்பில் கெட்டிக்காரியல்ல.. அதனால்.. படிப்பில் இரண்டு வருடம் இடறி விழுந்து ஒருவழியாக இன்ஜினியரிங் காலேஜில் அடியெடுத்து வைத்தாள்...

பரந்தாமன் வெற்றிகரமான தொழிலதிபராக இருந்தார்.. சென்னையில் அவர் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்த போது.. கிராமத்தில் பாலமுரளி.. வெற்றிகரமான இளம் தொழிலதிபனாக மாறியிருந்தான்.. அவனது அடையாளம் வெகுவாக மாறி.. கரும்புமில்.. ஜவுளிக்கடை என்று அவன் வியாபாரத்தில் கால் பதித்தபோது... தன் மனக்கிடக்கையை அகிலாவின் காதில் போட்டு வைத்துவிட்டாள் சுசிலா...

இன்னொரு பக்கம் பரந்தாமனை தூண்டிவிட்டு அவருடைய நண்பரான ராமாமிர்தத்தின் மகன் சங்கருக்கு ஷோபாவை கொடுக்கும் எண்ணத்தை அவர் மனதில் விதைத்தாள்...

மதியத்திலே வந்த கோபம்...
மாலையிலே மாறுவதென்ன..?

இதுதான் சுசிலா...!

அவளது சொந்தக்கார வட்டாரத்தில் பாலமுரளி பெரிய ஆள்.. பரம்பரைப் பணக்காரன்.. தினமும் ஒரு தொழில் ஆரம்பித்து வெற்றிகரமாக அதை நடத்தும் வல்லமையுள்ளவன்.. அவன் ஷோபாவுக்கு கணவனாக வந்தாலும் அவளுக்கு சரிதான்...

அவளது கணவரின் தொழில் வட்டாரத்தில் சங்கர் பெரிய ஆள்.. வெளிநாட்டுக்கு போய் படித்து விட்டு வந்தவன்.. கூடுதலாக.. ஷோபாவுக்கு அவன்மேல் மயக்கம் இருந்தது.. அவன் ஷோபாவுக்கு கணவனாக அமைந்தாலும் நல்லதுதான்...

அவள் இரண்டு பக்கமும் காய்களை நகர்த்திக் கொண்டிருந்தாள்.. இரண்டில் எது அமைந்தாலும்... அவளுக்கு சம்மதம்தான்..

என்ன ஒன்று.. அவள் பலமாக முயற்சி செய்து கொண்டிருந்த இரண்டு மாப்பிள்ளைகளுக்குமே ஷோபாவைக் கண்டால் கட்டோடு பிடிக்காது

அது ஏன் என்றுதான் பாவம் அவளுக்குப் புரியவில்லை...

ஷோபா அழகாக இருந்தாள்.. படிப்பில் மக்கென்றாலும் இன்ஜினியரிங் காலேஜில் கால் பதித்திருந்தால்.. எல்லாவற்றையும் விட.. பரந்தாமனின் சொத்துக்கு அவள் ஒருத்தி மட்டுமே வாரிசு... பணக்காரி..

இப்படிப்பட்ட பெண் தேடினாலும் கிடைக்காது என்பார்கள்.. சங்கருக்கும்.. பாலமுரளிக்கும் தேடாமலே அவள் கிடைத்தும் இருவருமே சொல்லி வைத்ததைப் போல அவளைத் திரும்பிக்கூடப் பார்க்க மறுத்தார்கள்..

இத்தனைக்கும்.. சங்கரும்.. பாலமுரளியும்.. ஒருவருக்கொருவர் அறிமுகமானவர்கள் அல்ல...

பாலமுரளி சுசிலாவுக்கு சொந்தக்காரன்.. சங்கர் பரந்தாமனுகுகு நண்பரின் மகன்..

இவனைப் பற்றி அவனுக்கோ.. அவனைப் பற்றி இவனுக்கோ தெரியாதபோது.. எப்படி இரண்டுபேரும் ஒரு மனதாய் ஷோபாவை மறுக்கிறார்கள் என்று சுசிலா மனம் புகைந்தாலும்.. தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத லேடி விக்ரமாதித்தனாக முயற்சிகளை தொடர்ந்து கொண்டேயிருந்தாள்...

சென்னையில் நடக்கும் விருந்துகளுக்கு சங்கரை அவள் அழைக்க வைத்து விடுவாள்..

அதே போல திருநெல்வேலியில் நடக்கும் குடும்ப விழாக்களுக்கு மகளை இழுத்துக் கொண்டு போய் பாலமுரளியின் கண்பார்வையில் படும்படி நிறுத்தி விடுவாள்...

அப்போதும் அப்படித்தான்.. ஷோபாவின் பிறந்தநாள் விருந்துக்கு சங்கரை அழைக்கப் போவதாக கணவர் சொல்லியதும் அவள் மகிழ்ந்து போய் விட்டாள்..

"ஷோபா... உன் பாத்டே டிரஸ்ஸை செலக்ட் பண்ணிட்டயா.. ?"

"யெஸ் மாம்..."

"எப்பயும் விட இந்த வருச டிரஸ் அழகாய் இருக்கனும் ஷோபா.."

"எனக்குத் தெரியாதா மம்மி.. இந்த வருச பர்த்டே பார்ட்டி சம்திங் ஸ்பெசல் டு மி... ஸோ.. எல்லாத்தையும் பார்த்துப் பார்த்துத்தான் வாங்குவேன்..."

ஷோபா சங்கரின் நினைவில் சொல்லுகிறாள் என்று சுசிலா நினைத்துக் கொண்டாள்...

ஷோபாவோ.. ராதிகாவையும் சேர்த்து மனதில் நினைத்துக் கொண்டுதான் அந்த வார்த்தைகளைக் கூறினாள்...

"லாக்கர்ல இருந்து அந்த புது வைர செட்டை கொண்டு வந்திருங்க... ஷோபா அதை போட்டுக்கட்டும்.."

"ஆகட்டும் சுசி..."

வீடு அந்த விருந்திற்காக தயாரானது.. ஷோபா.. அந்த விருந்தில் ராதிகாவின் பொறாமையைத் தூண்டி விடவேண்டும் என்று தயாரானாள்...

விருந்திற்கு முன் நாளிலும் அவள் மறக்காமல் ராதிகாவுக்கு அந்த விருந்தைப் பற்றி நினைவுறுத்தினாள்..

"ராதிகா.. நாளைக்கு என் பார்த்டே பார்டியிருக்கு.."

"இதையே எத்தனை தரம்டி சொல்லுவ... ?"

ராதிகா கேட்டவுன் சுற்றியிருந்தவர்கள் சிரித்துவிட.. ஷோபாவின் முகம் சுருங்கிப் போனது...

சிரித்தவர்கள் பெண்களாக மட்டு மிருந்தால்கூட அவள் அதை பொருட்படுத்தியிருக்க மாட்டாள்.. அவளது வகுப்புத் தோழன்களும் சிரித்து வைத்ததில் அவள் கடுப்பாகிப் போனாள்...

'நீ மறந்திடப் போறியோன்னு நினைச்சேன்...'

"இல்லையில்லை... நான் மறக்கலை... ஆக்சுவலாய் ஷோபா... இதுதான் நான் ஈவினிங் டைமில் கலந்துக்கற முதல் பங்சன்.. உனக்காக என் வீட்டில் கெஞ்சிக் கூத்தாடி பெர்மிசன் வாங்கியிருக்கேன்.. கட்டாயம் நான் வருவேன்.. போதுமா.. ?"

'என்னவோ இது பெரிய விஜபி யைப் போல அலட்டிக்கிறாளே.. இவளை என் வீட்டுக்கு இழுக்க.. நான் என்னவெல்லாம் கேட்க வேண்டியிருக்கு...'

ஷோபா போய் விட்டாள்.. ராதிகா.. மறுநாள் மாலையில் ஹேமாவும் அவளுடன் வருவாளா என்பதை உறுதிசெய்து கொண்டாள்...

"நீயே போகும் போது.. நான் வராம இருப்பேனாடி..."

"எப்படிப் போகலாம்..?"

"ஏன்..? உன் ஸ்கூட்டி இருக்கே... அதிலேயே போயிடலாமே..."

"அதுவே ஒட்டை ஸ்கூட்டி... வழியிலே அது மக்கர் பண்ணி நின்னுடா என்னடி செய்கிறது..? இவ வேற இருட்டின பின்னாடி பங்சனை வைச்சிருக்கா..."

"என்ன செய்யலாம்..?"

"பேசாம ஆட்டோவில் போயிடலாம்.. அதுதான் பெஸ்ட்.."

"ஒகே... நான் பஸ் ஸ்டாப்பில் வெயிட் பண்றேன். ஆன்திவேயில் என்னை நீ பிக்அப் பண்ணிக்க..."

"அந்தக் கதையே வேணாம்.. நீ வீட்டுக்கு வந்தால்தான் என் வீட்டிலே என்னை அனுப்பிவைப்பாங்க..."

"இது வேற இருக்கா..?"

"ஆமாம்.. அதனால நேரத்தோட நீ வீட்டுக்கு வந்துசேரு... இல்லேன்னா.. லேடி ஹிட்லர் என்னை வீட்டுக்கு வெளியிலே காலை வைக்க விட மாட்டாங்க..."

"லேடி ஹிட்லரா..? யாருடி அது..?"

"வேற யாரு..? எல்லாம் என் அருமை அம்மாதான்.."

"அடிப்பாவி.. நீ அம்மாவையும் விட்டு வைக்கலியா..?"

வாய்பொத்தி சிரித்த ஹேமா மறக்காமல் மறுநாள் மாலையில் ராதிகாவை அழைத்துக் கொண்டு போக வந்துவிட்டாள்..

இளம்சிகப்பு வண்ணத்தில் சுடிதார் அணிந்து நின்ற ராதிகாவைப் பார்த்து...

"அசத்தறேடி..." என்றாள்...

"காலாகாலத்தில் வீட்டுக்கு வந்து சேருகிற வழியைப் பாருங்க..." என்று கவலையுடன் சொன்ன ராஜேஸ்வரியிடம்...

"கவலையே படாதீங்கம்மா.. போய் தலையைக் காண்பித்ததும் கிளம்பி வந்து விடுவோம்.." என்று உத்தரவாதம் அளித்துவிட்டு கிளம்பினாள் ராதிகா...

"அதுக்கு ஏண்டி அவ்வளவு தூரம் போகனும்..?" என்றாள் கீதா...

"என்னவோ.. என்னைக்கும் இல்லாம இந்த வருசம் மட்டும் அவ விழுந்து விழுந்து இன்வைட் பண்ணுகிறா.. மறுக்க முடியலைடி..." ராதிகா சொன்னாள்..

"அவளுக்கும் உனக்குமே ஏழாம் பொருத்தம்.. அவ இன்வைட் பண்ணினா நீ ஏண்டி அதுக்கு இம்பார்ட்ன்ட்

"ஏய்ய்... அவ எனக்கு பிடிக்காதவளாகவே இருந்துட்டுப் போகட்டும்.. அதைப்பத்தி பிரச்னையே இல்லை.. அவ வேண்டாதவளா இருந்தாலும்.. அவளோட இன்வைட்டை ஓரளவுக்கு மேலே மறுக்கக்கூடாது கீதா.. அது டீஸன்ஸி இல்லை.. கூப்பிட்டா.. எனக்கு போக விருப்பமில்லைன்னாலும்... அவ கூப்பிட்டதுக்கு மரியாதை கொடுக்கிறதுக்காக ஒரு எட்டு போய்விட்டு வந்துடணும் அதுதான் முறை..." நீளமாக விளக்கம் சொன்னாள் ராதிகா...

"அட.. அட.. அடா... புல்லரிக்குது போ.. எப்படி ராது நீ இப்படியெல்லாம் பேசக் கத்துக்கிட்ட.. இந்தா ஸ்வீட் எடுத்துக்க..."

கீதா ஸ்வீட்டை நீட்ட.. ராதிகாவும்.. ஹேமாவும் புதிராக பார்த்தபடி ஸ்வீட்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்கள்..

"எதுக்குடி ஸ்வீட்டைக் கொடுக்கிற..?"

"நீயெல்லாம் எதிரிபக்கம் நின்று பேச ஆரம்பிச்சுட்டில்ல... இந்த நல்லதோர் ஆரம்பத்தை ஸ்வீட் எடு.. கொண்டாடுன்னு கொண்டாட வேணாமா..?"

"போடி போக்கிரி..." ராதிகா சிரிக்க..

"இவகூடச் சேர்ந்து உனக்கும் வாய் வளர்ந்துருச்சுடி..?" என்று சான்றிதழ் வழங்கினாள் ராஜேஸ்வரி...

"பத்திரமா போய்ட்டு வாங்கடி..."

"ஏம்மா.. அவ என்ன லண்டனுக்கா போகிறா..? இந்தா இருக்கிற சைதாப் போட்டை வரைக்கும் போயிட்டு வரப் போறா.. அதுக்கா இத்தனை தூரத்துக்கு டாட்டா சொல்வீங்க..."

ராஜேஸ்வரியும் கீதாவும் வாதாடிக் கொண்டிருக்க.. ராதிகாவும் ஹேமாவும் கிளம்பி வாசலுக்கு வந்து நின்றார்கள்...

"ஆட்டோ..."

கடந்து போன ஆட்டோ.. அவர்களது கைதட்டலில் நிற்கவும்... வீட்டு வாசலிலேயே ஆட்டோவில் ஏறிக் கொண்டார்கள்...

"வழியில் ஏதாவது கிப்ட் ஷாப் இருந்தால் ஒரு செகண்ட் ஆட்டோவை நிறுத்துங்க சார்..." என்றாள் ராதிகா...

"ஏம்மா.. ஒரு செகண்டில நீங்க வாங்க வேண்டியதை வாங்கிட்டு வந்து விடுவீங்களா.." என்று பதிலுக்கு கேட்டான் ஆட்டோக்காரன்...

"ஏதோ பேச்சுவாக்கில் சொல்கிறதுதான்..." ராதிகா மழுப்பினாள்...

"பொம்பளைக சாமான் வாங்கப் போனா எவ்வளவு நேரமாகும்ன்னு எனக்கும் தெரியும்... அதனால நேரத்தை கடத்தாம சட்டுபுட்டுன்னு வர்றதா இருந்தா நான்

காத்திருக்கேன்.. இல்லைன்னா ஆட்டோவை கட்பன்ன அனுப்பிருங்க... நான் வேற சவாரியைப் பார்த்துக்கறேன். நீங்களும் வேற ஆட்டோவை பிடிச்சுக்கிட்டு போகப் பாருங்க..." ஆட்டோக்காரன் கறாராக பேசினான்...

"ஒரு நிமிசம் கூட ஆகாது.." உத்திரவாதம் அளித்த ராதிகா.. சொன்னதைப் போலவே ஒரே நிமிடத்தில் திரும்பிவந்துவிட...

"ஏம்மா.. வேண்டாதவங்களுக்கு பரி வாங்கப் போனீங்களா..." என்று கேட்டு வைத்தான் ஆட்டோக்காரன்...

"சரியாக் கண்டுபிடிச்சுட்டாருடி..." ராதிகாவின் காதைக் கடித்தாள் ஹேமா...

ஷோபாவின் வீட்டிற்கு முன்னால் வெளி நாட்டுக் கார்கள் அணிவகுத்து நிற்க.. அதற்கு மத்தியில் திருஷ்டிப் பொட்டு வைத்ததைப் போல ராதிகா போன ஆட்டோ சென்று நின்றது...

இறங்கி ஆட்டோவுக்கான பணத்தைக் கொடுத்து விட்டு வீட்டுக்குள் நுழைய முயன்றபோது... வாசல் கேட்டிலிருந்து செக்யூரிட்டி அவர்களை தடுத்து நிறுத்தினான்...

"நாங்க ஷோபாவோட கிளாஸ்மேட்ஸ்.. அவளோட பர்த்டே பங்சனுக்காக வந்திருக்கோம்..."

ராதிகா விளக்கம் கொடுத்தபோது.. அவர்களை இறக்கி விட்டுப் போன ஆட்டோவை முகச்சுளிப்புடன் பார்த்தான் செக்யூரிட்டி...

"நீங்க இரண்டு பேரும் சின்னம்மாவுக்கு பிரண்ட்ஸா..? நம்பவே முடியலையே..."

அவன் சந்தேகமாக வினவியபோது.. இதற்காகத்தான் ஷோபா அவ்வளவு வற்புறுத்தி ராதிகாவை வீட்டுக்கு அழைத்தாளோ என்று முதன் முதலாக ராதிகாவின் மனதில் தோன்றியது...

10

மாலையிலே உன் பார்வை
மனதை மயக்கும் காரணமென்ன..?

ஹேமாவுக்கு என்னவோ போல ஆகிவிட்டது...

"இதுக்குத்தாண்டி நான் இவ வீட்டு பங்சனுக்கு வரமாட்டேன்னு சொன்னேன்.. நீ கேட்கலை..."

செக்யூரிட்டிக்கு கேட்டுவிடாமல் மெல்லிய குரலில் சொன்னாள் ஹேமா... ராதிகாவிற்கும் அதே எண்ணம்தான் என்றாலும்.. அவ்வளவு தூரம் வந்துவிட்டு.. வாசலோடு திரும்பிப் போனால் அது ராதிகாவின் இயல்புக்கு அழகில்லையே...

"வேலை செய்கிறவங்களுக்கு என்னடி தெரியும்..? நாமதான் விளக்கமா எடுத்துச் சொல்லனும்..."

பொறுமையாக தோழியை சமாதானப் படுத்திய ராதிகா செக்யூரிட்டியின் முகம் பார்த்தாள்...

"லுக்மேன்.. நாங்க ஷோபாவோட படிக்கிறவங்க.. அவளோட பர்த்டே பங்சனுக்கு வந்திருக்கோம்.. நீங்க வேணும்னா அவகிட்ட கேட்டுக்கிட்டு வந்து எங்களை அலோவ் பண்ணுங்க.. ஏன்னா.. தெரியாதவங்களை நீங்க உள்ளே விடக்கூடாதில்லையா..? அதுதானே உங்க டியூட்டி... இல்லைன்னா பாவம்.. உங்களுக்கும் வேலை போயிடுமில்ல..."

செக்யூரிட்டியின் அலட்சியத்தையும்.. சந்தேகத்தையும் பொருட்படுத்தாமல் ஒரு வினாடியில் அவனுடைய நிலையை அவனுக்கு உணர்த்தி விட்டாள் ராதிகா..

ஆட்டோவில் வந்ததால் இளப்பமாக நினைத்த செக்யூரிட்டியின் முகம் இருண்டு விட்டது...

'வெல்டன் ராதிகா...' ஹேமா மனதிற்குள் பாராட்டிக் கொண்டாள்...

"ஸாரிம்மா..." செக்யூரிட்டி கேட்டைத் திறந்துவிட்டான்...

கண்முன்னால் தெரிந்த பங்களாவின் வெளிப்புறத் தோற்றம் பிரம்மாண்டமாகத் தெரிய...

"வாவ்..." என்றாள் ஹேமா...

"இதனால்தான் அவ இத்தனை அலட்டல் அலட்டிக்கிறா போல ஹேமா..."

"ஷ்யூர்.. அதிகபணம்.. அதனால இயல்பாவே அவளுக்கு அந்தக் குணம் வந்திருக்கு.."

"அது நேச்சர்தான்..."

அவர்கள் பேசிக்கொண்டே.. தோட்டத்து புல்வெளியில் கால்வைத்தார்கள்...

செடிகள் தோறும் சீரியல் விளக்குகள் கண் சிமிட்ட.. அந்த செடிகளின் மேலே நீருற்று வழிந்து கொண்டிருக்க.. இங்கும் அங்கும் முயல்கள் ஓடிக் கொண்டிருக்க.. என்று அந்தச் சூழலே வெகு ரம்யமாக இருந்தது...

"பெண்டாஸ்டிக் ஹேமா.. இவளோட குணத்துக்கு இவ கார்டனில் வைத்து ட்ரீட் கொடுப்பான்னு நான் நினைச்சுப் பார்க்கவே இல்லை.."

அந்தச் சூழலை ரசித்தபடி ராதிகா சொன்னதற்கு...

"நானும் நினைத்துப் பார்க்கலை..." என்று உடனடியாக பதில் வந்தது...

ஹேமாவிடம் பேசிக் கொண்டிருந்த ராதிகா... ஆண்குரலில் வந்த பதிலைக் கேட்டு.. புருவம் உயர்த்தினாள்...

'யாராக இருக்கும்..?'

அவர்கள் சுற்று முற்றும் பார்த்தார்கள்.. செடிக்கு அந்தப் பக்கமிருந்து குரல் ஒலித்ததால் ராதிகா லேசாக எட்டிப் பார்க்க.. புன்னகையுடன் ஒருவன் வெளிப்பட்டான்..

"வாவ்... பக்கா ஹேண்ட்சம் மேன்டி..." ஹேமா ராதிகாவின் காதோரம் கிசுகிசுத்தாள்...

'இவ இதுக்கும் 'வாவ்' சொல்லி வைக்கிறாளே..'

ராதிகா எதிரே நிற்பவனின் கவர்ச்சிகரமான அழகை நோட்டம் விட்டபடி அவனுக்கு 'ஹாய்' சொல்லலாமா.. வேண்டாமா.. என்று யோசித்தாள்...

"ஹாய்.. ஐ ஆம் சங்கர்..."

அவளை முந்திக்கொண்டு அவன் 'ஹாய்' சொல்லியபடி அவளுக்கு கை நீட்டினான்...

'எதுக்கு கையை நீட்டறான்..? இவன் கையை நான் பிடித்து குழுக்கனுமா..? அது என்ன தேவைக்காம்...'

ராதிகா நினைத்துக் கொண்டிருந்த போதே...

"ஹாய்... ஐ ஆம் ஹேமா..." என்றபடி... ராதிகாவிடம் நீட்டிக் கொண்டிருந்த அவனின் கையைப் பிடித்து குழுக்கினாள் ஹேமா...

"ஏண்டி அலையற..? அவன் உன்னைப்பத்தி என்ன நினைச்சுக்கவான்..?" ராதிகா சத்தமில்லாமல் தோழியை கடிந்து கொண்டாள்...

"என்னடி இது வம்பாப் போச்சு..? அவன்தானே கையை நீட்டினான்..? நீட்டின கையைப் பிடித்து

குழுக்கலைன்னா மனசு வலிக்காதா..?" கிசுகிசுப்பாய் நியாயம் கேட்டாள் ஹேமா..

"யார் மனசு வலிக்கும்..?" அதே குரலில் ராதிகா கேட்க...

"அவன் மனசுக்குத்தான்..." என்றாள் ஹேமா...

"உன் மனசு வலிக்கும்ன்னு சொல்லு..." ராதிகா முறைத்தாள்...

தோழிகளின் பேச்சு வார்த்தையை கையை முன்னால் மடித்துக் கட்டியவாறு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவனின் கண்களில் தென்பட்ட சுவாரஸ்யத்தைக் கவனித்ததும்.. பேச்சை நிறுத்தி விட்டாள் ராதிகா...

"ஏன் பேச்சை நிறுத்திட்டிங்க..?" அவன் கரிசனமாக விசாரித்தான்...

ஹேமா எதையோ சொல்ல வாய்திறந்து... ராதிகாவின் கையால் ரகசியக் 'கிள்'ளை வாங்கினாள்...

'ஸ்ஆ... ஒருகிலோ கறியை நகத்தில் எடுத்திருப்பா போல.. இந்தக் கிள்ளு கிள்ளறாளே...'

வலித்த கையை தடவியவாறு ஹேமா வாய் மூடிக்கொள்ள ராதிகா அவனை ஏற இறங்கப் பார்த்தாள்...

அவளது பார்வையைக் கண்டவனின் கண்களில் சுவாரஸ்யம் கூடியது.. அவளது செய்கையை அவன் ரசித்தான்...

"பார்வையிட்டு முடிச்சாச்சா.. ?"

அவன் மிதப்பாக வினவிய விதத்தில் அவளுக்கு பற்றிக்கொண்டு வந்தது..

"யார் சார் நீங்க.. ?" என்று சண்டைக்கு கிளம்பி விட்டாள்...

"சொன்னேனே.. ஐ ஆம் சங்கர்... நீங்கதான்... இன்னும் உங்க பெயரைச் சொல்லலை..."

"உங்ககிட்ட எதுக்காக நான் என் பெயரைச் சொல்லனும்.. ?"

ராதிகா மூக்கை விடைத்தாள்.. அவனுக்கு அவளின் அந்தக் கோபத்தைக் கண்டு வேடிக்கையாக இருந்தது...

"நான் என் பெயரைச் சொன்னேனே.."

"நான் கேட்டேனா.. ?"

"இப்போக் கேட்டிங்களே..."

"என்ன கேட்டேன்..."

"யார் சார்.. நீங்கன்னு கேட்கலையா.. ?"

அவள் எதற்காக அதைக் கேட்டாள்.. ? அவன் எதற்கும்.. எதற்கும் இணை கூட்டுகிறான்.. ? அவளுக்குள் கோபம் கிளர்ந்தது..

"ஏன் சார்.. இது எங்க கிளாஸ் மேட்டோட பர்த்டே பங்சன்.. அதில் கலந்துக்க நாங்க வந்திருக்கிறோம்..

எங்களுக்குள்ள நாங்க ஆயிரம் பேசிக்குவோம்.. நீங்க தேவையில்லாம மூக்கை நுழைச்சா யார் நீங்கன்னு கேட்க மாட்டோமா.. ?"

"ஓ.. நீங்க கேட்ட யார்... இந்த யாரா.. ?"

"ஆமாம்.. ஆமாம்.. மத்தபடி.. நீங்க யார்... எவர்ன்னு நாங்க தெரிஞ்சுக்கனும்கிற ஆர்வத்தில அதைக் கேட்கலை..."

"நாங்கன்னு உங்க பிரண்டையும் கூட்டுச் சேர்த்துக்கிட்டா எப்படி.. ?"

"ஹலோ.. இவ என்னோட பிரண்ட்..."

"யார் இல்லைன்னு சொன்னது.. ? பட்... ஐ ஆம் ஹேமான்னு எனக்கு இவங்க ஷேக் ஹாண்ட் கொடுத்தாங்களே.. மறந்து போச்சா.. ?"

அவன் கேலியாக வினவ... இவளை என்ன செய்தால் தேவலாம் என்ற கோபத்தோடு ஹேமாவை முறைத்தாள் ராதிகா...

"அவங்களை ஏங்க முறைக்கறிங்க.. ?"

அதற்கும் சங்கர் பரிந்து கொண்டு வர.. அவளின் கோபம் அதிகரித்தது...

"இப்ப உங்களுக்கு என்னதான் வேணும்.. ?"

"உங்க பெயர் என்னன்னு தெரிஞ்சுக்கனும்.."

"அதை நீங்க தெரிஞ்சுக்கிட்டு என்ன செய்யப் போறிங்க.. ?"

"தெரியுதில்ல... அதைத் தெரிஞ்சுக்கிட்டு நா ஒன்றும் செய்ய முடியாதுன்னு தெரியுதில்ல.. அப்புற எதுக்காக இந்தத் தயக்கம்..? உங்க பெயரைக் கேட்ட சொல்விட்டுப் போக வேண்டியது தானே.."

"அதெல்லாம் சொல்ல முடியாது..."

"ஏன் சொல்ல முடியாது.."

"எனக்குப் பிரியமில்லை..."

"ஆனா எனக்குப் பிரியமாச்சே..."

"என்னது..."

அவள் அவனை நேருக்குநேர் பார்த்து முறைத்தாள். அவன் சிரித்தபடி கைகளை உயர்த்தினான்...

"பஸ்.. பஸ்... எதுக்கு இந்த கோபம்..? நீங்க ஷோபாவோட கிளாஸ் மேட்ஸ்தான்.. பிரண்ட்ஸ் இல்லைன்னு எனக்கு நல்லாவே தெரியுது..."

"வாட்..?"

எப்படி அவன் இதைக் கண்டுபிடித்தான் என்ற நினைவில் ராதிகாவின் விழிகள் ஆச்சரியத்தில் மிதந்தன..

"எதுக்கு இத்தனை ஆச்சரியம்..? நீங்க அவளோட கிளாஸ்மேட்ஸ்ன்னுதான் சொன்னிங்க... மறந்தும் அவளோட பிரண்ட்ஸ்ன்னு சொல்லலையே.. அதை வைத்துத்தான் சொன்னேன்... அதோடு..."

அவன் முடிக்காமல் நிறுத்த.. அவனின் புத்திசாலித்தனமான யூகத்தில் வியந்து போயிருந்த ராதிகாவிற்கு அதற்கு மேலும் அவன் என்ன நினைத்தான் என்பதை அறிந்துகொள்ளும் ஆர்வம் துளிர்த்தது...

"அதோடு.. அவளுடைய குணத்துக்கு கார்டனில் வைத்து ட்ரீட் கொடுப்பான்னு நினைத்தும் பார்க்கலைன்னு சொன்னீங்களே... அந்த இடத்தில்தான் நீங்களும்.. நானும் ஒரு மனதாகிறோம்.."

'என்னடா இது.. இப்பவும் இவன் எதற்கோ.. எதையோ இணை கூட்டிச் சொல்லி வைக்கிறான்...' ராதிகா முகம் சிவந்தாள்...

அவளது முகச் சிகப்பை ரசித்தபடி அவன் பேச்சைத் தொடர்ந்தான்...

"உங்களுக்கு தோட்டமும்... இந்தச் சுழ்நிலையும் ரொம்பப் பிடிக்கும் போல இருக்கு.. பட்.. ஷோபாவுக்கு இதையெல்லாம் ரசிக்கத் தெரியாது..."

அது உண்மைதான் என்றாலும்.. அவனிடம் அதை ஒப்புக்கொள்ளும் மனமின்றி...

"அப்படியெல்லாம் இல்லையே..." என்று மறுத்தாள் ராதிகா...

"இப்பக்கூட கார்டனில்தானே பங்சனை அரேன்ஜ் பண்ணியிருக்கா..?" என்று கேட்கவும் செய்தாள்...

"இதைச் சொல்கிறிங்களா... ஹா.. ஹா..." எ
சிரித்தான் சங்கர்...

"எதுக்குச் சிரிக்கறிங்க..?" ராதிகாவுக்
புரியவில்லை...

"இந்த ஜடியாவை அவள் சொல்லியிரு
மாட்டாள்... அவளோட பேரண்ட்ஸ் சொல்லியிருப்பாங்க

"அதை எப்படி நீங்க நிச்சயமாய் சொல்கிறிங்க..?

அவன் மர்மப் புன்னகையுடன் திரும்பிப் பார்த்தா
வாசல் பக்கம் அவன் வரவுக்காக காத்திரு
பாந்தாமனும்.. சுசிலாவும் அவன் அங்கே நிற்பத
கண்டதும் விரைந்தோடி வந்தார்கள்...

அவன் தனிமையில் நின்றிருந்தாலோ.. இல்ல
வேறு ஆணுடன் பேசிக் கொண்டிருந்தாலோ அவர்
அந்த அளவுக்கு கதி கலங்கிப் போயிருக்க மாட்டார்

ஒரு பெண்ணுடன் அவன் வெகு சகஜமாக பே
கொண்டிருந்ததைக் கண்டு அவர்களின் அடிவ
கலங்கி விட்டது...

அதிலிருந்து அவனை தடுத்தாட் கொள்வதற்
அவர்கள் விரைந்து ஓடிவந்தார்கள்...

"யாருடி அந்தப் பொண்ணு..."

"தெரியலையே..."

"இந்த ஷோபாக்கழுதை எங்கே போனா..."

அந்த ஷோபாக்கழுதை அப்போதுதான் தன் ஒப்பனைகளை முடிந்துவிட்டு.. ஒயிலாக தோட்டத்தை நோக்கி வந்து கொண்டிருந்தாள்...

அந்திமிலே உந்தன் முகம்...
ரகசியங்களைச் சொல்லுதடி...

எல்லோரும் காத்திருப்பார்கள் என்று ஷோபாவுக்கு மிக நன்றாகவே தெரியும்.. இருந்தும் அவள் தாமதமாகவே வீட்டிலிருந்து வெளிப்பட்டாள்...

அனைவரும் அவளுக்காக காத்திருக்க.. விழா நாயகியாய் அவர்கள் முன்னிலையில் பிரவேசிக்க வேண்டும் என்பது அவளது திட்டம்...

அன்றைய நாள் அவளுடையது.. அந்த விழாவும் அவளுக்கானது.. அவள் வரவை மற்றவர்கள் எதிர்பார்த்து காத்திருக்க.. அவள் மகாராணியைப் போல அவர்கள் மத்தியிலே தோன்ற வேண்டும்...

அவள் பார்த்த இந்திப்படங்களில் இப்படித்தான் வந்தது...

எல்லோரும் ஹாலில் கூடியிருப்பார்கள்.. கதாநாயகி மாடியிலிருந்து வெளிப்படுவாள்.. அனைவரது கண்களும் மாடிப்படிகளை நோக்கித்திரும்பும்... அவள் ஒயிலாக பார்வையைச் சுழற்றி எல்லோரையும் பார்த்த வண்ணம் படிகளில் இறங்குவாள்.. அவர்கள் கைதட்டி ஆர்ப்பரித்து அவளை வரவேற்பார்கள்...

அந்தக் கதாநாயகியைப் போலத்தான் இதுவரை ஷோபா செய்து வந்தாள்.. அந்த வருடம் மட்டும் அது மாறி... ஹாலில் விழா நடக்காமல் தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தது...

அதில் ஷோபாவுக்கு சில சங்கடங்கள் இருந்தன.

முதலாவதாக அவளுக்கு தோட்டம் என்றாலே பிடிக்காது...

டிஸ்கொதே போன்றவைகளை விரும்புகிறவளுக்கு இயற்கையின் அழகு எப்படிப் பிடிக்கும்..?

பகலிலேயே தோட்டத்துப் பக்கம் வராதவளை இருளில் வரச்சொன்னால் அவளுக்கு எப்படியிருக்கும்..? அதுவும் அன்று அவளது பிறந்தநாள்... தோட்டத்தின் அழகை ரசிப்பவர்கள் அவளது வைர நகைகளின் ஒளிர்வை ரசிப்பார்களா..?

மூன்றாவதாக... அங்கே முயல் குட்டிகள் வேறு இங்கும் அங்குமாக ஓடிக் கொண்டிருந்தன...

ஷோபாவுக்கு வளர்ப்புப் பிராணியாக நாயை மட்டுமே பிடிக்கும்... அதுவும் நாய் வளர்க்க வேண்டும் என்பதற்காக மட்டும் தான்...

'ஹேய்... எங்க வீட்டில்.. வளர்க்கிற நாய் உசத்தி ரகம்டி.. எனக்காக டாடி.. வரவழைச்சது...'

ஷோபாவுக்கு நாயும் ஒரு பெருமைக்குரிய பொருள்தான்... மற்றபடி அந்த நாயை தொட்டுக்கூடப் பார்க்க மாட்டாள்...

இத்தனை சங்கடங்கள் இருந்தும்.. அவள் தோட்டத்தில் விழாநடத்துவதை ஆட்சேபிக்காமல் இருந்ததிற்கான ஒரே காரணம்... சங்கர்..!

அவனுக்கு இயற்கையை பிடிக்கும்.. இழை.. தழை.. செடி கொடிகளைப் பிடிக்கும் என்ற காரணத்திற்காக மட்டுமே அவள் தோட்டத்தில் விழா நடப்பதை பொறுத்துக் கொண்டாள்...

மற்றபடி.. தோட்டத்தில் அந்த விழா நடைபெறுவதில் ஷோபாவுக்கு கொஞ்சம் கூட உடன்பாடில்லை...

அவள் மெதுவாக அன்னம் போல நடக்கிறோமென்ற நினைவில் ஆமைபோல ஊர்ந்து வந்து கொண்டிருக்க.. பரந்தாமனும்.. சுசிலாவும்.. அடித்துப் பிடித்துக் கொண்டு சங்கரை நோக்கி ஓடி வந்தார்கள்...

"யாருடி அந்தப் பொண்ணு..?"

"தெரியலையே... மாப்பிள்ளைக்கு தெரிஞ்சி பொண்ணோ..?"

"அவளை எதுக்குடி இங்கே கூப்பிட்டுக்கிட்டு வந்தாரு..?"

"என்னைக் கேட்டா..? அவரைப் போய் கேளுங்க..."

"இந்த ஷோபாவுக்கு அறிவே இல்லை..."

எப்போதும் மகளைத் திட்டியறியாதவர்.. அவளது பிறந்த நாளில் போய் மகளைத் திட்டி வைத்தார்...

அந்த அளவுக்கு அவருக்கு சங்கரின் மேல் ஈடுபாடு இருப்பதை உணர்ந்ததினால்.. சுசிலாவும் அவரைக் கண்டிக்காமல் மௌனித்தாள்...

"வாங்க மாப்பிள்ளை.. வாங்க.. வந்து ரொம்ப நேரமாச்சா..?"

சங்கரை வரவேற்றுக் கொண்டே.. ராதிகாவை முறைத்தார் பரந்தாமன்...

'இவர் எதுக்கு என்னை முறைக்கிறார்..?'

புரியாமல் ராதிகா ஹேமாவைப் பார்க்க.. அவள் உதட்டைப் பிதுக்கி.. கைகளை விரித்து தோளைக் குழுக்கினாள்...

"இப்போதுதான் வந்தேன்..."

அது நேரம்வரை கண்களில் சிரிப்போடு அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தவன் முகத்தில் ஒரு களிப்பு ஏற்படுவதை வியப்புடன் உணர்ந்தாள் ராதிகா...

"உங்களுக்காக ஷோபா காத்துக்கிட்டு இருக்கா மாப்பிள்ளை..."

சுசிலா வெகு பவ்யத்துடன் கூறினாள்.. அவளது பார்வை ராதிகாவை அளவிட்டுக் கொண்டிருந்தது.. ராதிகாவின் எளிமையான.. இயல்பான தோற்றம் அவளது பயத்தை விரட்டியடிக்க.. அவள் 'அப்பாடா...' என்று நிம்மதிப் பெருமூச்சை விட்டாள்...

அதேசமயம்.. அந்த எளிமையிலும்.. அதீதமான அழகோடு ராதிகா இருந்தது சுசிலாவை பாதித்தது...

'இந்த ஷோபா என்னதான் செய்கிறா...'

வீட்டுப்பக்கம் திரும்பிப் பார்த்தாள்... ஆமை நடைபோட்டு வந்து கொண்டிருந்த ஷோபாவைக் கண்டதும் அவளது நிம்மதி அதிகமானது...

'வந்துட்டா.. இனி பயமில்லை...'

"அதோ.. ஷோபா வருகிறாளே..."

சங்கரின் கவனத்தை திருப்ப அவள் சொன்ன வார்த்தைகளை அவன் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை...

ஷோபா வருகிறாளா என்று பார்க்காமல்.. அவன் அலட்சியத்துடன் செடிகளுக்கு மத்தியில் மீறிட்டுக் கொண்டிருந்த செயற்கை நீருற்றைப் பார்த்துக் கொண்டிருக்க... ஷோபா அவர்களைப் பார்த்து விட்டாள்..

'சங்கர்...!'

அவள் விழிகள் மின்னிய அதே நேரத்தில்... சங்கரின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ராதிகாவை பார்த்து விட்டாள்... பரவசகம் மறைந்து.. அவள் விழிகளில் கலவரம் படிந்தது..

அவள் போட்டு வைத்த திட்டமே.. சங்கரும்.. அவளும் அருகருகே நிற்க வேண்டும்.. அதைப் பார்த்து ராதிகா பொறாமைப்பட வேண்டும் என்பதுதான்...

இப்போது என்னடா வென்றால்.. ராதிகாவின் அருகே சங்கர் நின்றுகொண்டிருக்கிறான்.. ஷோபா அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்...

'இவளுக்கு மட்டும்.. எல்லாமே தானாகவே நடந்துவிடுமா..?'

அவள் அன்னம் போல நடக்க வேண்டும் என்பதை மறந்து.. ஆமை வேகத்தை விட்டுவிட்டு.. வேகமாக நடைபோட்டாள்...

"ஹாய் சங்கர்..." அவளுக்கு மூச்சிரைத்தது...

"ஹாய்.. இதோ இருக்கிற வீட்டிலிருந்து வருவதற்கா இப்படி ஒலிம்பிக் பந்தயத்திலே ஓடி வந்ததைப் போல மூச்சிரைக்கிற..? மெதுவாய் வர வேண்டியதுதானே..."

சங்கர் நிதானமாக கேட்டான்.. கிடைத்தது வாய்ப்பென்று ஷோபாவிற்கு பதிலாக பரந்தாமன் பதில் சொன்னார்...

"அவ மெதுவாகத்தான் வந்திருப்பா.. உங்களைப் பார்த்திருப்பா.. அதுக்குப் பின்னாலேயும் அவளாலே மெதுவாக நடந்து வர முடியுமா மாப்பிள்ளை..? உங்களைப் பார்த்த சந்தோசத்தில் ஓடி வந்திருப்பா.. ஆம் ஐ கரெக்ட் ஷோபா..?"

"அப்சல்யூட்லி கரெக்ட் டாடி..."

தந்தை மகளின் பேச்சு வார்த்தையிலிருந்து.. சங்கரின் மீதான அவர்களின் ஈடுபோட்டை தெள்ளத் தெளிவாக புரிந்துகொண்டாள் ராதிகா...

அவள் முன்னால் அந்தப் பேச்சு வார்த்தை நடந்ததில் ஷோபாவுக்கு மனதுக்குள் வருத்தம்.. அதைவிட.. அவள் முன்னாலேயே சங்கர் பாராமுகம் காட்டியதில் அதைவிட வருத்தம்...

'இவ என்னைப்பத்தி என்ன நினைப்பா..?'

அவள் மனதிற்குள் குமைந்து கொண்டிருந்த போது.. சங்கர் அவனது பாராமுகத்தை கைவிட்டு அவள் முகம் பார்த்தான்...

அவள் சந்தோசப் பட்டுப் போனாள்..

"நான் மட்டும்தான் இங்கே நிற்கிறேனா ஷோபா.. உன் பிரண்ட்ஸீம் உனக்காக வந்து இங்கே நின்றுக்கிட்டு இருக்காங்களே.. அவங்களை நீ பார்க்கலையா..?"

அவன் அவள் சந்தோசத்தில் வெந்நீரை ஊற்றி வைக்க.. அவள் திணறிப் போனாள்...

'அப்பாடி.. இதுக ரெண்டும் மாப்பிள்ளைக்கு பிரண்டில்லை... ஷோபாவுக்குத்தான் பிரண்டுக போல...'

பரந்தாமனும்.. சுசிலாவும்.. கண்களால் நிம்மதியை பரிமாறிக் கொண்டார்கள்...

"உங்களைப் பார்த்த பின்னால் மத்தவங்க அவ கண்ணில் படுவாங்களா மாப்பிள்ளை..? ஆம் ஐ கரெக்ட் ஷோபா..?"

பரந்தாமன் மகளுக்கு கை கொடுக்க...

"அப்சல்யூட்லி கரெக்ட் டாடி..." என்று அவளும் தவறாமல் அந்த உதவிக்கரத்தை பற்றிக் கொண்டாள்..

"இதுவரை பார்க்கலை... இப்போ பார்த்தாச்-சில்லையா..?"

சங்கர் விடாமல் அதிலேயே நின்றதை.. ஷோபாவும்.. அவளைப் பெற்றவர்களும் மனதிற்குள் குறித்துக் கொண்டார்கள்...

'இது நல்லதுக்கில்லையே...' என்று சுசிலாவும்..

'ஷோபா எதுக்காக.. இது போல அவளை டாமினேட் பண்ணக்கூடிய பிரண்ட்ஸ்களை இன்வைட் பண்ணினா..' என்று பரந்தாமனும் ஒரே நேரத்தில் மனதிற்குள் நினைத்துக் கொண்டார்கள்...

இருந்த போதிலும்.. அவர்களுக்கும் வேறு வழியிருக்கவில்லை... வந்த விருந்தினரை வரவேற்கா-விட்டால் சங்கர் அவர்களைப் பற்றி என்ன நினைப்பான்..?

அதுவும்.. அவர்களது தவறை அவன் கட்டிக் காட்டிய பின்னாலும் அவர்கள் சும்மா இருந்தால் அது நன்றாக இருக்குமா..?

ஆதலால் வரவழைத்துக் கொண்ட முக மலர்ச்சியுடன்...

"ஹாய் ராதிகா... ஹாய் ஹேமா..." என்றாள் ஷோபா..

ராதிகாவைப் பார்த்த சங்கரின் பார்வையில் ஏதோ செய்தி இருந்தது.. அது என்னவாக இருக்கும் என்று யோசித்த ராதிகாவிற்கு நொடிப் பொழுதில் அது புரிந்து போனது...

ஷோபா அவளது பெயரைச் சொல்லி அழைத்ததில்... அவளது பெயர் அவனுக்குத் தெரிந்து விட்டதாம்...

அவளது கண்கள் அந்தச் செய்தியைப் புரிந்து கொண்டசிரிப்பைக் காட்ட.. அவன் கண்களில் மின்னலடித்தன...

சுபாவத்திலேயே சூட்சுமப்புத்தி அதிகமாக உள்ள சுசிலா இந்தப் பார்வைப் பரிமாற்றத்தைக் கண்டுபிடித்து விட்டாள்...

'ஊஹூம்.. இந்த டிராக்கே சரியில்லை...'

மனதில் நினைத்தபோதும் அதை மறைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்துடன் அவள் வலுக்கட்டாயமாக சிரிப்பை வரவழைத்துக் கொள்ள முயன்று கொண்டிருந்த போது.. அந்தக் கார் வந்து நின்றது...

கவனம் கலைந்தவர்களாக அவர்கள் திரும்பி பார்க்க பாலமுரளி காரிலிருந்து இறங்கினான்...

'பால முரளியா..!' சுசிலாவினால் நம்பவே முடியவில்லை...

அவளும் திருநெல்வேலிக்குப் போகும் போதெல்லாம் அவனுடன் பேச்சுக் கொடுக்க முயன்று தோற்றுப் போயிருக்கிறாள்...

அவனுக்கு நின்று பேச நேரமிருக்காது. ஒரு வார்த்தைபேசுவதற்குள் அவனது செல்போன் மணியொலித்து விடும்.. அகன்று விடுவான்...

அவன் ஷோபாவின் பிறந்தநாள் அன்று அவர்களின் வீட்டுக்கு வந்திருக்கிறானா..?

"உன் அக்கா மருமகளோட தம்பி போல இருக்கே சுசி..?"

"அவரேதான்.."

"இன்னைக்கு ஷோபாவின் பர்த்டேக்கு அவனை இன்வைட் பண்ணியிருந்தியா என்ன..?"

"அவருக்கு இதுக்கெல்லாம் நேரமிருக்கா..? வேற வேலையாய் வந்திருப்பார்..."

சுசிலா சங்கரை மறந்து பாலமுரளியை வரவேற்க விரைந்தாள்



12

மாலைமிலே நீ விதைத்த...
மயக்கம் என்னைக் கொல்லுதடி...

பரந்தாமனுக்கு என்னவோ போல ஆகிவிட்டது... அன்றைய விழாவின் சிறப்பு விருந்தினராக சங்கரைத்தான் அவர் நினைத்துக் கொண்டடிருக்கிறார்.. அந்த நேரத்திலே திடிரென்று வருகை தந்திருக்கும் பாலமுரளியின் வருகையை அவர் ரசிக்கவில்லை...

அதை அவரால் வாய் திறந்து சொல்ல முடியாது.. சுசிலா அவரை ஒருவழி பண்ணி விடுவாள்...

சங்கருக்கு இணையான பணக்காரன்தான் பாலமுரளி... இன்னும் சொல்லப் போனால்.. சங்கரை விடவும் பணக்காரன்.. இருந்தாலும்.. அவன் கிராமத்தில் நிலை கொண்டிருந்தான்...

சென்னை வாழ்க்கைக்கு பழக்கப்பட்ட ஷோபாவினால் கிராமத்தில் குப்பை கொட்ட முடியுமா என்ற நினைவு அவருக்கு...

சுசிலாவிடம் சொன்னால்.. இது ஒரு பேச்சா என்று கேட்பாள் என்பதினால்.. சுசிலாவிடம் இதைப்பற்றி அவர் சொன்னதே இல்லை...

பாலமுரளியை வரவேற்க சுசிலா சென்றுவிட சங்கரின் பக்கத்தில் நிற்க வேண்டும் என்பதற்காக அவர் அங்கிருந்து நகரவில்லை...

"யார்.. அவர்..?" சங்கர் விசாரித்தான்...

"சுசிலாவின் ரிலேடிவ்... குற்றாலம் பக்கத்தில் தேனூத்துங்கிற கிராமத்தில இருக்கார்..."

"ஓ..."

அதற்குள் சுசிலா பாலமுரளியை வரவேற்று அங்கே அழைத்துக் கொண்டு வந்து விட்டாள்...

"வணக்கம்... மாமா..." என்றவனிடம்..

"வாங்க மாப்பிள்ளை..." என்று சொல்லாமல் பரந்தாமனால் இருக்க முடியுமா..?

அப்படி இருந்து விட்டால்.. சுசிலாதான் அவரை சும்மா விட்டு விடுவாளா..? எனவே அதைச் சொல்லி வைத்தார்...

தோட்டத்தை வியப்புடன் பார்த்த பாலமுரளி...

"இது கல்யாண வீட்டைப் போல இருக்கே.. உங்க பெண்ணுக்கு கல்யாணமா..? அக்கா எனக்கு சொல்லவே இல்லியே..." என்று கேட்டுவைத்தான்..

ராதிகா சிரிப்பை அடக்கிக் கொள்ள படாதபாடு பட்டுக்கொண்டிருக்க.. ஹேமா வாய்விட்டுச் சிரித்தே விட்டாள்...

அப்போதுதான் அவர்களைப் பார்த்தான் பாலமுரளி...

சிரிப்பை அடக்க முயன்றபடி நின்று கொண்டிருந்த ராதிகாவின் உருவம் அவன் மனதில் பதிய.. மீண்டும் பார்த்தான்...

பார்த்த பார்வையை விலக்கிக் கொள்ள அவனால் முடியவில்லை...

இதுவரை இதுபோன்ற நூதன உணர்வுகளுக்கு அவன் ஆட்பட்டதில்லை... எந்தப் பெண்ணும் அவன் மனதில் இதுபோன்ற சில்லென்ற குளிர் உணர்வை ஏற்படுத்தியதில்லை..

பரந்தாமனோ.. அவனது கேள்வியால் கொதிப்படைந்திருந்தார்...

'பட்டிக்காடு...' பரந்தாமன் பல்லைக்கடிக்க.. சுசிலா தர்மசங்கடமடைந்தாள்.. பாலமுரளி அப்படிக் கேட்டிருக்ககூடாது.. என்றாலும் அவனுடைய ஊரில் இதுபோன்ற விருந்துகள் நடைபெற்றதில்லையே..

"இன்னைக்கு ஷோபாவோட பர்த்டே.." அவள் விளக்கம் சொன்னாள்..

"ஓ.. பிறந்தநாளா..?" பாலமுரளியின் சந்தேகம் விலகியது..

"அதுக்காகத்தான் பார்ட்டி அரேன்ஜ் பண்ணியிருக்கோம்.."

"என்ன... அத்தை இது..? எங்களுக்கும்தான் பிறந்தநாள் வருது... அன்னைக்கு வடைபாயசத்தோடு சாப்பிடுவோம்.. கோவிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணுவோம்.. மத்தபடி எங்க வேலைகளைப் பார்க்கப் போயிடுவோம்.. இப்படியா.. கல்யாணத்தைப் போல ஊரைக் கூட்டுவாங்க..?"

ராதிகாவிற்கு ஆச்சரியமாகி விட்டது...

அவள் சொன்ன வார்த்தைகளை அப்படியே அவனும் சொல்கிறானே...

'யார்... இவன்..'

அவள்.. அவனைப் பார்த்த பார்வையில் சிநேகிதமிருக்க.. பாலமுரளிக்கு மனதில் மழைச்சாரல் அடித்தது...

'எதுக்கு இப்படிப் பார்க்கிறா..?'

அவளது பார்வைக்கான காரணத்தைப் பற்றி அவனுக்கென்ன தெரியும்..?

சங்கருக்கு... பாலமுரளியும்.. ராதிகாவும் பார்த்துக் கொண்டது பிடிக்கவில்லை.. அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.. பரந்தாமன் மனதுக்குள் பதட்டப்பட்டார்...

"தேனூத்து கிராமத்திலிருக்கிறவருக்கு இது மாதிரி பங்சனில் கலந்துக்க நேரமிருக்காது.. ஆனா.. எனக்கு நேரமிருக்கும்... இல்லையா அங்கிள்..?"

அவன் குத்தலாக பரந்தாமனிடம் கேட்டபோது.. அவரால் பதில் சொல்ல முடியவில்லை...

எங்கே.. சங்கர் கிளம்பிப் போய் விடுவானோ என்ற பதட்டத்தில்...

"மாப்பிள்ளையை கூப்பிட்டு ஷோபா.. கேக் வெட்டனும்..." என்று சொல்லி வைத்தார்...

"நான் எதுக்கு கேக் வெட்டனும்..?" சங்கர் புருவங்களை உயர்த்தினான்...

மீண்டும் ஹேமா சிரித்து வைக்க.. ஷோபாவுக்குள் கோபஅலை பரவியது..

அவள் நினைத்தது என்ன..? இங்கே நடந்து கொண்டிருப்பது என்ன..? ராதிகாவின் முன்னால் தன் உயரத்தைக் காட்ட அவள் விரும்பினால் இங்கே எல்லாமே தலைகீழாய் நடந்து கொண்டிருக்கிறதே...

"அப்படியில்லை மாப்பிள்ளை... ஷோபா கேக் வெட்டிட்டான்னா விருந்தை ஆரம்பிச்சிரலாமே..." பரந்தாமன் வழிந்தார்...

"அதுக்கு நான் எதுக்கு அங்கிள்..?" சங்கர் கேட்டான்..

எதற்கென்று அவர் சொல்லுவார்..?

'என் மகள் கேக் வெட்டுவாள்.. நீ பக்கத்தில் நின்று கைதட்ட வேண்டும்.. அவள் கேக்கை வெட்டியதும் உனக்கு ஊட்டுவாள்.. நீ அவளுக்கு ஊட்ட வேண்டும்.. நாங்கள் எல்லோரும் அதை சுற்றி நின்று வேடிக்கை பார்த்து கை தட்ட வேண்டும்..' என்று அவரால் சொல்லவா முடியும்..?

இதைக் கூடப் புரிந்து கொள்ளாத மாக்கானா அவன் இருந்து வைக்கிறானே என்ற வருத்தம் மேலிட்டது அவருக்கு..

ஷோபா கேக் வெட்டினாள்.. சுற்றியிருந்தவர்கள் கை தட்டினார்கள்.. தள்ளி நின்று கொண்டிருந்த சங்கருக்கு கேக்கை கொடுக்க முடியாமல் பரந்தாமனுக்கு கேக்கை கொடுத்தாள் ஷோபா.. சங்கரோ.. தோட்டத்தில் ஓடிக் கொண்டிருந்த முயல்களை ரசித்துக் கொண்டிருந்தான்.. அந்தச் சூழல் அவன் மன எரிச்சலைத் தணித்தது...

அந்தச் சூழலில் கவரப்பட்ட சங்கர்...

"யாராவது பாடலாமே.." என்றான்..

"நீங்களே பாட வேண்டியதுதானே..." ஹேமா கேட்டாள்..

"அதுக்கப்புறம் நீங்க ஓட வேண்டியதுதான்.. பரவாயில்லையா..?" சங்கர் மிரட்ட..

"வேண்டவே வேண்டாம்.." என்றாள் ராதிகா...

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே தோட்டத்தின் மையத்திலிருந்து.. பாடல் கிளம்பி விட்டது

"ஒரு பெண்ணைப் பார்த்து
நிலவைப் பார்த்தேன்...
நிலவில் ஒளியில்லை..
அவள் கண்ணைப் பார்த்து..

மலரைப் பார்த்தேன்..
மலரில் அழகில்லை..."

யாரென்று அனைவரும் திரும்பிப் பார்த்தார்கள்.. பாலமுரளி வெகு இயல்பாக... பாடிக் கொண்டிருந்தான்...

ராதிகாவின் விழிகளில் ஆச்சரியம் ததும்பியது.. அவனது செயல்கள் எல்லாமே வெகு இயல்பாக இருந்ததில் அவள் வசீகரிக்கப்பட்டாள்...

'யார்.. இவன்..?' என்ற கேள்வி அவள் மனதில் மறுபடியும் தோன்றியது...

அவளின் பார்வையை அவனும் கவனித்துக் கொண்டுதான் இருந்தான்.. அவள் புன்னகையுடன் அவன் பாட்டை ரசித்துக் கொண்டிருந்தாள்...

"அவள் இல்லாமல் நானில்லை..
நானில்லாமல் அவளில்லை..
லல.. லல்லலாலா.. லல்லலாலா..
லல்லலாலா..."

ராதிகாவின் முகத்தில் தெரிந்த ஒளிர்வை ரசித்தபடி பாடிக் கொண்டிருந்தான் பாலமுரளி...

அவன் அவனுடைய தாயின் கட்டளைக்காக.. சகோதரியின் உறவினர் வீட்டுக்கு நலம் விசாரித்துப் போவதற்காக வந்திருந்தான்... வந்த இடத்தில் இப்படியொரு அழகான பெண்ணை... அதைவிட அந்த அழகை உணராமல் இயல்பாக இருந்த பெண்ணைச்

சந்திப்பான் என்று அவன் நினைத்துப் பார்த்ததுகூட இல்லை..

எத்தனையோ ஊர்களில் எத்தனையோ பெண்களைச் சந்தித்திருக்கிறான்... அவனது உறவினர் வட்டாரத்திலேயே ராதிகாவை விடவும் அழகான பெண்கள் பலருண்டு.. அவர்களிடம் இல்லாத ஏதோவொரு வசீகரம் ராதிகாவிடம் இருந்தது.. முதல் பார்வையிலேயே பாலமுரளியை அவள் வசீகரித்தாள்..

எங்கிருந்தோ கிளம்பி வரும் ஆசைகளால் எண்ணத்தில் ஏற்படும் ஓசைகளைப் பற்றி யாரால்தான் கணித்துக்கூற முடியும்..?

அவளைப் பார்க்கும் போது.. அவளின் சிரிப்பில் தெறித்து விழும் வசீகரத்தின் துளிகளில் நனைந்து சிலிர்த்துப் போனான் பாலமுரளி...

ஏன் அவன் இந்தநாளில் இங்கு வந்தான்..? அவளைப் போன்ற ஒரு பெண்ணைச் சந்திப்பானென்ற நினைவோடா வந்தான்..? இல்லையே...

'இது எப்படி நடந்தது..?' அவனால் அனுமானிக்கவே முடியவில்லை... இதுதான் கடவுளின் கட்டளையா..? அப்படியில்லையென்றால் அவளை விட்டுப் பார்வையை மீட்க முடியாமல் அவன் திகைத்துப் போவது எதனால்..? அவளின் சிரிப்பில் அவள் பின்னே அவன் மனம் போவது எதனால்..?

"கொடிமின்னல் போல்...
அவள் சிரிப்பு...
மானோ.. மீனோ..
என்னென்பேன்...
குளிர் ஓடை போல...
துடிப்பு..."

அவன் பாடலில் ராதிகாவின் மனம் துடிக்க ஆரம்பித்தது... அவளின் இயல்பான சிரிப்பு அவள் இதழ்களிலே உறைந்து போக.. அவனது பார்வையைத் தாங்க முடியாதவளாக அவள் தொய்ந்து நின்றாள்...

'ஏன் இப்படிப் பார்க்கிறான்..?'

என்னவென்று சொல்லத் தெரியாத இதமான இன்ப உணர்வுகளின் இம்சைக்கு ஆட்பட்டாள் ராதிகா...

"என்னோடு தன்னைச் சேர்த்தாள்..
தன்னோடு என்னைச் சேர்த்தாள்
இன்று காதல் ஏக்கம் தந்தாள்... சென்றான்..
நாளை.. என் செய்வாளோ..."

பாடல் முடிந்தபோது... கைதட்டல் ஒசை காதைப் பிளந்தது... தன்னையறியாமல் ராதிகாவும் ஆர்ப்பரித்து கைதட்டினாள்...

சங்கருக்கு அவளின் அந்தச் செய்கையைப் பிடிக்கவில்லை... அதிலும் அவனால் பாடமுடியாது என்று ராதிகாவின் முன்னால் அவன் சொல்லிக் கொண்டிருந்த போது பாலமுரளி பாடி வைத்ததில் சுத்தமாக அவனுக்கு

உடன்பாடு இல்லை.. அதை ராதிகா ரசித்துக் கேட்டதில் அவனுக்குள் எரிச்சல் மூண்டிருந்தது...

"ஏய்ய்.. ராது.. நீ நல்லாப் பாடுவதானே.. நீயும் பாடுடி..." ஹேமா வற்புறுத்தினாள்...

பாலமுரளியே அவ்வளவு இயல்பாக பாடிய போது தான் மறுத்து வைத்தால் நன்றாக இருக்காது என்ற நினைவில் ராதிகாவும் பாட ஆரம்பித்தாள்...

"நாளை இந்த வேளை பார்த்து..
ஓடி வா நிலா...
இன்று எந்தன் தலைவன் இல்லை..
சென்று வா நிலா...
தென்றலே..! என் தனிமை கண்டு
நின்று போய் விடு...."

அவளது பாடலில் சுற்றியிருந்தவர்களின் பேச்சு நின்றுதான் போய் விட்டது... அவளது இனிமையான கானம் அந்தச் சூழலின் ரம்யத்தை இன்னமும் அதிகமாக்குவதை சங்கரும் உணர்ந்தான்.. பாலமுரளியும் உணர்ந்தான்.. கூடவே ஷோபாவும் உணர்ந்து வயிறு எரிந்தாள்...

"வண்ண வெளிமின் வாசலில்
என் தேவன் தோன்றினான்...
எண்ணமென்னும் மேடையில்
பொன்மாலை சூடினான்...

கன்னியழகைக் காணவே
அவன் கலைஞனாகிறான்...
பெண்மையே உன் மென்மை கண்டு
கவிஞனாகிறான்... கவிஞனாகிறான்.."

அவளது பாடலைக் கேட்டு யார் கவிஞனும்.. கலைஞனுமாக ஆகிப் போனார்களோ.. இல்லையோ.. பாலமுரளியும்.. சங்கரும் அப்படி ஆகிப்போனார்கள்..

வெளிநாட்டில் படித்த சங்கருக்கு.. தமிழ்நாட்டுப் பாரம்பர்யத்தின்மீது மிகுந்த மரியாதையும்... ஈர்ப்பும் உண்டு... அவன் கண்ட மேலை நாட்டு நாகரிகத்தின் மறுபக்கம் அவனை அச்சுறுத்தியது.. மணந்தால்.. தமிழ் நாட்டுப் பாரம்பர்யத்தைப் பிரதிபலிக்கும் பெண்ணைத்தான் மணக்க வேண்டும் என்ற தீவிரமான முடிவுடன் அவன் இருந்தான்...

செயற்கை வெளிச்சத்தில்.. கம்யூட்டர்களின் மத்தியில்.. நுனிநாக்கு ஆங்கிலமும்.. பட்டுக் கொள்ளாத நாகரிகப் பேச்சுமாக நாள் பூராவும் இருந்துவிட்டு வீடு திரும்புகிறவனுக்கு கதவு திறந்துவிட.. மல்லிகை பூ மணத்துடன்.. கண்களில் காதலுடன்.. முகம் பூராவும் பிரியத்துடன் இருக்கும் மனைவியை அவன் தேடிக் கொண்டிருந்தான்...

அவனது எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்ததைப் போல அவன் எதிரே ராதிகா பாடிக் கொண்டிருந்தாள்...

இவள்தான் அவன் தேடிய பெண் என்று அவன் பரவசப் பட்டுப் போனான்.. இவள் தமிழ்பெண்ணின் அடையாளம் என்று அவனுக்குத் தோன்றியது.. அவள் பாடிக் கொண்டிருந்த விதத்தில் வெளிப்பட்ட நாணம் அவனை வசீகரித்தது... யாரையும் பார்க்காமல் நிலம் பார்த்துப் பாடிய அவளின் பாங்கு அவனை ஈர்த்தது...

"சொல்ல நினைத்த வார்த்தைகள்...
சொல்லாமல் போவதேன்...?
சொல்லவந்த வேளையில்..
பொல்லாத நாணமேன்..?
மன்னன் நடந்த பாதையில்..
என் கால்கள் செல்வதேன்..?
மங்கையே.. என் கண்கள் இன்று
மயக்கம் கொள்வதேன்..?
மயக்கம் கொள்வதேன்..?"

பாடியபடியே விழிகளை உயர்த்தியவளின் பார்வையை பாலமுரளியின் பார்வை சந்தித்தது.. அவள் கண்கள் படபடக்க... பார்வையை விலக்கிக் கொண்ட விதத்தில்.. பாலமுரளியின் கண்களில் மின்னல் வந்தது...

13

பொன்மாலைப் பொழுதினிலே..
புதுராகம் பாடிவந்தாய்...

'இதற்காகவா இத்தனை விரயமும்..?' என்று நொந்து போனாள் ஷோபா..

காணாததைக் கண்டவர்களைப் போல.. சங்கரும்.. பாலமுரளியும் ராதிகாவையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்க.. விழா நாயகி அவளா.. இல்லை ராதிகாவா..? என்ற சந்தேகமே அவளுக்கு வந்து விட்டது...

இப்படி நடக்கக் கூடும் என்று அவள் கொஞ்சம் கூட நினைத்துப் பார்த்திருக்கவில்லை...

ராதிகா நடுத்தர வர்க்க குடும்பத்தைச் சேர்ந்தவள்.. அவளிடம் போய்.. சென்னை மாநகரில் இருக்கும் கோடிஸ்வரனான சங்கரும்.. தேனூத்து கிராமத்தில் இருக்கும்.. கோடிஸ்வரனான பாலமுரளியும்.. ஜொள்ளு விடுவார்கள் என்று அவள் கனவா கண்டாள்...?

'இவகிட்ட என்ன இருக்குன்னு இவங்க இரண்டு பேரும் இந்த வழி வழிஞ்சு... இந்த இடத்தையே கழுவி விடறாங்க...?'

அவளுக்கு சுத்தமாகப் புரியவில்லை...

அழகாக.. வடிவமைக்கப்பட்ட பிரத்யேக பிறந்தநாள் விழாவிற்கான உடையை அவள் அணிந்திருந்தாள்.. ஆங்காங்கே கற்கள் மின்ன.. அந்த உடை அவளது அழகை அதிகப் படுத்திக் காட்டிக் கொண்டிருந்தது...

வங்கிப் பெட்டகத்தில் இருந்த வைர நகைகளை அந்த விழாவிற்காகவே பரந்தாமன் எடுத்து வந்திருந்தார்..

அதை அணிந்திருந்த ஷோபா.. திரும்பும் போதெல்லாம் அந்த வைரங்கள் ஒளிர்ந்து.. அவளை தேவதை போல தோன்ற வைத்துக் கொண்டிருந்தன...

அந்த விழாவிற்காக வீட்டுக்கே வரவழைக்கப்பட்ட ஒப்பனைப் பெண்கள்.. அவளுக்கு பார்த்துப் பார்த்து... ஒப்பனை செய்திருந்தார்கள்.. ஒப்பனை செய்யப்பட்டதைப் போலவே இல்லாமல்.. கெட்டிக்காரத்தனமாக ஒப்பனை செய்வது எப்படி என்பதில் அவர்கள் தேர்ச்சி பெற்றர்களாக இருந்தார்கள்..

அவர்களது ஒப்பனையில்.. ஷோபா.. பேரழகியாக தோற்றமளித்தாள்...

அவளை விட்டுவிட்டு.. சாதாரணமான ஒப்பனையும்.. மெல்லிய செயினும்.. காட்டன் சுடிதாருமாக இருக்கும் ராதிகாவிடம் அந்த சங்கரும்.. பாலமுரளியும் என்னத்தைக் கண்டுவிட்டார்கள் என்ற விவரம் பிடிபடாமல் மண்டைகாய்ந்து போனாள் ஷோபா...

ஒருவழியாக ராதிகா பாடி முடித்ததும்.. விருந்து ஆரம்பித்தது... பஃபே முறையான விருந்தில்.. கையில் தட்டுக்களுடன் ஒரு பூச்செடியின் பக்கமாக ஒதுங்கி நின்று தங்களுக்குள் பேசியபடி ஹேமாவும்.. ராதிகாவும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்...

அவர்களைப் போலவே.. கையில் தட்டுடன் சங்கர் அருகில் வந்தான்...

"உங்க பாட்டு நல்லா இருந்தது..." என்று ராதிகாவிடம் சொன்னான்..

"தேங்க்ஸ்.." அழகாக சிரித்தாள் ராதிகா...

"ஆக்சுவலா.. இந்த பார்ட்டிக்கு வந்தாகனுமே என்ற தலைவலியோடுதான் வந்தேன்.. உங்க பாட்டு என் தலைவலியையும் விரட்டிருச்சு.. இந்த பார்ட்டியையும் மறக்க முடியாததாக ஆக்கிடுச்சு..."

அதுவரை.. முகத்தில் புன்னகையுடன் அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ராதிகா முகம் மாறினாள்...

'இது பாட்டை மட்டும் ரசிக்கிற பேச்சாத் தெரியலையே... பேச்சு டிராக் மாறுதே...'

ஹேமா வேறு அவளை குறும்புப் பார்வை பார்த்து வைக்க.. அவளை கண்களால் அதட்டினாள் ராதிகா...

கையில் தட்டுடன் அவன் ராதிகாவைத்தான் தேடிப் போவான் என்று கண்டு வைத்திருந்த

ஷோபா.. பரந்தாமனுக்கு மட்டும் புரியுமாறு லேசாக தொண்டையைச் செருமினாள்...

வந்திருந்த விருந்தினர்களிடம் பேசிக் கொண்டிருந்த பரந்தாமன் நாசுக்காக அவர்களிடமிருந்து கழன்று மகளின் அருகே வந்து ...

"என்னம்மா..?" என்று ரகசியக் குரலில் கேட்டார்..

"அங்கே பாருங்க..."

ஷோபா சுட்டிக் காட்டிய திசையில்.. சங்கர் ராதிகாவுடன் பேசிக் கொண்டிருக்க.. பரந்தாமனுக்கு 'பக்'கென்று ஆகிவிட்டது...

ஏற்கனவே.. ராதிகாவின் பாடலை சங்கர் ரசித்துக் கொண்டிருந்ததைக் கண்டு வயிறு கலங்கிப் போய் இருந்தார் அவர்...

இப்போது இந்தக் காட்சியும் சேர்ந்து கொள்ள.. அவரது ரத்த அழுத்தம் எகிறியது...

"யாரும்மா இந்தப் பொண்ணுக...?"

"என் கிளாஸ் மேட்ஸ்தான் டாடி.."

"நமக்கு ஈக்குவல் இல்லை போல..."

"யெஸ் டாடி..."

"அப்புறமும் எதுக்காக இவங்களை இந்த பங்சனுக்கு இன்வைட் பண்ணின...?"

"அது வேற கதை டாடி... இப்படி கதை மாறும்ன்னு நான் நினைச்சுக்கூடப் பார்க்கலை..."

"சங்கர் அந்தப் பெண்ணை ஆர்வமாக பார்க்கிறான்..."

"ஐ நோ..."

"என்ன செய்யலாம்..?"

"இப்போதைக்கு சங்கரை நீங்க திசை திருப்புங்க.. அதுக்குள்ள நான் அவங்களை மூட்டைகட்டி அனுப்பி வச்சிடறேன்..."

"முதலில் அதைச்செய்..."

பரந்தாமன்... சங்கரை நோக்கிப் போனார்.. சுவாரஸ்யமாக ராதிகாவிடம் பேசிக் கொண்டிருந்த சங்கரிடம்...

"எக்ஸ்யூஸ்மி மாப்பிள்ளை..." என்று பவ்யமாக சொன்னார்...

"யெஸ்..." அமர்த்தலாக அவரைப் பார்த்தான் சங்கர்...

'இதுகொன்னும் குறைச்சலில்லை.. என் மகளைப் பார்க்க வாடான்னா.. வந்த இடத்தில் என்மக கூடப் படிக்ககிறவங்களை பார்த்துக்கிட்டு... மிதப்பலான பார்வை என்ன வேண்டிக்கிடக்கு..'

"எனக்கும்.. ராமாமிர்தத்திற்கும் பொதுவான பிரண்ட் ஒருத்தர் வந்திருக்கார்.. நீங்க வந்திருக்கிறதைச்

சொன்னேன்.. உங்க கூடப்பேச பிரியப்படறார்.. ஒரு செகண்ட் வந்துட்டுப் போக முடியுமா..?"

வேறு வழியின்றி பரந்தாமனைப் பின்பற்றிப் போன சங்கரால் ஒரு நொடியில் திரும்ப முடியவில்லை...

பரந்தாமன் அறிமுகப் படுத்தி வைத்த அந்த நபர்.. ராமாமிர்தத்திற்கு மிகவும் வேண்டியவராக இருந்தார்.. ஒருமணி நேரமானாலும் அவர் பேச்சை நிறுத்தவே மாட்டார் என்று தோன்ற.. விடுபட வழி தெரியாமல் பொறுமையை இழுத்துப் பிடித்தபடி பேசிக் கொண்டிருந்தான் சங்கர்...

இங்கே சங்கர் அகன்ற அடுத்த நொடியில் ராதிகாவிடம் விரைந்தாள் ஷோபா...

அதற்குள் சாப்பிட்டு முடித்திருந்த ராதிகாவும்.. ஹேமாவும் அவளைப் பார்த்து.. கடமைக்கு சிரித்து வைத்தார்கள்...

"தேங்க்யு ராதிகா.. தேங்க்யு ஹேமா.. என் இன்வைட்டை ரெஸ்பான்ஸ் பண்ணி என் பங்சனில் கலந்துக்கிட்டதுமில்லாம ராதிகா பாட்டுப்பாடி அசத்திட்டா..."

"இட்ஸ் ஆல்ரைட் ஷோபா.. நேரமாச்சு.. நாங்க கிளம்பனும்..."

ராதிகா இதைத்தான் சொல்வாள் என்று ஷோபாவிற்கு நன்றாகவே தெரியும்.. அதிகநேரம் இருக்க

மாட்டேன் என்ற நிபந்தனையுடன் வந்தவள்.. அவ்வளவு நேரம் அங்கே நின்றதே பெரியவிசயம்...

ஷோபாவின் கவலை என்னவென்றால்.. இந்த விடைபெறுதலை சங்கரின் முன்னால் ராதிகா சொல்லி வைத்தால்.. அவளை போகும் வழியில் வீட்டில் விடுகிறேன் பேர்வழியென்று அவன் கிளம்பி விடுவானே என்பதுதான்...

அந்த நேரத்தில் ஆட்டோவும் உடனே கிடைக்காது..

அவனது உதவியை மறுத்து ராதிகா வெளியே போய் ஆட்டோவுக்கு நின்றாலும்.. மீண்டும் சங்கரின் கண்களில் பட்டுத் தொலைத்து விடும் அபாயம் இருந்ததால்.. என்ன செய்வது என்று ஏகத்துக்கும் கவலைப் பட்டாள் ஷோபா...

அவள் சுற்று முற்றும் பார்த்த போது... சுசிலாவிடம் பாலமுரளி விடைபெற்றுக் கொண்டிருப்பது தெரிந்தது... அவளுக்கு ஒரு வழி தோன்றியது...

அவசரமாக பாலமுரளியிடம் சென்று...

"எக்ஸ்யூஸ் மி..." என்றாள்...

"என்னங்க..?" என்றான் அவன்...

"நீங்க கிளம்பிட்டிங்க போல..."

"ஆமாம்.. காலாகாலத்தில் ஹோட்டல் ரூமுக்குப் போய் ஒரு தூக்கம் போட்டாத்தான் நாளைக்கு வேலைகளை சீக்கிரம் முடிச்சிட்டு ஊரைப் பார்க்க போக முடியும்..."

'நான் இந்தக் கதையையெல்லாம் கேட்டேனா..' என்றிருந்தது அவளுக்கு...

"இல்லை.. என் பிரண்ட்ஸ் அவங்க வீட்டுக்குப் போகனும்... அவங்க தனியாய் ஆட்டோவில வந்தாங்க இப்ப நைட்டாகிருச்சு..."

"இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க...?"

"நீங்க போகும் வழியில் அவங்களை டிராப் பண்ணிவிட முடியுமா..?"

"யாரைச் சொல்கிறிங்க..."

"அதோ.. அவங்களைத்தான் சொல்கிறேன்..."

ஷோபா கைகாட்டிய திசையில் ராதிகா நின்று கொண்டிருக்க... பழம் நழுவி பாலில் விழுந்து.. அதுவும் நழுவி வாயில் விழுந்ததைப் போல ஆனது பாலமுரளிக்கு...

ராதிகா பாடி முடித்தவுடன் அவளைப் பாராட்ட வேண்டுமென்று அவன் ஆசைப்பட்டான்... அதற்கு வழியின்றி சங்கர் ராதிகாவிடம் விடாமல் கடலை போட்டு அடைகாத்துக் கொண்டிருக்க... பாலமுரளியும் அவன் இப்போது போவான்... அப்போது போவான் என்று காத்துக் காத்து.. பொறுமையிழந்து போனவனாக கிளம்பி விட்டான்...

ஷோபாவின் வகுப்புத் தோழி என்ற விவரம் ஒன்று போதுமே... தேனூத்துக்கு போவதற்கு முன்னால்

ராதிகாவைப் பற்றிய அனைத்து புள்ளி விவரங்களையும் அவன் அறிந்து விடலாமே...

அந்த எண்ணத்துடன் சுசிலாவிடம் விடைபெற்றுக் கொண்டிருந்த போது.. ஷோபா வந்து உதவி கேட்கவும்... இவளின் தோழி... இவளைப் போலத்தானே இருப்பாங்க... என்ற நினைவில் அலட்சியமாக அவன் பார்த்து வைத்த திசையில் ராதிகா நின்றிருந்தால்... அவனுக்கு எப்படி இருக்கும்..?

"அதுக்கென்னங்க... அவங்களை வரச் சொல்லுங்க.." என்று உடனடியாகச் சொல்லிவிட்டான்...

ஷோபா அதைத்தான் எதிர்பார்த்தாள்... என்னதான்.. சங்கரும்.. பாலமுரளியும் சமதையான கோடிஸ்வரர்கள் என்றாலும்.. பரந்தாமனைப் போலவே.. பாலமுரளி கிராமத்துக்காரன்தானே என்ற நினைவு அவளுக்கு...

அதனால்.. கல்யாணக் கனவுகளில் சங்கருக்கு முதலிடத்தைக் கொடுத்து.. பாலமுரளியை அடுத்த இடத்தில்தான் அவள் வைத்திருந்தாள்...

சங்கர் கைநழுவிப் போனால்.. அப்போது பாலமுரளியைப் பற்றி யோசித்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் அவளுக்கு...

பாலமுரளி அவள் கையிலிருக்கும் நெய்.. அவளை இப்போது விட்டாலும்.. பின்னால் பிடித்துக் கொள்ளலாம்.. சங்கரோ இப்போதுதான் உரையூற்றி வைத்திருக்கும் பால்... அது தயிராகி.. வெண்ணையெடுத்து.. அதை

நெய்யாக்கி என்று அடுத்தடுத்து ஆயிரம் வேலைக்கு அவன் செய்ய வேண்டியிருந்தது...

அதற்கு அவளுக்கு அவகாசம் வேண்டும்... அ நடந்து முடிவு அவளுக்கு சாதகமாக இருந்தால்.. அ திருமதி சங்கர்... பாதகமாக அமைந்தால்... அவள் தி பாலமுரளி..

இந்த நினைவில் அவள் அப்படியே தா கொண்டிருந்தாள்...

இப்போதைக்கு ராதிகாவை அங்கிரு கிளப்புவதற்கு பாலமுரளியின் தலையில் அவனை கட்டி விடுவதுதான் சிறந்த வழியென்று ஷோபாவுக்கு தோன்றிவிட்டது...

14

காற்றினிலே மிதந்து வந்த..
கானத்தினை நான் கேட்டேன்...

"ராதிகா... நீ இந்த நேரத்தில் ஆட்டோவைத் தே சிரமப்பட வேணாம்... இவர் என் ரிலேடிவ்.. உங்களை உங்க வீடுகளில் டிராப் பண்ணிட்டு போகிறேன்னு சொல்லியிருக்கார்.. ஸோ.. நீங்க இரண்டு பேரும்... இவ காரிலேயே வீட்டுக்கு போயிரலாம்..."

ஷோபா சொல்லியபோது.. அதை மறுக்கத்தான் நினைத்தாள் ராதிகா... ஆனால் அவள் கைகாட்டிய திசையில் பாலமுரளி நின்றிருந்ததைப் பார்த்தபின்பு.. அவளுக்கு மறுக்கத் தோன்றவில்லை..

அது ஏனென்று அவளுக்குத் தெரியவில்லை... அவன் அவளைக் கட்டிப்போட்டு விட்ட வித்தைக்கான காரணம் என்னவாக இருக்கும் என்பதை அவளால் கண்டு பிடிக்க முடியவில்லை.. அவளுடைய சிந்தனைகளைப் போல... அவனது சிந்தனைகளும் இருப்பதினாலா... அல்லது.. அவளைப் போலவே அவனும் பழைய பாடல்களை ரசித்துப் பாடுகிறவன் என்பதினாலா.. எதுதான் அது என்று அவளால் அனுமானிக்க முடிய வில்லை.. அவள் மனம் எதனாலோ அவனிடம் நிலை கொண்டுவிட்டது... அவனின் அருகாமையை அவள் மிகவும் விரும்பினாள்...

ராதிகா மறுப்பாள் என்று நினைத்துக் கொண்டிருந்த ஹேமாவிற்கு அவளது சம்மதமான தலையசைவு ஆச்சரியத்தைத் தந்தது...

"என்னடி..." அவளின் காதோரமாக கேட்டாள் ஹேமா...

"அவரைப் பார்த்தால் ஜென்டில் மேனைப் போல இருக்கு ஹேமா... நம்பி அவர் காரில் ஏறலாம்..." மெலிதான குரலில் பதில் சொன்னாள் ராதிகா...

"நம்ம கூடப் பேசிக்கிட்டு இருந்த சங்கரும் ஜென்டில் மேன்தான்..."

"நான் அவரை ரோக்குன்னா சொன்னேனேன்..?"

"அவர்கிட்டேயும் கார் இருக்கு..."

"இருக்கட்டுமே.. இப்ப நீ என்னதான் சொல்ல வர்ற..?"

"அவரை நம்பியும் காரில் ஏறலாமுன்னு சொல்ல வந்தேன்..."

"ஹேமா..."

ராதிகாவின் குரல் கண்டிப்புடன் ஒலிக்க... தூரத்தில் அவர்களுக்கு முதுகு காட்டி யாருடனோ பேசிக் கொண்டிருந்த சங்கரை ஏக்கத்துடன் பார்த்தபடி ராதிகாவின் பின்னால் நடந்தாள் ஹேமா...

பாலமுரளி காரின் பின்பக்க கதவை ராதிகாவிற்காக திறந்து விட.. ஹேமாவும்.. ராதிகாவும் காரில் ஏறிக் கொண்டார்கள்.. கார் கிளம்பியது.. ஷோபா நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்...

"பாடினாள் ஒரு பாட்டு..
பால்நிலாவினில் நேற்று...
ஓடினேன் அதைக்கேட்டு..
தேடினேன் வலைபோட்டு...
பூங்குயில் அவள் யாரோ..
பொன்மயில் அவள் பேரோ..."

அவனது காரில் பாடல் ஒலிக்க.. ஆரம்பித்தது...

"சாருக்கு பழைய பாட்டுன்னா ரொம்ப இஷ்டம் போல..." என்றாள் ஹேமா...

"உங்களுக்கு இஷ்டமில்லையா...?"

முன் பக்கத்தில் பொருத்தப் பட்டிருந்த கண்ணாடி வழியாக ராதிகாவைப் பார்த்தபடி ஹேமாவிடம் கேட்டான் பாலமுரளி...

"ஊஹூம்.. அதெல்லாம் பாட்டி காலத்துப் பாட்டுசார்... அதைப் போய் யார் இஷ்டப் படுவாங்க...?"

"உங்க பிரண்ட் இஷ்டப் பட்டிருக்காங்களே..."

"இவளுக்கு பழைய பாட்டுன்னா பித்து சார்.. அது ஏன்னுதான் தெரியல..."

"ஏன்னா... அது எவர்கிரின்... என்றும் பசுமையான ராகம்..." இதைக் கேட்ட ஹேமா ஆச்சரியத்துடன்... "அட!" என்றாள்...

"என்னங்க திட்ட ஆரம்பிக்கிறிங்க...?"

"ஐயையோ.. நான் உங்களைச் சொல்லலை சார்.."

"நம்ப முயற்சி பண்றேன்..."

"அட..! நான் சொன்ன 'அட..' அது இல்லை சார்.. இது வேற 'அட..'..."

"இன்னும் எத்தனை அட போடுவீங்க..."

"ஐயோ சார்.. இவளும் பழைய பாடல்களை எவர்கிரின் பசுமையான ராகம்ன்னுதான் சொல்லுவா.."

"அப்படியா..."

பாலமுரளி... கண்ணாடி வழியாக ராதிகாவை ஊன்றிப் பார்த்தான்... அவள் அதை உணராதவளாக.. ஹேமாவின் கையைப் பிடித்துக் கிள்ளினாள்... ஹேமா கையை உதறியவாறு அலறினாள்...

"ஸ்ஆ.. பிசாசே... கை வலிக்குதுடி..."

"என்னங்க.. என்ன ஆச்சு...?"

"இவ என் கையை கிள்ளுகிறா சார்..."

"அவங்களைப் பார்த்தா சாது போலத் தெரியுது.. அவங்களைப் போய் இப்படிச் சொல்கிறீங்களே..."

"இவளா சாது..? அப்படியெல்லாம் தப்புக் கணக்கு போட்டு விடாதீங்க சார்.. இவ ஜில்லாக் கேடி..."

இதைக் கேட்டதும்.. ராதிகாவிற்கு வெட்கம் வந்து விட்டது...

'இவன் என்னைப் பற்றி என்ன நினைச்சுக்குவான்..?'

"ஏய்ய்.. சும்மா இரு..." ஹேமாவை அதட்டினாள்...

"யாரு..? நீ... என்னை சும்மாயிருக்கச் சொல்ற.. எல்லாம் நேரம்டி... தினத்துக்கு ஒரு கிலோ சதையை கிள்ளியெடுக்கிறா.. இவ கையை வைச்சுக்கிட்டு சும்மாயிருக்க மாட்டாளாம்.. என்னை சும்மா இருக்கச் சொல்வாளாம்.. நீங்களே இந்த நியாயத்தைக் கேளுங்கசார்..."

"உங்களை வாயை வைத்துக்கிட்டு சும்மாயிருக்கச் சொல்கிறாங்களோ என்னவோ..."

"ஆனாலும்.. நீங்க அநியாயத்துக்கு இவளை சப்போர்ட் பண்றீங்க சார்.. உங்ககிட்ட நியாயம் கேட்டேன் பாருங்க... என்னைச் சொல்லனும்.."

"தப்பா எடுத்துக்காதீங்க.. உங்க பிரண்ட் அமைதியா வர்றாங்க.. அவங்களைப் பார்த்தா.. பாட மட்டும் தான் வாயைத் திறப்பாங்க போல இருக்கு..."

பாலமுரளி சொல்லியதைக் கேட்ட ஹேமா விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டாள்...

"ராதிகா... நீ வாயைத்திறக்கவே மாட்டாயாம் டி.. சாருக்கு உன்னைப்பத்தி தெரியலை.. சார்... இவ வாயைத் திறந்தா அணுகுண்டுதான்... விவரம் தெரியாம இவளுக்கு அமைதியான. பொண்ணுன்னு சர்டிபிகேட் கொடுத்துக்கிட்டு இருக்கீங்க... இவபேச ஆரம்பிச்சா நீங்க இல்ல.. உங்க கிராமமே தாங்காது..."

'இவளா வாயாடி..?' பாலமுரளியால் நம்ப முடியவில்லை...

அமைதியாக.. அடக்க ஒடுக்கமாக.. முகத்தில் நாணம் பரவ.. ஜன்னல் வழி வேடிக்கை பார்த்துக் கொண்டு வரும் இந்த மென்மையான பெண்.. வாயைத் திறந்தால் மூடவே மாட்டாளாமே.. உண்மையாகவா..?

ஹேமாவின் வீடு முதலில் வந்தது...

"வீட்டுக்கு வந்திட்டுப் போ ராதிகா..."

"இன்னொரு நாள் வரேண்டி..."

"நான் மட்டும் உன் வீட்டுக்கு வந்து உன்னை கூப்பிட்டுப் போகனும்.. நீ வரக்கூடாதா..?"

ஹேமா கோபம் கொள்ள.. தர்மசங்கடத்துடன் பாலமுரளியைப் பார்த்தாள் ராதிகா...

ஹேமாவின் வீட்டிற்குள் அவர்கள் இருவரும் சேர்ந்து சென்று திரும்பி வந்தால் நன்றாக இருக்குமா..?

"நான் காரில் வெயிட் பண்றேன்.. நீங்க போயிட்டு வாங்க..."

அவளது சங்கடத்தை உணர்ந்தவனாக பாலமுரளி கூறினான்.. ஒரு விடுதலை உணர்வுடன்.. காரை விட்டு இறங்கி ஹேமாவின் வீட்டிற்குள் போனாள் ராதிகா...

அவள் விழிகளில் தெரிந்த நன்றியுணர்வில் பாலமுரளியின் மனதில் இதம் பரவியது...

அவள் வரும்வரை.. சந்தடியில்லாத சாலையை வேடிக்கை பார்த்தபடி காரில் காத்திருந்தான் அவன்...

"ஸாரி.. நேரமாகிருச்சா..." அவள் அவசரமாய் திரும்பிவந்தாள்...

"அப்படி நான் சொன்னேனா..?" அவன் காலை கிளப்பினான்...

அவனும்.. அவளும் மட்டும் காரில் இருக்க.. அதுவரை அப்படி அறிமுகமில்லாத ஆடவனுடன் பயணித்தறியாத ராதிகாவுக்கு என்னவோ போல இருந்தது.. அதேசமயம்.. அந்தப் பயணம் அவளுக்கு பிடித்தமானதாகவும்.. என்றுமே மறக்க முடியாத ஒரு நிகழ்வாகவும் இருந்தது...

இருவரும் பேசிக் கொள்ளவில்லை.. வார்த்தைகள் தேவையற்ற மௌனத்தின் போர்வை அவர்களைச் சுற்றிப் போர்த்தியிருந்தது...

"மௌனமே காதலாய்..
ஒரு வார்த்தை பேசவேண்டும்..
நாணமே ஜாடையாய்..
ஒரு பாடல் பாட வேண்டும்..."

அழகான பாடலில் அவர்களின் மௌனம் அதிகமானதாக ஆனது...

"ஷோபாவோட கிளாஸ் மேட்ன்னா... நீங்க என்ஜினியரிங் ஃபைனல் இயர் படிக்கறிங்களா..?" அவன் மௌனத்தை கலைத்தான்...

"வேற படிச்சா.. அவளோட கிளாஸ்மேட்டாய் இருக்க முடியாதே சார்...", ராதிகா தன் வழக்கப்படி பதில் சொல்லிவிட்டாள்...

பாலமுரளிக்கு.. பேசியது அவள்தானா என்று பெருத்த ஆச்சரியமாகப் போய்விட்டது...

ஏனோ எதற்காக அப்படி விழுந்து விழுந்து சிரித்தாள் என்று இப்போது அவனுக்கு புரிந்தது...

"தெரியாம கேட்டுட்டேங்க..." அவன் சிரித்தான்...

"ஊஹூம்.. தெரிந்தேதான் கேட்டிங்க..."

"தெரிந்தே கேட்டேனா..? நானா..?"

"ஊம்.. நீங்கதான் கேட்டிங்க.. நீங்க கேட்காமல்.. வேற யார் கேட்டது..? அதோ அங்கே பிளாட்பாரத்தில் நடந்து போகிறாரே.. அவரா வந்து கேட்டார்..?"

"ஓகே.. நான்தான் கேட்டேன்.. ஒப்புக்கிறேன்... எதைத் தெரிந்து கேட்டேன்கிறீங்க..."

"ஷோபா என்ன படிக்கிறா.. எந்த இயர்ல படிக்கிறாங்கிற விவரம் உங்களுக்குத் தெரியுமா.. தெரியாதா..?"

"தெரியும்.."

"அதைத் தெரிந்துக்கிட்டேதான் கேட்டிங்கன்னு நான் சொன்னேன்..."

"ஓ.."

"நீங்க விக்ரமின் ரசிகனா..?"

"நான் படம் பார்ப்பேன்.. குறிப்பாய் யாரோட ரசிகன்னும் என்னைக் கொல்லிக்க மாட்டேன்..."

"அப்புறம் எதுக்கு சார் 'ஓ..' போட்டிங்க..?"

மீண்டும் 'ஓ...' போட வாயைத் திறந்தவன்.. கடைசி வினாடியில் வாயை மூடிக் கொண்டான்...

தேனூத்தில் அவன் முன்னால் நின்று பேசக்கூட யாரும் பயப்படுவார்கள் என்ற நினைவு அவனுக்கு வந்தது... அவனும் யாருடனும் அதிகமாகப் பேசியதில்லை.. பேச்சு நேரத்தை விழுங்கும் என்ற எண்ணமுடையவன் அவன்...

அவனை வாயைத் திறந்து ஒரு ஒற்றை எழுத்தைச் சொல்ல முடியாமல் ஒரு பெண் வாயை மூட வைக்கிறாள் என்றால் இதை என்னவென்று சொல்வது..?

"ஷோபா உங்க பிரண்டா.."

"கிளாஸ் மேட்..."

"நினைத்தேன்.. அவளுக்கும் உங்களுக்கும் ஏழாம் பொருத்தமாச்சே.. நீங்க இரண்டு பேரும் பிரண்ட்ஸா இருக்க முடியாதுன்னு நினைச்சேன்..."

"இன்னும் என்னவெல்லாம் நினைச்சீங்க..?"

பின்சீட்டில் சாய்ந்து அமர்ந்து கொண்டு சட்டமாக கேள்வி கேட்டவளை திரும்பிப் பார்த்தான் பாலமுரளி...

என் மனதில் என்னென்னவோ நினைத்துக் கொண்டிருக்கிறேன்.. அதைச் சொல்லவா என்று கேட்க வேண்டும் போல அவனுக்கு இருந்தது...

லேசாக சிரித்தபடி.. காரை அவள் வீட்டின் முன்னால் நிறுத்தினான்.. அவள் இறங்காமல்...

"நீங்களும் இறங்குங்க சார்.." என்றாள்...

"நான் எதுக்குங்க..?" அவன் தயங்கினான்...

"சார்.. அது ஹேமாவின் வீடு... இது நைட்நேரம்... அங்கே அவளை விட்டுவிட்டு நீங்களும் நானும் சேர்ந்து வெளியே வரனும்... நான் அப்படியெல்லாம் தெரியாதவங்களோடு பகலிலேயே வெளியே போய் வந்ததில்லை... நைட்டுன்னா சொல்லவே வேணாம்.. அதனால சங்கடப் பட்டேன்.. இது என்வீடு சார்...

"இங்கே மட்டும் உங்களுக்கு சங்கடமாக இருக்காதா..?"

"எப்படி இருக்கும்..? எப்படியும் நீங்க வந்து காரில் இறக்கி விட்டுட்டுப் போகிறதை என்வீட்டில் சொல்லத்தான் போகிறேன்.. அது இன்னார்ன்னு அவங்களுக்கு காட்ட வேணாமா..?"

அவளின் பேச்சு.. அவனுக்கு ஆச்சரியத்தையும்.. அவள்மீதான மரியாதையையும் அதிகப் படுத்தியது...

அதற்கு மேலும் வழக்கடிக்காமல் அவன் காரை விட்டு இறங்கினான்.. அவள் வீட்டைப் பார்த்தான்... முன்புறம் ஒரு கார் நிற்குமளவிற்கு சிறிய போர்டி கோவுடன்.. அடக்கமாக.. அழகாக அமைந்திருந்தது வீடு..

தேனூத்திலிருக்கும் அவன் வீட்டு போர்டிகோவின் பத்தின் ஒரு பங்கு அளவில் தான் அந்த வீடு இருக்கும் என்று நினைத்தவாறே வீட்டுப் படியேறினான் பாலமுரளி..

15

எங்கோ ஓர் பறவை பாடிச்சென்றது
என்மனதில் உன்நினைவை அதுவிதைத்து சென்றது...

இரவு உணவுக்கு முன்னதான அரட்டையில் ராதிகாவின் வீடு இருந்தபோது.. அழைப்பு மணி அலறியது...

"நியூஸ் சேனலை ஏண்டி மாத்தின..?" என்று மனைவியைக் கடிந்து கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி வாசல் பக்கம் பார்த்தார்...

"யாருன்னு பாரு ராஜி..."

"ஒரு சீரியல் பார்க்க வழியில்ல.. இதில வாசலில் வந்திருக்கிறது யாருன்னு மட்டும் நான் பார்த்து வரனுமா..? டேய் சுந்தர்.. மத்தவங்களை வேலை ஏவற நேரத்திலே உங்க அப்பாவையே அந்த வேலையைச் செய்யச் சொல்லு.."

"சீரியல் பார்த்தா உலக அறிவு வளருமாடி...?"

"வீட்டுக்குள்ளே நாலு சுவருக்குள்ளே கிடக்கறவ.. உலக அறிவை வைச்சு என்ன செய்யப் போறா..? காலையில எழுந்திருச்சதிலிருந்து மாடா உழைக்கிறேன்..

அக்கடான்னு உட்கார முடியறது இந்த நேரம்தான்.. அதில் ஒரு சீரியலைப் பார்க்க இந்தவீட்டில் வழியிருக்கா..?"

மீண்டும் அழைப்புமணி அலறியது.. கிருஷ்ணமூர்த்தி மகனைப் பார்த்தார்..

"அப்பா.. எனக்கு ஹோம் வொர்க் இருக்கு. என்னால கதவைத் திறக்கப் போக முடியாது..."

அவர் வாயைத் திறக்கு முன்னால் மறுத்தான் சுந்தர்...

"ஏண்டா.. நான் இன்னும் சொல்லவே இல்லையே.."

"அதைத்தானே சொல்ல வந்தீங்க...?"

இப்படி முன்ஜாக்கிரதை முத்தண்ணாவாக பதில் சொல்கிறவனை என்ன செய்வது என்று அவர் யோசித்துக் கொண்டிருக்கும் போது.. அழைப்பு மணியை மூன்றாம் முறையாக அழுத்தினாள் ராதிகா...

"வீட்டில் யாரும் இல்லையோ.. என்னவோ.." பாலமுரளி கூறினான்...

"ஏன் அப்படிக் கேட்கறிங்க..."

"கதவைத் திறக்க யாரும் வரலையே..."

"அதனாலே இப்படியொரு முடிவுக்கு வந்திட்டிங்களா..? நீங்க வேற... காலிங்பெல் அடிச்சவுடனே கதவைத்திறக்க ஆள் வரலைன்னா.. வீட்டிலே எல்லாரும் இருக்காங்கன்னு அர்த்தம்..."

இப்படியொரு வியாக்கினத்தை இதற்கு முன்னால் அவன் கேட்டதில்லை.. அவளை விசித்திரமாகப் பார்த்தான் அவன்...

அதேசமயம் வீட்டுக்குள்ளே கிருஷ்ணமூர்த்தி மகளைக் கெஞ்சுதலாகப் பார்த்தான்...

"கீதா... என் செல்லமில்ல..."

"இல்லப்பா.."

இப்படிச் சொல்கிறவளிடம் எப்படி கதவைத் திறக்கச் சொல்வது..?

"ஹீம்.. பெண்டாட்டி பிள்ளைகன்னு இருந்து என்ன பிரயோஜனம்..? ஒரு வேலையில் கை கொடுக்க ஆளில்லை..."

"ஆமாண்டா சுந்தர்... உன் அப்பா மலையை வெட்டியெடுக்கப் போகிறாரு.. அவளுக்கு கை கொடுக்க ஆளில்லாம போச்சு.. இந்தா இருக்கிற கதவுக்குப் போய் அதை திறந்து விட முடியலை.. அதுக்கே இத்தனை பேச்சுன்னா.. நாள் முழுக்க நடந்துக்கிட்டே இருக்கிறவளுக்கு எத்தனை பேச்சு வரும்..?"

அழைப்பு மணி நான்காவது முறையாக அலறியது...

"இது ஒன்னு..." சுந்தர் கோபமானான்...

"ஹோம் வொர்க் பண்றேனில்ல.. ஏய் கீதா.. நீ போய் கதவைத் திறக்கக் கூடாதா..?"

"ஏண்டா எனக்கு மட்டும் வேலையில்லையா..?"

இப்படிக் கேட்ட கீதா நகங்களுக்கு சாயம் பூசிக் கொண்டிருந்தாள்...

"வீடா இது..." சுந்தர் வேகமாக புத்தகத்தை மூடினான்...

அதே வேகத்தோடு எழுந்து சென்று கதவைத் திறக்கப் போகிறான் என்று அபிலாஷை கொண்டார் கிருஷ்ணமூர்த்தி...

அவன் சாபதானமாக அவரின் கையிலிருந்த டிவியின் ரிமோட்டை கைப்பற்றி கிரிக்கெட் சேனலுக்கு மாற்றினான்...

"டேய்.. என்னடா செய்கிற..?"

"பார்த்தாத் தெரியல.. கிரிக்கெட் பார்க்கிறேன்..."

"அப்ப நீ கதவைத் திறக்கப் போகலையா..?"

"அது என்ன தேவைக்கு..? இந்த வீட்டில நான் மட்டுமா இருக்கேன்..."

அழைப்பு மணி ஐந்தாவது முறையாக அலற.. ராஜேஸ்வரி எழுந்து கொண்டாள்.. அவள் கதவைத்தான் திறக்கப் போகிறாள் என்று கிருஷ்ணமூர்த்தி நினைக்க.. சமையலறைப் பக்கம் சென்றாள்...

"என்ன ராஜி.. இப்படிச் செய்கிற...?"

"வேற என்னத்தைச் செய்கிறது..? இந்த வீடுதான் ஆம்பளைக ராஜ்யம் கட்டி ஆள்கிற வீடாப்போச்சே.. ஒன்னு நீங்க நியுஸ் சேனலைப் பார்ப்பீங்க.. இல்லைன்னா.. உங்க மகன் கிரிக்கெட் சேனலைப் பார்ப்பான்.. எனக்குத்தான் பிடிச்ச சீரியலைப் பார்க்க விதியில்லாம போயிருச்சே..."

"ம்ஹீம்.. உனக்கு உன் பிரச்னை..."

அழைப்பு மணி ஆறாவது முறையாக அலற... ராஜேஸ்வரி மகளை அனல்பார்வை பார்த்தாள்...

"ஏண்டி.. காலிஸ்பெல் சத்தம் காதில விழுகலை...? எழுந்து போயி கதவைத் திறக்கிறதுக்கு என்ன வந்தது..? என்னடா.. பொழுது விழுந்ததுக்கு அப்புறமாய் அக்கா வீட்டை விட்டு வெளியே போயிருக்காளே... அவ பத்திரமாய் திரும்பி வரனுமேன்னு கவலை இல்லை.. நெயில் பாலிஷை போட்டுக்கிட்டு இருக்கா.. போடி.. போய் கதவைத்திற.. அவதான் வந்திருப்பா..."

"உங்களுக்கு இவனைக் கண்ணுக்குத் தெரியாது.. நான் மட்டும்தான் தெரிவேன்..."

முணுமுணுத்தாலும்... கீதா உடனே எழுந்து நெயில் பாலிஷை ஏறக்கட்டி விட்டு கதவைத்திறக்கச் சென்றாள்..

கிருஷ்ணமூர்த்திக்கு மனம் தாளவில்லை... அவரும்தான் அவ்வளவு நேரமாக.. பெண்டாட்டி பிள்ளைகளிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார்... யாரும் அசைந்து கொடுக்கவில்லை...

அதுவே... ராஜேஸ்வரி ஒரு அதட்டல் போட்டதும்.. வேலை வேகமாய் நடக்கிறதே...

'எப்படி..?' யோசனையுடன் மனைவியைப் பார்த்த அவள்...

'எப்படி..?... என்று பதில் பார்வை கித்தாய்ப்பா பார்த்து வைத்தாள்...

'ம்ஹீம்... இந்த லட்சணத்தில் இந்தவீடு ஆம்பளை ராஜ்யம் கட்டிய வீடாம்...'

அவருக்கு டிவியில் செய்திகளைப் பார்க்கு சுவாரஸ்யமே அற்றுப் போய்விட்டது.. பேசாமல் மீ திரும்பும் மகளையாவது பார்க்கலாமே என்று வாசல்பக்கம் திரும்பிப் பார்த்தார்...

"ஆறாவது தடவையா காலிங்பெல் அடிச்சிட்டிங்க இந்தத் தடவையாவது கதவு திறக்குமா.. திறக்காதா..?"

பாலமுரளி சந்தேகத்துடன் கேட்டுக் கொண்டிருந்த போது... கதவு திறந்து விட்டது...

"அப்பாடா.. ஒருவழியாய் சொர்க்க வாசல் திறந்திருக்கங்க..."

அவன் தன்னையறியாமல் சொல்லிவிட.. கதவு திறந்த கீதா அவனை ஏற இறங்கப் பார்த்தாள்...

'வாட் எ ஹேண்ட்சம் மேன்...'

அவள் மனதில் ஓடியதை படித்து விட்ட ராதிகா பல்லைக்கடித்தாள்...

"யாருடி இவரு..?" வழியை மறித்துக் கொண்டு கீதா கேள்வி கேட்க...

"முதலில் வழியை விடுடி..." என்று அதட்டினாள் ராதிகா...

"என்னடி.. பிரண்டோட பெர்த்டே பங்சனுக்கு போகிறேன்னு கதையளந்துட்டுப் போன... இப்பப் பார்த்தால்.. ஹீரோவோட வந்து நிற்கிற.. என்னடி.. என்ன விசயம்..? காதலா..?"

பாலமுரளியின் முன்னால் இப்படிக் கேட்டு வைக்கிறாளே... என்று ஆகிவிட்டது ராதிகாவிற்கு...

"அடித்துப் பல்லைக் கழட்டி விடுவேன்.. பேச்சைப் பாரு பேச்சை.. காலிங் பெல்லை அடிச்சா கதவைத்திறக்கிறதுக்கு என்ன..? அதுக்கு அறிவில்ல.. கண்டதையும் யோசிக்க மட்டும் அறிவிருக்கு..."

"எதுக்குடி இப்ப கோபப் படறே..."

"நீ பேசற பேச்சுக்கு கோபப் படாம கொஞ்சமா முடியும்..? வீட்டுக்கு கெஸ்ட் வந்திருக்காரேன்னு பார்க்கிறேன்.. இல்லைன்னா நடக்கிறதே வேற..."

ராதிகா வெடுவெடுத்தபடி.. கீதாவை முறைக்க.. அவள் வெற்றிகரமாக பின் வாங்கினாள்...

"இது யார்..? உங்க தங்கையா..?"

"அப்படித்தான் சொல்லிக்கிறாங்க..."

"அப்படின்னா.. இவங்க உங்க தங்கையில்லையா..?"

"என் அம்மா வயிற்றிலே.. எனக்கப்புறமாய் இவ வந்து பிறந்திருக்கிறா.. அதனாலே என் தங்கைன்னு சொல்லித்தானே தொலைக்கனும்.."

ராதிகாவின் விளக்கத்தைக் கேட்டவளின் விழிகளில் சிரிப்புப் படர்ந்தது... அதுவரை அவளை மட்டுமே ரசித்துக் கொண்டிருந்தவன்.. அவளது பேச்சையும் ரசிக்க ஆரம்பித்தான்...

"உள்ளே வாங்க சார்.. அப்பா.. அப்பா..."

அந்த வீட்டின் ராஜ்யத்தை உண்மையிலேயே யார்தான் ஆள்கிறார்கள் என்பதைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையிலிருந்த கிருஷ்ணமூர்த்தி மகளுடன் வந்த புதியவனைக் கண்டதும் சிந்தனையைக் கலைத்தார்...

"ஏம்மா லேட்டு..? யார் இவரு..?"

"என் பிரண்டோட ரிலேடிவ்ப்பா... உட்காருங்க சார்."

ராதிகா உபசரித்துக் கொண்டிருந்த போது.. சமையலறையை விட்டு...

"ஏண்டி லேட்டு..." என்று அதட்டியபடி வெளியே வந்த ராஜேஸ்வரி.. பாலமுரளியைக் கண்டதும் புருவங்களைச் சுருக்கினாள்...

கிருஷ்ணமூர்த்தியைப் போல வெளிப்படையாக யார் என்று கேட்காமல் அவள் விழிகளால் மகளை அதட்ட...

"என் பிரண்டோட ரிலேடிவ்ம்மா..." என்று கிருஷ்ணமூர்த்தியிடம் சொன்னதையே சொன்னாள் ராதிகா...

"ஓஹோ... சாருக்கு இந்தப் பக்கம் என்ன வேலைம்மா..?"

கிருஷ்ணமூர்த்தி விசாரணைக் கமிசனை ஆரம்பிக்க.. கிரிக்கெட்டை மறந்து.. அந்த விசாரணைக் கமிசனை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான் கந்தர்... ராதிகாவுக்கு பற்றிக்கொண்டு வந்தது.. அவள்தலையில் ஒரு குட்டை வைத்தாள்...

"ஸ்ஆ.. வலிக்குதுக்கா... ஏன் என்னைக் குட்டின..?" அவன் முணுமுணுப்பாய சண்டைக்கு வந்தான்...

"வேடிக்கை பார்க்கிறயா..?"

"வேற என்ன செய்யச் சொல்ற..? சின்னக் கவுண்டர் துண்டை உதறி தோளில் போட்டுட்டா.. இனி பஞ்சாயத்தை ஆரம்பிக்காம விடமாட்டார்.. இந்த சவுண்டில என்னால ஹோம் வொர்க் பண்ண முடியுமா... இல்லை... கிரிக்கெட்டைத்தான் பார்க்க முடியுமா..? ஸோ.. என்னாலே வேடிக்கைதான் பார்க்க முடியும்..."

"அப்பா..."

"என்ன ராது..?"

"அவருக்கு இந்தப் பக்கம் என்ன வேலைன்னு- தானே உங்களுக்குத் தெரியனும்..?"

"ஆமாம்மா..."

"அவரோட காரில் என்னையும்.. ஹேமாவையும் கூப்பிட்டுக்கிட்டு வந்து.. அவரவர் வீட்டில் விடற வேலைக்காக நம்மவீட்டுப் பக்கம் தெரியாத்தனமாய் அவர் வந்து தொலைச்சிட்டார்.... போதுமா..?"

மகளை பாதுகாப்பாய் காரில் கொண்டு வந்து விட்டவன் என்று அறிந்து கொண்ட ராஜேஸ்வரி நிம்மதியாக காபியை கலக்கப் போனாள்...

"ஏம்மா.. நீ போகும் போது ஆட்டோவில்தானே போன..?" கிருஷ்ணமூர்த்தி தாடையைத் தடவியவாறு கேட்க...

"நம்ம நாட்டாமை பஞ்சாயத்தை முடிக்கவே மாட்டேன்னு இப்படி அடம் பிடிக்கிறாரே கீதா.." என்று கீதாவின் காதுகளில் முணுமுணுத்தான் சுந்தர்...

பாலமுரளிக்கு அந்தக் குடும்பத்தை மிகவும் பிடித்து விட்டது.. அவன் வளர்ந்த குடும்பச் சூழல் முற்றிலும் வேறானது.. இது அதிலிருந்து வேறுபட்டு நின்றது...

16

அந்தரங்கம் அறியாமல்..
ஆருயிரே..! நீ அலைக்கழித்தாய்...

பாலமுரளியின் அம்மாவான மேகலா... கணவரின் பேச்சுக்கு எதிர்பேச்சு பேசினதில்லை.. அவனும்... அவனுடைய அக்காவான பால சரஸ்வதியும்... மாணிக்கவாசகத்தின் முன்னால் உட்காரக்கூட தயங்கு-வார்கள்.. இதில் அவருடன் சகஜமாய் எப்படிப் பேசுவார்கள்..?

ஆதலால்... அவர்களின் தேவைகள் அனைத்தையும்.. மேகலாவின் காதுகளில் போட்டு விடுவார்கள்... அவள் பக்குவமாக.. கணவரின் மனநிலையையும்.. சூழ்நிலையையும் அறிந்து.. மாலை நேரக் காப்பியின் போதோ.. இரவு நேர உணவின் போதோ.. பிள்ளைகளின் தேவைகளை கணவரிடம் எடுத்துரைப்பாள்...

"என்னங்க..."

"சொல்லு... மேகலா..."

"நம்ம முரளிக்கு மோட்டார் சைக்கிள் வேணுமாம்.."

"பத்து வயசில மோட்டார் சைக்கிள் ஓட்டமுடியுமா..?"

"முடியாதுதான்..."

"அதனால.. அவனுக்கு பழைய சைக்கிளை தூக்கி போட்டுட்டு புது சைக்கிளை வாங்கித்தரேன்..."

"என்னங்க..."

"இன்னும் என்னம்மா.. ?"

"நம்ம சரசுவோட பள்ளிக்கூடத்திலே ஆண்டு விழா வருதாம்..."

"வரட்டுமே..."

"இவள அதில ஆடச்சொல்லி அவங்க டீச்சரம்மா சொல்றாங்களாம்..."

"நம்ம குடும்பத்துக்கு ஆடுகிறதெல்லாம் சரிப்பட்டு வராது மேகலா..."

"ஆமாங்க..."

"அதனால.. ஏதாவது பாட்டுப் பாடச் சொல்லு.. வேணும்ன்னா.. பாட்டுச் சொல்லித்தர ஆள் ஏற்பாடு பண்ணித்தரேன்.. வீட்டுக்கே வந்து சொல்லித்தருவாங்க.."

"அது சரிங்க..."

உண்மையில்.. பாலமுரளி புது சைக்கிள்தான் கேட்டான்... பாலசரஸ்வதி.. பாட்டுக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் ஆசைப்பட்டாள்...

அவை இரண்டையும் வேறாக மாற்றிச் சொல்லி.. தேவையானதை பிள்ளைகளுக்குப் பெற்றுத் தந்த சாதுர்யம் மேகலாவுக்கு மட்டுமே சொந்தமான ஒன்று...

அந்த ஊரின் பெருந்தனக்காரரான மாணிக்க-வாசகத்திடம் சில குண இயல்புகள் இருந்தன.. அதில் ஒன்று.. பெற்ற பிள்ளைகளை கண்டிப்பாக வளர்ப்பது... இரண்டாவது.. குடும்பத்தினரை தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது...

அதனால்.. எந்தத் தேவையானலும்.. அதற்கு எதிர் தேவையைச் சொல்லி... தேவையானதை பெற்றுக் கொள்ளும் சாமர்த்தியம் மேகலாவிடம் இருந்தது...

பின்னாளில் அதை... பாலமுரளியும்.. பாலசரஸ்வதியும்...

"அம்மா.. அந்தக் காலத்திலேயே... 'மாத்தி யோசி..' ரகமாச்சே..." என்று தங்களுக்குள் பேசி சிரித்துக் கொள்வார்கள்...

அப்படிப்பட்ட குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்தவனுக்கு... அதற்கு நேர் எதிரான குடும்பச் சூழ்நிலையைப் பார்த்ததும் சுவாரஸ்யம் ஏற்பட்டது..

தாடையைத் தடவியபடி கேள்வி கேட்ட கிருஷ்ணமூர்த்திக்கு ராதிகா என்ன பதில் சொல்லப் போகிறாள் என்ற ரீதியில் அவன் அவளைப் பார்த்து வைக்க...

"பார்த்தியாக்கா.. நான் வேடிக்கை பார்க்கிறதுக்கு என்கூட சண்டைக்கு வந்தியே.. இப்பப்பாரு உன்னை டிராப் பண்ண வந்தவரே.. வந்த வேலையை மறந்துட்டு.. நம்ம அப்பாவோட பஞ்சாயத்தை வேடிக்கை பார்க்க ஆரம்பிச்சுட்டார்..." என்று அவள் காதோரமாக முணுமுணுத்தான் சுந்தர்...

ராதிகாவுக்கும் அதே கோபம் தான்.. பாலமுரளியின் கண்களில் தென்பட்ட சுவாரஸ்யத்தை அவளும் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்...

"ஏன் சார்... உங்களுக்கு என்நிலைமையைப் பார்த்தா எப்படி இருக்கு..?" அவன்கூட சண்டைக்குப் போனாள்...

"இப்ப எதுக்காகம்மா.. இவர்கூட சண்டைக்குப் போகிற..?"

"வேற என்னப்பா செய்றது..? நியாயமாப் பார்த்தா உங்ககூடத்தான் நான் சண்டை போடனும்.. அது முடியுதா..? அதனாலேதான் இவர்கூடயாவது சண்டை போடலாமேன்னு... சண்டைக்குப் போகிறேன்..."

"கேள்வி கேட்டா பதிலைச் சொல்லு... அதை விட்டுட்டு சண்டை போடனும்கிற அவசியம் என்ன..?"

கிருஷ்ணமூர்த்தி அடுத்த கேள்வியைக் கேட்க...

"நியாயம்தானே..." என்றாள் கீதா...

பாலமுரளியைப் போன்ற கம்பீரமான ஆண்மகனுடன்.. தனியாக காரில் வரும் வாய்ப்பு ராதிகாவுக்கு மட்டும் கிடைத்திருக்கிறதே என்ற பொறாமையுணர்வு அவள் கண்களில் அப்பட்டமாகத் தெரிந்தது...

"உனக்கெதுக்கு இத்தனை காண்டு..?" சுந்தர் சந்தேகமாக கீதாவைப் பார்த்து விழித்தான்...

"ஏய்ய்... எனக்கொன்னும் யார் மேலயும் காண்டு இல்லை.. இவ போகும் போது.. ஆட்டோவிலதானே போனா..? வரும்போது மட்டும் எப்படி காரில் வந்து இறங்குறா..?"

"ஓ.. உனக்கு இந்த காண்டா..?"

"போடா போ.. அப்பா கேட்கிற கேள்வியில நியாயம் இருக்கு.. நான் எப்பவும் நியாயத்தின் பக்கம்தான் நிப்பேன்..."

"எப்போதிருந்து..?"

"எப்பவும் நான் அப்படித்தான்.. நீங்க கேள்வி கேளுங்கப்பா.. நான் உங்க சப்போர்ட்தான்..."

"ஆமாமாம்.. நம்ம அப்பா என்னவோ நீங்களும் வெல்லலாம் ஒரு கோடிங்கிற மாதிரி கேள்வி ஒன்னைக் கேட்டுட்டார்.. அக்கா பதில் சொன்னதும்.. பணம்.. கொட்டோ.. கொட்டுன்னு கொட்டப் போகுது.. போடி.. போ..."

"அப்போ நீயென்ன இவளுக்கு சப்போர்ட்டா..?"

"ஆமாம்ன்னுதான் வைச்சுக்கயேன்.."

"அப்பாதான் ஜெயிப்பார்.."

"அக்காதான் ஜெயிக்கும்..."

"என்ன பெட்..?"

"ஹண்ட்ரெட் ரூபிஸ்..."

கணநேரத்தில் அங்கே 'ஆடுகளம்' உருவாக சண்டைக் கோழியும்.. சண்டைச் சேவலும் முறைத்துக் கொள்வதைப் போல.. கீதாவும்.. சுந்தரும் முறைத்துக் கொண்டார்கள்..

பாலமுரளிக்கு சிரிக்க வேண்டும் போல இருந்தது. வெறும் சுவாரஸ்யமான பார்வைக்கே முறைத்துக் கொண்டிருக்கும் ராதிகாவைப் பார்த்ததும் சிரிப்பை அடக்கிக் கொண்டான்.. அவள் அதையும் கவனித்து விட்டு முறைப்பை அதிகமாக்கினாள்..

"என்ன இங்கே சத்தம்..?"

சமையலறையிலிருந்து காபிக் கோப்பையுடன் வெளிப்பட்ட ராஜேஸ்வரி சின்ன மகளையும்.. மகனையும் அதட்டினாள்...

"ஒன்னுமில்லேம்மா.. அப்பா ஒரு கேள்வி கேட்டார்.. இந்த ராதிகா அதுக்குப் பதில் சொல்லனுமா.. வேணாமா..?" கீதா கேட்டாள்..

"சரியாப் போச்சு போ.. நாட்டாண்மைக்கே ஒரு நாட்டாண்மையா..?"

சுந்தரின் கேள்வியைத்தான் அப்போது மனதில் கேட்டுக்கொண்டிருந்தார் கிருஷ்ணமூர்த்தி...

எப்போது அவர் விசாரணைக் கமிசனை போட்டாலும் இறுதித் தீர்ப்பை வழங்குவது ராஜேஸ்வரியாகவே இருப்பதன் மர்மம் என்னவாக இருக்கக்கூடும் என்று இதுவரை அவருக்கு புலப்படவே இல்லை...

யாரை அவர் கேள்வி கேட்டாலும்.. பதில் கிடைப்பது ராஜேஸ்வரிக்குத்தான் என்றால்... அவர் கேள்விக்குத்தான் என்ன அர்த்தம் இருக்கிறது..?

குடும்ப உறுப்பினர்களை ஆட்டுவிக்கும் நூலின் கயிறு அவரிடம் இல்லாமல் மனைவியின் கைக்கு எந்த நொடியில் இடம் மாறியது என்பதை அவரால் அனுமானிக்கவே முடிவதில்லை...

"அவர் கேள்வி கேட்பது ஒருபக்கமிருக்கட்டும்.. முதலில் வீட்டுக்கு வந்த விருந்தாளியை உட்காரச் சொல்லனுமா.. வேண்டாமா..? அந்த அறிவு கூடவா இங்கே யாருக்கும் இல்லாமப் போச்சு..? இதைக்கூட நான் வந்துதான் சொல்லனுமா..?" ராஜேஸ்வரி வெடித்தாள்...

"எங்கேம்மா..? அப்பாதான் என்னோடு இவரையும் சேர்த்து நிற்க வைத்து கேள்விமேல.. கேள்வியாய்

கேட்டுக்கிட்டே இருக்காரே... அப்புறம் எங்கே அவ
நான் உட்காரச் சொல்கிறதாம்..." ராதிகா குறைபட்டுக்
கொண்டாள்...

"இந்த கீதா என்ன பண்றா..?"

"பெட்கட்டிக்கிட்டு இருக்காம்மா..."

"அது எதுக்காம்..?"

"ஜெயிக்கிறது.. அப்பாவா.. இல்லை நானான்னு
பெட் கட்டுகிறாளாம்..." என்றாள் ராதிகா... சின்ன மகளை
எரிப்பதைப் போலப் பார்த்தபடி

"நீங்க உட்காருங்க தம்பி..." என்றாள் ராஜேஸ்வரி

'அப்பாடி... ஒருவழியாய் உட்காரச் சொன்னாங்களே..

நின்று.. நின்று கால் வலித்துப்போன பாலமுர
சந்தோசமாக அமர்ந்து கொண்டான்...

"காபி சாப்பிடுங்க தம்பி..." ராஜேஸ்வரி காபி கப்
நீட்டினாள் பாலமுரளி காபிக்கப்பை வாங்கி.. காபியை
உறிஞ்ச ஆரம்பிக்க...

"தம்பிக்கு எந்த ஊரு..?" என்று ராஜேஸ்வரி
கேள்வியை ஆரம்பித்தாள்...

"அது ரஜினிகாந்த் நடித்த படம்மா..." கீதா
ஆர்வமாய் குறுக்கே பேச... அவளை முறைத்தாள்
ராஜேஸ்வரி

"உன்னைக் கேட்டேனா..?"

கீதா வாயை மூடிக் கொண்டாள்...

"நீங்க சொல்லுங்க தம்பி..." ராஜேஸ்வரி
பாலமுரளியின் பக்கம் திரும்பினாள்...

"குற்றாலம் பக்கம்.. தேனூத்துங்கிற கிராமங்க..."

"அப்படிங்களா.. தம்பி அங்கே என்ன செய்கிறிங்க..?"

"அது இருக்கு நிறைய தொழில்ங்க.. தோப்பு வயல்
செங்கல் சூளை... கரும்பு மில்.. ஜவுளிக்கடைன்னு அது
அனுமார்வாலைப் போல நீண்டுக்கிட்டு போகும்ங்க..."

சாதாரணமாகப் பதில் கூறியவனை வியப்புடன் ஏற
இறங்கப் பார்த்தார் கிருஷ்ணமூர்த்தி...

அவர்கள் வீட்டு வரவேற்பறையில் சுவாதீனமாக
அமர்ந்து ராஜேஸ்வரி கொடுத்த காபியை மறுக்காமல்
வாங்கிக் குடித்துக் கொண்டிருப்பவனின் உயரம் அவரை
பிரமிப்பில் ஆழ்த்தியது...

'யாருன்னு இப்போது தெரியுதா..? இந்த
மனுஷரைத்தான் உட்கார விடாம நிற்க வைச்சுக்கிட்டு
உங்க மகளை கேள்வி கேட்டுக்கிட்டு இருந்தீங்க...'

ராஜேஸ்வரியின் பார்வை அவரைச் சுட்டது... அதன்
தகிப்பிற்கு பழக்கப்பட்டிருந்தாலும்... எப்போதும் போலவே
இப்போதும் அவர் தாங்க மாட்டாமல் நெளிந்தார்..

"நீங்க... ராதிகாவோட பிரண்டுக்கு உறவு
முறைங்களா..?"

"ஆமாங்க.. என் அக்காவைத்தான்.. ஷோபாவோட பெரியம்மா மகனுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்கோம்..."

"ஓ... அப்போ.. அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிற உறவு முறைன்னு சொல்லுங்க..."

ராஜேஸ்வரியின் இந்தக் கேள்வியினை பாலமுரளியும் ரசிக்கவில்லை.. ராதிகாவும் ரசிக்கவில்லை..

எனவே பாலமுரளி அதற்கு பதில் சொல்வதைத் தவிர்த்து மௌனமாக சிரித்து வைத்தான்...

"ராதிகாவை வீட்டில் டிராப் பண்ணி விடறேன்னு நீங்க சொன்னீங்களா..?"

ராஜேஸ்வரி இயல்பாக கேட்பதைப் போலக் கேட்டுவைக்க.. அவளின் புத்தி கூர்மையில் ஆச்சரியப் பட்டுப் போனான் பாலமுரளி...

கிருஷ்ணமூர்த்தி நேரடியாக கேட்ட கேள்விக்கான பதிலை மறைமுகமாய் அவன் வாயிலிருந்து வரவழைக்க முனையும் ராஜேஸ்வரியின் சூட்சுமம் நிறைந்த சாதுர்யம் அவனைக் கவர்ந்தது...

17

ராத்திரி நேரத்து ரகசியக் கனவினில்
உன்முகம் கண்டு உறக்கத்தை தொலைத்தேன்...

அந்தக் கேள்வி... கிருஷ்ணமூர்த்தியின் கேள்வியை விட ஆழம் நிறைந்தது.. வெளியே கேட்பதற்கு மேம்போக்காய் தோன்றினாலும்.. பல அர்த்தங்களை உள்ளடக்கியது...

நீ யார்...? எந்த ஊர்..? என்ன செய்கிறாய்..? உனக்கும் என் மகளின் தோழிக்கும் என்ன சம்பந்தம்...? இந்த இரவு நேரத்தில் என் மகளை... உன்காரில் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாயே.. உன் காரில் ஏறச் சொல்லி நீதான் சொன்னாயா..? இல்லை என் மகளே உன் காரில் ஏறிவந்தாளா...?

இத்தனை கேள்விகளையும் உள்ளடக்கிய கேள்வியை அவனை உட்கார வைத்து.. இதமாக உபசரித்து... கையில் காபிக் கப்பையும் கொடுத்து.. அவன் காபியை பருகிக் கொண்டிருக்கும் போது கேட்டு வைக்கும் அவளின் சாமர்த்தியம் அவனை மனதிற்குள் 'சபாஷ்' போட வைத்தது...

ராதிகாவின் முகம் சிவந்து போனது...

தாயின் கேள்வியின் உட்பொருளை உணர்ந்து கொள்ளாமலிருக்கும் அளவிற்கு அவள் முட்டாளில்லை...

அவன் என்ன நினைப்பான் என்ற நினைவில் அவள் நொந்து போனாள் ஆனாலும் அவளால் எதுவும் செய்ய முடியாது...

அது அவளின் குடும்பம்... இரவு வேளையில் தனியாக ஒரு அந்நிய ஆணுடன் காரில் வந்து இறங்கியிருக்கிறாள்.. இது போல ஒன்றை இதற்கு முன்னால் அவளோ.. கீதாவே செய்ததில்லை... அதை அவர்களது பெற்றோர் அனுமதிக்க மாட்டார்கள்...

அப்படியிருக்கும்போது... முதல் முறையாக அதைச் செய்திருக்கும் ராதிகா... இதுபோன்ற விசாரணைகளை எதிர் கொண்டு.. பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

அவளுக்கு என்ன வென்றால்.. இந்த விசாரணைக் கமிசனை அவளிடம் மட்டும் அவர்கள் வைத்துக் கொண்டால் ஆகாதா என்பது தான்...

அவனை அனுப்பி வைத்துவிட்டு.. அவளை நிற்க வைத்துக் கேள்வி கேட்டால்.. அவள் பதில் சொல்ல மாட்டாளா..? அதை விட்டுவிட்டு.. அவனை உட்கார வைத்து.. கையில் காபிக் கப்பையும் கொடுத்து... அவன் குடித்துக் கொண்டிருக்கும் போதே.. விவரங்களை தொண்டையிலிருந்து தோண்டி எடுக்க வேண்டுமா..?

ராஜேஸ்வரி ராதிகாவின் முகச்சிவப்பையும்.. முகச் களிப்பையும் கண்டு கொள்ளவே இல்லை...

என்னவோ காலம் காலமாய் பால முரளியுடன் பழகியவளைப் போல அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்...

பாலமுரளி காலி காபிக் கப்பை எதிரிலிருந்த டீப்பாயின் மேல் வைத்துவிட்டு... இயல்பாக நிமிர்ந்து அமர்ந்து புன்னகைத்தான்...

"ராதிகாவை நான் டிராப் பண்ணிவிடறேன்னு சொல்லவும் இல்ல.. அவங்களும் என் காரில் லிப்ட் கேட்டு ஏறவும் இல்ல.. ஷோபா.. அதுதான்.. ராதிகாவோட பிரண்டு.. அவதான் என்கிட்ட இவங்களையும்.. இவங்க பிரண்டையும் வீட்டில் டிராப் பண்ணி விடுங்கன்னு கேட்டுக்கிட்டா.. இருட்டின பின்னாலே இவங்களை ஆட்டோவில் தனியாய் அனுப்பனுமேன்னு கவலைப்பட்டா.. வயதுப்பெண்களாச்சே.. சரி.. போகிற வழிதானே.. பாதுகாப்பாய் காரில் கூப்பிட்டுக்கிட்டுப் போய் இறக்கிவிட்டுட்டுப் போகலாமேன்னு நானும் ஓகேன்னு சொல்லிட்டேன்..."

எப்படி ராஜேஸ்வரியின் புத்தி கூர்மையை பாலமுரளிக்கு பிடித்துப் போய் விட்டதோ.. அதைப்போல... பாலமுரளியின் புத்தி கூர்மையும் ராஜேஸ்வரிக்குப் பிடித்துப் போய் விட்டது...

எனக்கும் உங்கள் மகளுக்கும் எந்தவிதச் சம்பந்தமுமில்லை.. என் காரில் அவளை ஏறச் சொல்லி நானும் சொல்லவில்லை.. என்கூட வருவதாக அவளும் சொல்லவில்லை.. இது இரவு நேரம்.. அவளும் அவள் தோழியும் வயதுப் பெண்கள்.. நான் விருந்து முடிந்து நான் தங்கியிருந்த இடத்திற்கு திரும்பிக் கொண்டிருந்தேன்.. போகும் வழியில் இவர்கள் இருவரையும் இறக்கிவிட்டுப் போக முடியுமா? என்று என் உறவுக்காரப் பெண் கேட்டாள்... இரவு நேர ஆட்டோப் பயணத்தை இவர்கள் மேற்கொள்ள வேண்டாமே என்று நானும் அதற்கு ஒப்புக் கொண்டேன்.. மற்றபடி.. இந்த கார் பயணத்தின் பின்னணியில் எந்தவித நோக்கமுமில்லை...

பாலமுரளியின் பதில் இத்தனை விவரங்களையும் உள்ளடக்கியதாக இருக்க.. ராஜேஸ்வரி முகம் மலர்ந்து போனாள்...

"தம்பி ரொம்ப யதார்த்தமா பேசறிங்க..."

"நாங்க கிராமத்துக்காரங்க.. எங்க ஊரில வயசுப் பொண்ணுக ராத்திரி நேரத்தில் தனியாய் வந்தா.. அது மாட்டு வண்டியாய் இருந்தாலும் சரி.. காராக இருந்தாலும் சரி... நிறுத்தி அவங்களை ஏற்றிக் கொண்டு போய் அவங்க வீட்டில விட்டுவிட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்போம்.. அந்தப் பழக்கம்.. இன்னைக்கும் வந்துருச்சு.. மத்தபடி உங்களையெல்லாம் பார்த்ததிலே ரொம்ப சந்தோசம்... குற்றாலம் பக்கம் வந்தா எங்க ஊருப்பக்கமும் வந்துட்டுப் போங்க.. எங்க அம்மா சந்தோசப்படுவாங்க...

இப்போதும் அவன் சந்தோசப்படுவான் என்று கூறாமல் அவனுடைய அம்மா சந்தோசப்படுவாள் என்று கூறிய அவனுடைய சாதுர்யத்தைக் கண்டு ராஜேஸ்வரியின் முகம் இன்னும் அதிகமாக விகசித்தது...

அவனுடன் பேசுவதை அவள் விரும்பினாள்.. இவ்வளவு பெரிய கோடிஸ்வரன்.. எந்தவித பந்தாவுமில்லாமல்.. அவர்கள் வீட்டு வரவேற்பறையில் அமர்ந்து எளிமையாக பேசிப் பழகுவதை அவளால் நம்பவே முடியவில்லை...

"குற்றாலம் பக்கம் வரனும்னு ரொம்பநாளா நானும் நினைச்சுக்கிட்டுத்தான் இருக்கேன் தம்பி..."

கணவரைப் பார்த்தபடி அவள் சொல்ல.. எதற்கு அவள் அதை அவரைப் பார்த்தபடி சொல்கிறாள்.. என்று அவர் யோசித்தார்...

'எழுமிச்சைப் பழத்தை என் தலையில் தேய்த்து அருவியில் காட்ட வைக்கனும்ன்னு நினைச்சிருந்தாளோ..'

அவளது நினைவின் ஓட்டத்தை அவரால் கணிக்க முடிந்தது.. இதைத்தான் நினைத்தாயா என்று கேட்கத்தான் பாவம்.. அவரால் முடியவில்லை...

'ஆமாம்' என்ற பதில் வந்து விட்டால்.. அவர் கட்டிக்காக்கும் கௌரவத்திற்கு பங்கம் வந்து விடாதா..?

அதனால் வாய்மூடி மௌனியாகி விட்டார்... ஆனால்.. கீதாவும் சுந்தரும் அப்படி மௌனியாகி

விடுவார்களா..? அவர்கள் தங்களுக்குள் கிசுகிசுத்து பொங்கிச் சிரித்து வைத்தார்கள்..

"சென்னையில இருக்கிற தண்ணிப் பஞ்சத்துக்கு குற்றால அருவிப்பக்கம் வந்து.. குளிர்ச்சியாய் கண்குளிர அந்த அருவித் தண்ணியை கண்ணாலேயாவது பார்த்துட்டு வரனும்னு ரொம்ப நாளா ஆசைதான் தம்பி எங்கே.. நினைப்பையெல்லாம் செயல்ல காட்ட முடியுதா..?"

"ஏன் முடியாது..?"

"நீங்க வேற.. இந்த வீட்டிலே இருக்கிற ஐந்து ஜீவனும் ஐந்து திசையை பார்த்துக்கிட்டு இருக்கும்.. இதில எல்லாத்தையும் ஒன்று சேர்த்து ஒரு இடத்துக்கு கூப்பிட்டுக்கிட்டு போகிறதுக்குப் பதிலா.. மலையைக் கட்டி இழுத்துரலாம் தம்பி..."

ராஜேஸ்வரி சொன்ன விதத்தை ரசித்துச் சிரித்தாள் பாலமுரளி...

'வந்தவரின் முன்னாலே.. வீட்டாரின் குணாதிசியத்தை இவங்க படம் பிடிச்சுக்காட்டனுமா..?' ராதிகா மனதுக்குள் வெகுண்டாள்...

அந்த கோபத்தில் ராஜேஸ்வரியுடன் மோதினாள்...

"ஏம்மா இருக்கிறது நான்கு திசை... இதில ஐந்தாவதா ஒரு திசையை நீங்க உருவாக்கினா எப்படிம்மா..?"

"அப்படியாம்மா..? இந்த தென்மேற்கு.. வடகிழக்குன்னு எல்லாம் சொல்வாங்களே.. அதெல்லாம் திசையில சேர்த்தியில்லையா..?"

ராஜேஸ்வரி மடக்க... பாலமுரளியின் முன்னால் தன் புத்திசாலித்தனம் குறைந்து போனதில் ராதிகாவிற்குள் கோபம் எழுந்தது...

அதை வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல் அவள் தந்தையை மௌனப் பார்வை பார்க்க...

'அவ அப்படித்தான் மகளே...' என்று கிருஷ்ணமூர்த்தி மகளை தன்னுடன் கூட்டுச் சேர்த்துக் கொண்டு ஆறுதல் பார்வை பார்த்தார்...

"எப்படியோ.. ஐந்து திசையும் ஒன்னாச் சேர்ந்தா எனக்குத் தகவல் சொல்லிட்டு கிளம்பி வாங்க... நான் எங்க ஊருப்பக்கமெல்லாம் சுற்றிக் காட்டறேன்..."

பாலமுரளி எழுந்து நின்று கை கூப்பினான்.. கிருஷ்ணமூர்த்திக்கு ஒருவழியாய் அவன் கிளம்பி விட்டதில் ஏக சந்தோசம்.. அந்த சந்தோசத்தில் வாசலுக்கே போய் அவனை வழியனுப்பி விட்டு வந்தார்...

"ஏம்மா.. வந்தவங்க முன்னாலே இப்படியா என் இமேஜை டேமேஜ் பண்ணுவிங்க..."

அவன் போகும் வரை பல்லைக்கடித்துக் கொண்டு பொறுமையை இழுத்துப் பிடித்து வைத்திருந்த ராதிகா.. பொறுமையிழந்தவளாக வெடித்தாள்...

அவளின் அணை உடைந்த கோபத்தை ராஜேஸ்வரி லட்சியமே பண்ணவில்லை... இதைப் போல எத்தனையைப் பார்த்திருப்பேன் என்பதைப் போல ஒரு பார்வையை பார்த்து வைத்தாள்..

"எதுக்குடி இப்ப... குழம்பில போட்ட மீனாட்டம் இந்தத் துள்ளு துள்ளறே... ?"

"அம்மா கடுப்பைக் கிளப்பாதீங்க.. ஒருத்தர் ஐயோ பாவமேன்னு பரிதாபப்பட்டு வீட்டில் கொண்டு வந்து விட வந்தா.. இப்படியா பிஹேவ் பண்ணுவீங்க... ?"

"அதை என் கிட்டச் சொல்லாதே... உன் அப்பாகிட்டச் சொல்லு... அவர்தான் இங்கிதமில்லாம வந்தவரை உட்காரச் சொல்லனும்கிற நாகரிகம் கூட இல்லாம... அவரை நிற்க வைச்சுக்கிட்டே.. அவர் முன்னாலே உன்னைக் கேள்வி கேட்டாரு..."

'எடுத்துக் கொடுக்கிறாளே...'

அப்போது தான் மகளுடன் கூட்டணி அமைந்திருந்த கிருஷ்ணமூர்த்தி.. அந்தக் கூட்டணி உடைந்து விடுமோ என்ற மனக்கிலேசத்துக்கு ஆளானார்...

"அவரைச் சொல்கிறீங்களே... நீங்க மட்டும் என்னவாம்.. அப்பா அவரை நிற்க வைத்து என்கிட்டக் கேட்ட கேள்வியை... அவரை உட்கார வைத்து.. கையில காபிக் கப்பையும் கொடுத்து.. அவர்கிட்டயே நீங்க கேட்டிங்க.. தானிக்கு பேரு ஏமி... ?"

"என்னது.. ?"

"தானிக்கு பேரு ஏமின்னேன்.."

"ஏண்டி கீதா.. இவ என்னவோ சொல்றாளே.. அதுக்குப் பெயர் என்னடி.. ?"

"அதைத்தான் சொல்றாம்மா..."

"அப்படின்னா.. ?"

"அம்மா.. தானிக்கு பேரு ஏமின்னா... அதுக்குப் பெயர் என்னன்னு அர்த்தம்.. அதைத்தான் இவ தெழுங்கில சொல்றா.."

"இப்படிப் பேச எங்கேடி கத்துக்கிட்டா.. ?"

"இவ கூட தெழுங்குக்காரப் பொண்ணு ஒன்னு படிக்குதாம்.."

"அட்லன்னா..."

"அப்படின்னா... ?"

"அப்படியான்னு அர்த்தம்... இவளுக்குத்தான் தெழுங்குக்காரங்க சிநேகிதமா இருப்பாங்களா... எனக்கு இருக்க மாட்டாங்களா.. ? மூணாம் வீட்டு கோகிலா ஆந்திராக்காரப் பொண்ணுதான்... உன் அக்கா பேசினா... நான் பேச மாட்டேனா.. ? யாருகிட்ட.. ?"

"அம்மா.. இப்ப எதுக்கு பேச்சை மாத்தறிங்க... நீங்க செய்தது சரியில்லை... அதை ஒப்புக்குங்க..."

"அடித்துப் பல்லைக் கழட்டி விடுவேன்... ஆளைப்பாரு.. ஏண்டி... இருட்டின பின்னாலே பங்சனுக்குப் போகிறேன்னு போவை.. யாரோ ஒருத்தன் கூட காரில வந்து இறங்கிற.. அதை என்ன ஏதுன்னு விசாரிக்கலைன்னா.. அவங்க பெத்தவங்களாடி..? அது குடும்பமாடி..? நாங்க அப்படித்தான் இருப்போம்.. நாங்க விசாரிக்கிற அளவுக்கு நீ ஏன் வைச்சுக்கற..?"

கேள்வி கேட்ட மகளிடம் பதில் கேள்வி கேட்டு விட்டு ராஜேஸ்வரி கோபத்துடன் உள்ளே போய்விட... 'நாங்க...' என்று அவரையும் மனைவி கூட்டுச் சேர்த்துக் கொண்டதில் கிருஷ்ணமூர்த்தி.. அவசரமாக கட்சி மாறினார்...

என் ராத்திரித் தூக்கத்தை
நீயேன் தின்றாய்...?

குளியலறையிலிருந்து வெளியே வந்த பாலமுரளி.. கைலிக்கும்.. கையில்லாத பனியனுக்கும் மாறினான்.. அறைக்கதவு தட்டப்பட.. திறந்தான்..

"சார்.. பால்..." ரூம்பாய் நின்றிருந்தான்...

"தேங்க்ஸ்... நீ போ..." அவனை அனுப்பி விட்டு.. பால்தம்ளரோடு கட்டிலில் சாய்ந்த வாக்கில் அமர்ந்து டிவியை பார்த்த வண்ணம் பாலை அருந்த ஆரம்பித்தான்..

சற்றுமுன் ராதிகாவின் வீட்டில் குடித்த காபியின் நினைவு அவனுக்கு வந்தது...

'ஜாலியான குடும்பம்...'

மாணிக்கவாசகம் உயிரோடு இருந்த காலத்தில் கூட இப்படி அவர்கள் குடும்பத்தில் சேர்ந்து பேசி சிரித்ததில்லை... அவர் போன பின்பு கேட்கவே வேண்டாம்...

மூச்சை முட்டும் வேலைகளில் பாலமுரளியும்.. முடிவேயில்லாத சோகத்தில் மேகலாவும்.. எதிர்காலத்தைப் பற்றிய பயத்தில் பால சரஸ்வதியும் மூழ்கி விட்டார்கள்..

அதிலிருந்து மீண்டு கொஞ்சம் இயல்பு நிலைக்கு குடும்பம் வந்த போது.. பாலசரஸ்வதி திருமணம் முடிந்து கணவன் வீட்டிற்குப் போய்விட்டாள்.. பாலமுரளி பணத்தை துரத்த ஆரம்பித்து விட்டான்.. மேகலா கோவில்களில் உள்ள தெய்வங்களிடம் குறைகளை பகிர்ந்து கொண்டு.. மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள முயலாமல் தனக்கென்று ஒரு வட்டத்தைப் போட்டுக் கொண்டுவிட்டாள்..

இப்படி ஆளுக்கொரு திசையில் பயணிப்பவர்-களுடன் இருப்பவனுக்கு.. மனதிலிருப்பதை

அப்படியே பேசிவிடும் குடும்பத்தைக் கண்டால் ஆச்சரியமாகத்தானே இருக்கும்..?

'இந்த வீட்டிலிருக்கிற ஐந்து பேரும் ஐந்து திசைகளில் பார்ப்பாங்க தம்பி...'

ராஜேஸ்வரியின் குரல் அவன் காதுகளில் ஒலித்தது...

'நாங்க மூணு பேரும்.. மூணு திசைகளிலே இருக்கிறோம்.. இது உங்களுக்குத் தெரியுமா..?'

பாலமுரளி விளக்கையும்.. டிவியையும் அணைத்து விட்டு கண்களை மூடினான்.. மூடின கண்களுக்குள் ராதிகாவின் முகம் தெரிந்தது.. உறக்கம் வராமல் புரண்டு படுத்தான்...

'சொல்ல நினைத்த வார்த்தைகள்
சொல்லாமல் போனதேன்...?'

அவளின் பாடல் நினைவுக்கு வந்தது...

'உனக்கு மட்டுமா இந்த துன்பம்..? எனக்கும்தான்.'

ராதிகாவின் அழகைப் புகழ நினைத்தான்.. அதைச் சொல்லவில்லை... அவளின் துறுதுறுப்பை வியக்க நினைத்தான்... அதைச் சொல்லவில்லை... அவளைப் பிடித்திருப்பதை உணர்த்த நினைத்தான்... அதையும் சொல்லவில்லை...

சொல்ல நினைக்கும் வார்த்தைகளை.. பெண்களால் மட்டுமே சொல்ல முடியாமல் போவதில்லை... ஆண்களுக்கும் அதே நிலைதான்...

உறக்கமின்றி அவன் எழுந்து.. பால்கனிக் கதவைத் திறந்தான்.. சில்லென்ற கடல்காற்று அவன் உடலைத் தழுவியது...

அதே நேரத்தில்.. ராதிகாவின் வீட்டில் அவளும் உறக்கத்தோடு போராடிக் கொண்டிருந்தாள்...

'யார் அவன்..?'

அவளுக்கு அவன் பெயர் தெரியும்... ஊர் தெரியும்... ஆனாலும் அவள் மனதில் அந்தக் கேள்வி எழுந்து நின்றது...

'இத்தனை நாளாய் எங்கிருந்தான்..?'

அவள் கனவிலும் நினைக்கவில்லையே... வேண்டா வெறுப்பாகத்தானே ஷோபா வீட்டுக்குப் போனாள்.. அங்கே இப்படியொரு ஆண்மகனை சந்திப்போம் என்று நினைத்தா பார்த்தாள்...?

'இன்று காதல் ஏக்கம் தந்தாள்... சென்றாள்...
நாளை என் செய்வானோ....'

இந்தப் பாட்டிற்கு அவனால் இப்படியொரு உயிர் கொடுக்க முடியும் என்று அன்றுதான் அவள் உணர்ந்தாள்...

மறுநாள் காலேஜில் அவளைப் பார்த்த ஹேமா புருவங்களை சுருக்கி ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்தாள்...

"அடச்சீ.. அப்படிப் பார்த்து வைக்காதே.." ராதிகா அதட்டினாள்...

"நான் பார்த்தா கசக்கும்.. அந்த பாலமுரளி பார்த்தால் மட்டும் இனிக்குமாக்கும்..." ஹேமா நொடித்தாள்...

"ஏய்ய்.. தேவையில்லாம பேசாதேடி... உன்கிட்ட அப்படி வந்து நான் சொன்னேனா..?"

"சொன்னால் தானா..? நீ பார்க்கும் பார்வையிலேயே அது தெரிஞ்சதே..."

முதல்நாள் இரவில் அவனைச் சந்தித்த நொடிகளை மனம் அசைபோட ஆரம்பிக்க.. இனிய உணர்வென்று மனதில் எழுவதை உணர்ந்தாள் ராதிகா...

"நீ ரொம்பத்தான் கண்டே..."

"கண்டதால்தான் சொல்கிறேன்..."

"போடி... போய் படிக்கிற வேலையைப் பாரு..."

"நீ அவனை நினைக்கிற வேலையைப் பார்க்கப் போகிறியாக்கும்..?"

ஹேமாவின் கேள்வியில் முகம் சிவந்தாள் ராதிகா.. அதை விசித்திரமாக பார்த்தாள் ஹேமா...

"ஒன்னுதாண்டி இடிக்குது..."

"ஒன்னா..? உனக்கு ஓராயிரம் இடிக்குமே..."

"இப்போ ஒன்னே ஒன்னுதான் இடிச்சுவைக்குது.."

"என்னவாம்..?"

"அவனே பட்டிக்காட்டு பண்ணையாராய் இருக்கிறான்... அவனுக்கு முன்னாலேயே நம்ம 'தல'யப் போல செம ஹேண்ட்சம்மா ஒருத்தன் வந்து நம்ம முன்னாலே நின்னான்..."

"தலயா...?"

"ம்ம்... 'தல' தான்.. 'தல'யப்பத்தி நீ கேள்விப்பட்டதில்ல.."

"நீயே கேள்விப்பட்டிருக்கிறப்போ.. நான் கேள்விப் பட்டிருக்க மாட்டேனா..? ஆனா அந்த சங்கரைப் போய் அஜித் ரேன்ஜீக்கு நீ பேசறதுதான் ஆச்சரியமாயிருக்கு..."

"அவன் அஜித்தை விடவும் அழகாயிருந்தான்..."

"எனக்கொன்னும் அப்படித் தோணல..."

"அதுதான் ஏண்டி..?"

'ஏன்..?'

அது ராதிகாவிற்கும் புரியவில்லை.. முதல்நாள் விருந்தின் போது அவர்களிடம் முதன்முதலாக அறிமுகமாகி ஆர்வம் காட்டிப் பேசியது சங்கர்தான்..

அவனை விட்டுவிட்டு.. பாலமுரளியின் பின்னால் ஏன் மனம் போகிறதென்று அவளுக்கே புதிராக இருந்தது...

"நாமளே சிட்டியில பிறந்து வளர்ந்தவங்க..."

"அதுக்கென்ன..."

"நமக்கெல்லாம் பட்டிக்காடு தோதுப்படுமா ராதிகா..?"

"இப்ப எதுக்காக உன்னோடு என்னையும் சேர்த்து கூட்டணி போடற..?"

"ஒரு பிரண்ட்ஷிப்புதான் ராதும்மா..."

"ஒரு ஷிப்பும் வேண்டாம்.. எதில கூட்டணி போடறதுங்கிற விவஸ்தையே உனக்கில்லையா..?"

"பேச்சுக்குத்தாண்டி..."

"பேச்சுக்கு கூட இதில கூட்டணி சேராதே..."

"விடுடி.. விடுடி.. இது ஒரு பேச்சா..?"

"தெரியுதில்ல... பேச்சை விடு.. இனிப் பேசாதே.."

"உனக்கெதுக்கு இவ்வளவு கோபம் வருது...?"

திரும்பவும்... ஏன் என்ற கேள்வி துரத்த.. ராதிகா மௌனமானாள்... அவளது இயல்பிற்கு பொருத்தமில்லாத மௌனத்தில் அவள் தன்னை பொருத்திக் கொண்டதில் ஹேமா வியப்புற்றாள்...

'இவ எதுக்கு இப்படி பேசாம இருக்கா..?'

தூரத்தில் ஷோபாவின் கார் தெரிந்தது... சாலையோரச் செடிகளின்மீது பார்வையைப் பதித்திருந்த ராதிகாவின் கையை மெதுவாக கிள்ளினாள் ஹேமா... அவள் கவனம் கலைந்தாள்...

"என்னடி...?"

"ஷோபா வருகிறா..."

"வரட்டுமே... ஷோபாதானே வருகிறா...? என்னவோ எலிஸெபெத் மகாராணி வருகிறதைப் போல இப்படியொரு பில்ட் அப்பைக் கொடுக்கிற..."

ஷோபா.. காரிலிருந்து வெளிப்பட்டு நடந்து வந்த தோரணையைக் கண்ட ஹேமா...

"அவ அப்படித்தாண்டி பில்ட் அப் கொடுத்துக்கிட்டு வர்றா..." என்றாள்..

ராதிகா அசுவராஸ்யமாக ஹேமா வரும் திசையைப் பார்த்தாள்.. அவள் பார்வையைச் சந்தித்த ஷோபாவின் விழிகளில் அலட்சியம் நிறைந்திருந்தது...

'நேத்து என் வீட்டையும்.. வசதியையும் பார்த்துட்டா இல்ல.. அதான் 'ஆ'ன்னு என்னைப் பார்க்கிறா... இப்பத் தெரிஞ்சிருக்குமே.. இந்த ஷோபா யாருன்னு... இனிமே என்கிட்ட ஆட்டம் காட்டாம அடங்கிப் போயிருவா...'

ஷோபாவின் கணிப்பு பொய்த்தது... ராதிகா அடங்கிப் போகவில்லை... ஷோபாவின் பார்வையை அவளைவிட அதிக அலட்சியமான பார்வையுடன் எதிர் கொண்டாள் ராதிகா...

அதைக் கண்ட ஷோபாவின் கண்களில் யோசனை வந்தது...

'இன்னுமா இவள் திமிர் அடங்கலை..?'

அவள் ராதிகாவை கண்டு கொள்ளாமல் அவளருகில் அமர்த்திருந்த மற்ற தோழிகளிடம் பேச ஆரம்பித்தாள்...

"என்னடி இவ இப்படிச் செய்கிறா..?" என்றாள் ஹேமா..

"எப்படிச் செய்கிறா..?"

"நம்மளை கண்டுக்கவே மாட்டேங்கிறா..."

"எதுக்கு கண்டுக்கனும்..?"

"ஏண்டி.. நேத்து இவதானே வருந்தி வருந்தி நம்மள இவ வீட்டு பார்ட்டேக்கு இன்வைட் பண்ணினா..?"

"ஆமா.. பண்ணினா..."

"நாமளும் போனமா.. இல்லையா..?"

"போனோம்..."

"இவளோட ரிலேடிவ் காரில நம்மள திருப்பி அனுப்பி வைச்சாளா இல்லையா..?"

"ஆமா... அனுப்பி வைச்சா.."

"அப்படியிருந்தவ.. இப்படி யாரோ மாதிரி பார்த்துக்கிட்டுப் போறாளே... இதுக்கு என்னடி அர்த்தம்...?"

"மேடம் பெரிய ரேன்ஜில் இருக்கிறவங்களாம்... அவங்க நம்மள இன்வைட் பண்ணினதே பெரிய விசயமாம்... அதைப்பத்தி நினைச்சுக்கூட அவங்க பார்க்க மாட்டாங்களாம்... அப்படியிருக்கப்ப... அதைப்பத்தி பேசுவாங்களா..?"

"அவ இப்படியா நினைக்கிறா..?"

"வேற எப்படி நினைப்பா..? எனக்கு அவ நினைப்பைப் பத்தித் தெரியாதா...?"

ராதிகாவின் உதடுகளில் அலட்சியப் புன் முறுவல் நெளிந்தது... அவளும் ஹேமாவும் ஷோபாவை ஜாடையாக பார்த்தபடி ரகசியம் பேசியதில் ஷோபா பாதிப்பிற்கு உள்ளானாள்...

உன் பார்வைபோல் ஒருபார்வையை
வேறு யாரிடமும் நான் பார்த்ததில்லை...

'என்னடி இது... இவங்க இரண்டு பேரும் என் ரேன்ஜைப் பார்த்து அசந்து போயிருவாங்கன்னு நினைத்தா... இவளுக உனக்கெல்லாம் ஒரு கணக்கான்னு இப்படிப் பார்த்து வைக்கிறாங்களே...' ஷோபா முகம் மாறினாள்...

"ஹாய் ஷோபா... நேற்றைக்கு பார்த்தே பங்சனுக்கு வரமுடியலை ஐ ஆம் ஸாரி... டாடி மம்மி கூட வேற ஒரு புரோக்ராமுக்கு நான் போக வேண்டியிருந்தது..." வருத்தம்... தெரிவித்தாள் திவ்யா...

"இட்ஸ் ஆல்ரைட்... உனக்கு ஆயிரம் புரோக்ராம் இருக்கும்... நீயென்ன வெட்டியாகவே இருந்திருக்கப் போகிற...? உன்னால எப்படி வரமுடியும்...?"

இதைச் சொல்லியபடி ராதிகாவை ஷோபா ஜாடையாக பார்க்க ஹேமா பல்லைக்கடித்தாள்...

"ஏய்ய்.. இவ நம்மளத்தான் சொல்கிறாடி..."

"எனக்கும் தெரியுது..."

"எவ்வளவு கொழுப்புன்னு பார்த்தியா..."

"இவளப்பத்தி இன்னைக்குத்தான் புதுசா உனக்குத் தெரியுமா...?"

"தெரிஞ்சிருந்தும் எதுக்காகடி.. இவ வீட்டு பங்சனுக்கெல்லாம் போகனும்..?"

"கூப்பிட்டா... போனோம்..."

"இப்ப என்ன பேச்சு பேசறான்னு கேட்டியா.."

"இவ எவ்வளவு தூரத்துக்குத்தான் போவான்னு பார்ப்போமே..."

தான் பேசிய பேச்சில் ராதிகா காயப்பட்டுப் போவாள் என்று எதிர்பார்த்திருந்த ஷோபா ஏமாந்து போனாள்...

அவள் ஒருத்தி அங்கே நின்று கொண்டிருக்கிறாள் என்ற உணர்வே இல்லாததைப் போன்ற பாவனையுடன்.. ராதிகாவும்... ஹேமாவும் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள்...

'என்ன... ஒரு ரியாக்ஷனையும் காணோமே....'

ராதிகாவைத் தோற்கடிக்கும் முயற்சியில் ஷோபாவின் ரத்த அழுத்தம் எகிற ஆரம்பிக்க.. அவள் சோர்ந்து போனாள்...

'இதுக்கொரு முடிவேயில்லையா...?'

அவளுடைய வீட்டின் பிரம்மாண்டத்தையும்.. அவளது பிறந்தநாள் விழாவின் பட்டோடபத்தையும்.. அவள் அணிந்திருந்த வைர நகைகளையும்... அவள் வீட்டு விருந்திற்கு வந்திருந்த கார்களின் எண்ணிக்கையையும்.. பார்த்த பின்புமா.. ராதிகா அதே பழைய அலட்சியத்தை கடை பிடிக்கிறாள்..?

"பங்சன் எப்படி இருந்தது ஷோபி...?"

"கிராண்டாய் இருந்தது திவ்யா.."

"என்னாலேயும் வரமுடியலை ஷோபா..."

"இட்ஸ் ஆல்ரைட் ஷீலா..."

"எனக்கும் வரனுமுன்னு ஆசைதான்.. பட்.. கிளம்பும் போது கெஸ்ட் வந்துட்டாங்க ஷோபா..."

"உன்னை நான் எதிர்பார்த்தேன் லாவண்யா..."

"எனக்கும் உன் பர்த்டே பங்சனின் நினைவுதான்.. இந்தத் தடவை கார்டனில் வைத்திருக்கிறதாய் சொன்னேயில்லையா... எப்படித்தான் இருந்ததுன்னு வந்து பார்த்திருக்கலாம்..."

"ஏன்.. வந்திருந்தவங்க உன்னிடம் அதைப்பத்தி சொல்லவே இல்லைய...?"

ராதிகாவும்.. ஹேமாவும் சொல்லியிருப்பார்கள் என்ற நினைவில் கேட்டாள் ஷோபா...

"இல்லையே..."

மற்றவர்கள் விழி விரிக்கவும் அவளுக்கு என்னவோ போல ஆகிவிட்டது... ராதிகாவின் திமிரை நினைத்து மனதிற்குள் வெகுண்டாள்...

"யாரு வந்திருந்தது ஷோபா...?"

ஷீலா கேட்டதும்.. எப்படி ராதிகாவின் பெயரைச் சொல்வது என்று தெரியாமல் தவித்தாள் ஷோபா...

அவளது தவிப்பை ரசித்துப் பார்த்த ஹேமாவிற்கு குதூகுலுவென்று இருந்தது...

"அப்படியே இஞ்சி தின்ன குரங்கைப் போலவே இருக்கிறாடி..." என்றாள்...

அதற்குள் ராதிகாவைத் திரும்பிப் பார்த்த திவ்யா-

"ராதிகாவும்.. ஹேமாவும் வந்திருப்பாங்களே..." என்று சொல்லி விட்டாள்...

"ஈவிட்...? ராது.. சொல்லு... நேற்று இவளோட பர்த்டே பார்ட்டி எப்படியிருந்தது..?"

மற்றவர்கள் விசாரிக்க ஆரம்பிக்கவும்.. ஷோபா மிகுந்த பார்வையொன்றை ராதிகாவின் மீது செலுத்தி விட்டு அவள் என்ன பதிலைச் சொல்லப் போகிறாள் என்ற எதிர்பார்ப்புடன் காதைத் தீட்டிக் கொண்டு காத்திருந்தாள்...

"கிடைச்சது சான்ஸ் ராது.. பூந்து விளையாடு..." ராதிகாவின் காதோரமாக கிசுகிசுத்தாள் ஹேமா...

ராதிகா அவர்கள் பக்கம் திரும்பி அமர்ந்தாள்.. இதுவரை அவர்கள் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் என்று அவளுக்குத் தெரியாததைப் போல...

"என்னடி...?" என்று கேட்டு வைத்தாள்...

"நேத்து... நீயும் ஹேமாவும்... ஷோபாவோட பர்த்டே பங்சனுக்குப் போயிருந்தீங்கள்ல...?"

"ஏண்டி.. நேத்துக் காலையிலேயிருந்து.. நைட் வரைக்கும் முக்கியமான வேலைகளை ஆயிரம் இருந்துச்சு... அதையெல்லாம் விட்டுட்டு.. இதைப் போயி கேட்கறிங்களே... நான் என்னத்தைச் சொல்ல..? ம்ஹீம்.."

கேட்டவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்ள... ஷோபாவிற்கு முகத்தில் அடித்ததைப் போல இருந்தது...

"அப்ப.. இவ வீட்டு பங்சனுக்கு நீங்க போகலையா..?"

"த்சு... அதையேண்டி கேட்கிற... இவ காலில் விழுகாத குறையாய் கெஞ்சினாளேன்னு.. எங்க வீட்டில் நான் காலில் விழுகாத குறையாய் அம்மாப்பாகிட்ட கெஞ்சி பெர்மிசன் வாங்க வேண்டியதாப் போச்சு திவ்யா..."

"ஓ.. உனக்கு கஷ்டமாயிருச்சா..."

"பின்னே.. இருக்காதா..? எங்க வீட்டிலேயெல்லாம் இருட்டின பின்னாலே வெளியே அனுப்ப மாட்டாங்க..."

"எங்க வீட்டிலேயும் அந்தப் பழக்கம் உண்டு ராதிகா..."

"வெரிகுட்.. அப்ப என் நிலைமை எப்படியிருந்திருக்கும்ன்னு உனக்கே புரிஞ்சிருக்கும்..."

"ஷ்யூர்... ஷ்யூர்..."

"அப்பவும் நான் இவகிட்டச் சொல்றேன்.. எனக்கு இந்த பார்ட்டி கீர்ட்டியெல்லாம் பிடிக்காது.. என்னை டிஸ்டர்ப் பண்ணாதே... என் வீட்டில் பெர்மிசன் வாங்கறது கஷ்டம்ன்னு.. இவ கேட்டால் தானே..."

அந்த திவ்யா நாகக்கும்... நாகரிகமும் மிகுந்தவள்.. மிகத் தன்மையான குணம் கொண்டபெண்.. அவள் அதிருப்தியோடு ஷோபாவைப் பார்த்தாள்...

"வாட் இஸ் திஸ் ஷோபா..? மத்தவங்க டிரபிளை நீ புரிந்துக்க வேணாமா..? உன் வீட்டு பங்சனுக்கு வர முடியாதவங்களை நீ ஏன் கஷ்டப்படுத்தின...?"

ஒரு நொடியில் ஷோபாவின் வீட்டு பிறந்தநாள் விழாவின் பிரம்மாண்டம் மறக்கப்பட்டு... அதற்கு வர

முடியாத ராதிகாவை ஷோபா வற்புறுத்தி அழைத்தது மட்டுமே பிரதானமாய் மாறி நிற்க... அந்தச் சூழலை நீர்ணிக்க முடியாமல் திகைத்துப் போனாள் ஷோபா...

இப்படி.. ஒரு பேச்சின் போக்கையே ராதிகா திசை திருப்பி விடுவாள் என்று கொஞ்சம்கூட அவள் நினைத்துப் பார்க்கவில்லை...

'டேன்ஜரஸ் கேர்ள்...'

அந்த அபாயகரமான ராதிகாவோ... அழகான தனது கண்களை உருட்டி... உருட்டி... தோழிகளிடம் கதை பேசிக் கொண்டிருந்தாள்...

"அம்மா ரொம்பத் திட்டினாங்க ஷீலா... அதையும் தாண்டி.. அவங்க கிட்டே பெர்மிசன் வாங்கறதுக்குள்ள போதும்... போதும்ன்னு ஆகிருச்சு..."

"பாவம்டி நீ... பேசாம இவ வீட்டு பங்சனை அவாய்டு பண்ணியிருக்க வேண்டியது தானே..."

ஷீலா சொல்லியதில் ஷோபா மனதில் அடி வாங்கினாள்...

"பண்ணியிருப்பேன்.. ஆனா.. நான் வேண்டும்ன்னே இவ இன்வைட்டை அவாய்டு பண்ணிட்டேன்னு இவ சொன்னாலும்.. சொல்லிடுவா..."

ராதிகா அவள் பங்குக்கு... எரியும் தீயில் எண்ணையை ஊற்றினாள்...

"ஆமாமாம்.. அதுவும் உண்மைதான்.. இவ அப்படிச் சொல்கிற ஆள்தான்..."

மற்றவர்கள் ஆமோதிக்க... ஷோபா நொந்து.. நூலாகிப் போனாள்...

"அதனாலதான்.. நானும் ஹேமாவும் போனோம்..."

சோகமாய் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னாள் ராதிகா...

அதுவரை தோழிகளிடம் மாற்றி மாற்றி பாட்டு வாங்கியிருந்த ஷோபா... அதற்கு மேலாவது ராதிகா அவள் வீட்டு விருந்தைப் பற்றிச் சொல்வாள் என்று எதிர்பார்த்து காத்திருந்தாள்...

அவளும் சொன்னாள்.. ஷோபாவின் வீட்டு விருந்தைப் பற்றிச் சொல்லாமல்.. அந்த விருந்தில்... அவள் பாடியதைப் பற்றிச் சொன்னாள்...

"நான் பேசாமல்தான் இருந்தேண்டி.. இந்த ஹேமாதான் பாடு... பாடுன்னு கிளப்பி விட்டுட்டா..."

"இட்ஸ் வெரி நைஸ்... என்னபாட்டுப் பாடினடி..?"

திவ்யா ஆர்வமாய் கேட்க.. ராதிகா அந்தப் பாட்டைப் பாடிக் காட்டினாள்...

"வாவ்..."

"பெண்டாஸ்டிக்..."

"மார்வலெஸ்..."

ராதிகாவின் பாட்டுக்கு பாராட்டுக்கள் குவிந்தன.. ஷோபா அதற்கு மேலேயும் அங்கே நிற்க முடியாதவளாய்.. வகுப்பறையைப் பார்த்து போய் விட்டாள்...

"கிழிச்சுட்ட டீ..."

அன்று முழுவதும் ஹேமா... ராதிகாவை சிலாகித்துக் கொண்டிருந்தாள்...

"பின்னே.. அவளுக்கு நான் யாருன்னு காட்ட வேணாமா..? நானும் போனாப் போகுதுன்னுதான் பார்த்தேன்.. இவ திட்டம் போட்டே என்னைக் கிராஸ் பண்ணிக்கிட்டு இரந்தா சும்மா விடுவேனா..? யாருகிட்ட இவ வேலையைக் காட்டறா..?"

"அதுதானே..."

"ஆனானப்பட்ட லேடி ஹிட்லருக்கே நான் அல்வா கொடுக்கிற ஆளு... இவளெல்லாம் எனக்கு ஈக்குவலாடி..?"

"நிச்சயமாய் இல்ல.."

"இவ வீட்டு வசதிவாய்ப்பை நாம பார்க்கனுமுன்னு நம்மை அழைச்சாளா...?"

"நம்மைன்னு உன்னோடு என்னையும் கூட்டுச் சேர்த்துக்காதேடி.."

"அப்ப மட்டும் கூட்டுச் சேர்ந்த..?"

"அப்ப மட்டும் நீ அப்ஜெக்ட் பண்ணின...?"

"இதிலெல்லாம் கூட்டுச் சேர்ந்திடாதே.. விவரமான ஆளுடி..."

"அதை நீ சொல்கிறயா..? அவ உன்னைத்தான் கார்னர் பண்ணினா.. என்னையில்லை..."

"அதான்.. பாரேன்.. இவ வீட்டுக்கு நாள் போகனுமாம்... அப்புறமாய் என்னவோ பத்திரிக்கை ரிப்போர்ட்டர் மாதிரி... இவவீட்டு பங்சனைப் பத்தி காலேஜ் பூராவும் சொல்லனுமாம்.. நினைப்புத்தாண்டி இவளுக்கு..."

இதைக் கேட்ட ஹேமா சிரித்தாள்...

"எதுக்குடி இப்ப சிரிச்சு வைக்கிற...?" ராதிகா கோபமானாள்...

"இல்ல... உன்னைப் போய் அவளுக்கு கொள்கை பரப்புச் செயலாளராய் அவ நினைச்சிருக்காளேன்னு நினைச்சேன்.. சிரிப்பு வந்திருச்சு..."

ராதிகாவும் இப்போது ஹேமாவுடன் சேர்ந்து சிரித்தாள்.

"என்னமாய் பிளான் பண்ணியிருக்கான்னு பாரு..."

"என்ன பிளான் பண்ணி என்ன பண்ண..? இவ அந்த சங்கர்பின்னாலே நாய்குட்டியைப் போல அலைஞ்சா.. அவன்.. அவளைப் பார்க்காம உன்னைத்தான் பார்த்துக்கிட்டு இருந்தான்..."

ஹேமாவின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும்.. ராதிகாவின் சிரிப்பு ஸ்விட்ச் போட்டதைப் போல நின்று விட்டது...

20

உன் ஒற்றைப் பார்வையில்
இற்று விழுந்தது என்மனம்...

ஷோபா... காலை டிபனை நாசுக்காக மொக்கிக் கொண்டிருந்தாள்.. அவளுக்கு வேண்டியதை பரிமாறியபடி சிந்தனையில் இருந்தாள் சுசிலா.. அதை ஜாடையாக பார்த்தபடி சாப்பிட அமர்ந்தார் பரந்தாமன்...

மனைவியின் எண்ண வோட்டத்தை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது...

ஷோபாவின் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டத்தின் போது... அவர்கள் எதிர்பார்த்திருந்தபடி எதுவும் நடக்காத ஏமாற்றம் அவள் நெஞ்சில் படிந்திருப்பதை அறிந்தும். அறியாதவரைப் போல அவர் சாப்பிட ஆரம்பித்தார்...

அவரும் தான் என்ன செய்வார்..?

இரவும்.. பகலும் சுசிலா புலம்பும் புலம்பல்களைக் கேட்டுக் கேட்டு.. அவரது காது ஜவ்வு... இப்போதோ.. அப்போதோ என்று கிழிபடும் நிலையில் இருந்தது...

"என்னங்க இப்படி ஆகிருச்சு...?"

"எதைச் சொல்கிற சுசிலா...?"

"உங்க பிரண்டோட மகன் வந்தால் ஷோபாவைப் பார்த்து மயங்கிடுவான்னு சொன்னீங்க... ஒன்னையும் காணோம்..."

"நீ கூடத்தான்.. உன் அக்கா மருமகளோட தம்பி வந்து நம்ம மகளைப் பெண் கேட்பான்னு சொன்ன... அதுமட்டும் நடந்திருச்சா...?"

"என்னங்க.. நீங்க... புரியாம பேசறிங்க... பாலமுரளி என் அக்காவுக்கு சொந்தக்காரன்.. எப்பவும் அவன் நம்ம கையைவிட்டுப் போகமாட்டான்..."

சுசிலா நிச்சயமான குரலில் பேச... அவளைப் போல தன்னால் நிச்சயமாய் பேச முடியவில்லையே என்று மனதிற்குள் குமைந்து போனார் பரந்தாமன்...

சங்கரைப் பற்றி அவரால் அவ்வளவு நிச்சயமாக பேசிவிட முடியாது... அவனைப் பெற்ற தந்தையான ராமாமிர்தமே நிச்சயமாக பேசிவிட முடியாது எனும்போது அவரால் மட்டும் அது முடிந்து விடுமா...?

"எனக்குத் தெரியாதா சுசி...?"

"அதனாலேதான் சொல்கிறேன்... ஒன்று சங்கருக்கு ஷோபாவை பேசி முடிங்க... இல்லைன்னா.. பாலமுரளிக்காவது பேச ஆரம்பிக்கலாம்..."

"அவன் பட்டிக்காட்டில் இருக்கிறானே சுசி..."

"பட்டிக்காட்டில் இருந்தாலும்... கோடிஸ்வரனாய் இருக்கிறான்... அதை நினைவில் வைச்சுக்கங்க... இன்னும் சொல்லப்போனா... சங்கரைவிட பாலமுரளிதான் பணக்காரன்..."

"இதையே எத்தனை தரம்தான் சொல்லுவ... ஆனா நம்ம ஷோபாவுக்கு சங்கரைத்தானே பிடிச்சிருக்கு..?"

"அதைப் பார்த்தா முடியுமா..? அப்படி நினைக்கிறவர் சங்கரை கை நழுவ விடாம பார்த்துக்க வேண்டியதுதானே..."

எங்கே போய் அவனைப் பார்த்துக் கொள்வது..?

பேசாமல் ஒரு இரும்புச் சங்கிலியை எடுத்துக் கொண்டு போய் அவனைக் கட்டி பிணைத்து... அதன் பின்னால் அவனைப் பார்த்துக் கொண்டால்தான் உண்டு என்ற நிலைமையில் பரந்தாமன் என்ன செய்வார்...?

அவரால் சுசிலாவிற்கு சமாதானம் சொல்லவும் முடியவில்லை... அதேசமயம் அவளின் பயத்தை அலட்சியம் பண்ணவும் முடியவில்லை...

அதனால் கூடுமானவரை மௌன விரதத்தை கடைபிடித்தார்...

அன்றும் அதே போல... சுசிலாவின் சஞ்சலமான பார்வையை சந்திப்பதை தவிர்த்து சாப்பாட்டில் கவனமாக இருந்தவர்...

"என்னங்க..." என்ற சுசிலாவின் பரவச அழைப்பில் தன் காதுகளையே நம்ப முடியாமல் ஆச்சரியத்துடன் மனைவியை பார்த்தார்...

வாசலைப் பார்த்துக் கொண்டிருந்த அவளது விழிகள் மின்னின...

"சங்கர் வருகிறான்ங்க..."

"என்னது..."

பரந்தாமனும்.. ஷோபாவும் ஒருமித்த குரலில் கேட்டபடி வாசலைப் பார்த்தார்கள்...

அங்கே சங்கர் வந்து கொண்டிருந்தான்...

"நான் சொல்லலை..? நம்ம ஷோபாவை பெர்த்டே பங்சனில் பார்த்தா சங்கர் மயங்கிடுவான்னு.. நான் சொன்னதைப் போலவே நடந்திருச்சு...", சுசிலா மகிழ்ந்து போனாள்...

அவள் எப்போது அப்படிச் சொன்னாள் என்று யோசித்த பரந்தாமனுக்கு... அது யோசனைக்கான நேரமல்ல என்பது புத்தியில் உறைக்க... அவசரமாக எழுந்து வாசலுக்கு விரைத்தார்...

தன் ஒப்பனை குறித்த கவலையில் ஆழ்ந்தாள் ஷோபா... அவன் வரும் விவரம் அவளுக்குத் தெரியாது.. தெரிந்திருந்தால்... அதிகாலையிலேயே எழுந்து.. ஒப்பனையை ஆரம்பித்திருப்பாள்...

ஒருதரம் கண்ணாடியைப் பார்த்தால் தேவலை என்று அவளுக்குத் தோன்றியது...

அதற்கு வழியின்றி... ஹாலில் இருந்து...

"ஷோபா..." என்று பரந்தாமன் அழைக்கும் குரல் கேட்டது...

"யெஸ் டாட்.." ஷோபா ஹாலுக்கு விரைந்தாள்...

"என்ன பெண்ணம்மா நீ...? சங்கர் உன்னைப் பார்க்கத்தான் வந்தாராம்.. நீ என்னன்னா... அவரை உடனே வந்து பார்க்காம மெதுவா ஆடி.. அசைஞ்சு வருகிற..." பரந்தாமன் கடிந்து கொண்டார்...

"நான் ஷோபாவைப் பார்க்க வந்தேன் அங்கிள்..."

சங்கர் கூறிய இந்த வார்த்தைகளில் அவர் இறக்கை இல்லாமல்... வானில் பறந்து கொண்டிருந்தார்...

சுசிலாவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்...

அன்று மாலை லேடிஸ் கிளப்பில்... அந்த மிஸஸ் அய்யனாரின் முன்னால்... மற்ற பெண்மணிகளிடம்.. சங்கர் ஷோபாவைப் பார்க்கவென்று தன் வேலைகளை ஒதுக்கித் தள்ளி விட்டு வந்து நின்ற விவரத்தை சொல்லி விடும் கனவில் இருந்தாள் அவள்...

'அப்ப அந்த செல்வியோட முகம் போகிற போக்கைப் பார்க்கனும்...' அவள் மனதில் ஆசை தோன்றியது...

"என்னைப் பார்க்க வந்திங்களா..?" ஷோபா விழி விரியக் கேட்கிறேன் பேர்வழியென்று கண்களை உருட்டி விழித்தாள்...

அதைப் பார்த்த பரந்தாமனே பயந்து விட்டார்... அப்படி விழித்துப் பார்க்கக் கூடாதென்று மகளிடம் சொல்லி வைக்க வேண்டுமென்று மனதில் குறித்துக் கொண்டார்...

சங்கருக்கு திடசித்தம் போல... பரந்தாமனைப் போல ஷோபா பார்த்த பார்வையில் அவன் பயந்து விடவில்லை...

"ஷ்யூர்... உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்... காலேஜீக்கு கிளம்பிட்டயா..?" என்று நிதானமாகக் கேட்டான்...

"இன்னைக்கு காலேஜ் கட்டடிச்சா ஒன்னும் தப்பில்லை... நான் நாளைக்கே காலேஜ் போய்க்கறேன். வாங்க... கார்டனில் போய் பேசலாம்..." ஷோபா பரபரத்தாள்...

"நோ.. நோ.. காலேஜையெல்லாம் கட்டடிக்கக் கூடாது.. அதோடு... எனக்கு காலையிலே முக்கியமான அர்ஜன்ட்வொர்க்ஸ் இருக்கு.. ஸோ.. நாம ஈவினிங் மீட் பண்ணலாம்..."

"ஓ கே..."

"இப்போ என் காரில் வருகிறயா..? நான் உன்னை காலேஜில் டிராப் பண்றேன்... போகும் போதே நாம கொஞ்சம் பேச வேண்டியிருக்கு..."

"பட்.. என்னோட காரில்தான் நான் காலேஜ் போகிறது வழக்கம்..."

"அது எதுக்கு உனக்கு..? ஈவினிங் உன்னை காலேஜில் வந்து நான் பிக்-அப் பண்ணிக்கறேன்..."

மாலையில் அவனைச் சந்திக்கு முன்னால்... பியூட்டி பார்லருக்கு போய் வந்து விடலாம் என்ற நினைவோடு இருந்த ஷோபாவிற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை...

"அப்படியே நாம வெளியில் போய் விட்டு வரலாம்..." என்று அவன் ஆசைகாட்டிய போது... அவளால் மறுக்க முடியவில்லை...

ஷோபா... அவளுடைய காரை விட்டுவிட்டு... சங்கரின் காரில் ஏறிக்கொண்டாள்...

போகும்போது நாம் பேச வேண்டியது நிறைய இருக்கிறது என்று சொன்ன சங்கர்... அந்த நினைவே இல்லாதவனைப் போல மௌனமாக... காரை ஓட்டிக் கொண்டிருந்தான்...

'இதுதான் இவன் என்கூட பேசுகிற லட்சணமா..?'

ஷோபா... ஏமாற்ற மடைந்தாள்... காலேஜ் வாசலில் அவள் இறங்கி உள்ளே போக முயன்றபோது.. சங்கரும் அவள் கூடவே சேர்ந்து இறங்கி.. உள்ளே நடந்து வந்தான்...

"என்ன.. ?"

"உன் காலேஜைப் பார்க்கலாம்ன்னுதான்... வேற ஒன்றுமில்லை..."

ஷோபா அதை நம்பத்தயாராக இல்லை... சங்கரின் பார்வை கடந்து போன பெண்களின் மத்தியில் யாரையோ தேடித் துழாவியது திடிரென்று அவன் கண்கள் மின்னியதைப் பார்த்த ஷோபாவின் மனதில் பயம் பிறாண்டியது...

'யாரைப் பார்க்கிறான்.. ?'

"ஹாய்..." சங்கர் உற்சாகமாய் கையாட்ட...

"ஹாய்... நீங்களா... ?" என்று அருகில் வந்தாள் ஹேமா...

அவள் கூடவே வந்த ராதிகாவின் மேல் சங்கரின் ஆர்வப்பார்வை படிவதை உணர்ந்த ஷோபாவிற்கு.. எதற்காக.. காலையிலேயே... அவளைத் தேடிக் கொண்டு சங்கர் வந்தான் என்பதற்கான காரணம் பிடிபட்டு விட்டது...

21

என்முன்னாலிருந்த மக்கள்கூட்டத்தில்..
உன்னை மட்டுமே என்கண்கள் தேடின...

"யாருடி..." என்றபடி திரும்பிப் பார்த்த ராதிகாவின் முகத்தில் சங்கடம் நிலவியது...

'இவனா...' அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

அந்த உதடுகளின்மீது சங்கரின் பார்வை ஆசையாகப் படிவதைக் கண்டதும் அவள் முகம் கன்றி விட்டது...

ஷோபாவின் பிறந்தநாள் விருந்தின் போது அவன்.. அவளையே சுற்றிச்சுற்றி வந்ததை அவளும் உணர்ந்துதான் இருந்தாள்...

இருந்தும் அவளுக்கு ஏனோ... அவன்மீது ஆர்வம் ஏற்படவில்லை.. அது எதனால் என்று தெளிவாக அவளால் சொல்லவும் முடியவில்லை...

பார்ப்பவர்களையெல்லாம் ஆர்வமாக பார்த்து விட முடியுமா? அதே சமயம்... யாரோ ஒருவரின்மீது ஆர்வம் ஏற்பட்டு விட்டால் அதை தடுத்து விடத்தான் முடியுமா.. ?

பாலமுரளியின் மீது ராதிகாவுக்கு ஏற்பட்ட ஈர்ப்பு... சங்கரின் மீது ஏற்படவில்லை என்பது மட்டும் நிதரிசனமான உண்மை...

ஹேமாவுடன் சேர்ந்து வந்தவள்... அவள் சங்கருடன் பேச நின்றதும் நகர முடியாமல் சேர்ந்து நின்றாள்...

"ஹாய் ராதிகா... எப்படியிருக்கீங்க..?" என்ற அவனின் கேள்விக்கு... நாகரிகம் கருதி.. தவிர்க்க முடியாமல்...

"ஐ ஆம் ஃபைன்... நீங்க எப்படியிருக்கீங்க..." என்று பதிலும் சொல்லி விட்டாள்...

ஷோபா கூட நிற்பதை சங்கர் மறந்து விட்டானோ என்ற சந்தேகம் ஏற்படும் அளவிற்கு.. சங்கர் ஷோபாவை கண்டு கொள்ளாமல் ராதிகாவிடம் பேச ஆரம்பித்து விட்டான்...

ராதிகாவுடன் அவனுக்கு பதில் சொல்லியபடி.. வகுப்புக்கு செல்லும் பாதையையே ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்...

சங்கர் ராதிகாவுடன் பேசப்பேச... ஹேமா.. ஷோபாவை ரகசியப் பார்வை பார்த்த வண்ணம் ஏளனப் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தாள்...

அவள் மனதில் என்ன ஓடிக்கொண்டிருக்கிறது என்று ஷோபாக்கு புரியாதா..?

'பார்... நீ வட்டமடிக்கும் ஆண்மகன்.. உன்னை விட்டுவிட்டு... ராதிகாவைச் சுற்றிக் கொண்டிருக்கிறான்...'

ஷோபாவால் ஹேமாவின் அந்தப் பார்வையை சகித்துக் கொள்ள முடியவில்லை... அவளது உயரம் அவளது காலடியில் சரிவதை திகிலுடன் உணர்ந்தவளுக்கு அதைத் தடுக்கும் வழிவகை தெரியவில்லை...

ராதிகா அவளுக்கு எத்தனையோ தோல்விகளைத் தந்திருக்கிறாள்.. அவையெல்லாம் சின்னச் சின்னத் தோல்விகள்.. அவற்றையே தாங்கிக் கொள்ள முடியாமல் தடுமாறியவளுக்கு... இந்தத் தோல்வியை எதிர்கொள்ள முடியாது என்று தோன்றி விட்டது...

காலேஜின் பிரதான வாசலுக்கும்.. உள்ளே இருந்த காலேஜ் கட்டிடத்திற்கும் இடையே இருந்த நீண்டு... அகன்ற சிமிண்ட் பாதையின் இருபக்கமும் பூச்செடிகள் அடர்ந்திருந்தன...

அந்த பூச்செடிகளின் மத்தியில் நின்றிருந்த ராதிகாவைப் பார்த்த சங்கர்...

"பூவுக்கும் உங்களுக்கும் வித்தியாசமே தெரியலைங்க..." என்றான்...

ராதிகா அலுப்பாக உணர்ந்தாள்... முடியாமல் நீண்டு கொண்டிருந்த உரையாடலில் அவள் வலிப்படைந்திருந்தாள்...

ஷோபாவின் முகத்தில் பொறாமையின் கலவை அப்பட்டமாகத் தெரிந்தது... ராதிகாவிற்கு அதில் சம்மதமில்லை...

அவளுக்கு ஷோபாவை பிடிக்காது தான்.. அதற்காக அவளைச் சீண்டுவதற்காக சங்கரிடம் பேசுவது என்பது அவளது இயல்புக்கு மாறான ஒன்று..

சங்கரும்தாம் இப்படி ஷோபாவுடன் வந்து விட்டு.. ராதிகாவை இழுத்துப் பிடித்து பேசிக் கொண்டிருக்கலாமா..?

அவள் மனதில் கோப அலை எழுந்தது...

'பூவும்... நானும் ஒன்றாமா...?'

அவள் நிமிர்ந்து சங்கரின் முகத்தை கூர்மையாக பார்த்தாள்...

"ஆதிகாலத்தில் இருந்து இப்ப வரைக்கும் ஆண்களின் அப்ரோச் இப்படித்தான் இருக்குது.. எங்களைப் பார்த்தால் உங்களுக்கு பூவாய் தோன்றும்.. தென்றலாய் தோன்றும்.. இப்படி பெண்களை வர்ணித்தா அவங்க சந்தோசப் படுவாங்கன்னு நீங்கள்ளாக ஒரு தப்புக் கணக்கு போட்டுக்கிட்டு.. அதை விட்டு வெளியே வராம வட்ட மடிச்சுக்கிட்டு இருக்கீங்க..."

ராதிகாவின் காட்டமான பேச்சைக் கேட்டு சங்கர் துணுக்குற்றான்... அவன்முகம் மாறிவிட்டது...

"நான் தப்பா ஏதும் சொல்லிட்டேனா.. ராதிகா.."

"சரியாவும் சொல்லலை சார்..."

"ஐ ஆம் சங்கர்..."

"எனக்கு சார்தான்.. பெண்கள் பூவாக இருந்த காலம் மலையேறிவிட்டது... அவங்க புயலாய் மாறி வெகு காலமாகிருச்சு... இன்னும் நீங்க பூவிலேயே நிற்கறிங்களே..."

"யு ஆர் ஸோ பியூட்டி புல்... அழகை ரசித்தால்... அது தப்பா...?"

சங்கர் இப்படி வெளிப்படையாக ராதிகாவை அழகியென்று சொல்லி வைப்பானென்று ஷோபாவும் எதிர்பார்க்கவில்லை.. ராதிகாவும் எதிர் பார்க்கவில்லை...

ஹேமாவின் ஏளனப் புன்னகை இன்னும் அதிகமானது...

"ஐ யோ பாவம்..."

ஷோபாவின் காதுபட.. அவள் சொல்லி வைத்தாள்... ஷோபாவிற்கு எங்கே கொண்டு போய் முகத்தை வைத்துக் கொள்வதென்றே தெரியவில்லை...

ராதிகாவிற்கோ தாங்கவில்லை... அவள் இளம் வயதுப் பெண்தான்... இருந்தும் சங்கரைப் போன்ற ஒரு கவர்ச்சிகரமான அழகுடன் இருக்கும் கோடிஸ்வர ஆணின் வாயிலிருந்து இப்படிப் பட்ட வார்த்தைகள்

வெளிவருவதில் அவளுக்கு ஏனோ விருப்பமில்லாமல் இருந்தது...

இரண்டு தினங்களுக்கு முன்னால்... அவள் இப்படி இருந்ததில்லை...

'ஏய்ய்... அவன் என்னை சைட் அடிக்கிறானோன்னு தோனுதுப்பா...' ஹேமாவிடம் தனிமையில் இப்படிச் சொல்லிச் சிரித்திருக்கக் கூடியவள்தான்...

எப்படி இந்த மாற்றம் நிகழ்ந்தது என்று அவளுக்குத்தான் தெரியவில்லையே...

"சார் ப்ளீஸ்.. நான் கிளாஸிக்குப் போகனும்.."

"நான் கேட்டதுக்கு நீங்க இன்னும் பதில் சொல்லலையே..."

"அழகை ரசித்தால் தப்பில்லை சார்.. ஆனால்.. அது உயிருள்ள ஜீவனாக இருந்தால்... அந்த ரசிப்பை வெளியே சொல்வதற்கு முன் ஒன்றுக்கு பத்து தடவை யோசித்துச் சொல்லனும்..."

அதற்கு மேல் அங்கே நிற்காமல் ராதிகா வகுப்பறையை நோக்கி விரைந்து விட்டாள்...

ஷோபாவுக்கு அதிலும் எரிச்சல்தான்...

'இவபெரிய பாக்தாத் பேரழகி... இவ அழகில மயங்கினா வெளியே சொல்லக்கூடாது... இந்த சங்கர்தான் ஆகட்டும்.. அவளிடம் இந்த அளவுக்கு வழிய

வேண்டுமா..? என்கூட வந்துவிட்டு அவளிடம் வழிந்து மூக்குடைபட்டு என் மானத்தை வாங்குகிறானே...'

ராதிகாவிடம் அவன் பேசிய வார்த்தைகளை ஷோபாவிடம் அவன் பேசினால் எப்படியிருந்திருக்கும்.. என்று யோசிக்காமல் அவளால் இருக்க முடியவில்லை...

சந்தோசப்பட்டுப் போயிருப்பாள்.. கால்கள் தரையில் பாவாமல் அந்தரத்தில் மிதந்திருப்பாள்.. இறக்கையில்லாமல் வானத்தில் பறந்திருப்பாள்..

'எனக்கென்ன குறை...? இவனுக்கு பக்கத்தில் நிற்கும் நான் கண்ணுக்குத் தெரியவில்லையா..?'

அவளுக்கு ஏக்கமாக இருந்தது...

'கடைசியில் போயும்.. போயும்.. இந்த ராதிகாவைச் சந்திக்க என்னை பகடைக்காயாய் யூஸ் பண்ணிட்டானே'

அவளுக்கு மனம் தாங்கவில்லை...

அருகில் நிற்கும் அவளை விட்டுவிட்டு.. ராதிகா போன திசையையே வெறித்துக் கொண்டு நிற்கும் சங்கரை என்ன செய்தால் தேவலாம்.. என்ற கொலைவெறி அவளுக்குள் மூண்டது...

"போனாப் போகிறா விடுங்க சார்.. எங்கே போய்விடப் போகிறா..." ஹேமா புன்னகைத்தாள்...

"கோபமா போறாங்களே..." சங்கரின் குரலில் தவிப்பிருந்தது...

"அவ ஒரு லூசு சார்... திடீர்ன்னு கோபப்படுவா.. எதுக்கு கோபப் படுகிறோமுன்னு அவளுக்கே தெரியாது.." மறைமுகமாக சங்கருக்கு ஆறுதல் சொன்னாள் ஹேமா...

"என்மேல என்ன தப்பு..?" ஆதங்கத்துடன் கேட்டான் சங்கர்...

"ஒருதப்புமில்லை... அவகிட்ட நான் கேட்கிறேன் சார்..." என்று ஹேமா சொன்னாள்...

"நிஜமாகவா..." ஆவலுடன் சங்கர் கேட்டான்...

"நிஜமாகத்தான்..." அடித்துச் சொன்னாள் ஹேமா...

"அப்போ... ஈவினிங் நான் வருகிறபோது.. என்ன ஆச்சுன்னு என்னிடம் சொல்கிறீங்களா...?"

ஹேமாவிடம் சங்கர் சொல்லிக் கொண்டிருந்த போதுதான்.. அவன் எதற்காக ஷோபாவை தன் காரில் அழைத்துக் கொண்டு வந்தான் என்ற சூட்சுமம் முழுதாக ஷோபாவுக்கு விளங்கியது...

'ஓ... இதுக்குத்தான் ஈவினிங் மீட் பண்ணலாம்ன்னு எனக்கு ஆசை காட்டினானா...'

எப்படி ஏமாந்திருக்கிறோம் என்ற நினைவில் அவளுக்கு வெட்கமாக இருந்தது..

சின்னக்குழந்தைக்கு சாக்லெட் ஆசையைக் காட்டி நினைத்ததை சாதித்துக் கொள்வதைப் போல... ஷோபாவுக்கு... சங்கருடன் வெளியே சுற்றலாம் என்ற ஆசையைக் காட்டி.. அவன் நினைத்ததை சாதித்திருக்கிறான்..

'என் கார் வேண்டாமாம்.. ஈவினிங் என்னை பிக்-அப் பண்ணிக்க இவன் வருவானாம்.. நான் இங்கே இருந்தால் தானே ஈவினிங் என்னை பிக்கப் பண்ணிக் கொள்கிறேன் பேர்வழின்னு இவன் வந்து நிற்பான்... அப்படி பிக்-அப் பண்ணிக்கிற சாக்கில்தானே ராதிகாவை மீட் பண்ணபிளான் போட்டிருக்கான்.. நான் இல்லைன்னா இவன் எப்படி வருவான்..?'

எப்படியும் ஷோபாவை அவன் வெளியே அழைத்துக் கொண்டு போகப் போவதில்லை.. மாலையில் வந்தாலும்.. ராதிகாவுடன் கடலை போட்டுவிட்டு.. ஷோபாவிடம் எதையாவது சாக்குப் போக்கை சொல்லி வீட்டில் கொண்டு போய் விடத்தான் போகிறான்..

'என்னைப் பார்த்தால் இவனுக்கு எப்படியிருக்கிறது..?'

அவளை ஏமாளியாக நினைத்து விட்டானே... என்று நெஞ்சம் கொதித்து விட்டாள் ஷோபா...

"அப்படியா.. ஈவினிங்கும் நீங்க வருவீங்களா..?" ஹேமா ஆச்சரியத்துடன் கேட்டாள்...

"ம்ம்.. வருவேன்..." சங்கர் உறுதியான குரலில் சொன்னான்...

"அப்போச்சரி... ஈவினிங் பார்க்கலாம்..." ஹேமா சிட்டாகப் பறந்து விட்டாள்...

அவன் போனதும் சங்கர் கைக்கடிகாரத்தைப் பார்க்க..

'இவ்வளவு நேரமாய் இவனுக்கு இதைப் பார்க்கனுமுன்னு தோணலையா... அவளுக போனவுடன் கரெக்டா வாட்சைப் பார்க்கிறானே... இப்பத்தான் இவனுக்கு நேரமாச்சுன்னு உறைச்சுச்சா...' ஷோபா பல்லைக் கடித்தாள்...

இதோ இப்போ வாயைத்திறக்கப் போகிறான் ஷோபா... ரொம்ப லேட்டாகிருச்சு... 'பை...' ன்னு சொல்லப் போகிறான்.. என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே அவன் வாய் திறந்தான்...

"ஷோபா.. எனக்கு ரொம்ப லேட்டாகிருச்சு.. பை ஈவினிங் பார்க்கலாம்..." அவள் முகம் பார்க்காமல் சொன்னான் சங்கர்...

அந்த செய்கையில் ஷோபாவின் முகம் பயங்கரமாக மாறியது...

"பட்... ஈவினிங் என்னை நீங்க பார்க்க வரமுடியாதே சங்கர்..."

அவசரமாக முகத்தை அமைதியாக வைத்துக் கொண்டு நிதானமாக சங்கரின் முகத்தை ஊன்றிப் பார்த்தபடி சொன்னாள் ஷோபா...

"ஏன்..?"

சங்கர் புருவங்களை உயர்த்தி அவள் முகத்தைப் பார்த்தான்..

22

என் நினைவில் நீயிருப்பதை
என்றுதான் நீ உணர்வாய்..?

அதுவரை அவள் முகத்தைப் பார்க்காதவன்.. அப்போது மட்டும் அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தது.. அவள் இதயத்தில் தைத்தது...

வலிதாங்காமல் அவளுக்கு லேசாக... மிக லேசாக... கண்கள் கலங்கி விட்டன... கணநேரத்தில் கண்களை சிமிட்டி... அவன் அதைக் கண்டு விடாமல் அவள் மறைத்து விட்டாள்....

அவள் ஷோபா...!

இன்னொருவனின் முன்னால்.. என்னதான் அவனைக் கைபிடிக்க அவள் பகீரதப் பிரயத்தனங்களை செய்து கொண்டிருந்தாலும்... அவள் கண்கலங்கி நிற்பதா...?

ஒருபோதும் அவள் அதைச் செய்ய மாட்டாள்...

"ஏன்னா... நான் காலேஜில் இருக்க மாட்டேன்..." அவள் சிரித்தபடி பேசினாள்...

"காலேஜில் இல்லாம எங்கே போகப் போகிற...?" எரிச்சல் பட்டான் சங்கர்...

"வீட்டுக்குப் போகப் போகிறேன்..." அவள் விளையாட்டாய் பேசுவதைப் போல பேசிக் கொண்டிருந்தாள்...

"இப்பத்தான் காலேஜ் வாசலிலே வந்து இறங்கியிருக்கிற... உடனே வீட்டுக்குப் போகப் போறியா..? இதுதான் நீ படிக்கிற லட்சணமா..?" அவளை மட்டம் தட்டினான் சங்கர்...

'ஆமடா.. நீ ஜொள்ளு விடுகிறதுக்கு பாலம் போடத்தான் நான் காலேஜிக்கு வருகிறேன்... அதுக்கு வேற ஆளைப் பாரு...'

"அப்படித்தான்னு வைத்துக்கங்களேன்.. எனக்கு ஒரே தலைவலி... ரெஸ்ட் எடுக்கனும்... அதுக்கு வீட்டுக்குப் போயாகனும்.." அவள் கொஞ்சலான குரலில் சொன்னாள்....

"அதுக்கு வீட்டுக்குப் போகனுமா என்ன..? காலேஜ் காண்டினில் ஒரு காபியையும்.. டேப் லெட்டையும் வாங்கி விழுங்கி விட்டு கிளாஸ் ரூமுக்குப் போக வேண்டியது தானே..." வழி சொல்லிக் கொடுத்தான் சங்கர்...

'ஆக.. அந்தக் காபியைக் கூட.. காலேஜ் கேண்டினில்தான் நான் வாங்கிக் குடிச்சுக்கனும்... நீ வெளியே கூப்பிட்டுக்கிட்டுப் போய் வாங்கிக் கொடுக்க

மாட்ட.. பலே தில்லாலங்கடி ஐடியா வெல்லாம் கொடுக்கறியே மச்சான்..! நான் காலேஜ் கேண்டின்ல காபியை வாங்கிக் குடிச்சுட்டு.. சாயந்திரம் வரைக்கும் தலைவலியோட உனக்காக காத்திருக்கனும்... நீ வந்து என்னை நடுவில நிற்க வைச்சுக்கிட்டு.. அவகிட்ட கடலை போட்டு முடிப்ப... அதுக்குப் பின்னாலே நான் என் வீட்டைப் பார்த்துப் போகனும்... நீ உன் ரூட்டைப் பார்த்துப் போவ.. தினைப்புத்தாண்டா உனக்கு..'

"நோ சங்கர்... தலைவலி வந்தா வீட்டுக்கு வந்து விடனும்னு டாடி கண்டிப்பா சொல்லியிருக்கார்.. ஸோ.. நான் வீட்டுக்குப் போயாகனும்.. ஐ ஆம் ஸாரி.. ஈவினிங் நான் உங்களை மீட் பண்ண முடியாது..."

ஷோபா வருத்தம் தெரிவிக்க..

'நான் கேட்டேனா...' என்று பல்லைக் கடித்தான் சங்கர்...

என்னவோ... அவளுடன் அந்த மாலை நேரத்தைக் கழிக்க அவன் ஆவலோடு காத்திருப்பதைப் போலவும்.. அவளால் முடியாது என்று அவள் வருத்தம் தெரிவிப்பதைப் போலவும் அவள் பேசிவைத்த விதத்தில் அவனுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

"இட்ஸ் ஆல்ரைட் ஷோபா.. உடம்பைப் பார்த்துக் கொள்..."

அதற்கு மேல் அங்கே நிற்காமல்... 'எனக்கென்ன...' என்று அவன் கிளம்பி விட.. அவள் புருவம் உயர்த்தினாள்...

"என்ன சங்கர்.. என்னை அம்போன்னு விட்டுட்டு போறிங்க...?"

அவளை கைவிட்டு அவன் போவதைப் போல அவள் வினவிவைக்க.. அவன் அவளை முறைத்தான்...

"வேற என்ன செய்யச் சொல்கிற...?"

"என்னை வீட்டில் கொண்டு போய் வி வேண்டாமா..? உங்க கடமையை நீங்க மறக்கலாமா..?"

"பேத்தாதே... என் கடமை எதுன்னு எனக்குத் தெரியும்... நீ உன் வீட்டுக்குப் போகனும்ன்னா கால்டாக்ஸியை பிடிச்சுப்போ..."

"எனக்குன்னு டாடி.. மூணு கார் வாங்கி கொடுத்திருக்கார் சங்கர்.. அதில் ஒன்னில் கூ இன்னைக்கு நான் ஏறலை... ஏன்னு உங்களுக்கு நினைவிருக்கா...?"

ஷோபா குத்தலாக கேட்டாள்.. சங்கருக்கு அ புரிந்தது.. அவளை அவன்தான் தன்காரில் வரும்ப வற்புறுத்தி அழைத்து வந்தான்...

'அதற்காக..?'

வந்த நோக்கம் நிறைவேறாததில் அவ எரிச்சலுடன் இருந்தான்... ராதிகாவின் கோபம் அவ பாதித்திருந்தது...

ஆசை ஆசையாக அவளைப் பார்க்க வந்தவன்.. அவளது கோபத்தின் பிண்ணனி எதுவென்று புரியாமல் திகைத்திருந்தான்...

"என் டயத்தை வேஸ்ட் பண்ணாதே ஷோபா... ஐ ஹேவ் சம் அர்ஜன்ட் வொர்க்..."

'ஓஹோ..'

"உடனே நான் ஆபிஸ் போயாகனும்..."

'இதுவரை உனக்கு அது நினைவில் இல்லையா...'

"ஸோ... நீ வீட்டுக்குப் போகிறதுன்னா உன் டாடிக்கு போன் பண்ணி கார் அனுப்பச் சொல்லிப் போ..."

'அது எனக்குத் தெரியாதா...?'

"இல்லை.. நீ ஈவினிங் வரைக்கும் மேனேஜ் பண்ணிக்குவேன்னா.. எனக்கு ஈவினிங் போன்பண்ணு..."

'நான் என்ன கேணச்சியா...?'

"ஸோ... பை..!"

'கிளம்பு.. கிளம்பு...'

"என்ன முடிவு பண்ணியிருக்க..?"

'இனி உன்னை நம்பி என்காரை வீட்டில் விட்டுவிட்டு வரக்கூடாதுன்னு முடிவு பண்ணியிருக்கேன்...'

சங்கர் எதிர்பார்ப்புடன் ஷோபாவின் முகம் பார்க்க... இன்னும் அவன் மீதான அவளின் ஆர்வத்தில் அவனுக்கு

எத்தனை நம்பிக்கை என்று கசப்புடன் நினைத்துக் கொண்டாள் ஷோபா...

"நான் கால் டாக்ஸியில் வீட்டுக்குப் போய்க்குவேன் சங்கர்... நீங்க கிளம்புங்க...."

"டேக் கேர்..."

"தேங்க் யு..."

இதையாவது சொன்னானே என்ற நினைவில் பரந்தாமனுக்கு போன் பண்ணி காரை அனுப்பச் சொன்னாள் ஷோபா...

"என்னம்மா ஆச்சு...?"

"ஒரே தலைவலி டாடி..."

"த்ச்சு... உன்கிட்ட இது ஒன்னு இருக்கு ஷோபா... எதுக்கெடுத்தாலும் தலைவலிதானா...? இருந்திருந்து சங்கருடன் சேர்ந்து இப்போதுதான் முதன் முதலாய் வெளியே போகிற... இப்பவும் தலைவலின்னா அவன் உன்னைப் பத்தி என்ன நினைச்சுக்குவான்...?"

"ஒன்றும் நினைத்துக்க மாட்டார்... நீங்க முதலில் காரை அனுப்புங்க..."

'இவர் ஒருத்தர் நேரம் காலம் தெரியாம பேசி வைப்பார்...'

ஷோபாவுக்கு உண்மையிலேயே தலைவலி வந்து விட்டது...

மாலையில் அவள் காலேஜில் இல்லாமல் போனால்... சங்கரும் காலேஜீக்கு வரமாட்டான் என்ற நம்பிக்கையோடு காருக்காக காத்திருக்க ஆரம்பித்தாள் ஷோபா...

அவளுக்குத் தெரியாது... மாலையில் கட்டாயம் சங்கர் வருவான் என்பது...

சங்கர் காலேஜ் வாசலில் காரின்மீது சாய்ந்து... நின்றபடி காத்திருந்தான்.. தூரத்தில் ஹேமாவும்.. ராதிகாவும் வந்து கொண்டிருப்பதைக் கண்டவுடன் அவன் கண்கள் மின்னின... ராதிகா அவனை கண்டு கொள்ளாமல் கடந்து சென்றுவிட... ஹேமா அவனருகில் வந்தாள்...

"இன்னும் அவங்க கோபம் தீரலையா..?" சங்கரின் முகத்தில் ஏமாற்றம் நிலவியது...

"அதுக்காக இப்படி முகத்தை தொங்கப் போட்டுக்கனுமா..? சிரிங்க சார்... உங்க முகத்துக்கு சிரிப்புத்தான் ஷீட் ஆடுது..."

"என்ன சொன்னாங்க...?"

"எதைப் பற்றி..?"

"காலையில் நான் சொன்னதைப் பற்றி..."

"அவ ஏதோ வியாக்கினம் சொன்னா... அதை விடுங்க சார்... இப்ப உங்களுக்கு என்னதான் பிரச்னை..?"

ஹேமா நேரடியாக விசயத்துக்கு வந்தாள்... சங்கரின் முகத்தில் வியப்பு வந்தது... அவன் இந்த நேரடிப் பேச்சு வார்த்தையை எதிர்பார்த்திருக்கவில்லை..

"அப்படின்னா...?"

"உங்களுக்கா புரியாது..? ஏன்சார்... ஷோபா இன்னைக்கு கிளாஸிக்கு வரலை... தலைவலின்னு வீட்டுக்குப் போயிட்டா.. ஆனா டாண்ணு நீங்க ஈவினிங் டயத்தில கரெக்டா வந்து நிற்கறீங்க... நீங்க ஷோபாவுக்காக வரலைங்கிறது இதிலிருந்தே தெரியுது.."

"அவளுக்காக நான் வருகிறேன்னு யார் சொன்னது...?"

"அப்போ யாருக்காக வருகிறீங்க...?"

ஹேமா மடக்கிவிட... சங்கர் பலமாகச் சிரித்தான்...

"எதுக்கு சார் இந்த வில்லன் சிரிப்பு..? நீங்க ராதிகாவுக்காகத்தானே வருகிறீங்க...?"

"யெஸ்..." அவன் உண்மையை சொல்லிவிட்டான்...

"நினைச்சேன்... இது ஷோபாவுக்குத் தெரியுமா..?"

"தெரியாது..."

"சொல்லிராதீங்க... ராதிகாவை கொன்றே போட்டு விடுவாள்..."

"என்னைத்தாண்டி ராதிகாவை நெருங்க யாராலும் முடியாது..."

"தோடா... இன்னும் அவகிட்ட நீங்க எதையும் சொல்லலை... அதுக்குள்ள இந்தப் பேச்சா...?"

"ஹேமா ஐ நீட் யுவர் ஹெல்ப்..."

"செய்துட்டாப் போச்சு..."

"நான் ராதிகாவை மீட்பண்ணி பேசனும்..."

"இங்கே முடியாது..."

"எனக்கும் அதுதெரியுது... வேற எங்கே மீட் பண்றதுன்னுதான் தெரியலை..."

"வெள்ளிக்கிழமைகளில் அவ கோவிலுக்குப் போவா..."

"எந்தக் கோவில்..."

"அவ ஏரியாவில இருக்கிற பெருமாள் கோவில்..."

"அப்புறம்..?"

"ஞாயிற்றுக்கிழமைகளில் லைப்ரரிக்குப் போவா..."

"அதுவும் அவ ஏரியாவில இருக்கிற லைப்ரரியா..?"

"எப்படிக் கரெக்டா கண்டு பிடிச்சீங்க...?"

"இதைக் கண்டுபிடிக்க.. ஷெர்லக்ஸ் ஹோமாவானும்..? அதான் தெரியுதே..."

"அப்புறம் பார்க்குக்குப் போவா.. அதுவும் அவ ஏரியாவில் இருக்கிற பார்க்குன்னு உங்களுக்கு சொல்லவே வேண்டியதில்லை..."

ஹேமாவும்.. சங்கரும் சேர்ந்து சிரித்தார்கள்... சங்கரின் மனதில் ஹேமாவின் மீது ஓர்விதமான தோழமை உணர்வு தோன்றியது....

"தேங்க்ஸ்..." உண்மையான நன்றியுணர்வுடன் சொன்னான்...

"தேங்க்ஸ் எல்லாம் வேண்டாம்... இதில எனக்கும் சுயநலமும் இருக்கு..." அவள் கண்சிமிட்டினாள்...

"என்ன..?" அவன் கேள்வியாகப் பார்த்தான்...

"எங்க அம்மா அடிக்கடி ஒரு பழமொழியைச் சொல்வாங்க..."

"எந்த ஒரு நல்ல காரியத்தையும் ஆரம்பிக்கிறதுக்கு முன்னாலே ஸ்வீட் சாப்பிடனுமுன்னு சொன்னாங்களா..?"

"ஊஹூம்... ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தா தன்பிள்ளை தானே வளருமாம்..."

"இதிலிருந்து தாங்கள் சொல்ல வருவது என்னவோ..?"

"மத்தவங்க காதலுக்கு ஹெல்ப் பண்ணினா.. என் காதல் தானாய் வளரும்..."

"நீங்க காதலிக்கிறீங்களா..? யாரைக் காதலிக்கிறிங்க..." சங்கர் வியப்புடன் கேட்டபோது 'உன்னைத்தான்...' என்று மனதில் சொல்லிக் கொண்டாள் ஹேமா...

23

ஆழ்கடலாய் என்மனது...
அதன் அந்தரங்கம் அறிவாயோ..?

'நல்லா ஏமாந்திருப்பான்...'

ஷோபா மனதிற்குள் சந்தோசப்பட்டுக் கொண்டாள்...

பூனை கண்ணை மூடிவிட்டால் பூலோகம் இருண்டு விடும் என்பது மாதிரியான சந்தோசம் அது... அவளுக்கு அது புரியவில்லை... அவள் காலேஜில் இல்லாவிட்டால் சங்கரால் எப்படி ராதிகாவை பார்க்க முடியும் என்பது அவளது எண்ணமாக இருந்தது...

'வரட்டும்.. இனி இதைப்போல காரணத்தைச் சொல்லிக் கொண்டு வந்தால் ஏமாந்து விடக்கூடாது..'

அவள் மனது தீர்மானம் போட்டு அவளது ஒப்புதலுடன் ஏக மனதாக அதை நிறைவேற்றியது...

'என்னை காலேஜில் பார்க்க வருகிற சாக்கில்தானே அவளைப் பார்ப்பான்..?'

ஊசி முனையளவு இடைவெளி கிடைத்தால் கூட.. உள்ளே நுழைந்து விடும் வல்லமை படைத்த சங்கரைப் பற்றி அறியாதவளாய் ஷோபா மனதிற்குள் கலுவிக் கொண்டாள்...

அவள் எதிர்பார்த்ததைப் போல மறுநாள் சங்கர் வரவில்லை... மறுநாள் மட்டுமில்லை... அதற்கடுத்த நாள்களிலும் அவன் வராமல் போகவும்...

'என் குணம் தெரிஞ்சதும் அடங்கிட்டான் போல...' என்று மிதப்பாக நினைத்துக் கெண்டாள்...

சங்கராவது... அடங்குகிறதாவது..?

பரந்தாமனிடம் இதைப்பற்றி அவள் பேசியிருந்தால் அவர் அவனது குணாபிசேத்தைப் பற்றி பிட்டுப்பிட்டு வைத்திருப்பார்... ஷோபா அதைச் செய்யவில்லை...

என்னதான் பெற்ற அப்பாவாக இருந்த போதிலும்.. அவரிடம் தான் விரும்பும் ஆண் வேறொரு பெண்ணிடம் பேச விரும்பி... அதற்காக அவளைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றான் என்பதைச் சொல்வதற்கு அவளுக்கு தயக்கமாக இருந்தது...

தோல்வியை ஒப்புக் கொள்வதில்தான் எத்தனை சங்கடங்கள்..?

"என்ன ஷோபா... சங்கரை இந்தப் பக்கமே காணோம்..?"

என்னவோ தினமும் அவன் வந்து ஷோபாவிடம் கொஞ்சிக் கொண்டிருந்ததைப் போலவும்... இடையில் சில நாள்கள் அவன் வராமல் போனதால் ஏனென்று கேட்பதைப் போலவும்... பரந்தாமன் கேட்டு வைக்க ஷோபா கடுப்பானாள்...

"என்னைக் கேட்டா.. எனக்கென்ன தெரியும் டாடி..?"

"ம்ஹீம்... இதுக்குத்தான் வாய்ப்பு கிடைக்கும் போதே அதை தக்க வைத்துக் கொள்ளனும்கிறது..."

"நீங்க எதைச் சொல்கிறீங்க..?"

"உனக்கு அது தெரியாதா..? வராதவன் வந்து.. உன்னைக் காலேஜிலேயே டிராப் பண்றேன்னு வருந்தி வருந்தி அழைத்துக்கிட்டு போகிறான்.. நீ என்னடான்னா.. தலைவலிக்குதுன்னு அவனுக்கு டாட்டா சொல்லிட்டு உடனேயே வீட்டுக்கு வந்து சேருகிற... இப்படியிருந்தா எப்படி ஷோபா..?"

'அவன் எதுக்காக என்னை வருந்தி வருந்தி அழைத்துக்கிட்டுப் போனான்னு உங்களுக்குத் தெரிஞ்சா... ஹார்ட் அட்டாக் வந்து ஹாஸ்பிடலில் அட்மிட் ஆகிருவீங்க... டாடி...'

ஷோபா நினைத்ததை வெளியில் சொல்லாமல் காலேஜிற்கு கிளம்பி விட்டாள்...

எதற்கும் இருக்கட்டுமென்று ராதிகாவைப் பின் தொடர்ந்து சென்று அவளை சங்கர் சந்திக்க முயல்கிறானா என்று கண்காணித்தாள்...

சங்கர்தான் ராதிகாவை சந்திக்காமல் ஹேமாவை சந்தித்துக் கொண்டிருந்தானே...

ராதிகா முகத்திலடித்தைப் போல பேசியதும் விலகி விட்டான் என்ற நிச்சயத்துடன் ஷோபா

நிம்மதியான போது... ஹேமாவிடம் வேண்டு
விவரங்களை சேகரித்து விட்ட சங்கர்.. ராதிகாவை
பின்தொடர ஆரம்பித்திருந்தான்...

கோவிலின் படிகளைத் தொட்டுக் கண்களில் ஒற்றி
கொண்ட ராதிகா பக்திப்பரவசத்துடன் கோவில்
பிரகாரத்தில் பிரவேசித்தாள்... மாலை நேரத்தில்
கோவிலில் நிலவிய மங்களகரமான சூழ்நிலை
அவள் மனதிற்கு இதத்தைத் தந்தது.. கோபுரங்களில்
கூடுகட்டியிருந்த புறாக்களின் சிறகொலியில் தன்னை
நிமிர்ந்து.. அண்ணாந்து கோபுரத்தைப் பார்த்தாள்...

'கோபுரத்தின் மாடங்களில்..
கூடுகட்டி வாழ்கின்ற...
புறாக்களை நின்று பார்க்க..
பொழுதுண்டோ எந்தனுக்கு...'

அவள் மனம் அவசரக் கவிதையைச் சொன்னது.
அவளுக்கு கோவில் பிடிக்கும்.. அங்கே கொழுவிருக்கும்
தெய்வத்தையும் பிடிக்கும்... கோபுரத்தில் கூடு
கட்டியிருக்கும் புறாக்களைப் பார்க்கப் பிடிக்கும்..
கோவிலுக்குள் ஒலிக்கும் தெய்வீக இசை ததும்பும்
பாடல்களைக் கேட்கப் பிடிக்கும்...

பட்டுப் பாவாடை.. சட்டை அணிந்திருந்த இரண்டு
சிறுமிகள்... கொழுசு சத்தத்துடன் அவளைக் கடந்து
ஓடினார்கள்...

கணுக்காலை மறைக்கும் பாவாடையை லேசாக
தூக்கிப் பிடித்தபடி அவர்கள் ஓடிய விதம் ராதிகாவை
ரசிக்க வைத்தது...

"ஏய்ய் மாலு... பார்த்துடி.. கீழே விழுந்து வைக்கப்
போற..." ஒரு பெண்மணி உரத்த குரலில் எச்சரித்தாள்...

அந்தச் சிறுமிகளில் ஒருத்தியின் அம்மாவாக
இருப்பாள் என்று ராதிகா யூகித்தாள்...

இரட்டைப் பின்னலில் வளைவாக மல்லிகைச் சரம்
சூடியிருந்த அந்த இரண்டு சிறுமிகளில் யார் மாலுவாக
இருப்பார்கள் என்று அவள் யோசித்துக் கொண்டிருந்த
போது.. ஒருத்தி திரும்பி...

"போம்மா... உங்களுக்கு வேற வேலையில்லை..."
என்றாள்..

இதைப் போலத்தானே தானும் சொல்வோம்
என்ற நினைவில் ராதிகாவின் உதடுகளில் இளநகை
அரும்பியது...

கடந்து போன குழந்தைப் பிராயத்திற்கு திரும்ப
முடியுமா என்ற அவள் ஏக்கப்பட்டுப் போனாள்...

சந்நிதியின் முன்னால் நின்று பெருமாளையும்..
தாயாரையும் சேவித்து விட்டு.. கற்பூர ஆரத்தியை தொட்டு
வணங்கி குங்குமத்தைப் பெற்றுக் கொண்டாள்...

மாலை நேரத்தின் குளுமையை ரசித்தபடி கோவிலை
வலம் வந்து கொண்டிருந்த போது.. ஒரு திருப்பத்தில்
யாரோ அவளை...

"ராதிகா..." என்று அழைத்தார்கள்...

'யார்..?' அவள் திரும்பிப் பார்த்தாள்... திகைத்தாள்...

"என்ன அப்படிப் பார்க்கறிங்க..?" என்று கேள்வியோடு சங்கர் அவளருகே வந்தான்...

ராதிகாவின் விழிகள் அவசரமாக.. சுற்றும் முற்றும் துழாவின... தெரிந்தவர்கள் யாராவது பார்த்துவிட்டால் என்ன செய்வது என்று கவலை கொண்டாள் அவள்...

"உங்களுக்கு என்ன வேணும்..?" அவள் நிற்காமல் நடந்தாள்...

"உங்க கூடப் பேசனும்..." அவன் கூடவே நடந்தான்...

"என்கூடப் பேச என்ன இருக்கு..?"

"நிறைய இருக்கு..."

"எனக்கு ஒன்னுமில்ல..."

"என்னால அப்படிச் சொல்ல முடியலையே..."

"அது உங்க பிரச்னை..."

"இருக்கட்டுமே.. அது உங்க சம்பந்தப்பட்ட பிரச்சனையாச்சே..."

"எனக்கு அதைப்பத்தி கவலையில்லை..."

"அதெப்படிங்க.. நீங்க அப்படிச் சொல்ல முடியும்.. என்பிரச்னை தீரனுமுன்னா உங்களிடம் பேசித்தானே ஆகனும்..?"

அவள் பார்வையை சுழல விட்டபடி வேகமாக நடந்தாள்.. அடுத்த திருப்பத்தில் அவன் வேகம் கூட்டி.. அவள் வழியை மறித்தான்... அவள் பதறிவிட்டாள்...

"என்ன இது..? யாராவது பார்த்து விடப் போறாங்க..."

"அப்ப நின்று பேசுங்க..."

"வம்பு பண்றிங்களா...?"

"நிச்சயமாய் இல்லை.. எனக்கு உங்களிடம் பேசியாகனும்..."

அவன் பிடிவாதமாக கைகளை ஆட்டி ஆட்டிப் பேசிய விதத்தில் ராதிகாவின் கண்கள் கலங்கிவிட்டன... அதைப் பார்த்த சங்கர் வேகம் தணித்தான்...

"இப்ப நான் என்ன பண்ணிட்டேன்னு கண் கலங்கறிங்க..? உங்க கையைப் பிடித்தா இழுத்தேன்..."

"ஸ்ஸ்... இது கோவில்..."

அவன் என்னவோ பேசத்தகாத வார்த்தைகளை பேசிவிட்டதைப் போல் அவள் ஆட்சேபிக்க.. அவன் அவளை விசித்திரமாகப் பார்த்தான்...

"இப்ப நான் என்னங்க சொல்லிட்டேன்..."

"பாருங்க.. உங்களுக்கு உங்க பேச்சு சாதாரணமானதாக இருக்கலாம்... எனக்கு அப்படியில்லை..."

"ஓகே.. ஓகே.. இனிமேல் அதுபோல் பேசவில்லை... போதுமா... ?"

"இப்பப் பேசுகிறதையே தப்புன்னு சொல்கிறேன்... இனிமேலயும் பேசப் போகிறிங்களா.. ? அதுக்கு வேற ஆளைப் பாருங்க..."

"யாரைப் பார்க்கிறதுன்னு நீங்களே சொல்லிட்டா தேவலை..."

"அதுக்கு எதுக்குங்க ஆளைத் தேடி நீங்க அலையனும்... இருக்கவே இருக்கிறா ஷோபா... உங்களுக்கு அவதான் சரி..."

இப்படிச் சொல்லிவிட்டு விரையப் போன ராதிகாவின் முன்னால் கைநீட்டி தடுத்தான் சங்கர்... அவன் முகம்.. கடுமையாக மாறியிருந்தது...

"அதை நீங்க சொல்லக்கூடாது... நான்தான் முடிவு பண்ணனும்..."

"நீங்க என்ன வேணும்னாலும் பண்ணிக்கங்க... என்னை மட்டும் வழியை மறைக்காதீங்க... வழியை விடுங்க... நான் வீட்டுக்குப் போகனும்.. அம்மா தேடுவாங்க..."

"ராதிகா...! என் மனசில என்ன இருக்குன்னு புரிஞ்சுக்கவே மாட்டிங்களா... ?"

"அது என்ன தேவைக்கு சார்.. ? நான் இன்ஜினியரிங் தான் படிக்கிறேன்.. சைக்காலஜி

படிக்கவில்லை... உங்க மனசில் புகுந்து ஆராய்ச்சி பண்ணும் உத்தேசமெல்லாம் எனக்கு இல்லை..."

"நீங்க வேணும்னே அடம் பிடிக்கறீங்க...."

"புரிந்தால் சரி..."

அவர்கள் மட்டுமே நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கி... கும்பலாய் சில பெண்கள் வரவும்.. சங்கர் விலகி நின்றான்.. சட்டென்று அந்தக் கும்பலில் ஐக்கியமாகி.. அவர்களுடன் பேசியபடியே கோவிலை விட்டு வெளியே நடந்தாள் ராதிகா... கோவில் வாசலில் பாலமுரளி நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் அவள் முகத்தில் வெளிச்சம் பரவியது... அவன் முகத்திலோ இருள் பரவியிருந்தது....

அவனுடன் பேச ஆவலுடன் ராதிகா வாய்திறந்த போது... அவன் இறுக்கமான முகத்துடன்... அவளைப் பாராததைப் போல... காரில் ஏறிச் சென்று விட்டான்...

கார்போன திசையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ராதிகாவின் கலங்கின கண்கள் மேலும் கலங்கின...

அன்று இரவு... அவள் தூங்க வெகு நேரமானது...

அடர்ந்திருந்த வேப்ப மரத்தின் கிளைகளில் அமர்ந்திருந்த பறவைகள் கூட சத்தமில்லாமல் கூவிக் கொண்டிருந்தன.. அந்த லைப்ரரி முழுவதும் ஆள்கள் நடமாடிக் கொண்டிருந்த போதும்.. அமைதி விரவிப் பரந்து

வியாவித்திருந்தது.. ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்திருந்த வேப்ப மரத்தின் இலைகள் குளிர்ச்சியைப் பரப்பிக் கொண்டிருந்தன... வேப்ப மரத்தின் குயில் பாடுவதைக் கேட்டபடி... அந்த லைப்பரிக்குள் நுழைந்தாள் ராதிகா...

அவளுக்குப் பழக்கமான நூலகர்... லேசாக புன்னகைத்தார்... பதிலுக்கு புன்னகைத்துவிட்டு... அவர் முன்னாலிருந்த பதிவேட்டில் கையொப்பம் இட்டாள்.. நூலக அலமாரிகளைச் சுற்றி வலம் வந்து அவளுக்கு தேவைப்பட்ட புத்தகத்தைத் தேடத் தொடங்கினாள்...

'இதோ இருக்கே...'

அலமாரியின் இந்தப் பக்கமிருந்து அவள் புத்தகத்தை உருவியபோது... அந்தப் பக்கம் ஒருகை அதை இழுத்துப் பிடித்திருந்தது... ராதிகா பலம் கொண்ட மட்டும் இழுத்துப் பார்த்தாள்.. ஊஹீம்... புத்தகத்தை அசைக்கக் கூட முடியவில்லை...

விட்டுக் கொடுக்கச் சொல்லி... வாய் விட்டே கேட்டு விடலாம் என்ற முடிவோடு... அவள் குனிந்து பார்த்த போது... அலமாரியின் அந்தப் பக்கமாக நின்று கொண்டிருந்த சங்கர் புன்னகைத்தான்...

'இவனா...'

ராதிகா புத்தகத்தை விட்டுவிட்டு... முகத்தைத் திருப்பிக் கொண்டாள்... அவன் புத்தகத்துடன் அலமாரியைச் சுற்றி.. அவளருகில் வந்து நின்றான்...

"இந்தாங்க... உங்க புத்தகம்..." அவளிடம் நீட்டினான்...

"வேண்டாம்..." முகம் இறுக அவள் மறுத்தாள்...

"ஏன் வேண்டாம்..? இதற்காகத்தானே இவ்வளவு நேரமும் என்கூட மல்லுக்கு நின்றீங்க...?"

அவன் குரலில் சிரிப்பிருந்தது... அவள் முகத்தில் கடுப்பிருந்தது...

24

யார் மனதில் யாரோ...
யார்தான் அதை அறிவாரோ..?

ராதிகா கோவிலில் செய்ததைப் போலவே.. இங்கும் பார்வையை தன்னைச் சுற்றிப்படற விட்டாள்... ஏறக்குறைய அனைவருமே படிப்பில் ஆழ்ந்திருப்பதைப் போல தென்பட்டாலும்... அதில் ஒரு சிலரின் பார்வை அவள் மேல் படர்ந்திருப்பதை அவளால் உணர முடிந்தது...

அது இயல்பான ரசிகர் கூட்டம்.. ராதிகா அந்த லைப்ரரிக்கு வரும் நாளில்... கண நேரம் அவள் பார்வையை சந்தித்து விட்டால் என்னவோ இமயத்தை

தொட்டு... வெற்றிக் கொடியை நாட்டி விட்டதைப் போல சட்டைக் காலரை தூக்கி விட்டுக் கொள்ளும் கூட்டம்

"ஏய்ய்... அவ என்னை பார்த்துட்டாடா..."

"என்னையும்தான் பார்த்தா..."

"உன்னைப் பார்த்த பார்வை வேற.. என்னைப் பார்த்த பார்வை வேற..."

"எனக்கு அது தெரியாதாடா மச்சான்... உன்னை பாசமலர் பார்வை பார்த்தா... என்னை காதல் கோட்டை பார்வை பார்த்தா..."

"இது நான் சொல்ல வேண்டிய டயலாக்குடா..."

"டேய்... டேய்.. நீ அவளுக்கு சீர் கொடுத்து அனுப்புற முறைடா..."

தங்களுக்குள் அவர்கள் இப்படி வழக்கடித்துக் கொள்வதை ஒருநாள் ராதிகா கேட்க நேரிட்டது... ஆனாலும்... அவள் அதை கண்டு கொள்ளவில்லை... இதற்காகவெல்லாம் பயந்து வீட்டுக்குள் சிறையிருக்க ஆரம்பித்தால்... பெண்கள்... வாசல்படியைத் தாண்டி வெளியே வரவே முடியாது என்ற எண்ணம் அவளுக்கு...

எதற்கு வம்பு என்று அதற்குப் பின்னால் அவள் தற்செயலாய்கூட யாரையும் பார்த்து வைப்பதில்லை...

யதார்த்தமாக பார்த்து வைத்தால்கூட அவர்கள் அந்தப் பார்வையை வைத்து... அது பாசமலர் பார்வையா...

இல்லை... காதல் கோட்டை பார்வையா என்று பட்டிமன்றம் நடத்த ஆரம்பித்ததால்... இவள் கல்லையும்... மண்ணையும் பார்ப்பதைப் போல.. அவர்களையும் பார்த்து விட்டு.. தேவையான புத்தகத்தை எடுத்துக் கொண்டு போய் விடுவாள்...

கீதாவிடம் இதைப்பற்றி அவள் பகிர்ந்து கொண்ட போது...

"ஏண்டி இப்படிப் பண்றே..? அம்மாவே பார்த்து நடந்துக்க... பார்த்து நடந்துக்கன்னு அடிக்கடி சொல்றபோது.. நீ அவங்களை பார்க்க மாட்டேன்னு அடம் பிடிச்சால் எப்படிடீ..?" என்று நியாயம் கேட்டாள்...

"ஏய்ய்.. நம்ம வீட்டு லேடி ஹிட்லர் சொல்ற டயலாக்குக்கு அர்த்தமே வேற.. வீட்டை விட்டு வெளியே போனா நாலும் நடக்கும்.. அதை எதிர்பார்த்து... அதை எப்படி அவாய்டு பண்றதுன்னு பார்த்து நடந்துக்கனும்கிறது தான் அதோட அர்த்தம்..."

"இது ஏதோ பழைய பாட்டைப் போல இருக்கே..."

"லேடி ஹிட்லர் இப்போச் சொல்கிறதைத்தான்.. அப்போதிருந்து பழைய பாட்டுக்களில் சொல்லிக்கிட்டு இருக்காங்க..."

"ஆக அத்தனை அட்வைஸ் பாட்டும்.. பொண்ணுக்குத்தான்.. ஆணுக்கு இல்லைங்கிற..."

கீதாவின் கேள்வியில் ராதிகாவுக்கு சிரிப்புத்தான் வந்தது..

"பதில் சொல்ல முடியாத கேள்விகளைக் கேட்கிறதில நீ கில்லாடி டீ..."

"பின்னே..? நீயே சொல்லேன்..." என்ற கீதா...

"புருசன் வீட்டில் வாழப் போற பெண்ணே...
தங்கச்சி கண்ணே...
சில புத்திமதிகள் சொல்கிறன் கேளு முன்னே.."

என்று பாடிக் காட்டினாள்...

"போதும்டி..."

"இதையே.. பெண்டாட்டிகூட வாழப் போகிற புருசனுக்கு புத்திமதியைச் சொல்லியிருக்காங்களா ராது..?"

"நாமல்லாம் தங்கம்டி... அது தெரிஞ்சுதான் சொல்லலை..."

"என்னவோ போடி.. நாளைக்கு நீ லைப்ரரிக்கு போகிற போது என்னையும் மறக்காம கூப்பிட்டுக் கிட்டுப் போ...."

"அது எதுக்குடி...?"

"நெல்லுக்கு இறைக்கிற தண்ணியில கொஞ்சம் புல்லுக்குப் பாயட்டுமே.. உன்னைப் பார்க்கிற பார்வையில கொஞ்சம் என்னையும் பார்க்கட்டுமே..."

"அடிதாண்டி வாங்கப் போகிற.. ப்ளஸ்டூ படிக்கிறவ பேசற பேச்சாடி இது..?"

"நான்தாண்டி பேசனும்... எதிர்த்த வீட்டுப் பாட்டியா வந்து இப்படிப் பேச முடியும்...?"

"இதை அப்படியே நம்ம வீட்டு லேடி ஹட்லர் காதில போட்டு வைக்கவா...?"

"நீ செய்தாலும் செய்வேடி.. லேடி ஹிட்லர்கிட்ட பேச்சு வாங்க என்னால் ஆகாது... நீயே லைப்ரரிக்குப் போ..."

"அஃது... அந்த பயம் இருக்கட்டும்..."

அப்படிப்பட்ட பார்வையாளர்களின் பார்வை தங்களை மொய்த்துக் கொண்டிருக்கும் என்ற நிச்சயமான ஜாக்கிரதை உணர்வுடன் ராதிகா... சங்கரை முறைத்தாள்...

"இது எங்க ஏரியா..."

"எனக்கும் தெரியுங்க..."

"என்ன தெரியும்...?"

"கரையைத் தாண்டாத அலைகள்ங்கிறதைப் போல.. நீங்களும் ஏரியா தாண்டா சமர்த்துப் பொண்ணுன்னு எனக்கு நல்லாவே தெரியும்..."

இப்படிச் சொன்னவனின் முகத்தை ஊடுறிவிப் பார்த்தாள் ராதிகா... அவன் சொன்னதன் பின்னணியிலிருந்த பொருள் அவளுக்குத் தெள்ளத் தெளிவாக புரிந்தது...

அவன் அவளைப் பற்றிய அனைத்து விபரங்களையும் சேகரித்திருக்கிறான்... அவள் போகுமிடமெல்லாம் பின் தொடர ஆரம்பித்திருக்கிறான் என்பதே அது..

"நீங்க பெரிய பிஸினெஸ் மேன்னு ஷோபா பீலா விட்டுக்கிட்டு இருந்தாளே.. அதெல்லாம் பொய்யா..?"

லைப்ரரியின் அமைதியை நினைவில் கொண்டு.. அடிக்குரலில் கிசுகிசுப்பாக வினவினாள்...

"ஷோபா பீலா விடுகிறவள்தான்.. பட்.. என்னைப் பற்றி அவள் சொன்னதில் பீலா எதுவுமில்லை... உண்மைதான்..."

"அப்புறமும் எதுக்காக சார் வெட்டியா பெண்கள் பின்னாலே சுற்றிக்கிட்டு இருக்கீங்க...?"

"ஒரு சின்னத் திருத்தம்... நான் பெண்கள் பின்னாலே சுற்றலை... ஒரே ஒரு பெண்ணின் பின்னால்தான் சுத்தறேன்.."

"அதுதான் ஏன்..?"

"ஏன்னா... ஐ லவ் ஹெர்..."

சங்கர் சொல்லியே விட்டான்... ராதிகா அதிர்ந்து விட்டாள்.. அவளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை... பட்டென்று புத்தகத்தை மறந்து லைப்ரரியை விட்டு வெளியேறினாள்...

புயலைப் போல வெளியே வந்தவள்.. வேப்ப மரத்துக்கு அடியில் நின்று கொண்டிருந்தவனின் மீது மோதிவிட்டு... அவசரமாக...

"ஸாரி..." என்றபடி தலையை நிமிர்ந்து பார்த்தாள்...

கண்கள் இடுங்க.. அவளையே கூர்மையாகப் பார்த்தபடி... பாலமுரளி நின்று கொண்டிருந்தான்...

'நீங்களா..?!' ஆனந்தத்துடன் சொல்லப் போன ராதிகாவின் தொண்டையில் வார்த்தைகள் சிக்கிக் கொண்டன...

வார்த்தைகளைத் தேடி அவள் திணறிக் கொண்டிருக்கையில் அவன் வேப்ப மரத்துக்கடியில் நின்றிருந்த காரில் ஏறி.. போயே... போய் விட்டான்... ராதிகா விக்கித்துப் போய் நின்று விட்டாள்...

"ராதிகா..."

அவளது முதுகிற்குப் பின்னால் சங்கரின் குரல் கேட்டது... ராதிகா ஓட்டமும்.. நடையுமாக வீட்டை நோக்கிப் பறந்தாள்...

"ஊய்..."

குழந்தைகளுக்கான சறுக்கு பாதையில் சறுக்கிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் கூவினான்...

ராதிகா அவனைப் பார்த்தபடி.. புல்வெளியின் மையத்திலிருந்த சாய்வான சிமிண்ட் பெஞ்சில் அமர்ந்து.. முழங்கால்களை கட்டிக் கொண்டு... முகத்தை அதில் பதித்தாள்...

அவள் மனதில்... பாலமுரளியின் கோபமுகம் மட்டுமே நிழலாடிக் கொண்டிருந்தது...

'என்மேல் அவனுக்கென்ன கோபம்.. ?'

இந்தக் கேள்வியே.. இரவும் பகலும்... அவள் மனதை பிறாண்டிக் கொண்டிருந்தது...

அவனுடன் தனிப்பட்ட முறையில் அவள் ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை... ஒரு பின்மாலையும்.. முன்னிரவும் கலந்த.. இதமான இரவின் ஆரம்பத்தில்.. அவனைச் சந்தித்தாள்... அவள் அவளின் வீடுவரை அவளுக்கு துணையாக வந்தான்... அதைத் தவிர அவர்களுக்கு மத்தியில் என்ன சொந்தம் இருக்கிறது..?

அவள் யாரோ... அவள் யாரோ...

ஆனாலும்.. அவனது கோபமுகம் அவளை இந்த அளவுக்கு பாடாய் படுத்துகிறதே...

அவளது இதயத்தை வேதனை பிழிந்தெடுத்தது.. சொல்லத் தெரியாத துயரத்துடன்... அவள் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்த குழந்தைகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்...

'பிள்ளைப் பிராயம் என்பது எத்தனை இனிமையான தருணம்..' அவள் பெருமூச்சு விட்டாள்...

திரும்பவும் குழந்தையாகி விட வேண்டும்.. அப்போது... இதுபோன்ற ஊமைத் துயரங்கள் மனதில் கனமாக ஏறி அமராது இல்லையா...?

அவளுக்கு தனிமை வேண்டியிருந்தது.. இதுபோன்ற புலம்பல்களை மனதில் புலம்பிக் கொள்ள தனிமை அவளுக்கு அவசியமாக தேவைப்பட்டது... அதை வீட்டினர் அவளுக்கு கொடுக்கவில்லை...

"என்னடி... காபியை கையில வைச்சுக்கிட்டு.. பித்து பிடிச்சவளைப் போல அதைக் குடிக்காம வெறிச்சுப் பார்த்துக்கிட்டு இருக்கியே... என்ன விசயம்..? எந்தப் பிசாசு உன்னைப் பிடிச்சுக்கிட்டு ஆட்டுது...?"

ராஜேஸ்வரி அதட்டிய போது... உலுக்கி விட்டதைப் போல தன்னுணர்விற்கு மீண்டவளுக்கு...

'காதல் பிசாசு...' என்று சொல்லத் தோன்றியது...

எந்த அடிப்படையில் அவள் அதைச் சொல்லுவாள்..? அவளுக்கும் பாலமுரளிக்கும் இடையே... சில பார்வைகள் உணர்த்திய உணர்வுகளைத் தவிர.. வேறு எதுவும் இல்லையே...

"ஒன்றுமில்லைம்மா..."

"ஒன்றுமில்லாததிற்கு நீ இப்படி உட்காருகிற ஆள் இல்லையே..."

சந்தேகத்துடன் பார்த்த ராஜேஸ்வரியிட மிருந்து தப்பித்து வாசல் பக்கம் போனால்...

"உனக்கு என்னக்கா ஆச்சு..?" என்று கேட்டான் சுந்தர்...

"ஏண்டா..?"

"இந்து பத்து நாளா... என் பேனா.. பத்திரமா என்கிட்டயே இருக்குதே... ஆர் யு ஆல்ரைட்..?"

"ஏண்டா... உன் பேனா தொலையாம இருந்தா.. எனக்கு ஏதோ ஆகிருச்சுன்னு அர்த்தமாகிடுமா...?"

"இல்லையா பின்னே...? நீ நார்மலாய் இருந்தா.. என் பேனாவை கை வைக்காம இருக்க மாட்டயே..."

"இன்னைக்கு கை வைச்சிட்டாப் போச்சு..."

சொன்னவள் அதைச் செய்ய மறந்து.. சிலையாக அமர்ந்து விட.. அவளை விசித்திரமாக பார்த்தபடி உதட்டைப் பிதுக்கினான் சுந்தர்...

"என்னடா... ராதிகா இப்படி உட்கார்ந்திருக்கா..?"

"அக்காவுக்கு உடம்பு சரியில்லை போலப்பா..."

"ராது... டாக்டர்கிட்டப் போகலாமா...?"

"அது எதுக்குப்பா...?"

"உனக்கு உடம்பு சரியில்லையேம்மா..."

"அப்படி நான் சொன்னேனா..?"

"நீ சொன்னால்தானா..? பார்த்தாலே தெரியுதே..."

'என்னத்தை தெரியுது...'

அலுப்புடன் அங்கிருந்து அகன்று.. இவர்கள் கண்ணில் பட்டால்தானே பிரச்னை.. என்று மொட்டை

மாடிக்குச் சென்றால்... அங்கே கையில் புத்தகத்துடன் படிக்கிறேன் பேர்வழியென்று... எதிர் வீட்டு மாடியைப் பார்த்துப் கொண்டிருந்த கீதாவின் கண்களில் பட்டு விட்டாள்...

"ஏண்டி... உன் வழியில் நான் வருகிறேனா..? என் வழியில் நீ ஏன் கிராஸ் பண்ற..?"

"எதைடி சொல்கிற..?"

அசுவராய்மாய் கேட்டுவிட்டு.. மொட்டை மாடியின் கைப்பிடி சுவரில் சாய்ந்து அமர்ந்து... வானத்தை வெறித்தவளை ஆச்சரியத்துடன் பார்த்தாள் கீதா...

'இவளுக்கு என்ன ஆச்சு..?'

வீட்டிலிருந்த மற்றவர்களின் கவலை.. அவள் மனதிலும் எதிரொலித்தது...

வழக்கமான ராதிகாவாக இருந்தால்... இந்நேரத்திற்கு.. எதிர்வீட்டு தடியனும்... எதிர் வீட்டு மொட்டை மாடியில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்திருப்பாளே...

'நினைச்சேண்டி.. இதுதான் நீ படிக்கிற லட்சணமா...? இரு.. நம்ம வீட்டு லேடி ஹிட்லர்கிட்ட போட்டுக் கொடுக்கிறேன்...' என்று மிரட்டியிருப்பாளே...

அதை விட்டுவிட்டு.. கல்லுக்குண்டைப் போல நிற்கும் எதிர் வீட்டு தடியனைப் பார்க்காமல்... வானத்தில்

தெரிகிற... வெண்பஞ்சு மேகப்பொதியைப் பார்க்கிறாள் என்றால்... நம்ப முடியவில்லையே...

"ராதிகா.. ஆர் யு ஆல்ரைட்..."

'இவளும் கேட்டு விட்டாளா...'

அந்தக் கேள்விகள் துரத்திய துரத்தலில் இருந்து தப்பிக்க.. தனிமையை தேடித்தான் ராதிகா... அந்தப் பூங்காவிற்கு வந்திருந்தாள்...

அந்தரங்கம் அறிந்திருந்தால்..
புன்னகையை சிந்தியிருப்பாய்...

அவள் தேடிய தனிமை கிடைத்தவுடன்.. அதில் தன்னைப் புதைத்துக் கொண்டு தனிமையில் அமர்ந்து விட்டாள் ராதிகா...

அவள் முன்னாலிருந்த நடைபாதையில் நடந்து கொண்டிருந்த முதியவர்கள் அவள் பார்வையில் பதியவில்லை... சற்றுத்தள்ளி அமர்ந்திருந்த இளஞ்ஜோடிகளின் சரஸ நடவடிக்கைகள் அவள் கவனத்தை ஈர்க்கவில்லை.. ஒடிப்பிடித்து

விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளால் கூட அவளின் தனிமைக்குள் நுழைய முடியவில்லை...

கலைக்க முடியாத.. அவள் கலைக்க விரும்பாத... தனிமைக்குள் அவள் நுழைந்திருந்த போது... அதைக் கலைத்தே தீருவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டதைப் போல... அவளருகே வந்து அமர்ந்தான் சங்கர்...

"ஹாய்..."

அவள் தனிமைத்தவம் கலைந்தவளாய் நெற்றிக் கண்ணைத் திறந்து அவனைப் பார்த்தாள்.. அவன் அயரவில்லை... மாறாத புன்சிரிப்புடன் அவளது கோபாக்னி ஸ்பரிசிக்காதவனாக அவளைப் பார்த்தான்...

"குட் ஈவினிங்..."

அவள் பதில் சொல்லவில்லை... உனக்கெல்லாம் ஒரு கணக்கா... என்பதைப் போல... அலட்சியமாக முகத்தை திருப்பிக்கொண்டு.. இயல்பாக அமர்ந்தாள்...

"குட்மார்னிங் சொன்னா... பதிலுக்கு குட்மார்னிங் சொல்லனும்..."

'உனக்கெல்லாம் அதைச் சொல்ல முடியாது...'

"நான் ஒன்றும் வில்லனில்லை ராதிகா..."

'நீ என் ஹீரோவுமில்லை...'

"நான் என்ன சொல்லிட்டேன்.. ?"

'காதலைச் சொல்லித் தொலைத்து விட்டாய்...'

"ஐ லவ் யுன்னு சொன்னேன்... அது ஒரு தப்பா..?"

'பின்னே.. இல்லையா..?'

"ராதிகா.. எனக்கு உங்களைப் பிடிக்கும்..."

'எனக்கு உன்னைப் பிடிக்க வேணாமா...?'

"என்மேல் உங்களுக்கு வெறுப்பில்லை... எனக்கு அது நிச்சயமாய் தெரியும்..."

'விருப்பமும் இல்லை... அது உனக்குத் தெரியுமா..?'

"எனக்கென்ன குறை ராதிகா..?"

'இதை நீ வந்து என்னிடம் கேட்கிறாயே... அதுதான் குறை...'

"உங்கப்போல பெண் வேண்டும்ன்னு ரொம்ப நாள தேடிக்கிட்டு இருந்தேன் தெரியுமா..."

'நான் உன்னை தேடவில்லை...'

ராதிகாவிற்கு அழ வேண்டும் போல இருந்தது- சங்கர் நல்லவன்... கண்ணியமானவன்... அவனே சொல்வதைப் போல... குறைகள் இல்லாதவன்- நிறைகளை மட்டுமே உடையவன்...

அவளுக்கு அவன் எட்டாக்கனி...! ஷோபாவைப் போன்ற ஒரு பரம்பரைப் பணக்காரியை புறக்கணித்து- அவளது காதலை வேண்டி நிற்பவன்... அதற்காக-

தனது உயரத்தை மறந்து.. ஏதோ கல்லூரி மாணவனைப் போல... அவள் போகுமிடமெல்லாம் நிழல் போலத் தொடர்ந்து... பின்னால் சுற்றிக் கொண்டிருப்பவன்...

அவள் மட்டும் சரியென்று ஒரு வார்த்தை சொல்லி விட்டால் போதும்... அவன் நிச்சயமாய் அவனது பெற்றோருடன் வந்து அவளது பெற்றோரிடம் அவளைப் பெண் கேட்பான்...

அவளால் ஏன் அதைச் சொல்ல முடியவில்லை..? எது அவளைத் தடுத்துக் கொண்டிருக்கிறது..?

அந்த 'எது...' எதுவென்று அவளது அந்தரங்க மனம் அறியும்... எந்தவித ஆதாரமும் இல்லாத போதும்... அவனது பார்வைகள் சிந்திய தருணங்களை அவள் பத்திரமாக... பொக்கிசம் போல... அதில் சேகரித்திருந்தாள்...

எந்தவித அடிப்படையும் இல்லாத போதும்... ஏதோ.. ஒன்று.. அவன் மீதான அவளது உணர்வுகளை உறுதி செய்ய... அவளது அந்தரங்க மனதில் அழுது கொண்டிருந்தாள்...

ராதிகா பெருமூச்சுடன் சங்கரை நிமிர்ந்து பார்த்தாள்...

"நீங்க ஜென்டில் மேன் சங்கர்..."

காதலிக்கும் பெண்ணின் வாயிலிருந்து... 'கண்ணியவான்' பட்டத்தை வாங்க எந்தக் காதலனும் விரும்புவதில்லை...

அவன் நெற்றியில் சிந்தனை கோடுகளை வரைந்தது...

"நான் உங்களைக் காதலிக்கிறவன் ராதிகா..."

"என்னை உங்களுக்கு எத்தனை நாள்களாய் தெரியும் சங்கர்..? இந்த பதினைந்து நாள்களுக்குள்.. காதல் தோன்றி வளர்ந்து மரமாகி விடுமா..?"

"உண்மையான காதலுக்கு ஒரு நொடி போதும் ராதிகா..."

அவள் மனதிலிருப்பதை அறிந்தவனைப் போல அவன் சொல்லிவைக்க... பாலமுரளியின் மீது எந்த நொடியில் அவள் மனதில் காதல் துளிர்த்தது என்று அறியாதவளாய் தவித்துக் கொண்டிருந்த அவள் அதிர்ந்து போனாள்...

அந்த ஒரு நொடிப் பொழுதில் உருமாறிப் போனவள் எப்படி அவனிடம் அதை உணர்த்தப் போகிறாள்..?

தன்னில் மூழ்கி... அவள் தவித்துக் கொண்டிருந்த போது... சங்கரின் குரல் ஆதரவாய் அவள் காதுகளில் ஒலித்தது...

"எதற்காக இந்த தவிப்பு ராதிகா..?"

அவள் கண்களில் நீர் மலக அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அவள் பார்வையில் எதையோ சொல்லத் துடிக்கும்.. துடிப்பு... அலை பாய்ந்தது...

'சொல்லி விடலாமா..? இவனிடம் சொல்லி விடலாமா..?'

என்னவென்று சொல்லுவாள்..? உன்னைப் பார்த்த அதே பொழுதில் அவனையும் நான் பார்த்தேன்.. உன்னால் ஈர்க்க முடியாத என் மனதை அவன் ஈர்த்து விட்டான்... என்று அவளால் சொல்ல முடியுமா..?

'எப்படிச் சொல்வேனடி..?'

அவள் காதுகளில் கண்ணதாசனின் பாடல் ஒலித்தது....

அவள் பெண்மையின் இயலாமையோடு மௌனமாக பார்வையை விலக்கிக் கொண்டாள்... தரையில் பார்வையை பதித்து அமர்ந்திருந்தவளின் பெருமூச்சைக் கண்டு... சங்கரின் புருவங்கள் முடிச்சிட்டன...

"என் காதலில் சந்தேகமா ராதிகா..."

"த்ச்சு..."

அவளது அதிருப்தியான ஒற்றைச் சொல்லில் அவன் முகம் மலர்ந்தது...

"அப்புறம் என்ன..?"

"வேண்டாம் சங்கர்... எனக்கு உங்கள் மேல் காதலில்லை..."

ராதிகாவின் வார்த்தைகளைக் கேட்ட அவன் முகம் சுருங்கினான்... ஆனாலும் சமாளித்துக் கொண்டவனாக தோள் குலுக்கினான்...

"வெறுப்பும் இல்லையே ராதிகா..."

"சங்கர்..."

"நான் வெயிட் பண்றேன்.. உங்க காதலுக்காக..."

"அதுதான் ஏன்...? உங்க டயத்தை நீங்க வேஸ்ட் பண்ணாதீங்க... எனக்குப் படிக்கனும்..."

"படிங்க..."

"வேலைக்குப் போகனும்..."

"என் கம்பெனியிலேயே ஆயிரம் வேலை உங்களுக்காக காத்திருக்குது.. என்ன வேலை வேணும்..? என் கம்பெனிகளில் ஒன்றுக்கு உங்களை 'எம்டி'யாக்காவா..?"

அவனது பிடிவாதத்தில்.. அவளுக்கு இயல்பான கோபம் துளிர்த்தது...

"என்ன சார்.. உங்க பணப்பெருமையை என்கிட்டக் காட்டறிங்களா..?"

"இல்லவே இல்லை..."

"எனக்கு விலை வைக்கறிங்களா..?"

"சீச்சி... என்ன பேச்சு இது ராதிகா..."

சங்கரின் கை முஷ்டிகள் இறுகுவதைப் பார்த்த ராதிகா உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

'அதிகமாய் பேசிட்டேனோ...'

அவன் பார்த்த கோபப் பார்வை 'ஆமாம்' என்றது..

"உங்களை என் மனசில் உயர்த்தியான இடத்தில் வைத்திருக்கேன் ராதிகா... உங்க வாயிலிருந்து இந்த வார்த்தைகள் வரலாமா..?"

"ஐ ஆம் ஸாரி..."

குற்ற உணர்வுடன் உதட்டைக் கடித்துக் கொண்டாள் ராதிகா...

"உங்க மனதில் பயம் இருக்குன்னு நினைக்கிறேன்.. என்னடா... இவன் நம்மளை விட பெரிய பணக்காரனாய் இருக்கிறானே.. நம்ம கிட்ட காதலைச் சொல்லி ஏமாற்றப் பார்க்கிறானோன்னு நீங்க நினைக்கறிங்க... அது இல்லைன்னு புரூவ் பண்றேன்..."

'இவன் வேற... நான் இருக்கிற மனநிலையை புரிஞ்சுக்காம ஏதோதோ பேசி வைப்பான்...'

"எதுக்குங்க உங்ககிட்ட காதலைச் சொல்லி.. உங்களை கலவரப் படுத்தனும்...?"

'அப்பாடா.. இப்பவாவது இதை நீ புரிஞ்சுக்கிட்டயே.. நீ எங்கிருந்தாலும்.. வாழ்க நண்பா...'

அவள் நிம்மதியாக... கற்பனையில்... மணவறையில் அமர்ந்து முகம் தெரியாத யாரோ ஒரு பெண்ணின் கழுத்தில் மூன்று முடிச்சுக்களைப் போட்டுக் கொண்டிருந்த சங்கரின் மீது.. மானசீகமாக மலர்களைத் தூவி மனதுக்குள் வாழ்த்திக் கொண்டிருந்த போது...

"உங்க பேரண்ட்ஸ்கிட்ட இதைச் சொல்லிடறேன்.." என்று அணு குண்டைத் தூக்கிப் போட்டான் அவன்...

'அடப்பாவி...' ராதிகா மனதுக்குள் அலறியே விட்டாள்...

"என் பேரண்ட்ஸ் கிட்ட என்னத்தை சொல்லப் போறிங்க...?"

அவள் இப்போதுதான் கலவரமாக ஆனாள்... அதை உணராதவனாக அவன் தீர்க்கமாக பேசிக் கொண்டே போனான்...

"உங்கமேல எனக்கிருக்கிற காதலைச் சொல்லப் போகிறேன்... உங்களைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன்னு சொல்லப் போகிறேன்..."

"கடவுளே..! ஏன்சார் இப்படிப் பேசறிங்க..."

"தேவைதாங்க எனக்கு... ஒருத்தியை காதலிச்சு... அவகிட்ட காதல் சொன்னா அதுக்கும் அலருகிறிங்க... சரி.. நேரடியாக அவளைப் பெத்தவங்ககிட்டேயே கல்யாணத்தை பேசிடறேன்னு சொன்னா... அதுவும் தப்புங்கறிங்க.. விளையாடறிங்களா..?"

"நான்.. உங்ககிட்ட விளையாடறேனா..? ஏன் சார் சொல்ல மாட்டிங்க... நீங்கதான் என் வாழ்க்கையில விளையாடிக்கிட்டு இருக்கீங்க..."

"நான் ப்ளேபாய் இல்லைங்க... அதை உங்களுக்கு புருவ் பண்ணாம நான் விடமாட்டேன்..."

அவன் போய்விட்டான்... இவன் என்னத்தை செய்து தொலைக்கப் போகிறானோ.. என்று தலைமேல் கைவைத்து இடிந்து போய் அமர்ந்து விட்டாள் ராதிகா...

அவள் எதிரில் யாரோ நிற்பதைப்போல உள்ளுணர்வு அறிவுறுத்த பார்வையை உயர்த்தியவளின் உடலில் மின்சாரம் பாய்ந்தது...

அவளை உறுத்துப் பார்த்தபடி.. பாலமுரளி நின்றிருந்தான்...

"நீங்களா..?" விழிகள் பளபளக்க ராதிகா எழுந்து நின்றாள்...

"ஏன் எழுந்திருக்கிறீங்க...? அவன் பக்கத்திலேதான் உட்காருவீங்களா..? என் பக்கத்தில் உட்கார மாட்டிங்களா..."

அவன் குத்தலாக வினவியபடி சிமிண்ட் பெஞ்சில் அமர்ந்தான்.. அவள் மனதில் அதிர்வை வாங்கினாள்..

'நீயா இப்படிப் பேசுகிறது...?'

நம்ப முடியாமல் பார்த்தபடி அவனருகே அமர்ந்தவளை சொந்தமற்ற பார்வை பார்த்தான் முரளி...

"ரொம்ப நேரமாக பேசிக்கிட்டு இருந்தீங்களே.. ன்ன..? காதலா..?"

ராதிகாவின் விழிகள் கூர்மையாகின.. அவள் உடலில் விறைப்பு வந்தது... அவளது நிமிர்வு அவளிடம் திரும்பி விட...

"அது உங்களுக்குத் தேவையில்லாத விசயம் சார்..." என்றாள்...

அவன் முகம் பயங்கரமாக மாறியது.. கண்கள் சிவக்க.. அவளை முறைத்தவன்.. நொடிப் பொழுதில் முகபாவனையை மாற்றிக் கொண்டு சத்தமாக சிரித்தான்..

"ஆமாமாம்.. அது எனக்குத் தேவையில்லாதது தான்.. அதிலெல்லாம் சென்னைப் பொண்ணுக கெட்டிக்காரங்களாச்சே... உங்களுக்கு வெளிநாட்டில் படிச்சு... கோட்டும்.. சூட்டுமாய்.. வெள்ளைக்காரனைப் போல இருக்கிறவனைத்தானே பிடிக்கும்.. என்னைப் போல பட்டிக்காட்டு இளிச்சவாயனை எப்படிப் பிடிக்கும்..?"

'இவன் என்ன சொல்கிறான்..?'

ராதிகாவிற்கு ஏதோ புரிவதைப்போல இருந்தது... அதுவரை சொந்தமில்லாமல் பேசிக்கொண்டிருந்த பாலமுரளி.. கோபத்தில்... அவன் மனதை சொல்லி விட்டதை புரிந்து கொண்டவளுக்கு இதயம் படபடத்தது.

'உன்னையா எனக்குப் பிடிக்காது..? உன்னைத் தவிர வேறு யாரையும் எனக்குப் பிடிக்காது... இதை நீயேன் உணராமல் போனாய்...?'

இமைக்காமல் அவனையே நோக்கியவளின் பார்வையில் என்ன கண்டானோ.. அவன் மரியாதையை காற்றில் பறக்க விட்டான்...

"என்னடி பார்க்கிற..? இப்படி பார்த்துப் பார்த்துத்தானே என்னை கிறுக்குப் பிடிக்க வைச்ச..? ஊருக்குப் போகாமல் உன் பின்னாலேயே சுற்றினேண்டி.. இந்த பதினைஞ்சு நாளும்.. பொழுதுவிடிஞ்சு பொழுது போகிற வரைக்கும்... நீயிருக்கிற இடத்துப் பக்கம்தானே வட்டம் அடிச்சேன்..? கடைசியில் அவன் பின்னாலே போயிட்டயேடி..."

அவன் பேசிய பேச்சில் ராதிகாவிற்கு மூச்சே அடைத்துவிட்டது...

26

ராத்திரி கனவின் நாயகன் நீ - என்ற
ரகசியம் தெரியாத வில்லனும் நீ...

கண்கள் விரிய... பிரமிப்புடன் பாலமுரளியின் முகத்தையே பார்த்தபடி அசைவற்று அமர்ந்து விட்டாள் ராதிகா...

இப்படியெல்லாம்கூட ஒரு ஆண்மகனால் பேச முடியும் என்று அது நாள்வரை அவளுக்குத் தெரியாது...

மரியாதையான பார்வைகளுக்கும்.. வார்த்தைகளுக்கும் பழக்கப்பட்டவள் அவள்.. அவளை 'வாடி... போடி...'

என்று எந்த ஆண்மகனும் அழைத்துக் கேட்டறியாதவன் அவள்...

அப்படிப்பட்டவளைப் பார்த்து... ஆயிரம் 'டி' போட்டான் பாலமுரளி...

'எந்த உரிமையில் இவன் இப்படிப் பேசுகிறான்...' அவள் நெஞ்சம் கொதித்தாள்...

அவளது அதிர்ந்து போன பார்வையை அவன் லட்சியமே பண்ணவில்லை...

"என் தரத்துக்கு செய்யக் கூடாத வேலைகளையெல்லாம் உனக்காக நான் செய்தேண்டி... ரோட்டோர ரோமியோவைப் போல... உன் தெரு முக்கில் காத்திருந்தேண்டி... காரை விட்டு விட்டு... உன் பின்னால் நடந்தேண்டி.. ஒரு தடவை கூட என்னை நீ திரும்பிப் பார்க்கலையே... அதுவே.. அவன் காரைப் போட்டுக்கிட்டு உன் காலேஜிக்குள்ளேயே வந்து நின்னதும்.. 'ஈ'ன்னு சிரிச்சுக்கிட்டு... அவன அப்படிப் பார்த்தியே... அப்பவே உன் புத்தி என்னன்னு எனக்கு புரிஞ்சு போச்சுடி..."

அவளை அவன் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தான் என்று அவளது புத்திக்கு உறைத்த போதே... அவளுக்காக அவன் தெரு முனையில் காத்துக்கிடந்திருக்கிறான் என்ற செய்தியும் சேர்ந்து உறைக்க.. அவனைப் பார்க்காமல் போய் விட்டோமே என்று பரிதவித்தாள் ராதிகா...

'உன்னைப் பார்த்து தொலைக்காத என்னை நீ என்ன திட்டினாலும் கேட்டுக்க வேண்டியது தான்...

தவனைப் பார்க்கிறதுக்கு முன்னாலே உன்னை நான் பார்த்திருந்தால்... இந்த வினை எனக்கு வந்திருக்காதே...'

"கோவில்ல வைச்சு.. தெய்வ சந்நிதானத்தில் என் காதலை உன்கிட்ட சொல்லிடனும்னு தேடி வந்தேண்டி.. பார்த்தேனே... அங்கேயும் அவனை உன்கூடப் பார்த்தேனே... அது கோவில்ங்கிறதையும் மறந்து என்னமாய் சரஸம் பண்ணினீங்கடி... அவன் வழியை மறைக்கிறான்.. நீ சிரிக்கிறே.. அவன் கையை தட்டறான்.. நீ செல்லமாய் முறைக்கிற... அப்படியே சினிமாப் படம் காட்டிட்டேங்களேடி.. அப்பவே எனக்கு மனசு வெறுத்துப் போச்சுடி..."

'இவன் கோவிலுக்குள் வந்திருந்தானா..?'

"லைப்ரரியில வைச்சாவது உன்னை என்னன்னு கேட்டுப்புடனும்னு வந்தேண்டி.. அங்கேயும் எனக்கு முந்தி அவன் வந்து நின்னுட்டானே... சும்மா சொல்லக்கூடாதுடி... சத்தமே வராம.. கிசுகிசுப்பா நீங்க ரெண்டு பேரும் கொஞ்சிக்கிட்டிங்களே... அதை லைப்ரரியே வேடிக்கை பார்த்துச்சேடி... தூத்தேறி... அக்கம்.. பக்கம் பார்க்காம அப்படி என்னடி ரகசியப் பேச்சு வேண்டிக்கிடக்கு..?"

'அடப்பாவி... நீயே அதை ரகசியப் பேச்சுன்னு சொல்கிறியே... அப்புறம் எப்படி.. அதை கொஞ்சல் பேச்சுன்னு நீயாய் ஒரு முடிவுக்கு வந்த...? அவனைத் திட்டினாலும்.. அது ரகசியப் பேச்சாத்தானேடா இருக்கும்..?'

"நான் ஒரு கிறுக்கண்டி.. காதல்கிறுக்கன்.. உன்மேல பைத்தியம் பிடிச்சுப் போனதால என்நிலைமையை மறந்து.. உன் பின்னாலே சுத்திக்கிட்டிருக்க கேனயன்... இவ்வளவுக்குப் பின்னாலேயும்.. கடைசியா என் மனசை உன்கிட்ட சொல்லப்புடலாமுன்னு நினைச்சேன் பாரு... என்னைப் போல பைத்தியக்காரன் எவன் இருப்பாண்டி..?"

'ஏன் சாமி... நானில்லையா...? இரண்டு வாரமா.. என்வீட்டு ஆளுக.. எனக்கு வேப்பிலை அடிக்காத குறையாய் விசாரிச்சுக்கிட்டு இருக்காங்க.. அது தெரியுமா உனக்கு..? என்னவோ உனக்கு மட்டும்தான் பித்துப் பிடித்ததைப் போல பேசுகிறாயே... எனக்கும்தான் பித்துப் பிடிச்சிருக்கு.. உன்னால் மட்டுமா... அதை என்னிடம் சொல்ல முடியல..? என்னாலேயும்தான் உன்னிடம் சொல்ல முடியல.. விதிடா மச்சான்...'

ராதிகா விதியை நொந்து கொள்ள... அதை அறியாமல் பாலமுரளியும் விதியின் மேல்தான் பழியைப் போட்டான்...

"என்னவோ திருவாரூர் தேரைப்போல... ஆடி அசைஞ்சுக்கிட்டு பார்க்குக்கு வந்த... உன் பின்னாலேயே தொடுத்துக்கிட்டு நானும் வந்தேன்.. விதியைப் பாரு.. இங்கேயும் அவன் உன் பக்கத்திலே உட்கார்ந்து காதல் வசனம் பேச... நான் அதை தள்ளி நின்னு வேடிக்கை பார்க்கனும்னு என் தலையில எழுதி வைச்சிருக்கு."

'உனக்கு மட்டுமா எழுதிவைச்சிருக்கு..? எனக்கும் சேர்த்துத்தான் எழுதி வைச்சிருக்கு...'

"இப்ப எனக்கு ஒன்னே ஒன்னுதான் தெரியனும்டி.."

'என்ன..?' என்பதைப் போல ராதிகா அவனைப் பார்க்க... அவன் முகத்தில்... கேட்டது கிடைக்காத கோபம் படர்ந்தது...

"நீதான் ஒரு முடிவோட இருந்திருக்கிறயே... அப்புறமும் ஏண்டி என்னை அந்தப் பார்வை பார்த்த...?"

'கடவுளே...' கண்மூடித்திறந்த ராதிகா...

"போதும்.. இதுக்கு மேலே பேசாதீங்க..." என்றாள்...

"ஓ.. அவன் பேசினா இனிக்கும்.. நான் பேசினா சக்குமாக்கும்.." அவன் குரூரமாக சிரித்தான்...

அவளும்தான் எத்தனை வார்த்தைகளை பொறுத்துக் கொள்வாள்...?

ஆயிரம்தான் அவன்மேல் அவளுக்கு எண்ணமிருந்தாலும்... இருவரும் ஒரே... ஒருதடவைதான் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்... வெறும் பார்வை பரிமாற்றங்களை வைத்து ஒருவன் இந்த அளவுக்கு உரிமையெடுத்துக் கொண்டு அவளை இழிவு படுத்திப் பேசலாமா...?

அந்த கோபத்தில் அவள்...

"ஆமாம்.. அப்படித்தான்..." என்று சொல்லிவிட்டாள்...

அவனது சிரிப்பு நின்றுவிட்டது... கண்கள் இடுங்க அவளையே இமைக்காமல் அவன் பார்த்த பார்வையில் அவளது உயிர் ஆடியது...

"அப்படியேதானா...? நினைச்சேன்... உனக்கு என்னைவிட அவனைத்தான் பிடிக்கும்ன்னு எனக்குத் தெரியும்... வெள்ளைத் தோலாய் இருக்கிறானில்ல... அந்த மயக்கம் உனக்கு... இது திராவிட நிறம்டி... மாநிறம்ன்னா உனக்கு அத்தனை இளக்காரமா...?"

ராதிகா உதட்டைக் கடித்துக் கொண்டு வேறுதிசையில் பார்த்தாள்... கம்பீரமே வடிவாக அமைந்திருந்தவனின் உருவம் அவளை மயக்கியது... ஒரு ரோமானிய சிற்பத்தைப் போல... செதுக்கி வைத்ததைப் போன்ற வடிவமைப்புடன் இருந்தவனின் மார்பில் சாய்ந்து கொள்ள அவள் மனம் ஏங்கியது...

அதை உணராதவனாக... அவன் அவளால் புறக்கணிக்கப்பட்டு விட்டதான நினைவில் ஆத்திரத்துடன் பேசிக் கொண்டிருந்தான்...

"நானும் பணக்காரன்தாண்டி... பரம்பரையாய் பெரிய வீட்டுக்காரன்... ஆனா... உனக்கு நான் வேண்டாம்... பட்டிக்காட்டில் இருக்கிறேனில்ல... அது உனக்கு குறைவாய் போயிருச்சு... அவன் சென்னையில இருக்கான்.. பத்தாக்குறைக்கு.. வெளிநாட்டுப் பக்கம் பறந்துக்கிட்டே இருப்பான்... உனக்கு அந்தப் பகட்டு தேவைப் பட்டுருச்சுடி..."

அமைதியான மனம் வருடும் பாடல்களை... இதமான பௌர்ணமி நிலவின் ஒளியில்... மொட்டை மாடியில் அமர்ந்து... தனிமையில் கேட்டு ரசிக்கும் ராதிகா... தனது கொடுமையான வார்த்தைகளை ஜீரணித்துக் கொள்ள சிரமப்பட்டாள்...

"ஏமாந்துட்டேண்டி... என்னடா.. இந்தப் பொண்ணு நிலாவைப்பத்தி பாட்டுப்பாடறாளேன்னு நினைச்சுட்டேன்.. அந்த நிலாவையே பிடிக்க ஆசைப்படற பேராசைக்காரின்னு எனக்கு தெரியாம போயிருச்சு..."

விட்டால்... அவன் அன்று முழுவதும் நிறுத்தாமல் வசைபாடிக் கொண்டிருப்பான் என்று ராதிகாவுக்கு புரிந்து விட்டது...

மாலை மயங்கி இருள் சூழ ஆரம்பித்து விட்டது... பூங்காவில் மனிதர் நடமாட்டம் குறையத் தொடங்கியது.. ராஜேஸ்வரி தேட ஆரம்பித்து விடுவாள் என்ற நினைவில் ராதிகா எழுந்து கொள்ளப் போனாள்...

"எங்கே... எழுந்திருக்கப் பார்க்கிற..?"

அவன் சட்டென்று அவள் கையைப் பிடித்து விட்டான்... ராதிகா வெலவெலத்து விட்டாள்... இருள் சூழ்வை அவர்களைச் சுற்றி மூடியிருக்க... சந்தடியில்லாத பூங்காவில்... அவர்களை யாரும் பார்க்கவில்லை...

"கையை விடுங்க..."

முதன் முதலாக... ஒரு ஆணின் ஸ்பரிசம் பட்டதில் மின்சாரம் பாய்ந்தவளாக... அவள் நடுக்கத்துடன் கையை

உருவிக் கொள்ளமுயன்றாள்... அவன் பிடி இறுகியது... அவளால் கையை உறுவிக்கொள்ள முடியவில்லை...

"விட முடியாது... என்ன பண்ணுவ...?" அவன் குரலில் சவால் இருந்தது...

என்ன பண்ணுவாள்...? அவளால் என்ன பண்ண முடியும்...?

அவள் பெண்... பிடிக்காதவனின் சிறு தொடுகையைக் கூட சகித்துக் கொள்ள முடியாமல்... போராடி தற்காத்துக் கொள்ள அவளால் முடியும்... அவனோ... அவளுக்குப் பிடித்தவன்... அவளை பெண்ணென்று முதன் முதலாக உணர வைத்தான்.. அவனை அவளுக்கு பிடித்து தொலைக்கிறது... அவன் தொட்டால் அவளது உடல் அனலில் பட்ட மெழுகாய் உருகிக் கரைந்து அவனுடன் சேரத் தவிக்கிறது... அவனுடன் அவளால் சேரத்தான் முடியும்... எப்படி போராட முடியும்...?

இருந்தும் அவள் போராடினாள்... பிடித்தவனின் பிடியிலிருந்து விலக மனமும்... உடலும் விரும்பாத போது போராடி என்ன பயன்...?

பாலமுரளி மிக எளிதாக அவளை தன் கரங்களுக்குள் சிறை பிடித்தான்...

அவளது கையைப் பிடித்திருந்த கரங்கள் அவளை கண்டியிழுக்க.. அவள் அவன் மார்பில் மோதி... தடுமாறி கீழே விழப் போனாள்... அவளை விழுந்து விடாமல் கற்றி

னைத்து அவனுடன் அவன் கரங்கள் இறுக்கிக் கொண்டன... அவள் மேனி முழுவதும் அவன் மேல் ஊர்ந்திருக்க.. ராதிகாவின் மனதில் சூறாவளிக் காற்று சுழன்றடிக்க ஆரம்பித்தது... கண்ணுக்குத் தெரியாத சுழலில் சிக்கி... மூச்சுத் திணற ஆரம்பித்த அந்த நொடியில் போராட்டத்தை அவள் மறந்து போனாள்... போட அவள் மறந்து போனாள்...

ராதிகாவின் முதுகின் மீது படர்ந்திருந்த பால முரளியின் கைகள் பரவி முன்னேற ஆரம்பித்த போது... அவள் கிளர்ச்சியுற்று மயங்கி நின்றாள்... பாலமுரளி அவள் முகம் நோக்கிக் குனிந்தான்... ஆவேசத்தோடு அவள் இதழ்களில் அழுத்தமான முத்தத்தை பதித்தே விட்டான்...

ராதிகா தொய்ந்து அவன்மீது சரிந்தாள்... அவனது ஆவேச அணைப்பில் சிக்குண்டாள்... பதினைந்து நிமங்களாக அடக்கிவைத்திருந்த கோபத்தையும்... வெறுப்பையும்... தாகத்தையும்... பால்முரளி அவள்மேல் பிரயோகித்துக் கொண்டிருந்தான்...

அவள் முகம் முழுவதும் படர்ந்த முத்தங்களின் ஈரம் பரவிக் கொண்டிருப்பதை அவளுக்கு அறிவுறுத்தியும்.. அதைத் தடுக்க வழியின்றி செயலற்றுப் போனாள் ராதிகா...

அவனது இறுக்கமான அணைப்பு மேலும் இறுகிக் கொண்டிருக்க எழும்புகள் நொறுங்குமளவிற்கு இன்ப

அவஸ்தைக்கு ஆளானால் ராதிகா... ஆணின் ஆக்ரமிப்பு உணர்த்திய இனம் புரியா உணர்வுகளின் ஆக்ரமிப்பில் அவள் மூச்சுத் திணறிக் கொண்டிருந்த போது... பேச்சுக் குரல்கள் அவர்களுக்கு வெகு அருகாமையில் கேட்டன..

"அப்ப அந்த வீட்டை நீங்க சொன்ன விலைக்கே பேசி முடிச்சுடலாங்கறிங்க..."

"முடியுமா... ?"

"கொஞ்சம் முன்னே பின்னே வரும்..."

"பரவாயில்லை..."

"அப்பச் சரி... நான் நாளைக்கே பேசி முடிச்சிடறேன். நம்ம கமிசன் தொகையை மறந்துராதீங்க..."

"அதை மறப்பேனாய்யா.. மறந்தால் நீயும் விட்டு விடுவியா.."

யாரோ இருவர் பேசியபடி அவர்களை சமீபிக்க சட்டென்று பாலமுரளி அவளை விட்டு விட்டான். ஒரு நொடி தடுமாறி நின்றாலும்.. மறுநொடியில் தண்ணுணர்விற்கு மீண்டு விட்ட ராதிகா.. அங்கே நிற்காமல் சிட்டாகப் பறந்து விட்டாள்...

பேசியவர்கள் பாலமுரளியைக் கடந்து போனார்கள் அவளைத் தொட்ட நினைவுகள் தந்த சுகத்தில் பாலமுரளி அங்கிருந்து வெளியேற மனமில்லாதவனாக... அங்கேயே அமர்ந்து விட்டான்...

சற்றுமுன் உணர்ந்த... அவளின் உடலின் மென்மை அவன் உடலை சூடேற்றியது.. அவன் தொட்டவுடன் அவள் உடலில் ஏற்பட்ட நடுக்கத்தை உணர்ந்த அந்த நொடிகளை விட்டு பிரிய மனமில்லாமல் அதிலேயே நிலை கொள்ள விரும்பினான் பாலமுரளி...

அவனின் கோபத்தைக் காட்ட நினைத்தவன்... தாபத்தை காட்டி விட்ட நினைவில் அவன் உதடுகளில் புன்னகை அரும்பியது...

துடித்த அவளது இதழ்களைத் தொட்ட தனது இதழ்களை விரல்களால் வருடிக் கொண்டவனுக்குள் அவளை விட்டுவிடக் கூடாதென்ற வெறி கிளர்ந்து எழுந்தது...

'என்ன நடந்தாலும் சரி.. அவ என்னுடையவளா ஆகனும்...'

அவன் மனம் சூளுரைத்தது...

உன்கைவிரல்கள் பட்டபோது..
காற்றோடு நான் கலந்தேன்...

அன்றைய இரவில் ராதிகா உறக்கத்தை தொலைத்தாள்...

நடந்து முடிந்த நிகழ்வை நினைத்தபோது... அவளுக்குள் பேரதிர்வு எழுந்தது... இன்னமும்கூட அவன் தொட்டுவிட்டதை அவளால் நம்பவே முடியவில்லை...

கலைந்த தலையுடன்... முகமெல்லாம் சிவக்க... ஓட்டமும்.. நடையுமாக அவள் வீட்டு வாசலை மிதித்த போது... வாசலில் நடை பயின்று கொண்டிருந்த கீதா புருவங்களை உயர்த்தினாள்...

"என்னடி இப்படி ஓடி வருகிற...?"

கீதா சூட்சுமப் புத்தி கொண்டவள் என்ற நினைவில் ராதிகா மனதிற்குள் சுதாரித்துக் கொண்டாள்... வேக மூச்சுக்களையெடுத்து தன்னை சமனப்படுத்திக் கொள்ள அவளுக்கு ஒரிரு நிமிடங்கள் மட்டுமே தேவைப்பட்டன..

"எப்படி ஓடி வருகிறேன்...?"

"என்னவோ.. பேய் துரத்துகிறதைப் போல ஓடி வருகிற..."

பேய்தான் துரத்துகிறது என்ற நினைவில் ராதிகாவின் முகத்தில் மென்மை பரவியது...

அந்தப்பேய் அவளுக்கு பிடித்தபேய் என்று சொன்னால் கீதா என்ன சொல்வாள் என்ற நினைவில் புன்னகைத்தாள் ராதிகா...

'அலறி விடுவா...'

"ஏண்டி இப்படிச் சிரிச்சு வைக்கிற..?" கீதா அவளை வினோதமாக பார்த்தாள்...

"எப்படிச் சிரிச்சு வைக்கிறேன்...?"

"ஒரு மார்க்கமாய் சிரிச்சு வைக்கிறடி ராதிகா..."

"இந்த மார்க்கமெல்லாம் உனக்குத்தான் வரும்.. எனக்கு வராது..."

"இந்தக் கதையெல்லாம் என்கிட்ட விடாதே.. கொஞ்சநாளாகவே நீ ஒருமார்க்கமாகத்தான் இருக்கிற... நான் கவனிக்கலைன்னு நினைக்காதே..."

"திரும்பவும் இவ ஒருமார்க்கத்தை ஆரம்பிச்சிட்டயா...? கீதா.. பேசாம நீ இதைப்பத்தி பி.எச்.டி பண்ணிரேன்.."

"பார்க்கலாம்..."

"அதுக்கு முதல்ல ப்ளஸ் டூவை முடிக்கிற வழியைப் பாரு.. எதிர்த்தவீட்டு தடியனைப் பார்க்காதே..."

"அவனெல்லாம் ஒரு ஆளாடி...?"

"அப்புறம் எதுக்கு அவனைப் பார்க்கிற...?"

"அவனை ஒன்னும் நான் பார்க்கல... அவன் என்னைப் பார்ப்பான்.. அதை நான் அவனுக்குத் தெரியாமல் பார்த்து வைச்சுக்குவேன்..."

"அது எதுக்குடி..."

"என் ரேன்ஜ் என்னன்னு எனக்குத் தெரிய வேணாமா...?"

"இதில் என்ன ரேன்ஜ் வேண்டிக்கிடக்கு..."

"போ... ராது... இந்த வயசில.. நாலுபேர் நம்மள சைட் அடிச்சாத்தான் நமக்கு மதிப்பு..."

இப்படிப்பட்ட வியாக்கினத்தை இவள் ராஜேஸ்வரியின் முன்னால் சொல்லி வைத்தால் என்ன ஆகும் என்ற நினைவில் மீண்டும் சிரித்தாள் ராதிகா...

"பல்லைக் கழட்டி கையில கொடுத்துருவேன்.. ஏண்டி... படிக்கிற படிப்பில உன் ரேங்க் என்னன்னு பாருடின்னா.. நீ பக்கத்து வீட்டுக்காரன் பார்வையிலே உன் ரேன்ஜ் என்னன்னு பார்க்கறியா..? ஊஹூம்.. உனக்கு இந்த வீடு சரிப்படாது.. என்னங்க... மதுரைக்குப் பக்கத்திலே ஒரு ஆசிரம ஸ்கூல் இருக்கில்ல... அங்கே இவளை சேர்த்து... ஹாஸ்டலில் போட்டு விடுங்க... அப்பத்தான் இவ வழிக்கு வருவா..."

ராதிகாவின் மனதில் ராஜேஸ்வரியின் பிம்பம் சுத்திக் கொண்டிருப்பதை அறியாதவளாக...

"வாவா... ஏண்டி... இப்படி உனக்குள் நீயாய் பேசி சிரிச்சுக்கிட்டு இருக்க..." என்று வினவினாள் கீதா...

"இல்லை... நீ சொன்னதை அப்படியே நம்ம வீட்டு லேடி ஹிட்லர் கிட்டச் சொன்னால் எப்படியிருக்கும்ன்னு நினைச்சுப் பார்த்தேன்.. சிரிப்பு வந்தது..."

"அடிப்பாவி... கூடப் பிறந்தவளுக்கு எதிராகவே சதி செய்யத் துணிஞ்சுகிட்டயா...? உனக்கு நான் என்னடி கெடுதல் பண்ணினேன்..?"

"இப்படியெல்லாம் நியாயம் கேட்டால்... நிஜமாகவே லேடி ஹிட்லர்கிட்ட உன்னைப் பத்தி போட்டுக் கொடுத்து... பற்ற வைச்சிடுவேன்.. எப்படி வசதி...?"

"இப்ப நான் என்னதாண்டி செய்யனும்..?"

"அடங்குடி..."

ராதிகா வாயில் ஒற்றை விரலை வைத்து எச்சரித்தபடி... வாசல்படியில் ஏறப் போனாள்...

"ராதிகா..." என்று அழைத்தாள் கீதா...

எரிச்சலுடன் திரும்பினாள்... ராதிகா...

"உன்னைத் துரத்தற பேய் யாருடி...?" கீதா கண்சிமிட்டவும் ராதிகாவுக்கு தூக்கிவாரிப் போட்டது...

"ஏண்டி.. நீ அடங்கவே மாட்டியா...? இப்ப உனக்கு என்ன தெரியனும்...?"

"உன்னைத் துரத்தற பேய் யாருன்னு தெரியனும்..."

"ம்ம்... மோகினிப் பேய்..! போதுமா..."

"ஊஹீம்... போதவே போதாது... மோகினிப் பேய் ஆண்களைத்தான் துரத்தும்.. நீ பெண்ணாச்சே..."

"இது... காட்டான் பேய்..."

பாலமுரளி சொன்ன பட்டிக்காட்டானின் நினைவில் சொல்லி விட்டு வீட்டுக்குள் போய்விட்டாள் ராதிகா...

இரவு கண்மூடிப் படுத்தபோது... அந்த பட்டிக்காட்டானின் முரட்டுக் கரங்கள் அவள்மேல் பரவிப் படர்ந்தன.. அவள் கிளர்ந்து விழித்தாள்... அவனது ஆண்மை ததும்பிய மார்பில் ஒன்றிய அனுபவத்தில் அவள் உடல் சிலிர்த்தது...

'அம்மம்மா... கேளடி தோழி...
நிலாவினில் நின்றொரு நாழி..
சொல்லாலே உரைத்தது பாதி...
சொல்லாமல் அறிந்தது மீதி...
அம்மம்மா....'

ராஜேஸ்வரிக்கு பிடித்தமான பாடல்... அவளுடன் சேர்ந்து ராதிகாவும் அடிக்கடி ரசிக்கும் பாடல்...

அதுநாள்வரை புரியாத பாடலின் வரிகளை அன்று புரிந்து உணர்ந்தாள் ராதிகா... அதுநாள்வரை அவள் வாயடித்த எதுவுமே இல்லாமல் புரிதான புதிரொன்றை அறிந்து கொள்ளும் முயற்சியின் முதல் படியில் கால்

வைத்த அனுபவத்தில் அவள் இன்ப அதிர்வை அடைந்திருந்தாள்...

'பிஞ்சாக நானிருந்தேனே..
பெண்ணாக மாற்றி விட்டானே..
அஞ்சாமல் அணைத்து விட்டானே...'

பாலமுரளியின் அஞ்சாமையில் அவளது நெஞ்சம் நிலைகொண்டு விம்மித் தணிந்தது... அவன் மீதான காதல் அலைகடலைப் போல பொங்கி எழுந்தது.. அவன் அவளை குற்றம் சாட்டியதெல்லாம் மறைந்து.. மறந்து போய்.. அவன் செய்த குற்றம் மட்டுமே நினைவில் நின்றது...

'எவ்வளவு தைரியம்...'

இதை நினைக்கும் போது அவள் நெஞ்சம் ஏன் கற்கண்டாக இனிக்கிறது என்ற விந்தை மட்டும் அவளுக்குப் புரியவே இல்லை..

மறுநாள் தெரு முனையைத் தாண்டும் போது... ன்றும் இல்லாத வகையில் அவளது விழிகள் அவனைத் தேடித் துழாவி... ஏமாந்தன...

அவளது தேடுதல் யாருக்காக என்று அறியாதவர்களாக... அங்கே நின்றிருந்த மற்றவர்கள் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டிருக்க... அதற்கு மேலும் தேட முடியாமல் ராதிகா ஸ்கூட்டியின் வேகம் கூட்டிப் பறந்தாள்...

காலேஜில் ஹேமா... ஷோபாவைப் பற்றி எதையோ சொல்லிச் சிரிக்க.. ராதிகா அதைக் கவனிக்காமல் புல்வெளியின் புல்களைக் கிள்ளிக் கொண்டிருந்தாள்...

"என்னடி ஆச்சு..." என்று புருவம் உயர்த்தியவளிடம்...

"தலைவலி..." என்று பொய் சொன்னாள்...

"அது ஷோபாவுக்குத்தானே வரும்..? அவளுக்கு தலைவலியை வர வைக்கிற உனக்கே இன்னைக்கு தலைவலி வந்திருச்சா.. இதைப்பாருங்கடி..."

ஹேமா மற்றவர்களை அழைக்க.. அவர்கள் ஆரவாரித்துச் சிரித்தார்கள்... அடுத்து அவர்களின் பேச்சில் டிவி ஷோக்களும்... சினிமாக்களும் அடிபட ஆரம்பிக்க... ராதிகா.. மெல்ல.. மெல்ல அந்தப் பேச்சில் கலந்து கொள்ள ஆரம்பித்தாள்...

"எப்பொழுதும் உன் அலப்பறையில்ன்னு ஒரு பிளாக்கில பார்த்தேன்... சிரித்து சிரித்து வயிறு புண்ணாகிப் போச்சு..."

"இது ஏதோ சினிமாப் படத்தோட டைட்டில் மாதிரி இருக்கே..."

"ஆமாமாம்.. முப்பொழுதும் உன் கற்பனையில்ன்னு... ஒரு சினிமா வந்ததே..."

"தோடா.. அதை வைச்சு... இந்த அலம்பலா..? ஆமாம்... அலப்பறை பண்ணியது யாராம்...?"

"நம்ம நானும்... நீயும்.. கோகுல் நாத்தாம்..."

"அவரை ஏண்டி வம்புக்கு இழுக்கிறாங்க...? அவர் மாட்டுக்கு அவருண்டு.. அவர் கோட்டுண்டுன்னு.. எப்பவும் தனிவழியில் ராஜநடை போட்டு.. போய்கிட்டு இருக்கார்.. இவங்களை அவர் என்ன பண்ணினாராம்...?"

"அவரைப் பற்றிய சின்னச்சின்ன விமரிசனங்கள் லீலா... அதைச் சிரிக்க சிரிக்க கொடுத்திருக்காங்க..."

"மத்தவங்களைப் பற்றி கேலி பண்ணினா... அது சரிப்புத்தான்..."

"விடேண்டி... அவரே மீடியாவில் இருக்கார்.. அவரும் இதைப் போல மற்றவங்களை கிண்டல் கேலியில் விமரிசனம் செய்கிறவர்தானே..."

"அப்புறம் வேற என்ன படிச்சே..."

"நம்ம தலயோட புதுப்படத்தில் மொத்தம் 89 கோலைகள் வருதாம் அதில் 78ஐ நம்ம தலயே பண்ணியிருக்காராம்..."

"ரமணா விஜயகாந்தைவிட.. புள்ளி விவரம் தர்றதில் எக்ஸ்பர்ட்டா இருக்கிறாங்களே..."

"கூகுளில் இருக்கிறவங்க எல்லாம் பண்ணுவாங்க.."

"அதைச் சொல்லு... எதைத் தேடினாலும்... அடுத்த நொடியில் பத்து ஆப்சன்களை கொடுத்து.. இதுவா.. இதுவான்னு கேட்கிறதில கூகுளுக்கு நிகர் கூகுள்தான்..."

ராதிகா பாலமுரளியை மறந்து போனாள்... இரவுகளில் அவனது நினைவு வருகிற போதெல்லாம் பாடங்களை எடுத்து வைத்து படிக்க ஆரம்பித்து விடுவாள்... அதில் வெற்றியும் கண்டாள்...

பார்க்கிற்கு... கோவிலுக்கு... லைப்ரரிக்கு என்று போகும் போதெல்லாம் அவளது கண்கள் அவனைத் தேடும்.. அவன் தென்படவே இல்லை...

'இவ்வளவுதானா நீ...' அவள் ஏமாற்றமடைந்தாள்..

விட்டுச்செல்கிறவன்... ஏன் அவளைத் தொட்டுச் சென்றான் என்ற கோபம் அவளுக்குள் எழுந்தது...

இனம் புரியாத உணர்வுகளை அவளுக்குள் விதைத்து விட்டுச் சென்றவனின் எண்ணம் எதுவாக இருக்கும் என்று அவளால் அனுமாணிக்கவே முடியவில்லை...

அவனை நேரில் பார்த்து உண்மையை உணர்த்தி விட அவள் மனம் துடித்தது... ஆனால்.. அவனைத்தான் அவளால் பார்க்கவே முடியவில்லையே...

எங்கேயோ... குற்றாலத்துக்கு பக்கத்தில்... தேனூத்தூ கிராமத்தில் இருப்பவனை எப்படி அவள் தேடிக் கண்டு பிடிப்பது..?

ஷோபாவிடம் கேட்க அவளால் முடியுமா...?

அவன் ஷோபாவுக்கு உறவினன்... ஆனால் ஷோபாவிடம் பாலமுரளியைப் பற்றிக் கேட்க ராதிகாவால்

முடியாது எனும் போது.. அதனால் அவளுக்கு என்ன ஆகப்போகிறது...?

தினமும் அவள் கண்முன்னால் ஷோபா வந்து போய் கொண்டிருந்தாள்... பாலமுரளியின் இருப்பிடமும்.. முகவரியும் அறிந்தவள் அவள் என்ற நினைவில் ராதிகாவின் இதயம் துடிக்கும்... அவன் எங்கேயிருக்–கிறான் என்ற கேள்வி வாய்வரை வந்து விடும்... அவற்றை உள்ளே தள்ளி... வாயை இறுக மூடி வாய்பூட்டு போட்டுக் கொள்வாள் ராதிகா...

அவளுக்கு ஷோபாவின் குணம் தெரியும்... நிச்சயமாய் அவள் ராதிகாவின் காதலுக்கு உதவப் போவதில்லை... அதற்கு மாறாக ராதிகா பாலமுரளியின் மேல் ஆர்வம் கொண்டு... அவனை தேடி அலைவதாக காலேஜிற்குள் கதையைப் பரப்பி விடுவாள்... அவள்தான் இப்படியொரு வாய்ப்பிற்காக.. எப்போது... எப்போது... என்று காத்துக்கிடக்கிறாளே...

ராதிகா தனி மனுஷியில்லை... அவள் கிருஷ்ணமூர்த்தியின் குடும்பத்தின் ஒரு அங்கம்... அவளது சின்னத் தவறுகூட அந்தக் குடும்பத்தின் ஒட்டு மொத்த அமைதியையும்... நிம்மதியையும் குலைத்து விடும்...

கட்டுக்கோப்பான மத்திய தர குடும்பங்களில்... காதல் என்பது கத்தி முனையில் நடப்பதைப் போன்றது...

ராதிகா கத்தி முனையில் நின்றாள்... அந்தக் கத்தியின் கூர்மை அவளைக் கிழித்தால் அவளால்

தாங்கிக் கொள்ள முடியும்... அது அவளையும் தாண்டி.. அவள் குடும்பத்தை கிழித்து விடுமே... அதை அவளால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்...?

அவள் அந்தரங்கத்தில் தன் காதலை புதைத்தாள்...

அவனோடு நானிருந்த...
அந்த மனித்துளிகள் போதும்...

ஆற்றங்கரையின் மணலினில் கால் புதைய நடந்து கொண்டிருந்தான் பாலமுரளி... நதிநீரின் அலைகள் சிறுசிறு வளைவுகளாக கரையில் மோதித் திரும்பும் போது உண்டான நீர் குமிழிகளில் அவன் மனம் லேசாக மறுத்தது... நதிநீரின் நுரையினில் பாதம் படிய நின்றவனுக்கு... அந்த முன்னிரவுப் பொழுதில்... பூங்காவின் இருளில் அவன் பாதம்மீது பட்ட அவள் பாதத்தின் மென்மை நினைவுக்கு வந்தது...

முன்னிரவிற்கும் அவனுக்குமான சம்பந்தத்தின் ஆணிவேரை அவனால் அடையாளம் காண முடியவில்லை...

அவளை அவன் முதன் முதலாக சந்தித்ததும் முன்னிரவுப் பொழுதில்தான்...

அவளை முதன்முதலில் அவன் தொட்டு முத்தமிட்டதும் ஒரு முன்னிரவுப் பொழுதில்தான்...

அவளைப் பற்றிய நினைவுகள் அசுர வேகத்தில் கழன்றெழுத்து அவனை ஆக்ரமிப்பதை அவனால் தடுக்க முடியவில்லை...

பாதி இரவுகளில்... கனவில் அவளுடன் கலப்பதான நினைவில் அவன் உடலில் பரவசம் ஊற்றாகப் பெருவிப் படர்கிறது... அந்த சந்தோசத்தில் கண் விழிப்பவனின் கைப்பிடியில் அவள் இருக்காமல் தலையணை இருக்கும் போது... மீதி இரவுகள் நரகமாகக் கழிகின்றன...

அவளை சிறையெடுக்காமல் சென்னையை விட்டு திரும்பக் கூடாது என்ற உறுதியுடன்தான் அவன் இருந்தான்... அன்று அவளைத் தொட்டுத் தழுவிய நினைவுகளுடன்.. மறுநாளிலிருந்து... எவ்வாறெல்லாம் அவளை முற்றுகையிட வேண்டும் என்ற வியூகங்களை அவன் வகுத்துக் கொண்டிருந்தபோது... அவனது செல்போன் அலறியது...

"முரளி..." மேகலாவின் குரலில் சோர்வும்... அவனைத் தேடும் பதட்டமும் இருந்தது...

தீனமாக ஒலித்த அந்தக்குரலில்... அவன் உடலில் இருந்த காதல் கிளர்ச்சியுணர்வுகள் பறந்தோட.. அவன் பதட்டமாக எழுந்து அமர்ந்தான்...

"அம்மா...! என்னம்மா ஆச்சு..? ஏன் இப்படிப் பேசறிங்க..."

"எனக்கு நெஞ்சு வலிக்குதுடா தம்பி..."

அந்த நொடியில் தன்னை அற்பமானவனாக உணர்ந்தான் முரளி...

அவனைப் பெற்ற தாய்... மரண பயத்துடன் அவனை அழைக்கிறாள்... அவளுக்கு கணவனில்லை... மகளும் அருகில்லை... அவளுடைய வாழ்க்கையின் ஆதாரம் அவளுடைய பிள்ளைதான்... பாதுகாக்க வேண்டிய முரளியோ நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கிறான்... இருந்தபோதும் அந்தத்தாய் அந்த அவலக் குரலை அவனிடம் தான் எழுப்புகிறாள்..

பதினைந்து தினங்களாக கடமையை மறந்து காதலில் மூழ்கி விட்ட தன்னைத்தானே நொந்து கொண்டான் பாலமுரளி...

"பயப்படாதீங்கம்மா... நான் உடனே புறப்பட்டுவர்றேன்.."

"நீ வருகிற வரைக்கும் நான் பிழைத்திருப்பேனாடா முரளி..."

"உங்களுக்கு ஒன்னும் ஆகாதும்மா... நானிருக்கேன்.. கடவுள் இருக்கார்... அவர் நம்மைக் கைவிடமாட்டார்..."

"எனக்கு ஒன்னும் இல்லைடா தம்பி... உங்க அப்பா போனபின்னாலே... எனக்கு என்ன இருக்கு..? நீயும்.. உன் அக்காவும் தான் இருக்கீங்க... உங்களுக்காக இருந்தேண்டா தம்பி... அக்காவுக்கு ஒரு கல்யாணத்தை பண்ணி அவள வாழவைச்சிட்ட.. உன் கல்யாணத்தையும்

கண்குளிற கண்டுப்புட்டா போதும்டா முரளி... அதுவரைக்கும் என் ஜீவன் இருக்குமாடா..?"

திக்கித் திணறி மேகலா பேசுவதைக் கேட்கச் சகிக்கவில்லை முரளிக்கு... அவன் போனை அணைத்து விட்டான்... உடனடியாக அவனது மேனேஜரை போனில் அழைத்தான்...

"சதீஷ்..."

"சார்..." தூக்கக் கலக்கத்துடன் குரல் கேட்டது...

"உடனே எங்க வீட்டுக்கு ஆம்புலன்ஸீடன் போங்க... அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக்..." காட்டுத் தீயின் வேகத்துடன் பேசினான் பாலமுரளி...

"என்ன சார் சொல்கிறீங்க..." தூக்கம் கலைந்த சதீஷின் குரலில் பரபரப்பிருந்தது...

பரபரவென்று அவனுக்கு ஆணைகளை பிறப்பித்து விட்டு.. தென்காசியிலிருந்த மருத்துவமனையை தொடர்பு கொண்டு மேகலாவின் உடல்நிலையைப் பற்றிக் கூறி.. ஆம்புலன்ஸிற்கு ஏற்பாடு பண்ணி விட்டு.. புயல் வேகத்தில் ஹோட்டல் ரூமை காலி செய்துவிட்டு காரில் பாய்ந்தான் பாலமுரளி..

கார் விரைந்து கொண்டிருக்க.. ஆங்காங்கே காரை நிறுத்தி போனில் சதிஷை அழைத்தான் பாலமுரளி...

மேகலாவின் உடல்நிலையைப் பற்றி விசாரித்துக் கொண்டே.. விடிவதற்குள் தென்காசியை அடைந்து விட்டான்...

"சரியான நேரத்தில் கொண்டு வந்து அட்மிட் பண்ணிட்டிங்க... கொஞ்ச லேட்டாகியிருந்தாலும்... உயிர் பிழைக்கிறது கஷ்டம்தான்..."

டாக்டர் சொன்னபோது முரளி இடிந்தே போய் விட்டான்...

மேகலா மட்டும் அவனுக்கு போன் பண்ணாமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்...?

அவசர சிகிச்சைப் பிரிவில்... மாத்திரையின் உதவியுடன் கண்மூடிப் படுத்திருந்தவளின் சோர்ந்த முகத்தைக் கண்டவனின் கண்களில் கண்ணீர் பெருகியது...

"அம்மா..."

அவளது கையை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டு... அவள் பக்கத்தில் அமர்ந்து விட்டான் பாலமுரளி...

அன்னைக்கும்... பிள்ளைகளுக்குமான சொந்தம் ஆத்மார்த்தமானதல்லவா...? பெற்ற பிள்ளையின் ஸ்பரிசத்தை உணராத தாய் உண்டா...?

மகனின் ஸ்பரிசத்தில் கண் விழித்தாள் மேகலா..

"முரளி... வந்துட்டியாடா மகனே..." அவள் விழிகளில் ஜீவன் திரும்ப ஆரம்பித்தது...

"வந்துட்டேன்ம்மா..." குற்ற உணர்வுடன் சொன்னான் பாலமுரளி...

"கடைசியா உன்கிட்டப் பேசனும்னு தோணிருக்கடா தம்பி..." தழுதழுத்தாள் மேகலா...

"அப்படிச் சொல்லாதீங்கம்மா..." அவள் வாயை இறுக மூடினான் பாலமுரளி...

"போனதும் திரும்பிருவேன்னு சொல்லிட்டுப் போனயே.. ஏண்டா முரளி அத்தனை நாளா அங்கேயே தங்கிட்ட...?"

இந்தக் கேள்விக்கு அவன் என்ன பதிலைச் சொல்லுவான்...?

பெண் என்னும் மாயப்பிசாசு என்னைப் பிடித்து ஆட்டி விட்டதம்மா என்றா சொல்ல முடியும்...?

தாயை.. தமக்கையை... தொழில்களை.. ஊரை.. உறவை.. அவனது உயரத்தை என்று அனைத்தையும் மறக்க வைத்து... ஒரு பெண் அவனை அவள் பின்னால் சுற்றி வர வைத்திருந்தாள் என்ற உண்மையைச் சொன்னால் அந்த தாய் மனம் தாங்குமா..?

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லைங்களா தம்பி... பார்த்துட்டுப் போக வந்தோம்..."

ஊரே திரண்டு வந்தது... மேகலாவின் உடல் நிலையைப் பற்றிக் கவலையுடன் விசாரித்தது... அந்த நெருக்கடியான நேரத்தில் அவன் தாயின் அருகில் இல்லாமல் போனதற்கு ஆயிரம் காரணங்களை.. அதுவே சொல்லியது...

"தம்பிக்கு ஆயிரம் வேலை இருக்கும்... ஏதாச்சும் புதுசாய் தொழில் ஆரம்பிக்க திட்டம் தீட்டியிருப்பாங்க... இல்லைன்னா.. ஒவ்வொரு நிமிசத்தையும் அளந்து செலவளிக்கும் தம்பி.. அத்தனை நாளா சென்னையில இருந்திருப்பாங்களா...?"

"அதைச் சொல்லுமய்யா.. பணம் காசுக்கு பஞ்சமில்லாத குடும்பத்தில பிறந்த பெரிய மனுசனில்ல... நம்மதம்பி... அவர் காசு பணத்தை கணக்குப் பார்க்காம செலவளிப்பாரு.. நேரத்தை மட்டும் வீணாக்கவே மாட்டாரே... அந்தக் கணக்கில நம்ம தம்பி மன்னனில்ல... என்னய்யா நான் சொல்றது..?"

எதிரே இருப்பவர் அதை இல்லையென்றா சொல்வார்..?

"அதானே..." என்று அவர் ஆமோதித்தாள்...

அவன் அந்த ஊருக்கு பெரிய மனிதன்... இளம் வயதில் பல உயரங்களை தொட்டவன்.. அந்த ஊருக்கே பெருமை தேடித்தந்தவன்... அவன் காரணமில்லாமல் சென்னையில் முகாமிட்டிருக்க மாட்டான் என்றே அனைவரும் நினைத்தார்கள்...

ஆனால்.. அவன் கூடப்பிறந்த பாலசரஸ்வதி மட்டும்.. அப்படி நினைக்கவில்லை...

"அந்தப் பெண் யாரு முரளி...?"

"அக்கா..."

"டேய்.. நான் உன் வயசைத் தாண்டி வந்தவ.. பெண்ணாகப் பிறந்ததாலே இருபது வயதைத் தாண்டியதுமே என்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து அனுப்பி வைச்சிட்ட.. நானும் ரெண்டு பிள்ளைகளுக்கு தாயாகிட்டேன்... எனக்கு விவரம் தெரிஞ்சி... அம்மாவையும்.. ஊர்காரங்களையும் தான் உன்னால ஏமாற்ற முடியும்.. என்னை ஏமாற்ற முடியாது.. சொல்லு.. யாரு அந்தப் பொண்ணு...?"

பொறுப்பான அக்காவாக தம்பியை குறுக்கு விசாரணை செய்தாள் பாலசரஸ்வதி.. அவன் முகம் இறுகியது... ராதிகாவைப் பற்றிய விவரங்களை பாலசரஸ்வதியுடன் பகிர்ந்து கொள்ள அவன் விரும்பவில்லை...

"நீ புத்திசாலிதான்.. ஒப்புக்கிறேன்.. அதுக்காக ஏதையெதையோ கற்பனை பண்ணிக்காதே..."

"டேய்.. நீ ஷோபா வீட்டுக்குப் போனப்ப.. மறுநாளே ஊருக்கு கிளம்பப் போகிறதா சொல்லியிருக்க..."

"ஆமாம்.. அது ஒரு பெரிய குத்தமா..?"

"அப்புறமும் ஏண்டா.. ரெண்டு வாரத்துக்கு அங்கேயே டேரா போட்ட..?"

"இங்கே பார்... எனக்கு கரும்பு மில்லில் ஆயிரத்தெட்டு பிரச்னைகள் இருக்கு.. அதைச் சொன்னால் உனக்குப் புரியுமா..? ஒரேநாளில் சரி பண்ணிப் புடலாம்ன்னு தான் போனேன்... போன இடத்தில் வேலை முடியல.. வாரக் கணக்கில வேலை இழுவையாய் இழுத்திருச்சு... என்ன பண்ணச் சொல்ற...?"

தம்பி காட்டிய கண்டிப்பில் பால சரஸ்வதி பின்னடைந்து விட்டாள்... அவளுக்கு கரும்பு மில்யும் தெரியாது.. அது பற்றிய கணக்கு வழக்கையும் தெரியாது.. அப்படியிருக்கையில் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் அவள் தம்பியுடன் மோத முடியும்..?

"அப்புறம் என் சின்ன மாமியா அப்படிச் சொன்னாங்களே..."

"நான் பார்க்கிற வேலைகளையெல்லாம் உன் சின்ன மாமியாரிடம் ஒப்பிக்கனும்னு எனக்கென்ன தலையெழுத்தா..?"

"டேய்.. அவங்க என் சின்ன மாமியாடா.."

"உனக்குத்தான் சின்ன மாமியா.. எனக்கில்லை.."

அந்தப் பேச்சில் பாலசரஸ்வதி அடங்கி விட்டாள்.. அதுவரை சந்தேகப்படும் படியான எந்த காதல் விவரங்களிலும் பாலமுரளி சிக்கிக் கொண்டதாக சரித்திரம் சொல்லாததால்.. அவள் ஷோபா சொன்ன வார்த்தைகளை... பெரிது படுத்தவில்லை..

"அண்ணி... உங்க தம்பி எங்க வீட்டு பார்ட்டிக்கு வந்திருந்தப்போ என் பிரண்டு ஒருத்தியை மீட் பண்ணினார்..."

ராதிகாவை பாலமுரளியுடன் அனுப்பி வைத்தும் விட்டு... அதைப் பற்றி பாலசரஸ்வதியின் காதினில் போட்டும் வைக்கும் திறமை ஷோபாவிற்கு மட்டுமே சொந்தமானது...

அதுவரை அதுபோன்ற விவரங்களை தம்பியைப் பற்றிய விவரங்களாக கேட்டறியாத பாலசரஸ்வதி... ஆச்சரியப்பட்டுப் போனாள்...

"மீட் பண்ணினாருன்னா.. என்ன ஷோபா அர்த்தம்..?"

"அவ என் கிளாஸ் மேட் அண்ணி.. பங்சனுக்கு வந்திருந்தா.. உங்க தம்பிக்கு இன்ட்ரொடியூஸ் பண்ணி வைச்சேன்.. ஹலோன்னு சொல்லிட்டுப் போயிடுவாருன்னு பார்த்தா.. அந்தப் பொண்ணு பின்னாலேயே பார்ட்டி முடிகிற வரைக்கும் சுற்றினார்.. போதாக்குறைக்கு.. நைட் நேரத்தில அவளைக் காரில் கொண்டு போய் வீட்டில் விடுகிறேன்னு கூடவே கூப்பிட்டுக்கிட்டும் போயிட்டார்..."

மறந்தும்.. ஹேமாவையும் சேர்த்துத்தான் பாலமுரளி கூப்பிட்டுக் கொண்டு போனான் என்பதை அவள் சொல்லவில்லை...

"ஓ..." பாலசரஸ்வதியின் குரலில் தோன்றிய யோசனையில் ஷோபாவின் மனதில் சந்தோச ஊற்றெடுத்தது...

"அண்ணி.. அந்தப் பொண்ணு மிடில் கிளாஸ் பொண்ணு... இதையும் நீங்க நினைவில் வைக்கக்கங்க.."

"அப்படியா...?"

"அவகூடல்லாம் நான் சமதையா பேசிப் பழக மாட்டேன்.. அண்ணி... என் திக் பிரண்ட்ஸை இன்வைட் பண்ணின இடத்தில இவ இருந்தா... என்னையும் கூப்பிட மாட்டயான்னு ஏக்கமாய் கேட்டா.. நீயும் வான்னு ஒரு பேச்சுக்குத்தான் சொன்னேன் அண்ணி... நிஜமாகவே வந்து தொலைச்சிட்டா.. வந்தவளுக்கு திரும்பிப் போக முடியலையாம்... வரும்போது பஸ்ஸில் வந்துட்டேன்.. திரும்பிப்போக ஆட்டோவை ஏற்பாடு பண்ணிக் கொடுன்னு என்னை டிஸ்டர்ப் பண்ண ஆரம்பிச்சுட்டா.. தலையெழுத்தேன்னு.. எங்க வீட்டு கார் டிரைவரைக் கூப்பிட்டு அவளை டிராப் பண்ணச் சொன்னா.. உங்க தம்பி முந்திக்கிட்டு தான் கொண்டு போய் விடறேன்னு சொல்லிட்டார்..."

காத்திருந்த காலங்களை...
காதலனே! நீ அறிவாயா...?"

ஷோபா கதை பிணைவதில் கெட்டிக்காரி.. அவள் சிறந்த கதைசொல்லி...! அதை உணராத பாலசரஸ்வதி.. குறுக்கிடாமல் அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்... தம்பியின் எதிர்காலம் குறித்த கவலை அவள் மனதில் எழுந்தது...

ஷோபா கூறிய நடுத்தர குடும்பம் என்ற விவரம் அவள் மனதில் பதியவில்லை... ஷோபா விருந்திற்கு அழைக்காத போது... என்னையும் அழைக்க மாட்டாயா என்று கேட்ட பெண் எப்படிப்பட்டவளாக இருப்பாள் என்ற சிந்தனைதான் அவள் மனதில் ஓடியது...

அப்படி பெரிய இடத்து தொடர்புகளை தானாக தேடிப் போகிறபெண் குடும்பத்திற்கு உசிதமானவளாக இருக்க மாட்டாள் என்பது அவளது எண்ணமாக இருந்தது...

வந்தவள் தானாகத் திரும்பிப் போகாமல்.. விருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறவர்களை தொந்தரவு செய்திருக்கிறாள்.. அதிலிருந்து அவள்

ஒசி கார் பயணத்திற்கு ஆசைப்படுகிறவள் என்றல்லவா ஆகிறது..? அப்படிப்பட்டவளை தம்பி தன்காரில் ஏற்றிக் கொண்டானா...?

"நான் என்ன செய்ய முடியும் அண்ணி...? உங்க தம்பி சொல்லும் போது.. வேணாம்.. வேணாம்.. எங்க வீட்டுக் காரில் அவளை அனுப்பி வைக்கிறேன்னா சொல்ல முடியும்...? அப்படிச் சொன்னா.. உங்க தம்பி என்னைப்பற்றி என்ன நினைச்சுக்குவார்..?"

ஷோபாவின் குரலில் ஓடிய அதீத கவலையில் நெக்குருகிப் போய்விட்டாள் பாலசரஸ்வதி..

"அதெல்லாம் அவன் ஒன்னும் நினைச்சுக்க மாட்டான்.. நானிருக்கேன்.. கவலைப்படாதே..."

"எனக்கும் அதுதான் அண்ணி... உங்க தம்பிக்காக பார்க்கலைன்னாலும்.. உங்களுக்காக நான் பார்க்கனுமா.. வேணாமா..?"

"கட்டாயம் பார்க்கனும் தான்..."

"அதனாலதான்.. அவர் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசலை..."

இப்படிப்பட்ட பெண் தம்பியின் மனைவியாக வந்தால்... பிறந்த வீட்டில் தன் உரிமை குறையவே குறையாதே... என்று மகிழ்ந்து போனாள் பாலசரஸ்வதி..

ஷோபாவின் எண்ணமே வேறு.. பாலமுரளியின் பார்வையில் ராதிகாவைக் கண்டதும் தோன்றும்

மின்னலில் அவளுக்கு சற்றும் உடன்பாடிலில்லை... அவள் சங்கரைத்தான் தன் தேர்வாக வைத்திருக்கிறாள் என்பதும்.. வாய்ப்புக் கிடைத்தால் சங்கருக்கு மனைவியாகி விடுவாள் என்பதும் வேறு...

அவளது கனவு நிறைவேறி சங்கருக்கு அவள் மனைவியாகி விட்டாலும்... பாலமுரளிக்கு ராதிகா மனைவியாகி விடலாமா..? அதற்கு அவள் விடலாமா..?

பாலமுரளி கிராமத்துக்காரன்தான் என்றாலும்.. சங்கருக்கு இணையான... ஏன் சங்கரைவிட அதிகமான பணக்காரன்.. வசதியானவன்... ஷோபாவின் தாய்வழி சொந்தக்காரன்.. பெயர் சொன்னாலே தெரிந்து விடும் அளவிற்கு.. அந்த மாவட்டத்திலேயே பெயர் பெற்றவன்...

அவனுக்கு ராதிகா மனைவியாவதா..? அதை ஷோபா அனுமதிப்பதா..? ஒருநாளும் அதற்கு அவள் விடமாட்டாள்..

சங்கரை ஷோபா.. திருமணம் செய்து கொண்டாலும்... ராதிகாவை பாலமுரளி திருமணம் செய்து கொள்ள விட மாட்டாள் எனும்போது... சங்கருடன் அவளுக்கு திருமணம் நடக்குமா.. நடக்காதா என்ற நிலையில்.. அவள் எப்படி பாலமுரளியின் பார்வையை ராதிகாவின் மீது படிய அனுமதிப்பாள்..?

சங்கர் இல்லாவிட்டாள்.. அவள் பாலமுரளியைத்–தானே தேர்வு செய்தாக வேண்டும்..?

கையிருப்பில் இருக்கும் மாப்பிள்ளையான பாலமுரளியை பத்திரப் படுத்திக் கொள்ள.. அவனது அக்காவும்.. அவளது ஒன்று விட்ட அண்ணனின் மனைவியுமான பாலசரஸ்வதியிடம் அவள் போட்டுக் கொடுத்து விட்டாள்... பாலசரஸ்வதியும் யோசிக்க ஆரம்பித்துவிட்டாள்... எப்போதும் ஒருநாளுக்கு மேல் வெளியூர்களில் தங்காத பாலமுரளி அந்த முறை பதினைந்து தினங்களுக்கு மேல் சென்னையிலேயே தங்கியிருந்தது.. அவளது சந்தேகத்தை அதிகப்படுத்தி விட்டது...

அதனால்தான்... அவள் கேள்வி மேல் கேள்வி கேட்டு.. தம்பியை துளைத்தெடுத்தாள்... அவனோ ஒரே ஒரு கேள்வியில் அவள் வாயை அடைத்து விட்டான்.. அதற்குமேலும்... அப்பனுக்கே பாடம் சொல்லும் அந்த கப்பிரமணியைப் போன்ற தம்பியிடம் அவள் வாய் கொடுப்பாளா என்ன...?

மேகலாவின் உடல் தேறியதும் அவளை வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டார்கள்... லேசான நெஞ்சுவலிதான் என்றாலும்... ஜாக்கிரதையாக அவளைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று டாக்டர் சொல்லியிருந்தார்..

"இப்போது வந்தது மைல்ட் அட்டாக்தான் முரளி... ஆனாலும்.. இனிமேல் இதைப்போல வராம நீங்க பார்த்துக்கனும்..."

"சரிங்க சார்.."

"அதிகமான மன உளைச்சல்... அதிர்ச்சி... இது ரெண்டையும் அவங்க ஃபேஸ் பண்ணாம பார்த்துக்கங்க... இதுதான் அட்டாக்கை வரவழைக்கிற விசயங்கள்.. முக்கியமாக அவங்களை தனிமையில் விடாதீங்க.. அவங்க தனியா இருந்தா... எதையாவது யோசித்து மனதைப் போட்டு உழப்பிக்குவாங்க..."

அதுதான் காரணமா..? தொடர்ந்து பதினைந்து தினங்களாக மேகலாவை அவன் தனிமையில் விட்டது தான் காரணமா..? அதனால்தான் அவள் எதையெதையோ நினைத்து மனதிற்குள் களைத்துப் போனாளா..?

குற்ற உணர்வில் பாலமுரளி குறுகிப் போனபோது... அதைத் தன் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டாள் பாலசரஸ்வதி...

"நான் சுயநலமாகிட்டேண்டா.. கல்யாணம் பண்ணிக்கிட்டு போனா.. சீர்வாங்க மட்டும்தான் பிறந்த வீடுன்னு எனக்கு எண்ணம் வந்திருச்சுடா.. நீ ஒத்தை ஆளாய் தொழிலையும் பார்த்து.. குடும்பத்தையும் கவனிச்சுக்கிட்ட... நீ வேலை வெட்டின்னு வெளியூருக்கு போகிற சமயத்திலேயாவது நான் அம்மாவைப் பார்த்துக்கனுமா... இல்லையா...?"

"நீயென்ன பக்கத்திலேயா இருக்கிற..?"

"லண்டனிலயும் இல்லையே..."

"நீ என்னதான் சொல்ல வர்ற..?"

"நான் பொறுப்பாய் இருந்திருக்கனும்டா.. நீ பக்கத்தில் இல்லாத சமயங்களிலேயாவது அம்மாவை நான் பார்த்துக்க வந்திருக்கனும்..."

"விடுக்கா.. இப்படி ஆகுமுன்னு யார் நினைச்சது..?"

பாலமுரளி.. மனச்சங்கடத்துடன் கூறி விட்டபின்பும்... பாலசரஸ்வதி அதையே சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தாள்...

மேகலா வீட்டுக்கு வந்தபின்னால் ஒருவாரம் அவள் பிறந்த வீட்டில் இருந்தாள்.. அதற்கு மேல் அவளால் இருக்க முடியவில்லை.. ராஜராஜன் போன்மேல் போனாக போட்டு விட்டான்...

"சரஸ்.. பிள்ளைகள் உன்னைத் தேடறாங்க..."

"ம்ம்ம்..."

"பிள்ளைகள் மட்டுமில்லைடி.. நானும் உன்னைத் தேடறேன்.. நீ பக்கத்தில் இல்லாத இந்த ஒருவாரமும் எனக்கு வீடு.. வீடாவே தோணலை சரஸ்..."

ராஜராஜனின் குரலில் பிரிவுத்துயர் அப்பட்டமாக வழிந்தோட... பாலசரஸ்வதி தவித்தாள்... தன் வீட்டை நோக்கிப் பறந்து விடத்துடித்தாள்... ஆனால்.. பிறந்த வீட்டை மறந்துவிட்டதாக வருத்தப்பட்டு பேசிய வார்த்தைகள் எல்லாம் அவ்வளவுதானா என்று தம்பி கேட்டுவிட்டால் என்ன செய்வது என்று விழித்தாள்...

'அவ்வளவு உணக்கையாக நான் டயலாக் பேசியிருக்க வேணாம்...'

அவள் தன்னையே நொந்து கொண்டபோது... பாலமுரளி அவளை அழைத்தான்...

"என்னடா.."

"எனக்கு கரும்பு மில்லில் அர்ஜண்டாய் ஒரு வேளையிருக்கு..."

"உனக்கு வேலையில்லாம இருந்தாத்தான் அது அதிசயம.. இதை எதுக்கு என்கிட்டச் சொல்கிற... உன் வேலையைப் பார்க்கப் போ..."

"போயிட்டு உடனடியா திரும்பி வந்துருவேன்..."

"வா.. அதையும்தான் ஏன் சொல்ற...?"

"நீ கிளம்பி ரெடியாய் இருக்கனுமில்ல.. அதுக்காக சொல்கிறேன்..."

"டேய்.. முரளி..."

பாலசரஸ்வதி இமைகொட்டி தம்பியைப் பார்க்க.. அவன் அலட்டிக்கொள்ளாமல் சிரித்தான்...

"பிள்ளைகளை விட்டுட்டு வந்து எத்தனை நாளைக்குத்தான் இங்கேயே டேராபோடுவ.. உன் வீட்டைப் பார்க்க கிளம்பு..."

"அம்மா...?"

"நான் பார்த்துக்கிறேன்... இனி அம்மாவை தனியாய் விட்டுட்டு வெளியூர் போக மாட்டேன்.. போதுமா...?"

"உனக்கும் வேலை இருக்குமேடா..."

அப்போதும் பாலசரஸ்வதி தயங்கினாள்... ஆனால் பாலமுரளி பிடிவாதமாக அவளைக் கிளம்பச் சொல்லி விட்டான்...

"திடீர்ன்னு கிளம்பச் சொல்றியேடா..."

எப்படிக் கிளம்புவதென்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்த பாலசரஸ்வதி... மனதுக்குள் நிம்மதியுடன் சொன்னாள்.. அவளுக்குத் தெரியாது... அவளை கிளப்பி விட முடியாத ராஜராஜன் பாலமுரளியிடம் போனில் பேசி விட்டான் என்பது...

தாயைக் கவனித்துக் கொள்ள அக்கா இருக்கிறாள் என்ற தெம்புடன் கரும்பு மில்லில் அமர்ந்திருந்தவனுக்கு போன் வந்தது... எடுத்துப் பேசினான்...

"மாமா...!"

"அத்தை எப்படியிருக்காங்க முரளி... இப்போத் தேவலையா...?"

"தேவலை மாமா..."

"நார்மலா ஆகிட்டாங்கள்ல...?"

"ஆகிட்டாங்க மாமா..."

"அதுவந்து முரளி... அத்தைக்கு உடம்பு சரியில்லைன்னதும் உங்க அக்கா அப்ஸெட் ஆகிட்டா.. அதனாலதான்.. அத்தைக்கு பக்கத்திலே அவ ரெண்டு நாள் இருந்துட்டு வரட்டுமுன்னு விட்டுட்டு வந்தேன்..."

மறைமுகமாக ராஜராஜன் என்ன சொல்ல வருகிறான் என்று பாலமுரளிக்கு புரிந்து போனது.. அவன் ஒருவாரம் பாலசரஸ்வதியை தேனூத்தில் இருக்க அனுமதித்ததே அதிகம்.. திருமணமான நாளில் இருந்து.. பாலசரஸ்வதி அதிமுக்கியமான விசேங்களுக்கு மட்டும் கணவனுடன் சேர்ந்து வருவாள்.. ஒரே ஒருநாள் தான் அவர்கள் தங்குவார்கள்... அதற்கு மேல் தங்க.. ராஜராஜனின் வேலை அவனைவிடாது.. அவன் பாலசரஸ்வதியை விட மாட்டான்... கையோடு திருநெல்வேலிக்கு அழைத்துக் கொண்டு போய்விடுவான்..

அப்படிப்பட்டவன் இப்போதும் பாலசரஸ்வதியை இருக்க விடாமல் அழைத்துக் கொண்டு போகத்தான் முயன்றான்.. இந்தமுறை பாலசரஸ்வதி அசைந்து கொடுக்கவில்லை... தாயின் திடீர் நோய் படுக்கை அவளை அதிகமாக பாதித்துவிட்டது...

"வந்தவுடன் கிளம்பிப் போனா எப்படிங்க...?"

தாயின் சோர்ந்த முகத்தைப் பார்த்தபடி பாலசரஸ்வதி கேட்டபோது... அவனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை...

"குழந்தைக படிப்பு கெட்டிரும்டி..."

பிள்ளைகளை முன் வைத்தான் அவன்.. அந்தச் சாக்கை வைத்து அவளைக் கிளப்பிக் கொண்டு போய்விட அவன் முயன்றபோது.. அவள் அதற்கும் அசைந்து கொடுக்கவில்லை...

"அவங்களை வேணும்னா கூப்பிட்டுக்கிட்டு போயிடுங்களேன்..."

அவன் பல்லைக்கடித்தபடி பிள்ளைகளோடு கிளம்பிப் போய் விட்டான்... தினமும் போனில் பாலசரஸ்வதியை கரைக்க முயன்று தோற்றுக் கொண்டிருந்தவன்.. இனிமேல் இது வேலைக்கு ஆகாது என்ற முடிவுடன் மனைவியை விட்டுவிட்டு.. மைத்துனனுடன் போனில் பேசிவிட்டான்...

"பிள்ளைக அவங்களோட அம்மாவைத் தேடுறாங்க முரளி.. உங்க அக்காவை அனுப்பி வைச்சிருங்க..."

"ஆகட்டும் மாமா..."

"நான் வந்து கூப்பிட்டுட்டு வரலாம்.. ஆனா.. அங்கே.. அத்தையின் முன்னாலே... இன்னும் ரெண்டுநாள் இருந்துட்டு வர்றேன்னு உங்க அக்கா கேட்டு வைப்பா.. முடியாதுன்னு சொல்ல என்னால முடியாது..."

"புரியுது மாமா..."

"உடனே அனுப்பி வைக்கனும்னு இல்லை முரளி.. சாவகாசமாக.. நாளைக்குக்கூட அவளை அனுப்பி வைக்கலாம்.. இங்கே நான் பிள்ளைகளைப் பார்த்துக்கிறேன்.."

ராஜராஜன் மகா பெருந்தன்மையுடன் இதைக் கூறியபோது... இரவு மணி எட்டு..! அந்த நேரத்திற்கு மேல் கூடப்பிறந்தவளை பாலமுரளி அனுப்பி வைத்து விடுவானா என்ன..?

விடியும் வரைக் காத்திருப்பதை... காலவரையற்ற காத்திருப்பாக அவன் குறிப்பிட்ட பெருந்தன்மையில் மெய்சிலிர்த்து விட்டான் பாலமுரளி...

"ரொம்ப தேங்க்ஸ் மாமா..."

அவனது காத்திருப்பிற்கான நன்றியைச் சொல்லிவிட்டு.. மறுநாள் காலையிலேயே.. தமக்கையை கிளம்பச் சொல்லிவிட்டான் பாலமுரளி...

தளர்வாக படுக்கையில் படுத்திருந்த போதும்.. மகள் புகுந்த வீட்டிற்கு கிளம்புவதை அறிந்த மேகலா.. பலவீனமான குரலில் பாலமுரளியை அழைத்தாள்...

"முரளி..."

அந்த ஒற்றைக் குரலுக்குத்தான் எத்தனை சக்தி..!

பாலமுரளி அவசரமாக தாயின் அருகே வந்து அமர்ந்தான்...

"என்னம்மா..."

"அக்காவுக்கு நம்ம ஜவுளிக்கடையில இரந்து விலை உசத்தியா ஒருபட்டுச்சேலையை கொண்டு வரச் சொல்லுப்பா..."

"ஆகட்டும்மா..."

"போகிற வழியில பழக்கடையில ஆப்பிள் ஒரு கூடை.. ஆரஞ்சு ஒருகூடைன்னு வாங்கி வைச்சிரு... நம்ம வாழைத் தோப்பில இருந்து ஒருதார் வாழைப்பழத்தை வெட்டிக் கொண்டு வரச் சொல்லு..."

"சொல்லிர்ரேன்ம்மா..."

"கோசலைகிட்டச் சொல்லி.. பலகாரம் பண்ணி சில்வர் டப்பாவுல அடைச்சுக் கொடுக்கச் சொல்லு..."

"சொல்லிட்டாப் போச்சு..."

"நகைக்கடையில சொல்லி... அக்காவுக்கு புதுசா ஏதாவது டிசைன் வந்திருந்தா எடுத்துட்டு வரச் சொல்லு.."

"அதுக்கென்னம்மா.. வாங்கிக் கொடுக்கிறேன்.."

"நம்ம தோட்டத்திலே விளைஞ்சிருக்கிற காய்கறியில இளசா பறிக்கச்சொல்லி... கூடையில போட்டு கார் டிக்கியில் வைக்கச் சொல்லு..."

"ஏம்மா... இதையெல்லாம் நீங்க மூச்சு வாங்கச் சொல்லனுமா...?"

"இல்லைடா முரளி... அப்பா இல்லாத வீட்டிலே பெண்ணெடுத்தோம்.. சீர்செய்ய ஆளில்லன்னு.. உன் அக்காவோட புருசன் வீட்டில யாரும் நாக்கு மேல பல்லைப்போட்டு ஒருவார்த்தை பேசிரக்கூடாது... கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போனப்ப அவ கூடப்போன சீரைப் போல... அவ பிறந்த வீட்டுக்கு வந்துட்டுப் போற ஒவ்வொரு தடவயும் சீரோடுதான் போகனும்... அதுதான் அவ புருசன் வீட்டிலே அவளுக்கு மரியாதையை வாங்கித் தரும்டா முரளி... ஆயிரம்தான் அவ வீட்டுல பாலும்... தேனும் ஆறாய் ஓடினாலும்... தாய்வீட்டுச் சீதனத்துக்கு ஈடில்லைடா மகனே..."

அதைக் கேட்டுக் கொண்டிருந்த பாலசரஸ்வதிக்கு ஏனோ... கண்ணில் நீர் பெருகியது.. பாலமுரளி தயாளன்தான்.. தமக்கைக்கு சீர்செய்ய கணக்குப் பார்க்காதவன்தான்.... ஆனாலும்... அதை எடுத்துச் சொல்ல தாய் வேண்டியிருக்கிறதே...

30

காற்றோடு நான் தூதுவிட்ட
கவிதைகளை நீ கேட்டாயோ...?

மதிய உணவுக்குப் பின்னான வகுப்புகளில் ஏன் மனம் இறங்க மறுக்கிறது என்று.. சொக்கும் இமைகளை கட்டுப்படுத்தியபடியே நினைத்துக் கொண்டாள் ராதிகா...

யார் கேட்டாலும்... கேட்காவிட்டாலும்... வாங்குகிற ஊதியத்திற்கு.. நான் பாடம் நடத்தியே தீருவேன் என்று சூளுரைத்ததைப் போல... விரிவுரையாளர் வகுப்பெடுத்துக் கொண்டிருக்க.. அதைக் கொஞ்சம் கூடக் கவனிக்காமல் வகுப்பறையே தூக்கத்தில் மூழ்கியிருந்தது...

பாடத்தை குறிப்பெடுத்துக் கொண்டிருந்த ராதிகாவிற்கு அதில் சந்தேகம் வந்துவிட... அதை

நிவர்த்தி செய்வதற்காக அவள் எழுந்து கொள்ள முயன்றாள்...

"ஏய்ய்.. அடங்கி உட்காருடி..."

கொட்டாவியுடன் அவள் கரம் பிடித்துத் தடுத்தாள் ஹேமா...

"எதுக்குடி குரங்கே... என் கையைப் பிடிக்க இழுக்கறே..." ராதிகா அவள் மீது பாய்ந்தாள்...

"அடச்சீ... அடங்குன்னு சொல்றேனில்ல.. அவரே.. யாரும் கேட்காத கிளாஸ் ரூமில... கடமையுணர்ச்சிக்கு அளவேயில்லாம ரம்பம் போட்டுத் தள்ளிக்கிட்டு இருக்கிறாரு... போதாக்குறைக்கு நீ வேற அவரை சந்தேகம் கேட்டு கிளப்பி விடப் பார்க்கறியா..." ஹேமா பல்லைக் கடித்தாள்...

"அதில உனக்கு எதுக்குடி இவ்வளவு வருத்தம்...?"

"இருக்காதா பின்னே.. அவர் உன் சந்தேகத்துக்கு விளக்கம் சொல்கிறபோத உன்னை மட்டுமா பார்த்து வைப்பாரு...? உன் பக்கத்திலே இருக்கிற என்னையுமில்ல சேர்த்துப் பார்ப்பாரு...?"

"பார்த்தா என்ன..?"

"உனக்கு ஒன்னுமில்ல... எனக்கு ஆயிரம் இருக்கும்மா..."

"ஏண்டி... தூக்கக் கலக்கத்தில உளறித் தள்ளறயா..?"

"நீயே தூக்கம் கலக்கம்ன்னு சொல்லிட்டேல்ல.. நான் தூங்கி வழிகிறதை அவர் பார்த்தா என்ன ஆகும்..?"

"என்ன ஆகும்..?"

"என் இன்டர்னெல் மார்க்கில் அவர் கைவைக்க மாட்டாரா..?"

"அதுக்கு..?"

"நீ அடங்கி உட்காரு... நான் நிம்மதியாய் ஒரு தூக்கம் போடனும்..."

சந்தேகத்தை கேட்கவிடாத தோழியை கொலை வெறியோடு ராதிகா முறைக்க ஆரம்பிக்க... உன் முறைப்பிற்கெல்லாம் நான் பயந்த ஆளா..? என்பதைப் போல.. உதட்டைச் சுழித்து விட்டு.. ஹேமா தன் தூக்கத்தை தொடர்ந்தாள்...

அவளுடைய தூக்கம்... ராதிகாவையும் தொற்றிக் கொள்ளும்போல தோன்றி வைக்க.. அவசரமாக ஹேமாவிடமிருந்து தன் பார்வையை விலக்கிக் கொண்டு.. பாடத்தை குறிப்பெடுக்க ஆரம்பித்தாள் ராதிகா...

வகுப்பு முடிந்து விரிவுரையாளர் வெளியேற...

"ஹாவ்..." என்று ஒரு கொட்டாவியை வெளியேற்றினாள் ஹேமா...

ராதிகாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது... அதை வெளிக்காமல்...

"பேசாம இந்த லெக்சரருக்கு நீலாம்பரன்னு பெயர் வைத்து விடலாம் ராது..." என்றாள் ஹேமா...

ராதிகா அதற்கு பதில் சொல்லவில்லை.. அவள் பக்கத்திலிருந்த ஷீலா..

"ஏண்டி அப்படிச் சொல்ற..? இன்ஜினியரிங் பாடம் எடுக்கிறவருக்கு ஹிஸ்டரிக்கலா.. பெயர் வைக்கனும்னு சொல்றியே.. என்ன விசயம்..?" என்று சந்தேகம் கேட்டாள்...

"ஆமாண்டி.. இவ்வளவு நேரமும் கிளாஸ் ரூமில யாரும் லெக்சரர் கிட்ட சந்தேகம் கேட்க எழுந்திருக்கல.. இவகிட்ட மட்டும் சந்தேகம் கேட்க முத ஆளா வந்திருங்க... இப்படி இருந்தா இந்தியா எப்படிடி முன்னேறும்..?" ராதிகா காட்டமாக கேட்டாள்...

"இதுக்கும்... இந்தியாவோட முன்னேற்றத்துக்கும் என்னடி சம்பந்தம்..? லெக்சரர் கிட்ட சந்தேகம் கேட்டா.. அவர் இன்னும் கொஞ்சம் மொட்டை ரம்பத்தை போடுவாரு... நம்ம ஹேமா என்ன அப்படியா செய்யப் போறா..? இன்ட்ரெஸ்டிங்கா எதையாவது சொல்லுவா.. நீ சொல்லுடி ஹேமா..." ஷீலா தூண்டினாள்...

"ம்ஹீம்.. உருப்பட்டாப்புலதான்..." ராதிகா தலையில் அடித்துக் கொண்டாள்...

"இவ என்னடி ஒளவையாரோட மறுபிறவியைப் போல ஆகிட்டா..." ஷீலாவுக்கு தாங்கவேயில்லை...

"இவளாவது.. ஒளவையாருக்கு இணையாய் ஆவதாவது... அதெல்லாம் ஒன்னுமில்ல... அம்மணிக்கு

கொஞ்ச நாளா மூடு அவுட்... அதனால பிலிம் காட்டிக்கிட்டு இருக்கா.." ஹேமா விளக்கம் சொன்னாள்...

"இவ பிலிம் யாருக்கு வேணும்..? நீ சொல்லுடி... ஏன் அவருக்கு நீலாம்பரன்னு பெயர் வைக்கனும்..?" ஷீலா ஆவலாக கேட்டாள்...

"அது வேற ஒன்னுமில்லடி ஷீல்... நீலாம்பரிராகத்தைக் கேட்டா என்ன வரும்..?" ஹேமா கண்சிமிட்ட...

"தூக்கம் வரும்.." புரிந்து கொண்டவளாக ஷீலா பொங்கிச்சிரித்தாள்...

"அப்ப அவருக்கு நீலாம்பரன்னு பெயர் வைக்கிறது தான் சரி..."

அருகிலிருந்த மற்றவர்கள் என்னவென்று கேட்க.. ஹேமா சொன்னதை ஷீலா ஒளிபரப்பிக் கொண்டிருக்க.. அதில் மனம் லயிக்காதவளாக... ராதிகா அசுவாரஸ்யத்துடன் சூள் கொட்டியபடி.. ஜன்னல் வழி வெளியே பார்த்தாள்..

அந்திவெயிலின் கீற்றுக்கள் கல்லூரியின் சாலையின் மீத படிந்திருந்தன...

கல்லூரிவிட்டுக் கிளம்பியபோது...

"கொஞ்சம் பொறுடி..." என்று ஹேமாவும் ராதிகாவின் ஸ்கூட்டியில் ஏறிக் கொண்டாள்...

அவளை அவளது வீட்டில் விட்டுவிட்டு.. தன் வீட்டைநோக்கிச் சென்றாள் ராதிகா.. தெரு முனையைக்

கடக்கும் போத.. வழக்கம் போல அவளது பார்வை அவனைத் தேடித் துழாவியது.. அவன் இல்லை.. மனதில் ஏமாற்றமாக உணர்ந்தாள்...

வீட்டை அணுகும் போது.. தூரத்திலேயே.. அவள் வீட்டு வாசலில் கார் நிற்பது தெரிந்து விட்டது..

'யாராய் இருக்கும்..'

புருவம் சுருங்கியவளுக்கு அருகில் நெருங்கும் போதே.. அது யாருடைய கார் என்று அடையாளம் தெரிந்து விட்டது...

'சங்கர் வந்திருக்கிறான்...'

அவன் எதற்காக அவளுடைய வீட்டிற்கு வரவேண்டும்..? என்ற கேள்வி மனதில் எழுந்தபோதே.. ஒரு பயபந்து அவள் வயிற்றில் சுருண்டு இங்கும்.. அங்குமாக ஓடியது...

ஸ்கூட்டியை நிறுத்தி விட்டு வீட்டுப்படி ஏறும்போதே..

"சொல்லவே இல்லை பார்த்தியா..?" என்ற குற்றச் சாட்டுடன் அவளை எதிர் கொண்டாள் கீதா...

"எதைடி சொல்லச் சொல்ற..?"

ஏற்கனவே தலைவலியில் இருந்த ராதிகா கன்னென்று எரிந்து விழுந்தாள்... அதை கீதா பொருட்படுத்தவே இல்லை....

"அ...அ... இந்த உடான்ஸையெல்லாம் வேற எங்கேயாவது போய் விடு.. உள்ளே உன்னைப் பெண் கேட்டு வந்திருக்காங்க..."

கீதாவின் பேச்சில் ராதிகாவிற்கு தூக்கிவாரிப் போட்டது...

கடைசியில் சங்கர் சொன்னதைப் போலவே செய்து விட்டானா..? அவன் தனியாக வரவில்லையா..?

இல்லை என்றாள் கீதா...

"யாரோ சங்கராம்... பெரிய கோடிஸ்வரனாம்.. உன் பிரண்டோட பர்த்டே பார்ட்டிக்கு போகிறேன்னு போயிட்டு.. ஒரு வெரி ஹேண்ட்சம் மேனோட காரில வீடு வந்து சேர்ந்தியே.. அந்த பர்த்டே பார்ட்டியில உன்னைப் பார்த்தாராம்.. பிடிச்சுப் போயிருச்சாம்.. முறைப்படி பெத்தவங்களோட பொண்ணு கேட்டு வந்திருக்காராம்..."

"கடவுளே..."

"அவர்தான் உனக்கு நல்ல நல்ல சான்ஸா ஏற்படுத்திக் கொடுக்கிறாரே.. எனக்கும் வந்து வாய்க்குதுகளே.. எதிர் வீட்டு தடியன்கிட்ட ஓட்டை ஹீரோ ஹோண்டாதான் இருக்கு..."

"நீ அடி வாங்கத்தான் போறடி.."

"இதை மட்டும் மறக்காம சொல்லிரு... நீ உண்மையிலேயே என்மேல பாசமிருக்கிற அக்காவா இருந்திருந்தா.. அந்த பர்த்டே பார்ட்டிக்கு என்னையும் கூப்பிட்டுக்கிட்டு போயிருக்கலாமில்ல..?"

"அடச்சீ... வாயைக் கழுவு.. அவளெல்லாம் ஒரு மனுஷின்னு அவளோட பார்த்டே பார்ட்டிக்கு தெரியாத்தனமா போயிட்டு வந்ததினாலதான் நானே இத்தனை இம்சைப் பட்டுக்கிட்டு இருக்கேன்.. இதில நீ வேற கடுப்படிக்காதே..."

"இது உனக்கு இம்சையா..? ஒன்னுக்கு ரெண்டாய் பணக்காரங்க உன்னைச் சுற்றி வர்றாங்க.. நானும் உன்கூட வந்து.. அவங்களுக்கு முன்னாலேயே இன்ட்ரொடியூஸ் ஆகியிருந்தேன்னு வைய்யி.. ரெண்டில ஒருத்தனாவது என்னைக் கன்ஸிடர் பண்ணுவானில்ல.."

கீதா பொருமித்தவிக்க.. ஓங்கி அவள் கன்னத்தில் நாலு அப்பு... அப்பினால் என்ன என்று ஆவேசப் பட்டாள் ராதிகா...

'இவளைச் சொல்லிக் குற்றமென்ன..? இவளை இப்படியெல்லாம் யோசிக்க வைக்கிற இவனைச் சொல்லனும்... இவனை யாரு என்னைப் பெண் கேட்டு... என் வீட்டுக்கு வரச் சொன்னது...?'

ராதிகாவின் கோபம் சங்கரின் மீது திரும்பியது... அவள் கோபாவேசத்துடன் உள்ளே சென்றபோது...

"இதோ.. எங்க ராதுவே வந்திட்டாளே..." என்று முகமலர்ச்சியாய் திரும்பிப் பார்த்தாள் ராஜேஸ்வரி...

ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தவர்களின் கவனம் ராதிகாவின் பக்கம் திரும்ப... முள்ளின் மேல்

நிற்பதைப் போல உணர்ந்தாள் ராதிகா... சங்கரின் உரிமை கலந்த பார்வை... அவளுக்கு நெருப்பாக தகித்தது...

கால்மேல் கால்போட்டு அமர்ந்திருந்த ராமாமிர்தத்தின் அலட்சியமான பார்வை அவள் முகத்தை இறுகச் செய்தது... அவரது மனைவி வனஜாவின் பார்வையோ அதற்கு மேல் இருந்தது...

அந்தவீட்டில் வந்து அமர்ந்திருப்பதை அவர்கள் அசௌகரியமாக நினைப்பதை அவர்களது முகபாவமே ராதிகாவிற்கு உணர்த்தியது...

'இப்படி இஷ்டமில்லாம.. எதிரி வீட்டுக்கு வருகிறதைப் போல முகத்தை வைச்சுக்கிட்டு.. யாரு இவங்களை வரச்சொன்னதாம்...' மனதிற்குள் வெகுண்டாள் அவள்...

"ராதிகா.. டிரஸ் சேன்ஜ் பண்ணிக்கிட்டுவா..."

ராஜேஸ்வரி உத்தரவிடும் போதே.. அது எதற்கு என்ற நினைவுடன் மனதிற்குள் முரண்டினாள் ராதிகா...

அதை வார்த்தைகளில் வெளிப்படுத்தினாள் வனஜா... ஆனால்.. அவள் அதை வெளிப்படுத்திய விதம்தான் ராதிகாவின் தன்மானத்தை பதம் பார்ப்பதாக இருந்தது...

"நோ.. நோ.. அதெல்லாம் வேண்டாம்.. சங்கர் சொன்னானேன்னு அவனுக்காக.. நானும்.. அவனோட டாடியும் இந்த வீட்டில் காலடி எடுத்து வைச்சோம்..

மத்தபடி.. எங்களுக்கு எந்த பார்மாலிட்டிஸீம் தேவையில்லை..."

அப்படியா..? என்பதைப் போல பார்த்தபடி ராதிகா வீட்டுக்குள் போகப் போனபோது.. ராஜேஸ்வரி அதற்கும் அவளை அதட்டினாள்...

"ராதிகா.. இங்கேயே உட்காரு..."

தாயின் சொல்லை தட்ட முடியாமல்... பல்லைக் கடித்தபடி.. அவர்களுக்கு எதிரே அமர்ந்தாள் ராதிகா...

அவனைப் பார்க்காமல் ராமாமிர்தம் கைக்கடிகாரத்தைப் பார்க்க... வனஜாவோ.. செல்போனை நோண்டிக் கொண்டிருந்தாள்...

சங்கர் மட்டும்.. அவள் முகத்தையே பருகுவதைப் போலப் பார்த்துக் கொண்டிருந்தான்...

ராதிகாவிற்கு அவன் பார்வை பிடிக்கவில்லை... அந்தப் பார்வை அவள்மேல் படர்வதை அவள் விரும்பவில்லை...

நிமிர்ந்து கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்தாள்... சில விசயங்களில் அவர் அவளுடன் இசைந்து போகக் கூடியவர்.. சங்கரின் பெற்றோரின் போக்கை அவர் கவனிக்காமல் இருக்கமாட்டார் என்பது ராதிகாவின் அனுமானமாக இருந்தது..

அதற்கேற்றாற் போல.. கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் ஒரு சளிப்பு ஏற்பட்டிருந்தது.. நடந்து

கொண்டிருக்கும் நிகழ்வை... மூன்றாம் மனிதரைப் போல அவர் விலகியிருந்து கவனித்துக் கொண்டிருந்தது ராதிகாவிற்கு மிகத் தெளிவாக புரிந்தது...

ராஜேஸ்வரி மட்டுமே.. எதையும் கவனிக்காதவளாக உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருந்தாள்.. மகளுக்கு அமைய இருக்கும் வளமான வாழ்க்கை குறித்தான அவளது சந்தோசம் அப்பட்டமாகத் தெரிந்தது...

"அப்புறம்.. சொல்லுங்க..." அவள் குரலில் எதிர்பார்ப்பு இருந்தது....

"எதைச் சொல்லச் சொல்கிறீங்க மிஸஸ் ராஜேஸ்வரி..." புரியாதவளைப் போல புருவங்களை உயர்த்தினாள்... வனஜா...

ராதிகாவின் பார்வையும்.. கிருஷ்ணமூர்த்தியின் பார்வையும் சந்தித்து மீண்டன.. கிருஷ்ணமூர்த்தி மனைவி பேசியதை ஆட்சேபித்தார்....

"அவங்க கேட்கிறதுக்கு பதிலைச்சொல்லு ராஜி.. ஏதைச் சொல்லச் சொல்லி... அவங்ககிட்டக் கேட்கிற..?" அவர் குரலில் கோபம் இருந்தது...

"இது என்னங்க... புரியாதவங்களைப் போல பேசறிங்க... அவங்கதானே நம்ம வீடு தேடிவந்து பெண்ணைக் கேட்கிறாங்க..? இப்ப பெண்ணையும் பார்த்துட்டாங்க... மேற்கொண்டு பேச வேண்டியதைப் பேச வேணாமா..?" கணவரின் கோபத்துக்கு குறையாத கோபக் குரலில் பதில் சொன்னாள் ராஜேஸ்வரி...

"ஒன் வெர்ட் மிஸஸ் ராஜேஸ்வரி... உங்க வீட்டைத் தேடி நாங்களா வரலை.. எங்க மகன் வரவைத்தான்..." வனஜா விளக்கம் கொடுத்தாள்...

அதை ஆமோதிப்பவரைப் போல ராமாமிர்தம் அமைதிகாக்க...

"மம்மி..!" என்று கண்டிப்பான குரலில் வனஜாவை அடக்கினான் சங்கர்...

"பாருங்க ஆண்ட்டி.. எனக்கு உங்க மகளைப் பிடித்திருக்கு.. முறைப்படி என் பேரண்ட்ஸோட வந்து பெண் கேட்டுட்டேன்.. உங்களுக்கும் இதில விருப்பமிருந்தா.. அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாண நாளைக் குறிச்சிடலாம்..."

சங்கர் மிகத் தெளிவாக ராஜேஸ்வரி கேட்டதைச் சொல்லி விட்டான்.. ராஜேஸ்வரியின் முகம்.. பூவாக மலர்ந்து விட்டது...

31

எங்கேயோ கேட்ட குரல்..
உன் மனதில் வரவில்லையா..?

சங்கர் எதிலும் வேகமான.. தீர்க்கமான.. தீர்மானமான முடிவுகளை எடுப்பவன்... அவனது இந்தக் குணத்தை அவனைப் பெற்றவர்கள் எப்போதுமே ஆராதித்து பெருமைப் பட்டுக் கொள்வார்கள்...

அப்போது அந்த குணத்தை எண்ணி அவர்கள் நொந்து நூலாகப் போனார்கள்.. இப்படி எடுத்த எடுப்பில் திருமண நாளைக் குறிக்கும் பேச்சிற்கு சங்கர் போய் விடுவான் என்று அவர்கள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை...

ஏதோ காதல் அது.. இது என்று சொல்கிறானே... அது யார்வீடாக இருக்கும் என்று போய்த்தான் பார்ப்போமே என்ற நினைவுடன் கூட வந்தவர்கள்.. அவனது உறுதியான முடிவைக்கண்டு அரண்டு விட்டார்கள்...

எப்படி இவன் பேச்சை நிறுத்துவது என்று அவர்கள் தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கையிலே..

அவர்களுக்கு எதிர்பாராத இடத்திலிருந்து உடனடியாக உதவிவந்தது...

சங்கர் சொன்னதைக் கேட்டதும்... ஆயிரம் வாட்ஸ் பல்புகள் முகத்தில் ஒளிர.. ஆனந்தமாக கணவனைப் பார்த்த ராஜேஸ்வரிக்கு.. அவர் முகத்திலும் அந்த வெளிச்சமில்லாதது அப்போதுதான் உறைத்தது...

'இந்த மனுசன் ஏன் இப்படி இருக்கிறாரு..?' அவள் கவலைக்கு ஆளானாள்...

அதற்கேற்றாற்போல... அவ்வளவு நேரமும் வாயை மூடிக் கொண்டிருந்த அந்த மனிதர்.. அப்போது பார்த்து வாயைத் திறந்தார்...

"அவசரப்பட வேணாம் ராஜி... இது கல்யாண விசயம்... எடுத்தேன்.. கவிழ்த்தேன்னு முடிவெடுக்கக் கூடாது... ஆற.. அமர... நாலையும் யோசிச்சுத்தான் முடிவெடுக்கனும்..."

அவரது பேச்சில் 'அப்பாடா...' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள் ராமாமிர்தமும்.. வனஜாவும்...

"ஐ அக்ரி வித் யுவர் வெர்டுஸ் மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி..."

உடனடியாக தனது ஒப்புதலை அளித்தார் ராமாமிர்தம்...

அது நேரம்வரை யாருக்கு வந்த விருந்தோ என்று அமர்ந்திருந்த சங்கரைப் பெற்றவர் அப்போது மட்டும்

காட்டிய சுறுசுறுப்பைக் கண்டதும் ராஜேஸ்வரியின் புருவங்கள் முடிச்சிட்டன...

"ஷ்யூர்.. ஷ்யூர்.. சங்கர்.. டாடி சொல்கிறதைக் கேட்டாயில்லையா...? நாம் இதை யோசித்து ஒரு முடிவிற்கு வரலாம்..."

சட்டென்று எழுந்து விட்டாள் வனஜா... அதற்கு மேலேயும் அங்கே அமர்ந்திருந்தால் மகன் திருமண நாளை உறுதி பண்ணாமல் கிளம்ப மாட்டான் என்ற பயம் அவளைப் பிடித்துக் கொண்டது...

எழுந்து கொண்ட வனஜாவை பின்பற்றி ராமாமிர்தமும் எழுந்து கொள்ள முயன்றபோது.. சங்கர் அவரை தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தான்... எழுந்து கொள்வதை மறந்து அவர் அப்படியே ஆணியடித்ததைப் போல சோபாவில் அசையாமல் அமர்ந்து விட்டார்..

அடுத்ததாக அவன் பார்வை தன் மேல்தான் பாயக்கூடும் என்பதை தெளிவாக தெரிந்து வைத்திருந்த வனஜா.. அவன் பார்க்கும் முன்னாலேயே அவசரமாக உட்கார்ந்தாள்...

அவளைப் பார்க்க வேண்டிய அவசியமில்லாமல் போக.. சங்கர் ராஜேஸ்வரியைப் பார்த்தான்...

"இதில யோசிக்க என்ன இருக்கு ஆண்ட்டி... எதையும் இப்போதே தெளிவாகப் பேசி ஒரு முடிவுக்கு வந்து விடலாம்தானே..." என்று கோரிக்கையொன்றையும் வைத்தான்...

கணவரின் கடுமையான கண்டனப் பார்வைக்கு ஆளானபின்... தானாக வார்த்தைகளை விடுவது உசிதமாகாது என்ற உணர்வுடன் கிருஷ்ணமூர்த்தியை ஏறிட்டாள் ராஜேஸ்வரி...

"தம்பி சொல்கிறதைக் கேட்டிங்கள்ல... இவருக்கு என்ன பதிலைச் சொல்லலாம்..."

அவளது கேள்வியைத் தொடர்ந்து... சங்கரின் விழிகளும் அவரிடம் அதே கேள்வியைக் கேட்க... நிதானத்தை கைவிடாதவராக பேசினார் கிருஷ்ணமூர்த்தி..

"அதான் சொன்னேனில்ல.. நாலையும் யோசிக்கனுமுன்னு..."

"அந்த நாலும் என்ன அங்கிள்... அதைப்பற்றி இப்போதே யோசித்து விடலாமே..." சங்கர் நேரடியாக கிருஷ்ணமூர்த்தியிடம் கேட்டான்...

அவன் ராஜேஸ்வரியை விட்டுவிட்டு.. அவரிடம் பேச்சுவார்த்தையை ஆரம்பித்ததில் கிருஷ்ணமூர்த்திக்கு மகிழ்ச்சிதான்... ஒருவழியாக அவரை குடும்பத்தலைவன் என்று அவன் கணக்கில் எடுத்துக் கொண்டதில் அவருக்கு திருப்திதான்... அவரோடு பேச்சுவார்த்தைக்கு அவன் தயாரானதில் அவருக்கு பெருத்த வெற்றிதான்...

ஆனாலும்... அவருக்கு யோசிக்க வேண்டியிருந்தது...

சங்கர் மிகமிக அழகாகவும்... கவர்ச்சியாகவும் இருந்தான்... பெரிய கோடிஸ்வரனாகவும்... அந்த இளம் வயதில் மிகப்பெரிய தொழிலதிபனாகவும் இருந்தான்...

அப்படிப்பட்டவன் பெண் கேட்டு வந்திருக்கிறான்... அதைக் கேட்ட ராதிகாவின் முகத்தில் துளிக்கூட மகிழ்வின் சாயல் தெரியவில்லை...

இதைப்பற்றி அவர் யோசிக்க வேண்டியிருந்தது...

சங்கருக்குத்தான் ராதிகாவைப் பிடித்திருந்தது.. அவனைப் பெற்றவர்கள் அவனுக்காகவே அந்த வீட்டில் காலடி வைத்ததாக வெளிப்படையாகவே அறிவித்து விட்டார்கள்.. அத்தோடு... அவர்களிடம் அலட்சிய பார்வை குடிகொண்டிருந்தது... ராஜேஸ்வரி குடுத்த காபி... டிபனை மரியாதைக்குக் கூட அவர்கள் ருசி பார்க்கவில்லை... லேசான புருவச் சுளிப்புடன் அவற்றைத் தொடாமல் அப்படியே டீப்பாயின் மேல் வைத்துவிட்டார்கள்...

அவர்களின் பார்வை... அந்த வீட்டின்மீது அதிருப்தியுடன் படிந்து சுழன்றது... கீதாவையும்.. சுந்தரையும் ஏதோ வேற்றுக்கிரக வாசிகளைப் பார்ப்பதைப் போல பார்த்து வைத்தார்கள்... ராஜேஸ்வரியின் பேச்சுக்கு அவர்கள் பதில் பேச்சு பேச முனையவில்லை... நீயெல்லாம் எனக்கு இணையாக நின்று பேசுவதா என்ற தலைக்கனம் அப்பட்டமாக அதில் வெளிப்பட்டது...

கிருஷ்ணமூர்த்திக்கும்... ராஜேஸ்வரிக்கும் ராதிகா ஒற்றைப் பெண்ணில்லை... அவளுக்கு அடுத்து கீதாவும்.. சுந்தரும் இருந்தார்கள்... ராதிகாவுக்கு வரப்போகும் கணவனின் வீட்டார் இந்த மாதிரி மதிப்பு.. மரியாதையைக் காட்டினால்.. அடுத்து வரும் சம்பந்திகளின் வீடுகளிலும்

இதைப் பற்றியும் அவர் யோசிக்க வேண்டியிருந்தது..

ஒரு வீட்டில் மருமகளாக வாழப் போகும் பெண்ணிற்கு கணவன் மட்டும் சரியானவனாக அமைந்து விட்டால் போதுமா...? தனிக் குடித்தனமாக இருந்தால் அது போதும் தான்... இங்கே கதையே வேறு... சங்கர் அவனுடைய பெற்றவர்களுக்கு ஒரே மகன்.. கடைசி வரை மாமனார்.. மாமியாருடன்தான் அவனது மனைவி குப்பை கொட்டியாக வேண்டும்.. அவ்வாறு குப்பை கொட்ட வைப்பதில் கிருஷ்ணமூர்த்திக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை... அது நியாயம் என்றுதான் அவர் நினைத்தார்.. அப்படி குப்பை கொட்டும் பொறுமை.. பொறுப்பு.. குணத்துடன்தான்... ராதிகாவையும் அவர் வளர்த்திருந்தார்...

அப்படிக் குப்பை கொட்ட வேண்டிய சூழ்நிலையில் ராதிகாவை சங்கரைப் பெற்றவர்கள் வேண்டாத மருமகளாக நடத்தினால் ராதிகாவால் அதை எதிர் கொள்ள முடியுமா..? அவர்களின் உதாசீனத்திற்கு வாழ்க்கை முழுவதும்... ராதிகா ஆளாகிக் கொண்டிருக்க வேண்டி நேர்ந்தால்... அவளால் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா...?

இதையும் அவர் யோசிக்க வேண்டியிருந்தது...

அவரோ நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்.. சங்கரோ கோடிஸ்வரன்.. மேல் தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவன்... இன.. மொழி.. வேறுபாட்டைப் போல... இந்த வர்க்க பேதமும் யோசிக்கப் படக் கூடிய ஒன்றுதான்...

'இந்த மிடில்கிளாஸ் பழக்கத்தை மாத்திக்கவே மாட்டியா...'

'இன்னும் ஹை கொலஸ்ட்டி பழக்க வழக்கத்துக்கு நீ கன்வர்ட் ஆகவே இல்லியா...'

'இது மிடில்கிளாஸ் யோசனை...'

'நாங்கள்ளாம் இப்படித்தான்...'

இதுபோன்ற பேச்சுக்கள் வாழ்நாள் முழுவதும் ராதிகாவை தொடர்ந்து வரும் அபாய அறிகுறிகள் உள்ளனவே.. அந்தப் போராட்டத்தை ராதிகாவால் கடைசிவரை போராடிக் கொண்டிருக்க முடியுமா..?

இதைத்தான் அவர் முக்கியமாக யோசிக்க வேண்டியிருந்தது...

இந்த நான்கில் ஒன்றைக்கூட.. சங்கரையும்.. அவனைப் பெற்றவர்களையும் வைத்துக் கொண்டு அவரால் வெளியே சொல்ல முடியாது எனும் போது.. நான்கையும் சொன்னால்தான் ஆயிற்று என்று சங்கர் அடம் பிடித்தால்... அவர் பாவம்.. என்ன செய்வார்...?

"இல்லை.. நாம் இன்னொரு முறை சந்திக்கும் போது மேற்கொண்டு என்ன செய்யலாமுன்னு யோசிக்கலாம்.." அவர் பட்டுக்கத்தரித்தார்...

"ஓகே..."

அதற்கு மேலும் அவரை சோதிக்க விரும்பாமல் சங்கர் எழுந்து கொண்டான்.. அதற்காகவே

காத்திருந்ததைப் போல ராமாமிர்தமும்.. வனஜாவும் எழுந்து கொண்டதைக் கவனித்த கிருஷ்ணமூர்த்திக்கு என்னவோ போல இருந்தது...

'இதுக்கு இவங்க இந்த இடத்தில பெண் கேட்க வேணாம்ன்னு மகனிடம் சொல்லிட்டு வராமலேயே இருந்திருக்கலாமே...'

வந்தவர்களை வழியனுப்ப ராஜேஸ்வரி வாசலுக்குப் போக.. கிருஷ்ணமூர்த்திக்கு அவளுடன் போக மனமில்லை... அவர் தேங்கி நின்று.. ராதிகாவின் முகத்தைப் பார்த்தார்... அதில் தெரிந்த கலவரம் அவரை பாதித்தது...

'பாவம்.. என் குழந்தை... இப்படிப் புயலைப் போல அவங்க வந்து போனா... இவளுக்கு அதிர்ச்சியாத்தானே இருக்கும்...?'

"போம்மா... போய் முகத்தை கழுவி.. டிரெஸ் சேன்ஜ் பண்ணிட்டு ரிலாக்ஸாய் காபி சாப்பிடு..." பரிவுடன் மகளைப் பார்த்துச் சொன்னார்...

ராதிகாவிற்கு அவரின் அந்த வார்த்தைகள் இதமாக இருந்தன... அவளுக்கு உடனடியாக தனிமை வேண்டியிருந்தது... சங்கரின் இந்த அதிரடித் தாக்குதலில் இருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்திக்க வேண்டியிருந்தது...

"தேங்க்ஸ்ப்பா..." ராதிகா அவளுடைய அறைக்கு விரைந்தாள்...

வந்தவர்களை வழியனுப்பி விட்டுவந்த ராஜேஸ்வரி மகளைக் காணாமல் புருவங்களை உயர்த்தினாள்...

"ராதிகா எங்கே..?"

"அவரூமுக்கு போயிட்டா..."

"எதுக்காம்..?"

"இது என்னடி கேள்வின்னு கேட்டு வைக்கிற... காலையில காலேஜீக்கு கிளம்பிப் போனவ.. இப்பத்தான் வீடு வந்து சேர்ந்திருக்கா.. வந்தவளுக்கு குடாய் ஒரு கப் காப்பியக் கொடுக்கனுமுன்னு உனக்கு தோணுச்சா..."

"அதைத்தான் தினமும் கொடுக்கறேனே.. இன்னைக்கும் அதேதானா..?"

"இப்பவும் கொடு... அவ முகம் கழுவி.. டிரஸ் சேன்ஜ் பண்ணப் போயிருக்கா..."

"இப்ப அதுதான் ரொம்ப முக்கியம்..."

"வேற எதுடி முக்கியம்...?"

"ஏங்க... நீங்க விவரத்தோடதான் பேசறிங்களா..?"

"ஆமாண்டி.. இந்த வீட்டில் நீ ஒருத்தி மட்டும்தான் விவரம்... மத்தவங்க எல்லாம் சைபர்தான்.."

"இந்த வீதுபோட இதுவா நேரம்...?"

"சும்மா... இதுவா.. இப்பவான்னு தாண்டிக் குதிக்காதே.. இப்ப என்ன நடந்து போச்சுன்னு நீ ஆகாயத்துக்கும்... பூமிக்குமா தாண்டிக் குதிக்கற...?"

இப்படிக் கேட்ட கணவரை விசித்திரமாகப் பார்த்தாள் ராஜேஸ்வரி...

'எப்படிப்பட்ட சம்பந்தம் தேடி வந்திருக்கு.. இந்த மனுசன் என்னன்னா... இப்படி... எனக்கென்னன்னு ஒரு பார்வை பார்த்துக்கிட்டு நின்னு வைக்கிறாரே...' அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

"எனக்கு நல்லா வந்திரும் வாயிலே..." என்று அவள் ஆரம்பிக்க... அதுநேரம் வரை அவர் காட்டிய அனு சரணையான தோற்றத்தில்... வீடு மாறி வந்து விட்டோமோ என்ற பலத்த சந்தேகத்துடன் இருந்த கீதாவும்.. சுந்தரும்.. இது அவர்களுடைய வீடுதான்... ராஜேஸ்வரி அவர்களின் அன்புக்குரிய அம்மாதான் என்று உறுதியானவர்களாக.. ஒருவரையொருர் பார்த்து கண் சிமிட்டிச் சிரித்துக் கொண்டார்கள்...

"உனக்கு எப்படி வேணும்னாலும் வந்திட்டுப் போகட்டும்.. இப்போதைக்கு தொன தொணக்காம காபியை கலந்து கொடு..."

"இப்பத்தானே குடிச்சீங்க..?"

"வந்திருந்த ஜீவராசிகளின் முன்னாலே... மனுசனுக்கு தொண்டையில பச்சைத் தண்ணி இறங்குமாடி..?"

இப்படிக் கேள்வி கேட்டவரிடம்...

"பச்சைத் தண்ணிதானே இறங்காது.. காபி இறங்கியிருக்குமில்ல..?" என்று எதிர் கேள்வி கேட்டாள் ராஜேஸ்வரி...

"ஏண்டி கேட்க மாட்டே... வம்பாடு பட்டு இந்தக் குடும்பத்துக்காக உழைச்சுக் கொட்டறேனில்ல... நீ இதுவும் கேட்ப... இன்னமும் கேட்பே.."

சாதுவான கிருஷ்ணமூர்த்திக்கே கோபம் வந்து விட்டது...

அதற்கெல்லாம் அலட்டிக் கொள்கிறவளில்லை ராஜேஸ்வரி... அவள் அவரது கோபத்தை கண்டு கொள்ளவேயில்லை...

"இந்தக் குடும்பத்துக்கு உழைச்சுக் கொட்டாம வேற எந்தக் குடும்பத்துக்கு உழைச்சுக் கொட்டப் போறிங்க..? இந்த ரெண்டு மாசமா சம்பளக் கவரில பணம் குறையுதே.. என்ன விவகாரம்ன்னு விசாரிக்கனும்னு நினைச்சேன்.. இதுதானா அது..?"

இப்படியெல்லாம் பேசி வைக்க ராஜேஸ்வரியால் மட்டும் தான் முடியும்...

"அம்மா... பாவம்.. நம்ம அப்பாவுக்கு அவ்வளவுக்கெல்லாம் தைரியம் பத்தாதும்மா...," கீதா தகப்பனாருக்காக பரிந்து பேசி விட்டு வாங்கிக் கட்டிக் கொண்டாள்...

"அவருக்கு தைரியம் பத்தாதுன்னு நீ தூண்டிவிடறயா..? வயசுப் பெண் பேசற பேச்சா இது..?"

'நீங்க மட்டும் வயசுப் பெண்ணுக்கு முன்னாலே இன்னொரு குடும்பத்தைப் பத்திப் பேசலாமா..?'

ஆனானப்பட்ட குடும்பத் தலைவரான கிருஷ்ணமூர்த்தியையே வாயைத் திறக்க விடாமல்.. எனக்கு நல்லா வந்திரும் வாயிலே என்று வார்த்தைக்கு வார்த்தை பேசி மிரட்டி வைத்திருக்கும் ராஜேஸ்வரியின் முன்னால் வாய்விட்டு கீதா மட்டும் பேசிவிட முடியுமா என்ன..?

அவள் மனதிற்குள் பேசியபடி வெற்றிகரமாக பின் வாங்கினாள்...

"எல்லாம் இவர் கொடுக்கிற இடம்டி... பேச வேண்டியவள ரூமுக்குள் துரத்தி விட்டுட்டு.. உன்னைப் பேசவிட்டு அழகு பார்க்கிறாரே.. இந்த மகராசன்.. இவரைச் சொல்லனும்டி.. உன்னைச் சொல்லக் கூடாது.."

கிருஷ்ணமூர்த்திக்கான மண்டகப்படி தொடர்ந்து கொண்டிருந்தது...

என்னென்னவோ மனதில் நினைத்தேன்..
சொல்லிடத்தான் வார்த்தையில்லை...

சப்தம் செய்யாமல் மாடியேறி வந்தாள் கீதா... அங்கே.. மொட்டை மாடியின் கைப்பிடி சுவரில் சாய்ந்து

அமர்ந்து வானிலிருந்த நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருந்தாள் ராதிகா...

'ஏன்.. இவ எப்பப் பார்த்தாலும்.. ஒரு மார்க்கமாகவே இருந்து வைக்கிறா...?'

மனதில் கேள்வி எழ... சந்தடி செய்யாமல் ராதிகாவின் முன்னால் போய் நின்றாள் கீதா...

வான்வெளியில் சூன்யவெளியை வெறித்துக் கொண்டிருந்த ராதிகாவுக்கு தூக்கிவாரிப் போட்டது...

"ஏண்டி பிசாசே... சொல்லிட்டு வரமாட்டியா..? இப்படியா திடுதிப்புன்னு இருட்டுக்குள்ள வந்து நின்று பயமுறுத்துவ...?"

"பயமா..? உனக்கா..? இதை என்னை நம்பச் சொல்றியா..?"

"ஏண்டி..? நான் பயப்படமாட்டேனா..?"

"அது அப்போ.."

"இப்போ மட்டும் என்ன வந்து தொலைச்சுச்சாம்.."

"பயமே உன்னைப் பார்த்து பயப்படுதோன்னு எனக்கொரு சந்தேகம் வந்து தொலைச்சிருக்கடி ராது..."

"ப்ச்ச்..."

ராதிகா எரிச்சலுடன் 'உச்' கொட்டிவிட்டு முகம் திருப்பிக் கொள்ள.. அவளருகில்.. அவளைப் போல கைப்பிடி சுவரில் முதுகை சாய்த்து.. சாய்ந்து உட்கார்ராமல் கைப்பிடி சுவரிலேயே அமர்ந்தாள் கீதா..

"ஏண்டி அங்கே உட்கார்ந்து தொலைக்கிற..?"

"எல்லாம் உன் முடி கோதிவிட வசதியாய் இருக்குமேன்னுதான்..."

கீதாவின் பேச்சு இங்கேயிருக்க.. பார்வை எங்கோ இருப்பதை கவனித்த ராதிகா கடுப்பானாள்...

"உனக்கு எதுக்கு வசதியாய் இருக்கும்ன்னு எனக்குத் தெரியாதா..? அங்கே யாரு நிக்கிறது..? எதிர் வீட்டுத் தடியனா..?"

"ஊஹிம்... பக்கத்து வீட்டு முரடன்..."

"ஏண்டி.. இப்படி எங்க உயிரைப்போட்டு வாங்குற..?"

"இந்த டயலாக்கை உன்னை நினைச்சுத்தான் இவ்வளவு நேரமா கீழே லேடிஹிட்லர் கத்திக்கிட்டு இருந்தாங்க..."

"ம்ச்ச்..."

மீண்டும் 'உச்' கொட்டிவிட்டு ராதிகா அடங்கிப் போக.. அவளை யோசனையோடு பார்த்தாள் கீதா...

"உனக்கு என்னதான் பிரச்னை ராது.. என்கிட்டக் கூட சொல்ல மாட்டியா...?"

தங்கையின் அனுசரணையான பேச்சில் கண் கலங்கி விட்டாள் ராதிகா... ஒரு வினாடி.. தன் மனதிலிருப்பதை இவளிடம் கொட்டிவிட்டால் என்ன என்று அவளுக்குத் தோன்றியது.. மறுநொடியில் அந்த எண்ணத்தை மனதிலிருந்து அழித்தாள்...

எந்த நம்பிக்கையின் அடிப்படையில் அவள் மனதிலிருப்பதை வெளியில் சொல்லுவாள்..?

பாலமுரளி அவளிடம் காதல் சொன்னான்தான்.. அதோடு சேர்த்து அவள் சங்கரைக் காதலிக்கிறாள் என்ற குற்றச்சாட்டையும் சேர்த்துச் சொன்னான்.. அவளை முதன் முதலாக தொட்டுத் தழுவி.. முத்தமிட்டவன்.. மறுநாளே.. காற்றில் கலந்த புகைபோல மாயமாய் மறைந்து விட்டான்.. அவளுக்காக தினந்தோறும்.. தெருமுனையில் காத்திருந்ததாக கூறியவன்.. அவளை தொட்டபின்னால்.. எந்த முனையிலும் கண்களுக்கு தென்படாமல் சென்று விட்டான்...

இப்படிப் பட்டவனுடன் நடந்த காதல் நிகழ்வுகளைப் பற்றி எப்படி அவளால் வெளியில் சொல்ல முடியும்...?

அவன் அவளுடைய காதலை அறியவில்லை.. அவள் மனதில் அவனைக் கண்டதும் பற்றிக் கொண்ட மோகத் தீயைப் பற்றி தெரிந்து கொள்ளவில்லை... மாறாக.. சங்கரின் கவர்ச்சியைக் கண்டு அவள் மோகித்து விட்டதாக அவளைக் குற்றம் சாட்டினான்.. பட்டிக் காட்டை வெறுத்து.. பட்டணத்தின் நாகரிகத்தில் அவள் மூழ்கிவிட்டதாக தீர்ப்புக் கூறினான்... சங்கரும் அவளும் காதலித்துக் கொண்டிருப்பதாக முடிவே எடுத்து விட்டான்...

அவனைத் தேடிப்பிடித்து உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் அவன் இருக்குமிடத்திற்கு அவள்

போக வேண்டும்... தென்காசியின் அருகிலிருக்கும் தேனூத்தூ கிராமம் என்ற ஒரே அடையாளத்தை வைத்துக் கொண்டு... அவன் ஊர் தேடி அவள் செல்ல முடியுமா..? அப்படியே சென்றாலும்.. அடுத்தவனை அவள் காதலித்து விட்டதாக அவன் முடிவே கட்டிவிட்ட பின்பு... அவன் முன்னால் எதைச் சொல்லிக் கொண்டு அவளால் நிற்க முடியும்...?

எதைச் சொன்னாலும்.. அவன் நம்புவானா...? அவள் சொல்வதை காது கொடுத்துத்தான் கேட்பானா..?

அவன் தொட்டதைச் சொல்லலாம்.. அதனால் உன் கற்பு பறிபோய் விட்டதா என்று அவன் கேட்டுவிட்டால்.. அந்த நொடியில் அவள் குற்றுயிராய் ஆகிவிட மாட்டாளா..?

அவன்தான் முதன் முதலாய் அவளைத் தொட்ட ஆண்மகன் என்று அவள் எடுத்துச் சொன்னால் அவன் சிரிக்க மாட்டானா...?

காலேஜிலும்.. லைப்ரரியிலும்.. கோவிலிலும்... பார்க்கிலும்.. அந்த சங்கர்கூடச் சுற்றினாயே... அவன் உன்னைத் தொடவில்லையா..? யாரிடம் காது குத்தப் பார்க்கிறாய் என்று கேட்க மாட்டானா...?

எந்தப் பக்கம் போனாலும்.. அங்கே வழி அடைத்திருக்க.. மூச்சுத்திணறிப் போனாள் ராதிகா... அவளது அந்தரங்க மனதில் அவன் முகம் பதிந்திருப்பதை

எப்படி இந்த உலகத்தின் முன்னால் சொல்வது என்ற வழி தெரியாமல் திகைத்துப் போனாள்...

அவனின் கோப முகத்தைக் காட்டாமல்... அவன் மட்டும் கொஞ்சமேனும் சாந்த முகத்தைக் காட்டிச் சென்றிருந்தால்.. ராதிகாவிற்கு சிறிதளவாவது நம்பிக்கைக் கீற்றின் வெளிச்சம் பரவியிருக்கக் கூடும்...

அப்படியில்லாமல்.. அவன் கோபத்தை மட்டுமே காட்டி.. அவளை குற்றவாளியென்று அறிவித்துவிட்டுச் சென்றுவிட்டான்.. அவனது குண இயல்புகளைப் பற்றிய ஒருவிவரமும் அறியாத ராதிகா பயந்து போய் விட்டாள்..

"ராது.. என்னடி.. ஏதும் பேச மாட்டேன்கிற... என்னன்னுதான் சொல்லுடி..."

கீதா அவள் தோள் தொட்டு அசைத்தாள்...

'என்னவென்று சொல்லுவது..? ஒரு நாளின் பின் மாலைப் பொழுதும்.. முன்னிரவுப் பொழுதும் சந்தித்துக் கொண்ட அற்புதமான ஒரு பொழுதில் அவனைச் சந்தித்தேன்... அவன் பார்வையும்.. பேச்சும்.. என்னைப் போலவே இயல்பான குணம் கொண்டவனாக.. அவனிருப்பதை எனக்கு அறிவுறுத்தின... அவன் பாடலும்... என்பாடலும்.. ஒன்றோடொன்று தொடர்ந்து வெளிப்பட்டு எங்களுக்கிடையே சொல்லத் தெரியாத ஒரு சொந்தத்தை ஏற்படுத்தின... நம்வீடு வரை அவன் வந்ததுதான் உனக்குத் தெரியும்.. என் அந்தரங்க

மனதின் அடி ஆழத்திலும் அவன் வந்து விட்டதை நீ அறிய மாட்டாய்.. இத்தனை காதலும் அவன்மீது என் அந்தரங்கத்தில் இருக்க.. அவன் வேறொருவனுடன் எனை இணைத்துப் பேசி பழி சுமத்தி விட்டான்.. பேசியவன் சும்மாவும் போகாமல் எனைத் தொட்டுத்தழுவி.. பின் விட்டு விலகிச் சென்றான்.. அவன் சென்ற திசை அறியாமல் பித்துப் பிடித்து நான் அலைந்து கொண்டிருக்கும் போது.. எவனுடன் எனை இணைத்து அவன் பழி போட்டானோ.. அந்த சங்கரே என்னைப் பெண் கேட்டு.. என் எதிரில் வந்து நிற்கிறான்.. இந்த வினையை நான் எங்கு போய் சொல்ல.. ?'

"ராது..."

மௌனத்தில் புதைந்து நின்ற ராதிகாவை பயத்துடன் பார்த்தாள் கீதா... இப்படி அவளிருந்து கீதா பார்த்ததேயில்லை.. ராதிகா இருக்குமிடத்தில் மௌனம் இருக்காது.. கலகலப்பு மட்டுமே குடியிருக்கும்...

"என்னைப் பாருடி..."

பக்கத்து வீட்டு மாடியை மறந்து.. ராதிகாவின் அருகே தரையில் சரிந்து அமர்ந்தாள் கீதா...

"என்னன்னு சொல்லுடி..."

இதமான அவளது பேச்சில் ராதிகா குழுங்கி அழுது விட்டாள்.. அதற்கு முன்னால்.. அவள் அழுது பார்த்திராத கீதா பதறிப் போனாள்...

"என்னராது... ஏன் இப்படி குழந்தை போல அழுகிற..?"

"எனக்கு அவனைப் பிடிக்கலைடி..."

"எவனை..?"

"அந்த சங்கரை..."

இதைக் கேட்ட கீதாவிற்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை... அப்பேற்பட்ட அழகன்.. கோடிஸ்வரன்.. வெளிநாட்டுக் காரில் வந்து இறங்கி.. ராதிகாவை பிடித்திருப்பதாகக் கூறி.. பெண் கேட்கிறான்.. அதைக் கேட்டதும்.. அதிர்ஷ்டம் வந்து விட்டதாக மகிழ்ந்து போகாமல்.. அவனைப் பிடிக்கவில்லையென்று இவள் அழுது வைக்கிறாளே...

"ராதிகா.." மெதுவான குரலில் அவள் அழைத்தாள்..

"ம்ம்ம்..." ராதிகாவின் விசும்பல் அடங்கவில்லை...

"யாரையாவது நீ காதலிக்கிறாயா..?" ஆழ்ந்த குரலில் கீதா கேட்கவும்.. ராதிகாவிற்கு திக்கென்று ஆகிவிட்டது...

கீதா விவரமானவள்தான்.. ஆனால்.. ராதிகாவின் அந்தரங்க மனதைப் பற்றி அறிந்து கொள்ளும் அளவிற்கு விவரமானவளா...?

அவளது கேள்விக்கு இல்லையென்று பதில் சொல்ல ராதிகாவினால் முடியவில்லை.. அதே சமயம்.. ஆமாம் என்று பதிலைச் சொல்ல வழியுமில்லை... அதனால்..

"உளராதேடி.." என்று எரிந்து விழுந்தாள்...

"இதோ பார்.. எதுவாக இருந்தாலும்.. என்னிடம் சொல்லு.. அதை விட்டுவிட்டு.. ஒங்கிப் பேசி.. என்வாயை அடைக்கப் பார்க்காதே..."

"அவனைப் பிடிக்கலைன்னா.. வேற ஒருத்தனை காதலித்துத்தான் ஆகனும்கிற கட்டாயம் எதுவும் இருக்கா கீதா...?"

"அப்படியில்லைதான்.. ஆனாலும்.. வந்திருக்கும் மாப்பிள்ளையை இந்த அளவுக்கு நீ வெறுக்க காரணம் எதுவும் இல்லையேடி.."

"காரணம் இருந்தால்தான் பிடிக்காமப் போகனுமா..? அவனைக் கண்டாலே எனக்குப் பிடிக்கலைடி..."

"இதுதானே இடிக்குது... அந்த சங்கரைப் பார்த்தா... எனக்கே உன்மேல் பொறாமை.. பொறாமையாய் வருது.. அழகுன்னா.. அழகு.. அப்படியொரு அழகு.. அவனைப் பிடிக்கலைன்னு எந்தப் பெண்ணாவது சொல்லுவாளா..?"

"நான் சொல்லுவேன்..."

"உன்னை அறிவாளின்னு நினைச்சேன்.. கடைசியில் நீ இவ்வளவுதானா..? அவன்கிட்ட அழகு மட்டுமா இருக்கு..? அறிவும் சேர்ந்திருக்கு... திறமைசாலியா இருக்கான்.. கோடிக்கணக்கில் பணம் கொட்டிக்கிடக்குது... இவனைக் கட்டிக்க உனக்கு கசக்குதா..?"

கசந்ததுதான்.. எட்டிக்காயாய் கசந்ததுதான்.. மாலை மயங்கிய கருக்கல் வேளையில்.. அவளைத் தொட்டு அணைத்து.. அவள் இதழில் முத்தமிட்டுச் சென்றவனின் நினைப்பு மட்டும் அவளது அந்தரங்க மனதில் கரும்பாக இனித்ததுதான்...

இதை எப்படி அவளால் கீதாவிடம் சொல்ல முடியும்..? சொல்லிவிட்டு அவளை ஒரு தமக்கையாக கண்டித்து வைக்க அவளால் முடியுமா..? நீ மட்டும் ஒருவனுடன் ஒட்டி உறவாடலாம்.. அதை உன் அந்தரங்கத்தில் புதைத்து வைத்து.. வேண்டிய பொழுதுகளில் அதை தோண்டியெடுத்து நினைத்து மகிழலாம்.. நான் மட்டும் சைவப் பட்சிணியாக இருக்க வேண்டுமா என்று அவள் கேட்டாலும்.. கேட்டு விடுவாளே.. அவள் பயமறியாத இளங்கன்றுதானே...

ராதிகா அந்தரங்கத்தை மறைத்தாள்.. கீதாவிடம் சங்கரை மறுத்துச் சொல்லக் காரணம் தேடினாள்... அதையேதான் கீதாவும் அவளிடம் வினவினாள்...

"ஒரு காரணம் சொல்லு... ஒரேயொரு காரணத்தை மட்டாங்காகச் சொல்லு.. நான் உன்பக்கம் நிற்கிறேன்.. உன்னால் அதைச் சொல்ல முடியுமா..?"

ராதிகாவினால் அது முடிந்தது.. அவளுக்கு ஒருகாரணம் கிடைத்துவிட்டது...

"நமக்கு நம்வீடு உசத்தி கீது..."

"இதென்னடி பேச்சு.. நம்ம வீடு நமக்கு உசத்தியாத்தானே இருக்கும்... வேற எப்படி இருக்கும்..?"

"சங்கரோட அம்மாவும்.. அப்பாவும்.. நம்ம வீட்டில் உட்காரக்கூட முகம் சுளிச்சாங்களே.. அதை நீ கவனிச்சயா...?"

"அட.. ஆமாம்..."

கீதாவின் முகத்தில் யோசனை படர்வதை.. நிலவின் மெல்லிய ஒளியிலும் ராதிகாவினால் கணிக்க முடிந்தது...

"ந'ம்ம அம்மா போடற காபி எப்படி டீ இருக்கும்..?"

"கள்ளிச் கொட்டைப் போலவே இருக்கும்.."

"அதைக் கையால் கூட அவங்க ரெண்டு பேரும் தொட்டுப் பார்த்தாங்களா..?"

"நானும் அதை நினைச்சேண்டி.. அதென்னடி அதுக ரெண்டுக்கும் அவ்வளவு மண்டைக் கனம்...?"

"இப்போச் சொல்லு.. அந்த வீட்டுக்கு மருமகளாய் நான போனா எனக்கு என்ன மதிப்பிருக்கும்..?"

"நீ சொல்றதையும் யோசிக்கனும்தான்.. ஆனா ராது.. நீ வாழப் போகிறது சங்கர்கூட.. அவங்களைப் பத்தி நீயேன் கவலைப்படனும்..? ஒற்றை மகனுக்கு பெண்டாட்டியாய் வந்தவளை அனுசரித்து வைத்துக் கலைன்னா அவ மகனைப் பிரிச்சு.. தனிக்குடித்தனம் கூப்பிட்டுக்கிட்டு போயிடுவான்னு அவங்க இல்ல.. உன்னை நினைச்சுக் கவலைப்படனும்...?"

இவள் இத்தனை விவரமானவளாக இருந்து தொலைக்கக் கூடாது என்று ராதிகாவின் மனதிற்குள் சலிச்சல் மண்டியது...

'இவளுக்கு மட்டும் புத்தி எப்படியெல்லாம் வேலை செய்து வைக்குது...'

அதீத புத்திசாலியான தங்கையை முறைத்துப் பார்த்தாள் ராதிகா...

"உனக்கேண்டி புத்தி இப்படிப் போகுது...?"

"எப்படிப் போகுது..?"

"அந்த சங்கரே... அவனைப் பெத்தவங்களுக்கு ஒற்றைமகன்..."

"அதைத்தானே நானும் சொல்றேன்..?"

"அவன் எப்படிடீ.. பெத்தவங்களை விட்டுவிட்டு தனிக்குடித்தனமாய் வருவான்...? அதை நீ யோசிக்கவே மாட்டியா..?"

"நீ சொல்லுகிற விதமாய் சொன்னால் அவன் கேட்டுக்க மாட்டானா..?"

கீதாவின் கேள்வி போகும் திசையை உணர்ந்தவளுக்கு கோபம் வந்துவிட்டது..

"ச்சீ.. என்ன பேச்சுன்னு.. இப்படியெல்லாம் பேசற..?"

"நாலையும் தெரிஞ்சு வைச்சுக்கனும்னு நம்ம டீவி ஹிட்லர் அடிக்கடி சொல்லுவாங்க ராது.. நான்

அதைத்தான் தெரிஞ்சு வைச்சிருக்கேன்.. அது உனக்குத் தப்பாத் தோணினா.. நான் என்ன பண்ண...?"

"கீது... ப்ளீஸ்... எனக்கு அவனைக் கல்யாணம் பண்ணிக்கிறதில் இஷ்டமில்லை... என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறவனைப் பெத்தவங்களும்.. சொந்தக்-காரங்களும் என் வீட்டை மதிக்கனும்.. என்னைப் பெத்தவங்களை மதிக்கனும்.. என் கூடப் பிறந்தவங்க கிட்ட பாசமா இருக்கனும்.. அப்படிப்பட்ட இடத்தில்தான் நான் கல்யாணம் பண்ணிக்குவேன்..."

"நீ சொல்கிறதும் சரியாத்தான் இருக்கு... எதுக்கும் இதைப் பத்தி லேடி ஹிட்லர் காதில போட்டு வைக்கிறேன்.."

செய்தியைக் கேட்ட ராஜேஸ்வரி மலையேறி விட்டாள்.. ராதிகாவிற்கு கொஞ்சமாவது அறிவிருக்கிறதா என்று கேட்டாள்.. துரும்பைக் கிள்ளிப் போட்டு.. அதை மாப்பிள்ளையென்று அழைத்து வைத்தால்.. அதுகூட தெனாவெட்டுக் காட்டும் என்று எடுத்துவைத்தாள்.. ஒன்றும் இல்லாதவர்களே (இதைச் சொல்லும் போது.. சுவரில் மாட்டியிருந்த மாமனார்... மாமியாரின் மாலை சூட்டப்பட்ட புகைப்படங்களை பார்த்துக் கொண்டாள்..) ஆட்டம் போடுகிறபோது அப்பேற்பட்ட கோடிஸ்வரர்கள் ஆடமாட்டார்கள் என்ற வினாவை முன்னால் வைத்தாள்...

மொத்தத்தில் ராதிகாவின் மறுப்பை ராஜேஸ்வரி அலட்சியம் செய்தாள்...

33

நானாக நானில்லை...
நீயேன் அதை அறியவில்லை..?

ராதிகாவின் முகம் வாடியிருந்தது.. வகுப்பறையில் கவனமாக குறிப்பெடுப்பவள்... இப்போதெல்லாம் அதைச் செய்யாமல் ஏதோ ஒரு ஆழ்ந்த யோசனையில் இருப்பதை ஷோபா கவனித்தாள்... அது என்னவாக இருக்கும் என்று அறிந்து கொள்ளும் ஆவல் அவள் மனதில் குறுகுறுத்தது...

அதை அறிய வேண்டுமானால் அவள் ராதிகாவிடம் பேசவேண்டும்.. இப்போதெல்லாம் ஷோபா ராதிகாவிடம் பேச்சை வைத்துக் கொள்வதில்லை...

எந்த நோக்கத்திற்காக அவள் ராதிகாவை.. பிறந்தநாள் விழாவிற்கு அழைத்தாளோ... அந்த நோக்கம் தகர்ந்து போனதுமில்லாமல்.. சங்கரின் பார்வையில் ராதிகா பட்டு விட்ட கொடுமையை எண்ணியெண்ணி அவள் மனம் வெந்து போயிருந்தாள்...

அதனால்... ராதிகா எதிரே வந்தால்.. இவள் அந்தத் திசையிலேயே போகாமல்... பக்கவாட்டில் இறங்கி நடக்க ஆரம்பித்து விட்டாள்...

"பரவாயில்லையே.. ஒரேயொரு நாள் அவ வீட்டு பர்த்டே பார்ட்டிக்கு போய்... அவளை உன்னைக் கண்டாலே ஒடுகிற அளவுக்கு ஆக்கி வைச்சிட்டயே.. கொட்டிக்காரிதான்..."

ஹேமா கூட ராதிகாவைப் பாராட்டும் அளவிற்கு.. ஷோபா.. ராதிகாவைக் கண்டால்... காத தூரம் விலகி நடந்தாள்..

அப்படியிருக்கையில்.. ராதிகாவின் முகவாட்டத்திற்கான காரணத்தை எப்படி கண்டு பிடிப்பது..?

ஷோபா... பக்கத்திலிருந்த காயத்ரியைப் பார்த்தாள்..

"என்னடி..?" அவள் புருவம் உயர்த்தினாள்...

"அவ ஏண்டி முகத்தை ஒரு முழ நீளத்துக்கு தொங்கப்போட்டுக்கிட்டே அலையறா..?" ஷோபா கேட்டாள்..

'எவ..?' என்று பதிலுக்கு காயத்ரி கேட்கவில்லை...

ஷோபா குறிப்பிடும் அந்த 'அவ...' எவள் என்று அவளுக்குத் தெளிவாகத் தெரியும்..

"அதைத் தெரிஞ்சுக்கிட்டு நீயென்னடி பண்ணப் போற..?"

"பலமான அடியை அவ வாங்கியிருந்தான்னா.. உனக்கு ட்ரிட் வைக்கலாம்கிற எண்ணம்தான்..."

"அடிப்பாவி..." என்று சொன்னாலும்... காயத்ரி ராதிகாவின் பக்கத்தில் போகத்தான் செய்தாள்...

அவள் வந்ததைக் கூட உணராமல் கன்னத்தில் கையை வைத்து.. ஏதோ ஒரு கவலையுடன் அமர்ந்திருந்தவளைப் பார்த்து...

"ராதிகா..." என்று அன்பொழுக அழைத்தாள் காயத்ரி...

"ம்ம்ம்" மௌனம் கலைத்து விழியுயர்த்தினாள் ராதிகா...

"ஏன்.. என்னவோ போல இருக்கே..?"

"இல்லையே... நான் நல்லாத்தான் இருக்கேன்.."

"பொய்.. நீ சரியாய் இல்லைன்னு ஷோபாவே கண்டு பிடிச்சிட்டா.. நீயானா சமாளிக்கப் பார்க்கிற..."

இதைக் கேட்ட ராதிகா சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.. அது நேரம்வரை அவளையே பார்த்துக் கொண்டிருந்த ஷோபா... அவசரமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்... அப்பொழுதுதான் ராதிகாவின் மூளையில் மின்னல் அடித்தது... அந்த அற்புதமான யோசனையும் வந்தது...

'இவளை மறந்துட்டேனே..'

சிக்கலைத் தீர்க்கும் நூல் முனையைக் கண்டுபிடித்து விட்டதும்.. அவளுக்கே இயல்பான அந்த கூறுகூறுப்பும்.. துறுதுறுப்பும் கணப்பொழுதில் அவளிடம் திரும்பி வந்து விட்டன...

"அப்படியா.. அவளுக்கு என்மேல் அவ்வளவு அக்கறையா...?"

"ஆமாம்கிறேன்.."

"நம்ப முடியலையே..."

"நீ.. நம்பித்தான் ஆகனும்... என்னிடம் அவளே சொன்னா..."

"என்ன சொன்னா..? நான் கவலையாய் இருக்கிறதை கன்பர்ம் பண்ணிட்டு வந்தா.. உனக்கு ட்ரீட் கொடுக்கிறேன்னு சொன்னாளா...?"

ராதிகா சிரிக்காமல் கேட்க.. காயத்ரியும் யோசிக்காமல்...

"அட.. எப்படிக் கண்டு பிடிச்ச..?" என்று சொல்லி விட்டாள்...

"அதானே பார்த்தேன்..." என்று ராதிகா சொன்னதுமே.. காயத்ரியின் முகத்தில்.. குடம்.. குடமாய் அசடு வழிந்தது...

"ஏண்டி... அவ என்ன சொல்லி விட்டிருப்பான்னு எனக்குத் தெரியாதா...? இதைக் கண்டு பிடிக்க.. வெத்தலையில் மை தடவி... ஜோஸியமா பார்க்கனும்..? அவபுத்தி இப்படித்தானே போகும்...?"

"விடு ராதிகா... அவளுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்..."

"ஊஹீம்... அவளுக்குத் தெரியாதது நிறைய இருக்கு..."

"என்ன.. என்ன..?"

"மெதுவா.. மெதுவா.. எதுக்குடி அவளுக்கு தகவல் சொல்ல இவ்வளவு வேகம் காட்டறே..? என்னவோ கொள்கை பரப்பு செயலாளர்ன்னு சொல்லுவாங்களே... அதைப்போல.. நீ அவளுக்கு தகவல் அறிந்து சொல்லும் செயலாளரா...?"

"ஏண்டி... என்னைப் போட்டு இந்தத் தாக்கு தாக்கற..?"

"அதானே... நீ வெறும் அம்புதானே... உன்னைத் தாக்கக் கூடாது... உன்னை அனுப்பியவளைத் தாக்கனும்.. ஆனா பாருடி... அதைவிட முக்கியமாய் எனக்கு ஆயிரம் வேலையிருக்கு.. அதனால.. போனாப் போகுதுன்னு விட்டு வைக்கிறேன்..."

அவர்கள் பேசிக் கொள்வதை தெளிவாக கேட்டுக் கொள்ளும் தூரத்தில்தான் ஷோபா அமர்ந்திருந்தாள்.. ராதிகா ரகசியம் பேசினாலே அவளுக்கு கேட்டிருக்கும்.. அப்படியிருக்க... ராதிகா.. வேண்டுமென்றே குரலை உயர்த்திப் பேசினால்.. அவளுக்கு கேட்காமல் போகுமா..?

அவளுக்கு ராதிகா பேசிய ஒவ்வொரு வார்த்தையும்.. அட்சரசுத்தமாக கேட்டு வைத்தது...

'இவ என்னைப் போனாப் போகுதுன்னு விட்டு வைக்கிறாளா..?'

ராதிகாவின் திமிரை எண்ணி அவள் கொதித்துப் போய் விட்டாள்... அவளது திமிரை அடக்கும் வழி தெரியாமல் அவள் தலையைப் பிடிக்க ஆரம்பிக்க...

"பாவம்டி.. இந்த ஒரு மாதமா... உன் வழிக்கே வராம ஒதுங்கியிருந்தா.. தலைவலியும் அவளை விட்டு ஒதுங்கியிருந்தது.. இன்னைக்கு பழைய வேலையை ஆரம்பிக்க நினைச்சா.. நீ தலைவலியை அவளுக்கு அனுப்பிட்டே..." என்று பரிதாபப் பட்டாள் காயத்ரி...

"இதுக்கே தலையைப் பிடிச்சா எப்படி..? இன்னும் நிறைய இருக்கே.. அதைக் கேட்டா.. அவ தலை சுக்கு நூறாய் வெடிச்சுச் சிதறினாலும் சிதறிடும் காயத்ரி..."

"என்னடி ராதிகா.. மந்திரவாதியைப் போல சாபம் கொடுக்கிற.. போனாப் போகிறா.. பிழைச்சுப் போகட்டும் டி..."

"அப்படிங்கிற..? அப்ப நான் சொல்ல வந்ததை சொல்லவா.. வேணாமா...?"

"சொல்லு... சொல்லு..."

"அதைக் கேட்டா.. அவ தாங்குவாளா..?"

"நான் தாங்குவேண்டி..."

"ஆஹா... உன்னை மாதிரியான பிரண்டுதாண்டி அவளுக்கு வாய்க்கும்..."

"அதைப்பத்தி உனக்கென்ன.. நீ விசயத்தைச் சொல்லு..."

"சொல்லிட்டா போச்சு... இதைக் கேட்டவளுக்கு மண்டை வெடிக்குதோ.. இல்லையோ.. இதைச் சொல்லலைன்னா... எனக்கு மண்டை வெடிச்சு விடும்..."

ராதிகா போட்ட பீடிகையில்.. அப்படிப்பட்ட விவரம் என்னவென்று அறிந்து கொள்ளும் ஆர்வம் காய்தரிக்கு அதிகமானது...

"ஏய்ய்.. சஸ்பென்ஸ் தாங்கலைடி.. இப்போ விசயம் என்னன்னு நீ சொல்லலைன்னு வை.. என் மண்டையே வெடித்து விடும்..."

"ஐயோ பாவம்.. அந்தப் பாவம் எனக்கெதுக்குடி.. விசயத்தைக் கேளு..."

"அதைக் கேட்கத்தானே அப்போதிருந்து காதைத் தீட்டிக்கிட்டு காத்துக்கிட்டு இருக்கேன்..."

"ஒரு ஊரில் ஒரு பெரிய மன்மத ராஜா இருந்தானாம்..."

"என்னடி இது.. ஒரு ஊரில ஒரு ராஜா இருந்தானாம்ன்னு கதை சொல்ல ஆரம்பிக்கிற..."

"கதைதான்... இது பெரிய கதை... என்னாலேயே என் லக்கை இன்னும் நம்ப முடியல.. நீ எப்படி நம்பப் போறியோ.. போ..."

"என்னவோ.. போ.. ராதிகா.. இன்னைக்கு சரியான கதைசொல்லியா நீ ஆகிட்டே..."

"மன்மத ராஜாவில் விட்ட..."

"அந்த மன்மத ராஜாவின் பெயர் என்ன தெரியுமா..?"

"நீ சொன்னாத்தாண்டி தெரியும்.."

"சங்கர்...!..."

இதைச் சொல்லியவாறு ஷோபாவின் முகத்தை ஜாடையாகக் கவனித்தாள் ராதிகா.. ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் தாக்கியதைப் போல அவள் முகத்தில் அதிர்ச்சியின் அலைகள் தெரிவதை திருப்தியுடன் கவனித்தபடி காயத்ரிக்கு கதை சொல்வதைத் தொடர்ந்தாள்...

"சங்கரா..? எங்கேயோ கேள்விப் பட்ட பெயராய் இருக்கே..."

காயத்ரி நெற்றியில் ஒற்றைவிரலால் தட்ட ஆரம்பிக்க.. தன் எதிர்காலக் கணவனான சங்கரின் பெயரையும்.. அவனது பெருமைகளையும் அவளிடம் சொல்லியிருந்த ஷோபா முகம் வெளுத்துப் போனாள்...

"எங்கேயோ கேட்ட குரலா..? அதை விடு.. இதைக் கேளு.. அந்த சங்கர் பெரிய பிஸினெஸ் மேக்னெட்.. பாரினில் படிச்சவர்.. கோடிஸ்வரர்..."

"இதையும் நான் யாரோ சொல்லக் கேட்டிருக்கேண்டி..."

"அதை அப்புறமாய் யோசி.. இப்ப.. இந்த செய்தியைக் கேளு... அந்த சங்கர் போனவாரம் அவரோட பேரண்ட்ஸோட என்னைப் பெண் கேட்டு வந்தார்.. அவருக்கு என்னை அவ்வளவு பிடிச்சிருக்காம்.. இது எப்படியிருக்கு..?"

ஷோபாவிற்கு அது கொஞ்சம்கூட நன்றாகவே இல்லை...

ராதிகா சொல்லிவிட்டாள்.. சங்கர் எப்படியெல்லாம் தன்னுள் பின்னால் சுற்றினான் என்பதை ஷோபாவின் முகத்துபட விவரித்தாள்.. இது கொஞ்சம் கூட நன்றாக இல்லை என்று ராதிகா கடிந்து கொண்டவுடனேயே.. தன் பெற்றோரைக் கூப்பிட்டுக்கொண்டு பெண் கேட்டு வந்து விட்டான் என்று பெருமை பொங்க கூறினாள்... தன்னுடைய பெற்றோர் திருமண நாளைக் குறிக்கக் கிளம்பி விட்டார்கள் என்று வெட்கம் படர்ந்த முகத்துடன் முணுமுணுத்தாள்...

இதையெல்லாம் 'ஆ' என்று வாய் பிளக்க கேட்டுக் கொண்டிருந்த காயத்ரிக்கு... ராதிகாவின் அதிர்ஷ்டத்தின் மீது பொறாமை வந்தது...

"இதுக்கேண்டி உம்முன்னு இருந்த..?" ஆற்ற மாட்டாமல் அவள் கேட்டு வைத்தாள்..

"வேற என்னடி செய்கிறது..? உனக்கே தெரியும்.. எனக்கு படிப்புன்னா உயிர்.. நான் படிப்பை

முடிச்சுக்கறேன்னு கெஞ்சறேன்.. அவர் அதுவரைக்கும் பொறுக்க மாட்டேன்னு கெஞ்சறார்... உடனே அவருக்கு மேரேஜ் நடந்தாகனுமாம்... அதனால்தான் உம்முன்னு இருந்தேன்..."

"ஏண்டி.. இது ஒரு பிரச்னையா..? மேரேஜ் பண்ணிட்டு படிப்பை கன்டினியூ பண்ண வேண்டியது தானே..."

"உனக்கு அவரைப் பத்தித் தெரியாது காயூ... உடனே வெர்ல்டு டூர் போகனும்னு பிளான் போட்டிருக்கார்.."

"கொடுத்து வைச்சவடி நீ..."

"அவர்தான் கொடுத்து வைத்தவராம்.. அவரே சொன்னார்.."

"அட.. இது வேற நடக்குதா...?"

"பின்னே.. தினமும் போனில் மணிக் கணக்கா பேசியில்ல தள்ளராரு.. என் தூக்கமும் கெடுது.. படிப்பும் கெடுது.. இதை யார்கிட்டச் சொல்றது காயூ..."

"எதுக்குடி.. கேட்கிறவ வயிறு எரியவா..?"

"இதைக் கேட்டு யாராவது வயிறெரிங்களாடி.. இப்ப நீ கேட்டுக்கிட்டு இருக்கிற.. உனக்கு வயித்தெரிச்சலாவா இருக்கு...?"

'அதை உன்கிட்டயா சொல்ல முடியும்..?' காயத்ரி பொறாமையில் வெந்து தணிந்தாள்...

"என்னைப் போலவே எல்லாரும் இருப்பாங்களா ராதிகா...?"

"அதைச் சொல்லு.. ஒரு சிலதுக.. கேட்டவுடனே வெந்து போயிருவாங்கள்ல..."

ராதிகா சொன்னதற்கு தலையைத் தலையை ஆட்டிவிட்டு...

"அவள் உன்னைத்தான் சொன்னாள் ஷோபா..." என்று பற்ற வைத்தாள் காயத்ரி...

அவளை என்ன செய்கிறேன் பார் என்று துரைக்காமல் ஷோபா புயல் வேகத்தில் காரில் ஏறி காலேஜை விட்டுப் பறக்க...

'இவ எதுக்காக இப்படி ஓடுகிறா..?' என்று குழம்பிப் போனாள் காயத்ரி...

ஷோபாவின் வேகம் எதற்காக என்று ராதிகாவுக்குத்தானே தெரியும்..? இனி திருமணத்தைக் கலைக்கும் வேலையை அவள் பார்த்துக் கொள்வாள் என்ற நிம்மதியுடன்...

'அப்பாடா...' என்று ஆசுவாசப் பெருமூச்சை விட்டாள் ராதிகா...

இத்தனை நாளாய் இது தோன்றாமல் போனதே என்று மானசீகமாக தன் தலையில் தானே குட்டியும்

இப்படி ஒரு செமத்தியான வழி இருக்கையில்.. மூலையில் அமர்ந்து கொண்டு கண்ணீர் விட்ட தன் முட்டாள் தனத்தை மனதிற்குள் கடிந்தும் கொண்டாள்..

அவளுக்கு ஷோபாவைப் பற்றி மிக நன்றாகவே தெரியும்.. சங்கர் ராதிகாவை திருமணம் செய்து கொள்வதை அவள் ஒருபோது பொறுத்துக் கொள்ள மாட்டாள்.. எப்பாடு பட்டாவது அந்த திருமணத்தை நடக்க விடாமல் நிறுத்தி விடுவாள்...

அந்த அளவிற்கு ஷோபா.. சங்கரின் மீது கண் வைத்திருந்ததை ராதிகா அறிவாள்..

அவளாவது.. சங்கரை.. ராதிகாவின் கழுத்தில் தாலியைக் கட்ட விட்டு விடுவதாவது.. அப்புறம்.. அவளது பணக்காரப் பெருமை என்ன ஆவது..? ராதிகாவிடம் தோற்றுப் போக ஷோபா விரும்புவாளா என்ன..?

மனதிற்குள் தன் திட்டத்தை மெச்சியபடி ராதிகா நிம்மதியாக நாள்களைக் கடத்தினாள்...

"என்னாச்சுக்கா.. கல்யாணத்துக்கு தயாராகிட்ட போல... முகமெல்லாம் மலர்ந்து.. இப்பவே உன் முகத்தில் கல்யாணக்களை வந்திருச்சு..."

கீதா ஆச்சரியத்துடன் கேட்டபோது... இல்லையென்று மறுக்காமல் அவள் கண் சிமிட்டியதில் ராஜேஸ்வரி ஆனந்தத்தின் உச்சிக்கே போய்விட்டாள்..

சங்கருக்கு தகவல் போனது.. அவன் வழக்கம் போல.. கோவிலில் ராதிகாவை வழி மறித்து நன்றி சொன்னான்... அதை மறுத்துப் பேசாமல் ராதிகா கோவிலை விட்டு வெளியே வந்தாள்..

"இன்னும் கொஞ்ச நாள்தான்... அதுக்குப் பின்னாலே.. நீயும்... நானும் சேர்ந்தே கோவிலுக்கு வந்து போகலாம்..."

சங்கர் புன்னகையுடன் காரில் ஏறி கையசைத்து விட்டுச் சென்றான்... இன்னுமா ஷோபா தன் சதி வேலைகளை ஆரம்பிக்கவில்லை என்று யோசித்தபடி அருகில் நின்று கொண்டிருந்த காரைக் கடந்த ராதிகா சுணப்பொழுதில் காருக்கு உள்ளே இழுக்கப் பட்டாள்... அவள் முகத்தில் ஒரு கைக்குட்டை அழுத்தப்பட்டது...

34

உன்கண் பார்க்கும் ஓர்நொடிக்காக..
கால் கடுக்க நான் நின்றேன்...

யார் தன்னை காருக்கு உள்ளே இழுத்தது என்று விழி விரிய பார்த்த ராதிகா.. அதை உணருமுன்னே.. மயக்க மருந்தை உணர்ந்தவளாக விழி செருகி காரில் சரிந்தாள்... கார் கிளம்பியது... காற்றை விட வேகமாகப்

பறந்து... சென்னைக்கு வெளியே இருந்த ஒரு பண்ணை வீட்டுக்குள் நுழைந்தது...

சில நிமிடங்கள் கழித்து கண் திறந்த ராதிகா.. ஒரு பூட்டிய அறைக்குள் படுக்க வைக்கப் பட்டிருப்பதை உணர்ந்தாள்...

'நான் எங்கேயிருக்கேன்...'

வழக்கமாய் மயக்கத்திலிருந்து விழிப்பவர்கள் கேட்கும் கேள்வியை அவள் மனம் கேட்க.. அறையைச் சுற்றி அவள் பார்வை சுழன்றது..

'இது எந்த இடம்..? நான் எப்படி இங்கே வந்தேன்..?'

துணைக் கேள்விகள் மனதில் முளைக்க.. அவளுக்கு சற்று முன் நடந்த நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன...

தான் கடத்தப் பட்டிருப்பதை உணர்ந்தவள் அவசரமாக எழுந்து அமர்ந்தாள்... அவளுக்குள் பதட்ட அலைகள் உற்பத்தி ஆகின...

'எப்படி தப்பிப்பது...?'

யார் கடத்தியது என்ற ஆராய்ச்சியை விட.. இதுதான் அவளது முக்கியமான நோக்கமாக இருந்தது...

மூடிய ஜன்னல்களை மறைத்து திரைச் சீலைகள் தொங்கிக் கொண்டிருந்தன.. ஏஸியின் இதமான குளிர் அறை முழுவதும் பரவியிருந்தது.. மூடிய கதவொன்று தெரிய.. அது பால்கனியாக இருக்கக் கூடும் என்ற நினைவில் அவள் ஆவலுடன் எழுந்தாள்.. அதே நேரத்தில்

அறைக்கதவும் திறக்கப்பட.. சட்டென்று அருகிலிருந்த பெரிய பாவை விளக்கின் சிலையை கையில் தூக்கிக் கொண்டாள்...

வருகிற ஆளின் தலையில் ஒரே போடாய் போட்டு விட்டு... ஓடிப் போய் விட வேண்டும் என்ற துடிப்புடன் அவள் போராடத் தயாராகி நின்று கொண்டிருக்க.. அறைக்குள் பாலமுரளி வந்தான்...

'இவனா...??..!..!'

ராதிகா பிரமித்து விட்டாள்... அவள் கையிலிருந்த வெண்கலச் சிலை நழுவி.. கணீர் என்ற சப்தத்துடன் தரையில் விழுந்தது..

எவனைப் பார்க்கும் வழி தெரியாமல்.. அல்லும் பகலும் அவள் துடித்துக் கொண்டிருந்தாளோ.. அவன் அவளையே உறுத்துப் பார்த்த வண்ணம்.. அவள் கண்முன்னால் வந்து நின்றான்...

எவன் இருக்கும் இடம் தெரியாமல்.. அவனைத் தேடும் வகையறியாமல் அவள் மலைத்து நின்றாளோ.. அந்த அவன்... அவள் தேடாத அந்தப் பொழுதில்... தானாக வந்து நின்றான்...

ராதிகா பேச நினைத்து வாயசைத்தாள்... அவளுக்கு பேச்சு வரவில்லை... மாறாக காற்றுத்தான் வந்தது.. ஒடி அவன் நெஞ்சில் முகம் புதைத்து கண்ணீர் உகுக்க நினைத்தாள்... அவனது சிவந்த விழிகளும்.. கடுமையான முகமும் அதைச் செய்ய விடாமல் தடுத்தன...

அவளது அந்தரங்கத்தில் உறைந்திருந்தவனை... அருகில் அவள் பார்த்தும்.. அந்த அந்தரங்கத்தைச் சொல்ல முடியாமல் வாயடைத்து அவள் பின்னடைந்தாள்...

"என்னடி... அப்படிப் பார்க்கிற...? என்னை நீ எதிர்பார்க்கலையில்ல..?" கண்கள் இடுங்க அவன் கேட்டான்...

அவனை அந்த இடத்தில்.. அது போன்றதொரு சூழ்நிலையில் அவள் எதிர்பார்க்கவில்லைதான்...

அவளைக் காதலித்ததாகச் சொல்லியவனிடம்... அந்தக் காதலைக் காப்பாற்றி அவளுக்கு பிடிக்காத திருமணத்திலிருந்து அவளை விடுவிக்க அவள் சொல்லியிருக்க வேண்டும்..

அதைச் சொல்ல முடியாததொரு சூழ்நிலையில் அவளை நிற்க வைத்தது யார்...?

அவளை முத்தமிட்டுச் சென்றவனிடம்... காதலுக்கான கடமையை ஆற்று என்று அவள் கேட்டிருக்க வேண்டும்...

அதைக் கேட்க முடியாமல் அவளை அவனது பார்வையில் குற்றவாளியாக்கி... ஊமையாக்கியது யார்..?

"எப்படி எதிர்பார்த்திருப்ப.. நீ எதிர்பார்த்ததே வேறயாச்சே..." அவன் எகத்தாளமாகப் பேசினான்...

மௌனப் பார்வையில்.. அவளது அந்தரங்க மனதை அவனுக்கு உணர்த்திவிடும் துடிப்புடன் அவள் நின்றாள்..

"அவன் கூட ஜோடி போட்டுக்கிட்டு கோவிலுக்கு வந்தயே... சாமிகிட்ட என்ன கேட்ட..?"

சங்கருடனான திருமணம் நிற்க வேண்டும் என்று கேட்டாள் என்று சொன்னால் அவன் நம்பவா போகிறான்..?

"இனி சேர்ந்து கோவிலுக்கு வந்து.. சேர்ந்து திரும்பிப் போவோம்ன்னு அவன் சொன்னானே.. உன் எண்ணமும் அதுதானே..."

இல்லையே என்றிருந்தது ராதிகாவிற்கு.. சங்கர் போனால் போதுமென்ற எண்ணம்தான் அவள் மனதிலிருந்தது என்று இவன் எப்போது அறிவான்..?

"அது எப்படிடி... அன்னைக்கு பார்க்கில உன்னைத் தொட்டு முத்தம் கொடுத்தப்போ... விலகாம நின்னவ... இப்ப.. அவன் கட்டிக்கிறேன்னு சொன்னவுடனே ஈன்னு பல்லைக் காட்டிக்கிட்டு... என்னவோ புருசன் பெண்டாட்டியைப் போல ஜோடி போட்டுக்கிட்டு அவன்கூட கோவிலுக்கு வந்து நிற்கிற..? உனக்கு மனச்சாட்சியே இல்லியா...?"

அடப் போடா.. என்றிருந்தது ராதிகாவிற்கு...

அந்த முத்தத்தைப்பற்றி இப்போது வந்து இவ்வளவு உணக்கையாகப் பேசுகிறவன்.. இத்தனை நாளாய்

எங்கேயிருந்தான் என்று கேட்கத் தோன்றியது அவளுக்கு...

அதைக் கேட்டு வைத்தால்... ஏற்கனவே மலையேறி இருப்பவன்.. இன்னும் அதிகமாக சாமியாட ஆரம்பித்து விடுவான் என்ற பயம் இருந்ததால்... அதைக் கேட்காமல் வாயை மூடிக் கொண்டாள்...

"உன்னைத் தொட்டேனேடி.. நீயும் பேசாம என் கைக்குள்ள வந்தியே.. ஒரு நிமிசம்.. உனக்கும் என்மேல் இஷ்டம்தானோன்னு நினைச்சுட்டேண்டி... அப்படியில்லை... என்கிட்டேயிருந்து தப்பிக்க முடியாம நீ நின்னவன்னு எனக்குத் தெரியாம போயிருச்சேடி..." அவன் குரலின் கோபம் அதிகரித்தது...

'தப்பிப்பதா...? உன்னிடமிருந்தா...?'

துரத்திய அவனது நினைவுகளிடமிருந்து தப்பிக்க விரும்பாமல் அதிலேயே புதையுண்டு போன அவளது அந்தரங்க மனம் அதிர்ந்தது...

"கல்யாணம்ன்னா என்னடி...? நான் தொட்ட உன்னை அவனும் தொடுவான்.. நான் கொடுத்த முத்தத்தை அவனும் கொடுப்பான்.. என்னைக் கட்டிப் பிடிச்சுக்கிட்டதைப் போல... நீ அவனையும்..."

அவன் பேசிக் கொண்டே போக... அதற்கு மேலும் அதைக் கேட்க முடியாமல் காதுகளைப் பொத்திக் கொண்டாள் ராதிகா...

'பேசாதே...' அவள் உடல் நடுங்கியது...

அந்த நடுக்கத்தை பார்த்தவனின் மனம்.. அவளைத் தொட்ட போது அவன் உணர்ந்த நடுக்கத்தில் நிலை கொண்டது...

ஒரு நொடி அவன் மனம் மென்மையானது...

'நான் தொட்ட போது வந்த நடுக்கம்... அவன் தொடும் போதும் வருமா...?'

அந்த நினைவில் மென்மை மறைந்து மாயமாக.. அவன் மனம் கடினமானது...

அவன் அவளையே பார்த்த வண்ணம் நிதானமாக முன்னேறினான்..

"வேண்டாம்..."

அதுவரை பேச்சிழந்து நின்றிருந்த ராதிகா அச்சத்துடன் பதறினாள்...

"அட... என்கிட்டக் கூட நீ பேசுவியா..? வழக்கமா அவன்கூட மட்டும் தானே நீ பேசுவ.. என்கிட்டப் பேச உனக்குப் பிடிக்காதே..."

அவளுக்கு பிடித்தவன் இதைக் கூறிக் கொண்டே.. பயங்கரமான வில்லன் சிரிப்பொன்றை சிரித்து வைத்தான்...

அவளுடைய அந்தரங்க மனதின் கதாநாயகன்.. வில்லனாகிக் கொண்டிருக்கும் கொடுமையைத் தாங்காமல் ராதிகா மனம் குமுறினாள்...

"இது பாவம்... கிட்ட வராதீங்க..."

"இது பாவ.. புண்ணியம் பார்க்கும் நேரமில்லைடி.."

"நீங்க இதைச் செய்யக்கூடாது..."

"வேற யார் உன்னைத் தொடனும்..? அவனா..?"

அந்தக் கேள்வியில் அதிர்ந்து போனவள்.. அசையாமல் நின்றுவிட... அவன் அவளது தோளைத் தொட்டு... அவளைக் கைப்பற்றி விட்டான்...

அவளைத் தொட்டவுடன் அடங்கிக் கிடந்த அவனின் உணர்வுகள் ஆர்ப்பரித்து எழுந்து கொள்ள.. அடுத்த நொடியில்.. அவனது முரட்டுப் பிடியில் சிக்கிவிட்டாள் ராதிகா...

இறுக அணைத்து.. அவளது முகமெங்கும் அவன் முத்தங்களைப் பதிக்க ஆரம்பித்தபோது... மூச்சுத்திணற.. தந்நிலைமையை அவள் உணர்ந்தாள்.. அவளது வீடு.. அவள் கண் முன் சுழல.. அவள் போராட ஆரம்பித்தாள்...

"விடுங்க... என்னை விட்டு விடுங்க.."

அவள் கதறியதை அவன் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை... விடுபட அவள் நடத்திய போராட்டங்களை மிக எளிதாக அவன் முறியடித்து முன்னேறினான்...

கால் தடுக்கி.. கட்டிலில் சரிந்தவளின் மீது அவன் சரிய... அவளுக்குள் துக்கம் பொங்கியது...

யாரை அவளது உயிருக்குயிராய் நினைத்து அவன் ஆராதித்துக் கொண்டிருக்கிறானோ... அவனே... அவளது கற்பை சூறையாட நினைத்ததைத் தாங்க முடியாமல் அவள் மனம் துடித்தாள்...

"சொன்னாக் கேளுங்க.. ப்ளீஸ்..."

அவளது கெஞ்சல்கள் அவன் காதில் விழவில்லை...

"உங்க காலில் விழுகறேன்.. இது வேண்டாம்..."

அவள் கை கூப்பியும்.. அவன் அவளை விடவில்லை....

அவன் கல்லாக மாறியிருந்தான்... அவளது கதறலையும்.. கண்ணீரையும்... துடிப்பையும்.. அலட்சியம் செய்தான்.. அவளது மறுப்புக்களை பொருட்படுத்த மறுத்தான்... அணை உடைந்த வெள்ளமாக அவளை ஆக்ரமித்து பரவிப் படர்ந்தான்...

ஒரு எல்லைக்கு மேல் போராட முடியாமல் தொய்ந்து சரிந்தாள் ராதிகா.. வலுவிழந்தவளின் மீது.. வலிமையான அவனின் கரங்கள் பரவிப் படர்ந்து அவளை அவனுக்கு சொந்தமாக்கிக் கொண்டன...

கடைசியில் அவன் நினைத்ததை நடத்தியே முடித்து விட்டான்...

கலைந்து கிடந்தவளின் முடி கோதி.. அவள் நெற்றியில் முத்தமிட்டவன்.. விலகிச் சென்று விட்டான்... கண்ணீர் பெருக.. ராதிகா அப்படியே கட்டிலில் அமர்ந்து

நிமிடங்கள் நகர்ந்து கொண்டிருந்தன... அவளது கண்ணீர்.. வற்றாத ஆறாக... அவளது கன்னத்தில் வழிந்து ஓடிக் கொண்டிருந்தது...

அறைக்கதவு திறக்கப்பட்டு.. கையில் காபிக் கோப்பையுடன் அவன் உள்ளே வந்தான்.. ராதிகா நிமிரவில்லை...

"காபியைக் குடி..."

எதுவுமே நடக்காததைப் போல அவன் காபிக் கோப்பையை நீட்ட.. நிமிர்ந்து பார்த்தவளுக்கு.. ஆத்திரம் பெருகியது...

"நீங்கள்ளாம் ஒரு மனுசனா...?"

"நான் ராட்சஸனாகவே இருந்துட்டுப் போறேன்.. அதில எனக்கொரு குறையுமில்ல.. நீ இப்ப காபியைக் குடி..."

"உங்களைப் போய் நல்லவன்னு நினைச்சேனே..."

"அந்த சங்கரை என்னன்னு நினைச்சே..? உன் அகராதியில் நல்லவன்னா... இளிச்சவாயன்னு அர்த்தமா...?"

"என் வாழ்க்கையையே பாழாக்கிட்டிங்களே..."

ராதிகா குமுற... பாலமுரளியின் முகம் இறுகியது...

"அவன்கூட வாழ விடாம பண்ணிடேன்னு உனக்கு ஆங்காரமாய் இருக்கா...?"

'நான் என்ன சொல்கிறேன்.. இவன் என்ன சொல்லி வைக்கிறான்...'

இவன் இப்படித்தான் பேசி வைப்பானா என்று அவளுக்கு ஆயாசமாக இருந்தது.. இது போன்றதொரு நிகழ்வை அவன்... அவளுக்கு பரிசளிக்கக் கூடும் என்று அவள் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை...

அவளுடைய ராத்திரி கனவுகளின் நாயகன் அவன்.. அவனோடு கூடி இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும்.. ஏக்கமும்... அவளது அந்தரங்க மனதில் அடி ஆழத்தில் இருந்ததென்னவோ உண்மைதான்...

ஆனால்.. அதை.. இதைப்போல அவள் நினைத்துப் பார்க்கவில்லையே.. ஊரும்.. உறவும் அறிய... அவள் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டு.. முதல் இரவில் அவளோடு அவன் முறையாக கலக்க வேண்டும் என்று தானே நினைத்தாள்..?

அவளை முத்தமிட்டு அவன் சென்ற மறுநாளிலிருந்தே.. அவளது பார்வை அவனைத் தேடித் துழாவவில்லையா..? அப்போதே.. அவள் முன்னால் அவன் வந்திருந்தால் தனது அந்தரங்க மனதை.. அவன் அறிய.. அவள் சொல்லியிருக்க மாட்டாளா...?

அவளது முகவரியை அறிந்தவன்.. அவளது அலைபேசியின் எண்ணையும் அறிந்திருக்க வேண்டாமா..? அவளைத் தொட்டுத் தழுவ தைரியமிருந்தவனுக்கு அவளை அலைபேசியில் அழைக்கும் எண்ணமிருக்க

வேண்டாமா..? அப்படி அவன் அலைபேசியில் அழைத்திருந்தால்... அவன் முகம் பார்த்து தடுமாறும் நிலை இல்லாமல்.. தன் அந்தரங்கத்தில் அமிழ்ந்திருக்கும் காதலை.. அவன் முன் அவள் கொட்டியிருக்க மாட்டாளா..?

இதை எதையும் செய்யாமல்.. அவளைக் கடத்தி வந்து.. தாலி கட்டாமலே அவளைத் தொட்டு.. குடும்பம் நடத்தி விட்டானே.. இதை அவன் செய்யலாமா...?

இப்போதும் கூட.. அவள் சங்கருடனான திருமணத்தை நிறுத்துகிற முயற்சியில்தானே முனைப்பாக இருந்தாள்..? இந்தச் சிக்கல் தீர்ந்தவுடன்... அவனைத் தேடிச் செல்லும் உத்தேசத்துடன் தானே இருந்தாள்..?

அதை உணராமல் அவன் அவசரப்பட்டு விட்டானே...

"எந்தக் குடியும் முழுகவில்லை... காபியைக் குடித்துவிட்டு கிளம்பு..." என்றான் அந்த கல்நெஞ்சக்காரன்..

அவனை உயிரற்ற பார்வையுடன் வெறித்தாள் ராதிகா...

"எங்கே கிளம்பச் சொல்கிறிங்க...?"

"உன் வீட்டுக்குத்தான்.. வேற எங்கேன்னு நினைச்சே...?"

அவனது கேள்விக்கு பதில் சொல்லாமல் அவனையே குற்றம் சாட்டும் பார்வையைப் பார்த்தபடி அசையாமல் அவள் அமர்ந்திருந்தாள்...

"என்ன..? உன் வீட்டுக்குப் போகிற உத்தேசமில்லையா..? இங்கேயே இருந்து விடுகிறாயா..?"

அவளது பார்வைக்கு அயராமல் அவன் நிதானமாக கேட்டு வைத்தான்...

"இது என் நண்பனின் ஃபார்ம் ஹவுஸ்.. நாளையிலிருந்து என்னுடையதாகி விடும்.. எப்படின்னு கேட்கிறயா..? உன் கூட குடும்பம் நடத்தின இந்த இடம்.. இனி எனக்குத்தான் சொந்தமாக இருக்கனும்... அதனால இதை வாங்க முடிவு பண்ணிட்டேன்.. அவனும் விற்க ஒப்புக்கிட்டான்.. சொல்லு.. இங்கேயே இருந்துருறியா..?"

'அதுக்கு வேற ஆளைப் பார்...' அவள் எழுந்து விட்டாள்...

என்ன மாதிரியான கேள்வியைக் கேட்டுவிட்டான் என்ற நினைவில் அவள் மனம் பொறுமியது....

என்ன மாதிரியான காரியத்தை செய்து விட்டான் என்பதை அவளது அறிவு அவளுக்கு நினைவுறுத்தியது...

இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யத் துணிந்தவன்.. இப்படிப் பட்ட கேள்வியைக் கேட்கத் துணிய மாட்டானா..?

மனம் கசந்தவளாக அவள் எழுந்தாள்.. நிற்க முடியாமல் அவள் தள்ளாடிய போது.. தாங்கிப் பிடிக்க அவன் முயன்றான்.. சீற்றத்துடன் அவன் கைகளை தட்டி விட்டவள்... குளியலறைக்குள் புகுந்தாள்..

அவனருகே.. காரில் அமர்ந்திருந்தவளின் ஒய்ந்த தோற்றத்தைக் கண்டவனுக்கு என்ன தோன்றியதோ...

"இத்தனையும்.. உன்னால்தானேடி..." என்று பொருமினான்...

நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்... நான் அதற்கு விளக்கம் சொல்லப் போவதில்லை.. என்பதைப் போல.. அவள் முன்னால் தெரிந்த சாலையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்...

"உன்னைக் காதலிச்சேண்டி.. அதை உன்னிடம் சொல்ல வந்தேன்.. நீ அவன் பின்னால் சுற்றின.. பார்க்கில் அதைப்பத்தி கோபப்பட்டவன்.. அப்படியே போகத்தான் நினைச்சேன்.. ஏதோ ஒரு வேகத்துல.. உனக்கு முத்தம் கொடுத்துட்டேன்.. அதை நீ ஏத்துக்கிட்டயேடி.. அதனாலே தானே... உன்னை விட்டுவிட முடியாம எனக்கு கிறுக்கு பிடிச்சுப் போச்சு..?"

உயிரற்ற பொம்மையாய் அமர்ந்திருந்தவளிடமிருந்து பதில் வராமல் போக.. அவனது பொருமல் அதிகமானது...

"எனக்கு மட்டும் இப்படி.. அத்துவானக் காட்டுக்குள்ள... ஒரு பண்ணை வீட்டுக்குள்ள வைச்சு... உன்னை சூறையாடனும்னு ஆசையாடி..? இந்த மாதிரி உன்னைத் தொடறதைப் பத்தி என்மனசில எவ்வளவு கற்பனைகளை வளர்த்து வச்சிருந்தேன் தெரியுமா..? அது அத்தனையையும் சுக்கு நூறாக்கி.. குழி தோண்டி புதைக்க வைச்சிட்டயேடி..."

அதற்கும் அவளிடம் அசைவில்லை...

"அந்த ஷோபா போன் பண்ணிச் சொன்னாடி.. நீயும்.. அவனும்.. தினமும் ஒரு இடம்ன்னு ஊரைச் சுற்றிக்கிட்டு அலையறதைச் சொன்னா.. அவனுக்கும் உனக்கும் கல்யாணம் நடக்கப் போகுதுன்னு நீ உன் காலேஜ் பூராவும் பீற்றிக்கிட்டு அலையறதைச் சொன்னா... நீ பேசின பேச்சை அவ போனிலே ரிகார்டு பண்ணியிருக்காடி.. அதை எனக்கு அனுப்பிவைச்சா பாரு.. அதைக் கேட்ட பின்னாலே எனக்கு வெறி கிளம்பாம எப்படிடி இருக்கும்..?"

இது என்ன புதுக்கதை என்ற முகச்சுளிப்பு ராதிகாவிடமிருந்து வெளிப்பட அதைவிட அதிகமான முகச் சுளிப்புடன் பாலமுரளி.. தன் போனை ஒலிக்க விட்டான்... அதில்.. ராதிகா.. ஷோபாவை கிளப்பி விட வேண்டுமென்ற நோக்கத்துடன் காயத்ரியிடம் பேசிய பேச்சு பதிவாகி இருந்தது...

"கேட்டியா.. அவனை என்னன்னு சொன்ன..? மன்மத ராஜாவா..? உன் கண்ணுக்கு அவன் மன்மதனாய் தெரிஞ்சிருக்கான்.. நான் யாராய் தெரிஞ்சேண்டி..? நான் உனக்கு முத்தம் கொடுத்து காதல் சொன்னப்ப.. நீ முகம் விலக்காம நின்னுட்டு.. அதுக்குப் பின்னாலேயும்.. அவனைப் பார்த்து மன்மத ராஜான்னு சொல்றேன்னா.. உன்னை என்ன பண்ணினாலும் தப்பில்லைடி..."

'இதுதானா..?' ராதிகாவிற்கு நெஞ்சை அடைத்தது.

சங்கருடனான திருமணத்தை நிறுத்த.. ஷோபாவைத் தூண்டி விட.. அவள் பேசிய பேச்சு.. அவளுக்கு எதிராக திரும்பி விட்டிருக்கிறதே.. இதை இல்லையென்று அவள் எப்படி நிரூபிப்பாள்...?

"எப்படி.. எப்படி..? அவன் பெரிய பிஸினெஸ் மேக்னெட்டா..? நான் என்ன மாடு மேய்க்கிறவனா..? அவன் பாரினில் படிச்சவனா..? இந்தியாவில் படிச்சவனெல்லாம் உன் அகராதியில் கை நாட்டுக்கேஸா..? அவன் கோடிஸ்வரனா..? நான் என்ன பிச்சைக்காரனா..?"

உஷ்ணமாக அவன் பேசப்பேச... ராதிகாவிற்கு கண்ணைக் கட்டிக்கொண்டு வந்தது...

"உன் படிப்பு முடிகிற வரைக்கும் அவனால் பொறுக்க முடியாதாமா..? எனக்கு மட்டும் பொறுக்க முடியுமா..? தினமும் மணிக்கணக்காய் போனில் பேசறானா..? அதில உனக்குத் தூக்கம் கெடுதா..? போ.. இதுக்கு பின்னாலே நீ நிம்மதியாய் தூங்கிடுவியா..? வெல்டு டூர் போறிகளோ.. வெல்டு டூர்...? இப்பப் போடி.. போய்ப் பாரு..."

அவளது வீடு இருக்கும் தெரு முனையில் இருளுக்குள் மறைவாக கார் நின்றது.. பாலமுரளி அவளை இரக்கமற்ற பார்வை பார்த்தான்...

"இறங்கு... இனிமே உன்னாலே அவன்கூட மணிக்கணக்கில் போன்பேச முடியாது... அவன்கூட ஜோடி போட்டுக்கிட்டு ஊரைச் சுற்ற முடியாது... அவன் கட்டற

தாலியை வாங்கிக்கிட்டு வெல்டு டூர் போக முடியாது.. இதுதாண்டி நான் உனக்குக் கொடுக்கிற தண்டனை.. அவனை மட்டுமில்ல... இனி வேற எவனையும் உன்னால் கல்யாணம் பண்ணிக்க முடியாது.. காலம் பூராவும்.. இன்னைக்கு நடந்ததை நினைச்சு.. நினைச்சு.. புழுவாய் நீ துடிச்சுக்கிட்டு கிடக்கனும்.. அதை கண்குளிர நான் பார்க்கனும்..."

அதற்கு மேலும்.. அவன் பேசுவதைக் கேட்க முடியாமல்... ராதிகா கார் கதவைத்திறந்து.. கீழே இறங்கி விட்டாள்... அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் நடந்து.. அவள் வீட்டுப் படியேறியவளைப் பார்த்தவனுக்கு.. வெற்றியின் மகிழ்வு இல்லை... ஒரு பெரு மூச்சுடன் காரைக் கிளப்பி.. சாலைப் போக்குவரத்தில் கலந்த போது நெஞ்சுக்குள் பாறாங்கல் ஏறி உட்கார்ந்து விட்டதை உணர்ந்தான் பாலமுரளி...

உன்னைத் தொட்ட கைகள்
குளிராமல் சுடுவதும் ஏன்...?

பௌர்ணமி நிலவின் ஒளியில் ஒங்கியெழுந்த பேரலைகள் ஓசையுடன் கரையின் மேல் ஆவேசத்துடன் பாலமுரளியை அடிப்பதைப்போல விழுந்து... சரிந்து... மீண்டும் கடலுக்குள் சென்றன.... இதமான கடல்காற்று பாலமுரளியின் உடலைத் தழுவிச் சென்றது.. அதன் இதம் பாலமுரளியின் மன வெம்மையை தணிக்கவில்லை... சற்று முன் நிகழ்ந்து விட்ட நிகழ்விலேயே அவன் மனம் நிலை கொண்டிருந்தது...

'கடைசியில வில்லனைப் போல ஆகிட்டேனே...' மனம் குமுறினான் பாலமுரளி....

அவனின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கித் தவித்த உறவினர் வட்டாரத்துப் பெண்களைப் பற்றிய நினைவு அவன் மனதில் எழுந்தது...

'ஒருத்தியைக் கூட எனக்குப் பிடிக்காம போயிருச்சே... ஏன்...?'

அவனுக்கு விடை தெரியவில்லை... ராதிகாவை விட அழகான பல பெண்கள் அவனின் உறவினர் வட்டாரத்தில் உண்டு... அவர்களில் சிலரைப் பெண் பார்க்கவென்று மேகலாவே அழைத்துச் சென்றிருக்கிறாள்... அவர்களில் ஒருவரால் கூட பாலமுரளியின் மனக் கதவைத் தட்ட முடியவில்லை...

'அப்படி இவகிட்ட என்னதான் இருக்குன்னு இவ நினைப்பில நான் விழுந்தேன்...?'

அவனால் இனம் பிரித்துச் சொல்ல முடியவில்லை... ஆனால்... ராதிகாவின் வசீகர முகத்தின் நினைவின் முன்னே.. மற்ற எந்தப் பெண்ணின் முகமும் நிற்க முடியவில்லை என்பதை மட்டும் நிதரிசனமாக அவன் உணர்ந்தான்...

அலைகடலின் மேலே எழுந்து நின்ற முழுநிலவின் மீது அவன் பார்வை படிந்தது...

'நாளை இந்த வேளைபார்த்து
ஓடி வா நிலா...
இன்று எந்தன் தலைவன் இல்லை
சென்று வா நிலா...'

அலைகடலின் மீது ராதிகா எழுந்து நின்று பாடுவதைப் போல முரளியின் முன்னால் காட்சி தோன்றி மறைந்தது... ஓர் கணம் அது ராதிகாதானோ என்ற

நினைவில் மனம் பேதலித்தான் முரளி... அவளைப் பிடிக்க முயன்றவனாக ஓர் அடி எடுத்து வைத்தும் விட்டான்... ஒங்கி விழுந்த பேரலை அவன் பாதம் நனைத்ததில் உணர்வு மீண்டவனாக கரைக்கு பின் வாங்கினான்...

"ராதிகா..." தாள முடியாமல் கூவினான்...

இருள் சூழ்ந்த அந்த இரவு நேரத்தில் சற்றுத் தொலைவிலிருந்த காரின் அருகில் குழுமியிருந்த நான்கைந்து இளைஞர்கள் இவனைத் திரும்பிப் பார்த்தனர்...

"யாருடா அது..?"

"தெரியலைடா.."

"தனியா நின்னுக்கிட்டு ஒரு பொண்ணோட பேரைச் சொல்லிக் கத்தறானே..."

"காதல் தோல்வியா இருக்கும்..."

"அதுக்கு கத்தினா சரியாப் போச்சா..."

"வேற என்ன செய்யலாம்னு சொல்ற.."

"தண்ணியடிக்கலாம்.."

"அனுபவம் பேசுது..? ம்ம்ம்..?"

மற்ற நண்பர்கள் உரத்துச் சிரிக்க.. சொன்னவன் முரளியை உற்றுப் பார்த்து விட்டு அவனருகே போகப் போனான்...

"எதுக்குடா அங்கே போற...?"

"அட்வைஸ் பண்ணாமுன்னுதான்..."

"நீ போடற மொக்கையை அட்வைஸ்ன்னு மீலா விடாதே... சரக்குன்னா அட்வைஸ் பண்ணக் கிளம்பிருவியே... நீயென்ன கருத்து கந்தசாமியாடா..? இப்படி அட்வைஸங்கிற பேரில மொட்டை ரம்பம் போட்டுத்தானே.. அபூர்வமா கிடைச்ச உன் ஆருயிர் காதலியை ஒட்டி விட்ட... இப்ப இந்த நடுராத்திரியில போயி அவன்கிட்ட அதே ரம்பத்தை ஆரம்பிக்கிறேன்னு சொல்றியே.. உனக்கே இது ஓவராத் தெரியலையா..?"

"ஒருத்தன் நல்லது செய்ய நினைச்சா உங்களுக்கெல்லாம் பொறுக்காதே... அவனே பாவம்... தனியா நின்னு புலம்பிக்கிட்டு இருக்கான்.. அவனுக்கு ஆறுதல் சொல்லனம்னு நினைச்சா.. ஆளாளுக்கு என்னை ஒட்டறிங்களா..?"

"அதுக்கப்புறம் உன் தலைவிதி... போறதுன்னா போ... எதுக்கும் அவன்கிட்டப் போய் பேசாம தள்ளி நின்னே மொக்கை போடு... அவன் பாட்டுக்கு கடுப்பில

உன் செவிலிலே நாலு அறையை விட்டு கடலுக்குள்ள தூக்கிக் கடாசிரப் போறான்..."

நண்பர்கள் சொன்னதை அலட்சியம் செய்துவிட்டு அந்தக் கருத்து கந்தசாமியாகப் பட்டவன் கடலை வெறித்துக் கொண்டிருந்த பாலமுரளியின் அருகில் சென்றான்...

"சார்...!"

அவன் அழைப்புச் சத்தம் செவியை எட்டாதவனா பாலமுரளி.. கடலையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்...

'சொல்ல நினைத்த ஆசைகள்...
சொல்லாமல் போனதேன்...?'

ராதிகா கடலலையின் மீது முகம் காட்டிப் பாடிக் கொண்டிருந்தாள்...

அவள் மீது கொண்ட பேராசையின் அளவைச் சொல்ல முடியாமல் போன துயரத்தில் பாலமுரளியின் இதயம் வெடித்து விடும் போல இருந்தது...

'என்னை விட்டுவிடுங்க...'

சற்று முன் கைகூப்பி கதறியழுது மன்றாடிய ராதிகா அவன் மனக் கண்ணில் நினைவுக்கு வந்தாள்...

பூவாக கையாள வேண்டிய காதலியை கசக்கி முகர்ந்து விட்ட நினைவில் மனம் கசந்தான் பாலமுரளி...

"பாவி..." வாய் விட்டுக் குமுறினான்...

"என்னை இந்த நிலைமையில கொண்டாந்து நிறுத்திட்டியேடி..."

ஒரு கீழ்தரமான காரியத்தை செய்ய நேர்ந்து விட்ட துயரத்தில் அவன் புலம்பிக் கொண்டிருந்ததை அனுதாபத்துடன் கேட்ட அந்த கருத்து கந்தசாமியாகப் பட்டவன் பரிதாபப் பட்டான்...

"ஐயோ பாவம்... உங்க காதலியும் உங்களை நட்டாத்தில விட்டுட்டு ஓடிப் போயிட்டாளா சார்...?"

மனதில் சுமந்திருந்த துயரச் சுமையின் கனம் தாங்காமல் தனிமையை நாடி வந்திருந்த பாலமுரளி... தனிமை கலைந்ததில் கோபம் கொண்டவனாக... அருகில் நின்றவனை முறைத்தான்...

"இதைப் பார்த்தா ஆறு மாதிரி தெரியுதா..?" கடலைக் காட்டிக் கேள்வி கேட்டான்...

"இதைப் போய் யாராச்சும் ஆறுன்னு சொல்வாங்களா சார்...?"

அனுதாபப்பட்டவன் மனதில் பாலமுரளியின் மனநிலை குறித்தான ஐயம் எழுந்தது...

'என்னடா இது..? இந்த ஆள் பாட்டுக்கு கடலைக் காட்டி ஆறான்னு கேட்கிறானே... மறை கழண்ட கேஸோ...'

பாலமுரளியின் சிவந்த கண்கள் அந்த இருளிலும் தீக்கங்குகளாக ஜொலித்ததில் எதற்கும் இருக்கட்டுமென்று நண்பர்கள் சொல்லியனுப்பியதைப் போல தள்ளி நின்று கொண்டான்...

"தெரியுதில்ல..? இது ஆறில்ல... கடல்ன்னு தெரியுதில்ல...? அப்புறம் என்ன வேலைக் கழுதைக்கு என்னைப் பார்த்து... எவளாவது நட்டாத்தில விட்டுட்டுப் போயிட்டாளான்னு கேள்வி கேட்ட..?" பாலமுரளி உஷ்ணமானான்...

"அதில்ல சார்... தனியே நின்னு புலம்பிக்கிட்டு இருந்தீங்களேன்னு கேட்டேன்..."

"உன் வீட்டுக்கு வந்து உன்கிட்டப் புலம்பினேனா..?"

"அதில்லசார்.. கடல்கிட்ட புலம்பினீங்களேன்னு வந்தேன்..."

"அதுக்கு கடலில்ல கேள்வி கேட்கனும்..? நீயேண்டா கேட்ட..?"

கழுதை தேய்ந்து கட்டெறும்பாய் ஆன கதையாய்.. அனுதாபிக்கான மரியாதை தேய்ந்து.. காற்றில் கரைந்த

கற்பூரமாய் காணாமல் போனதில் அனுதாபி அரண்டே போனான்...

"அதில்ல சார்..." அவன் மேலும் விளக்கம் கூற முற்பட... பாலமுரளி... அவன் கழுத்தில் ஒற்றைக் கையை வைத்து இறுக்கினான்...

"சும்மா... கீறல் விழுந்த ரிகார்டைப் போல.. அதில்ல.. அதில்லன்னு ராகம் போட்ட.. அடிச்சுத் தூக்கி.. கடல்லே வீசிருவேன்.. ஏண்டா.. நானே நிம்மதியைத் தேடி கடலுப் பக்கம் வந்திருக்கேன்... நீ இங்கேயும் வந்து ரம்பம் போடறியா.. மகனே! உன்னைப் பொலி போட்டாத்தாண்டா அடங்குவ...."

பாலமுரளியின் ஒற்றைக்கையை இரண்டு கைகளாலும் விலக்கப் பார்த்து முடியாதவனாக.. அனுதாபி... 'லபோ.. திபோ...' என்று அலறிவைக்க.. அவனின் அலறல் சப்தம் கேட்ட நண்பர்கள் திரும்பிப் பார்த்துவிட்டு உதவிக்கு ஓடி வந்தார்கள்...

"என்னசார்... என்ன ஆச்சு...?"

"இவன் யாரு..?"

"எங்க பிரண்ட்தான் சார்.."

"மனுசனுக்கு டென்சன் ஏத்தற மாதிரியே வாயை விடறான்..."

"தெரியாம பேசிட்டான் சார்... விட்டுருங்க..."

அவர்கள் ஏகத்துக்கும் கெஞ்சியதில் போனால் போகிறதென்று கையை விலக்கினான் பாலமுரளி... சுவாசிக்க காற்று கிடைத்ததில் அனுதாபி... லொக்கு.. லொக்கென்று இறுமி... வாய்வழியே அவசரமாகக் காற்றை இழுத்து மூச்சு வாங்கினான்...

"வாடா.. டேய்..."

அவனுடைய நண்பர்கள் அவனை ஏறக்குறைய இழுத்துக்கொண்டு அகன்றார்கள்...

"சொன்னாக் கேட்டியாடா.. அவனே வெறி பிடிச்சாப்புல நிக்குறான்... அவன்கிட்டப் போயி மொக்கை போட ஆரம்பிச்சிருக்கியே... நாங்க வரப்போயி ஆச்சு... இல்லைன்னா... நீ போட்ட மொக்கைக்கு... அடிச்சு நடுக்கடல்ல வீசிட்டுப் போயிருப்பான்..."

"போடா டேய்... நல்லது சொல்லப் போனவன அவன் கொல்லப் பாக்குறான்.. அவனை ஏன்னு ஒரு வார்த்தை கேட்காம வந்து நிக்கறிங்களே... நீங்கள்ளாம் பிரண்ட்ஸாடா...?"

"உன் கழுத்தை ஒற்றைக் கையில பிடிச்சுத் திருகிக்கிட்டு இருக்கான்.. நீ ரெண்டு கையாலயும் விலக்கப் பாக்கிற.. முடியலை.. அவன்கிட்டப் போயி.. ஒருவார்த்தை கேட்டு வைச்சோம்ன்னு வையி.. அந்த

ஒற்றைக்கை.. எங்க கழுத்தைத் திருக வந்துரும்.. தேவையாடா எங்களுக்கு...?"

"அதுக்கு...?"

"வாயைப் பொத்திக்கிட்டு காரில் ஏறு... நாம மீட்டிங் போட வேற இடம் கிடைக்குதான்னு பாப்போம்... அவனைப் பார்த்தா ஒற்றைக் கையில நூறு பேரோட மென்னியைத் திருகிருவான் போல இருக்கு... உன்மேல இருக்கிற காண்டை எங்க பக்கம் திருப்பினா என்னாகிறது..."

அவர்கள் அனுதாபியை காரில் இழுத்துப் போட்டுக் கொண்டு... காரைக் கிளப்பிச் சென்றுவிட... பாலமுரளியை அவன் தேடிய தனிமை சூழ்ந்து கொண்டது...

'வண்ண வெளியின் வாசலில்..
என் தேவன் தோன்றினான்...'

விழிகளைச் சுழற்றி அவனைப் பார்த்த வண்ண ராதிகா ஆகாயத்தில் தோன்றிப் பாடினாள்...

'என்னைப் பார்த்துத்தான் உன் தேவன்னு சொன்னேன்னு நான் நினைச்சேனேடி.. அவனைப் பார்த்தில்ல நீ சொல்லியிருக்க...'

பாலமுரளி கடற்கரை மணலில் மல்லாந்து படுத்து கைகளை மடித்துத் தலைக்குக் கொடுத்து... வானத்தைப் பார்த்துக் கேட்டான்...

'மன்னன் நடந்த பாதையில்
உன் கால்கள் செல்வதேன்..?
மங்கையே உன் கண்கள் இன்று
மயக்கம் கொள்வதேன்...?'

ராதிகாவின் மயக்கும் பார்வை நிலவில் தோன்ற... பாலமுரளிக்கு உன் மத்தம் பிடித்தது...

தண்டனை கொடுத்தவனே..
தண்டனைக்கு ஆளானேன்...

ராதிகாவின் பார்வையில் தெரிந்த அழைப்பில் பாலமுரளியின் மனம் பித்தானது... அவளது கண்களின் வசீகரத்தில் அவன் நிலைகுலைந்தான்...

'பார்க்காதே ராதிகா...' புலம்பினான்...

'இப்படிப் பார்த்துப் பார்த்துத்தானே என்னை இந்த கதிக்கு ஆளாக்கியிருக்கிற... பார்த்தே மயக்கினேயேடி... நான் மயங்கிப் போனேனே.. உன் பின்னாலே அலைஞ்சேனே... தேனூத்து பெரிய மனுசன் முரளின்னு சொன்னா.. தென்காசிப் பட்டினமே

கைகட்டி மரியாதையாய் பார்க்கும்.. அப்படிப்பட்டவனை என்ன காரியம் செய்ய வைச்சிட்ட.. எத்தனை பஞ்சாயத்தில நான் நீதிபதியா நின்னு தீர்ப்புச் சொல்லியிருக்கேன் தெரியுமா..? என்னை குற்றவாளியா நிற்க வைச்சிட்டியேடி...'

அவன் புலம்பலைக் கேட்ட ராதிகா வரிசைப் பற்கள் தெரிய வசீகரமாய் சிரித்தபடி மறைந்து போனாள்...

அவள் எங்கே போனாள் என்று தேடுவதைப் போல முரளி எழுந்து அமர்ந்து பார்வையைச் சுழல விட்டான்... சற்றுத் தொலைவில் ரோந்து வந்து கொண்டிருந்த போலிஸ்காரர்கள் அவனருகே வந்ததும்...

"யார் சார் நீங்க..?" என்றனர்...

"ஜஸ்ட் ரிலாக்ஸ் பண்ண வந்தேன்..." பாலமுரளி அவனுடைய விசிட்டிங் கார்டை நீட்டினான்...

கையிலிருந்த டார்ச் லைட்டின் வெளிச்சத்தில் அதைப் பார்த்தவர்களின் பார்வையில் மரியாதை வந்தது...

"சும்மா ஒரு வெரிபிகேசனுக்குத்தான் கேட்டோம் சார்..." அவர்கள் விலகி நடந்தார்கள்...

அதற்கு மேலும் அங்கிருப்பது உசிதமில்லை என்று தோன்றிவிட முரளி காரை நோக்கி நடந்தான்...

பண்ணை வீட்டின் முன்னால் காரை நிறுத்தி விட்டு.. வீட்டக்கதவை திறந்தவனின் பார்வையில் படியில் கிடந்த மலர்சரம் பட்டது... குனிந்து கையில் எடுத்துப் பார்த்தான்.. அது ராதிகாவின் தலையிலிருந்த பூச்சரம்... அதை கீழே போட மனமில்லாமல் பத்திரப் படுத்தியவனாக கதவைப் பூட்டிவிட்டு மாடிப்படிகளில் ஏறியவனின் மனம் கனத்தது...

படுக்கையறைக் கதவைத் திறந்தான்... அறையில் சிதறிக் கிடந்த பொருள்கள்.. ராதிகாவின் போராட்டத்தை எடுத்துக் கூறின... போர்க்களமாக இருந்த அறையை பெருமூச்சுடன் பார்த்தான்.. உருண்டு கிடந்த வெண்கலச் சிலை அவன் கண்ணில் பட்டது.. எடுத்துப் பார்த்தான்...

'இதை ஒங்கினவ... என்னைப் பார்த்ததும் கீழே நழுவ விட்டுட்டா...'

அவனைத் தவிர வேறு ஒருவனாக இருந்திருந்தால் நிச்சயமாக அந்தச் சிலையினால் அடிபட்டிருப்பான் என்பதை பாலமுரளி தெளிவாக உணர்ந்து வைத்திருந்தான்...

'ஏன் அவ இதாலே என் மண்டையைப் பிளக்கல..?'

அவனுக்குள் கேள்வி எழுந்தது.. சிந்தனையுடன் அந்தச் சிலையை அதற்கான இடத்தில் வைத்து

விட்டு சிதறிக்கிடந்த பொருள்களை சேகரித்து அறையை ஒழுங்கு படுத்த முயன்றான்... சிதறிக்கிடந்த பொருள்களைத் தொடும் போது.. அதை பிரயோகித்த ராதிகாவின் நினைவு வந்து அவன் மனதை அசைத்தது...

'இதை விட்டெறிஞ்சா...'

'இதை இழுத்துக் கீழே போட்டா...'

'இது அவ கைபட்டு விழுந்துச்சு...'

ஒவ்வொரு பொருளும்.. ஒவ்வொரு நிகழ்வை உணர்த்த அறையை ஒழுங்கு பண்ணும் முயற்சியில் தோற்றுப் போனவனாக... அதை அப்படியே விட்டு விட்டு.. கட்டிலை அடைந்தான் பாலமுரளி... கசங்கிக் கிடந்த மெத்தைவிரிப்பும் சிதறிக்கிடந்த தலையனைகளும் அவன் மனதை மேலும் கசக்கிச் சிதறவைத்தன...

அவளைத் தொட்டு விட்ட இன்பம் துளிக்கூட அவன் மனதில் இல்லை... கட்டிலில் சரிந்தவனின் மனதில்...

'தண்டனை கிடைச்சிருக்கிறது.. அவளுக்கா..? இல்லை எனக்கா..?' என்ற கேள்வி எழுந்தது...

தலையணைகளை ஒழுங்கு படுத்தி.. அதில் தலையை வைத்துப் படுத்தவனின் மனதில்..

'இனி அவ என்ன செய்வா..?' என்ற நினைவு எழுந்தது...

'நிச்சயமாக வாழ்க்கைப் பிச்சைகேட்டு.. என்னைத் தேடி வருவா...'

இந்த நினைவில் அவன் மனதின் வலி மறைவதை வியப்புடன் உணர்ந்தான் பாலமுரளி...

'நிச்சயம் வருவா...'

அவளின் வருகை மீதான உறுதிப் பாட்டுடன் அவன் கண்களை மூடி உறங்க முயன்றான்.. உறக்கம் வரவில்லை...

ராதிகாவின் சில தன்மைகளை பாலமுரளி அறிந்து வைத்திருந்தான்.. அந்த ஒரு காரணத்தினாலேதான்.. அவளைப் பூங்காவில் கட்டி முத்தமிட்டவன்.. உடனே ஊருக்குப் போக நேர்ந்ததும்.. நம்பிக்கையோடு அங்கேயே தங்கி விட்டான்...

'அவளாவது... அந்த முத்தத்துக்குப் பின்னாலேயும் சங்கரைப் பத்தி நினைக்கிறதாவது...'

அவனுடைய முத்தத்தில் மயங்கிப் போனவள் விலகாமல் நின்றதில் அவனது நம்பிக்கை அதிகரித்தது...

'அவ மனசில நான் இருக்கிறேனோ...'

மழைத்துளியைப் போல... அவன் மனதில் ஓரமாக நம்பிக்கைத்துளி தோன்றியிருந்தது... அதை அடியோடு

துடைத்து எறிந்தது செல் போனில் ஷோபா அனுப்பி வைத்த ராதிகாவின் பேச்சு...

வெறி கொண்டவனின் மனதில் இருந்த தர்ம நியாயங்கள் சொல்லாமல்.. கொள்ளாமல் ஓடிவிட.. ராதிகாவைக் கவர்ந்து சென்று சூறையாடி விட்டான் பாலமுரளி...

'இத்தனைக்குப் பின்னாலே.. அவளுக்கு என்னை விட்டா வேறு கதி கிடையாது...'

இந்த நினைப்பே அவன் மனதில் நிம்மதியை உண்டாக்கியது... ராதிகாவின் குடும்பத்தைப் பற்றி நன்கு அறிந்தவன் பாலமுரளி...

'குடும்பத்தை நினைச்சுப் பார்ப்பா... நிச்சயமாய் என்னைத் தேடி வந்து காலில் விழுந்து கல்யாணம் பண்ணிக்கன்னு கெஞ்சுவா... கதறுவா...'

பாலமுரளியின் மன வலி கொஞ்சம்... கொஞ்சமாக குறைந்தது... ராதிகாவிற்கு இழைத்து விட்ட அநியாயத்திற்கான பரிகாரம் அவள் கழுத்தில் தாலியைக் கட்டுவதுதான் என்று நினைத்துக் கொண்டான் பாலமுரளி...

'ஆனா... அதைச் செய்துதான் ஆகனுமா..?' அவன் மனம் கேட்டது...

'நிர்பந்தத்தில என்னைத் தேடிவந்தா அவளை நான் ஏத்துக்கனுமா..? அவ செஞ்ச அநியாயத்துக்கு

அதுதான் தண்டனையா..? கூடாது.. நடந்ததை நினைச்சு.. நினைச்சு அவ புலம்பனும்.. வாழ்நாள் பூராவும் இன்னைக்கு நடந்ததை நினைச்சு.. நினைச்சு அவ கதறனும்...'

அவன் மனம் இறுகியது.. ஒன்றில் மட்டும் அவன் நிச்சயமாக இருந்தான்...

அது.. இதற்குப் பின்னால்.. ராதிகா சங்கரை நினைத்துக்கூடப் பார்க்க மாட்டாள் என்பது...

உன் நிழலைத்தானே கேட்டேன்...
நெருப்பாக ஏன் சுட்டாய்

"இதோ ராதுவே வந்திட்டாளே..."

கீதாவின் உற்சாகக் குரலில் திரும்பிப் பார்த்த கிருஷ்ணமூர்த்தியின் புருவங்கள் மேலேறின....

"என்னம்மா..? ஏன்.. என்னவோ போல இருக்க..?"

பெற்றவருக்கு பிள்ளையின் முகத்தைப் பார்த்தவுடனேயே அந்தப் பிள்ளையின் மனம் பாதிப்பு

தெரிந்து விடுவதற்கான மர்மம் எதுவென்று ராதிகாவிற்கு தெரியவில்லை...

ஆனாலும்.. தகப்பனாரின் கரிசனத்தில் கண் கலங்கி விட்டாள் ராதிகா...

"ஒன்னுமில்லேப்பா..."

"ஒன்னுமில்லாததுக்கு ஏன் கண் கலங்கற...?" கிருஷ்ணமூர்த்தி விடவில்லை...

"நீங்க வேறப்பா..." கீதா இடைமறித்தாள்...

"என்ன சொல்ற...?"

"இவ இப்பல்லாம் சுத்த அழு மூஞ்சியா ஆகிட்டாப்பா... நேத்து டிவியில செம காமெடி படம் ஓடுதுப்பா... எனக்கும்.. சுந்தருக்கும் சிரிச்சுச்சிரிச்சு... வயித்து வலியே உண்டாகிருச்சு... இவளை யதேச்சையாய் பார்த்தோம்... எங்க ரெண்டு பேருக்கமே... தூக்கிவாரிப் போட்டிருச்சு..."

"எதுக்கும்மா..?" கிருஷ்ணமூர்த்திக்குப் புரியவில்லை...

"காமெடி படத்தைப் பார்த்து இவ அழுது வைச்சாப்பா..."

"என்னது..?!" மகளை விசித்திரமாகப் பார்த்தார் கிருஷ்ணமூர்த்தி... அவரறிந்த ராதிகா... சும்மாவே விழுந்து.. விழுந்து சிரிப்பாள்... இதில் காமெடி படமென்றால் கேட்கவே வேண்டாம்..

அந்த ராதிகா... நகைச்சுவைப் படத்தைப் பார்த்து கண்ணில் தண்ணீரை விட்டாளா...?

'என்னடா இது...?' கிருஷ்ணமூர்த்திக்கு.. உலகின் விசித்திரங்களைக் குறித்து கவலை வந்து விட்டது...

"அதனாலேதான் சொல்றேன்... இவ மூஞ்சி எப்படியோ இருக்கேன்னு காரணம் கேட்காதீங்க... அது அப்படித்தான் இருக்கும்..." கீதா விளக்கம் சொன்னாள்...

"கோவிலுக்கு போயிட்டு வந்தவ... என்னவோ.. நடிகர் திலகத்தோட படத்துக்கு போயிட்டு வந்த மாதிரி அழுமுஞ்சியா வந்து நிற்கறியேடி... என்ன ஆச்சு...?"

அதுவரை நடந்ததை அறியாதவளாக... அப்போதுதான் சமையலறையை விட்டு வெளியே வந்த ராஜேஸ்வரி மகளை அதட்டினாள் அதைக்கேட்ட கீதா வாய் பொத்தி சிரித்தாள்...

ராஜேஸ்வரி அப்படித்தான் பேசி வைப்பாள்... அவள் கருப்பு வெள்ளைப் படங்களின் தீவிர ரசிகை... மக்கள் திலகத்தின் படங்களென்றால் அவளுக்குப் பிடிக்கும்.. திருமணத்திற்குப் பின்னால்..

ஒரு நாளில் கிருஷ்ணமூர்த்தி அவளிடம் மிக யதார்த்தமாக ஒரு விசயத்தைச் சொன்னார்...

"எனக்கு நடிகர் திலகம் படம்ன்னா அவ்வளவு இஷ்டம் ராஜி.. படம்ன்னா அவரோட படம்தான்.. படம்..."

அதுவரை மக்கள் திலகத்தின் படத்தைச் சாதாரணமாக பாராட்டி வந்த ராஜேஸ்வரி... அதற்குப் பின்னால் மக்கள் திலகத்தின் தீவிர அபிமானியாக மாறிவிட்டாள்.. அதில் கிருஷ்ணமூர்த்திக்கு வருத்தம்....

'ம்ஹீம்... நானா வாயைக் கொடுத்து மாட்டிக்கிட்டேனே...'

அது எப்படித்தான்.. கிருஷ்ணமூர்த்தியைச் சார்ந்த அத்தனை விவரங்களுக்கும் ராஜேஸ்வரி எதிர்மறையான கருத்துக்களை வைத்திருக்கிறாளோ என்றிருந்தது அவருக்கு....

அவரைக் கடுப்படிக்க.. ராஜேஸ்வரி... அவருக்கு பிடித்தவற்றை விமரிசித்து வைப்பாள்...

"கேட்டுக்கடி கீதா... மக்கள் திலகம் படத்துக்குப் போனா... கலகலன்னு சிரிச்சுக்கிட்டு.. சிரிச்ச முகமா வெளியே வரலாம்... அதுவே நடிகர் திலகத்தோட படத்துக்கு போனோம்ன்னு வைய்யி... கர்சீப்பை பிழிஞ்சுக்கிட்டு வர வேண்டியதுதான்..."

"அது எதுக்கும்மா...?"

"அழுதழுது கர்சீப் நனைஞ்சு போனா.. பிழியாம என்னடி செய்றது...?"

இப்படிப்பட்ட ராஜேஸ்வரியிடம் நடிகர் திலகம் நடித்த நகைச்சுவை படங்களைப் பற்றி நினைவு படுத்த விருப்பப் படுவார் கிருஷ்ணமூர்த்தி... ஆனால்... அதைச் செய்ய ஆரம்பித்தால் விவாதம் முற்றுப்பெறாமல் சிந்துபாத்தின் கன்னித்தீவைப் போல நீண்டு கொண்டே சென்று விடும் அபாயம் இருந்ததால் வாயை இறுகி மூடிக் கொண்டு அமைதி காத்து விடுவார்...

அன்றும்... அது போல அமைதிக்கு அவர் தாவிவிட... ராதிகா அவளுடைய அறைக்குள் போகாமல்.. மொட்டை மாடிக்குப் போனாள்...

அதைக் கவனிக்காமல் ராஜேஸ்வரி அதிசயமாக கையில் கிடைத்த டிவியின் ரிமோட்டை கைப்பற்றிக் கொண்டு தொலைக்காட்சி தொடரில் ஆழ்ந்துவிட.. அதை எப்படி திரும்பவும் கைப்பற்றுவது என்ற சிந்தனையில் கிருஷ்ணமூர்த்தி ஆழ்ந்துவிட்டார்...

மொட்டைமாடியின் தனிமையில் சரிந்த ராதிகா ஒய்ந்து போயிருந்தாள்... கண்ணுக்கு முன்னால் சூன்யவெளி நிலைத்திருக்க.. அவள் மனம் சல்லடை.. சல்லடையாக சிதறியிருந்தது...

முழங்கால்களைக் கட்டி அதில் முகம் புதைத்துக் கொண்டவளின் காதுகளில் அந்தப் பாடல் நுழைந்தது...

"தூது சொல்ல
ஒரு தோழி இல்லையென்று
துயர் கொண்டாயோ தலைவி...?"

தெருவில் சோன்பப்டி விற்றுக் கொண்டு சென்றவனின் கைவண்டியிலிருந்து எப்.எம்மின் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது...

அதைக் கேட்டதும் ராதிகாவின் கண்ணீர் அதிகமானது...

இதைப் போல பலமுறை அவள் நினைத்திருக்-கிறாள்... சங்க காலத்தில் மேகம் விடு தூது.. அன்னம் விடு தூது என்று இருந்ததைப் போல... இந்தக் காலத்தில் எந்தத் தூதும் அகப்படவில்லையே என்று ஏங்கியிருக்கிறாள்...

அவளுடைய டைரியில் அவளுடைய காதல் உணர்வுகளை கவிதையாகத் தீட்டியிருக்கிறாள்...

'அம்மம்மா.. கேளடி.. தோழி..!' என்று ஆரம்பித்த அந்தக் கவிதைகளின் அருகே அன்னப் பறவையின் படம் இருக்கும்...

"அசத்தலா இருக்குடி ராதிகா..."

அவள் டைரியைப் படித்துப் பார்த்த கீதா ஒருநாள் ஆச்சரியத்துடன் பாராட்டினாள்...

"அன்னப் பறவையின் படத்தைச் சொல்றியா...?" என்று கேட்டாள் ராதிகா...

"ஊஹூம்.. இந்தக் காதல் கவிதைகளைச் சொல்றேன்... என்னடி ஆச்சு..? யாரையும் காதலிச்சு.. கீதலிச்சு வைச்சிருக்கியா..?" சந்தேகத்துடன் பார்த்தாள் கீதா...

"தூ.. உன் புத்தி இப்படித்தானே போகும்... கொடுடி டைரியை..." கோபப் படுவதைப் போல நடித்தாள் ராதிகா...

இதற்காகத்தானே.. அவள் டைரியில் அவளுடைய மனதின் உணர்வுகளை சாதாரணமாக எழுதாமல்.. கவிதைகளாக வடித்தாள்... அந்தரங்கமானது என்றெல்லாம் அடுத்தவரின் டைரியை படிக்காமல் விட்டு விடும் ரகமா கீதா..? அவள் பாடத்தை படிக்கிறாளோ இல்லையோ... அந்த வீட்டிலிருப்பவர்களின் டைரிகளை மட்டும் தேடியெடுத்துப் படித்து விடுவாள்...

என்ன ஒன்று.. அவற்றில் அவள் தேடும் சுவாரஸ்யமான அனுபவங்கள் எதுவும் இருக்கவே இருக்காது..

கிருஷ்ணமூர்த்தி.. அவர் வாங்கி வைத்திருக்கும் லோன்களின் புள்ளி விவரங்களை அவருடைய டைரியில் பிட்டுப்பிட்டு வைத்திருப்பார்..

ராஜேஸ்வரியோ.. வீட்டின் பால் கணக்கு... மளிகை கணக்கு... சலவைக் கணக்கு.. மாதாந்திர வீட்டுச் செலவின் கணக்கு என்று.. கணக்குப் புத்தகமாக.. டைரியை மாற்றி வைத்திருப்பாள்...

சுந்தர் மட்டும் உருப்படியாய் தினப்படி அலுவல்களை டைரியில் எழுதிவைத்திருப்பான்... அவற்றில் பெரும்பான்மையானவை.. கீதாவைத் திட்டுவனவாகவே அமைந்திருப்பதால் கீதா அதை விரல் தொட்டுப் படிக்க மாட்டாள்...

ராதிகா எதிலும் முன்யோசனையுடன் செயல்படுபவள்.. அசைவப் பட்சிணியான தங்கையைக் கொண்டிருப்பதால்.. சைவச் சமாச்சாரங்களையே டைரியில் எழுதி வைப்பாள்... அதில் பெரும்பாலானவை பக்திப் பரவசத்துடன் இருந்து வைப்பதில் கீதா கொலை வெறிக்கு ஆளாவாள்...

"காலேஜ் படிக்கிறவ எழுதற டைரி மாதிரியாடி இது இருக்கு..?"

அப்படிப்பட்ட ராதிகாவின் டைரியில்.. 'அம்மம்மா... கேளடி.. தோழி..!' யென்று அன்னப் பறவையிடம் சேதி

சொல்வதைப் போல அனேக காதல் கவிதைகளைக் கண்டதில் கீதா கள்வெறி கொண்டாள்...

"இதையெல்லாம் நான் நோட்ஸ் எடுத்துக்கறேண்டி..."

"இதென்ன பாடமா..? நீ நோட்ஸ் எடுத்துக்கறதுக்கு..."

ராதிகா மறுத்த போதும்.. அவளுக்குத் தெரியாமல் அதை எழுதிவைத்துக் கொண்டாள் கீதா...

அந்த நினைவில் ராதிகாவின் கன்னத்தை சூடான கண்ணீர் நனைத்தது...

'கேட்டாயா.. என் உள்ளம் கவர்ந்தவன்.... என் உடலையும் கவர்ந்து விட்டான்...' விம்மினாள் ராதிகா...

'அவனைத் தொட வேண்டுமென்று ஆசைப்பட்டேன்.. ஆனால்.. இப்படித் தொட வேண்டுமென்று ஒரு நாளும் ஆசைப் பட்டதில்லையே...' மனம் வெதும்பினாள்...

'அந்தக் காலப் பெண்களுக்கு தூது சொல்ல ஆயிரம் வழிகள் இருந்தன... எனக்கு ஏன்.. அதில் ஒரு வழிகூட கிடைக்கவில்லை...? உன்னிடம் சேதி சொன்னேனே.. உணக்கையாய் கேட்டுக் கொண்டாயே.. அவனிடம் போய் சொல்ல உனக்கு ஏன் மனமில்லை...'

காகிதத்தில் வரைந்த அன்னப் பறவையிடம் கேள்வி கேட்டாள் ராதிகா... அது சித்திரமாய் உறைந்து நின்றது..

'என மனதிலிருந்ததையெல்லாம் கொட்டித் தீர்த்தேனே.. அதில் ஒன்றைக்கூட அவனிடம் கொண்டு சேர்க்க உனக்கு துப்பில்லாமல் போய்விட்டதே...'

அவள் முன்னால் விரிந்து கிடந்த டைரியிலிருந்த அன்னப்பறவையின் விழிகளில் கண்ணீர் கசிவதைப் போல ராதிகாவிற்கு பிரமை ஏற்பட்டது...

'நீயென்ன செய்வாய்..? பாவம்..! நீயும் என்னைப் போல ஊமையாகி விட்டாய்.. வாயிருந்தும் பேச முடியாமல் நானே ஊமையாகிப் போகும் போது... சித்திரமாய் இருக்கும் நீ என்ன பேச முடியும்..?'

ராதிகாவின் கண்ணீர் துளிபட்டு.. அன்னப் பறவையின் கண்ணீரில் நீர் வழிந்தது...

'நீயேன் அழுகிறாய்..? அழ வேண்டியது நான்.. இது எனக்கான தண்டனையாம்.. நான் உயிராய் நினைப்பவன் சொல்லி விட்டுப் போயிருக்கிறான்.. நான் என்ன செய்யட்டும்..? தண்டனையை அனுபவிக்கவா..?'

அன்னப்பறவையிடம் கேள்வி கேட்டாள்.. அது பதில் சொல்லாமல் தோழியின் நிலைமையைக் கண்டு உறைந்து போயிருந்தது.. ராதிகா.. அன்னப் பறவையின் சித்திரத்தின் மீது முகம் புதைத்து... மௌனமாக கண்ணீர் சிந்திக் கொண்டேயிருந்தாள்...

- முதல் பாகம் முடிந்தது -

முத்துலட்சுமி ராகவன

அம்மம்மா கோடி தோழி...

புதிது - 2

கிரிக்கெட் விளையாடுவான்... டென்னிஸ் ஸ்போர்ட்ஸ் பார்ப்பான்.. சத்தமான 'ராக்' மியுஸிக்தான் இவனுக்கு பிடிக்கும்.. நண்பர்களுக்கு ஒன்று என்றால் முதல் ஆளாக உதவிக்குப் போய் நிற்பான்.... அந்த அளவுக்கு நட்புக்கு முதலிடம் கொடுப்பவன் என் மகன்... ரா. பாலச்சந்தர் என்ற பாலாஜி...!

எனது அண்ணன் சந்திரசேகரின் நினைவாக இவனுக்கு 'பாலச்சந்தர்' என்ற பெயரை வைக்க நினைத்தேன்... என் அன்புக் கணவர் அதற்கு அனுமதி கொடுத்தார்.. பெருமாளின் பெயரைச் சார்ந்தே எங்கள் குடும்பப் பெயர்கள் அமையும் என்பதால் 'பாலாஜி...' என்று வீட்டில் அழைக்க ஆரம்பித்தோம்... நாளடைவில் அவனுடைய பள்ளி... கல்லூரிகளில் அவன் 'பாலச்சந்தராகவும்' உறவினர் மத்தியில் 'பாலாஜி' யாகவும் அழைக்கப் படுகிறான்...

மருத்துவக் கல்லூரியில் MBBS படிப்பின் இறுதியாண்டைப் படிக்கும் இவனே எங்கள் வாழ்க்கையில் அனைத்துமானவனாக... எங்கள் வாழ்வின் அடிப்படை ஆதாரமாக இருக்கிறான்...

– நட்புடன் –

முத்துலட்சுமி ராகவன்

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

"அம்மம்மா... கேளடி தோழி..!"

பாகம் – II

சொன்னமொழி தவறு என்பதையே...
சொன்னவன் என்றுதான் அறிவானோ..?

ஊரே உறங்கிக் கொண்டிருந்த அந்த நள்ளிரவு வேளையில்.. உறங்காமல் கண்மூடிப் படுத்திருந்தாள் ராதிகா... அவளது மைவிழிகள் சிந்திய கண்ணீரை மையிருட்டு மறைத்தது... தலையணை நனைய.. அதில் முகம் புதைத்து.. மற்றவர்கள் அறியாமல் சப்தமின்றி விம்மியவளின் நெஞ்சம் சுக்கு நூறாக நொறுங்கியிருந்தது...

'இனி என்ன செய்வேன்...?'

நடந்து முடிந்து விட்ட நிகழ்வில் மனம் அதிர.. அவள் முன் வாழ்வே சூன்யமாக நின்றது...

எதற்கும் அழுகாத ராதிகாவை காதலினால் அழுக வைத்தவன்... அன்று கறைபடிந்தவளாக்கி அழுக வைத்துவிட்டான்...

யாதுமாக அவள் நினைத்திருந்தவனே.. அவளை குறையாடிவிட்ட கொடுமையினை நினைத்து நினைத்து மனம் துடிக்க அழுதாள் ராதிகா...

'எல்லாம் முடிந்து விட்டது...'

அவள் மனம் வெறுமையாக வெம்பியது... தன் மனதில் சக்தியற்று போய் விட்டதை உணர்ந்தாள் அவள்..

'இனியும் நான் உயிரோடுதான் இருக்கனுமா..?'

நடந்ததை அவளது குடும்பம் அறிந்துவிட்டால் என்னவெல்லாம் நடக்கக் கூடும் என்ற நினைவில் நடுங்கினாள் ராதிகா...

'அப்பா உயிரையே விட்டு விடுவார்...'

நினைக்கும் போதே அவளது நெஞ்சம் பதரியது...

'அம்மா என்னோடு சேர்த்து.. எல்லாத்துக்கும் விஷத்தைக் கொடுத்துட்டு.. தானும் சாப்பிட்டு விடுவாங்க...'

லேடி ஹிட்லர் அந்த ஒன்றில் மகா உறுதியாக இருப்பாள் என்பதை அறிந்து வைத்திருந்த ராதிகாவுக்கு உலகமே இருட்டானதைப் போல தோன்றி உள்ளே குளிரெடுத்தது...

'என்னாலே... என் குடும்பமே தலை குனியனுமா..? அழியனுமா...?'

இந்தக் கேள்வியில் அவளுக்குள் இருந்த பழைய ராதிகா உயிர் பெற்று எழுந்தாள்... கண்ணீரும்.. கம்பலையுமாக இருந்தவளை அதட்டினாள்...

'ஏண்டி அழுகறே...? இப்ப என்ன நடந்திருச்சு...?'

ராதிகா திகைத்து விட்டாள்... அவள் மனதிலிருந்த பழைய ராதிகாவிடம் தீனமான குரலில் கேட்டாள்..

'என்னடி இப்படிக் கேட்கிற...? என் வாழ்க்கையே அழிஞ்சுருச்சே...'

இதைக் கேட்ட பழைய ராதிகா அவளை முறைத்தாள்... அங்கே இழப்பை உணர்ந்து பரிதவித்த ராதிகாவிற்கும்.. இயல்பான போராட்ட குணமுள்ள ராதிகாவிற்கும் இடையே வழக்காடு மன்றம் ஆரம்பமானது...

'அழிஞ்சுட்டதா ஏன் நினைக்கறே..? வாழ்ந்துட்டதாய் நினை...'

'அடிப்பாவி... இதுதான் நான் வாழ்ந்த லட்சணமா..?'

'உனக்கு அவனைப் பிடிக்கும்தானே...?'

'பிடிக்கும்...'

'அவனை மட்டும்தானே பிடிக்கும்..?'

'ஆமாண்டி... ஆமாம்... அவனைமட்டும்தான் பிடித்து தொலைச்சிருக்கு...'

'அவனைத்தவிர வேறு ஒருத்தனால் உன்னை இவ்வளவு எளிதாக தொட்டிருக்க முடியுமா..?'

அவளது அந்தரங்க மனதிலிருந்த ராதிகா கேட்ட கேள்வியில் அவள் அதிர்ந்தாள்.. அது உண்மைதானே... வேறு ஒருவனின் விரல் நகம்கூட அவள் மீது பட்டிருக்க முடியாது தானே...

'என்னடி பேச்சைக் காணோம்..? அவன் உன்னைத் தொட்டான் தான்... நீ முழுமனசாய் அவன்கிட்டயிருந்து விடுபடனும்னு போராடினயா..?'

'அவனிடம் கெஞ்சினேன்டி... கதறினேன்டி...'

'நீ போராடினயா..? இதுதான் என் கேள்வி...'

'அவன் காலில் விழுந்தேண்டி...'

'அதுக்குப் பதிலாய் அவன் தலையில் எதையாவது எடுத்து அடித்து அந்த இடத்திலேயே அவனைக் கொன்றிருக்கலாமே.. ஏண்டி நீ அதைச் செய்யலை...?'

'கொல்கிறதா..? அவனையா..? என்னப் பேச்சு பேசறடி.. என்னால் அவனை மெல்ல அடிக்கக்கூட முடியாதுடி...'

'ஏன்..? அதுதான் ஏன்..? அவன் உன் உயிரை விட மேலான கற்பை சூறையாடிக்கிட்டு இருக்கான்.. நீ அவன் காலில் விழுந்து கெஞ்சினேன்னு சொல்ற.. இதைச் சொல்ல உனக்கே அபத்தமாய் தோணலியா..?'

'நான் என்னடி செய்வேன்..?'

'எதை வேணும்னாலும் செய்திருக்கலாமே.. உன் கைவிரல் நகங்களும்.. பற்களும் கூட அந்த மாதிரியான சூழ்நிலையில் ஓர் ஆயுதம்தானே... நீ அவைகளைப் பயன்படுத்தினாயா..?'

இந்தக் கேள்வியில் தலை குனிந்தாள் ராதிகா...

'என்னடி பேச்சைக் காணோம்... ஏன் நீ அதைச் செய்யவில்லை...? அவன் உடம்பில் ஒரு சிறு கீறல் கூட இல்லாமல் அவன் நினைத்ததை சாதித்து விட்டுப் போயிருக்கிறானே... அது எப்படி...?'

எப்படியென்று சொல்வாள் ராதிகா...? அவன் தொட்டவுடன் பாகாய் குழைந்த உடலையும்.. மனதையும் வைத்துக்கொண்டு.. பிரியமானவனுடன் போராட முடியாமல் போய் விட்டதன் இயலாமையை எப்படி அவளால் சொல்ல முடியும்..?

'ஊமையாகி விட்டாயே ராதிகா.. இதுதான் நீ...! அவன் உன்னை தொட்டு விட்டதற்காக நீ துடிக்கவில்லை.. தொட்டவன் உன்னை விட்டுவிட்டுப் போய் விட்டானே.. அதனால்தான் நீ துடிக்கிறாய்...'

அவளது மனநிலையை பழைய தெளிவான ராதிகா பிட்டுப்பிட்டு வைக்க..

'என்னது..?' என்று அதிர்ந்தாள் ராதிகா...

'என்னடி... உண்மையைச் சொன்னால் அதை ஒப்புக் கொள்ள உனக்கு மனமில்லையா..? எங்கே.. நான்

சொன்னதை இல்லையென்று முழுமனதாய் சொல்லு பார்ப்போம்...'

பழைய ராதிகா சவால்விட.. பதில் சொல்ல முடியாமல் திருதிருத்தாள் ராதிகா...

'உன்னுடன் அவன் கழித்த அந்த மணித்துளிகளை மரணப்படுக்கையிலும் நீ மறக்காமல் நினைவில் வைத்திருப்பாய்... இதுதான் நிதரிசனமான உண்மை..! உன் அந்தரங்கத்தில் அந்த வினாடிகள் தேன்துளிகளாக புதைந்திருக்கும்... எவரும் அறியாமல் அதை நினைத்து... நினைத்து.. நீ மனம் சுகிப்பாய்...'

மனம் மயக்கும் அந்த வினாடிகளில் தன் மனம் புதைந்திருந்ததை அந்த நொடியில் உணர்ந்தாள் ராதிகா.. அவன் தொட்ட மணித்துளிகள் அந்தரங்கத்தின் பெட்டகத்தில் தேன் துளிகளாக சேர்ந்து விட்டதையும் அவள் மனம் உணரத்தான் செய்தது...

'இருந்தாலும்...' ராதிகா மனம் தவித்தாள்...

'இனியும் என்னடி..?' பழையவன் அதட்டினாள்...

'அம்மா.. அப்பா... கீதா... சுந்தர்...'

'இவங்களுக்கு என்ன..?'

'இதைத் தெரிந்தால் குடும்பத்தின் நிலைமை என்ன ஆகும்? அதைக் கொஞ்சம் யோசிச்சுப் பாரு...'

'ஒரு மண்ணும் ஆகாது.. இப்ப என்ன ஆகிருச்சுன்னு இப்படி பயப்படுகிற ராதிகா.. நீ உன்னுடையவனுடன் வாழ்ந்திருக்கிறாய்...'

'அதை ஊரறிய சொல்ல முடியுமா...?'

'ஏன் முடியாது..? ஊரும்.. உலகமும் அறிய அவன் உன் கழுத்தில் தாலிகட்டினால் சொல்ல முடியும்...'

'அவன்தான் எனக்கு இது தண்டனைன்னு சொல்லிட்டுப் போய் விட்டானே...'

'அவன் போனால்.. நீ அப்படியே விட்டு விடுவியா..?'

'வேறென்ன செய்வது..?'

'ச்சீ.. இப்படிக் கேட்க உனக்கு வெட்கமாயில்லை..? அவன் கட்டையைப் பிடித்து நாலு கேள்வி கேட்டு.. உன் கழுத்தில் தாலியைக் கட்டவை.. அதை விட்டு விட்டு புலம்பாதே.. குழம்பாதே...'

'விருப்பமில்லாதவனை.. என்னை வெறுக்கிறவனை.. தேடிப்பிடித்து அவன் காலில் விழுந்து என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி... கெஞ்சச் சொல்கிறயா..?'

'உன்னை யாருடி அவனிடம் போய் கெஞ்சச் சொன்னது..? அவனைத்தேடி நீயேன் போகனும்..? அவனை உன்னைத் தேடி வர வை ராதிகா... உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு அவன் வாயால் சொல்ல வை...'

'த்சு.. நடக்காததைப் பேசாதே.. அவன் என்னை வெறுத்துட்டான்.. அந்த ஷோபா வெறுக்க வைச்சுட்டா..'

'ஊஹீம்..? அப்படியா..? உன்னை வெறுத்தவன் எதுக்காக உன்னை அவன் தொட்ட பண்ணை வீட்டை விலைக்கு வாங்கறான்..? அது எதற்கான நினைவுச் சின்னம்...?'

பழைய ராதிகா கண்சிமிட்ட...

'ஏய்ய்..' என்று முகம் சிவந்தாள் ராதிகா...

'உன்னை அவனுடன் அந்த வீட்டில் இருந்து விடும்படி அவன் சொன்னானா.. இல்லையா..? வெறுக்கிறவன் அப்படிச் சொல்வானா..?'

'அந்தக் கொடுமையை நினைவு படுத்தாதே.. அவன் என்னை அவன் மனைவியாக இருக்கச் சொல்லவில்லை.. ஆசைநாயகியாக இருக்கச் சொன்னான்...'

அவமானத்தில் முகம் கன்றிவிட்டது ராதிகாவிற்கு..

'அவன் சொன்னால்.. நீ அப்படி இருந்து விடுவியா..? எப்ப அவன் உன்னைத் தொட்டு.. உன்னுடன் கலந்து விட்டானோ.. அப்போதே அவன்தான் உன் கணவன்.. நீதான் அவன் மனைவின்னு ஆகிவிட்டது... அதுக்கு மேலேயும் அவன் சொன்னதை நினைத்து நீ மனம் துன்பப்படனுமா..?'

'அவன் அப்படிச் சொல்லலாமா..?'

'நீ சங்கரைப் பற்றிப் பேசின பேச்சுக்களை கேட்ட பின்னாலே அவன் வேற எப்படிச் சொல்லுவான்..? வெறி பிடித்துப் போனவன் எதை வேண்டும்னாலும் செய்வான்.. எதையும் பேசுவான்..'

'என் மனதில் அவன் மட்டும்தானே...'

'உன் அந்தரங்கத்தை அவன் அறிவானா ராதிகா..?'

அந்தக் கேள்வியில் ராதிகா யோசிக்க ஆரம்பித்தாள்.. அவளின் பழைய தெம்பு மீண்டு வந்து கொண்டிருந்தது...

'யோசி ராதிகா... இதை சரிபண்ண என்ன வழின்னு யோசி.. நேற்று வரைக்கும் அவன் உன் காதலன்.. இன்றைக்கோ உனக்குத் தாலிகட்டாமல் தொட்டு விட்ட உன் கணவன்.. இந்த உறவை ஊரறிய உண்மையாக்க என்ன வழின்னு யோசி.. உன் குடும்பம் தலை நிமிர்ந்து வாழனும்னா.. அவன் உன்னைத் தேடி வரனும்.. உன்னைப் பெண் கேட்கனும்.. உலகறிய உன் கழுத்தில் தாலி கட்டனும்.. அதற்கு என்ன வழின்னு யோசி... உன்னைத் தொட்டவன் உன்னை விட்டுவிட்டுப் போனால் நீ சும்மாயிருந்து விடுவதா..? அவன் பதறிக் கொண்டு உன்னிடம் ஓடி வரனும்.. அதுக்கு என்ன வழின்னு யோசி.. அதை விட்டுவிட்டு தேவையில்லாததை யோசிக்காதே.. அழுது புலம்பாதே.. அது உன் சக்தியை குறைக்கும்..'

காண்டிபனுக்கு பாதை காட்டி அந்தக் கண்ணன் உபதேசித்ததைப் போல... அவளின் மனதிலிருந்த அவள்.. அவளுக்கு உபதேசித்தாள்.. வாழ்க்கையென்னும் குருஷேத்திரத்தில்... எதிர்பட்டிருக்கும்.. சக்கரவியூகத்தை உடைக்கும் வழியைச் சொல்லிக் கொடுத்தாள்... உள்ளே போனவள்.. வெளியே வர வழி கண்டுபிடித்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு.. அவளுக்குள் கரைந்து போனாள்..

மகளே இனி உன் சமத்து.. என்று அவளின் மனச்சாட்சி சொல்லி விட்ட பின்பு ராதிகா சமர்த்தாகி விட்டாள்.. அவளது கண்ணீர் உலர்ந்து.. நின்று விட்டது.. விடிவதற்குள் இனிச்செய்ய வேண்டியது என்ன என்ற முடிவை அவள் எடுத்து விட்டாள்.. தெளிவான தீர்மானத்தோடு... உறங்கிப் போனாள்...

அவள் முகத்தில் மழைச்சாரலின் நீர்திவலைகள் நனைக்க...

"கீதா.. ஜன்னலை மூடுடி.. மழை பெய்யுது.." என்றபடி புரண்டு படுத்தாள்...

"மழையா..? இது ஒரு தம்ளர் தண்ணீர்டி..." கீதாவின் குரல் சிரிக்க.. கண் விழித்தாள் ராதிகா...

அவள் முகமெங்கும் நீர் திவலைகள் படிந்திருந்தது.. ஒரு கையில் பேஸ்டும்.. பிரஷ்ஷீம்.. மறுகையில் காலிதம்ளருமாக நின்றிருந்த கீதாவைக் கண்டதும் அவளுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது...

"ஏண்டி பிசாசே... என் முகத்தில் தண்ணிய ஊத்தின..?" என்று பாய்ந்தாள்...

கீதா அதற்கெல்லாம் அயர்ந்து போகிற பெண்ணில்லை.. அவள் அலட்சியமாக பல்லைத் துலக்கியபடி...

"ஊம்.. அப்படியொரு நோர்த்திக்கடன்டி எனக்கு.. உன்கோபத்தை என்கிட்டக் காட்டாதே.. இதைச் செய்யச் சொன்ன லேடி ஹிட்லர்கிட்டக் காட்டு..." என்றாள்...

"அம்மாதான் தண்ணிய ஊத்தச் சொன்னாங்களா..?" அடங்கிப் போனவளாக எழுந்தாள் ராதிகா...

"இப்ப மூச்சே விட மாட்டியே.. லேடி ஹிட்லர்கிட்ட இருக்கிற பயம்.. அவங்களோட இரண்டாவது மககிட்ட உனக்கு இல்லாமப் போயிருச்சில்ல..?" கீதா கேட்டாள்..

ராதிகா அவளை முறைத்த முறைப்பில் ஓடி விட்டாள்..

யாரென்று எனை நினைத்தாய்..?
லேசாக எடை போட்டாய்...

முகமெங்கும் மத்தாப்பூ போல ஒளிர்வுடன்... ஸ்கூட்டியில் வந்து இறங்கிய ராதிகா...

"ஹாய்.. ஹாய்..." என்று கையை ஆட்டியபடி தோழிகளை நோக்கி வந்த உற்சாகத்தைக் கண்டு ஷோபா யோசனையானாள்...

'இவ இன்னுமா அடங்கலை...?'

சங்கரைப் பற்றி ராதிகா அள்ளி விட்ட மறு நொடியே.. அவள் விரைவாக தன் வேலைகளை ஆரம்பித்து விட்டிருந்தாள்...

முதலில் ராதிகா சொன்ன செய்திகள் உண்மையானது தானா என்று உறுதிப் படுத்திக் கொண்டாள்....

"என்ன சொல்ற ஷோபா.."

மகள் சொன்னதைக் கேட்டதும் அதிர்ந்து போன பரந்தாமன் அவள் முன்னாலேயே ராமாமிர்தத்திற்கு போன் செய்தார்...

"ராம்.. ஒரு நியூஸ் கேள்விப் பட்டேன்..."

"....."

"என்னடா இப்படிச் சொல்ற..? நீ எப்படி அந்தப் பெண்ணின் வீடு தேடி குடும்பத்துடன் போய் பெண் கேட்கலாம்...?"

"....."

"சங்கர் விரும்பினா.. நீ ஊம்ன்னு தலையை ஆட்டலாமா..? நம்ம ஸ்டேட்டஸைப் பத்தி யோசிக்க வேண்டாமா..?"

"....."

"ஷோபாவுக்கு நான் என்ன பதிலைச் சொல்வேன்..?"

"....."

"இல்லைதான்.. சங்கருக்கு ஷோபாவின் மேல் இன்ட்ரெஸ்ட் இல்லைதான்.. அதை உண்டாக்கத்தான் நீயும்.. நானும்.. பாடாய் பட்டுக் கொண்டிருக்கிறோமே..

அதுக்குள்ளே நீ என் தலையில் இடியைத் தூக்கிப் போடலாமா..?"

"....."

மறுமுனையில் ராமாமிர்தம் நீண்ட விளக்கத்தைக் கொடுக்க.. சுரத்தில்லாமல் அவற்றை 'ஊம்' போட்டுக் கேட்டு விட்டு போனை அணைத்தார் பரந்தாமன்...

மகளை நிமிர்ந்து பார்த்த அவர் கண்களில் தெரிந்த வேதனை ராதிகா சொன்ன செய்திகள் உண்மைதானென்று ஊர்ஜிதம் செய்ய.. அந்தத் தோல்வியின் பாரம் தாங்காமல் விழி மூடிக்கொண்டாள் ஷோபா...

'கடைசியில் என் வாழ்க்கையிலயும் என்னை தோற்கடித்து விட்டயேடி...' அவள் மனம் பதறியது...

இப்படி நிகழுமென்று முன்கூட்டியே தெரிந்திருந்தால்... அன்றைய பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு ராதிகாவை அவள் அழைத்திருக்கவே மாட்டாளே..

அவள் எதையோ நினைத்து செய்யப்போக.. அது அவள் வாழ்வின் அஸ்திவாரத்தையே ஆட்டி வைப்பதில் வந்து முடிந்து விட்டதே...

"உன்னால்தான் ஷோபா..." பரந்தாமன் குற்றம் சாட்டினார்...

"நீதான் அவளை உன் பர்த்டே பார்ட்டிக்கு இன்வைட் பண்ணினாய்..."

"டாட்.. இதை நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை... அவளெல்லாம் எனக்கு ஈக்குவலா டாட்..?"

"அப்படி யாரையும் ஈஸியா எடைபோட்டு விடக் கூடாது ஷோபா.. உனக்கு சங்கரின் டேஸ்டைப் பத்தித் தெரியும்.. அவன் நேச்சரை லைக் பண்ணுகிறவன்.. அவன் கண் முன்னாலே.. அவன் விரும்புகிறதைப் போல ஒரு பெண்ணைக் கொண்டு வந்து நிப்பாட்டித் தொலைச் சிருக்கயே.. உன்னை என்ன பண்ணினால் தேவலாம்..?"

"டாடி.. ப்ளீஸ்... நானே நொந்து போயிருக்கேன்.. போயும் போயும்... அந்த ராதிகாவிடம் தான் நான் தோற்கனுமா..?"

"இது நீயாய் தேடிக்கிட்ட தோல்வி ஷோபா.. அவளைத் தான் மேரேஜ் பண்ணிக்குவேன்னு.. சங்கர் அடித்துச் சொல்லி விட்டானாம்... ராமுக்கும்.. அவன் வொய்புக்கும் இதில் கொஞ்சம்கூட விருப்பம் இல்லையாம்.. இருந்தாலும்.. ஒரே மகன்.. அவன் மனதுக்கு மாறாய் எதையும் அவங்களாலே செய்ய முடியாதில்லையா..? அதுக்காக பெண் கேட்டுப் போயிட்டாங்க.. அனேகமா.. அடுத்த மாதமே மேரேஜ் நடந்தாலும்.. நடந்து விடலாமாம்..."

இதைக் காது கொடுத்து கேட்பதற்காகவா.. அன்று வரமாட்டேன் என்று மறுத்த ராதிகாவை வருந்தி.. வருந்தி.. வற்புறுத்தி தன் வீட்டு விருந்துக்கு வரவைத்தாள் ஷோபா..?

"உன்னைப் புத்திசாலின்னு நினைத்தேன்..."

பெருமூச்சுடன் அவளைத் தனியாக விட்டு விட்டு நகர்ந்து விட்டார் பரந்தாமன்....

அவளை புத்திசாலியென்று நினைத்த தன் நினைவு தவறானது என்பதை அந்தப் பெருமூச்சின் மூலம் அவர் உணர்த்தி விட்டுப் போக.. காலேஜில் ஷோபாவை மக்காக்கியது போதாது என்று.. அவளின் வீட்டுக்குள்ளேயும் 'மக்கு..' என்ற பெயரை வாங்கிக் கொடுத்து விட்ட ராதிகாவின் மீது ஷோபாவின் மனதிற்குள் வன்மம் பெருகியது...

"ஷோபா..." சுசிலா உள்ளே வந்தாள்...

என்னவென்று கேட்காமல் கண் மூடிப் படுத்திருந்த மகளின் முகத்தைப் பார்த்தே அவளின் மனநிலையை எடைபோட்டு விட்ட சுசிலா... மகளின் அருகே அமர்ந்து.. ஆதரவாக அவளின் நெற்றியை வருடிக் கொடுத்தாள்...

"அம்மா..."

அந்தப் பரிவில் ஷோபாவின் மனத்துயரம் கண்ணீர் கோடாக வெளிவந்து.. கன்னத்தில் இறங்கியது...

"அடச்சீ.. அழுகாதே.. நீ எதுக்காக அழுகனும்..? இந்த உலகத்திலேயே.. அந்த சங்கர் ஒருத்தன்தான் மாப்பிள்ளையா..? அவனை விடப் பணக்காரனாய்.. என் அக்கா மருமகளின் தம்பி.. பாலமுரளி இருக்கிறான்.. இந்த சங்கரைப் பற்றிச் சொன்னா.. இந்தச் சென்னைக்குள்ளே

எத்தனை பேருக்குத் தெரியும்..? அதுவே பாலமுரளியைப் பற்றிச் சொன்னா.. தென்காசிப் பட்டினம் முழுவதும் தெரியும்.. இன்னாருக்கு பெண்டாட்டி.. இன்னார் வீட்டு மருமகள்ன்னு.. நீ அந்த சங்கரின் முன்னாலே விரலைச் சொடுக்கி நிற்கலாம் ஷோபா.. இதுக்குப் போயா இப்படி அழுது வைக்கிற..?" சுசிலா மகளை அதட்டினாள்...

ஷோபா.. யோசனையுடன் தாயைப் பார்த்தாள்.. அவளது யோசனை எதற்காகவென்று புரியாதவளாய் மகளைத் தேற்றிக் கொண்டிருந்தாள் சுசிலா...

"உன் அப்பா பிரண்டுன்னார்.. அவனும் சென்னைக்காரனா இருந்தான்.. ஆளும் அழகாய்.. உனக்குப் பிடித்த மாதிரி.. வெள்ளை வெளேருன்னு இருந்து வைச்சான்.. வெளிநாட்டு படிப்பு வேற.. சரி.. அமைஞ்சா உனக்கும் சந்தோசம்தானேன்னு நினைச்சேன்.. இது அமையல.. விட்டுத் தள்ளிட்டு அடுத்த இடத்தைப் பார்ப்பியா.. அதை விட்டுட்டு கண்ணைக் கசக்கிக் கிட்டு இருக்க.."

"இல்லேம்மா.. இனிக் கண்ணைக் கசக்க மாட்டேன்..."

ஷோபாவின் மனதில் என்ன இருக்கிறது என்பதை அறியாதவளாய் அவளது வார்த்தைகளில் சுசிலா மனநிம்மதியடைந்தாள்...

"அஃது.. இதுதான் என் மகள் ஷோபா...! இப்படித்தான் தைரியமா இருக்கனும்.. இப்ப எதையும்

யோசிக்காம படுத்துத் தூங்கு.. நாளைக்கு இதைப் பத்தி நினைச்சுப் பார்த்தின்னா.. இதுக்கா நாம கண்ணைக் கசக்கினோம்ன்னு உனக்கே தோணும்..."

அறைக்கதவை மெதுவாக.. சத்தமில்லாமல் மூடிவிட்டு.. சுசிலாசென்று விட.. ஷோபா அவளுடைய செல் போனை எடுத்து நம்பர்களை அழுத்தினாள்...

"ஹலோ..." மறுமுனையில் பாலமுரளியின் குரல் ஒலித்தது..

"நான் ஷோபா.." என்றவளின் குரலைக் கேட்டதும்..

"என்ன விசயம்..?" என்று ஒட்டாத குரலில் பட்டுக் கத்தரித்தான் பாலமுரளி...

'உனக்கும்.. அவளைத்தானே பிடிக்கும்...' ஷோபா மனம் பொறுமினாள்...

"நிறைய விசயம் இருக்கு... உங்ககிட்ட கொஞ்சம் பேசனும்..."

"எனக்கு அர்ஜண்ட் வொர்க் இருக்கு ஷோபா.. எதைச் சொன்னாலும் ஒரே நிமிசத்தில சொல்லி முடிங்க.."

இப்படிச் சொன்ன பாலமுரளி...

"ராதிகாவுக்கும்.. சங்கருக்கும் மேரேஜ் நடக்கப் போகுது...", என்று ஷோபா சொன்னவுடன்...

"விவரமாகச் சொல்லுங்க..." என்று சொன்னான்...

'நீ கில்லாடிடா...' பல்லைக்கடித்தாள் ஷோபா...

அவள் பேசினால் அவனுக்கு அதி முக்கியமான வேலைகள் இருக்கிறதாம்.. அதுவே ராதிகாவைப் பற்றிய பேச்சாக இருந்தால் அதை அவள் விவரமாகச் சொல்ல வேண்டுமாம்.. அதை கேட்பதை விட முக்கியமாய் அவனுக்கு எந்த வேலையும் இல்லையாம்...

'அவகிட்ட அப்படி என்னதான் இருக்கு..?'

ஷோபாவும் யோசித்துப் பார்த்து விட்டாள்.. என்னதான் யோசித்தாலும்.. ஷோபாவை விட அழகிலோ.. பணத்திலோ.. ராதிகா உயர்ந்தவளில்லையென்ற முடிவுதான் அவளுக்கு கிடைத்தது...

அறிவைப் பற்றி யோசிக்காமல் கெட்டிக்காரத்-தனமாய் அதை மட்டும் விட்டுவிட்டாள் ஷோபா...

"உங்களுக்கு அர்ஜண்ட் வொர்க் இருக்குன்னு சொன்னீங்களே... நாம வேண்டும்ன்னா.. இதைப் பற்றி இன்னொரு நாள் பேசலாமா..? அநேகமா... அப்ப.. ராதிகாவுக்கு சங்கர்கூட மேரேஜ் நடந்து முடிந்தாலும்.. முடிந்திருக்கும்..."

வேண்டுமென்றே பேசிய ஷோபாவின் குரலில் இருந்த எள்ளலை பாலமுரளி புரிந்து கொள்ளாமல் இருந்திருக்க முடியாது.. மறுமுனை ஒரு வினாடி மௌனம் சாதிக்க.. அவன் புரிந்து கொண்டதை ஷோபா தெரிந்து கொண்டாள்...

"ஸாரி ஷோபா.. வேலை அதிகமா இருந்த டென்சனில் அப்படிச் சொல்லிட்டேன்.. நீங்க சொல்ல வந்ததைச் சொல்லுங்க..." அவன் குரல் தணிந்திருந்தது...

'அப்படி வா வழிக்க... யாருகிட்ட உன் வேலையைக் காட்டற...' ஷோபா கெத்தாக நிமிர்ந்து அமர்ந்தாள்...

"முரளி... ஆச்சுவலாய் அந்த ராதிகா எனக்கு பிரண்டில்லை..." என்று அவள் ஆரம்பிக்க..

"அதுதான் எனக்குத் தெரியுமே..." என்று எரிச்சலுடன் சொன்னான் பாலமுரளி...

இதைச்சொல்லவா வேலை மெனக்கெட்டு போன்பண்ணி.. அவன் வேலையைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாள் என்ற கோபம் அவனுக்கு...

"வெயிட்.. வெயிட்.. நான் எல்லாத்தையும் சொல்லியாகனும்னா.. நீங்க அவசரப்படக்கூடாது முரளி.."

"ஒகே.. சொல்லுங்க..."

"அவ என்னோட பிரண்டிடம் அளந்து விட்டுக்கிட்டு இருந்தா..."

"எதைப்பத்தி...?"

"சங்கரைப் பற்றி.. அவனுடைய அழகைப் பற்றி.. அவனுடைய பணத்தைப் பற்றி.. அவனுடைய வெளிநாட்டுப் படிப்பைப் பற்றி.. அவனோட தொழில் திறமையைப் பற்றி.. அவளை அவன் வெளிநாட்டு டூருக்கு கூப்பிட்டுக்கிட்டு போகப் போகிறதைப் பற்றி... அவளுக்கும்.. அவனுக்கும் இடையில் இருக்கிற காதலைப் பற்றி... அடுத்த முகூர்த்தத்தில் அவங்க இரண்டு பேருக்கும் நடக்க இருக்கும் மேரேஜைப் பற்றி..."

ஷோபா அடுக்கிக் கொண்டே போக.. குறுக்கே பேசாமல் பொறுமையாக கேட்டான் பாலமுரளி...

"சங்கர் மன்மதனாம்.. ராதிகா சொன்னாள்.. அவ பேசினதை என் செல் போனில் ரெகார்டு பண்ணியிருக்கேன்.. உங்களுக்கு அதை அனுப்பவா..?"

அவன் என்ன பதிலைச் சொல்வான் என்றுதான் ஷோபாவுக்கு உள்ளங்கையின் நெல்லிக் கனியைப் போலத் தெள்ளத் தெளிவாக தெரியுமே...

ஊஹீஹீம்.. வேண்டாம்.. அடுத்தவர்கள் பேச்சு எனக்கு எதற்கு என்றா சொல்லப் போகிறான்...?

அவள் எதிர்பார்த்ததைப் போலவே...

"உடனே அனுப்புங்க ப்ளீஸ்..", என்றான் பாலமுரளி..

யாருக்கும் வணங்காதவன் போட்ட ப்ளீஸைக் கேட்டதும்.. ராதிகாவின் சக்தியை உணர்ந்தவளாக அவள் மேல் பொறாமைப் பட்டாள் ஷோபா...

பாலமுரளி ஷோபாவை மதித்து ஒருவார்த்தை கூட நின்று பேசியதில்லை.. கெத்தாக ஒரு தலையசைவுடன் போய் விடுவான்.. அவன் இன்று அவளிடம் 'ப்ளீஸ்..' போடுகிறான்... எதற்காக..? ராதிகாவிற்காக...

சங்கர் அவளை மறுத்ததை விட.. இது மிகப்பெரிய தோல்வியாக ஷோபாவுக்குத் தோன்றியது..

இந்த மன ரணங்கள் என்று ஆறும் என்ற வேதனையுடன் ஒரு நொடி தடுமாறினாள் ஷோபா.. மறு

நொடியே.. ராதிகாவை அழித்து விட வேண்டும் என்ற வன்மம் மனதில் பொங்கியெழ.. தோல்விகளின் கனத்திலிருந்து விடுபட்டு.. ராதிகாவின் பதிவு பண்ணிய பேச்சை பாலமுரளிக்கு அனுப்பி வைத்தாள்...

அவளுக்கு ராதிகாவின் அந்தரங்க மனதில் பாலமுரளியின் மேல் பொதிந்திருக்கும் காதலைப் பற்றித் தெரியாது...

ராதிகாவின் அந்தரங்கமான காதலுக்கு உரியவனே.. அவளது அந்தரங்கத்தை அறியாமல் இருந்தபோது.. ஷோபா மட்டும் எப்படி அதை அறிவாள்..?

அவள் ராதிகா சங்கரின் மேல்தான் ஆசைப்படுகிறாள் என்று நினைத்து விட்டாள்.. அதே சமயத்தில்.. பாலமுரளியின் மனதில் ராதிகாவின் மீது ஓர்விதமான ஈர்ப்பு இருப்பதும் அவளுக்குத் தெரிந்திருந்தது...

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்..!

இதுதான் ஷோபாவின் திட்டம்..

ராதிகா சங்கரைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது.. அதேசமயம்.. பாலமுரளியின் காதலையும் அவள் தெரிந்து கொள்ளக் கூடாது.. சங்கருடனான அவளது திருமணமும் நிற்க வேண்டும்... அதே நேரத்தில்... பாலமுரளியின் மாறாத வெறுப்பிற்கும் அவள் ஆளாக வேண்டும்..

ஷோபா திட்டமிட்டு.. மிகத் தெளிவாக காய்களை நகர்த்த ஆரம்பித்தாள்...

நீயெங்கே போனாலும்..
நிழலாக நான் தொடர்வேன்...

யார் மனதில் என்ன இருக்கிறதென்று யாருக்கு எப்படித் தெரியும்..? மனமென்னும் மாயக் கண்ணாடி பிரதிபலிக்கும் பிம்பங்களின் உண்மையை உணர்ந்தவர்கள் யார்..? ஒருவரின் அந்தரங்க மனதில் ஆழப்பதிந்திருக்கும் ரகசியச் சுரங்கத்தில் யாரால் பிரவேசிக்க இயலும்..?

ராதிகா சிரிக்கும் அருவி.. அவள் மனதில் சுழல் போன்றதொரு அந்தரங்கக் காதல் இருந்ததை அறிந்தவர் எவருமில்லை...

அவளைப் பெற்ற தந்தையான கிருஷ்ணமூர்த்தியின் பார்வையில் அவள் புத்திசாலி மகள்.. அவளால் 'லேடி ஹிட்லர்' என்று அன்பாக விளிக்கப்படும் அவளுடைய அன்னை ராஜேஸ்வரிக்கு அவள் அழகான.. ஒழுக்கமான மகள்.. ஒரு தோழியைப் போலப் பழகும் அவள் கூடப் பிறந்த தங்கையான கீதாவுக்கோ அவள் கையில் பிரம்பில்லாத ஆசிரியை.. சதா சண்டைக்கு இழுத்துக் கொண்டிருக்கும் நுனி மூக்கில் கோபம் கொண்ட அவளின் தம்பி சுந்தருக்கோ அவள் பகைமையான

சிநேகிதி... இருபத்தி நான்கு மணி நேரமும்.. ராதிகாவைப் பற்றிய நினைவிலேயே உழலும் ஷோபாவிற்கு ராதிகா ஒரு பெரிய தலைவலி.. அவள் தோழிகளுக்கோ.. ராதிகா மிகப் பிரியமான சிநேகிதி.. அவளையே சுற்றிச்சுற்றி வரும் சங்கருக்கு ராதிகா ஒரு தென்றல்காற்று.. அதைக் கண்டு பொங்கியெழுந்த பாலமுரளிக்கு ராதிகா ஒரு சூறாவளிக்காற்று...

இவர்கள் யாருக்குமே ராதிகாவின் அந்தரங்க மனதில் பாலமுரளியின் மீதிருந்த ஆழ்ந்த காதலைப் பற்றித் தெரியாது... அதை வெளியே சொல்ல முடியாமல் ராதிகா தவித்துக் கொண்டிருந்ததை யாரும் அறியவுமில்லை...

காதலைப் பற்றி வெளியே சொல்ல வேண்டுமானால்.. முதலில் அந்தக் காதலுக்கு உரியவனிடம் அதைச் சொல்லி.. அவனது பதில் காதலைப் பெற வேண்டும்...

இதற்குத்தான் ராதிகாவுக்கு வழியே கிடைக்காமல் போய்விட்டதே...

அவளுக்கும்.. அவனுக்கும் இடையில் சங்கர் வந்தான்.. ராதிகாவின் மனதில் பாலமுரளி இருப்பதை அறியாதவனாக காதல் சொன்னான்.. அதைக் கண்ணாரக் கண்டு.. காதார கேட்டுவிட்ட பாலமுரளி சங்கரை ராதிகா மோகித்து விட்டதாக குற்றம் சாட்டினான்.. என்ன ஒன்று.. அவன் குற்றம் சாட்டிய அந்த நொடியிலேயே.. அவன் மனதில் ராதிகாவின் மீது இருந்த வெறித்தனமான காதலையும் கொட்டிவிட்டான்...

அப்போதே ராதிகா அவள் மனதிலிருந்த அந்தரங்கத்தை அவனிடம் சொல்லியிருக்க வேண்டும்.. அவள் வாய் திறக்கு முன்னாலேயே புயலாய் அவன் அவளை ஆக்ரமித்து முத்தமிட்டு விட்டான்...

முதல் முத்தத்தில் மனம் நடுங்கி.. உடல் பதற.. விலகி ஓடிவிட்டாள் ராதிகா.. மறுநாளிலிருந்து அவனைத் தேட ஆரம்பித்தாள்.. விதி..! அவன்.. அவனுடைய அம்மாவின் உடல்நிலை சரியில்லையென்று அவனது ஊரைப் பார்த்து ஓடி விட்டான்..

பாலமுரளி அவளைத் தொடுவதில் கோபம் காட்டி வேகம் காட்டினால்.. சங்கர் அவளைத் தொடாமல் சாந்தம் காட்டி.. திருமணத்தை பேசி முடிவு பண்ணுவதில் வேகம் காட்டிவிட்டான்...

பாலமுரளி தென்காசிப் பட்டினத்தில் மையம் கொண்டிருக்க... சங்கரோ உள்ளூரில் வாசம் செய்தான்.. அது சங்கருக்கு மிகவும் வசதியாக மாறி விட்டிருந்தது...

கோடிஸ்வரரின் வீட்டிலிருந்து மகளைப் பெண் கேட்டு வந்து விட்டதில் ராஜேஸ்வரி மகிழ்ந்து போக.. ராதிகாவின் வீட்டில் திருமணப்பேச்சு ஆரம்பித்து விட்டது..

அதை முறியடிக்கும் வகை தெரியாமல் தவித்தாள் ராதிகா...

பாலமுரளியின் மீதிருந்த காதலை அவள் எந்த நம்பிக்கையில் வெளியில் சொல்லுவாள்..? அவன் மீதான

ராதிகாவின் அந்தரங்கக் காதலை அவன் அறிய வில்லை.. அவளைத் தொட்டுத் தழுவி முத்தம் கொடுத்தவன்... மறுநாளே மாயமாய் மறைந்து விட்டான்.. அவனின் முகவரியும்.. அலைபேசி எண்ணும் அறியாத நிலைமையிலே அவன்தான் என் காதலனென்று ராதிகாவால் அவள் வீட்டில் வாய் திறந்து சொல்ல முடியவில்லை... பாலமுரளியைப் பற்றி அவள் அறிந்த ஒரே விவரம்.. அவன் ஷோபாவின் உறவினன்.. அவனது ஊர் தென்காசியின் அருகிலிருக்கும் 'தேனூத்து...' என்ற கிராமம் என்பது மட்டும்தான்...

அதைமட்டும் வைத்துக் கொண்டு.. அவன் பெயரை வீட்டில் சொல்லி.. திருமணத்தை நிறுத்தச் சொன்னால்.. அந்த வீட்டில் பிரளயமே வந்து விடும்...

எல்லாபக்கமும் கதவு அடைபட்டிருக்க.. திருமணத்தை நிறுத்தும் முயற்சியில் ராதிகா.. ஷோபாவின் பொறாமையை தூண்டிவிட.. அவள் மனம் விரும்பாத பேச்சுக்களைப் பேச வேண்டி வந்துவிட்டது...

அதைக் கேட்ட ஷோபா கொதித்துப் போவாள்... அவளுக்குத்தான் சங்கர் என்று ஊர் முழுவதும் சொல்லிக் கொண்டிருப்பவள் எப்பாடு பட்டாவது ராதிகாவை சங்கர் திருமணம் செய்து கொள்ளாமல் தடுத்து விடுவாள் என்பதே ராதிகா போட்ட கணக்காக இருந்தது...

ஆனால்.. ஷோபாவைக் கிளப்பி விடவென்று ராதிகா போசிய பேச்சுக்களை ஷோபா தன் அலைபேசியில்

பதிவு பண்ணிக்கொள்வாள் என்றோ.. அதை அப்படியே பாலமுரளிக்கு அனுப்பிவைப்பாள் என்றோ.. அவன் மூலமாக ராதிகாவின் திருமணத்தை நிறுத்தப் பார்ப்பாள் என்றோ ராதிகா நினைத்துக்கூடப் பார்க்கவில்லை...

நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்.. வாழ்க்கைக்கு என்ன அதிகாரம் இருக்கப் போகிறது...?

நினைக்காததை நடத்திக் காட்டுவதுதானே வாழ்க்கை..!

ராதிகாவை பாலமுரளி மிரட்டி வைப்பான்.. சங்கருடன் நடக்கவிருக்கும் அவளின் திருமணத்தை நிறுத்திவைப்பான்.. கூடவே.. ராதிகாவை வெறுத்து ஒதுக்கியும் வைப்பான்..

இதுதான் ஷோபா போட்ட திட்டமாக இருந்தது..

பாலமுரளியின் மனதில் ராதிகாவின் மீது இருந்த மயக்கத்தின் பேரளவை ஷோபா அறிந்து கொள்ளாமல் போய் விட்டாள்..

பாலமுரளி ராதிகாவைக் கடத்திக் கொண்டு போய் விடுவான் என்றோ.. அவளைக் கசக்கி முகர்ந்து விடுவான் என்றோ.. அவள் நினைத்துக்கூட பார்க்கவில்லை...

ராதிகா நினைத்ததே நடக்காத போது.. ஷோபா நினைத்தது மட்டும் நடந்து விடுமா என்ன..?

எது.. எப்படியிருந்தாலும்.. ராதிகாவின் திருமண ஏற்பாடு ஆட்டம் கண்டு போயிருக்கும்.. அவளும் அடங்கிப்

போயிருப்பாள்.. இந்த எண்ணத்துடன்தான் ஷோபா.. கல்லூரியின் வாசலை மிதித்தாள்.. ராதிகாவும் வந்தாள்.. அடங்கிப் போனவளாக வரவில்லை.. மாறாக ஆர்ப்பரிக்கும் அருவியாக வந்தாள்...

என்றுமில்லாமல் அன்று அவளின் ஆர்ப்பரிப்பின் வேகம் அதிகமாக இருந்ததைக் கண்ட ஷோபாவிற்கு... இரண்டு நாள்களாக காணாமல் போயிருந்த தலைவலி.. திரும்பிவர ஆரம்பித்தது...

அவளுக்குத் தெரியாது.. பாலமுரளியை அடைவதற்காக.. இனி இந்த வழியைத்தான் ராதிகா உபயோகிக்கப் போகிறாள் என்பது...

'தானாவே தூது போகிற வேலையில வந்து மாட்டிக்கிட்டா... இவ இருக்கிறப்போ முரளியை கன்வே பண்ண என்ன வழின்னு நான் ஏன் மண்டையைப் போட்டு உடைச்சிக்கனும்..? நான் சொன்னா.. இவ அதை ஒன்னுக்குப் பத்தா முரளியிடம் போய் சொல்லப் போகிறா.. அவன் கத்தியில்லாமல் என் கழுத்தை அறுக்க என்னைத் தேடி வரப் போகிறான்...'

ராதிகாவின் இந்த எண்ண வோட்டத்தை அறியாத ஷோபா.. தலைவலியின் ஆரம்ப அறிகுறிகளை பொருட்படுத்தாமல் ராதிகாவின் பேச்சை.. கவனத்துடன் செவி மடுத்தாள்...

"ஹாய்.. ஷீல்.. என்னடி பண்ணிக்கிட்டு இருக்க..?"

"பார்த்தாத் தெரியலை..? படிச்சுக்கிட்டிருக்கேன்.."

"அதையேண்டி.. தேவையில்லாம பண்ணிக்கிட்டு இருக்க..? நீ இப்படியெல்லாம் உன் டயத்தை வேஸ்ட் பண்ண மாட்டியே..."

"ஆரம்பிச்சுட்டியா.. இன்னைக்கு கிளாஸ் டெஸ்ட் இருக்கு.. நினைப்பிருக்கா..?"

"இருக்கு.. இருக்கு..."

"அதான்.. வீட்டில் படிக்க முடியலை... டெஸ்டுக்கு முன்னாலே புரட்டியாவது வைக்கலாமுன்னு புத்தகத்தை கையிலெடுத்தேன்.. நீயும் வந்திட்ட..."

"புரட்டிப் பார்த்தா டெஸ்ட் எழுத முடிஞ்சிருமா...?"

"எங்கேயோ பார்த்த ஞாபகமாவது கொஸ்டினைப் பார்த்தா நமக்கு வருமில்லையா...? அதுவுமில்லாம போனா.. கொஸ்டினுக்கும்.. நமக்கும் என்ன சம்பந்தமுன்னு குழம்பிப் போயிர மாட்டோமா..?"

"அதைச் சொல்லு.. என்னடா.. என்னைக்கும் இல்லாத திருநாளாய் நம்ம ஷீலா புத்தகத்தையெடுத்து புரட்டிப் பார்க்கிறாளேன்னு பார்த்தேன்.. இதுதான் மேட்டரா."

"என் மேட்டரை விடு... உன் மேட்டருக்கு வா... எந்த அளவில் இருக்கு... உன் மேரேஜ் ஏற்பாடு...?"

"அடுத்த முகூர்த்தத்தில் மேரேஜ்... அந்த அளவில் இருக்கு..."

ஓரக் கண்ணில் ஷோபாவைப் பார்த்தபடி ராதிகா சொல்லி வைக்க... ஷோபாவிற்கு 'திக்'கென்று ஆகிவிட்டது...

தலைவலியோடு... நெஞ்சு வலியும் சேர்ந்து கொள்வதற்கான அறிகுறிகள் ஆரம்பிக்க... அவள் மூச்சுத்தினறலோடு ராதிகாவை பார்த்தாள்...

"ஈஸிட்..? அவ்வளவு பாஸ்டான ஆளா உன் ஆளு..?"

சங்கரை ராதிகாவின் ஆள் என்று சொன்னதற்காகவே... அதுநாள்வரை ஷோபாவுக்கு தோழியாக இருந்த ஷீலா... அந்த நொடியிலிருந்து அவளுக்கு எதிரியாகிப் போனாள்...

'எதை வைச்சு... சங்கரை இவ ஆளுன்னு... இந்த ஷீலா சொல்கிறா...'

கொலைவெறியோடு பற்களை நறநறத்தாள் ஷோபா..

"அவர் பாஸ்டை இந்த உலகமே அறியுமே.. நீ இவ்வளவு லேட்டாய் கொஸ்டின் பண்றயே ஷீல்..."

"அட... உன் ஹப்பிமேலே இப்படியொரு ஹீரோ வொர்ஷிப்பா...? அசத்தறே ராதிகா...."

"அவர் அதுக்குத் தகுதியானவர் ஷீலா... ஹி இஸ் வெரி ஹேண்ட்சம் மேன்...."

"ஐ நோ இட் ... யு ஆர் எ லக்கி பெர்சன் ராதிகா..."

"ஷ்யூர்... ஷ்யூர்..."

"எனிவே... அட்வான்ஸ் கங்கிராஜீலேசன்ஸ்..."

"தேங்க்யூ..."

"டெஸ்டுக்கு படிச்சிட்டயா..? நீ படிச்சிருப்பே... என்னைப்பாரு... எந்த லெசனில் டெஸ்டுன்னு அடையாளம் பார்க்க... புத்தகத்தைப் புரட்டிக்கிட்டு இருக்கேன்..."

"இல்லை ஷீலா... நானும் படிக்கலை..."

"இதை நம்ப நானொன்னும் பப்பா இல்லை... நீயாவது... டெஸ்டுக்கு படிக்காம வருகிறதாவது..."

"நிஜம்தான் ஷீலா... நான் படிக்கலை... படிக்க நேரமே கிடைக்கறதில்லை..."

"ஏண்டி...?"

"தினமும் சங்கருடன் அவுட்டிங் போகவே எனக்கு நேரம் சரியாய் இருக்கு... இதில படிக்க நேரத்துக்கு நானெங்கே போகிறது..."

"ஓ... கதை அப்படிப் போகுதா.ட..? இன்ட்ரெஸ்டிங்.."

"நேத்து அவர் வரச்சொன்ன இடத்துக்குப் போனேன்... சரியாய் பேச முடியலை... அந்தக் கோபத்தில் மிட்நைட்டில் போன் பண்ணி காச்.. மூச்சுன்னு கத்தறார் ஷீலா..."

"மிட்நைட் மசாலாவா...? சொல்லு.. சொல்லு..."

"என்னத்தைச் சொல்ல..? விடிய.. விடிய.. பேசிக்கிட்டு இருந்தேன்.. அப்புறம்தான் ஒருவழியாய் சமாதானமானார்... இன்னைக்கு மகாபலிபுரம் போவோம்ன்னார்.. ஓகேன்னு சொல்லியிருக்கேன்.. ஈவினிங் கிளாஸை கட் அடிச்சுட்டு.. ஓடியே போயிருவேன்..."

"கொடுத்து வைச்சவடி நீ... அசத்து..."

"தேங்க்ஸ்..."

"மேரேஜீக்கு அப்புறம் டிஸ் கண்டினியூ பண்ணுவதானே..."

"தெரியலைடா... அவர் என்ன சொல்கிறாரோ.. அதைத்தானே நான் செய்யனும்..?"

"இதைப் பற்றி நீங்க டிஸ்கஸ் பண்ணியிருப்பீங்க தானே..."

"பண்ணினோம்... பண்ணினோம்.. அவருக்கு நிறைய பிஸினெஸ் இருக்கு ஷீல்.. ஏதாவது ஒரு கம்பெனியில் என்னை எம்.டியாய் உட்கார வைச்சுடனும்கிறது அவரோட பிளான்..."

"அதுக்கு நீ படிப்பை கம்ப்ளீட் பண்ணியாகனும் தானே..."

"யெஸ்.. யெஸ்.. பட்.. மேரேஜ் முடிந்தவுடன் நாங்க வெர்ல்டு டூர் போக வேண்டியிருக்கும்.. அதனாலே லாங்லீவ் எடுக்க வேண்டி வந்தாலும் வரலாம்..."

"ஜூனாய்..."

ராதிகா.. வீனாவின் அருகிலிருந்த மற்றொருத்தியிடம் பெருமை பேச ஆரம்பித்தாள்... வீனா.. புத்தகத்தில் அன்றைய தேர்விற்கான பாடம் எதுவாக இருக்கக் கூடும்... என்ற தனது தேடுதலைத் தொடர்ந்தாள்.. கட்டுமீறிய தலைவலியைக் கட்டுப் படுத்த முடியாமல் நோபா தலையைப் பிடித்தபடி காரை நோக்கி விரைந்தாள்... எது நடந்ததோ.. அது நன்றாகவே நடந்தது...

சிந்துகின்ற கண்ணீர்துளிகளில்..
சிதறுகிறது என் காதல்...

மாலை நேர வகுப்பைப் புறக்கணித்து.. காலேஜை விட்டு வெளியே வந்த ராதிகாவிற்கு அது நன்றாகவே தெரியும்.. எப்படியும் அவளை வழியிலேயே பாலமுரளி மடக்கிப் போட்டு விடுவான் என்பது...

அதனால்தான் அவள் தன் ஸ்கூட்டியின் சாவியை ஹேமாவிடம் கொடுத்திருந்தாள்.. ஹேமாகூட அதற்கான தன் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினாள்...

"என்னடி இது...! என் கண்ணையே என்னாலே நம்ப முடியலையே..."

"அப்படியென்ன பெரிய அதிசயத்தை கண்டு விட்டன்னு இந்தளவுக்கு வாயைப் பிளக்கிற...? பார்.. ஒரு ஈ, எவ்வளவு கம்பர்டபிளா உன் வாய்க்குள்ளே வந்து போகுதுன்னு..."

ஹேமா சட்டென்று தன் வாயை இறுக மூடிக் கொண்டு.. மெதுவாக இதழ் பிரித்து கேள்வி கேட்டாள்...

"உன் ஓட்டை ஸ்கூட்டியை ஓட்டிப் பார்க்கனுமுன்னு எத்தனை நாளாய் கேட்டிருப்பேன்..? அப்போல்லாம் மாட்டேன்னு சொல்லிட்டு... இப்பப் பெரிய மனசோட உன் ஸ்கூட்டி சாவியை என்கிட்ட நீட்டறயே என்ன விசயம்..?"

"என் ஸ்கூட்டியை ஓட்டை ஸ்கூட்டின்னு இன்னொரு தரம் நீ சொன்னா... உன் பல்லை உடைச்சிருவேன்..."

"ஆஹா.. உன்னைப் பக்கத்தில வைச்சுக்கிட்டு காயத்ரி என் பல்வரிசையைப் பாராட்டியப்பவே நினைச்சேண்டி..... எப்படியும் நீ என் பல்மேல குறிவைப்பேன்னு..."

"அந்த பயம் இருக்கில்ல..?"

"இருக்காதா பின்னே..? எனக்கும் கல்யாண வயசு வந்துருச்சுடி.. இத்தனை நாளா காப்பாத்திக்கிட்டு வந்த பல்வரிசையை பலி கொடுக்க நானென்ன முட்டாளா..?"

"அப்ப அடங்கு... எனக்கு தலைசுத்தி மயக்கம்.. மயக்கமா வருது..."

"இதெல்லாம் உன்னைப் பார்த்தா... ஷோபாவுக்குத்தானே வரும்..?"

"ஊஹூம்.. உனக்கு உன் பல்வரிசையைப் பத்திய அக்கறையே இல்லை ஹேமா..."

"அடடா... உனக்குத் தலைவலியா..? மயக்கம் வேற வருதா..? பார்த்துப் பத்திரமா ஆட்டோ பிடிச்சு வீட்டுக்குப் போய்ச் சேரு ராதிகா... என் பல்வரிசை எங்கே போகப் போகுது..? அது பத்திரமாய் என்கிட்டயே இருந்துட்டுப் போகட்டும்..."

"இதை அப்பவே சொல்றதுக்கு என்ன...?"

"புத்தருக்கே போதி மரத்தடியில் உட்கார்ந்த பின்னாலேதான் ஞானம் வந்தது... எனக்கு மட்டும் அவ்வளவு சீக்கிரத்தில் வந்து தொலைக்குமா...?"

"இப்ப வந்திருச்சா.. இல்லையா...?"

"வராதா.. பின்னே.. புத்தருக்கு போதிமரம்...! எனக்கு பல்வரிசை..! இப்ப என்ன..? உனக்குத் தலைவலியும் மயக்கமும் சேர்ந்து வந்திருக்கு... அதனாலே... உன்னாலே ஸ்கூட்டியை ஒட்டிக்கிட்டுப் போக முடியாது... இதை நான் ஒட்டிக்கிட்டுப் போயிட்டு நாளைக்கு காலையிலே கரெக்டா இதை கொண்டு வந்து சேர்த்து விடனும்.. இதைத்தானே நீ சொல்ல வந்த...?"

"புல்லரிக்குதுடி ஹேமா.. என் மனசை படம் பிடிச்சதைப் போல எப்படித்தான் அட்சர சுத்தமாய் அத்தனையையும் பிட்டுப்பிட்டு வைச்சயோ தெரியலை.. எங்கியோ போயிட்டடி நீ..."

"நான் போகிறது இருக்கட்டும்... இப்ப நீ எங்கே போகிற...?"

'கண்டு பிடிச்சிட்டாளே...'

ராதிகா எதைச் சொல்லி சமாளிப்பது என்ற யோசனையுடன் ஹேமாவை வரவழைத்துக் கொண்ட முறைப்புடன் பார்த்தாள்...

அவள் அதற்கெல்லாம் அசைவேனா.. என்று புருவங்களை உயர்த்தி.. விழிகளால் வினவினாள்...

"வேறெங்கே போவேன்...? ஹாஸ்பிடல் போவேன்.."

"நீ தனியாய் ஹாஸ்பிடல் போக மாட்டயே..."

"வீட்டுக்குப் போயிட்டு.. கீதாவை துணைக்கு கூப்பிட்டுக்கிட்டு ஹாஸ்பிடல் போவேன்..."

"அதுக்கு எதுக்கு கீதாவைத் தேடிப் போகனும்..? நான் எதுக்கு இருக்கிறேன்..?"

"ஊம்..? என் கழுத்தை அறுக்க இருக்கிற..."

ராதிகா அகப்பட்டுக் கொண்டவளாக எரிந்து விழுந்தாள்.. அப்படிவா வழிக்கு என்ற பாவனையுடன் ஹேமா புன்னகைத்தாள்...

"எதுக்கு இப்படி கோபப்படுகிற..? உன்னால் ஸ்கூட்டியை ஒட்ட முடியலைன்னா.. நான் ஒட்டறேன்.. நீ பின்னாலே உட்காரு... டாக்டரைப் பார்த்துட்டு உன்னைப் பத்திரமாய் வீட்டில் கொண்டு போய் சேர்த்துட்டு.. அங்கேயிருந்து நான் ஆட்டோ பிடிச்சு என் வீட்டுக்குப் போயிக்கறேன்..."

"உனக்கெதுக்கு வீண் சிரமம்..?"

"அடேங்கப்பா.. இதுக்கு முன்னாலே நீ எனக்கு சிரமம் கொடுக்காத ஆள்தான்.. இதே ஷோபாவோட பர்த்டே பங்சனுக்குப்போக.. உன் வீட்டுக்கு... என்னை வரவைச்சவதானேடி நீ... இப்ப மட்டும் என்ன புதுசா என்மேல கரிசனம் பொங்கி வழியுது...?"

"ஹேமா.. அர்கியுமென்டை அவாய்ட் பண்ணு... எனக்கு உடம்பு சரியில்லை..."

"யாருகிட்ட புரூடா விடறே..? தலைவலி வந்தவ இவ்வளவு தெளிவா பல்லை உடைக்கிறேன்னு கிளம்புவாளா..? மயக்கம் வந்தவ... கண்ணை மூடிக்கிட்டு தரையில் உட்காராம.. நிலத்தில காலைப் பதிச்சு உணக்கையா நிற்பாளா...?"

ஹேமா.. அழகாகாய்.. அடுக்கடுக்காய் கேள்விகளைக் கேட்க... ராதிகா தீர்க்கமான பார்வையொன்றை அவள்மீது வீசினாள்..

அந்தப் பார்வையில் பொதிந்திருந்த தீவிரத்தில் ஹேமாவின் புருவங்கள் முடிச்சிட்டன...

இப்படியொரு தீவிரமான முகபாவனையுடன் ராதிகாவை இதற்கு முன்னால் அவள் பார்த்ததே இல்லை...

இந்த ராதிகா அவள் பார்வைக்கு புதியவளாக இருந்தாள்...

"வாட்ஹேப்பன் ராதிகா...?"

"நத்திங்ன்னு சொல்ல மாட்டேன்.. ஐ ஹேவ் சம் பிராப்ளம்... அதைக் கிளியர் பண்ணப் போராடிக்கிட்டு இருக்கேன்..."

"ராதிகா..."

"ஏன்னு என்னைக் கேள்வி கேட்காதே ஹேமா.. இதுவரை நான் பொய் சொன்னதில்லை..."

"ராது..."

"இப்போ நான் வெளியே போயாகனும் ஹேமா... எங்கேன்னு கேட்காதே.. இப்போ எனக்கு ஸ்கூட்டி ஒரு சுமை.. அதைச் சொன்னால் உனக்குப் புரியாது.. ஸ்கூட்டியை நீ கொண்டு போயிட்டு காலையில் கொண்டுவா..."

"ம்ம்ம்..."

அதற்கு மேல் தோழியிடம் நின்று பேசினால்... எங்கே தனது நிலைமை என்னவென்பதை உளறி விடுவோமோ என்ற பயத்தில் ராதிகா... அவசரமாக அங்கிருந்து அகன்று விட்டாள்...

வேக நடையுடன் விலகிச் செல்லும் தோழியின் முதுகையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஹேமாவிற்கு அவளின் மர்ம நடவடிக்கைக் களுக்கான காரணம் என்னவென்று பிடிபடவில்லை...

அது எதுவாக இருந்தாலும்.. ராதிகாவிற்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்பதே அவளது பிரார்த்தனையாக இருந்தது...

கல்லூரியை விட்டு வெளியே வந்த ராதிகா.. மெதுவாக பிளாட்பாரத்தில் நடைபயின்றாள்... எந்த நேரமும் பாலமுரளி வரக்கூடும் என்ற நினைவுடன்.. அடுத்து செய்ய வேண்டியவைகளை மனதுக்குள் வரிசைப் படுத்திக் கொண்டாள்.. பேச வேண்டிய வார்த்தைகளை யோசித்து சேகரித்து.. மனதுக்குள் கோர்வையாக கோர்த்துக் கொண்டாள்...

அவளை அதிக நேரம் காக்க வைக்க வில்லை பாலமுரளி... அவளை உரசிக் கொண்டு வந்து நின்றது அவனுடைய கார்.. என்னவோ.. எதிர்பாராத நிகழ்வைப் போல.. விழி விரித்து கண்களில் அதிர்ச்சியைக் காட்டினாள் ராதிகா.. அவள் பக்கமாக கார் கதவைத் திறந்து விட்டவன்.. கடினமான முகத்துடன்...

"ஏறு..." என்றான்...

"இல்லை.. நான் வேற ஒருத்தரை மீட் பண்ணப் போய்க்கிட்டு இருக்கேன் என்னை தொந்தரவு பண்ணாதீங்க..."

"கொலைவெறியை கிளப்பாதேடி.. மரியாதையாய் காரில் ஏறிவிடு.. இல்லைன்னா நடக்கிறதே வேற...."

அப்போதும் ராதிகா காரில் ஏறவில்லை... அவளைக் காப்பாற்ற வேறு யாரோ வந்து விடுவார்கள் என்பதைப் போன்ற பாவனையுடன் சுற்றிலும் பார்வையைச் சுழல விட்டாள்...

பாலமுரளி பொறுமையை இழந்தவனாக.. காரை விட்டு இறங்கி விட்டான்... அந்தப் பிற்பகல் வேளையில் பிளாட்பாரம் வெறிச்சோடிக் கிடந்தது... அவர்களை யாரும் அவ்வளவாகக் கவனிக்கவில்லை.. அவன் அருகில் வந்தவுடன் பயத்தில் வெலவெலத்தவளைப் போல கண்களில் மிரட்சியுடன் பின் வாங்கிய ராதிகா.. அவசரமாக செல்போனை எடுக்கப் போனாள்...

"யாருக்குடி போன் பண்ணப் போற..?" பாலமுரளியின் கண்களில் தீப்பொறி பறந்தது...

"அது உங்களுக்குத் தேவையில்லாதது..." ராதிகா அவசரமாகச் செய்வதைப் போல.. சங்கரின் பெயரை தன் போனில் கொண்டு வந்தாள்...

"கொடுடி இங்கே..." போனைப் பறித்த பாலமுரளி... அதில் அழைக்கப் படுவதற்கு தயாராக காத்திருந்த சங்கரின் பெயரைப் பார்த்து விட்டான்...

ஆவேசத்துடன் அவளை காருக்குள் தள்ளினான்...

முதல் நாளாவது.. யாரென்று தெரியாமலே.. கடத்தப் படப் போவதை அறியாமலே.. பாலமுரளியின் காருக்குள்

விழுந்தாள் ராதிகா... அப்போதும் அவள் எளிதாக தப்பித்து இறங்கியிருப்பாள்.. அதற்குள் பாலமுரளியின் மயக்க மருந்து தடவப்பட்ட கைக்குட்டை அவள் முகத்தில் பொதிந்து விட்டது...

இப்போது அப்படியில்லை.. பாலமுரளி வருவான் என்பது அவளுக்கு மிக நன்றாகவே தெரியும்.. அன்ன நடைபோட்டு அவன் வருவதற்காகவே காத்திருந்து நடந்தவள்... நினைத்திருந்தால்.. அவன் கார் அருகேவந்து நிற்கும் போதே.. சிட்டாகப் பறந்திருக்கலாம்.. ஏற்கனவே அவன் கைப்பிடியில் பூங்காவில் இருந்தபோதே.. விலகிப் பறந்தவள்தானே.. அவள் அதைச் செய்யவில்லை...

அவன் காரை விட்டு இறங்கி அவளருகில் சுற்றி வருவதற்குள் ஓடிப் போயிருக்கலாம்.. ஆனாலும்.. பயந்து மிரண்டவளைப் போல பாவனை செய்துகொண்டு.. ஆணியடித்ததைப் போல அங்கேதான் நின்றாள்.. விலகி ஓடவில்லை...

அவன் அவள் கைபிடித்து காருக்குள் தள்ளிய போதுகூட விலகித் தப்பித்திருக்கலாம்.. அவள் அதையும் செய்யவில்லை.. கத்தி உதவிக்கு யாரையேனும் அழைத்திருக்கலாம்... அவள் வாயைத் திறக்கவே இல்லை...

இத்தனையையும் செய்யாமல்... அவன் தள்ளி விட்ட மறுநொடியில்.. சமர்த்தாக காரில் போய் வாகாய் விழுந்தாள்... அவன் காரைக் கிளப்பி வேகமெடுத்து ஓட்ட ஆரம்பித்த பின்னால்...

"நிறுத்துங்க..." என்று அவனிடம் சத்தமாகச் சொன்னாள்...

"எதுக்கு நிறுத்தனும்..?" அவன் புருவச் சுளிப்புடன் கேட்டான்...

"நான் போகனும்..." அவள் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையாய் ஒப்பித்தாள்...

"எங்கேடி போகப் போகிற...? மகாபலிபுரத்துக்கா..?" அவன் கேள்வியில் தீப்பொறி பறந்தது...

"உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

என்னவோ.. அவளுக்கு இது தெரியாததைப் போல அவள் கண்களை அகலமாக விரித்தாள்..

அவன் பதில் சொல்லாமல்.. முதல்நாள் அவளைக் கொண்டுவந்த பண்ணை வீட்டின் காம்பவுண்டிற்குள் காரைத் திருப்பினான்...

சுற்றிலும் மரங்கள் அடர்ந்திருக்க... அதன் நடுவே பசுமையான அழகின் பிண்ணணியுடன் நின்றிருந்த அந்த வீட்டை பாசத்துடன் பார்த்தாள் ராதிகா...

முதல் நாளின் நினைவில் அவள் மனம் பொங்கியது..

'இது என் வீடு...'

இனம் புரியாத ஓர் உரிமையுணர்வு.. அந்த வீட்டின் மீது அவளுக்கு எழுந்தது...

"என்னடி இப்படிப் பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்கிற..? இந்த வீட்டை உனக்கு அடையாளம் தெரியலையா...?" பாலமுரளியின் குரலில் எக்களிப்பு இருந்தது...

'இதை நீ செய்யக்கூடாது...' அவள் மனதில் வேதனை படர்ந்தது...

அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவள் முறைத்தாள்...

"இங்கே எதுக்காக என்னை கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கீங்க...?"

"எதுக்காகன்னு உனக்குத் தெரியாதா..?" அவன் கண்சிமிட்டினான்...

"நான் போகனும்.. காரைத் திருப்புங்க..." அவள் கடினமான குரலில் சொன்னாள்...

"நீ சொன்னவுடன் செய்கிறதுக்கு நானென்ன உன் வீட்டுக்காரின் டிரைவரா.. இறங்குடி.. இந்த இடமும் கடலோரமாத்தான் இருக்கு... மகாபலிபுரம் மட்டும் அழகில்லை.. இந்தப் பண்ணை வீடும் அழகுதான்..."

"நான் வரமாட்டேன்..."

"நேத்து மட்டும் நீயா இறங்கி நடந்து வந்த..? இப்படித்தானே நான் தூக்கிட்டுப் போனேன்...?"

அவளது எதிர்ப்பை சட்டை செய்யாமல் அவள் இடுப்பில் கைகொடுத்து அலேக்காக அவளைத் தூக்கிக் கொண்டு.. பண்ணை வீட்டின் படியேறினான் பாலமுரளி..

மாடியிலிருந்த அறைக்கதவை காலால் உதைத்து திறந்து அவளை உள்ளே இறக்கி விட்டவன்.. கதவின் அருகே போன போத.. தன் கைக்கடிகாரத்தின் மறைவில் வைத்திருந்த அந்தப் பொருளை கையில் எடுத்துக் கொண்டாள் ராதிகா...

அவள் முகத்தில் ஒரு போராளியின் தீவிரம் வந்திருந்தது...

உனக்கு நான் புரியாத புதிரா..?
இந்த உலகத்தில் நீயெனக்கு எதிரா..?

கதவை மூடிவிட்டு அவளை நோக்கி வந்த பாலமுரளியின் விழிகளில் கோபமும்.. தாபமும் நிறைந்த கலவை தெரிந்தது... அவன் விழிகளில் பிரதிபலித்த தாகத்தை ராதிகா உணர்ந்து கொண்டாள்...

'இவனுக்கு இது ஒரு சாக்கு...'

அவன் பார்வை ஓர்விதமான வேட்கையுடன் அவள்மீது படிய.. முகத்தில் கடினத்தன்மையுடன் ராதிகா பின் வாங்கினாள்...

"நீ ஏண்டி நான் நினைக்கிறதுக்கு மாறாகவே இருக்கே.." பாலமுரளி கசப்புடன் கேட்டான்...

"உங்க நினைவைப் பத்தி எனக்கென்ன தெரியும்..?" ராதிகா புண்ணான மனத்தோடு கேட்டாள்...

'என் நினைவைப் பற்றி உனக்குத் தெரியுமா..?'

அவள் மனம் கேட்ட இந்தக் கேள்வி அவன் காதுகளில் விழவில்லை...

"தெரியாதா..? என் நினைப்பைப் பத்தி உனக்குத் தெரியாதா..?" அவன் கண்களில் தீப்பொறி பறந்தது...

"தெரியாது..."

அவளுக்கும்.. அவனுக்குமான இடைவெளியை கவனமாக கண்காணித்தபடி சொன்னாள் ராதிகா.. அதை அவனும் கவனித்து விட்டான்.. அவன் கண்கள் இடுங்கின.. அவன் முகம் பாறையானது...

"என்னடி... பாதுகாப்பாய் பழுங்கற..? இனி.. எதைக் காப்பாத்திக்க போகிற...? காப்பாத்திக்க எதுவும் மிச்சம் மீதி இருக்கா..?"

வேட்டையாடி விட்ட குரூரத்தோடு அவன் கேட்ட விதத்தில் அவளது உள்ளம் சல்லடையானது...

'ராதிகா... சோர்ந்து விடாதே.. நிமிர்ந்து நில்.. இது போர்க்களம்... நீ போராளி...' அவள் மனம் அதட்டியது...

அவள் கணப்பொழுதில் சரியாகி நிமிர்ந்து நின்றதை அவன் விழிகள் கண்டு கொண்டன.. அவன் நெற்றியில் சிந்தனையின் ரேகை படிந்தது...

"என்ன விசயம்..? ரொம்ப தெனாவெட்டா இருக்கிறபோல..?" அவன் புருவங்களை உயர்த்தி மிதப்பாக விசாரித்தான்...

"ஏன்.. நான் அப்படி இருக்கக் கூடாதா..?"

சென்னையில் பிறந்து வளர்ந்த ராதிகாவுக்கு தெனாவெட்டைப் பற்றித் தெரியவில்லை.. அதனால்... அவன் பாணியிலேயே அவள் பதிலைச் சொன்னாள்...

"இதைப் பாருடா.. நேத்து என்கூட முதலிரவு கொண்டாடிட்டு வீட்டுக்குப் போனவ... விடிய.. விடிய அந்த சங்கர்கூடப் பேசியிருக்கா... இன்னைக்கு அவன்கூட கொண்டாட மகாபலிபுரத்துக்கு கிளம்பிப் போய்கிட்டு இருக்கா... இதை உன்கிட்டயிருந்து நான் எதிர்பார்க்கலை ராதிகா..."

அவன் வார்த்தைகளில் கசப்புத் தெரிந்தது...

"வேற எதை எதிர்பார்த்தீங்க முரளி.. காலமெல்லாம் நான் கண்ணீர்விட்டபடி மூலையில் முடங்கிப் போவேன்னா..? அதுக்கு வேற ஆளைப் பாருங்க..."

"வேற... வேற ஆளுகளைப் பார்க்கிறது உன் பழக்கம்டி... எனக்கு ஒன்னை நினைச்சா.. அதிலேயே நின்னுதான் பழக்கம்..."

அவளைக் குத்திக் கிழித்த வார்த்தைகளிலும்.. அவனது ஏகபத்தினித்தனத்தை உணர்த்தி.. தேன் தடவி பிரயோகித்தான் பாலமுரளி...

அந்த வேதனை கலந்த சந்தோசம் ராதிகாவின் உயிரை நிறைத்தது...

"ஸ்டாப் இட் முரளி.. இந்த நிலைமையில் என்னைக் கொண்டு வந்து விட்டது யார்..? நீங்கதானே..? உங்களுக்கு என்னைக்குற்றம் சொல்லும் தகுதியும்.. உரிமையும் இல்லை..."

இதைக் கேட்ட பாலமுரளிக்கு உன்மத்தம் பிடித்து விட்டது... அவன் கண்கள் தீப்பிழம்பாய் ஜொலித்தன...

"என்னடி சொன்ன..? உன்னை நினைச்ச மனசில இன்னொருத்தியை நினைக்காதவன் நான்... எனக்குத் தகுதியில்லையா...? உன்னைத் தொட்டு.. உன்கூட குடும்பம் நடத்தியவன் நான்.. எனக்கு உன் மேல் உரிமையில்லையா...?"

"இல்லை.. இல்லை.. இல்லை... என்னை நினைச்ச மனசில இன்னொருத்தியை நினைக்காதவர் காலமெல்லாம் கல்யாணம் பண்ணிக்காம என் நினைப்பிலேயே இருந்து விடுவீங்களா..? உங்க வீட்டில்தான் அதுக்கு விட்டு விடுவாங்களா..?"

அவன் கண்களையே ஊடுறிவிப் பார்த்தவளுக்கு அதில் தெரிந்த யோசனையை கண்டு கொள்ள முடிந்தது..

நீயே பேசு என்பதைப் போல அவளைப் பேசவிட்டு அவன் பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்...

"அப்படி இன்னொரு பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டினா.. அவகூட நீங்க குடும்பம் நடத்தித்தானே ஆகனும்...?"

"இப்ப நீ என்ன சொல்ல வர்ற..?" அவன் நிதானமாக கேட்டான்...

"உங்க வழியில நீங்க போங்க.. என் வழியிலே நான் போறேன்..."

ராதிகா சொல்லி விட்டாள்.. இதைச் சொன்னால் என்ன ஆகும் என்பதை தெளிவாக உணர்ந்தவளாகவே அந்த வார்த்தைகளைப் பிரயோகித்தாள்... அவனைக் கோபப் படுத்தும் அம்புகளை அவன்மீது எய்து விட்டாள்...

அவன் காட்டிய கோபம் கட்டுக்கடங்காததாய் இருந்தது...

"என்னடி சொன்ன..? உன் வழியில நீ போயிடுவியா..? எது உன் வழி...?" அவன் ஆத்திரத்துடன் கேட்டான்...

"சங்கர்..." அவள் நிறுத்தி நிதானமாக.. தெளிவாக அந்தப் பெயரை உச்சரித்தாள்...

"ஏய்ய்..."

அவன் வேகத்துடன் அவளை நெருங்கி வந்தபோது..

"கிட்ட வராதீங்க..." என்று சுட்டு விரலை உயர்த்தி எச்சரித்தாள் ராதிகா...

"ஹ.. என்னையே மிரட்டறியா..?"

"ஆமாம்.. இது மிரட்டல்தான்..."

"என்னை உன்னாலே என்னடி செய்ய முடியும்..?"

"உங்களை எதுவும் செய்ய முடியாது.. என்னை அழிச்சுக்க முடியும்..."

ராதிகா தன் கையிலிருந்த அந்தப் பொருளைக் காண்பித்தாள்.. அதைப் பார்த்த முரளி அசையாமல் நின்று விட்டான்.. ராதிகாவின் கையில் சிறிய பட்டன் கத்தி இருந்தது.. அதன் கூர்மையான முனையை தன் மணிக்கட்டில் அழுத்தியிருந்தாள்.. எந்த வினாடியும் அது கையின் மீது ஆழப் பதிந்து விடும் அபாயத்தை உணர்ந்த பாலமுரளி பின் வாங்கினான்...

"கிட்ட வராதீங்க முரளி.. தள்ளியே நில்லுங்க.. எல்லா நாளும் ஒன்று போலவே இருக்காது... நேற்று நீங்க ஜெயிச்சதாலே முழுசாய் என்னை நீங்க ஜெயிச்சுட்டதாய் அர்த்தமில்ல.. ஒரு அடி நீங்க முன்னால் எடுத்து வச்சாக்கூட நான் என் கையைக் கிழிச்சுக்கிட்டு செத்துப்போயிருவேன்..."

பாலமுரளி வேக மூச்செடுத்து தன்னைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்று கொண்டிருந்ததை சலனமில்லாத முகத்துடன் தீர்க்கமாக பார்த்துக் கொண்டிருந்தாள் ராதிகா...

அவன் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டபின் அவளை நிமிர்ந்து பார்த்தான்... அவனது கூர்மையான பார்வை அவளைத் துளைத்தது...

"ஆக.. உன் வழி சங்கர்ன்னு முடிவு பண்ணிட்ட..?"

"ஆமாம்..."

"நேத்து நடந்ததுக்கு என்ன பதிலைச் சொல்லப் போகிற...?"

"யாருக்கு நான் பதிலைச் சொல்லனும்..?"

"எனக்குச் சொல்லனும்..."

"குட்ஜோக்..." அவள் கிண்டலாகச் சொன்னாள்...

அவளுக்கு அநியாயம் இழைத்தவன் அவளுக்கு பதிலைச் சொல்ல வேண்டாமாம்.. அந்தப் பொறுப்பு அவனுக்கு இல்லையாம்.. அவனால் அநியாயம் இழைக்கப்பட்டவள் அவனுக்குப் பதில் சொல்ல வேண்டுமாம்...

இப்படியொரு நியாயத்தை ராதிகா... எங்கேயும் கேட்டதில்லை... அதைவிட.. அவன் வாயால் இதைக் கேட்க நேரிடும் என்று அவள் கொஞ்சம் கூட நினைத்துப் பார்த்ததில்லை...

அவளது கிண்டலைப் புரிந்து கொண்டவனின் புருவங்கள் முடிச்சிட்டன.. அவனது சிந்தனையின் திசை வேறாக இருந்ததை அவனது முகம் காட்டிக் கொடுத்தது..

"உனக்கு இது சாதாரணமாகத்தான் இருக்கும்ன்னு எனக்குத் தெரியாமப் போச்சே... நான் இதை வேற மாதிரி நினைச்சிட்டேன்..."

"என்ன மாதிரி நினைச்சீங்க மிஸ்டர் முரளி..?"

"உன் வாழ்க்கைன்னு நினைச்சேன்..."

"ஓ.. அப்படி நினைச்சிருந்தும்.. அதை நீங்க செய்யத்துணிஞ்சீங்கன்னா.. அருமையான மனிதர்தான் நீங்க.. உங்க அம்மா உங்களை நல்லபடியாகத்தான் வளர்த்திருக்காங்க..."

இதை வெகுகிண்டலாக அவள் சொல்லிய விதத்தில் வெகுவாக மனதில் அடிவாங்கினான் பாலமுரளி...

"ஏய்ய்.. என் அம்மாவைப் பத்திப் பேசாதே.." ஒற்றைவிரலை உயர்த்தி எச்சரித்தான்..

"ஓ..." அவள் வாயைக் குவித்து.. முகத்தில் வியப்பைக் காட்டினாள்..

"உங்க அம்மாவைப் பத்திப் பேசக் கூடாதா..? ஆமாமில்ல.. உங்க அம்மாவும்.. அக்காவும் உங்க வீட்டுப் பெண்கள்.. அவங்க உங்களுக்கு உயர்த்தி.. உங்க அம்மாவை வீட்டுக்குள் உட்கார வைச்சு பூஜை பண்ணுவீங்க.. உங்க அக்காவை கௌரவமா.. மதிப்பா.. கல்யாணம் செய்து வைத்து அனுப்பி வைப்பீங்க.. நானும் பெண்தான்.. ஆனாப் பாருங்க.. நான் உங்க வீட்டுப்

பெண்ணில்லை.. ஊரான் வீட்டுப் பெண்... என்னை நீங்க அழிக்கப் பார்ப்பீங்க.. என்னே உங்க நியாயம்..! த்சு.. த்சு.. புல்லரிக்குது போங்க... உங்க ஊரில நீங்கதான் பெரிய மனுசனாம்.. சின்னக் கவுண்டராம்.. நாட்டாண்மையாம்.. இன்னும் என்னென்னவோ சொல்லிக்கிட்டாங்களே.. அதெல்லாம் உண்மைதானுங்களா..? இந்த லட்சணத்தில் தான் ஐயா நியாயம் பிளப்பீங்களா..?"

ராதிகா கேட்கக் கேட்க.. முரளிக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.. அவளது கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் செய்வதறியாத கோபத்துடன் அவளை முறைத்தான்...

"என்ன சார்.. பதிலைச் சொல்லாம கண்ணகி மதுரையைப் பார்க்கிற பார்வையை என்னைப் பார்த்து வைக்கறீங்க.. இந்தப் பார்வையை நான் பார்க்கனும்..."

ராதிகா எகத்தாளமாக பேச... வழி கிடைத்து விட்டவனாக பாலமுரளி கண்கள் மின்ன அவளை ஊடுறிவிப் பார்த்தான்...

'என்ன இப்படிப் பார்க்கிறான்..?' ராதிகா உஷாரானார்...

எதையோ வில்லங்கமாகப் பேசிவைக்கப் போகிறான் என்று அவள் அனுமானித்ததுதான் நடந்தது...

"கண்ணகியின் பார்வையை நீ பார்க்கிறதா..? உனக்கு அந்த தகுதியிருக்கிறதா..? கண்ணகியைப் பத்தியெல்லாம் நீ பேசக்கூடாது..."

இப்போது எகத்தாளம் பேசுவது அவன் முறையாகி விட.. ஒ.. நீ அப்படி வருகிறயா என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள் ராதிகா...

'வாடா மச்சான்.. நீ எப்படி வந்தாலும்.. அப்படியே நானும் வருவேன்.. நீ நேத்துப் பார்த்த ராதிகா வேற... இப்பப் பார்க்கிற ராதிகா வேற...'

"அப்படிங்களா..? கண்ணகியைப் பத்தி நான் பேசக்கூடாதா..? அது ஏனுங்க சார்..? நீங்க கோவலனைப் போல இருக்கிற ஆளுங்கிறதுக்காகவா..?"

"ஏய்ய்.. நான் கோவலனா..?"

"பின்னே.. நீங்க என்ன காவலனா..?"

"நீயேண்டி கண்ணகியைப் பத்திப் பேசின..? அதுக்கு முதல்ல பதிலைச் சொல்லு..."

"இதென்ன சார் வம்பாப் போச்சு.. நானும் வந்ததிலிருந்தே பார்க்கிறேன்... இதுக்கு பதிலைச் சொல்லு.. அதுக்கு பதிலைச் சொல்லுன்னு.. கேள்விமேல கேள்வியா.. கேட்டுத் தள்ளதீங்க.. இது என்ன எக்ஸாம் ஹாலா...? நீங்க டீச்சரா..? நான் ஸ்டூடண்டா..."

"அப்படித்தான் வைச்சுக்கயேன்... நேத்து இதே ரூமில உனக்கு நான் பாடம் நடத்தலையா..? அதுக்குள்ள அது உனக்கு மறந்து போயிருச்சா..?"

'நீ அதிலேயே நில்லு...' பல்லைக் கடித்தாள் ராதிகா...

"மறந்துதான் போயிருச்சு.. அதுக்கு இப்ப என்னங்கறிங்க...?"

"முடிவா நீ என்னதாண்டி சொல்ற..?"

"எதைப் பத்திக் கேட்கறிங்க...?"

"நீ எதுக்காக சங்கரைப் பார்க்கப் போகிற...?"

"என்னசார் கேள்வி இது...? அவர் என் வுட்பி... வுட்பின்னா அர்த்தம் தெரியுமா..? என்னதான் படிச்சிருந்தாலும் நீங்க சங்கரைப் போல பாரினில் போய் படிச்சவரில்லையே... தேனூத்துதானே...? அதான் கேட்டேன்..."

பாலமுரளியின் முகம் பயங்கரமாய் மாறியது.. கையில் கத்தியோடு மணிக்கட்டை அறுத்துக் கொள்ளத் தயாராக நின்றிருந்தவளை எதுவும் செய்ய முடியாமல் அவன் பல்லைக்கடித்தான்...

'கடிடா மச்சான்... என்னைப் பல்லைக் கடிக்க வைச்சியில்ல... இப்ப உன் முறை...' ராதிகா மனதுக்குள் குதூகலித்தாள்...

"கொழுப்பாடி..?"

"ஆமாம் சார்.. நீங்க போட்டுத் தந்த சாதத்தைச் சாப்பிட்டு வளர்ந்தேனில்ல.. அந்தக் கொழுப்பு..."

"திமிர் பிடிச்ச கழுதை.. அந்த சங்கர் உனக்கு வருங்காலக் கணவனா..?"

"ஆஹா.. உங்களுக்கு கூட இதுக்கு அர்த்தம் தெரிஞ்சிருக்கே..."

"நீ அடி வாங்கியே சாகப்போகிற..."

"சாகத் துணிஞ்சுதான் என் கையில கத்தியை வைச்சுக்கிட்டு நிக்கிறேன்.. அதை எப்படிச் செத்தால் என்ன..? நீங்களே அந்தப் புண்ணியத்தையும் சேர்த்துக் கட்டிக்கங்க..."

கத்தியின்றி.. ரத்தமின்றி காயப்படுத்த உன்னால் மட்டும்தான் முடியுமா..? கத்தியின்றி ரத்தமின்றி.. யுத்தம் புரிய என்னாலும் முடியும் என்று பாலமுரளிக்கு உணர்த்திக் கொண்டிருந்தாள் ராதிகா...



வாளேந்தி போர் செய்ய
காதல் போர்க்களத்தில் முடியுமா..?

அவள் வார்த்தை வாளேந்தி போராளியாக அவன் முன்னால் நின்றாள்.. அவளை நிராயுதபாணியாக்க அவன் முயன்ற போதெல்லாம் மிக எளிதாக வார்த்தைகேடயத்தின் உதவி கொண்டு அவற்றை முறியடித்தாள்.. அவன் யோசிக்க நேரமே கொடுக்காமல்

வார்த்தை அம்புகளை எய்தாள்.. அவள் வீசிய அஸ்திரங்களை எதிர்கொள்ள அவன் பிரம்ம பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது..

இந்த யுத்த யுக்தி அவன் அறியாதது...

இது இந்தியப் பெண்கள் கையாளும் போர்முறை.. காலம்காலமாய் ஒவ்வொரு வீட்டின் சமையலறையிலும் முடக்கப்பட்ட பெண்... இந்த அஸ்திரங்களையும் போர் முறைகளையும் கையாண்டே தன் அடையாளம் அழிந்து விடாமல் பாதுகாத்துக் கொண்டிருக்கிறாள்...

ராதிகாவின் தாய் ராஜேஸ்வரியும் இதே யுக்தியை தினம் தினம் கையாள்பவள்தான்.. அதைப் பார்த்து வளர்ந்த ராதிகாவிற்கு அதைப் பின்பற்றி போர் புரிய முடியாதா... என்ன..?

அவள் புத்தியைதீட்டி... அதன் கூர்மையின் துணை கொண்டு அவனை எதிர்த்து நின்றாள்.. அவளது இந்த எதிர்ப்பை எதிர்பார்க்காதவன் அது எதனால் வந்தது என்று அறிந்து கொள்ள முடியாமல் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டிருந்தான்...

சங்கருடனான அவளது திருமணத்தைப் பற்றிய பேச்சே இனிஇல்லை என்ற நிலைமையில்.. அவள் அவனது பேச்சை விடாமல் பிடித்துக் கொண்டு தொங்கியது அவனுக்குள் ஆவேசத்தை ஊட்டியது...

"நல்ல குடும்பத்துப் பொம்பளை பேசற பேச்சாடி இது..?"

"இதை நீங்க.. உங்க திருவாயால் சொல்லக்-கூடாது... என்குடும்பம் நல்ல குடும்பம்ன்னா.. உங்க குடும்பம் என்ன மாதிரியான குடும்பம்..?"

"ஏய்ய்ய்..."

"ரோசப்பட்டு ஒரு பிரயோஜனமுமில்லை.. நல்ல குடும்பத்தில் பிறந்த ஆம்பளை... உங்களை மாதிரி ஒரு காரியத்தைச் செய்யத் துணிவானா...?"

இந்தக் கேள்விக்கு பாலமுரளி.. என்ன பதிலைச் சொல்லுவான்..? அவன் பதில் சொல்ல முடியாமல் திணருவதை ஓர்விதமான மனத்திருப்தியோடு பார்த்தாள் ராதிகா...

புண்பட்டிருந்த அவளது நெஞ்சம் கொதித்தது.. அவனை நறுக்கென்று நான்கு கேள்விகள் கேட்காமல் விட்டுவிட அவள் தயாராக இல்லை...

"என்ன..? பதிலைக் காணோம்..."

"பேசுடி.. பேசு.. என்கூட குடும்பம் நடத்திட்டு.. அந்த சங்கரைத் தேடிப் போய்கிட்டு இருந்தவதானே நீ..? இதையும் நீ பேசுவ இன்னமும் பேசுவ..."

"நிச்சயமாய் பேசுவேன்.. நீங்க என்ன தாலிகட்டியா என்கூடக் குடும்பம் நடத்தினீங்க..? கோவிலுக்கு போய் விட்டு வீட்டுக்கு வந்துக்கிட்டு இருந்தவளை கடத்திக்கிட்டு வந்து பலவந்தம் பண்ணினீங்க.. இதை நான் கோர்ட்டுக்கு கொண்டு போனால் என்ன ஆகும் தெரியுமா..?"

"போக வேண்டியதுதானே..? அங்கே போகாமல்.. ஏன் அவனைத் தேடிக்கிட்டுப் போகிற...?"

"என் குடும்ப கௌரவம்ன்னு ஒன்னு இருக்கே.. அதுக்காக பார்க்கிறேன்.. இல்லைன்னா நடக்கிறதே வேற..."

"குடும்ப கௌரவம் பார்க்கிறயா..? நீயா..? உன்னைத் தொட்டவனை விட்டுவிட்டு.. வேற ஒருத்தனைத் தேடிப் போகிறயே.. இதுதான் உன் குடும்ப கௌரவமா..?"

"நம்ம நாட்டில் டைவர்ஸ்ன்னு ஒன்னு நடக்கிறதே இல்லையா..?"

ராதிகா நிதானமாகக் கேட்டாள்.. அவன் முகத்திலிருந்த எள்ளல் மறைந்தது ஓர்விதமான தீவிரம் குடிவந்தது..

"கல்யாணம் பண்ணிக்காமலே டைவர்ஸா...?"

"கல்யாணம் பண்ணிக்காமலே குடும்பம் நடத்தியவர் இந்தக் கேள்வியைக் கேட்கிறதை நினைச்சா ஆச்சரியமாயிருக்கு.. எது எப்படியோ இந்தப் பிரச்சனைக்கான தீர்வைத் தேடித்தான்.. சங்கரைத் தேடி நான் போனேன்.."

"போனா..? அவன் என்னத்தை கிழிச்சுருவான்..."

"என் கழுத்தில் தாலியைக் கட்டுவார்..."

ராதிகா உறுதியாகச் சொல்ல.. பாலமுரளியின் முகத்தில் வெறி வந்தது..

"ஏய்ய்..."

அவள் மீது பாயப் போனவன்.. அவள் கத்தியை அழுத்துவதில் வேகம் காட்டவும் நிதானித்துப் பின் வாங்கினான்...

"இந்தக் கோபத்துக்கொல்லாம் நான் பயப்பட மாட்டேன் மிஸ்டர்... உங்க பூச்சாண்டி வேலையை வேற எங்கேயாவது போய் காட்டுங்க... நான் சங்கரிடம் பேசத்தான் போகிறேன்... எனக்கு நடந்ததைச் சொல்லத்தான் போகிறேன்... அவர் அதையும் மீறி என் கழுத்தில் தாலி கட்டத்தான் போகிறார்..."

"அடுத்தவன் தொட்ட பெண்ணின் கழுத்தில் அவன் தாலி கட்டுவானாடி...?"

"கட்டாயம் கட்டுவார்... அவருக்கு என் மேலிருக்கிற காதல் அப்படிப்பட்டது.. உங்களை மாதிரி உடம்பை நேசிக்கிற காதலில்லை... அவருடைய காதல்..! மனதை நேசிக்கிற காதல்தான் அவருடைய காதல்..!"

ராதிகா சரியான இடத்தில் தாக்கிவிட்டாள்...

"என்னடி சொன்ன..? நான் உடம்பை நேசிக்கிறவனா...?" பாலமுரளி கொதித்தான்...

"பின்னே... இல்லையா...? நேற்று நடந்ததிற்குப் பெயர் என்ன...?"

"அது உனக்குக் கொடுத்த தண்டனை..."

"தோடா.. இதை நான் நம்பனுமாக்கும்..."

ராதிகாவின் குரலில் இருந்த கேலியில் முரளியின் முகம் கன்றிவிட்டது...

"உன்னை அவன் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னா... அதுதான் வழின்னு நினைச்சேன்... அதுக்குப் பின்னாலே நீ யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு நினைச்சேன்.."

"ஓஹோ... யாரையும் கல்யாணம் பண்ணிக்காம காலம் பூராவும் நான் தனிமையில் இருக்கனும்... அதுதான் எனக்கு நீங்க கொடுத்த தண்டனை... எல்லாம் சரிதான்... என்வீட்டில் அப்படித் தனிமையில் நானிருக்க விட்டு விடுவாங்களா...?"

'இதை யோசிக்காம போயிட்டேனே...' பாலமுரளி விழித்தான்...

"சொல்லுங்க சார்... வாயில என்ன வைச்சிருக்கீங்க... கமர்கட்டா..? ஏன் வாயடைச்சுப் போச்சு...? என் குடும்பத்துக்கு நான் மூத்தவள்.. எனக்கு கல்யாணம் ஆனபின்னாலேதான் கீதாவுக்கும்.. சுந்தருக்கும் கல்யாணம் பண்ணி வைப்பாங்க... மூத்தவ கல்யாணமாகாம வீட்டில இருந்தா... அடுத்துப் பிறந்த பிள்ளைகளுக்கு பெண் கொடுக்கவும்... மாப்பிள்ளை கொடுக்கவும்.. யோசிக்க மாட்டாங்களா...?"

'ஆமாமில்ல...' பாலமுரளி யோசித்தான்...

"அதனால... நான் கட்டாயம் கல்யாணம் பண்ணிக்கிட்டுத்தான் ஆகனும்.. பட்.. நேத்து நடந்ததை மறைத்து ஒருத்தருக்கு கழுத்தை நீட்ட எனக்கு விருப்பமில்லை... அப்படி நான் செய்தா வாழ்நாள் பூராவும்.. என் மனச்சாட்சியே என்னைக் கொன்று விடும்... இந்த உண்மையைத் தெரிந்தவங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்க யோசிக்க மாட்டாங்களா..?"

"அதையேண்டி நீ யோசிக்க மாட்டேன்கிற..."

"யோசிக்காம இருப்பேனா..? விடிய.. விடிய யோசிச்சேன்..."

"இல்லையே.. நீ விடிய.. விடிய.. அவன்கூட போனில் கொஞ்சிக்கிட்டில்ல இருந்திருக்கே..."

"அடேங்கப்பா... இன்வெஸ்டிகேசனெல்லாம் பலமாய்த்தான் இருக்கு... விடிய விடிய அவர்கூடப் பேசினா.. யோசிக்காமல் இருந்திருப்பேன்னு அர்த்தமா..?"

"பேசினா எப்படிடி யோசிக்க முடியும்..?"

"நான் பேசிக்கிட்டே யோசிச்சேன்..."

"நீதானே.. நீ எதை வேண்டும்னாலும் செய்வேடி.. பேசிக்கிட்டே யோசிக்க மாட்டியா...? என்னத்தை யோசிச்ச...?"

"இந்த உண்மை தெரிஞ்ச பின்னாலும் என்னை ஏத்துக்க சங்கர் ஒருத்தரால்தான் முடியும்ங்கிறதை

யோசிச்சுப் பார்த்தேன்.. அவர் இன்னைக்கு மகாபலிபுரம் போகலாம்ன்னு சொன்னார்.. எனக்கும் அவரிடம் மனம் விட்டுப் பேச.. அந்த இடம்தான் தோதுன்னு தோணுச்சு.. ஒகேன்னு சொல்லிட்டேன்.."

தாடையைத் தடவியவாறு ராதிகாவையே யோசனையுடன் பார்த்தான் பாலமுரளி... இந்தத் திருப்பத்தை அவன் எதிர் பார்க்கவில்லை என்பதை அவனது முகமே சொல்லியது...

அசையாமல் நின்ற ராதிகா... அவனை அசைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்... வார்த்தை வெடி குண்டுகளை எடுத்து வீசிக் கொண்டிருந்தவள் அடுத்த வெடிகுண்டை கையில் எடுத்தாள்...

"நேத்து வரைக்கும் கல்யாணத்திற்கு அவர்தான் அவசரப்பட்டார்... நான் எக்ஸாம் முடியட்டும்ன்னு நினைச்சேன்.. இன்னைக்குத்தான் கதையே மாறிப் போச்சே... காலாகாலத்தில கல்யாணம் நடப்பதுதான் எனக்குப் பாதுகாப்புன்னு தோணுது... ஒரு வேளை.. நேற்று நடந்ததில்... குழந்தை... கிழந்தைன்னு உண்டாகிட்டா.. அதுக்கு தகப்பன் வேண்டாமா...?"

அதுவரை பொறுமை காத்தவனுக்கு.. அணை உடைத்த வெள்ளமாக பொறுமை உடைந்து விட்டது... அவள் கையிலிருந்த கத்தியை மறந்து ஓங்கி அவள் கன்னத்தில் ஒரு அறை விட்டான்...

"யாரு பிள்ளைக்கு.. யாரு அப்பனாகிறது..? எவ்வளவு தைரியம் இருந்தா என்கிட்டயே இதைச் சொல்லுவா..?"

கன்னத்தில் விழுந்த அறை ராதிகாவிற்கு வலியை உண்டாக்காமல் அவள் மனதில் இனிப்பை உணடாக்கியது.. அவனது ஆண்மையின் ஆளுமையில் அவள் மனம் குளிர்ந்தாள்.. அவள் நினைத்தது நடக்கப் போகிறதென்று... அவள் மனதில் ஒரு பட்ஷி கூவியது...

"இதுக்கு எதுக்கு தைரியம் வேணும்..? இதையெல்லாம் யோசிக்காமலா என்னைத் தொட்டிங்க...?"

"அடித்துப் பல்லைக் கழட்டி விடுவேன் ராஸ்கல்... தொட்டா.. அதுக்கான நியாயத்தைக் கேளு.. அதை விட்டுட்டு அடுத்தவனுக்கு பெண்டாட்டியாகப் பார்க்கிற..? இதில.. என் பிள்ளைக்கு அவன் அப்பனாம்.. உன்னை கொன்று இங்கேயே புதைத்து விடுவேண்டி..."

அவனையறியாமல் ராதிகா அவனிடம் நியாயம் கேட்டு வருவாள் என்ற அவனது எதிர்பார்ப்பை அவன் உணர்த்திவிட.. அவள் மனம் படபடத்தது...

அப்படியொன்றும் அவன் அவளைக் கை கழுவிவிட நினைக்கவில்லை.. அவன் முன்னால் அவள் மண்டியிட வேண்டுமென்றே நினைத்திருக்கிறான் என்ற நினைவில் அவள் மன ரணம் கொஞ்சமாக ஆறியது...

"ஓ...! நான் உங்ககிட்ட நியாயம் கேட்டு வரனுமா..? வந்து..? என்ன செய்யனும்..? உங்க காலைப்

பிடிச்சு... எனக்கு வாழ்க்கைப் பிச்சை போடுங்கன்னு கெஞ்சனுமா..?"

"அதைச் செய்திருந்தா நீ பொம்பள..."

"நான் ஏன் அதைச் செய்யனும்..? ஊருக்கெல்லாம் நியாயம் பிளக்கிற உங்களுக்கு அந்த நியாயம் தெரியாதா...? நீங்க தொட்டவளை வேறொருத்தன் தொடவிடக் கூடாதுன்னு நினைச்சிருந்தா நீங்க ஆம்பளை.. அதை விட்டுட்டு.. என் காலைப் பிடிச்சு பிச்சை கேட்டா உனக்கு வாழ்க்கைப் பிச்சை கொடுக்கிறேன்னு சொன்னா.. நீங்க என்ன ஆம்பளை...?"

ராதிகா பதிலுக்குப் பதில் கேட்டாள்...

"ஏய்ய்.."

பாலமுரளி முகத்தில் ரத்தம் பாய்ந்தவனாக.. செக்க செவேலென்று ஜிவுஜிவுத்த முகத்துடன் ராதிகாவின் கழுத்தில் தன் விரல்களைப் பதித்து நெரிக்க ஆரம்பித்து விட்டான்...

ராதிகா திமிறவில்லை.. விடுபட முயலவில்லை.. மூச்சுத்திணறினாலும்... அசையாமல் தன் கழுத்தை அவன் கரங்களுக்கு கொடுத்து நின்றிருந்தாள்...

"ச்சீ.."

அவளைக் கொல்ல முடியாத இயலாமையுடன் அவளைப் பிடித்துத் தள்ளி விட்டான் பாலமுரளி.. அவன் தள்ளிய வேகத்தில் கட்டிலில் போய் விழுந்தாள் ராதிகா..

"இப்படி யாரும் என்கிட்டப் பேசினதில்லைடி..."

"என்கிட்டயும் இப்படி யாரும் நடந்துக்கிட்டது இல்லையே..."

"நீ என்னைத் தேடி வந்திருக்கனும்..."

"நீங்க வான்னா வருகிறதுக்கும்.. போன்னா போகிறதுக்கும் நான் என்ன உங்க தோட்டத்தில் விளைஞ்சிருக்கிற கிள்ளுக்கீரையா...?"

"நீ பாதிக்கப் பட்டவள்..."

"யார் பாதிச்சது..? நீங்கதானே..? அதைச் சரி செய்கிற பொறுப்பு யாருக்கு இருக்கு..? உங்களுக்குத் தானே...?"

"நீ அதை என்கிட்டக் கேட்டிருக்கனும்.."

"நான் கேட்டுத்தான் அதை நீங்க செய்யனுமா..? அது உங்க கடமையில்லையா...?"

"அதுக்காக இன்னொருத்தனுக்கு நீ பெண்டாட்டி-யாகிடுவியா..?"

"உங்க பெண்டாட்டின்னு நீங்க நினைக்கலியே.. நான் வேறென்னதான் செய்கிறது..? நான் தனி மனுஷியில்லையே... எனக்குப் பின்னால் என் குடும்பம் இருக்கு.. எனக்கு எது நடந்தாலும் அது அவங்களைத்தான் முதலில் பாதிக்கும்..."

"இப்போ நீ என்னதான் சொல்கிற..?"

"நான் சொல்கிறதுக்கு என்ன இருக்கு...? நீங்கதான் சொல்லனும்..."

"இதைச் சொல்ல உனக்கு இம்புட்டு நேரமாச்சா..?"

"இதைக் கேட்கவும் உங்களுக்கு இவ்வளவு நேரமாகியிருக்கே..."

"பதிலுக்குப் பதிலா..?"

"ஏன் சொல்லக்கூடாதா..?"

அவர்கள் ஒருவருக்கொருவர் சளைக்காமல் வாதாடினார்கள்...

நீ தொட்டவுடன் விட்டுச்செல்ல..
நானொன்றும் கிள்ளுக்கீரையல்ல...

கட்டிலின் மீது முழங்கால்களை மடித்துக் கட்டியபடி அமர்ந்திருந்த ராதிகா... கத்தியை விடாமல் இறுக்கிப் பிடித்திருந்தாள்...

அவள் முன்னால் கிடந்த சோபாவில் கால்மேல்.. கால் போட்டு அமர்ந்த பாலமுரளி...

"இன்னும் எதுக்காக அந்தக் கத்தியைக் கட்டிக்கிட்டு அழுகிற..?" என்று எரிந்து விழுந்தான்..

"உங்களைக் கட்டிக்கிட்டு அழ முடியலையே.. அதனால்தான் இந்தக் கத்தியையாவது கட்டிக்கிட்டு அழலாமுன்னு வைச்சிருக்கேன்..." அவள் விடாமல் பதில் கொடுத்தாள்...

"பேச்சுக்கு எதிர் பேச்சு பேசலைன்னா உனக்கு சாப்பாடே உள்ளே இறங்காதா..?"

"அப்படித்தான் வைச்சுக்கங்களேன்..."

அவள் வெடுக்கென்று பதில் சொன்னாள்... அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு.. அவளின் களைத்த.. கலைந்த தோற்றம்.. ஓர்விதமான மனக் கிளர்ச்சியை உண்டு பண்ணியது.. முதல்நாள் அவளைத் தொட்ட நினைவில் அவன் உடலில் சூடேற.. அவளது உடம்பின் மீதுதான் காதல் என்ற அவளின் குற்றச்சாட்டு நினைவுக்கு வந்து வேகம் குறைந்தது...

இருந்தாலும்.. அவளுடன் வாயாட அவன் ஆசைப்பட்டான்...

"வைச்சுக்கவா..? அதுக்குத்தான் நான் நேத்தே சரின்னு சொல்லிட்டேனே.. இந்த வீட்டிலேயே உன்னை இருக்கச் சொன்னேன்.. நீ தானே மாட்டேன்னு அடம்பிடிச்சு ஓடின..."

'கொழுப்பு...!' அவள் முறைத்தாள்...

"மெல்ல... பார்வையிலேயே பொசுக்காதே..."

"அதுக்கு வேற ஆளைப் பாருங்க..."

"அதெல்லாம் என் பரம்பரையிலேயே கிடையாதுடி.. கட்டிக்கிறதா இருந்தாலும்.. வைச்சுக்கிறதா இருந்தாலும்.. நீ ஒருத்திதான்.. வேற ஆளைப் பார்க்க என்னாலே முடியாது..."

அவன் இதையும் யதார்த்தமாகத்தான் சொன்னான்.. அவளது நைந்த உள்ளத்தில் புது ரத்தம் பாய்ந்தது...

"இந்தக் கதையெல்லாம் என்கிட்ட வேண்டாம்..."

"கதையா..?"

"கதைதான்.. வேற என்ன..? நீங்க உங்க வீட்டுக்கு ஒரே மகன்.. காலம் பூராவும் கல்யாணம் பண்ணிக்காமலே நீங்க இருக்க முடியுமா..? உங்க வீட்டிலேதான் அதுக்கு விட்டு விடுவாங்களா..?"

"நீ பொம்பள... உன்னால் அது முடியாது.. நான் ஒப்புக்கிறேன்... நான் ஆம்பள.. என்னால் அது முடியும்.. அதோட.. எனக்குத்தான் நீ இருக்கயே..."

"நான்தான் சங்கரைக் கல்யாணம் பண்ணிக்கனும்கிற திட்டத்தோட இருக்கேனே.."

"திரும்பவும் கொலைவெறியைக் கிளப்பாதேடி.. சொல்லிட்டேன்.. மனுசனா இருக்க விடு..."

"நேத்தில இருந்து நீங்கதான் மனுசனா இல்லியே..."

ராதிகா மனம் தாளாமல் குமுறி விட்டாள்.. பாலமுரளி உதட்டைக் கடித்துக் கொண்டு அவளைப் பார்த்தான்...

"அதுக்குக் காரணம் யாரு..? நீ தானே..."

"போதும்... இதையே திருப்பித் திருப்பிச் சொல்லாதீங்க... எனக்கு அலுத்துப் போச்சு..."

"எது அலுத்துப் போச்சு.. நானா..?"

ராதிகா அவனை இமைக்காமல் பார்க்க... பாலமுரளி கொஞ்சம் அடங்கினான்...

"ஓகே.... ஓகே... நான் இன்னைக்கே உன் வீட்டுக்கு வர்றேன்..."

"எதுக்கு...?"

"ம்ம்ம்.. உன் அம்மா போடற காபி நல்லாயிருக்குயில்ல... அதைக் குடிச்சிட்டு வரலாமுன்னுதான்.. வேற எதுக்கு..? எரிச்சலைக் கிளப்பாதேடி.. நான் சொல்கிறதைக் கேளு..."

"சொல்லுங்க..."

"நீயும்.. நானும் காதலர்கள்ன்னு பொய் சொல்லப் போறேன்..."

'அட மாக்கானே...! அது தாண்டா உண்மை...'

"நீ என்னைத்தவிர வேற ஒருத்தனை மனசாலேயும் நினைக்க மாட்டேன்னு அடுத்த பொய்யைச் சொல்லப் போறேன்..."

'அதுவும் உண்மைதாண்டா..'

"அதனால.. சங்கரைக் கல்யாணம் பண்ணிக்க நீ மனசார சம்மதிக்க மாட்டேன்னு கப்ஸா விடப் போறேன்.."

'நான் எங்கேடா அவனைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சேன்..? உன்னைக் கண்டு பிடிக்கவும் வழி தெரியாம.. கல்யாணத்தை நிறுத்தவும் வழி தெரியாம.. போராடிக்கிட்டு இருந்தப்ப.. ஷோபாவைத் தூண்டிவிட்டு கல்யாணத்தை நிறுத்த நான் கண்டுபிடிச்ச வழிடா அது...'

"இதையெல்லாம் உன் வீட்டில் நம்பனும்.. அதுதான் என் கவலை..."

'நம்பாம என்ன செய்யப் போகிறாங்க...'

ராதிகாவிற்கு ஒன்றும் புரியவில்லை.. இவன் எதற்காக புதிதாக இந்தக் கவலையைச் சொல்கிறான் என்று பிடிபடாதவளாய் அவன் முகத்தைப் பார்த்தாள்...

"இல்லை.. நீ சங்கர்கூட காதல்ன்னு சொல்லிக்கிட்டு இருக்கவளாச்சே.. அதைத்தான் எப்படி உடைக்கிறதுன்னு தெரியலை..."

'நீ ரொம்ப கண்ட...'

"எது எப்படியிருந்தாலும் இப்ப நான் வந்து உன்னைப் பெண் கேட்டுத்தானே ஆகனும்..?"

பாலமுரளி சொன்ன விதத்தில் ராதிகா புருவங்களை உயர்த்தினாள்...

"அடேங்கப்பா.. ரொம்பத்தான் சலித்துக்கிறதைப் போல இருக்கு.. இவ்வளவு சலிப்பா நீங்க ஒன்னும் எனக்கு வாழ்க்கைப் பிச்சை கொடுக்க வேணாம்... இஷ்டமிருந்தா என்னைப் பெண் கேட்டு வாங்க..."

"இல்லைன்னா...?"

"விட்டு விடுங்க..."

"நீ உடனே அந்த சங்கரைத் தேடி ஓட தோதாயிருக்கும்... அதுதானே.. என்னதான் சொல்லு.. நீ அந்த சங்கரைத் தேடி ஓட காரணம் தேடிக்கிட்டே அலைகிறடி.. லேசாய் ஒரு சந்து கிடைச்சாக்கூட கெட்டியாய் பிடிச்சுக்கிற... நான் எதைச் சொன்னாலும்.. அதில ஏதாவது ஓட்டை.. உடைசல் இருக்கான்னு கண்ணில விளக்கெண்ணையை விட்டுக்கிட்டு தேடிக் கண்டுபிடிக்கிற பாரு.. கெட்டிக்காரிதாண்டி நீ..."

பாலமுரளி அவளை வெகுவாக சிலாசிக்க ராதிகாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

"ஹலோ.. என்ன..? உங்களுக்குத்தான் பேசத் தெரியும்ன்னு மூச்சுவிடாம பேசிக்கிட்டே போறீங்க..? உங்களுக்குத்தான் பேசத் தெரியுமா..?"

"உனக்கும் பேசத் தெரியுமா..?"

"நானென்ன ஊமையா...?"

"அப்படி சின்னப் பப்பா கூடச் சொல்லாது.. நீ வாயைத்திறந்தா எங்க தென்காசிப் பட்டினமே கிடுகிடுன்னு ஆடிருமே.. யாரு நீ..?"

"நான் யாருன்னு தெரியாமலா என்னை உட்கார வைச்சு இவ்வளவு நேரமும் உணக்கையா பேசிக்கிட்டு இருந்தீங்க..?"

"நேத்துக் கதையை விட்டுட்டியே.." பாலமுரளி கண் சிமிட்டினான்...

'நீ அதிலேயே இரு...' ராதிகா முகத்தை திருப்பிக் கொண்டாள்...

"என்னடி பேச்சைக் காணோம்..? என்னமோ பட்டிமன்றப் பேச்சாளரைப் போல.. எனக்கும் பேசத் தெரியும்ன்னு வீராவேசமாய் வாயைத் திறந்த..? இப்ப வாயை மூடிக்கிட்டு.. முகத்தைத் திருப்பிக்கிட்ட..? என்ன ஆச்ச..? பேச்சு வரலையா..? நீ ஊமையா..?"

அவளது முகச்சிகப்பை பார்த்து விடும் துடிப்புடன் பாலமுரளி வம்பிழுக்க.. ராதிகா எரிதணலாய் அவனைப் பார்த்தாள்...

"நான் பேசினா.. நீங்க தாங்க மாட்டிங்க..."

"இது எதையும் தாங்கும் இதயம்டி.. நேத்து இந்நேரம் என்கூட குடும்பம் நடத்திட்டு.. இன்னைக்கு இந்நேரம் வேற ஒருத்தனைத் தேடி நீ ஓடிக்கிட்டு இருக்கிறதையே தாங்கிக்கிட்டு உன்கூட பேசிக்கிட்டு

உட்கார்ந்திருக்கேன்.. மத்ததையா தாங்கமாட்டேன்..? நீ பேசு.. பேசு...."

பாலமுரளியின் எகத்தாளமான வார்த்தைகள் ராதிகாவின் இதயத்தை குத்தூட்டியைப் போலக் கிழித்தன...

எதையும் தாங்கும் இதயம் இருப்பது இவனுக்கா.. இல்லை தனக்கா என்ற கேள்வியை தனக்குள் அவள் புதைத்துக் கொண்டாள்...

"குடும்பம் நடத்தியவர் எதுக்காக அப்படியே ஓடினீங்க...?"

"உன்னை என்கூட இருக்கச் சொன்னேனா இல்லையா...?"

பாலமுரளி நியாயம் பேசிய லட்சணத்தைக் கேட்டவளுக்கு கொலைவெறி கிளம்பியது..

"நீங்க இருக்கச் சொன்னவுடனேயே நான் இங்கேயே இருந்துவிட முடியுமா..?"

"ஏன் முடியாது..? சங்கரைத் தேடி மகாபலிபுரம் போகமட்டும் முடியும்.. இது உனக்கு முடியாதா..?"

சுற்றிச்சுற்றி இவன் அந்த ஒன்றில் மட்டும்தான் வந்து நிற்பான் என்ற நினைவில் ஆயாசமடைந்தாள் ராதிகா...

இப்போது மட்டுமல்ல.. வாழ்நாள் பூராவும் இந்தப் பேச்சு தன்னைத் தொடரப் போகிறது என்பதை

அறிந்திருந்தும் அதைத் தடுக்கும் வகையறியாதவளாக மௌனியானாள் ராதிகா...

அவளது அந்தரங்கத்தில் இருந்தவனே.. அவளை குற்றவாளிக்கூண்டில் நிறுத்திக் கொண்டிருந்தான்.. தான் குற்றமற்றவள் என்பதை அவள் நிருபிக்கும் வாய்ப்பையே அவளுக்கு அளிக்காமல் தண்டனையைக் கொடுத்து விட்டான்... அந்தத் தண்டனை அவளுக்கு மட்டுமானது என்றால் சந்தோசமாக அவள் அதைத் தாங்கிக் கொண்டிருப்பாள்.. அப்படியில்லாமல்.. அவளையும் தாண்டி அவளது குடும்பத்தையும் நிம்மதியிழக்க வைக்கும் தண்டனை என்பதால்தான் அவள் தொடர்ந்து பாலமுரளியின் குற்றச்சாட்டு உண்மை என்ற விதத்திலேயே அவனிடம் நடிக்க வேண்டி வந்து விட்டது..

அவளது அந்தரங்க மனதை அறிந்தவர் யார்..?

'கடவுளுக்குத் தெரியாதா..? அவர் அறிய மாட்டாரா..?' அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்..

இதுதான் உன் வழி என்று கடவுள் அவளுக்கு விதித்து விட்டார்... அவர் காட்டிய பாதையில் அவள் நடக்க ஆரம்பித்திருக்கிறாள்.. இனி வருவதும்.. வாழ்வதும்.. தெய்வத்தின் அருளில்தான் அடங்கியிருக்கிறது...

என்றாவது ஒருநாள் அவளது அந்தரங்க மனதில் அவன் மட்டுமே உறைந்திருப்பதை அவன் அறிந்து கொள்ளலாம்...

இல்லை... அப்படி ஒரு நாள் அவள் வாழ்வில் வராமலே போனாலும் போய் விடலாம்...

எது எப்படியிருந்தாலும்.. அவள் வாழ்க்கை அவனுடன் தான் என்று ஆகிவிட்டது.. அது ஒன்றே அவளுக்குப் போதுமானது...

வாழ்நாள் முழுவதும் வார்த்தை சாட்டைகளை அவள்மீது அவன் வீசிக் கொண்டேயிருக்கலாம்.. அதன் அடி அவளை வேதனைப் படுத்தாது..

முள்ளாக அவள் மனதை அவன் குத்திக் கிழித்துக் கொண்டேயிருக்கலாம்... அந்தக் கீறலில் ரத்தக்கசிவு ஏற்படாது...

கண்முன்னே நிற்கும் காதலியை துரோகியென்று நினைத்துக்கொண்டே அவன் கூடலாம்.. அந்தக் கூடலில் அவள் சுகத்தைத்தான் காண்பாள்.. துன்பத்தைக் காண மாட்டாள்...

அவன் கைபிடித்து அவனுக்குரியவளாக.. அவனை கணப்பொழுதும் பிரியாதவளாக.. வாழ்க்கைப் பாதையில் அவனைப் பின்பற்றி அவள் நடந்து விட்டால்.. அது ஒன்றே அவளுக்குப் போதும்.. வேறு எதுவும் அவளைப் பாதிக்காது...

"இது ஒன்னைக் கண்டு பிடிச்சு வைச்சிருக்கடி நீ.. வில்லங்கமான எந்தக் கேள்விக்கும் பதிலைச் சொல்ல மாட்ட.. ஊமையாகிவிடுவ.. மத்த நேரத்தில மனுசனைக் குத்தம் சொல்லி.. வாய் கிழிய பேசுவ..."

"நான்தான் சொல்லிட்டேனே.. நான் பேசினா நீங்க தாங்க மாட்டிங்கன்னு..."

"எதையும் தாங்கும் இதயம் எனக்கிருக்குன்னு நானும் சொல்லிட்டேனே.. அதுக்கான உதாரணத்தையும் அள்ளி விட்டேனே.. மறந்தா போச்சு...? வேணும்ன்னா திரும்பவும் அதை நினைவு படுத்தவா..?"

"வேண்டாம் வேண்டாம்..."

"எதுக்கு அலறுகிறவ..? நான் இல்லாததையா சொல்லிட்டேன்..."

"நான் யாரோ ஒருத்தரைப் பார்க்கப் போகலை..."

ராதிகா வெடுக்கென்று பேசிவிட.. பாலமுரளி முகம் கருத்தான்...

"ஓ.. அவன் உனக்கு யாரோன்னு இல்லைல்ல..? நான்தானே உனக்கு 'யாரோ..'? அவன் உனக்கு யாதுமானவன்.. நான்தான் வழியில் போன வழிப்போக்கன்.. இது தெரியாம பேசிட்டேனே..."

அவன் விட்ட சொல்லம்புகளில் இதயம் கிழிந்தாலும்.. அதைமூடி மறைத்து.. முகத்தில் எந்தவிதச் சலனத்தையும் காட்டாமல் மனதைக் கல்லாக்கிக் கொண்டாள் ராதிகா...

இது போர்க்களம்.. அவள் போராளி.. அவனது வார்த்தை அம்புகளுக்குப் பயந்து பின்வாங்கக் கூடாது.. பின் வாங்கவும் முடியாது...

"நிச்சயமாய்.. நீங்க சொன்னதுதான் உண்மை.. அது உங்களுக்கே தெரியும்.. அவர் என்னைப் பெண் கேட்டு பெத்தவங்களோடு என் வீடுதேடி வந்து என்னைப் பெத்தவங்ககிட்ட என்னைப் பெண் கேட்டவர்.. கல்யாணம் பேசி முடிச்சு கல்யாண நாளை உறுதி பண்ணி விட்டுப் போனவர்.. இது எல்லாத்தையும் விட எனக்கு எது நடந்திருந்தாலும் அதைப் பொருட்படுத்தாம என்னை ஏத்துக்கும் மனப்பக்குவமும்.. காதலும் உள்ளவர்.. இது எதையாவது நீங்க செய்தீங்களா..? இதில் ஒன்னாவது உங்ககிட்ட இருக்கா..?"

ராதிகா பதில் கணைகளைத் தொடுத்து விட்டாள்...

ஒரு நொடியில் அவளைத் தொட்டுத் தழுவி குடும்பம் நடத்தியவனை யாரோவாக்கி அவள் நிறுத்தி விட்டதைக் கேட்டவனின் ரத்தம் கொதித்தது...

அவனது வழக்கமான கோபம் பொங்கியெழ அவன் உன்மத்தம் பிடித்தவனானான்..

உன் தேவதையாய் நானிருக்க..
என்தேவனே..! நீ பிரிந்துசென்றாய்..

சொல்லிவிடலாம்.. உன்னைத்தான் நான் காதலித்-தேனென்று ஒரு வார்த்தையில் சொல்லிவிடலாம்...

அந்த ஒற்றைச் சொல்லை ராதிகா சொன்னால் அவன் அதை நம்புவானா..? அவன் தொட்டு விட்டதால் வேறு வழியின்றி வாழ்க்கைப் பிச்சை கேட்டு பொய் சொல்கிறாள் என்று பதிலுக்குச் சொல்லிவிட மாட்டானா..? அப்படி அவன் சொல்லி விட்டால் அந்த ஒற்றைச் சொல்லில் ராதிகாவின் இதயம் இற்று விடாதா..?

ராதிகாவின் காதல் பொய்யானதாக ஆகிவிடக் கூடாது என்பதற்காக.. ராதிகா பொய்யானவளாக அவனிடம் நடிக்க ஆரம்பித்தாள்..

"என்னடி சொன்ன..? அவன் உன்னைப் பெண் கேட்டு வந்தானா..? ஏன் வரமாட்டான்..? நீதான் அவன் பல்லைக்காட்டியதும்.. பதிலுக்கு ஈன்னு சிரிச்சு வைச்சியே.. அப்புறமும் உன்னைப் பெண் கேட்டுவராம இருப்பானா..? அதுவே அன்னைக்கு நான் உன்னைத் தொட்டு முத்தம் கொடுத்தப்போ... என்னவோ வில்லன்

கிட்டயிருந்து தப்பி ஓடின ஹீரோயினைப் போல என்கிட்டயிருந்து தப்பி ஓடினவதானேடி நீ..."

அன்றைய நாளின் நினைவில் ராதிகாவின் இதயம் பூவாக மலர்ந்தது.. முதல் காதலையும்.. முதல் முத்தத்தையும் மறந்தவர் இந்த உலகில் உண்டா..?

அவள் அவனிடமிருந்து தப்பி ஓடினாளாம்...

"போகிறவ சும்மா போகாம என்னை அரைக் கண்ணாலே பார்த்துக்கிட்டே ஓடினயேடி.. அது ஏண்டி..?"

இதாவது உனக்குத் தெரிகிறதே என்றிருந்தது அவளுக்கு...

"முத்தம் கொடுத்தப்போ உன் முகம் மலர்ந்துச்சுடி.. மாறலையே.. அதுதானே என்னைப் போட்டுக் குத்துது.. அப்படியிருந்தவ எப்படிடி அவனைக் கட்டிக்கச் சம்மதிச்ச..?"

ராதிகா பெருமூச்சுடன் அசையாமல் அமர்ந்திருந்தாள்...

இவன் மட்டும் மறுநாளே தொலைந்து போசாமல் அவள் கண்ணில் பட்டிருந்தால் எப்படியிருந்திருக்கும் என்ற நினைவில் அவளுக்கு கண்கலங்கியது...

அப்படி அவன் எங்கேதான் போய் தொலைந்தான் என்பதையும் அவனே சொல்லிப் புலம்பினான்...

"அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக்குன்னு நடுராத்திரி போன் வருதுடி... அவங்களுக்கு நான் மட்டும் தான்.. அவங்களை மறந்து.. வீட்டைமறந்து.. ஊரைமறந்து..

என் தொழில்களை மறந்து.. என்னவோ ரோட்டோர ரோமியோவைப் போல உன் பின்னாடியே ஜிம்மி போல அலைஞ்சேனேடி.. அந்த அளவுக்கு என்னைக் காதல்ங்கிற மாயப்பிசாசு பிடிச்சுக்கிட்டு ஆட்டி வைச்சதுடி.. அதில அம்மாவை நான் மறந்தே போனேனே.."

ராதிகாவிற்குள் அவனது துக்கம் இறங்கியது.. அவள் துயரம் தாளாமல் உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

"நான் உன் பின்னாலே பித்துப்பிடிச்சுப் போய் அலைஞ்சேன்.. நீ என்னை விட்டுப்பிரிஞ்சு நழுவி ஓடின.. உன்னை என் கைக்குள்ள அடக்கிக்க நான் போராடிக்கிட்டு இருந்தப்போ அம்மாவுக்கு சீரியஸா ஆகிருச்சு.. ஊருக்கு ஓடினேன்.. அம்மாவைக் காப்பாத்திட்டேன்.. உடனே சென்னைக்கு வரமுடியல.. அதுக்குள்ள நீ இங்கே அத்தனையையும் நடத்தி முடிச்சிட்ட..."

ஏதோ ஒருவகையில் அவனது துயரம்கூட அவளுக்கு ஆறுதலை அளித்தது.. அவளைத் தொட்டவன் விட்டுப் பிரிந்து சென்றதற்கு மிகச்சரியான காரணம் இருக்கிறது என்பதில் அவள் மனம் ஓர்விதமான நிறைவை அடைந்தது..

"கவிதையாய் வரைஞ்சு தள்ளினேன்டி..."

'இவன் கவிதைகூட எழுதுவானா..?'

ஆச்சரியத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்த ராதிகாவைப் பார்த்தவனின் கண்களில் மின்னல் வந்தது... அந்த மின்னலுடன் அவள் விழிகளை உற்றுப் பார்த்தபடி அவன் கவிதை சொன்னான்...

"குட்டுப் பிசந்து நெ நழுவியதும்..
வீதி வழியே போனகையிலே...
பாதிக் கண்கள் பார்த்ததுவும்..
பார்த்த கண்கள் பேசியதும்..
கோதிமுடித்த குழற் காட்டில் - உன்
கோல மதிமுகம் மலர்ந்ததுவும்...
பேதை வளர்ந்து பெண்ணாகி...
காதல் வளர்ந்து மணமாகி - நீ
மாதர் நடுவே தாயாகி...
அதற்கும் அடுத்து பாட்டியாகி..
தடியுண்டி நிற்கும்போதும் மறையாவாய்...
உன் ரூபகம் என்னும் மணமாகும்..."

ஓர்விதமான உத்வேகத்துடன் அவன் அந்த கவி வரிகளை உச்சரித்தான்... அது உணர்த்திய காதலின் சாரம் நனைந்தும் அதற்கு உரிமை கொண்டாட முடியாமல் அவள் உரிமையற்றும் போனாள்...

இது அவளைப் பிடித்திருக்கும் சாபமா..? கடல்நீர் நடுவே குடிநீர்தேட நேரும் அவலம் மிகக் கொடுமையானது... அதை அனுபவித்த ராதிகாவிற்கு வாய்விட்டு அழவேண்டும் போல இருந்தது...

ஒரு முழுமையான ஆண்மகன் அவளைக் காதலிக்கிறான்.. பதிலுக்கு அவளும் அவனைக் காதலிக்கிறாள்... அவனது காதலை அவள் அறிவாள்.. அவளது காதலை அவன் அறியமாட்டான் என்றால்.. இதைவிடக் கொடுமையானது வேறு எதுவும் இல்லை..

அவனது அந்த ஆழ்ந்த காதலுக்குரியவளாக அவளிருப்பதில் ஓர்விதமான கர்வம் அவளுக்குள் உதயமானது...

"என்னைவிட அவன் எந்தவகையில் உசத்திடி? எதுக்காக அவன் பின்னாலே பித்துப்பிடிச்ச அலையற..? உன்னை நான் தொட்டுவிட்ட பின்னாலேயும் அவனைத் தேடிநீ போகத் துணிஞ்சியின்னா.. எந்த அளவுக்கு உன் மனசில அவன் பதிஞ்சிருக்கனும்..."

அவன் கவிதையை மறந்து பழைய பல்லவியை பாட ஆரம்பிக்க வெறுத்துப் போனாள் ராதிகா...

'உன் தலை...' எரிச்சலுடன் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்...

"ஒன்னும் நேரமாகிடல.. மதிய கிளாஸை முழுங்கிட்டு அவனைப் பார்க்கிற திட்டத்தோட காலேஜை விட்டு வெளியே வந்தவதானேடி நீ..? இந்த லட்சணத்திலதான் இத்தனை வருசமும் படிச்சியா..?"

"எதைவேணும்னாலும் பேசுங்க.. என் படிப்பைப் பத்தி மட்டும் பேசாதீங்க.. என்னையென்ன உங்க

அத்தைமக ரத்தினத்தைப் போல மக்கு பிளாஸ்திரின்னு நினைச்சுட்டிங்களா...?"

"அத்தைமக ரத்தினமா..? யாருடி அது...?"

பாலமுரளிக்கு உண்மையிலேயே யார் அந்த அத்தை மகள் ரத்தினம் என்று பிடிபடவில்லை.. அவன் முகத்திலிருந்த உண்மையைக் கண்டவளுக்கு ஷோபாவின் மேல் பரிதாபம் ஏற்பட்டது...

"ஷோபாதான்.. வேற யாரு...?"

"அவ என் அத்தை மகன்னு யாரு உனக்குச் சொன்னது..?"

"பின்னே..? அவ உங்களுக்கு சித்தப்பா மகளா..?"

"சேச்சே.. உறவு முறையையே மாத்தாதே... அவ வேற சொந்தம்..."

"சொந்தம்ங்கிறதையாவது ஒப்புக்கறிங்களே.. அந்த மட்டிலும் சந்தோசம்..."

"சொந்தத்தை ஒப்புக்கிறதில் என்ன ஒளிவு மறைவு வேண்டிக்கிடக்கு..?"

"அப்ப அவ என்ன சொந்தம்ங்கிறதையும் சொல்ல வேண்டியது தானே..."

"நான் ஒளிச்சு மறைச்சாடி வைச்சேன்..? அதை எப்படி விளங்கச் சொல்றதுன்னுதான் தெரியமாட்டேங்குது..."

"அவ உங்களுக்கு அத்தை மகளா..? சித்தப்பா மகளா..? இரண்டில் ஒன்றைச் சொல்லுங்க..."

"அவ வந்து.. என் அக்காவோட மாமியாருக்கு தங்கச்சி மக..."

"அப்படின்னா..?" ராதிகாவிற்கே புரியவில்லை...

"குழம்புதுல்ல.. இதுக்குத்தான் சொன்னேன்.. விட்டுவிடுன்னு... கேட்கறியா..."

"நிஜமாகவே அவ உங்களுக்கு என்ன முறையாகனும்ன்னு எனக்குத் தெரியனும்..." ராதிகாவின் குரலில் பிடிவாதம் தொனித்தது...

அதையறிந்து கொண்ட பாலமுரளியின் கண்களில் மின்னல் வந்தது...

"எதுக்குடி..?" புருவங்களை உயர்த்தினான்...

"தெரியனும்.. அவ்வளவுதான்..." ராதிகா பிடிவாதமாகச் சொன்னாள்...

அவன் எதிர்பார்த்த பதில் கிடைக்காத ஏமாற்றத்தின் சாயல் அவன் முகத்தில் படர்ந்தது...

"தெரிஞ்சு என்னத்தைக் கிழிக்கப் போற.. என் அக்காவுக்கு அவ சின்ன மாமியா மக... போதுமா..."

"உங்களுக்கு அவ யாரு...?"

"ஏண்டி.. என்னவோ உன் படிப்பைப் பத்திப் பேசினாமட்டும் உனக்கு ரோசம் பொத்துக்கிட்டு வருது..

அறிவுக்கடல்ங்கிற பில்ட் அப்பைக் கொடுக்கிறவ இப்படி அடி முட்டாளா இருக்கிற...?"

"ஹலோ.. சான்ஸ் கிடைச்சிருச்சுன்னு என்னை கலாய்க்கிறீங்களா..?"

"அடி என் அறிவுக்களஞ்சியமே..! என் அக்காவுக்கு அவ சின்ன மாமியா மகன்னா எனக்கு மட்டும் அவ சித்தப்பா மகளாகிப் போயிருவாளா... எனக்கும் அதே சின்ன மாமியாமக உறவுதானேடி வரும்..?"

"சின்ன மாமியான்னா என்ன அர்த்தம்...?"

"இதுகூடத் தெரியாத சின்னப் பப்பாவா நீ...? சின்ன மாமியான்னா சின்ன அத்தைன்னு அர்த்தம்..."

"எனக்கொன்னும் அர்த்தத்தைப் பத்தி நீங்க பாடம் எடுக்க வேணாம்.. இப்பச் சொல்லுங்க.. அவ உங்களுக்கு அத்தை மகள்தானே..."

ராதிகா மடக்கி விட.. அவளது கெட்டிக்காரத்தனத்தை மெச்சும் பாவனையில் உதடு பிதுங்கி தோள் குழுக்கினான் பாலமுரளி...

"பிரமாதம்தான் போ.. ஆமாம்.. அவ எனக்கு அத்தை மகதான்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..."

"எதுவும் சொல்லல... கேட்டேன் அவ்வளவுதான்..."

"சோழியன் குடுமி சும்மா ஆடாதே..."

"அந்தப் பழமொழி உங்களுக்குத்தான்.. எனக்கில்ல.. இப்ப என்ன உத்தேசம்..? இப்படியே

பேசி நேரத்தை கடத்திட்டு நேரமாச்சுன்னு ஜகா வாங்கிக்கலாம்கிற உத்தேசமா..?"

ராதிகா அவனை ஊடுறிவிப் பார்த்தபடி கேட்ட விதத்தில் பாலமுரளி எழுந்து கொண்டான்.. கையில் பிடித்திருந்த கத்தியுடன் ராதிகாவும் எழுந்து நிற்க.. அவன் பார்வை கத்தியின் மீது படிந்தது...

"இதை நீ தலையைச் சுற்றித் தூக்கியெறிய மாட்டியா..?" முகத்தைச் சுளித்தான் அவன்...

"எதுக்கும் இருக்கட்டும்... இதுதான் எனக்கு கைக்காவல்..." ராதிகா உறுதியான குரலில் சொல்லிவிட்டாள்...

"நீ பண்ற அழிச்சாட்டியத்துக்கு உன்னைச் சாவுடி மகளேன்னு விட்டு ஒழிச்சிருக்கனும்.. மனசு கேட்கலைடி.. அதான் நீ ஆடற ஆட்டத்துக்கு தாளம் போட வேண்டியதாயிருக்கு.. வந்து தொலை..."

அவனை நம்பாமல் அவள் பேசியதைக் கேட்ட பாலமுரளி எரிந்து விழுந்தான்... ராதிகா அசைந்து கொடுக்கவில்லை...

"ஹலோ.. இப்படியெல்லாம் நீங்க சலிச்சுக்கிட்டு.. வேண்டாவெறுப்பாய் என்னைப் பெண்கேட்டு வர வேணாம்...."

"வேற எப்படி வரச் சொல்ற...?"

"சிரிச்ச முகமாய் வாங்க..."

"இந்தச் சிரிப்பு போதுமா... ?"

வேண்டுமென்றே பாலமுரளி உதட்டைக் கோணி சிரித்துக்காட்ட...

"இதுக்கு நீங்க சிரிக்காமலே இருந்திருக்கலாம்..." என்றாள் ராதிகா...

"ஏண்டி.. இந்தச் சிரிப்புக்கு என்ன..?" காரில் ஏறுவதற்காக அவளுக்கு கதவைத் திறந்து விட்டபடி அவன் கேட்டான்...

"என் தங்கையும்.. தம்பியும் வில்லங்கம் பிடிச்சவங்க..." காரில் ஏறியபடி அவள் சொன்னாள்...

"உன்னை விடவா..?" என்று கேட்டபடி கார் கதவை மூடியவன் சுற்றிவந்து டிரைவர் சீட்டில் அமர்ந்து காரைக் கிளப்பினான்..

கார் கிளம்பி.. சாலையில் வேகமெடுத்து பறந்தபோது.. 'அப்பாடா..' என்ற விடுதலை உணர்வை அனுபவித்தாள் ராதிகா...

தொலைந்துபோன அவளது வாழ்வை அவள் மீட்டு விட்டாள் என்ற நினைவில் அவளது இமையோரம் கண்ணீர் அரும்பியது..

அதை அவன் கண்டு கொள்ளாமல் இருக்க ஜன்னல் பக்கமாக முகத்தைத் திருப்பி இமை கொட்டி சரி செய்து கொண்டாள்..

"என்னடி.. ஈஸி ஆர் ரோட்டையே வெறிச்சுப் பார்க்கிற..? மகாபலிபுரம் போகமுடியாத ஆத்தாமையா..? அப்படியே ஓடிக்கிட்டு இருக்கிற கார் கதவைத் திறந்து குதிச்சு அவனைத் தேடி ஓடிப் போகனும் போல தோணுதா..?" அவன் ஆரம்பித்து விட்டான்...

'ஒரு செகண்ட் உன் முகத்தைப் பார்க்காம வேற திக்கில நான் பார்த்து தொலைக்கக் கூடாதே.. உடனே ஆரம்பிச்சுருவியே...'

அவள் திரும்பி அவனையே இமைக்காமல் பார்த்தாள்...

அவனது வடிவான முகமும்.. அடர்ந்த மீசையும்.. உயரமான தோற்றமும்.. கம்பீரமான உடலமைப்பும் அவளை வசீகரித்தன...

அவளது பார்வையில் அவன் கண்களில் யோசனை வந்தது..

"அப்படியே அள்ளிப் பருகுகிறதைப் போலவே பார்த்து வைக்கறியே... என்ன விசயம்..? இப்படிப் பார்த்துப் பார்த்துத்தானே என்னைக் கவிழ்த்த..? அது எப்படிடி.. அப்படியே என்மேல ஆசையிருக்கிறவளப் போலவே பார்த்து வைக்கிற..? இந்தப் பார்வையினாலேதானடி உன் பின்னாலே பைத்தியமா அலைஞ்சேன்..?"

அவனைப் பிடித்திருந்ததைப் போல அந்த நொடியில் அவனுடைய அந்தக் கோபத்தையும் அவளுக்கு பிடித்துப் போய் விட்டது.. பிடித்தவன் கையால் சாக நேர்ந்தால் கூட அது வரம்தான்...

உன் கையால் என்னைக் கொன்றுவிடு சந்தோசமாக நான் சாகிறேன்...

அவனது கோபமுகத்தையே காதலுடன் பார்த்துக் கொண்டிருந்தவளின் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான் பாலமுரளி...

'என்ன... இப்படிப் பார்த்து வைக்கிறா..' அவனுக்குள் ஆசை பொங்கியது...

"என்னடி ஆச்சு..?" அவளிடமே அவன் காரணம் கேட்க...

"என்ன.. என்னடி ஆச்சு..?" என்று எரிந்து விழுந்தாள் ராதிகா...

"என்னவோ காலம் காலமா என்னை உருகி உருகி காதலிக்கிறவளைப் போல இப்படிப் பார்த்து வைக்கறியே.. என்ன விசயம்..?"

"ஐயா சாமி.. உங்களைப் பார்க்காம ரோட்டைப் பார்த்தாலும் குதிச்சுஓடப் போறியான்னு கேட்கறிங்க.. உங்களைப் பார்த்தாலும் என்னடி இதுங்கறிங்க.. உங்களை

நம்பி ஒருத்தி காரில் ஏறிக் கூடவந்தா இப்படித்தான் இம்சை பண்ணுவீங்களா..?" சண்டைக் கோழியாய் சிலிர்த்தாள் ராதிகா...

"என்னை நம்பி காரிலேயே கூட வர முடியாதவ.. வாழ்க்கை முழுவதும் எப்படிக் கூட வரப்போகிற..?" அவன் கித்தாய்ப்பாக புருவங்களை உயர்த்தினான்..

"வேணாம்.. விட்டுவிடுங்க.. இப்படியே காரை நிறுத்துங்க.. நான் இறங்கி என் வீட்டைப் பார்த்துப் போய் சேருகிறேன்.." ராதிகா கார் கதவில் கைவைத்தாள்...

"இதை விடவே மாட்டியா..? விட்டால் நீ வீட்டுக்கா போய் சேருவ..? அவனைப் பார்க்க மகாபலிபுரத்துக்குப் போய் சேருவ.. எனக்கு உன்னைத் தெரியாதா..? எதுடா சாக்குன்னு துடிக்கிறவளாச்சே நீ..." அவன் முகம் இறுகினான்...

"இந்த மூஞ்சியோட வந்து பெண் கேட்டா என் வீட்டில் யோசிப்பாங்க..."

முன் பக்க கண்ணாடி வழியாக சாலையை வெறித்தபடி சொன்னாள் ராதிகா...

ஜன்னல் பக்கமாகத் திரும்பினால் குதித்து ஓடப் போகிறாயா என்று கேட்டு வைக்கிறான்.. சரி.. அவன் முகத்தையாவது பார்த்து வைக்கலாம் என்றால் அவனிடம் மயங்கிப் போய் கிடப்பவருக்கு அவன் மேல் ஆசை.. ஆசையாக வந்து தொலைக்கிறது.. அதை

அவளது பார்வை காட்டிக் கொடுத்து விடுகிறது.. அதை அவன் கண்டு கண்டுபிடித்துத் தொலைத்தும் விடுகிறான்.. அதற்கும் ஒரு வியாக்கினத்தை பிட்டுப் பிட்டு வைக்கிறான்...

அவள்தான் என்ன செய்வாள்..? எதற்கு வம்பு என்று ஜன்னல் பக்கமும் திரும்பாமல்.. ஜாக்கிரதையாக அவன் முகத்தையும் பார்க்காமல் சாலையில் பார்வையைப் பதித்தாள்...

"இருக்கிற மூஞ்சியோடதான் வந்து பெண் கேட்க முடியும்... ஏன் இந்த மூஞ்சிக்கென்ன..? உனக்குப் பிடிக்கலையா..?" அவன் புருவங்கள் மீண்டும் உயர்ந்தன...

'எனக்குப் பிடிச்சுத் தொலைச்சிருக்குடா.. உனக்குத்தான் அது புரிஞ்சு தொலைக்கலை...'

"உடனே வாயடைச்சுப் போயிருமே.. அது என்னடி உனக்கு வெள்ளைத் தோலின் மேலே அப்படியொரு மயக்கம்..?"

'உன் கலர்தான் எனக்குப் பிடிச்ச கலருடா மச்சான்.. இதை உன்கிட்ட யாரு சொல்றது..? உன்மேல எதுக்காக இப்படியொரு மயக்கம் வந்து தொலைச்சிருக்குன்னு நான் தவியாய் தவித்துக்கிட்டு இருக்கேன்.. உனக்கு கிண்டலும்.. கேலியுமா இருக்கா..?'

"இதைப் பாருடி.. உனக்காக என் மூஞ்சியை மாத்திக்க என்னால முடியாது.. உன் மன்மத ராஜா

சங்கரைப் போல ஆகனுமுன்னா அதுக்கு நான் பிளாஸ்டிக் சர்ஜரியைத்தான் பண்ணியாகனும்.. அப்படியெல்லாம் அடுத்தவன் மூஞ்சியைப் போல என் மூஞ்சியை ஆக்கிக்கிட்டு அழகுராதி உன்னைக் கல்யாணம் பண்ணிக்கனும்கிற கட்டாயம் எனக்கில்லை.. நான் நானாத்தான் இருக்க முடியும்.. என்ன சொல்ற.. பொண்ணு கேட்டு வரவா.. இல்லை.. இப்படியே திரும்பிப் போகவா..?"

"அதானே பார்த்தேன்.." ஒரு மார்க்கமாக அவனைப் பார்த்தபடி சொன்னாள் ராதிகா...

"எதைப் பார்த்தே..? அப்போ பிடிச்சு ரோட்டைப் பார்த்துக்கிட்டுத்தான வர்ற.. என் மூஞ்சியையா பார்த்த..?"

'இதுதான் விசயமா..?'

"ஹலோ.. என்னைச் சொல்லிக்கிட்டு.. எதுடா சாக்குன்னு நீங்க அலைகிறீங்களா..? தான்திருடன் பிறரை நம்ப மாட்டான்னு சும்மாவா சொன்னாங்க..."

"அது தான் திருடியைப் பத்திச் சொன்னது.. திருடனைப் பத்தி யாரும் சொல்லலை... நீ பழமொழியை மாத்தாதே.."

"ஏன் மாத்தக் கூடாது...? எழுதி வைச்ச ஆண்குலத் திலகமெல்லாம் பெண்களுக்கு ஆயிரம் அடைமொழிகளையும்... பழமொழிகளையும் எழுதிவைச்சுட்டுப் போவீங்க.. அதை அப்படியே நாங்க ஏத்துக்கனுமா..?"

"ஏத்துக்காதே.. தூக்கி தூரப் போட்டுரு.. நீ யாரு..? தொட்டவனை விட்டுட்டு.. வேற ஒருத்தனைக் கட்டிக்க நினைச்சவளாச்சே..."

"நீங்க மட்டும் என்னவாம்... தொட்டவளைக் கட்டிக்கிற கடமையிலிருந்து தப்பிச்சு ஓட நினைக்கிற ஆளாச்சே..."

"அடிச்சுப் பல்லைக் கழட்டி விடுவேன்.. நான் அப்படி ஆளுன்னு நீ கண்டயா..? இப்போ எதுக்காக உன் வீட்டுக்கு வந்துக்கிட்டு இருக்கேன்..?"

"நான் அடுத்தவனைக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுங்கிறதுக்காக வந்துக்கிட்டு இருக்கீங்க.. எனக்காக வரலை..."

ராதிகாவின் வார்த்தைகளில் பொதிந்திருந்த துக்கத்தில் ஓர் கணம் பாலமுரளி மௌனித்தான்... பின் மௌனம் கலைத்துப் பேசினான்...

"கண்ணைச் சுற்றி கருப்புத்துணியைக் கட்டிக்கிட்டு கழட்ட மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்காதே ராதிகா.. நான் இந்த அளவுக்கு கீழே இறங்கிப் போனது உனக்காகத்தான்.. அதை முதலில் புரிஞ்சுக்க..."

"நான் புரிஞ்சுக்கிறது இருக்கட்டும்.. முதலில் சிரிச்ச முகமாய் என் வீட்டுக்கு நீங்க வரனும்ங்கிறதை நீங்க புரிஞ்சுக்கங்க.. அதை விட்டுவிட்டு.. என் மூஞ்சி இப்படித்தான் இருக்கும்ன்னு வியாக்கினம் பேசி என்னை நோகடிக்க வேணாம்..."

"சிரிப்பு வந்தாத்தானே சிரிக்க முடியும்...?"

"இப்ப என்ன.. துயரமா வந்திருக்கு..? இதுக்குத்தான் நான் சொன்னேன்.. இஷ்டமில்லாம என்னைப் பெண் கேட்டு வர வேணாம்ன்னு... அதைச் சொன்னாலும் குத்தமுன்னு என்மேல பாயறிங்க..."

"இஷ்டமில்லாமலா உன்னைத் தொட்டேன்..?"

"அப்புறமும் எதுக்காக உம்முன்னு முகத்தை வைச்சுக்கனும்..?"

"நீ உம்முன்னு ரோட்டைப் பார்த்துக்கிட்டு.. இவன் கிட்டே தாலி வாங்கிக்க வேண்டிய விதி வந்திருச்சேன்னு நொந்துக்கிட்டே வந்தா என்மூஞ்சி.. சிரிச்ச மூஞ்சியாவா இருக்கும்..?"

'இவன் இப்படி நினைக்கிறானா..?'

ராதிகா சட்டென்று திரும்பி அவன் முகத்தைப் பார்த்தாள்... அதே நொடியில் அவனும் அவளைப் பார்த்தான்.. பார்வைகள் பின்னிப் பிணைந்தன.. அவள் பார்வை காதலைச் சொல்லியது.. அவன் பார்வை அதைப் புரிந்து கொள்ள முடியாமல் தவியாய் தவித்தது...

"ராதிகா..?" அவன் கேள்வியாக அழைத்தான்...

"உங்க முகத்தைப் பார்க்காம இனி யார் முகத்தை நான் பார்ப்பேன்..?"

"ஏய்ய்..."

"என்னை நீங்க தொட்டுட்டிங்க... உங்க கூட நான் வாழ்ந்தால்தான் அது வாழ்க்கையா இருக்கும்.. சங்கர் கூட வாழ்ந்தா.. அது அவர் போட்ட பிச்சையாக இருக்கும்.. வாழ்நாள் பூராவும் ஒரு பிச்சைக்காரியாய் வாழ நான் ஆசைப்படுவேனா..?"

"என் பெண்டாட்டியை நான் விட்டுக் கொடுப்பேனா..?"

"எனக்கு இது போதும்..."

"எனக்கும் இது போதும்..."

பாலமுரளியின் முகத்தில் கடினம் மறைந்து.. ஓர்விதமான தெளிவுடன் கூடிய மென்மை வந்திருந்தது...

"ஆனாலும் நீ அவனைத் தேடிக் கிளம்பினயேடி..."

"வேற வழி...? என் நிலைமையை உங்ககிட்டச் சொல்லிட்டேன்... ஒரு நாட்டைக் காப்பாற்ற ஒரு நகரம் அழியலாம்... ஒரு நகரைக் காப்பாற்ற ஒரு கிராமம் அழியலாம்... ஒரு கிராமத்தைக் காப்பாற்ற ஒரு குடும்பம் அழியலாம்.. ஒரு குடும்பத்தைக் காப்பாற்ற ஒரு நபர் அழியலாம்.. இது உங்களுக்கும் தெரியும் தானே.. என் குடும்பத்தைக் காப்பாற்ற நான் அழியத் துணிஞ்சேன்.." ராதிகா வாய்க்கு வந்ததை சொல்லி வைத்தாள்...

சங்கருடனான திருமணத்தை தன் அழிவென்று ராதிகா சொல்லி விட்டதில் பாலமுரளிக்கு பெருத்த மனநிறைவு ஏற்பட்டது...

"அது உனக்கு அழிவாடி..?"

"பின்னே.. வேறென்ன..? நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன்.. இதுக்கப்புறம் உங்க இஷ்டம் தான்..."

"என் இஷ்டம் நீதான்..."

"அதை இந்த சிரிச்ச முகத்தோடயே வந்து என் வீட்டார் முன்னாலே சொல்லுங்க..."

"உன் வீட்டாளுக என்ன பெரிய இவங்களா..? இப்படி பயமுறுத்தற...?"

"உங்களுக்குத் தெரியாது.. கீதா இருக்கிறாளே.. அவ செம விவரம்.. ஒரே பார்வையிலேயே உங்க மனசை படம் பிடிச்சுருவா..."

"அதுதான் எனக்குத் தெரியுமே.. அன்னைக்கு நான் பார்த்தேனே... ஆனாலும் அழகான மைத்துனியைப் பத்தி எப்போற்பட்ட டிப்ஸை அள்ளி வீசுற... ஆனாலும் உனக்கு பரந்த மனசுடி ராதிகா.. நீதாண்டி என் தர்ம பத்தினி..."

"கொலையும் செய்வாள் பத்தினின்னு கேள்விப் பட்டிருக்கீங்களா..."

"ஊஹும்.. கணவனே கண்கண்ட தெய்வம்ன்னு என் அம்மா சொல்கிறதைத்தான் கேள்விப்பட்டிருக்கேன்.."

"இப்ப காலம் மாறிப் போச்சு.. நான் சொன்ன ரகமாய்த்தான் நானிருப்பேன்.. அதனால..."

"அதனால..?"

"நீங்க பத்திரமா இருந்துக்கங்க..."

"எதுக்குடி வம்பு..? உன் தங்கச்சிகிட்ட இருந்து இரண்டடி தள்ளியே நிக்கிறேன்.. போதுமா..?"

"போதாது.. இருநூறு அடி தள்ளி நிக்கனும்..."

"பார்க்கலாம்.. உன் தம்பி படுஸ்மார்ட்டாச்சே..."

"அவன் கீதாவைவிட படுவிவரம்.. லேசர் பார்வை அவனுக்கு..."

"மைத்துனியை கரெக்ட் பண்ணினாத்தான் தப்பு... மச்சினனை கரெக்ட் பண்ணினா தப்பே இல்லைடி... நான் பார்த்துக்கறேன்..."

"அப்புறம் அம்மா..."

"அவங்க தங்கமாச்சே.. அறிவுன்னா அறிவு.. அப்படியொரு அறிவு..."

"அது உங்களுக்கு... வீட்டிலே அவங்க லேடி ஹிட்லர்.."

"அதானே.. பார்த்தேன்.. அவங்களுக்கும் பட்டப் பெயரா..? வீட்டில்கூட அராஜகம் பண்ணுவியாடி..."

"அதில உங்களுக்கு எதுக்கு இத்தனை வருத்தம்..?"

"எனக்கும் அம்மா இருக்காங்க.. அக்கா.. அக்கா குடும்பம்ன்னு இருக்கு.. உன் பட்டப் பெயரில இருந்து அவங்க தப்பிக்க வேணாமா..?"

"வருமுன் காக்கறிங்க.. பிரமாதம் போங்க..."

"உன் அப்பா அன்னைக்கே என்கிட்ட முறைப்பாய்த்தான் பேசினார்..."

"அவர் கண்டிப்பானவர்.. எதையும் யோசிச்சுத்தான் முடிவு சொல்லனும்பார்..."

"சங்கரைப் பத்தி மட்டும் யோசிக்காம முடிவு சொல்லிட்டாரா..?"

"ஒரு டிப்ஸ் சொல்லவா..?"

"சொல்லுடி.. நான் யாரு.. உன் புருசன்.. எனக்கு நீ டிப்ஸ் தராம வேற யாரு தருவா..."

"ஐஸ் வைக்க வேணாம்.. அப்பாவுக்கு சங்கரோட பேரண்ட்ஸை பிடிக்காது..."

இந்தத் தகவலில் பாலமுரளியின் கண்கள் ஒளிர்ந்தன...

"அட.. அருமையான மாமனாரா இருக்காரே.. அப்புறமும் எப்படி சங்கருக்கு பொண்ணு கொடுக்கச் சம்மதிச்சார்..?"

"அம்மாவுக்கு நல்ல இடம்ங்கிற எண்ணம்..."

"நானும் நல்ல இடம்தாண்டி..."

"யாரு இல்லேன்னு சொன்னது..?"

"கூடுதலா நீயும்.. நானும் காதலிக்கிறோம்கிற பொய் வேற இருக்கு..."

பாலமுரளி குத்தலை ஆரம்பிக்க.. அதற்கும் ஒரு பதிலை வைத்திருந்தாள் ராதிகா...

"நான் உங்களைக் காதலிக்கிறது உண்மையோ.. பொய்யோ... சங்கரைக் காதலிக்கலை.. அது உண்மை.."

"இதை என்னை நம்பச் சொல்கிறியா..? சங்கரைப் பத்தி நீ பேசின பேச்சு.. என் செல் போனில் இருக்கு..."

"என்ன பேசினேன்..? அவரைக் காதலிக்கிறேன்னு ஒரு வார்த்தை பேசியிருக்கேனா..? கல்யாணம் பண்ணிக்கப் போகிறவரின் பெருமைகளைப் பத்திப் பேசினேன்.. அதை எல்லாப் பொண்ணுகளும்தான் பேசுவாங்க..."

"அவன் உன்னைக் காதலிக்கிறதாய் சொன்னயே.."

"அதை இல்லைன்னு யாரு சொன்னது..? நான் அவரைக் காதலிக்கிறேன்னு சொல்லலையே..."

"என்னதாண்டி சொல்ல வர்ற..?"

"எனக்கு சங்கர் மேல காதல் இல்லை.. அவர் மேல மரியாதை இருக்கு.. நல்ல அபிப்ராயம் இருக்கு..."

"அது போதாதா..?"

"எங்க வீட்டிலே அவருக்குத்தான் என்னைக் கொடுக்கணும்னு முடிவு பண்ணிட்டாங்க.. அவர் நல்லவராய் இருக்கிறார்... என்னைக் காதலிக்கிறவராய் இருக்கிறார்.. நானும் இப்படி இடத்திலே கல்யாணம் பண்ணிக்கப் போகிற பொண்ணுக எப்படிப் பேசுவாங்களோ... அதையே பேசினேன்.. இதில் ஒன்னும் தப்பு இருக்கிறதா எனக்குத் தெரியலை..."

"உனக்கு எதுவுமே தப்பாத் தெரியாது..."

குற்றச்சாட்டை.. கோபமே இல்லாத குரலில் சொன்னான் பாலமுரளி...

உனை கைபிடிக்கும் நாளெதியண்ணி...
காத்திருக்கும் எந்தன் மனம்...

பெரிய அளவில் மாற்றம் வராவிட்டாலும்.. பாலமுரளியின் மனதில் லேசான மாற்றம் ஏற்பட்டிருந்தது..

ராதிகாவின் அப்பாவுக்கு சங்கரின் பெற்றோரைப் பிடிக்காது.. சங்கர்தான் ராதிகாவைக் காதலித்திருக்கிறான்... ராதிகாவிற்கு அவன்மேல் நல்ல அபிப்ராயம்தான்... காதலில்லை...

இவை இரண்டும் அவனது உலர்ந்த மனநிலையில் சிறு மழைத்தூறல்களாக விழுந்தன...

ராதிகாவின் வீடு இருந்த தெருமுனையில் அவனது கார்திரும்பியது.. ராதிகா லேசான பதட்டம் கொண்டாள்..

அவளது நடுங்கிய விரல்கள் அவனது மனநிலையைக் காட்டிக் கொடுத்தன...

பாலமுரளியின் இடது கரம்.. அவளது நடுக்கம் கொண்ட வலதுகரத்தின் மீது படிந்தது.. ராதிகா கலக்கம் கொண்டே விழிகளுடன் அவனை ஏறிட்டாள்..

"பயப்படாதே..." என்றான் அவன்..

"அவங்களுக்கு எதுவும் தெரிந்து விடக்கூடாது..." கம்மிய குரலில் கோரிக்கை வைத்தாள் ராதிகா...

"தெரிய விடமாட்டேன்..." அவன் வாக்குக் கொடுத்தான்...

"அவங்களுக்கு மட்டுமில்லை.. வேற யாருக்குமே தெரியக் கூடாது..." ராதிகாவின் விழிகளில் இருந்த இரு நீர் மொட்டுக்கள் உதிர்ந்தன...

"சங்கரிடம் இதைச் சொல்லப் போனவ.. இந்த பயம் பயப்படறதை நினைச்சாத்தான் ஆச்சரியமாயிருக்கு.." குற்றம் சாட்டும் பாவனையுடன் சொன்னான் பாலமுரளி...

"அதுவேற.. அதோடு.. அதுதான் நடக்காம போயிருச்சே..."

"அதில உனக்கு வருத்தம் போல..."

"இல்லைன்னு ஏற்கனவே சொல்லிட்டேன்..."

"இந்த அளவுக்கு நீ பயப்படத் தேவையில்லை.. நடந்தது உனக்கும்.. எனக்கும் மத்தியில் நடந்த ரகசிய

நிகழ்வு.. அது நமக்கு மட்டும்தான் சொந்தம்.. அதை நான் வெளியில் சொல்வேன்னு எப்படி நினைச்ச..?"

"என் வீட்டுக்குத் தெரிஞ்சு அவங்க தாங்க மாட்டாங்க.."

"தெரிய விடமாட்டேண்டி.. அதுக்கு மேலே ஏன் பேசற..? வா... நடக்கிறதைப் பார்ப்போம்..."

"எனக்கென்னவோ.. திக்குதிக்குன்னு இருக்கு..."

"நானிருக்கேன்.. பயப்படாதே..."

பாலமுரளியின் கரம்.. அவள் கரத்தை இறுக்கிப் பிடித்து அழுத்தியது... இருந்தும் அவளது நடுக்கம் குறையவில்லை... வீடு வந்து விட்டது.. காரை விட்டு இறங்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தாள் ராதிகா...

'இனி தப்பிக்க முடியாது...'

எது வந்தாலும் எதிர்கொள்ள வேண்டிய சூழலை மனதில் கொண்டவளாய் வரவழைத்துக் கொண்ட தைரியத்துடன் காரைவிட்டு இறங்கினாள் ராதிகா...

"வா..." பாலமுரளி அவளை அழைக்க.. தயக்கத்துடன் வாசல் கேட்டைத் திறந்து உள்ளே பிரவேசித்தாள்...

"என்னராது.. காலையிலே ஸ்கூட்டியில் போன.. சாயங்காலம் காரில வந்து இறங்குற..? யார் இவர்..? ஓ..

அன்னைக்கு நைட் உன்னை டிராப் பண்ண வந்து லேடி ஹிட்லர்கிட்ட மாட்டிக்கிட்ட ஜென்டில் மேன்தானே... இவரை எங்கே பிடிச்ச...?"

வாசலில் நின்று கொண்டிருந்த கீதா.. புருவங்களை உயர்த்தி கேள்விக் கணைகளை தொடுக்க.. பாலமுரளி ராதிகாவை அர்த்தத்துடன் பார்த்துப் புன்னகைத்தான்...

'இவ சொன்னது சரிதான்... மைத்துனி செம விவரம்தான்...'

"ஹலோ.. என்னவோ கடலில் போய் மீனைப் பிடிச்சு கொண்டு வந்ததைப் போல.. உங்க அக்காகிட்ட எங்கே பிடிச்சன்னு விசாரிக்கறிங்களே.. என்னைப் பார்த்தா உங்களுக்கு எப்படித் தோணுது...?"

இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டு ராதிகாவின் பலத்த கண்டனப் பார்வைக்கு ஆளானான் பாலமுரளி...

'ஏன் இப்படி பொசுக்குற மாதிரி பார்த்து வைக்கிறா..'

ஏன் அவள் அப்படிப்பட்ட பார்வையை பார்த்தாள் என்பது கீதாவின் அளவெடுக்கும் பார்வையை பார்த்த பின்தான் அவனுக்குப் புரிந்தது...

தள்ளி நின்று அவனை மேலும் கீழுமாகப் பார்த்த கீதாவின் கண்களில் சுவராஸ்யம் வந்திருந்தது..

அதைத் தாள முடியாமல் பல்லைக் கடித்தாள் ராதிகா.. தங்கையின் மனதில் ஓடும் எண்ணவோட்டத்தை

அவளால் அனுமானிக்க முடிந்தது.. அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பது அவளுக்கு தெளிவாகத் தெரிந்தது...

அவள் நினைத்ததைப் போலவே வாய்திறந்து.. உதடுகளைக் குவித்து.. கண்களை அகல விரித்து...

"வாவ்.." என்றாள் கீதா...

ராதிகாவின் பார்வை பாலமுரளியைச் சுட்டது.. அது போதாது என்று...

"போதுமா..?" என்று வேறு கேட்டுவைத்தாள் அவள்..

அவள் எதைப் போதுமா என்று கேட்கிறாள் என்று தெரியாமல் அவன் குழம்பிப் போனான்.. அவளிடம் சந்தேகமும் கேட்டான்...

"இதுக்குத்தானே ஆசைப்பட்டிங்க..." என்றாள் அவள்..

"எதுக்கு ஆசைப்பட்டேன்..?" பாலமுரளிக்கு இன்னமும் விளங்கவில்லை...

"வரும்போதே படித்துப் படித்துச் சொன்னேனா இல்லையா...?"

"எதைப்பத்தி...?"

"இவ வாயைப் பத்தி.. தெரிஞ்சிருந்தும் வாயைக் குடுக்கறிங்களே..."

அவர்கள் வழக்கடித்துக் கொண்டிருக்கையில் கீதா குலுக்கிட்டாள்...

"ராது இது அநியாயம்.. அவர் வாயை எங்கே கொடுத்தார்..?"

"அது வேற உனக்கு குறையா..?"

"என்மேல ஏண்டி பாயற..?"

"அவரைப் பார்த்து எதுக்குடி 'வாவ்'ன்னு வாளைப் பிளக்கிற.."

"அவர்தானே அவரைப் பார்த்தா எப்படித் தோணுதுன்னு கேட்டார்... வாட் எ ஹேண்ட்சம் மேன்னு தோணுது ராதிகா.. அதைச் சொன்னால் தப்பா..?"

அவள் ராதிகாவிடம் நியாயம் கேட்க...

"தப்பேயில்லை..." என்று ஊடே வந்து நியாயம் வழங்கினான் பாலமுரளி...

"உங்களை..." ராதிகா பல்லைக் கடித்தாள்...

"அதுசரி ராதிகா.. இவர் காரில நீ எப்படி வந்த..?" விட்ட விசாரனையை மீண்டும் ஆரம்பித்தாள் கீதா...

"இங்கேயென்ன மாநாடு நடக்குது..?" என்று கேட்டபடி அங்கே வந்த சுந்தர்... பாலமுரளியைப் பார்த்தான்.. காரைப் பார்த்தான்.. பின் ராதிகாவைப் பார்த்தான்...

'பார்வையெல்லாம் பலமாயிருக்கு... பொடிப்பயலா இருந்தாலும் மச்சினன் சரியான வெடிப்பயலா இருக்கானே.. நம்ம ஆளு இவனையும் சரியாத்தான் கணிச்சு வச்சிருக்கா...'

"என்னக்கா.. காரிலயா நீ வந்த..?" எடுத்த எடுப்பில் கேட்டான் சுந்தர்...

கீதாவைப் போல சுற்றி வளைக்காமல் நேரடியாகக் கேட்ட அவனின் தைரியமும்.. புத்திசாலித்தனமும் பாலமுரளியை வசீகரித்தன...

"ஆமாம்டா..." ராதிகா தயக்கத்துடன் சொன்னாள்...

"சார் அன்னைக்கு உன்னை வீட்டில் டிராப் பண்ணினவர் தானே..." அடுத்த கேள்வி அவனிடமிருந்து புறப்பட்டது..

"ம்ம்ம்..."

"அன்னைக்குத்தான் இருட்டிருச்சு.. உனக்கு ஆட்டோ கிடைக்கலை... நீ ஸ்கூட்டியையும் எடுத்துட்டுப் போகலை.. இன்னைக்கு என்ன ஆச்சு..? வெளிச்சம் இன்னும் இருக்கு.. காலையில நீ ஸ்கூட்டியிலதான் காலேஜிக்குப் போன.. அப்புறம் எதுக்காக இந்த கார் சவாரி..?"

என்னவோ பெரிய மனிதனைப் போல தோரணையுடன் அவன் கேட்க... விளக்கம் சொல்ல

முடியாமல் கைகளைப் பிசைந்து கொண்டிருந்த ராதிகாவைப் பார்க்க பாலமுரளிக்கு வேடிக்கையாக இருந்தது...

"அடேங்கப்பா.. விசாரணைக் கமிசனெல்லாம் பலமாயிருக்கு..." என்றான்...

"உங்களுக்கென்ன சார்.. நீங்க பாட்டுக்கு டிராப் பண்ணிட்டுப் போயிடுவீங்க... அக்கம் பக்கத்தில் என்னைத்தானே கூப்பிட்டு விசாரிப்பாங்க.. இரண்டு அக்காக்கள் கூடப் பிறந்தவனுக்கு ஆயிரம் கவலைகள்.. அதைப்பத்தி உங்களுக்கென்ன தெரியும்..?"

"கொஞ்சம்.. கொஞ்சம் தெரியும்.. ஏன்னா... நானும் ஒரு அக்காவுக்கு தம்பிதான்..."

"அப்ப.. என் கவலை உங்களுக்குப் புரியும்ன்னு நினைக்கிறேன்..."

"நல்லாவே புரியுது...."

"அதனாலதான் சொல்றேன்.. இந்த டிராப் பண்ற வேலையை நீங்க விட்டுவிட்டா நல்லது..."

"யாருக்கு..?"

"எங்களுக்குத்தான்.. பின்னே உங்களுக்குன்னா சொல்லுவேன்..?"

"அதானே பார்த்தேன்..."

பாலமுரளி இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தபோது யதேச்சையாக அந்தப் பக்கம் வந்த ராஜேஸ்வரி அவனைப் பார்த்தாள்.. புருவங்களை உயர்த்தினாள்...

பிள்ளைகள் வீட்டுக்குள் இல்லாத சூழலில் மனைவியை தைரியமாக ரசித்துக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி அவளது புருவங்கள் உயர்ந்ததில் வெகுவாக கவலைப்பட்டுப் போனார்...

அந்த வீட்டின் அதிகார மையமான ராஜேஸ்வரியின் புருவ உயர்வு சாதாரணமான ஒன்றல்ல என்று அனுபவசாலியான அவருக்கு மிக நன்றாகவே தெரியும்...

"என்னடி ராஜி...?" அவர் மனைவியை விசாரித்தார்...

"அன்னைக்கொருநாள் நம்ம ராதிகா அவ பிரண்டோட பர்த்டே பார்ட்டிக்கு போகிறேன்னு சொல்லிட்டுப் போனாள்ல..?"

"அதுக்கென்ன இப்ப..?"

"அன்னைக்கு அவளை வீட்டில விட ஒருத்தர் வந்திருந்தாரில்ல...?"

"ஆமாம்... அவருக்கென்ன..?"

"அவர் வந்திருக்கார்... கூடவே ராதிகாவும் வந்திருக்கா..."

"இவ காலேஜீக்குத்தானே போனா..?"

"அதுவும்... ஸ்கூட்டியில போனா.. இப்ப ஸ்கூட்டியில வராம அவர்கூட காரில் வந்து இறங்கியிருக்கா... என்னன்னு தெரியலை..."

அதற்கு மேலும் பொறுமையாக அங்கே அமரமுடியாமல் கிருஷ்ணமூர்த்தி எழுந்து வாசல்பக்கம் போனார்...

கந்தரின் தீவிரமான விசாரணைக்கு ஆளாகியிருந்த பாலமுரளி... அவரைக் கண்டதும் தப்பிக்கும் மார்க்கம் கண்டவனாக முகம் மலர்ந்தான்...

"வணக்கம் சார்..." அவன் கரம் குவிக்க...

"வணக்கம்... வாங்க..." என்று வரவேற்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார் கிருஷ்ணமூர்த்தி...

பாலமுரளி வீட்டுக்குள் நுழைந்து.. கிருஷ்ணமூர்த்தி காட்டிய சோபாவில் அமர்ந்தான்... அவனுக்கு எதிரே அமர்ந்த கிருஷ்ணமூர்த்தி ராதிகாவின் முகத்தையே கூர்ந்து பார்த்தார்... அதில் தெரிந்த சஞ்சலம்.. அவர் மனதை சலனப்படுத்தியது... பாலமுரளியின் வரவில் ஏதோ உள் நோக்கம் இருப்பதாக அவரது ஆழ் மனதிற்கு தோன்றியது...

ராஜேஸ்வரி காபியுடன் வந்தாள்...

"வாங்க தம்பி..." என்றபடி அவனிடம் காபியை நீட்டினாள்...

"தேங்க்ஸ்..." அவன் காபியை உறிஞ்ச ஆரம்பித்தான்...

அவனுக்குத்தெரியும்.. அடுத்த விசாரணையை ராஜேஸ்வரி ஆரம்பிப்பாள் என்று.. அவளும்

"அப்புறம் தம்பி..." என்று ஆரம்பித்தாள்...

"சொல்லுங்க..."

"ராதிகாவை நீங்க எங்கே பார்த்தீங்க...? அவ ஸ்கூட்டி என்ன ஆச்சு...? ரிப்பேரா..? வழியில் நீங்க பார்த்து உதவிக்கு வந்திங்களா..? அவ ஸ்கூட்டியை மெக்கானிக் ஷாப்பில விட்டிருக்கிங்களா..?"

மற்றவர்கள் அடுத்தடுத்து தொடுத்த கேள்விகளை... ஒரே வீச்சில் கேட்கும் ராஜேஸ்வரியின் சாமர்த்தியம் அன்றுபோல இன்றும் பாலமுரளியைக் கவர்ந்தது...

'சும்மாவா என் ஆளு லேடி ஹிட்லருன்னு பெயர் வைச்சிருக்கா....'

அவன் காலிக்காபிக் கோப்பையை எதிரிலிருந்த டீப்பாயில் வைத்து விட்டு நிமிர்ந்து அமர்ந்தான்.. ராஜேஸ்வரியின் முகத்தை நேர்கொண்ட பார்வை பார்த்தபடி நிதானமாக பேச ஆரம்பித்தான்...

"ராதிகாவை நான் வழியில் பார்க்கலை.. இன்னைக்கு நாங்க இரண்டுபேரும் சேர்ந்து உங்க வீட்டுக்கு வருகிறதா இருந்தது... அதனால என்காரில் ஏறி அவ வந்திட்டா..."

ராதிகாவை வெகு உரிமையுடன் இயல்பாக 'அவள்.. இவள்...' என்று அவன் குறிப்பிட்டதில் ராஜேஸ்வரி திடுக்கிட்டுப் போனாள்...

'இதென்ன... கிணறு வெட்டாமலே பூதம் கிளம்புது...'

சங்கரைப் போன்ற கோடீஸ்வரன் வீடு தேடிவந்து பெண் கேட்டுவிட்டுப் போயிருக்கும் இந்த வேளையில் பாலமுரளியின் வரவையும்.. பேச்சையும் அவள் அவ்வளவாக ரசிக்கவில்லை... அவள் மனதில் கலவரம் குழ்ந்தது...

"உங்களை எங்களுக்கு அவ்வளவாத் தெரியாது தம்பி..."

"ராதிகாவுக்கு என்னை நல்லாவே தெரியும்..."

"அவ வீட்டில் சொல்லலை..."

"அதைச் சொல்லத்தான் நாங்க சேர்ந்து வந்திருக்கோம்..."

என்ன சொல்லப் போகிறீர்கள் என்ற கேள்வியை ராஜேஸ்வரி கேட்கவில்லை... அங்கே எள் விழுந்தால் கூடக் கேட்கும் அளவில் அமைதி வந்திருந்தது... கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் சிந்தனை படிந்திருந்தது... கீதாவின் கண்களில் எதையோ அறிந்து கொண்ட தெளிவு தெரிந்தது.. கந்தர் கைகட்டி இமைக்காமல் பாலமுரளியையே பார்த்துக் கொண்டிருந்தான்...

அனைவரும் அவன் பேச்சை மட்டுமே செவிமடுத்துக் கொண்டிருக்க.. பாலமுரளி... அந்த நிசப்தத்தைக் கிழித்தான்...

"நானும் ராதிகாவும் ஒருத்தரையொருத்தர் உயிருக்குயிராய் காதலிக்கிறோம்... எனக்கு அப்பா இல்லை... அம்மா மட்டும்தான்.. ஒரே அக்காவை திருநெல்வேலியில் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்-கோம்... குடும்பத்தோடு பெண் கேட்டு வருவதா இருந்தேன்.. அம்மாவுக்கு திடீர்ன்னு உடம்பு சரியில்லாம போச்சு... அவங்களைக் கவனிச்சுக்கிட்டு இருந்தப்போ இங்கே சங்கர் பெண் கேட்டு வந்திட்டார்... ராதிகா உடனே எனக்குப் போனில் தகவல் சொன்னா... அம்மா ஹாஸ்பிடலில் இருந்த அந்த நிலைமையிலே என்னாலே எதுவும் செய்ய முடியல.. இப்ப அம்மாவை வீட்டுக்கு கூப்பிட்டுக்கிட்டு வந்திட்டோம்.. நிலைமை சரியானதினால நான் முதல்ல உங்ககிட்ட பேசிட்டு அப்புறமாய் குடும்பத்தோட வந்து பெண் கேட்கலாமுன்னு கிளம்பி வந்தேன்..."

பாலமுரளி பேசப்பேச.. கிருஷ்ணமூர்த்தி மகளின் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தார்...



நீ பார்க்கும் சிறுபார்வைக்காக...
இந்த ஜென்மம் முழுதும் காத்திருப்பேன்...

பாலமுரளியின் வாய் உதிர்த்த வார்த்தைகளைக் கேட்பதைவிட ராதிகாவின் முகம் பிரதிபலித்த உணர்வுகளை அளப்பதில் கவனமாக இருந்தார் கிருஷ்ணமூர்த்தி...

அவருக்குத்தான் தெரியும்.. என்று சங்கர் அவளைப் பெண் கேட்டு வந்தானோ.. அன்றிலிருந்துதான் ராதிகாவின் கண்களில் கவலை குடிகொண்டது.. அவளது துருதுருப்பான முகம் பொழிவிழந்து போனது.. சதா ஏதோ ஒரு யோசனையில் மனதைப் போட்டு உழட்டிக் கொண்டிருந்தாள்... அடிக்கடி தனிமையை நாடினாள்...

'இதனால் தானா...'

மகளின் மனதிலிருந்ததைக் கண்டு கொள்ள முடியாமல் தவித்த கிருஷ்ணமூர்த்திக்கு சிக்கலின் நூல் முனை கிடைத்து விட்டதெனத் தோன்றியது...

'பாவம்.. காதலை வெளியில் சொல்ல முடியாமல் அல்லாடியிருக்கிறாள்.. சொன்னால் அவனைப் பெண்

கேட்டு வரச் சொல்லுன்னு ராஜி சொல்லியிருப்பா.. இந்தப் பையனின் அம்மா ஹாஸ்பிடலில் கிடந்த அந்த நிலைமையில இவங்களாலே என்ன செய்திருக்க முடியும்..?'

அவர் நினைத்ததைப் போல ராஜேஸ்வரி நினைக்கவில்லை.. சங்கரின் சம்பந்தம் கைநழுவிப் போவதில் அவளுக்கு உடன்பாடில்லை.. அதனால் பாலமுரளியை மடக்கும் வகையில் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தாள்...

"எங்க வீட்டுப் பொண்ணுக இந்தக் காதல்.. கத்தரிக்காய்ன்னு விழ மாட்டாங்க தம்பி..."

இதைக் கேட்ட கீதா.. ராதிகாவின் காதினில் சன்னமாக முணுமுணுத்தாள்..

"இப்படிச் சொல்லிக்கிட்டே இருந்தாத்தான் நாம அந்தக்காதலில் விழ மாட்டோம்கிற மூட நம்பிக்கை அம்மாவுக்கு.. ஆல்ரெடி நீ விழுந்திட்ட... அடுத்து நான் விழத்தான் போறேன்.. இருந்தும் விடாம இதையே பிடிச்சுத் தொங்கிக்கிட்டு இருக்காங்க பாரேன்..."

'நான் பயந்ததைப் போலவே இவ ஆரம்பிச்சிட்டாளே...'

"ஏய்.. ப்ளஸ்டூ படிச்சிக்கிட்டு காதலைப் பத்திப் பேசறயா..."

"அதை நீ சொல்லாதே..."

"ஏடகூடமாய் பேசிவைக்காதேடி..."

"எதிர்த்த வீட்டுத் தடியனையும்.. பக்கத்து வீட்டு முரடனையும் கன்ஸிடர் பண்ணிடுவேன்னு நினைக்கறியா..? என் ரேன்ஜே வேற..."

"என்னடி கீது வயித்தில் புளியைக் கரைக்கிற..."

"கவலையே படாதே ராது.. யார் கண்டது.. கல்யாணத்துக்குப் பின்னாலே எனக்கு வருகிற ஹஸ்பெண்டை நான் காதலிக்க ஆரம்பிச்சாலும் ஆரம்பிக்கலாம்.. ஹஸ்பெண்ட்மேல காதல் வரக்கூடாதுன்னு என்ன சட்டமா இருக்கு...?"

"என்னமோ போடி கீதா.. நீ வாயைத் திறந்தாலே பக்கு.. பக்குன்னு இருக்கு.. என்னைப் பார்த்து நீயும் காதல்... கீதல்ன்னு ஆரம்பிச்சேன்னு வையய்யி... லேடி ஹிட்லர் உன்னை விட்டுவிடுவாங்க.. என்னைத்தான் பொலி போட்டிருவாங்க.. காப்பாத்துடி..."

"இப்ப உன் காதலை அம்மா காப்பாத்தறாங்-களான்னு பாரு..."

கீதாவின் அறிவுறுத்தலில் கீதாவை மறந்து.. ராஜேஸ்வரியின் பக்கம் கவனத்தை திருப்பினாள் ராதிகா...

"நாங்க காதலிக்கிறோமே அத்தை..." பாலமுரளி போட்டுத்தாங்க...

"சபாஷ்..." என்றாள் கீதா...

"உன் ஆள் அம்மாவை அத்தையாக்கிட்டாரு ராது.. படா தைரியசாலிதான்..." என்று சிலாசிக்க வேறு செய்தாள்...

இவனின் தைரியத்தின் முழு அளவைப் பற்றி அறிந்தால் இவள் என்ன சொல்லுவாள் என்ற நினைவு வர ராதிகா மௌனித்தாள்...

"என்னது அத்தையா..?" ராஜேஸ்வரியின் முகம் விளக்கெண்ணையைக் குடித்ததைப் போலானது...

"ஆமாம் அத்தை.. எவ்வளவு நேரம்தான் மொட்டையா யாரோ யாருகிட்டயோ பேசறதைப் போலவே பேசிக்கிட்டு இருக்கிறது..? எப்படியும் நான்தான் உங்க பொண்ணு கழுத்தில் தாலியைக் கட்டப் போறேன்.. அப்படியிருக்கும் போது உங்களை அத்தைன்னுதானே கூப்பிட்டாகனும்..." பாலமுரளி விளக்கம் கொடுத்தான்...

"எங்க வீட்டுப் பொண்ணுக வீட்டை மீறி கல்யாணம் பண்ணிக்க மாட்டாங்க தம்பி..." ராஜேஸ்வரி அதிலேயே நின்றாள்...

"காதலிச்சவனை விட்டுட்டு வேற ஒருத்தனை என் காதலியும் கல்யாணம் பண்ணிக்க மாட்டா..."

"எத்தனை நாளா உங்களை அவளுக்குத் தெரியும்..?"

"அதுக்கும் காதலுக்கும் என்ன சம்பந்தம் அத்தை..?"

பாலமுரளி அந்த 'அத்தை'யில் மட்டும் அழுத்தம் கொடுத்து உச்சரிக்க ராஜேஸ்வரியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது...

"கண்டவுடன் காதலா..? என் பொண்ணை நான் அப்படி வளர்க்கலை..."

"காதலிக்க ஒரு செகண்ட் போதும் அத்தை..."

"அவளுக்கு கல்யாணம் பேசி முடிச்சாச்சு..."

"அதுக்கு ராதிகா முழுமனதாய் சம்மதிச்சிருக்க மாட்டா..."

"நீங்க யாரு... எவருன்னே எங்களுக்குத் தெரியாது.. அதுவே சங்கர் தம்பின்னா இந்த சென்னையிலேயே இருக்கிறவர்.. அவர் வீடு.. தொழில்ன்னு எல்லாத்தையும் பத்தி எங்களுக்கு நல்லாவே தெரியும்.. இதைவிட்டுட்டு எங்கேயோ குற்றாலம் பக்கத்தில எல்லாம் எங்க பொண்ணை கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டு நாங்க நிம்மதியாய் இருக்க முடியாது..."

"இப்படி எல்லாருமே பக்கத்திலேயே பொண்ணு கொடுத்து பொண்ணைக் கட்டிக்கனும்னு நினைச்சா தூரந்தொலைவில இருக்கிறவங்க என்ன பண்ணுவாங்க..? இப்ப உங்களையே எடுத்துக்கங்க.. நீங்களும்.. மாமாவும் ஒரே ஊரா..?"

பாலமுரளி இதையும் மடக்கிவிட.. கீதா மறுபடியும் ஒரு சபாஷைச் சொன்னாள்...

அவன் சும்மாயிருந்தாலாவது ராஜேஸ்வரி கொஞ்சம் யோசித்துப் பார்த்திருப்பாள்.. அவள் பேச்சுக்குப் பேச்சு.. எதிர் பேச்சைப் பேசி அவளை வீழ்த்திக் கொண்டிருந்த பாலமுரளியிடம் அவளுக்கு கோபம் ஏற்பட்டு விட்டது...

"பேச்செல்லாம் பேச நல்லாத்தான் இருக்கும் தம்பி.."

"நிஜத்திலும் நல்லாத்தான் இருக்கும்..."

"கண்ணுக்கு முன்னாலே இருக்கிற நல்ல மாப்பிள்ளையை விட்டுட்டு பட்டிக்காட்டில் எங்க பொண்ணைக் கட்டிக் கொடுக்க எங்களுக்கு விருப்பமில்லை..."

"அப்படியா மாமா..?"

அதுநேரம் வரை மௌனியாக.. மகளின் முகபாவத்தை அளவிட்டு கொண்டிருந்த கிருஷ்ண மூர்த்தியை பேச்சுக்குள் இழுத்துவிட்டான் பாலமுரளி...

அவர் பாலமுரளியின் கேள்விக்கு பதில் சொல்லும் பாவனையில் பேச்சின் போக்கை திசை திருப்பி விட்டு விட்டார்...

"அப்படியெல்லாமில்லை தம்பி... சங்கர் அவரைப் பெத்தவங்களோட வந்து முறைப்படி பெண் கேட்டிருக்கார்.. நீங்க உங்க குடும்பத்தோட வந்து பெண் கேளுங்க..."

"இங்கே கல்யாண ஏற்பாடு நடந்துக்-கிட்டிருக்குங்க.."

"பொறு ராஜேஸ்வரி... எந்த ஏற்பாட்டையும் நாம இன்னும் ஆரம்பிக்கலை... சங்கர் பெண் கேட்டு வந்தார்.. நாம யோசிச்சுப் பதில் சொன்னோம்.. அவ்வளவுதான்.."

"அது போதாதா...?"

"பத்தாது.. இப்ப கதையே மாறிப் போயிருக்கு.. ராதிகாவின் மனசில இவர் மேல எண்ணமிருக்கு.. அவ விருப்பமில்லாத எதையும் நாம செய்யக்கூடாது..."

"அவதான் மறுப்புச் சொல்லலையே..."

"மறுப்புச் சொன்னா.. அதை நீ மறந்துட்டுப் பேசற.. சங்கரைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னுதான் ராதிகா சொன்னா..."

"உப்புச்சப்பில்லாத எதையோ சொல்லி மாட்டேன்னு சொன்னா.. அதை நாம கேட்டுக்கனுமா..?"

"இப்போ உப்புப் புளி காரத்தோட இவரைக் கொண்டுவந்து நம்ம முன்னாலே நிப்பாட்டியிருக்கா.. இதையும் நாம என்ன.. ஏதுன்னு காது கொடுத்துக் கேட்டோம்..."

"ஏங்க.. இவரோட ஊரு ஒரு கிராமங்க..."

"அதைப்பற்றி நமக்கென்ன..? அங்கே இருந்து வாழப்போகிறது நாம இல்லையே.. ராதிகாதானே..."

"முன்னே பின்னே தெரியாத ஊரில பெண்ணைக் கொடுக்கச் சொல்கிறிங்களா..?"

"நாளையும் நாம விசாரிக்கத்தான் போறோம்.. அவரு முதல்ல குடும்பத்தோட வந்து பொண்ணு கேட்கட்டும்.. அவர் வீட்டு மனுசங்க எப்படிப்-பட்டவங்கன்னு நாம பார்ப்போம்.. அதுக்குப் பின்னாலே மாப்பிள்ளை வீடு பார்க்க நாம போயாகனும்.. எல்லாத்தையும் பார்த்துப் பேசி.. விசாரிச்சுத்தான் நாம எதையும் முடிவு பண்ணப் போகிறோம்.. நீங்க உங்க குடும்பத்தோட வந்து பெண் கேளுங்க தம்பி.. ஆகவேண்டியதை அப்புறமாய் பேசலாம்..."

"ஏங்க ஒரு இடத்திலே பொண்ணு கொடுக்கிறதா பேசிட்டு இன்னொரு வீட்டையும் பெண் பார்க்க வரச் சொன்னா நல்லாவா இருக்கும்..?"

"எல்லாம் நல்லாத்தான் இருக்கும்.. இது கல்யாணப் பேச்சு ராஜி... பெண்ணுன்னு இருந்தா நாலு இடத்தில இருந்து கேட்டுத்தான் வருவாங்க.. அதில எது நல்ல இடம்ன்னு நாமதான் முடிவு பண்ணனும்.."

எப்போதுமே குடும்பத்தில் முக்கியமான முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தை தன் கையில் தக்க வைத்துக் கொண்டிருப்பாள் ராஜேஸ்வரி.. அன்று அந்த அதிகாரம் பறி முதலாகிப் போனதில் அவள் பெருத்த கவலைக்கு ஆளானாள்...

"நீங்க சொன்னதைப் போலவே இரண்டே நாளில் என் குடும்பத்தோட வந்து பெண் கேட்கிறேன் மாமா.. வரட்டுமா அத்தை..."

பாலமுரளி எழுந்து நின்று கை கூப்பி விடைபெற்றான்... வாசல்வரை கூடச்சென்று வழியனுப்பும் சாக்கில் ராதிகா அவனைப் பின்பற்றினாள்.. வாசல்வரை வந்த கீதா...

"தூள் கிளப்பிட்டிங்க மச்சான்.." என்றாள்...

"என்னது... மச்சானா..?" ராதிகா பதறி விட்டாள்..

"என்ன ராது இது..? அக்கா ஹஸ்பெண்ட் எனக்கு அண்ணன் முறையா ஆகனும்..?"

"அதுக்காக மச்சான் முறை கொண்டாடுவியா..? ஒழுங்காய் மாமான்னு சொல்லிப் பழகு..."

"போ ராது.. மாமான்னு சொன்னா.. வயசானவங்-களைப் போல ஒரு ஃபீலிங் வருது.. உன் ஆள் எப்படியொரு ஹேண்ட்சம் மேன்..! இவரை மச்சான்னு சொல்லாம.. மாமான்னு சொன்னா.. என் மனசு தாங்குமாடி..?"

"நீ மச்சான்னு சொன்னா என் மனசு தாங்காது கீதா... கொஞ்சம் அதையும் கன்ஸிடர் பண்ணு..."

"விட மாட்டியே..."

"விடவே மாட்டேன்.. நீ தள்ளியே நில்லு.. இப்ப எங்கே கூடவே வர்ற...?"

"மச்சானை வழியனுப்பத்தான்..."

"அதை நான் பார்த்துக்கறேன்.. நீ படிதாண்டாம இங்கேயே நில்லு..."

"ஆனாலும் இது ரொம்ப அநியாயம் ராதிகா.. வீட்டுக்குள்ளேயே ஒரு ஸ்மார்ட்டான ஹீரோ வந்து போகிறார்.. அவர்கிட்ட என்னைப் பேசக்கூட விட மாட்டேங்கிற..."

"என்னைலேயே இன்னும் பேச முடியலை..."

"அது அப்படித்தாண்டி.. வாயைத் திறந்தா காத்துத்தான் வரும்..."

"எதை வைச்சு கணக்காய் அப்படித்தான்னு அவ்வளவு நிச்சயமாய் சொல்கிற..?"

"மச்சான்தான் இஞ்சி இடுப்பழகனாச்சே..."

"ஏண்டி.. நீ அடங்கவே மாட்டியா...?"

ராதிகா நெற்றிக் கண்ணைத் திறந்தே விட்டாள்.. கீதா வெற்றிகரமாக பின்வாங்கினாள்...

"ம்ஹீம்... அழகான மச்சினிச்சி பாசமாய் வந்து பசையில்லாமலே அப்புறா.. உனக்கு அது பொறுக்காதே.." காரருகே வந்ததும் பாலமுரளி சொன்னான்...

"நீங்க எதுக்காக வந்தீங்க.. என்னைப் பெண் கேட்க வந்திங்களா..? இல்லை உங்க அழகான மச்சினிச்சிகிட்ட பாசத்தோட பழகிப் பார்க்கலாம்ன்னு வந்தீங்களா..?"

"விடுடி.. விடுடி.. மச்சினிச்சி.. மச்சான் உறவு முறையில இதெல்லாம் சகஜம்டி..."

ராதிகாவின் முகம் ஜிவுஜிவுவென்று ஆகிவிட.. அதை ரசனையோடு பார்த்தான் பாலமுரளி.. அவன் மனது இறகைவிட லேசானதாக கனமில்லாமல் மாறிவிட்டிருந்தது.. அவன்மேல் ராதிகா காட்டிய உரிமையுணர்வு அவன் மனதில் சாரலாய் விழுந்து நனைத்தது...

"ராதிகா..." காதலுடன் அவன் அழைத்தான்...

"ம்ம்ம்..." அவள் கோபம் குறையாமல் முணுமுணுத்தாள்...

"அழகான மச்சினிச்சிகூட வாயடிக்கலாம்.. ஆனா நான் காதலிக்கனும்னா அது நீயாத்தான் இருக்கனும்டி..."

ராதிகாவின் முகம் மென்மையானது.. அவனை ஏறிட்டாள் அவள்...

"நீ சொன்னதைப் போலவே பெண் கேட்டுட்டேன்.. இனியாவது யாரையும் தேடி மகாபலிபுரம் போகிறேன்னு கிளம்பாம நிம்மதியா இரு... என்னையும் நிம்மதியா இருக்கவிடு..."

"நான் பயந்துக்கிட்டே இருந்தேன்.. நீங்க பிரமாதப் படுத்திட்டிங்க..."

"எல்லாம் நீ போட்டுக் கொடுத்த ரூட்டுத்தான்.. என்ன அப்படிப் பார்க்கிற... உன் அப்பாவுக்கு சங்கர் குடும்பத்தைப் பிடிக்காதுன்னு டிப்ஸ் கொடுத்தியே... அதை வைக்கத்தான் உங்க அப்பாவை பேச்சுக்குள்ள இழுத்து விட்டேன்... நான் நினைச்சது நடந்துருச்சு..."

"கல்யாணமும் நடந்துருமில்ல..?"

ராதிகா கவலையுடன் கேட்டாள்.. இருள் சூழ்ந்திருந்த அந்த இடத்தில் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு பாலமுரளி மென்மையாக தன் முத்தத்தை அவள் கன்னத்தில் பதித்தான்.. அவனுடனான திருமணத்தை ராதிகா அந்த அளவுக்கு விரும்பியதில் அவனுக்குள் எல்லையில்லாத திருப்தி ஏற்பட்டது...

என்நெஞ்சில் மிதக்கும் உன்முகம்...
இமைமூடினாலும் மறையாமல் நிலைத்திருக்கும்...

காரை ஓட்டிக் கொண்டிருந்த பாலமுரளியின் மனதில் ராதிகாவின் அந்த கவலை தோய்ந்த முகமே நிறைந்திருந்தது...

'கல்யாணமும் நடந்துருமில்ல...'

அவன் மெலிதாக விசிலடித்தான்.. இரவு நேரத்தின் அந்தகாரக் கிழித்துக் கொண்டு சாலையில் பாய்ந்த வெளிச்ச வெள்ளத்தில் அவனுக்கு ராதிகாவின் முகமே தோன்றியது...

இவ்வளவு எளிதாக அவனின் காதல் கைகூடி விடுமென்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.. தேனூத்தை விட்டுக் கிளம்பும்போது ராதிகாவின் மீது ஏற்பட்டிருந்த கட்டுக் கடங்காத கோபம் அவனுக்குள் காணாமல் போய் விட்டிருந்தது...

'என்னமா வாயடிக்கிறா...' ரசித்துச் சிரித்துக் கொண்டான்...

என்வோ... அவனும்.. அவளும் காதலுடன் கலந்து பேசிப் பழகி திருமணம் வரைக்கும் வந்து நின்றிருப்பதைப் போல இருந்தது அவனின் செய்கை...

ராதிகாவை அவன் பலவந்தமாய் தொட்டு ஆண்டதை அவன் மறந்தே போய் விட்டான்.. அதனால்தான் அவளுடனான அவனது திருமணம் உறுதியாகி இருக்கிறது என்பதும் அவனுக்கு மறந்து விட்டது.. அவன் நினைவில் நின்றதெல்லாம்.. அவள் கவலையுடன் கேட்ட 'கல்யாணமும் நடந்துருமில்ல...' என்ற வார்த்தைகள் மட்டும்தான் அவை.. அவன் மனதுக்குள் சுழன்று கொண்டிருந்தன...

விடிவெள்ளி வானில் முளைத்தபோது அவனது கார் தேனூத்தை தொட்டு விட்டிருந்தது... இருள் சூழ்ந்த அந்த பின்னிரவுப் பொழுதில் அரண்மனை போன்ற அவனது வீட்டின் காம்பவுண்டிற்குள் அவனது கார் நுழைந்தது...

அழைப்பு மணியோசையில் கதவைத் திறந்த மீனாட்சியிடம்...

"அம்மா.. எப்படியிருக்காங்க..?" என்று கேட்டான்...

"நல்லாயிருக்காங்கய்யா.." என்றாள் அவள்...

"மாத்திரை சாப்பிட்டாங்களா..?"

"சாப்பிட்டாங்கய்யா.. போய் எழுப்பட்டுமா..?"

"வேணாம்.. தூங்கட்டும்..."

அவன் மாடியேறி அவன் அறைக்குள் சென்று கட்டிலில் விழுந்தான்.. பயணக் களைப்பின் அசதியில் கண்கள் செருகின.. அவனையுமறியாமல் தூங்கிவிட்டான்...

அவன் கண்விழித்துப் பார்த்தபோது.. சூரியனின் கதிர்கள் அறைக்குள் படிந்திருந்தன.. அவசரமாக எழுந்து குளியலறைக்குள் புகுந்தான்... பல்தேய்த்து.. முகம் கழுவி விட்டு வெளியேவந்து.. மாடிப்படியின் அருகேயிருந்த பால்கனி போன்ற அமைப்பின் கைப்பிடியில் சாய்ந்து..

"மீனாட்சி..." என்று அழைத்தான்...

"ஐயா.." கையில் தண்ணீர் வாளியோடு அவள் ஓடிவந்தாள்...

"காவேரி கிட்ட காபி கலக்கச் சொல்லி வாங்கிட்டுவா..." உத்தரவிட்டுத் திரும்பியவன்..

"சரிங்கய்யா..." என்று போனவளை மீண்டும் அழைத்தான்..

"ஐயா.." அவள் அப்போதும் தண்ணீர் வாளியை கீழே வைக்காமல் அண்ணாந்து பார்த்தாள்...

"இன்னைக்கு பேப்பரை எடுத்துட்டு வாம்மா..."

"ஆகட்டும்ய்யா..."

அவன் அறைக்குள் போய் லேப்டாப்பை உயிர்ப்பித்தபோது காபியும் பேப்பருமாக மீனாட்சி வந்து விட்டாள்...

"அம்மா.. காபி சாப்பிட்டாங்களா..." காபியை வாங்கியபடி கேட்டான்...

"அப்பவே சாப்பிட்டாங்கய்யா..." அவள் பணிவுடன் சொன்னாள்..

காபித் தம்ளரை வாங்கிக் கொண்டு அவள் நகர்ந்ததும்.. பேப்பரின் பக்கங்களை பார்வையில் மேய்ந்தான்.. ஊடே போன் பண்ணிய சதீஷிடம் அவன் ஊர்திரும்பிய விவரத்தைச் சொன்னான்.. அவனே போனில் சுதர்சனத்தை அழைத்து ஜவுளிக்கடையின் நிலவரத்தை விசாரித்தான்.. பேப்பரை போட்டு விட்டு குளியலுக்குப் போனான்...

சாப்பிட அவன் வந்தபோது.. மேகலா அவனுக்காகக் காத்திருந்தாள்..

"அம்மா.." என்று பாசத்துடன் அழைத்தவனிடம்...

"அடடே.. என்னை உனக்கு அடையாளம் கூடத் தெரியுதாப்பா...? என்று கேட்டு வைத்தாள்..."

"என்னம்மா இப்படிப் பேசறிங்க.. வேலை விசயமா சென்னைக்கு போக வேண்டியதாப் போச்சு.. அதுக்குன்னு இப்படியெல்லாமா பேசறது..." பாலமுரளி மேகலாவின் மோவாயைப் பிடித்தான்...

"போதும்டா..." அவன் கையைத் தட்டி விட்டாள் மேகலா...

பாலமுரளியின் முன்னால் தட்டை வைத்து அதில் இட்லிகளை பறிமாறியபடியே...

"இப்போல்லாம் உனக்கு அடிக்கடி மெட்ராஸில் வேலையிருக்கு போல..." என்றாள்..

அவள் குரலில் தெரிந்த வேறுபாட்டை பாலமுரளி உணர்ந்து கொண்டான்.. மேகலாவின் முகத்தை நிமிர்ந்து பார்த்தான்.. அதில் அவள் மனதிலிருந்த மனத்தாங்கல் தெரிந்தது...

"இது புதிசில்லயேம்மா..." முரளி இட்லியில் கவனமானான்...

"இது புதிசில்ல.. ஆனா எப்பவுமே மெட்ராஸீக்குப் போனா.. ரெண்டொரு நாளில வேலைய முடிச்சுப்புட்டு ஓடி வர்றவன்.. இப்பல்லாம் மாசக்கணக்கில அங்கேயே கிடயாய் கிடக்கிறயே.. அந்த மர்மம் என்னான்னுதான் எனக்குப் புரியல..." சட்னியை ஊற்றியபடியே குத்தலாகப் பேசினாள் மேகலா..

"மாசக் கணக்கில வேலையிருந்தா தங்கித்தானே ஆகணும்.. புதுசா இதென்னம்மா விசாரணைக் கமிசன் போடறிங்க..." பாலமுரளி கண்டிப்புடன் கேட்டான்...

"ஐயா.. உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா.. உன் வீடுவாசல்.. சொந்தபந்தம்.. தோப்பு துரவு.. தொழில்னு எல்லாமே இங்க இருக்கு.. இதையெல்லாம் விட்டுட்டு நொடிப்பொழுது கூட நீ வெளியூரில தங்க மாட்ட.. இப்ப அப்படியில்லையே ராசா.. போட்டது போட்டபடி இங்கே அத்தனையும் கேட்பாரில்லாம கிடக்க.. நீ மாசக் கணக்கில வெளியூர்ல கிடக்கறியேப்பா.. அதனாலதான் என்னைக்கும் இல்லாத திருநாளா உங்கிட்ட கேள்வி கேக்க வேண்டியதாப் போச்சு.." மேகலாவின் குரலில் மறைமுகமான கோபம் தொனித்தது...

பாலமுரளி அதை கண்டு கொள்ளாமல் மௌனமாக சாப்பிட்டு முடித்தான்...

"ம்ம்.. ஆத்தாகாரி கேள்வி கேட்டா பதில் சொல்ல உங்களுக்கெல்லாம் கஷ்டமாத்தான் இருக்கும்.. இதுவே பெண்டாட்டின்னு ஒருத்திவந்து கேள்வி கேட்டா.. விழுந்தடிச்சுக்கிட்டு பதில் சொல்லுவீங்க.. இதுக்காகவாவது காலாகாலத்தில ஒருத்தி கழுத்தில மூணு முடிச்சைப் போடுடான்னு சொன்னா.. அதையும் காது கொடுத்துக் கேட்க மாட்டேங்கறே.." மேகலா தன் போக்கில் புலம்பினாள்...

பாலமுரளி அவளை நிமிர்ந்து பார்த்து புன்னகைத்தான்...

"இப்பச் சொல்லுங்க... நான் காது கொடுத்துக் கேட்கிறேன்.." என்றான்...

மேகலாவிற்கு அவள் காதில் விழுந்த செய்தியை நம்ப முடியவில்லை...

"முரளி.. நிசமாவா சொல்ற..?" வாயெல்லாம் பல்லாக மகனைகட்டிக் கொண்டாள்...

"நிசமாத்தான் சொல்றேன்.." தாயின் சந்தோசத்தை ரசித்தபடி சொன்னான் பாலமுரளி...

"இப்பவே உன் அக்காவுக்கு போனைப் போடறேன்.." மேகலா கிளம்பவும்.. பாலமுரளிக்கு ஒன்றும் புரியவில்லை...

"எதுக்கும்மா..?" விளக்கம் கேட்டான்..

"அவ சின்ன மாமியா மகளை உனக்குப் பேசி முடிக்கச் சொல்லத்தான்.."

"அம்மா.. இப்படியே சன்யாசம் வாங்கிக்கிட்டு நான் ஓடிருவேன்.. பரவாயில்லையா..."

"என்னடா தம்பி இப்படிச் சொல்ற.. அப்ப விடு.. தென்காசியில இருக்கிற நம்ம சொந்த பந்தத்துக்கு போன் போடறேன்..."

"அது எதுக்கு..?"

"உனக்குப் பெண் பார்க்கத்தான்..."

"ஒன்னும் வேணாம்.. நான் பெண்ணைப் பார்த்தாச்சு"

பாலமுரளி நிதானமாகச் சொல்ல.. மேகலாவின் முகம் மாறிவிட்டது...

"என்னடா சொல்ற..?" ஒரு மாதிரியான குரலில் வினவினாள்...

"நான் ஒரு பொண்ணு மேல ஆசைப்படறேம்மா..."

"யாருடா அந்தப் பொண்ணு...?"

"பேரு ராதிகா... ஊரு சென்னை.. இன்ஜினியருக்குப் படிக்கிறா..."

"அவ அப்பாம்மா என்ன செய்றாங்க..."

"அவ அப்பா கவர்ன்மெண்ட் ஆபிசர்ம்மா..."

"மாசச் சம்பளம் வாங்கற குடும்பமா..?"

பாலமுரளி மேகலாவை ஏறிட்டுப்பார்த்தான்.. அவன் பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்றில் மேகலாவின் வாய் மூடிக் கொண்டது...

"ஏம்மா.. நீங்ககூட பேக்கமாறிப் பேசுவீங்களா..?" அவன் குரலில் அப்பட்டமான குற்றச்சாட்டு வெளிப்பட்டது..

"எதைச் சொல்றப்பா.." மேகலா குழம்பினாள்...

"எந்தப் பொண்ணைக் காட்டினாலும் பிடிக்க மாட்டேங்குதே.. நீயாய் ஒரு பொண்ணைப் பிடிச்சிருக்-குன்னாவது சொல்லு.. அந்தப் பொண்ணையே உனக்கு கட்டி வைக்கிறேன்னு சொன்னீங்களா... இல்லையா...?"

"சொன்னேன்தான்..."

"இழுக்க வேணாம்... சொன்னீங்களா.. இல்லையா..? ரெண்டில ஒன்னைச் சொல்லுங்க..." முரளி அதட்டினான்...

"சொன்னேன்டா... அதுக்கு இப்ப என்னாங்கிற...?" மேகலா சிலிர்த்தாள்...

"எனக்கு அந்தப் பொண்ணைத்தான் பிடிச்சிருக்கு.. கட்டினா அந்தப் பொண்ணைத்தான் கட்டுவேன்.. இல்லைன்னா காவி வேட்டிதான்.. என்ன சொல்கிறிங்க..?" பதிலுக்கு பால முரளியும் சிலிர்த்தான்..

பாலமுரளி வெடிகுண்டைத் தூக்கிப் போட மேகலா அலறிவிட்டாள்..

"என்னடா முரளி இப்படிச் சொல்ற...? நீ கையைக் காட்டினா ஒரு கழுதையைக்கூட எம்மருமகளா ஏத்துக்க மாட்டேனா..?"

"அவ கழுதையில்ல.. இத அவ காதுபட சொல்லிராதீங்க.. அப்புறம் என்னைக் கட்டிக்க மாட்டேன்னு சொல்லிரப் போறா.. அப்புறம் காவி வேட்டியைத்தான் நான் கட்டிக்க வேண்டியிருக்கும்.. அதனால எதைப் பேசறதா இருந்தாலும் யோசிச்சுப் பேசுங்க..."

"அடேங்கப்பா.. அப்படிக்கூட அந்த அழகுராதி சொல்லிப் புடுவாளா..? யாருடா அது...? இந்த தென்காசிச் சீமையில கிடைக்காத பூலோக ரம்பை...?"

"அவ அழகு ரதிதான்.. போட்டாவைப் பார்த்துட்டுச்

பாலமுரளி தன் செல்போனில் பதிவு பண்ணி வைத்திருந்த ராதிகாவின் போட்டோவைக் காட்டினான்.. முதல் பார்வையிலேயே மேகலாவுக்கு அவளைப் பிடித்து விட்டது.. அவள் முகத்தில் திருப்தியின் சாயல் படிந்தது..

"நல்லாத்தான் இருக்கா..."

"இன்ஜினியருக்கு படிச்சுக்கிட்டு இருக்காம்மா.. இது கடைசி வருசம்..."

"என்னத்தையோ படிச்சுட்டுப் போகட்டும்.. அதுவா முக்கியம்..? பொண்ணு கண்ணுக்கு லட்சணமா இருக்கா.. அதுதான் முக்கியம்..."

மேகலாவுக்கு என்றுமே படிப்பு என்பது பெண்களுக்கான கூடுதல் சுமை... தான் இன்னமும் தனது மகளை பட்டப்படிப்பு படிக்க வைத்ததினால்.. ஐந்தாவது படித்த சித்தப்பா மகனுக்கு அவளைத் திருமணம் பண்ணிக் கொடுக்க முடியாமல் போய்விட்ட துயரத்தை நினைத்து புலம்பும் ரகம்...

அவளிடம் படிப்பைச் சொல்லிப் புரிய வைப்பது கால விரயம் என்று அடுத்த பேச்சிற்கு தாவி விட்டான் பாலமுரளி...

"பொண்ணோட தாய்.. தகப்பன் தங்கமான-வங்கம்மா..."

"இருந்துட்டுப் போகட்டும்.. அதுக்காக அவங்களை கழுத்தில கட்டியா தொங்க விட்டுக்குற முடியும்...?"

மேகலா கேட்டு வைத்த இந்தக் கேள்விக்கு எப்படிப் பதில் சொல்வது என்று தெரியாமல் திக்கு முக்காடிப் போய் விட்டான் பாலமுரளி...

இப்படியாகப்பட்ட அதிபுத்திசாலித்தனமான... கேள்விகளை எப்படி மேகலாவினால் சற்றுக் கூட யோசிக்காமல் உடனடியாக கேட்க முடிகிறது.. என்ற ஆச்சரியம் என்றும் போல் அன்றும் அவனுக்குள் வந்தது..

"இப்படிப் பேசினா எப்படிம்மா..? முதல்ல எனக்கு இதுக்கொரு பதிலைச் சொல்லுங்க.. உங்களுக்கு என் கல்யாணத்தை நடத்திவைக்கிற ஐடியா இருக்கா.. இல்லையா...?"

"என்னடா தம்பி இப்படிக் கேட்டுட்ட..? அதெல்லாம் மலையளவு இருக்கு..."

"அப்புறம் எதுக்கு வம்பைக்கட்டி இழுக்கறிங்க..? பொண்ணைப் பெத்தவங்கள நக்கலடிச்சா.. அவங்க பொண்ணைத் தருவாங்களா..?"

"சும்மா இப்படியே சொல்லி வைக்காதே முரளி.. உனக்கு பொண்ணு கொடுக்க.. நான்.. நீன்னு நம்ம சொந்த பந்தத்துல அடிச்சுக்கிட்டு கிடக்காங்க.. அதில ஒரு பொண்ணை நம்ம அந்தஸ்துக்கு தகுந்தாப்புல கட்டிக்கிட்டு வரமாட்டாம.. மாதச் சம்பளம் வாங்குற வீட்டில பொண்ணை எடுக்கனும்கிற... இது எனக்கு சுத்தமா பிடிக்கலடா..."

"இப்பத்தானம்மா.. பொண்ணைப் பிடிச்சிருக்குன்னு சொன்னீங்க..."

"பொண்ணோட அந்தஸ்தைப் பிடிக்கலயே..."

அடுத்த ஒரு மணி நேரத்துக்கு பாலமுரளி மேகலாவின் அருகே அமர்ந்து பொறுமையாக வகுப்பெடுத்து.. அவளைக் கரைத்தான்.. ஒரு வழியாக மேகலாவின் சம்மதத்தை வாங்குவதற்குள் அவனுக்கு போதும் போதுமென்று ஆகிவிட்டது...

உன்னோடு ஒருநாள் - என்..
வாழ்வினிலே அது திருநாள்...

"உன் அக்காவுக்கு எம்புட்டு சீர்வரிசை செஞ்சோம்.. உனக்கு அது மறந்து போச்சா முரளி..."

"அவங்க கேட்டாங்க செஞ்சோம்.. இங்க நாம பொண்ணைமட்டும்தான கேக்கப் போறோம்...?"

"அதுக்காக வெறுமனே கட்டிக்கிட்டு வந்திரா முடியுமா முரளி..? இந்த தென்காசிபட்டினமே உன் கல்யாணத்தை திரும்பிப் பார்க்கும்ப்பா... அவங்க கண்ணுக்கு முன்னாலே நீ ஆப்பை சாப்பையான இடத்தில

பொண்ணைக் கட்டிக்கிட்டு வந்தா நம்ம பெருமை என்னாகிறது..?"

"ஒன்னும் ஆகாது.. என் மகன் காதலிச்ச கல்யாணம் பண்ணிக்கிட்டான்னு சொல்லுங்க..."

"இது அதைவிட மோசம்..."

"ஏம்மா.. நான் காதலிக்கக்கூடாதா..?"

"ஊருக்குப் பெரிய மனுசன் பேற பேச்சாடா இது?"

"இதென்னம்மா வம்பாப் போச்சு.. பெரிய மனுசனுக்கு காதல் வரக்கூடாதா..?"

"அக்காவை நினைச்சுப் பாருடா.."

"என் கல்யாணத்துக்கும் நான் அக்காவ நினைக்கிறதுக்கும் என்ன சம்பந்தம்..?"

"அவ வீட்டில என்ன நினைப்பாங்க..?"

"நீங்க ஊரைப் பத்தியே நினைங்க.. உங்க மகனின் ஆசையைப்பத்தி நினைக்காதீங்க.. எனக்கு அவதான் வேணும்..."

ஒருவழியாக மேதாவி மேகலா மகனுக்காக மலையிறங்கினாள்...

"என்னவோ முரளி.. இப்பவாவது உனக்குன்னு ஒருத்தி வேணும்ன்னு நீ நினைச்சியே.. எனக்கு அதுவே போதும்..."

"அம்மான்னா அம்மாதான்.. இத முதல்லயே சொல்றதுக்கென்ன..?"

"வேற எதுக்கு..? எந்தொண்டைத் தண்ணிய வத்தடிச்சுக்கத்தான்... நீ பிடிச்சா உடும்புப் பிடிதான்னு தெரிஞ்சும் உங்கிட்ட வாதாடினா இப்படித்தான் ஆகும்..."

மனத்தாங்கலோடு சொல்வதைப் போல மேகலா சம்மதத்தைச் சொல்லி விட்டாள்...

ஆனால் பாலசரஸ்வதிதான் சம்மதத்தைச் சொல்ல வில்லை.. மேகலா சொல்வதை ஒரு வார்த்தை விடாமல் கவனமாக கேட்டுவிட்டு.. அவளை அதட்டினாள்...

"என்னம்மா இப்படி இருக்கறிங்க.. அவன் சொல்லிட்டா நீங்க உடனே அதுக்கு சரின்னு சொல்லிடறதா...?"

"வேற என்னடி பண்ணச் சொல்ற.. அவன் பிடிவாதமா இருக்கானே..."

"அவன் ஆடற ஆட்டத்துக்கு தாளம் போடறதை எப்பத்தான் நீங்க நிறுத்தப் போறிங்களோ.. அவனுக்குத்தான் அறிவில்லை.. மோகம் அவன் கண்ணை மறைக்குது.. உங்களுக்கென்னம்மா ஆச்சு.. நீங்க ஏன் இப்படி இருக்கறிங்க..?" பாலசரஸ்வதி படபடத்தாள்...

ராதிகா என்ற பெயரைக் கேட்டவுடனேயே அது இன்னார் என்று அவளுக்குத் தெரிந்து விட்டது..

'ஷோபா சொன்ன அந்தப் பொண்ணுதானே.. பணக்காரன்னு தெரிஞ்சு உடனே வலையை விரிச்சு என்தம்பிய மடக்கிப் போட்டுட்டாளா...'

இதுதான் பாலசரஸ்வதியின் எண்ணமாக இருந்தது.. ஷோபாவின் வார்த்தைகள் உருவகித்த ராதிகாவின் பிம்பம் அதைத்தான் சொல்லியது.. பாலசரஸ்வதி ராதிகாவை தவறாக மதிப்பிட்டு விட்டாள்...

"உன் தம்பிக்கு உன் சின்னமாமியா மகளைப் பிடிக்கலை சரசு..."

"கடுப்பைக் கிளப்பாதீங்கம்மா.. கோடிஸ்வரன் மகள்.. அழகா இருக்கா.. படிச்சிருக்கா.. சொத்துக்கு ஒரே வாரிசு.. இப்படிப் பொண்ணு கழுத்தில உங்க மகன் தாலியக் கட்டினா.. தென்காசி வட்டாரத்தில நமக்கு பெருமை.. அதை விட்டுட்டு.. பணங்காசுக்கு ஆளாப்பறக்கிற ஒரு பொண்ண அவனுக்கு கட்டி வைக்கனும்னு நினைக்கறிங்களே.. உங்களை என்ன சொல்ல..?"

பாலசரஸ்வதியின் கோபத்தில் மேகலாவுக்கு யோசனை வந்தது...

"இரு.. இரு.. பணங்காசுக்கு ஆசைப்படற பொண்ணுன்னு எதை வைச்சு நீ சொல்ற...?"

"ஷோபாதான் சொன்னா..."

"யாரு.. உன் சின்ன மாமியா மகளா..?"

"அவளேதான்.. ஏம்மா... பெயரைச் சொன்னா உங்களுக்குத் தெரியாதா..? உறவு முறையைச் சொன்னாத்தான் தெரியுமா..?"

"அவ பேரை யாரு கண்டா..? அதைவிடு.. அவளுக்கும் உந்தம்பி பாத்திருக்கிற பொண்ணுக்கும் என்ன சம்பந்தம்...?"

"ரெண்டு பேரும் ஒரே கிளாஸிலதான் படிக்கிறாங்க..."

"கூடப் படிக்கிற பொண்ணுன்னு சொல்லு..."

"நான் எதைச் சொன்னாலும் எகனைக்கு மொகனையாத்தான் கேட்டு வைப்பீங்களா..?"

"இல்லடி சரசு... உன் சின்ன மாமியா மகளுக்கு அந்தப் பொண்ணை பிடிக்காமலிருக்கலாமில்லையா..?"

மேகலா வாழ்க்கையின் அத்தனை பரிணாமங்-களையும் பார்த்தவள்.. மாணிக்கவாசகத்தின் மனம் அறிந்து.. அவரின் மனம் கோணாமல் பெற்ற பிள்ளைகளுக்குத் தேவையானதை செய்ய வைத்த சாமர்த்தியசாலி... கிராமத்தில் பிறந்து வளர்ந்து.. கிராமத்தில் வாழ்க்கைப்பட்டு வந்தவள்.. மனித மனங்களின் சூட்சுமங்களைப் பற்றி ஓரளவு தெரிந்து வைத்திருப்பவள்.. ஒருவரின் கண்களைப் பார்த்தே அந்த நபரின் குணாதிசியத்தை எடை போட்டு விடும் தன்மை படைத்தவள்...

ஷோபாவைப் பார்க்கும் போதே.. அவளது விழிகளில் தெரிந்த ஆணவத்தையும்.. பொய்மையையும் கண்டு கொண்டவள் மேகலா...

அவளுக்கு ஷோபாவைக் கட்டோடு பிடிக்காது.. ஆனால் பாலசரஸ்வதிக்கு ஷோபாவை தம்பியின் மனைவியாக்கும் எண்ணம் இருந்ததை அறிந்தவுடன் அவளுக்காக தன் மனதை மாற்றிக் கொண்டவள் அவள்...

'நான் வாழ்ந்து முடிச்சவ.. என் மக அன்னியத்தில வாக்கப் பட்டிருக்கா.. தகப்பனில்லாத பொண்ணு.. என்காலம் முடிஞ்சா தாயுமில்லைன்னு ஆகிரும்... அதுக்குப் பின்னால அவளை பிறந்த வீட்டில ஆதரிக்க யாரு இருக்கா..? முரளி ஆயிரம் சோலிக்காரன்... அக்காமேல பாசமிருந்தாலும் அவனால வீடு தங்கி.. அக்காவுக்கு எல்லாம் சரியா நடக்குதான்னு பார்க்க முடியுமா..? அவனுக்கு வாரவ என் மகளுக்கு வேண்டப்பட்ட சின்ன மாமியா மகளா இருந்தா அவளுக்குத்தானே நல்லது.. எனக்கென்ன.. எம்புள்ளைக நல்லா வாழ்ந்தாச்சரி.. அந்தப் பொண்ணு எப்படி இருந்தாலும் கண்டும் காணாம போயிர வேண்டியதுதான்...'

இதுதான் அவளது எண்ணமாக இருந்தது... இந்த எண்ணத்தோடுதான் ஷோபாவைத் திருமணம் செய்து கொள்ளும்படி பாலமுரளியை வற்புறுத்திக் கொண்டிருந்தாள்...

ஆனால் ராதிகாவின் மேல் அவன் ஆசைப்பட்டு விட்டதைத் தெரிந்தவுடன் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு விட்டாள்...

'எம்புள்ள பதினைஞ்சு வயசில குடும்ப பாரத்தை தோளில சுமக்க ஆரம்பிச்ச தங்கம்.. ராப்பகலா உழைச்சு எங்குடும்பத்தை முன்னுக்கு கொண்டு வந்தவன்.. இந்த தென்காசிப் பட்டினத்தில பெயர் சொல்கிறதைப் போல பொழைக்க வைச்சவன்.. அக்காகாரியை பெரிய இடத்தில கட்டிக் கொடுத்து அவங்களே மூக்கு மேல விரலை வைக்கிற மாதிரி சீர் செஞ்சு அசத்தினவன்.. ஒன்னுக்குப் பத்தா தொழில் மேல தொழிலாச் செஞ்சுக்கிட்டு கல்யாண வாழ்க்கையப் பத்தியே யோசிக்க நேரமில்லாம கிடந்தவன்.. அவனுக்குன்னு இது வரைக்கும் எதையும் அவன் செஞ்சுக்கிட்டது இல்லை.. முதன் முதலா ஒரு பொண்ணுமேல ஆசைப்படறான்.. அவன் மனசுக்குப் பிடிச்ச வாழ்க்கைய அவன் வாழட்டும்...'

இப்படித்தான் அவள் நினைத்தாள்.. கூடுதலாக பாலமுரளி காட்டிய புகைப்படத்தில் சிரிக்கும் கண்களோடு தெரிந்த ராதிகாவின் விழிகளில் தெரிந்த வசீகரத்துடன் சேர்ந்த ஓர்விதமான நேர்மை அவளைக் கவர்ந்து இழுத்து விட்டது...

'குடும்பத்துக்கு ஏத்த பொண்ணு...'

மனம் சான்றிதழை வணங்கினாலும்.. பெற்றவள் என்ற முறையில் கொஞ்ச நேரம் வழக்கடித்து பின்

மகனுக்காக இறங்கி வருவதைப் போல இறங்கி வந்தவள் மேகலா...

அவள் கெட்டிக்காரி.. மாற்றி யோசிக்கும் ரகம்.. உடனடியாக காதல் திருமணத்திற்கு சம்மதிப்பது குடும்ப பாரம்பர்யத்திற்கு சரிவராது என்பதை உணர்ந்து.. ஆட்சேபிப்பதைப் போல நடித்து சம்மதித்தவள்...

அவளிடம் போய் ஷோபாவின் அனுமானத்தைச் சொன்னால் ஊம்கொட்டிக் கேட்டுக் கொள்வாளா..?

"என்னம்மா இப்படிச் சொல்லிட்டிங்க..."

"நாம நாலையும் யோசிக்கனும் சரசு.. இப்படியும் இருக்கலாமுன்னுதான் உனக்குச் சொன்னேன்.. இதுதான்னு சொல்லலை..."

"ஷோபா சொன்னா அது சரியாத்தான் இருக்கும்மா..."

"உன்தம்பி எதைச் செஞ்சாலும் சரியாத்தான் செய்வான்ம்மா..."

"இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க...?"

"பாரு சரசு.. தோளுக்கு மேல வளர்ந்துட்ட ஆம்பளைப் புள்ளகளை கைக்குள்ள அடக்க முடியாது.. உந்தம்பி... வானம் தொட்டு வளர்ந்துட்ட ஆம்பளை சிங்கம்.. அவனை அடக்க என்னால முடியாது.. அவன் கிட்ட அடங்கிப் போய்த்தான் எனக்குப் பழக்கம்..."

"அதனால..?"

"என்னால உந்தம்பி கல்யாணத்தை நிறுத்த முடியாது..."

"நான் நிறுத்திக்காட்டறேன்..."

"முடிஞ்சா அதைச் செய்..."

பாலசரஸ்வதி முழுமூச்சாக காரியத்தில் இறங்கினாள்.. போனில் பாலமுரளியிடம் பேசினால் கதைக்கு ஆகாது என்று நேரிலேயே வந்து இறங்கிவிட்டாள்.. அதற்கு அவளுடைய கணவன் ராஜராஜன் ஆட்சேபித்தபோது...

"உங்களுக்கு ஒன்றும் தெரியாது.. இது என்னோட வாழ்க்கைப் பிரச்னை..." என்று சொல்லி விட்டாள்...

"உன் வாழ்க்கைக்கென்னடி குறைச்சல்.. நான் நல்லாத்தானே வைச்சிருக்கேன்..?" அவனுக்கு சுர்ரென்னு கோபம் வந்துவிட்டது..

"உங்களை யாருங்க சொன்னது..? என் தம்பியை இல்ல சொன்னேன்..?"

"அவருக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்..?"

இப்படிக்கேட்ட கணவனை.. உச்சிமுதல் உள்ளங்கால் வரை ஆராய்ச்சி பார்வை பார்த்தாள் பாலசரஸ்வதி...

அது எப்படித்தான் இந்த ஆண்கள் எல்லோரும்.. மனைவியாக வந்து வாய்ப்பவளுக்கு பிறப்பிடம் என்பது வேறு.. அங்கும் அவளுக்கு வேர் இருக்கிறது என்பதை

ஒப்புக் கொள்ளாதவர்களாக இருக்கிறார்களோ என்றிருந்தது அவளுக்கு...

'இவங்களுக்கு பெண்டாட்டிக்கு சீர் செய்துகிட்டே இருக்க மட்டும் பிறந்தவீடு வேணும்.. அங்கிருந்து இவங்களுக்கு வாரி வழங்கிக்கிட்டே இருக்கனும்... ஆனா உரிமை கொண்டாடறது மட்டும் கூடாது... என்ன ஒருநினைப்பு...'

"என் தம்பிக்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லைன்னே வைச்சுக்குவோம்.. எனக்கும் என் தம்பிக்குமாவது சம்பந்தம் இருக்குங்கிறதை நீங்க ஒப்புக்கிறீங்களா.. இல்லையா...?"

"இப்ப எதுக்குடி தேவையில்லாத பேச்சுக்கெல்லாம் சண்டைக்கு வர்ற..? நம்ம வீட்டிலே ஆயிரம் பிரச்னை இருக்கு.. இதை விட்டுட்டு மத்தவங்க பிரச்னை நமக்கு எதுக்கு..?"

ஏற்கனவே மேகலா பேசியதில் கோபம் தலைக்கு ஏறியிருந்த பாலசரஸ்வதிக்கு அது கட்டுக்கடங்காமல் பீறிட்டது...

அவள் எப்போது பிறந்த வீட்டைப் பற்றிப் பேசினாலும்.. அதை தேவையில்லாத வம்பு என்று கணவன் நாமகரணம் சூட்டினால் அவளுக்கு கோபம் வராமல் என்ன செய்யும்..? இந்த லட்சணத்தில் அவளுடைய பிறந்த வீட்டின் பிரச்னையை ஊரான் பிரச்னை என்று வேறு சொல்லி வைக்கிறான்...

"அப்படிங்களா.. போனவாரம் உங்க தங்கை கண்ணைக் கசக்கிட்டு வந்து நின்னாளே.. அப்ப மட்டும் ஏன் தாவிக் குதித்துக்கிட்டு உங்க தங்கையின் மாமனார் வீட்டோடு சண்டைக்குப் போனீங்க..? அது மத்தவங்க பிரச்னையில்லையா...?"

"அதுவும்... இதுவும் ஒன்னாடி.. நான் உன்னை என்னைக்காவத கண்ணைக் கசக்கிட்டு பிறந்த வீட்டுக்கு நியாயம் கேட்டுப் போக விட்டிருக்கேனா..?"

ராஜராஜன் சரியான இடத்தைத் தொட்டு விட.. பாலசரஸ்வதி உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

அந்த வகையில் அவன் அருமையானவன்.. மனைவியின் கண்கள் கலங்கும்படி ஒருவார்த்தைகூடச் சொல்ல மாட்டான்.. அவளைத்தன் உரிமைப் பொருளாய் நினைப்பவன்.. அவனையும்.. அவன் வீட்டையும் அவளுக்கு உரிமைப் பொருளாக்கியிருந்தான்..

பால சரஸ்வதியின் கோபம் வடிந்து விட.. அவள் காதலுடன் கணவனை நெருங்கி அவனது சட்டைப் பொத்தான்களைத் திருகினாள்..

"இங்கே பாருங்களேன்..."

"பார்த்துட்டாப் போச்சு..."

அவன் காதலுடன் மனைவியைப் பார்க்க.. பாலசரஸ்வதி.. தம்பியின் திடீர் திருமண முடிவைப் பற்றி அவனது சட்டைப் பொத்தானைப் பிய்த்து எடுத்தபடி ஒருவழியாக சொல்லி முடித்தாள்...

"அந்தப் பொண்ணு யாரு.. எவருன்னு ஒரு விவரமும் தெரியாது.. அம்மா பாவம்.. வயசானவங்க.. நோயாளி.. போய் என்ன ஏதுன்னு கேட்டுட்டு வந்துடறேன்.. ப்ளீஸ்.."

இப்படிக் கேட்கும் மனைவியிடம் முடியாது என்றா அவன் சொல்லுவான்..?

என்மனதை நீ அறிய...
ஒற்றை வார்த்தை போதாதா..?

பச்சைப் பசேலென்ற புல்வெளியைப் போல.. நாற்றுக்கள் பாவிப் படர்ந்திருந்தன... எந்த நேரமும் நீர் பாய்ச்சப்பட்டுக் கொண்டிருந்ததால் அவற்றின் நடுவே நீரில் கால் நனைத்து நாரைகள் நின்று கொண்டிருந்தன... வரப்பின் மீது லாவகமாக நடந்த வண்ணம் கூட வந்த மருதமுத்தவிடம் வயலைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தான் பாலமுரளி... மரியாதையான இடைவெளி விட்டு அவனைப் பின்தொடர்ந்தபடி மருதமுத்துவும் அவன் கேட்ட கேள்விக்கு பதிலைச் சொல்லிக் கொண்டிருந்தான்...

"வெள்ளாமை செய்து விளைச்சலை எடுக்கற வரைக்கும் பெரிய பாடுதான் போ..."

"ஆமாங்கய்யா.. இப்பல்லாம் முன்னமாதிரி கழனி வேலைக்கு ஆள் கிடைக்கறதில்லங்கய்யா.. அம்புட்டு ஜனமும் டவுனைப் பார்த்து நகர்ந்துக்கிட்டு இருக்கு..."

"நிஜம்தான் மருதமுத்து.. விவசாயம் செய்கிறதை நம்ம ஜனங்க கொஞ்சம்.. கொஞ்சமாக.. குறைச்சுக்கிட்டும்.. மறந்துக்கிட்டும் வர்றாங்கதான்..."

"காட்டு வேலை செய்யறதைவிட கட்டிடவேலை செய்ய ஜனங்களுக்கு பிடிச்சுப் போயிருச்சுங்கய்யா.. சின்ன விவசாயிக யாரும் இப்ப கலப்பையைத் தொடறதில்ல..."

"அதர்காக விவசாயம் அழிஞ்சு போயிராது மருதமுத்து... கம்யூட்டரில பணம் கொட்டினாலும்.. வயித்துக்குள்ளப் போட காய்கறியும்.. அரிசியும் தான வேணும்..? தேவையிருக்கிறப்போ எந்தத் தொழிலும் அழிஞ்சு போயிராது.. கவலையை விடு.."

"என்னமோ போங்கய்யா.. நாட்டு நிலைமையைப் பார்க்கிறப்போ காலம்.. காலமா.. பயிர் செஞ்சு வர்ற என்னைப் போல ஆளுகளுக்கு பகீருன்னுதான இருக்கு..?"

"நம்ம இந்தியா விவசாய நாடு மருதமுத்து..."

"அது அப்போங்கய்யா.. இப்ப இதோட முகமும் மாறிப் போச்சே.. காடுகரையை அழிச்சு.. அதில வீட்டைக்கட்டி விக்கிறாங்க.. வீடா சோறு போடும்..? காட்டில வர்ற விளைச்சல் தானே சோறு போடும்..?"

ஒரு உண்மையான உழவனின் மனக்குமுறலை வெளிப்படுத்தினான் மருதமுத்து.. அவனுக்கு பதில் சொல்லப் போன பாலமுரளி போன் மணியொலிக்கவும் எடுத்துப் பேச ஆரம்பித்தான்.. மேகலாதான் பேசினாள்..

"என்னங்கம்மா..."

"அக்கா வந்திருக்கா முரளி..."

"எப்ப வந்துச்சு..?"

"இப்பத்தான்.. வீட்டுக்கு வந்துட்டுப் போறயா..?"

"ஆகட்டும்..."

மருதமுத்துவின் மனக்குமுறலை ஆற்றிவிட்டு வீடு நோக்கி காரை விட்டான் பாலமுரளி...

"மாமா..!"

பாலசரஸ்வதியின் பத்துவயது மகன் ராஜீவும் எட்டுவயது மகள் சாதனாவும் வாசலுக்கே ஓடிவந்து பாலமுரளியின் கால்களைக் கட்டிக் கொண்டார்கள்..

"ஹேய் ராஜீ.. சாதுக்குட்டி.."

அவர்களைக் குனிந்து கைக்கு ஒருவராக தூக்கி கொஞ்சியபடியே வீட்டுக்குள் நுழைந்தான் பாலமுரளி...

"இங்க பாரு... இதுகளுக்கு ஏழுகழுதை வயசாகுது.. இன்னும் மாமன் தோளில ஏறி சவாரி பண்ணனும்னு நினைக்குதுக..."

மகன் மகள்வயிற்று பேரக் குழந்தைகளிடம் காட்டும் பாசத்தில் மனம் நிறைந்து போனாலும்.. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் முகம் நிறைய பெருமையுடன்.. பேரன்.. பேத்தியை பொய்யாக கண்டித்தாள் மேகலா...

அதைக் கேட்ட பாலசரஸ்வதியின் முகம் மாறிவிட்டது...

"என்னம்மா.. இப்பவே இப்படின்னா.. இன்னும் இவனுக்கு கல்யாணமும் ஆகிட்டா என்னையும்.. என் பிள்ளைகளையும் தள்ளியே வைச்சுருவீங்க போல இருக்கு.."

மேகலாவின் முகம் மாறிவிட்டது.. அவளால் மகளின் மனத்தாங்கலைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவளாவது.. மகளைத் தள்ளி வைக்கிறதாவது.. என்ன பேச்சு பேசிவிட்டாள்..!

அவளது விழிகளின் ஓரமாகத் தெரிந்த கண்ணீரின் கசிவைப் பார்த்தபடி.. மேகலாவின் பக்கத்தில் உட்கார்ந்த பாலமுரளி.. முகம் சுளித்தான்...

"என்னக்கா.. வந்தவுடனே அம்மாவைப் போட்டுத் தாக்கற..? என்ன விசயம்..? இங்கே பிறந்த வீட்டை நீ தள்ளி வச்சிருக்கியா.. இல்லை... பிறந்தவீடு உன்னைத் தள்ளி வைச்சிருக்கா..?" குரலில் மெலிதான கோபத்தின் சாயல் தென்பட்டது...

"ஆமடா.. ஏன் கேட்க மாட்ட..? பொண்ணாப் பிறந்தவ கல்யாணமானா பொற்ற வீட்டை விட்டுப்

போய்த்தானே ஆகனும்..? அது உனக்குக் குத்தமாப் போயிருச்சா..?"

"யாரு உன்னைக் குத்தம் சொன்னது..? நீதான் மத்தவங்களை குத்தம் சொல்லிக்கிட்டு இருக்கிற.."

"ஓ.. இப்பவே இவ்வளவு தூரத்துக்கு பேச ஆரம்பிச்சுட்டியா..?"

பாலமுரளியின் முகச்சுளிப்பு மாறி புருவங்கள் உயர்ந்தன...

"இரு.. இரு.. நானும் வந்ததில இருந்து பாக்கறேன்.. நீயென்ன வார்த்தைக்கு வார்த்தை.. இப்பவே இப்படின்னா.. இப்பவே இவ்வளவு தூரத்துக்குன்னு.. சொல்லிக்கிட்டு இருக்க..? அந்த இப்பவேக்கு என்ன தான் அர்த்தம்..?"

"உனக்கு ஒன்னும் தெரியாதா..?"

"சத்தியமாத் தெரியலை.. அதோடு.. எப்பவும் நீ இப்படிப் பேச மாட்டியே.. அதென்ன.. இப்ப மட்டும் இப்படிப் பேசி வைக்கிற..? உனக்கு என்ன ஆச்சு..?"

"இது வரைக்கும் எதுவும் ஆகலை.. இனிமேத்தான் என்னவாகும்ன்னு ஒன்னும் புரியலை..."

பாலமுரளி மண்டை காய்ந்து போனான்.. அவன் மிகவும் நுட்பமான புத்தி கூர்மையுடையவன் தான்.. வியாபாரத்தின் நெளிவு சுளிவுகளை திறம்பட அறிந்தவன்தான்... எந்த இடத்தில்.. எப்படிக் காய்

நகர்த்தினால் வெற்றிபெறலாம் என்ற அரசியல் நுணுக்கங்களை அறிந்த வித்தகன்தான்.. தினமும் ஒரு தொழிலைத் தொடங்கி... அவற்றில் வெற்றிக் கொடியை நாட்டும் திறமைசாலிதான்...

அப்பேற்பட்டவனுக்கு இந்தப் பெண்களின் பொடி வைத்த பூடகமான பேச்சிற்கு பொருள் கண்டு பிடிக்க முடியவில்லை...

ஏன் தமக்கை இப்படிப் பேசுகிறாள் என்று பிடிபடாதவனாக அக்கா பெற்ற பிள்ளைகளைப் பார்த்தவனுக்கு புத்தியில் ஒன்று உறைத்தது..

'அப்படியும் இருக்குமோ..' யோசனையுடன் அக்காவின் முகத்தைப் பார்த்தான்.. அதில் மண்டிக் கிடந்தக் கவலையைக் கண்டதும் அவனுக்குள் சந்தேகம் முளைவிட்டது...

"ஏன்க்கா.. உன் வீட்டுக்காரர் உன்கூட வரலையா..?"

அவனின் கேள்வியைக் கேட்டவள் பதிலைச் சொல்லாமல் குரோதமாக அவனை விழித்துப் பார்த்தாள்..

'ஏன் இப்படிப் பார்க்குது..?' திரும்பவும் அவனுக்கு மண்டை காய்ந்தது...

"அந்த அளவுக்கு ஆகிப் போயிருச்சா..?" பால சரஸ்வதியின் விழிகள் கனல் கக்கின..

"எந்த அளவுக்கு..?" பாலமுரளிக்கு சுத்தமாக ஒன்றும் புரியவில்லை..

அதை நம்ப பாலசரஸ்வதி தயாராக இல்லை.. தம்பியிடம் யுத்தம் புரிய வந்திருந்தவள் எதுடா சாக்கு என்று போர்முரசு கொட்டுவதற்கான காரணத்தைத் தேடிக் கண்டு பிடித்துக் கொண்டிருந்தாள்...

பாலமுரளிபாவம்.. அதை எங்கே அவன் கண்டான்..?

"உங்க மாமாவை.. என் வீட்டுக்காரர்ன்னு சொல்லுகிற அளவுக்கு ஆகிப் போயிருச்சா..?" பாலசரஸ்வதி ருத்ர முகம் கொள்ள...

"அவ்வளவுதானா...?" என்று நிம்மதி முகம் கொண்டான் பாலமுரளி...

"ஏன்க்கா.. இதுக்குப் போயா இவ்வளவு பில்ட் அப்பைக் கொடுகிற..? நான் என்னவோ.. ஏதோன்னு பயந்து போயிட்டேன்.. சரி.. மாமா உன்கூட வரலையா..?"

"வரலை..."

"ஏன்..?"

"இதென்னடா கேள்வி..? அவர்கூட வந்தால்தான் என்னையும்.. என்பிள்ளைகளையும் நீ வீட்டுக்குள்ள விடுவியா..? நான் தனியா என் புள்ளைகளோட இங்கே வந்து போக முடியாதா..?"

இவளுக்கு என்னதான் பிரச்னை என்று திகைத்துப் போய் விட்டான் முரளி.. இந்த அக்கா அவனுக்குப்

புதியவளாகத் தெரிந்தாள்.. அவனறிந்த அவனுடைய அக்கா.. அவனுடைய இனிய சிநேகிதி.. சிலசமயங்களில் அவனைத் தன் தாய்பறவையாக நினைத்து அவனின் சிறகுக்கடியில் ஒன்றிக் கொள்ளும் மென்மையான குணம் கொண்ட அவனின் இனிய சகோதரி... அவனின் பாதுகாவல் என்னும் நிழலில் வளர்ந்த பூங்கொடி...

தம்பியிடம் சிரித்த முகத்தை மட்டுமே அவள் காட்டுவாள்.. சிலசமயம் அவளுக்கான அவனது அதீத கவனிப்பில் மனம் நெகிழும்போது பாசப் பறிவில் அவள் கண்களில் நீர் துளிர்க்கும்...

ஒரு போதும் அவள் அவனிடம் கடுமைமுகம் காட்டியதில்லை... அவளா இன்று அவனிடம் இந்த முறையில் பேசுகிறாள்..?

"உனக்கு என்னக்கா ஆச்சு..?"

"இதுவரைக்கும் எதுவும் ஆகலை.. இனிமேத்தான் என்ன ஆகும்ன்னு எனக்குத் தெரியலை..."

பாலமுரளிக்கு களைப்பு மேலிட்டது... இதே ரீதியான பதில்கள் தொடர்ந்து வந்தால் அவனையுமறியாமல் அவன் கோபம் கொண்டு விடும் அபாயத்தை தவிர்க்க என்ன மார்க்கத்தை மேற்கொள்வது என்று அவன் யோசிக்க ஆரம்பித்தான்..

இந்த வகையான பேச்சு வார்த்தையை மேகலா எப்படி அனுமதித்துக் கொண்டிருக்கிறாள் என்றுதான்

அவனுக்குப் புரியவில்லை.. தாயின் முகம் பார்த்தான்.. பாலசரஸ்வதியின் பேச்சைக் கேட்டு... பாலமுரளிக்கு ஏற்பட்டிருக்கும் மண்டைக்குழப்பம் எதுவும் அவள் மண்டையில் உதயமாகி இருப்பது போன்ற அறிகுறிகள் எதுவும் அவளிடம் தென்படவில்லை... அது அவனுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது...

அக்காவின் வரவையும்.. பேச்சின் போக்கையும் எதிர்பார்த்திருந்தவளைப் போல இருந்தது அவனுடைய அம்மாவின் செய்கை...

"இங்கே பாரு.. எதுவா இருந்தாலும் நோரப் பேசு.. இப்படிச் சத்தி வளைச்சு மூக்கைத் தொடாதே.. எனக்கு ஆயிரம் வேலையிருக்கு..."

"ஓஹோ.. இப்பவே இந்தளவுக்கு வந்துட்டியா.. கூடப்பிறந்தவ வந்திருக்கேன்.. என்கூட உட்கார்ந்து ஒற்றை வார்த்தைப் பேசக்கூட யோசிக்கிற அளவுக்கு மாறிப் போயிட்டன்னா.. இன்னும் எந்த அளவுக்கு நீ மாறிப் போக மாட்ட..?"

"என்னத்தை நான் மாறிப் போயிட்டேன்..? நீ பெரிசா கண்டுட்ட.. நீதான் மாறிப் போயிட்ட.. என் அக்காவா நீ..?"

"பேசுவடா.. பேசுவ.. நீ இதுவும் பேசுவ.. இன்னமும் பேசுவ.. உனக்கு அந்த அளவுக்கு ஆகிப் போயிருச்சில்ல.."

"ந்தா.. சும்மாக் கத்தாதே.. இப்ப என்ன ஆகிப் போச்சுன்னு இந்தக்குதி குதிக்கிற..?"

"இன்னும் என்னடா ஆகனும்..? உன் கூடப் பிறந்த அக்கான்னு நான் ஒருத்தி எதுக்கு இருக்கிறேன்..?"

"இப்படி பொடிவைச்சுப் பேசி.. என் உயிரைக் குறைக்கனும்னு கங்கணம் கட்டிக்கிட்டு இருக்கிற.. வேறெதுக்கு இருக்கிற.."

"வேணாம் முரளி.. சொல்லிட்டேன்.."

"நானும் அதைத்தான் சொல்றேன்.. வேணாம்.. விட்டுரு.. ஒழுங்காய் என்ன பேசனும்னு நினைக்கறியோ.. அதை மட்டும் பேசு..."

"எனக்குத் தெரியாம எப்படிடா நீ உன் கல்யாணத்தை முடிவு பண்ணலாம்..?"

'ஒ.. இதுதான் விசயமா..?'

மென்மையான அக்காவின் புதிதான போர்க் கோலத்திற்கான காரணத்தை அறிந்துகொண்டதில் மண்டை காய்தலில் இருந்து விடுபட்டான் பாலமுரளி....

கூடப்பிறந்தவள்.. வயதில் மூத்தவள்.. அவளிடம் சொல்லாமல் தம்பியின் திருமணப்பேச்சு ஆரம்பித்து விட்டதில் கோபம் வரத்தானே செய்யும்..?

மனது சிறகைப் போல லேசாகிவிட.. பழையபடி அவளது தம்பியாக அக்காவிடம் இலகுவாகச் சிரித்தான் பாலமுரளி...

"இதுக்குத்தான் இந்த கோபமா...? நான் என்னவோ.. ஏதோன்னு பயந்துட்டேன்..."

"ஏண்டா.. உனக்கு இது ரொம்பச் சாதாரணமான விசயம் போலத் தோணுதா....?"

"அப்படியில்லக்கா... அம்மாவுக்கே இப்பத்தான் சொன்னேன்..."

"விளங்கிரும்டா... நம்ம குடும்பத்திலேயே இல்லாத ஒன்னைச் செய்ய ஆரம்பிச்சுருக்கே.. இது கொஞ்சம் கூட நல்லாயில்ல முரளி.. கொஞ்சம் என்னைப் பத்தி நீ நினைச்சுப் பார்த்தியா..?"

"இது என் கல்யாணம்.. இதில உன்னைப் பத்தி நினைக்க என்னக்கா இருக்கு..? செய்ய வேண்டிய சீர்வரிசையைப் பத்திச் சொல்றியா..? அதை ஒன்னுக்குப் பத்தா.. எப்பவும் போல குறைவில்லாம செய்துருவேன்.. கவலைப்படாதே.."

அவள் என்ன சொல்கிறாள்.. அவன் எப்படிப் பதில் சொல்கிறான்..? கோபத்தில் முகம் ஜிவுஜிவுவென்று ஆகிவிட.. பாலசரஸ்வதி பல்லைக்கடித்தபடி தாயைப் பார்த்தாள்..

அவளோ எனக்கென்ன என்று மோட்டுவளையைப் பார்த்தாள்...

இதுவேலைக்கு ஆகாது என்ற முடிவுடன் தனித்து தம்பியுடன் வாதாட ஆரம்பித்தாள் பாலசரஸ்வதி..

"ஆக.. எனக்கும்.. இந்த வீட்டுக்கும் உள்ள ஒரே சம்பந்தம் சீர்வாங்குறது மட்டும்தான்.. இல்லையாடா தம்பி..?"

"வேற என்னக்கா வேணும்.. ?"

"உரிமை வேணும்டா.. என் தம்பியின் கல்யாணத்தில நல்லது.. கெட்டதை எடுத்துச் சொல்கிற உரிமை எனக்கு வேணும்.. ஒற்றைத் தம்பி... நீ எனக்கும் அம்மாவுக்கும் உன்னை விட்டா யாருடா இருக்கா..? உனக்கு வருகிற பெண்டாட்டி நல்லவளா இருந்தாத்தானே எனக்கும் பிறந்தவீட்டு சொந்தம் நிலைக்கும்.. ? என் அம்மாவும் நிம்மதியா நடமாடுவாங்க..."

பாலசரஸ்வதியின் கண்கள் கலங்கி விட்டன.. அதில் உதிர்ந்த நீர்த்துளிகள்.. பாலமுரளியை பதற வைத்தன.. உதிர்ந்த அந்த நீர்த்துளிகளில் அவன் உருகிப் போய்விட்டான்...

உன் காலடிச்சுவட்டில் - என்..
கால் பதித்து நடந்தேன்...

பாலமுரளி தாயின்மேல் பாசம் கொண்டவன்.. தமக்கையின் மீது பிரியம் கொண்டவன்.. அந்தக் குடும்பத்தின் ஆண்மகன்.. தாயையும்.. தமக்கையையும் ஆதரித்துக் காக்க வேண்டிய கடமையில் கட்டுண்டவன்.. அவன் அந்தக் குடும்பத்தின் அச்சாணி.. ஆணிவேர்...

அவனால்தான் அந்தக் குடும்பத்தின் வாழ்க்கைச் சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது.. அவனால்தான் அந்தக் குடும்பம் நிலை கொண்டிருக்கிறது...

தமக்கையின் குண மாறுதலுக்கான காரணத்தை யூகித்துக் கொண்டவனுக்குள் பாசம் பொங்கியது.. அதுவரை அவளுக்கு உரிமையாக இருந்த தம்பியும்.. பிறந்தவீடும் தம்பியின் மனைவியின் வருகைக்குப் பின் மாறிவிடுமோ என்று அக்காபயப்படுவதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது...

அவள் ஏன் அப்படி நினைக்க வேண்டும்.. ? என்றுமே அவன் அவளின் தம்பிதான்.. இதை அவளுக்கு புரிய வைக்க முயன்றான் பாலமுரளி..

"அவ நல்லவதான்க்கா..."

"உனக்கு எப்படித் தெரியும்.. ?"

"பழகிப் பார்த்தவன் நான்.."

"காதலா.. ?"

முகம் சுளித்தாள் பாலசரஸ்வதி.. அவளுக்கு அந்த வார்த்தையைச் சொல்லவே பிடிக்கவில்லை.. குடும்ப கௌரவம்.. பாரம்பர்யம் முதலியவற்றை அவள்தான் கட்டிக்காக்க வேண்டும் என்று இரவும் பகலும் போதித்த மேகலாவின் இடைவிடாத போதனைகளைக் கேட்டு வளர்ந்தவள் அவள்.. பார்வையை இந்தப்பக்கம்.. அந்தப் பக்கமென்று திருப்பாமல் ஒரே நேர் கோட்டில் கண்களில்

கருப்புத் துணியைக் கட்டிக்கொண்டு வாழ்க்கைப் பாதையில் பயணித்தவள் அவள்...

பெண் பார்க்க வந்த ராஜராஜனை நிமிர்ந்து பார்க்கக் கூட அவள் தயங்கினாள்.. அவளின் அந்த அச்சமும்.. வெட்கமும் தான் ராஜராஜனை அவள்பால் ஈர்த்து காதலால் கட்டிப் போட்டது...

அப்படிப்பட்டவள் காதல் என்ற வார்த்தையில் முகம் சுளிக்காமல் என்ன செய்வாள்..?

"நீ மாமாவைக் காதலிக்கலையா..?" பாலமுரளி நிதானமாகக் கேட்டான்...

"ஏண்டா.. இதுவும்.. அதுவும் ஒன்னா..?"

"என்ன பெரிய வித்தியாசத்தைக் கண்டுட்ட..? மாமா உன்னைப் பெண்பார்க்க வந்தப்போ உன்னைப் பார்த்தாரு.. பார்த்தவுடனே உன்னை அவருக்குப் பிடிச்சுப் போயிருச்சு.. இது கண்டதும் காதலில்லையா..?"

"முரளி..." பாலசரஸ்வதிக்கு முகம் சிவந்துவிட்டது..

"நானும் அதைப் போலத்தான்.. உன் சின்ன மாமியா வீட்டுக்கு யதேச்சையா போயிருந்தேன்.. அங்கே என்னன்னா.. நம்ம ஊர் திருவிழா மாதிரி சீரியல் செட்டைக் கட்டி.. தோட்டத்தில் ஜெகஜ்ஜோதியா கூடியிருந்தாங்க.. என்னாங்கடா விசேசம்ன்னு கேட்டாக்க.. உன் சின்னமாமியா பொண்ணுக்கு பிறந்தநாளுன்னு சொல்றாங்க... எனக்குத் தலைவலியாப்

போச்சு.. உடனே திரும்பிரலாமுன்னு பாத்தா.. அங்கே ஒரு பொண்ணு.. அழகா.. அம்சமா நின்னுக்கிட்டு இருந்தா.. பார்த்தவுடனே மனசுக்குள்ள பத்திக்கிச்சு.. பச்சக்குன்னு அவமுகம் மனசில பதிஞ்சு போச்சு.. மறக்க முடியல.. கட்டினா அவளத்தான் கட்டனும்னு தோணிப்போச்சு.. மாமாவும் உன்னைப் பார்த்துட்டுப் போன உடனே இதைத்தான் அவர் வீட்டிலே சொன்னதா... நீ எனக்குச் சொன்னதாக ஒரு ஞாபகம்.. உண்டா.. இல்லையா..?"

"அவரு முறைப்படி என்னைப் பெண் பார்க்க வந்தாரு முரளி..."

"நான் பெண் பார்க்கன்னு போகலை.. அவ்வளவு தான்.. அதனால் என்ன குறைஞ்சு போச்சு..? முறைப்படி பொண்ணுப் பார்த்து பொண்ணைக் கேட்க.. என் குடும்பத்தோட வர்றேன்னு அவ வீட்டிலே சொல்லிட்டுத்தான் வந்திருக்கேன்.. எனக்காக.. அம்மாவோட... நீயும் மாமாவும்தான் பொண்ணுக் கேட்கனும்..."

"அந்தப் பொண்ணுகுணம் சரியில்ல முரளி..."

பாலசரஸ்வதி தவிப்பாகச் சொல்ல.. பாலமுரளியின் புருவங்கள் உயர்ந்தன... அவனுடைய அக்காவுக்கு ராதிகாவைப் பற்றிய எந்த விவரமுமே தெரியாது.. அவள் இருப்பது திருநெல்வேலியில்.. ராதிகா இருப்பது சென்னையில்...

"உனக்கு எப்படித் தெரியும்...?"

"ஷோபா சொன்னா.. இந்தப் பொண்ணு ஷோபா வோட கிளாஸ்மேட்டாமே..?"

பாலசரஸ்வதி சொன்னதைக் கேட்டதும்..

"இவ்வளவுதானா.. நான்.. என்னவோ.. ஏதோன்னு நினைச்சிட்டேன்..." என்று தோள் குலுக்கிச் சிரித்தான் முரளி...

"என்னடா இப்படி ஈஸியா எடுத்துக்கறே..?" பாலசரஸ்வதிக்கு மனம் தாளவில்லை...

"வேற எப்படி எடுத்துக்கச் சொல்ற..? அந்த ஷோபாவைப் பத்தியே எனக்கு நல்ல அபிப்ராயம் கிடையாது.. அவ ஒருத்தரைப் பார்த்து நல்லவங்கன்னு சொன்னாதான் நாம யோசிக்கனும்.. பயப்படனும்.. அவளே குணம் சரியில்லாதவ... அவ குணம் சரியில்லன்னு சொன்னா.. ராதிகாதான் குணக்குன்று.. குடும்பத்துக் கேத்த குத்துவிளக்கு.. இதை நீ புரிஞ்சுக்க.. உன் சின்ன மாமியாமக பேசின பேச்சைக் கேட்டுக்கிட்டுத்தான் நீ இப்படி வரிஞ்சு கட்டிக்கிட்டு சண்டைக்கு வர்றியா..? போக்கா..."

"இல்லடா முரளி.. ஷோபா நீ நினைக்கிறதைப் போல இல்ல... நீ அவளைத் தப்பா புரிஞ்சுக்கிட்டு இருக்க.."

"நீ மட்டும் சரியாப் புரிஞ்சுக்கிட்டு இருக்கியாக்கும்.. அவளப்பத்தி எனக்குத்தான் தெரியும்.. விட்டுத்தள்ளு.."

"சரி.. நீ அவளைக் கட்டிக்க வேணாம்.. வேற ஒரு நல்ல பொண்ணாப் பார்த்துக் கட்டிக்கடா தம்பி.. ராதிகா உனக்கு வேணாம்டா முரளி..."

"ஏன்க்கா.. எனக்கு இவளத்தான் பிடிச்சிருக்கு.. கட்டினா இவளத்தான் கட்டுவேன்னு சொல்றேன்.. நீ அதைக் காதில வாங்கிக்காம பேசிக்கிட்டே போற.. ஒன்னைப் புரிஞ்சுக்கக்கா.. எனக்கு கல்யாணம்ன்னு ஒன்னு வாழ்க்கையில நடந்தா.. அது இவளோடதான் நடக்கும்.. இவதான் எனக்கு பெண்டாட்டி.. இவ மட்டும்தான் எனக்கு பெண்டாட்டி.. புரிஞ்சுக்க..."

அதற்கு மேல் அந்தப் பேச்சைத் தொடர விருப்பமில்லை என்பதை தெளிவாக உணர்த்தியவனாக பாலமுரளி எழுந்து போய்விட்டான்..

பாலமுரளியின் முடிவை இனி யாராலும் மாற்ற முடியாது என்பதைத் தெள்ளத் தெளிவாக புரிந்துகொண்ட பாலசரஸ்வதிக்கு தனக்கு ஏற்பட்ட தோல்வியினை ஜீரணித்துக் கொள்ள சிரமமாக இருந்தது...

அதுவரை அவள் கேட்டு இல்லையென்று பாலமுரளி சொல்லியதே இல்லை.. முதன் முதலாக அவள் கேட்டதைச் செய்ய அவன் மறுத்துவிட்டான்.. அவள் வேண்டாமென்று எவ்வளவோ சொல்லியும் ராதிகாதான் அவனுக்கு மனைவியென்று சொல்லி விட்டான்..

திருமணமாகி அந்த வீட்டில் காலடி வைப்பதற்கு முன்னாலேயே தம்பியின் மீது அவளுக்கிருந்த

ஆளுமையை தகர்த்து எறிந்த ராதிகாவை மனமார வெறுத்தாள் பாலசரஸ்வதி...

அவளுக்கென்று அவள் வார்த்தைக்கென்று ஒரு மரியாதை பாலமுரளியிடம் இருந்தது.. அதை.. அவன் கையால் தாலி வாங்கிக்கொண்டு வருவதற்கு முன்னால் உடைத்தெரிந்து விட்டாள் அந்த ராதிகா.. அவளை மன்னிக்க பாலசரஸ்வதிக்கு மனம் வரவில்லை...

தோற்றுப் போன மனநிலையுடன் மறுநாளே அவள் திருநெல்வேலிக்கு திரும்பி விட்டாள்... பாலமுரளி அவளைத் தடுக்கவில்லை.. அதே சமயம் எப்போதும் அவளுடன் செல்லும் சீர்வரிசைகளை குறைவில்லாமல் அனுப்ப மறக்கவுமில்லை...

"வேண்டாம் முரளி..." அவன் முகம் பார்க்காமல் பாலசரஸ்வதி சொன்னபோது...

"ஏன்..?" என்று புருவம் உயர்த்தினான் அவன்...

"இப்பப் போல எப்பயும் உன்னால அனுப்ப முடியுமோ என்னவோ.. எதற்கும் நான் இப்பவே தயாராகிக்கிறது நல்லதுடா.. இதைக் கொஞ்சம் கொஞ்சமா குறைச்சுக்கப் பழகிக்கறேன்.." பாலசரஸ்வதியின் குரல் கம்மியது..

"இதோ பாருக்கா.. நீ எதை மனசில நினைச்சுக்கிட்டு இப்படிப் பேசறன்னு எனக்கும் புரியுது.. ராதிகாதான் என் பெண்டாட்டி.. அதில எந்தவித மாற்றமுமில்லை.. அதேசமயம்.. நீ என் அக்கா.. கடைசி

வரைக்கும் உனக்கு நிரக்க சீர் செய்ய கடமைப்பட்ட உன்னோட தம்பி நான்.. அதைக் கடைசிவரை செய்வேன்.. இதிலயும் எந்தவித மாற்றமுமில்லை.. அதனால எதையும் நீ குறைச்சுக்க பழகிக்க வேணாம்.. உனக்கு எதுவும் குறையவும் குறையாது.. இது உன் வீடுக்கா.. நீ பிறந்து வளர்ந்த வீடு.. இங்கே உனக்கிருக்கிற உரிமையில சிறு குறைவுகூட வராது.. நான் வரவிடமாட்டேன்.." பாலமுரளியின் குரலில் உறுதி இருந்தது...

பாலசரஸ்வதி போய்விட்டாள்... மேகலாவிடம் தமக்கை பேசிய வார்த்தைகளைப் பற்றி அவன் பேசிய போது அவள் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவேயில்லை...

"கிடக்கிறா விடு.." என்றுதான் அவள் சொன்னாள்..

இத்தனைக்கும் அவள் மகளுக்கான முக்கியத்துவம் குறையக்கூடாது என்பதில் கண்டிப்பாக இருக்கும் தாய்.. ஒவ்வொரு முறை மகள் பிறந்தவீட்டிற்கு வந்து திரும்பும் போதும் அவளுடன் வண்டி நிறைய சீர் செல்ல வேண்டும் என்பதில் கவனம் எடுப்பவள்.. அதை மகனுக்குச் சொல்லி வளர்த்தவள்..

"அம்மா..." என்று வியந்த மகனின் முகம் பார்த்தாள் அந்த அன்னை.. அவள் முகத்தில் தாய்மையின் பாசம் சொட்டியது...

"கறந்த பாலைவிட உன்பாசம் சுத்தம்டா முரளி.. நீயா ஒற்றை உடன்பிறப்பை கைவிட்டுடவ..? அவ மனசை

யாரோ கலைச்சிருக்காங்க.. நம்ம வீட்டில பிறந்த பொண்ணுக்கு கூடப்பிறந்தவனின் பாசத்து மேல சந்தேகம் வரலாமா..? அவ சொல்லியா அவள நீ வளர்த்த..? அவ கேட்டா அவள படிக்க வைச்ச..? அவ ஆசைப்பட்டா.. பெரிய இடத்தில கண்ணுக்கு லட்சணமான புருசனுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்த..? அவ உன்னைவிட மூத்தவ.. ஆனா.. அவ உன்ன வளர்க்கலையேடா தம்பி.. நீதானே அவள வளர்த்த.. அவளுக்கு தம்பியாவா நீ இருந்த..? தகப்பனா இருந்தியேடா சாமி.. அந்த நன்றி விசுவாசம் அவ மனசில இருந்தா இப்படியெல்லாம் பேசுவாளா..?"

"விடுங்கம்மா.. அதுக்கு அதோட சின்ன மாமியா மகள நான் கட்டிக்கலைங்கிற வருத்தம்..."

"வரலாமா.. அப்படியாப்பட்ட வருத்தம் அவ மனசில வரலாமா..? நீ ஆசைபட்டுட்டன்னு வாய்விட்டு சொல்றியேப்பா.. அவளத்தவிர வேறொருத்தி கழுத்தில தாலியைக் கட்ட மாட்டேன்னு உறுதியா நிக்கறியேப்பா.. அப்படியிருந்தும் இவ இப்படிப் பேசினா.. இவ மனசில உன்மேல பாசம் இல்லைன்னு தானே அர்த்தமாகுது..."

"சேச்சே.. அக்கா அப்படியில்லம்மா.. அதுகுணத்தப் பத்தி நமக்குத் தெரியாதா...?"

"உன் குணத்த அவ தெரிஞ்சுக்கலையேடா தம்பி.. நீ ஒன்னை நினைக்க மாட்ட... நினைச்சா கடைசிவரைக்கும் அதில நிலைச்சு நிற்பன்னு

அவளுக்குத் தெரியாதா..? தெரிஞ்சும் ஏன் உன் விசயத்தில தலை கொடுக்கிறா.."

"அதுக்கு என்னவோ ஒரு பயம்.. எல்லாப் பொண்ணுகளைப் போல இதுவும் தாய்வீட்டுப் பாசம் தம்பி பெண்டாட்டி வந்துட்டா குறைஞ்சு போயிடுமோன்னு நினைச்சிருச்சு..."

"அவளுக்கு தாய் வீட்டுப் பாசம் நிலைக்க நிக்கனும்கிறதுக்கா... காலமெல்லாம் நீ கல்யாணம் பண்ணிக்காமலே நிக்கனுமுன்னு அவ நினைக்கிறாளாடா முரளி..."

"என்னம்மா இது.. அதுதான் விவரம் புரியாமப் பேசுதுன்னா.. நீங்களும் அதைப் போலவே பேசி வைக்கறீங்க..."

"அதில்லைடா முரளி.. நீ ராதிகாதான் உனக்குப் பெண்டாட்டியாய் வர முடியும்ன்னு சொல்லிட்ட... அந்த வார்த்தை வந்த பின்னாலே வேற பேச்சுக்கு இங்கே இடமில்ல.. அதை உன் கூடப்பிறந்தவ புரிஞ்சுக்கனும்.. எனக்கு அவ முக்கியம்தான்.. அதே சமயம் என் மகனும் எனக்கு முக்கியம்.. ராதிகா நல்ல பொண்ணுடா தம்பி.. எனக்கு அவள ரொம்ப புடிச்சிருக்கு.. அக்கா இப்படிச் சொல்லிட்டானேன்னு மனசில போட்டு ஒழப்பிக்காதே.. அம்மா நான் சொல்றேன்.. ராதிகாதான் என் மருமக.. நிம்மதியாய் ஆக வேண்டிய வேலைகளப் பாரு..."

எப்போதும் மகளைப் பற்றியே பேசிக் கவலைப்படும் மேகலாவின் மனதில் மகனுக்கான இடம் எப்பேற்பட்டதாக இருந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட முரளி மெய்சிலிர்த்துப் போனான்...

அந்த வார இறுதியில் அவர்கள் குடும்பத்தோடு சென்னைக்கு ராதிகாவைப் பெண் கேட்டுப் போனார்கள்.. பாலசரஸ்வதி தலைமுதல் கால்வரை வலிப்பதாகச் சொல்லி.. வரமுடியாது என்று கூறிவிட.. மேகலா முதன் முறையாக மருமகனுக்குப் போனைப் போட்டு நேரடியாகப் போசினாள்...

அப்போது பாலமுரளி வீட்டில் இல்லை...

"முரளிக்கு கல்யாணம் கூடி வந்திருக்கு மாப்பிள்ளை.. ஒரு பொண்ணுமேல ஆசைப்படறான்.. பொண்ணு மெட்ராஸில இருக்கு... அழகாயிருக்கு.. படிச்சுக்கிட்டு இருக்கு.. நம்மளப்போல வசதிவாய்ப்பில உச்சத்தில இல்லாட்டியும் மரியாதையா.. கௌரவமா வாழற நடுத்தரக் குடும்பம்.. சரசு இதைப் பிடிச்சுக்கிட்டு தொங்கறா.. நமக்கு பணம் காசுக்கு குறைவில்ல.. வர்றவ எந்த வீட்டில பொறந்தா என்ன..? அவ கொண்டு வந்தா பொழைக்கப் போறோம்..? இதைச் சொன்னா காதில வாங்கிக்க மாட்டேங்கிறா.. முரளியோ கல்யாணம்ன்னு ஒன்னு நடந்தா அந்தப் பொண்ணோடதான்னு தீர்மானமா சொல்லிட்டான்... உங்களுக்கு அவன் குணம் தெரியும்.. பிடிச்சா உடும்புப்பிடித்தான்.. மாறவே மாட்டான்..."

"அதனால என்னத்தை.. அவரு மனசுப் பிரகாரமே கல்யாணத்தைப் பண்ணிவச்சிர வேண்டியதுதானே..?"

"அதுக்குத்தான் மெட்ராஸுக்கு பொண்ணு கேட்டுக் கிளம்பப் போறோம்.. நீங்களும்.. சரசுவும் வந்து பொண்ணு கேட்டாத்தானே நல்லாயிருக்கும்..?"

"நிச்சயமாய்.. அதானே முறை..?"

"ஆனா சரசு வர மாட்டேங்கிறா.."

"அப்படியா..? இதைப்பத்தி ஒருவார்த்தைகூட எங்கிட்ட அவ சொல்லலையே..."

"சொல்லிட்டதா இல்ல எங்கிட்டச் சொன்னா.. உங்களுக்கு வேலையிருக்காம்... அவளுக்கு தலைமுதல் கால்வரை நோவா இருக்காம்..."

"ஹா.. ஹா.. எனக்கு முக்கியமான வேலை யெதுவும் இல்ல.. அவளுக்கும் உடம்பு நல்லாயிருக்கு.. அவ அப்படிச் சொன்னாளா..? நீங்க இதை நினைச்சுக் கவலைப்படாதீங்க.. என்னைக்கு கிளம்பனும்னு சொல்லுங்க.. அன்னைக்கு நான அவளைக் கூப்பிட்டுக்கிட்டு வர்றேன்..."

"முரளி தகப்பனில்லாத புள்ள மாப்பிள்ளை.. நீங்கதான் அவனுக்கு முன்னாடி நின்னு கல்யாணத்தை நடத்திக் கொடுக்கனும்..."

"இதை நீங்க எனக்குச் சொல்லனுமா அத்தை..? நான் முரளியை விட்டுக் கொடுக்க மாட்டேன்..."

மேகலா இருந்த இடத்தில் இருந்துகொண்டு நினைத்ததை செய்து முடித்துவிட்டாள்...

என் மனதில் உறங்கிக் கொண்டிருந்த உணர்வுகளை ஏன் எழுப்பி விட்டாய்..?

மேகலா கெட்டிக்காரி.. அந்தக் காலத்திலேயே மாற்றி யோசித்து தன் பிள்ளைகளுக்கு வேண்டியதைப் பெற்றுக்கொடுத்த சாமர்த்தியசாலி....

பாலசரஸ்வதி அதை மறந்து விட்டாள்.. தாயிடம் மறுப்புச் சொல்லிவிட்டால் போதும்.. பிடிக்காத பெண்ணை தம்பிக்காக பெண் கேட்டுச் செல்ல வேண்டிய பொறுப்பிலிருந்து கழன்று கொள்ளலாம் என்ற அவளது நினைவு பொய்த்து விட்டது...

மேகலா மகளைக் கெஞ்சாமல்.. மருமகனிடம் இரண்டு நிமிடம் பேசினாள்.. ராஜராஜன் மனைவியைத் தூக்கி காரில் போட்டுக் கொண்டு குடும்பத்துடன் சென்னைக்கு கிளம்பி வந்து விட்டான்...

எந்த பண்ணை வீட்டில் ராதிகாவை பாலமுரளி தொட்டானோ.. அதே பண்ணை வீட்டில்தான் அவர்கள் எல்லோரும் தங்கினார்கள்...

"வாவ்..! பெண்டாஸ்டிக்..! டூரிஸ்ட் ஸ்பாட் மாதிரியே இருக்கு.."

ராஜராஜன் பண்ணை வீட்டைச் சுற்றி வந்து அதன் அழகை ரசித்தான்.. ராஜீவும்.. சாதனாவும்.. வெளியூருக்கு வந்திருக்கும் மகிழ்வில் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.. மேகலா ஓய்வாக அமர்ந்திருக்க.. பாலமுரளி வேலைக்கு வைத்திருந்த வள்ளியம்மாள் அவளுக்கு காபிகொடுத்து உபசரித்துக் கொண்டிருந்தாள்.. அவளுடைய கணவனான பொன்னுச்சாமி கார்களை துடைத்துக் கொண்டிருந்தான்..

"இந்த வீட்டை எப்ப வாங்கின முரளி...?" பாலசரஸ்வதி எரிச்சலுடன் கேட்டாள்...

"இப்பத்தான்..." சாதாரணமாகக் கூறினான் பாலமுரளி..

"எங்ககிட்ட சொல்லவேயில்ல..." குற்றம்சாட்டும் பாவனையில் அவள் குரல் இருந்தது..

"வேலையில மறந்திருப்பேன்.." அதே சாதாரணமான குரலில் பாலமுரளியிடமிருந்து பதில் வந்தது...

"நம்ம தேனூத்து வீடே டூரிஸ்ட் ஸ்பாட் போல அழகா இருக்கு.. இங்கே நமக்கு எதுக்குடா வீடு...?" பாலசரஸ்வதி விடாமல் கொக்கி போட்டாள்..

"அடடா.. விடு சரஸ்.. இது ஒரு பெரிய மேட்டரா..? முரளி சென்னையில பெண்ணெடுக்கனும்னு தீர்மானம்

பண்ணிட்டார்.. எதுக்கெடுத்தாலும் மாமனார் வீட்டிலு நேராய் போய் உட்கார்ந்திர முடியுமா..? இப்பப்பாரு.. இந்த வீடு இருக்கிறதினால நாம நேரா இங்க வந்திட்டோம்.. இல்லைன்னா ஹோட்டலிலதான் தங்கியிருக்கனும்..? நாலையும் யோசித்துத்தான் உன் தம்பி சென்னையில வீடு வாங்கிப் போட்டிருக்கனும்.. அவருக்கு எப்பவுமே முன்யோசனை அதிகம்.." ராஜராஜன் மைத்துனன் பக்கம் நின்று பேசினான்...

"அதைச் சொல்லுங்க.. இவன் முன்யோசனை யாருக்கு வரும்..? தென்காசியில் இவன் பங்களா மேல பங்களாவா வாங்கிப் போடும் போதே நினைச்சேன்.. எதுக்கு தம்பி டவுனுக்குள்ள மாளிகையைக் கட்டறான்னு.. இப்ப இல்ல தெரியுது.. அவன் வசந்த மாளிகையை கட்டியிருக்கான்.. சென்னையில பிறந்து வளர்ந்தவ தேனூத்தில குப்பை கொட்ட மாட்டான்னு இவன் மனசு கணக்குப் போட்டு வச்சிருக்கு.. அதனால அம்மாவ தேனூத்தில விட்டுட்டு இவன் தென்காசியில தனிக்குடித்தனம் போட ஐடியா பண்ணிட்டான்..."

"உளராதேக்கா..."

"அப்ப தென்காசியிலயும் இருக்க மாட்டயா..? ஓ... சென்னையில பிறந்து வளர்ந்த மகராணிக்கு தென்காசிப் பட்டினமும் பட்டிக்காடாத்தானே தெரியும்..? அதுக்காகத்தான் இங்கேயே இப்படியொரு வீட்டை வாங்கிப் போட்டிருக்கயா..? அவகூட இங்கேயே குடித்தனம் போட்டுரலாமுன்னு முடிவு பண்ணியிருக்கயா..?"

பாலமுரளி ராஜராஜனை குறிப்பாக பார்க்க.. அவன் மனைவியை முறைத்தான்...

"உனக்கேண்டி இப்படியெல்லாம் புத்தி போகுது...?"

"இல்லைங்க.. யார் மனசில என்ன இருக்குன்னு யாருக்குத் தெரியும்..?"

"இத்தனை நாளா.. உன் மனசில என்ன இருக்குன்னு தெரியாம நான் குடும்பம் நடத்தியிருக்கேன் பாரு.. என்னைச் சொல்லனும்...."

ராஜராஜன் கடிந்து கொண்ட விதத்தில் பாலசரஸ்வதி வாய் மூடிக்கொண்டாள்.. அவள் நகர்ந்ததும் மனைவியின் சார்பாக மைத்துனனிடம் மன்னிப்புக் கேட்டான் ராஜராஜன்...

"அவ கிறுக்குப் பிடிச்சதனமா பேசறா.. அதையெல்லாம் மனசில வைச்சுக்காதீங்க முரளி..."

பாலமுரளி தோளைக் குழுக்கிச் சிரித்தான்... அவர்கள் குளித்து சாப்பிட்டார்கள்.. வள்ளியம்மாள் பரிமாறிய உணவு வகைகளின் ருசியில் அவளை மேகலா பாராட்டினாள்.. பாலசரஸ்வதி அடுத்த கேள்விக்கணையை தொடுக்க ஆரம்பித்தாள்..

"இவங்க ரெண்டு பேரும் புருசன் பெண்டாட்டி போல இருக்கே..."

"ஆமக்கா..."

"இங்கேதான் தங்கியிருக்காங்களா...?"

"தோட்டத்தில இருக்கிற அவுட்-ஹவுஸில இருக்காங்க..."

"ஓஹோ.. இந்தக் காலத்தில ரெண்டு பேருக்கு வேலையைப் போட்டுக் குடுத்து.. குடும்பத்தோட தங்க வீடும் குடுத்துன்னு.. இத்தனை பண்ணியிருக்கயே முரளி.. இதெல்லாம் எதுக்கு..? வீண்செலவுதானே..."

பரிமாறிக் கொண்டிருந்த வள்ளியம்மாள் முகம் கருக்க.. சமையலறைப் பக்கம் வேலையிருப்பதைப் போல போய் விட்டாள்... மேகலா மகளை கோபத்துடன் பார்த்தாலும்.. மருமகனின் முன்னால் மகளைத் திட்டக் கூடாது என்ற நினைவோடு மௌனமாக மகனை ஒரு பார்வை பார்த்துவிட்டு தண்ணீர் தம்ளரை எடுத்து வாயில் சரித்து தன் கோபத்தை குறைத்துக் கொள்ள முயன்றாள்...

ராஜாராஜனுக்கும் அதே நிலைமைதான்.. எப்படித்தான் அடக்கி வைத்தாலும்.. ஏதாவது ஒன்றைக் கண்டுபிடித்து அதைப்பற்றி கேள்வி எழுப்பும் மனைவியை வாயை மூட வைக்கும் மார்க்கங்களை யோசித்து யோசித்து அவனுக்கு தலைவலியே வந்துவிட்டது...

பாலமுரளி இதற்கெல்லாம் அலட்டிக் கொள்கிறவனாகத் தெரியவில்லை... உன்னைப் போல எத்தனை பேரை பார்த்திருப்பேன் என்ற ரீதியில் பாலசரஸ்வதியை ஒர்பார்வை பார்த்தவன்.. நிதானம் குறையாமல் அதற்கும் ஒரு பதிலைச் சொன்னான்...

"இல்லேக்கா.. இதெல்லாம் வீண்செலவு இல்லை.. இன்னும் சொல்லப் போனா இதனால எனக்குப் பணம் தான் மிச்சமாகுது..."

எவ்வளவு நேரம்தான் வள்ளியம்மாளால் சமையலறையில் வேலையிருப்பதைப் போல பாவனை செய்தபடி ஒளிந்திருக்க முடியும்..? பரிமாற அவள் சாப்பாட்டு மேஜைக்கு வந்துதானே ஆக வேண்டும்..? வேறு வழியின்றி சாப்பாட்டு மேஜைக்கு வந்தாள் பாலமுரளியின் பேச்சில் முகம் மலர்ந்தாள்...

'வேலைக்காரியின் முன்னால் என்னை வாரி விடுகிறானா....?'

பாலசரஸ்வதியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது...

"யாருகிட்டடா காது குத்தற...?"

"காதும் குத்தலை.. ஜிமிக்கியும் போட்டு விடலை.. நீ கதையைக் கேளு... எப்படியும் மாசத்துக்கு ஒரு தடவையாவது நான் சென்னைக்கு வந்து போக வேண்டியிருக்கு..."

"முதல்லதான் மாசத்துக்கு ஒருதடவ.. இனி மாசத்துக்கு எத்தன தடவையோ...?"

"தெரிஞ்சால் சரி... இங்கே வரும் போதெல்லாம் ஸ்டார் ஹோட்டலில் ரூம் போடனும்.. அந்தச் செலவில் பாதிதான் இவங்களுக்கு நான் சம்பளமாய்

கொடுக்கிறேன்.. அவுட் ஹவுஸ் சும்மாதான் இருக்கு.. இவங்க அதில தங்கியிருக்கிறதால வீட்டுக்கும்.. தோட்டத்துக்கும் பாதுகாப்பு... அதோட.. இங்கே இருக்கிற பழ மரங்களிலயும்.. தென்னை மரங்களிலயும் வருமானம் வருது.. அதைக் கட்டிக்காப்பாத்தி.. கணக்கு வழக்கைப் பார்க்க இவங்க இங்கேயே இருந்தாகனும்..."

பாலமுரளி கோர்வையாக பேச.. பாலசரஸ்வதி அடுத்த கேள்விக்கணையைத் தொடுக்க ஆயத்தமானாள்...

"அப்ப.. உன் மாமனாரா வரப் போகிறவரு பாடு கொண்டாட்டம்தான்னு சொல்லு..." பாலசரஸ்வதியின் குரலில் எகத்தாளம் மிதந்தது...

"அவரு எதுக்காக இதைக் கொண்டாடனும்..?" பாலமுரளி புருவங்களை உயர்த்தினான்...

"இங்கேயோ வருமானம் கொட்டுதுங்கிற.. நீயோ தேனூத்தில இருந்துக்கிட்டு வந்து போகப் போறேங்கிற.. இதை மேற்பார்வை பார்க்கிற சாக்கில அவர் ஆண்டு அனுபவிக்கலாமே..."

ராதிகாவின் தகப்பனாரை பாலசரஸ்வதி குறைவாகப் பேசுவதில் பாலமுரளிக்கு கொஞ்சம்கூட உடன்பாடில்லை.. அவன் அவளுடைய தம்பி.. அவனைப் பேசுவதைக்கூட.. அக்கா என்பதற்காக பொறுத்துக் கொள்ளலாம்.. ஆனால் அவளுக்கு பிடிக்காத பெண்ணைப் பெற்றவர் என்ற ஒரே காரணத்திற்காக

கிருஷ்ணமூர்த்தியின் மீது அவள் பழி போட்டது பாலமுரளியின் கோபத்தை கிளறிவிட்டது...

"எல்லோருமே.. அடுத்தவங்க சொத்துக்கு ஆளாப் பறக்கிறவங்களா இருக்க மாட்டாங்கக்கா.. அவங்க வீடு நம்மளப் போல பெரிய பணக்கார வீடா இல்லாம இருக்கலாம்... அதுக்காக வசதி குறைஞ்சவங்கன்னு அர்த்தமில்ல.. ராதிகாவோட அப்பா சென்ட்ரல் கவர்ண்மென்டில ஆபிசரா இருக்கார்.. சென்னையில சொந்தவீடு.. கிராமத்தில நிலபுலன்னு அவரும் வசதிவாய்ப்பா இருக்கிறவர்தான்.. மகளோட சொத்தில உரிமை கொண்டாட வேண்டிய அவசியம் அவருக்கில்ல.."

"மகளோட சொத்தா..?"

"ஆமா.. இந்த பண்ணை வீட்டை ராதிகாவின் பெயரில்தான் வாங்கியிருக்கேன்..."

"என்னது...???"

பாலசரஸ்வதி நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட.. பாலமுரளி கைகழுவ எழுந்து சென்று விட்டான்...

"ம்ஹீம்.. எனக்குத்தான் நெஞ்சுவலி வருதுன்னா.. நீயும் அதை இழுத்துக்கிட்டியா..? வள்ளி கொஞ்சம் ஜீஸைக் கொண்டு வாம்மா..."

மேகலா தலையில் அடித்துக் கொண்டு மகளுக்கு பழச்சாற்றைக் கொடுத்தாள்...

"ஏம்மா... கல்யாணமே இன்னும் ஆகலை.. அதுக்குள்ள அவ பெயரில இவ்வளவு பெரிய பண்ணை வீட்டை.. அதுவும் சென்னையில வாங்கிப் போட்டிருக்கானேம்மா..."

"அவன் சம்பாத்தியம் அவன் வாங்கிப் போடறான்.. இதில உனக்கு எதுக்கு இத்தனை வருத்தம்..? வந்த வேலையைப் பார்ப்பியா.. அதை விட்டுட்டு எதையெதையோ ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு உட்கார்ந்திருக்க..."

"என்னம்மா இப்படிச் சொல்றிங்க... கோடிக் கணக்கில பணத்தைக் கொட்டி இந்த பண்ணை வீட்டை வாங்கிப் போட்டிருக்கான்ம்மா... அதுவும் அவ பேரில வாங்கிப் போட்டிருக்கான்..."

"எவ பேரில..? தெருவில் போகிறவ பேரிலயா வாங்கிப் போட்டிருக்கான்..? அவனுக்கு வரப்போற பொண்டாட்டி பேரிலதான வாங்கிப் போட்டிருக்கான்.."

"இன்னும் அவ இவனுக்கு பெண்டாட்டியாகலை..."

"ஆகப் போகிறவதான..?"

"அதெப்படி அவ்வளவு நிச்சயமாய் சொல்ல முடியும்..? மணவறை வரைக்கும் வந்த கல்யாணம் கூட நின்னு போயிருக்கு..."

அதுவரை பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த மேகலா இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பொறுமையைக் கைவிட்டாள்..

"சரசு..."

அவள் போட்ட சத்தத்தில் பாலசரஸ்வதி ஆடிப் போய்விட்டாள்..

"அம்மா..."

"பேசாதே.. நாம இங்கே என்ன வேலைக்கு வந்திருக்கோம்..? நம்ம முரளிக்கு நிச்சயம் பண்ண வந்திருக்கோம்..."

மேகலா கோபக் குரலில் சொல்லிக் கொண்டிருக்க.. அவளது கோபத்தைக் கிளப்பி விட்டுவிட்ட நினைவேயில்லாமல் மேலும் அவளது கோபத்தீயை தூண்டி விடும் வகையில் பேசிவைக்க ஆரம்பித்தாள் பாலசரஸ்வதி...

"இல்லேம்மா.. பொண்ணு பார்க்கத்தான வந்திருக்கோம்..? நீங்க எதுக்கு நிச்சயம் வரைக்கும் போறிங்க...?"

'இவளை என்ன செய்தால் தேவலாம்...'

பல்லைக் கடித்த மேகலாவிற்கு நெஞ்சை வலிப்பது போல் இருந்தது.. அதை சொல்லி வைத்தால் அதுதான் சாக்கென்று அதையே காரணமாகக் காட்டி பாலசரஸ்வதி பெண் கேட்கப் போகாமல் மேகலாவை மருத்துவ மனைக்கு கொண்டு போய் விடுவாள்.. அதுவும் போதாது என்று... பெண் கேட்க வந்தவுடனே மேகலாவின் உயிருக்கு ஆபத்தாகி விட்டது என்று கதை பரப்பி திருமணத்தையே நிறுத்தி விடுவாள்...

மேகலாவிற்கு மகளைப் பற்றி மிக நன்றாகவே தெரியும்.. ஒருவரைப் பிடித்துப் போய் விட்டாள் பாலசரஸ்வதி தேவதைப் பெண்.. அதுவே அவர்களைப் பிடிக்காமல் போய்விட்டால்... அவள் குணம் மாறிவிடும்...

'இவளுக்கு ஏன் ராதிகாவப் பிடிக்காமப் போச்சு..'

கண்ணால் காணாமலேயே ராதிகாவை பாலசரஸ்வதி வெறுப்பதற்கான காரணம் புரியாமல் திகைத்தாள் மேகலா...

"சரசு.. பொண்ண உன்தம்பி பார்த்துட்டான்.. அவள அவனுக்குப் பிடிச்சுப் போயிருச்சு.. கட்டினா அவளத்தான் கட்டுவேன்னு தீர்மானமா சொல்லிட்டான்.. அதுக்குப் பின்னால பேச வேற பேச்சே இல்லை..."

"அவனுக்கென்னம்மா தெரியும்..?"

"அதைச் சொல்லு.. அவனுக்கென்ன தெரியும்..? சின்னப்பையனா லட்சணமா பெத்தவ பேச்சைக் கேட்டு.. உன்னை பட்டப்படிப்பு படிக்க வைக்காம மூலையில முடக்க அவனுக்கு தெரிஞ்சுச்சா..? என்தம்பி அஞ்ஞு.. சாவது.. படிச்ச மேதாவி.. அவனுக்குத்தான உன்னைக் கட்டிக் கொடுக்கனும்னு நான் ஒத்தக்காலில நின்னேன்.. என் பேச்சை எதுக்கக் கூடாதுன்னு தெரிஞ்சுச்சா..? ரொம்பப் பெரிய இடத்தில் மாப்பிள்ளை பார்க்கறியே... உன்னால நிரக்க சீர் செய்ய முடியாதுடா தம்பி.. வேற இடம் பாருன்னு சொன்னேன் அம்மா பேச்சைக் கேட்கனும்னு அப்ப அவனுக்கு தெரிஞ்சுச்சா..? தகப்பனில்லாத

பொண்ணுடா தம்பின்னு சொன்னேன்.. ஆமாம்ன்னு சொல்ல அவனுக்கு தெரிஞ்சுச்சா..? இல்லையே.. அவனுக்கு அதெல்லாம் தெரியலையே.. தகப்பனுக்கு தகப்பனா.. தம்பி நானிருக்கேன்னு சொன்னானே.. ஒரு அண்ணன்காரன் இந்த வார்தையச் சொல்லியிருந்தா அதில ஒரு அர்த்தமிருக்கு.. தம்பிகாரன் சொல்லி வைச்சானே.. அவனுக்கு ஒன்னும் தெரியாதுதான்.. உனக்குத்தான் எல்லாம் தெரியும்..."

இந்தப் பேச்சில் பாலசரஸ்வதி அடங்கிப் போய்விட்டாள்.. அவள் முகத்தில் ஈயாடவில்லை...

"பேசிப்பாரு.. இந்தப் பேச்ச அவன்கிட்டப் பேசிப்பாரு.. உனக்கு அந்த தைரியம் இருக்கா..?"

இருந்ததில்லை... பதினைந்து வயதில் குடும்பப் பொறுப்பை தன்கையில் எடுத்துக் கொண்ட பாலமுரளியின் பேச்சுக்கு எதிர் பேச்சுப் பேச யாரும் துணிந்ததில்லை...

மேகலாவே மகனின் மனமறிந்து.. குறிப்பறிந்துதான் பேசுவாள் எனும்போது மற்றவர்கள் எம்மாத்திரம்...

பாலமுரளியிடம் எதிர்த்து நின்று கேள்வி கேட்டது.. ராதிகா மட்டும்தான்...

நீயென்னை நினைக்கவில்லையென்று..
நிலவின் மீது ஆணையிட்டுக் கூறு.....

அந்த நொடியில் பாலமுரளியும் அதைத்தான் நினைத்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தான்..

அவன் பயமறியாதவன்.. ஆனால் அவனிடம் மற்றவர்களுக்கு இருந்த மரியாதையுடன் கூடிய பயத்தைப் பற்றி நன்கு அறிந்தவன்...

தென்காசியின் சுற்று வட்டாரத்தில் அவன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளாமல் எந்தவொரு விழாவும் நடந்ததில்லை.. அவனிடம் நேரம் கேட்டு வருபவர்கள்.. அந்தக் குறிப்பிட்ட நாளில் விழாவில் கலந்து கொள்ள அவனுக்கு நேரம் இல்லையென்றால் விழா நடக்கும் நாளையே மாற்றி அமைத்து விடுவார்கள்...

அந்த அளவுக்கு அவன் முக்கியமானவன்.. அவனிடம் பேச வரும் பெரிய மனிதர்கள் நேரம் கேட்டு.. அனுமதி வாங்கித்தான் பேச வருவார்கள்... ஒன்றிரண்டு வார்த்தைகளில் பேச்சை முடித்து விடுபவன் வாய்மொழியில் உதிர்க்கும் அந்த சில வார்த்தைகளை மிகக் கவனத்துடன்

கேட்டுக் கொள்பவர்கள்.. தங்கள் கருத்துக்களை மிகுந்த பயபக்தியுடன் பவ்யமாக அவன் முன்னால் வைப்பார்கள்.. அவன் மறுத்தால் எதிர்ப்பேயில்லாமல் அதை ஏற்றுக்கொள்வார்கள்...

அப்படிப்பட்டவன் போன் பண்ணி.. அன்று மாலை குடும்பத்துடன் ராதிகாவைப் பார்க்க வரப் போவதைச் சொல்லுகிறான்.. கேட்டுக் கொண்ட ராதிகாவோ.. வெகு சாதாரணமாக...

"ஒருவழியா உங்களைக் கட்டி இழுத்தாச்ச போங்க.." என்று சொல்கிறாள்...

"மலையைக் கட்டி இழுத்துட்டதைப் போலச் சொல்கிறயா..?" என்று அவன் கேட்டபோது..

"நீங்க.. மலையா..? ஹ.." என்று சிலுப்பிக் கொள்கிறாள்...

"பின்னே.. நான் என்ன சாதாரணமான ஆளுன்னு நினைச்சிட்டியா..?" அவன் புஜம் தட்டிய போது..

"நீங்க ஹி மேனாவே இருங்க.. எனக்கென்ன வந்துச்சு..? அதனாலேயெல்லாம் எனக்கொன்னுமில்ல.. மைமேனா இருங்க.... எனக்கு அதுமட்டும் தான் முக்கியம்.. வெட்டியா அரட்டையடிக்காம.. காலாகாலத்திலே உங்க குடும்பத்தோட வந்து கனம் இறங்கிற வழியைப பாருங்க.." என்று வெகு எளிதாக அவனது பராக்கிரமத்தைப்

"களமா..? ஏண்டி.. உன் வீட்டுக்குத்தானே வரப் போறோம்..? என்னவோ போர்க்களத்துக்கு வரச் சொல்கிறதைப் போல இப்படிச் சொல்லி வைக்கிற..?" பாலமுரளி புரியாமல் கேட்டதற்கு...

"இங்கே லேடி ஹிட்லர் அப்படித்தான் ரெடியாகிக்கிட்டு இருக்காங்க..." என்று எடுத்துக் கொடுக்கிறாள்..

"நான் பயம்றியாதவன்னு ஊரே சொல்லும்... வந்து கேட்டுப்பாரு.." என்றவனிடம்...

"அது அப்போ... இது இப்போ..." என்கிறாள்...

"அப்ப இருந்ததுதானே இப்பவும் இருக்கும்..?" வியந்தவனிடம்...

"ஹலோ.. கல்யாணம் ஆகிற வரைக்கும் தான் நீங்க வீரத்திருமகன்.." என்று பயமுறுத்துகிறாள்...

"என்னடி இது.. இப்படிப் பயமுறுத்தற.. பெண்டாட்டின்னா.. பூலான்தேவின்னு அர்த்தமா..?" அவன் சிரித்தபோது...

"இப்பவே சிரிச்சுக்கங்க பாஸ்..." என்று வயிற்றில் புளியைக்கரைத்து ஊற்றுகிறாள்...

"எத்தனையோ பார்த்துட்டோம்.. இதைப் பார்க்க மாட்டோமா.." காலரைத் தூக்கி விட்டுக் கொண்டவனிடம்..

"எங்க வீட்டு லேடி ஹிட்லரைப் போல ஒரு ஷிஷமனை நீங்க பார்த்திருக்க மாட்டிங்க..." என்று படம் காட்டுகிறாள்...

"ஷி-ஷ்மனா..?" புரியாமல் விழித்தால்...

"நீங்க ஆம்பளைங்க மட்டும் ஹிமேன்னு பிலிம் காட்டலாம்.. நாங்க லேடிஸ் மட்டும் ஷி வுமன்னு பிலிம் காட்ட மாட்டோமா..?" என்று விளக்கம் கொடுக்கிறாள்..

"அடேங்கப்பா.. நீ பிலிம் காட்டு.. காட்டு... மாமியாரைப் பார்த்து எனக்கென்ன பயம்..?" என்றவனிடம்....

"எப்பவுமே.. மாமியாரையும்.. சாமியாரையும் சாதாரணமா எடை போட்டுவிடக் கூடாது சார்..." என்று வியாக்கினம் பேசுகிறாள்...

"இப்ப எதுக்குடி சாமியாரை வம்புக்கு இழுக்கறே..? கல்யாணப் பேச்சு பேசும்போது சாமியாரைப் பத்திப் பேசனுமா..?" என்று அதட்டினால்...

"மாமியாரைப் பார்த்தாலும் சாதுவாகத்தான் தோணும்.. சாமியாரும் சாதுன்னுதான் எல்லாரும் நினைச்சுக்கிட்டு இருப்பாங்க.. அது ரெண்டுமே வெடிச்சுச்சுன்னு வையுங்க.. நாம தாங்க மாட்டோம்..." என்று மாமியாருக்கும் சாமியாருக்குமுள்ள ஒற்றுமையை பிரகடனம் படுத்துகிறாள்...

"வேணாண்டி ராது.. சாமியார் பிழைச்சுப் போகட்டும்.. விட்டுவிடு.. இப்ப மாமியாரின் கதைக்கு வா.. எனக்குத்தான் மாமனார் சப்போர்ட் இருக்கே.. குடும்பத் தலைவரைக் கைக்குள்ள போட்டுக்கிட்டு இருக்கிற கெட்டிக்கார மாப்பிள்ளையின் முன்னால லேடி ஹிட்லர் என்னசெய்ய முடியும்..?" என்று அவன் மார்தட்டிய போது...

"குடும்பத் தலைவர்ன்னு அப்பாவாத்தான் சொல்லிக்கனும்.. தலைமை பதவி சத்தமேயில்லாம அம்மா கையில இருக்கு..." என்று பிட்டுப் பிட்டு வைக்கிறாள்..

"அப்படியா சொல்ற..? உன் அப்பாவைப் பார்த்தா அடங்கிப் போகிறவரைப் போலத் தெரியலையே..." அவன் தாடையைத் தடவியபடி கேட்டபோது...

"அவர் அடங்கிப் போகிறவரில்லைதான்.. அதே சமயம் வீட்டு நிர்வாகத்தை கோட்டை விடாம கெட்டியாப் பிடிச்சுக்கிட்டவருமில்லை..." என்று தகப்பனாரின் குணாதிசியத்தை எடுத்துரைக்கிறாள்...

"நீ என்னதான் சொல்லவர்ற..?" தலை சுற்றியவன் அவளிடமே விளக்கம் கேட்டபோது...

"தோடா... எல்லாத்துக்கும் என்கிட்டயே விளக்கம் கேட்டா எப்படி..? நான் என்னவோ தென்காசிப் பட்டினத்து தேசிங்குராஜா குதிரைமேல ஏறிவந்து என்னை தூக்கிக்கிட்டு போகப் போகிறார்ன்னு எல்லார்கிட்டயும் பீலா விட்டுக்கிட்டு இருக்கேன்..

அதெல்லாம் சும்மாவா..?" என்று உசுப்பேற்றி விடுகிறாள்...

"சும்மாவா..? யாருகிட்ட என்ன கேள்வியைக் கேட்கிற..?" என்று அவன் புஜங்களைத் தட்டியபோது..

"சாயங்காலம் பார்க்கலாம் மச்சான்..." என்று வெகு சாதாரணமாகக் கூறுகிறாள்...

"எதைப் பார்க்கலாம்கிற..?" கேட்டவனிடம்...

"உங்க வீரத்தைத்தான் பார்க்கலாம்கிறேன்.." என்று துளிக்கூட பயமில்லாமல் சொல்கிறாள்...

மொத்தத்தில் பயமற்ற அவனிடம் பயமில்லாத-வளாக அவள் பேசினாள்.. அவனுக்கு அது மிகவும் பிடித்திருந்தது... இரண்டு நாள்களில் ஏற்பட்டிருந்த இனிப்பான மாற்றங்களினால் அவன் ஆனந்தத்தில் தோய்ந்திருந்தான்...

இரவும்... பகலும் அவள் நினைவுதான் அவனுக்கு...

ஏதோ ஒரு வேகத்தில் அவளைத் தொட்டு விட்டவனுக்கு அவளை விட்டு விலக முடியவில்லை... காலமெல்லாம் அவளது நினைவுச் சிலுவையை சுமக்க வேண்டுமா என்ற மனபாரத்தோடு இருந்தவனை உசுப்பேற்றி விட்டு வெற்றி கண்டு விட்டாள் ராதிகா... சங்கரைத் தேடிப் போனவளை கொன்று புதைத்துவிட வேண்டுமென்று நின்றவனை வார்த்தைக் கத்திகளால் காயப்படுத்தி அவளது நிலையை உணர வைத்தாள்..

அவன் வாயாலேயே அவளை மணந்து கொள்வதாகச் சொல்ல வைத்தாள்.. அவனுடைய மனபாரத்திலிருந்து அவனை மீட்டு அவளை முறையாக அடைவதற்கான வழிமுறையை முன்னால் வைத்தாள்...

'இது உனக்குத் தண்டனை...' என்று சொன்னவன் தான் மனதுக்குள் வலியேற்று தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தான்.. அவள் எப்படியும் வார்க்கைப் பிச்சை கேட்டு அவன் காலில் வந்து விழுவாள் என்று மனதிற்குள் மிகவும் எதிர்பார்த்தான்.. அப்படி வரும்போது.. அவளை நன்றாக கண்டித்து விட்டு.. ஊரறிய மனைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான் அவனது எண்ணமாக இருந்தது... அதே சமயம்.. அவள் ரோசப்பட்டு அவனிடம் வராமலே இருந்து விட்டால் என்ன செய்வது என்ற கேள்வியும் அவன் நெஞ்சில் எழுந்து அவனை மிகவும் வதைத்துக் கொண்டிருந்தது...

மனதுக்குள் போராடிக் கொண்டிருந்தவனிடம் மீண்டும் ஷோபா பற்ற வைத்தபோது.. எல்லாவற்றுக்கும் முற்றுப் புள்ளி வைத்து விடும் வேகத்துடன்தான் இரண்டாம் முறையும் ராதிகாவைக் கடத்தினான்... இந்த முறை அவள் மிகத் தெளிவாக அவனை எதிர்கொண்டாள்.. பயமேயில்லாமல் அவனிடம் வாதாடினாள்... அவளைத் திருமணம் செய்து கொள்ளும் நிர்பந்தத்தை அவனுக்கு உருவாக்கினாள்...

அவளுக்குத் தெரியாது.. அவள் அவனுடைய மனச்சிக்கலில் இருந்து அவனை வெளிக் கொணர்ந்து விட்டாள் என்பது...

பாலமுரளி மாணிக்கவாசகத்தின் மகன்.. மேகலாவின் வளர்ப்பு... ஒரு பெண்ணை நாசம் செய்து விட்டு கைகழுவி விடுவது அவனது இயல்புக்கு மாறான ஒன்று...

கண்களிலே காதலை உணர்த்தியவள்.. வேறு ஒருவன் பின்னால் போகலாமா என்ற கோபத்தில் தவறு செய்து விட்ட பாலமுரளி.. மனதுக்குள் சித்திரவதையை அனுபவித்துக் கொண்டிருந்தான்.. ராதிகாவுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தில் அந்த சித்திரவதையிலிருந்து விடுதலை கிடைத்தது மில்லாமல் அவன் காதலித்தவளை.. அவன் தொட்டு ஆண்டவளை... உரிமையாக்கிக் கொள்ளும் மார்க்கமும் கிடைத்துவிட்டது...

"செம வாய்டி உனக்கு..." அவன் சிலாகித்தான்...

"இல்லைன்னா தென்காசிக்காரங்க என்னைப் பலகாரம் பண்ணி விட மாட்டிங்களா..?" அவள் நியாயம் கேட்டாள்...

"உன்னைப் பலகாரம் பண்ண ஒருத்தன் பிறந்து தான் வரனும்டி..."

"அப்ப.. தேனூத்தில பிறந்து வந்திருக்கிற நீங்க யாரு சார்..?"

"அட.. நான் உன்னைப் பலகாரம் பண்றதா..? நீ விட்டுட்டுத்தான் வேற சோலியப் பார்ப்ப..."

"விடலையா..?" அவள் ஆழ்ந்த குரலில் கேட்டபோது அவனுக்கு அந்த நாளின் நினைவு வந்து விட்டது.. அவளைத் தொட்டுத் தழுவி.. ஆண்ட அந்தக் கணங்களின் நினைவில் அவனது உடல் சூடேறியது.. வெப்பப் பெருமூச்சுடன்...

"ராதிகா.." என்று அழைத்தான்...

அவன் குரலில் எதை உணர்ந்தாளோ... அவள் பேச்சிழந்தவளாக மௌனித்தாள்..

"நீ பலகாரம் தாண்டி.. திரும்பச் சாப்பிட உடம்பு துடிக்குதுடி.." அவன் குரல் தாபத்தில் குழைந்தது...

"எத்தனை மணிக்கு வருவீங்க..?" அவள் பேச்சை மாற்றினாள்....

"பேச்சை மாத்தறியா..?" கண்டு கொண்டவனாக அவன் கேட்டான்...

"தெரியுதில்ல... அப்புறம் எதுக்கு கேள்வி கேட்கறிங்களாம்..?" அவளது குரலில் மறைந்திருந்த வெட்கச் சிணுங்கலில் அவன் உடலில் மின்சாரம் பாய்ந்தது...

"எதுக்குன்னுதான் நான் சொல்லிட்டேனே..."

"போதும்.. முதலில் பெண் கேட்டு வருகிற வேலையை முடிங்க..."

"அப்புறம்..?"

"கல்யாணத்துக்கு நாள் பாருங்க..."

"அப்புறம்..?"

"அப்புறம்.. அப்புறம்.."

அவள் பேச முடியாமல் தடுமாறினாள்... அவன் அதை ரசித்துப் பலமாகச் சிரித்தான்... அவளின் அந்த வெட்கத்தில் அவன் மனம் நனைந்து திளைத்து எழுந்தது...

அப்போதே அவளைச் சிறையெடுக்கும் வேட்கை அவனுக்குள் பொங்கியது.. அவள் சொன்னதைப் போலவே குதிரையின் மீது ஏறி அவள் வீட்டுக்குப் போக வேண்டும்.. அவனைப் பார்த்ததும் வெளியே ஓடி வருகிறவளின் இடையில் கைகொடுத்து தூக்கி குதிரையில் அணைவாக அமர வைத்துக் கொள்ள வேண்டும்..

'என் மகள்...' என்று தடுப்பவர்களிடம்...

'இல்லை... இவள் என் மனைவி...' என்று சொல்லி விட்டு குதிரையில் பறந்துவிட வேண்டும்..

"ராதிகா..."

"ம்ம்ம்..."

"இந்தப் பெண் கேட்டு.. நிச்சயம் பண்ணி.. நாள் பார்த்து.. தாலிகட்டின்னு என்னால காத்திருக்க முடியலைடி..."

"அதுக்கு...?"

"இப்பவே நீ வேணும் போல இருக்குடி..."

மறுமுனையில் மௌனமானதுதான் அவனுக்குத் தெரியும்.. அவள் உதட்டைக் கடித்து உணர்வுகளை அடக்கப் போராடியது அவனுக்குத் தெரியாது...

"ப்ளீஸ்..." என்றாள் ராதிகா...

"எதுக்கு ப்ளீஸ் போடற..?" அவன் கோபப் பட்டான்..

"என்னைப் பார்த்தா உங்களுக்குப் பாவமா இல்லையா..?"

"என் பாவத்தை நீ பார்க்கவே மாட்டியா...?"

"இப்ப என்ன செய்யனும்கிறிங்க...?"

"வந்து விடு..."

"வந்து...?"

"சொல்லவா..?" அவன் வேட்கையுடன் கேட்க..

"வேண்டாம்.. வேண்டாம்.." என்று உடனடியாக மறுத்தாள்...

"நீதானேடி கேட்ட...?"

"இங்கே பாருங்களேன்.. நான் வந்து நின்னா உங்க அம்மா என்ன சொல்லுவாங்க..? உங்க அக்கா என்ன நினைப்பாங்க..."

அவன் வழியிலேயே போய் கேள்வி கேட்டு அவள் மடக்கி விட்டாள்.. அவன் பதில் சொல்ல முடியாமல் திகைத்தான்..

"என்ன சார்.. பதிலைக் காணோம்..." அவள் குறும்புடன் கேட்டபோது... அவனுக்கு நினைத்தது கிடைக்காத கோபம் கிளர்ந்தது..

"நான் உனக்கு சாராடி...?" சுள்ளென்று விழுந்தான்...

"ஓகே.. மச்சான்.. சரிதானே..."

"இதுக்கெல்லாம் ஒன்னும் குறைச்சலில்லை..."

"இப்ப உங்களுக்கு என்ன வேணும்..?"

"நீ தான் வேணும்..."

மறுமுனையில் மெலிதாக அவள் சிரித்தாள்.. சிரிப்பைத் தொடர்ந்து மெல்லிய குரலில் பாடினாள்...

"வரலாம்... தொடலாம்...
மணநாள் வரும் போது...
தருவேன்.. எனை நான்..
பக்கம் நீவரும் போது...
உன்னைத் தொட்டக் காற்றுவந்து
என்னைத் தொட்டது....
அதுவே போதுமென்று பெண்மையின்று..
கேட்டுக் கொண்டது..."

அவன் போனை அணைத்து விட்டாள்.. பண்ணை வீட்டின் மாடிப் பால்கனியில் நின்றிருந்த பாலமுரளியின் உடலை ஈரப்பசையுடன் கூடிய கடல்காற்று வந்து தழுவியது...

'இது அவளைத் தொட்ட காற்றோ...'

அவள் பாடலில் அவன் மையம் கொண்டான்.. அவளைத் தொட்டுத் தழுவிய அந்த மணித்துளிகளுக்கு அவன் மனம் திரும்பியது... அந்த நொடிகளில் அவன் உணர்ந்த அவளின் மென்மையும்.. குழைவும் மீண்டும் வேண்டுமென அவனது உணர்வு கேட்டது...

உன்னோடு நானிருக்கும்..
மணித்துளிகள் என்று வரும்..?

நெய் மணம் நாசியைத் துளைக்க.. ஆசையுடன் அந்த வாசனையை நுகர்ந்து.. "ம்ஹா.." என்று இழுத்து மூச்சு விட்டாள் கீதா...

"ம்ஹீம்... இப்படி வாசம் பிடிக்கிறதுக்கு பதிலா உள்ளே போய் ஒருபிளேட் கேசரியை மொக்கிட்டு வர வேண்டியது தானே..."

நெய் வழியும் கேசரியை வாய்க்குள் தள்ளியபடி கேட்டான் சுந்தர்...

"டிரை பண்ணிப் பார்த்துட்டேண்டா சுந்தர்.. லேடி ஹிட்லர் என்னை கிச்சன் பக்கமே சேர்த்துக்க மாட்டேங்கறாங்க..."

"அம்மா காரணமில்லாம உன்ன தள்ளி வைக்க மாட்டாங்களே..."

"எதை வைச்சுடா அப்படிச் சொல்ற...?"

"நாட்டாமை தீர்ப்பு நியாயமா இருக்கும்ங்கிற நம்பிக்கைதான்.. வேறென்ன..?"

"அது ஒன்னுமில்லடா சுந்தர்.. கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே அம்மா பஜ்ஜியை சுட்டு அடுக்கிக்கிட்டு இருந்தாங்களா.."

"அதைச் சுட.. நீ போனயாக்கும்.."

"கரெக்டா கண்டு பிடிச்சிட்டயே.. எப்படிடா..?"

"கூடப்பிறந்தது புத்தி எனக்குத் தெரியாதா..? நீ பஜ்ஜிய சுடவா போயிருக்கப் போகிற.. சுட்ட பஜ்ஜியை சுட்டு வாய்க்குள்ள போடத்தான் போயிருப்ப.. அப்புறம் என்னதான் ஆச்சு..? பஜ்ஜியை உள்ளே தள்ளினயா இல்லையா...?"

"எங்கேடா.. அதுக்குள்ள வாயைக் கொடுத்து மாட்டிக்கிட்டேனே..."

"யாருகிட்ட..?"

"வேற யாருகிட்ட.. எல்லாம் நம்ம லேடி ஹிட்லர் கிட்டத்தான்..."

"என்ன சொன்ன..?"

"அதையேண்டா கேட்கிற..."

"சரி.. கேட்கலை... விடு..."

"அடப்பாவி.. ஒரு பேச்சுக்கு புலம்பினா.. இதான் சாக்குன்னு என்னைத் தனியாய் புலம்ப விடுவியா.. ?"

"அதுக்காக ஒருவார்த்தையில சொல்ல வேண்டியத.. நீ ஏழு ஊரு.. ஏழு கடல்.. ஏழு மலையைத் தாண்டி.. சுற்றி வளைச்சு சொல்லி வைப்ப.. நான் பொறுமையா 'ஊம்' கொட்டிக் கேட்கனுமாக்கும்.."

"கூடப் பிறந்தவனாடா நீ..."

"போதும்.. கண்ணைக் கசக்காதே.. நீ எவ்வளவுதான் கசக்கினாலும் ஒத்தப் பொட்டு கண்ணீர் உன் கண்ணில வரப்போறதில்ல.. வீனா எதுக்கு பிலிம் காட்டற... விசயத்துக்கு வா..."

"ஆனாலும் நீ ரொம்ப அழும்புடா.. நான் பஜ்ஜியைத் தூக்கத்தான்.. கிச்சன் பக்கம் போனேன்..."

"மறந்து போய் அம்மாவைத் தூக்கிட்டியா..."

"வேணாண்டா சுந்தர்.. எனக்கு நல்லா வந்திரும் வாயிலே..."

"ஹை.. இது அம்மாவோட பேவரிட் டயலாக்காச்சே.. பஜ்ஜிக்கு பதிலா அம்மாவோட டயலாக்கை சுட்டுட்டியா..? அதனாலேதான் நம்ம வீட்டு நாட்டாமை உன்னைக் கிச்சனை விட்டுத் தள்ளி வைச்சிட்டாங்களா..?"

"ஏண்டா இந்த பாடுபடுத்தற..?"

"மூக்காலே அழுகாம விசயத்தை சொல்லித் தொலை... தேவையில்லாம மொக்கை போட்டா இப்படித்தான் பதில் மொக்கையை நான் போட வேண்டியிருக்கும்.. இந்த மொக்கை போதுமில்ல..."

"போதும்டா சுந்தர்.. இதுக்கு மேலே நான் தாங்க மாட்டேன்.. நான் பஜ்ஜியைத் தூக்கப் போனேனா..?"

"அடச்சீ.. காக்காகூட பாட்டி சுட்ட வடையை ஈஸியாத் தூக்கிருச்சு.. நானும் அப்போதிருந்து பாக்கறேன்.. நீ அம்மா சுட்ட பஜ்ஜியை தூக்குவேனான்னு அடம் பிடிக்கற.. இந்தக் கதையைக் கேட்க என்னால முடியாது சாமி.. நீ ஆளை விடு..."

"எங்கேடா சுந்தர் போற..?"

"உன் கண்ணில படாம ஒளிஞ்சுக்கப் போறேன்..."

"சுந்தர்..."

"அம்பேல்..."

மாடியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி... தடதடவென்று ஏறிவந்து மேலே மோதிய மகனைப் பிடித்து நிறுத்தினார்...

"எதுக்குடா இப்படி ஓடிவர்ற..?"

"குட்டிப் பிசாசு.. பஜ்ஜி சுட்ட கதையைச் சொல்லி என்னை டார்ச்சர் பண்ணுதுப்பா..."

"யாரைச் சொல்ற..? ராதிகாவையா..?"

"அது பெரிய பிசாசுப்பா... இது அதற்கடுத்த பிசாசு.. குட்டிப் பிசாசு..."

"கீதாவைச் சொல்றயா..?"

"அதேதான்..."

"ஏண்டா.. அக்காக்களை பிசாசுன்னு சொல்லலாமா..?"

"ஏம்ப்பா.. அப்படிச் சொன்னா பிசாசு கோவிச்சுக்குமா...?"

சிரிக்காமல் கேட்ட மகனிடம் புத்திமதி சொல்லிப் பிரயோஜனமில்லை என்பதை கடந்த கால வரலாற்றின் நினைவுச் சின்னங்கள் அறிவுறுத்த... வாயை மூடிக் கொண்டார் கிருஷ்ணமூர்த்தி...

'அஃது...' என்ற பார்வையுடன் அவன் மாடியேறிப் போய்விட.. இந்த வாயும்.. வம்பு வழக்கும் ராஜேஸ்வரியைக் கண்டவுடன் மாயமாய் மறைந்து விடுவது எப்படி..? என்ற சிந்தனையுடன் படியிறங்கினார் கிருஷ்ணமூர்த்தி...

வாசல்படியில் உட்கார்ந்து.. நெற்றியை ஒற்றை விரலால் கட்டிக் கொண்டிருந்த சின்ன மகளைப் பார்த்தவர் புருவங்களை உயர்த்தினார்...

'இது இவ்வளவு சிந்தனையைச் செய்யக்கூடாதே..'

சிந்தனை செய்யாமலே கலங்கடிக்கும் சின்ன மகள்.. சிந்தனைச் சிற்பியாகி விட்டால் நிகழக்கூடிய

அபாயங்களை எண்ணி மனம் பதைத்துப் போன கிருஷ்ணமூர்த்தி.. வருமுன் காப்பவராக.. முன்னெச்சரிக்கையுடன் சின்ன மகளின் ஒற்றை விரலைப் பிடித்து.. நிறுத்தி அவளது சிந்தனையிலிருந்து அவளைத் தடுத்தாட்கொண்டார்...

விரல் அகப்பட்டுக் கொண்டதால்... சிந்தனை தடைபட்டுப் போன கீதா... மூடிய இமைகளைத் திறந்து தகப்பனைப் பார்த்தாள்..

"என்னப்பா..?"

"இப்ப எதுக்கும்மா இவ்வளவு சீரியஸா யோசனை பண்ணிக்கிட்டு இருக்க..?"

"ஏம்ப்பா.. இந்த வீட்டில யோசிச்சாக்கூட குத்தமா..?"

"நீ யோசிச்சா குத்தம்தான்.. எதுக்காக இந்த யோசனை...?"

"இல்லை.. அம்மா.. நல்லவங்களா.. இல்லை.. வில்லத்தனமானவங்களான்னு யோசிக்கிறேன்.. ஒன்னும் பிடிபட மாட்டேங்குது..."

"ம்ஹீம்.. என்னாலேயே அதைக் கண்டு பிடிக்க முடியல.. உன்னால முடிஞ்சிருமா..? இதுக்குப்பதிலா.. நீ வேற எதையாவது ரிசர்ச் பண்ணு.. உலகப் புகழ் கிடைச்சிரும்..."

"அப்படிங்கறிங்க...?"

"அப்படித்தான்.. ஆமாம்.. திடிர்ன்னு எதுக்கு உனக்கு இப்படியொரு ஆராய்ச்சி பண்ணனும்னு தோணுச்சு..?"

"நீங்களே இதுக்கொரு நியாயத்தைச் சொல்லுங்கப்பா..."

"நியாயமெல்லாம் உன் அம்மா சொல்லுவா.. நீ விசயத்தைச் சொல்லு.. நான் அப்படியான்னு சொல்றேன்..."

"அம்மா பஜ்ஜி சுட்டாங்க.. அதை உள்ளே தள்ள.. நான் கிச்சனுக்குள்ள போனேன்.. என்னைப் பார்த்ததும்.. ஒரு மார்க்கமா பேச ஆரம்பிச்சாங்க..."

"என்னான்னு..."

"ஊமை மாதிரி இருந்தவளே.. ஊருவிட்டு ஊரு போயி காதல் பண்ணிட்டா.. இது எப்பவுமே ஆடும்.. எதை இழுத்துக்கிட்டு வரப்போகுதோன்னு சொல்லிட்டாங்கப்பா..."

"அப்படியா சொன்னா..? அவளுக்கு ராதிகாவோட காதலைக் கேட்டதில இருந்து பித்துப்பிடிச்சிருச்சு... சின்னப்பொண்ணு.. ப்ளஸ் டூவைக்கூட முடிக்காத பச்சைக் குழந்தை... உன்னைப் போயி என்ன வார்த்தை சொல்லியிருக்கா..? இதை நினைச்சா நீ இம்புட்டு நேரமும் வருத்தப்பட்ட..? வேணாம்மா.. நீ வருத்தப்படாதே.. அவளுக்கு பேசத் தெரிஞ்சது அவ்வளவுதான்.. நீ மனக் கஷ்டப்படாதே.."

கிருஷ்ணமூர்த்தி உருக.. உருக.. அவரை விசித்திரமாகப் பார்த்தாள் கீதா...

"ஹலோ.. அப்பா.. இப்ப யாரு மனசு கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்கிறது..?"

"நீதான்.."

"அப்படி உங்ககிட்ட நான் சொன்னேனா..?"

இப்படிக் கேட்ட சின்ன மகளை இமை கொட்டாமல் பார்த்தார் கிருஷ்ணமூர்த்தி.. ஏன் சுந்தர்.. அவளுக்கு 'குட்டிப் பிசாசு..' என்று நாமகரணம் சூட்டினான் என்று அப்போது அவருக்குப் புரிந்தது...

"அப்ப.. உனக்கு மனசுக்கு கஷ்டமாயில்லையா..?"

"இல்லை..."

"அம்மாதானேன்னு நினைச்சிட்டயா..?"

"ஏம்ப்பா.. எதையும் முழுசாக் கேட்காம ஒரு முடிவுக்கு வந்துருவீங்களா...? இப்பத்தானே... எல்லாப் பஞ்சாயத்தும் உங்ககிட்ட சொல்ல ஆரம்பிச்சு.. அம்மா தீர்ப்பு வழங்கறதில ஏன் முடியுதுன்னு எனக்குப் புரியுது..."

"இன்னும் விசயம் இருக்கா..?"

"ஆமாம்ப்பா.. ஆமாம்.. அம்மா அப்படிச் சொன்னவுடனே நான் கவலைப்படாதீங்க அம்மான்னேன்..."

"நீ ஆறுதல்தானேம்மா சொன்ன...?"

"அதுக்கும் மேலேயும் சொன்னேன்..."

"என்னத்தைம்மா சொல்லிவைச்ச..?"

"ராதிகாவாவது ஊருவிட்டு ஊரு போயி காதல் பண்ணியிருக்கா.. எனக்கு உள்ளூரெல்லாம் வொர்க் அவுட் ஆகாது.. நான் நாடுவிட்டு நாடு போய்த்தான் காதல் பண்ணுவேன்னு சொன்னேன்.. அதுக்கு அம்மா கையிலிருந்த கரண்டியைத் தூக்கி என்மேல விட்டெறிஞ்சுட்டாங்கப்பா..."

'பின்னே.. சும்மாவா விடுவா...'

"கிச்சனை விட்டு வெளிநடப்புப் பண்ணச் சொல்லிட்டாங்க.. பஜ்ஜியையும்.. சொஜ்ஜியையும் என் கண்ணிலேயே காட்டலை.. அப்போப் பிடிச்சு.. வாசம் பிடிச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கேன்..."

'சரியாத்தான் செய்திருக்கா...'

"இதுகூடப் பராவயில்லைப்பா.. நல்லா வந்திரும் வாயிலேன்னு இதுவரை சொல்லிப் பயமுறுத்தினவங்க.. நல்லாவே பேசிட்டாங்கப்பா..."

'பேசிட்டாளா.. இப்பத்தான் நிம்மதியாச்சு...'

"அம்மாவுக்கு ராதிகாமேல கோபம்.. இருந்தாலும்.. காலையில இருந்து பம்பரமா சுத்தி வீட்டைக் கிளின் பண்ணியிருக்காங்க.. அழகா டெக்கரேட் பண்ணியிருக்காங்க... மாய்ஞ்சு.. மாய்ஞ்சு.. டிபன் பண்றாங்க...."

"இதுக்குத்தான் அவ நல்லவளா... வில்லியான்னு கேட்டு வைச்சியா...?"

"ஆமாம்ப்பா.. ஆமாம்..."

"அவ எப்பவுமே நல்லவதான்.. சில காரணங்களாலே ராதிகா சொல்கிற பாலமுரளியை விட.. தானா வந்த சங்கர் பெட்டர்ன்னு அவளுக்குத் தோணுது... அதனால கோபப் படறா.. அதேசமயம்.. பாலமுரளியைத்தான் ராதிகா கல்யாணம் பண்ணிக்குவேன்னு அடம் பிடிக்கிறதாலே.. அம்மாவாய்.. லட்சணமாய் அவ செய்ய வேண்டிய கடமைகளைச் செய்கிறா.. இதுதான் ராஜேஸ்வரி.. உங்க அம்மா..."

இதைச் சொல்லும்போது கிருஷ்ணமூர்த்தியின் முகம் கனிந்திருந்தது.. அதைக் கவனித்த கீதாவிற்கு.. பஞ்சாயத்து தலைவர் பதவியை அவர் பெருமையுடன் மனைவிக்கு விட்டுக் கொடுக்கிறார் என்று தோன்றியது..

"எங்கே அந்த குட்டிச் சாத்தான்..?" ராஜேஸ்வரி வீட்டுக்குள்ளிருந்து சத்தம் போட்டாள்...

"இங்கேயிருக்கா ராஜேஸ்வரி..."

கிருஷ்ணமூர்த்தி சொன்ன பதிலைக் கேட்டதும்.. கீதாவிற்கு மனம் தாளவில்லை...

"அம்மா குட்டிச் சாத்தான்னு சொன்னால் அது நானாத்தான் இருக்கும்ன்னு எப்படிப்பா நீங்களா ஒரு முடிவுக்கு வரலாம்...?"

தகப்பனாருடன் சண்டைக்கு கிளம்பினாள் அவள்..

"வாசலில் இருக்காளா..? அவளை மாடிக்கு அனுப்பி.. ராதிகாவை ரெடி பண்ணச் சொல்லுங்க.. சும்மா இருந்தாத்தான் அவ வாய் சும்மாயிருக்காம பேசி வைக்கும்.."

உள்ளேயிருந்து ஒலித்த ராஜேஸ்வரியின் வார்த்தைகளைக் கேட்டதுட்ம...

'கேட்டயா..?' என்று வினவும் பார்வையொன்றை பார்த்து வைத்தார் கிருஷ்ணமூர்த்தி...

"ம்ஹீம்.. இந்த வீட்டில் எனக்கு மதிப்பில்லாம போயிருச்சு.. அந்தக் குட்டிப்பய என்னான்னா என்னைக் குட்டிப் பிசாசுங்கிறான்.. அம்மா என்னடான்னா.. என்னை குட்டிச்சாத்தான்ங்கிறாங்க.. இதைக் கேட்க யாருமேயில்லையா...?"

உரத்துப் பேசிய கீதா...

"அங்கே என்ன சத்தம்..?" என்ற ராஜேஸ்வரியின் சத்தத்தில் அடங்கிப் போனாள்...

"ஒன்னுமில்லம்மா.. அம்மா சொன்னபடி மாடிக்குப் போறேன்னு அப்பாகிட்டச் சொல்லிக்கிட்டு இருந்தேன்.. இல்லேப்பா.." என்ற மகளிடம்...

"இல்லை..." என்றார் கிருஷ்ணமூர்த்தி...

மகா சாதுவான அவரே எதிரணிக்கு தாவி விட்டதால் வாயைத் திறக்காமல் மாடியேறினாள் கீதா..

ராதிகாவின் அறைக்குள் போன போது.. அவள் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள்...

"அசத்தற ராது..."

அவள் தலையிலிருந்த மல்லிகைச் சரத்தை சரி செய்தபடி தமக்கையை ரசித்தாள் கீதா...

"நிஜமாவா...?"

"பின்னே பொய்யா..? இந்தப் பட்டுச் சேலைதான் இடிக்குது..."

"அம்மா கட்டனும்னு சொல்லிட்டாங்க..."

"சரி விடு.. வரப்போகிற தோனூத்துக்காரங்க பட்டுச் சேலையைத்தான் பெரிசா நினைப்பாங்களாயிருக்கும்..."

"அம்மாவும் அதைத்தான் சொன்னாங்க..."

"சும்மாவா சொன்னாங்க...?"

"திட்டிக்கிட்டேதான் சொன்னாங்க... உனக்கெப்படி இது தெரியும்..?"

"என் ராசி அப்படி டீ.. நெல்லுக்கு பாய்கிறது கொஞ்சம் புல்லுக்கும் பாயட்டுமேன்னு நான் சொன்ன தென்னவோ உண்மைதான்.. சைட்டடிக்கிற விசயத்தில அப்படிச் சொன்னேன்.. இப்படி பைட்டடிக்கிற விசயத்தில வந்து அது வொர்க் அவுட் ஆகித் தொலைக்குதேடி ராது.. உன்னைத் திட்டுகிற போது என்னையும் சேர்த்து வைச்சு திட்டக் கண்டோமாடி...?"

"த்சு.. த்சு..."

"இப்ப எதுக்குடி நாயைக் கூப்பிடற...?"

"உன்மேல பாவப் பட்டுத் தொலைச்சேன்டி..."

"அது எதுக்கு வேஸ்டா...?"

"வேணாம்கறியா.."

"உன் வேலையைப் பாருங்கிறேன்..."

ராதிகாவின் புடவை மடிப்புகளை சரி செய்து விட்ட கீதா.. கார் சத்தம் கேட்டு பால்கனிக்கு ஓடினாள்.. அங்கேயிருந்து தகவல் கொடுத்தாள்...

"உன் ஹீரோ இறங்கறார்டி.. அன்னைக்கை விட இன்னைக்கு இன்னும் ஜம்முன்னு இருக்கார்.. அவரோட அம்மாவா அது.. அம்சமா இருக்காங்க... வைரம்தான் எட்டுதிசையும் டாலடிக்குது.. இதுயாருடி.. சங்கரோட அம்மா போலவே தெனாவெட்டாய் முகத்தை வைக்கக்கிட்டு..? ராது.. எனக்கென்னவோ.. உன் காதல் பாதைக்கு குறுக்கே வர்ற டேன்ஜரஸ் சிக்னல் இவங்கதான்னு தோணுது.. மனசுக்குள்ள பட்சி படபடக்குதுடி..."

56

பரபரப்பாய் பறப்பதினால்...
என்மனமும் பறவையினம்தான்...

எல்லோரின் முன்னாலும் வந்து நின்று கை குவித்தபோது.. கீதா சொல்லிய வார்த்தைகள் அத்தனையும் அட்சர சுத்தமான உண்மை என்பதை உணர்ந்து கொண்டாள் ராதிகா...

"இவங்க தான் என் அம்மா..."

பாலமுரளி அறிமுகப் படுத்தியதும் மேகலா அவளைப் பார்த்து இதமாகச் சிரித்தாள்.. அவளது பார்வையில் சொந்தமிருந்தது.. பரிவிருந்தது.. அன்யோன்யம் இருந்தது.. நீதான் எங்கள் வீட்டின் மருமகள் என்ற செய்தியிருந்தது.. விட்டால் அப்போதே கைபிடித்து வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிடும் ஆவலோடு அவள் ராதிகாவை அழைத்தாள்...

"வாம்மா.. இங்கே வந்து என்பக்கத்தில் உட்காரு..."

அந்த அழைப்பில் அதுவரை ராதிகாவின் மனதில் பனிமூட்டம் போல சூழ்ந்திருந்த சஞ்சலமும்.. பயமும் விலகி ஓடிவிட்டன.. ஆண்டாண்டு காலமாக அறிந்தவளைப்

போன்ற அந்த உரிமையான அழைப்பில் மெய் சிலிர்த்துப் போய் விட்டாள் ராதிகா...

மூன்று நபர் அமரக்கூடிய சிறிய அளவிலான சோபாவில் பாலமுரளியும் மேகலாவும் அமர்ந்திருந்தார்கள்.. ராதிகா அமர்வதற்காக மேகலா நகர்ந்து கொள்ள.. ராதிகா அவளருகில் அமர்ந்து கொண்டாள்...

மேகலா நடுவிலிருக்க.. இருபக்கமும் பாலமுரளியும்.. ராதிகாவும் அமர்ந்திருக்கும் அந்தக் காட்சியில் பாலசரஸ்வதியின் மனம் அதிர்ந்தது...

'இனி இதுதான் அம்மாவின் குடும்பமா.. ?'

அவள் தனிமைப் பட்டு விட்டதாக உணர்ந்தாள்.. அவளுக்கு உரிமையான தாய் ராதிகாவை அரவணைத்துக் கொண்டதில் இனம் புரியாத பொறாமை கலந்த வேதனைக்கு ஆளானாள் பாலசரஸ்வதி...

அவளுடைய தம்பி.. இனி இன்னொருத்தியின் உடமை என்ற உணர்வில் அவள் கண்களுக்கு ராதிகா அவளையும்.. அவளுடைய தம்பியையும் பிரிக்க வந்த பகையாளியாக தோற்றமளித்தாள்...

நீண்ட சோபாவில் கணவன் குழந்தைகள் சகிதம் குடும்பத்துடன் அமர்ந்தது தவறோ என்ற எண்ணம் அவள் மனதில் ஓடியது.. முதலிலேயே மேகலாவின் அருகே அவள் அமர்ந்திருந்தால் ராதிகாவை பிரித்து அமர விட்டிருக்கலாம்... அவளிடம் இதுதான் எங்கள் குடும்பம்..

இது என்னுடைய அம்மா.. இவன் என்னுடைய தம்பி.. நான் சொன்னால்தான் இவர்கள் கேட்பார்கள்.. நான் சொல்வதுதான் இவர்களுக்கு வேதவாக்கு என்று ராதிகாவுக்கு மறைமுகமாக உணர்த்தியிருக்கலாம்...

இப்போது அதற்கு வழியில்லாமல் போய் விட்டது... பாலசரஸ்வதியின் குடும்பம் தனி.. பாலமுரளியின் குடும்பம் தனி என்று ஆகிவிட்டது... அதில் பாலசரஸ்வதியின் அன்னை மகனின் பக்கம் அமர்ந்து விட்டாள்.. அந்தக் குடும்பத்தின் அங்கமாக ராதிகாவை அங்கீகரித்து விட்டாள்...

மேகலாவின் அருகே அமர்ந்திருந்த ராதிகா.. இனம் புரியாத உணர்வுகளின் கலவைக்கு ஆளானாள்... தயக்கத்துடன் மேகலாவைப் பார்த்தபோது அவளின் பார்வை ராதிகாவை வருடிக் கொடுத்ததை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது...

"படிச்சிக்கிட்டு இருக்கியாம்மா... ?"

வார்த்தைகளுக்கு வலிக்கும் என்று நினைப்பவளைப் போல மிகமென்மையாக கேட்டாள் மேகலா...

ராதிகா வாயசைத்தாள்.. அவளுக்கு படபடப்பில் பேச வரவில்லை.. அவளது நிலையைப் பார்த்த பாலமுரளி அதை ரசித்துச் சிரித்தான்...

"படிச்சுக்கிட்டுத்தான் இருக்காம்மா..."

அவளுக்குப் பதில் அவன் பதில் கொடுத்தான்.. நன்றியுடன் அவனை ஒர் பார்வை பார்த்து வைத்தாள் ராதிகா... அதை உணர்ந்தவனின் கண்கள் மின்னின...

"நீயாடா ராதிகா..?"

செல்லக் கோபத்துடன் மகனை முறைத்தாள் மேகலா..

"நான் உங்க மகன் பாலமுரளிம்மா.. அக்கா நீயாவது அடையாளம் சொல்லுக்கா..."

பாலமுரளி விளையாட்டாய் கேட்டபோது... தன்னையுமறியாமல் பாலசரஸ்வதியின் பக்கம் பார்த்தாள் ராதிகா.. கடினமான அவள் முகத்தையும்... கண்டனம் தெரிவித்துக் கொண்டிருந்த அவள் பார்வையையும் கண்டவுடன் ராதிகாவின் மனம் துணுக்குற்றது.. அது நேரம்வரை அவள் மனதில் படிந்திருந்த இன்ப உணர்வு சிறிது விலகியது....

பாலசரஸ்வதியின் பார்வை உணர்த்திய அப்பட்டமான எதிர்ப்பில் ராதிகா அரண்டு போனாள்...

'ஏன் இப்படி முறைக்கிறாங்க..? இவங்களுக்கு என்னைப் பிடிக்கலையோ...' அவள் மனம் சந்தேகம் கொண்டது...

மீண்டும் ஒர்முறை பாலசரஸ்வதியை அவள் பார்த்த போது.. சந்தேகத்துக்கு இடமேயின்றி தனக்கு ராதிகாவை பிடிக்கவில்லையென்பதை தன் உதாசினப் பார்வை மூலம் உணர்த்தினாள் பாலசரஸ்வதி...

'சங்கரின் அம்மா கூட இப்படிப் பார்க்கல...'

ராதிகாவின் பார்வையும்.. கீதாவின் பார்வையும் சந்தித்து மீண்டன...

"எனக்கே இது நீதானான்னு அடையாளம் தெரியல.. அம்மாவுக்கு எப்படிடா தெரியும்..?"

பாலசரஸ்வதியின் குரலில் தொனித்த எரிச்சலை ராஜேஸ்வரி மிக எளிதாக இனம் கண்டு கொண்டு விட்டாள்...

கிருஷ்ணமூர்த்தியை அர்த்தத்துடன் பார்த்து விலகிய அவள் பார்வை சொல்லிய செய்தியை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது...

'என்னவோ சங்கரின் அம்மாதான் ராங்கித்தனமானவங்கன்னு சொன்னீங்களே.. இப்ப இந்தப் பொண்ணு எப்படியிருக்கா..?'

இதைத்தான் அவள் தன்பார்வையில் கேட்டாள்...

பாலமுரளி அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவேயில்லை... அவன் தன் போக்கில் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான்... அதில் மேகலாவும் கலந்து கொண்டாள்..

"என்னவோ முகமூடியை மாட்டிக்கிட்டு வந்திருக்கவனைச் சொல்றதைப்போலல்ல அக்கா சொல்லி வைக்குது.. என்னம்மா..?"

"ஆமடா முரளி.. கல்யாணம் பண்ணிக்கிட்ட பொண்ணுகளுக்கு அவங்க வீட்டாளுகளைத்தான்

அடையாளம் தெரியும்.. பிறந்தவீட்டு மனுசங்களை அடையாளம் தெரியாது..."

"அப்ப.. ராதிகாவும் அப்படித்தான் ஆகிடுவாளா...?"

"பின்னே..? நாளைக்கே அவ தம்பியைப் பார்த்து யார் நீன்னு கேட்டாலும் கேட்பா.."

மேகலா இப்படிச் சொன்னதும் கிடைத்தது வாய்ப்பென்று கீதாவும் ஊடே புகுந்தாள்...

"அதெப்படி அத்தை.. கரெக்டா.. இவன் பேய்ன்னு கண்டு பிடிச்சீங்க..?"

கீதாவின் கேள்வியைக் கேட்ட மேகலாவின் முகத்தில் ஆச்சரியம் பரவியது...

"நான் எப்போம்மா உன் தம்பியை பேய்ன்னு சொன்னேன்..?"

"பேயைப் பார்த்துத்தானே அத்தை யார் நீன்னு கேட்க முடியும்..? போனவாரம் டிவியில நான் பார்த்த பிளாக் அன்ட் ஒயிட் படத்தில அப்படித்தான் வந்தது.. எனக்கே இது தெரியுது.. உங்களுக்குத் தெரியாதா..?"

சுந்தர் ஆத்திரத்துடன் கையைப் பிசைந்தான்.. அதைப் பார்த்த கீதா இன்னும் கொஞ்சம் பற்ற வைத்தாள்...

"பார்த்தீங்களா அத்தை.. இவன் நம்பியாரைப் போலவே கையைப் பிசைகிறதை.. இவன் பேய் மட்டுமில்ல அத்தை.. பக்கா வில்லனும்தான்..."

மேகலாவுக்கு ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியத்தை அளித்துக் கொண்டே... சுந்தருக்கு ஆத்திரத்திற்கு மேல் ஆத்திரத்தை அளித்துக் கொண்டிருந்தாள் கீதா...

"எதுக்கு என்னை வம்புக்கு இழுக்கிற.." அவன் கிசுகிசுப்பான குரலில் கீதாவிடம் சீறினான்..

"நானாடா குட்டிப்பிசாசு...?" அவள் அதே தாழ்ந்த குரலில் காரணத்தை உணர்த்தினாள்...

முரளியைப் பார்த்த மேகலாவிற்கு சிரிப்பை அடக்க முடியவில்லை... பார்த்த முதல்நாளிலேயே அத்தை என்று உறவு கொண்டாடிய ராதிகாவின் உடன்பிறப்புகளை அவளுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது...

அதை அவளது முகக்குறிப்பு உணர்த்தி விட பாலசரஸ்வதிக்கு பொறுமை காக்க முடியவில்லை...

"ஏம்மா.. நாம இங்கே எதுக்கு வந்திருக்கோம்..?"

அவளது கோபக்குரலில் ராஜராஜனின் முகம்கூட மாறிப் போனது...

"என்ன சரஸ்..? எதுக்கு இந்த கோபம்..?"

"பின்னே என்னங்க.. பொண்ணு பார்க்க வந்திருக்கோம்.. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க அப்படிங்கிற மட்டு மரியாதை கொஞ்சம் கூட இல்லாம அந்தப் பொண்ணு கதையடிக்குது.. அதைக் கண்டிக்காம பெண்ணைப் பெத்தவங்க பேச விட்டு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருங்காங்க... அம்மாவும் அதை ரசிச்ச

சிரிச்சுக்கிட்டு இருக்காங்க.. இங்கே என்னதான் நடக்குது..? இவங்க பேசிச் சிரிக்கிறதைப் பார்த்து மகிழத்தான் நாம இவ்வளவு தூரம் காரைப் போட்டுக்கிட்டு வந்திருக்கோமா..?"

கீதாவும் சுந்தரும் தங்களுக்குள் நடந்து கொண்டிருந்த சண்டையை மறந்து விட்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்...

ராதிகாவின் முகத்தில் கலவரம் மண்டியது.. அவ்வளவு நேரமும் பாலசரஸ்வதியை பேசவிட்டு ராஜேஸ்வரி கேட்டுக் கொண்டிருந்ததே பெரிய சமாச்சாரம்... அவள் நிமிர்ந்து பாலசரஸ்வதியைப் பார்த்த போதே கிருஷ்ணமூர்த்தி 'போச்சுடா..' என்று மானசீகமாக தலையில் கை வைத்துக் கொண்டார்...

பாலசரஸ்வதிக்கு ராஜேஸ்வரி கொஞ்சம் கூட சளைத்தவளல்ல.. இன்னும் சொல்லப் போனால்.. ராஜேஸ்வரிக்கு எதிராகப் பேச பால சரஸ்வதியால் தான் முடியாமல் போகும்.. ஆனானப்பட்ட கிருஷ்ண மூர்த்தியையே அடக்கி ஒடுங்கி அமரவைக்கக் கூடிய ஆற்றல் படைத்தவள் ராஜேஸ்வரி.. யாருக்கும் அடங்காத மூன்று பிள்ளைகளையும் தன் கைக்குள் அடக்கி வைத்திருக்கும் சக்தி வாய்ந்தவள்...

அப்பேற்பட்டவள் மகளுக்காக வாய்மூடி நின்றால்.. இந்த பாலசரஸ்வதி அதை உணராமல் எதை வேண்டுமானாலும் பேசிவிடுவதா...?

"ஏம்மா.. உங்க குடும்பத்தில் யாரும் பேசி சிரிக்க மாட்டிங்களா...?"

ராஜேஸ்வரி நிதானமகாக் கேட்டதும்.. பாலசரஸ்வதிக்கு பற்றிக் கொண்டு வந்தது...

எவ்வளவு தைரியமிருந்தால் பெண்ணைப் பெற்றதாய் மாப்பிள்ளையின் அக்காவிடம் கேள்வி கேட்பாள்...?

'எல்லாம் இந்த பாலமுரளி கொடுக்கிற இடம்...' பல்லைக் கடித்தாள்...

உன்கூடவெல்லாம் நான் பேசியாக வேண்டுமா..? என்ற பாவனையில் முகம் திருப்பிக் கொண்டவளை ராஜேஸ்வரி விடுவதாக இல்லை...

"உன்னைத்தான் கேட்கிறேம்மா... பதில் சொல்லு..."

"ஏங்க.. உங்க மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கீங்க..?"

"எதுவும் நினைக்கலை.. நீதான் எதையோ மனசில நினைச்சுக்கிட்டு இப்படிப் பேசற மாதிரி எனக்குத் தோணுது..."

"இங்கே மாப்பிள்ளை வீட்டுக்காரங்க நீங்களா.. இல்லை.. நாங்களா..?"

"சந்தேகமில்லாம நீங்கதான் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க.. நாங்க பொண்ணு வீட்டுக்காரங்கதான்.. அதுக்கென்ன இப்ப..?"

"உங்க பேச்சையும்.. தோரணையும் பார்த்தா அப்படித் தெரியலையே..."

"என்ன செய்யனும்கிற..? மாப்பிள்ளை வீட்டுக்காரங்க காலைக்கழுவி குடிக்கனுமா...? எங்களுக்கு அப்படியெல்லாம் பழக்கமில்லை..."

வார்த்தை தடிப்பதை உணர்ந்த பாலமுரளி.. அக்காவின் கணவரைப் பார்த்தான்.. ராஜராஜன் குறிப்பறிந்து மனைவியைக் கட்டுப் படுத்தினான்...

"சரஸ்.. வாட் இஸ் திஸ்..?"

"பாருங்க.. இவங்க எப்படிப் பேசறாங்கன்னு.."

"பெரியவங்க.. யதார்த்தமா பேசறாங்க..."

"இதுவா யதார்த்தம்...?"

"எனக்கு அப்படித்தான் தோணுது.. கீப் கொயட்..."

பாலசரஸ்வதி.. வாய்க்குள் முணுமுணுத்த படி முகத்தை திருப்பிக்கொள்ள.. பாலமுரளி ராஜேஸ்வரியுடன் சமாதானப் பேச்சு வார்த்தையில் இறங்க யார் முன்வருவார்கள் என்ற யோசனையுடன் கிருஷ்ண மூர்த்தியைப் பார்த்தான்...

அவன் அப்படித்தான் செய்து வைப்பான் என்பதை உணர்ந்திருந்த அவர் அவனுடைய பார்வையைத் தவிர்த்தார்..

அவனுக்கென்ன.. பெண் பார்த்து முடிந்ததும்.. வேலை முடிந்ததென்று வீட்டுக்கு கிளம்பிப் போய்

விடுவான்.. அவர்தானே ராஜேஸ்வரியிடம் தனியறையில் மாட்டிக் கொள்ள வேண்டும்..?

இந்த விளையாட்டுக்கு நான் வரமாட்டேன் என்று அவர் ஒதுங்கிக் கொள்ள பாலமுரளி ராதிகாவைப் பார்த்தான்... அவள் விழிகளில் பயத்தின் சாயல் அப்பட்டமாகத் தெரிய.. அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

மாமனாரை நம்பினால் வேலைக்கு ஆகாது என்று தானே களத்தில் இறங்க முடிவு செய்தவனாக அவன் பேசப் போனபோது.. அவனை முந்திக் கொண்டு மேகலா பேசினாள்...

"தப்பா எடுத்துக்காதீங்க சம்பந்தியம்மா.. பெண் பார்க்க வந்தவங்க.. கல்யாணத்துக்கு நாளைக் குறிக்காம பேசிக்கிட்டு இருந்தோமா.. அதைச் சொல்லத்தான் பாலசரஸ்வதி பேச்சை ஆரம்பிச்சா..."

"எனக்கென்னவோ அப்படித் தோணலையே..."

"அவ பேசின விதம் அப்படி.. பேசத் தெரியலை.. அப்படி நான் வளர்த்துட்டேன்.. என்ன செய்கிறது..?"

மேகலா வருத்தப் படவும் ராஜேஸ்வரிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.. இவ்வளவு தன்மையாகப் பேசுகிறவளிடம் முகம் முறித்துப் பேசவும் அவளுக்கு மனம் வரவில்லை...

"நீங்க என்ன செய்வீங்க..? நாம வளர்க்கிறது என்னவோ நல்லாத்தான் வளர்த்து வைக்கிறோம்..

அதுகளா இப்படி வளர்ந்து நின்னா நாமளா பொறுப்பாளியாக முடியும்..? இந்தச் சின்னப் பொண்ணும்.. பையனும் அடிக்கிற லூட்டி அப்படி.. உங்க பொண்ணு சொன்னதிலயும் தப்பில்ல.. இதுகளுக்கு கொஞ்சமாவது அக்காவைப் பெண் பார்க்க வந்திருக்காங்கன்னு தோண வேணாமா..?"

ஒரு வார்த்தை... ஒரேயொரு சின்னஞ்சிறு வார்த்தை போதும்...

அதைச் சொல்வதால் நாம் ஒன்றும் குறைந்து விடப் போவதில்லை.. நமது கிரீடம் இறங்கி விடப் போவதில்லை.. பெரிய காட்டுத் தீயின் வேகத்துடன் பற்றியெரியும் சொற்போர் கூட இந்த ஒரு வார்த்தையில் அடங்கி விடும்...

தேனூத்தின் பெரிய மனிதரான மாணிக்க வாசகத்தின் மனைவியும்.. தென்காசி மாவட்டத்திலேயே பெயர் பெற்ற தொழிலதிபனான பாலமுரளியின் அன்னையுமான மேகலா அதைச் செய்தாள்...

பணத்திலும்.. சொத்திலும்.. பாரம்பர்யத்திலும் மிக உயர்ந்த இடத்தில் அவள் இருந்தாலும்.. மகனின் காதலுக்காக தணிந்து சொன்னாளே ஒரு சொல்..! அந்த இடத்தில் தான் அவள் பாலமுரளிக்கு பூரண அன்னையானாள்



தொட்டு விட்டு சென்று விட்டாய்..
தூக்கம் இழந்தது நான்தானே..?

'அம்மா..!'

பாலமுரளி மனம் நெகிழ்ந்தான்.. ராதிகாவோ.. மேகலாவுக்கு கோவில் கட்டி கும்பிட்டு விடும் உத்தேசத்திற்கே போய் விட்டாள்...

மகளின் மீது தாய் கொண்டிருந்த அபரிதமான பாசத்தை அறிந்தவன் பாலமுரளி.. மேகலாவுக்கு பாலசரஸ்வதியின் நலனே பிரதானமான ஒன்றாக எப்போதுமே இருந்து வந்திருக்கிறது..

அப்படிப்பட்டவள்.. மகனுக்கு பெண் பார்க்க வந்திருக்கும் அந்தச் சூழ்நிலையில்... பெண்ணைப் பெற்றவளிடமே மகளை குறைவாகப் பேசுகிறாள் என்றால் அந்த தாய் மனதை என்னவென்று சொல்வது..?

"முதல்ல சாப்பிட்டு விடலாம்.. பசியோட பேசினா.. பலவிதமாத்தான் பேசத் தோணும்"

கடைசித் தாக்குதலை தொடுத்து விட்டு ராஜேஸ்வரி சமையலறைக்குள் சென்று விட்டாள்...

'திமிரைப் பார்.. இவங்க வீட்டு சாப்பாட்டுக்குத்தான் ஏங்கித் தவிக்கிறோமா..?'

பாலசரஸ்வதி எழுந்து கொள்ளப் போனாள்.. ராஜராஜன் ஒரு பார்வை பார்த்ததும் அடங்கிப் போய் அமர்ந்து விட்டாள்...

வரவழைத்துக் கொண்ட முக மலர்ச்சியுடன் ராஜேஸ்வரி எல்லோருக்கும் டிபன் காபியை பரிமாறினாள்.. பாலசரஸ்வதி முகத்தைச் சுளித்துக் கொண்டே அவற்றைத் தொடாமல் தள்ளி வைக்க.. மற்றவர்கள் அதன் ருசியில் ஈர்க்கப்பட்டு ஒரு கை பார்த்தார்கள்...

"டேஸ்டா இருக்கு..."

ராஜராஜன் வாய்விட்டே பாராட்டி வைத்தான்.. பாலசரஸ்வதியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க.. கணவனை விரோதமாக பார்த்து வைத்தாள்...

"நிஜமாகவே டேஸ்டா இருக்குடி.. நீ வேணா ஒரு துளியெடுத்து டேஸ்ட் பண்ணிப்பாரேன்..."

அவளது கோபம் புரியாமல் அவன் சொல்லிவைக்க..

"எனக்குப் பசியில்லை.." என்றாள் பாலசரஸ்வதி...

"எங்களுக்கு பெண்ணைப் பிடிச்சிருக்கு... நிச்சயத்துக்கும்... முகூர்த்தத்திற்கும் நாள் பார்த்துரலாமா..?"

மேகலா திருமணப் பேச்சை ஆரம்பித்து விட்டாள்.. 'அப்பாடா...' என்று நிம்மதிப் பெருமூச்சை விட்டாள் ராதிகா...

'இனி பயமில்லை...'

அவள் நினைத்தது நடக்கவில்லை...

"அதுக்கென்னங்க.. பார்த்துட்டாப் போச்சு.." என்று இணக்கமாக பேசிய கிருஷ்ணமூர்த்தியை

"கொஞ்சம் பொறுங்க.." என்று இடை மறித்தாள் ராஜேஸ்வரிட...

'சொன்னேனில்ல..' ராதிகா கண்களால் பதற.. பாலமுரளி இமைகளை மூடித்திறந்து அவளை அமைதிப் படுத்தினான்...

"என்ன சம்பந்தியம்மா..? நீங்க ஏதோ சொல்ல நினைக்கறிங்க போல..." மேகலா ராஜேஸ்வரியின் முகம் பார்த்தாள்...

"ஆமாங்க... நான் சொல்லனும்.." ராஜேஸ்வரியின் முகத்தில் கடினத்தன்மை வந்திருந்தது...

"தாராளமாச் சொல்லுங்க.. நீங்க பெண்ணைப் பெத்த தாய்.. உங்களுக்கில்லாத உரிமையா..?"

"ராதிகாவை ஏற்கனவே பொண்ணு பார்த்துட்டுப் போயிருக்காங்க..."

"அப்படியா... முரளி இதைச் சொல்லவே இல்லையே..."

மேகலா கேள்வியுடன் மகனைப் பார்த்தாள்.. அவன் நிதானமாக தாயின் கேள்விக்கு பதில் சொன்னான்...

"ராதிகா அந்த மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதம் சொல்லலைம்மா..."

மகன் சொன்னதைக் கேட்டதும்.. மேகலா ராஜேஸ்வரியின் பக்கம் திரும்பினாள்...

"பொண்ணுன்னு இருந்தா ஆயிரம் பேர் கேட்டு வருவாங்க.. அதைப் போயா பெரிசா சொல்றிங்க..? பெண்ணுக்கு சம்மதமில்லையாமே..."

ராஜேஸ்வரி சொன்னதை எதுவுமேயில்லாததாக மேகலா ஆக்கிவிட... அதற்கெல்லாம் அயர்வேனா என்று விடாமல் பேச்சைத் தொடர்ந்தாள் ராஜேஸ்வரி...

"இருக்கலாம்ங்க.. ஆனாலும் கூ.. தூரத்தில் இருக்கிற பலாக்காயை விட... பக்கத்தில இருக்கிற கலாக்காய் உசத்தியில்லையா..?"

'இந்தப் பழமொழியை எதுக்கு இந்தம்மா சொல்லுது..' மேகலா புரியாமல் ராஜேஸ்வரியை பேச விட்டாள்...

"அப்படித்தாங்க.. தென்காசியில இருக்கறி தேனூத்தைவிட.. இங்கே சென்னையிலேயே இருக்கிற மாப்பிள்ளை எங்களுக்கு உசத்தியாப்படுது..."

ராஜேஸ்வரி இதைச் சொல்லிய போது.. ராதிகா கண்களை மூடித்தன் வேதனையை வெளிப்படுத்த... கிருஷ்ணமூர்த்தியோ வெளிப்படையாக...

"த்ச்சு.." என்று தன் அதிருப்தியை வெளிப்படுத்தினார்... அந்த இரண்டையும் ஊன்றிக் கவனித்த மேகலா...

"எங்களுக்குன்னு நீங்க கூட்டுச் சேர்க்கறிங்க.. ஆனா.. உங்ககூட பெண்ணும்.. பெண்ணைப் பெற்ற அப்பாவும் கூட்டுச் சேர தயாரா இல்ல போல இருக்கே.." என்று சொல்லிவிட்டாள்...

"அவங்களுக்கு என்னங்க தெரியும்..? அவங்கவங்க மனசுப்படி நடந்தா அது குடும்பமா இருக்காதுங்க..."

ராஜேஸ்வரி எரிச்சலுடன் கணவரைப் பார்த்தாள்...

"அதுக்காக பெத்த பிள்ளைக மனசுப்படி நடக்காம விட்டாலும் அது குடும்பமா இருக்காது.." மேகலா பொறுமையாக பதில் சொன்னாள்...

மேகலா ராஜேஸ்வரியுடன் வாதாடிக் கொண்டிருக்க பொறுக்க முடியாமல் பாலசரஸ்வதி குறுக்கிட்டாள்...

"ஏம்மா.. அவங்களுக்கு இஷ்டமில்லைன்னா நீங்க எதுக்காக வற்புறுத்தறிங்க.. எழுந்திருடா முரளி.. உனக்கு ஆயிரம் பொண்ணு காத்திருக்கு.. இதுகளை மதிச்சு வீடு தேடி வந்தியே.. உன்னைச் சொல்லனும்டா.. தராதரம் தெரியாதவங்க..."

அக்காவின் திருமணத்துக்காக வாயடக்கி நின்றிருந்த கீதா வாயைத் திறந்தாள்.. சுந்தரின் காதில் முணுமுணுத்தாள்...

"ஆஹா.. இந்த லேடி எதுடா சாக்குன்னு காத்திருந்தாங்க... நம்ம வீட்டு லேடி ஹிட்லர் லட்டு.. லட்டா சான்ஸை அள்ளிக் கொடுக்கறாங்களேடா சுந்து.. அந்த லேடியும் அதை லபக்கு.. லபக்குன்ன பிடிச்சுக்கிறாங்க.. என்னடா அநியாயம் இது..?"

"ஆமாம் கீது.. இது எங்கே போய் முடியுமோ.. தெரியலையே..."

"நிச்சயமாய் ராதிகாவின் கல்யாணத்தில போய் முடியாதுன்னு எனக்குத் தோணுதுடா.. அது ரொம்பவும் சிக்கல்தான்..."

"ஏண்டி வாய் வைக்கிற..?"

"நானாடா வாய் வைக்கிறேன்..? மாப்பிள்ளையோட அக்கா இல்ல வாய் வைக்குது..?"

"நம்ம வீட்டு நாட்டாண்மை மட்டும் வாய் வைக்கலையா..?"

அவர்களுக்குள் சன்டை ஆரம்பமாக.. பாலமுரளி களத்தில் இறங்கினான்.. முதலில் பாலசரஸ்வதியின் பக்கம் திரும்பினான்..

"அக்கா.. சும்மாயிரு..." என்று தமக்கையை அதட்டினான்...

"என்னை ஏண்டா அதட்டி வைக்கிற..? உனக்குப் பொண்ணு கொடுக்க கசக்குதுன்னு இந்தம்மா சொல்றாங்க... இதைக் கேட்கத்தான் எங்களை திருநெல்வேலியில இருந்து வர வைச்சியா..?"

"முரளி.. எனக்கும் சரஸ் சொல்கிறதில ஒரு நியாயம் இருக்கிறதா மனசில படுது.. அவர்களுக்கு விருப்பமில்லைன்னா... நாம ஏன் இவ்வளவு தூரம் அலையனும்..? நம்ம ஸ்டேட்டஸையும் பார்க்கனுமில்ல..."

அதுவரை மனைவியை கட்டுப் படுத்திக் கொண்டிருந்த ராஜராஜன் மனைவியின் பக்கம் சாய்ந்து விட.. ராதிகா கண்ணீர் விடவே ஆரம்பித்து விட்டாள்.. அதை மேகலாவும் பார்த்தாள்.. முரளியும் பார்த்தான்...

"என்னத்த மாமா.. நியாயத்தைக் கண்டுட்டிங்க... பெண்ணைக் கொடுக்க மாட்டேன்னு இவங்க சொல்லிட்டா ஆச்சா..? நான் வான்னு சொன்னா இந்த நொடியே ராதிகா என் பின்னாலே வந்து விடுவா... சொல்லவா..? என்ன நடக்குதுன்னு செய்து காட்டவா..?" பாலமுரளியின் கோபக் குரலில் சவால் இருந்தது...

"முரளி..!" ராஜராஜன் திகைத்தான்...

"நாங்க காதலிக்கிறோம் மாமா.. முறைப்படி பெண் கேட்டு வந்திருக்கேன்.. கொடுத்தா.. அவங்களுக்கு நல்லது.. கொடுக்கலைன்னா.. அவங்களை மீறி அவங்க பொண்ணு கல்யாணம் பண்ணிக்கிட்டான்னு பேச்சு வரப்போகுது.. அப்புறம் அவங்க இஷ்டம்..."

"வந்து விடுவாளா..? என் பொண்ணு அப்படி வந்து விடுவாளா..?" ராஜேஸ்வரி பதறினாள்...

"மாமாட்டான்னு அவளைச் சொல்லச் சொல்லுங்க.. பார்ப்போம்.." பாலமுரளி உறுதியான குரலில் கேட்டான்..

"ராதிகா..." ராஜேஸ்வரி அதட்டினாள்...

ராதிகா அசையவில்லை.. இல்லையென்று சொல்லவில்லை... எதுவாக இருந்தாலும் என் வீட்டார் பேச்சைத்தான் கேட்பேனென்று வசனம் பேசவில்லை... இத்தனைக்கும் மேலாக பாலமுரளியின் பேச்சுக்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை... கல்லைப் போல உறைந்திருந்தாள்...

ராஜேஸ்வரி அதிர்ந்து போனாள்.. இந்த ராதிகா அவருக்குப் புதியவளாக இருந்தாள்.. அவள் பெற்று வார்த்த ராதிகா இப்படி ஒருநாளும் இருந்ததில்லையே...

பாலமுரளியின் முகத்தில் தெரிந்த வெற்றிக்குறி ராஜேஸ்வரியை பாதித்தது...

"மாமா... நீங்க கொல்லுங்க.. மேற்கொண்டு என்ன செய்யலாம்..? நீங்க எங்க வீட்டைப் பார்க்க வருகிறீங்களா..?"

"வேண்டாம்ன்னு சொல்லுங்க..." ராஜேஸ்வரி மறுத்து விட்டாள்...

"எப்ப என் பொண்ணு இவரை நம்பி இவர் பின்னாலே போய் விடுவான்னு பேச்சு வந்துருச்சோ.. அதுக்கு மேல அவர் வீட்டையும் ஊரையும் பார்த்து

நமக்கு என்ன ஆகப்போகுது..? மாப்பிள்ளையோட அம்மா எந்த நாளைச் சொல்கிறாங்களோ.. அந்த நாளில் பெண்ணை அழைத்துக்கிட்டுப் போய் அவங்களிடம் ஒப்படைத்து விடுவோம்.. அதுக்கு மேல பேச என்ன இருக்கு...?"

தாயின் துயரத்தைக் காணச் சரிக்கவில்லை ராதிகாவுக்கு...

பெண்ணென்று பிறந்ததினால்..
பெருந்துன்பம் நான் கொண்டேன்...

"இதற்கிதுதான் என்று
முன்னே யார் நினைத்தது...?
பழி இங்கு வந்து
முடியுமென்றால் யார் தடுப்பது..?"

கருப்பு வெள்ளைப் பாடல் காட்சி ஒடிக் கொண்டிருக்க.. ராதிகா தரையில் குத்துக் காலிட்டு அமர்ந்து கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தாள்...

ராஜேஸ்வரி அவளிடம் பேசவில்லை... மேகலா கூறிய நாளை ஏற்றுக் கொண்டாள்.. அடுத்த வாரம் நிச்சயதார்த்தம் என்ற போது...

"அதுக்கென்னங்க.. பண்ணிட்டாப் போச்சு.." என்றாள்..

"அடுத்த முகூர்த்தத்தில் கல்யாணத்தை வைச்சுக்கலாம்.."

"செய்யுங்க..."

"நிச்சயத்துக்கு மண்டபம் பிடிச்சுருங்க.. எங்க பக்கம் ஜனக்கட்டு அதிகம்... வீடு கொள்ளாது..."

"எங்க பக்கமும் அப்படித்தான்.. மண்டபத்தையே பிடிச்சுரலாம்..."

"கல்யாணம் எங்க ஊரிலதான் நடக்கும்..."

"எங்க பக்கமும் அதுதான் வழக்கம்.."

"அப்ப நாங்க கிளம்பறோம்..."

"தாராளமாக கிளம்புங்க.. அதான் பேச வேண்டியதை பேசிட்டோமே..."

ராஜேஸ்வரி கூறிய எகத்தாளமான பதிலை பண்ணை வீட்டிற்கு வந்த பின்பு விமரிசித்தாள் பாலசரஸ்வதி...

"பேச வேண்டியதையெல்லாம் பேசியாச்சாமே.. அப்படி என்னத்தை பேசிக் கிழிச்சுட்டோம்.. பெண்ணுக்கு எத்தனை பவுன் நகை போடறிங்கன்னு கேட்டோமா..? வைரத்தில நெக்லஸ் வேணும்ன்னு பேசினோமா..? எத்தனை கிலோ தங்கம் போடறதுன்னு முடிவு பண்ணினோமா..?"

"சரஸ்..."

"நீங்க சும்மாயிருங்க.. காதல்ன்னு சொல்லி.. இவன் ஏதோ ஒன்னில் இறங்குறான்.. இது எனக்குச் சரியாப்படலை..."

"அவருக்குப் பிடிச்சிருக்கே சரஸ்..."

"அதுக்காக இப்படியா தழைஞ்சு போவாங்க..? நம்ம தகுதிக்கும் தரத்துக்கும் அவங்க ஏணி வைச்சாலும் எட்டிப் பிடிக்க முடியுமாங்க..?"

"முடியாதுதான்..."

"இருந்தும் அந்தம்மா என்ன பேச்சு பேசுது..? அந்தப் பொண்ணு மேல இவன் ஆசைப்பட்டதாலதான் அந்த வீட்டு வாசல் படியை நாம மிதிச்சோம்... இல்லேன்னா நம்ம தரத்துக்கு இவங்க வீட்டுக் கெல்லாம் வந்து போவோமாங்க..?"

மனைவியின் கேள்விக்கு மௌனம் சாதித்தான் ராஜராஜன்.. அந்த மௌனம் மனைவியின் வார்த்தை-களுக்கான அவனது ஆமோதிப்பை உணர்த்த.. அதை பாலமுரளியால் அலட்சியம் செய்ய முடியவில்லை..

"மாமா.. ராதிகாவைப் பெண் கேட்டு வந்தது யார் தெரியுமா...?"

பாலமுரளியின் கேள்விக்கு...

"யாராக இருக்கும்..? அவங்க சொந்த பந்தத்தில சாதாரணப்பட்டவங்க யாராவது வந்திருப்பாங்க.. வேற

யாரு இவங்க வீட்டுக்கு பெண் கேட்டு வந்திருக்கப் போகிறாங்க..?" என்று அலட்சியமாகப் பேசினாள் பாலசரஸ்வதி...

ராஜராஜனின் முகக் குறிப்பும் அதையே உணர்த்தியது...

"சங்கர் மாமா..."

பாலமுரளியின் குரலில் ஆழ்கடலின் அமைதியிருந்தது...

அவனுக்குத் தெரியும்.. சங்கர் யாரென்று ராஜராஜன் உடனே இனம் கண்டு கொள்வான் என்பது..

ஷோபா ராஜாராஜனுக்கு சித்தியின் மகள்.. அவளுக்கு சங்கரை மாப்பிள்ளை பார்க்கிறார்கள் எனும் போது.. அவனைப்பற்றி ராஜராஜனுக்கு தெரியாமல் இருக்குமா..? ஒருவேளை அது பாலசரஸ்வதிக்கு தெரியாமல் இருக்கலாம்...

அவனது கணிப்பு சரியாக இருந்தது...

"என்னது..? சங்கரா..?" ராஜராஜன் வாய் பிளந்தான்...

'அவன் என்ன பெரிய இவனா..? என் அக்கா புருசன் இப்படி வாய் பிளக்கிறாரு..' பாலமுரளிக்கு எரிச்சல் வந்தது..

"அவன் தான்.. வேணும்னா ஷோபாவைக் கேட்டுப் பாருங்க..."

"என்னாலே நம்பவே முடியலையே..."

"இப்ப அது பிரச்னை இல்லை.. சங்கரைக் கல்யாணம் பண்ணிக்க ராதிகா சம்மதிக்கலை.. என்னைக் காதலிக்கிறவள விட்டுக் கொடுக்க நான் விரும்பலை.. இதில ராதிகாவோட அப்பா என்பக்கம் சாயறாரு.. ராதிகாவோட அம்மா சங்கர் பக்கம் சாயறாங்க..."

"இப்படியொரு கதை வேற ஓடுதா..."

"ம்ம்ம்..."

"சரஸ்.. ராதிகாவோட அம்மா பேசினதை நீ பெரிசு பண்ணிக்காதே.. ராதிகாவை பெண் கேட்டிருக்கிறதும் ஒரு கோடிஸ்வரன்தான்.. இதில நாம முரளியின் பக்கம் சப்போர்ட் பண்ணித்தான் ஆகனும்.."

'இல்லைன்னா.. உங்க சித்தி மகளுக்கு சங்கரை எப்படி கல்யாணம் பண்ணி வைக்கிறது...'

"எப்படி.. நம்ம வீட்டுக்கு வர வேண்டிய பொண்ண நாம விட்டுக் கொடுக்க முடியும்..? முரளி பேசியது தான் சரி..."

ராஜராஜனின் உதவிக்கரம் மீண்டும் வலுவானது.. பாலசரஸ்வதி திடிரென்று கிடைத்த கணவனின் ஆதரவு மறைந்ததில் தனித்து நின்றாள்...

மேகலாவும்.. பாலமுரளியும் திருமண ஏற்பாடுகளைக் குறித்து ஆலோசனை செய்ய ஆரம்பிக்க.. ராஜராஜன் அதில் கலந்து கொண்டு... தன் ஆலோசனைகளைக் கூறிக் கொண்டிருந்தான்...

அதில் கவராஸ்யம் இல்லாத பாலசந்தரை தின்னைகளுடன் தூங்கப் போனாள்...

பெண் கேட்டுவிட்டுப் போனவர்களின் கதை இப்படியிருக்க.. ராதிகாவின் வீட்டில் கதை வேறு மாதிரி இருந்தது..

ராஜேஸ்வரி பெரிய மகளைப் புறக்கணித்தாள்.. அவளிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.. ராதிகாவே மனம் தாளாமல்...

"அம்மா..." என்று அருகே போனபோது...

'யார் நீ...' என்பதைப் போல ஒரு அறிமுகமற்ற பார்வை பார்த்து விட்டு சமையலறைக்குள் சென்று விட்டாள்...

"அப்பா..."

திரும்பின மகளை ஆதரவுடன் அணைத்துக் கொண்டார் கிருஷ்ணமூர்த்தி...

ஒருவார்த்தை கூட அவரைப் பேச விடாமல் மேகலாவிடம் தானே பேசி திருமணத்தை முடிவு செய்த ராஜேஸ்வரியின் கோபத்தை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது...

பெற்று வளர்த்த மகள்... சொல் பேச்சை மீறுகிறாள் என்பதை எந்தத் தாயால் சகித்துக் கொள்ள முடியும்..?

"ராஜேஸ்வரி..."

இருந்தும் மகளுக்காக மனைவியிடம் பேசப் போனார் கிருஷ்ணமூர்த்தி...

"வேண்டாங்க.. என்னை விட்டுருங்க.. இது ஒன்னை மட்டும் பெத்திருந்தா.. இப்பவே நான் தலை முழுகியிருப்பேன்.. இதுக்குப் பின்னாலே இன்னும் ரெண்டைப் பெத்து வைச்சிருக்கேனே... அதுகளுக்காக பார்க்கிறேன்... இவளக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற மகராசன்தான் சவால் விட்டாரே... பெண்ணைக் கொடுக்கறிங்களா.. இல்லை உங்களை மீறி உங்க பொண்ணு கல்யாணம் பண்ணிக்கிருச்சுங்கிற பேச்சுக்கு ஆளாகிறிங்களான்னு.. இவ வீட்டை விட்டு வெளியே போய் அவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா யாருக்கு நஷ்டம்..? நமக்குத்தானே நஷ்டம்.. இன்னொரு பெண்ணையும் கரையேத்தனுமே.. இவனுக்கு நல்ல குடும்பத்தில பெண்ணெடுக்கனுமே... அதுக்கு.. நாமளே முன்னால நின்று இவளை கல்யாணம் பண்ணிக் கொடுத்து அனுப்பியாகனுமே.."

"எனக்கும் புரியுதுடி..."

"அதுக்காகத்தான் பொறுமையா போறேன்... இனி இவயாரோ.. நாம யாரோ... என் கடமையை சரியா செஞ்சுருவேன்.. ஒரு குறையும் வைக்க மாட்டேன்... கல்யாணமாகி போகிற வரைக்கும் நம்ம குடும்ப மானத்தை காற்றில பறக்க விடாம இருக்கச் சொல்லுங்க..."

ராஜேஸ்வரியின் சொற்கள் ராதிகாவின் இதயத்தில் தைத்தன... ராதிகா அப்படியே சரிந்து தரையில் அமர்ந்து அழ ஆரம்பித்து விட்டாள்.. கீதா அவளைத் தேற்ற முயன்றாள்...

"பட்டுச்சேலை கசங்குதுடி.. எழுந்து வா..."

ராதிகா எழுந்து கொள்ளவில்லை.. கசங்கிய சேலையைப் பற்றி கவலை கொள்ளவில்லை... தாயின் கோபத்துக்கு ஆளாகி விட்ட துயரம் மட்டுமே அவளை வாட்டியது...

'நானும் கீதாவையும்.. சுந்தரையும் நினைத்துத்-தாம்மா இதையெல்லாம் செய்கிறேன்...'

சொல்ல முடியவில்லை... காதல் என்று சொல்லி பெண் கேட்டு வந்தவன்.. அவளைத் தொட்டு பெண்டாட்டு விட்டவன் என்ற கதையை அந்தரங்க மனதில் புதைத்துக் கொண்டு ஊமையாக அவள் அழுதாள்...

அவனைத்தான் அவள் கைபிடித்தாக வேண்டும் என்ற நிலையில் காலஅவகாசம் எடுத்து தாயின் மனதை மாற்ற முடியாத சூழ்நிலையின் அவசரத்தை எண்ணி அவள் அழுதாள்...

"பெண்ணென்று பூமிதனில்...
பிறந்து விட்டால் - மிகப்
பீழை இருக்குதடி தங்கமே தங்கம்.."

பாரதியின் பாடல் வரிகளுக்கு அபிநயம் பிடித்து ஆடிக் கொண்டிருந்த கருப்பு வெள்ளைத் திரைப்படத்தின்

பாடல் காட்சியைப் பார்க்காமல் அதன் முன்னே அமர்ந்து அவள் அழுது கொண்டிருந்தாள்...

"சொன்னீங்கள்ல... அந்த சங்கரின் அம்மா ஆணவம் பிடிச்சவ.. ராங்கி பிடிச்சவன்னு சொன்னீங்கள்ல.. இப்ப இந்த முரளியோட அக்காகாரியின் குணம் எப்படி..? அதைவிட ஆயிரம் மடங்குன்னு தெரியுதில்ல.. இப்ப உங்க வாய் ஏன் மூடிக்கிச்சு..?"

ராஜேஸ்வரியின் கேள்விக்கு பதிலைச் சொல்ல முடியாமல் மகளைப் பார்த்தார் கிருஷ்ணமூர்த்தி...

"சொல்லலாம்.. நமக்குப் பிடிக்கலைன்னா யாரை வேணும்னாலும் குறை சொல்லலாம்.. அதே.. பிடிச்சப் போன இடம்ன்னா எந்த குற்றம் குறை இருந்தாலும் அது நம்ம கண்ணில்படாது..."

"ராஜி..."

"வேணாங்க... எனக்கு சலிச்சுப் போச்சு.. என்வீடு.. என் குடும்பம்... என் பிள்ளைகன்னு ஓடி ஓடி வேலை செஞ்சேன்.. என்ன பலனைக் கண்டேன்..? இந்தா.. என் கண்முன்னாலேயே எனக்குப் பிடிக்காத இடத்திலே என் பெண்ணுக்கு கல்யாணம் பேசி முடிச்சிருக்கேன்.. இதைத்தானே கண்டிருக்கேன்..."

"விடேண்டி..."

"எனக்கு எதுக்காகங்க அந்த சங்கர் குடும்பத்தை பிடிச்சுச்சு..? ஆயிரம் தான் இருந்தாலும்.. அவங்க

சென்னையில இருக்கிறவங்க.. அந்த அம்மா திமிராய் இருந்தாலும் வாயைத் திறக்கலை... மகனோட பேச்சுக்கு கட்டுப்பட்டு வாய்மூடி உட்கார்ந்திருந்தாங்க... இன்னைக்கும் ஒன்னு வந்துச்சே.. மாப்பிள்ளையோட அக்கான்னு சொல்லிக்கிட்டு.. என்னமா பேசுது..? இந்தப் பேச்சு சங்கர் குடும்பத்தில இல்லையே..."

"வாழப் போகிறது ராதிகாதானேடி..."

"அதுதாங்க நானும் சொல்ல வர்றது.. ராதிகாவைக் கண்டாலே அந்தப் பொண்ணுக்கு பிடிக்கலை.. பார்க்கிற பார்வையிலேயே வெறுப்பைக் கக்குறா.. இப்பவே இப்படின்னா... கல்யாணமாகிப் போன பின்னாலே எப்படி இருப்பாளோ... அதனாலதானே நான் யோசிக்கலாமுன்னு சொன்னேன்...?"

ராஜேஸ்வரியின் பக்கம் ஆயிரம் நியாயங்கள் இருந்தன... அவள் அதைப் பட்டியலிட்டாள்... ராதிகா பழியேற்றாள்...

தொட்டவனையே கட்டிக் கொள்ள வேண்டுமென்ற அவளது யுத்தத்தில் பெற்ற தாயின் மனக் கசப்புக்கு ஆளானாள் ராதிகா...

"என்னடி உம்முன்னு இருக்க...?"

ஹேமா துருவித்துருவி கேள்வி கேட்டாள்...

"ஒன்னுமில்லைடி..." ராதிகா சோர்வாக பதில் சொன்னாள்...

நிச்சயதார்த்தத்திற்கு இன்னும் இரண்டு தினங்கள்தான் இருந்தன.. திருமண ஏற்பாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைப்பற்றி இன்னும் அவள் தோழிகளிடம் சொல்லவில்லை...

காதலித்தவனால் காதலிக்கப் பட்டாள்... ஆனால்.. அந்தக் காதலை ருசிக்க அவளால் முடியவில்லை...

அவளைத் தொட்டு தழுவ வேண்டியவன் தான் தொட்டுத் தழுவினான்... அவளுடன் குடும்பமும் நடத்தினான்.. இருந்தும்.. அதை எண்ணி மகிழ அவளுக்கு கொடுத்து வைக்கவில்லை...

இன்று அவனுடன் அவளுக்கு திருமணமே நடக்கப் போகிறது... ஆனந்த வானத்தில் சிறகடிக்க அவளால் இயலவில்லை...

ராதிகா பாவம்...

எல்லாம் கிடைத்தும்.. எதுவுமே கிடைக்காததைப் போல வாழ வேண்டிய துர்பாக்கிய சாலியாகி விட்டாள் அவள்...

செல்போன் மணியடித்தது.. எடுத்துப் பேசினாள்.. மறுமுனையில் பாலமுரளி 'ஹலோ' சொன்னான்...

அவள் மனம் பூவாய் மலர்ந்தது...

"என்ன டல்லாய் பேசற..? ஏதும் பிரச்னையா..?" என்றான்..

ஹேமா அருகிலிருக்கும் நினைவில் எதுவும் பேச முடியாதவளாய்

"ம்ம்ம்.." என்றாள் ராதிகா...

"என்ன..?"

"நத்திங்..."

"என்னடி.. பிரச்னையான்னு கேட்ட ஊம் கொட்டற.. என்னன்னு கேட்டா.. நத்திங்ன்னு சரடு விடற.. என்ன விசயம்..? பக்கத்தில் ஆளிருக்கா..?"

"ம்ம்ம்..."

"இருந்தா என்ன..? கட்டிக்கப் போறவன் கிட்டத்தான பேசற.. வழியில போகிற வழிப் போக்கன்கிட்டயா பேசற..?"

இதற்கு எப்படி 'ம்ம்' என்று அவளால் சொல்ல முடியும்..? அப்படிச் சொல்லிவைத்தால் அவன் சும்மா விட்டு விடுவானா..?

செய்வதறியாதவளாக அவள் மௌனம் சாதித்தாள்..

"ஊஹும்.. இது வேலைக்கு ஆகாது.. நீ சாயங்காலம் என்னைப் பார்க்க வா..."

"ம்ம்ம்...."

"எங்கேன்னு கேட்க மாட்டியா...?"

"ம்ம்ம்...?"

"அதுக்கும் 'ம்' தானா..? ஊம் கொட்டியே மனுசனை ஒருவழி பண்ணிருவ போல இருக்கே..."

"ம்ம்ம்..."

"வேணாம்டி... வெறியேத்தாதே.. சாயங்காலமா.. உன் காலேஜ் வாசலில் இருக்கிற பஸ் ஸ்டாப்பில நில்லு... அன்னைக்குப் போல இன்னைக்கும் வந்து உன்னைக் காரில அள்ளிப் போட்டுக்கறேன்..."

"ஊஹும்..."

"என்ன ஊஹும்..?"

"நான் கோவிலுக்குப் போகனும்..."

"அங்கே வரவா...?"

"ம்ம்ம்..."

"இதுக்கும் 'ம்' தானா.. வாடி.. சாயங்காலம் உன்னை நேரில பார்த்ததும் பேசிக்கறேன்..."

மறுமுனை துண்டிக்கப் பட்டதும்.. போனை கைப் பைக்குள் போட்டுக் கொண்டவளைப் பார்த்தாள் ஹேமா...

"யாருடி போனில..? சங்கரா...?"

ஒருநொடி ஹேமாவின் கேள்வியில் ராதிகாவின் உடல் தூக்கிப் போட்டது...

அவள் கள்ளத்தனமாக பேசினால் அது சங்கரிடமாகத்தான் இருக்கும் என்று அவளின்

நெருங்கிய தோழியே அனுமானிக்கும் போது.. முரளியை குறைசொல்லி என்ன ஆகப் போகிறது..?

"இல்லை..."

"ஹை.. ஹை.. இப்படிச் சொன்னா நான் நம்பிடுவேனாக்கும்..? வேற யாரிடம் நீ ரகசியம் பேசப் போறயாம்..?"

"ஹேமா ப்ளீஸ்.. எனக்குத் தலையை வலிக்குது..."

"என்னடி ஆச்சு...? இப்போல்லாம் நீ அடிக்கடி தலையைப் பிடிக்கிற.. தலையை பிடிக்க வேண்டிய ஷோபாவே ஆரோக்கியமா நடமாடிக்கிட்டு இருக்கிறா.. உனக்கு என்ன வந்தது...?"

"ம்ம்ம்..? அவ தலைவலியை நான் குத்தகைக்கு எடுத்திருக்கேன்.. போதுமா...?"

"குத்தகைன்னா என்னடி அர்த்தம்...?"

"இது வேறயா..? 'லீஸ்..' போதுமா..."

"இது எப்படி உனக்குத் தெரியும்..? இது வில்லேஜ் லாங்வேஜாச்சே..."

ஹேமா கூறியது சரிதான்.. எதற்கோ பாலமுரளி 'குத்தகை' என்ற வார்த்தையை உபயோகித்தான்.. அவன் பேசும் அத்தனை பேச்சுக்களும் ராதிகாவின் மனதில் ஆழப் பதிந்து விடும்.. அந்த பழக்கத்தில்தான் அவள் அவளையுமறியாமல் குத்தகை என்ற வார்த்தையைக் கூறிவிட்டாள்...

"அப்படி எதுவும் பட்டா போட்டு வச்சிருக்கா..?"

"பட்டாவா..? இதுவும் நம்ம பக்க பேச்சில்லையே.."

மீண்டும் மாட்டிக் கொண்ட ராதிகாவுக்கு நிஜமாகவே தலைவலி வந்துவிட்டது...

"நான் வீட்டுக்குப் போறேண்டி..." எழுந்து விட்டாள்...

ஸ்கூட்டியைக் கிளப்பிக் கொண்டு போனவளை யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் ஹேமா.. ராதிகாவின் பதட்டம் அவளுக்கு எதையோ உணர்த்தியது...

அதுவரை அவளின் அந்தரங்க தோழியாக இருந்தவளின் அந்தரங்கத்தில் அவளறியாத சுழல் இருப்பதாக உணர்ந்தாள் ஹேமா...

'என்னவோ நடக்குது... அது என்னன்னுதான் தெரியல...'

ராதிகா வீட்டுக்குள் நுழைந்த போது.. யாரோ போல பார்த்தபடி கதவைத் திறந்து விட்டாள் ராஜேஸ்வரி...

"தலைவலிம்மா... அதான் சீக்கிரமா வீட்டுக்கு வந்துட்டேன்..."

விளக்கம் சொன்னவளிடம் 'நான் விளக்கம் கேட்டேனா...' என்ற பாவனையுடன் அவள் நகர்ந்துவிட.. ராதிகாவின் மனதில் துக்கம் பொங்கியது...

'அம்மா...' என்று அன்னையின் கழுத்தைக் கட்டிக் கொள்ள வேண்டும் போல அவள்மனம் பொங்கியது...

அதற்கு வழியின்றி சோக முகத்துடன் மாடியேறினாள்.. லேசான சீழ்க்கையொலியுடன் கீதா எதிரே வந்தாள்...

"இன்னைக்கு ஸ்கூலுக்கு மட்டம் போட்டுட்டயா..?"

"ஸ்கூலுக்குப் போகலைன்னா.. உடனே மட்டம் போட்டுட்டேன்னு நீயாய் முடிவு பண்ணிடறதா.. இன்னைக்கு ஸ்போர்ட்ஸ் டே..."

"நீ எதிலயும் கலந்துக்கலயா...?"

"நான் விளையாடற விளையாட்டையெல்லாம் ஸ்போர்ட்ஸில சேர்த்துக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்கடி ராது..."

கண்சிமிட்டி சிரித்தவளைப் பார்த்தபோது ஏனோ ராதிகாவுக்கு பொறாமையாக இருந்தது...



59

உனைப் பார்க்கும் நொடியில்தான்...
உயிர்க்கிறேன் இவ்வுலகில்தான்...

அன்பு கூட ஒரு தளைதான்...

ஒருவரை நேசிப்பதும்.. ஒருவரால் நேசிக்கப் படுவதும்.. ஏதோ ஒருவிதத்தில் நம்மை கட்டுப்-படுத்துகிறது...

அன்புக்கு நான் அடிமை..!

சொல்வதற்கும்.. கேட்பதற்கும்.. அழகாகத்தான் இருக்கும்.. ஆனால்.. அதில் வீழ்ந்து விடும்போதுதான் அதுவரை விட்டு சிறகடித்துக் கொண்டிருந்தவர்கள்... சிறைபட்டு விடுவதை உணர்வார்கள்...

அன்பு ஒருவரை அடிமைப் படுத்தி விடும் வல்லமை கொண்டது.. சுதந்திரமாக செயல்பட விடாதது.. கட்டுப்படுத்துவது.. கலங்க வைப்பது.. கதற வைப்பது.. சிறகடிக்க விடாமல் சிறகை ஒடித்துப் போடுவது...

இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால்.. இது அத்தனையையும் நேசிப்பவர்கள் சுகமான ஒரு வேதனையோடு விரும்பிச் செய்வார்கள்.. விரும்பி

ராதிகா தளைகளற்று இருந்தாள்.. சுதந்திரவானில் சிறகடித்துக் கொண்டிருந்தாள்.. அவள் இருக்குமிடத்தில் கலகலப்பும்.. சிரிப்பும் மட்டுமே குடிகொண்டிருக்கும்...

ஒரு பின்மாலையும்.. முன்னிரவும் சந்தித்துக் கொண்ட அற்புதமான பொழுதில் அவள் பாலமுரளியைச் சந்தித்தாள்.. அவளையறியாமல் அவள்மனம் அவன் பின்னால் சென்று விட்டது..

அந்த நொடியிலிருந்து அவனுக்கு அவள் அடிமையானாள்.. அவளது காதலை அவன் சந்தேகித்தான்... அவளது நடவடிக்கைகளை குற்றம் சாட்டினான்.. அவளது இயல்பையே மாற்றிச் சொன்னான்...

அவள் சீற்றம் கொள்ளவில்லை.. பொங்கி எழவில்லை... எப்படி நீ என்னை குறைவாக எடை போடலாம் என்று சண்டை போடவில்லை..

அதற்குப் பதில் அவனது கோபத்திற்கு ஆளாகி விட்டோமே என்று பரிதவித்தாள்.. அவனின் பாராமுகம் கண்டு ஏங்கினாள்.. அவனுக்கு விளக்கம் சொல்ல அவனைத் தேடினாள்..

அவள் அனுமதியில்லாமல் அவன் அவளைத் தொட்டு முத்தமிட்டான்..

அவள் பதறி விலகவில்லை.. மாறாக.. மயங்கிப் போனாள்... குழைந்து போனாள்.. அவனுடன் இசைந்து போனாள்...

அவனை விலக்கித் தள்ளி அவன் கன்னத்தில் ஒங்கி ஒரு அறை விடுவதற்குப் பதிலாக.. அவன் மார்பில் சாய்ந்து இதம் கண்டாள்... அதன்மூலம்.. அவளின் அவன் மீதான விருப்பத்தை அவனுக்கு உணர்த்தினாள்...

அவன் அவளை கடத்திக் கொண்டு போய் வேட்டையாடிய போது.. எதிர்த்துப் போராட பலமில்லாமல் ஏன் தொய்ந்து விழுந்தாள்...?

அவ்வளவு பலவீனமானவளா அவள்..? இல்லை.. அவள் ஒரு போராளி.. அவனைத்தவிர வேறு ஒருவனின் நிழல்கூட அவள்மீது பட்டிருக்க முடியாது...

அவள் வேட்டையாடப் படும் மானல்ல.. பெண்புலி..!

இருந்தும் அன்று அவனால் வேட்டையாடப் பட்டாள்.. ஏன் அவ்வாறு நிகழ்ந்தது..? விருப்பமானவன் தொடும்போது எதிர்த்துப் போராட முடியாமல் அவளது உடலும் மனமும் அவனைத் தேடியது.. அவன் ஒட்டி உறவாடிய போத கலந்து விடத்துடித்தது...

அவனுக்காக ஏங்கியவள் அவள்.. அவன் முகத்தைப் பார்த்துவிட வேண்டும் என்று துடித்தவள் அவள்.. அவனது இருப்பிடத்திற்கு போகும் வகையறியாமல் தவித்தவள் அவள்...

கவர்ச்சிகரமான அழகோடு இருக்கும் கோடிஸ்வரனான சங்கர் அவள்மீது ஆசைகொண்டான்.. அவள் பாலமுரளியின் மீது மட்டுமே ஆசைப்பட்டாள்..

அவள் போகுமிடமெல்லாம் சங்கர் நிழலாகத்தொடர்ந்து தன் காதலை வலியுறுத்தினான்.. பாலமுரளியின் நினைவில் அவள் அதை மறுத்தாள்.. அவள் பெண் கேட்டே அவள் வீட்டுப் படியேறிவந்து விட்டான்.. அந்த திருமணத்தைக் குலைக்க ராதிகா திட்டம் போட்டாள்..

இவை அத்தனையும் அறியாத பாலமுரளி அவள் மேல் கோபம் கொண்டு கடத்தி அவளது விருப்பமில்லாமல் தொட்டு விட்ட போதும் அவளால் அவனை வெறுக்க முடியவில்லை...

அவனது எண்ணப்படி அவன் காலில் விழுந்து கதறாமல்.. அவளது இயல்புப்படி... அவனைத் தேடி அவனை வரவைத்தாள்.. அவள் நினைத்தபடி அவனுடனான திருமணத்தை பேசி முடித்தாள்.. அவனும் அவளது கட்டளைக்கு இணங்கி பெண் கேட்டு வந்தான்.. திருமணமும் நிச்சயம் ஆகிவிட்டது.. இருந்தும் இன்னும் அவளால் அவருடைய சிரிப்பை மீட்க முடியவில்லையே.. அது ஏன்..?

ராஜேஸ்வரியின் மனத்தாங்கலின் மையத்தில் அல்லவா அவளது திருமணம் முடிவு செய்யப்பட்டிருக்கிறது..?

'இதுதான் என் விதியா..?'

ராதிகா மனதுக்குள் மறுகினாள்.. அவருடைய காதலை அவள் காய்பாற்றி விட்டாள்... அவளது கற்பை சொந்தமாக்கிக் கொண்டவனையே அவருக்கு

சொந்தமாக்கிக் கொண்டாள்.. ஆனால் அம்மாவின் அன்பு..?

வாடிய முகத்துடன் கோவில் வாசலை மிதித்தவளைப் பார்த்த பாலமுரளியின் புருவங்கள் சுருங்கின...

"ஏன்.. என்னவோ போல இருக்க..?" என்று விசாரித்தான்...

"ஒன்னுமில்லையே..." அவன் முகம் பார்க்காமல் சமாளித்தாள் ராதிகா...

தீபாதாரனை ஒளியில் பெருமாளை சேவித்த போது அவள் கண்கள் கலங்கி.. நீர்ச்சரம் கன்னத்தில் இறங்கியது...

'என் மனதில் ஏன் இத்தனை பாரம் வைக்கிறாய் கிருஷ்ணா..? நான் இதைத் தாங்குவேனா..? மனம் விட்டுச் சிரிக்கும் சிரிப்பு தொலைந்து போய் விட்டதே.. அதைத் தேடித்தேடி என் நாள்களை தொலைக்க வேண்டுமா..' அவள் மனம் அரற்றியது..

தாயாரை சேவித்து விட்டு.. மனமுருக வேண்டுதல்களை அவள் பாதங்களில் சமர்பித்து விட்டு.. பிராகாரத்தை வலம் வந்தபோது.. பாலமுரளி அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்...

கலங்கிய விழிகளை அவன் பார்த்து விடாமலிருக்க அவள் முகத்தை திருப்பியபோது.. வலுக்கட்டாயமாக அவள் முகத்தைப் பிடித்து தன்பக்கமாக திருப்பினான்..

"விடுங்க.." அவள் திமிற முயன்றாள்.. முடியவில்லை..

"எதுக்கு இந்த அழுகை..?" அவன் அதட்டினான்...

அதற்கு மேல் தாள முடியாதவளாக அவள் கேவினாள்...

"ஏய்ய்.. ராதிகா.. என்ன ஆச்சுடி..?"

அவன் சட்டென்று அவள் கைபிடித்து.. அருகிலிருந்த மண்டபத்தின் படிக்கட்டில் அமர வைத்தான்..

"அம்மா.. என்கூடப் பேசறதில்ல.." அவளது கேவல் தொடர்ந்தது...

அவனுக்கு அவள் மனம் புரிந்தது.. அவள் கைவிரல்களைப் பிடித்து இதமாக நீவியபடி.. மெதுவான குரலில் அவளை சமாதானப் படுத்தும் விதத்தில் பேசினான்...

"வலிக்காம ஊசி போட முடியுமா..? வைத்தியம் பார்க்காமல் நோய் குணமாகுமா..? சொல்லு.. நம்ம கல்யாணம் நடக்கனும்ன்னா... நான் அந்த மாதிரி பேசித்தானே ஆகனும்..?"

"அதுக்காக அம்மா மனசை கஷ்டப் படுத்திட்டேன்.."

"நாம என்ன வேணும்னேவா அதைச் செய்தோம்..? வேற வழியில்லடி.. உங்க அம்மாவுக்கு எதனாலோ.. என்னைவிட அந்த சங்கர் உசத்தியானவன்னு தோணிப்

போயிருச்சு.. அந்த நிலைமையில நான் அப்படிப் பேசலைன்னா நம்ம கல்யாணப் பேச்சு.. இந்த அளவுக்கு வந்திருக்காதுடி.. என்பக்கமும் நெருக்கடி இருக்கு.. கொஞ்சம் அதையும் நினைச்சுப் பாரு.. அக்காவுக்கு இந்தக் கல்யாணத்தில பிடித்தமில்ல..."

"என்மேலயே அவங்களுக்கு பிடித்தமில்ல..."

"நீயாய் ஏன் அப்படி நினைச்சுக்கறே..? அதுக்கு ஷோபாவை எனக்கு கட்டி வைக்கனும்னு ஒரு எண்ணம்.."

"ஓ.." ராதிகாவின் வாடிய முகம் மேலும் வாடிவிட்டது...

"இப்ப எதுக்கு உம்முன்னு முகத்தை வைச்சுக்கறவ..?" பாலமுரளிக்கு கோபம் வந்துவிட்டது...

"உங்க அக்கா உங்களுக்காக வேற பொண்ணைப் பார்ப்பாங்க.. அந்தக் கதையைக் கேட்டுட்டு நான் 'ஈ' ன்னு சிரிச்சுக்கிட்டே இருக்கனுமாக்கும்..?"

"ஏய்ய்.. அதுக்குத்தான் எண்ணம்ன்னு சொன்னேன்.. என் எண்ணம்தான் உன் மேலன்னு ஆகிப் போச்சே.. அப்புறமும் எதுக்கு இந்தச் சிலுப்பு சிலுப்பற..?"

"அப்ப நீங்களும்.. உங்க அக்காவும் கூட்டணி போட்டுக்கிட்டு அந்த ஷோபாவைப் பத்திப் பேசுவீங்க.. நான் ஆஹான்னு கேட்டுக்கிட்டே இருக்கனுமாக்கும்..?"

"யாருடி இவ.."

"அது கூடத் தெரியலையா..? பெருமாளே..! நீதான் இதைக் கேட்கனும்..."

"இப்ப எதுக்கு பெருமாளை தொந்தரவு பண்ற..? அவருக்கு ஆயிரம் சோலி இருக்கு.. அந்த நியாயத்தை என்கிட்டக்கேளு.. நான் உனக்கு நியாயம் வழங்கறேன்.."

"வழங்கிட்டாலும்..."

ராதிகா முகவாயை தோளில் இடித்துக் கொண்டு.. முகம் திருப்பிக் கொண்டாள்.. அவளது கண்ணீரும்.. சோகமும் காணாமல் போய் விட்டதை கண்டு கொண்டவனுக்கு லேசாக சிரிப்பு வந்தது.. ஷோபாவின் மீதான அவளின் பொறாமை கண்டு.. அதீதமான பிரியமும் வந்தது...

"அவ பேச்சை ஏண்டி இழுக்கற..?"

"நானா இழுத்தேன்..? உங்க அக்காதான் இழுக்கறாங்க..."

"இப்ப உன்கூட உட்கார்ந்திருக்கிறது யாரு..? நானா.. இல்லை.. என் அக்காவா..?"

இந்தக் கேள்வியில் முகம் சிவந்த ராதிகா உதட்டைக் கடித்துக் கொண்டு பின்னலை முன்னால் விட்டு.. அதன் நுனியை விரல்களால் அளந்து கொண்டிருந்தாள்...

எப்போதும் சுடிதாரில் இருப்பவள் அன்று சேலையில் இருந்தாள்.. அவளது நீண்ட பின்னலும்.. எழிலே வடிவான தோற்றமும் அவனைக் கட்டி இழுத்தன..

"ராது..."

"ம்ம்ம்..."

"அசத்தறடி..."

"ம்ம்ம்..."

"அடச்சீ... வாயைத்திறந்து பேசு... போனில பேசினா.. பக்கத்தில ஆளிருக்காங்கன்னு சொல்லி.. ஊம் கொட்டற.. இப்ப இங்கே யாரிருக்கா..? உன்னோட ஆளு மட்டும்தான இருக்கேன்.. என் முகம் பார்த்து பேசறதுக்கு என்ன..?"

'உன் ஆள்..' என்ற அந்த வார்த்தையில் மயங்கிப் போனாள் ராதிகா... அந்த மயக்கத்துடன் லேசாக விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள்.. அவள் விழிகளில் தெரிந்த அந்த அதீதமான மயக்கத்தைக் கண்டவனின் கண்கள் மின்னின...

மாலை நேரத்தின் கோவிலின் சூழல் அவள் மனதை அமைதிப் படுத்தி விட்டிருந்தது.. 'என் மனபாரம் அகற்று பெருமாளே...' என்று வேண்டிக் கொண்ட பக்தையின் வேண்டுகோளை அந்த பரந்தாமன் நிறைவேற்றி விட்டான்... அவள் மனதில் பாரத்தை அகற்றி.. காதலை அமர்த்தி விட்டான்...

களை பொருந்திய முரளியின் முகம் அவள் மனதை அலைபாய வைத்தது.. காற்றில் பரவிய அவனது முன்னுச்சி முடியில் விரல் விட்டுக் கோத அவள் விரும்பினாள்.. அவனது அண்மை உணர்த்திய நெருக்கம்

அவள் மனதில் ஜிலுஜிலுப்பை உண்டாக்கியது.. அவன் மீது வந்த ஓர்விதமான ரம்யமான வாசனையை அவளது நாசி உணர்ந்தது.. அவனது ஆண்மையின் கம்பீரம் அவளை ஆகர்ஷித்தது...

பாலமுரளி மாநிறத்தில் இருந்தான்.. ஆனால்.. அவனிடம் வார்த்தைகளில் வடிக்க இயலாத வசீகரம் குடிகொண்டிருந்தது.. ஒரு கை தேர்ந்த சிற்பி வடித்தெடுத்த சிலையைப் போன்று அவன் வடிவம்.. செதுக்கி வைத்ததைப் போன்றதொரு அமைப்புடன் அவளை அலைக்கழித்தது...

அவன் கிராமத்து வட்டார மொழியில் பேசினான்.. அவன் செயல்களிலும்.. பேச்சிலும் தெரிந்த முரட்டுத்தனத்தில் தன்னை அவள் இழந்து கொண்டிருந்தாள்... அவனது அதீதமான கோபம் கூட அவனது ஆண்மையின் அழகை அதிகப் படுத்துகிறது என்றே அவளுக்குத் தோன்றியது...

அவன் மீதான அவளின் ஆவலை உணர்த்தும் பார்வையை அவன் கவனித்துக் கொண்டுதான் இருந்தான்...

"என்னடி.. பேசுன்னு சொன்னா.. ஆளை முழுங்குறதைப் போல பார்த்து வைக்கிற..? இப்படிப் பார்த்துப் பார்த்துத்தானே என்னைக் கவிழ்த்த..?"

அவன் கிசுகிசுப்பாய் வினவிய போது.. அவளுக்கு ஜிவ்வென்று ஆகிப் போனது.. ஏதோ ஓர்விதமான போதை

போன்றதொரு உணர்வு அவளை ஆட்கொள்ள.. அவன் தோளில் சாய்ந்து கொள்ள அவள் விரும்பினாள்... லேசாக நகர்ந்து.. அவன் தோள் சாய்ந்தபோது.. அவன் கரம் அவளைச் சுற்றி வளைத்தது...

"ராது.." குழைவான குரலில் அவன் அழைத்த போது.. சட்டென்று அவள் எழுந்து நடந்தாள்...

அவன் புருவங்கள் சுருங்கினான்.. கோபத்துடன் இரண்டே எட்டில் அவளை அடைந்தவன்.. முறைத்தான்.. வழிமறித்தான்...

ஆறடி உயரத்தில்.. தேக்குமரம் போல நீண்ட கைகால்களுடன்.. பரந்து விரிந்த மார்புடன்.. வலுவான புஜ அமைப்புடன்.. கட்டுமஸ்தான தோற்றத்துடன்.. அவன் அவளை வழி மறித்தபோது.. அவளுக்குள் பேரலை ஒன்று எழுந்தது...

"வழியை விடுங்க.."

"என்னன்னு சொல்லு..."

"காருக்கு வாங்க சொல்கிறேன்..."

"இப்பவே சொல்லு..."

"முடியாது..."

அவள் பிடிவாதமாக நடக்க.. அவன் கோபத்துடன் கூட நடந்தான்.. காரில் அவள் ஏறிய பின்பு.. ஓங்கி அவன் கார்கதவை சாத்திய வேகத்தில் அவனது கோபத்தின்

காரைக் கிளப்பியவன்.. வேகம் கூட்ட.. ராதிகா ஆட்சேபித்தாள்...

"இப்ப எதுக்காக இவ்வளவு வேகத்தில ஓட்டறிங்க.."

"உனக்கு சொல்லனும்னு ஒன்னும் அவசியமில்லை.."

"ஹலோ.. உங்க கூட உட்கார்ந்திருக்கிறது நான்.. கேட்கத்தான் செய்வேன்..."

"உயிர்மேல அவ்வளவு பிடிப்பிருக்கிறவ என்கூட காரில் வர வேணாம்.. இறங்கி ஓடியே போயிரு..."

அவன் காரை வேகத்துடன் நிறுத்த.. அது 'கிறீச்' சென்ற சத்தத்துடன் நின்றது...

"இறங்குடி.." அவன் உறுமினான்..

ராதிகா இறங்காமல் அவன் முகம் பார்த்தாள்.. அதில் தெரிந்த கோபச்சிகப்பில் அவள் மனம் லயித்தது.. அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்...



60

உன் பார்வை மட்டும்தான் -எனை..
பெண்ணென்று உணர வைத்தது...

அவளது அந்தப் பார்வையில் அவனது புருவச் சுளிப்பு மெல்ல மறைந்தது.. அவள் பார்வையோடு.. அவன் பார்வை பின்னிப் பிணைந்தது.. ராதிகா மெதுவாக அவன் பக்கம் நகர்ந்தாள்.. அவன் தோள் சாய்ந்து கொண்டாள்.. இப்போது அவன் கரம் அவளைச் சுற்றி வளைத்தபோது அவள் விலகவில்லை..

"ராது..."

அவன் ஆசையுடன் அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.. அவளது உதடுகளில் அழுத்த முத்தத்தைப் பதித்து விட்டு நிமிர்ந்தவன் அவள் விழிகளுக்குள் உற்று நோக்கினான்...

"ஏண்டி..?"

அவன் கேள்வி புரிந்தவளாக.. அவனது சட்டையின் பொத்தானை பிய்த்து விடும் நோக்கத்துடன் திருகியபடி.. அவள் மெல்லிய குரலில் சொன்னாள்..

"அது கோவில்..."

"ஓ..."

அவன் முகத்தில் லேசாக ஒட்டிக் கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச கனைக்கும் பறந்துவிட.. அவன் அவளை இறுக்கிக் கொண்டான்...

"இது ரோடு பாஸ்..."

"ஆமாமில்ல..."

அவன் விலகி சாலையைப் பார்த்தான்.. அங்கொன்றும்... இங்கொன்றுமாக ஆள் நடமாட்டம் இருந்தது...

"ஆளே இல்லைடி.." மீண்டும் நெருங்கப் போனான்..

"அவங்களைப் பார்த்தா உங்க கண்ணுக்கு ஆளாத் தெரியலையா..?" அவள் தலையைச் சரித்துச் சிரித்தாள்..

கார் கிளம்பியது.. அவள் வீட்டுக்குச் செல்லாமல் வேறு திசையில் திரும்பியது...

"இப்பவும் கடத்தலா..?" அவள் புருவங்களை உயர்த்தினாள்...

"ஆமாம்.." அவன் பல்வரிசை தெரிய சிரித்தான்...

அவன் சிரிக்கும் போது தெரிந்த பல் வரிசையின் அமைப்பு.. முல்லைப் பூக்களின் சரத்தை நினைவு படுத்த.. ஆசையுடன் அதைப் பார்த்தாள் ராதிகா...

மாநிறமான அவனது முகத்தில் எப்போதும் கண்டிப்பின் சாயல் மட்டுமே தெரியும்.. அவன் சிரிக்கும்

போது அது மறைந்து விட... அவன் மிக அழகாகத் தெரிந்தான்.. மாநிறமான அவன் முகத்தில் பளிரிட்ட அந்த வெண்பற்களின் சிரிப்பு.. அவனது வசீகரத்தை இன்னும் கூட்டிக் காண்பித்தது...

"ராது.."

"ம்ம்ம்.."

"இப்ப உன்னைப் பார்க்கும் போது எப்படியிருக்கு தெரியுமா..?"

"எப்படியிருக்காம்..?"

அவன் 'மானே.. தேனே..' என்று வர்ணிக்கப் போகிறான் என்ற நினைவில் அவள் வெட்கச் சிணுங்கலுடன் கேட்டபோது.. அவன் சொன்னான்...

"நிஜமாகவே என்னைக் காதலிக்கிறவளைப் போல இருக்குடி..."

'சுளீர்..' என்ற சாட்டையடியை மனதில் வாங்கினாள் ராதிகா.. ஒரு இனிய கனவு கலைந்ததைப் போல இருந்தது அவளுக்கு.. அதை உணராதவனாக அவன் பேசிக் கொண்டே போனான்...

"நான் கூட வேதனைப்பட்டுப் போயிட்டேண்டி.. அன்னைக்கு உன்னைத் தொட்டப்புறம்.. ராத்திரியில என்னால தூங்க முடியல... இப்படியொரு கிராதகனா ஆயிட்டோமேன்னு மனசை குற்ற உணர்ச்சி அரிச்சுக்கிட்டே இருந்துச்சு... இப்ப நீ கிட்ட வந்து பார்க்கிற பார்வையைப்

பார்த்தப்புறம் தான் நான் செஞ்சது சரின்னு எனக்குத் தோணுது..."

ராதிகா 'ஊம்' கொட்ட முடியாத மனத்துயரத்துடன் மௌனமானாள்...

"அன்னைக்கு மட்டும் நான் உன்னைத் தொடலேன்னு வைய்யி.. இந்நேரம் உனக்கு அந்த சங்கரோடதான் கல்யாணம் நிச்சயமாகியிருக்கும் நான் தொட்டதால நீ எனக்குக் கிடைச்ச..."

ஜன்னல் வழி தெரிந்த வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ராதிகா.. தப்பிக்கும் மார்க்கம் புலப்படாதா என்று ஏங்கிப் போனாள்...

"தொட்டவனைக் கட்டிக்கனும்கிற கட்டாயம் உனக்கு வந்திருச்சு.. என் காதலும் பிழைச்சிருச்சு.. இற்ங்கு..."

'எங்கே இறங்கச் சொல்கிறான்..?'

அதுவரை.. அவன் பேசிய பேச்சுக்களில் தொலைந்து போயிருந்த ராதிகா எங்கே வந்திருக்கிறோம் என்று புரியாமல் திரும்பிப் பார்த்தாள்..

ஒரு பிரம்மாண்டமான நகைக்கடையின் முன்னால் அவனது கார் நின்றிருந்தது...

'இங்கே எதுக்கு கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கான்..' அவள் புரியாமல் இறங்கினாள்...

"வா..."

அவன் படிகளில் ஏற.. அவள் பின்தொடர்ந்தாள்.. கண்ணாடிக் கதவைத் திறந்தவுடன் ஏஸியின் குளிர் சில்லென்று அவர்களின் உடல்களைத் தழுவியது...

கண்ணாடி குவளைகளில் குளிர்ச்சியான பழரசம் வந்தது... குடித்தபடியே நகைகளை அவன் பார்வையிட ஒன்றும் புரியாமல்.. அவனை பார்வையிட்டுக் கொண்டிருந்தாள் ராதிகா...

"இந்த செட் அழகாயிருக்கில்ல..."

அவன் காட்டிய நகைப் பெட்டியில் வைரங்கள் ஒளிர்ந்தன...

"வைரமா..?" அவள் விழிகள் அகன்றன...

"ம்ம்.. நல்லாயிருக்கான்னு சொல்லு..."

அவளது பிரமிப்பை ரசித்தபடி அவன் சொன்னான்...

அழகாக வடிவமைக்கப்பட்ட அந்த வைர நெக்லஸின் அழகில் மெய்மறந்து போனாள் ராதிகா.. மிக நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கூடிய வைர தொங்கட்டான்கள் அதை விடவும் அழகாக இருந்தன. அவற்றையெல்லாம் தோற்கடிக்கக் கூடிய அழகும்.. வேலைப்பாடும்.. அவற்றோடு இருந்த வைர வளையல்களுக்கு இருந்தன.. இவற்றுக்கு சிகரம் வைத்தது போன்ற ஒளிர்வுடன் மோதிரம் மிளிர்ந்தது...

"பெண்டாஸ்டிக்.. இதைப் போய் யாராச்சும் நல்லாயில்லைன்னு சொல்லுவாங்களா..?" அவள்

குழந்தைத் தனத்துடன் சொன்னாள்.. அவன் அதையும் ரசித்தான்...

அந்த நகைகளுக்கான விலை பல லட்சம் ரூபாய்கள் என்பதை அறிந்தபோது.. அவனின் உயரம் அவளுக்குப் புரிந்தது...

'இதை யாருக்காக வாங்கியிருக்கான்.. ?'

கேட்க வேண்டும் போல தோன்றினாலும்.. அவள் அதைக் கேட்கவில்லை.. அவனுடைய அக்காவிற்காக வாங்கியிருக்கலாம் என்று நினைத்துக் கொண்டவள்.. அதற்குமேல் அந்த நகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை...

கார் பண்ணை வீட்டிற்குள் நுழையவும்.. ராதிகா செல்லக் கோபத்துடன் பாலமுரளியை முறைத்தாள்...

"என்ன சொல்லி என்னை வரச்சொன்னீங்க.. ?"

"என்ன சொன்னேன்.. ?"

அவன் ஏதுமறியாமதவனைப் போல வினவினான்..

"கோவிலில் சாமி கும்பிட்டு முடிச்சதும்.. வீட்டிலே கொண்டு போய் விட்டு விடறேன்னு சொன்னீங்களா.. இல்லையா.. ?"

"சொன்னேன்தான்.. அதுக்கென்ன.. ?"

"சொன்னதைப் போலவா செய்திருக்கீங்க... ?"

"ஆமாம்.. இதுவும் வீடுதானே..."

"இது எங்க வீடா...?"

"இது தாண்டி உன்னோட வீடு..."

பாலமுரளியின் பொருள் பொதிந்த பார்வையில் வயிற்றுக்குள் பட்டாம் பூச்சிகள் பறப்பதை உணர்ந்தாள் ராதிகா...

'இவன் ஒருத்தன்.. என்னை கிறங்கடிக்கறதையே தொழிலாய் வைச்சிருக்கான்...' அவள் மனம் வெட்கத்துடன் சலித்துக் கொண்டது..

"வீட்டுக்குப் போகனும்..."

"வீட்டுக்குத்தான் வந்திருக்கோம்..."

"அம்மா தேடுவாங்க.. ப்ளீஸ்..."

"போகலாம்.. போகலாம்.. முதல்ல உள்ளே வா..."

ராதிகா பண்ணை வீட்டுக்குள் கால் வைத்தபோது.. பழைய ஞாபகங்கள் அவளை சூழ்ந்து கொண்டன...

அன்றைக்கும்.. இன்றைக்குமான சூழல் வித்தியாசமாகப்பட.. வீட்டை சுற்றி பார்வையை ஓட்டினாள்.. வித்தியாசம் பிடிபட்டது..

அதிகமாக பொருள்கள் இல்லாத ஹாலை விலையுயர்ந்த சோபாக்கள் அலங்கரித்துக் கொண்டிருந்தன.. வெறுமையான மூலையில் பெரிய திரைகொண்ட வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி அமர்ந்திருந்தது.. சுவர்களில் ஓவியங்கள்..

"உட்கார்..."

பார்வையை சுழல விட்டுக் கொண்டிருந்தவளைப் பார்த்தபடி அவன் உட்கார்ந்தான்.. அவள் ஆராய்ச்சியுடன் பார்த்தபடி அப்படியே நின்று கொண்டிருக்கவும்.. அவள் கையைப் பிடித்து இழுத்தான்.. அவன் மடியில் அவள் விழுந்தாள்.. கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டவனின் இதழ்கள் அவள் கன்னத்தில் பதிந்த போது..

"ஐயா.." என்ற குரல் கேட்டது..

'இந்த வீட்டிலே யாரிருக்கிறது..?' அவசரமாக அவள் விலகி அமர்ந்தாள்...

"வா.. வள்ளி.." பாலமுரளி ராதிகாவைப் பார்த்தபடியே சொன்னான்..

காபிக் கோப்பைகளோடு வந்த வள்ளியின் பார்வை ராதிகாவை அளந்தது...

"என்ன பார்க்கிற.. இவதான் இந்த வீட்டுக்கு சொந்தக்காரி.." பாலமுரளி சொந்தத்துடன் கூறினான்...

"அப்படிங்களாய்யா.. அம்மா அழகா கீறாங்க.." சென்னை பாஷையில் புகழ்ந்தாள் வள்ளி...

"கீரையும்.. பாத்தியும் உன் பேச்சை விட்டுப் போகவே போகாதா..?"

காபிக் கோப்பையை வாங்கியபடி கேட்டான் பாலமுரளி...

"இன்னாங்கய்யா செய்யறது.. பேசிப்பேசி பழகிப் போச்சே..."

அவள் உள்ளே போனதும்..

"யாரு இது..?" என்று விசாரித்தாள் ராதிகா...

"இந்த வீட்டில வேலை பார்க்குது..."

"அப்பல்லாம் இவங்க இல்லையே..."

"ஆமாண்டி.. வீடு பூரா ஆளை வைச்சிக்கிட்டுத்தான் உன்னைத் தூக்கிக்கிட்டு வரனும்கிற போல.. ஆளைப் பாரு.. இந்த வள்ளியும்.. இவ புருசனும் இப்ப வந்து வேலைக்கு சேர்ந்தவங்க..."

"ஓ.. இவ புருசனும் கூட இருக்காரா..?" ராதிகா நிம்மதியானாள்...

"பின்னே.. தனியாத்தான் வேலை செய்கிறான்னு நினைச்சிட்டயா..? ஆனாலும் உனக்கு என்மேல் இவ்வளவு உசத்தியான அபிப்ராயம் இருக்கக் கூடாது..."

"அது அப்படித்தான்..."

ராதிகா வெட்டும் பார்வையொன்றைப் பார்க்க.. பாலமுரளி எழுந்து கொண்டான்.. அவனுக்கு அவள் வேண்டும் போல இருந்தது...

"வீட்டுக்குப் போகலாமா..?" ராதிகா ஆவலுடன் எழுந்து நிற்க...

"நீ அதிலேயே குறியாய் இரு.." என்று எரிந்து விழுந்தான்..

"இப்ப என்னதான் செய்யனும்கறிங்க..?"

"மாடிக்கு வா.."

"எதுக்கு..?"

அவள் விழிகளில் பிரதிபலித்த ஜாக்கிரதை உணர்வைக் கண்டவனின் எரிச்சல் அதிகமாகியது..

"எதுக்காக அலட்டிக்கறவ..? உன்னைக் கடிச்சா தின்னப்போறேன்..?"

"அதுவந்து.."

"என்னவோ.. உன்மேல என்விரல் நகம்கூட பட்டதில்லைபோல இந்த பில்ட் அப்பை கொடுக்கக் கூடாதுடி..."

"ஆரம்பிச்சுட்டிங்களா..? மாடிக்குத்தானே வரனும். வர்றேன்.. போதுமா..."

அவள் விடுவிடுவென்று மாடியேறினாள்.. அவளது பின்னல் ஆடியதை ரசித்தவன்.. மனமும் அதனுடன் சேர்ந்து ஆடியது...

'ரதின்னா.. இவதான் ரதி...'

அவளது பின்னழகை ரசித்தபடி அவள் பின்னாலேயே அவன் மாடியேறினான்.. அவள் திரும்பிப் பார்த்தாள்...

"என்னைச் சொல்லிட்டு.. ஐயா ஆடி.. அசைஞ்சு வர்றீங்க.."

"அதெல்லாம் வர்ற நேரத்தில கரெக்டா வந்துருவோம்ல.."

மாடியறையில் கால்வைத்தவுடன் ஏனோ.. ராதிகாவின் இதயம் குழுங்கியது.. எவ்வளவுதான் முயன்றாலும்.. பழைய நினைவுகளை அவளால் பின்னுக்குத் தள்ள முடியவில்லை...

அவள் விழிகளில் எதைக் கண்டானோ.. பாலமுரளி உதடுகளைக் கடித்தபடி அவளையே பார்த்தான்.. அவன் முகத்தில் வேதனை படர்ந்தது...

"ஸாரிடி..."

அவன் குரலில் வருத்தத்தில் தோய்ந்திருந்தது...

இதற்கு அவள் என்ன பதிலைச் சொல்வாள்.. இருக்கட்டும் பரவாயில்லையென்றா சொல்ல முடியும்..?

ஜன்னலருகே சென்றவள் ஆகாயத்தை வெறித்துப் பார்த்தாள்..

இந்த ஜன்னல்கள் மட்டும் இல்லாவிட்டால்.. அவளுக்கு பைத்தியம் பிடித்து விடக்கூடும் என்று அவளுக்குத் தோன்றியது...

எல்லையில்லாமல் பரந்திருக்கும் இந்த வான்வெளி ஏதோ ஒரு வகையில் அவளுக்கு ஆறுதலாக இருப்பதாக அவள் உணர்ந்தாள்...

"ராது..."

அவன் கரங்கள் அவள் தோளில் பரவிப் படர்ந்தன...

"ப்ளீஸ்.." அவள் விலக முயன்றாள்...

"ஏன் ராது.." அவனது வெப்ப மூச்சு அவளின் கன்னத்தை சுட்டது...

"இன்னும் இரண்டே நாளில் நமக்கு நிச்சயதார்த்தம்..."

அவனது பரவிப் படர்ந்த கைகளை நிறுத்த முயன்றபடி அவள் சொன்னாள்...

"இருக்கட்டுமே.." அவன் கேட்பதாக இல்லை...

அவன் கைகள் அவள் கைகளுக்குள் அடங்க மறுத்தன...

"இரண்டே வாரத்தில் நமக்கு கல்யாணம்..."

அவனது பிடியில் மூச்சுத்திணற.. அவள் திணறிப் பேசினாள்...

"தெரியுதில்ல.. அப்புறமும் எதுக்கு தள்ளி விடறவ.."

அவன் நியாயம் வேறாக இருந்தது.. அவனின் வேட்கையான ஆக்ரமிப்பை அவள் அறிந்திருக்கிறாள்.. அன்று அவன் தொட்டபோது இருந்த வேட்டைக்காரனின் வெறி.. இன்று அவனிடம் காணப்படவில்லை... ஆனால்.. அந்த வேட்கை மட்டும் அப்படியே இருந்தது...

"இதுக்குத்தான்... இரண்டு நாளுக்கு முன்னாலேயே சென்னைக்கு வந்து நிற்கறிங்களா..?"

அவனுக்குள் புதையுண்டு கொண்டே.. அவள் கேட்டாள்...

"ஆமாம்ன்னு சொன்னா.. என்னடி செய்வ..?"

அவனது அராஜகம் அதிகமானது.. விலக முயன்றவளை இழுத்துக் கொண்டு.. கட்டிலில் சரிந்தான்.. அவளது கூந்தலில் முகம் புதைத்துப் புரட்டி.. அவள் முகத்தோடு முகம் வைத்தான்.. தன் வயமிழந்த ராதிகா.. மெல்ல.. மெல்ல.. எதிர்க்க மறந்து.. அவனுடன் ஒன்றிப் போனாள்...

எதிர்ப்பை நிறுத்தி விட்டவளின் நிலையைப் புரிந்து கொண்டவனின் முகத்தில் திருப்தியான சிரிப்பு வந்தது... அவனுடன் பரிபூரணமாக கலந்து விட்டவளை ஆசையுடன் முத்தமிட்டான் பாலமுரளி...

61

பற்றிக் கொண்ட காதல் தீயில்...
இற்றுப் போனது எனது எதிர்ப்பு...

குளிர்காற்று முகத்தில் மோதிய போது.. கண்விழித்தாள் ராதிகா... அருகே விலகிப் படுத்திருந்தவனின் முகத்தில் தெரிந்த நிறைவைக் கண்டவளின் மனம் நிறைந்தது.. கட்டிலை விட்டு எழுந்து கொண்டாள்...

அவள் கிளம்பும் போது.. அவள் கையில் அந்த நகைப் பெட்டியைக் கொடுத்தான் பாலமுரளி...

"இதை எதுக்காக என்கிட்டக் கொடுக்கறிங்க..?" அவளுக்கு புரியவில்லை...

அவளது அந்தக் கேள்வியில் அவன் முகம் கனிந்தது.. அவளுக்குத் தெரியும்.. அவன் மிகப் பெரிய பணக்காரன் என்பது.. அவள் மீது அவன் கொண்டிருக்கும் ஆசையின் அளவும் அவளுக்குத் தெரியும்.. இருந்தும்.. அவன் வாங்கிய நகைகளை.. யாருக்காக வாங்கினான் என்று புரியாமல் வினவுகிறாள்...

'இவளுக்கு பணம்.. காசு.. நகைன்னு எதுவும் பெரிசில்லை...'

அவன் செல்லமாக அவள் தலையில் குட்டினான்...

"முட்டாள்.. இதை யாருக்கு வாங்குவாங்க..? என் பெண்டாட்டிக்குத்தான் வாங்குவாங்க.."

"எனக்கா வாங்கினீங்க...?"

"நீதானே என் பெண்டாட்டி..."

அவன் முகத்தில் ஒர்விதமான கடினத்தன்மை வந்து அமர்ந்தது.. அவள் அந்த நகைப் பெட்டியைத் தொட்டுக் கூடப் பார்க்காமல் நகர்த்தி வைத்தாள்...

"இல்லை.. இது எனக்கு வேணாம்.."

"ஏண்டி..?" அவன் திகைத்தான்...

"நான் அதிகமா நகை போட்டுக்க மாட்டேன்..."

"என் பெண்டாட்டி அப்படியிருக்க முடியாதே.. எங்க பக்கத்தில பொண்ணுக எல்லாம் அதிகமா நகை போட்டுக்குவாங்கடி.. அதை முக்கியம்ன்னு ஆம்பளைகளும் நினைப்பாங்க..."

"அப்படின்னா.. கல்யாணத்துக்கு அப்புறமாய்.. இந்த நகைகளைக் கொடுங்க.. வாங்கிக்கறேன்.. இப்ப வேணாம்..."

மீண்டும் அவள் மறுக்க.. அவன் முகம் கடுமையானது...

"ராதிகா..." என்று கோபத்துடன் அதட்டினான்...

'ராது...' ராதிகாவாகிவிட்டதை அவரும் கவனிக்கத்தான் செய்தாள்.. இருந்தாலும் தன் மறுப்பில் உறுதியாக நின்றாள்...

"அப்ப.. கல்யாணம்ன்னு ஒன்னு ஆனாத்தான் உனக்கும்.. எனக்கும் சொந்தம் வரும்.. இப்ப எதுவும் இல்லங்கறே.. அப்படித்தானே...?"

"நான் அப்படிச் சொல்லலை..."

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே... இங்கே என்ன நடந்ததுன்னு நினைச்சுப் பாரு.. அப்ப என்னை நீ மறுக்கல.. ஆனா.. நான் கொடுக்கிற நகையை மறுக்கிற.."

"அது.. அதுவந்து.."

"பேசாதே.. இந்த நகையை உனக்காகத்தான் வாங்கினேன்.. நிச்சயத்துக்கு எங்க சொந்தபந்தமெல்லாம் வந்து இறங்குவாங்க.. சபையில நீ வந்து நிற்கிறப்போ... வைர நகை இல்லாட்டி... அதை ஒரு பெரிய குத்தமா பேசுவாங்க.. அதுக்காத்தான் நான் ரெண்டு நாளைக்கு முன்னாடியே வந்து நகை வாங்கிக் கொடுக்கிறேன்.. நீ என்னடான்னா.. அதைப் புரிஞ்சுக்காம இப்படிப் பண்ணி வைக்கிற.."

பாலமுரளியின் பேச்சில் முகம் சுணங்கிப் போனாள் ராதிகா.. அதை அவனும் கவனிக்கத்தான் செய்தான்...

"எதுக்கு இப்ப முகத்தைத் தூக்கி வைச்சுக்கறவ..?"

"உங்க ஸ்டேட்டஸிக்கு தகுந்த மாதிரி எங்க வீட்டில வைரங்களாய் போட மாட்டாங்க.. அதைச் சொல்லிக் காண்பிக்கிறிங்களா..?"

அவன் முகம் பார்க்காமல் அவள் கேட்க.. அவன் கண்கள் சிவந்தான்..

"அடிச்சுப் பல்லைக் கழட்டிருவேன்.. ராஸ்கல்... யாருகிட்ட என்ன பேசற..? அதென்னடி.. உன் ஸ்டேட்டஸ்.. என் ஸ்டேட்டஸ்ன்னு பிரிச்சுப் பேசறவ... உங்க வீடாம்ல.. என்கூட குடும்பம் நடத்தினவ பேசற பேச்சாடி இது..."

'ஆ... ஊன்னா.. இதை ஒன்னைச் சொல்லிருவான்..' அவள் முகம் குங்குமமாய் ஆனது..

இப்படிப் பேசுகிறவனிடம் எப்படி அவள் பதில் சொல்வாள்..?

தர்மசங்கடத்துடன் தரையைப் பார்த்தவளின் வெட்க முகச்சிகப்பு அவனை ஈர்த்தது.. அவளை இழுத்து அணைத்துக் கொண்டான் முரளி...

அவன் மார்பில் முகம் புதைத்திருந்தவளிடம் கூந்தலில் முகம் புதைத்தவனுக்கு இவள் ஒருவரம் என்று தோன்றியது...

"இப்படி நான் ஆனதில்ல..
புத்தி மாறிப் போனதில்ல..
முன்னப்பின்ன நேசமில்ல..
மூச்சுமுட்டிப் போனதில்ல..

கன்னிப் பொண்ணு கண்ணுக்குள்ள..
கட்டுத்தறி பார்த்தேனே...
படபடக்கும் நெஞ்சுக்குள்ளே..
பட்டாம்பூச்சி கேட்டேனே...
இசை கேட்டேனே... ஓ..."

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த பொன்னுச்சாமியின் எப்.எம் ரேடியோவில் இருந்து பாலமுரளியின் மனதை பிரதிபலிப்பதைப் போல பாட்டுச்சத்தம் கேட்டது... அவன் மனதில் பேரலை யொன்று எழுந்தது...

"அடி ஆத்தாடி...
இள மனசொன்னு...
ரெக்கைகட்டிப் பறக்குது சரிதானா..?
அடி அம்மாடி...
பெரும் அலையொன்னு
மனசில அடிக்குது அதுதானா..?"

அவன் முதுகில் கைபரவ.. தோள்சாய்ந்து நின்றவளின் முகம் தடவி.. கைகளில் ஏந்தி.. விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான் பாலமுரளி...

அந்த ஓர் பார்வையில் ராதிகாவின் இதயம் தடும்பியது.. இது போதும் என்று தோன்றியது.. ஒருநாள் பார்த்தவன்.. பார்த்த நொடியிலிருந்து அவள் மனதை ஆக்ரமித்து.. அவளையும் ஆக்ரமித்து விட்டானென்றால்.. அவன் எப்பேற்பட்டவன் என்று

தோன்றியது.. அவளின் வசதியைப் பார்க்கவில்லை.. அவள் வீட்டின் எதிர்ப்பை பொருட் படுத்தவில்லை.. அவளை விலக அனுமதிக்கவில்லை.. அவளைக் கட்டித் தூக்கி.. இன்று தாலிவரை கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறானே.. இப்படிப்பட்ட ஆண்மகனின் காதல் கிடைக்க அவள் பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்று அவள் மனம் சொல்லியது...

அவள் அண்ணாந்து அவன் முகம் பார்த்தாள்.. அவளது பார்வை வழி வந்த காதல்.. மழைச்சாரலாய் அவன் உயிர் நனைத்தது.. அவன் மனம் லேசானது...

"உயிரோடு.. உயிர்சேர..
ஒரு கோடி ஆனந்தம்...
இவன் மேகம் ஆக...
யாரோ காரணம்...?"

வீட்டிற்கு திரும்பிய போது.. அவர்கள் இருவருமே பேசவில்லை.. பேச்சு எப்போது தேவைப்படும்..? ஒருவர் மனதின் மொழியை மற்றவர் உணர்ந்து கொள்ள முடியாதபோது தேவைப்படும்...

மௌனம் மனதில் மொழி..! மௌனத்தை உணராதவர்கள் காதலை உணர முடியாது.. மௌனமே சிறந்த மொழி.. அதன் பரிபாஷைகளை உணர்ந்து கொள்ள முடியாவிட்டால் அவர்கள் காதலர்களே அல்ல...

பாலமுரளியின் மனமும்.. ராதிகாவின் மனமும்.. மௌனத்தில் பின்னிப் பிணைந்திருந்தன.. பேச்சுக்களற்ற

மௌனம் அங்கே ஆட்சி செய்ய ராதிகாவின் வீட்டின் முன்னால் காரை நிறுத்தினான் பாலமுரளி...

'வரட்டுமா..?' என்று கேட்க நினைத்தாள் ராதிகா.. அவளுக்கு நா அசையவில்லை.. தலையை மட்டும் அசைத்தாள்.. பதிலுக்கு அவனும் தலை அசைத்தான்.. கார் கிளம்பி போய்விட்டது.. நகைப் பெட்டியுடன் வீட்டுப் படியேறினாள் ராதிகா..

"கோவிலுக்கு போயிட்டு வரேன்னு போறாங்க.. திரும்பி வர இத்தனை நேரமாகுது.. நடந்து போனவங்க.. காரில் திரும்பி வர்றாங்க... இதையெல்லாம் ஏன்னு கேட்க முடியுதா...? இந்த வீடு வீடாவே இல்ல.. ஆளாளுக்கு.. இஷ்டம் போல ஆட ஆரம்பிச்சுட்டாங்க..."

கதவைத் திறந்து விட்ட ராஜேஸ்வரி அர்ச்சித்தாள்.. ராதிகா எதுவும் பேசாமல் மாடியேறி விட்டாள்.. குளித்து உடைமாற்றி கீழே இறங்கி வந்தவளிடம் அவள் வைத்து விட்டுப் போயிருந்த நகைப் பெட்டியைக் காண்பித்தார் கிருஷ்ணமூர்த்தி..

"இது என்னம்மா..?"

கீதா.. ஆவலுடன் அந்தப் பெட்டியை வாங்கப் போனாள்.. கிருஷ்ணமூர்த்தி முகச் சுளிப்புடன் சின்ன மகளை பார்வையிலேயே அதட்டினார்...

அதுவரை அவர் அப்படிச் செய்ததில்லை... பெற்ற பிள்ளைகளிடம் கோபம் காட்டாமல் இதமாகப் பேசும்

மனிதர் அவர்... அப்படிப்பட்டவர் முகம் சுளிக்கவும் நகைப்பெட்டியைத் தொடப் போன கீதா கையை பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்...

ராதிகாவின் மனம் சங்கடப்பட்டு விட்டது...

"அப்பா.. இந்த ஜ்வல்ஸை அவர் வாங்கிக் கொடுத்தார்..." அவள் தயக்கத்துடன் சொன்னாள்...

"அவர்ன்னா.. எவர்ன்னு கேளுங்க.. குட்டிச் சுவரா..?" ராஜேஸ்வரியின் குரல் சமையலறையிலிருந்து ஒலித்தது...

"யாரைச் சொல்கிறம்மா.. மாப்பிள்ளையைச் சொல்றயா..?" கிருஷ்ணமூர்த்தி இதமாக வினவினார்...

"அவர்தாம்ப்பா..."

"அவரை எங்கே பார்த்த..?"

"கோவிலில்..."

"தப்பில்லம்மா... அவர் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவர்தான் ஆனாலும்.. நீ அவரைப் பார்க்கப் போகிறேன்னு ஒருவார்த்தை வீட்டில சொல்லிட்டுப் போயிருக்கலாமேம்மா..."

கிருஷ்ணமூர்த்தியின் கேள்வியில் ராதிகாவின் மனம் கனமானது.. அவள் சொல்லத்தான் நினைத்தாள்.. அவள் சொல்லவந்தபோது ராஜேஸ்வரி கோப முகம் காட்டி.. முகத்தைத் திருப்பிக் கொண்டுவிட்டாள்..

அதனால் அவள் சொல்ல வந்ததை சொல்ல முடியாமலே போய்விட்டது...

"அவர் வீட்டுக்குத்தான் காரை விடுகிறார்ன்னு நினைச்சேன்ப்பா.. நகைக்கடைக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போவாருன்னு எனக்குத் தெரியாது..."

இப்போது ராதிகா உண்மையைச் சொன்னாள்.. கிருஷ்ணமூர்த்தியின் முகச்சுளிப்பு முற்றிலுமாக மறைந்தது...

"விசாரணைக் கமிசனை முடிச்சிட்டிங்களாப்பா.. இனியாவது நகைப்பெட்டியைத் திறந்து பார்க்கலாமா..?"

கீதா அதிலேயே குறியாக நின்றாள்.. கிருஷ்ணமூர்த்தியின் மௌனத்தை சம்மதமாக எடுத்துக் கொண்டவள் நகைப் பெட்டியைத் திறந்ததும்.. அந்த ஹாலே ஒளிர்ந்தது..

"ஹா..! டயமன்ட்...!" கீதா வாய் பிளந்தாள்...

சமையலறையில் வேலையாக இருந்த ராஜேஸ்வரி வந்து எட்டிப் பார்த்தாள்.. சுந்தரின் விழிகளில் அப்பட்டமான ஆச்சரியம் தெரிந்தது...

"இது என்னம்மா ராதிகா.." கிருஷ்ணமூர்த்தி யோசனையுடன் கேட்டார்...

"அப்பா.. நாளைக்கு மறுநாள் நிச்சயதார்த்தம் நடக்கப் போகுதுல்ல..."

"ஆமாம்..."

"அதுக்குப் போட்டுக்க நகை வாங்கிக் கொடுக்கச் சொல்லி அவரோட அம்மா சொன்னாங்களாம்.. இது அவங்க குடும்ப வழக்கமாம்.."

"இது வைரமாச்சேம்மா..."

"அவங்க வைர நகைகளைத்தான் வாங்கிக் கொடுப்பாங்களாம்..."

"ஓ..."

கிருஷ்ணமூர்த்தி மீண்டும் ஆழ்ந்த யோசனையில் இறங்க...

"அடடா.." என்றாள் கீதா...

"ஏன்ப்பா.. இந்த நகைகள ராதிகா நம்ம வீட்டிலேயா வைச்சுட்டுப் போகப் போறா..? அவங்க வீட்டுக்குத் தானே போட்டுக்கிட்டுப் போகப் போறா..? அதை நினைப்பீங்களா.. அதை விட்டுட்டு.. ஆயிரத்தெட்டு குறுக்கு விசாரணையைப் பண்ணிக்கிட்டு இருக்கீங்களே.."

"அப்படியொன்னு இருக்கில்ல..."

"ஆமாம்ப்பா.. ஆமாம்..."

"எல்லாம் சரி ராதிகா.. மாப்பிள்ளை எதுக்காக வாசலோட போறாரு.. வீட்டுக்குள்ள வந்து ஒருவார்த்த பேசிட்டு.. ஒரு கப் காப்பிய குடிச்சுட்டுப் போகலாமில்ல..?"

கிருஷ்ணமூர்த்தியின் கேள்வியில்.. சமையலறையில் பாத்திரங்கள் உருண்டன.. அர்த்தத்துடன் அதைப்

பார்த்துவிட்டு மௌனமாக தகப்பனாரை ஏறிட்டுப் பார்த்தாள் ராதிகா...

அவள் விழிகளில் தெரிந்த துயரத்தில் அவர் மனம் பரிதாபம் கொண்டது... பரிவுடன் மகளின் தலையைக் கோதிவிட்டு ஒரு பெருமூச்சுடன் அங்கிருந்து நகர்ந்தார்.. கீதாவும்.. சுந்தரும்.. நகைகளை வியந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.. ராதிகா ஆயாசத்துடன் விழிகளை மூடித்திறந்தாள்..

வெற்றிடமாய் இருந்த மனதை..
இட்டு நிரப்பியது உன் காதல்...

பாலசரஸ்வதி தீவிர சிந்தனையிலிருந்தாள்.. கம்பெனியிலிருந்து திரும்பியிருந்த ராஜராஜன்.. மனைவியிடம் வழக்கமான வரவேற்பில்லாததைக் கவனித்தபடி சட்டையைக் கழற்றினான்.. குளியலறைக்குள் புகுந்து கைலிக்கு மாறி வெளியே வந்த போதும்... அவள் அப்படியே உட்கார்ந்திருக்க.. அவனுக்கு கோபம் வந்து விட்டது...

"சரஸ்..." சத்தமாக அழைத்தான்...

அந்த அழைப்பில் பதறி எழுந்தவள்...

"எப்போ வந்தீங்க..?" என்று கேட்டாள்..

"நான் வந்ததைக் கூடக் கவனிக்காம... அப்படி-யென்னடி யோசனை வேண்டிக்கிடக்கு..?"

"உங்களுக்கு காபி கொண்டு வர்றேன்.."

"கேட்டதுக்கு பதிலைச் சொல்லிட்டுப் போ.. எதைப்பத்தி யோசிச்சுக்கிட்டு இருந்த..?"

"எதைப்பத்தி யோசிக்கப் போறேன்..? எல்லாம் முரளியோட கல்யாண நிச்சயதார்த்தத்தைப் பத்தித்தான் யோசிச்சுக்கிட்டு இருக்கேன்..."

"நினைச்சேன்.. ஏண்டி.. நம்ம வீட்டிலயே ஆயிரம் பிரச்னைகள் இருக்கு.. இதை யோசிக்காம எப்பப் பார்த்தாலும் உன் தம்பியைப் பத்தியே யோசனையில இருந்தியின்னா என்னடி அர்த்தம்..?"

"இது ஒரு குற்றமா..?"

"குற்றம்தான்.. எதுவும் ஒரு அளவோட இருக்கனும் சரஸ்..."

"அதில்லங்க... ஷோபா இன்னைக்கு மதியானமா எனக்குப் போன் பண்ணியிருந்தா..."

மனைவி சொன்னதைக் கேட்ட ராஜராஜனின் புருவங்கள் மேலேறின..

இப்படிக் கேட்டவனை முறைத்துப் பார்த்தாள் பாலசரஸ்வதி.. மனைவியின் பார்வைக்கு என்ன அர்த்தம் என்று ராஜராஜனுக்கு புரியவில்லை...

"என்னடி..?"

"ஏன்..? அவ என்கிட்டப் பேசக்கூடாதா..?"

"அதுக்குக் கேட்கலைடி.. இதுக்கு முன்னாடியும் அவ ரெண்டுதடவை உன்கிட்டப் போனில பேசியிருக்கா.. என்கிட்டப் பேசலை..."

"அதுக்கென்ன..?"

"என்கிட்டப் பேசாம உன்கிட்ட மட்டும் அவ பேசியிருக்கான்னா.. அதை ஏன்னு நான் கேட்கக் கூடாதா..?"

"நாங்க பெண்கள்.. எங்களுக்குள்ள ஆயிரம் இருக்கும்.."

இப்படிச் சொன்ன மனைவியை கவலையுடன் பார்த்தான் ராஜராஜன்.. அவனுக்கு ஷோபாவின் குண விசேசம் அத்துபடியான ஒன்று.. அவனுடைய அம்மாவான அகிலாவிடம் இருக்கும் அமைதியும்.. அலட்டிக் கொள்ளாத பெருந்தன்மையான குணமும் அவனுடைய சித்தியான சுசிலாவிடம் இல்லை என்பதை எப்படி மனைவியிடம் சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை...

எல்லா ஆண்களையும் போல.. மனைவியிடம்... தன்வீட்டு மனிதர்களை விட்டுக் கொடுத்துப் பேசக்கூடாது என்று அவன் நினைத்தான்...

அந்த நினைவினால்தான்.. தன் தாயின் தங்கையான சுசிலாவைப் பற்றியும் அவள் பெற்ற குலக்கொழுந்தான ஷோபாவைப் பற்றியும் அவன் வாய் திறக்கவில்லை.. பாலசரஸ்வதியும் யார்.. எப்படியென்று தூண்டித் துருவி கேள்வி கேட்டதில்லை...

இப்போதுதான் தம்பியின் திருமண விவகாரத்தில் தலையிட்டு அவள் சுடுவார்த்தைகளைப் பேசி வருகிறாள்.. அதுவரை அவள் அப்படிப் பேசி அவன் கேட்டதேயில்லை..

அப்படிப்பட்டவளின் மாற்றத்தின் பிண்ணனியில் எது இருக்கிறது என்ற சிந்தனை சில நாள்களாவே ராஜராஜனின் மனதில் ஓடிக் கொண்டுதான் இருந்தது...

பாலசரஸ்வதி அந்தஸ்தான மேல்தட்டுக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த நிறைகுடம்.. ஒரு போதும் பணத்தை வைத்து மனிதர்களின் தராதரத்தை அவள் எடை போட்டதில்லை..

அந்த பாலசரஸ்வதி.. ராதிகாவின் பொருளாதார நிலையை சுட்டிக்காட்டி.. அவளை மட்டம் தட்டிப் பேசினாள்... திருமணம் என்ற ஒன்றைப் பண்ணிக் கொண்டால்.. ராதிகாவைத்தான் திருமணம் பண்ணிக் கொள்வேன் என்று முரளி ஆணித்தரமாக சொன்ன பின்னாலும்.. அந்தத் திருமணத்தை நிறுத்த பகீரத பிரயத்தனங்களை மேற்கொண்டாள்...

மனைவியிடம் காணப்பட்ட இந்தப் புதிய பரிணாமம் ராஜராஜனை அதிர்விற்கு ஆளாக்கியது...

அவனறிந்த மென்மையான பாலசரஸ்வதி இப்படியெல்லாம் யோசிக்கக் கூடமாட்டாளே என்ற யோசனையில் அவன் ஆழ்ந்தான்...

அந்த யோசனையின் வட்டத்திற்குள்.. ஷோபா.. அடிக்கடி பாலசரஸ்வதியிடம் மட்டும் போனில் பேசுகிறாள் என்ற விவரம் தட்டுப்பட்டது...

அவளது பேச்சிற்கும்.. பாலசரஸ்வதியிடம் தென்படும் மாற்றத்திற்கும் இடையில் ஏதோ ஒரு பிணைப்பு இருப்பதாக அவன் அறிவிற்கு புலப்பட்டது...

அப்படியொரு பிணைப்பு ஷோபாவிற்கும் அவன் மனைவிக்கும் இடையில் வருவதை அவன் விரும்பவில்லை..

ஷோபா அவனுக்கு ஒன்றுவிட்ட தங்கைதான்.. அதற்காக.. அவளது சூழ்ச்சி வலையில் மனைவி சிக்குவதை அவனால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது...

சுசிலாவின் அத்தனை சூட்சுமங்களையும் கரைத்துக் குடித்து வளர்ந்தவள் ஷோபா.. அவளுடன் ஆயிரம் ரகசியம் இருக்கும் என்று மனைவி சொல்வதில் அவனுக்கு கொஞ்சம்கூட உடன்பாடில்லை...

"அவ கூட ஆயிரத்தில ஒன்னை வைத்துக்-கிட்டாக்கூட நீ தாங்க மாட்ட.. இதில.. அவளுக்கும்.. உனக்கும் ஆயிரம் இருக்கும்ன்னு பெருமை பேசறயா..?"

"என்னங்க இது வம்பாப் போச்சு..?"

"அவ கூட பேசினா உனக்கு வம்புதாண்டி.."

"உங்க சித்தி மகள்கூடப் பேசினாக் கூடத்தப்பா..?"

"அதான்... இப்பல்லாம் நீ தப்புத்தப்பா யோசிக்கறேயே..."

"அதானே பார்த்தேன்.. உங்க மச்சினன் மேலே பாசம் பொங்கி வழியுதாக்கும்.. அந்தப் பாசத்திலே கொஞ்சத்தை சித்தி மக பக்கமும் திருப்பி விட வேண்டியதுதானே.."

"எல்லாம் எனக்குப் பாசமிருக்கு.. அவ என்ன பேசினான்னு நீ விசயத்தைச் சொல்லு..."

"பெரிசா எதையும் பேசலை.. பொதுவாய்த்தான் பேசினோம்..."

பாலசரஸ்வதி காபியுடன் வந்தபோது.. பிள்ளைகள் வீட்டுப் பாடத்தை முடித்திருந்தார்கள்.. கணவனிடம் காபியை நீட்டியவள்.. பிள்ளைகளின் பாடங்களைப் பார்த்து திருப்தியாக தலையாட்டினான்...

"சரி.. இனிமே நீங்க விளையாடப் போகலாம்.."

"ஹேய்... தேங்க்யு மாம்..."

ராஜீயும்.. சாதனாவும் அவளது இருபக்க கன்னத்திலும் முத்தம் பதித்து விட்டு.. புத்தகப் பையுடன் ஓடினார்கள்..

குழந்தைகளின் சந்தோச ஆரவாரத்தை தாய்மையின் கனிவுடன் பார்த்துக் கொண்டிருந்த மனைவியைக் கண்டவனின் மனம் கனிந்தது...

கணவனின் பார்வையைக் கண்டு கொண்ட சரஸ்வதியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது...

"என்னவாம்.. நேத்துத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டவரைப் போல இப்படிப் பார்த்து வைக்கறீங்க..? இன்னைக்குத்தான் புதுசா என்னைப் பார்க்கறீங்களா..?"

"கொஞ்ச நாளாவே நீ புதுசாத்தான் எனக்குத் தெரியற.."

"அடடா.. இப்ப உங்களுக்கு என்ன தெரியனும்ங்கறிங்க... ஷோபாகூட நான் என்ன பேசினேன்னு தானே தெரியனும்..? அது வேற ஒன்னுமில்லங்க.. ஷோபாகிட்ட முரளி பிடிச்சிருக்கிற இந்த ராதிகாவப் பத்தி விசாரிச்சுக்கிட்டு இருந்தேன்..."

"பொறு... பொறு.. ராதிகாவைப் பற்றி ஷோபாவுக்கு என்ன தெரியும்..?"

"உங்களுக்கு விசயமே தெரியாதா...?"

"தெரியாமல்தானே உன்கிட்டக் கேட்கிறேன்..."

"ஷோபாவும் அந்த ராதிகாவும் கிளாஸ்மேட்ஸ்..."

ராஜாராஜனுக்கு இத்தனை நாளாக இது தெரியாமல் இருந்தது.. தெரிய வந்தபோது.. எதுவோ புரிவதைப் போல இருந்தது...

"அவங்க ரெண்டு பேரும் பிரண்ட்ஸா..."

"சேச்சே.. இந்த ராதிகா கூடல்லாம் ஷோபா பழகவே மாட்டாளாம்.. இவதான் வலிய வந்து ஷோபாகிட்டப் பேசுவாளாம்..."

"ஒஹோ.. இப்படி யார் சொன்னது..? ஷோபாவா..?"

"வேற யார் சொல்லுவா...?"

ஷோபாவிடம் வலிய வந்து பேசும் ரகமாக ராதிகாவை ராஜாராஜனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை... கொஞ்ச நேரம்தான் பார்த்திருப்பான் என்றாலும்.. ராதிகாவின் குணாதிசியத்தை ஓரளவு அவனால் தீர்மானிக்க முடிந்திருந்தது... ராதிகாவின் முகத்தில் ஓடிய புத்திசாலித்தனமான ரேகைக்கும்.. ஷோபாவிற்கும் யாதொரு சம்பந்தமும் இருக்க முடியாதே...

"உனக்கெப்படி ஷோபாவோட கிளாஸ்மேட் தான் ராதிகான்னு தெரியும்..? ராதிகா சொன்னாளா..?"

"அவகிட்டயெல்லாம் நான் பேச்சு வைச்சுக்கிட்டேனா..?"

"அதானே.. அன்னைக்கு ராதிகாகூட ஒற்றை வார்த்தை கூடப் பேசாம எழுந்து வந்த நாத்தனாராச்சே நீ..."

"எரிச்சாலக் கிளப்பாதீங்க.. இந்த ராதிகா முராளிக்கு வலை விரிக்கிறதை முதலிலேயே ஷோபா என்கிட்டச் சொல்லிட்டா..."

"என்னடி கதை சொல்கிற... ?"

"வயித்தெரிச்சலைக் கிளப்பாதீங்க.. முராளி மில் விசயமா சென்னைக்கு போயிருக்கான்.. போன இடத்திலே உங்க சித்தி வீட்டிலே தலையைக் காட்டிட்டு வரச்சொல்லி அம்மா சொல்லியிழுக்காங்க..."

"வளமை தெரிஞ்ச மாமியார்..."

"நீங்கதான் உங்க மாமியார் சொல்லித் தந்த வளமையை மெச்சிக்கனும்..."

"ஏண்டி.. அதுக்கு என்ன குறையாம்.. ?"

"அந்த வளமையை வெளியே சொல்லிவைக்காதீங்க... அதைக் கேட்டுத்தான் முராளி இந்தக் கதிக்கு ஆளாகி நிக்கிறான்..."

ஆசைப்பட்டவளை திருமணம் செய்து கொள்வது என்பது.. அந்தக் கதிக்கு ஆளாவது என்று விமரிச்சிக்-கப்படுமா என்று நெற்றிப் பொட்டை ஒற்றைவிரால் அழுத்த ஆரம்பித்தான் ராஜராஜன்..

அவனது செயலை கவலையுடன் பார்த்தாள் பாலசரஸ்வதி...

"என்னங்க ஆச்சு.. ?"

"ஒன்னுமில்ல.. நீ மேலே சொல்லு..."

"என்னத்தை சொல்ல..? இவன் போன அன்னைக்கு ஷோபாவோட பர்த்டே பார்ட்டியாம்.. அதில இந்த ராதிகாவும் கலந்துக்க வந்திருந்தாளாம்..."

"ஓ... அங்கே வைச்சுத்தான் முராளி ராதிகாவைப் பார்த்தாரா.. உனக்கு அதுக்காகத்தான் அத்தை சொல்லித்தந்த வளமை மேலே இத்தனை கோபமா.. ?"

"ஏங்க.. நீங்க வேற கடுப்பைக் கிளப்பறிங்க.. ஆக்சுவலா.. ஷோபா.. இந்த ராதிகாவை பார்ட்டிக்கே இன்வைட் பண்ணலியாம்..."

"அப்புறம் எப்படிடி ராதிகா பார்ட்டிக்கு வருவா.. ?"

"அவளா வலிய வந்து.. என்னையெல்லாம் கூப்பிட மாட்டியான்னு ஷோபாகிட்ட கெஞ்சிக் கேட்டாளாம்.."

'ராதிகாவாவது.. அப்படிக் கேட்கிறதாவது...'

ஏன் ராதிகாவை சரஸ்வதி இந்த அளவுக்கு இளப்பமாக நினைக்கிறாள் என்பது இப்போதுதான் ராஜராஜனுக்கு புரிந்தது...

"வேற வழியில்லாம வேணும்னா நீயும் வாயேன்னு ஒரு பேச்சுக்கு ஷோபா சொன்னாளாம்.. உடனே வெட்கமில்லாம முதல் ஆளா இவ பார்ட்டிக்கு வந்து நின்னுட்டாளாம்..."

"இதையும் ஷோபாதான் உனக்குச் சொன்னாளா.. ?"

"ம்ம்.. அவ பணக்காரங்ககிட்ட ஒட்டுப்புல் போல ஒட்டிக்குவாளாம்... அவகுணம் தெரிஞ்ச ஷோபா.. இவகிட்டயெல்லாம் பழக்கமே வைச்சுக்க மாட்டாளாம்... அவாய்டு பண்ணப் பார்த்தாலும் முடியலைண்ணி... தானா வந்து பார்ட்டியில நின்னுட்டான்னு ஷோபா ரொம்ப சங்கடப்பட்டுட்டா..."

ஷோபாவின் சங்கடத்தைப் பற்றி ராஜராஜனுக்கா தெரியாது..? அதைப்பற்றித் தெரியாத மனைவியின் அப்பாவித்தனத்தை எண்ணி மனதுக்குள் நொந்து போனான் ராஜராஜன்...

"பார்டி முடிஞ்சவுடன் இவ வந்ததைப் போலக் கிளம்பிப் போகனுமா.. இல்லையா..? அதை விட்டுட்டு என்னைக் காரில் கொண்டு போய் விடுன்னு ஷோபாவோட உயிரைப் போட்டு எடுத்திருக்கா.. அதைக் கேட்ட பாலமுரளி.. நான் காரில் விடுறேன்னு கூப்பிட்டுட்டானாம்.. அன்னைக்கே ஷோபா எனக்குப் போன் போட்டு கதைகதையாய் சொல்லிட்டா.. அந்த ராத்திரியில காரில் விடப் போனப்ப என்ன நடந்ததோ... ஏது நடந்ததோ.. முரளி பதினைஞ்சு நாளா தேனூத்துக்கு திரும்பி வராம சென்னையிலேயே தங்கிட்டான்... அப்பத்தான் அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்திருக்கு.. எல்லாம் இந்த ராதிகாவால வந்த வினை..."

இதைக் கேட்ட ராஜராஜன் திகைத்துப் போய்விட்டான்...

தேனூத்தில் இருந்த மேகலாவின் மாரடைப்பு நோய்க்கும்.. சென்னையில் தேமே என்று இன்ஜினியரிங் படித்துக் கொண்டிருந்த ராதிகாவிற்கும் எதன் அடிப்படையில் பாலசரஸ்வதி சம்பந்தத்தை உண்டு பண்ணுகிறாள் என்ற விவரம் அவனுக்குப் பிடிபடவில்லை...

"ஏண்டி.. ராதிகாவா மந்திரம் போட்டு அத்தைக்கு ஹார்ட் அட்டாக்கை வரவைச்சா..? எப்படிடீ நீ இப்படியெல்லாம் பேச கத்துக்கிட்ட..?"

வேறு எங்கிருந்து மனைவி கற்றிருப்பாள்..? எல்லாம் அந்த ஷோபா சொல்லிக் கொடுத்து கற்றுக் கொண்டதுதான் என்று ராஜராஜனுக்கு தெரியாமல் இல்லை.. ஆனாலும் சித்தியின் மகளை விட்டுக் கொடுக்கவும் அவனால் முடியவில்லை...

"உங்களுக்குத் தெரியாதுங்க..."

"ஆமாம்.. நீ ரொம்பத் தெரிஞ்சவதான்..."

"இவ பின்னாலே முரளி சுத்தினதாலேதான் அம்மாவை மறந்துட்டு சென்னையே கதின்னு உட்கார்ந்துட்டான்..."

"அவரும் மனுசன்தாண்டி.. அவருக்கும் ஆசாபாசம் இருக்காதா..? இருக்கக் கூடாதா..? அவரென்ன மெஷினா..?"

"அப்படி நான் சொன்னேனா..? நமக்கெல்லாம் கல்யாணம்ங்கிறது வாழ்க்கையில ஒரு முறைதாங்க..."

"இதையேண்டி எங்கிட்டச் சொல்ற..?" ராஜராஜன் குழம்பினான்...

"நடப்பைச் சொன்னேங்க.. நீங்க உடனே எதையெதையோ நினைச்சுக்காதீங்க..."

"அவ்வளவுதானே.. ஒரு செகண்ட் பகீர்ன்னு ஆகிப் போச்சு..."

"ஆகும்.. ஆகும்.. இந்த முரளி ஒழுங்கான பெண்ணைக் கட்டிக்கிட்டாத்தானே அவனோட குடும்ப வாழ்க்கை நிம்மதியா இருக்கும்..? அதைவிட்டுட்டு பணத்துக்கு ஆளாப் பறக்கிற இந்த ராதிகாவைப் போயி செலக்ட் பண்ணியிருக்கானே.. ஒசி விருந்துக்கும்.. ஒசி கார் சவாரிக்கும் ஆசைப்படற பொண்ணு எப்பேற்பட்டவளா இருப்பா...?"

பாலசரஸ்வதியின் மனதிலிருந்தது வெளியே வந்துவிட்டது... அதை எப்படிச் சரிசெய்வது என்ற மார்க்கம் புரியாமல் ராஜராஜன் திணறிப் போனான்.. அவனால் ஷோபாவைக் குறைத்துப் பேச முடியாது.. எனவே.. நடப்பது நடக்கட்டும் என்று விட்டு விட்டான்...

63

நீ விதைத்த காதல் விதை..
செடியாகாமல் விருட்சமானது...

ஷோபாவிற்கு வயிற்றெரிச்சலாக இருந்தது...

அவள் நினைத்தது என்ன..? இப்போது நடந்து கொண்டிருப்பது என்ன..?

சங்கருடனான ராதிகாவின் திருமணப் பேச்சு முறிந்து போனதில் அவளுக்கு எல்லையற்ற சந்தோசம் தான்.. அதற்காக.. பாலமுரளியை ராதிகா திருமணம் செய்து கொள்ளப் போவதில் அவளுக்கு துளிக்கூட சந்தோசமில்லை...

செய்தியைக் கேள்விப்பட்ட சுசிலாவே ஓர்கணம் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள் என்றால்.. ஷோபாவிற்கு ஏற்பட்ட அதிர்ச்சியின் அளவைச் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை...

பரந்தாமனுக்கு இதைப் பற்றியெல்லாம் ஒன்றுமேயில்லை.. அவருக்கு வேண்டியது நடந்து விட்ட மகிழ்வில் அவர் திளைத்துக் கொண்டிருந்தார்..

"அப்பாடி.. கவலைவிட்டது.. நல்ல வேளையா.. இந்த ராதிகாப் பெண்ணை... உன் பட்டிக்காட்டு சொந்தக்காரன்

மேரேஜ் பண்ணிக்கப்போறான்.. நாம சங்கரைக் குறிவைக்கலாம்..."

சுசிலாவிற்கும் அந்த நிம்மதி உண்டென்றாலும்.. ஷோபாவின் திருமணத்திற்கு முன்பாகவே பாலமுரளி திருமணம் பண்ணிக் கொள்வதில் உள்ளூர அவளுக்கு உதைப்பு இருக்கத்தான் செய்தது..

கைக்காவலாய் இருந்த மாப்பிள்ளை கைநழுவிப் போவதில் அவளுக்கு கொஞ்சம்கூட உடன்பாடில்லைதான்..

ஆனால்.. அவள் உடன் பாட்டை யார் கேட்டார்கள்..?

"சுசி.. நாளைக்கு நம்ம சரஸ்வதியோட தம்பிக்கு சென்னையில நிச்சயம் பண்ண வர்றாங்க.. நாங்களும் வருகிறோம்..."

அகிலா போனில் சொன்னபோது.. அவள் பதறிப் போய்விட்டாள்...

"என்னக்கா.. இப்படிச் சொல்ற..?"

"எனக்கும் உன் நினைப்பு புரியுதுடி.. ஆனா.. நாம என்ன செய்கிறது..? சொல்லு.. இன்னார்க்கு இன்னார்ன்னு அன்னைக்கே இறைவன் எழுதி வைச்சிட்டானே.."

"நீ வேற.. நேரம் காலமில்லாம வேதாந்தம் பேசுவ.. பொண்ணுயாராம்..?"

"உன் மக கூடப் படிக்கிறவதானாமே.. சரஸ்வதி சொன்னா..."

"ஷோபா கூடப் படிக்கிறவளா..?"

ஏற்கனவே.. ஷோபாவுக்கு பார்த்த சங்கர் பெண் கேட்டுப் போனதும் ஷோபாவின் கூடப் படித்த ஒருத்தியைத்தான்...

அடுத்ததாக ஷோபாவுக்கு மண முடிக்க நினைத்திருந்த பாலமுரளியும் ஷோபாகூடப் படித்த ஒருத்தியைத்தான் தேர்வு செய்திருக்கிறான் என்றால் இந்தக் கொடுமையை சுசிலா யாரிடம் சொல்லி அழுவாள்..?

ஊரில்.. உலகத்தில்.. கூடப் பிறந்த பெண்களால் தான் திருமண வயதிலிருக்கும் பெண்களுக்கு சிக்கல் வரும் என்று சுசிலா கேள்விப்பட்டிருக்கிறாள்.. அக்காவைப் பெண் பார்க்க வந்து விட்டு தங்கையைப் பிடித்திருக்கிறது என்று சொல்வார்கள்...

இப்படிக் கூடப் படிக்கிற பெண்களால் கூடவா சிக்கல் வரும்..?

'இந்த ஷோபாவோட ராசியே இப்படித்தானா..'

"ஏன் ஷோபா.. உனக்குக் கூடப் படிக்கிற பெண்களால்தான் பிரச்னை வரும்ன்னு ஜாதகத்தில இருக்கும் போல இருக்கே..."

"ஏம்மா... அப்படிச் சொல்றீங்க..?"

"வேற என்னன்னு சொல்கிறது போ.. அது எப்படித்தான் உனக்குப் பார்க்கிற மாப்பிள்ளைகளை உன் கூடப் படிக்கிற பெண்கள் கணக்குப் பண்ணிராங்களோ..

அது எப்படின்னுதான் எனக்குப் புரிஞ்சு தொலைக்க மாட்டேன்குது..."

ஷோபா பேச முடியாமல் மௌனியானாள்.. இது அவளாக இழுத்து விட்ட இழுவை என்று அவளால் எப்படிச் சொல்லமுடியும்..?

'அன்றைக்கு மட்டும்.. அந்த பர்த்டே பார்ட்டிக்கு ராதிகாவை இன்வைட் பண்ணாம இருந்திருந்தா.. எல்லாமே நல்லாமிருந்திருக்குமே...'

அவள் மனம் ஏங்கியது.. கரைந்து போன பணத்தைக்கூட சம்பாதித்து விடலாம்.. கடந்து போன காலத்தை கைப்பற்றி விட முடியுமா..? நடந்து போன எந்த நிகழ்வுகளையும் மாற்றி அமைக்க முடியாத காலச்சக்கரத்தின் சுழற்சியில்.. அவளால் பாவம் என்ன செய்ய இயலும்..?

சுசிலாவின் அக்கா அகிலா அடிக்கடி சொல்வாள்..

'நெல்லை விதைச்சா.. நெல்லை அறுக்கலாம்.. புல்லை விதைச்சா புல்லைத்தானே அறுக்க முடியும்..' என்று...

ஷோபா.. புல்லைக்கூட விதைக்க முயலவில்லை.. அவளைப் பற்றிய பெருமையை ராதிகாவின் மனதில் விதைக்க முயன்றாள்.. அது இப்படிப்பட்ட விளைவுகளில் கொண்டு வந்து நிறுத்திவிடும் என்று அவள் கனவா கண்டாள்..?

அவளால் செய்ய முடிந்தது ஒன்றே ஒன்றுதான்.. அதை அவள் உடனடியாகச் செய்ய வில்லையென்றால் சுசிலாவுக்கு நெஞ்சுவலி வந்து அறுவைச்சிகிச்சை வரை போய்விடும் அபாயம் இருந்ததால் அவள் அதைச்செய்தாள்..

"அம்மா... சங்கரும்... பாலமுரளியும் பெண் கேட்டுப் போனது வேற.. வேற பெண்களையில்லை.. ஒரே ஒருத்தியைத்தான் அவங்க இரண்டு பேரும் பெண் கேட்டுப் போனாங்க..."

இதைச் சொல்கையில் ஷோபாவின் மனம் கொண்ட வலியை அவளைத் தவிர அறிந்தவர் யாருமில்லை...

"என்ன சொல்கிற ஷோபா..?" சுசிலாவின் விழிகள் விரிந்தன..

தாயின் வியப்பில் ஷோபா தன் தோல்வியை உணர்ந்தாள்.. அது எப்படித்தான் ராதிகாவினால் அவளை எல்லா வகையிலும் தோற்கடிக்க முடிகிறது என்று அவளால் இனம் காண முடியவில்லை...

"ஆமாம்மா.. சங்கர் பெண் கேட்ட ராதிகாவைத்தான் பாலமுரளி நிச்சயம் பண்ணப்போகிறான்..."

"அப்படியா..? அந்தப் பொண்ணு அழகா.. திருத்தமா.. அம்சமாத்தான் இருக்குது.. இப்படிப்பட்ட பிரண்டையெல்லாம் நீ, உன் பர்த்டே பார்ட்டிக்கு இன்வைட் பண்ணலாமா ஷோபா..? உன்னை டாமினேட் பண்ணுகிறவங்களை நீ கிட்டவே சேர்த்திருக்கக் கூடாது.."

கசிலாவின் வார்த்தைகளில் ராதிகாவைப் பற்றிய பாராட்டு மறைமுகமாக பொதிந்திருக்க.. ஷோபா எரிச்சல் பட்டாள்..

"நான் என்ன இப்படியெல்லாம் நடக்கும்ன்னா நினைச்சேன் மம்மி.. அவ நம்மளப் போல ஸ்டேட்டஸில் இருக்கிறவளில்ல.. அதனால அவளைப் பற்றி நான் மைன்ட் பண்ணிக்கல..."

"எல்லாருமே பணத்தைப் பெரிதா நினைக்-கிறவங்களா இருக்க மாட்டாங்க ஷோபா... இனிமேலாவது இதை நீ தெரிந்து நடந்துக்க.."

'குணத்தைப் பார்ப்பாங்கன்னு இந்த மம்மி சொல்கிறாங்களா...'

ஷோபா மனதுக்குள் புகைந்தாள்.. ராதிகாவைப் பார்த்த மாத்திரத்தில் அனைவரும் அவளைக் குணக்குன்று என்று எப்படித்தான் கணிக்கிறார்களோ என்று அவளுக்கு ஆற்றாமையாக இருந்தது...

"எது எப்படியோ.. சங்கர் ஃப்ரியாகிட்டான்.. நமக்கு அதுபோதும்.. என்ன ஒன்னு.. பாலமுரளி கையில் வெண்ணையைப் போல இருந்தான்.. அவன் கைநழுவிப் போகிறதுதான் மனதுக்கு கவலையாய் இருக்கு..."

கசிலாவிற்கு அது மட்டும்தான் கவலையாக இருந்தது.. ஷோபாவுக்கோ.. அவளைத் திருமணம் செய்து கொள்ளும் தகுதி படைத்த கோடிஸ்வரனுக்கு

மனைவியாக ராதிகா மாறிவிடப் போவதை நினைத்து பெருங்கவலையாக இருந்தது...

தேனூத்தில் இருந்த பாலமுரளியின் வீட்டிற்கு ஷோபா பலமுறை போயிருக்கிறாள்.. பரந்து.. விரிந்து... ஒரு பெரிய அரண்மனையை நினைவு படுத்தும் அந்த வீட்டின் கலையம்சம் நிறைந்த சுற்றுச் சுவர் மதில்களையும்.. பிரம்மாண்டமான முன்புறத் தூண்களையும்.. பார்த்து பிரமித்திருக்கிறாள்.. அழகான செடி வளைகளையுடைய அந்தப்புரத்தின் நந்தவனம் போல அமைந்திருக்கும் அந்த வீட்டின் முன்புறத் தோட்டம் ஒரு சுற்றுலாத்தலத்தை போல இருந்ததை உணர்ந்திருக்கிறாள்..

'சங்கரின் வீடு.. இதில் பதினைந்தில் ஒரு பங்குகூட வராது...'

பாலமுரளி மட்டும் அப்பேற்பட்ட வீட்டுடன் சென்னையில் இருந்திருந்தால்... சங்கரின் கவர்ச்சி கரமான அழகைக்கூட மறந்து பாலமுரளியின் மீது மட்டும் ஷோபா கவனத்தை செழுத்தியிருப்பாள்..

அப்படிப்பட்ட மாளிகை தான் பாலமுரளியின் வீடு...

அந்த வீட்டுக்கு உடமைக்காரியாக ராதிகாவை நினைத்துப் பார்க்கக் கூட ஷோபாவுக்கு மனம் தாளவில்லை...

'சங்கரைப் பத்தி அவ பேசின பேச்சையெல்லாம் ரிகார்டு பண்ணி அனுப்பி வைச்சிருந்தேன்.. அதைக்

கேட்ட பின்னாடியுமா இவன் ராதிகாவை மேரேஜ் பண்ணிக்கப் போறான்..?'

இந்த ஆண்களின் குணாதிசியங்களை அனுமானிக்கவே முடியவில்லையே என்று தலை காய்ந்து போனாள் ஷோபா...

இந்தமுறை பாலமுரளியும் மேகலாவும் தங்கியிருந்த பண்ணைவீட்டுக்குப் போகாமல்.. ஷோபாவின் வீட்டுக்கு வந்துவிட்டாள் பாலசரஸ்வதி..

"எங்க குடும்பத்தில.. எங்க சொந்தக்காரங்க வீட்டில தான் தங்குவோம்ன்னு சொல்லிட்டாங்கம்மா.. நானும் எங்க குடும்பதோடதானே தங்கியாகனும்..?"

வார்த்தைக்கு வார்த்தை 'எங்க குடும்பம்' 'எங்க குடும்பம்..' என்று பிரித்துப் பேசிய பாலசரஸ்வதியின் நோக்கம் மேகலாவுக்கு புரிந்தது...

'இவ மனசைப் புண்படுத்தனும்னு நினைக்கிறா...'

மேகலாவா அதற்கு இடம் கொடுப்பார்..?

"நல்ல வேலை செஞ்ச சரசு.. இங்கே நம்ம சொந்த பந்தமெல்லாம் வந்து இறங்கியிருக்காங்க.. நீ வந்தா உன்னை உட்காரச் சொல்லக்கூட இந்த வீட்டில இடமில்ல.. இந்த லட்சணத்தில.. மாப்பிள்ளையையும் சம்பந்தி குடும்பத்தையும் எப்படிக் கவனிக்கப் போகிறோம்ன்னு நான் கதிகலங்கிப் போயிருந்தேன்.. நல்ல வேளையா நீ என்னைக் காப்பாத்திட்ட..."

நீ வராவிட்டால் என்ன..? வீடு நிறையக் கூடியிருக்கும் உறவினர் கூட்டம் கொண்டது என் குடும்பம்.. என்று சொல்லாமல் சொல்லி மகளுக்கு சரியான பதிலடியைக் கொடுத்தாள் மேகலா...

வந்திருந்த உறவினர்களின் முன்னிலையில் அதைப்பற்றிப் பேசினால் யாருக்கு குறைவு என்று பாலசரஸ்வதிக்கு தெரியாதா என்ன..?

அவள் முகம் கருக்க.. கிளம்பிச் சென்றுவிட்டாள்..

"என்ன அண்ணி.. நான் அவளைப் பற்றி அவ்வளவு தூரத்துக்கு எடுத்துச் சொல்லியும் இப்படி வந்து மாட்டிக்கிட்டிங்க.."

ராஜராஜன் இல்லையென்ற நினைவில் பாலசரஸ்வதியிடம் பரிதாபப்படுவதைப் போல அவளைத் தூண்டி விட்டாள் ஷோபா...

பாத்ரூமில் முகம் கழுவிக் கொண்டிருந்த ராஜ ராஜனுக்கு அவளது பேச்சு தெளிவாக காதில் விழுந்தது...

பேசாமல் கதவைத் திறந்து வெளியே வந்து... சங்கருக்கு ஷோபா குடும்பம் குறி வைத்திருக்கும் கதையை மனைவியிடம் சொல்லி விடலாமா என்ற கோபம் ராஜராஜனுக்குள் கனன்றது..

அதையறியாத பாலசரஸ்வதி...

"விதி ஷோபா.." என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள்...

"மம்மியும்.. டாடியும்.. அவங்க மனதில ஆசையை வளர்த்துக்கிட்டு இருந்தாங்கண்ணி...."

அவள் மனதில் இருந்த ஆசையை மறைமுகமாக வெளிப்படுத்துவதைப் போலப் பேசினாள் ஷோபா..

பாத்ரூமுக்குள் இருந்த ராஜாராஜனுக்கோ பற்றிக் கொண்டு வந்தது...

பாலசரஸ்வதியோ ஷோபாவின் பேச்சில் உருகி விட்டாள்...

"அவர்களுக்கு மட்டுமா ஆசையிருந்தது..? எனக்கும் மனசுக்குள்ள மலையளவுக்கு ஆசை இருந்துச்சு.. என்ன செய்கிறது..? கைகாரி..! என்ன வசியம் பண்ணி என்தம்பியை மயக்கினாளோ.. கட்டினா அவளைத்தான் கட்டுவேன்னு என்தம்பி சொல்லிட்டானே ஷோபா..."

இப்படிப்பட்ட வார்த்தைகளை ஷோபாவைப் பார்த்துச் சொல்ல ஏன் எந்த ஆண்மகனும் முன் வரவில்லையென்ற பொறாமைத்தீ ஷோபாவின் மனதில் பற்றியெரிந்தது...

"அவங்க வளர்ப்பு அப்படியண்ணி.. நம்ம வீட்டிலேயெல்லாம் மனதுக்குப் பிடித்திருந்தாலும்.. அந்த ஆண்களிட்ட நின்று பேச தயங்குவோம்.. அவங்க அப்படியில்ல.. வசதியான மாப்பிள்ளையை வலை போட்டுத் தேடுவாங்க.. வலையில் அகப்பட்டுக்கிட்டா.. அப்படியே அமுக்கிவிடுவாங்க..."

'நீ ரொம்பத்தான் கண்டு வைத்திருக்கயா..?' என்று கேட்கத் தோன்றியது ராஜாராஜனுக்கு...

"ராஜா.. நம்ம ஷோபாவ உன் மச்சினன் கூட ஊரைச் சுற்றிப் பார்க்கிற சாக்கில வெளியே அனுப்பி வை... அவன் மனசில ஷோபாவைப் பத்தின நினைவு வருமில்ல... இங்கே சென்னையில இருக்கிற சங்கர் கூட ஷோபாவை பேசிப் பழக விட்டுக்கிட்டுத்தான் இருக்கோம்... இது அமைஞ்சா இது.. இல்லைன்னா... அது..."

இப்படி அவனிடம் சுசிலா சொன்னபோது ஷோபாவும் அருகில் இருந்தாள்.. இந்தப் பேச்சைக் கேட்ட ராஜாராஜன்தான்...

"இது என்ன பழக்கம் சித்தி..?" என்று முகம் சுளித்தான்...

ஷோபா கொஞ்சம்கூட முகத்தைச் சுளிக்கவில்லை.. தாயின் பேச்சை ஆட்சேபிக்கவுமில்லை..

'இவளெல்லாம்... வளர்ப்பைப் பற்றியும்.. பழக்க வழக்கங்களைப் பற்றியும் பேசுகிறா..' அவன் பல்லைக் கடித்தான்...

"சொல்லாதே ஷோபா.. எங்க அம்மாவுக்கு வந்த ஹார்ட்அட்டாக் எனக்கும் வந்துடும் போல இருக்கு.." பாலசரஸ்வதி தலையைப் பிடித்துக் கொண்டாள்..

"இப்பவே இப்படின்னா.. இன்னும் போகப்போக என்ன ஆவிங்களோ.." ஷோபா பீதியைக் கிளப்பி விட்டாள்..

"அந்தப் பயம்தான் எனக்கும்..."

"இதை நிறுத்த நீங்க டிரை பண்ணலியாண்ணி..?"

"தலைகீழா நின்னு பார்த்துட்டேன்.. முரளி அசைஞ்சு கொடுக்க மாட்டேன்னுட்டானே.."

"உங்க அம்மாவை உங்க கண்ட்ரோலில் வைத்திருந்திருக்கனும் அண்ணி.. அவங்க உங்க கண்டரோலில் இருந்திருந்தா.. அவங்களுக்கு ஹார்ட் அட்டாக் வந்திருச்சுன்னு சொல்லி.. இந்த எங்கேஜ் மென்டை நடக்க விடாம பண்ணியிருக்கலாம்..."

"அப்படியா சொல்கிற..?"

பாலசரஸ்வதி அது குறித்த யோசனையில் வீழ ஆரம்பிப்பதை உணர்ந்து கொண்ட ராஜராஜனுக்கு 'பகீக்' என்றது.. அவன் அவசரமாக கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.. அவனைக் கண்டதும் ஷோபா அவசரமாக இடத்தைக் காலிசெய்தாள்.. அதற்குப்பின்னால் ஷோபாவை மனைவியிடம் பேச விடாமல் அடைகாக்க ஆரம்பித்தான் ராஜராஜன்...



64

கொட்டுகிற மழைத்துளியில்...
எந்தத்துளி.. உன்னைத் தொட்ட துளி..?

ஒரு திருமண வீட்டின் கலகலப்பு அங்கே நிலவியது.. பாலமுரளியின் உறவினர் கூட ஆச்சரியப்பட்டார்....

"பரவாயில்லையே முரளி.. இது நிச்சயம்ன்னு தோணவேயில்ல.. என்னமோ கல்யாண வீட்டைப் போலல்லகளை கட்டுது.. சும்மா சொல்லக்கூடாது.. உன் மாமனார் நம்ம லெவலைப் புரிஞ்சு நடந்துக்கிறாரு..."

பாலமுரளிக்கு அதைக் கேட்கும் போது நிறைவாக இருந்தது... அவனுடைய உறவினர்கள் சொல்லியது என்னவோ உண்மைதான்.. கிருஷ்ணமூர்த்தி பாலமுரளியின் தரம் அறிந்து மிகச் சிறப்பாக எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார்...

வசதியான திருமண மண்டபத்தை ஏற்பாடு பண்ணியதிலிருந்து.. சமையல் வரை எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து செய்திருந்தார்...

"வருகிறவங்களுக்கு ஹோட்டலில் ரூம் புக் பண்ணிடவா மாப்பிள்ளை..?" என்று முதல்நாளே பாலமுரளிக்கு போன் செய்து வினவினார்..

பாலமுரளிதான் வேண்டா மென்று சொல்லி விட்டான்...

"அக்கா குடும்பம் அவங்க சொந்தக்காரங்க வீட்டிலே தங்கிக்கு வாங்க மாமா... எனக்கு சென்னையில ஒரு பண்ணை வீடு இருக்கு.. எங்க பக்க சொந்தாக்காரங்களை நான் இங்கேயே தங்க வைச்சுக்கறேன்..."

முரளி காட்டிய இணக்கம் கிருஷ்ணமூர்த்தியின் மனதைத் தொட்டது... அதை அவரால் ராஜேஸ்வரியிடம் பகிர்ந்து கொள்ள முடியவில்லை...

குறித்த நேரத்தில் பாலமுரளியின் வீட்டார் திருமண மண்டபத்தில் வந்து இறங்கி விட்டார்கள்.. வாசலில் நின்று வரவேற்றார் கிருஷ்ணமூர்த்தி.. பக்கத்தில் ராஜேஸ்வரி விட்டுக் கொடுக்காமல் வந்து நின்று கரம் குவித்தாள்.. பந்தி நடைபெற்றது...

"சாப்பாடெல்லாம் தூள்ப்பா.. இதைச் செஞ்ச கைக்கு தங்க மோதிரம்தான் போடனும்..."

"சமையல் காண்ட்ராக்ட் யாருன்னு விசாரிங்கப்பா.. நம்ம வீட்டுக் கல்யாணத்துக்கும் இந்தப் பார்ட்டியையே பேசி வைச்சிரலாம்..."

"காலி பிளவர் பக்கோடா வாயில் போட்டவுடனே கரையுது.."

"பாயாசம் பிரமாதம்..."

"ரசம் ஏ ஒன்..."

இப்படித்தான் விருந்தை ருசித்தவர்கள் சொன்னார்கள்... ஆனால் பாலசரஸ்வதி மட்டும் அந்தச் சாப்பாட்டை வாயில் வைக்க முடியவில்லை.. என்று சொன்னாள்...

"சாப்பாடா இது..?" என்று முகம் சுளித்தாள்..

"ஏன் ராஜா.. உன் மச்சினருக்கு பெண் கொடுக்கப் போகிறவருக்கு நம்ம ஸ்டேட்டஸ் தெரியாதா..? கொஞ்சம் தாராளமா பணம் கொடுத்து ஒழுங்கா சமையல் பண்றவங்களை ஏற்பாடு பண்ணியிருக்கக் கூடாதா..?" என்று சுசிலா பாலமுரளியின் காதுபட ராஜாராஜனிடம் கேட்டு வைத்தாள்...

"என்ன அண்ணி இது.. நாங்க உங்க முகத்துக்காகத்தான் வந்தோம்.. இல்லைன்னா.. இப்படிப்பட்ட இடத்துக்கெல்லாம் நாங்க வந்திருக்கவே மாட்டோம்... பெரிய இடத்தில் பெண் கொடுக்கனும்னு ஆசைப்பட்டா மட்டும் போதாது... அவங்களை நல்ல முறையில் ட்ரீட் பண்ணவும் தெரிஞ்சிருக்கனும்.. இங்கே அதுகூட இல்லையே..." ஷோபா தன்பங்குக்கு உருவேற்றினாள்...

கிருஷ்ணமூர்த்தியின் காதுகளில் இவையெல்லாம் விழுந்து விடக்கூடாது என்பது மட்டும்தான் பாலமுரளியின் கவலையாக இருந்தது.. ராஜேஸ்வரியைப்

பற்றிப் பிரச்னையே இல்லை... ஒரு பார்வையிலேயே ஷோபாவை ஓரம் கட்டி உட்கார வைத்துவிடும் சக்தி அவளிடம் இருந்தது...

அதனால்.. கிருஷ்ணமூர்த்தி பத்தி விசாரணை பண்ண அங்கே வந்தபோதெல்லாம் பாலமுரளி அவரை ஒரு நொடிகூட அங்கே நிற்கவிடாமல் அனுப்பிக் கொண்டேயிருந்தான்...

"மாப்பிள்ளை... உங்க அக்கா குடும்பம் சாப்பிட்டாங்களா..?"

"மாமா.. அதோ அங்கே நிற்கிறாரே.. அவர் எனக்குத் தாய்மாமன் முறையாகனும்.. அவர்கிட்ட நீங்க ரெண்டு வார்த்தை பேசிட்டு வந்திட்டாத் தேவலை..."

"அதுக்கென்ன மாப்பிள்ளை... பேசிட்டாப் போகுது.."

அந்தப் பேச்சுவார்த்தையை முடித்து விட்டு வருபவரிடம் சொல்வதற்கு வேறு வேலைகளை தயாராக வைத்திருந்தான் பாலமுரளி...

"மாமா.. எங்க அம்மா உங்ககிட்ட ஏதோ பேசனுமாம்.."

"இதோ.. உடனே போகிறேன் மாப்பிள்ளை..."

"மாமா.. நலங்கு வைக்க நேரமாகுமான்னு எங்க அத்தை கேட்டாங்க..."

"இதோ.. ராஜேஸ்வரிகிட்டக் கேட்டுச் சொல்றேன் மாப்பிள்ளை.."

"மாமா... மேடையில நாற்காலி போடனுமாம்..."

"இதோ.. சுந்தர்கிட்டச் சொல்லி.. போட வைக்கிறேன் மாப்பிள்ளை..."

"மாமா.. வாசலிலே பன்னீர் செம்பில பன்னீர் தீர்ந்து போச்சாமே..."

"இதோ.. கீதாகிட்டச் சொல்லி.. என்னன்னு பார்க்கச் சொல்கிறேன் மாப்பிள்ளை..."

ஆக மொத்தத்தில் அவன் சாட்டையாக சுழற்றிவிட.. அவர் பம்பரமாக சுழன்றார்.. ஒருவழியாக அவருக்கே பந்தி விசாரனை மறந்து போய்விட.. பாலமுரளி நிம்மதியாக ஒரு நாற்காலியில் அமர்ந்தான்...

அதுநேரம் வரை மாமனார்.. மருமகனின் பேச்சு வார்த்தைகளை கவனித்துக் கொண்டிருந்த பாலசரஸ்வதியின் மாமனார் கனகராஜ் மனைவியிடம் மெதுவான குரலில்...

"அப்படியே.. அந்தக்காலப் பாட்டு ஒன்னை பார்த்ததைப் போலவே இருக்கு அகிலா.." என்று சொல்லிச் சிரித்தார்...

"எந்தப் பாட்டைச் சொல்றீங்க..?" அகிலாவுக்கு நினைவு வரவில்லை..

"அதாண்டி.. மாமா.. மாப்பிள்ளேன்னு... நம்ம நடிகர் திலகமும்.. நடிகவேளும் மாத்திமாத்தி சொல்லிக்குவாங்களே.." என்று அவர் நினைவு படுத்த..

"ஓ.. அந்தப் பாட்டா..?.." என்று அதன் பொருத்தத்தை நினைத்துப் பொங்கிச் சிரித்தாள் அகிலா..

பாலமுரளியின் காதில் அந்த கணவன் மனைவியின் உரையாடல் மிகத் தெளிவாகவே விழுந்தது.. அவன் அதை கண்டு கொள்ளாமல் மேடையைப் பார்த்ததை ராஜராஜன் மிகவும் ரசித்தான்...

"என்ன முரளி.."

"மாமா...?"

"அப்பாவும்.. அம்மாவும் உங்களை இந்த வாரு வாருறாங்க.. நீங்க கண்டுக்காம போஸ் கொடுக்கறிங்க.."

"வேற வழி..?"

"ஒரு வழியாய் உங்க அக்காவின் வாயில் விழுந்து அரைபடாமல் உங்க மாமனாரை தப்பிக்க வைச்சிட்டிங்க.."

"உங்களுக்கும் இது தெரிஞ்சிருச்சா..?"

"கூடப்பிறந்த உங்களுக்குத் தெரியும் போது.. கூட வாழ்கிற எனக்குத் தெரியாமல் போகுமா...?"

அவர்கள் இருவரும் புரிந்து கொள்ளலுடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்...

நலங்கு ஆரம்பித்து விட்டது.. மேடையில் அழகிய வேலைப்பாடுகளுடன் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த ராதிகாவின் நகைகளின் ஒளிர்வைக் கவனித்த ஷோபா பாலசரஸ்வதியிடம் அதைப் பற்றிப் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தாள்... அதைக் கேட்டுக் கொண்டிருந்த பாலசரஸ்வதி முகம் இறுக.. தலையைத் தலையை ஆட்டிக் கொண்டிருந்தாள்...

கன்னங்களில் சந்தனத் தீற்றலோடு ராதிகா விழியுயர்த்தி பாலமுரளியை தன் பார்வையினால் துழாவினாள்.. அதைக் கண்டு கொண்ட பாலமுரளியின் கண்கள் மின்னின.. அவன் முகத்தில் ஆண்மையின் கர்வம் தோன்றியது...

அவளது பார்வை அவன்மீது படிந்ததும் அவர்களின் கண்கள் சந்தித்துக் கொண்டன.. நாணப் புன்முறுவலுடன் அவள் தலை தாழ்த்திக் கொள்ள.. அவனைப் பார்க்க வசதியாக முன்பக்க வரிசையில் வந்து அமர்ந்து கொண்டான் பாலமுரளி...

இந்த பார்வை நாடகத்தை ஷோபாவும் கவனித்தாள்... பாலமுரளியின் காதல் பார்வைக்கு சளைக்காமல் பதில் காதல் பார்வையைக் கொடுத்த ராதிகாவைப் பார்க்கும் போது ஷோபாவின் மனதில் பொறி தட்டியது...

'இவ சங்கரை இப்படிப் பார்த்ததாய் நினைவில்லையே...'

மேடையில் அமர்ந்திருந்த ராதிகாவின் அருகே நின்றிருந்த கீதா.. பாலமுரளியின் பார்வையைக் கண்டு கொண்டவளாய்.. குனிந்து அதைப்பற்றி ராதிகாவின் காதில் கேலி பேச.. ராதிகா முகம் சிவந்தாள்...

'முரளியைப் பத்திப் பேசும்போதே இப்படி முகம் சிவக்கிறாளே.. இந்த முகச்சிகப்பு சங்கரைப் பத்தி இவ பேசும்போது வரவேயில்லையே...'

ஷோபாவின் முகம் ஆராய்ச்சியாக அவர்கள் இருவரையும் கன்காணித்தது.. அவளுக்கு பாலமுரளியின் காதலைப் பற்றித் தெரியும்.. அவனுக்கு ராதிகாவின் மேல் ஆசை இருந்தது..

ராதிகாவிற்கும் பாலமுரளியின் மேல் காதல் இருக்கிறது என்ற விவரம் ஷோபாவுக்கு தெரியவே... தெரியாது...

ராதிகாவின் மனதில் முரளியின் மீது எண்ணம் இருக்கக்கூடும் என்று ஷோபா அறிந்திருந்தால்.. நிச்சயமாக பாலமுரளியைத் தூண்டி விட்டிருக்கவே மாட்டாள்...

'இவ சங்கரையும் கணக்குப் பண்ணிக்கிட்டு.. முரளியையும் கணக்கு பண்ணனும்னு நினைச்சாளா..?'

ராதிகாவைப் பற்றி ஷோபாவால் அப்படி நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.. அவள் ராதிகாவிற்கு எதிரிதான்... இரவும்.. பகலும்.. ராதிகாவை ஏதாவது

ஒரு விசயத்தில் தோற்கடித்து விட வேண்டுமென்று திட்டம் போட்டு தூக்கத்தை தொலைத்துக் கொண்டிருப்பவள்தான்.. அதனாலேயே அவளுக்கு ராதிகாவின் அத்தனை குனாதிசியங்களும் அத்துபடியாக இருந்தது...

'இவ ஒரே நேரத்திலே இரண்டு பேருக்கும் நூல் விடுகிற ரகமில்லையே...'

மிகச் சரியாக ஒன்றிலேயே நிலைக்கும் ராதிகாவின் குணத்தை கணித்து வைத்திருந்தாள் ஷோபா...

'உன் நண்பனைப் பார்த்தால்.. உன்னைப் பற்றித் தெரிந்து விடும்...!' இப்படி ஒரு வழக்கு மொழி உண்டு...

'உன் எதிரியிடம் கேட்டால்.. உன்னைப் பற்றிய எல்லாமும் தெரிந்து விடும்..!'

இதையாராவது உணர்ந்திருக்கிறீர்களா...?

இதுதான் உண்மை.. நமது நண்பர்களைவிட... நமது எதிரிகள்... நம்முடைய பலத்தையும்... பலவீனத்தையும் பற்றித் தெளிவாக தெரிந்து வைத்திருப்பார்கள்...

நமக்குக் கூட நம்மைப்பற்றி அவ்வளவு விவரங்கள் தெரியாது.. ஆனால் நம் எதிரிகள் நம்மைப் பற்றிய விவரங்களை அள்ளிக் கொட்டி...

'இந்த விவரம் போதுமா... இன்னும் கொஞ்சம் வேணுமா..?' என்று கேட்பார்கள்...

அப்படித்தான் ஷோபாவும் இருந்தாள்.. அல்லும் பகலும் ராதிகாவை பற்றிய ஆராய்ச்சியிலேயே கழித்தவளுக்கு அவளைப்பற்றித் தெளிவாக தெரிந்திருந்தது...

பாலமுரளியை ராதிகாவின் பார்வை தேடி அலைந்தபோது.. அதில் காதலின் தவிப்பைக் கண்டு பிடித்து விட்டாள் ஷோபா...

'அப்படின்னா.. சங்கரைப் பத்தி அன்றைக்கு இவ பேசினது...?'

பாலமுரளியின் பார்வையோடு பின்னிப் பிணைந்து கிடந்த ராதிகாவின் பார்வையைக் கண்டபோதுதான்.. தான்.. இதிலும் ராதிகாவிடம் தோற்றுப் போய் விட்டதை உணர்ந்தாள் ஷோபா...

'இவ பாலமுரளியைத்தான் காதலிச்சிருக்கா...'

அவளையறியாமலே.. ராதிகாவின் காதல் ஜெயிக்க வழி வகுத்து விட்டாளே என்ற நினைவில்.. சில நாள்களாக தள்ளி நின்றிருந்த தலைவலி.. மீண்டும் ஷோபாவை ஆட்கொண்டது...

'என்னை வைச்சே காரியத்தை சாதிச்சிட்டாளே...'

அவர் தலையைப் பிடித்துக் கொள்ள..

"ஆரம்பிச்சுட்டியா..?" என்று அலுப்புடன் கேட்டாள் சுசிலா...

"எங்கேயிருந்துடி.. நீ இந்த தலைவலியை

"ஸ்ஸ்... சும்மாயிருங்கம்மா.. யாராவது தலைவலியை வா.. வான்னு வெல்கம் பண்ணுவாங்களா..."

"எங்களுக்கெல்லாம் வராத தலைவலி.. உனக்கு மட்டும் எப்படி வருதோ..?"

சுசிலாவின் அங்கலாய்ப்பில் மேடையைப் பார்த்தாள் ஷோபா... முகம் பூராவும் மகிழ்ச்சியுடன் வைர நகைகள் ஒளிர மலர்ந்து சிரித்துக் கொண்டிருந்தாள் ராதிகா...

'இவளை என்றைக்குப் பார்த்தேனோ.. அன்றைக்கிருந்தே இந்தத் தலைவலி என்னைத் துரத்துது மம்மி...'

மனதுக்குள் பொறுமினாள் ஷோபா...

'இப்படியொரு முட்டாளாய் இருந்திருக்கேனே.. இவ மனசில முரளி இருக்கிறான்னு தெரிஞ்சிருந்தா... நான் அவனையே மேரேஜ் பண்ணிக்கிற முடிவை எடுத்திருப்பேனே... சங்கரைப் பற்றி நினைத்துக்கூடப் பார்த்திருக் மாட்டேனே.. இவளை தோற்கடிக்க.. இவ்வளவு அருமையான சான்ஸ் கிடைச்சும்... அதை நான் மிஸ் பண்ணிட்டேனே...'

நினைக்க.. நினைக்க... அவளுக்குத் தாங்க முடியவில்லை... ராதிகாவின் ஒவ்வொரு சிரிப்புச் சத்தத்திற்கும்... அவளது தலைவலியின் வேதனை கூடிக்கொண்டேயிருந்தது...

அவள் முன் அவளது எதிரியைத் தோற்கடிக்க... மிக எளிதான வழி ஒன்று இருந்தது...

அதுதான்.. அந்த எதிரியின் மனதிலிருந்தவனை கைபிடித்துக் காட்டுவது...

அவள் அதை அறிந்து கொள்ளாமல்.. எதிரியின் காதலனுடன் அவளைச் சேர்த்து வைக்கும் முட்டாள் தனமான வேலையைச் செய்து விட்டாள்... ராதிகா சங்கர் மீதுதான் அவளுக்கு ஆர்வம் போலப் போட்டுக்காட்டிய நாடகத்தில் அவள் ஏமாந்து விட்டாள்...

'எப்பேற்பட்ட மாஸ்டர் பிளான்... முரளியிடம் என்னைத் தூது அனுப்பியிருக்காளே.. இருந்த இடத்தில் இருந்து கொண்டே காரியத்தைச் சாதிச்சிருக்காளே.. நானும் பேக்கு போல... இவளுக்கும்.. சங்கருக்கும் மேரேஜ் நடக்கப் போகுதுன்னு முரளியை கிளப்பி விட்டு விட்டேனே...'

ஷோபா பரிதவித்தாள்... நினைத்து ஒன்று.. நடந்தது ஒன்றாக ஆகிப் போனதில் ஆடிப்போனாள்.. அவள் குரங்கை வரவழைக்க நினைத்தால் அங்கே பிள்ளையார் தோன்றி நின்றதில் அயர்ந்து போனாள்...

ஒருவார்த்தை உனைக் கேட்டேன்..
நீ காதோடு.. காதல் என்றாய்...

கீதா செல்போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள்.. ராதிகா விழா நாளின் அயர்வுடன் மண மகளுக்கான அறையிலிருந்த கட்டிலில் சரிந்தாள்.. போன் பேசி முடித்த கீதாவைப் பார்த்து...

"யாருடி போனில..?" என்று கேட்டாள்..

"யாருமே இல்ல.. நீ வேணா உத்துப்பாரு..." கீதா அவளது போனைத் தூக்கிப் பிடித்துக் காட்டினாள்...

"பதில் சொல்லாம தப்பிக்க இது ஒரு வழியா..? உடனே கடிக்கக்கிளம்பிடுவியே.. யாருகூட போனில் பேசின..?"

"என்னவோ... யாருகூட கடலை போட்டன்னு கேட்கிற மாதிரி இருக்குதே..."

"நான் சாதாரணமாத்தாண்டி கேட்டேன்.. நீயாய் ஏன் வாயை விடற..? அப்ப... நீ கடலைதான் போட்டிருக்க..."

"நான் கடலை போட்டாலும்..."

"ஏண்டி அலுத்துக்கறே...?"

"அலுத்துக்காம என்னத்தை செய்யச் சொல்ற.. நானும் கடலை வறுத்துத்தான் பார்க்கிறேன்... எதுவும் தேறுகிற கேஸா தெரியலை... அதுவே உன்னைப் பாரு.. இந்தப் பூனையும் பால் குடிக்குமான்னு... ஒளவையார் மாதிரி இருந்துக்கிட்டு.. கரெக்டா ஒரு ஹீரோவைப் பார்த்து கணக்குப் பண்ணிட்டயே.. உன் கெட்டிக்காரத்தனம் யாருக்கு வரும்...?"

கீதா சொன்னதைக் கேட்டபடி அறைக்குள் பிரவேசித்த ஷோபா...

"அதுதானே.. நீ சரியாய் சொன்ன கீதா..." என்று சிரித்தாள்...

பதிலுக்கு சிரிக்காமல் அவளை ஒரு மார்க்கமாகப் பார்த்தாள் கீதா...

'இவ அலப்பறை கேஸாச்சே.. என் லெவலுக்கு நானெல்லாம் இந்த பங்சனுக்கு வர்றதே பெரிசுன்னு பீலா விட்டுக்கிட்டு இருந்த பார்ட்டியாச்சே... இப்ப எதுக்காக இந்த என்ட்ரி...?'

"கன்கிராஜீலேசன்ஸ் ராதிகா..." என்றாள் ஷோபா...

ஷோபாவைப் பார்த்ததும் கட்டிலில் எழுந்து அமர்ந்த ராதிகா...

"தேங்க்ஸ்.." என்று பதிலுக்குச் சொன்னாள்...

"இந்த ஸாரியில் நீ ரொம்ப அழகா இருக்க..?"

"அப்படியா..?"

"ம்ம்.. எனக்கு தொண்டை வறளுதே.. இங்கே கூல்டிரிங்க்ஸ் இருக்கா...?"

இப்படிக் கேட்டவளை விசித்திரமாகப் பார்த்த கீதா...

"இங்கேயெல்லாம் அது இருக்காதுங்க.. டைனிங் ஹாலில்தான் அது இருக்கும்.. நீங்க வழி தப்பி இந்தப் பக்கம் வந்துட்டிங்க போல இருக்கே..." என்று கிண்டலுடன் சொன்னாள்...

"ஹௌ ஸ்வீட்... உன் தங்கையும்... உன்னைப் போலவே கிளவர்கேர்ளா இருக்கா ராதிகா... ஹாய்.. உன் அக்காவின் பிரண்டுக்காக நீ... டைனிங் ஹாலுக்குப் போய் அந்த கூல்டிரிங்கை கொண்டு வரமாட்டியா என்ன...?"

ஷோபாவின் வார்த்தைகளைக் கேட்ட ராதிகா கெஞ்சுதலாக தங்கையைப் பார்த்தாள்.. அவளும் 'உனக்காக போகிறேன்...' என்ற சமிக்ஞையுடன் அறையை விட்டு வெளியேறினாள்...

அவள் வெளியேறும் வரை காத்திருந்த ஷோபா அறைக் கதவை மூடித்தாழிட்டாள்... ராதிகாவின் புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது...

'ஏன்.. இவ கதவை மூடறா...?'

"என்னடி பார்க்கிற... உன் தகுதிக்கு கோடிஸ்வரனுக்கு பெண்டாட்டியாக ஆகனுமா..?"

"மைன்ட் யுவர் வெர்டுஸ் ஷோபா.. நான் பாலமுரளிக்கு பெண்டாட்டியாகனும்னு தான் ஆசைப்பட்டேன்... அவர் கோடிஸ்வரரா.. இல்லை நாடோடியான்னு நினைச்சும் பார்த்ததில்லை..."

ஷோபா பேசிய பேச்சில் தன்னையுமறியாமல் ராதிகா தன் உள்ளத்தைச் சொல்லிவிட.. ஷோபாவின் விழிகளில் வெற்றியின் சாயல் படர்ந்தது...

"பூனைக்குட்டி வெளியே வந்திருச்சு..." என்றாள்...

'ஆஹா... இவகிட்ட வாயை விட்டுட்டோமே...' என்று தோன்றினாலும்... அதைத்தானே பாலமுரளி ஊர்... உலகத்திற்கு சொல்லியிருக்கிறான் என்ற நினைவில்.. அலட்சியமாக தோளைக் குலுக்கினாள் ராதிகா...

"ஸோ.. வாட்...?"

"அப்படிச் சொன்னா எப்படி..? இனிமேல்தாண்டி உனக்கு இருக்கு..."

"ஹ.. உன்னால் என்னை என்ன செய்ய முடியும்..? என் முரளி என் கழுத்தில் தாலியைக் கட்டப் போவது உறுதி..."

"அவன் தாலியை மட்டும் தான் உன் கழுத்தில் கட்டுவான்.. அதற்குப்பின்னால் வாழவேண்டிய வாழ்க்கையை உன்னுடன் வாழ மாட்டான்..."

ஷோபாவின் வெறிபிடித்தத் தோற்றத்தைக் கண்ட ராதிகா அதிர்ந்தாள்.. அவள் பேசிய பேச்சில்... அவள் மனதில் மெலிதான பயம் தோன்றியது...

'இவ எதுக்காக இவ்வளவு ஆங்காரமாய் பேசறா...'

"வாழ விடமாட்டேண்டி.. என்னை வைச்சே என் சொந்தக்காரனை வளைச்சுப் போட்டுட்டியில்ல.. நீ எப்படி அவன்கூட வாழ்ந்து விடறன்னு நானும் பார்க்கிறேன்..."

'அடிப்போடி... அவன் ஏற்கனவே என்னுடன் வாழ்ந்துட்டான்... அந்தக் கதை தெரியாம வந்து பேசாதே...'

"இந்த ஷோபாவைப் பற்றி நீ இன்னும் சரியாய் தெரிஞ்சுக்கலைடி..."

'தெரிஞ்சுக்கிட்ட வரைக்குமே போதும்.. போதும்ன்னு இருக்கு... இந்த லட்சணத்தில.. இன்னும் வேற தெரிஞ்சுக்கனுமா..?'

"தயாராய் இரு ராதிகா.. இன்னும் நீ பார்க்க வேண்டியது எவ்வளவோ இருக்கு... இது என் இடம்டி... காலேஜில் நீ ரவுண்டு கட்டி அடிச்சதைப் போல இங்கே அடிக்க முடியாது.. உன் நாத்தனாரின் குடுமி என் கையில்... அது சரியான களி மண்.. நான் நினைத்த வடிவத்தில் அதை உருவாக்கலாம்... அதை வைச்சு உனக்கு ஆட்டம் காண்பிக்கறேண்டி..."

'அடிப்பாவி...'

"உன் ஆசைக் காதலன் பாலமுரளி இருக்கானே.. அவன் காதலில் மட்டும் மன்னனில்ல... கோபத்திலும் மன்னன்தான்.. அவனுக்கு வேண்டும்ன்னு நினைத்தா அவன்... ஏழுகடல்.. ஏழுமலை தாண்டிக்கூட வந்து சிறையெடுப்பான்.. அதே விசயத்தை வேண்டாம்ன்னு அவன் முடிவு கட்டிட்டான்னு வை... ஜென்மத்துக்கும் திரும்பிப் பார்க்காம தள்ளி வைச்சுருவான்..."

'இப்ப எதுக்காக... இவ... இந்த வார்த்தையைச் சொல்கிறா...'

ராதிகாவின் முதுகுத் தண்டில் ஜிலீர் என்ற உணர்வு ஏற்பட்டது.. அவளது அடிவயிறு கலங்கி.. மனதில் சஞ்சலம் ஏற்பட்டது...

இப்படிப்பட்ட நன்னாளில்.. இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்கவேண்டுமென்று அவளுக்கு விதிக்கப் பட்டிருக்கிறதா..?

இது.. எதற்கான அறிகுறி...?

"அவனோட அக்காவை என்னால ஆட வைக்க முடிகிறதைப் போல.. அவனையும் ஆட வைக்க என்னால் முடியும்..."

அதுவரைப் பொறுத்திருந்த ராதிகா.. பொறுமையை கைவிட்டாள்...

"உன்னால் அது முடியாது..." என்று சொல்லி விட்டாள்...

"பார்க்கலாமா...?" ஷோபா சவால் விட்டாள்...

"பார்க்கலாம்..." ராதிகா சவாலை ஏற்றுக் கொண்டாள்...

"எங்கே தட்டினால்.. எங்கே அடி விழும்ன்னு கணக்குப் போட என்னால் மட்டும்தாண்டி முடியும்..."

"உன் கீழ்த்தரமான கணக்கைத்தான் நான் கேட்டேனே... நான் சங்கரைப் பற்றிப் பேசியதை நீ ரிகார்டு பண்ணி முரளிக்கு அனுப்பியிருக்க.. ஏண்டி உன்புத்தி இப்படிப் போகுது...?"

"உனக்கும் அது தெரிஞ்சாச்சா..?"

"எனக்குத் தெரிஞ்சிட்டதை நீயும் தெரிஞ்சுக்க.. கூடவே இன்னொன்னையும் சேர்த்துத் தெரிஞ்சுக்க.. நீ அனுப்பின ரிகார்டைக் கேட்ட பின்னாலேயும் முரளி என்னைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு உறுதியாய் நிற்கிறார்..."

ராதிகாவின் குரலில் தன்னம்பிக்கை இருந்தது.. வெற்றியின் அறைகூவல் இருந்தது.. அது பாலமுரளியின் அதீத காதல் தந்தது என்பதில் ஷோபா கொதித்துப் போனாள்..

அவள் அவ்வளவு தூரத்துக்கு ராதிகாவைப் பற்றி மோசமாக சித்தரித்தும் அதையும் மீறி... பாலமுரளி ராதிகாவின் கழுத்தில் தாலியைக் கட்டப் போகிறான் என்றால்... ராதிகா ஏன் இவ்வளவு திமிராகப் பேச மாட்டாள்..?

அதில் ஷோபாவின் ஆவேசம் அதிகரித்தது...

"ரொம்பவும் மகிழ்ந்து போகாதே ராதிகா.. இப்போதைக்கு வேணும்னா முரளி உன்பக்கம் சாய்ஞ்சிருக்கலாம்.. ஆனா.. எப்பவுமே.. நான் அனுப்பி வைச்ச ரிகார்டில் இருந்த உன் பேச்சு அவன் மனதில் நிற்கும்..."

அது உண்மை என்ற நினைவில் மனம் கலங்கிப் போனாள் ராதிகா...

அவள் அனுபவித்த வேதனைகளைப் பற்றி அவளுக்குத்தானே தெரியும்..? பாலமுரளியுடனான திருமணத்தை உறுதி பண்ண.. அவள் எப்படிப்பட்ட வழிமுறைகளை கையாள வேண்டி இருந்தது என்பதை அவள் மறந்து விடவில்லையே...

தன் திருமண வாழ்வின் அஸ்திவாரம் பலமில்லாமல் இருப்பதைப் போன்ற உணர்வை அடைந்தாள் ராதிகா...

சீட்டுக்கட்டு மாளிகையின் மேல் மாடியில் நின்றிருக்கும் தத்தளிப்பு அவளுக்குள் ஏற்பட்டது...

எந்த நிமிடமும்.. எந்த நொடியும்... ஏதேனும் ஒரு சீட்டு உருவப்படலாம்.. அவ்வாறு உருவப்பட்டால்.. அடுத்த நொடியிலேயே.. அவள் வீற்றிருக்கும் சீட்டுக்கட்டு மாளிகை சரிந்து விடும்...

ராதிகாவின் மனதில் இனம் புரியாத பீதி மையம் கொண்டது...

அவளுக்குத் தெரியும்.. பாலமுரளி அவளைக் காதலிக்கிறான்... அவளை மட்டுமே காதலிக்கிறான் என்பது... அதே சமயம் ராதிகா அவனைக் காதலிக்காமல் சங்கரைத் திருமணம் செய்து கொள்ளும் ஆசையுடன் இருந்தாள் என்ற நினைவில் அவன் இருப்பதும் அவளுக்குத் தெரியும்....

இதை ஷோபா கண்டு பிடித்து விடக்கூடாது என்பது மட்டும்தான் அவளது கவலையாக இருந்தது... தன் எண்ணம் நிறைவேற ஷோபா எந்த அளவுக்கும் இறங்கிப் போவாள் என்பதில் துளிக்கூட ராதிகாவுக்கு சந்தேகம் ஏற்படவில்லை...

ஷோபா சொல்வதைப் போல பாலசரஸ்வதியின் பிடி அவள் கைக்குள் இருக்கிறது.. பாலசரஸ்வதிக்கு ராதிகாவைப் பிடிக்காமல் போனதின் பிண்ணணியில் ஷோபா இருக்கலாம் என்பதை அன்றுதான் உணர்ந்தாள் ராதிகா...

அது மேலும் தொடரக்கூடும் என்பது அவளது அனுமானமாக இருந்தது... ஷோபாவும் அதைத் தன் வாயால் சொல்லிவிட்டாள்...

இந்த நிலையில் ஷோபாவை எதிர்த்து நிற்பதற்கு முன்னால்... தன்னை வலிமையாக்கிக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருந்தாள் ராதிகா...

பாலமுரளி அவள் கழுத்தில் தாலியைக் கட்டினாலும்.. அவனால் தொடப்பட்டுவிட்ட நிர்பந்தத்-

திற்காகவே ராதிகா அவனைத் திருமணம் செய்து கொள்ள சம்மதித்திருக்கிறாள் என்ற நினைவுடன் தான் காலம் முழுவதும் வாழப் போகிறான்.. அவனை ராதிகா காதலிக்கவில்லையென்பதில் உறுதியாக அவன் இருக்கிறான்..

ராதிகா அதை எதிர்கொண்டு.. அவளது காதலை முரளிக்கு உணர்த்தியாக வேண்டும்...

பாலசரஸ்வதிக்கு ராதிகாவை கட்டோடு பிடிக்க வில்லை.. அவளுக்குப் பிடிக்காவிட்டால் எனக்கென்ன போச்சு..? என்று அலட்சியமாக ராதிகா நினைத்து விட முடியாது.. ஏனென்றால் பாலசரஸ்வதி... பாலமுரளியின் ஒரே சகோதரி... அவள் மீதான பாலமுரளியின் சகோதர பாசத்தைப் பற்றி ராதிகா நன்கு அறிவாள்... இன்று மகனின் காதலுக்கு துணை நிற்கும் மேகலா... எப்போதுமே மகளைக் கண்டித்துக் கொண்டிருப்பாள் என்று நிச்சயமாக சொல்லி விடமுடியாது.. ஒரு நேரம் போனாலும் ஒரு நேரத்தில்.. நிச்சயமாக மகளை விட்டுக் கொடுக்காமல் அவள் பக்கம் நின்று விடுவாள்...

அப்படியொரு நேரம் வந்தால் ராதிகா என்ன ஆவாள்..?

அதைப் பற்றியும் ராதிகா யோசிக்க வேண்டியிருந்தது..

மேகலாவுக்கு ராதிகாவை பிடிக்கும்தான்... எதுவரைக்கும் அந்தப் பிடிமானம் நிலைத்து நிற்கும்..? கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையாதா...?

மேகலா கல்லில்லையே.. சாதாரண மனிதப் பிறவிதானே... மகள் கரைத்தால் அவள் கரைந்து விட மாட்டாளா..? மகள் ராதிகாவை வெறுத்துப் பேசினால் மகள் பக்கம் சாய்ந்து விட மாட்டாளா..?

எந்த அளவுக்கு புகுந்த வீட்டில் மாமியாரின் அனுசரணையும்.. பக்கபலமும் கிடைக்கும் என்று புரியாத நிலைமையில் இருந்தாள் ராதிகா...

திருமணம் முடிந்து புகுந்த வீட்டில் வாழ ஆரம்பித்த பின்புதானே எதையும் தெளிவாக கண்டு கொள்ள முடியும்..? அதுவரையில் அவள் என்னதான் மனதில் நினைத்தாலும் எதிர்படும் நிதரிசனம் வேறாகத்தானே இருக்கும்...?

ராதிகாவிற்கு கால அவகாசம் தேவைப்பட்டது.. எதுவரை ஷோபா போவாள் என்று அவள் யோசிக்க வேயில்லை... அவளுக்கு தெரியும்... ஷோபாவின் மனதில் ராதிகாவின் மீது ஆழ்ந்த வன்மம் இருக்கிறது என்பது.. ராதிகாவைக் காயப்படுத்த வேண்டும் என்பதை தன் வாழ்க்கையின் லட்சியமாக வைத்திருப்பவள் ஷோபா...

அதை நிறைவேற்ற அவள் எந்த எல்லைக்கும் போவாள் என்பதை அறிந்து வைத்திருந்தவளுக்கு அதை முறியடிக்க மிக அதிகமான மனோ பலம் தேவைப்பட்டது...

ராதிகா மனதளவில் களைத்துப் போயிருந்தாள்.. அவளது காதலனே அவளை முறையில்லாமல் தொட்டு ஆண்டு விட்டதில் துயரப்பட்டுப் போயிருந்தாள்.. தொட்டு

விட்டவனையே திருமணம் செய்து கொள்ளும் முயற்சியில் தன் இயல்பையே வேறாகச் சித்தரித்துக் காட்ட நேர்ந்ததில் மனதுக்குள் குன்றிப் போயிருந்தாள்.. நீ என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிய அவசியமே இல்லை... என்னை சங்கர் திருமணம் செய்து கொள்வான் என்று அவள் சொன்னதை காலம் முழுதும் முரளி மறக்காமல் நினைவில் வைத்திருப்பான் என்ற நினைவில் கலங்கிப் போயிருந்தாள்.. தொட்டவனிடமே... மற்றவனைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக சொல்கிற பெண்ணாக தன்னை உருவகப்படுத்திக் கொண்டு விட்டதில் துக்கப்பட்டுப் போயிருந்தாள்.. ஒன்றையே நினைத்து அந்த ஒன்றிலேயே நிலைப்பவளை.. இது இல்லாவிட்டால் வேறொன்னு என்று நிலை மாற்றிக் கொள்ளும் பெண்ணாக முரளியை நினைக்க வைத்து விட்டதில் மனம் உடைந்து போயிருந்தாள்...

இத்தனையும் மீறி.. பாலமுரளி அவள் கழுத்தில் தாலிகட்டப் போகிறான்.. அவளே ஷேபாவிடம் சொன்னதைப் போல... அந்த அளவுக்கு ஆவேசமான காதல் அவள்மீது பாலமுரளிக்கு இருக்கிறது...

இது கடைசிவரை நிலைத்து நிற்குமா...?

66

உள்ளுக்குள் காதல் வந்ததால்..
உதைபடும் பந்தானேன்...

அது ஒரு போராட்டம்...!

பெற்றவர்களுக்குத் தெரியாமல்... கூடப் பிறந்தவர்களுக்குத் தெரியாமல்.. உயிருக்குயிராய் பழகும் தோழிக்குத் தெரியாமல்... ஏன்.. அவளையே அல்லும் பகலும் நினைத்து தலைவலியை வரவழைத்துக் கொண்டிருக்கும் எதிர்க்கும் தெரியாமல்.. தனித்து ஒருத்தியாக ராதிகா மட்டுமே போராடிய போராட்டம்...

அவள் மனதின் துயரை அறிந்தவர் யார்..?

பெற்றவள் அறிந்தாளா..? கூடப்பிறந்தவள் அறிந்தாளா..? உற்றவள் அறிந்தாளா..? கொல்ல நினைப்பவள் அறிந்தாளா..?

எவரும் அறியாமல் தன் வாழ்வைக் காத்து.. தன் குடும்பத்தின் கௌரவத்தையும் காத்துக் கொள்ளும் முயற்சியில்.. தன் காதலை மறைத்து நின்றாள் ராதிகா..

பாலமுரளியின் கால்களில் விழலாம்..? அவன் கால்களில் விழ அவளுக்கு என்ன தயக்கம்..? காதலின் அடிப்படையே சரணாகதிதானே...

அவன் காதலனாக மட்டும் நின்றிருந்தால் கட்டாயம் அவன் காலில் விழுந்திருப்பாள்.. தன் காதலைச் சொல்லிக் கதறியிருப்பாள்..

அவன் தாலிகட்டாமலே அவளது கணவனாக மாறி நின்றானே... அவன் காலில் அவளால் எப்படி விழுக முடியும்...

அவன் செய்தது தவறில்லையா..? ஆயிரம் தான் அவளைக் காதலித்திருந்தாலும்.. அவளைத் திருமணத்திற்கு முன்னால் தொட்டுவிட அவன் நினைக்கலாமா..?

அந்தக் காரியத்தை பாலமுரளி செய்தபின்பு அவன் காலில் விழ ராதிகாவுக்கு மனமில்லாமல் போய்விட்டது...

அவன் கையால் தாலி வாங்கிக் கொள்ள வேண்டும்.. அதே சமயம் வாழ்க்கைப் பிச்சை கேட்டு அவன் காலில் விழுகவும் கூடாது..

இரண்டும் நிறைவேற வேண்டுமானால் அவள் ஒரு சிறு நாடகத்தை நடத்தித்தான் ஆகவேண்டும்.. அவளும் அதை நடத்திக்காட்டினாள்... அவள் எதிர்பார்த்ததைப் போலவே பாலமுரளியை அவள் தேடிப் போய் கெஞ்ச வேண்டிய அவசியம் ஏற்படாமல்.. அவனே அவளைத் தேடி வந்தான்.. பேச்சு வார்த்தையை ஆரம்பித்தான்.. இப்போது அவனுடன் அவளுக்கு திருமணமும் நடக்கப் போகிறது...

ஆனால் காலமெல்லாம் அவன் நெஞ்சில் ஒரு நெருஞ்சிமுள் நெருடிக் கொண்டிருக்கும்தானே...

அவனைக் காதலிக்காமல் ராதிகா.. சங்கரைத் திருமணம் செய்து கொள்ள நினைத்திருந்தாள் என்ற நினைவு இருக்கும்தானே...

அவன் தொட்டுப் பெண்டாட்டு விட்டபின்பும்.. அவனைத் தேடி வந்து வாழ்க்கைப் பிச்சை கேட்காமல்.. சங்கரிடம் நடந்ததைச் சொல்லி... அவனிடம் வாழ்க்கைப் பிச்சைக் கேட்கத்தான் ராதிகா முயன்றாள் என்ற எண்ணம் அவன் மனதில் உறுத்திக் கொண்டிருக்கும் தானே...

சங்கரைச் சந்திக்கப் போனவளைக் கடத்திக் கொண்டு வந்து மிரட்டியதால்தான்.. அவனைத் திருமணம் செய்து கொள்ளும் முடிவிற்கு ராதிகா வந்தாள் என்று நிச்சயமாய் அவன் நினைத்துக் கொண்டிருப்பான்தானே..

இந்த நிலைமையில் நிற்கும் ராதிகாவால் ஷோபாவை எதிர்த்துப் போராட முடியுமா..?

குறைந்தபட்சம்.. நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடந்து முடிகிற வரைக்குமாவது ஷோபாவை தன் பாதையிலிருந்து அகற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தாள் ராதிகா..

தன் மனதில் கலக்கத்தை மறைத்து நிமிர்ந்து நின்று ஷோபாவை முறைத்தாள்...

'எங்கே அடித்தால்.. எங்கே வலிக்கும்ன்னு கணக்குப் போட உனக்கு மட்டும்தான் தெரியுமா..? எனக்கு அதைவிட பத்து மடங்கு அதிகமாகவே தெரியும்டி...'

"உனக்கு என்னதான்டி வேணும்...?"

"உன் நிம்மதி... அது எனக்கு வேணும்டி.. கொடுக்கறியா..?"

"வெரிகுட்.. இப்போத்தான் நீ மனசில இருக்கிறத ஓபனாப் பேசற.. கீப் இட் அப்.. அதை விட்டுட்டு எதுக்காக என் நாத்தனார் கிட்ட நல்லவ மாதிரி வேசம் போடற.. உனக்கு அது கொஞ்சம்கூட பொருந்தவே இல்லை தெரியுமா..?"

"திமிராடி...?"

"சேச்சே.. அதெல்லாம் உனக்குத்தான் இருக்கும்.. எனக்கு அது எதுக்கு...? உன்னைப் பார்த்தால் அச்சு அசல் 'அக்மார்க் வில்லி'ன்னு எல்லாத்துக்குமே தெரிஞ்சிருது.. அதெப்படி என் அப்பாவி நாத்தனாருக்கு மட்டும் தெரியாமப் போச்சு..?"

"அதான்.. நீயே உன் திருவாயால் சொல்லிட்டயே... அது ஒரு அப்பாவின்னு.. பார்த்துக் கிட்டே இருடி.. அந்த அப்பாவியை படுபாவியா மாற்றி உனக்கு ஆட்டம் காண்பிக்கிறேன்.. அப்படிச் செய்யலேன்னா என் பெயர் ஷோபா இல்லைடி..."

ஷோபா சூளுரைத்தாள்.. மனதின் அச்சத்தை வெளியே காட்டிக்கொள்ளாமல் அலட்சியமாக இருப்பதைப் போன்ற பாவனையுடன் முகத்தை வைத்துக் கொண்டு கலகலவென்று சிரித்தாள் ராதிகா...

"அதைச் செய்டி முதலிலே..."

"என்னாலே செய்ய முடியாதுன்னு நினைக்கறியா..?"

"செய்யுன்னுதானே சொல்றேன்.. ஷோபாங்கிறது எவ்வளவு அழகான பெயர் தெரியுமா..? உனக்கும் அந்தப் பெயருக்கும் ஏழாம்பொருத்தம்டி... உனக்கெல்லாம் பூலான்தேவின்னு பெயர் வைச்சிருக்கனும் அந்தப் பெயர்தான் உனக்குச் சரி..."

"ராதிகா..."

"எதுக்குச் சத்தம் போட்டு ஊரைக் கூட்டறே.. இது கல்யாண நிச்சயதார்த்தம் நடக்கிற இடம்... இங்கே நீ பதவிசான பெண்ணைப் போல வேசம்தான் போடனும்.. உன் நேச்சரைக் காட்டக்கூடாது... நாள பின்னே உனக்கு ஒரு இளிச்சவாயன் வந்து மாட்ட வேணாமா.. அடக்கி வாசி..."

"என் பொறுமையை சோதிக்கறே ராதிகா..."

"பொறுமைக்கும் உனக்கும் ரொம்பத் தூரம்டி... நீயெல்லாம் பொறுமையைப் பத்திப் பேசவே கூடாது..."

"கோபத்தைக் கிளப்பாதேடி.. நீ தாங்கமாட்ட..."

"நீயெல்லாம் ஒரு ஆளு.. உன் கோபத்தைக் கண்டு நான் பயப்படனும்.. போடி போ.. அதுக்கு வேற ஆளைப் பாரு... நீதானே உன் பெயரை மாத்திவைச்சுக்கப் போறேன்னு சொன்ன.. அதான் உனக்காக நான் உன் பெயரை மாத்தி யோசிச்சேன்.. ஹ..ஹ.. இது எப்படியிருக்கு..?"

"இது கொஞ்சம் கூட நல்லாயில்ல ராதிகா..."

"எதுடி.. பூலான் தேவிங்கிற பெயரா..?"

"ஏய்ய்..."

"அடங்குன்னு சொன்னேனா இல்லியா.. சும்மா சவுண்டு விடாதே.. நான் முரளிமீது ஆசைப்பட்டேன்.. கல்யாணம் பண்ணிக்கப் போறேன்.. நீ சங்கர் மேலயும் ஆசை வைச்சுக்கிட்டு.. முரளி கிட்டயும் நூல் விட்டுக்கிட்டு இருந்தியே.. உன் கதி என்ன ஆச்சு..?"

ராதிகா சரியான இடத்தில் அடித்துவிட்டாள்.. ஷோபாவின் வலி அவள் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது...

'யாருகிட்ட..? ம்ம்ம்?' ராதிகா முகம் திருப்பிக் கொண்டாள்...

"ஏன்.. என் கதிக்கு என்ன..? நான் நினைத்திருந்தா முரளி உன் கழுத்தில் தாலிகட்டும் முடிவை எடுத்திருக்க முடியாது..."

"ஏன் நினைக்கல..?" ராதிகா நிதானமாகக் கேட்டாள்...

"அது.. அது.. வந்து..." ஷோபாவால் பதில் சொல்ல முடியவில்லை...

"என்னடி.. வந்து.. போயின்னு ராகம் இழுக்கற.. விசயத்துக்குவா.. முரளி கிராமத்தில் இருந்தார்.. அதோட..

உனக்கு சங்கர் மேல ஒரு மயக்கம்.. எங்கே.. இதை இல்லைன்னு சொல்லு பார்க்கலாம்..."

"இரண்டு பேருமே என்னைப் பெண் கேட்டாங்க..."

"சும்மா கதை விடாதே.. அப்புறம் எப்படி சங்கர் என்னைப் பெண் கேட்டு வந்தாராம்.. முரளியைப் பார்.. கல்யாணமே பண்ணிக்கப் போகிறார்..."

ராதிகாவின் வார்த்தைகளில் வெற்றியின் எக்களிப்பு இருந்தது.. ஷோபா மனம் ஒடுங்கினாள்.. அதை அவளது முகம் பிரதிபலித்தது...

ராதிகாவிற்கு அதுதான் வேண்டும்... ஷோபாவை மனரீதியாக வலிமை குறைச் செய்ய வேண்டும் என்பதுதான் அவளது திட்டமாக இருந்தது..

அவளை எகத்தாளம் பேச விடக்கூடாது.. அதற்கு மாறாக.. அவளைப்பற்றி எகத்தாளமாகப் பேசி.. அதை அவள் நினைத்து மறுகும்படி செய்ய வேண்டும்.. அதிலிருந்து அவள் வெளிவருவதற்குள் பாலமுரளியுடனான ராதிகாவின் திருமணம் நல்லவிதமாக நடந்து முடிந்திருக்கும்...

அதற்குப் பின்னால் ஆண்டவன் விட்ட வழி...

அதுவரை ஷோபாவை அவள் சமாளித்தாக வேண்டும்... ஷோபாவின் கவனத்தை திசை திருப்ப வேண்டும்...

"ரொம்பவும் ஆடாதே ராதிகா... இன்னும் உன் கல்யாணம் நடந்து முடியலை..."

'நினைச்சேண்டி.. உன் புத்தி இப்படித்தான் போகும்ன்னு...'

"நிச்சயமே நடந்து முடிஞ்சாச்சு.. இன்னுமா நீ வாய் விடற..."

"மணமேடை வரைக்கும் வந்த கல்யாணமே நின்னு போயிருக்கு... அதை நினைவில் வைத்துக்க..."

'ஆஹா... நீ இப்படியும் நினைக்கறியா...?'

"நீ மத்தவங்க கல்யாணத்தை நிறுத்தறதிலேயே ஏன் குறியாய் இருக்க ஷோபா.. உனக்கெல்லாம் கல்யாணம்ங்கிற ஒன்னு நடக்கவே நடக்காதுன்னு உனக்குத் தெரிஞ்சு போச்சா...?"

"ஏய்ய்.. எனக்கு ஏண்டி கல்யாணம் நடக்காது...? எனக்கென்ன குறை...?"

'நீயே ஒரு குறை.. இதில குறையைப் பத்தி கேள்வி கேட்கிற...'

"அடடா... நீ நிறை குடமாச்சே... என்ன ஒன்னு.. இப்படிப்பட்ட நிறைகுடத்தை எவனும் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டேங்கிறான்..."

"ராதிகா..."

'எரியுதில்ல... இப்படித்தானே எனக்கும் இருக்கும்..'

"சும்மாக் கத்தாதே ஷோபா.. நான் சொன்னதில என்ன தப்பு..? நான் உனக்கு ஒரு சவால் விடறேன்.. அதைச் செய்து முடிக்க உனக்கு தில்லிருக்கா...?"

"சவாலா...?"

'ஆமாண்டி.. சவால்தான்.. நீ அதைச் சமாளிக்கிறதுக்குள்ள... நான் முரளியைக் கல்யாணம் பண்ணி முடிச்சிருப்பேன்... அதுக்குப் பின்னால வா.. மோதிப் பார்க்கலாம்.. அதுவரைக்கும் என் வழிக்கு வராதே...'

"சவால்தான் ஷோபா.. தில்லிருக்கா...?"

"உனக்கே தில்லிருக்கும்போது எனக்கிருக்காதா... ஹ..."

'இந்தத் திமிருக்கொன்னும் குறைச்சல் இல்லடி.. நீ என்ன பெரிய இவளா..?'

"அப்போச் சரி.. கேட்டுக்க.. எனக்கு முரளி மேல மயக்கம்.. நான் அவரைக் கல்யாணம் பண்ணப் போறேன்.. உனக்கு சங்கர் மேல மயக்கம்தானே.. முடிஞ்சா அவரைக் கல்யாணம் பண்ணிக்காட்டு பார்க்கலாம்..."

ராதிகா விட்ட சவாலில் ஷோபா அரண்டு போய் விட்டாள்.. பாவம்.. அவளும்தான் என்ன பண்ணுவாள்...? கிழக்கே உதிக்கிற சூரியனை மேற்கே உதிக்க வைக்கச் சொன்னால் அவளால் அதைச் செய்து முடிக்க முடியுமா..?

"என்னடி பேச்சைக் காணோம்..."

"எனக்கொன்னும் சங்கர் மேல மயக்கமில்லை..."

"ஆ.. ஆ... யாருகிட்ட காது குத்தற..? இந்த ரீல் சுத்தற வேலையெல்லாம் என்கிட்ட நடக்காது.. நான்தான் பார்த்தேனே..."

"எதைப் பார்த்த...?"

"உன் பர்த்டே பார்ட்டிக்கு வந்தப்ப.. நீ சங்கர் கிட்ட வழி.. வழின்னு வழிஞ்சு.. உன் தோட்டத்தையே நனைச்சியே.. அதை நான் பார்த்துட்டேனே..."

ராதிகாவின் கேலிப் பார்வையில் ஷோபா குன்றிப் போனாள்...

'அப்பாவும்.. அம்மாவும் தினமும் சொல்கிறது சரிதான்.. இவளை அந்த பர்த்டே பங்சனுக்கு கூப்பிட்டிருக்கவே கூடாது...'

"வாயடைச்சுப் போச்சில்ல.. அப்புறமாய் அம்மணி கூட சங்கர் ஒருநாள் நம்ம காலேஜ்பக்கம் வந்தானே.. அப்ப அம்மணி.. ஐயாவ பார்த்தீங்களே ஒரு பார்வை.. அதை மறக்க முடியுமா..?"

"ஏய்ய்.. நீ ஓவராப் போற..."

"உன்னைவிடவா ஷோபா..? ஓவராப் போறதில நீ எக்ஸ்பர்ட் ஆச்சே.. எதில நீ எக்ஸ்பர்ட்டோ இல்லியோ.. இந்தமாதிரி விசயங்களிலே உன்னை முந்த யாருமே இல்லைடி..."

"அவர் என்கூட வந்தார்... நான் பார்த்தேன்.. உனக்கென்ன வந்தது...?"

"எனக்கொன்னும் வரலைப்பா.. உன்கூட வந்த சங்கருக்குத்தான் உன்னை விட்டுட்டு.. என்மேல் காதல் வந்தது.. ஆனா.. நான் அவனைக் காதலிக்கலைப்பா..."

"ராதிகா..."

"போடி.. போய் தில்லிருந்தா அந்த சங்கரைக் கல்யாணம் பண்ணிக்காட்டு ஒன்றைப் புரிஞ்சுக்க.. மணமேடை வரைக்கும் போய் என் கல்யாணம் நின்று போனாலும் மறுவாழ்வு கொடுக்க சங்கர் சந்தோசமா முன்வருவான்.. அதை நினைவில வைச்சுக்கிட்டு எதையும் பேசு.. என் கழுத்தில் வேற யாரும் தாலிகட்டாமல் சங்கரும் வேற ஒருத்தி கழுத்தில் தாலியைக் கட்ட மாட்டான்... நீ எனக்குப் பிடிச்சனோட என் கல்யாணம் நடக்கிறதை நிறுத்தினேன்னு வைய்யு.. உனக்குப் பிடிச்சவனைக் கல்யாணம் பண்ணிக் காட்டிவிடுவேன்.. புரியுதா...?"

எதைச் சொன்னால் ஷோபாவின் ஆவி துடிக்குமோ.. அதைச் சொன்னாள் ராதிகா.. அதைச் சொல்வதைத் தவிர அவளுக்கு வேறு வழி தென்பட வில்லை... அவளால் என்னதான் செய்ய முடியும்..?



விரல்தொட்டு விட்டு விட்டாய்..
வெண்பஞ்சை அனல் பற்றியது...

"கேட்டுக்க ஷோபா... முரளியோட என் கல்யாணம் நடந்தாகணும்.. அது நின்னுச்சுன்னா எனக்கொன்னுமில்ல.. உனக்குத்தான் தலைவலி..."

"ஏன்..? எனக்கு ஏன் தலைவலி வரனும்..?"

"உன் கண் முன்னாலேயே சங்கரைக் கல்யாணம் பண்ணிக் காட்டிருவேனே..."

"நான் உன் முரளியைக் கல்யாணம் பண்ணிக் காட்டி விடுவேன்..."

"செய்து பார்.. நீ முரளி முன்னால் போய் நின்னா அவர் உன்னைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்.. அதுவே நான் உன் சங்கர் முன்னால் போய் நின்னா அவன் என்னைத் தவிர வேற யாரையும் திரும்பிப் பார்க்க மாட்டான்.. என்ன...? அதைச் செய்து காட்டவா...?"

"இதை முரளியிடம் நான் சொல்லவா..?"

"சொல்லேன்... நான் சங்கரைத் தேடிப் போகிறேன்..."

"ஏண்டி.. உன்னை என்னவோ ரொம்ப நல்லவன்னு நினைச்சேன் கடைசியில் நீ இவ்வளவு தானா..?"

"என்ன இவ்வளவுதானா..?"

"காதலிக்கிறது ஒருத்தனை.. கல்யாணம் பண்ணிக்கிறது வேற ஒருத்தனையா...?"

"என்னடி செய்கிறது..? இந்த சினிமாக்களில எல்லாம் இந்த மெசேஜைத்தானே திரும்பத் திரும்பச் சொல்கிறாங்க..."

"என்னன்னு..?"

"நீ ஆசைப்படுறவனைக் கல்யாணம் பண்ணிக்கிறதை விட... உன்மேல ஆசைப்படுகிறவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா வாழ்க்கை நல்லாயிருக்கும்ன்னு சொல்றாங்களேடி..."

ராதிகா அப்பாவியைப் போல முகத்தை வைத்துக் கொண்டு பேசப்பேச.. அவள் அப்படியேதும் முயற்சி செய்ய ஆரம்பித்து விடுவாளோ என்ற பயத்தில் ஷோபா திகிலடைந்து போனாள்...

"உன்னைப் போய் மேகலா ஆண்ட்டி மருமகளா செலக்ட் பண்ணியிருக்காங்களே.. அவங்களைச் சொல்லனும்..."

"சொல்லித்தான் பாரேன்.. நீ சொல்கிறதை மதிச்சு அவங்க காது கொடுத்துக் கேட்கிறாங்களான்னு பார்ப்போம்... என் நாத்தனார்தான் அப்பாவி... மாமியார்

ரொம்ப புத்திசாலி... உன் சாகஸமெல்லாம் அங்கே செல்லுபடியாகாது.. அவங்க உனக்கும் 'பெப்பே...' உன்னைப் பெத்தவங்களுக்கும் 'பெப்பே'ன்னு சொல்லிருவாங்க.."

"நானும் அப்போப் பிடிச்சுப் பார்க்கிறேன்.. நீ திமிராவே பேசறடி..."

"திமிர்தான்.. நான் காதலிக்கிறவர்.. என்னைக் காதலிக்கிற திமிர்.. போ.. முடிந்தால் சங்கரை காப்பாத்தி.. கைப்பத்திக்கப் பாரு.. ஒன்றை நினைவில் வைச்சுக்க.. முரளியுடனான என் கல்யாணம் நின்று போனாலும் முரளி உன் கழுத்தில் ஒருநாளும் தாலியைக் கட்ட மாட்டார்.. அதே சமயம் சங்கர் தேடிவந்து என் கழுத்தில் தாலியைக் கட்டுவான்... ஸோ.. என் கல்யாணம் நின்று போனால் நஷ்டம் எனக்கில்லை.. உனக்குத்தான்.. சங்கர்.. முரளி.. ரெண்டு பேருக்குமே நீ குறிவைச்சே.. முரளி என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறார்.. மீதமிருக்கிறது சங்கர்தான்.. அவனையும் கோட்டை விட்டுட்டு உட்கார்ந்து விடாதே.. நான் சொல்கிறதை சொல்லிட்டேன்.. அப்புறம் உன் இஷ்டம்.. எனக்கென்ன வந்தது..? எனக்கு முரளி இல்லைன்னா சங்கர் இருக்கவே இருக்கிறான்.. உனக்கு சங்கர் இல்லைன்னா யாரிருக்கா..? யோசிச்சுக்க.. சங்கரை நீ தக்க வைச்சுக்கனும்னா எனக்கு முரளியோட கல்யாணம் நடந்தாகனும்.. அப்படி ஆகலைன்னா உனக்குத்தான் கஷ்டம்..."

அறைக்கதவு பலமாக தட்டப்பட்டது.. ராதிகாவிடமிருந்து விடுபட்டு ஓடுவதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்த ஷோபா.. நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி அவசரமாகக் கதவைத் திறந்தாள்..

சந்தேகப் பார்வை பார்த்தபடி குளிர்பானப் பாட்டிலுடன் உள்ளே வந்தாள் கீதா...

"கதவைப் பூட்டிக்கிட்டு உள்ளே என்ன பண்றீங்க..?"

"ஊம்.. உன் அக்கா எனக்கு பெஸ்ட் பிரண்ட் பாரு.. அவ மேரேஜ் பண்ணிக்கிட்டு என்னை விட்டுப் பிரிஞ்சு போறாள்ல.. அந்தத் துக்கத்தை அழுது ஆற்றிக்கிட்டு இருந்தோம்..."

குளிர்பானம் கேட்டவள் அதைக் குடிக்க மறந்து வெகு வேகமாக அந்த இடத்தை விட்டு ஏறக்குறை ஓடினாள்...

"இவ எதுக்கு ராது இப்படி பின்னங்கால் பிடறியில பட ஓடுறா.."

"அப்படி ஒரு நேர்த்திக் கடனாம்..."

"அப்படிங்கறே..."

"ஆமாம்கிறேன்..."

"இந்த கூல்டிரிங்கை என்னடி செய்கிறது...?"

"உனக்கும் எனக்கும் வாயில்லையா..? நாம குடிக்கிறது..."

"அதைச் சொல்லு..."

கீதா கூல்டிரிங்கை வாயில் சரித்தாள்.. ராதிகா யோசனையுடன் கட்டிலில் அமர்ந்தாள்..

"என்னடி இம்புட்டு யோசனை யேர்சிக்கிற..?"

"ஒன்னுமில்ல.. இந்த ஷோபா இருக்காளே... அவளப் பத்தி யோசிச்சுக்கிட்டு இருக்கேன்..."

"நல்ல நாளும் அதுவுமா.. அவளைப் பார்த்துப் பேசறதே ஆபத்து... அதில அவளப்பத்தி யோசிக்க வேற ஆரம்பிச்சிட்டயா.. நீயாய் ஏண்டி வினையை விலை கொடுத்து வாங்கற..."

"நானாடி அவளக் கூப்பிட்டு வைச்சுப் பேசினேன்..?"

"வினை தானாத்தான் வந்துச்சு.. எதுக்கு வந்துச்சாம்...?"

"வேற எதுக்கு..? என் உயிரை எடுக்கத்தான்..."

"அச்சாணியமாய் பேசாதே ராதிகா... நானும் அவளை வாட்ச் பண்ணிக்கிட்டுத்தான் இருக்கேன்.. இந்தக் கல்யாணம் நடக்கிறதில இவளுக்கு எதுக்குடி இத்தனை வருத்தம்...?"

"ம்ம்ம்.. முரளி அவளுக்கு முறை மாப்பிள்ளை..."

"ஓ... அதான் காண்டா..?"

"ம்ம்ம்..."

"ஐயோ பாவம்.. முரளிக்கு இப்படியொரு இக்கட்டா..?"

கீதாவின் பரிதாபத்தில் ராதிகாவுக்கு சிரிப்பு வந்து விட்டது..

"பாவம்... அவர் என்னடி பண்ணுவார்..?"

"எதைவைச்சு.. இவளுக்கு முரளி முறை மாப்பிள்ளை ஆகனும்னு சொல்கிற..?"

"வேண்டாம்டி.. உனக்குச் சொன்னாப் புரியாது..?"

"இதானே வேண்டாம்கிறது.. இன்னும் ரெண்டே மாதத்திலே பிளஸ்டூவை முடிச்சிட்டு காலேஜீக்கு ஓடப் போறேன்.. எனக்கா புரியாது..? என்னைப் பார்த்தா உனக்கு எப்படி இருக்கு..? சின்னப் பப்பா மாதிரி இருக்கா..? உனக்கே புரியும் போது எனக்குப் புரியாதா..?"

"அப்ப சொல்லித்தான் ஆகனும்கிற..?"

"ஆமாம்..."

"எனக்கென்ன வந்தது.. நீ இவ்வளவு கேட்கிறதால சொல்றேன்.. கேட்டுக்க.. முரளியோட அக்கா இருக்காங்கள்ல..."

"இருக்குது.. இருக்குது.. அந்தம்மாவுக்கு எதுக்குடி அவ்வளவு ராங்கி..? சாப்பாடு தூள்ன்னு எல்லோரும் சொல்கிறாங்க.. இது மட்டும் சகிக்கலைன்னு சொல்லுது.. நல்ல வேளை.. லேடிஹிட்லர் காதில இது விழுகலை.. விழுந்திருந்தா இந்தக் கல்யாண மண்டபம் வியட்நாம் வீடாய் ஆகி இருக்கும்..."

"ஏண்டி.. முரளிக்கு அந்த ஷோபா எப்படி உறவு முறையாகனும்னு சொல்லவந்தா.. நீ எங்கேயோ போய் நிற்கிற.. இப்ப அதை நான் சொல்லனுமா.. வேணாமா..?"

"உன் நாத்தனாரைப் பேசினா கோபம் பொத்துக்கிட்டு வந்துருமே.. இப்ப எதுக்காக அந்தம்மாவைப் பத்திச் சொல்கிற..."

"அவங்களோட மாமியார் இருக்காங்கள்ல..."

"இருக்காங்க.. தங்கமான மாமியார்.. உன் நாத்தனார் கொடுத்து வைச்ச பிறவிடி ராது.. இது மூஞ்சிக்கெல்லாம் எப்படிப்பட்ட மாமியார் வந்து மாட்டறாங்கன்னு பாரு..."

அடுத்த விமரிசனத்தை கீதா ஆரம்பித்து வைக்க.. இவளை என்ன செய்தால் தேவலாம் என்ற கோபத்துடன் முறைத்தாள் ராதிகா...

"டோனி.. டோனி.." என்று கைகளைத் தூக்கினாள் கீதா...

"என்னது.. டோனியா...?"

இவள் எதற்காக.. கிரிக்கெட் டீமின் கேப்டனின் பெயரைச் சொல்கிறாள் என்ற திகைத்துப் போனாள் ராதிகா...

"யெஸ்... மை டியர்..."

"அவரை எதுக்குடி வம்புக்கு இழுக்கற...?"

"ஊஹூம்.. அவரைப் போய் யாராவது வம்புக்கு இழுப்பாங்களா..? டோனின்னா கூல்ன்னு அர்த்தம்.. கூல்.. கூல்.. அப்படிங்கறதைத்தான் டோனி.. டோனி.. அப்படின்னு சொன்னேன்..."

"நீ தேறவே மாட்டடி..."

"நோ சான்ஸ்.. நான்தான் கிளாஸ் பர்ஸ்ட்.. அதனால சாபத்தை மாத்திக்குடு... என்னை மட்டும் சொல்றயே.. நீ எதுக்காக உன் நாத்தனாரின் மாமியாரையெல்லாம் சீனுக்குள் இழுத்து விடற..."

"நேரம் தான்... வேற என்ன..? என் நாத்தனாரோட மாமியாருக்கு ஒரு தங்கை இருக்காங்க..."

"ராதிகா.. இது உனக்கே நியாம்ன்னு தோணுதா..? இப்ப நான் என்ன கேட்டேன்..? அந்த ஷோபாவுக்கு முரளி எப்படி முறை மாப்பிள்ளையாய் ஆனாருன்னுதானே கேட்டேன்.. அதுக்காக.. உன் நாத்தனாரின் மாமியார் முதற்கொண்டு சொல்லிக்கிட்டு வரனுமா..? நான் தாங்குவேனான்னு கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தியா..?"

"என்னைக் குற்றம் சொல்லாதேடி... நான் எச்சரிச்சேன்.. நீதான் கேட்கலை.. மத்த விவரம் புரிஞ்சா.. உனக்கு எல்லா விவரமும் புரிஞ்சு விடுமா..?"

"ஜாடையாய் எதிர்த்த வீட்டுத் தடியனையும்.. பக்கத்து வீட்டு முரடனையும் பற்றி சொல்லிக் காட்டறாப்புல இருக்கே..."

"புரிஞ்சாச் சரி..."

"அவனுகளே ஒரு விவரம் கெட்ட பயலுக.. அவனுகளுக்கும் விவரத்திற்கும் என்ன சம்பந்தம்ன்னு இதை நீ சொல்ற...?"

"வேணாண்டி.. அடி வாங்காதே..."

"நீ விசயத்துக்கு வா..."

"என் நாத்தனாரோட.. மாமியாரோட.. தங்கையோட.. மகள்தான் ஷோபா..."

"எப்படி மூச்சு வாங்குது பாரு உனக்கு.. ஊம்.. உன் நாத்தனாரோட.. மாமியாரோட... தங்கை மகள்ன்னா.. முரளிக்கு தங்கை முறையாயில்ல ஆகனும்...? கல்யாணம் பண்ணிக்கிற முறை வராதே..."

நெற்றியில் ஒற்றை விரலால் தட்டியபடி கீதா யோசனையில் ஆழ்ந்து விட.. 'அப்பாடி..' என்ற விடுதலை உணர்வுடன் கட்டிலில் சரிந்து கண்களை மூடினாள் ராதிகா...

எவ்வளவு நேரம் அப்படியே படுத்திருந்தாளோ தெரியாது.. விழா நாளுக்கான சந்தடியில் கண்விழித்தவள் சட்டென்று எழுந்து அமர்ந்தாள்...

நிச்சயதார்த்தப் பெண்ணைப் பார்க்கவென்று உறவினர்கள் வரக்கூடும் என்ற நினைவுடன் கலங்கிய தலைமுடியையும்.. சேலையையும் சரி பண்ணிக் கொண்டே எதிரே பார்த்தவள் திகைத்துப் போனாள்...

நாற்காலியில் கால்களை மடித்து அமர்ந்தபடி.. காற்றில் கை விரலால் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள் கீதா...

'இவளுக்கு என்ன ஆச்சு...'

ராதிகா கவலைப் பட்டுப் போனவளாக தங்கையின் தோளில் ஒங்கி ஒரு போட்டு கவனத்தை திருப்பினாள்...

"என்ன ராது...?"

"என்னடி பண்ணிக்கிட்டு இருக்க...?"

"நீ சொன்ன உறவு முறையை யோசிச்சுக்கிட்டு இருக்கேன்.. அதெப்படி டீ அந்த ஷோபா முரளிக்கு முறைப் பெண்ணாய் ஆவா..?"

"ஏண்டி.. அதை நீ விடவே மாட்டியா...?"

"அதுக்கில்லைடி ராது..."

"அடச்சீ.. எழுந்திரு.. இப்ப இதுதான் ரொம்ப முக்கியம்... அவ முரளிக்கு யாராய் இருந்தா நமக்கென்ன..?"

"அதைச்சொல்லு... நீதானே அவளுக்கு வொய்ப்.."

"தெரியுதில்ல... போ.. போய் அம்மா என்ன செய்கிறாங்கன்னு பார்த்துட்டு வா..."

"வேணாண்டி ராது.. லேடி ஹிட்லர் சுள்ளு.. சுள்ளுன்னு விழுந்து வைக்குது.. அதுக்கு உன் நாத்தனாரே தேவலாம் போல இருக்கு..."

அவர்கள் பேசிக் கொண்டிருந்த போதே மேகலா சில உறவுக்காரப் பெண்களுடன் உள்ளே வந்துவிட ராதிகா மரியாதையுடன் எழுந்து நின்றாள்... அதைப் பெருமைபொங்க பார்த்தபடி...

"உட்காரும்மா..." என்று அருகில் அமர்ந்து கொண்டாள் மேகலா...

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தவர்கள் நேரமாகிறது என்று கிளம்பினார்கள்.. சுந்தர் வந்து ராதிகாவின் காதைக் கடித்து முரளி அவளுக்காக மாடியில் காத்திருக்கிறான் என்று சொல்லி விட்டுச் சென்றான்...

"கொஞ்சம் இருடி.. இதோ வந்திர்ரேன்..." ராதிகா கிளம்பினாள்...

"என்னவாம்.. உன் ஹீரோ வரச்சொல்லி தூது விட்டாரா...?" என்று கேட்டாள் கீதா...

"எப்படிடி கண்டு பிடிச்ச..?" ராதிகா ஆச்சரியமானாள்...

"அதான் சுந்து வந்து உன் காதைக் கடிச்சானே..."

"இதிலெல்லாம் நீ செம விவரம்டி..."

"என்ன இருந்து என்ன பிரயோஜனம்..? இந்த ஷோபா எப்படி முரளிக்கு முறைப் பெண்ணாய் ஆனாங்கிற விவரம் மட்டும் எனக்கு பிடிபட மாட்டேங்குதே..."

"ஆரம்பிச்சுட்டியா.. ஆளை விடு தாயே... அங்கே என் ஆள் எனக்காக வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கார்..."

"உனக்கு உன் பிரச்னை..."

"உனக்கு எதுக்குடி இந்தப் பிரச்னை.. நீயாய் இழுத்து விட்டுக்கறே..."

"போ ராது.. இதைத் தெரிஞ்சுக்கலைன்னா எனக்கு தலை வெடிச்சுடும்..."

"ஓகே.. என் மாமியார் உனக்கு என்னவாக ஆகனும்...?"

"அத்தை..."

"என் சின்ன மாமியார்...?"

"சின்னத்தை..."

"என் சின்னத்தையின் மகள் உனக்கு என்னவாகனும்..."

"சின்னத்தை மகள்... அதாவது அத்தை மகள்.. புரிஞ்சுருச்சு ராதிகா..."

'யுரேகா...' என்று கூவாத குறையாக கீதா மகிழ்ந்து போக... ராதிகா மாடிக்கு விரைந்தாள்...



யார் மனதில் யாரிருந்தாலென்ன..?
என் மனதில் நீயிருக்கிறாய்...

மாடியிலிருந்த பால்கனியின் முகப்பில் பாலமுரளி நின்று கொண்டிருந்தான்.. அவன் பார்வை மாடிப் படிகளின் மீது பதிந்திருந்தது... மான் குட்டியைப் போல.. இரண்டிரண்டு படிகளாய் தாவிக் கடந்து வந்த ராதிகாவின் விரைவைக் கண்டதும்.. அவன் மனதில் நிறைவு தோன்றியது.. படிகளில் ஏறிக் கொண்டடிருந்தவளின் விழிகள் அவனைத் தேடித் துழாவுவதை கண்டவனின் மனம் சிறகடித்தது.. அவனுக்கான அவளது தேடலை அதிகப்படுத்திப் பார்த்து ரசிக்க விரும்பினான் முரளி...

மெதுவாக நகர்ந்து பால்கனியின் சுவர் மறைவில் நின்று கொண்டான்.. மாடியேறிய ராதிகா அவனைக் காணாமல் தேடியபடி நடந்து வந்தாள்.. அலைபாயும் அவள் பார்வையில் அவன் மனதில் அலையடித்தது...

இங்கும் அங்கும் பார்வையைச் சுழல விட்டபடி பால்கனியில் கால்வைத்தவளின் பின்னாலிருந்து அவன் கரம் வளைக்க.. அவள் விதிர்த்துத் திரும்பினாள்..

திரும்பிய வேகத்தில் அவன் கையைத் தள்ளி விட்டவள்.. எதிரே நின்றவனைக் கண்டதும் நிதானித்தாள்...

"நீங்களா..! நான் யாரோன்னு நினைச்சுட்டேன்..."

அவன் காதுகளில் தேன் பாய்ந்தது.. அவன் புருவங்களை கித்தாய்ப்பாய் உயர்த்தியபடி அவளைப் பார்த்துக் கண்சிமிட்டினான்...

"என்னை விட்டு வேற ஒருத்தன் உன்னைத் தொட்டிடுவானோ.. கையை வெட்டிற மாட்டேன்...?"

"போதும்... உங்க வீர பிரதாபத்தை அள்ளி வீச வேணாம்.. எதுக்கு வரச் சொன்னீங்க...?"

"வரச் சொன்னாத்தான் வருவியா...?"

அவன் பார்வை அவள் மேனியில் படிந்து பரவி மேய ஆரம்பிக்க.. அவள் கிளர்ச்சியுற்றவளாக முகம் சிவந்து உதடுகளைக் கடித்தாள்...

"ஹலோ பாஸ்.. இது உங்க பண்ணை வீடில்லை..."

"என் பண்ணை வீடா...?"

அவன் ஒருமாதிரியான குரலில் வினவ.. நாக்கைக் கடித்துக் கொண்டுடாள் ராதிகா..

"ஸாரி.. ஸாரி.. நம்ம பண்ணை வீடு.. போதுமா..."

"இன்னும் எத்தனை தடவைதான் ஸாரி கேட்ப..? அடிக்கடி இப்படிப் பேசி ஸாரி கேட்காதே.. எனக்குப் பிடிக்காது..."

"ஒகே.. ஒகே.. கூல்.. ப்ளீஸ்..."

"நான் கூல் ஆகனும்னா ஒரு கண்டிசன்..."

"என்ன..?"

"கிட்டே வா..."

அவன் விழிகளில் தெரிந்த தாகத்தில் அவள் பரபரபுடன் சுற்று முற்றும் பார்த்தாள்.. இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்த உறவினர் பட்டாளத்தின் பார்வையில் படாமல் மறைந்து நின்றவள்..

"ஸ்ஸ்.. யார் காதிலயாவது விழுந்து விடப் போகுது.." என்று எச்சரித்தாள்...

"விழுந்தால் என்ன...?"

"என்னவா..? அவங்க நம்மைப் பத்தி என்ன நினைச்சுக்குவாங்க..?"

"இதென்னடி வம்பாப் போச்சு.. என் பெண்டாட்டியை நான் கூப்பிடறேன்.. இதில் மத்தவங்க நினைக்க என்ன இருக்கு..?"

"இப்பத்தான் நிச்சயதார்த்தம் நடந்திருக்கு..."

"அப்படின்னு நீ சொல்றயா..?"

"மத்தவங்க சொல்லுவாங்கன்னு சொன்னேன்..."

"மத்தவங்ககிட்ட சொல்லேண்டி..."

"எதைச் சொல்லச் சொல்கிறிங்க...?"

"நாங்க ஏற்கனவே முதலிரவைக் கொண்டாடி முடிச்சிட்டோம்ன்னு சொல்ல வேண்டியது தானே..."

மீண்டும் முரளி கண்சிமிட்ட ராதிகா இமைக்காமல் அவனை முறைத்தாள்...

"போதும்டி..." அவன் சிரித்தான்...

"இந்தப் பெருமையை பேசாமல் இருக்கவே மாட்டிங்களா..?"

"உனக்கேண்டி இவ்வளவு கோபம் வருது...?"

"எதுக்குக் கூப்பிட்டிங்க.. அதை முதல்ல சொல்லுங்க..."

"முகூர்த்தப் பட்டு எடுக்கனுமாம்.. அதை நாளைக்கு எடுத்து முடிச்சிட்டா ஊருக்குக் கிளம்பிப் போய் கல்யாண வேலைகளை ஆரம்பிக்கலாம்ன்னு அம்மா சொன்னாங்க.."

"நாளைக்கேவா..?" ராதிகா தயங்கினாள்...

"நாளைக்கேதான்.. ஏன் இப்படிக் கேட்கிற..."

"நாளைக்கு எனக்கு எக்ஸாம் இருக்குங்க.. வேற ஒரு நாளில் புடவை எடுக்கப் போகலாமா..?"

ராதிகாவின் பதிலைக் கேட்டதுட்ம முரளியின் முகம் மாறிவிட்டது..

"விளையாடறியா... இது முகூர்த்தப் புடவைன்னு சொல்றேன்.. புரியாம பேசிக்கிட்டு இருக்கியே..."

அவன் குரலில் மித மிஞ்சிய கோபம் வெளிப்பட்டது...

முரளியின் கோபத்தைக் கண்டு ராதிகா பயந்து விட்டாள்.. அவள் என்ன சொல்லி விட்டாள் என்று அவன் இந்த அளவுக்கு கோபப்படுகிறான்... என்ற வருத்தம் அவள் மனதில் எழுந்தது...

மௌனமாக நின்றவளின் முகம் பார்த்தும் அவன் கோபம் தணியவில்லை...

"ஒன்னு.. தானாய் தெரியனும்.. இல்லைன்னா சொல்கிறவங்க பேச்சையாவது கேட்கனும்.. இங்கே ரெண்டுமில்லை... எதைச் சொன்னாலும் அதை எதிர்த்து ஒரு பேச்சு.. எப்படித்தான் இப்படி இருக்கியோ..."

அவன் அலுத்துக் கொண்டதில் ராதிகாவுக்கு ரோசம் வந்து விட்டது..

"இப்ப என்னத்தை தெரியாம பேசிட்டேனாம்..? இப்படிச் சொல்லிக் காட்டறிங்க..."

"இந்த ரோசத்துக்கொன்னும் குறைச்சலில்ல.. முகூர்த்தப் புடவை எடுக்கிறதுங்கிறது எங்க பக்கத்தில முக்கியமான சம்பிரதாயம்.. அதுக்கு குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் எல்லோரும் சேர்ந்து போவாங்க..."

"நீங்க வரமாட்டிங்களா..?"

கவலையுடன் ராதிகா கேட்க.. முரளியின் கோபம் பறந்து விட்டது..

'இவ என்ன இந்த அளவுக்கு என்னைத் தேடறா...'

அவனுக்கு மனதை என்னவோ செய்தது.. ஒரு காதலியிடம் தென்படும் அத்தனை தேடலும்.. அலைபாய்தலும் ராதிகாவின் விழிகளில் இருக்க.. அவன் கிளர்ச்சியுற்றான்...

"நானும் வருவேண்டி... நான் வராம இருப்பேனா..?"

"அப்போச் சரி..."

"அக்கா குடும்பமும் வரனும்.. அவங்க இதுக்காக ன்னொருதரம் அலைய முடியுமா..? கல்யாணத்துக்கு டே இருக்கிற நாள் ரொம்பக் குறைவா இருக்கு.. அவங்க கல்யாணத்துக்கு ஒருவாரம் முன்னாலேயே தேனூத்தில் வந்து இறங்கியாகனும்.. உன் குடும்பமும்.. என் குடும்பமும் சேர்ந்து எடுக்க வேண்டிய புடவை இது.. திதுக்காக இன்னொரு நாள் இரண்டு குடும்பமும் சேர்ந்து கூட முடியாது.. புரியுதா..."

இதில் இத்தனை இருக்கிறதா.. என்ற நினைவில் ராதிகா பிரமித்தாள்...

"புரியுது..." என்று தலையசைத்தாள்...

"அக்கா குடும்பம் நாளைக்கு நைட்டே திருநெல்வேலிக்கு கிளம்பறாங்க... அதுக்கு முன்னாலே நாம புடவை எடுத்து முடித்தாகனும்..."

"எனக்கு எக்ஸாம் இருக்கேங்க.. ஒன்னு செய்யுங்க..."

"என்னத்தை செய்யச் சொல்ற...?"

"நீங்களா புடவை எடுத்துக்கிட்டு வந்துருங்களேன்..."

"நீ இல்லாமலா..?"

"இப்ப நிச்சயத்துக்கு நான் இல்லாம புடவை எடுக்கியா..?"

"அதுவேற இது வேறடி..."

"என்னத்தை வேற வேறன்னு இழுக்கறிங்க.. ரெண்டும் ஒன்னுதானே..."

முரளி முகச்சுளிப்புடன் ராதிகாவை அதிருப்தியாகப் பார்த்தான்... அவனது பார்வை போன கோபம் திரும்பி விட்டதை உணர்ந்த ராதிகா கைகளைப் பிசைந்தாள்...

'திரும்பவும் மலையேறிட்டானே...'

"ராதிகா.. நீ இந்தக் கல்யாணத்துக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை கொடுக்கலையோன்னு நான் நினைக்கிறேன்..."

முரளியின் ஆழ்ந்த குரலில் குற்றச்சாட்டு வெளிப்பட்டது.. ராதிகா பதறிவிட்டாள்...

அவளா இந்தத் திருமணத்தை முக்கியமில்லாததாக நினைக்கறாள்..?

"என்ன வார்த்தை சொல்லிட்டிங்க..."

"ச்ச்ச.. இல்லேடி.. உனக்கு நான் உன் கழுத்தில் தாலி கட்டனும்.. அதனால் உன் குடும்ப கௌரவம்

நிலைக்கும்.. அவ்வளவுதான்.. அதை மட்டும்தான் நீ பார்க்கிற.. மத்தபடி கடமைக்காக வேற வழியில்லாம என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவதானே நீ..?"

'கடவுளே...!'

சொல்லடி பட்டதில் துடித்துப் போனவளாக இமை மூடி நின்றாள் ராதிகா.. அவள் இமை மறைவிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் உதிர்ந்து விழுந்தது.. அதைக் கண்ட முரளி அதட்டினான்...

"இப்ப எதுக்காக கண்ணீர் விடுறவ...?"

"நீங்க இப்படிப் பேசலாமா..?"

"உண்மையத்தானே சொன்னேன்.. உங்க வீட்டிலேயும்... எங்க வீட்டிலேயும் நினைச்சுக்கிட்டு இருக்கிறதைப் போல.. நாம ஒருத்தரையொருத்தர் காதலிச்சா கல்யாணம் பண்ணிக்கப் போகிறோம்..? நான் உன்னைக் காதலிக்கிறேன்தான்.. ஆனால் நீ...?"

முரளியின் வார்த்தைகள் உமிழ்ந்த வெறுப்பில்.. ராதிகா அமிழ்ந்து போனாள்...

இதுவிடமுடியாத புதைகுழி என்று அவளுக்குத் தோன்றியது.. இந்தக் குற்றச்சாட்டு கடைசிவரை அவளைத் தூரத்தப் போகிறது.. காலம் முழுவதும் அவளை அலைக்கழிக்கப் போகிறது.. அதையறிந்தும் அதைத் தடுக்க வழியறியாமல் அவள் திகைத்து நின்றாள்...

"நான் உன்னை பலவந்தப் படுத்திட்டேன்டி.. தொட்டுட்டேன்.. அதுக்காக மட்டுமே எனக்கு நீ கழுத்தை நீட்டப் போற.. மத்தபடி நம்ம கல்யாணத்தைப் பற்றி எந்தவித நினைப்பும் உனக்கில்லைல்ல..."

"முரளி ப்ளீஸ்.. இப்படிப் பேசிப் பேசியே என்னை ஒருவழி பண்றீங்க.. எனக்கு எக்ஸாம் இருக்குன்னு சொன்னேன்.. அது ஒரு குத்தமா..?"

"குத்தம்தான்.. நம்ம கல்யாணம் மட்டும்தான் என் மனசிலிருக்கு... உனக்கும் அப்படித்தான் இருக்கும்ன்னு நான் தப்புக்கணக்கு போட்டுட்டேன்..."

"ஒண்ணுனு பண்ணலாம்..."

"என்ன..?"

"எனக்கு காலையிலதான் எக்ஸாம்.. நாம மதியமா சேலை எடுக்கப் போகலாமா..?"

"ம்ம்ம்... நீ அப்படிச் சொல்கிறயா..? எங்க அக்கா வீட்டிலேயும் எல்லோரும் கிளம்பி வர நேரமாகும்.. எங்க வீட்டிலயும் சித்தி.. சித்தப்பா.. பெரியம்மா.. பெரியப்பான்னு கிளம்பறதுக்குள்ள மதியமாகிடும்... அப்படி ஆகலைன்னாலும் நான் நேரத்தைக் கடத்திடுறேன்.. ஆனா நீ சொன்னடி வந்துடனும்..."

"கட்டாயம் வந்துடுவேன்..."

"அப்பச்சரி.. நாளைக்கு உன்னைக் காலேஜிலேயே வந்து கூப்பிட்டுக்கறேன்.. அம்மாவும் உன் வீட்டிலே பேசிருவாங்க..."

"அம்மாப்பா.. கீதா எல்லோரையும் நேரே கடைக்கு வரச்சொல்லி விடுவீங்கதானே..."

ராதிகாவின் பேச்சில் முரளியின் முகம் லேசாகத் தெளிந்தது.. இன்னும் முழுமையாக தன் முகச்சுளிப்பிலிருந்து வெளியே வராதவனை ஏக்கத்துடன் பார்த்தாள் ராதிகா...

"என்னடி..." அவன் புருவங்கள் உயர்ந்தன...

"சிரிங்களேன்..." அவள் கெஞ்சுதலாகக் கேட்டாள்...

அவன் முகச் சுளிப்பு முற்றிலுமாக மறைந்தது... அவளை உல்லாசமாகப் பார்த்து மெதுவாகச் சிரித்தான்...

"ஹப்பா... இந்தச் சிரிப்பை கேட்டு வாங்க வேண்டியிருக்கு..." அவள் மனத்தாங்கலுடன் சொன்னாள்...

"எங்கே... நீதான் ஒருநிலையாய் நிற்க மாட்டேங்கறியே..."

மீண்டும் பேச்சு திசை மாற ராதிகா அரண்டு போனவளாக கையெடுத்து அவனைக் கும்பிட்டாள்...

"அப்பா.. சாமி... ஒருவழியாய் இப்பத்தான் மலையிறங்கியிருக்கீங்க... திரும்பவும் மலையேறிராதீங்க... தாங்காது..."

இப்போது அவன் மனம் விட்டு கடகடவென்று சிரித்தான்...

"நடிக்காதேடி... நீயாவது... என்கிட்டப் பயப்படறதாவது..." என்று சொன்னாலும்.. அவன் முகத்தில் காதலும்... கனிவும் மீண்டிருந்தது...

"முன்வரிசையில் உட்கார்ந்துக்கிட்டு என்ன பார்வை வேண்டிக்கிடக்கு..?"

அவனின் மனதை உணர்ந்தவளாக... காதலாகப் பேசினாள் ராதிகா.. அவள் எதிர்பார்த்தபடி அவன் கண்களின் உல்லாசம் அதிகமானது...

"அங்கே மட்டும் என்னவாம்..? நலங்கு வைக்கறவங்களை விட்டுட்டு என்னை எதுக்காகடி முழுங்கறவளைப் போலப் பார்த்த...?"

"ம்ம்.. சைட் அடிச்சேன்..."

"நிஜமாகவா...?"

"பின்னே.. பொய்யா...?"

"அதுசரி... உன் தங்கை என்னவோ உன் காதில் ரகசியம் பேசிக்கிட்டு இருந்தாளே.. என்ன சொன்னா..?"

"நீங்க எதுக்காக அவளைப் பார்த்தீங்க...?"

"இதென்னடி வம்பாப் போச்சு... உன்னைப் பார்த்தா.. அந்தப் பார்வை உன் பக்கத்தில நிற்கிறவங்க மேலேயும் விழாதா..?"

"விழும்.. விழும்.. இந்த ஆண்பிள்ளைப் புத்தி இருக்கே... அப்படியே அலைகிற புத்தி..."

"அப்படி எத்தனை பேர் பின்னாலேடி அலைஞ்சேன்..? தேனூத்துக்கு வந்து கேட்டுப் பாரு.. மத்தவங்கதான் என் பின்னாலே அலைஞ்சாங்க.. நான் ஒருத்தரைக் கூடத் திரும்பிப் பார்க்கலைன்னு ஊரே சாட்சி சொல்லும்..."

"உங்க சொந்த ஊரில உங்களுக்கு எதிரா எப்படிச் சொல்லுவாங்க...?"

"நாங்க உண்மை விளம்பிகடி.. நான் அலைஞ்சதெல்லாம் உன் ஒருத்தி பின்னாடி தான்..."

இந்த வார்த்தைகள் மயிலிறகாய் மனம் வருடிச் செல்ல.. ராதிகா சுற்று முற்றும் பார்த்துவிட்டு.. சுவர் மறைவில் முரளியை நெருங்கி நின்றாள்...

பூவாசத்துடன் கூடிய புதுமணப்பெண்ணின் வாசனையை நுகர்ந்தவன் கிறங்கிப் போனான்... என்ன நடக்கிறது என்று அவன் உணருமுன்னாலேயே அவன் கழுத்தை வளைத்து.. அவன் முகத்தை தன் முகத்தை நோக்கி இழுத்த ராதிகா.. அவன் உதடுகளில் அழுத்த முத்தமிட்டாள்...

"ஏய்ய்.. ராது..." அவன் சந்தோசத்தில் திக்கு முக்காடி விட்டான்...

அவன் கைகளுக்குள் அகப்படாமல் விலகி ஓடியவள்.. படிக்கட்டில் இறங்கியபடி அவனைத் திரும்பிப் பார்த்து சிரித்துவிட்டு மறைந்து விட்டாள்...

'ஓடிட்டாளே...'

அவன் விரைவாக வந்து மாடிப்படிகளை எட்டிப் பார்த்த போது.. அவள் மேகலாவின் அருகே பதவிசாக நின்று கொண்டிருந்தாள்...

"இவதான் என் மருமக..."

யாரோ ஒரு பெரியவரிடம் மேகலா அறிமுகப் படுத்தி வைக்க.. ராதிகா குனிந்து அந்தப் பெரியவரின் பாதம் பணிந்து எழுந்தாள்...

அதைப் பார்த்துக் கொண்டிருந்த முரளியின் மனதில் தென்றலடித்தது... சற்றுமுன் அவளது உதடுகள் தொட்ட உதடுகள் இனித்தன...

உன் இதழ்தொட்ட என் இதழில்...
தேன்துளிகளை யார் தடவியது...?

"ராதிகா..."

ஹேமா அழைத்தபடி அருகில் வந்து நின்றாள்.. ராஜேஸ்வரியின் சித்திமகள் என்று சொல்லப்பட்ட சித்தியிடம் மரியாதையின் நிமித்தம் பேசிக்கொண்டிருந்த ராதிகா பேச்சை நிறுத்திவிட்டு ஹேமாவைப் பார்த்தாள்...

"கிளம்பறேண்டி..."

"அதுக்குள்ளேயா..? இன்னும் கொஞ்ச சேரம் இரேண்டி..."

"இல்லை ராதிகா.. வீட்டுக்குப் போகனும்.. அம்மா போன் பண்ணிட்டாங்க..."

"அப்படியா... அப்போச்சரி... போயிட்டுவா..."

"நாளைக்கு காலேஜ் வரதானே...?"

"எக்ஸாம் இருக்கே.. வராம இருக்க முடியுமா..?"

அவர்கள் பேசியபடி வாசலுக்கு வந்தார்கள்.. படிக்கட்டில் இறங்கிய படி ராதிகாவுக்கு மட்டும் கேட்கும் படியான மெதுவான குரலில்...

"போன் பண்ணியது அம்மா இல்லை ராதிகா.. சங்கர்..." என்றாள் ஹேமா...

ராதிகாவின் முகம் மாறிவிட்டது.. சுற்றும் முற்றும் பார்த்தவள்...

"அதை எதுக்குடி என்னிடம் சொல்கிற..?" என்று கேட்டாள்...

"இப்படி ஏமாத்திட்டியேடி...," ஹேமாவின் குரலில் குற்றச்சாட்டு இருந்தது...

"உளராதே.. நான் யாரையும் ஏமாத்தலை..," ராதிகா படபடத்தாள்...

"உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லு.... நீ சங்கரை ஏமாத்தலையா...?"

"ஹேமா..."

"அவர் என்னடி தப்புப் பண்ணினாரு..? உன்னைப் பிடிச்சிருக்குன்னு உன்னிடம் காதல் சொன்னார்.. நீ அதுக்கும் பிகு பண்ணினப்போ வீடு தேடி வந்து பெண் கேட்டார்..."

"இப்ப எதுக்கு இந்தக் கதையையெல்லாம் சொல்கிற..?"

"மனசு கேட்கலை ராதிகா... அந்த சங்கர் பாவம்ன்னு ஒரு நொடிகூட நீ யோசிக்கலையா...?"

"பைத்தியமாடி நீ... இப்பத்தான் எனக்கு கல்யாண நிச்சயதார்த்தம் நடந்து முடிஞ்சிருக்கு.. இப்பப்போய் இப்படிவந்து பேசறியே.. நீ யோசிக்கவே மாட்டியா...?"

"யோசிச்சேன் ராதிகா.. எனக்குத் தெரியாம நீ எதையோ மறைக்கறியோன்னு யோசிச்சேன்.. இன்னைக்கு நிச்சயத்திற்கு நேற்று நைட்டுத்தான் எனக்குப் போனில் தகவல் சொன்ன... அது ஏன்னு யோசிச்சேன்.. உனக்கும் முரளிக்கும் காதல்ன்னு உன் வீட்டில் சொல்லியிருக்கீங்களே.. அதை இத்தனை நாளா ஏன் என்னிடம் சொல்லலைன்னு யோசிச்சேன்.. கொஞ்ச நாளாவே நீ... நீயாய் இல்லை.. அது எதனாலன்னு யோசிச்சேன்..."

"ஹேமா..."

"நீ காதலில் விழுந்தால் அதை உன் வீட்டில் சொல்லாமல் மறைக்க சான்ஸ் இருக்கு.. என்னிடம் ஏண்டி மறைக்கனும்...?"

"அது... அதுவந்து..."

"நீ சொன்னது பொய்... ஏதோ நடந்திருக்கு.. அதுதான் உன்னை இந்த நிச்சயதார்த்தம் வரைக்கும் கொண்டு வந்து விட்டிருக்கு..."

ராதிகா அசைவற்று நின்றுவிட.. ஹேமா.. விடுவிடுவெனப் போய்விட்டாள்... தெருமுனைக்கு வந்தவள் ஏதேனும் ஆட்டோ தென்படுகிறதா என்று பார்த்தாள்... ஒரு கார் வந்து அவளருகில் நின்றது.. கார் கதவு திறந்தது.. திரும்பிப் பார்த்த ஹேமா...

"சங்கர்... நீங்களா...?" என்று வியந்தாள்...

"வாங்க... காரில் போகலாம்.." சங்கர் பின்பக்க கார்கதவை திறந்து விட்டான்....

ஹேமா காரில் ஏறிக் கொண்டாள்.. கார் நகர்ந்தது... பனகல் பார்க் முன்னால் நின்ற காரிலிருந்து இறங்கிய இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளாமல் மௌனமாக நடந்தார்கள்.. அடர்ந்த மரங்களின் அடியிலிருந்த பெஞ்சில் அமர்ந்து எதிரே தெரிந்த செயற்கை நீருற்றை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த சங்கர் தலை கலைந்திருந்தான்.. கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன...

ஹேமாவின் மனதிற்குள் அவனைக்குறித்த இரக்கம் சுரந்தது...

'பாவம்...' அவள் மனம் பரிதாப்பட்டது...

"எவ்வளவு அழகாக இருக்கிறான்... கோடிக் கணக்கில் பணம் பண்ணுகிற பிஸினெஸ்மேன்... இவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள கொடுத்து வைத்திருக்க வேண்டும்.. இவனை விட்டு விட்டு பாலமுரளியை ஏன் ராதிகா தேர்வு செய்தாள்...?'

அவளுக்கு விளங்கவேயில்லை...

"ராதிகாவோட மேரேஜ் எங்கேஜ்மென்ட் நடந்து முடிந்திருச்சா..." சங்கர் மௌனத்தைக் கலைத்தான்...

"ம்ம்ம்..."

"எனக்குச் சொல்லலை..."

"எனக்கும் நேத்து நைட்தான் சொன்னா.."

"ஏன் ஹேமா..?"

சங்கரின் கேள்வி புரியாமல் திகைத்தாள் ஹேமா...

'ஏன்னு எதைக் கேட்கிறான்...?'

"ஏன் இந்த மேரேஜீக்கு ராதிகா ஒப்புக்கிட்டா ஹேமா..?"

"எனக்கே தெரியலை.. நானும் இதே கேள்வியைத்தான் அவளிடம் கேட்டுட்டு வந்திருக்கேன்.."

"அவ வீட்டில் கேட்டா லவ் மேரேஜ்ன்னு சொல்கிறாங்க... ராதிகா அந்த முரளியை லவ் பண்ணினாளா..?"

"என்னிடம் அப்படியெதும் சொன்னதேயில்லை..."

"என்னிடமும் சொல்லலையே... அப்படி அந்த முரளியை லவ் பண்ணியிருந்தா நான் ஐ லவ் யுன்னு அவளிடம் சொன்னபோதே அதைச் சொல்லியிருக்கலாமே.. ஏன் சொல்லலை...?"

"எனக்கும் அது புரியலை...."

"நான் அவளைப் பெண் கேட்டுப் போனபோதாவது அதைச் சொல்லியிருக்கலாமில்லையா..? அப்பவும் சொல்லலை... மறுநாள்... அடுத்தநாள்.. ஏன்.. இத்தனை நாள் இடைவெளியில ஏதாவது ஒருநாளில் என்னிடம் சொல்லியிருக்கலாமே... அவள் அதைச் சொல்லவே இல்லையே..."

"இருந்தால்தானே சொல்கிறதுக்கு..."

கைவிரல்களை கோர்த்துப் பிரித்தபடி சிந்தனையுடனிருந்த ஹேமா.. தன்னையுமறியாமல் சொல்லிவிட்டான்... சங்கரின் பார்வையில் எதுவோ தெரிந்தது... அவனது புருவங்கள் முடிச்சிட்டன...

"என்ன சொல்கிறிங்க...?"

"கொஞ்ச நாளாவே அவ சரியாய் இல்லை... காலேஜிக்கு மட்டம் போடாதவ வீட்டுக்குத் தெரியாம

காலேஜை கட்டடிச்சிட்டு அடிக்கடி வெளியே போனா.. அவ முகமே வாடியிருந்தது.. நானும் ஆனமட்டுக்கும் என்ன விசயம்ன்னு கேட்டுப் பார்த்துட்டேன்.. நான் ஒரு சிக்கலில் மாட்டியிருப்பது உண்மைதான்.. அதிலிருந்து விடுபட போராடிக்கிட்டு இருக்கேன்னு அவ சொன்னா..."

"வாட்..?"

சங்கரின் பார்வையில் அதிர்வு தெரிந்தது... அவன் இதை எதிர்பார்க்கவே இல்லை... எதனால் ராதிகா அவனைத் தட்டிக் கழித்து விட்டு பாலமுரளியை மணம் முடிக்கும் முடிவை எடுத்தாள் என்பதை புரிந்து கொள்ள முடியாமல் குழம்பி நின்றவனுக்கு ஒரு தெளிவு பிறந்ததைப் போல இருந்தது....

"யெஸ்..."

"அது என்னன்னு நீங்க கேட்கலியா..?"

"கேட்டேனே... எதுவும் இல்லைன்னு நான் சொல்ல மாட்டேன்... ஆனா அது என்னன்னு என்கிட்டக் கேட்காததே.. இதுவரைக்கும் நான் உன்னிடம் பொய் சொன்னதில்லைன்னு சொல்கிறவளை என்ன பண்ண முடியும்...?"

"ஓ.. காட்...! ராதிகாவை பாலமுரளி ஏதோ ஒருவகையில் பயமுறுத்தியிருக்கிறான்னு சொல்கிறிங்களா...."

"மே..பி.. இதுதான்னு உறுதியாய் என்னால சொல்ல முடியலை.. இதுவாகவும் இருக்கலாம்..."

"ஐ..ஸீ.. அதனால்தான் இந்த அவசர மேரேஜா..?"

"அப்படித்தான் தோணுது..."

"தேங்க்ஸ்.. ஹேமா..."

"எதுக்கு..?"

"இருட்டில் இருந்தேன்.. நீங்க ஒரு வெளிச்சப் புள்ளியைக் காண்பிச்சிட்டீங்க.. இது ஏன் எனக்குத் தோன்றாமல் போய்விட்டது...?"

அவர்கள் எழுந்து கொண்டார்கள்.. ஹேமாவின் வீட்டு வாசலில் அவளை இறக்கி விட்ட கார் நகர்ந்தது.. சங்கருக்கு கையாட்டி விட்டு ஹேமா வீட்டிற்குள் நுழைந்தாள்...

"யாருடி அது...?" அவளின் அம்மா கடுமை காட்டினாள்...

"ராதிகாவோட ரிலேடிவ்ம்மா.. அவதான் காரில் போடின்னு பத்திரமா அனுப்பி வைச்சா..."

ராதிகா பொய் சொல்லாதவள் என்றால் அவளது தோழியும் பொய் சொல்லக்கூடாது என்று சட்டமா என்ன..?

"அப்படியா..?" அம்மா அமைதியானாள்..

'பொய்மையும் வாய்மையிடத்துன்னு வள்ளுவர் இதைத்தான் சொல்லியிருப்பார் போல,' என்ற நினைவுடன் ஹேமா உடைமாற்றப் போனாள்...

காலையிலேயே முரளி போனடித்து விட்டான்...

"இன்னைக்கு முகூர்த்தப் பட்டு எடுக்கனும்.. நினைவிருக்கில்ல..?"

"மறக்குமா...?" என்று ராதிகா சொன்னபின்னால் தான் அமைதியானான்...

"எக்ஸாம் பனிரெண்டு மணிக்கெல்லாம் முடிஞ்சுரும்.. நீங்க ஷார்ப்பா பதினொன்று முப்பதுக்கு வந்துடுங்க..."

"ஏண்டி.. என்னைப் பார்த்தா வேலை வெட்டி இல்லாத வெறும்பயலைப் போலத் தெரியுதா..?"

"கடவுளே..! நான் அப்படிச் சொல்வேனா...?"

"அப்புறம் எதுக்காகடி பனிரெண்டு மணிக்கு முடிகிற பரிட்சைக்கு பதினொன்னு முப்பதுக்கே வந்து நிற்கச் சொல்கிற..?"

"எக்ஸாம்தான் பனிரெண்டுக்கு முடியும்ன்னு சொன்னேன்.. நான் பனிரெண்டு மணி வரைக்கும் எழுதிக்கிட்டு இருப்பேன்னு சொன்னேனா..?"

"பின்னே.. வெறும் பேப்பரைக் கொடுத்துட்டு வெளியே வந்துருவியா..? அதுக்கேண்டி பரிட்சை எழுதப் போகனும்...?"

"ஹலோ.. யாரைப் பார்த்து என்ன கேள்வி கேட்கறிங்க...?"

"அடங்குடி.. உன்னப் பார்த்துத்தான் கேட்டேன்.. அதுக்கு இப்ப என்னாங்கிற.."

"நானெல்லாம் ஒரு மணி நேரத்தில அத்தனை ஆன்ஸரையும் எழுதித் தள்ளி விடுகிற ஆளாக்கும்..."

"அடேங்கப்பா.. அப்ப பதினொரு மணிக்கே வந்து சேர வேண்டியதுதானே..?"

"எழுதினதை ஒருதடவை படிச்சுப் பார்க்க வேணாமா...?"

"உனக்கே அது சரியான பதிலாய் இருக்காதுங்கிற சந்தேகம் இருக்கப் போய்த்தானே திருப்பிப் படிச்சுப் பார்க்கிற..? அப்புறம் எதுக்குடி அநாவசியமாய் அலட்டிக்கிற...?"

"பாஸ்... பதினொன்னு முப்பதுக்கு நான் வந்து விடுவேன்.. நீங்க அந்த டயத்துக்கு வந்து என்னைப் பிக்அப் பண்ணிக்க முடியுமா.. முடியாதா...?"

"அரட்டலெல்லாம் பலமாய் இருக்கு.. என்னடி.. கழுத்தில் மூணுமுடிச்சு விழப் போகிற தைரியமா...?"

"ஆமாம் மச்சான்.. அதுக்கு இப்ப என்னங்கறிங்க..."

"ஏய்ய்..."

மறுமுனையில் அவன் கிளர்ந்து போவதை உணர்ந்தவளாய் சிரிப்புடன் போனை அணைத்தாள் ராதிகா.....

"காலையிலே போனில் கொஞ்சிக் குழாவியாகிறதா... கொஞ்சமாவது நம்ம தங்கையும் பக்கத்தில் நிற்கிறாளேங்கிற நினைப்பு உன் மனசில் இருக்கா...?" பொறாமையுடன் காய்ந்தாள் கீதா...

"உன்னையாருடி நான் போன் பேசறதை ஒட்டுக் கேட்கச் சொன்னது..?"

"எனக்கென்ன தலைவிதியா..? லேடி ஹிட்லர் காபி கொடுத்து விட்டாங்க.. கொடுக்க வந்தேன்.. இல்லைன்னா நான் எதுக்காக இந்தப் பக்கம் வர்றேன்...?"

"கோவிச்சுக்காதேடி செல்லம்.. சும்மா.. ஒரு உல்லுலாங்காட்டிக்குச் சொன்னேன்.. இதையெல்லாம் பெரிசாய் எடுத்துக்குவியா..."

ராதிகாவிடம் காபியை கொடுத்த கீதா.. அவளின் செல்போனை நோண்ட ஆரம்பித்தாள்...

"அதையேண்டி நோண்டற..."

"இல்ல.. நேத்து நைட் முழுவதும் உன் போர்வைக்குள்ள இருந்து முணுமுணுன்னு சத்தம் வந்ததே.. அப்படி எவ்வளவு நேரம்தான் ரெண்டு பேரும் கடலை வறுத்தீங்கன்னு பார்த்தேன்..."

"கடலை வறுத்தோமா.. அடிப்பாவி.. நாங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவங்கடி..."

"அதனால கடலை வறுக்கிறது உங்க ரெண்டு பேருடைய பிறப்புரிமைன்னு சொல்ல வர்றியா..."

"அடிதான் வாங்கப் போற..."

"ராதிகா..."

"ஊம்..."

"லேடி ஹிட்லர் உன்கூடப் பேசாம இருக்க ஆரம்பிச்சதில் இருந்து உனக்கு சேவகம் பண்ணியே ஒருவழியாய் ஆகிறேண்டி... இதுக்கு ஒரு முடிவே கிடையாதா.."

"இருக்கு..." ராதிகா ஆழ்ந்த குரலில் சொன்னாள்...

"என்ன இருக்கோ.. தெரியல போ..." ராதிகாவின் குரல் மாறுபாட்டை உணராமல் சொன்னாள் கீதா...

"இன்னும் கொஞ்ச நாளில நான் இந்த வீட்டை விட்டு ஒழிஞ்சு போயிடுவேன் கீதா... அதுக்கப்புறம் அம்மா நிம்மதியாய் இருப்பாங்க.. உனக்கும் எனக்கு சேவகம் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது..."

ராதிகாவின் கண்ணீர் குரலில் துணுக்குற்றாள் கீதா.. அவசரமாக சகோதரியின் முகத்தைப் பிடித்துத் தன் பக்கமாக திருப்பினாள்...

"ஏய்ய்.. ராது.. வாட் இஸ் ராங் வித் யு..."

"த்ச்சு..."

"லேடி ஹிட்லரின் கோமெல்லாம் சும்மா பாவ்லாடி.. மேடம் காலையிலே கோழி கூவுறதுக்கு முன்னாலேயே எழுந்துட்டாங்க.. இன்னைக்கு உனக்கு முகூர்த்தப்

பட்டுச்சேலை எடுக்கப் போகனுமில்ல.. அதுக்காக தயாராகிட்டு இருக்காங்க.. உன்னையும் உருப்படியாய டிரெஸ் பண்ணிக்கிட்டு காலேஜீக்கு போகச் சொன்னாங்க..."

"ம்ம்ம்..."

"அவங்க நம்ம அம்மாடி.. சங்கர் உன்னைக் காதலித்தாலும் முறைப்படி பெண் கேட்டு வந்தார்... உன் ஹீரோ அடாவடியாய் காதல்ன்னு சொல்லி உன்னை அவர்பின்னாலே வரவைக்கவான்னு அம்மாவை மிரட்டிட்டார்.. அம்மான்னா சும்மாவா..? அவங்களுக்கும் கோபம் இருக்குமில்ல..."

"பட்.. எனக்கு வேற வழியில்லடி..."

தந்நிலையைச் சொல்ல முடியாத பரிதவிப்புடன் தீனமான குரலில் சொன்னாள் ராதிகா...

"நீ காதலில் விழுந்துட்டன்னு சொல்லப் போற.. வேற என்ன.. உனக்கு வேற வழியில்லதான்.. ஆனா ராது.. லேடி ஹிட்லரின் கோபத்துக்கு பின்னாலே வேற ஒன்னும் இருக்கு..."

கீதா மர்மச் சிரிப்புடன் கண்சிமிட்ட.. அது என்னவாக இருக்கும் என்று புரிந்து கொள்ள முடியாமல் அவள் முகத்தைப் பார்த்து கைவிரித்தாள் ராதிகா...

70

என்னென்னவோ சொல்ல நினைத்தேன்..
உன்னைப் பார்த்ததும் மறந்துவிட்டேன்..

"அது வேற ஒன்னமில்லடி ராது.. உன்னைப் போலவே நானும் காதல்.. கீதல்ன்னு ஆரம்பிச்சு வச்சிருவேனோன்னு லேடி ஹிட்லர் மனசில ஒரு எண்ணம் ஓடிக்கிட்டு இருக்கு.. அதனால உன்மேல் கோபத்தைக் காட்டறதைப் போல எனக்கும் மறைமுகமாய் எச்சரிக்கை பண்ணிக்கிட்டு இருக்காங்க..."

'அவங்க மனசில மட்டுமா அந்த பயமிருக்கு.. என் மனசிலும் அதுதாண்டி இருக்கு...'

பெருமூச்சுடன் தங்கையைப் பார்த்தாள் ராதிகா...

"என்ன.. உன் மனசிலயும் அதேதானா..."

"எப்படிடி கண்டு பிடிச்ச...?"

"நீ என்ன நினைப்பன்னு எனக்குத் தெரியாதா..? என்னைப் பத்தி எல்லாம் தெரிஞ்சவ நீ ஒருத்திதான்.. இத்தனூண்டு தெரிஞ்ச லேடி ஹிட்லருக்கே பயம் வரும்போது... எல்லாம் தெரிஞ்ச உனக்கு அந்த பயம் வராமபோகுமா..."

"ஆனாலும்.. நீ புத்திசாலி.. கெட்டிக்காரத்தனமாய் இருப்ப.. எல்லோருமே முரளியைப் போல நல்லவங்களா இருக்க மாட்டாங்க.. இதெல்லாம் உனக்குத் தெரியாதா என்ன.. ?"

"இப்படிச் சொல்லி மனசைத் தேத்திக்கிற..."

"ஏண்டி இப்படி பயமுறுத்தற..."

"விடு.. விடு.. எனக்கு ஆயிரம் வேலையிருக்கு.. முதல் வேலையா பியூட்டி பார்லருக்குப் போயாகனும்..."

"எதுக்குடி..."

"முகூர்த்தச் சேலை எடுக்கப் போக வேணாமா.. ?"

"யாருக்கு... ?"

"உனக்குத்தான்.. பின்னே.. எனக்கா.. ?"

"தெரிஞ்சாச் சரிதான்.. கல்யாணப் பெண்ணே காலேஜீக்குப் போகப் போறேன்.. நீ பியூட்டி பார்லருக்குப் போறயா.. ?"

"எக்ஸாமில இருந்து தப்பிக்க லட்டு போல சான்ஸ் கிடைச்சிருக்கு.. அதைவிட்டுட்டு.. நீ எக்ஸாம் எழுதியே தீருவேன்னு அடம்பிடிக்கிற மண்டுவாய் இருக்க... உன்னைப் போல நானும் இருக்க முடியுமா.. ?"

"எப்படியோ செய்து தொலை..."

"உனக்குப் பொறாமையா ராது.. இல்லை பயமா... ?"

"எதுக்குடி..."

"இல்ல.. பியூட்டி பார்லருக்குப் போய் இருக்கிற பியூட்டியை அதிகப்படுத்திக்கிட்டு வந்தால் உன் ஆள் என்னிடம் மயங்கிப் போய் உன்னை மறந்து விடுவாருங்கிற பயமா... ?"

கீதா என்னவோ விளையாட்டாகத்தான் கேட்டாள்.. இதைப் போன்ற பேச்சுக்களை இதற்கு முன்னாலும் அவள் பேசியிருக்கிறாள்தான்... ஆனாலும் என்னவோ.. அன்று ராதிகாவிற்கு 'சுரீர்..' என்று மனதில் வலித்தது...

அவளது கைப்பொருளை யாரேனும் தட்டிப்பறிக்க முயன்றால் ஏற்படும் பதட்டம் அவளுக்குள் ஏற்பட்டது...

அந்தப் பதட்டத்தில் சட்டென்று கீதாவின் கன்னத்தில் அடித்து விட்டாள்...

"அடிப்பாவி..." அறை வாங்கிய கீதா வலிதாங்க முடியாமல் கன்னத்தை பிடித்துக் கொண்டாள்...

"ஸாரி.. ஸாரி.. தெரியாம... ஏதோ ஒரு வேகத்தில அடிச்சுட்டேண்டி.." ராதிகா கையைப் பிசைந்தாள்...

"நீ முரளியைக் காதலிக்கிறேன்னு தெரியும்.. இந்த அளவுக்கு காதலிக்கிறேன்னு இப்பத்தானே தெரியுது.. இனிமே உன் பக்கத்தில நின்னு பேசக்கூடாதுடி.. நாலடி தள்ளி நின்னுதான் பேசனும் போல..."

ராதிகா அடித்ததை பெரிது பண்ணாமல் கீதா சிரித்தபடி போய் விட்டாள்.. மனம் தாளாத ராதிகாதான் தலையைப் பிடித்தபடி அமர்ந்து விட்டாள்.. எதனாலோ

அவள் மனம் அமைதியின்றி தவித்தது.. அமைதியான மனக்குளத்தில் யாரோ கல்லெரிந்து விட்டதைப் போல மனதில் அலைகள் அடித்தன...

ஒருவழியாக குளித்துக் கிளம்பியவள்.. பாலமுரளிக்கு பிடித்த வண்ணத்தில் ஜரிகை வேலை பாடுகள் செய்த புடவையை உடுத்திக் கொண்டாள்.. அவன் வாங்கிக் கொடுத்திருந்த நகைகளை அணிந்து கொண்டாள்..

"வைரத்தோட எக்ஸாம் எழுதப் போறியா.. அசத்து.." கீதா கையாட்டி விடைகொடுத்தாள்...

"பத்திரம்..." கிருஷ்ணமூர்த்தி கவலைப்பட்டார்...

"அதெல்லாம் அவ பத்திரமாய் போய்க்குவாப்பா.. நீங்க உள்ளேவாங்க..." கீதா தகப்பனாரை இழுத்துக் கொண்டு வீட்டுக்குள் போனாள்..

ராதிகாவின் வகுப்புத் தோழிகள் அவளது திடீர் திருமணத்தைப் பற்றி விசாரித்தார்கள்.. சங்கருடனான திருமணம் ஏன் நின்று போனது என்று காரணம் கேட்டார்கள்... ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பதிலைச் சொல்லிச் சமாளித்தவள் அவசரமாக தேர்வை எழுதிவிட்டு வகுப்பறையை விட்டு வெளியே வந்தாள்...

'இன்னம் அவனைக் காணோமே...'

நகத்தைக் கடித்துத் துப்பியபடி பாதையோர மரத்தடியில் இருந்த சிமிண்ட்பெஞ்சில் அமர்ந்தாள்.. அவள் மனதில் அமைதியில்லை... ஏதோ நடக்கப்

போவதைப் போல மனம் தவிப்பது எதனால் என்று அவளுக்கு புரியவில்லை...

"ராதிகா.." என்ற குரலைக் கேட்டதும் பதறி எழுந்தாள்...

'இது சங்கரின் குரலாச்சே...'

அவள் பயந்ததைப் போலவே அங்கே சங்கர்தான் நின்று கொண்டிருந்தான்..

'இவன் எதுக்கு இங்கே வந்திருக்கான்...'

முரளி வந்து விடுவானோ என்ற பயத்துடன் ராதிகா பார்வையை சுழல விட்டாள்...

"என்ன பயம் ராதிகா..?" சங்கர் அவளருகில் வந்து நின்றான்...

"உங்களுக்கு என்ன வேணும்...?" ராதிகா படபடத்தாள்...

"வெயிட்.. வெயிட்.. ஏன் இப்படி பதட்டப்படறிங்க.. நான் உங்களைப் பார்க்க வந்ததை யாரும் பார்த்து விடுவாங்களோன்னு பயப்படறிங்களா..? அதனால் தான் நான் காலேஜீக்குள்ளேயே வந்து விட்டேன்..."

அவன் விளக்கம் சொல்லிய விதத்தில் அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

'இவன் எதுக்காக என்னைப் பார்க்க வந்தான்னு கேட்டா.. என்னென்னவோ பினாத்தறானே...'

"மத்த இடம்ன்னா மற்றவங்க பார்வையிலே பட்டு விடலாம்..."

'பட்டால்தான் என்ன...'

"இங்கேன்னா யாருக்கும் தெரியாது..."

'தெரியாம ஏன் இருக்கனும்..?'

"சொல்லுங்க ராதிகா..."

'எதைச் சொல்லச் சொல்ற...?'

"உங்களுக்கு என்ன பிரச்னைன்னு சொல்லுங்க..."

'நீதான் என்பிரச்னை...'

"நானிருக்கேன் உங்களுக்கு..."

'அடப்பாவி...'

"யாருக்கும் பயப்படாதீங்க..."

'உன் பேச்சைக் கேட்டுத்தான் பயப்பட்டுத் தொலைக்கிறேன்... அது தெரியுமா உனக்கு...'

"அந்த முரளி உங்களை என்ன சொல்லி மிரட்டினான் ராதிகா..?"

'அவன் என்ன வில்லனா..? என் ஹீரோ...'

"அவனால் என்ன செய்ய முடியும்..? எதுவாக இருந்தாலும் என்னிடம் சொல்லுங்க.. நான் உங்களைக் கைவிட மாட்டேன்..."

'உளராதே...'

"முரளியிடமிருந்து நான் உங்களைப் பாதுகாக்கிறேன் ராதிகா... என்கூட வந்து விடுங்க..."

அதுவரை மனதுக்குள் பொறுமிக் கொண்டிருந்த ராதிகா பொறுமை உடைந்தவளாக வெடித்தாள்...

"சங்கர்..."

"சொல்லுங்க ராதிகா.. முரளியால் உங்களுக்கு என்ன நடந்திருந்தாலும் நான் அதைப் பொருட்படுத்த மாட்டேன்.. அவன் செய்கிற பிளாக் மெயிலுக்காக பயப்பட்டு உங்க வாழ்வை பணயம் வைக்காதீங்க..."

"போதும் சங்கர்..."

"முதலிலேயே என்னிடம் சொல்லியிருக்கலாமே ராதிகா.. அந்த முரளி உங்களை மிரட்டுகிறான்னு சொல்லியிருந்தா நான் அவனைக் கவனிக்கிற விதத்தில் கவனிச்சிருப்பேன்..."

"சங்கர்.. எனக்கு மேரேஜ் எங்கேஜ்மென்ட் முடிஞ்சிருச்சு..."

"இன்னும் மேரேஜ் முடியலையே.. வந்து விடுங்க ராதிகா.. என்கூட வந்து விடுங்க.. நான் உங்களைக் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக்கிறேன்.."

"ப்ளீஸ் சங்கர்.. போய் விடுங்க..."

"ஏன் ராதிகா..? ஏன் நான் போகனும்..? அந்த முரளியைப் பற்றி நினைத்து பயப்பட வேணாம்ன்னு சொன்னேனா இல்லையா..?"

"தயவு செய்து என்நிலைமையை புரிஞ்சுக்கங்க சங்கர்.. எனக்கு மேரேஜ் நடக்கப் போகுது.. இப்பப் போய் இப்படியெல்லாம் பேசிக்கிட்டு வந்து நிற்கறிங்களே..."

"எனக்குத் தெரியாதே ராதிகா.. எதானால் நீங்க இந்த முடிவை எடுத்தீங்கன்னு எனக்குத் தெரியாதே.. ஹேமா சொல்லித்தானே எனக்கே எல்லா விவரமும் தெரிய வந்தது..."

"ஹேமாவா...?"

"ஹேமாதான்.. அவங்கதான் உங்க நிலையைச் சொன்னாங்க... அதைக் கேட்ட பின்னால்தான் உங்களைக் கையோடு என்கூட கூப்பிட்டுக்கொண்டு போகும் முடிவை நான் எடுத்தேன்..."

"அவ என்ன சொன்னா...?"

"நீங்க சொன்னதையெல்லாம் சொலிட்டாங்க.. இதை முன்னாலேயே செய்திருக்கலாமே ராதிகா.. இதை இவ்வளவு தூரம் வளர நான் விட்டிருக்க மாட்டேனே..."

"ஹேமாவை நீங்க எங்கே பார்த்தீங்க...?"

"நேற்றே பார்த்திட்டேன்.. அப்பவே உங்களை வீடு புகுந்து தூக்கிக் கொண்டு வந்து விடலாம் போல வேகம் வந்தது.. மற்றவங்க வீணாய் ஊடே வருவாங்க.. அதனால்தான் இங்கே வந்தேன்.. இப்பவும் ஒன்னும் கெட்டுப் போகலை.. இப்படியே என்கூட வந்து விடுங்க..."

"வந்து...?"

"நாம் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம்..."

சங்கர் சொல்லிக் கொண்டே போக.. ராதிகாவிற்கு பயத்தில் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது...

'முரளி வருகிற நேரமாச்சே...'

அவள் பயந்ததைப் போலவே தான் நடந்தது...

"குட் ஐடியா..."

யாருடனோ செல் போனில் பேசியபடி அங்கே பிரசன்னமானான் பாலமுரளி... சங்கர் அங்கே நிற்பதைக் கண்டதும் புருவங்களை உயர்த்தினான்...

"இவர் இங்கே என்ன செய்கிறார் ராதிகா..."

"அது.. அதுவந்து..."

பயத்தில் தடுமாறிய ராதிகாவின் பார்வையில் அவர்களையே முறைத்தபடி வந்து கொண்டிருந்த ஷோபா தென்பட்டாள்...

சட்டென்று அவளைக் கைகாட்டி விட்டாள் ராதிகா...

"அவளைப் பார்க்க வந்தாராம்..."

"ஓ... ஷோபாவைப் பார்க்க வந்தாரா..."

"ஆமாம்.. வாங்க.. நாம போகலாம்..."

"இரு... ஷோபா வந்ததும் அவளிடம் ஒரு வார்த்தை பேசிட்டுப் போயிடலாம்.. அதுதான் முறை..."

"எனக்குத் தலை வலிக்குது..."

"அப்படின்னாச் சரி.. வா.. போகலாம்..."

ராதிகா சங்கரைக் கவனிக்காமல் ஒட்டமும்.. நடையுமாக பாலமுரளியின் காரை நோக்கி விரைய.. அவள் பின்னால் போகாமல் நின்று சங்கரை முறைத்தான் முரளி...

"அவளிடம் உனக்கென்ன பேச்சு...?"

"அதைக் கேட்க நீ யார்..?"

"அவளோட வருங்காலக் கணவன்..."

"இப்ப அவளோட ஹஸ்பெண்டாய் நீ இல்லை.. நினைவில் வைத்துக்க.."

"என்ன சொல்கிற...?"

"மேரேஜ் முடிகிற வரைக்கும் எதுவும் நிச்சயமில்லை..."

"அவ என் பெண்டாட்டி..."

"இன்னும் ஆகலைன்னு சொன்னேனே..."

"அது உனக்கு.. எனக்கில்லை..."

"நீ அவளை மிரட்டிப் பணிய வைச்சிருக்க முரளி.. அவ பயத்தை உடைச்சு அவளை வெளியே கொண்டு வராம விடமாட்டேன்..."

"முடிஞ்சா அதைச் செய்..."

சவால்விட்ட முரளி கோபத்துடன் காரை நோக்கிப் போனான்.. காரில் ஏறி கதவை அவன் ஓங்கிச் சாத்திய வேகத்தில் கார் கதவு உடைபடாமல் அதிசயமாய் தப்பிப் பிழைத்தது...

வெறி பிடித்தவனைப் போல கண்கள் சிவந்திருந்த அவனது ரௌத்ரமான தோற்றத்தைக் கண்டு ராதிகா அரண்டு போனாள்.. பாலமுரளியின் முகத்தைப் பார்க்கவே அவளுக்குப் பயமாக இருந்தது...

காரை ஒடித்து திருப்பிய முரளி... கடற்கரைச் சாலையில் காரை விட்டான்... அது ஏனென்று புரியாமல் ராதிகா திகைத்தாள்..

'ஜவுளிக் கடைக்குப் போகாமல் இங்கே ஏன் வந்திருக்கான்...'

நண்பகலைத் தொட்டுக் கொண்டிருந்த அந்த நேரத்தில் கடற்கரையில் ஆள் நடமாட்டம் குறைவாக இருந்தது.. மரங்கள் அடர்ந்திருந்த கடலோரச் சாலையில்.. மூடியிருந்த கார் கதவின் ஜன்னல் வழியாக.. அலைகடலின் அலையடிக்கும் தோற்றம் தெரிந்தது... அந்த நீலக்கடலின் அலைகளால் ராதிகாவின் நெஞ்சினில் அமைதியைக் கொண்டு வர முடியவில்லை...

ஓரக் கண்ணால் முரளியைப் பார்த்தாள் ராதிகா...

அவன் மிகவும் ரௌத்திரத்துடன் இருந்தான்.. அன்று பண்ணைவீட்டில் அவளை ஆக்ரமித்தபோது

எப்படிப்பட்ட ஆவேசத்துடன் இருந்தானோ... அதைவிடப் பலமடங்கான ஆவேசத்தை அடக்கி வைத்துக் கொண்டிருப்பவனாக காட்சியளித்தான்.. காரின் ஸ்டிரியங்கைப் பிடித்திருந்த அவன் கை நரம்புகளின் இறுக்கத்தைக் கண்டவளுக்கு... அவன் கோபத்தைக் கட்டுக்குள் கொண்டு வரப் போராடிக் கொண்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது...

வேக மூச்சுக்களை எடுத்து தன்னைச் சமனப் படுத்திக் கொள்ள அவன் முயன்று கொண்டிருந்தான்.. அவனது சிவந்த விழிகளில் அளவுகடந்த ஆத்திரம் குடி கொண்டிருந்தது... அவன் முகத்தில் வழிந்த சினத்தைக் கண்ட ராதிகா மனதிற்குள் நடுங்கிக் கொண்டிருந்தாள்...

காலையிலிருந்து ஏன் அவள் மனம் அலைகடலாய் ஆர்ப்பரித்துத் தவித்தது என்று அந்த நொடியில் அவளுக்குப் புரிந்தது...

அவன் அவளுக்கு உயிருக்குயிரானவன்.. சில நாள்களாய் அவள் மனதை சிறகடிக்க வைத்துக் கொண்டிருக்கிறான்.. வெயிலாய் அவளைச் சுட்டவன்.. பனியாய் மாறி குளிர வைத்துக் கொண்டிருக்கிறான்...

அவன் கட்டும் தாலியை கழுத்தில் ஏற்றுக் கொள்ளப் போகும் நாள் வெகு அருகில் இருக்கும்போது.. அந்த இதம் மறைவது எதற்கான அறிகுறி..?

நீ கொல்வதில் எனக்குச் சம்மதம்தான்..
கொல்வது உன் கைகளாக இருப்பதினால்..

"இப்படிப்பட்ட ஒரு துரோகியை என் வாழ்நாளில் நான் சந்தித்ததே இல்லைடி... ச்சீ.. நீயும் ஒரு பெண்ணா..? உன்னைப் போய் காதலித்தேனே.. எனக்கே என்மேல் வெறுப்பாய் இருக்குடி..."

பாலமுரளியின் வார்த்தைகள் உமிழ்ந்த வெறுப்பில் ராதிகா விக்கித்துப் போய் விட்டாள்...

"முரளி..."

"ச்சீ... என் பெயரைச் சொல்லாதே.. உனக்கு அதற்கான அருகதை கிடையாது.. உன்னை எந்த அளவுக்கு என் மனசில கொண்டாடினேன்..? நீ இந்த அளவுக்கு இறங்கிப் போனவளா இருக்கியே..."

"முரளி..."

"என் பெயரைச் சொல்லாதேன்னு சொன்னேனில்ல.. தென்காசிப் பட்டினத்தில வந்து கேட்டுப்பாரு.. என் பெயரைச் சொல்ல.. வயசில் பெரிய மனுசங்களும்.. பணத்தில் பெரிய மனுசங்களும் கூடயோசிப்பாங்க.. நீ தைரியமாய் என் முகத்துக்கு நேரேயே பெயரைச்

சொல்லிக் கூப்பிடற.. இது யார் கொடுத்த தைரியம்..? உனக்கெப்படி இந்த உரிமை வந்துச்சு...?"

"ப்ளீஸ்... நான் சொல்கிறதைக் கேளுங்க..."

"இத்தனை நேரமும் நீ சொன்னதை அவன் கேட்டுக்கிட்டு இருந்தான்.. இப்போ.. நான் கேட்கனுமா..? நேரத்துக்கு ஒரு ஆளை மாற்றுவியா...?"

காதுகளில் தேன் பாய்வதைப் பற்றித்தான் பாரதியார் சொல்லிப் படித்திருக்கிறாள்.. அமிலத்தைக் காய்ச்சி காதில் ஊற்றுவதைப் பற்றி யார் சொல்லியும் அவள் படித்ததுமில்லை.. கேட்டதுமில்லையே...

அமிலம் பாய்ந்த காதுகளைப் பொத்திக்கொண்டு.. ரணமான மனத்துடன் அதன் வலி தாங்கமாமல் துடித்துப் போனாள் ராதிகா..

"கடவுளே..!"

அவளின் கதறல் அவன் மனதைத் தொடவில்லை.. மாறாக அவன் கோபத்தைத்தான் அதிகப் படுத்தியது...

"கடவுளை ஏண்டி கஷ்டப்படுத்தற...? உன்னை மாதிரி ஆளுக எல்லாம் கடவுள் பெயரைச் சொல்லலாமா..?"

"நான் என்ன செய்தேன்னு சொல்லுங்க... ஏன் இப்படிப் பேசி என்னை சித்திரவதை பண்றீங்க..."

"ஒ.. இது வேற பழியா..? போ... போய் இதையும் அவனிடம் சொல்லு... அதான் நேத்தே அவனுக்கு தூது சொல்லி விட்டிருக்க இல்ல.. அந்த ஹேமாவைக் கூப்பிட்டு தூது சொல்லி அனுப்பு..."

"நான் ஹேமாவிடம் எதுவும் சொல்லலை முரளி..."

"திரும்பவும் என் பெயரைச் சொன்னேன்னு வை.. அடித்துப் பல்லைக் கழட்டி விடுவேன்.. அதான் அவன் தெள்ளத் தெளிவா சொன்னானே.. ஹேமா சொல்லித்தான் அவன் வந்தான்னு பிட்டுப்பிட்டு வைச்சானே.. என்ன சொல்லி விட்ட..? அன்னைக்கு மகாபலிபுரத்துக்குப் போய் அவனிடம் என்ன சொல்ல நினைச்சியோ.. அதைச் சொல்லி விட்டயா...?"

"மு..." என்னு ஆரம்பித்தவள் அவன் பெயரைச் சொல்ல முடியாமல் வாய் பொத்தினாள்.. அவள் கண்களில் கண்ணீர் தளும்பியது...

"இல்லை.. அப்படியெல்லாம் நான் எதுவும் சொல்லி விடலை..." அவள் மன்றாடினாள்...

"நான் கேணயனில்லைடி..." அவன் நம்பத் தயாராக இல்லை...

"என் காதால் கேட்டேனே.. அவன் உன்னிடம் பேசின முத வார்த்தையில இருந்து.. கடைசி வார்த்தை வரைக்கும்.. அத்தனை வார்த்தைகளையும் அட்சர சுத்தமாய் கேட்டேனே..."

"அவர் புரியாம எதையோ பேசினா.. அதுக்கு நான் எப்படிப் பொறுப்பாவேன்...?"

"புரிஞ்சுதாண்டி பேசினான்.. புரியாம உன்னிடம் மயங்கிப்போய் கிடந்தவன் நான்தான்.. மச்சான்னு காலையிலே சொல்லித் தொலைச்சியேடி.. அதில மயங்கிப் போனவன்.. பதினொரு மணிக்கே வந்து தொலைச்சிட்டேண்டி.. எனக்குத் தெரியாம போச்சே..

அவனை வரச்சொல்லி... அவனிடம் பேசத்தான் பரிட்சை எழுதப் போவதா நீ நாடகம் போட்டேன்னு எனக்குத் தெரியாம போச்சே..."

"இல்லை..." ராதிகா அழுது விட்டாள்...

இப்படியெல்லாம் வினை வருமென்று அவள் நினைத்தா பார்த்தாள்..?

"நான் எக்ஸாம் எழுதத்தான் வந்தேன்.. நம்புங்க.."

"அப்பறம் எப்படி அவன் இங்கே வந்தான்...?"

"எனக்குத் தெரியாது..."

"என்னை நம்பச் சொல்கிறியா.. இன்னும் உன்னை நம்ப நான்ஒன்னும் முட்டாளில்லைடி... எனக்கு மயக்கம் தெளிஞ்சாச்சு..."

'என் மயக்கம் தெளியலையே...'

ராதிகா அவனை ஏக்கத்துடன் பார்த்தாள்...

ரௌத்திரத்தில் வெளிப்பட்ட அவனது ஆண்மை நிறைந்த கம்பீரத்தில் அவள் மனம் சிக்குண்டு தத்தளித்தது.. மிக அருகில் அமர்ந்திருந்தவனின் மனம்.. அவளால் தொட்டு விட முடியாத தொடு வானாக நெடுந் தொலைவில் விலகியிருப்பதை உணர்ந்தவளாக அவள் திகிலடைந்து போனாள்.. அவள் அவனின் தொடுகையை உணர்ந்தவள்.. இந்த நொடியில் அவன் மீதான அவளது தாபத்தில் அவன் விரல் தொட்டு விட மாட்டானா என்று அவள் ஏங்கினாள்..

அந்த ஏக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் அவன் தீயாக அவளை நாவால் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தான்...

"வந்து விடுன்னு சொன்னானே.. எப்படி? அவன்கூடப் போய் விடனும்னு உனக்கு உத்தேசமா..?"

"தயவு செய்து இப்படிப் பேசாதீங்க..."

"இதை அவனிடம் நீ சொல்லலையே.. ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம்ன்னு சொன்னானே.. அதுக்குப் பின்னாலே என்ன..? முதலிரவா..? அவன் கூடவும் முதலிரவைக் கொண்டாடுவியா..?"

"சீச்சீ..."

ராதிகா அருவெறுத்து அவனைப் பார்க்க... அவன் மனதில் தணல் கொஞ்சம் தணிந்தது.. அவளின் அந்த அருவெறுப்பில் அவன் அவளையே இமைக்காமல் பார்த்தான்...

"இப்போ இப்படிச் சொல்றவ.. அவனிடம் எதையும் சொல்லலையே... மறுத்துப் பேசாம நின்னயே... கல்யாணம்ன்னா அடுத்து என்ன நடக்கும்...? அதுதானே நடக்கும்...?"

"எனக்கு இந்தப் பேச்சு பிடிக்கலை..."

"உனக்கு என்னைக் கூடத்தான் பிடிக்கலை.. அதனால விட்டுத் தொலைச்சுட்டுப் போக என்னால முடிஞ்சதா..? சொல்லியிருக்க வேண்டியது தானே.. நமக்குள்ளே என்ன நடந்ததுன்னு அவனிடம் சொல்லியிருக்க வேண்டியதுதானே.. ஒருவேளை இதைத்தான் ஹேமாவிடம் நீ சொல்லி அனுப்பினயோ.."

"இது நமக்குள்ளே நடந்த ரகசியம்..."

"இப்படிச் சொன்னதை நானும் நம்பினேண்டி.. உன் வீட்டுக்கும் என் வீட்டுக்கும் நமக்குள்ள காதல்

இருக்குன்னு சொல்லி வைச்சேன்.. கடைசிவரை அந்த ரகசியம் நம்மோடயே இருக்கும்ன்னு நினைச்சேன்.. அந்தரங்கத்தை நீ அம்பலப் படுத்திட்டியேடி..."

"நான் யாரிடமும் சொல்லலை..."

"ஹேமாவிடம் சொல்லியிருக்க... அவ சங்கரிடம் சொல்லியிருக்கா..."

"இல்லவே இல்லை..."

"இதை நான் நம்ப மாட்டேன்.. உனக்கு எது நடந்திருந்தாலும் நான் பொருட்படுத்த மாட்டேன்னு அவன் எதுக்காக சொன்னான்..?"

"எதுக்காக இதை அவர் சொன்னாருன்னு எனக்குத் தெரியாது.. ஆனா இதுதான்னு எதையும் அவர் நிச்சயமாய் சொல்லலையே.. நீங்க சொல்கிறதைப் போல ஹேமாவிடம் நான் உண்மையை சொல்லியிருந்தா.. அதைச் சொல்லித்தானே அவர் பேசியிருப்பார்...?"

ராதிகாவின் கேள்வியில் பாலமுரளி நிதானித்தான்.. ஆனாலும் அவனது முகச்சுளிப்பு மறையவேயில்லை...

"எதுவோ நடந்திருக்குன்னு யூகிச்சிருக்கானே.. அது எதனால்..? ஹேமா சொன்னான்னு சொன்னானே.. அவ எதைச் சொன்னா..? நீ அவளிடம் எதைச் சொல்லிவிட்ட..?"

"ஐயோ.. நான் அப்படி எதையும் அவளிடம் சொல்லி விடவே இல்லையே.. உங்களுக்கு நம்பிக்கை இல்லைன்னா இப்பவே வாங்க.. அவ காலேஜில்தான் இருப்பா.. உங்க முன்னாலேயே அவளைக் கேள்வி கேட்கிறேன்..."

"என்ன கேட்ப...?"

"அவளிடம் நான் என்னத்தைச் சொன்னேன்னு கேட்பேன்..."

"அவ அதை என் முன்னாலே சொல்லிட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்பா.. போடி.. போ.. என்னிடமே ஆட்டம் காட்டறியா..?"

"நீங்க வேணும்னா மறைஞ்சு நில்லுங்க..."

ராதிகா தன்னை நிருபிக்கும் வேகத்தில் சொல்ல.. பாலமுரளியின் விழிகளில் நெருப்புப் பொறி பறந்தது.. அவன் பல்லைக் கடித்தான்..

"உன்னைப் போய் காதலிச்சுத் தொலைச்சதினாலே.. மறைஞ்சு நின்னு ஒட்டுக் கேட்கிறதையே நான் என் பிழைப்பாய் வைச்சுக்கலுமா..?"

"நான் அப்படிச் சொல்லலை..."

"இப்பத்தாண்டி.. நீயும் அவனும் நெகிழ்ந்து உருகிப் பேசறதை மறைஞ்சு நின்னு கேட்டேன்... அதுக்கே எனக்கு 'ச்சீ'ன்னு ஆகிப் போச்சு.. என் லெவலுக்கு இதெல்லாம் எனக்குத் தேவையா..?"

ராதிகா என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்து விழித்தாள்...

அதைப் பார்த்தவனின் புருவ முடிச்சு இன்னும் இறுகியது...

"இப்படித்தானேடி அவனையும் பார்த்த..?" என்று அவன் கேட்டு வைத்தான்...

பேசாமல் கடலில் போய் விழுந்து விடலாமா என்று ராதிகாவிற்கு தோன்றிவிட்டது... அவனது பேச்சைத் தாங்க மாட்டாமல் அவள் நொந்து நூலாகிக் கொண்டிருந்தாள்.. அவன் அதை உணர்ந்து கொண்டவனாகவே தெரியவில்லை... விடாமல் அவளை என்னைச் சட்டியில் போட்டு வறுத்துக் கொண்டே இருந்தான்...

"சங்கர்... சங்கர்ன்னு மட்டும் சொல்லிவைக்கிற.. அவன் பெயரைத் தாண்டி வேற பேச்சே வரமாட்டேங்குது.. இஞ்சி இடுப்பழகனைப் பார்த்தா வாயில காத்துத்தான் வரும்.. வார்த்தை வராதுன்னு கேள்விப் பட்டிருக்கேன்.. இந்த இஞ்சி இடுப்பழகனைப் பார்த்த உனக்கு பெயர் மட்டும்தான் வாயில வரும் போல இருக்கு.. அதென்னடி அவனைப் பார்த்தாலம் சங்கர்.. சங்கர்ன்னு பினாத்தற.. அதே வாயாலே என்னையும் பார்த்து.. முரளி.. முரளின்னு பினாத்தறே.. எப்படிடீ.."

அவனுடைய பெயரை அவள் உச்சரித்ததும் ஏன் அவன் கோபம் கொண்டான் என்று இப்போது அவளுக்குப் புரிந்தது...

"சரியான ஆளுடி நீ.. ஒரு நிமிசத்தில ஆள் மாற்றி மாற்றிப் பேசற.. இப்படி நடிக்க எங்க கத்துக்கிட்டடீ..."

'இதுக்குன்னு ஒரு டியுசன் சென்டர் ஆரம்பிச்சிருக்காங்கடா..'

அவள் நெந்து போனவளாக தலையைப் பிடித்துக் கொண்டாள்.. இனி அவள் என்ன சொன்னாலும் அவன் காதுகளில் ஏறப்போவதில்லை என்று மிகத் தெளிவாக அவளுக்குப் புரிந்து விட்டது...

"ஒன்னைப் புரிஞ்சுக்க..."

'நீ முதலில் என்னைப் புரிஞ்சுக்கடா..'

"நம்ம கல்யாணம் முடிவாகிருச்சு.."

'அப்பாடி.. கல்யாணத்தை நிறுத்த மாட்டான்...'

"இது ஒரு வழிப்பாதைப் பயணம்.. இதில நீ நடந்துதான் ஆகனும்..."

'மாட்டேன்னு யாரு சொன்னா...?'

"இனி நீ திரும்ப நினைச்சாலும் திரும்ப முடியாது.. நான் திரும்பவிட மாட்டேன்..."

'மகராஜனாய் இருப்பேடா.. இப்படியே என்னைப் பாதுகாத்துக்க.. உன் காலடியிலேயே காலம் முழுவதும் நான் கிடப்பேன்..'

"உனக்கு இஷ்டப்பட்ட பாதைன்னு நீ வழி மாறமுடியாது.."

'நீ கல்லையும்.. முள்ளையும்.. கண்ணாடிச் சில்லையும் கூடக் கொட்டிவை.. சந்தோசமாய் நான் நடக்கிறேன்.. எனக்கு உன்னோடு வாழ்கிற ஓர்வழிப் பாதைதான் வேணும்.. வேற பாதை எனக்கு எதற்கு...? இதுதாண்டா நான் இஷ்டப்பட்ட பாதை...'

"அவன் கூப்பிட்டான்னு நீ எதையாவது பண்ண நினைச்ச.. உன்னைக் கொலை பண்ணக்கூட நான் தயங்க மாட்டேன்..."

அந்த நொடியில் அவன் மீது அவளுக்குள் பீறிட்டு எழுந்த காதல் உணர்வை என்றேனும் ஒர்நாளில் அவன் உணர்ந்து கொள்வானா என்று அவள் மனம் தவித்தது...

அவன் உணர்ந்தாலும்.. உணராவிட்டாலும்.. அவளுக்கு அவன்போதும்.. அவன் வெறுத்தாலும்.. விரும்பினாலும்.. அவளுக்கு அவன் நிழல் போதும்.. அவன்

கொன்றாலும்.. வாழ்ந்தாலும்.. அவளுக்கு அவன் காலடி போதும்...

அவள் பார்வையில் அதை உணர்த்த முயன்றவளைப் பார்த்தவனின் முகம் கடுமையானது.. அவன் விழிகள் வெறுப்பைக் கக்கின..

"இப்படிப் பார்த்தே என்னை மயக்கிரலாமுன்னு திட்டம் போடாதே.. அன்னைக்கு உன்னைத் தொட்டதோடு விட்டிருக்கனும்.. தாலியை மட்டும் கட்டிட்டு ஒதுங்கிப் போய்விடனும்னு நினைச்சவனை இந்தப் பார்வை பார்த்துத்தானே திரும்பவும் ஒரு தடவை தொடவைச்சே.. இனி அது நடக்காதுடி.. நான் தொட்ட உன்னை வேறொருத்தன் கல்யாணம் கட்டக் கூடாது.. அதுக்காக மட்டும்தான் உன்கழுத்தில் நான் தாலி கட்டப் போறேன்.. மத்தபடி.. உனக்கும்.. எனக்குமிடையே இனிமே ஒன்னுமேயில்லடி..."

கடலில் ஓர் பேரலை தோன்றி எழுந்து வந்து ஆவேசமாக கரையில் விழுந்து மீண்டது.. காதில் விழுந்த வார்த்தைகளை நம்ப முடியாதவளாக பேரதிர்வுடன் ராதிகா உறைந்து போனாள்...

-- இரண்டாம் பாகம் முடிந்தது --

முத்துலட்சுமி ராகவன்

அம்மம்மா கேளடி தோழி...

பாகம் - 3

அம்மம்மா கேளடி தோழி... பாகம் - 3 ★ முத்துலட்சுமி ராகவன் ★ அம்மம்மா கேளடி தோழி... பாகம் - 3 ★ முத்துலட்சுமி ராகவன்

தாம்பரத்தைச் சேர்ந்த இனிய மகேஸ்வரியும்...
'அமைதிச்சிகரம் அனுராதா' வும்தான் அந்த அபூர்வ தோழிகள்...!

"லட்சுமி...! நேற்றைக்கு யு.எஸ்.ஏவில இருந்தேன்... இன்னைக்கு உங்க புக்கை ரொம்ப மிஸ் பண்றேன்..." என்று இறக்கை கட்டிக் கொண்டு உலகம் சுற்றும் மற்றுமொரு தோழி 'ரமா சீனிவாசன்...' இவரும் எனக்கு ரசிகையாக அறிமுகமாகி சிநேகிதயாக உருமாறியவர்தான்...

இக்கட்டான நேரங்களில் என் மன நெருக்கடிகளை இவரிடம் நான் பகிர்ந்து கொள்வதுண்டு.. என் சந்தோசத்தில் சிரிப்பார்... வருத்தத்தில் துயரம் கொள்வார்...

சொல்லியிருப்பது சிலரை... சொல்லாமல் விட்டது பலரை... எல்லோரையும் பற்றி எழுதுவதாக இருந்தால்.. அதற்கு ஆயிரம் பாகம் வேண்டும்...

மொத்தத்தில் இந்த உலகம் பரந்து விரிந்து நட்புடன் இரு கை கொண்டு என்னை ரசிகையென்ற பெயருடன் அரவணைத்துக் கொள்கிறது...

– நட்புடன் –

முத்துலட்சுமி ராகவன்

அனுப்ப: muthulakshmiraghavan24@gmail.com

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

"அம்மம்மா... கேளடி தோழி..!"

பாகம் – III

நீயா.. இதைச் சொன்னது...?
என் உயிரைக் கொன்று தின்றது..?

ராதிகாவிடம் ஷோபா ஒரு சவாலை விட்டாள்...

'உன் கழுத்தில் முரளி தாலியைக் கட்டுவான்... ஆனால் அதற்குப்பின்னால் வாழும் வாழ்க்கையை உன்னுடன் வாழ மாட்டான்...' என்று...

அதை அவள் சொன்ன போது... 'போடி...' என்ற எகத்தாளம்தான் ராதிகாவின் மனதில் தோன்றியது...

இவளுக்கு என்ன தெரியும்..? திருமணத்திற்கு பின்னால் தொட வேண்டிய தொடுகையை... திருமணத்திற்கு முன்னாலேயே முரளி தொட்டு விட்டானே என்ற நிச்சய உணர்வில் அவள் ஷோபாவின் வார்த்தைகளை அலட்சியம் செய்தாள்...

'பார்க்கலாமா..?' என்ற அவளின் அறை கூவலுக்கு...

'பார்க்கலாம்...' என்று தன்னம்பிக்கையுடன் பதில் சொன்னாள்...

இன்று அந்த தன்னம்பிக்கையின் ஆணிவேர் ஆட்டம் கண்டு விட்டது... அவளுடன் வாழ வேண்டியவனே.. அந்த வாழ்வைத் தரமுடியாது என்று அறிவித்து விட்டான்...

"நினைப்பில் வைச்சுக்கடி... நீ என் அம்மாவுக்கு மருமகளாய் என் வீட்டில் வாழலாம்... எனக்குப் பெண்டாட்டியாய் வாழ முடியாது..."

அவளது உயிர் குடிக்கும் வார்த்தைகளை மீண்டும் சொன்னான் பாலமுரளி...

ஏன் என்று அவனது சட்டையைப் பிடித்து உலுக்கும் ஆவேசம் அவளுக்குள் கனன்று எழுந்த போதும்... அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு கடலை வெறித்தாள் ராதிகா...

இப்போது அவள் பேசக்கூடாது... இது அவள் பேசுவதற்கான நேரமில்லை... காலமும்.. கடவுளும் அவளைச் சோதித்துக் கொண்டிருக்கும் போது அவள் யாரிடம் கேள்வி கேட்க முடியும்...?

"ஆண்டவனும் கோவிலில்..
தூங்கி விடும் போது..
யாரிடத்தில் கேள்வி கேட்பது..?"

அவளது மனதை உணர்ந்து கொண்டதைப் போல அருகில் நின்று கொண்டிருந்த தள்ளு வண்டியிலிருந்து எப்.எம். ரேடியோ பாடியது...

ராதிகாவின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் துளிகள் அவளது கன்னத்தில் கோடாக இறங்கி.. அவள் புடவையில் தெறித்து விழுந்து சிதறின...

அவளது துயரத்தைக் கண்டும்.. முரளியின் மனம் இளகவில்லை... அவன் முகம் கல்லைப்போல கடினமாக மாறியிருந்தது...

'ஏன்.. என்னைக் கைவிட்டாய் கடவுளே...!' ராதிகா மனதிற்குள் மறுகினாள்...

"ஏழைகளின் ஆசையும்...
கோவில் மணியோசையும்...
வேறுபட்டால் என்ன செய்வது..?
தர்மமே.. மாறுபட்டால்
எங்கு செல்வது..?"

ராதிகா பாடலில் குமுறி அழுதாள்... போக இடமில்லாமல்... சொல்லி அழ ஆளில்லாமல்... சாய்ந்து கொள்ளத் தோளில்லாமல்... தனிமைப் பட்டுப் போனவளாக அழுதாள்..

அனைத்தையும் கொடுக்க வேண்டியவன் அருகிலிருந்தும் அநாதையாகிப் போய்விட்ட அவலத்தை நினைத்து அழுதாள்...

அவன் கட்டப் போகும் தாலிக்கயிறு... அவளை அவளது பிறந்த வீட்டிலிருந்து பிரிக்கப் போகிறது.. அவனுடன் வாழ வேண்டிய வாழ்க்கை... அவளை அவள் பழகிய தோழிகளிடமிருந்து பிரிக்கப் போகிறது.. அவனின் தவறான புரிந்து கொள்ளுதல்.. அவளை அவனிடமிருந்தே பிரிக்கப் போகிறது...

கண்முன்னே காத்து நிற்கும் வாழ்க்கை உணர்த்திய தனிமையைக் கண்டு மனம் பதறிப் போனவளாக அவள் அழுதாள்...

பார்த்துப் பார்த்துப் பழகியும்.. அவளது பழக்க வழக்கத்தில் பழி வந்து சேர்ந்து விட்டதை நினைத்து நினைத்து அழுதாள்...

ஒருவனையே நினைத்து.. அந்த ஒருவனுடன் மட்டுமே கலந்து.. அந்த ஒருவனையே கைபிடித்து வாழும் பாக்கியம் கிடைக்கப் பெற்றாலும்.. அவளின் அந்த ஒருவன்.. அவள் மனதில் வேறொருவன் இருப்பதாக நினைத்து விட்ட கொடுமையில் அவள் நிலை தடுமாறி அழுதாள்....

காத்திருக்கும் வாழ்க்கை அவளுக்கு அளிக்கப் போவது எதை...? சொர்க்கமா.. இல்லை நரகமா..? என்ற நடுக்கத்தில் அவள் அழுதாள்...

"காற்றினிலே.. பெருங்காற்றினிலே...
ஏற்றிவைத்த தீபத்திலும்
இருளிக்கும்...

காலமென்னும் கடலினில்
சொர்க்கமோ... நரகமோ...
அக்கரையோ... இக்கரையோ..."

பாடல் பிழிந்தெடுத்து வடித்த சோகத்தில் அவள் நனைந்தவளாக மனம் விட்டு அழுதாள்...

"நீ அழுது தீர்த்துடுவடி... நான் என்ன செய்ய முடியும் சொல்லு..." அவன் மனம் குமுறினான்...

"நானுண்டு.. என் வேலையுண்டுன்னு இருந்தேண்டி.. என்னைக்கு உன்னைப் பார்த்தேனோ... அன்னைக்கு நிம்மதியைத் தொலைச்சவன்தாண்டி... இன்னும் அதை மீட்டு எடுக்க முடியாம தவிச்சுக்கிட்டு இருக்கேன்..."

"முரளி.. நான் சொல்வதைக் கொஞ்சமாவது காது கொடுத்துக் கேளுங்க..."

"வேணாம்... என் பெயரைச் சொல்லாதே... நீ சொன்னதைக் கேட்டுக் கேட்டு பித்துப் பிடிச்சு நின்னதெல்லாம் போதும்... ஒரு நிமிசம் சிரிக்க வைச்சு... மறு நிமிசமே சாகடிக்கிறயேடி... பாவி... படுபாவி... நான் உனக்கு என்னடி கெடுதல் பண்ணினேன்..? காலையில என்னிடம் போனில மச்சான்ங்கறே... மயங்கி ஒடி வந்தா... அவனிடம் சங்கர்ங்கிற... போதும்டி... எனக்கு வெறுத்துப் போச்சு..."

"கண்ணால் கண்டதும் பொய்... காதல் கேட்பதும் பொய்ன்னு நீங்க கேள்விப் பட்டதே இல்லையா...?"

"இதைச் சொல்லியே இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் ஏமாத்துவீங்க...? ஏண்டி... கண்ணாலே காண்கிறது எல்லாமே... பொய்யாய் போய் விடுமா...? காதால் கேட்கிற எல்லாமே உண்மையில்லைன்னு ஆகி விடுமா...? உன்னைக் கண்ட நாள் முதல்... இந்த நாள் வரைக்கும்... அவன் உன்னிடம் பேசின எல்லாமே வில்லங்கமாத்தானேடி இருக்கு...?"

"நான் பேசலையே..."

"ஏன் பேசலை...? ஷோபா ரிகார்டு பண்ணி அனுப்பின உன் பேச்சு... இன்னும் என்கையில்தான் இருக்கு... மறந்து போக வேணாம்..."

'அவன் மறக்க மாட்டான்...'

ஷோபாவின் நிச்சயமான பேச்சு ராதிகாவின் காதுகளில் ஒலித்தது...

எவ்வளவு தெளிவாக கணித்திருக்கிறாள்..! எவ்வளவு நிச்சயமாக அதைச் சொன்னாள்... அவள் சொன்னது பலிக்கிறதே...

இந்த உலகத்தில் கெட்டவர்கள் நினைப்பது நடப்பதும்... அவர்கள் மட்டுமே ஜெயிப்பதும் எப்படி சாத்தியமாகிறது...?

சாகஸக்காரர்கள் மட்டுமே ஜெயிக்க முடியுமென்றால் மற்ற அப்பாவிகள் இந்த உலகத்தில் எப்படி வாழ்வது...?

ஷோபா சொன்ன சொல் பலிக்கிறது... ராதிகா சொன்னசொல் பொய்க்கிறது என்றால்... நல்லவர்களின் சொல்லுக்கு சக்தியே இல்லையா...?

நிலைமாறும் நெஞ்சம் கொண்டவள் சொன்ன சொல் ராதிகாவைப் பாதிக்கலாம்... அவள் வாழ்வு முழுவதும் துரத்தலாம்... அவள் மட்டும் நிம்மதியாக வாழ்வாள் என்றால்... இதுதான் இந்த வாழ்க்கை வருக்கும் நியதியா...?

'கடவுளே...! நீ வெறும் கல்லா...? இரக்கம் என்பதே உனக்கில்லையா...?' ராதிகா மனம் மருகினாள்...

'என்ன தவறு செய்தேனென்று என்னை இப்படி தொடர்ச்சியாக வதைக்கிறாய்..? மனமார நான் சிரித்தால் உனக்கு அது பொறுக்காதா...? என் சிரிப்பு நிலைத்திருக்க நீ வரம் கொடுக்க மாட்டாயா..? பொய்யான பேச்சு... பொய்யான சிரிப்பு... பொய்யான வாழ்வு என்ற மற்றவர்கள் முன்னால் நடிக்க வைத்து விட்டாயே... பொய்யே பிடிக்காதவளை பொய் கோட்டையின் மீது நிற்க வைத்து விட்டாயே இது முறையா...?'

அழுது... அழுது ஓய்ந்து... கண்ணீர் கடல் வற்றியவளாக நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள் ராதிகா...

கலங்கிச் சிவந்திருந்த அவள் முகத்தை உணர்வுகள் துடைத்த முகத்துடன் ஒட்டாத பார்வை பார்த்து வைத்தான் முரளி...

"அழுது முடிச்சாச்சா... இன்னும் பாக்கியிருக்கா..?"

குத்தலாகக் கேட்டான்.. அவள் பதில் சொல்லாமல் மௌனித்தாள்... என்னவென்று சொல்வது...? அவளது கண்ணீரை மதிக்காதவன் முன்னால் கண்ணீர் விட்டதே பெருந்தவறு... இதில் ரோசப்பட்டு ஆகப் போவது என்ன..?

"பாக்கியிருந்தா இப்பவே அழுது தீர்த்துக்க... கடையில் போய் மத்தவங்க சந்தேகப்படற மாதிரி கண்கலங்கி வைக்காதே... என் அக்காவுக்கு உன்னைக் கண்டாலே ஆகாது... கல்யாணத்தை நிப்பாட்ட எதுடா சாக்குன்னு தேடிக்கிட்டு இருக்கு... நீ அழுது வைச்சா... காதல் கல்யாணத்தில பொண்ணு கண்ணில் தண்ணி எப்படி வரும்ன்னு கேள்வியைக் கிளப்பிரும்..."

"ம்ம்ம்..." ராதிகா அவசரமாக முகத்தை துடைத்துக் கொண்டாள்...

"அப்படியே உன் ஹேண்ட் பேகில் பவுடர் கிவுடர் இருந்தா எடுத்து முகத்தில் பூசிக்க... அவன் பார்க்க வர்றப்போ பளிச்சன்னு இருக்கனும் கிறதுக்காக உன் ஹேண்ட் பேக்கில் கட்டாயம் பவுடரை பதுக்கி வைச்சிருப்ப... அவன் கண்ணுக்கு மட்டும் பளிச்சுன்னு இருந்தாப் பத்தாது... என் வீட்டு ஆளுக கண்ணுக்கும் பளிச்சன்னு இருக்கனும்... அழுது வடிகிற மூஞ்சியை இளிச்சாவாயன் நான் சகிச்சுக்குவேன்... என் வீட்டாளுக சகிச்சுக்க மாட்டாங்க... உடனே வேற பெண்ணைத் தேட ஆரம்பிச்சுடுவாங்க..."

ராதிகா தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ளும் மார்க்கம் தேடியவளாக கடலை வெறித்தாள்... பரந்து விரிந்திருந்த கடலில் ஏதும் மார்க்கம் தென்படவில்லை...

"உனக்கு அதுகூட வசதிதான்... ஓடிப் போய் காத்திருக்கிற சங்கர் தியாகியின் கையைப் பிடிச்ச கண்ணில் ஒற்றிக்கலாம்... உன் அம்மாவுக்கு அவனைத் தானே மாப்பிள்ளைன்னு கொண்டாடப் பிடிக்கும்... நான் மாப்பிள்ளையாய் வந்து நின்னவுடன் உன்னுடன் பேசவே பேசாத புண்ணியவதியாச்சே உன் அம்மா... நீ சங்கரைக் கட்டிக்கிட்டா... தாயும் மகளும் ஒன்னாய் சேர்ந்துக்கலாம்.."

ராதிகா உதடுகளைக் கடித்த வேகத்தில் பல் பதிந்து காயமானது...

"அதையெல்லாம் நடத்திப் புடலாம்கிற கணவை விட்டுட்டு ஒழுங்கா... மரியாதையாய்... சிரிச்ச முகமாய் வந்து சேரு... அதை விட்டுட்டு முகத்தை தூக்கி வைச்சுக்கிட்டுத்தான் இருப்பேன்னு அடம் பிடிச்ச... மகளே... பேசாம இந்தக் கடலில் உன்னைத் தள்ளி விட்டுட்டுத்தான் வேற ஜோலியைப் பார்ப்பேன்..."

'முதலில் அதைச் செய்... உனக்கு கோடி புண்ணியமாகப் போகும்...'

சொல்ல நினைத்ததை தொண்டைக் குழிக்குள்ளேயே புதைத்து விட்டு ராதிகா ஊமையாகி விட.. பாலமுரளி கோபம் தணியாதவனாக காரைக் கிளப்பினான்...

வழி நெடுக அவளைத் திட்டித் தீர்த்துக் கொண்டே காரை ஓட்டினான்... ஒவ்வொரு சிக்னலிலும் திட்டல் வலுத்தது.. ஒருவழியாக ஜவுளிக்கடையை அடைந்த போது ராதிகாவிற்கு 'அப்பாடா...' என்றிருந்தது...

அந்த விடுதலை உணர்வை உணர்ந்தவளுக்கு மனதிற்குள் திடுக்கிடல் ஏற்பட்டது...

'இது சரியில்லையே...'

அவனிடமிருந்து அவள் தப்பிக்க முனைகிறாளா..?

தன்னைக் கண்டே பயந்து போனவளாக அவள் காத்திருந்த உறவினர் கூட்டத்தில் கலந்து கொண்டாள்...

இதை எடுங்க... அதை எடுங்க... இது வேணாம் ஜரிகைக் கரை குறைவாயிருக்கு... இது ஜரிகைக்கரை அதிகமாய் உடம்பு பூராவும் படர்ந்திருக்கு... இது லைட்கலர் வேண்டாம்... இது டார்க் கலர் வேண்டாம்... இந்தப் புடவை லேசாயிருக்கு வேண்டாம்.. இந்தப் புடவை கனமாயிருக்கு வேண்டாம்...

பெண்மணிகளின் புடவைப் புரட்டலில் கடைச் சிப்பந்திகள் கதிகலங்கிப் போனார்கள்... ஏறக்குறைய கடையிலிருந்த அத்தனை புடவைகளை இறக்கிப் போட்டும் அவர்களை திருப்தி பண்ண முடியவில்லை...

ராஜேஸ்வரிக்கு பிடித்த புடவை.. பாலசரஸ்வதிக்கு பிடிக்காமல் போனது... அவள் தேர்ந்தெடுப்பதை ராஜேஸ்வரி ஒதுக்கித் தள்ளினாள்... இந்தப்

போட்டா போட்டியில் கலந்து கொள்ளாமல் விலகி நின்ற ராதிகாவின் பார்வை... ஏக்கத்துடன் முரளியைத் தேடித்தேடி... அவன்மீது படிந்து விலகிக் கொண்டிருந்தது...

"இவங்க இன்னைக்குள்ள முகூர்த்தப்பட்டை எடுக்க மாட்டாங்க போலடி..."

ராதிகாவின் காதைக் கடித்தாள் கீதா...

ஒருவழியாய் ராஜேஸ்வரியும்... பாலசரஸ்வதியும் ஒரு சேலையை அரை மனதாக தேர்ந்தெடுத்து முடித்தார்கள்...

உனக்குப் பிடித்திருக்கிறதா என்று ஒப்புக்குக்கூட ராதிகாவை அவர்கள் கேட்கவில்லை... இதற்கு எதற்காக... அடித்துப் பிடித்துக் கொண்டு அவள் வர வேண்டும் என்று கீதா கேட்ட போது... அதற்கான பதில்... ராதிகாவிடம் இல்லை...

அவர்கள் தேர்ந்தெடுத்த சேலைகளை யாருக்கு வந்த விருந்தோ என்ற ரீதியில் சொந்தமில்லாமல் பார்த்தபடி பணத்தைக் கொடுத்து முடித்தான் முரளி...

"அப்ப.. நாங்க கிளம்பறோம் சம்பந்தியம்மா..." மேகலா அப்போதே விடைபெற்றுக் கொண்டாள்...

ராதிகாவின் குடும்பத்தை வீட்டில் விடும் பொறுப்பில் காரை ஓட்டிக் கொண்டு வந்தான் பாலமுரளி...

காரை விட்டு இறங்கியவர்கள் வீட்டுக்குள் சென்றுவிட... தேங்கி நின்ற ராதிகாவை தன் சிவந்த விழிகளால் உறுத்துப் பார்த்தான்....

"கிளம்பறேண்டி... நான் இல்லைங்கிற தைரியத்தில அவனைத் தேடிப் போனன்னு வையீயி... உன்னை வெட்டிப் போட்டிருவேன்.. எனக்குத் தெரியாதுன்னு நினைச்சிராதே... உன்னைக் கண்கானிக்க ஆள் ஏற்பாடு பண்ணிட்டுத்தான் போறேன்..."

"தேவையே இல்லை... நான் வீட்டை விட்டு வெளியேற மாட்டேன்..."

"அவன் வீட்டுக்கே வந்தா...?"

ராதிகா அவனது கேள்வியில் அதிர்ந்து நோக்க... அவன் தோள்களைக் குலுக்கினான்...

"காலேஜிக்கே உன்னைத் தேடி வந்தவன் வீட்டுக்கு வராம இருப்பானா..? உன் வீட்டுக்குத்தான் நான் காட்டான்... அவன் ஜென்டில் மேனாச்சே... உன் அம்மா என்னை வான்னு கூட கேட்க மாட்டாங்க... அவனைக் கண்டா பறந்தடிச்சக்கிட்டு காபியோட ஓடிவந்து உபசரிப்பாங்களே..."

"நடக்காததைப் பற்றி எதுக்குப் பேசனும்...?"

"நடக்கக் கூடாது... அவன் வீட்டுக்கே வந்தாலும்... நீ உன் ரூமை விட்டு வெளியே வரக்கூடாது..."

"சரி..."

"கல்யாணம் முடிகிற வரைக்கும் காலேஜைப் பத்தின நினைப்பே உனக்கு வரக் கூடாது..."

"ம்ம்ம்..."

"மீறி ஏதாவது ஒரு பேச்சு என் காதுக்கு வந்தது... நான் மனுசனா இருக்க மாட்டேன்..."

"வராது..."

"நல்லது... நான் கிளம்பறேன்.."

"ம்ம்ம்..."

அவளைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் அவன் காரில் ஏறிப் பறந்து விட்டான்... தொலை தூரத்தில் புள்ளியாக கார் மறையும் வரை அசையாமல் நின்று பார்த்துக் கொண்டேயிருந்தாள் ராதிகா...

அன்றொரு நாள் அவளைத் தொட்டு குரையாடி விட்டு... அவளை இதே போலத்தான் அநாதையாக தெரு முனையில் இறக்கி விட்டுச் சென்றான்...

இன்று அவளைத் தொட்டுத் தாலிகட்டப் போகிறான்.. அந்த நினைவு கொஞ்சம் கூட இல்லாமல் யாரோ ஒரு முன்றாம் மனிதனை போல அவளை அநாதையாக அவள் வீட்டு வாசலில் இறக்கி விட்டுப் போகிறான்...

அன்றைய நாளுக்கும்... இன்றைய நாளுக்கு- டையே பெரிதாக வித்தியாசம் எதுவுமில்லை என்று ாதிகாவுக்குத் தோன்றியது...

களைத்துப் போன மனதுடன்... அவள் வீட்டுப் டியில் காலடி எடுத்து வைத்தாள்...

பார்த்த விழி பார்த்திருந்தேன்...
பாவை மனம் புரியவில்லை...

"வாராயென் தோழி வாராயோ...
மணப்பந்தல் காண வாராயோ..."

திருமண மண்டபத்தில் ஒலித்துக் கொண்டிருந்த பாடலைக் கேட்டபடி காரை விட்டு இறங்கி தென்காசிப் பட்டினத்தின் தரையில் கால் பதித்தாள் ராதிகா...

கண்சிமிட்டும் வர்ணப் பூக்களாக... கண்சிமிட்டிக் கொண்டிருந்தன மண்டபத்தைச் சுற்றி வளைக்கப் பட்டிருந்த சீரியல் விளக்குகள்...

பிரம்மாண்டமான அந்த மண்டபத்தின் முன்புறத்தில் வரிசைவரிசையாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த கார்களின் அணிவகுப்பு... பால முரளியின் பணக்கார பெருமையை பறைசாற்றியது...

அதே நேரத்தில்... மணமகள் திருமண மண்டபத்தில் கால் பதித்த அந்தத் தருணத்தில் ஒலிபரப்பியில் ஒலித்த பழைய பாடல் அந்த மக்களின் கிராமிய கலாச்சாரத்தை அறிவுறுத்துவதாக இருந்தது...

நாதஸ்வர ஓசையுடன்... மண்டபத்திலிருந்து வெளிப்பட்ட மாப்பிள்ளை வீட்டார்... பெண் வீட்டாரை சம்பிரதாயப்படி வரவேற்றுவிட்டு... ராதிகாவிற்கு ஆரத்தி எடுத்து மண்டபத்திற்குள் அழைத்துச் சென்றார்கள்..."

பளிங்குக் கற்களால் இழைக்கப்பட்டிருந்த திருமண மண்பத்தின் உட்புறத்தைப் பார்த்ததும் கீதா பிரமித்துப் போய்விட்டாள்...

"வாவ்.. நம்ம ஏரியா அளவுக்கு பெரிசா இருக்குடி ராது... நீ கொடுத்து வைத்தவ... போ..."

இதைக் கேட்ட அந்தக் கொடுத்து வைத்தவளோ... இதயத்திலிருந்து வெளிப்பட்ட பெருமூச்சை அடக்கிக் கொண்டாள்...

'மண்டபம் பெரிசா இருந்து என்ன பண்ண..? நாளைக்கு காலையில் எனக்குத் தாலிகட்டப் போகிறவனின் மனசில எனக்குன்னு துளியளவாவது இடமிருக்குமா...?'

அங்கும் இங்கும் நடமாடிக் கொண்டிருந்த பெரிய வீட்டுப் பெண்மணிகளின் வைர ஒளிர்வைக் கவனித்த ராஜேஸ்வரியின் முகத்தில்கூட ஒளிர்வு வந்தது...

'பரவாயில்ல... மாப்பிள்ளையும்... மாப்பிள்ளையோட அக்காவும் திமிர் பிடிச்சவங்களா இருந்தாலும்... சங்கரை விட பணக்காரங்களாத்தான் இருக்காங்க...'

பணமிருந்தால் போதுமா..? குணமிருக்
வேண்டாமா..? என்ற சிந்தனைக்கே அவ
போகவில்லை...

பாலமுரளி குணக்குன்று என்று அவளுக்கு
மிக நன்றாகவே தெரியும்.. பாலசரஸ்வதியும் கூ
வலியத்தான் திமிர் பிடித்தவளின் முகமூடியை மாட்டி
கொண்டிருக்கிறாள் என்பது அவளின் கணிப்பு...

'அந்தம்மா மேகலா... அப்படியே கருணைக் கட
இருக்காங்க... கொஞ்சம்கூட பணக்காரத்தனமில்லை.
ஒரு தலைக் கனமில்லை... சங்கரின் அம்மாவைப் போ
ரப்பு இல்லை... ராங்கி இல்லை... திமிர் இல்லை... தென
வெட்டு இல்லை... அவங்க வயித்திலே பிறந்
பிள்ளைகளுக்கு மட்டும் அதெல்லாம் வந்துருமா.. என்ன
அவங்க அப்படியா பிள்ளைகளை வளர்த்திருப்பாங்க...?

ராஜேஸ்வரியின் சிந்தனை இப்படித்தான் போனது

"அம்மா.. நமக்குன்னு மண்டபத்தில் நாலு ரூ
ஒதுக்கியிருக்காங்களாம்... நம்ம சொந்தக்காரங்களுக்
ஹோட்டலில் ரூம் புக் பண்ணியிருக்காங்களாம்
போகவர நாலு காரையும் கொடுத்திருங்காங்க..."

கீதா தகவல் ஒலிபரப்பினாள்...

ராஜேஸ்வரிக்கு மாப்பிள்ளை வீட்டாரின் அதீத
கவனிப்பு மனதிற்கு இதத்தைக் கொடுத்தது... ஆனாலு
அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இறுக்கமா
முகத்தை வைத்தபடி...

"ஒஹோ..." என்று மட்டும் சொன்னாள்...

"அடேங்கப்பா... ராஜி... உன் பொண்ணுக்கு பணக்கார இடத்திலே மாப்பிள்ளை கிடைச்சிருக்குன்னு சொன்னாங்க... இவ்வளவு பெரிய பணக்காரங்கன்னு யாரும் சொல்லவே இல்லையே.. இங்கே வந்து பார்த்த பின்னாலேதானே தெரியுது... உன் பெரியப்பா மகளுக்கும் ஒரு சம்பந்தம் அமைஞ்சது... நம்மள விட கொஞ்சம் வசதி கூடுதல்... அவ அதுக்கே என்னமாய் அலட்டினா தெரியுமா..? நீ இவ்வளவு பெரிய இடத்திலே பெண்ணைக் கொடுக்கப் போகிற... ஒரு வார்த்தை கூட இதைப்பற்றி பெருமையாய் பேசலயே..."

ராஜேஸ்வரியின் உறவுக்காரப் பெண்மணி ஒருத்தி நேரம் காலம் தெரியாமல் ராஜேஸ்வரியைப் புகழ்ந்து வைக்க... கிருஷ்ணமூர்த்தி...

'கேட்டுக்கிட்டியா...' என்ற ஒரு பார்வையை மனைவியின் மீது வீசி வைத்தார்...

கணவரின் முன்னிலையில் தந்நிலையை விட்டுக் கொடுக்க முடியாத சூழலில் மாட்டிக் கொண்ட ராஜேஸ்வரி... உறவுக்காரப் பெண்மணியின் புகழ்ச்சியை காதில் வாங்கிக் கொள்ளாததைப் போல முகத்தை வைத்துக் கொண்டு...

"சரிசரி.. நம்ம பக்கத்து ஆளுகளுக்கெல்லாம் ஹோட்டலில் ரூம் போட்டிருக்காங்களாம்.. போய் குளிச்சு.. டிரெஸ் பண்ணிக்கிட்டு வாங்க... நைட்டு சாப்பிட்ட பின்னாலே தூங்கப் போயிக்கலாம்..." என்றாள்...

"அதுவும் சரிதான்..."

அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது காபியும்... டிபனும் அவர்கள் இருந்த இடத்திற்கே தேடிவந்தது... அதைக் கொண்டு வந்த பணியாள்களின் கவனிப்பில்... கொதித்துக் கொண்டிருந்த ராஜேஸ்வரி குளிர்ந்து விட்டாள்...

"இது என்ன ர்ராஜி... இங்கே பொண்ணு வீட்டுக்காரங்க நாமளா... இல்ல.. அவங்களா...? இப்படி விழுந்து.. விழுந்து கவனிக்கிறாங்க...! என் பொண்ணு கல்யாணத்தில் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க.. உங்களுக் கெல்லாம் ஒரு கணக்கான்னு முகத்தை வைச்சுக்கிட்டு கண்டுக்கவே இல்லை தெரியுமா... ஒப்புக்கு வாங்கண்ணு சொல்கிறதைப் போல தலையை அசைச்சுட்டு... அதுவே அதிகம்ன்னு சொல்கிறதைப் போல முகத்தை வைச்சுக்கிட்டு போனவங்கதான்.. நாங்களா டைனிங் ஹாலுக்குப் போய் கேட்டு வாங்கிச் சாப்பிட்டுக்கிட்டோம்.. இங்கே கதையே வேறயா இருக்கே ராஜி..."

'வயிறெரியாதேடி...'

வெளிப்படையாகச் சொல்ல முடியாமல்... லேசாக சிரித்து வைத்தாள் ராஜேஸ்வரி...

அதற்குள் கிருஷ்ணமூர்த்தியின் ஒன்று விட்ட தம்பி... அடுத்த பிரமிப்பை வெளிப் படுத்தினார்...

"மனுசங்கன்னா.. இவங்கதான் மனுசங்க அண்ணா..."

"அதைச் சொல்லு..."

"துரும்பைக் கிள்ளிப் போட்டு அதை மாப்பிள்ளைன்னு சொன்னாலும்.. அது உடனே அவ்வளவு கெத்து காட்டுமாம்..."

"என்ன சொன்ன... என்ன சொன்ன..? திருப்பிச் சொல்லு..."

சங்கரின் பெற்றோர் காட்டிய அலட்சியத்தைச் சுட்டிக் காட்டிய ராதிகாவிடம் ராஜேஸ்வரி சொன்ன வார்த்தைகள் இவை... அதை நினைவு கூர்ந்தவராக மனைவியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தபடி... ஒன்று விட்ட தம்பியை உலுக்கப் படுத்தினார் கிருஷ்ணமூர்த்தி...

ராஜேஸ்வரிக்கா கணவரின் யுத்தி தெரியாது..? அவள் வெட்டும் பார்வையை கணவரின் மீது வீசியபடி...

"போதும்.. போதும்... விடிஞ்சா மகளுக்குக் கல்யாணம்.. அதை நினைப்பில வைச்சுக்கிட்டா தேவலாம்..." என்றாள்...

"ஏண்டி... இதை நீ சொல்லித்தான் நான் தெரிஞ்சுக்கனுமா..? கிருஷ்ணமூர்த்தி பதிலுக்கு கேட்டார்..."

"எங்கே...? அந்த நினைப்பைத்தவிர.. வேற ஆயிரம் நினைப்புத்தானே உங்க மனசில் ஓடுது..." ராஜேஸ்வரிக்கு முகவாயை இடிக்க தோள்பட்டை வசதியாக இருந்தது...

"என்னண்ணா.. அண்ணி இப்படிச் சொல்கிறாங்க..."

"இவருக்கென்னப்பா.. வந்த இடத்திலும் இ
சாம்ராஜ்யம்தான் நிமிர்ந்து நிற்கணும்ன்னு நினைப்பு..."

எரிச்சலுடன் கிருஷ்ணமூர்த்தி தன்னையறியாமல்
சொல்லிவிட.. அதற்கும் ஒரு அனல்பார்வை வீசி
ராஜேஸ்வரியிடமிருந்து வெளிப்பட்டு பறந்து வந்து
அவரைத் தாக்கியது...

அதற்குள்... காபி டிபனை உறவினர் கூட்டம் ஒருவ
பார்த்து முடித்து விட... அவர்களை ஹோட்டல்
அறைகளுக்கு அழைத்துச் சென்று தங்க வைக்கும்
பொறுப்பு... சுந்தரின் தலைமேல் சுமத்தப்பட்டது...

"இன்னைக்காவது என்னை நம்மதியா
இருக்கவிடறிங்களா...?" அவன் பங்குக்கு அவள்
சண்டைக்கு வந்தான்...

"ஏண்டா..?" கிருஷ்ணமூர்த்திக்கு மகனின் கோப
புரியவில்லை...

"இங்கே வந்தும் எனக்கு வேலை
கொடுத்தாகனுமா...?" சுந்தர் நியாயம் கேட்டான்...

"நீதானேடா.. உன் அக்காக்களுக்கு கூடப்
பிறந்தவன்..." கிருஷ்ணமூர்த்தி மகனுக்கு சமாதானம்
சொன்னார்...

"அப்ப... குட்டிப் பிசாசு கல்யாணத்திலயும் எனக்கு
இதே பிழைப்புத்தான்னு சொல்லுங்க..." அவன்
வருங்காலத்தை நினைத்து பெருமூச்சு விட்டான்...

"போதும்டா... பெரிசா பீலிம் காண்பிக்காதே...
அவனவன் கூடப்பிறந்த அக்கா.. தங்கைக்காக..
பாசமலர் வளர்க்கிறானுக... மலர்களைப் போல் தங்கை
உறங்குகிறாளன்னு பாட்டெல்லாம் பாடறாங்க... நீ
என்னவோ இந்த வேலைக்கு இப்படிச் சலிச்சுக்கறியே..."
கீதா உதட்டைச் சுழித்து தம்பிக்கு அழகு காட்டினாள்...

"ஹலோ... அது தங்கையைப் பார்த்து அண்ணன்
பாடின பாட்டு... உன்னைப் போல குட்டிப் பிசாசைப் பார்த்து
தம்பி பாடின பாட்டு இல்லை... நீ படுத்தற பாட்டுக்கு...
பாசப்பயிரையா வளர்க்க முடியும்...? பெரிசா கனவு
காணாதே..." சுந்தர் அலட்சியமாகத் தோளைக்
குலுக்கினான்...

அது எப்படி... கிருஷ்ணமூர்த்திக்கு மகனாகப்
பிறந்துவிட்டு.. அவர் வீட்டுப் பெண்பிள்ளைகளின் வாயை
அடைப்பதைப் போல சாமர்த்தியமாக சுந்தருக்குப் பேச
வருகிறது என்று அவருக்கு பிரமிப்பாக இருந்தது...

தமக்கைகளுக்கு சரிக்கு சரியான சவாலை விடும்
சிங்கக் குட்டியைப் பெற்று விட்ட பூரிப்பு அவர் முகத்தில்
நிலவுவதை நொடிப் பொழுதில் கண்டு பிடித்து விட்டாள்
ராஜேஸ்வரி...

"சுந்து.. வாயடிக்கிறதை நிறுத்திட்டு...
நம்ம சொந்தக்காரங்களை ஹோட்டல் ரூமுக்கு
கூப்பிட்டுக்கிட்டுப் போக முடியுமா... முடியாதா..?"

ராஜேஸ்வரியின் இந்தக் கேள்விக்கு... முடியாது என்ற பதிலைச் சொல்ல கந்தரால் முடியுமா...?

அவன் அவசரமாக... வாயை மூடிக் கொண்டு... உறவினர்களுடன் இடத்தைக் காலி செய்தான்...

'எப்படி...?' என்ற பார்வை ராஜேஸ்வரியிடமிருந்து வெளிப்பட்டது....

ஆனானப்பட்ட கீதாவினாலேயே அடக்க முடியாத அவர்களின் புத்திரனை... ஒரே அதட்டலில் அடக்கி தன் வழிக்குக் கொண்டு வந்து விட்ட மனைவியின் ஆளுமை மீதான பொறாமையுணர்வு... என்றும் போல இன்றும் கிருஷ்ணமூர்த்தியின் மனதில் எழுந்தது...

வீட்டின் அதிகார மையத்தின் மையப் புள்ளியாக அவள் நிலை கொண்டிருப்பதின் சூட்சுமத்தைக் கண்டு கொள்ள அவரால் முடியவில்லை...

ராஜேஸ்வரி அவருடைய கவலையைப் பற்றிக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை... அவள் மடமடவென்று இளைய மகளுக்கு ஆணைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தாள்...

"கீதா... மசமசன்னு நிற்காம வேலைகளைப் பாரு..."

"ஆகட்டும்மா..."

"நமக்கு இங்கே நாலு ரூம் கொடுத்திருக்காங்க.. அக்காவோட ரூமில் நீயும் தங்கிக்க... அவளைப்

"ம்ம்ம்..."

"அப்பாவும்.. கந்துவும்... இன்னொரு ரூமில் தங்கிக்கட்டும்..."

"நீங்க...?"

"நகை.. பெட்டிகளை ஒரு ரூமில் அடுக்கு... நான் அங்கே தங்கிக்கறேன்... மீதி இருக்கிற ரூமில... நம்ம பக்கத்து சொந்த பந்தம்.. உட்கார்ந்து எழுந்திருக்கட்டும்..."

யோசித்துச் செயல்படும் தனது திறனை... அங்கேயும் கணவருக்கு உணர்த்தினாள் ராஜேஸ்வரி... ஏன்... குடும்பத்தின் அதிகாரமையம்... அளிடம் மையம் கொண்டிருக்கிறது என்ற அப்போது தான் கிருஷ்ணமூர்த்திக்குப் புரிந்தது...

'இந்த யோசனை எனக்கு வரலையே...'

மனைவியின் முன் யோசனையில் அவர் மகிழ்ந்து போய் விட்டார்... தூக்கத்திலும்.. பொருள்களைக் காக்கும் அவள் குணத்தில் அவள் மீதான மதிப்பு அவருக்குள் அதிகரித்தது...

கீதா பெட்டிகளை ராஜேஸ்வரியின் அறைக்குள் அடுக்கி வைத்தாள்.. மணப் பெண்ணை இருபக்க உறவினர்களும் வந்து வந்து பார்வையிட்டுப் போய் கொண்டிருக்க... மணமகளுக்கான அறையில் காட்சிப் பொருளைப் போல ஒரு நாற்காலியில் அழகுப்பதுமையாக அமர்ந்திருந்தாள் ராதிகா...

உறவினர்களுக்கு என்று ராஜேஸ்வரி ஒதுக்கி வைத்திருந்த அறையில் உறவினர்களின் கூட்டம் குழுமியிருந்தது... கிருஷ்ணமூர்த்தி ஒரு குளியலைப் போட்டு விட்டு.. இரவு விருந்துக்கு தயாராகலாம் என்ற எண்ணத்தோடு.. குளியலறைக்குள் புகுந்தார்... அவர் குளித்து முடித்து வந்தபோது.. சுந்தர் ஹோட்டலில் இருந்து திரும்பியிருந்தான்...

"நீயும் குளிச்சு.. டிரெஸ் சேன்ஜ் பண்ணிக்க சுந்து..."

"இப்பவாவது இதைச் சொல்லனும்னு உங்களுக்குத் தோணுச்சே..."

அவர்கள்... இரவு விருந்துக்கு தயாராகிக் கொண்டிருந்தார்கள்... கீதாவை அதட்டி.. ராதிகாவைக் குளிக்க வைத்து... ஒப்பனை செய்யச் சொன்னாள் ராஜேஸ்வரி...

"அதுக்கு ஆள் வந்திருக்காங்கம்மா..." கீதா சிணுங்கினாள்...

"அதுக்காக... நீ அப்படியே விட்டு விடுவியா..." ராஜேஸ்வரி இளைய மகளை முறைத்தாள்...

"சரி... சரி.. அவளை நலங்குக்கு ரெடி பண்ணி.. சபைக்கு அழைச்சுக்கிட்டு வர்றது என்னோட பொறுப்பு.. ஓகேயா..?" கீதா வெற்றிகரமாக.. வெள்ளைக் கொடியை பறக்கவிட்டாள்...

திருமண நாளுக்கான கொண்டாட்டம்.. அங்கிருந்த அத்தனை பேரின் மனதிலும் இருந்தது.. ராதிகாவைத் தவிர...

உன் கைவிரல்கள் தொட்டபோது...
மின்சாரம் எனில் பாய்ந்தது ஏன்..?

"வாங்கண்ணா.. வாங்க.. வாங்க..."

அவசரமாக கரம் குவித்து பரபரப்புடன் வரவேற்றாள் மேகலா...

"அண்ணனா..? என்னங்க.. உங்க தங்கச்சிக்கு உறவுமுறை இன்னும் மறக்கலை போல..."

மேகலாவினால் அண்ணனென்று விளிக்கப்பட்ட கோமதி நாயகத்தின் மனைவி குரோதத்துடன் சொன்னாள்...

"விடு தங்கம்... மத்தவங்க முன்னாலே உறவு முறையை விட்டுக்கொடுக்க முடியுமா..? இல்ல... வந்தவங்களைத்தான் வாங்கன்னு வரவேற்காம இருக்க முடியுமா..? அதத்தான் தங்கச்சி செய்யுது..."

மேகலாவின் பக்கம் நியாயம் பேசுகிறவரைப் போல... கோமதிநாயகம் குத்தலுடன் சொன்னார்...

மேகலாவின் முகம் வாடிவிட்டது...

வந்திருந்தவர்களோ... தென்காசியின் மிகப்பெரிய வியாபாரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.. மேகலாவின் காரம் குவிப்பிற்கு பதிலுக்கு கரம் குவித்த கோமதி நாயகத்தின் பத்து விரல்களிலும் வைரங்கள் மின்னின... அவரது மனைவியின் உடல் பூராவும் தங்கத்தோடு சேர்ந்து வைரங்கள் ஒளிர்ந்தன... அகலக் கரையிட்ட காஞ்சிபுரம் பட்டுப்புடவையில் அலட்சியமான முகபாவனையுடன் மற்றவர்களெல்லாம் எனக்கு இணையா என்று பார்த்துக் கொண்டு வந்த அந்த தங்கத்திற்கு மனதிற்குள் ஓர் அபிலாசை இருந்தது...

அது.. அந்த தென்காசிப் பட்டினத்தின் கதாநாயகனான பாலமுரளிக்கு பெண் கொடுத்து அவனது மாமனார் வீடென்ற அந்தஸ்தைப் பெற்று விடவேண்டும் என்பது...

அந்த அபிலாசையை இற்றுப் போகச் செய்து விட்டு.. யாரோ ஒரு சென்னையில் பிறந்த சொப்பன சுந்தரியை பாலமுரளி மணக்கப் போகிறான் என்பதில் அவர்களுக்கு தீராத வருத்தம்...

அதைப் பேச்சால் கூட வெளிப் படுத்தாவிட்டால் அவர்களுக்கு நெஞ்சுவலி வந்து விடாதா..?

அதை மேகலாவும் உணர்ந்திருந்ததால் தணிந்தே பேசினாள்...

"அண்ணனும்.. அண்ணியும் மனசில எதையும் வைச்சுக்கக் கூடாது..."

"இனி வைச்சிருந்துதான் என்ன செய்யப் போறோம்..?"

"உங்களுக்கே நல்லாத் தெரியும்.. எங்க குடும்பத்திலே முரளி ஒரு முடிவை எடுத்துட்டா... அதை மறுத்துப் பேசி யாருக்கும் பழக்கமில்லை..."

"நீ ஏம்மா மறுத்துப் பேசப் போற..? நானென்ன உன் கூடப்பிறந்த அண்ணனா..? இல்ல.. சொந்த சித்தப்பாமகன்.. பெரியப்பா மகனா..? ரெண்டும் இல்ல... உறவு முறையில உனக்கு அண்ணன் ஆகனும்.. எனக்காக நீ துரும்பை முறிச்சுப் போடக்கூட யோசிப்பதான்.. இதில மலையை பொரட்டச் சொன்னா... மகராசி.. நீ என்ன பண்ணுவ...?"

"அதக்கில்லண்ணே.. முரளி ஆசைப்பட்டுட்டான்..."

"அதைச்சொல்லு... நானென்ன அழகு ரதியைப் போலவா மகளப் பெத்து வைச்சிருக்கேன்..? உன் மகனுக்கு என்மக மேலே ஆசை வராது... ஊரான் மகமேலதான் ஆசைவரும்..."

"உங்க பொண்ணுக்கென்னண்ணே.. இந்த தென்காசிச் சீமையிலேயே இப்படியொரு அழகை நாம பார்க்க முடியாதே..."

"அப்புறம் எதுக்கும்மா... உன் மகன் சென்னைச் சீமையைத் தேடி ஓடினாரு..?"

கோமதி நாயகம் விடாமல் மலையேறினார்.. அவரை மலையிறங்க வைக்க.. ஆனமட்டும் முயற்சி

செய்து பார்த்த மேகலா களைத்துப்போய் விட்டாள்.. வந்தவர்கள் போர் நிறுத்தம் செய்யும் உத்தேசத்தில் இல்லாதவர்களாக இருக்கும் போது அவளும் தான் எத்தனை நேரத்துக்கு வெள்ளைக்கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருப்பாள்..?

அவர்கள் நிறுத்தாவிட்டால் என்ன.. நாம் நிறுத்திவிடலாமே என்ற நினைவுடன் பறக்க விட்டுக் கொண்டிருந்த சமாதானப் புறாவை பறக்க விடும் முயற்சியைக் கைவிட்டாள் மேகலா...

"ஏண்ணே.. இதெல்லாம் ஆகிற பேச்சா..? பெண் பார்த்து.. பரிசம் போட்டு.. பத்திரிக்கை அடிச்சு.. அதை ஊரெல்லாம் குடுத்து.. இப்ப விடிஞ்சாக் கல்யாணம்ன்னு பொண்ணு மணவறையில வந்து உட்கார்ந்தாச்சு... இப்பப் போயி.. ஏழூரு ராமாயணத்தை இழுத்தா என்னதான் செய்ய முடியும்..? வந்தவங்க மனசார பொண்ணையும்... மாப்பிள்ளையையும் வாழ்த்தி விட்டுப் போவிங்களா.. அதை விட்டுட்டு போன கதையெல்லாம் இழுத்து வைச்சுப் பேசிக்கிட்டு இருக்கீங்க.. கோதாவரி..."

"அக்கா..."

"நம்ம அண்ணனும் அண்ணியும் வந்திருக்காங்க பாரு.. முன் வரிசையில உட்கார வைச்சு.. காபியைக் குடு.."

"ஆகட்டும்க்கா.. வாங்கண்ணா.. வாங்கண்ணி..."

"உள்ள போங்கண்ணா.. நலங்கு முடிஞ்சதும் இருந்து சாப்பிட்டுத்தான் போகணும்.. பந்திக்கு அழைச்சுட்டுப் போக நானே வர்றேன்.. கூப்பிட்டுக் கிட்டுப்போ கோதாவரி.. அடடே.. வாங்க மாமா.. வாங்க அத்தை.. நீங்கள்ளாம் இப்பத்தான் வர்றதா.. ஒரு வாரத்துக்கு முன்னாலேயே வந்து இறங்கியிருக்க வேணாமா..."

மேகலா.. மற்றவர்களை வரவேற்கச் சென்றுவிட.. கோதாவரியின் பின்னால் சென்ற கோமதிநாயகத்துக்கும்.. தங்கத்துக்கும் மனதில் எரிச்சல் மூண்டது...

'கொஞ்சமாவது மதிக்கிறாளான்னு பாரு.. எல்லாம் கெட்டிக்கார மகனைப் பெத்துப்புட்ட மண்டைக்கனம்..! திமிர்..!'

கோபத்துடன் பாலசரஸ்வதியின் பக்கத்தில் அமர்ந்த தங்கத்தின் முகத்தில் எள்ளும்.. கொள்ளும் வெடித்தன...

"வாங்க.. வாங்க..." திரும்பிப் பார்த்த சரஸ்வதி வரவேற்க...

"அதான் வந்துட்டோமில்ல..." என்று கடுகடுப்புடன் பதில் சொன்னாள் தங்கம்...

"என்ன மாமா.. அத்தைக்கு என்ன கோபமாம்..?"

"அதை என்கிட்ட எதுக்குக் கேட்கிற மருமகளே.. உன் அத்தைகிட்டயே கேளு.. ஊட நான் எதுக்கு..?"

"பார்த்தீங்களா அத்தை.. மாமா கழண்டுக்கிறார்.."

"கழண்டுக்கிட்டது அவரில்ல சரசு... உன் குடும்பம் தான் கழண்டுக்கிச்சு... இதைச் சொன்னா உன் அம்மா விடிஞ்சா கல்யாணம்ன்னு பழமை பேசறாங்க..."

மனத்தாங்கலுடன் தங்கம் சொல்ல... 'ஆஹா..' என்று மகிழ்ந்து போனாள் பாலசரஸ்வதி...

அந்தத் திருமணத்தில் சந்தோசமாக கலந்து கொள்வதைப் போல வேசம் போட்டுக் கொண்டிருந்தவளுக்கு அந்த வேசத்தைப் போட வேண்டா மென்பதில் சந்தோசம் பெருக்கெடுத்தது...

அவள் வேசத்தைக் கலைத்து.. தன் மனக்கிடக்கையை தங்கத்திடம் கொட்ட ஆரம்பித்தாள்...

"உங்களைச் சொன்னதுக்கே இத்தனை பேசறிங்களே.. பெத்த மக.. என்னையே இந்த விசயத்தில எங்கம்மா தூக்கி எறிஞ்சுட்டாங்க.. அது தெரியுமா அத்தை...?"

"அடக் கடவுளே.. அப்படியா...?"

"ஆமாம் அத்தை..."

"இந்தக் கொடுமையை எங்கேயாச்சும் கண்டிருக்கமா..?"

"என் வீட்டில நடக்குதே..."

"ஒத்தப் பொண்ணு.. அதிலயும் வீட்டுக்கு மூத்த பொண்ணு.. உன் பேச்சுக்கே மதிப்பில்லாம போச்சே பார்த்தியா...?"

"இதை எங்கே போயி சொல்றது..?."

"நான் எதுக்கு இருக்கேன்..? என்கிட்டச் சொல்லு சரசு... உன் ஆத்தாமையை காது கொடுத்து நான் கேட்கிறேன்.."

அவ்வளவு சொன்னால் போதாதா..? பாலசரஸ்வதி... வாகாக தலையை சாய்த்து தங்கத்தின் காதுக்குள் பேச ஆரம்பிக்க.. அதைவிட வாகாக காதைக் கொடுத்து.. அதை கவனமாக கேட்டுக் கொண்டிருந்தாள் தங்கம்...

ஊடேயூடே.. 'ஒ..' 'அட..' 'இதைப்பாருடா..' 'அதைச்சொல்லு...' 'அடேங்கப்பா...' என்பதைப் போன்ற சொற்றொடர்களை தகுந்த பாவத்துடன் உச்சரித்தாள்.. அதற்கேற்றார் போல முகவாயை தோள்பட்டையில் இடித்துக் கொள்ளவும் செய்தாள்...

வந்தவர்களை வரவேற்றபடி.. சற்றுத் தள்ளி நின்று இந்த நாடகத்தைக் கவனித்துக் கொண்டிருந்த மேகலாவுக்கு பெருங்கவலையாக இருந்தது...

'இந்த சரசு.. வீட்டு விசயத்தை அந்தத் தங்கத்தின் காதில ஒதிக்கிட்டு இருக்காளே... இதுக்கு அவ தண்டோரா போட்டேச் சொல்லி விடலாம்...'

எப்படி மகளின் திறந்த வாயை மூடச் செய்வது என்ற பலத்த சிந்தனையுடன் வாசலைப் பார்த்தவளுக்கு முகம் ஒளிர்ந்தது...

அங்கே ராஜராஜன் யாரோ ஒருவருடன் பேசியபடி வந்து கொண்டிருந்தான்...

"மாப்பிள்ள...!"

என்னவோ... கடவுளைப் பக்தி பரவசத்துடன் ஆனந்தமயமாக அழைப்பதைப் போல... மருமகனை அழைத்தாள் மேகலா...

"என்னங்கத்தை..."

ராஜாராஜன் நின்றுவிட.. கூட வந்தவரோ.. கூட்டத்தை நோக்கிப் போய்.. காலியாக கிடந்த சேர்களில் ஒன்றில் இடம் பிடித்தார்...

"நம்ம சரசைப் பார்த்தீங்களா மாப்பிள்ள..."

அவள் சொல்ல ஆரம்பித்தபோது.. மாமியார்... தனது மகளைத் தேடுவதாக புரிந்து கொண்டான் அந்த மருமகன்...

"இங்கதான இருந்தா..? இப்பத்தான் என்கூடப் பேசிக்கிட்டு வந்தவ எனக்கு முன்னாலே உள்ள வந்தா.. எங்கே போயிருப்பா..?"

"அவ எங்கேயும் போகலை.. அதோ.. அங்கேதான் உட்கார்ந்திருக்கா.."

மருமகன் புரிந்து கொண்ட விதத்தில் புல்லரித்துப் போனவளாக எரிச்சலுடன் கை காட்டினாள் மேகலா... அவள் விரல் நீட்டிய திசைப் பக்கம் பார்த்த அந்த புத்திசாலி மருமகன்...

"அட.. ஆமாம்.. அங்கேதான் உட்கார்ந்திருக்கா.." என்று மகிழ்ந்து போனான்..

"உங்களுக்குத்தான் அவ இருக்கிற இடம் தெரிஞ்சிருக்கே... அப்புறமும் எதுக்காக அத்தை.. அவளைப் பார்த்தீங்களான்னு என்னைக் கேட்டிங்க..."

அவன் சந்தேகம் கேட்க.. 'தெரியாமல் கேட்டு விட்டேன்...' என்று மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டாள் மேகலா...

"நான் அவளப் பார்த்தீங்களான்னு கேட்டது.. வேற ஒன்னுக்காக மாப்பிள்ள..."

"எதுக்காக அத்தை...?"

"நீங்களே அவ இருக்க திசைப்பக்கம் திரும்பிப் பாருங்க.. நான் சொல்லாமலே எதைச் சொல்ல வருகிறேன்னு உங்களுக்குப் புரியும்..."

யோசனையுடன் புருவங்களை சுருக்கிய ராஜாராஜன் மனைவியின் பக்கம் பார்த்தான்.. அவனுக்கு அப்படியே 'பேசும் படத்தை'ப் பார்க்கும் உணர்வு ஏற்பட்டது...

அவர்கள் பேசும் வார்த்தைகளின் சப்தம் சிறிதளவு கூட அவர்களின் காதுகளில் விழுகவில்லை.. ஆனால்.. பாலசரஸ்வதியின் முகத்தில் பிரதிபலித்த உணர்வுகளும்.. பாவனைகளும்.. அவள் என்ன பேசிக் கொண்டிருக்கிறாள் என்பதை அப்படியே உணர்த்தின...

'பார்த்தீங்களா...' என்று அவனது மாமியார் எதற்காக வினவினாள் என்று இப்போது அவனுக்குப் புரிந்தது...

"அந்த லேடி.. நமக்குச் சொந்தம்தானே.. ?"

"ஆமாம் மாப்பிள்ள.. எனக்கு அண்ணி முறையாகணும்..."

"அவங்களுக்கு நம்ம குடும்பத்து மேலே என்ன பகை.. ?"

"வரப்புத்தகராறும்.. வாய்க்காத் தகராறும் இல்ல மாப்பிள்ளை... அவங்க வீட்டில கல்யாண வயசில பொண்ணிருக்கு..."

"ஓ.. அதுதான் விசயமா.. ?" ராஜராஜனுக்கு விளங்கி விட்டது..

"அது அந்தக் கோவத்தில இருக்குது.. நம்ம சரக அதுகிட்டப் போயி நம்ம வீட்டு விசயத்தை கடை பரப்பிக்கிட்டு இருக்கா..."

"இவள என்ன செய்தால் தேவலை..."

"இப்போதைக்கு இவ வாயை மூடவைத்தால் தேவலை..."

"கவலையே படாதீங்க.. அவள நான் பார்த்துக்கறேன்..."

"இப்போதைக்கு பார்த்துக்குவீங்க..."

"கல்யாணம் முடிகிற வரைக்குமே.. காவல் காக்கிறேன்.. போதுமா..."

"அது போதும் மாப்பிள்ளை..."

நிம்மதிப் பெருமூச்சுடன் மேகலா.. மற்ற வேலைகளைக் கவனிக்கச் சென்றாள்... ராஜராஜன் மனைவியைக் கவனிக்கச் சென்றான்...

கணவன் வந்ததைக் கூடக் கவனிக்காமல் தலையைத் தலையை ஆட்டி ரகசியம் பேசிக் கொண்டிருந்தாள் பாலசரஸ்வதி... அவளாக திரும்பிப் பார்ப்பாள் என்று பொறுமை காத்த ராஜராஜன் அவளுக்கு திரும்பிப் பார்க்கும் உத்தேசமே இல்லையென்று கண்டு கொண்டவனாக அவளின் தோளைத் தட்டினான்...

"த்ச்சு..."

யாரோ பேச்சின் ஊடே தொந்தரவு செய்கிறார்கள் என்ற நினைவில் அதிருப்தியுடன் சூள் கொட்டிவிட்டு பேச்சைத் தொடர்ந்தாள் பாலசரஸ்வதி...

'திரும்பிப் பார்க்கிறாளான்னு பாரு...'

பல்லைக் கடித்த ராஜராஜன்.. மீண்டும் அவளது தோளைத் தட்டி அவள் கவனத்தை தன் பக்கம் திருப்ப முயற்சி செய்தான்...

"த்ச்ச்ச்... சு..."

இந்த முறை பலமான அதிருப்தி ஒலியுடன் சூள் கொட்டினாள் சரஸ்வதி.. போதாக்குறைக்கு தோளைத் தட்டிய இடத்தில் லேசாக தட்டி விட்டு.. விட்ட இடத்திலிருந்த பேச ஆரம்பித்தாள்...

ராஜராஜனுக்கு கோபம் வீறிட்டது.. அவளது தோளில் ஓங்கித் தட்டினான்.. தட்டல் பலமாக இருந்ததில் சரஸ்வதியின் தோள்பட்டையில் பலமான வலி 'கரீர்..' என்று ஏற்பட 'யார் அது..?' என்ற கோபத்துடன் திரும்பிப் பார்த்த சரஸ்வதியின் முகத்தில் பிடிபட்டு விட்ட உணர்வு தோன்றியது...

"என்னடி..?" ராஜராஜன் அழுத்தமான குரலில் வினவினாள்..

"ஒன்.. ஒன்னுமில்லையே..." சரஸ்வதி தடுமாறினாள்..

"ஏண்டி.. நாம எதுக்கு வந்திருக்கோம்.. நீ என்ன வேலையைச் செய்துக்கிட்டு உட்கார்ந்திருக்க...?"

"என்ன செய்கிறேன்..? அத்தை கூடப் பேசிக்கிட்டு இருக்கேன்..."

"பேச்சுவார்த்தையெல்லாம் பலமாய் இருக்கு..?"

"கும்மா.. வீட்டுக் கதையைப் பேசிக்கிட்டு இருந்தோம்..."

"இருந்தோம்ன்னு சொல்லாதே.. இருந்தேன்னு சொல்லு.. நானும் அப்போதிருந்து பார்க்கிறேன்.. உன் வாய் மட்டும்தான் அசையுது.. அங்கே ஒன்னையும் காணோமே.."

ராஜராஜன் பற்களைக் கடித்தபடி ரகசியக் குரலில் பேசிய விதத்தில் அவனது அதீதமான கோபம் வெளிப்பட சரஸ்வதி கையைப் பிசைந்தாள்...

காற்றினிலே வரும் கீதம் தேடி..
கழிகின்றது எந்தன் நாள்கள்...

ராஜராஜனைப் பார்த்த தங்கம் சுதாரித்துக் கொண்டவளாக கரம் குவித்தாள்...

"வாங்க தம்பி.. சௌக்கியங்களா..."

"ம்ம்ம்..."

ராஜராஜன் அதற்கு வெறும் முணுமுணுப்பை மட்டுமே பதிலாகத் தந்தான்.. சும்மாவே அவன் மற்றவர்களுடன் அளவுக்கு அதிகமாக பேச மாட்டான்.. அப்படியிருக்கும் போது.. அமைதியின் சிகரமாக இருந்த அவனது மனைவியைத் தூண்டி விட்டு.. பேச வைத்து.. வாய் பார்த்துக் கொண்டிருந்த தங்கத்துடன் அவ்வளவு எளிதாகப் பேசிவிடுவானா.. என்ன..?

'ம்ஹீம்... மாமியார்கிட்ட இருக்கிற ரப்பும்.. ராங்கியும்.. அப்படியே மருமகன் கிட்டயும் இருக்கு...'

தங்கத்தின் பார்வையில் அனல் பறந்தது...

"சரஸ்... கொஞ்சம் வெளியே வா.."

ராஜராஜனுக்கு அங்கே உட்காரவே பிடிக்கவில்லை.. அவன் எழுந்து கொள்ள.. வேறு வழியின்றி சரஸ்வதியும் எழுந்து அவளைப் பின்தொடர வேண்டியதாக இருந்தது...

'வந்து சொல்கிறேன்...'

தங்கத்திடம் அவள் மௌன சமிக்ஞை செய்ய... அவரும் கண்கள் ஒளிர தலையை ஆட்டி வைத்தாள்...

"அங்கே என்னடி ஜாடை வேண்டிக் கிடக்கு...?"

வெளியே வந்த ராஜராஜன் அடிக்குரலில் மனைவியிடம் சீறினான்...

"அதில்லைங்க... அவங்க எனக்கு அத்தை முறையாகனும்..."

"நான் உனக்கு என்ன முறையாகனும்கிற நினைப்பாவது உன் மனசில் இருக்கா..?"

"என்னங்க.. இப்படிப் பேசறிங்க..."

"சரஸ்... எனக்கு இதெல்லாம் பிடிக்காது.. உன் தம்பி கல்யாணப் பேச்சு ஆரம்பித்ததில இருந்து பார்க்கிறேன்.. நீ அடியோட மாறிப் போயிட்ட என் பழைய சரஸ்வதி எங்கே...?"

"அத்தான்..." சரஸ்வதியின் கண்களில் கண்ணீர் திரையிட்டது...

"உன்தம்பி அவருக்கு பிடித்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறார்.. அதில உனக்கென்ன பிரச்னை..?"

"என் விருப்பத்துக்கு மதிப்பில்லையா..?"

"இது அவங்கவங்க வாழ்க்கை சரஸ்... இத்தனை நாளில் ஒருநாளாவது உன் தம்பி.. அவருடைய விருப்பத்தை உன்மேல் திணிக்க முயற்சி செய்திருக்கிறாரா..? நீ மட்டும் ஏண்டி இப்படி இருக்கிற..?"

"அந்தப் பெண் முரளிக்கு சரியாய் வரமாட்டாங்க.."

"அதைச் சொல்ல நீ யாரு..? இவ்வளவு நேரமும் இதைத்தான் அந்தம்மா காதில் ஒதிக்கிட்டு இருந்தியா..?"

பாலசரஸ்வதி கணவனிடம் பொய் சொல்ல முடியாமல் மௌனம் சாதித்தாள்...

"நம்ம வீட்டு விவரத்தை அடுத்தவங்க காதில் ஒப்பிக்கிறயே.. இது உனக்கே நல்லா இருக்கா...?"

சரஸ்வதி.. வாசலில் கட்டப்பட்டிருந்த வாழை மரத்தில் விழிபதித்தாள்.. கணவனுக்கு மறுமொழி கூறவில்லை...

"இரண்டு வளர்ந்த குழந்தைகளுக்கு நீ அம்மா.. அவங்களை வளர்த்து ஆளாக்குகிற பொறுப்பு உனக்கு இருக்கு.. நீயே இப்படிப் பேசினா... நாளைக்கு அதையே நம்ம பிள்ளைகளும் ஃபாலோ பண்ண மாட்டாங்களா..?"

"என்னங்க இது.. வெறும் வாய் பேச்சுக்கு இவ்வளவு பேச்சா..?"

"உன்னைப் பேச வேணாம்ன்னு சொல்லலை சரஸ்.. உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட நாளில இருந்து

இந்தநாள் வரைக்கும் இப்படி நான் பேசியிருக்கேனா..? இல்லை.. இப்படி நான் பேசுகிற அளவுக்கு நீதான் நடந்துக்கிட்டு இருக்கியா..?"

பாலசரஸ்வதியின் விழிகளில் தெரிந்த குற்ற உணர்வில் ராஜராஜன் பேச்சை நிறுத்தினான்.. சற்று நேரம் அவர்கள் இருவரும் மௌனமாக நின்றிருந்தார்கள்.. முதன் முதலாக மனைவியைக் கடிந்து கொண்டதில் ராஜராஜனுக்கு மனதை என்னவோ செய்தது... மனைவியைப் பார்த்தான்...

லேசாக பூசினார் போன்ற தோற்றத்துடனிருந்த பாலசரஸ்வதியிடம் அன்று அதீத அழகு தென்படுவதாக அவனுக்குத் தோன்றியது.. அது எதனால் என்று அவனால் அனுமானிக்க முடியவில்லை...

அவள் தலையில் சூடியிருந்த மல்லிகையின் வாசத்தில் அவன் மனதை இதம் நிறைத்தது...

"சரஸ்..." அவன் மென்மையாக அழைத்தான்...

"ம்ம்ம்..."

"ஐ ஆம் ஸாரி..."

"இதை நான்தான் சொல்லனும்..."

"உன்கிட்ட சில குணங்களை நான் எதிர்பாக்கிறேண்டி..."

"புரியுது..."

"பிள்ளைகள் எங்கே...?"

"இங்கேதான் விளையாடிக்கிட்டு இருந்தாங்க..."

"அம்மா.. அப்பா...?"

"அவங்க நம்ம பக்க சொந்தங்களோட உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்காங்க..."

ராஜராஜனின் பக்க உறவினர்களை அவள் நம்ம சொந்தபந்தம் என்று சரஸ்வதி கூறிய விதத்தில் அவன் வெகுவாக ஈர்க்கப்பட்டான்...

"வா.. நாமளும் அவங்க கூடப் போய் உட்காரலாம்.."

"ம்ம்ம்..."

அவர்கள் மண்டபத்திற்குள் வந்து.. ராஜராஜனின் பெற்றோருக்கு அருகில் உட்கார்ந்து விட்டார்கள்...

அதுவரை பாலசரஸ்வதி வரும் வழியில் விழி பதித்திருந்த தங்கத்தின் முகம் விழுந்து விட்டது...

"என்ன தங்கம்..?" கோமதி நாயகம் காரணம் கேட்டார்...

"அந்த சரஸ்வதி பொண்ணு அவங்க வீட்டில நடந்துக்கிட்டிருக்கிற அத்தனை சமாச்சாரத்தையும் கொட்டிக் கவிழ்த்துக்கிட்டு இருந்துச்சு.. அவ புருசன் வந்து கெடுத்துப்புட்டாரு..."

"விடுடி... நாள பின்ன.. அந்தப் பொண்ணு உன்கிட்ட தனியா மாட்டாமலா இருக்கும்...?"

"அப்படிங்கறிங்க...?"

"அப்படித்தான்..."

அவர்கள் மேடையை நோக்கிப் பார்வையைத் திருப்பினார்கள்.. நலங்கு வைக்கப்பட்டுக் கொண்டிருக்க தங்கத்தையும் நலங்கு வைக்க மேடைக்கு அழைத்தார்கள்... அவள் தலையை வலிக்கிறது என்று மறுத்து விட்டாள்...

அதைக் கேட்ட கீதா.. ராதிகாவின் காதருகே குனிந்தாள்...

"ஹப்பாடி...! இப்போத்தான் இது உன் கல்யாணம் போல இருக்குடி ராது..."

"ஏண்டி..?"

"உன் பிரண்ட்ஸ் யாரும் இன்னும் வந்து சேரலை.. அந்த ஷோபாவுக்கு உன்னைக கண்டாலே தலைவலி வந்திரும்... ஆயிரம்தான் சொல்லு.. அவளை நான் ரொம்ப மிஸ் பண்றேன் ராது..."

"அவளை மிஸ் பண்றியா..?" ராதிகா ஆச்சரியப் பட்டுப் போனாள்...

"பின்னே...? உன் காத்துப் பட்டாலே அவ தலையைப் பிடிச்சுக்கிற அந்த அழகு இருக்கே.. ஆறாஹா... அதைக் காணக் கண்கோடி வேணும் ராது..."

"அடிப்பாவி..."

"அவ இல்லாத குறையை எதிர்த்தாப்புல உட்கார்ந்திருக்கிற அந்த அம்மா தீர்த்து வைக்கிறாங்க... பார்த்தியா... அப்படியே ஷோபாவைப் போலவே.. இந்தம்மாவுக்கும் உன்னைப் பார்த்தாலே தலைவலி வருதுடி.."

"அதைப் பார்க்கத்தானே இங்கே உட்கார்ந்திருக்கேன்..."

"நீ உன் ஆளைப் பார்க்கத்தான் உட்கார்ந்திருக்க.."

"ஏய்ய்.. நலங்கு வைக்க.. உட்கார்ந்திருக்கேன்..."

"அது ஊருக்கு... உனக்கு...?"

கீதாவின் கேள்வியில் ராதிகாவின் மனம் வலித்தது... இதே போல நிச்சயதார்த்த மேடையில் அவள் அமர்ந்திருந்தபோது முன் வரிசையில் முரளி அமர்ந்திருந்தான்... அவளை விழுங்குவதைப் போலப் பார்த்தபடி.. கண்களில் காதலைக் கொட்டினான்...

'இன்றைக்கு அவன் எங்கே போனான்...?'

ராதிகாவின் கண்கள் அவனைத் தேடிச் சோர்ந்தன.. அவளது இதயம் ஏமாற்றத்தில் துடித்தது... என்ன தான் அவன் காத்திருக்கும் வாழ்க்கையைப் பற்றி அறிவுறுத்தியிருந்தாலும்.. அன்றைய நாளுக்கான எதிர் பார்ப்பைத் தவிர்க்க ராதிகாவால் இயலவில்லை...

"என்னடி.. உன் ஹீரோ எங்கேன்னு தேடறயா..?"

கீதா கண்டு பிடித்து விட்டாள்.. அதற்குள் ஒரு பெண்மணி நலங்கு வைக்க மேடைக்கு வந்துவிட... அவர்களின் பேச்ச தடைபட்டது...

அவள் போனதும்.. கீதா பேச்சைத் தொடர்ந்தாள்...

"நீ மட்டும் தேடலை.. நானும் தேடினேன்..."

"எதுக்குடி...?"

"ஏண்டி அலருகிற..? உன் ஆளை சைட் அடிக்கத்தேடலை... நம்ம பக்க சொந்தக்காரங்க.. மாப்பிள்ளையைப் பார்க்கனும்னு சொன்னாங்க.. அந்தச் சாக்கில் நாமும் பார்த்துக்கலாம்ன்னு தேடிப் போனேன்.. ஆள் அகப்படலை..."

'எங்கே போயிருப்பான்..?'

"உனக்குத்தான் அவர் உன் ஆளுங்கிறதால ஈஸியா இருக்கு.. இந்த ஊரில அப்படியில்லையாம்.. உன் ஆள் பெரிய பிஸினெஸ் மேக்னெட்டாம்..."

'நானா அவனை ஈஸியா நினைக்கிறேன்..? அவனைப் போலவே நீயும் பேசறியே கீதா...'

"ஒரு இடத்தில் கால் பதிச்சு நிற்க மாட்டாராம்.. இப்படியாகப்பட்ட மனிதர்.. உன் பின்னாலே சென்னையில ரோந்து சுத்தியிருக்காரு பாரேன்..."

ராதிகாவிற்கு அதைக் கேட்கையில் பெருமையாக இருந்தது..

"ஆனாலும் ராது.. விடிஞ்சாக் கல்யாணம்.. இப்போக்கூட பிஸியாக அலையனுமா..? கல்யாணமான கையோடு.. இதை முதல் வேலையாய் கண்ட்ரோல் பண்ணு..."

'ஆமாண்டி... நான் சொன்னால் கேட்டு விட்டுத்தான் அவன் வேற வேலை பார்ப்பான்...'

"வேலை... வேலைன்னு அலையக் கூடாது ராது.. கொஞ்சம் வீட்டையும் நினைக்கனும்.."

'அவன் நினைப்பானா..?'

"ஹஸ்பெண்டைக் கைக்குள்ள போட்டுக்கிற வித்தையில நீ கொஞ்சம் மக்குத்தான்.. நான் சொன்னாலும் அதட்டுவ.. ம்ஹீம்... எப்படிச் சமாளிக்கப் போறியோ..."

'எப்படிச் சமாளிக்கப் போறேன்..?'

ராதிகாவிற்கு கவலையாக இருந்தது... இதயத்தை செல்லரித்துக் கொண்டிருந்த அந்தக் கவலைகளிடமிருந்து விடுபட வழிதெரியாமல் அவள் ஏங்கினாள்...

"என்னடி உம்முன்னு ஆகிட்ட..?"

"ஒன்னுமில்ல..."

"இப்படிச் சொன்னா... நான் நம்பிடுவேனா.. விடுடி.. எல்லாம் கல்யாணம்ன்னு ஒன்னு ஆகிட்டா சரியாப் போயிடும்..."

இது சரியாக வாய்ப்பே இல்லை என்று இவளுக்கு தெரிய வந்தால் என்ன சொல்வாளோ என்று நினைத்துக் கொண்டாள் ராதிகா...

"அப்புறம் பாரேன்.. குட்டி போட்ட பூனையைப் போல உன்னையே சுற்றிச்சுற்றி வருவார்.."

'இல்லை...' என்று கூவ வேண்டும் போலத் தோன்றியதை அடக்கிக் கொண்டாள் ராதிகா...

சொல்வதால் என்ன பயன்...?

அதோ.. அங்கே உறவினர் கூட்டத்தின் மத்தியில் முகமெல்லாம் பெருமை பொங்க பேசிக் கொண்டிருக்கும் கிருஷ்ணமூர்த்தியின் பெருமை நிலைக்க வேண்டுமானால் அவள் எதையும் சொல்லக்கூடாது...

பட்டுப்புடவை சரசரக்க.. இங்கும் அங்குமாக நடந்து கொண்டிருக்கும் ராஜேஸ்வரியின் முகத்தில் நிலவும் நிம்மதி நிலைக்க வேண்டுமானால் அவள் எதையும் சொல்லக்கூடாது...

தமக்கையின் பக்கத்தில் பொறுப்பாக நின்று கொண்டிருந்தாலும்.. கவலையற்ற பட்டாம் பூச்சியாக இருக்கும் கீதாவின் இந்த சந்தோசம் நிலைக்க வேண்டுமென்றால் அவள் எதையும் சொல்லக்கூடாது...

தாய் சொன்ன வேலைகளைச் செய்து கொண்டே விழாநாளின் உற்சாகத்துடன் இங்கும்.. அங்கும் வளைய வந்து கொண்டிருக்கும் சுந்தரின் உற்சாகம் நிலைக்க வேண்டுமென்றால் அவள் எதையும் சொல்லக்கூடாது...

வாய்திறந்து சொல்லப் போகும் வார்த்தைகளால் ஏற்படப் போகும் விபரீத பின்விளைவுகளை நினைத்துப் பார்த்த ராதிகா வாய்ப் பூட்டு போட்டுக் கொண்டாள்...

எதற்காகச் சொல்ல வேண்டும்..? இது அவள் வாழ்க்கை...! இதுதான் வாழ்க்கை என்று ஆனபின்னால்.. வாழ்ந்துதானே ஆக வேண்டும்..?

வருவது எதுவென்றாலும்..
வாழ்க்கையை வாழ்ந்து பார்ப்பேன்...

நிலா வெளிச்சம் பாதையெங்கும் பரவிக் கிடந்தது... அதை உற்றுப் பார்த்தபடி காருக்குள் அமர்ந்திருந்த பாலமுரளியின் நெஞ்சத்தில் ஒரு மணமகனுக்கேயுரிய கிளர்ச்சியும் ரகசிய சந்தோசமும் அணுவளவும் இல்லை...

'இந்நேரம் அவ மண்டபத்திற்கு வந்திருப்பா...' நினைத்துக் கொண்டான்...

'சும்மாவே அழகாய் இருப்பா.. இன்னைக்கு விசேசமா அலங்காரம் பண்ணியிருப்பாங்க... அதில பார்த்தவுடனே மனசில தீ பத்திக்கிற மாதிரி பச்சக்குன்னு இருந்து தொலைப்பா...'

ஒரு நெடிய பெருமூச்சு அவனது கடுப்பையெல்லாம் கமந்து கொண்டு வெளிப்பட்டது...

'ராட்சஸி...!' பொருமினான்...

'அழகான... ராட்சஸி...!' பல்லை வேறு கடித்துக் கொண்டான் அவனது கோபம் அவளது அதீத அழகைக் குறித்து ஏற்பட்டதல்ல என்று அவனுக்கே தெரியும்...

அந்த அழகை ஆண்டு அனுபவிக்காமல் தள்ளி வைக்கும் முடிவை அவன் எடுத்திருக்கிறான் என்பதால் விளைந்ததுதான் அந்த கோபம்...

அவனது செல்போன் அலறியது.. எடுத்துப் பார்த்தான்...

'மேகலா அழைக்கிறாள்..' என்று ஒளிர்ந்தது செல்போன்... தாயின் அழைப்பை தவிர்க்க முடியாமல் பேசினான்...

"அம்மா..."

"எங்கேயிருக்க முரளி..?"

"குற்றாலத்தில் இருக்கேன்ம்மா..."

அவன் சொன்னது பொய்யென்று மேகலாவுக்கு எப்படித் தெரியும்..? தென்காசியின் நான்கு வழிச்சாலையோர மரத்தடியில் காரை ஒதுக்கி நிறுத்தி அதற்குள் பைத்தியக்காரனைப் போல தனிமையில் புலம்பிக்கொண்டு அவனிருப்பதை அவள் அறிவாளா என்ன..?

நிற்க நேரமில்லாமல் காலில் சக்கரம் கட்டிக் கொண்டு அலையும் மகன் சொல்வது உண்மைதான் என்று அந்தத்தாயும் நம்பி விட்டாள்...

"அப்படியாப்பா..?" என்று அப்பாவியாகக் கேட்டவள்...

"அங்கே எதுக்குப்பா போன...?" என்ற துணைக் கேள்வியையும் கேட்டு வைத்தாள்..

இதற்குப் பதில் சொல்ல பாலமுரளிக்கா தெரியாது..?

"வியாபார விசயமாய் வந்தேன்ம்மா.." என்று தயாராக வைத்திருந்த பதிலை எடுத்து விட்டான்...

"ஏன்ப்பா.. உன் கல்யாணத்துக்காக ஊரே இங்கே கூடியிருக்கு.. கல்யாண மாப்பிள்ளை நீ... வியாபார விசயமாய் வெளியூர் போயிருக்க... இது நல்லவா இருக்கு..?"

"நல்லாத்தான் இல்ல.. நானென்ன பண்ண..? வந்திருக்கிற ஆளுக முக்கியமான புள்ளிக... குற்றாலத்துக்கு வந்திருக்கோம்.. பார்க்க வாங்கன்னு போன் போட்டாங்க...."

"மண்டபத்துக்கு வாங்கன்னு நீ சொல்ல வேண்டியதுதானே... அப்படியே உன் கல்யாணத்திலயும் அவங்க கலந்துக்கிட்ட மாதிரி இருக்குமில்ல..?"

"எல்லாம் சரிதான்ம்மா.. ஆனா... அவங்க மண்டபத்துக்கு வந்தா ஒரு செகண்ட் என்கூட தனியாப் பேசிர முடியுமா...?"

இதுதான் பாலமுரளி... கேள்விகளை கேள்விகளாலேயே முறியடிப்பவன்... எந்தக் கேள்விக்கும் தயாரான பதிலை கையிருப்பில் வைத்திருப்பான்...

"ஆமாம்..."

அவன் சொல்வதை நியாயமென்று மேகலாவையே ஒப்புக் கொள்ள வைத்து விட்ட அந்தக் கெட்டிக்காரனுக்கு... அந்த வெற்றியில் துளியளவு கூட சந்தோஷம் ஏற்படவில்லை... அது ஏன் என்றும் அவனுக்குப் புரியவில்லை...

"ஆனா முரளி... இங்கே சொந்தபந்தம் அத்தனை பேரும் வந்து கூடியிருக்காங்க.. நொடிக்கொரு கார் வந்து நிற்குது.. வர்ற உறவு முறைக்கு நான் என்ன பதிலை சொல்ல...?"

"முக்கியமான வேலைம்மா..."

"அது எனக்கும் புரியுதுப்பா.. ஆனா.. ஒத்தை ஆளா நான் எத்தனை பேரை சமாளிப்பேன்..? நீயே சொல்லு- கை கொடுக்க உன் அக்கா வரப்போறாளா..?"

கேள்வியின் நாயகனான பாலமுரளியையே அந்தக் கேள்வி அசைத்துப் பார்த்து விட்டது...

'அம்மா...!' அவன் உள்ளம் நெகிழ்ந்து விட்டான்...

"இதோ ஒரு நிமிசத்தில் அங்கே வந்து நிக்கிறேன்ம்மா... நீங்க கவலையே படாதீங்க..."

"உன்னை வான்னுதான் சொன்னேன்.. அதுக்காக அடிச்சுப்பிடிச்சுக்கிட்டு ஓடிவான்னு சொல்லலை... நிறுத்தி.. நிதானமா காரை ஒட்டிக்கிட்டு வா.. இத்தனை நேரமும் சமாளிச்சவ... இன்னும் கொஞ்ச நேரத்துக்கு சமாளிக்காம போயிருவேனா...?"

அந்த நிலைமையிலும் மகனின் பத்திரத்தைக் குறித்து எச்சரிக்கை செய்யும் தாயின் தாய்மையுணர்வில் அவன் கரைந்து விட்டான்...

அவனுக்குத் தெரியும்.. அவன்தான் தாயின் பற்றுக்கோடு... அவளின் நம்பிக்கை நட்சத்திரம் அவன் மட்டும்தான்... அவன் சேயாக... அவள் தாயாக இல்லாமல்.. அவன் தாயாக... அவள் சேயாகத்தான் அதுவரை அவளை அவன் பாதுகாத்து வந்திருக்கிறான்...

முதல் முறையாக... வாழ்வின் மிக முக்கியமான தருணத்தில் அவளை தனித்து இயங்க விட்டு.. அவன் சிறிது நேரம் விலகி நின்றுவிட்டான்...

அவளால் அதையே சமாளிக்க முடியவில்லை...

பெண்ணழைத்துக் கொண்டு வருகிற வரைக்கும் பாலமுரளி மண்டபத்தில்தான் இருந்தான்... ராதிகா வரும் கார்.. தென்காசி எல்லைக்குல் நுழைந்த செய்தியை அவன் செல்போனில் அறிந்து கொண்ட மறுநொடியில் அவன் மண்டபத்தை விட்டு வெளியேறி விட்டான்...

'இன்றைக்கு ஒடி ஒளிந்து கொள்கிறாய்.. நாளைக்கு என்ன செய்வாய்..?' அவன் உள்ளம் அவனைப் பார்த்து நகைத்தது...

மீண்டும் ஒரு கனத்த பெருமூச்சு வெளிப்பட அவன் காரைக் கிளப்பினான்...

திருமண மண்டபத்தின் வாசலிலே நின்று கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி அவனைக் கண்டதும் வாயெல்லாம் பல்லானார்...

"மாப்பிள்ளை..."

முகம் மலர அருகே வருகிறவரிடம் முகம் திருப்ப அவனால் முடியவில்லை...

அத்தோடு.. இது அவனுக்கும் ராதிகாவுக்கும் இடையில் நடக்கும் அந்தரங்கப் போராட்டம்.. இதில் மற்றவர்களை நொந்து கொள்வதால் யாதொரு பயனும் இல்லை என்ற நினைவோடு லேசாக சிரித்து வைத்தான்.

"எங்கே போயிருந்தீங்க மாப்பிள்ளை..?"

"குற்றாலத்துக்கு மாமா... ஒரு முக்கியமான வேலையிருந்தது..."

"இரண்டு நாளைக்கு எல்லாத்தையும் மூட்டைகட்டி பரணில் தூக்கிப் போடுங்க மாப்பிள்ளை.. எங்க பக்க உறவுக்காரங்க உங்களைப் பார்க்கனும்னு என்னை அரிச்சு எடுத்திட்டாங்க.. உள்ளே வாங்க..."

அவன் நழுவுவதற்கு இடம் கொடுக்காமல் கைப்பிடியாய் இறுக்கிப் பிடித்தபடி அவர் மண்டபத்திற்குள் நுழைந்தார்...

"இவர்தான் எங்க மாப்பிள்ளை..."

எதிர்படும் உறவினருக்கெல்லாம் அவர் பெருமையுடன் அறிமுகம் செய்து வைத்துக் கொண்டிருக்க.. மரியாதை நிமித்தம் அவர்களிடம் ஒரிரு வார்த்தைகள் பேசியபடி யதேச்சையாக மணமேடையைப் பார்த்தான் பாலமுரளி...

நலங்குக்கு அமர்ந்திருந்த ராதிகாவின் முகத்தில் உயிரில்லாதது அவன் கவனத்தில் பட்டது.. அதே சமயத்தில் விழியுயர்த்தி அவன் இருக்கும் திசைப் பக்கம் பார்த்தவளின் முகத்தில் உயிர்ப்பு வர.. கண்கள் ஒளிர்வதை உணர்ந்தவனின் உடலில் மின்சாரம் பாய்ந்தது...

'வந்து விட்டான்...'

ராதிகாவின் முகத்தில் பரவிய மலர்ச்சியைக் கவனித்தபடி.. உறவினர்களிடம் பேசிக் கொண்டிருந்தான் பாலமுரளி... பேச்சின் ஊடேயூடே அவனது பார்வை.. அவனது கட்டுப்பாட்டை மீறி... மேடையை நோக்கிப் பாய்ந்தது...

அசையாமல் அவன் மீதே விழி பதித்திருந்த ராதிகாவின் பார்வை அவனது பார்வையைச் சந்திக்கும் போது ஏற்படும் பரவசத்தை அவளது முகம் உணர்த்த..

பார்வையை விலக்கிக் கொள்ளும் வகையறியாமல் அவன் திண்டாடிப் போனான்..

ஒருவழியாய் நலங்கு முடிந்து ராதிகாவை அழைத்துக் கொண்டு போன பின்னால்தான் அவனால் சீராக மூச்சு விட முடிந்தது..

'ஹப்பா.. இப்பவே கண்ணைக் கட்டுதே...'

ஆயுள் முழுவதும் இந்த மோகினியைத் தொடாமல் எப்படிக் குடும்பம் நடத்தித் தொலைப்பது என்று திகிலடைந்து போனான் பாலமுரளி...

அவன் நினைத்ததைப் போலவே.. மணமகளுக்கான பிரத்யேக அலங்காரத்தில் அவள் ஜொலித்தாள்.. அவளிடமிருந்து இயல்பாக வெளிப்பட்ட நளினங்களின் யோக அலைகளில் அவன் அடித்துச் செல்லப்பட்டான்..

இந்த அழகை கண்முன்னால் வைத்துக் கொண்டு எட்டிக்காயாய் விலகி நிற்க வேண்டும் என்றால் அது எப்பேற்பட்ட கொடுமை...!

"ஹாய் மச்சான்.. எங்கே போயிட்டிங்க...?" ஆரவாரமாய் வந்தாள் கீதா...

"மச்சானா..? அதுசரி.. பக்கத்தில் உன் அக்கா இல்லைங்கிற தைரியமா...?" பாலமுரளி சிரித்தான்...

"உங்க ஆளை ரூமுக்குள்ளே விட்டு பூட்டிட்டேனில்ல அவ டிரெஸ் சேன்ஜ் பண்ணிக்கிட்டு இருக்கா.. அந்த தைரியத்திலதான் உங்ககிட்ட கடலை போட வந்தேன்" அவள் கண்சிமிட்டினாள்...

"கடலை சாகுபடிக்கெல்லாம் நான் ரெடியாயில்லைம்மா... எங்க ஊரில நல்ல பிள்ளைன்னு பெயரெடுத்தவன்..."

"அதனால...? என்னதான் சொல்ல வர்றீங்க..?"

"நான் உனக்கு அண்ணன் மாதிரின்னு சொல்ல வர்றேன்.."

"போச்சுடா.. அவனவன் அழகான மச்சினி இருக்காளான்னு பார்த்த பின்னாலேதான் பொண்ணே பார்க்க வர்றான்.. நீங்க என்னடான்னா... தானாய் கிடைத்த மச்சினியையும் தங்கை முறையாக்கறிங்களே.. ஆனாலும் நீங்க ரொம்ம்ம்ம்...ப... நல்ல்ல்ல்லவர்தான்... மச்சான்.."

"மச்சினியைவிட.. மச்சினியின் அக்கா அழகாயிருக்காளே..."

"பிழைச்சுக்குவீங்க... இவ்வளவு பேசுகிறவர் இத்தனை நேரமா எங்கே எஸ்கேப் ஆகியிருந்தீங்க...?"

கீதா என்னவோ விளையாட்டாகத்தான் கேட்டாள்.. அது அவனது மனக்கதவைத் தட்டிப் பார்க்கும் என்று அவள் கனவா கண்டாள்..?

'ஆமாம்... நான் தப்பித்துத்தான் போயிருந்தேன்...' அவன் மனதிற்குள் நினைத்துக் கொண்டான்...

'உன் அக்காவின் மீதான ஆசையிலிருந்து தப்பிக்க நினைத்துத்தான் ஊரை விட்டு வெளியே

போய் பதுங்கியிருந்தேன்... அவள் மீதான என் மோகத்திலிருந்து தப்பிக்க விரும்பித்தான் மண்டபத்துக்கு வராமல் பதுங்கியிருந்தேன்... அவளைத் தேடும் என் உணர்வுகளிலிருந்து தப்பிக்கத்தான் அவள் பார்வையிலிருந்து விலகி பதுங்கியிருந்தேன்...'

எதுவும் பேசாமல் மனதிற்குள் குமுறிக் கொண்டிருந்தவனை விசித்திரமாகப் பார்த்தாள் கீதா... அவன் முன்னால் விரல்களைச் சொடுக்கி...

"ஹலோ... அத்தான்..." என்று அழைத்தாள்...

நொடிப் பொழுதில் தன்னுணர்விற்கு மீண்ட பாலமுரளி..

"இது பேச்சு..." என்று புன்னகை செய்தான்...

"எதைச் சொல்றீங்க... மச்சான்... அத்தானாகி விட்டதைச் சொல்றிங்களா...? வேறென்ன செய்றது..? மச்சான்னா நீங்க தங்கச்சின்னு சொல்லி வைக்கறிங்க.. அதுக்கு அத்தானே பெட்டரில்லையா..?"

"அதுசரி..."

"ராதிகாதான் உங்களைத் தேடிக்கிட்டே இருந்தா..."

பாலமுரளிக்கு என்னவோ செய்தது... அவன் மீதான அவளது தேடலை சற்று முன் அவளது பார்வையில் அவன் உணர்ந்தவன்தான்.. இருந்தும் அவன் பேசவில்லை...

"எதுக்குன்னு கேட்க மாட்டிங்களா..?"

"எதுக்கு..?"

"கடலை போடத்தான்.. என்னிடம்தானே நீங்க வல்லவர்.. நல்லவர்ன்னு கதை சொல்வீங்க... அவகிட்ட அப்படியே மெல்ட்டாகி விடுவீங்கள்ல..."

"அது தப்பா...?"

"தப்புன்னு யாராவது சொல்ல முடியுமா..? நடத்துங்க.. நடத்துங்க... ஆமாம்.. உங்க அத்தை மகளை எங்கே காணோம்...?"

"அத்தை மகளா..? யாரது...?"

"இதுகூடத் தெரியாதா..? ஷோபாவைத்தான் கேட்கிறேன்..."

"அவளுக்கு உடம்பு சரியில்லையாம்..."

"தலைவலியா...?"

"ஆமாம்... எப்படிக் கண்டு பிடிச்ச..?" முரளி ஆச்சரியமானான்..

"உங்களுக்குத்தான் அவ தலைவலியைப் பத்தித் தெரியாது... எனக்கு ரொம்பவே தெரியும்.. ராதிகான்னு நினைச்சாலே அவளுக்கு தலைவலி வந்திரும்.. அப்படிப்பட்ட தலையை வைச்சுக்கிட்டு அவளாலே எப்படி ராதிகாவோட கல்யாணத்தில தலையைக் காட்ட முடியும்..?" கீதா சிரித்தாள்... ஏன் அவள் அப்படிச் சொல்கிறாள் என்று புரியாவிட்டாலும்.. ஏனோ.. பாலமுரளிக்கு அவளுடன் இணைந்து சிரிக்க வேண்டும் போலத் தோன்றியது...

அக்கினிக்குஞ்சை மனதில் கமந்தபடி...
அக்கினியை வலம்வந்தாள் அந்தபருவக்கிகாடி..

"மாங்கல்யம் தந்துனானே..."

அய்யர் திருமண மந்திரங்களின் முக்கியமான கட்டத்திற்கு வந்துவிட...

"கெட்டிமேளம்.. கெட்டிமேளம்..." என்று யாரோ குரல் கொடுத்தார்கள்...

கெட்டிமேளம் முழங்க... நாதஸ்வரம் ஒலிக்க.. ராதிகாவின் கழுத்தில் மூன்று முடிச்சைப் போட்டான் பாலமுரளி...

'இதுக்காக எத்தனை போராட்டம்...!'

இருவர் நெஞ்சிலும் அந்த எண்ணம் எழுந்து நின்றது...

"தம்பதி சமேதராய் அக்கினியை சுத்தி வாங்கோ" அய்யர் ஆணை பிறப்பித்தார்..

வேறு வழியின்றி அவள் கையைப் பிடித்து அக்கினியை வலம் வந்தான் பாலமுரளி...

அவனது ஸ்பரிசத்தை அறிந்தவள் ராதிகா.. அவனது தொடுகையை பரிபூரணமாக உணர்ந்தவள்...

இயல்பாக அவன் கைதொட்டாலே அதில் ஒரு இறுக்கமிருக்கும்.. வேகம் தெரியும்...

அன்று தொட்ட அவன் கை... அவையிரண்டையும் அவளுக்கு உணர்த்தவில்லை... மாறாக ஓர்விதமான விலகலை உணர்த்தியது...

ஒருகாலத்தில் அவளை பலவந்தமாக தொட்டவன் தான் அவன்... இன்று அவள் அவனின் மனைவி.. உரிமையுடன் தொடும் முதல் தொடுகையிலேயே அவனது விலகலை மிகத்தெளிவாக அவளுக்கு உணர்த்துகிறான்...

அந்த விலகல் அவளுக்கு காத்திருக்கும் வாழ்க்கை எத்தகையதாக இருக்கப் போகிறது என்பதை மிகத் தெளிவாக உணர்த்தியது...

ராதிகாவின் மனம் வலித்தது... அக்கினியை வலம் வந்து முடிந்தவுடன் அவசரமாக விலகிய அவனது கைகளைக் கண்டு அவள் துயரம் கொண்டாள்...

"பெரியவங்களின் பாதம் பணியுங்கோ..."

அடுத்த கட்டளை அய்யரிடமிருந்து வந்தது.. மேகலாவின் பாதம் பணிந்து எழுந்தார்கள்.. மேகலா வெளிப்படையாக கண்ணீர் விட்டபடி மருமகளை அன்புடன் அணைத்து அவள் நெற்றியில் முத்தம் பதித்தாள்...

'மாமியாராலே என் மகளுக்கு ஒரு பிரச்சனையும் வராது...'

கடுமை முகமுடியின் பின் ஒளிந்து கொண்டிருந்த ராஜேஸ்வரியின் மனம் ஆறுதலடைந்தது...

கிருஷ்ணமூர்த்தி... ராஜேஸ்வரியின் பாதம் பணிந்து எழுந்தபோது... கிருஷ்ணமூர்த்தி கண்கலங்கினார்.. வெளியேயாக கண்ணீரைக் காட்ட முடியாத ராஜேஸ்வரி இமைகளைக் கொட்டி கண்ணீரை சரிப்படுத்திக் கொண்டாள்...

மணமக்களுடன் தேனூத்து வீட்டிற்கு அவர்கள் போனபோது அந்த வீட்டின் பிரம்மாண்டத்தைக் கண்டு வாய் பிளந்தாள் கீதா...

"ம்மா.. சினிமாவில கூட இப்படிப்பட்ட வீட்டை நான் பார்த்ததே இல்லைம்மா.. அடேங்கப்பா.. அரண்மனை தோத்துப் போயிரும் போல இருக்கே..."

ராஜேஸ்வரிக்கும் அதே எண்ணம்தான் என்றாலும் வாய் விட்டுத் தன் வியப்பை அவள் வெளிப்படுத்த வில்லை... அப்படி வெளிப்படுத்தினால் அவள் எப்படி ராஜேஸ்வரி ஆவாள்...?

"போதும்.. போதும்.." என்று மகளை அதட்டினாள் அவள்...

"எதுக்கு அவளை அடக்கறே ராஜி..? மாப்பிள்ளை வீட்டைப் பார்க்க நீ வரமாட்டேன்னு சொல்லிட்ட... உன்

மேக்கு மதிப்புக் கொடுத்து நானும் வந்து பார்க்கலை... இப்படி பார்த்தியா.. ராதிகா.. எப்பேர்ப்பட்ட இடத்தில வாழ்க்கைப் பட்டிருக்கான்னு.. இதுக்கு அவ போன பிறவியிலே புண்ணியம் பண்ணியிருக்கணுமடி..."

கிருஷ்ணமூர்த்தி இளைய மகளுக்கு ஆதரவாகப் பேசுவதைப் போல... தன் மனதிலிருந்ததை சொன்னார்...

ஒரு முறைப்பை மட்டுமே வெளிப் படுத்திய ராஜேஸ்வரி... அலட்சியமாக வீட்டைப் பார்வையிடுவதைப் போல முகத்தை வைத்தபடி.. வீட்டைக் கற்றித் தன் பார்வையை ஓட்ட விட்டாள்...

வீட்டின் ஒவ்வொரு அங்குலத்திலும் வெளிப்பட்ட செல்வத்தின் செழுமை அவளுக்கு பிரமிப்பைக் கொடுத்தது...

'அந்த மட்டிலும் இவங்க அந்த சங்கர் குடும்பத்துக்கு ஈடாச்சவங்க இல்ல.. அவங்களைவிட பலமடங்கு பெரிய பணக்காரங்களாத்தான் இருக்காங்க...'

பெரிய மகளின் தேர்வு சோடை போனதில்லை என்பதில் அந்த தாய் மனம் நிம்மதி கொண்டதை யாரறிவார்...?

"பூஜை ரூமில விளக்கேத்தும்மா..."

மேகலா பரிவுடன் சொல்ல... ராதிகா பூஜையறையிலிருந்த விளக்கை ஏற்றி வைத்து.. கரம் குவித்து தெய்வங்களை வணங்கினாள்...

அந்த நொடியிலிருந்து அந்த வீட்டின் ஒரு அங்கமாகத் தான் மாறிப் போய் விட்டதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது...

'இனி இதுதான் என் வீடு...'

பிறப்பிடம் வேறாக... இருப்பிடம் கணவனின் வீடாக அமைய நேரிடும் இந்தியப் பெண்களின் வாழ்க்கைதான் எப்படிப் பட்ட தாத்பரியங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது...!

நேற்று வரை அவள் வீடு என்பது சென்னையில் இருந்தது.. இன்று முதல் அவள் வீடு என்பது பாலமுரளியின் வீடாக ஆகிப் போனது...

இரவு நெருங்கிக் கொண்டிருந்தது.. இடைவிடாத திருமண வேலைகளாலும்... முதல் நாளிரவு விழா நாளின் கொண்டாட்டத்தில் சரியாக தூங்க முடியாததினாலும்.. அனைவரின் கண்களும் சொக்கிக் கொண்டிருந்தன...

உணவு நேரம் முடிந்தவுடன் எல்லோருமே தூங்கச் சென்றுவிட.... ராஜேஸ்வரி கீதாவைப் பார்த்தாள்...

"அக்காவை ரெடி பண்ணனுமேம்மா..."

கீதா... ராதிகாவின் முதலிரவை நாகுக்காக நினைவு படுத்திய விதத்தில் ராதிகாவின் முகம் சிவந்தது...

"ம்ம்ம்..." என்று முணுமுணுத்தாள் ராஜேஸ்வரி...

'இந்த பாலசரஸ்வதி கொஞ்ச நேரம் இருந்து இந்த விசேசத்துக்கு ராதிகாவை ரெடி பண்ணினால் தான் என்ன..?'

மகளின் நாத்தனாரை மனதிற்குள் திட்டித் தீர்த்தாள் அவள்...

பாலசரஸ்வதி இருக்க வேண்டிய அவசியமின்றி.. மேகலாவின் உறவுக்காரப் பெண்கள் ராதிகாவை சூழ்ந்திருந்தார்கள்...

'எதற்காக இத்தனை மெனக்கெட்டு அலங்காரம் பண்றாங்க..?' ராதிகா மனம் கசந்தாள்...

எப்படியும் அவன் அவளைத் திரும்பிக் கூடப் பார்க்கப்போவதில்லை... அப்படியிருக்கையில் யார் பார்க்க இந்த அலங்காரம்...?

இதை மற்றவர்களிடம் அவளால் சொல்ல முடியுமா..?

"தூள் கிளப்பு..."

அறைவாசல்வரை கூடவந்த கீதா.. தமக்கையின் காதில் கிசுகிசுத்தாள்..

'அடிப்போடி.. நீ வேற...'

அலுப்புடன் நினைத்தபடி அறைக்குள் பிரவேசித்தாள் ராதிகா.. அவளது முதுகிற்குப் பின்னாலிருந்த கதவு மூடிக் கொண்டது... அறைக்கதவை மூடி வெளியே தாழிட்ட பெண்களின் சிரிப்புச் சத்தம் அவள் காதுகளில் கேட்டது...

அறையெங்கும் மலர்களின் நறுமணத்தோடு கூடிய ஒரு இனிய நறுமணம் பரவியிருந்தது... மெல்லிய தேக்கு மரக் கட்டிலைச் சுற்றி மலர்ச்சரங்கள் தொங்க விடப் பட்டிருந்தன... அருகிலிருந்த டியோவின் மேல் இனிய வகைகளும்... பழ வகைகளும் குவிக்கப் பட்டிருந்தன... அருகிலிருந்த மேஜை நிறைய பரிசுகள்...

'இதெல்லாம் எதுக்கு..?'

அவளுக்கு கேட்கலையாக இருந்தது.. முதலிரவு அறைக்குள் எதற்காக இத்தனைப் பழங்களை வைக்கிறார்கள் என்பதற்கான காரணம் அவளுக்கு விளங்கவில்லை...

'ஒருவேளை கதாவுக்கு இது எதற்குன்னு தெரிஞ்சிருக்குமோ...'

தெரியாவிட்டாலும் யோசித்து.. கட்டாயம் இதற்கான விளக்கத்தை அவள் சொல்லி விடுவாள் என்ற நினைவில் லேசான புன்னகையொன்று அவள் இதழ்களில் அரும்பியது...

"எதுக்குடி சிரிக்கிற...?"

காட்டமான கேள்வி காதில் விழுந்த பின்னால் தான் அறைக்குள் நின்றிருந்தவனைப் பார்த்தாள் ராதிகா...

கம்பனாலே அவள் மனதை கண்டியிழுப்பதைப் போல கம்பீரமாக இருந்து வைப்பவன்.. அன்று பட்டுவேட்டி சட்டையில் அதிகமான கம்பீரத்துடன் இருந்தான்...

கைகளை முன்னால் கட்டி... ஒற்றைக் காலை மடித்து கவரில் பதித்து சாய்ந்து நின்றிருந்தவனின் தோற்றத்தில் மயங்கிப் போனவளின் மனம் தலை பாய்ந்தது... அவனது மயக்கத்தை அவள் விழி உணர்ந்த அவள் முகம் கருத்துப் போனான்...

இப்படியொரு எதிர்பார்ப்பை அவள் விழிகள் இதற்கு முன்னால் உணர்த்தியதே இல்லை...

இதை... இதை.. இதைத்தான் அவன்.. அவளிடமிருந்து எதிர் பார்த்தான்... அவன் கண்கள் அவளைத் தேடியலைய வேண்டும்... அந்தத் தேடுதலை அவளது விழிகள் பிரதிபலிக்க வேண்டும்...

'எங்கே நானென்று..
தேடட்டும் என்னை...
சிந்தாத முத்தங்கள் சிந்த...'

அவன் மனதில் ஓடிய பாடல் வரிகளில் அவன் உடல் கூடானது...

இதோ.. அவன் நினைத்தபடி அவனுக்கான தேடலை விழிகளில் பிரதிபலித்தபடி அவள்.. அவன் கண் முன்னால் நிற்கிறாள்...

ஆனால்.. அவனால்தான் அதைக் கொண்டாடி அனுபவிக்க முடியவில்லை.. அவன் நிகழ்காலத்தின் சிலிர்ப்பை மறந்து கடந்த காலத்தின் கசடுகளில் தேங்கி நின்றான்..

'ஏன் தேடமாட்டா...' அவன் மனம் கசந்தது...

'என் கையால தாலி வாங்கிக்கிட்டா... இனி என்னைத் தேடித்தானே ஆகனும்... புருசன் நான்தானே.. இதுவே இவ கழுத்தில் நான் மூணு முடிச்சுப் போடாமு இருந்தா.. என்னை இவ இப்படித் தேடியிருப்பாளா..?' முகம் கருக்க அவளை உறுத்துப் பார்த்தான் பாலமுரளி..

அவனது முகமாறுதலில் அவள் முகமும் மாறிப் போக.. அதையும் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

'பாவி.. ஒரு பேச்சைத் தாங்கமாட்டா.. ஒரு முறைப்பைத் தாங்க மாட்டா... இப்படியிருந்து தானே என்னைப் பித்தாக்கி ஆட்டிவைச்சா... இன்னைக்கு இப்படிப் பார்க்கிறாளே... இதுக்கு முன்னாலே ஒரு நாள் ஒரு பொழுதாவது என்னை இவ இப்படிப் பார்த்திருப்பாளா...?'

அவன் மனம் அவளைக் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதை உணர்ந்தவளாக தலை கவிழ்ந்தாள் ராதிகா...

"எதுக்குச் சிரிக்கிறன்னு கேட்டேன்.. உனக்கு என் பிழைப்பைப் பார்த்தா சிரிப்பாய் இருக்கா..?" அவன் சிடுசிடுத்தான்...

'இவன் பிழைப்புக்கென்ன குறை...'

அவனது பிரம்மாண்டமான உயரத்தின் அளவைத் தெரிந்து வைத்திருந்த ராதிகா மனம் குமைந்தாள்...

"பேசுடி.. அன்னைக்கு அவன்கிட்ட மட்டும் வாய்கிழியப் பேசின..."

'என்னத்தைப் பேசினேன்...?'

முதலிரவில் இப்படியொரு முள்சாட்டையோடு எந்தக் கணவனாவது புதுமனைவியை எதிர் கொள்வானா என்ற நினைவில் ராதிகாவிற்குள் எரிச்சல் மண்டியது..

"நீயென்ன ஊமையா...?"

அவன் நிறுத்துவதாக இல்லை என்பதை உணர்ந்தவள் நிமிர்ந்து அவனைக் கூர்மையாகப் பார்த்தாள்.. அவளது பார்வையில் அவனது புருவங்கள் முடிச்சிட்டன...

"இல்லை.. நான் ஊமையில்லை.. எனக்குப் பேசத் தெரியும்.. அது உங்களுக்கும் தெரியும்..."

"அப்புறம் எதுக்காக வாய் மூடிநிற்கிறவ...?"

"ஏன் பேசனும்..? எதுக்காகப் பேசனும்..? நீங்க பேசுன்னா பேசனும்.. பேசாதேன்னா வாயை மூடிக்கனுமா..? நானென்ன உங்க அடிமையா..?"

சில நாள்களாக சிதைந்திருந்த அவளது மன நிம்மதி சரியாகி விட்டதில் அவளும் பழைய ராதிகாவாக மாறிப் பேச ஆரம்பித்து விட்டாள்..

அவனது புருவங்கள் மெச்சுதலாக உயர்ந்து இறங்கின...

"அடேங்கப்பா.. சவுண்டெல்லாம் பலமாயிருக்கு.. என்ன..? கழுத்தில் மூணு முடிச்சு விழுந்துட்ட தெனாவெட்டா..?"

"ஆமாம்.. அதுக்கு இப்ப என்னாங்கறிங்க..?"

"பார்த்துடி.. உன்னை அடக்க குலதிலகம்ன்னு என் அம்மா நம்பிக்கிட்டு இருக்காங்க.. கொஞ்சம் அடக்கியே வாசி..."

"டிரை பண்றேன்..."

"எதுக்கு சிரிச்சே...?"

"எதுக்கோ..."

"திமிரா..?"

"ஆமாம்.. நீங்க பே. ட சாப்பாட்டைச் சாப்பிட்டு வளர்ந்த திமிர்..."

"வேணாம்டி..."

"எது வேணாம்..? நான்தானே..? இருந்துட்டுப் போங்க... எனக்கென்ன போச்சு..? இனி நான்தான் உங்க வொய்ப்.. எனக்கு இது போதும்..."

அவனைக் கண்டுகொள்ளாமல் கட்டிலில் சரிந்தாள் ராதிகா...



நீ தொட்டு விட்டு விட்டால்..
நானும் உன்னை விடுவேனா...?

அப்படியே அவள் கன்னத்தில் நான்கு அப்பு.. அப்பினால் என்ன என்ற கோபம் அவனுக்குள் கிளர்ந்தது..

அது அவர்களின் முதலிரவு நேரம்.. அவனோ கோபத்துடன் விலகி நிற்கிறான்.. அவள் காலில் விழுந்து கதறுவாள் என்று பார்த்தால் அவளோ அவனைக் கண்டு கொள்ளாமல் கட்டிலில் படுத்து கண்களை மூடித்தூங்க ஆரம்பித்தாள்...

"ஏய்ய்... எழுந்திருடி..." அவன் அதட்டினான்...

"எதுக்கு..?" அவள் அசையாமல் இமைகளை மட்டும் லேசாகத் திறந்து கேள்வி கேட்டாள்...

"இங்கே ஒருத்தன் கத்திக்கிட்டு நிற்கிறேன்.. நீ எனக்கென்னன்னு தூங்கப் போறியா...?"

"ஹலோ.. நானா உங்களைக் கத்தச் சொன்னேன்..?"

ராதிகா நிதனாமாகக் கேட்க.. அவன் திகைத்துப் போனான்.. அவள் சொல்வது நியாயம்தான்... அவள் அவனைக் கத்தச் சொல்லவில்லை தான்...

'அதுக்காக... இவ கண்டுக்காம கட்டையைத் சாய்ப்பாளா..'

அவனுக்குள் கோபம் தலைக்கேறியது...

"நான் பார்த்தாலும் பார்த்தேன்... உனைப் போல ஒருத்தியைப் பார்த்ததே இல்லைடி..."

"இதென்னங்க வேடிக்கையாய் இருக்கு... டபிள் ஆக்டிங்கெல்லாம் சினிமாவில்தான் வரும்.. நானென்ன ரெட்டைப் பிறவியா..? என்னைப் போல இன்னொருத்தி எப்படி இருப்பா..?"

"இங்கே பாரு... நான் ஏற்கனவே கடுப்பில் இருக்கேன்... நீ மேலே மேலே கிளப்பி விடாதே..."

"கிளப்பி விட்டாலும்..."

அவள் எரிச்சலுடன் முணுமுணுத்த விதத்தில் அவனது கோபம் பன்மடங்கு பெருகிப் பல்கிப்பரவியது...

"இந்த எகத்தாளமெல்லாம் என்னிடம் வேணாம்..."

"ஒகே.. வேணாம்..."

"என்னத்தை வேணாம்..?"

"இந்த எகத்தாளமெல்லாம் உங்ககிட்ட வேணாம்..."

"என்னடி..? சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்கிறயா...? முதலில் எழுந்திரு..."

அவன் அதட்ட.. அவள் எழுந்து கொள்ளாமல் மோகனமாய் ஒருக்களித்துப் படுத்து அவன் முகம் பார்த்தாள்...

"பாருங்க.. எனக்குத் தூக்கம் வருது... எழுந்து நின்னா கட்டாயம் மயக்கம் போட்டு உங்க மேலேயே சரிஞ்சுருவேன்.. தேவையா..?"

மைதீட்டிய விழிகளை விரித்து.. குடை போன்ற இமைகள் படபடக்க அவள் கேள்வி கேட்ட விதத்தில்... அவனுக்குள் உணர்வுகள் கிளர்ந்து எழுந்தன... ஆமாம்.. நீ எனக்கு தேவைதான் என்று அவனது செல்கள் கூவின... தன்னைக் கட்டுக்குள் கொண்டு வர முயன்றபடி அவன் அவளை முறைத்துப் பார்த்தான்...

"ஏய்ய்.. நீயே எனக்குத் தேவையில்லைன்னு ஒதுக்கி வைச்சிருக்கேன்.. இதில தேவையான்னு கேள்வி வேற கேட்கறியா...?"

"ஹலோ.. நீங்கதான் என்னை ஒதுக்கி வைச்சிருக்கிறதா சொல்லிக்கிட்டிருக்கீங்க... நான் உங்களை ஒதுக்கி வைக்கலை... அப்படிச் சொல்லவும் இல்லை..."

ஒய்யாரமாக விழிகளைச் சுழற்றியவளின் கண்களில் அப்பட்டமான அழைப்பிருந்தது... ருசியான பால் முன்னாலிருக்க.. ருசிகண்ட பூனை தவித்தது... அவளின் அழைப்பை ஏற்றுக் கொள்ளலாமா என்ற அவசர முடிவை மனம் எடுத்து பின் அதைவிட அவசரமாய் அதை அழித்தது...

'ஊஹும்.. இவளைக் கண்ணுக்கு முன்னாலே வைச்சிருந்தா வேலைக்கு ஆகாது.. முதவேலையா இவளை ரூம் விட்டு ரூம் கடத்தியாகனும்..'

அவள் விடும் மன்மத மலர் அம்புகளால் தைக்கப்பட்ட அவனது உள்ளம் வலி சொல்லியது...

"இதோ பார்..."

அவளுக்கு விளக்கம் சொல்லப் பார்க்கத் சொன்னவன் அதைத் சொன்னபின்னால் ஏன் அப்படிச் சொல்லித் தொலைத்தோம் என்று எகத்துக்கும் வருத்தப் பட்டுப் போனான்...

கம்மாவே அவனை ஒரு மார்க்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தவள் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் கம்மா இருப்பாளா..? விழுங்கி விடுவதைப் போல அவனையே பார்க்க ஆரம்பித்தாள்...

"எதுக்குடி இப்படிப் பார்க்கிற..?" பல்லைக் கடித்தான் பாலமுரளி...

அவள் பார்வையால் அவன் படும் இம்சையை அவன்தானே அறிவான்..? அவளோ பால்வடியும் முகத்துடன் அப்பாவியாய் முகத்தை வைத்தபடி...

"நீங்கதானே உங்களைப் பார்க்கச் சொன்னீங்க..?" என்று நியாயம் கேட்டாள்...

"அடேங்கப்பா... அப்படியே புருசன் சொல்லைத் தட்டாத பத்தினி தெய்வமில்ல நீ..."

"சரியாச் சொன்னீங்க போங்க..."

"நான் சொல்றது இருக்கட்டும்.. முதல்ல நீ எழுந்திருச்சு உன் ரூமுக்கு போ..."

அந்த அறையை ஒட்டியிருந்த உடைமாற்றும் அறையைக் காட்டினான் பாலமுரளி...

"ஏன்...?" அவள் அமர்த்தலாக வினவினாள்...

"ஏன்னா..?" அவன் முறைத்தான்...

"இது நம்ம பெட்ரூம்.. அதுடிரெஸ்ஸிங் ரூம்.. அங்கே போகச் சொல்லி கையைக் காட்டினா ஏன்னு கேட்காம என்ன செய்வாங்க..?"

"அப்படியா மேடம்.. அப்போ விளக்கம் சொல்லி வேண்டியதுதான்... இது என் பெட்ரூம்.. உனக்கு இங்கே இடமில்லை..."

"அப்போச்சரி..."

அவள் உடனடியாக எழுந்து கொண்டாள்.. வாய் வளர்க்காமல் அவ்வளவு துரிதத்தில் அவனது முடிவை அவள் ஏற்றுக் கொண்டதில் அவனுக்குள் மெலிதான ஏமாற்றத்தின் நிழல் படிந்தது...

'இவ யாரு..? மோகினிப் பேயாச்சே...'

அவன் அதற்கும் அவளை மனதுக்குள் திட்டித் தீர்த்தான்...

"ஏய்ய்.. நில்லுடி..."

அவன் அதட்டினான்.. அவள் நின்றாள்...

"உன்னை எங்கே போகச் சொன்னேன்.. நீ எங்கே போற...?"

"ஹலோ.." அவள் மிதப்பாக பதில் சொல்ல ஆரம்பிக்க...

'ஹலோவா..? இதை ஒன்னைக் கண்டு பிடிச்சுத் தொலைச்சிருக்கா...' என்று அதற்கும் கடுப்பானான் பாலமுரளி...

"நீங்க வான்னா வாரதுக்கும்.. போன்னா போறதுக்கும் நானென்ன உங்க தோட்டத்தில் விளைஞ்சிருக்கிற கிள்ளுக்கீரையா..?"

"கீரையா..? நீயா...? அதைத் தினமும் சேர்த்துக்கனும்னு சொல்லி வைச்சிருக்காங்க.. உன்னையோ.. வேணவே வேணாம்ன்னு தள்ளி வைச்சிருக்கேன்.. இந்த லட்சணத்தில கிள்ளுக் கீரையான்னு நியாயம் வேற கேட்கிறயா...? நீ விசச் செடிடி.."

"அப்படியா..? அப்போ எனக்கு இந்த ரூமில என்ன வேலை..? நான் வெளியே போறேன்..."

"போயி..?"

"அத்தை ரூமில அவங்ககூட படுத்துத் தூங்கறேன்..."

ராதிகா நிதானமாக அணுகுண்டைத் தூக்கி வீச அவன் அரண்டே போனான்..

"அடியேய்ய... இது புருசன்.. பெண்டாட்டி விவகாரம்டி...."

"அதுக்கு...?"

"இதெல்லாம் நாலு சுவத்துக்குள்ள இருக்கனும்..."

"இருக்கனும்தான்.. ஆனா நாலு சுவத்துக்குள்ளே தான் எனக்கு இடமில்லேன்னு சொல்கிறிங்களே..."

"உனக்கொரு ரூமை கை காட்டினேனா இல்லையா...?"

"நீங்க கைகாட்டின ரூமுக்குள்ள போயி முடங்கிக்க நானொன்னும் உங்க வீட்டு செல்லப் பிராணியில்லை.. நீங்க தொட்டுத் தாலி கட்டின பெண்டாட்டி..."

"அதுக்கு இப்ப என்னாங்கிற...?"

அவன் மிதமிஞ்சிய எரிச்சலுடன் கேட்டான்.. அவள் மிதப்பாக அவனை பார்வையிட்டபடி பதில் சொன்னாள்...

"எனக்கு ஒரு பழக்கமிருக்கு..."

"அதையெதுக்கு என்கிட்ட வந்து சொல்ற..?"

"வேணும்னா கதவைத் திறந்துக்கிட்டுப் போயி அத்தைகிட்ட சொல்லவா..?"

அவள் அப்பாவியாய் கேள்வி கேட்க... அவன் அடங்கிப்போனான்...

"சொல்லித் தொலை..."

"நான் தங்கை.. தம்பின்னு கூடப் பிறந்தவர்களோடு கலகலப்பா இருந்து பழகினவ..."

"நானும் அக்காகூடப் பிறந்தவன்தான்...."

"யார் இல்லேன்னு சொன்னது...?"

அவள் இடக்காக கேள்வி கேட்க... அவனுக்கு பற்றிக் கொண்டு வந்தது... இவள் மட்டும்தான் கூடப் பிறந்தவங்களின் பெருமையைப் பேசனுமா.. இவன் பேசக்கூடாதா..?

"ஏண்டி... இப்ப எதுக்காகடி உங்க வீட்டு ராமாயணத்தை இங்கே வந்து பேசற..? நான் சொல்லச் சொல்லிக் கேட்டேனா...?"

"கேட்கலைதான்.. ஆனாலும் நான் சொல்லியாகனுமே...."

"அதுதான் ஏன்...?"

"நீங்க என்னை வேற ரூமுக்கு நாடு கடத்தறிங்களே..."

"ரூம்தாண்டி கடத்தினேன்.. நாடு கடத்தலை..."

"எனக்கு ரெண்டும் ஒன்னுதான்... தனியாத் தூங்கிப் பழக்கமில்லாதவளை அந்த ரூமில் போய் படுத்துத் தூங்கச் சொல்கிறிங்களா...? இருங்க... இதுக்கொரு நியாயத்தை இப்பவே அத்தையிடம் போயி கேட்கிறேன்..."

"ஏய்ய்... அடங்குடி... என்னதாண்டி உன் பிரச்னை..?"

"நான் இங்கேதான் படுப்பேன்..."

"நான் பால்கனிக்குப் போயிருவேன்..."

"அப்போச்சரி... நான் அத்தையிடம் போயிடறேன்..."

"அடியேய்.. ஏண்டி என் உயிரைக் குறைக்கிற..?"

"எனக்கு அதெல்லாம் தெரியாது.. நான் தனியாய் படுக்க மாட்டேன்னா மாட்டேன்தான்.. ஒன்னு.. உங்க பக்கத்தில படுத்துத் தூங்கறேன்... இல்லைன்னா.. அத்தை ரூமில் போய் தூங்கறேன்..."

இப்படி வழக்கடிப்பவளை என்ன செய்வதென்று தெரியாத கொலை வெறியோடு கை பிசைந்தான் பாலமுரளி...

மகனின் திருமணத்திற்காக காத்திருந்த மேகலாவின் தவிப்பு எத்தகையது என்று அவனுக்கு மிக நன்றாகவே தெரியும்....

அவன் ஆசைப்பட்டான் என்ற ஒரே காரணத்திற்காகவே செல்ல மகளையும் பகைத்துக் கொண்டு... ராதிகாவை அவன் திருமணம் செய்து கொள்ள அவள் இசைந்தாள் என்பதையும் அவன் அறிவான்...

அவனது இன்பமான இல்லற வாழ்வில்தான் மேகலாவின் மனநிம்மதி அடங்கியிருக்கிறது என்பதை அவன் நன்றாகப் புரிந்து வைத்திருந்தான்... கூடுதலாக அவளின் இதயநோய் வேறு அவனை அச்சுறுத்தியது...

அப்படிப்பட்டவளிடம் போய் ராதிகா வழக்கு வைத்தால் என்ன ஆகும் என்று அவனுக்குத் தெரியாதா என்ன..?

"படுத்துத் தொலை..."

"நீங்க...?"

"இங்கேதாண்டி படுக்கறேன்.. போதுமா..? ஆனா இதுதான் சாக்குன்னு கையைத் தூக்கிப் போட்டேன்.. காலைத் தூக்கிப் போட்டேன்னு ஆரம்பிச்சேன்னு வைய்யி... அப்புறம் நடக்கறதே வேற..."

"ஹலோ... இங்கே யாரும் அப்படிச் செய்ய மாட்டாங்க..."

அவள் ரோசத்துடன் சொன்னதும் பாலமுரளி கட்டிலுக்கு அடியில் யாரையோ தேடுவதைப் போல பாவனை செய்தான்...

"என்ன..?" அவள் குழம்பினாள்...

"யாரும்ன்னு சொன்னியே... இங்கே நீயும் நானும் தானே இருக்கோம்.. வேற யாரும் எனக்குத் தெரியாம ஒளிஞ்சிருக்காங்களோன்னு தேடிப் பார்த்தேன்..."

"ஜோக்கு..? எனக்கு சிரிப்பே வரலை..."

"அப்பாடி.. நிம்மதியாப் போச்சு.. உன் சிரிப்பை பார்க்கிற கொடுமையில இருந்து தப்பிச்சிட்டேன்..."

"நான் உங்களைத் தொட மாட்டேன்.. ஆனா நீங்க சொன்ன ரெண்டு வேலையையும் நீங்களே செய்ய மாட்டிங்கன்னு என்ன நிச்சயம்..?"

அவள் வம்பிழுக்கத்தான் அவனைக் கேள்வி கேட்டாள்.. வார்த்தைகளை வளர்த்து அவனது

கோபத்தீயை தூண்டி விட்டு அதில் குளிர் காயும் நோக்கத்துடன் தான் அந்தக் கேள்வியைக் கேட்டாள்...

அவன் நிதானமாக அவளைப் பார்த்தான்.. ஊடுருவும் அந்தப் பார்வையில் அவளது முதுகுத்தண்டு ஜில்லிட்டு.. குளிர் அவள் மனதில் பரவியது.. லேசான நடுக்கத்துடன் அவனைப் பார்த்தாள்...

"தொட மாட்டேன்டி..." அவன் கண்கள் ஜொலித்தன...

"உன்னை நிச்சயம் தொட மாட்டேன்... உன்மேல் தேவையில்லாம என் கைவிரல் கூடப் படாது... ஊருக்குத்தாண்டி நான் உனக்குப் புருசன்.. இந்த நாலு சுவத்துக்குள்ள நீ யாரோ... நான் யாரோ... ஊர் பார்க்க உன்னைத் தொட வேண்டிய சமயத்தில தொடலாம்... அது வெறும் கடமைக்குத்தான்... ஆசையாய் இந்த ரூமுக்குள்ளே நானாய் உன்னைத் தொட மாட்டேன்..."

அவள் விக்கித்து நின்றுவிட.. அத்தோடு பேச்சு வார்த்தை முடிந்தது என்பதைப் போல அவளுக்கு முதுகு காட்டி அவன் படுத்துவிட்டான்...

அங்கே நிற்க முடியாமல் துடித்துப் போனாள் ராதிகா... நெருப்பாய் அவனது விலகல் அவளைத் தகித்தது... காலுக்கு கீழ் சுடுகங்குகள் இருப்பதைப் போலக் கனன்றது.. அந்த அறையை விட்டு ஓடிவிடத் தவித்தாள்...

'பொறு ராதிகா..' அவள் மனம் அதட்டியது...

'ஓடிப்போனால் எல்லாம் முடிந்து விடுமா..? எங்கே ஓடுவாய்..? எதிலிருந்து உன்னால் தப்பிக்க முடியும்..? இன்று விலகி ஓடினால் இந்த விலகலே நிரந்தரமாகி விடாதா..? இது போர் களத்தில் நீ பின் வாங்கக் கூடாது ஓடாதே.. அவனை அவன் போக்கிலேயே எதிர்கொள்.. அவன் கேட்ட... அவனுடைய பத்தினிப் பெண்ணாக வாழ்ந்து காட்டு... இதுதானே உன் வாழ்வின் ஆரம்பம்..? இந்த ஒரு நாளோடு உன் வாழ்நாளெல்லாம் முடிந்து விட்டதா..? வாழ்க்கை யாரையும் வஞ்சிப்பது இல்லை.. வாழ்ந்து காட்டு.. இந்த நாள் உனக்கு வசப்படாமல் போகலாம்.. வரும் நாளில் ஏதாவது ஒருநாள் உனக்கான நாளாக இல்லாமல் போய் விடுமா..? அந்தநாள் வரும் வரைக்கும் நீ இருந்து பிழைக்க வேண்டாமா..?'

கட்டிலின் அந்த ஓரமாக அவன் படுத்திருக்க... இந்த ஓரத்தில் கருண்டு படுத்தாள் ராதிகா... இமை மூடிய விழிகளிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்தோடியது... அதைத் துடைக்க முடியாமல் அவளும்... அவளது கண்ணீரை அறியாமல் அவனும்... உறக்கத்தை தொலைத்து அந்த இரவைக் கழித்தனர்...

79

நீ பாடும் பாடல்... எனக்காகத்தானா..?
நீ பேசும் பேச்சு... நான் கேட்கத்தானா..?

தலையின் ஈரம் காய... விரித்து விடப்பட்ட கூந்தலுடன் மாடிப்படிகளில் இறங்கி வந்த மருமகளின் தோற்றத்தில் மகிழ்ந்து போனாள் மேகலா...

"காபி சாப்பிடும்மா..."

மருமகளுக்கு காபி குடித்து... அவள் குடித்து முடித்ததும்... அவள் கையிலேயே மகனுக்கான காபித்தம்ளரைத் திணித்து மீண்டும் மாடியறைக்கு பற்றி விட்டாள் மேகலா...

"காப்பி..."

அவள் வருவதற்கு முன்னாலேயே எழுந்து உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தவனின் முன்னால் காபித்தம்ளரை நீட்டினாள் ராதிகா...

"வைச்சுட்டுப் போ..."

அவள் முகம் பார்க்காமல் அவன் சொல்ல.. அவளுக்கு என்னவோபோல ஆகிவிட்டது...

'நானென்ன இவனுக்கு வைத்த ஆளா...?'

கோபத்துடன் அருகிலிருந்த மேஜையின் மேல் அவள் காயினை வைத்த விதத்தில் காயித் தம்ளர் ஓசையெழுப்பியது...

"ஏய்ய்..."

அறையை விட்டுவெளியேற இருந்தவள் அவன் அழைப்பினில் நின்று முறைத்தாள்...

"என் பெயர் 'ஏய்ய்' இல்லை..."

"ஒஹோ... நான் ஏய்ய்ன்னு சொன்னதில உன் கிரிடம் இறங்கி விட்டதோ..."

"உங்களுக்கு என்ன வேணும்..?"

"எனக்குன்னு இந்த சுத்து வட்டாரத்தில ஒரு மரியாதை இருக்கு..."

"இருக்கட்டும்... அதையெதுக்கு வேலைமெனக்-கெட்டு என்னிடம் வந்து சொல்கிறிங்க..."

"பெரிய பெரிய ஆளுகளே என்னிடம் பார்த்துத்தான் பேசுவாங்க...."

"பேசட்டும்.. எனக்கென்ன வந்துச்சு..?"

"அப்படியெல்லாம் எளிசா நீ சொல்லிரமுடியாது... இந்த ஊரு.. உலகத்துக்கு நீ என் பெண்டாட்டி..."

'உனக்கு மட்டும் நான் தங்கச்சியா...?'

கேட்க நினைத்ததை கேட்காவிட்டால் அவள் ராதிகா இல்லையே... அவள் கேட்டே விட்டாள்... அவன் பல்லைக் கடித்தான்...

"அடிச்சுப் பல்லைக் கழட்டி விடுவேன்... என்னடி பேச்சுன்னு இப்படிப் பேசி வைக்கிற...?"

'எரியுதில்ல.. இப்படித்தானே எனக்கும் இருந்திருக்கும்...?'

அவள் இமை கொட்டியவளாக அறியாதவளைப் போல கேள்விவேறு கேட்டாள்...

"எதுக்கு இப்படிக் கோபப்படறிங்க..? அப்படி நானென்ன கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்டுட்டேன்..? நீங்கதானே இந்த ஊரு உலகத்துக்கு முன்னாடி நான் உங்க பெண்டாட்டின்னு சொல்லி வைச்சீங்க... அப்ப.. உங்களுக்கு நான் யாருங்கிற கேள்வி எனக்குத் தோணுமா.. தோணாதா..?"

"தோணும்.. தோணும்... ஏன் தோணாது... இங்கே பாரு..."

எதைச் சொல்லக் கூடாது என்று அவன் நாக்கைக் கட்டுப் படுத்தி வைத்திருந்தானோ.. அதை அவன் சொல்லி வைக்க.. அவள் உடனே கண்களை அகல விரித்து அவனை இமைக்காமல் பார்த்து வைத்தாள்..

'ஆரம்பிச்சுட்டாளா.. எப்போ... எப்போன்னு காத்துக்கிட்டு இருந்திருப்பா போல... உடனே மொச்சைக்

கொட்டை கண்ணை முழிச்சுக்கிட்டு பார்வையில் ஆரம்பிச்சிருவாளளே...'

"ஏய்ய்..."

"திரும்பவும் 'ஏ'யா...? என் பெயர் 'ஏய்' இல்லை... ராதிகா..."

"அதைச் சொல்லிட்டாலும்..."

"நீங்க சொல்லாத ஆளா..?"

"பழையகதையை இழுக்காதே..."

"சரி... இழுக்கலை... நீங்க விசயத்தைச் சொல்லுங்க.."

"எனக்கு மரியாதை ரொம்பவும் முக்கியம்... இப்படி காபித் தம்ளரை ணங்குன்னு வைக்கிறது.. சாப்பிடுற தட்டை டொம்முன்னு வைக்கிறதையெல்லாம் என்கிட்ட வைச்சுக்காதே..."

எதற்காக அவன் இத்தனை பீடிகைகளைப் போட்டான் என்பது விளங்க.. ராதிகா அவனை உறுத்துப் பார்த்தாள்...

"அப்படிங்களா பாஸ்.. மரியாதை உங்களுக்கு மட்டும் தான் சொந்தமா..? எனக்கு இல்லையா...?"

"இந்த பாலமுரளியின் பெண்டாட்டிக்கு மரியாதை என்னைக்குமே குறையாது..."

"அடேங்கப்பா.. கிருஷ்ணமூர்த்தியின் மகளா இருந்தா மட்டும் எனக்கு மரியாதை குறைஞ்சிருமா..?"

"ஏண்டி.. விதண்டாவாதத்துக்கு பிறந்தவளே.. ஒரு சொல்லில் நீ அடங்கவே மாட்டியா...?"

"எனக்கும் மரியாதை இருக்கு பாஸ்.. ஆனாஎப் பட்ட உங்க அத்தை மக ஷோபாவே என்கிட்ட அடக்கித்தான் வாசிப்பா.. நீங்க என்னடான்னா.. காபியைக் கொண்டு வந்தா கையிலகூட வாங்கிக்காம அப்படி வைச்சிட்டுப் போங்குறிங்க... நானென்ன உங்க வீட்டு வேலைக்காரியா..? எனக்கும் கோபம் வரும்... கோபம் வந்தா அதை உங்ககிட்ட காட்ட முடியுமா..? யாரு நீங்க... இந்த தென்காசிப் பட்டினத்துக்கு பட்டம் கட்டி விட்டிருக்கிற ராஜா.. உங்ககிட்ட வாயைத் திறக்க முடியுமா...? அதான் கையில் அகப்பட்டது மேலே என் கோபத்தைக் காட்டறேன்..."

அவள் விசுக்கென்று வெளியில் சென்றுவிட. அந்த அறையே வெறுமையானதாக ஆகிவிட்டதைப் போல உணர்ந்தான் பாலமுரளி.. அவள் வைத்து விட்டுப் போயிருந்த காபியை எடுத்து உறிஞ்சியவனுக்கு என்றும் இல்லாத வகையில் அன்று அதிகமாகவே காபி ருசித்தது...

'செம வாய்...' லேசாக சிரித்துக் கொண்டான்...

குளித்து உடைமாற்றி அவன் சாப்பிட வந்தபோது... ஹாலில் குழுமியிருந்த உற்றவினர்கள் அவர்களுக்கிடையே நடந்த பேச்சு வார்த்தைகளை நிறுத்திவிட்டு அவனைத் திரும்பிப் பார்த்தனர்..

சாப்பிடப் போகாமல் அவர்கள் மத்தியில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தவனுக்கு வழக்கம் போல எல்லா இடங்களிலிருந்தும் அழைப்புக்கள் வரத் துவங்கி விட்டன...

"உரம்தானே... நம்ம உரக்கடையில நேத்தே லோடு வந்து இறங்கியிருக்கனுமே... போய் எடுத்துக்கங்க..."

"அறுத்து வைச்ச கல்லை முதல்ல எண்ணி முடிங்க.. அப்புறமாய் லாரியில ஏத்தலாம்... ஒரு செங்கல் கூட வீணாகப் போயிரக்கூடாது..."

"சொல்லிட்டேன்ங்க... இந்நேரம் அவங்க அனுப்பி வைச்சிருப்பாங்க... நீங்க கையிருப்பை கணக்கில் பாருங்க.. பட்டு ஜவுளி வியாபாரம்ன்னா சும்மா இல்லை..."

"நீ எதுக்கு இருக்க...? மில்லில ஒரு பிரச்னைன்னா வேடிக்கை பார்த்துக்கிட்டு சும்மா இருப்பியா... பேசித் தொலைக்க வேண்டியது தானே..."

அவன் செல்போனைக் காதுக்கு கொடுத்தபடி வாசல்பக்கம் நகர ஆரம்பிக்க மேகலா கவலையானாள்..

அவளது கவலைக்கான காரணம் என்னவாக இருக்கக் கூடும் என்று ராதிகாவிற்கு விளங்கவில்லை..

"என்னத்தை...?"

"அவன் வாசப்பக்கம் போனா.. அப்படியே வேலை ஞாபகத்தில சாப்பிடாமப் போயிருவான்ம்மா... நாமளா பிடிச்சு வைச்சு எதையாவது வயித்தில போட்டு அனுப்பி வைச்சாத்தான் உண்டு..."

"நிஜமாகவா...?"

ராதிகாவிற்கு அவனது உயரம் தெரியும்.. இப்படி மூச்சுவிடக் கூட நேரமில்லாத வேலைப் பளுவில் மூழ்கியிருப்பவன் என்று அதுவரை தெரியாது.. ஒரு மனிதன் சாப்பிடக்கூட மறந்து விடுவானா என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.. அவளறிந்த வரையில் இரவு பகல் என்று பாராமல் சாப்பாடு தூக்கத்தை மறந்து வேலையில் மூழ்குபவர்கள் விஞ்ஞானிகள் மட்டும் தான்.. இன்று தான் ஒரு தொழிலதிபனும் அவ்வாறு இருக்கக்கூடும் என்பதை அவள் கண்கூடாகக் காண்கிறாள்...

"கூப்பிடலாமா அத்தை..."

"போன் பேசிக்கிட்டு இருக்கானே..."

"ஏன்..? போன் பேசினா என்ன..?"

"அவன் போன் பேசறப்போ நாம ஊடே பேசினா அவனுக்கு பழியா கோபம் வரும்..."

"அப்ப.. என்னதான் வழி...?"

இப்படிக் கேட்ட மருமகளை புன்சிரிப்புடன் பார்த்தாள் மேகலா...

"நீதான் வழி..." என்று அவள் கன்னத்தில் தட்டினாள்...

"நானா..."

"ம்ம்ம்.. காதலிச்சு கட்டிக்கிட்ட புதுப்பெண்டாட்டி முன்னாலே வந்து நின்னா.. எந்த மடையனாவது போனில பேசிக்கிட்டு இருப்பானா..?"

உங்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான் என்று சொல்லத் தோன்றியது ராதிகாவிற்கு... மற்றவர்கள் போனால் கூட அவன் போனால் போகிறதென்று போனை காதை விட்டு எடுக்கக் கூடும்.. அவள் முகத்தைப் பார்த்து விட்டால் அவ்வளவுதான்.. வைக்க நினைக்க போனைக் கூட இறுக்கிப் பிடித்தபடி பேச்சை வளர்க்க ஆரம்பித்து விடுவான்...

இதை இந்த அம்மாவிற்கு யார் புரிய வைப்பது என்றிருந்தது ராதிகாவிற்கு... இதை அவளால் வெளியில் சொல்லவும் முடியாது..

அவள் நிலைமையை உணராத மேகலா ஆதுரமாக புன்னகைத்தபடி...

"போம்மா..." என்றாள்...

அதற்கு மேலும் தயங்கி நின்றால் மேகலாவின் மனதில் சந்தேக மேகம் சூழ்ந்து விடக் கூடும் என்று தோன்றியதால் ராதிகா தயக்கத்துடன் வாசலுக்குப் போன பால முரளியைத் தேடிப் போனாள்...

மேகலா சொன்னதைப் போலவே... காதிலிருந்த செல்போனை எடுக்காமல் பேசியபடி கார்கதவைத் திறந்து கொண்டிருந்த பாலமுரளி அவளைக் கண்டதும் புருவங்களை உயர்த்தினான்...

அவன் கையிலிருந்த போனை நோக்கி அவள் கட்டு விரலை நீட்ட... அவன் போனை அணைத்து அவள் கையில் கொடுத்தான்...

"சீக்கிரமாய் பேசிட்டுக் கொடு... எனக்கு நேரமாகுது... ஆமாம்... உன் போன் எங்கே போச்சு...?"

இது வேறா என்றிருந்தது ராதிகாவிற்கு...

"ம்ம்... குருவி தூக்கிக்கிட்டு போயிருச்சு..." அவள் நொடித்தாள்...

பாலமுரளி சுற்றிலும் பார்வையை ஓடவிட்டான்... மற்றவர்கள் தள்ளி நின்றாலும்.. அவர்கள் இருவரையும் தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது புலப்பட.. முகம் மாறாமல் அடிக்குரலில் சீறினான்...

"உனக்கு எத்தனை தடவை சொன்னாலும் மண்டையில ஏறவே ஏறாதா..? அறிவுங்கிறது இருக்கா.. இல்லை.. சுத்தமாகவே காலியாகிருச்சா..? உன் கழுத்தில் தாலியைக் கட்டிட்டா.. உனக்கு நானென்ன விளையாட்டுப் பிள்ளையா..?"

"இல்லவே இல்லை.. யாரு நீங்க..?"

"அந்த நினைப்பிருந்தா இப்படி பேசிவைப்பியா..?"

"ஹலோ..."

"அடி வாங்கப் போறடி..."

"எதுக்கு பாஸ் இப்படிக் கோவிச்சுக்கறிங்க...?"

"ஒன்னு ஹலோன்னு போன் பேசுவ... இல்லைன்னா கொள்ளைக் கூட்டத் தலைவனை அடியாள் கூப்பிடற மாதிரி பாஸ்ன்னு கூப்பிட்டு வைப்ப.. உன்கிட்ட படிக்கப் படிச்சு சொல்லியிருக்கேண்டி..."

"என்னத்தை சொன்னீங்க..."

"இந்த ஊரு உலகத்துக்கு முன்னாலே நான் உனக்குப் புருசன்னு..."

"தனிருமில் நீங்க யாரு மச்சான்..? அந்நியனா..?"

அவள் சிரிக்காமல் கேட்டு வைக்க.. அவனுக்கு காத்திருந்த வேலைகளைப் பற்றிய நினைவு ஓடியே போய் விட்டது...

இப்படி எக்குத்தப்பாய் கேள்வி கேட்பவளை என்னதான் செய்யலாம் என்ற யோசனையுடன் அவளை அவன் உற்றுப்பார்க்க.. அவளோ...

"போங்க மச்சான்... என்னை இப்படி உத்து உத்துப் பார்க்காதீங்க... எனக்கு வெட்கம்.. வெட்கமா வருது..." என்று சொல்லி வைத்தாள்...

அவனுக்கு சிரிப்பு வந்து விட்டது.. அவள் முன்னால் சிரித்து வைக்கக்கூடாது என்ற கதாரிப்புடன் கடினமாக முகத்தை வைத்துக் கொண்டான்...

"இப்ப உனக்கு என்னதான்டி வேனும்..?"

"நீங்க மட்டும் அடிக்கடி இப்படிக் கேட்கலாமா..?"

"எப்படி...?"

"உனக்கென்ன வேணும்.. உனக்கென்ன வேணும்ன்னு கேட்டு வைக்கறிங்க.. எனக்கு என்ன வேணும்கிறதைச் சொன்னா உடனே கொடுத்துட்டுத் தான் மறுவேலை பார்ப்பீங்களா..?"

அவள் ஒயிலாக புருவங்களை உயர்த்த.. அவனுக்கு உலகமே அழகு மயமானதாக ஆகிவிட்டதைப் போலத் தோன்றியது...

அவள் அவனுக்கு வேண்டாத பெண்டாட்டி என்ற நினைவே அவனுக்கு மறந்து போய்விட.. ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்து வைத்தான்...

"மச்சான்.. மச்சான்ங்கறியே.. நீ சென்னையில பிறந்து வளர்ந்தவளா..?" அவளைப் பார்வையில் சாப்பிட்டபடி அவன் கேட்டான்...

"ஏணாம்..? தேனூத்தில் பிறந்தவங்க மட்டும்தான் மச்சான்ங்கிற வார்த்தைக்கு உரிமைக் காரங்களா..?" அவள் ஒற்றைப் புருவத்தை உயர்த்தி இறக்கினாள்...

"ஊஹரீம்.. நாங்கள்லாம் வேற மாதிரிச் சொல்லுவோம்..."

"ஹை.. யாருகிட்ட காது குத்தறிங்க... இப்பத்தான் தோட்டக்காரரோட வொய்ப் அவரைப் பார்த்து மச்சான்னு கூப்பிட்டுச்சு..."

"நாங்கள்லாம்ன்னா.. எங்க குடும்பத்திலன்னு அர்த்தம்டி..."

"அப்படிச் சொன்னாத்தானே எனக்குப் புரியும்..?"

"அப்படிச் சொல்லு.. நீயே சரியான டியூப்லைட்.. மக்கு பிளாஸ்திரி..."

"திட்டி முடிச்சாச்சா..?"

"இன்னும் பாக்கியிருக்கு.."

"அதை நாளைக்கு திட்ட ஸ்டாக் வைச்சுக்கங்க... இப்ப உங்க குடும்பத்தில எப்படிக் கூப்பிடுவாங்கன்னு சொல்லுங்க..."

"அத்தான்னு அழகாக் கூப்பிடுவாங்க.. அன்னைக்கு கூட கீதா இதைச் சொல்லித்தான் என்னைக் கூப்பிட்டதாய் ஞாபகம்..."

"ஹலோ..." அவள் உக்கிரமானாள்...

"திரும்பவும் போனா..?" அவன் சிரிப்பை அடக்கிக் கொள்ள படாத பாடுபட்டான்...

"அத்தான்னு கூப்பிடனும்ன்னா அதை மட்டும் சொல்லுங்க... அதை விட்டுட்டு என் தங்கையைப் பத்திப் பேசற வேலையெல்லாம் இங்கே வேணாம்..."

"உதாரணத்துக்கு சொன்னேண்டி..."

"முதல்ல மத்தவங்களுக்கு நீங்க உதாரணமாய் இருக்கறதுக்கான வழியைப் பாருங்க... உதாரணம் சொல்கிறாராம்... உதாரணம்... சாப்பிட வாங்க..."

"அதிகாரமெல்லாம் தூள் பரக்குது..."

"இந்த ஊரு உலகத்துக்கு முன்னாலே நான் உங்க பெண்டாட்டியாச்சே.. அதனால ஒழுங்காய் சாப்பிட வந்திருங்க..."

"வரலைன்னா...?"

"நீங்க எங்கே போனாலும் அங்கே வந்து அத்தனை பேர் முன்னாலேயும் உங்களுக்கு சாப்பாட்டை ஊட்டி விட ஆரம்பிச்சுருவேன் எப்படி வசதி...?"

'நீ சொன்னதைப் போல செய்... அதுதான் வசதி' என்று சொல்ல ஆசைப்பட்டான் முரளி.

46

உன்மீது ஆசை வைத்தேன்..
வேறுஎன்ன தீமை செய்தேன்...?

பாலமுரளி சாப்பிட்டுக் கொண்டிருக்க... அவன் முகம் பார்த்துப் பறிமாறிக் கொண்டிருந்தாள் ராதிகா... அதைப் பார்க்க வெகு பாந்தமாக இருந்தது மேகலாவிற்கு.. அவள் மல்லுகட்டினாலும் சாப்பிட வராத மகன்.. மருமகளின் ஒருவார்த்தையில் சாப்பிட வந்து விட்டதில் அவள் மகிழ்ந்து போயிருந்தாள்...

சாப்பிட்டு முடிந்ததும்.. அவன் கிளம்ப முனைய.. ராஜேஸ்வரி கிருஷ்ணமூர்த்தியின் முகம் பார்த்தாள்.. அவர் அவசரமாக...

"மாப்பிள்ளை..." என்றார்...

"சொல்லுங்க மாமா..." அவன் நின்று விட்டான்...

"மறுவீட்டு விருந்துக்கு நீங்க எப்ப வருவீங்கன்னு சொன்னால் தேவலாம்.. நாங்க இப்ப ஊருக்கு கிளம்பி விடுவோம்.. நீங்க உங்களுக்கு வசதிப்பட்ட நாளைச் சொன்னால்.. அதுக்கான ஏற்பாடுகளைப் பண்ண ஆரம்பிச்சிருவோம்..."

"அப்படியா..?"

அவன் தாடையைத் தடவியபடி யோசிக்க ஆரம்பித்தான்.. அவனைவிட படுவேகமாக யோசிக்க ஆரம்பித்தாள் பாலசரஸ்வதி...

"டேய் முரளி.. நீ முதலில் என்வீட்டு விருந்துக்கு வா.. மறுவீட்டு விருந்துக்கு போகிறதைப்பத்தி அப்புறமாய் யோசிக்கலாம்.." என்று ஒரு வெடியைப் பற்ற வைத்து தூக்கியெறிந்தாள்...

"என்னது.." சண்டைக்கோழியாய் சிலிர்த்தெழுந்தாள் ராஜேஸ்வரி...

"இதோ பாருங்கண்ணி... எந்த வீட்டிலயும் இப்படி நான் கேள்விப்பட்டதில்லை... புதிசா கல்யாணம் பண்ணிக்கிட்ட பெண்ணும் மாப்பிள்ளையும் போகிற

முதல் விருந்து மறுவீட்டு விருந்துதான்.. மத்த விருந்தெல்லாம் இதுக்கு அப்புறம்தான்.."

"அதெப்படி... நான் இந்த வீட்டில் பிறந்தவ... என்தம்பி என்வீட்டுக்குத்தான் முதல் விருந்துக்கு வரணும்..."

"பொண்ணு வீட்டுக்குத்தானே மறுவீட்டு விருந்துக்கு வரணும்.. இதுதான் உலகவழக்கம்..."

"வழக்கப்படிதான் இங்கே எல்லாம் நடக்குதா..?"

"வழக்கம் மாறி என்வீட்டில எதுவும் நடக்கல..."

"என்னடா முரளி பதில் சொல்லாம நிற்கிற.. என் வீட்டு விருந்துக்கு வரப்போறியா.. இல்லையா..?"

"என்னண்ணி பேசாம இருக்கீங்க.. என் மகளையும்.. மருமகனையும் மறுவீட்டு விருந்துக்கு அனுப்பப் போறிங்களா இல்லையா..?"

சுற்றி நின்ற உறவினர்களைப் பற்றி லட்சியமே செய்யாமல் அவர்கள் இருவரும் மோதிக் கொண்டிருக்க.. என்னவோ.. காலைநேர திரைப்படக் காட்சியை ரசிப்பதைப் போல.. உறவினர்கள் அதை ரசித்துப் பார்க்க ஆரம்பித்தார்கள்...

மேகலா மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டு.. அவள் வழக்கப்படி மருமகனை கெஞ்சுதலாகப் பார்த்தாள்...

'கவலைப் படாதீங்க...' என்ற அபயப் பார்வை பார்த்தபடியே ராஜாராஜன் உடனடியாக உதவிக்கரம் நீட்டினான்...

"சரஸ்.. நீ பாட்டுக்கு உன் தம்பியை விருந்துக்கு வரச்சொல்லி அழைக்கிறயே.. இதைப்பற்றி ஒருவார்த்தை அப்பா.. அம்மாவிடம் கேட்க வேண்டாமா...?"

"அது.. அதுவந்து..." தடுமாறிப் போனாள் பாலசரஸ்வதி...

அவள் மாமனார்.. மாமியார் மெச்சிய மருமகள்.. இதுவரை அவர்களைக் கலந்து கொள்ளாமல் குடும்ப சம்பந்தமான எந்த ஒரு முடிவையும் அவள் எடுத்ததே கிடையாது...

"அவங்க ரெண்டு பேரும் ஊருக்குப் போயிருக்காங்க.. நேத்து இங்கே கல்யாணம் முடிந்தவுடன் அதைப்பத்தி நம்மகிட்ட சொல்லிட்டுத்தானே போனாங்க...?"

"ஆ- ஆமாமாம்..."

"அப்புறம் எப்படி.. இப்படியொரு பிளானை போடுகிற..? அவங்க வீட்டில இல்லாதப்போ உன் தம்பி விருந்துக்கு வந்துட்டுப் போனா அவங்க என்ன நினைப்பாங்கன்னு ஒரு நிமிசம் யோசனை பண்ணினயா..?"

"அதில்லைங்க..."

"இப்போ என்ன பண்றதாக உத்தேசம்.. அவங்க இல்லாதப்ப உன்தம்பிக்கு விருந்து

"நான் அப்படிச் சொல்வேனா..? அவங்க இல்லாம விருந்தா..? நடக்கவே நடக்காது..."

"அப்போக் கிளம்பு.. ஊருக்குப் போய் சேரலாம்.. அப்பா.. அம்மா.. வந்த பின்னாலே உன் தம்பியை அவங்களே விருந்துக்கு அழைப்பாங்க.. அதுதான் முறை.."

பாலசரஸ்வதி அடங்கிப்போய் விட்டாள்.. ராஜாராஜன் அங்கிருந்து அகல.. அவசரமாக அவனைப் பின் தொடர்ந்தாள்.. பெரிதாக வெடிக்க வேண்டிய வெடி புஸ்வாணமாகிப் போனதில் குழ்ந்திருந்த உறவினர்களுக்கு மகா வருத்தம்...

பாலமுரளி அப்போதும் தாடையைத் தடவிக் கொண்டிருக்க மேகலாவிற்கு கோபம் வந்து விட்டது...

"ஏன் தம்பி.. இப்பத்தான் ஒரு வழியாய் உன் அக்கா மலையிறங்கி போயிருக்கா.. அடுத்து யாரு போட்டிக்கு வருவாங்கன்னு ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருக்கியா..?"

"அதில்லைம்மா.. இங்கே வேலை நிறைய இருக்கு-"

"அதுக்கு..? மறுவீட்டு விருந்தை தள்ளிப் போடலாம்கிறியா..?"

"என்னம்மா... நீங்களே என் நிலைமையை புரிஞ்சுக்காம பேசறிங்க..."

"நீதான் உலகவழக்கத்தை புரிஞ்சுக்காம பேசிக்கிட்டு நிக்கிற.. கல்யாணம் பண்ணின கையோட உன் வீட்டில வந்து இறங்கியிருக்கயே... இதைப்போல அந்தப்

பொண்ணு வீட்டிலயும் கால் பதிச்சுட்டு திரும்பி வரணும் கிற நினைப்பு உனக்கில்லாம போயிருச்சா..? வேலை அதிகமிருக்குன்னு தாலிகட்டற முகூர்த்த நேரத்தை நீ தள்ளி வைச்சியா..?"

"எதுக்கும்மா கோபப் படறிங்க..?"

"வேற என்னத்தை செய்யச் சொல்ற...? பொண்ணைக் கொடுத்தவங்க வீட்டுக்கு மறுவீட்டு விருந்துக்கு போயிட்டு வர இம்புட்டு யோசனையா..? அது உன் கடமைப்பா... அதைத் தள்ளிப் போடப் பார்க்கறியே.."

"இங்கே வேலை.. தலைக்கு மேல கிடக்குதும்மா..."

"தள்ளிப் போடு..."

மேகலாவின் கண்டிப்பில் இரண்டு தினங்கள் கழித்து மறுவீட்டு விருந்திற்கு வருவதாக கிருஷ்ண மூர்த்தியிடம் சொல்லி விட்டான் பாலமுரளி...

அவன் கிளம்பிப் போன பின்னால் கிருஷ்ண மூர்த்தியின் குடும்பமும் சென்னைக்கு கிளம்பியது... மறுவீட்டு விருந்திற்கு வருவதில் இவ்வளவு தயக்கம் காட்டும் மருமகனிடம் ராஜேஸ்வரிக்கு கோபம் ஏற்பட்டது... அதோடு.. மறுவீட்டு விருந்தைத் தள்ளி வைத்து விட்டு.. தன் வீட்டு விருந்துக்கு வரும்படி பாலசரஸ்வதி அழைத்ததையும் அவள் மறக்கத்தயாராக இல்லை...

"என் பொண்ணு ஆசைப்பட்டான்னுதான் உங்க வீட்டிலே பொண்ணு கொடுத்தோம் அண்ணி.. மத்தபடி

கல்யாணத்துக்கு முன்னாலே மாப்பிள்ளை வீட்டைப் பார்க்கக்கூட நாங்க வரலை.. இருக்கலாம்... நீங்க ஊராள்கிற ராஜாவாய்கூட இருக்கலாம்.. இந்த தென்காசி கீமையிலே கொடிகட்டிப் பறக்கிற பரம்பரைப் பணக்காரங்களா இருக்காலாம்.. எங்களுக்கு அது பெரிசில்லை... எங்க மதிப்பும் மரியாதையும் மட்டும் தான் எங்களுக்குப் பெரிசு.." என்று மேகலாவிடம் பொரிந்து தள்ளி விட்டாள்...

"ராஜி..." கிருஷ்ணமூர்த்தி அதட்ட...

"பேசட்டும்தம்பி..." என்று சொல்லி விட்டாள் மேகலா..

கிருஷ்ணமூர்த்தியை விட அவள் வயதில் மூத்தவள் என்பதால் இயல்பாக அவளை 'அக்கா' என்று கிருஷ்ண மூர்த்தி அழைக்க ஆரம்பித்திருந்தார்...

அவளும் கிருஷ்ணமூர்த்தியை தம்பி என்றும்.. ராஜேஸ்வரியை பெயர் சொல்லியும் அழைப்பாள்...

"ராஜி கோபப் படறதிலயும் ஒரு நியாயம் இருக்கேப்பா.. மறுவீட்டு விருந்துக்கு அழைக்கிறது வெறும் சம்பிரதாயம்தான்.. மத்தபடி அதுவும் கல்யாணக் கடமைகளில ஒன்னாச்சேப்பா.. என்னவோ.. என் பொண்ணுக்கு புத்தியில்லாம போச்சு..."

"அதுக்கா புத்தியில்ல..? அது நிறைய இருக்கப் போய்த்தான் இப்படி குதர்க்கமா நினைக்கத் தோணுது அண்ணி..."

"அவ புத்தியை நீதான் மெச்சிக்கனும் ராஜி.. யாராவது ஒற்றை உடன்பிறப்பு கல்யாணத்தில வந்து இப்படி ரகளை பண்ணுவாங்களா..? இவ பண்றாளே.. இவ பேச்சையெல்லாம் நீ பெரிசா எடுத்துக்கக் கூடாது ராஜி..."

"உங்க மக பேச்சைத்தான் புத்தியில்லாத பேச்சுன்னு சொல்லிட்டிங்க.. உங்க மகன் பேச்சை என்னன்னு சொல்லப் போறிங்க...?"

"வேலையிருக்கிறவன் பேச்சுன்னு சொல்லுவேன்.. அவனுக்கு மூச்சு விடநேரமில்லை... அதுக்காக உலக வழக்கத்தை தள்ளிப் போட முடியுமா..? அதான் நான் சொன்னதும் கேட்டுக்கிட்டானே..."

"இதுக்கு இவ்வளவு தூரம் சொல்லனுமான்னு தான் நான் கேட்கிறேன்..."

"விடுராஜி... அறியாம பேசின பேச்சை.. நாம பெரிய மனுசங்க பெரிசு பண்ணக்கூடாது..."

மேகலா தழைந்துதான் பேசினாள்.. ராஜேஸ்வரியின் மனம் கோணாமல் இதமாகத்தான் பேசினாள்.. மருமகளைப் பெற்றவர்கள் மனம் கோணினால்.. அது மருமகளிடமும் எதிரொலிக்கும் என்பதை புரிந்தவளாகத் தான் பேசினாள்..

அவளின் இதமான அணுகுமுறைக்கு நல்ல பலன் இருந்தது.. ராஜேஸ்வரி கோபம் தணிந்தவளாக கிளம்பிச் சொன்றாள்..

ராதிகாவிற்கு மாமியாரின்மீது பற்றும்.. பாசமும் தோன்றியது.. இப்படிப்பட்ட மாமியார் கிடைக்க தான் பூர்வ

ஜென்மத்தில் புண்ணியம் பண்ணியிருக்க வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டாள்... பெற்றவர்கள் கிளம்பிப் போனதும் மாமியாரிடம் தயக்கத்துடன் விளக்கம் சொல்ல ஆரம்பித்தாள்...

"அம்மா நல்லவங்கதான் அத்தை..."

அவள் மென்று விழுங்க அவளை இதமாகப் பார்த்துப் புன்னகைத்தாள் மேகலா...

"நான் இல்லைன்னு சொன்னேனா..? ராஜியின் குணத்துக்கென்ன குறை.. அது தங்கமாச்சே..."

"படபடன்னு பேசிருவாங்களே தவிர.. அவங்க மனசில எதுவும் இருக்காது..."

"இதை நீ சொல்லித்தான் நான் தெரிஞ்சுக்கனுமா..? எனக்கே அது தெரியுமே..."

"அண்ணி மேலயும் அவங்க கோபப் படலை..."

"கோபப் பட்டாலும் தப்பில்லைம்மா.. ஆயிரம் தான் இருந்தாலும் ராஜி பெண்ணைப் பெற்றது இல்லையா.. மறுவீட்டு விருந்துக்கு போட்டியா.. மகளோட நாத்தனாரும் விருந்துக்கு அழைச்சா.. அதுக்கு கோபம் வரத்தானே செய்யும்..?"

"அத்தை..."

சொல்ல நினைத்ததை சொல்ல முடியாமல் தவித்தாள் ராதிகா.. மேகலாவிற்கு மருமகளின் மனம்

புரிந்தது- அவளது தவிப்பை இனம் கண்டு கொண்டவளாக பரிவுடன் மருமகளின் தலையை வருடிக் கொடுத்தாள்...

"அம்மாடி..! நீ எதுக்காக இதுக்குப் போயி இம்புட்டுத்தூரத்துக்கு விளக்கம் சொல்ற..? இது நம்ப வீடும்மா.. நான் உனக்கு அம்மான்னு நினைச்சுக்க.. வேத்து மனுசங்ககிட்டத்தான் வேற்றுமை பாராட்டனும்.. விளக்கம் சொல்லனும்.. நமக்குள்ள எதுக்கும்மா விளக்கம் வரனும்..?"

"அத்தை-!" ராதிகாவின் மனம் நெகிழ்ந்து விட்டது-

"ராஜியை உன் அம்மாவா நினைச்சு.. என்னை உன் மாமியாராய் நினைச்சாத்தான் உனக்கு சங்கடம் வரும்.. என்னையும் உன் அம்மாவாய் நினைச்சுப்பாரு... நமக்குள்ள என்ன இருக்குன்னு சங்கடமெல்லாம் விலகி ஓடிடும்.. இது உன் வீடு ராதிகா.. எனக்குப் பின்னாலே நீதான் இந்த வீட்டையும்.. குடும்பத்தையும் கட்டிக் காப்பாத்தப் போகிறவ..."

"அத்தை.." ராதிகாவின் கண்கள் கசிந்துவிட்டன...

"பாலசரஸ்வதி கோபக்காரிதான்.. ஆனாலும்.. இந்த வீட்டில் பிறந்தவ.. அந்த நினைப்பு உன் மனசில இருக்கனும்..."

"இருக்கும் அத்தை.. எப்பவும் இருக்கும்..."

"எனக்குப் பின்னாலே அவளுக்கு 'தாய்வீடு' இல்லைன்னு ஆகிறக்கூடாது..."

"இப்படிச் சொல்லாதீங்க அத்தை..."

"இல்லைம்மா.. அவ விவரமில்லாம வார்த்தைகளைக் கொட்டிக்கிட்டு இருக்கா... இன்னைக்கு கொட்டறதை அள்ளவும் முடியாது.. அது விதையாய் மாறி நாளைக்கு விளைஞ்சு நின்னா அதை அறுக்கவும் முடியாது.. விவரமில்லாதவளுக்கு அது புரியலை.."

ராதிகாவிற்கு புரிந்தது.. இன்று பாலசரஸ்வதி பேசும் பேச்சுக்களையும் செய்யும் செய்கைகளையும் ராதிகா மனதில் வைத்துக் கொண்டால் பிற்காலத்தில் அது மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தி விடக் கூடும் என்று மேகலா சொல்கிறாள்...

"அத்தை.. நினைக்கிறதுக்கு ஆயிரம் நல்ல விசயங்கள் இருக்கு... அதை விட்டுட்டு இதையெல்லாம் மனதில நிணைத்துக்கிற ஆள் நானில்லை.. அண்ணிக்கு என்ன காரணத்தினாலேயோ.. என்னைப் பிடிக்கல.. அதுக்காக அவங்களை எனக்குப் பிடிக்காம போமிருமா..?"

"அவ அப்படியெல்லாம் யாரையும் வெறுக்கிற ரகமில்லைம்மா..."

"எனக்கும் அது தெரியுது..."

"அவளுக்கு என் காலத்துக்கு பின்னாலேயும் தாய்வீட்டுப் பாசம் நிலைத்திருக்கனும்கிற எண்ணம்..."

"அதில தப்பில்லையே..."

"அதனால.. அவளோட சின்ன மாமியா மகளை முரளிக்கு கட்டி வைக்கனும்னு ஆசைப்பட்டா..."

"ஓ..."

"அது நடக்கலைங்கிறதில அவளுக்கு ஒரு ஏமாத்தம்.. அதனால இப்படியெல்லாம் நடந்துக்கிறா.. நீ எதையும் மனசில வைத்துக்காதே...."

"என்னத்தை இது.. அவங்க யாரு..? என் அண்ணி..! அவங்கமேல நான் கோபம் வைச்சுக்கிறதா..? முடிஞ்சா அவங்களுக்கு என்மேல இருக்கிற கோபத்தை மாற்றத்தான் நான் டிரை பண்ணுவேன்.. பதிலுக்கு கோபம் காட்டமாட்டேன்..."

"உன்னை அப்படியிருக்கச் சொல்லலை ராதிகா.. உனக்குக் கோபம் வந்தா பதிலுக்கு நீயும் உன்னோட கோபத்தை கொட்டு.. ஆனா.. அவமேல வெறுப்பை மட்டும் காட்டிடாதேம்மா..."

"இதை நீங்க சொல்லனுமா அத்தை..."

ராதிகாவின் முகத்தில் தெரிந்த பாசத்தில் மேகலா மனம் நிறைந்து விட்டாள்...

உறவுகள் என்பது பாசத்தால் பிணைக்கப் பட்டவை.. நீரடித்து நீர் விலகுவதில்லை.. அதைப்போல.. சண்டைகளும்.. சச்சரவுகளும் உறவுகளை பிரித்துவிட முடியாது... அப்படிப் பிரிந்தால் அது உண்மையான உறவாக இருக்காது...

கோபம் வருகிறதா கொட்டு.. ஆனால் வெறுப்பைக் காட்டிவிடாதே என்று சொன்னாளே மேகலா... அந்தச்

சொல் கோடியில் ஒரு சொல்லல்லவா..! எதைச் செய்தேனும் அமைதியைக் காப்போம் என்று பாரதத்தில் கண்ணன் சொன்னானாம்... நாம் எதையேனும் செய்து உறவுகளைக் காக்க வேண்டுமல்லவா..?

நீ கொடுத்த பந்தம் மட்டும்..
நிரந்தரமாய் நிலைத்து நிற்கும்...

"தட்டுத் தடுமாறி நெஞ்சம்..
கை தொட்டு விளையாடக் கொஞ்சும்..
சிட்டு முகம் காதல் சொல்லும்..
கைபட்டு மலர்மேனி துள்ளும்..."

இரவின் அமைதியில் காருக்குள் ஒலித்த பாடல் பாலமுரளியை ஏதோ செய்தது.. அருகினில் பார்த்தான்.. கழுத்தில் புது மஞ்சள் கயிறு மின்ன ராதிகா தேவதை போல அமர்ந்திருந்தாள்.. அவள் தலையில் சூடியிருந்த மல்லிகையின் மணம் அவனது நாசியில் நுழைந்து அவன் மனதை மயக்கியது...

மாலையில் அவர்கள் தேனூத்தை விட்டுக் கிளம்பும் போது இந்த மல்லிகைப்பூ மலர்ந்திருக்கவில்லை என்பதை நினைவு கூர்ந்தான் பாலமுரளி...

அப்போது அவை மொட்டுக்களாக இருந்தன... நெருக்கித் தொடுக்கப் பட்ட மல்லிகைச் சரத்தை அவன் வீட்டில் வேலை செய்யும் மீனாட்சி கொண்டு வந்து கொடுத்த போது.. அவனைப் பார்த்தபடியே பூவை வாங்கி தனது தலையில் ராதிகா வைத்துக் கொண்டதை தேவையில்லாமல் நினைத்துப் பார்த்தான் பாலமுரளி...

எதற்காக இந்த நினைவு கூர்தல்கள் என்று அவனுக்கே பிடிபடவில்லை.. அப்படி நினைத்துப் பார்க்குமளவிற்கு அந்த நிகழ்வுகளில் எந்த ஒரு முக்கியத்துவமும் இருப்பதாகவும் அவனுக்குத் தோன்றவில்லை...

இருந்தும் அவன் நினைவுகூர்ந்தான்...

இப்போதெல்லாம் இப்படித்தான் அவன் ஆகிவிடுகிறான்... ஒவ்வொரு தருணங்களிலும் அவளிடமிருந்து வெளிப்படும் பல்வேறு பார்வைகளை படம்பிடித்து அவன் இதயத்திற்குள் பதுக்கி வைத்துக் கொள்கிறான்.. அவள் சிந்துகின்ற சிரிப்பொலிகளையும்.. பேச்சுக்களையும் வேலையில் இருக்கும் போதும் நினைத்துக் கொள்கிறான்...

'சை.. இவள் ஒரு மோகினிப் பிசாசு...'

அவனுக்கு ஆயாசமாக இருந்தது... இந்த மறுவீட்டு விருந்தைப் புறக்கணிக்க ஆனமட்டுக்கும் அவன் முயன்று பார்த்து விட்டான்.. மேகலாவிடம் அவனது பிடிவாதம் எடுபடவில்லை...

"இதப் பாருடா தம்பி... பொண்ணைப் பெத்தவங்க மனசு நொந்தா அது நம்மைத்தான் பாதிக்கும்... ஆனானப்பட்ட ராஜாவா இருந்தாலும்.. பொண்ணைப் பெத்தவங்களை மதிச்சுத்தான் ஆகனும்.. நீ மறுவீட்டு விருந்துக்கு போறேன்னா... போறேதான்..."

இருந்தும் அவன் இழுத்தடித்தான்.. அதிகாலையில் கிளம்ப வேண்டிய பயணத்தை மாலைவரைதான் அவனால் தள்ளிப் போட முடிந்தது.. அதற்கு மேலும் தாமதித்தால் மேகலாவிடம் பாட்டு வாங்க முடியாது என்ற ஒரே காரணத்துக்காக கிளம்ப மனமில்லாமல் கிளம்பினான்...

ஊரை விட்டுக் கார் கடக்கும்வரை நகர்ந்து அமர்ந்திருந்த ராதிகா.. அதற்குப் பின்னால் இயல்பாக சரித்து அமர... அவளது கை அவன் கைமேல் உராய்ந்து வைத்தது.. அவன் கிளர்ந்தான்...

"ஏய்ய்.. தள்ளி உட்காருடி..."

பொறுக்கமுடியாமல் அவன் எரிந்துவிழ.. அவள் சண்டைக் கோழியானாள்...

"ஏன் தள்ளி உட்காரனும்..? எதுக்குத் தள்ளி உட்காரனும்..? நல்ல கொடுமையாய் இருக்கே.. மணிக்கணக்கில் டிராவல் பண்ணனும்.. என்னால ஒடுங்கி ஒரமாய் உட்காரவெல்லாம் முடியாது.. வேணும்ன்னா சொல்லுங்க.. நான் பின் சீட்டுக்கு போயிடறேன்.. ஹாய்யா உட்கார்ந்துக்கிட்டும் வரலாம்.. தூக்கம் வந்தா அப்படியே படுத்து தூங்கிக்கவும் தோதாப் போச்சு.. காரை நிறுத்துங்க... நான் பின் சீட்டுக்கு மாறிக்கறேன்.."

அதற்கு அனுமதிக்கவும் பாலமுரளியால் முடியவில்லை...

'மகராணி பின்சீட்டில ஹாயாய் உட்கார்ந்துக்கிட்டு வருவாளாம்... நான் இவளுக்கு டிரைவர் வேலை பார்க்கனுமாம்... இவ மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கா..?'

"காரை நிறுத்தச் சொன்னேன்..."

"அப்படியே ஓங்கி ஒரு அப்பு அப்பினேன்னு வைய்யி.. சென்னைமிலே போயித்தான் விழுவ.. அடங்கி உட்காருடி.."

"அதான் என்னால முடியாதுன்னு சொல்லிட்டேனே.."

"எப்படியோ உட்கார்ந்து தொலைடி.. எனக்குன்னு வந்து வாய்ச்சிருக்கயே..."

அவன் எரிச்சலுடன் சொல்ல.. அவள் கிடைத்தது வாய்ப்பென்று அவன் தோளோரமாக தலையைச் சரித்துக் கொண்டாள்...

ஜன்னல் கதவுகள் பூட்டிய ஏஸி காருக்குள் வெயியேற மடியாத மல்லிகையின் நறுமணம் சூழ்ந்து கொள்ள அவன் கிறங்கிப் போனான்...

நேரம் செல்லச் செல்ல... மொட்டாக இருந்த மல்லிகை மலர்கள் மலர்ந்து விரிந்து மணம் பரப்ப ஆரம்பித்தன.. அவற்றின் நறுமணத்தை நுகர்ந்த பாலமுரளிக்கு கிறக்கம் அதிகமானது.. தள்ளி உட்கார முடியாது என்று அடம் பிடித்த ராதிகா ஒட்டி உராய ஆரம்பிக்க... பாலமுரளியின் மனக் கட்டுப்பாடு..

இருக்கவா இல்லை பறக்கவா என்று கேட்டு அவனை அச்சுறுத்திக் கொண்டிருந்தது...

நான்கு வழிச்சாலையின் இரவு நேரத் தோற்றம் ஒரு பூங்காவில் வலம் வருவதைப் போல கார் விளக்குகளின் ஒளிர்வில் தெரிய... இதமான ஒரு இம்சை பாலமுரளியை படுத்தி எடுக்க ஆரம்பித்தது...

அந்த இரவு நேரக் கார் பயணம் அவனை சோதிக்க ஆரம்பிக்கும் என்று அவன் அறியாமல் போய்விட்டான்...

இதைப் பற்றிக் கொஞ்சமேனும் தெரிந்திருந்தால் கூட.. அவன் பகலில் பறந்து போயிருப்பான்...

காருக்குள் பரவியிருந்த மெல்லிய வெளிச்சத்தில் ராதிகாவின் வடிவம் போதையூட்டுவதாக அமைந்திருந்தது... அவளின் நெருக்கம் தந்த கிறக்கம் அவன் மனதை மயக்கியது...

'இந்த மோகினியைப் பக்கத்தில வைச்சுக்கிட்டு... ராப்பயணம் கிளம்பிட்டேனே.. என்னைப் போல ஒரு மடையன் எங்காவது இருப்பானா..?'

அவனுக்கு சுவரில் முட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது...

சும்மாவே அவளைக் கண்டால் அவன் கைகள் பரபரக்கும்.. இந்த லட்சணத்தில் இப்படி பூவாசத்துடன் அவள் ஒட்டி உராய்ந்தால் அவன் பாவம்.. என்னதான் செய்வான்...?

'இந்த நினைப்பு கொஞ்சமாவது இவருக்கு இருக்கா..?'

அவனுக்கு கோபம்.. கோபமாக வந்தது...

அவர்களைச் சூழ்ந்திருந்த மௌனம்... மயக்கத்தை அதிகப்படுத்துவதைப் போலத் தோன்றி வைக்க.. அவன் அதை உடைக்க விரும்பியவனாகத்தான் பாடலை ஒலிக்க விட்டான்...

அந்தப் பாடலும் சேர்ந்து அவனைச் சோதிக்கும் என்று சத்தியமாக அவன் நினைத்தும் பார்த்திருக்கவில்லை..

"தட்டுத் தடுமாறி நெஞ்சம்..." என்று பாடல் ஆரம்பித்த போதே...

'போச்சுடா...' என்று மானசீகமாக தலையில் கைவைத்துக் கொண்டான் பாலமுரளி...

"இந்தப் பாட்டு இங்கே எப்படி வந்துச்சு...?" அவன் கோபப்பட...

"நான்தான் எனக்குப் பிடிச்ச பாட்டுக்களாய் பதிஞ்சு வைச்ச சிடியை காருக்குள் போட்டு வைச்சேன்..." என்று பதில் சொன்னாள் ராதிகா..

"யாரைக் கேட்டுடி போட்ட..?"

அவன் ஆவேசப்பட்டான்.. எதற்காக இந்த அளவுக்கு அவன் கொதிக்கிறான் என்ற காரணம் புரியாமல் அவனை விசித்திரமாகப் பார்த்து வைத்தாள் ராதிகா...

அவளது பார்வையைக் கண்டவன் உதடுகளைக் கடித்துக் கொண்டு சாலையில் கவனமானான்...

"எனக்காக வா...
நான்.. உனக்காக வா...
என்னைக் காண வா..
என்னில் உன்னைக்காண
வா.. வாவா.. எனக்காக வா..."

முதல் பாடல் முடிந்து விட்டது என்ற நிம்மதிப் பெருமூச்சு விட்டவன் அடுத்த பாடலில் அரண்டே போனான்...

ராதிகா வேறு அவனுடைய நிலைமை புரியாதவளாக பாடலுடன் கூடச் சேர்ந்து பாடி வைத்தாள்.. பாடலை ரசித்து அவள் பாடிய வரிகள் அவனையே 'வா.. வா...' என்று அழைப்பதைப் போல இருக்க அவன் உடல் சூடேறியது...

"ஏய்ய்.. வாயை வைச்சுக்கிட்டு சும்மா வரமாட்டியா..?" அவன் உஷ்ணமானான்...

"ஹலோ.. நான் ஏதும் உங்ககிட்ட பேச்சு வைச்சுக் கிட்டேனா..?" அவள் சண்டைக்குத் தயாரானாள்...

"அடிச்சுப் பல்லைக் கழட்டி விடுவேன்.. படவா ராஸ்கல்.. ஹலோவாம் ஹலோ... தெருவில் போகிறவனையாடி கூப்பிடுகிற...?"

காரணம் சொல்ல முடியாமல் கிளர்ந்தெழுந்த கோபத்துடன் அவளை அதட்டினான் பாலமுரளி...

"தப்புத்தான் அத்தான்... இது பேச்சு... இப்படிச் சொன்னா கேட்டுக்கறேன்.. இத விட்டுட்டு வாயை மூடுடின்னா.. என்னால அது முடியுமா..? அதுக்குப் பதிலா நாலு அடியைப் போடுங்க.. வாங்கிக்கறேன்..."

"அதானே... உன் வாயை மூடச் சொன்னால் உன்னால அது முடியாதுத்தான்... உனக்கு அது கஷ்டமான வேலைதான்..."

அவனுக்கு சிரிப்பு வந்து விட்டது.. காரை ஒட்டிக் கொண்டே பக்கவாட்டில் அவளைத் திரும்பிப் பார்த்து அவன் சிரித்த சிரிப்பில் அவள் மயங்கிப் போனாள்...

அவன் மீதிருந்த வந்த அவனுக்கே உரித்தான நறுமணத்தில் அவள் மனம் சரிந்தது... அவன் தோள் தொட்டுத் தழுவி.. அவன் முகமெங்கும் முத்தமிட வேண்டும் போன்ற ஆவேசப் பேரலையொன்று அவள் மனதில் ஒங்கி எழவும் அவள் தடுமாறிப் போனாள்...

"பொன்மேனி தழுவாமல்
பெண் இன்பம் அறியாமல்
போக வேண்டுமா..?
கண்ணோடு கண்சேர...
உன்னோடு நான்சேர
தூது வேண்டுமா..?"

அவள் மனதைப் படித்ததைப் போல பாடல் ஒலிக்க.. அவள் கண்களில் இறைஞ்சுதலுடன் அவன் முகத்தைப் பார்த்தாள்...

அதே நொடியில் அவளைப் பார்த்தவனின் கண்களில் மின்னல் வந்தது.. காரை சட்டென்று நிறுத்தி விட்டான்.. பின்னால் வந்த கார்... கணப்பொழுதில் விலகிப் பறக்க.. அந்தக் காரில் போனவன் ஜன்னல் வழி எட்டிப் பார்த்து திட்டிய வார்த்தைகள் காற்றில் கரைந்தன...

"பொன் மாங்கல்யம்..
வண்ணப் பூச்சரம்...
மஞ்சள் குங்குமம்..
என்றும் நீ தந்தது..."

மாறிய பாடலின் வரிகளில் அவள் மனம் கசிந்தாள்.. கழுத்தில் கிடந்த தாலிச் சரட்டை கைகளில் ஏந்திப் பார்த்தாள்...

'இது இவன் கட்டிய தாலி... இவன் என் புருசன்.. இருந்தும் இவன் தள்ளி நிற்கிறான்... இவனுக்கு உரிமை இல்லாதபோது அத்துமீறி என்னைத் தொட்டான்.. இப்போது இவனுக்கே இவனுக்கென்று நான் உரிமைப் பொருளாகிய பின்பு என்னை விட்டு விலகி நிற்கிறான்...'

அவள் மனம் துக்கத்தில் தோய்ந்தது... அந்தத் துக்கம் அவள் விழிகளிலும் பிரதிபலிக்க... தாள முடியாத தவிப்புடன் அவன் தோள் மீது முகம் புதைத்து விம்மினாள்...

"முரளி"

அந்த ஓர் அழைப்பில் அவனது உயிர் துடித்தது.. எல்லையில்லாத ஓர் உணர்வை உணர்த்திய அந்தக்குரல் எழுப்பிய அதிர்வில் அவன் மனம் சிக்கித் தவித்தது...

"என்னை அப்படிக் கூப்பிடாதே..." அவன் மனம் குமுறினான்...

"முரளி..." அவள் தாங்க முடியாமல் கண்ணீர் சிந்தினாள்...

"அப்படிக் கூப்பிடாதேன்னு சொல்றேனில்ல.. நீ பெயர்... சொல்லிக் கூப்பிட்டாலே அவனைப் பெயர் சொல்லிக் கூப்பிட்ட அந்த நிமிசம் தாண்டி என் கண்முன்னால் வந்து நிற்குது..."

"கடவுளே..." அவள் அதிர்ந்து வாய் பொத்தினாள்...

"அவரை ஏண்டி கூப்பிடறே... அவருக்கு இருக்குடி ஆயிரம் வேலை... நீ கூப்பிட்டவுடனே ஓடிவர அவர் என்ன வேலை வெட்டி இல்லாத ஆளா..? கடவுள்டி.."

"நான் சொல்கிறதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்க மாட்டிங்களா..? அன்றைக்கு நடந்ததே வேறு..." ராதிகா விளக்கம் சொல்ல முயன்றாள்...

"பொய் சொல்லாதே... எனக்கு அது பிடிக்காது.." அவன் முகத்தில் இளக்கம் மறைந்து கடினம் மீண்டிருந்தது..

"எனக்கும் அது பிடிக்காது.. வரவும் வராது..." ராதிகா ரோசத்துடன் சொன்னாள்...

"வராததை ஏன் செய்ய நினைக்கிற..?" அவன் காரைக் கிளப்பினான் சற்றுமுன் அவர்களுக்கு இடையே தோன்றியிருந்த இனிய உணர்வலைகள் கலைந்து மறைந்து போயிருந்தன.. அவனது விலகலில் மனம்

குமுறியவளாக ராதிகாவும் விலகி அமர்ந்தாள்.. ரோசத்துடன அவள் நகர்ந்து கொண்டதில் அவனது கோபம் இன்னமும் அதிகரிக்கத்தான் செய்தது...

"நீயோ.. நானோ.. யார்நிலவே...!
இன்று நிம்மதி இழந்தது யார் நிலவே...!"

காருக்குள் பாடல் ஒலிக்க.. வட்ட நிலா வானில் எழுந்து.. நின்றது...

யார் மனதில் யாரென்று..
யாரறிவார் இவ்வுலகில்...?

"சுந்தர்... அக்காவையும்... அத்தானையும் சாப்பிடக் கூப்பிடு..."

பம்பரமாக சுழன்று கொண்டிருந்த ராஜேஸ்வரி ஆணையிட்டாள்...

ராதிகாவும்.. பாலமுரளியும் ஹாலில்தான் இருந்தார்கள்.. பாலமுரளி டிவியில் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருக்க.. ராதிகா... கீதாவுடன் வாயடித்துக் கொண்டிருந்தாள்...

சுந்தரிடம் சொல்லாமல் ராஜேஸ்வரியே நேரடியாக அவர்களை சாப்பிட வரும்படி அழைக்கலாம்... அதைவிட்டு சுந்தரை ஊடே வைத்ததில் ராதிகா மனம் வருந்தினாள்... அவளது வருத்தத்தை அவளின் கண்களில் கண்ட கீதா தமக்கையைத் தேற்றினாள்...

"விடுடி.. லேடி ஹிட்லர் சும்மா பிலிம் காட்டறாங்க.."

"இன்னுமா கீதா...? இவர் என்ன நினைச்சுக்குவார்..?"

"அத்தான்தானே.. ஒன்னும் நினைக்கமாட்டார்.. அவரைப் பாரேன்.. அப்படியே நியுஸில் அமிழ்ந்து போயிருக்கார்.. லேடி ஹிட்லர் சொன்னதையா காதில போட்டிருக்கப் போறார்..?"

கீதாவின் வார்த்தைகளில் ராதிகாவிற்கு தெம்பு வரவில்லை... அவளுக்குத்தான் அவனின் குணத்தைப் பற்றி நன்கு தெரியுமே.. எதுவுமே காதில் விழுகாததைப் போன்ற அவனின் முக பாவனையில் ஏமாற அவள் தயாராக இல்லை...

எந்த நொடியும் வெடிகுண்டு வெடிக்கலாம் என்ற பய உணர்வுடன் அவள் அவனை சாப்பிட வரும்படி அழைத்தாள்...

பாலமுரளி டிவியை அணைத்து விட்டு கீதாவைப் பார்த்தான்.. அவள் யாருடனோ செல்போனில் பேசியபடி வாசல் பக்கம் நடந்துவிட.. மனைவியைப் பார்த்தான்.. அந்தப் பார்வையில் கதி கலங்கிப் போனாள் அவனின் மனைவி...

"இந்த விருந்துக்கு நாம வரலைன்னுதான் உன் அம்மா அன்னைக்கு அவ்வளவு சண்டை போட்டாங்களா..?"

அவன் நிதானமாக கேட்ட போது... அவன்காதில் ராஜேஸ்வரியின் பேச்சு விழுந்திருக்கிறது என்பது ராதிகாவுக்கு புரிந்து விட்டது...

'ம்ஹீம்.. இவன் எதையும் காதில போட்டுக்க மாட்டானாம்... கீதா கதை சொல்கிறா.. அவளுக்கு இவன் குணத்தைப் பத்தி என்ன தெரியும்..? இவன் கடப்பாரையைக் கூட விழுங்கிவிட்டு ஒன்றும் தெரியாதவனைப் போல முகத்தை வைத்துக்கிட்டு உட்கார்ந்திருப்பானே...'

"ஏன் இப்படிப் பேசறிங்க..? விருந்தில் ஏதும் அம்மா குறை வைத்தாங்களா..?" ராதிகா தணிந்த குரலில் கேட்டாள்...

அவள் கேள்வியிலும் ஓர் அர்த்தம் பொதிந்திருந்தது.. ராஜேஸ்வரி நேரடியாக மகளிடமும்... மருமகனிடமும் பேசவில்லையென்றாலும் வரவேற்பிலும்.. கவனிப்பிலும்... உபசரிப்பிலும்.. விருந்து தயாரிப்பிலும் ஒரு சிறு குறையைக் கூட வைக்கவில்லை...

"கீதா... அக்காவும்.. அத்தானும் வந்துட்டாங்க பாரு... ஆரத்தி கரைச்சு வைச்சிருக்கே... எடுத்துட்டு வந்து ஆரத்தி சுத்து..."

"சுந்தர்... அக்காவுக்கும்.. அத்தானுக்கும் மாடிரூம் ரெடியாயிருக்கு.. கூப்பிட்டுக்கிட்டுப் போ..."

"என்னங்க... ஆபிஸீக்கு லீவு போட்டுட்டு அடங்கி வீட்டில உட்காருங்க.. உங்க தலைமேல ஒன்னும் ஆபிஸ் ஓடலை... பெண்ணும் மாப்பிள்ளையும் வந்திருக்கப்ப நீங்க ஆபிஸீக்கு ஓடினா நல்லாவா இருக்கும்.. ?"

"கீதா... உன் அத்தானுக்கு என்னென்ன பிடிக்கும்ன்னு உன் அக்காகிட்ட கேட்டுச் சொல்லு..."

"சுந்தர்... மாடிரூமில ஏஸி ஒழுங்கா ஒடுதான்னு செக் பண்ணினயா.. ?"

நொடிக்கு ஒரு தரம் வீட்டில் உள்ளவர்களை அழைத்து ராதிகாவையும்.. பாலமுரளியையும் கவனிக்கச் சொன்னாள்... அவர்களுக்கு பிடித்த உணவு வகைகளை சமைத்துப் போட்டாள்...

என்ன ஒன்று.. இத்தனையும் செய்தவள் வாயார மகளிடமும் மருமகனிடமும் ஒரு வார்த்தை பேசியிருக்கலாம்... அவள் அதைச் செய்யவில்லை.. எதில் குற்றம் காண்பதென்று கண்ணில் விளக்கெண்ணையை ஊற்றிக் கொண்டு காத்திருந்த பாலமுரளி மிகச்சரியாக அதை மட்டும் பிடித்துக் கொண்டான்...

"ஏண்டி கேட்க மாட்ட..? இந்த விருந்துச் சாப்பாட்டை நான் முன்னே.. பின்னே.. கண்டதே இல்லை பாரு.. இன்னைக்கு புதுசாயில்ல வாய்க்கு ருசியா சாப்பிட்டுப் பழகுறேன்.. பேச வந்திட்டா பேச... விருந்தில உன் அம்மா குறையே வைக்கலியா..? இதைப் போலத்தான் அந்த சங்கர் மருமகனா வந்திருந்தாலும் செய்திருப்பாங்களா..?"

அவன் நெஞ்சின் தணல் பேச்சில் வெளிப்பட்டு விட்டது.. ராஜேஸ்வரி சங்கருக்கு பெண் கொடுக்க நினைத்தவள் என்ற பகை உணர்வு இன்னமும் அவன் நெஞ்சில் மறையாமல் இருப்பதை கண்டு கொண்ட ராதிகாவிற்கு என்ன செய்வதென்று புரியவில்லை...

"என்னடி... பதிலுக்குப் பதில் பேசித் தள்ளுவ.. இப்ப அந்த வாய் எங்கே போச்சு..? பேச்சையே காணோம்..."

"இப்படிப் பேசினா எப்படிப் பதில் சொல்றது..? அவங்க மனசில எதுவும் இல்லை.. இதை நான் சொன்னா நீங்க கேட்டுக்கவா போறிங்க..?"

"தெரியுதில்ல.. அதனால நான் சொல்றதை நீ கேளு.."

"என்ன..?"

"நாம நாளைக்கே தேனூத்துக்கு கிளம்பியாகனும்.."

"அதுக்குள்ளேயா..? நேத்துத்தானே வந்தோம்..?"

"விருந்தும்.. மருந்தும் மூணு நாள்டி.. நாளையோட அந்த மூணுநாள் கணக்கு முடிஞ்சிருச்சு..."

பாலமுரளி கறாராகச் சொல்லி விட்டான்.. அந்த இரண்டு நாள்கள் அவன் வாயை மூடிக் கொண்டு அங்கே தங்க ஒப்புக்கொண்டதே பெரிய விசயம் என்று தோன்றிப் போனதில் ராதிகாவும் எதிர்வாதம் செய்யாமல் அதை அப்படியே ஏற்றுக் கொண்டாள்.. டைனிங் டேபிளில் அவள் அதைச் சொல்ல.. சுந்தரின் முகம் வாடிவிட்டது...

"அதுக்குள்ளேயா அக்கா..?" என்று ஏக்கத்துடன் கேட்டான்...

"என்னாடி ராது... அத்தான் இப்படிச் சொல்றாரு.. உங்ககூட ஊரையெல்லாம் சுத்தணும்னு பிளான் போட்டிருந்தேனேடி... அத்தனையும் அம்பேலா..." கீதா குறைபட்டாள்...

"இரண்டு நாள்கூட ஆகலை.. அதுக்குள்ளே ஊருக்குத் திரும்பணும்னு சொல்றியேம்மா.. ஏன் மாப்பிள்ளை.. நீங்க ஒரு வாரம் தங்கிட்டுப் போகக் கூடாதா..?" கிருஷ்ணமூர்த்தி பணிவுடன் பாலமுரளியிடம் கேட்டார்...

"இல்லை மாமா.. நான் இங்கே வந்ததே பெரிய விசயம்... மறுவீட்டு விருந்துக்கு போகாம இருக்கக் கூடாதுன்னு அம்மா சொன்னதால கிளம்பி வந்தேன்.. மத்தபடி எனக்கு மூச்சு விடக்கூட நேரமில்லாம வேலை குமிஞ்சு கிடக்கு... உங்களுக்கே அது நல்லாத் தெரியும்.." பாலமுரளி மரியாதையான குரலில் மறுப்புச் சொல்லி விட்டான்...

அத்தனை பேரும் அவர்களின் ஆதங்கத்தை வெளிப் படுத்தியும் ராஜேஸ்வரி மட்டும் ஒருவார்த்தை கூட நடுத்துப் பேசவில்லை.. மௌனமாக சமையலறைக்குள் போய் விட்டாள்...

'அம்மா...! உங்களுக்கு என்மேல பாசமே இல்லையா...?'

ராதிகாவின் இதயம் வலித்தது... அவள் மனம் தாயின் மடி தேடி மௌனக் கண்ணீர் விட்டது...

"ராதிகா..."

வாசலில் குரல் கேட்க.. பாலமுரளியின் முகம் மாறியது...

"ஹேமா போல இருக்கே..."

ராதிகா கணவனை மறந்தவளாக அவசரமாக எழுந்ததில் அவன் முகம் சுளித்தான்...

"யாராய் இருந்தால் என்ன..? பாதி டிபனில் ஒடணுமா...? உட்காரு..." அதட்டினான்...

அவனது கடுமையில் ராதிகா என்னவோ குற்றம் செய்தவளைப் போல முகம் மாறி உட்கார்ந்து விட.. கிருஷ்ணமூர்த்திக்கு என்னவோ போல ஆகிவிட்டது...

அவனுக்கு ஹேமாவைத் தெரிந்திருக்காது என்ற நினைவில் அவர் மகளுக்கு ஆதரவாகப் பேசினார்...

"அதுவேற யாருமில்லை மாப்பிள்ளை.. நம்ம ராதிகா வோட கிளாஸ்மேட்..."

"ஒஹோ..."

"ரெண்டு பேரும் பெஸ்ட் பிரண்ட்ஸ்..."

"அப்படியா..?"

"ஒன்னாவே இருந்தவங்க.. ராதிகாவுக்கு மேரேஜ் ஆனதும் பிரிஞ்சு போயிட்டாங்க..."

"அதில அந்தப் பெண்ணுக்கு ரொம்ப வருத்தமா மாமா...?"

"அப்படியில்லை மாப்பிள்ளை... ராதிகா சென்னையிலேயே இருந்திருந்தா ஹேமாவால அவளைத் தினமும் பார்த்திருக்க முடியும்.. அவ தேனூத்தூக்குப் போய் விட்டதில ஹேமாவுக்கு வருத்தமிருக்கத்தானே செய்யும்..?"

"இருக்கும்... இருக்கும்..."

அதற்கு மேல் பேச்சை வளர்த்தாமல் பாலமுரளி எழுந்து கொண்டான்... கை கழுவியனுக்கு கை துடைக்க டவலை நீட்டிய ராதிகாவை உறுத்துப் பார்த்தவன்....

"உன்னைப் பார்க்காம அந்த ஹேமாவால இருக்க முடியாதாமே... அதனாலதான் சென்னையிலேயே சங்கரை உனக்கு மாப்பிள்ளையாக்கனும்னு பார்த்தாளா..." என்று கேட்டான்...

"ப்ளீஸ்... அவளுக்கு அப்படியெல்லாம் எண்ணம் கிடையாது..." ராதிகா தீமான குரலில் மறுத்தாள்...

"இதை என்னை நம்பச் சொல்றியா...?"

கை துடைத்த டவலை ஏறக்குறைய ராதிகாவின் முகத்தில் வீசிவிட்டு ஹாலுக்கு சென்றான் பாலமுரளி... கீதாவிடம் பேசிக்கொண்டிருந்த ஹேமா அவனைப் பார்த்ததும் சிநேகிதமாய் சிரித்து வைக்க.. பதிலுக்கு சிரிக்காமல் அவளுக்கு எதிரேயிருந்த சோபாவில் கால் மேல் கால் போட்டு தோரணையாய் சாய்ந்து அமர்ந்தான்...

"ஹேமா..."

ஒருவழியாய் ஹாலுக்கு வந்த ராதிகா ஆவலுடன் சிநேகிதியை அழைத்தபடி அவள் பக்கத்தில் உட்காரப் போனாள்...

"ராதிகா..."

பாலமுரளியின் கண்டிப்பான குரலில் திரும்பியவள் அவனின் கண்சமிக்ஞையைப் புரிந்து கொண்டவளாக வேறு வழியின்றி அவனருகே உட்கார்ந்தாள்...

'இவனென்ன இப்படி இருக்கிறான்.. என் பக்கத்தில் கூட அவளை உட்காரவிட மாட்டானா..?' ஹேமாவின் புருவங்களில் முடிச்சு விழுந்தது...

"ஹால் டிக்கெட் வந்திருச்சு... நீ வாங்க வரலையா...? அதைச் சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்..."

"எக்ஸாம் எப்போடி..." ராதிகா கவலையானாள்...

"இந்த மன்த் என்டில... நீ படிச்சுக்கிட்டுத்தான இருக்க...?"

"த்ச்சு.. இல்லைடி..." ராதிகா படிப்பின் நினைவில் சூள்கொட்டினாள்...

"நீயாடி இப்படிப் பேசற..? என்னவோ போ... எக்ஸாமையாவது ஒழுங்காக அட்டெண்ட் பண்ணப் பாரு..." ஹேமா கிளம்பி விட்டாள்...

"ஸோ... ஹால் டிக்கெட் வாங்க வருகிற சாக்கில காலேஜில சங்கரை மீட் பண்ணுன்னு இவ சொல்ல வந்தாளா...?" பாலமுரளியின் புருவங்கள் ஏறி இறங்கின...

ஏற்கனவே படிப்பின் மீதான கவலையில் இருந்த ராதிகாவிற்கு சுள்ளென்று கோபம் வந்து விட்டது...

"எல்லாத்தையும் நீங்க குதர்க்கமாவேதான் யோசிப்பிங்களா..?" என்று சண்டைக்கு கிளம்பி விட்டாள்...

"அந்தப் பெண்ணைக் கண்டாலே எனக்குப் பிடிக்கலை... அவகூட நீ பேசிப் பழகறதை நிறுத்திக்க..." அமர்த்தலான குரலில் சொன்னான் பாலமுரளி...

"ஐயா... சாமி... நீங்களே பேசிப் பழகச் சொன்னாலும் இனி அது முடியாத காரியமாய் போச்சே... அவ சென்னையில இருக்கா... நான் தேனூத்தில இருக்கேன்... இதில எங்கே பேசிப் பழகறது..?" ராதிகா கோபம் தாங்காமல் வெடித்தாள்...

"என்னவோ தேனூத்துக்காரனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதில ரொம்ப வருத்தப்படற மாதிரி தெரியுது... இவ்வளவு காண்டை மனசில வைச்சுக் கிட்டிருக்கவ ஏண்டி வரும்போது அந்த ராத்திரி நேரத்தில காருக்குள்ள அந்தக் கொஞ்சு.. கொஞ்சின..?" முரளி அடிக்குரலில் சீறினான்...

ராதிகாவிற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை... இமைக்காமல் அவன் முகத்தையே பார்த்தவள்.. அவன் அதற்கும் ஏதாவது ஒன்றைச் சொல்வான் என்ற நினைவில் பார்வையை தழைத்துக் கொண்டாள்...

சற்று நேர மௌனத்திற்கு பின் அவன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.. எதுவுமே நடக்காததைப் போன்ற குரலில்...

"சரிசரி கிளம்பு..." என்றான்...

"எங்கே..?" ஒய்ந்து போன குரலில் கேட்டாள் ராதிகா...

"வேற எங்கே.. உன் காலேஜீக்குத்தான்..."

"எதுக்கு..?"

"ஹால் டிக்கெட்டை வாங்க.."

"வேணாம்..."

"ஏன் வேணாம்..? நாலு வருசப் படிப்பு...! என்னாலே அது வீணாகிப் போனதா பேச்சு வர வேணாம்.. பரிட்சை சமயத்தில நம்ம பண்ணை வீட்டில வந்து தங்கி பரிட்சையை எழுதிக்க... படிப்பை முடிக்காம விட்டதா என்மேல பழி போட வேணாம்... அந்தக் குறை உனக்கெதுக்கு..? வா.. நானும் கூட வர்றேன்... ஹால் டிக்கெட்டை வாங்கிட்டு வந்திரு..!"

என்னதான் இணக்கமான குரலில் பாலமுரளி சொன்னாலும்... என்னவோ அவனிடம் தனது சுதந்திரத்தை யாசகமாகப் பெறுவதைப் போல ராதிகாவுக்குத் தோன்றியது... தன்னைச்சுற்றி தளைகள் பிணைக்கப் படுவதைப் போல அவள் உணர்ந்தாள்...



கண்ணுக்குத் தெரியாத ஓர்தளையில்
காலம் முழுவதும் பிணைக்கப்பட்டேன்

ராதிகாவுக்கு மூச்சு முட்டியது... அந்தச் சூழல் அவளை சிறைபடுத்தியது... இதுதான் என்று அறிந்து வந்தவள்தான்.. அவனோடு வாழும் வாழ்க்கை இப்படித்தான் இருக்குமென்று அறிந்திருந்தாலும்.. அவனோடு வாழ்ந்தால் போதும் என்ற எண்ணத்துடன் வாழ வந்தவள்தான்.. கட்டிலில் உறவாடவிட்டால் என்ன.. அவனுடைய கடைக்கண்பார்வை மட்டும் போதுமென்ற நினைவுடன் அவன் கைபிடித்து வந்தவள்தான்...

இருந்தாலும் அவளால் ஓரளவிற்கு மேல் அவனிடம் பொறுத்தப் போக முடியவில்லை... எவ்வளவுதான் தழைந்து போனாலும் பாலமுரளி எரிந்து விழுந்தான்... இப்படிப் பேசுகிறானே என்று ஒதுங்கிப் போனால் அதிலும் ஒரு குற்றம் கண்டான்...

முன்னால் போனால் கடிப்பதும்.. பின்னால் போனால் உதைப்பதுமாக அவனிருந்தால் அவளும்தான் என்ன செய்வாள்..? குட்டக் குட்ட தலையைக் கொடுத்துக் கொண்டிருப்பதற்கும் ஓர் அளவு வேண்டாமா..?

ராதிகா அவனை எதிர்த்துப் பேச ஆரம்பித்தாள்... குற்றமே செய்யாதவளை சிலுவையில் அறைந்தால் அவளும் எத்தனை நாள்தான் வலிகளைப் பொறுத்துக் கொண்டிருப்பாள்..? உடல் ரணம்கூட நாளடைவில் ஆறிவிடும்.. மணரணம் காலம்காலத்துக்கும் ஆறுமா..? மாறுமா...?

வள்ளுவர் பெருந்தகைதான் அழகாக சொல்லியிருக்கிறாரே..

'தீயினால் சுட்ட புண் உள்ளாறும் - ஆறாதே
நாவினால் சுட்ட வடு...' என்று

பாலமுரளி நாவினால் அவளைச் சுட்டான்.. அவனை நெருங்கிப் போனால் அதற்கும் ஒன்றைச் சொன்னான்.. விலகிப் போனால் அதற்கும் ஒன்றைச் சொன்னான்...

அவனுடன் போராடிப் போராடி மனம் களைத்துப் போனாள் ராதிகா... ஆனாலும் அவள் பின் வாங்குவதாக இல்லை...

'இது போர்க்களம்...'

இதுவே அவளின் நினைவு... யுத்தகளமாய் வாழ்க்கை ஆகிவிட்ட பின்னாலே புறமுதுகு காட்டி ஓட அவளால் முடியாது...

அவள் போர் முறையை மாற்றிக் கொண்டாளே தவிர... போராட்டத்திலிருந்து பின் வாங்கவில்லை...

ஹால்டிக்கெட் வாங்கவென்று கல்லூரிக்கு அழைத்துச் சென்றவன் அவளை விட்டுவிட்டு...

'ஹாய் அத்தான்...' என்று பல்லைக்காட்டிக் கொண்டு வந்த ஷோபாவிடம் ஈஷிக் கொண்டான்...

'அத்தானா..? இது எப்போயிருந்து...'

ராதிகாவுக்கு புரியவில்லை... ஷோபா பாலமுரளியை பெயர் சொல்லித்தான் அழைப்பாள்... புதிதாக அவன் அத்தான் முறை கொண்டாடவும் ராதிகாவிற்குள் எரிச்சல் மூண்டது...

அவள்தான் பச்சோந்தி... நேற்று வரை பெயர் சொல்லிக் கூப்பிட்டுவிட்டு இன்று எதிரியின் கழுத்தில் தாலியைக் கட்டியவனை... எதிரியை நோகடிக்கவென்று 'அத்தான்' முறை போட்டு அழைத்து வைக்கிறாள் என்றால் இந்த பாலமுரளிக்கு எங்கே போனது புத்தி என்று ராதிகாவிற்கு சுத்தமாக விளங்கவில்லை...

ஷோபா முப்பத்தியிரண்டு பற்களையும் காட்டினாள் என்றால் இவன் அந்த முப்பத்தியிரண்டு பற்களோடு ஈறுகளையும் சேர்த்துக் காட்டினான்...

அத்தான் என்றவளிடம் புருவத்தை உயர்த்தாமல் அவளைப் போலவே

"ஹாய்.. ஷோபா.." என்று 'ஹாய்' வேறு போட்டு வைத்தான்...

'இதப்பாருடா.. தேனூத்துக்காரனுக்கு செந்தமிழ் தான் பிடிக்கும்.. இது என்ன புதுசா.. ஹாய்..?'

புதிதாக தோன்றியிருந்த அந்த பந்தத்தைப் பற்றி ஆராய்ச்சி ராதிகாவின் மனதிலோடிக் கொண்டிருக்க...

"போங்க அத்தான்.. உங்க கூட நான் 'டூ'.. என்று செல்லமாக சிணுங்கினாள் ஷோபா..."

"அடடா.. என் ஷோபாக்குட்டிக்கு அத்தான் மேல அப்படியென்ன கோபமாம்..? நீ டூ விட்டால் நானெங்கே போக ஷோபா..?" பாலமுரளி வெகுவாக வருத்தப்பட்டான்...

"சும்மா உடான்ஸெல்லாம் விடாதீங்கத்தான்.. உங்களுக்கு என்மேல கொஞ்சம் கூட ஆசையேயில்லை..."

ஷோபா முகத்தை தூக்கி வைத்துக் கொள்ள ராதிகாவிற்கு பக்கென்று ஆகிவிட்டது...

ஷோபா அன்பேயில்லை என்று சிணுங்கினால் கூட அவள் பொறுத்துக் கொள்ளுவாள்.. ஆசையேயில்லை என்று சொன்னால் அவளால் எப்படி பொறுத்துக் கொள்ள முடியும்..?

அவளுடைய முகம் கடுத்தது... அதை பாலமுரளி கண்டும் காணாதவனைப் போல ஷோபாவிடம் ஜொள்ள வேண்டியதை ஜொள்ளிக்கொண்டிருந்தான்...

"இப்படியெல்லாம் அவசரப்பட்டு நீயாய் ஒரு முடிவுக்கு வந்து விடக்கூடாது ஷோபா.. உன்மேல ஆசை வைக்காம அத்தான் யார் மேல ஆசை வைக்கப் போகிறேன்..?"

இதைக்கேட்ட ஷோபாவின் விழிகளில் மின்னிய வெற்றிக் குறியீடை ராதிகாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அதே சமயத்தில் அவளது மனக்குமுறலை ஷோபா அறியும்படி வெளிவிடவும் அவள் தயாராக இல்லை...

அவள் முகம் மாறாமல் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்.. அதை ஷோபாவும் பார்த்தாள்...

"என்ன ராதிகா ஹால் டிக்கெட் வாங்க நேரமாகிருச்சா..? நீ வேணும்னா ஹால் டிக்கெட் வாங்கப் போயேன்.. நானும் அத்தானும் ஹாயாய் பேசிக் கொண்டிருக்கோம்..." என்றாள்...

'பேசுவடி பேசுவ... அடுத்தவ புருசனிடம் பல்லைக் காட்டிப் பேசினா உனக்கு ஹாயாய் தான் இருக்கும்.. நீயெல்லாம் ஒரு பிறவி... உன் கூடவும் இந்த மனுசன் நின்று பேசுகிறாரே.. இவரைச் சொல்லனும்...' ராதிகா மனம் கொந்தளித்தாள்...

"மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி.. வாங்க அத்தான்.. அந்த மரத்தடியில கிடக்கிற பெஞ்சில உட்கார்ந்து பேசலாம்.. அப்படியே இந்த அப்பீயரன்ஸ் பார்க்கில இருக்கிறதைப் போல சூப்பராய் இருக்கில்ல.."

அதுவரை தள்ளி நின்று பேசிக் கொண்டிருந்த ஷோபா பாலமுரளியின் கையைத் தொட்டுப் பிடித்து இழுத்தாள்...

ராதிகா அதிர்ந்து விட்டாள்.. அவளது பாலமுரளியின் கையின் மேல் அவள் கண்முன்னாலேயே வேறொருத்தியின் விரல்கள் படிவதா..?

உடல் விதிர்க்க.. ஷோபாவின் விரல்களையே பார்த்துக் கொண்டிருந்தவளை கூர்மையாகப் பார்த்தான் பாலமுரளி...

ஷோபாவின் பிடியிலிருந்து கையை உறுவிக் கொள்ள அவன் முயலவில்லை...

அடுத்த வெற்றிப்பார்வை ஷோபாவிடமிருந்து பறந்து வந்தது... ராதிகா வேக மூச்செடுத்து தன்னைச் சமனப் படுத்திக் கொண்டாள்...

"பேசிட்டா போச்சு... அதுக்கு முன்னாடி இதுக்குப் பதில் சொல்லு... உன்மேல எனக்கு ஆசையேயில்லைன்னு எதை வைச்சு நீ முடிவுக்கு வந்த..?" ராதிகாவைப் பார்த்தபடி ஷோபாவிடம் கேட்டான முரளி...

"நீங்க சென்னைக்கு வந்தவுடனே என்னைப் பார்க்க ஓடி வந்திருக்க வேணாமா..? யாரோ போல காலேஜில்தான் நாம ரெண்டு பேரும் பார்த்துக்கனுமா..?" ஷோபா உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள்..

"ஓ... அதைச் செல்கிறயா..? ஸாரி ஷோபா... நான் கிளம்பனும்னுதான் நினைச்சேன்..."

"அப்புறம் ஏன் வரல..? இவ விடலையா..?"

"என்னை யாரும் தடுக்க முடியாது..."

"அதான் எனக்குத் தெரியுமே..."

ஷோபாவின் ஏளனமான பார்வையில் வேறொருத்தியாக இருந்திருந்தால் குன்றிப் போயிருப்பாள்.. ராதிகா அவளது பார்வையை சட்டை செய்யவே இல்லை... நிமிர்ந்து நின்றாள்...

வழக்கம் போலவே அவளின் அந்த நிமிஷ ஷோபாவுக்கு பெருத்த தோல்வியாக இருந்தது... தலைவலி... வரட்டுமா என்று கேட்க ஆரம்பிக்க... பல்லைக் கடித்து அதை தற்காலிகமாக தூர்த்தி விட்டாள்...

'எப்படி நிற்கிறா பாரேன்... இவளுக்கு தாலி கட்டின ஸல்பெண்ட் இவ முன்னாலேயே என்மேல ஆசை வைச்சிருக்கேன்னு சொல்கிறான்... இவ அசையாம நெடுமரமா நிற்கிறா... என்னைப் பார்க்க வரணும்னு அவன் நினைச்சா யாரும் அவனை தடுக்க முடியாதுன்னு வேற சொல்கிறான்.. இது அதுக்கும் எனக்கென்னன்னு நிற்கிறாளே... இவளை அசைக்கவே முடியாதா..?'

எப்படியாவது ராதிகாவின் மனதை காயப்படுத்தியே தீர வேண்டும் என்ற வெறியோடிருந்த ஷோபாவிற்கு தெரியாது... ராதிகா ஷோபாவின் முதல் அஸ்திரத்திலேயே மனக்காயப் பட்டு விட்டாள் என்பது...

அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவன் கற்சிலையாக நின்று கொண்டிருந்ததை ஷோபா அறியவில்லை... ஆனால்.. பாலமுரளி அதை அறிந்திருந்தான்...

நொடிப் பொழுதில் ராதிகாவின் கண்களில் வந்து போன வேதனையை உடனே அவன் இனம் கண்டு கொண்டுவிட்டான்... அவன் கண்கள் மின்னின... அவளை புண்படுத்திவிடத் துடித்த மனத்துடிப்பில் அவன் ஷோபாவோடு இணைந்து பேச ஆரம்பித்து விட்டான்...

"என் அத்தான்னா.. அத்தான்தான்... உங்களுக்கும் எனக்கும் நடுவில யாரும் வரமுடியாதுங்கிறப்போ எதுக்காக அத்தான் என் வீட்டில வந்து தங்காம அந்த வீட்டிலே தங்கியிருக்கீங்க..."

இந்த வார்த்தைகளில் முகம் களித்தாள் ராதிகா.. என்னவோ பாலமுரளிக்கு இரண்டு வீடுகள் இருப்பதைப் போலவும்... அவன் ஒரு வீட்டுக்குப் போகாமல் இன்னொரு வீட்டிற்கு போய் விட்டதைப் போலவும் ஷோபா பேசிய லட்சணத்தில் அவள் அருவெறுப்பு கொண்டாள்...

'எப்படிப் பேசி வைக்கிறான்னு பாரு... இவளெல்லாம் ஒரு பிறவியா...'

எத்தனை முறைதான் ராதிகாவும் ஷோபாவை பிறவியில்லை என்று நினைத்து வைப்பாள்...?

அவளது கோபம் பெருகிக் கொண்டிருக்க... பாலமுரளி நிதானமாக அவளது கோபத்தை அளவிட்டபடி ஷோபாவின் பேச்சை மதித்துப் பதில் சொன்னான்...

"என்ன ஷோபா செய்கிறது..? அந்த வீட்டில் பெண் கட்டியிருக்கேனே..."

பெருத்த வேதனையைப் பகிர்ந்து கொள்பவனைப் போல -அவன் சொல்லிய விதத்தில் ஷோபா சந்தோசப் பட்டுப் போனாள்...

அவள் நினைத்ததைப் போலவே பாலமுரளியின் மனதில் வன்மம் புதைந்திருப்பது அவளுக்கு உள்ளங்கை நெல்லிக் கனியைப் போல தெளிவாக விளங்கி விட்டது...

இல்லாவிட்டால் அவளை மதித்து நின்று ஒருவார்த்தை பேசியறியாதவன் அன்று 'ஆசை.. தோசை.. அப்பளம்... வடை...' என்ற அளவிற்கு நெருக்கமான பேச்சுக்களை பேசிவைப்பானா..?

இதைப் பயன் படுத்திக் கொள்ளாவிட்டால் அவள் ஷோபா இல்லையே...

"அதைச் சொல்லுங்க.. அண்ணியும் இதைச் சொல்லித்தான் தினமும் புலம்புகிறாங்க... எப்படியத் தான் அந்த வீட்டிலே போய் தங்கியிருக்கீங்க..? நம்ம ஸ்டேட்டஸீக்கு அங்கேயெல்லாம் போய் நீங்க தங்கலாமா..?"

"த்ச்சு... மறுவீட்டு விருந்தாம்.. அம்மா சொல்லிட்டாங்க... மறுக்க முடியலை.. வந்து தொலைச்சாச்சு..."

"பாவம்தான் அத்தான் நீங்க..."

"என்மேல் பாவப்பட நீயாவது இருக்கியே..."

அவன் ராதிகாவைப் பார்த்தபடியே இதைக் கூற அவள் பல்லைக்கடித்தாள்...

'வேணும்ன்னா... உன்மேல பாவப்பட இன்னும் இரண்டு ஆளை பிடிச்சு விடவா..?' என்று கேட்டு விடலாமா என்று ராதிகாவுக்கு தோன்றியது...

அவளுக்கு ஷோபாவின் மீது கூட கோபம் வரவில்லை... அவள்புத்தி அதுதான் என்று ராதிகாவுக்கு மிக நன்றாகவே தெரியும்...

'இவனுக்கு எங்கே போச்சு புத்தி...' இதுதான் அவள் நினைவு...

அவளை அவன் மனதுக்குள் அலற வைப்பதைப் போல... அவனையும் ஒரு ஆட்டு ஆட்டினால் என்ன என்ற நினைவு தோன்ற...

"ஹேய்.. ஹேமா..." என்று தூரத்தில் போய் கொண்டிருந்த ஹேமாவை கை தட்டி அழைத்தாள் ராதிகா...

"ராது..." திரும்பிப் பார்த்த ஹேமாவின் முகம் ஒளிர்ந்தது...

"எப்போடி வந்த...?"

அவள் உற்சாகமாக ராதிகாவின் அருகே வர.. பாலமுரளியின் முகம் கருத்தது... அதை ஜாடையாக பார்த்துக் கொண்டாள் ராதிகா...

"இப்பத்தான் வந்தேன்.. ஏண்டி.. என்னை வரச் சொல்லிட்டு.. நீ திருவாரூர் தேரைப்போல ஆடி அசைஞ்சுக்கிட்டு வர்றியே... இது உனக்கே நல்லாயிருக்கா...?" உரிமையுடன் கோபித்துக் கொண்டாள்...

"ஏய்ய்.. நீ இன்னைக்கு வர்றேன்னு சொன்னியாடி..?"

"அடேங்கப்பா... சொல்லிட்டுத்தான் வரனுமாக்கும்.. இது உனக்கு மட்டும் சொந்தமான காலேஜா...?"

"நீ வேணும்னா பட்டா போட்டுக்க... யாரு வேண்டாம்ன்னு சொன்னது..?"

ராதிகாவைப் போலவே 'பட்டா' என்ற வார்த்தையை உபயோகித்தார் ஷோபா...

"சொல்லித்தான் பாரேன்..."

"நீ உடனே கேட்டுட்டுத்தான் வேற வேலை பார்ப்ப.. அந்த விளையாட்டுக்கே நான் வர்றதா இல்லை..."

"நீ ஹால் டிக்கெட் வாங்கிட்டியா..?"

"ஆச்சு.. வா.. உனக்கு வாங்கிக்கலாம்.."

"செய்துடலாமா..? வா.. போகலாம்..."

"உன் ஹஸ்பெண்ட் நிற்கிறாரே..."

"அவருக்குத்தான் ஷோபா கம்பெனி கொடுத்துக் கிட்டிருக்காளே.. நீ வாடி.. போகலாம்..." ராதிகா ஹேமாவுடன் பேசியபடி நடந்து விட்டாள்..

என் நினைவிருக்கிறதா காதலனே..?
உன் நினைவுகளால்தான் நான் வாழ்கிறேன்..

பாலமுரளியின் முகம் கருத்து விட்டது... யாருடன் பேசக்கூடாது என்று ராதிகாவை அவன் எச்சரித் திருந்தானோ.. அந்த ஹேமாவுடன் பேசியபடி அவனைப் பொருட்படுத்தாமல் ஹால் டிக்கெட்டை வாங்கச் சென்று விட்டாள் ராதிகா...

'ஆஹா...' குளிர்ந்து விட்டாள் ஷோபா...

கிடைத்தது வாய்ப்பென்று அவள் பாலமுரளியிடம் கடலை போட ஆரம்பிக்க... அதை ரசிக்கும் மன நிலையில் இல்லாத முரளி கொலைவெறியோடு அவளைப் பார்த்தான்...

இதமான காலை நேரக்காற்றில் அந்த மாத்தடி அதிகமான குளுமையோடு இருந்தது... சுற்றிலும் இருந்த பசுஞ்செடிகளும்... மரங்களும்.. ஷோபா சொன்னதைப் போல ஒரு பூங்காவில் அமர்ந்திருப்பதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியது...

இவையெதுவும் பாலமுரளியின் மனக் கொதிப்பை தணிக்கவில்லை...

தூரத்தில் திரும்பி வந்து கொண்டிருந்த ராதிகாவைக் கண்டதும் அவளைக் கடுப்பேற்றவென்று ஷோபா அவனருகில் நெருங்கி அமர்ந்து கொஞ்சிப் பேச ஆரம்பித்தாள்..

ஆனால் அருகில் வந்திருக்க வேண்டிய ராதிகாவோ... சற்று தூரத்தில் நின்று ஹேமாவுடன் பேச ஆரம்பித்து விட்டாள்.. அது முரளிக்கும்... ஷோபாவுக்கும் பெருத்த சோதனையாக அமைந்து விட்டது...

முரளியின் அண்மை ஷோபாவுக்கு பிடித்த மானதாகத்தான் இருந்தது... என்றுமே அவன்மேல் அவள் ஒரு கண்ணை பதித்துத்தான் இருந்து வந்தாள்.. அதிலும்

ராதிகாவின் காதலனாக அவனைக் கண்டு கொண்ட தினத்திலிருந்து அவன் மீதான ஈர்ப்பு ஷோபாவுக்கு அதிகரித்து விட்டது... ராதிகாவைத் தோற்கடிக்க.. எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்த ஷோபா.. முரளியிடம் நெருங்கிப் பழகி.. அதன் மூலம் ராதிகாவை துன்பப் படுத்த வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு காத்திருந்தாள்..

நினைத்தை செயல்படுத்த அன்று அவளுக்கு அருமையான வாய்ப்பு தானாக அமைந்து விட்டதில் உற்சாகம் கொண்டிருந்தவள் ராதிகா அருகே வராமல் சற்றுத் தள்ளி நின்று ஹேமாவுடன் பேச ஆரம்பிக்கவும் திணறிப் போனாள்...

அவள் அனுபவப் பட்டவள்... அவளுக்குத்தான் தெரியும்... ராதிகாவும் ஹேமாவும் கூட்டணி சேர்ந்தால் என்ன ஆகுமென்று...

அவள் பயந்ததைப் போலத்தான் நடந்தது...

அவளிருந்த திசையை அடிக்கடி திரும்பிப் பார்த்தபடி அவர்கள் இருவரும் ரகசியக்குரலில் பேசி குபீரென்று சிரித்து வைத்தார்கள்.. ராதிகா எதையாவது சொன்னால்... ஹேமா வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தாள்... ஹேமா எதையாவது சொன்னால் ராதிகா வாய் பொத்திச் சிரித்தாள்...

'இவளைக் கடுப்படிக்கலாம்ன்னு நினைச்சா... இவ என்னைக் கடுப்படிக்கிறாளே.. கடைசியில் இவளுக ரெண்டு பேரும் என்னை ஜோக்கராகவே ஆக்கிட்டாங்களே...' மனம் புழுங்கிப் போனாள் ஷோபா..

பாலமுரளியின் கோபமோ வேறுதிசையில் பயணித்துக் கொண்டிருந்தது...

'நான் அவ்வள்வு சொல்லியும் கேட்காம அந்த ஹேமாகூட ஜோடி போட்டுக்கிட்டு போறாளே.. திரும்பி வந்ததும்தான் வந்தா.. கிட்டே வராம எட்டே நின்று என்ன ரகசியப் பேச்சு வேண்டிக்கிடக்கு..? அவகிட்ட இவ எதைச் சொல்கிறா..' அவனின் ரத்த அழுத்தம் எகிறிக் கொண்டிருந்தது...

எப்படியாவது ராதிகாவை புண்படுத்தி விட வேண்டுமென்ற நோக்கத்தில் அவன் தோள்மேல் சலுகையாய் சாய்ந்தபடி...

"அத்தான்..." என்று ஷோபா கொஞ்சலாக அழைக்க...

"ச்சை..." என்று எரிந்து விழுந்தான் பாலமுரளி...

ஷோபாவின் செய்கை அவனுக்கு சகிக்க முடியாததாக ஆகித் தொலைத்திருந்தது... அவளைக் கண்டாலே காத தூரம் ஓடுகிறவனை இப்படிப் பக்கத்தில் அமரவைத்து பேசிக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயத்தை உண்டாக்கியதற்காகவே ராதிகாவை என்ன செய்தாலும் தகும் என்ற கொலை வெறியின் உச்சகட்டத்தில் இருந்தான் அவன்...

அதைப் புரியாமல் நெருங்கி அமர்ந்து.. சும்மாவும் இருக்காமல் தோளிலும் சாய்ந்து வைத்து.. வாங்கிக்

கட்டிக் கொண்ட ஷோபாவின் முகம் அவமானத்தில் சிவந்து விட்டது...

அப்படிப்பட்ட ஒரு வார்த்தையை முரளியின் வாயிலிருந்து கேட்க நேரிடும் என்று அவள் கொஞ்சம் கூட எதிர்பார்த்திருக்கவில்லை...

எப்போதுமே அவனைக் கண்டால் அவளுக்கு பயம்தான்.. நெருங்கிப் பேச நினைத்தாலும்.. முள்ளாய் குத்தும் அவனது சுபாவத்தைக் கண்டு அஞ்சி விலகி நின்றவள்தான்...

என்னவோ அவளின் போதாத காலம்.. அன்றைக் கென்று பால்முரளி இணக்கமாக பேசி வைக்க.. ராதிகாவைப் பழிவாங்க அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள நினைத்து பக்கத்தில் அமர்ந்து பேசிவிட்டாள்...

'எல்லாம்... இந்த ராதிகாவால் வந்தது...'

உள்ளம் கொதித்த போதும்.. அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல்

"அத்தான்...!" என்று அஞ்சி இமை கொட்டினாள் ஷோபா...

அவளைப் பெற்ற பரந்தாமனே அவளின் இமை கொட்டுதலில் பயந்து போயிருக்கிறார் எனும் போது பாலமுரளி பயப்பட வேண்டாமா..?

அவனோ.. "சகிக்கலை..." என்று சொல்லி விட்டான்...

அதுதான் உண்மையும் கூட.. அது பரந்தாமனுக்கு மிக நன்றாகவே தெரியும்.. அவர் படித்துப் படித்து மகளிடம் சொல்லியிருக்கிறார்.. இது போன்ற இமை கொட்டல்களைப் பயன்படுத்தி சங்கரை விரட்டியடித்து விட வேண்டாமென்று... அவள் கேட்டால் தானே...

காலங்கடந்த ஞானோதயத்தால் யாருக்கு என்ன பயன்..? அதிலும் ஷோபாவுக்கு என்ன பயன்..?

'ம்ஹீம்.. எத்தனையோ கேட்டாச்சு... இதைக் கேட்க மாட்டோமா...'

அவள் மனதைத் தேற்றிக் கொண்டவளாக.. தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத லேடி விக்கிரமாதித் தனைப் போல தன் உராய்வினைத் தொடர்ந்தாள்...

'சொன்னாலும்.. சொல்லாட்டியும் இவன் வேதாள மேதான்... எப்படித்தான் அந்த ராதிகாவுக்கு இவன்மேல் காதல் வந்து தொலைத்ததோ.. அதுவும்... அழகான சங்கரை வேணாம்ன்னு சொல்லிட்டு இந்தக் காட்டான் மேல ஆசைப்பட்டிருக்காளே...'

அவளது நினைவை மட்டும் பாலமுரளி அறிந்திருந் தானென்றால் அந்த இடத்திலேயே அவளை ஒரு வழி பண்ணியிருப்பான்...

அகத்தில் இருப்பதை மற்றவர்கள் அறிந்து கொள்ள முடியாத ஒரே காரணத்தினால் ஷோபா தப்பிப் பிழைத்தாள்...

"என்னத்தான் சொல்கிறிங்க..."

என்னவோ பாலமுரளி சொன்னது காதிலேயே விழுகாததைப் போலச் சொல்லச் சிணுங்கலுடன் கேட்ட ஷோபாவை ஒரு விதமாக பார்த்து வைத்தான் பாலமுரளி..

அது எப்படித்தான்... இப்படியொரு பெண்ணை அவனுக்காக அவனது அக்கா சிபாரிசு செய்தாளோ என்றிருந்தது அவனுக்கு...

'அக்காவுக்கு அம்மா சொல்கிறதைப் போல புத்தி கொஞ்சம் மட்டுத்தான் போல...'

"சொல்லுங்க அத்தான்..."

ஷோபா மீண்டும் சிணுங்கி வைக்க.. அங்கேயிருந்து ஓடிவிட்டால் தேவலை என்று யோசிக்க ஆரம்பித்து விட்டான் பாலமுரளி...

'இவகிட்ட வந்து மாட்டிக்கிட்டேனே.. இந்த ராதிகாக் கழுதைதான் ஹால் டிக்கெட் வாங்குகிற வேலை முடிஞ்சா வந்து சேர வேணாமோ அந்த ஹேமாக் கழுதைகூட என்ன பேச்சு வேண்டிக்கிடக்கு..? இவபுத்தி எனக்குத் தெரிஞ்சிருக்கிறதைப் போல கூடப் படிச்ச அவளுக்கா தெரியாது..? என்னடா நம்ம புருசன்காரன் இந்த மேனாமினுக்கியின் பக்கத்தில உரசிக்கிட்டு உட்கார்ந்திருக்கானே... பதறியடிச்சுக்கிட்டு ஓடி வருவோமுன்னு நினைக்கிறாளா... எதையும் கண்டுக்காம அந்த ஹேமாகூட ரகசியப் பேச்சு பேசிக்கிட்டிருக்காளே..'

"சொல்லுங்க அத்தான்..."

எதையாவது சொல்ல வேண்டுமேயென்று ஷோபா சிணுங்கிவைக்க.. அவள் அவ்வளவு ஆர்வமாக அந்த வார்த்தையை மீண்டும் கேட்க விருப்பம் காண்பிக்கும் போது சொல்லாமல் இருக்கக் கூடாது என்று தோன்றி விட்டது பாலமுரளிக்கு...

"ம்ம்... சகிக்கலைன்னு சொன்னேன்..."

இதைக் கேட்டபின்பாவது அவள் தள்ளி உட்காரு வாளா என்ற அவனின் அபிலாஷை காற்றில் பறந்தது...

"ஆமாம் அத்தான்... எனக்கும் சகிக்கலைதான்..." என்று அவள் சொல்லி வைத்தாள்...

எப்போதிருந்து இவள் இப்படியாகப்பட்ட நியாயப் பிறவியாக மாறினாள் என்ற வியப்புக்கு ஆளானான் பாலமுரளி...

'இவ செய்கிறதை சகிக்க முடியாதுன்னு இவளுக்கே தெரிஞ்சிருக்கே.. அப்புறமும் எதுக்காக இப்படி உரசிக்கிட்டு உட்கார்ந்திருக்கிறா.. தள்ளி உட்கார வேண்டியது தானே...'

அவன் இப்படி யோசித்து வைக்க.. அதை அறியாத அறியாப் பெண்ணைப் போல...

"ராதிகா செய்கிறதை உங்களால சகிச்சுக்க முடியாதுதான்..." என்றாள் ஷோபா..

'இவ எதுக்கு இப்ப தேவையில்லாம ராதிகாவைப் பத்திப் பேசி வம்பைக்கட்டி இழுக்கிறா...' ஷோபாவை முறைத்தான் முரளி...

இதுபோல ராதிகா அவன் தோள் சாய்ந்த பொழு
அவன் நினைவுக்கு வந்து மிதந்தது.. அந்த இரவு நே
கார் பயணத்தின் இதமான பாடல் வரிகள் அவன் மனதி
ஒலித்தன...

'எனக்காக வா... நான்
உனக்காக வா...'

அவன் மனதில் பொங்கிய தாபம் அறியாதவளா
ஷோபா அவனை இன்னும் அதிகமாக உராய.. அவ
சுள்ளென்று பேசி விட்டான்...

"த்ச்சு.. தள்ளி உட்காரு ஷோபா..."

"ஏன் அத்தான்..?" அவள் மீண்டும் இமைகொட்ட
அப்படியே அவள் கன்னத்தில் நான்கு அப்பு அப்பி...

'இனிமே இப்படி இமை கொட்டி வைப்பியா..?'
என்று அரட்டி வைக்க வேண்டும்போல ஆவேசப்பட்டு
போனான் முரளி...

"இங்கே எதுக்கு வந்திருக்க..?"

"படிக்க..."

"இதுதான் நீ படிக்கிற லட்சணமா..?"

'இப்போத்தான் அது உன் நினைவுக்கு வந்ததா..?'

"இது காலேஜ்ம்மா... நீ சொன்னதைப் போல பூங்கா
இல்லை..."

'இதையேன் உன் பெண்டாட்டி முன்னாலே
சொல்லலை...?'

"இப்படிப் பட்டப் பகலில் ஒரு ஆம்பளை பக்கத்தில் உட்கார்ந்து தொட்டுத் தொட்டுப் பேசி வைக்கிறயே.. பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்கன்னு கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தியா...?"

'அதுசரி.. உன் பெண்டாட்டி பார்த்தா மட்டும் ஒன்னுமில்லை... மத்தவங்க பார்த்தா அது தப்பு... என்னே உன் நியாயம்...'

"படிக்கிற பெண்ணாய் லட்சணமாய் இரு..."

'அதை இப்போவந்து நீ சொல்லாதே...'

விட்டால் அன்று முழுக்க அவன் உபதேசம் பண்ண ஆரம்பித்து விடுவான் என்று தோன்றி வைக்க... அரண்டு போன ஷோபா அவசரமாக பேச்சின் போக்கை திசை மாற்றி விட்டாள்...

"பாருங்க அத்தான்.. நீங்க காத்துக்கிட்டிருக்கிற நினைவு கொஞ்சம்கூட இல்லாம ராதிகா.. அவ பிரண்ட் கூடநின்னு அரட்டையடிச்சுக்கிட்டு இருக்கா..."

பாலமுரளிக்கும் அதே கொதிப்புத்தான் என்றாலும்.. ஷோபாவின் முன்னால் ராதிகாவை குறைவாக பேசும் மனமில்லாதவனாய் மௌனம் சாதித்தான்...

'கொஞ்சம் கூட பெண்டாட்டிக்கு எதிராய் பேச மாட்டானே...'

"அந்த ஹேமா இருக்காளே.. அவ கொஞ்சம் கூட சரியில்லாத பொண்ணு அத்தான்..."

ஷோபாவின் வாயினால் இத்தகைய நற்சான்றிதழை பெற்று விட்ட ஒரே காரணத்துக்காவே ஹேமாவை உலகிலேயே சிறந்த பெண் என்று அறிவித்து விட பாலமுரளிக்கு தோன்றியது தான்...

ஆனால் அவள்தான் சங்கருக்கு தூது சொல்லும் வேலையைச் செய்து கொண்டிருந்தாளே.. அதனால் இதற்கும் மௌனத்தையே பதிலாகத் தந்தான் பாலமுரளி...

"அவளாலேதான் ராதிகா கெட்டுப் போறா..."

இந்தப் பேச்சுடன் நூறு சதவிகிதத்துக்கு முரளி இசைந்து போனாலும்.. ஷோபா பேசிய வார்த்தைகளில் அவனுக்கு கோபம் வந்து விட்டது...

அவன் கூர்மையாக ஷோபாவைப் பார்க்க.. அந்த பார்வை வீச்சின் ஜ்வாலையைத் தாங்க முடியாதவளாக பார்வையைத் திருப்பிக் கொண்டாள் ஷோபா...

'இப்படி முறைக்கிறானே...'

"ராதிகா என் பெண்டாட்டி.. இன்னொரு தடவ.. இப்படிப்பட்ட பேச்சை என்கிட்டப் பேசிவைக்காதே.. நான் கோபக்காரன்... ஒரு நேரம் போல ஒரு நேரம் இருக்க மாட்டேன்.. சொல்லிட்டேன்..."

தீக்கங்குகளாய் சுட்ட அவன் வார்த்தைகளில் நடுங்கிப் போனாள் ஷோபா.. அவளைக் காப்பாற்ற வென்று வந்ததைப் போல ஒரு வழியாய் ராதிகாவும் வந்து சேர்ந்து விட... தப்பித்தோம்.. பிழைத்தோம் என்று வகுப்பறையை நோக்கி ஓட்டம் பிடித்தாள்...

85

குற்றால அருவியிலே..
குளித்த போதும் உந்தன்நினைவு...

"எதுக்கு அவ இப்படி ஒடுறா..?"

ராதிகா விளங்காமல் கேள்வி கேட்டுவைக்க.. அருகிலிருந்த ஹேமா அதை ரசித்துச் சிரித்தாள்..

"சும்மாவும் ஓடலைடி ராது... பின்னங்கால் பிடறியில படற மாதிரியில்ல ஒடுற..."

அவளது பேச்சும் சிரிப்பும் பாலமுரளிக்கு உவப்பானதாக இருக்கவில்லை... முகத்தில் ஓர்விதமான கடினத்தன்மையுடன் ராதிகாவை முறைத்தான் அவன்...

"ஷோபா என் சொந்தக்காரப் பொண்ணு.. அத்தைமக.. தெரியுமில்ல..."

"தெரியும்.. தெரியும்..."

"தெரிஞ்சுமா அவளைக் கேலி பண்ற...? எனக்கு இதெல்லாம் பிடிக்காது.. அடக்கி வாசி..."

பாலமுரளியின் கடுமையில் ஹேமாவின் சிரிப்பு நின்று விட்டது...

ராதிகாவின் பார்வை பாலமுரளியை குற்றம் சாட்டியது... அவன் முகத்தில் நிலவிய திருப்தியில் அவன் மனம் அடிவாங்கியது... அவன் மனதின் மறுபக்கத்தில் இருந்த குரூரத்தில் அவள் துன்பம் கொண்டாள்...

"வரேண்டி ராது.. கிளாஸீக்கு டயமாச்சு..."

பிரிந்து விரைந்த ஹேமாவின் முதுகைப் பார்த்த வண்ணம் நின்றிருந்த ராதிகாவின் மனதில் தனிமை சூர்வதை அவளால் தவிர்க்க முடியவில்லை...

ஒரு கல்யாணம் ஒரு பெண்ணின் நெருக்கமான தோழியை பிரித்து நிறுத்துமானால் அதை என்னவென்று சொல்வது...?

பிறந்தது முதல் அறிந்திருந்த சொந்தங்களையும் தோழமையையும் துறந்து விட்டு.. புகுந்த வீட்டின் உறவுகளோடு தன்னை இணைத்துக் கொள்ளும் பெண் புனர் ஜென்மமாய் அதை உணர மாட்டாளா...?

ஆண்களுக்கு அத்தனை சொந்தங்களும் தோழமைகளும் நிலைத்திருக்க... பெண்ணுக்கு மட்டும் அது பறிபோகுமானால் அது மிகப் பெரிய கொடுமையல்லவா..?

தோழி முகம் வாடி பிரிந்து சென்றதில் எல்லையற்ற மனத்துயர் கொண்டாள் ராதிகா...

"என்னடி... என்கூட வரணும்கிற நினைப்பிருக்கா இல்லையா...?"

பாலமுரளியின் கேள்வி அவளைக் குத்தியது.. வாய் பேசாமல் மௌனமாக காரில் ஏறி அமர்ந்து கொண்டாள் ராதிகா...

பாலமுரளி கோபத்திலிருந்தான்.. அதைப் பேச்சில் வெளிப் படுத்தினான்...

"உன்கிட்ட சொன்னேனா.. இல்லையா..?"

"என்ன சொன்னீங்க...?"

"அதுகூட உனக்கு மறந்து போச்சா..? ஏன் மறந்து போகாது..? உன் நினப்பெல்லாம் வேற பக்கமில்ல இருக்கு.."

"பேச வந்ததை மட்டும் பேசுங்க..."

"இல்லைன்னா..?"

"எனக்கும் பேசத் தெரியும்.."

"உனக்குப் பேசத் தெரியும்ன்னு எல்லாருக்குமே தெரியுமே.. அந்தப் பெண்கூட பேசாதேன்னு உனக்குச் சொல்லியிருந்தேன் ராதிகா..."

"எந்தப் பெண்...?"

இடக்காக ராதிகா கேட்க.. அதற்கும் முறைத்தான் முரளி...

"உன் பிரண்ட்..."

"அவ பெயர் ஹேமா.. அந்தப் பெண்ணில்லை..."

"எனக்கு அது அவசியமில்லை..."

"எனக்கு மட்டும் உங்க அத்தை மகளை கேலி பண்ணாம இருக்கனும்கிற அவசியமில்லை..."

"போட்டா போட்டியா..?"

"ஆமாம்ன்னுதான் வச்சுங்கங்க..."

"எதுக்கு வந்த..? ஹால் டிக்கெட் வாங்கத்தானே.."

"நான் அதுக்குத்தான் வந்தேன்.. நீங்க துணைக்கு வந்தீங்க..."

"வந்தவளுக்கு அந்தப் பெண்கூட என்ன பேச்சு..?"

"இதென்னங்க வம்பாய் போச்சு... உங்க அத்தை மகதான் என் கண் முன்னாடியே உங்களை உரசித் தள்ளினா... காலேஜ் பாதையைப் பார்த்தா.. பார்க்கைப் பார்த்ததைப் போல இருக்குன்னு மெல்ட் ஆனா.. உங்க கூட தனிமையில பேசனும்னு பிரியப்பட்டு பொங்கி வழிஞ்சா..."

"அதுக்கு..?"

"அதுக்காக நான் உங்க ரெண்டு பேருக்கும் தனிமையை உண்டாக்கி கொடுத்துட்டு ஹேமாகூட பேசிக்கிட்டு நின்னேன்... இப்படியெல்லாம் செஞ்சாத்தானே என்னை கற்புக்கரசின்னு நீங்க சொல்வீங்க... கண்ணகி சிலைக்குப் பக்கத்திலே எனக்கும் சிலையை வைப்பீங்க..."

ராதிகா சிரிக்காமல் பேச... பாலமுரளிக்கு சிரிப்பு வந்து தொலைத்தது...

'இவள என்ன செய்தால் தேவலாம்...'

"அடேங்கப்பா.. அந்த அளவுக்கு நீ தியாகியா..?"

"இல்லையா பின்னே..? என்னைத் தியாகச் செம்மலாக்கி விட்டுத்தான் வேற வேலை பார்க்கிறதுன்னு நீங்களும் உங்க அத்தை மகளும் ஒரு முடிவோட இருக்கிறப்போ.. என் பங்குக்கு நானும் ஏதாவது செய்தாகனுமா.. வேணாமா..?"

"ஒஹோ... அதுக்குத்தான் அம்மையார் அந்தப் பொண்ணுகூட ரகசியம் பேசிக்கிட்டு இருந்தீகளாக்கும்.."

"ஆமாம் பாஸ்..."

"பாஸா...?"

"பின்னே..? அத்தானா..? அதையெல்லாம் நான் சொல்லிக் கூப்பிட்டா நல்லாயிருக்காது.. உங்க அத்தை மக ரத்தினம் சொல்லிக் கூப்பிட்டாத்தான் உங்களுக்கு காதில தேன் வந்து பாய்கிறதைப் போல இனிச்சு வைக்கும்.."

'போடி நீவேற.. சுடுதண்ணிய ஊத்திதைப் போல சுட்டு வைக்குது.. அவ பேச்சை இவ விடவே மாட்டேங்கிறாளே...'

பாலமுரளியே ஷோபாவின் இமை கொட்டுதலில் இருந்து விடுபட்டு விட்ட விடுதலை உணர்வுடன் அப்போது தான் நிம்மதிப் பெருமூச்சை விட்டுக் கொண்டிருந்தான்.. அவனிடம் போய் ஷோபாவைப் பற்றியே ராதிகா பேசிவைத்தால் அவனுக்கு எப்படியிருக்கும்..?

"கடுப்பைக் கிளப்பாதே.. அந்த சங்கருக்குத்தானே நீ தூது சொல்லி விட்டுக்கிட்டு இருந்த...?"

'நீ ரொம்பத்தான் கண்ட...' ராதிகாவுக்குள் எரிச்சல் மண்டியது...

"வாயிருந்தா எதையும் பேசிடலாம்கிற நினைப்பு இருக்கக் கூடாது.. யாரைப் பத்தியும் நான் பேசல.. யாருக்கும் நான் தூது விடல..."

"இதை என்னை நம்பச் சொல்றியா..?"

"நம்பாட்டிப் போங்க.. எனக்கென்ன போச்சு..?"

இப்படிச் சொல்லிவிட்டு பளீரென்ற அறையை கன்னத்தில் வாங்கினாள் ராதிகா...

வலிதாங்க முடியாமல் துடித்துப் போனவளாக கன்னத்தைப் பிடித்துக் கொண்டவளின் பார்வையில் எதைக் கண்டானோ.. முரளி வேகம் தணிந்தான்...

"என்னை மிருகமாக்கறேயேடி.." மனம் குமுறினான்..

ராதிகா பேசவில்லை... அவர்களின் கார் கடற்கரைச் சாலையில் சென்று கொண்டிருக்க.. கடலை வெறித்தபடி கற்சிலையைப் போல அமர்ந்திருந்தாள்...

"அவகூட பேசாதேன்னு சொன்னேன்.. நீ என் கண்ணெதிரேயே ரகசியப் பேச்சு பேசற.. கட்டின புருசன் பார்த்துக்கிட்டு இருக்கான்கிற நினைப்பு உன் மனசில இல்லையேடி..."

"உங்களுக்கு மட்டும் இருந்தா..?" ராதிகா நிதானமாக கேட்டாள்..

"இல்லை.. தெரியாமல்தான் கேட்கிறேன்.. கட்டின பெண்டாட்டி பார்த்துக்கிட்டு இருக்காங்கிற நினைப்பு உங்களுக்கு மட்டும் இருந்ததா..? என் கண் முன்னாடியே அவ உங்க கையைப் பிடிச்சு இழுக்கிறா... நீங்களும் கையை உறுவிக்காம.. கையை வாகாய் கொடுத்துக்கிட்டு நிற்கறிங்க..."

"ஏய்ய்ய்ய்..."

"என் வீட்டில தங்குறதுக்கு அவகிட்ட விளக்கம் சொல்கிறிங்க.. அசிங்கமா இல்லையா...?"

"பல்லைக் கழட்டி விடுவேன்.."

"அது எதுக்கு..? அதுதான் குறைன்னு சொல்லி அந்த ஷோபா பின்னாலே போகிறதுக்கா..?"

'அவ பின்னாலே போயிட்டாலும்...'

"ஏண்டி.. உன் வீடுன்னு எதைச் சொல்கிற..? இங்கேயிருக்க பண்ண வீட்டை உன் வீடுன்னு சொல்லு கேட்டுக்கறேன்.. தேனூத்தில இருக்கிற நம்ம வீட்டை உன் வீடுன்னு சொல்லு கேட்டுக்கறேன்.. அதை விட்டுட்டு உன் அப்பா வீட்டை உன் வீடுன்னு சொன்ன... பல்லைக் கழட்டி விடுவேன்..."

"இதுக்கொன்னும் குறைச்சலில்லை.. என் அப்பாவோட வசதியைத் தெரிஞ்சுத்தானே என்னைக்

கல்யாணம் பண்ணிக்கிட்டிங்க.. அதுக்கப்புறமா எதுக்காக அவ முன்னாலே தாழ்வா பேசனும்..? உங்களுக்கு அவ வீடுதான் உசத்தின்னு தோணியிருந்தா அவளையே கல்யாணம் பண்ணியிருக்க வேண்டியது தானே..? யாரு வேண்டாம்ன்னு உங்க கையைப் பிடிச்சுத் தடுத்தது..?"

அந்தப் பேச்சில் மீண்டும் ஓர் அறையை வாங்கினாள் ராதிகா... 'யார் தடுத்தது..?' என்ற கேள்வியில் கொதித்துப் போயிருந்தான் பாலமுரளி...

சங்கரை ராதிகா திருமணம் செய்து கொள்ள முடியாமல் அவன் தடுத்தான்... ஏன்...? ராதிகாவின் மீது அவன் கொண்டிருந்த காதல்... ஆசை.. மோகம்... அனைத்தையும் உள்ளடக்கிய வெறி...

இவை எதுவுமே அவன்மேல் ராதிகாவுக்கு இல்லையே... இருந்திருந்தால் இப்படிப்பட்ட வார்த்தைகளை அவனைப் பார்த்து சொல்லியிருப்பாள..?

"செய்திருக்கனும்டி..." அவன் வன்மத்துடன் சொன்னான்...

"எங்க தகுதிக்கு அவவீடுதான் சரிப்பட்டிருக்கும்டி.. என் அக்காவும் அதைத்தான் சொல்லுச்சு... அது பேச்சை நான் கேட்டிருக்கனும்... கேட்காம போனதுக்கு இப்ப அனுபவிக்கறேண்டி..."

இதயத்தில் அடிவாங்கினாள் ராதிகா... கன்னத்தில் அடித்த அடி அவளுக்கு வலிக்கவேயில்லை... வார்த்தைகளால் அவன் அடித்த அடி... சாட்டையடிகளாக அவள் மனதில் விழுந்தன...

கானகத்தில் தனித்து விடப்பட்டவளாக அவள் குமுறினாள்...

சூர்ப்பனகையை மணந்திருக்க வேண்டுமென்று ராமன் சொல்வானா என்ற கேள்வியை மனதில் எழுப்பியவாறு அவள் குமுறினாள்...

வாலியை வதம் செய்ததிற்கு கூட ராமன் பக்கம் ஒரு நியாயம் இருந்தது... அவளை உயிரோடு வதம் செய்ய பாலமுரளியின் பக்கம் என்ன நியாயம் இருக்கிறது என்று அவள் குமுறினாள்...

இருவரும் காரை விட்டு இறங்கிய போது... ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளவில்லை... மௌனமாக வீட்டுக்குள் சென்றார்கள்... மகளின் வழக்கத்துக்கு மாறான மௌனத்தில் ராஜேஸ்வரி புருவம் உயர்த்தினாள்.. மகளின் கன்னத்தில் படிந்திருந்த விரல் தடங்கள் அவளுக்கு கவலையை ஊட்டின...

'என்னவாயிருக்கும்...'

சிந்தித்தாலும்.. மகளிடம் அந்தக் கேள்வியை அவள் கேட்கவில்லை... மறுநாள் ராதிகா கிளம்புவதாக இருந்தது... அவளுட்ன் கொடுத்தனுப்ப வேண்டிய மறுவீட்டு பலகார வகைகளை செய்வதற்காக வேலையாள்கள் வந்திருந்தார்கள்... வேலை மும்முரத்தில் ராஜேஸ்வரி அதை மறந்தே போனாள்...

மறுநாள் சீர் வரிசைப் பொருள்கள் லாரியில் ஏற்றப்பட்டன...

"இதெல்லாம் எதுக்கு..?" பாலமுரளி ஆட்சேபித்தான்...

"நாங்களும் வசதியானவங்கதான்... பொண்ணு கல்யாணமாகி புகுந்த வீட்டுக்குப் போனா.. அவளுக்கு லாரி நிறைய தாய் வீட்டுச் சீரை அடுக்கி அனுப்புகிறவங்கதான்..."

ராஜேஸ்வரி நொடித்த போது... ராதிகாவுக்கு மன நிறைவாக இருந்தது... பெண்ணைக் கொண்டு போய் புகுந்தவீட்டில் விட்டுவிட்டு வரும் பொறுப்பில் கிருஷ்ணமூர்த்தியின் குடும்பமும் கூட வந்தது...

கிருஷ்ணமூர்த்தியின் காரில் ராஜேஸ்வரியும் சுந்தரும் அமர்ந்திருக்க.. கீதா.. முரளியின் காரில் ஏறிக் கொண்டு விட்டாள்...

"ஏய்ய்.. இங்கே வாடி..." என்று ராஜேஸ்வரி அதட்டின போது...

"போங்கம்மா.. எனக்கு ராதிகாகூட பேசியாகனும்... அதுதான் மறுவீட்டு விருந்தே முடிஞ்சாச்சே.. இன்னுமா இவங்க புதுசா கல்யாணம் பண்ணிக்கிட்டோ முன்னு தனியாவே சுத்துவாங்க.. கொஞ்சம் என் கூடவும் சுத்தட்டும்..."

முதல் நாளில் இருந்து பாலமுரளியுடன் பேசாமல் மௌனப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த ராதிகாவுக்கு.. கீதாவின் அண்மை மனதுக்கு புத்துணர்ச்சியைக் கொடுத்தது...

86

கல்லாலடித்தால் காயம் ஆறிவிடுமென்று சொல்லாலே அடித்தாயோ...?

"ஏண்டி ராதிகா... உனக்குக் கல்யாணமாகி இன்னும் இரண்டுவாரம் கூட ஆகலை.. அதுக்குள்ளே.. அச்சு அசல் தேனூத்துக்கார பொண்ணு போலவே மாறிட்டயே.. அது எப்படிடி..."

கீதாவின் கேள்வியில் ராதிகாவின் முகத்தில் சன்னமாக மென்மை பரவுவதை காரின் முன்பக்கமாக பொருத்தியிருந்த கண்ணாடியின் வழியாகப் பார்த்தான் பாலமுரளி...

அவள் முகத்தில் பரவியிருந்த மென்மை அவன் மனதிலும் பரவிப் படர்ந்தது.. சொல்ல முடியாத இதமான உணர்வின் ஆளுகைக்குள் அவன் அகப்பட்டான்...

"சும்மாயிரு கீதா..." ராதிகா முணுமுணுத்தாள்...

"நிஜத்தைத்தாண்டி சொல்றேன்... என்னவோ விருந்தாளியாய் வந்தவளைப் போல ஒட்டாமல் நம் வீட்டில் எப்படிடி உன்னால இருக்க முடிஞ்சது...?"

"ஏய்ய்.. அப்படியெல்லாம் இல்லைடி.. நீயாய் எதையாவது கற்பனை பண்ணிக்கிட்டு உளராதே..."

"உளருகிறேனா..? நானா...? இருக்கும்.. இருக்கும்.. உனக்கு அத்தானின் பேச்சைத்தவிர மத்தவங்க பேச்செல்லாம் உளரலாகத்தான் இருக்கும்.. உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லு..."

"அதை எதுக்கு டிஸ்டர்ப் பண்ணனும்...? நான் என்ன சொல்லனும்கிறதை நீ சொன்னா... நான் சொல்லிட்டுப் போறேன்..."

"என்னாச்சு.. உன் மனச்சாட்சி தூங்குதா..?"

"ஆமாம்.. நீ ஆராரோ பாடு..."

"அதை நம்ம வீட்டு லேடி ஹிட்லரே பாடினதில்ல.. அப்புறம் எப்படி நமக்கு வரும்..?"

"நமக்குன்னு உன்னோடு என்னையும் கூட்டுச் சேர்க்காதே..."

"இதப் பாருடா.. அட்வான்ஸா முந்திக்கிறா.. என்ன விசயம் ராது..? அடுத்த பத்தாம் மாசமே ஆரிராரோ பாடுகிற உத்தேசத்தில இருக்கிறயா..?"

"ஏய்ய்.. உன்னை..."

ராதிகாவின் முகம் குங்குமமாக சிவந்து விட... தங்கையை அடிக்க கை ஒங்கினாள்.. அவள் விளையாட்டாக தலையைச் சாய்த்து சிரித்தாள்.. அந்த சகோதரிகளின் செல்லச் சண்டையை கண்ணாடி வழியாக ரசித்துப் பார்த்தான் பாலமுரளி..

"இப்படி உன்னை அடிச்சு நொறுக்க வசதியாய் இருக்கும்ன்னுதான் உன் அக்கா பின்சீட்டில் ஏறினாளா கீதா..?" என்று வேறு கேட்டு வைத்தான்...

இரண்டு நாள்களாக அவர்களுக்கு ஊடே இருந்த மௌனத்திரையை அவன் விலக்கியதில் ராதிகாவின் மனம் இறகைவிட லேசானதாக ஆகிப் போனது...

அவன் பாணியிலேயே அவளும் கீதாவை ஊடே வைத்துப் பதில் கொடுத்தாள்...

"நானாடி பின் சீட்டில் ஏறினேன்..? நீதானே ஏறச் சொன்ன...?"

"தெரியாம வாய் விட்டுட்டியே கீதா..."

"தெரிஞ்சு யாராவது வாய் விடுவாங்களா கீதா..."

"நீ புத்திசாலின்னு நினைச்சேன்.. இப்படி உன் அக்கா கிட்ட வகையாய் மாட்டிக்கிட்டு மாத்து வாங்கறியே..."

"அவரென்ன உனக்கு எடுத்துக் கொடுக்கிறாரா கீதா...?"

"மைச்சினிக்கு சப்போர்ட்தான்... இல்லையா கீதா.."

"அதானே.. உன் அத்தானுக்கு.. அத்தைமகளும்.. மச்சினியும் வருத்தப்பட்டா மனசு தாங்காதே..."

"இங்கே மச்சினி மட்டும்தானே இருக்கா.. அத்தை மகளை ஏன் இழுக்கனும் கீதா..?"

"இவரோட அத்தை மகளை இழுக்கறதுக்கு ஒரு ஆள் பிறந்துதான் வரனும் கீதா.. அவதான் இவர் கையை பிடிச்சு இழுத்தா..."

பேச்சின் போக்கில் ராதிகா அதைச் சொல்லிவிட கீதா...

"வா ஹ்ரே.. வா.." என்றாள்...

'வாய்... விட்டுட்டேனே...'

ராதிகா கையைப் பிசைந்தபடி கலவரத்துடன் முன்பக்கம் பார்க்க... லேசாக முகம் திருப்பிய பாலமுரளியின் முகத்தில் சிரிப்பிருந்தது...

'அப்பாடி...' ராதிகா நிம்மதியாக உணர்ந்தாள்...

சிரிப்போடு சேர்த்து.. அவன் 'கவலைப் படாதே..' என்ற பாவனையில் இமை மூடித் திறக்க.. அவள் இயை கொட்ட மறந்து விழி விரித்தாள்...

"என்னாச்சு ராது.. இந்த முழி முழிக்கறே..."

கீதா ராதிகாவின் தோளில் தட்டவும் தான் அவள் தந்நிலைக்கு வந்தாள்...

"ஒன்னுமில்ல..." என்றபடி.. முகம் திருப்பிக் கொண்டாள்...

"இதைவிடு.. அதைச் சொல்லு..." கீதா உற்சாகத்துடன் தூண்டினாள்

"எதை..?" ராதிகா புரியாமல் விழித்தாள்..

"அதாண்டி.. அத்தானோட அத்தைமக அத்தானின் கையைப் பிடிச்சு இழுத்தாளில்ல... அந்தக் கதையைச் சொல்லு..."

"ஏய்ய்.. விடுடி.. நானே வாய்தவறி எதையாவது சொல்லி வைச்சா.. நீ அதையே பிடித்துக்கிட்டு தொங்குவியா..?"

"ஊஹீம்... நீ வாய் தவறிப் பேச்ற கேஸ் இல்லையே... நிஜத்தைச் சொல்லு..."

கீதா எவ்வளவோ கிண்டிக் கிளறியும் ராதிகா வாய் திறக்க மறுக்க அவள் பாலமுரளியைப் பார்த்தாள்...

"நீங்க சொல்லுங்க அத்தான்..."

"என்னத்தை சொல்லச் சொல்ற...?"

"அந்த தலைவலி கேஸ் உங்க கையைப் பிடிச்சு இழுத்தாளா..?"

"தலைவலி கேஸா..? அது யாரு..?"

"உங்க அத்தைமகதான்... வேற யாரு..?"

"இது வேறயா.. ஹா.. ஹா..."

"உங்க சிரிப்பை அப்புறமாய் வைச்சுக்கலாம்.. முதல்ல நான் கேட்டதுக்கு பதிலைச் சொல்லுங்க..."

"அவ என் கையைப் பிடிச்சு இழுத்தது உண்மை தான்..."

"அடிப்பாவி.. பட்டப்பகலில் ஒருத்தி.. ஒரு ஆண்பிள்ளையின் கையைப் பிடிச்சு இழுத்தாளா..?

இதைக் கேட்க யாருமேயில்லையா..? இந்த உலகத்தில் ஆண்களின் நிலைமை பாதுகாப்பில்லாம போய்விட்டதா..? அவ.. அண்ணன் தம்பிகூடப் பிறக்கலையா...?"

முகத்தை படுதீவிரமாக வைத்துக் கொண்டு கீதா பேசப்பேச... ராதிகா விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்... பாலமுரளியாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை.. வாய் விட்டு சிரித்தவனுக்கு... கீதாவின் மீது சகோதர வாஞ்சை உண்டானது...

தூரத்தில் நான்கு வழிச் சாலையின் ஓரமாக இருந்த ஹோட்டல் கண்ணில்பட.. காரை நிறுத்தினான்...

"என்னத்தான்..?" என்றாள் கீதா...

"காருக்குத்தான் ஆயில் தேவைப்படுமா..? மனுசருக்கு தேவைப்படாதா..?"

"அடக்கடவுளே.. உங்க அத்தை மகளைக் கிண்டல் பண்ணினா நீங்க ஆயிலை வாங்கி வாயில் ஊற்றி விடுவீங்களா..? என்ன ஆயிலை ஊற்றப் போறிங்க அத்தான்... கிருஷ்ணயாயிலா..?"

கீதா சிரிக்காமல் கேட்டு வைக்க.. பாலமுரளி அவள் தலையில் செல்லமாக குட்டு ஒன்றை வைத்தான்...

"வாயாடி.. அப்படியே உன் அக்காவின் வாய் உன்கிட்டேயும் இருக்கு..."

"ஊஹும்.. தப்பாச் சொல்றிங்க அத்தான்.. ராதுவோட வாய் அவகிட்டத்தான் இருக்கு... என்னோட வாய்தான் என்கிட்ட இருக்கு..."

"அடேங்கப்பா.. உன்கிட்டயும்.. உன் அக்கா கிட்டயும்.. வாயைக் கொடுத்து ஜெயிக்க முடியுமா..?"

கீதாவிடம் பேசியபடி காருக்குள் பார்த்த பாலமுரளி...

"நீ எதுக்கு உள்ளேயே அடைகாக்கிற.. இறங்கி வா.. காபி சாப்பிடலாம்..." என்றான்...

அவன் நேரடியாக பேசிவிட்ட மகிழ்ச்சியில் ராதிகாவின் கண்கள் கலங்கி விட்டன.. அவசரமாக அவள் காரை விட்டு இறங்கினாள்...

"பார்த்தியாடி ராது.. மச்சினிக்கு இவர் கிருஷ்ணாயிலை கொடுப்பாராம்.. பெண்டாட்டிக்கு மட்டும் காபியை கொடுப்பாராம்.. என்ன ஒர வஞ்சனை..?" கீதா முகத்தை தூக்கி வைத்துக் கொள்வதைப் போல பாவனை காட்டினாள்...

"பின்னே.. ஆயிரம்தான் இருந்தாலும்.. உன் அக்கா தானே என் பெண்டாட்டி..?" மைத்துனியிடம் விளையாட்டாய் பேசியபடி காபிக் கப்புகளை அவர்களிடம் கொடுத்தான் பாலமுரளி...

காபியை உறிஞ்சியபடி அவனை மேல் பார்வை பார்த்த கீதா....

"அப்போ.. உங்களுக்கு ஆயிரம் இருக்குன்னு சொல்லுங்க..." என்று வம்புக்கு இழுத்தாள்..

"ஐயையோ.. குடும்பத்தில குழப்பத்தை உண்டு பண்ணி விட்டிராதேம்மா..."

பயப்படுவதைப் போல பாவனை செய்தாள் பாலமுரளி...

இயல்பான மனநிலைக்கு திரும்பி விட்டதில் ராதிகாவும் அவர்களின் பேச்சில் கலந்து கொண்டாள்... கலகலப்பான அந்தச் சூழ்நிலையில் அவர்கள் இருவரின் மனதிலும் இருந்த கிலேசங்கள் பறந்தோடி விட்டன... காரில் ஏறிய பின்னால்...

"பாட்டைப் போடுங்க அத்தான்.." என்று கீதா சிணுங்க... பாலமுரளி பாடலை ஒலிக்க விட்டான்.. அது...

"நாங்க புதுசா
கட்டிக்கிட்ட ஜோடி தானுங்கோ..
நல்லாப் பாட்டுப் படிக்கும்
வானம் பாடிதானுங்கோ"

என்று பாடிவைத்தது... "இதுக்குக் கூட நீங்க புதுசா கட்டிக்கிட்ட ஜோடின்னு தெரிஞ்சிருக்குடி ராது..." கீதா அதிசயிக்க... ராதிகா வெட்கப் பட்டாள்...

அரட்டையும் சிரிப்புமாக காருக்குள் களை கட்ட... கார் தேனூத்து கிராமத்திற்குள் நுழைந்தது...

"சும்மா சொல்லக்கூடாது அத்தான்..." என்று கீதா எதையோ சொல்ல ஆரம்பிக்க...

"அப்போ பணத்தைக் கொடுத்துவிட்டே சொல்லு..." என்று கைநீட்டினான் பாலமுரளி...

"அதானே பார்த்தேன்.. ஊருல உலகத்தில மைத்துனிகளுக்கு அள்ளிக் கொடுக்கிற அத்தான்

களைத்தான் பார்த்திருக்கேன்.. இங்கே கிள்ளிக் கொடுக்கக் கூட வழியைக் காணோம்..." கீதா நீட்டி முழக்கினாள்...

"உனக்கெதுக்கு அந்த குறை..? கையை நீட்டு..." என்றான் முரளி...

"கொடுங்க.. கொடுங்க..."

கீதா உற்சாகமாய் கைநீட்ட... அதில் ஒரு கிள்ளு கிள்ளி விட்டு ஆயிரம் ரூபாய் நோட்டுக்கட்டு ஒன்றைக் கொடுத்தான் பாலமுரளி...

"ஸ்ஆ..." வலியில் கையை உதறிய கீதா... பணக்கட்டை வியப்புடன் பார்த்தாள்...

"என்னத்தான் இது..." அவள் விழிகள் விரித்தன...

"நீதானே கிள்ளிக் கொடுக்கச் சொன்ன...? கிள்ளினேன்... கொடுத்துட்டேன்.. எப்படி..?" முரளி கண்சிமிட்டினான்...

"அதுக்காக இவ்வளவு பணமா...? வேண்டாம் அத்தான்..." கீதா பணத்தை திருப்பி நீட்டினாள்...

"ஏன்...? நான் கொடுத்தால் வாங்கிக்க மாட்டியா..?"

"அப்புறம் லேடி ஹிட்லர்கிட்டயும் மாத்து வாங்க வேண்டியிருக்கும்... தேவைதானா...?"

"அத்தான் கொடுத்தார்ன்னு சொன்னாத்தானே உன் அம்மா கோவிச்சுக்குவாங்க..? அண்ணன் கொடுத்தார்ன்னு சொல்லு.. ஒன்னுமே சொல்ல மாட்டாங்க..."

முரளி இலகுவாகக் கூற...

"அத்தான்..." என்று கண் கலங்கி விட்டாள் கீதா..

"அசடு.. இதுக்குப் போய் கண் கலங்குவாங்களா..? ராதிகாவோட தம்பியும்.. தங்கையும் எனக்கும் தம்பி தங்கைதான்..."

பாலமுரளி என்னவோ இயல்பாக இதைச் சொல்லி விட்டு போய் விட்டான்... அதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றவர்களின் உள்ளங்களில் நெகிழ்ச்சி பொங்கியது...

வாழ்வின் சில தருணங்கள்.. இப்படியும் அமைவதுண்டு...

மறுவீட்டுப் பலகாரங்களை விநியோகம் பண்ண ஆரம்பித்திருந்தாள் மேகலா... ஊருக்கே விருந்து வைத்தாள்... வந்தவர்கள் சீர்வரிசைகளையும் சேர்த்து பார்வையிட்டுப் போனார்கள்... விட்டுக்கொடுக்காமல் நிறைவாக மருமகளைப் பெற்றவர்கள் சீர்செய்து விட்டதில் மேகலாவுக்கும் மன நிறைவு...

இருகுடும்பங்களும் இணைந்து புதுமணத்தம்பதி-களுடன் குலதெய்வ கோவிலுக்குப் போனார்கள்.. அங்கே ராதிகா பொங்கல் வைக்கிறேன் பேர்வழியென்று கைவிரல்களைச் சுட்டுக் கொள்ள.. அதைக் கேலி செய்து சிரித்தாள் கீதா...

பெருமாள் கோவிலுக்குப் போனபோது.. கோவிலின் அழகில் மயங்கி.. தன் செல்போனில் படம் பிடித்துக் கொண்டாள்.. பெருமாளையும்.. தாயாரையும் சேவித்து

விட்டு... நவகிரகங்களை வலம் வந்து வணங்கி விட்டு.. பிரகாரத்தில் அமர்ந்தார்கள்...

மேகலா விச்ராந்தியாய் பேசிக் கொண்டிருந்தாள்... ராஜேஸ்வரி எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தாள்... திரும்பி வரும் வழியில் அடிக்கடி ராதிகாவைத் திரும்பிப் பார்த்துக் கொண்டாள்...

கிருஷ்ணமூர்த்தியின் குடும்பம் சென்னைக்கு கிளம்பும் நேரம் வந்தது...

"வரேன் ராது... வரேன் அத்தான்... வரேன் அத்தை..." கீதா வரிசையாக விடைபெற... சுந்தர் அவளைப் போலவே தொடர்ந்து சொல்லி விடைபெற்றுக் கொண்டான்...

"ராதிகா... வரவாம்மா..." கிருஷ்ணமூர்த்தியால் பேச முடியவில்லை...

"அடடா... என்ன தம்பி இது.. நீங்க போயி சின்னப்புள்ள போல கண் கலங்கலாமா..? பொம்பளப் புள்ளைக மேல இந்தளவுக்கு பாசம் வைக்கக் கூடாது தம்பி... என்னைக் கிருந்தாலும் அதுக இன்னொருத்தர் வீட்டுக்கு வாழப் போகிறதுகதானே..." மேகலா ஆதரவாகப் பேசினாள்...

"பார்த்துங்கங்க அக்கா... பார்த்துக்கங்க மாப்பிள்ளை..." கிருஷ்ணமூர்த்திக்கு தொண்டையை அடைத்தது...

ராஜேஸ்வரி எதுவும் பேசாமல் நகர்ந்தவள் வேகமாக திரும்பி ராதிகாவை அணைத்துக் கொண்டாள்...

"அம்மா...!"

நம்ப முடியாத திகைப்புடன் ராதிகா விழி விரித்து பிரமிக்க... அவள் உச்சந்தலையில் முத்தமிட்ட ராஜேஸ்வரியின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து ராதிகாவின் தலையில் விழுந்து நனைத்தது...

அம்மா என்று சொல்லச் சொல்லி...
அறியாத மழலைக்கு சொன்னது யார்..?

"ராதிகா...! என் மகளே...!"

ராஜேஸ்வரியின் குரல் தேம்பியது...

அங்கிருந்த அனைவருமே அந்தக் காட்சியில் கரைந்து நெகிழ்ந்து விட்டார்கள்.. ராஜேஸ்வரியின் கோபம்.. வைராக்கியம்.. ரோசம் என்ற அத்தனையும்.. தாய்மை என்ற உணர்வுக்கு முன்னால் பொடிப் பொடியாக நொறுங்கிப் போய் கொண்டிருந்தன...

"ராஜி... இங்கே பாரு... உன் பெண்ணை எங்கே விட்டுட்டுப் போற... அவளோட வீட்டிலதான விட்டுட்டுப் போற..." மேகலா ராஜேஸ்வரியைத் தேற்ற முயன்றாள்..

"அண்ணி... என்மக.. பச்சைக் குழந்தையண்ணி..."

"எனக்கு அது தெரியாதா..?"

"சின்னவளைப் போல துறுதுறுப்பாய் இருந்தாலும் பொறுமைசாலி... அடிச்சா திருப்பி அடிக்கத் தெரியாது.."

"இங்கே உன் மகளை யாரடிக்கப் போறா..? என்மகன் ஆசைப்பட்டு கட்டிக்கிட்டவன்.. எனக்கு மருமகள்தான்.. மகள்.. நீ எதுக்கு வீணாய் மனசைப் போட்டு உழட்டிக்கிற..."

"நீங்க வசதியில பெரியவங்களா இருக்கலாம்.. ஆனா நாங்களும் கம்மியானவங்க இல்லண்ணி.. என் புருசன் கவர்மெண்ட் ஆபிசர்... கை நிறைய சம்பாதிக்கிறாரு... சென்னையில சொந்தவீடு.. காருன்னு வசதியாய் வாழ்கிறவங்கதான் நாங்க..."

"இதை நீ சொல்லனுமா ராஜி..."

"சொல்லித்தான் ஆகனும் அண்ணி.. என் மகளை இளவரசியைப் போலத்தான் நான் வளர்த்திருக்கேன்..."

"இங்கே மகாராணியாய் அவ இருப்பா.. போதுமா.."

"ஏதாவது கோபதாபம் இருந்தா எங்ககிட்ட அதைக் காட்டுங்கண்ணி.. தியவு செய்து என் புள்ளைகிட்ட அதைக் காட்டிராதீங்க..."

"ராஜி.. ராஜி.. எதுக்கும்மா இப்படியெல்லாம் பேசுற...?"

"சென்னையில பிறந்து வளர்ந்தவ.. படிச்சுக்கிட்டு இருக்கிற பொண்ணு... உங்க நாட்டு வழக்கம் தெரியலைன்னா..?"

"சொல்லிக் கொடுக்கிறேன்..."

"அவ கத்துக்க சிரமப்பட்டா...?"

"பொறுத்துப் போறேன்.. போதுமா...?"

சின்னக் குழந்தைக்கு ஆறுதல் சொல்லுவதைப் போல ராஜேஸ்வரிக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லி அனுப்பி வைத்தாள் மேகலா...

அவள் சென்று வெகு நேரமாகியும்.. ராதிகாவின் மனம் அலைகடலாய் பொங்கிக் கொண்டிருந்தது...

'அம்மா...!'

தாயின் மன்னிப்பில்... அன்பில்.. பரிதவிப்பில்.. கரிசனத்தில்.. அவள் நெகிழ்ந்திருந்தாள்...

இழந்து விட்டதாக அவள் நினைத்திருந்த தாயின் மடி திரும்பவும் கிடைத்து விட்டதில் அவள் மனதில் எல்லையற்ற சாந்தி நிலவியது...

அந்த அமைதியின் அரவணைப்பில்... பாலமுரளியின் அணைப்பில்லாமல் தூங்க நேரிடும் இரவுகளை அவள் பொறுத்துக் கொண்டாள்...

ராஜேஸ்வரியின் கண்ணீர் அவனையும் கரைத்ததாலோ என்னவோ.. அவனும் சுடுசொற்களை வீசாமல் இயல்பாகவே பேசிப் பழகினான்..

வாழ்க்கை அமைதியான நதியைப் போல ஓட ஆரம்பித்த அந்த வேளையில் தான்.. சுற்றி வரும் குறாவளிக் காற்றாக.. விருந்துக்கு அழைக்கவென்று பாலசரஸ்வதி வந்து சேர்ந்தாள்...

"வா.. சரசு..." என்று வரவேற்ற மேகலாவிடம்....

"அட.. என் பெயர்கூட உங்களுக்கு ஞாபகமிருக்-காம்மா...?" என்று இடக்காக கேட்டாள்...

'வந்ததுமே ஆரம்பிச்சிட்டாளா... இவளை எது பிடிச்சு ஆட்டுதுன்னே தெரியலையே...' மேகலா நொந்து போனாள்...

"ஏண்டி... பெத்து வளர்த்து பெயர் வைச்சவளுக்கு.. வைச்ச பெயர் மறந்துருமா..?" அவள் எரிச்சலுடன் கேட்டாள்...

"இல்ல.. நீங்கதான் ஊருபூரா சொல்லி வைச்சிருக்கீங்களாமே..."

"என்னத்தை சொல்லி வைச்சிருக்கேன்...?"

"என் மருமகதான் மகள்ன்னு சொன்னீங்களாமே...?"

'இது ஒரு தப்பா..? கடவுளே..!' மேகலா தெய்வத்தை உதவிக்கு அழைத்தாள்...

"சரிசரி... வந்ததும் வராததுமா வம்பைக் கட்டி இழுக்காதே... மாப்பிள்ளை எங்கே...?"

"வெளியில் உங்க மகனிடம் குசலம் விசாரிச்சுக்கிட்டு நிற்கிறாரு..."

"அவருக்காவது வளமை தெரிஞ்சிருக்கே..."

"எனக்குத் தெரியலைன்னு சொல்லிக் காட்டறிங்களாம்மா.. யாரை யாரு விசாரிக்கிறதும்மா...? கல்யாணம் பண்ணிக் கொடுத்த மகளை பிறந்த வீட்டில் விசாரி.க்கனுமா... இல்ல.. அந்த மக வந்து பிறந்த வீட்டை விசாரிக்கனுமா... ?"

பாலசரஸ்வதி பேசிய பேச்சில் பதில் சொல்ல முடியாமல் களைத்துப் போனாள் மேகலா...

'இவ நான் பெத்து வளர்த்த பொண்ணுதானா...?'

ஆயாசத்துடன்... "பிள்ளைகள் எங்கேடி..?" என்று கேட்டாள்...

"ராஜிவும்.. சாதனாவும் மாடிக்கு ஓடிட்டாங்க..."

பாலசரஸ்வதி சொல்லிக் கொண்டிருந்த போதே.. கைக்கு ஒரு பிள்ளையாக... இரண்டு கைகளிலும்... பாலசரஸ்வதி பெற்ற பிள்ளைகளைப் பிடித்துக் கொண்டு மாடிப்படி இறங்கி வந்தாள் ராதிகா...

"வாங்கண்ணி... அண்ணன் எங்கே..?" என்று வரவேற்றவளுக்கு பதில் சொல்லாமல் முகம் திருப்பிக் கொண்டாள் பாலசரஸ்வதி...

ராதிகாவின் முகம் வாடி விட்டது... அதைக் கவனித்த மேகலா...

"மாப்பிள்ளை வாசலில் நம்ம முரளிகூட பேசிக்கிட்டு இருக்காராம்மா..." என்று சொன்னாள்..

அதற்குள் ராஜராஜனும் முரளியும் உள்ளே வந்துவிட.. அவனை வரவேற்று விட்டு காபி கொண்டு வர உள்ளே சென்றாள் ராதிகா....

அன்று இரவு சாப்பாட்டுக்குப் பின்னால்... குடும்பம் மொத்தமும் ஹாலில் கூடியிருந்த போது... ராஜராஜன் முரளியை விருந்துக்கு அழைத்தான்...

"காலையில இருந்தே எம்புடாம ஓடிக்கிட்டே இருக்கீங்க முரளி..."

"ஒரே வேலை மாமா..."

"கொஞ்சம் வேலையைக் குறைச்சுக்கிட்டு வீட்டையும் நினைச்சுப் பாருங்க... ராதிகா சின்னப் பொண்ணு... இப்படி விடியற்காலையில எழுந்து ஓடிட்டு.. அர்த்த ராத்திரியில வீட்டுக்கு வந்தா... அது பாவமில்லையா...?"

ராஜராஜன் யதார்த்தமாக உரிமையுடன் பேசிவைக்க.. சரஸ்வதிக்கு கோபம் வந்துவிட்டது...

"ஏங்க.. இதைச் சொல்லத்தான் வேலை மெனக்கெட்டு காரை எடுத்துக்கிட்டு... திருநெல்வேலியில் இருந்து வந்திருக்கோமா...?"

"அதில்லைடி..."

"வந்த வேலையை முதலில் கவனிங்க.. அவனே நிற்க நேரமில்லாம பறந்துக்கிட்டு இருக்கான்... அவனிடம் சீக்கிரம் வான்னு சொல்லிக்கிட்டு.. அவன் சீக்கிரமா வந்து சேர்ந்தா தொழில்களை யார் பார்க்கிறது...?"

"அதுக்காக... எப்பவும்.. வேலை.. வேலைன்னும் இருக்கக் கூடாதுடி..."

"எல்லாம் தெரிஞ்சுதானே கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்திருப்பாங்க...? அவங்கள்ளாம் மெத்தப் படிச்ச மேதாவி.. நம்மளவிட கணக்குப் போட அவங்களுக்கு நல்லாத் தெரியும்.. புருசன் சீக்கிரமாய் வீட்டுக்குவந்தா செலவளிக்க பணத்துக்கு எங்கே போகிறதுன்னு அவங்களுக்குத் தெரியாதா என்ன..?"

"சரஸ்..."

ராஜராஜன் நெற்றிக் கண்ணைத் திறக்க.. சரஸ்வதி அமைதியானாள்... ராதிகா உதட்டைக் கடித்தபடி... முள்ளின் மேல் அமர்ந்திருப்பதைப் போல அமர்ந்திருந்தாள். குடும்பத்தார் பேசிக் கொண்டிருக்கும் போது... அவள் மட்டும் எழுந்து போவதென்பது அவளுக்கு சரியானதாக படவில்லை...

என்னவோ பாலமுரளியின் பணத்துக்காக கணக்குப் போட்டு அவனை ராதிகா கல்யாணம் பண்ணிக் கொண்டதைப் போல பாலசரஸ்வதி பேசியவிதத்தில் ராதிகா மனதிற்குள் காயப் பட்டுப் போனாள்....

அவளா பாலமுரளி வீட்டுக்கு நேரம் கழித்து திரும்புவதை விரும்புகிறாள்..?

காலையிலேயே ஒடிவிடுகிறவன் நள்ளிரவைத் தொடும் நேரத்தில்தான் திரும்பி வருவான்.. அவன் வரும் வரைக்கும் கண்விழித்து அவனுக்காக சாப்பிடாமல் காத்திருப்பாள் ராதிகா...

மேகலா கூட அதட்டுவாள்...

"அவன் வரும்போது வரட்டும்... நீ சாப்பிடாம கண்முழிச்சு காத்திருக்கனுமா...? வயிற்றுக்குள்ள எதையாவது போட்டுட்டு கொஞ்சம் கண்ணசந்தா என்ன ராதிகா..?"

"இல்லை அத்தை... அவர் வந்துடட்டும்..."

பிடிவாதமாக மறுத்து விடுவாள் ராதிகா...

அவளுக்குத் தெரியும்.. என்னதான் அவளை வெறுத்தாலும்... அவனுக்காக சாப்பிடாமல் ராதிகா காத்திருப்பாள் என்ற நினைவில் பாலமுரளியும் வெளியே சாப்பிடாமல் வீட்டுக்கு வந்து விடுவான் என்பது...

அந்த வகையில் அவனையும் ஒரு தளையால் பிணைத்துத்தான் வைத்திருந்தாள் ராதிகா...

அவன் பலவான்தான்.. தாய்க்கும்.. தமக்கைக்கும் கட்டுப்படாதவன்தான்... ஆனால் யாராலும் கட்டுப்படுத்த முடியாத அவனை ராதிகாவினால் கட்டுப்படுத்த முடிந்தது..

"ஏய்ய்.. நீ கொடுத்தனுப்பற சாப்பாட்டை சாப்பிடனும்கிற கட்டாயம் எனக்கில்லை... நான் பல ஜோலிக்காரன்.. போற இடத்துக்கெல்லாம் உன் சாப்பாட்டுக் கூடையைத் தூக்கிக்கிட்டு அலைய என்னால முடியாது...."

"அப்போச்சரி.. நீங்க சாப்பிடாத சாப்பாட்டை நானும் சாப்பிடல..."

ராதிகா முகம் மாறாமல் கூறிவிட... அவன் பல்லைக் கடித்தான்...

"திமிராடி..? என்னை உன் கட்டுக்குள்ள வைக்க நினைக்கிறயா..?"

"இல்லவே இல்லை... புருசன் சாப்பிடாத சோற்றை நான் மட்டும் ருசிச்சுச் சாப்பிட முடியாதுன்னு நினைக்கிறேன்..."

"ஏன்..? என் அம்மாவும்.. அக்காவும் ருசிச்சுச் சாப்பிடல..? அதைப்போல நீயும் இருந்துட்டுப் போக வேண்டியது தானே..."

"உங்க அப்பா வெளியில சாப்பிட... உங்கம்மா வீட்டில சாப்பிட்டுட்டு உட்கார்ந்திருக்க மாட்டாங்க... உங்க அத்தான் வெளியில சாப்பிட உங்க அக்காவும் அதைக் கண்டுக்காம தான் மட்டும் சாப்பிட்டுட்டு இருந்திருக்க மாட்டாங்க..."

ராதிகாவின் உறுதியான வார்த்தைகளுக்கு பாலமுரளியிடம் பதிலில்லை... அவள் சொன்னதில் உண்மை இருந்ததை அவன் உணர்ந்ததால் பேச முடியாமல் அவளை முறைத்தான்...

மாணிக்கவாசகம் உயிரோடிருந்த வரை அவர் சாப்பிடாமல் மேகலா சாப்பிட்டதில்லை... ராஜாராஜனும் அப்படித்தான்.. என்ன வேலையாக இருந்தாலும்.. சாப்பிட வீட்டுக்கு ஓடிவந்து விடுவான்... அவன் வந்த பின்னால் தான் பாலசரஸ்வதி சாப்பிடுவாள்...

"அவங்களும் நீயும் ஒன்றா...?"

இந்தக் கேள்வியில் அவள் தகித்துப் போனாள்.. அனலாகக் கேள்வி கேட்டவனை கனலாக பதிலுக்கு முறைத்தாள்...

"அவங்களும் நானும் ஒன்றில்லைதான்... அவங்களுக்கெல்லாம் பெண்டாட்டியை மதிக்கிற புருசன் கிடைத்திருக்காங்க... எனக்கு அப்படியா..?"

"அடிச்சுப் பல்லைக் கழட்டி விடுவேண்டி... என்ன தெரியமிருந்தா என்கிட்டேயே இப்படிப் பேசுவ...?"

"நீங்க எதையும் பேசலாம்.. நான் நியாயத்தைக்கூடப் பேசக்கூடாதா..? அப்படிப் பேசினா.. உடனே கத்தியலை கையில தூக்கி விடுவீங்களா..?"

"கத்தியலா...? அது எதுக்கு...?"

"வேற எதுக்கு..? என் பல்லை உடைக்கத்தான்..."

இதுதான் ராதிகா... அதிதீவிரமான சண்டையிலும்... அவளுக்கே உரித்தான இடக்குப் பேச்சில் அவனுக்கு சிரிப்பை வரவழைத்து விடுவாள்....

அன்றும் அவனுக்கு சிரிப்பு வந்துவிட.. இறுக்கம் குறைந்தவனாக...

"இப்ப.. என்னதாண்டி செய்யச் சொல்ற..?"என்றான்...

"காலையிலே எப்ப வேண்டும்னாலும் நீங்க போங்க.. போகிறப்போ.. நான் கொடுக்கிற டிபனை பிய்த்து வாயில் போட்டுக்கிட்டுப் போங்க..."

"அப்புறம்...?"

"மதியத்தில எங்கே வேணா சுத்துங்க.. நீங்க இருக்கிற இடத்துக்கு நம்ம கார் டிரைவர் சாப்பாட்டு கூடையை கொண்டு வருவார்.. ஏஸி கார் உட்கார்ந்துக்கிட்டு அதை வயிற்றுக்குள் தள்ளி விட்டுட்டு காலி கூடையை கொடுத்தனுப்புங்க..."

"ஐடியாவெல்லாம் பிரமாதம்..."

"நீங்க அர்த்த ஜாமத்தில வருவீங்களோ... இல்லை கோழி கூவுறப்ப வருவீங்களோ எனக்கு அது தெரியாது.. நீங்க வருகிற வரைக்கும் நான் சாப்பிடாம காத்திருப்பேன்.. வந்து.. வீட்டில சமைச்சிருக்கிறதை நீங்க சாப்பிட்டாத்தான் நானும் சாப்பிடுவேன்..."

"அது எதுக்கு தேவையில்லாம நீ காத்திருக்கிற..?"

"எனக்கு அது தேவைதான்...?"

அவள் தீவிரவான முகபாவத்துடன் சொல்ல.. அவள் விழிகளுக்குள் ஊடுறிவிப் பார்த்தபடி... அவன் நிதானமாக கேட்டான்...

"எதுடி உனக்குத் தேவை..? நானா..?"

ராதிகாவின் முகப் கணப்பொழுதில் குங்குமமானது.. அவன் பார்வை அவள் முகத்திலிருந்து இறங்கி... உடல் பூராவும் பரவி மேய ஆரம்பிக்க... அவள் கிளர்ச்சியுடன் தடுமாறிப் போனாள்...

'ஆமாம்...' என்று அவள் மனம் கூவியது... அவனைத் தேடிய உடலும்... மனமும்.. கிறங்கித்தவித்தது... அவன் தொட்டுவிட்டால் உருகிவிடும் பாகாக அவள் குழைந்து நின்றபோது.. அதே நிதானத்துடன் அவன் தொடர்ந்து கேட்டான்...

"அப்புறம் ஏண்டி.. சங்கருக்கு தூது விட்ட...?"

அலைமீது செல்லும் துரும்பாய்..
அலைக்கழித்தான் எந்தன் மனதை...

ஒரு நொடியில் அவளது பரவச நிலை கலைந்தோடி விட.. தன்னைப் புழுவைப் போல உணர்ந்தாள் ராதிகா...

எத்தனைதான் யத்தனங்கள் செய்தாலும்... அவன் பின்னாலே ஓடும் இந்த ரோசம் கெட்ட மனதை கட்டிப் போட கடிவாளத்திற்கு எங்கே போவது என்று மனம் நொந்தாள்...

அவனின் ஒரு பார்வையில் உயிர் துடிப்பதை தடுத்து நிறுத்தும் மார்க்கம் புரியாமல் மனம் சோர்ந்தாள்...

அவன் அருகிலிருக்கும் போது இனிப்பான மன இதம் மனதுக்குள் பரவி.. உடலுக்குள் உருவாகும் பரவச அலைகளை அழிக்கும் வகையறியாமல் மனம் தவித்தாள்...

அவளது அடிபட்ட பார்வையில் வழக்கம் போலவே அவன் இறங்கிவந்தான்... எதுவுமே நடக்காததைப் போன்று இயல்பான குரலில்...

"சரி.. சரி.. நீ சொன்னதையெல்லாம் செய்து தொலைக்கிறேன்... இப்ப டிபனைப் போட வர்றியா... இல்லை மீனாட்சியை போடச்சொல்லி சாப்பிட்டுட்டு போகவா..." என்று கேட்டான்...

'அவருக்கா நீ தாலியைக் கட்டியிருக்கிறாய்..?' என்று கேட்கத் துடித்த நாவைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் ராதிகா...

கேட்டு விடலாம்.. அந்தக் கேள்வி அவனை மட்டும் பாதிக்க வேண்டும்... சம்பந்தமேயில்லாமல் வேறு ஒரு பெண்ணைப் பாதித்து விடக்கூடாது...

அவர்கள் வீட்டில் வேலை செய்கிறாள் என்ற ஒரே காரணத்துக்காக இன்னொரு ஆணுக்கு மனைவியாகப் போகும் மீனாட்சியை சம்பந்தப் படுத்தி பாலமுரளியிடம் ராதிகா கேள்வி கேட்கலாமா..? அது தவறில்லையா...?

ராதிகாவினால் அதைச் செய்யமுடியாது.. ஆகையால் அவள் யாதொரு வாக்குவாதமும் செய்யாமல் பாலமுரளிக்கு டிபன் எடுத்துவைக்க போய் விட்டாள்...

அதன் பின்னால் பாலமுரளி... வீட்டுச் சாப்பாட்டைத் தவிர வேறு எங்கேயும் சாப்பிடுவதைத் தவிர்த்து விட்டான்.. தட்ட முடியாமல் கலந்து கொள்ள நேரிடும் வியாபார சந்திப்புகளிலும் பெயருக்கு எதையாவது கொறித்துவிட்டு.. சாப்பிட வீடு தேடி வருவதை வழக்கமாக்கிக் கொண்டான்..

மகளிடம் தினமும் செல்போனில் பேசும் மேகலா பேச்சுவாக்கில் ஒருநாள் இதையும் சொல்லி மகிழ்ந்து வைக்க பாலசரஸ்வதிக்கு பொறாமை வந்து விட்டது...

"இதென்னம்மா அநியாயமா இருக்கு.." அவள் பொறுமி வைக்க 'இதென்ன இவ இப்படிப் பேசி வைக்கிறா...' என்று திகைத்தாள் மேகலா...

"ஏண்டி.. உன்தம்பி நேரா நேரத்துக்கு வயித்துக்குள்ள சாப்பாட்டைப் போட்டுக்கிறது உனக்கு அநியாயமாய் போயிருச்சா..." என்று மகளுடன் சண்டைக்கு கிளம்பிவிட்டாள்...

"அட.. நான் அதைச் சொல்லலைம்மா..."

"வேற எதைச் சொல்றன்னு சொல்லித்தொலை..."

"நீங்களும்.. நானும் சொன்னாக் கேட்காதவன் இப்போ அவ பேச்சை மட்டும் கேட்கிறானே..."

"நினைச்சேண்டி.. உன் புத்தி இப்படித்தான் போகுமின்னு எனக்கும் தெரியும்.. ஏண்டி... நீயும்.. அவளும் ஒன்னா..."

"அதைச்சொல்லுங்க.. நான் யாரு..? மாணிக்க வாசகத்தின்மக.. பாலமுரளிக்கு அக்கா.. தேனூத்து பெரியவீட்டுப் பொண்ணு... அவ அப்படியா..? அவ எனக்கு சமமா ஆவாளா..?"

இவள் இப்படியே பேசிக் கொண்டிருந்தால் இது எங்கே போய் முடியுமோ என்று மேகலாவுக்கு பெருத்த

கவலையாக போய்விட்டது... கொஞ்சமாவது சரஸ்வதி தன் தம்பி மனைவியை மதித்து நடந்தால் தேவலை என்று அவளுக்கு ஆற்றாமையாக இருந்தது...

அதை சரஸ்வதியிடம் யார் சொல்வது.. தன்னால் அது முடியாத ஒன்று என்பதை அறிந்து வைத்திருந்த மேகலா வழக்கம் போல மருமகனின் உதவியை நாடலாமா என்று யோசித்தாள்...

ஆனால்.. திருமணம் முடிகிறவரையில் சரஸ்வதியைக் காவல் காக்கும் பொறுப்பிலேயே மருமகன் ஏகத்துக்கும் களைத்துவிட்டான் என்ற நினைவில் அப்போதைக்கு அவளால் செய்ய முடிந்த ஒரே காரியமான செல்போனை அணைத்து தூக்கி எறியும் வேலையை செவ்வனே செய்து முடித்தாள் மேகலா...

அப்படிப்பட்ட அருமையான அக்கா விருந்துக்கு அழைக்க வந்திருக்கும் போது.. அவள் முன்னாடியே.. அவளின் கணவன் ராதிகாவிற்கு ஆதரவாகப் பேசினால் அவள் பொறுத்துக் கொள்வாளா என்ன..?

ராஜராஜன் மெலிதான தர்மசங்கடத்துடன் மைத்துனனின் மனைவியைப் பார்த்தான்.. அவனின் இரக்கமான பார்வையில் அவனிடமிருந்த தர்மசங்கடம் ராதிகாவையும் தொற்றிக் கொண்டது...

பேச்சை மாற்றும் விதமாக... வந்த நோக்கத்தை சொல்ல ஆரம்பித்தான் ராஜராஜன்..

"முரளி.. எங்க வீட்டு விருந்துக்கு உங்களையும்.. ராதிகாவையும் அழைக்கத்தான நாங்க வந்திருக்கோம்.."

"ஆமாண்டா முரளி.. என் அத்தையும்.. மாமாவும் என்னிடம் கண்டிப்பா சொல்லி விட்டிருக்காங்க..."

"என்னன்னு அக்கா...?"

"என்ன வேலையிருந்தாலும் ஒதுக்கி வைச்சுட்டு... உன் தம்பி நம்ம வீட்டு விருந்துக்கு வந்தே ஆகனுமுன்னு சொல்லிட்டாங்க..."

மறந்தும் அவள் ராதிகாவையும் சேர்த்துச் சொல்லவில்லை... ராதிகா அதைக் கவனிக்கத்தான் செய்தாள்.... இது போன்ற அழைப்பை அவளது கல்லூரி வட்டாரத்திலோ.. அல்லது அவளின் பிறந்த வீட்டு உறவினர் வட்டாரத்திலோ கேட்டிருந்தால்.. அந்த திசைப் பக்கமே தலை வைத்து படுத்திருக்க மாட்டாள்... அப்படி இல்லாமல் அவளை இந்த முறையில் அழைத்து வைத்தது அவளின் சொந்த நாத்தனார்.. மௌனமாக அதை சகித்துக்கொள்வதைத் தவிர வழியேதும் அவளுக்கு புலப்படவில்லை...

"ம்ம்.. இந்த வாரம் முழுக்க எனக்கு வேலையிருக்கேக்கா..."

"என்னடா விளையாடறியா..?"

"இல்லைக்கா.. நிஜமாகவே எனக்கு மூச்சு முட்டற அளவுக்கு வேலையிருக்கு.. அடுத்தவாரம் வருகிறேன்.."

"ஏண்டா சொல்லமாட்டே.. உன் மாமியார் மறுவீட்டு விருந்துக்கு அழைச்சப்போ.. இந்த மூச்சு முட்டற வேலை எங்கே ஓடிப் போனது..?"

"அக்கா.. எதுக்கும்.. எதுக்கும் நீ முடிச்சுப் போடறே..?"

"அப்போ... அதுவும்... இதுவும் ஒன்னில்லைங்கறியா..? அந்த அளவுக்கு நீவந்துட்டியா..? ஒற்றை உடன் பிறப்பு.. குடும்பத்துக்கு மூத்தமகள்... என் வார்த்தைக்கு நீ கொடுக்கிற மதிப்பு இவ்வளவு தானா..? தெரிஞ்சுக்க போச்சுடா தம்பி.. தெரிஞ்சுக்க போச்சு... நீ... நீயாய் இல்லை.."

"ஆமா.. எனக்குள்ளே பத்துபேரு இருக்காங்க.. ஏன்க்கா.. நீ வேறு..."

"வேறயாய்தாண்டா ஆகிப் போயிட்டேன்... சென்னையில போயி ஒரு சொப்பன சுந்தரியை பிடிச்சுக்கிட்டு வந்திருக்க இல்ல.. இனி நான் வேறயாய் தான் தோணுவேன்..."

பாலசரஸ்வதி விடாமல் வழக்கடித்ததில் முரளி எரிச்சலாகிப் போனான்... அதுவும் அவன் முன்னிலையிலேயே ராதிகாவை அவள் 'சென்னையில் பிடித்து வந்த சொப்பன சுந்தரி..' என்று குறிப்பிட்டதை அவன் கொஞ்சம் கூட ரசிக்கவில்லை...

அவன் முகம் கடுமையானது.. அருகில் ராஜாராஜனும்... குழந்தைகளும் இருப்பதை மறந்தவனாக புருவங்களை உயர்த்தினான்...

"என்னக்கா இது..? என்னென்னவோ பேசறே... சென்னையில் பிடித்து வந்த சொப்பன சுந்தரியா..? அவ யாருன்னு உனக்குத் தெரியாதா..? என் பெண்டாட்டியைப் பார்த்தா உனக்கு எப்படித் தோணுது..?"

பாலமுரளியின் கடுமையில் சரஸ்வதியின் கண்கள் நிரம்பிவிட்டன.. கணவனின் முன்னிலையில் தன் மதிப்பு சரிவதை அவள் உணர்ந்தாள்....

"முரளி..."

"பேசாதே.. எனக்குன்னு பார்க்க வேணாமா..? வாய்க்கு வந்ததை பேசிருவையா.. நான்தான் உனக்குத் தம்பி... என்னைப் பேசத்தான் உனக்கு உரிமையிருக்கு.. அவளைப் பேச இல்லை.. இனியொருதரம் என் பெண்டாட்டியைப் பத்தி இப்படிப் பேசிவைத்தேன்னு வை.. நான் சும்மா இருக்க மாட்டேன்..."

பாலமுரளி கோபத்துடன் எழுந்து போய்விட்டான்.. ராஜாராஜன் மனைவியை கடிந்து கொண்டான்...

"எதுக்கு வந்துட்டு என்ன பேச்சுப் பேசற சரஸ்.. இப்பாரு.. உன்தம்பி கோவிச்சுக்கிட்டுப் போயிட்டாரு.."

"இல்லத்தான்..."

"என்னவோ போ.. வரவர.. உனக்கு பேசத் தெரிய மாட்டேங்குது... உன்தம்பி கோவிச்சுக்கிட்டதில் தப்பேயில்லை... உன்னை என்கூடப்பிறந்தவங்க யாராவது இப்படிப் பெயர் வைச்சுச் சொன்னா... நான் கேட்டுக்கிட்டு இருப்பேனா..?"

ராதிகாவை மட்டம் தட்டப் போய்.. தன் நிலையை நாற்றிக் கொண்டதில் சரஸ்வதி மனதிற்குள் குறைவாக உணர்ந்தாள்...

'எல்லாம் இவளாலேதான்.. என்ன சொக்குப் பொடி போட்டாளோ என்தம்பி அப்படியே மாறிப் போயிட்டான்.. முன்னமேயெல்லாம் அவன் இப்படியா இருந்தான்..?'

முன்னாடியெல்லாம் அவள் இப்படி இருந்ததில்லை என்பதை மறந்து விட்டு சரஸ்வதி பொறுமினாள்...

அவள் பேசிய பேச்சை மறந்து விட்டு.. அதற்கும் ராதிகாவை குற்றம் சாட்டி மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்...

'ஷோபா சொன்னது சரியாத்தான் இருக்கு... என் தம்பியை வசியம் பண்ணியில்ல... கைக்குள்ள வைச்சிருக்கா...'

மனைவியின் மடத்தனத்தால்.. மைத்துனன் தன்னைக்கூட பொருட்படுத்தாமல் போய் விட்டானே என்ற எண்ணம் ராஜராஜனை குடைந்து கொண்டிருந்தது.. மேகலாவுக்கும் அதே கவலைதான்.. அவர்களின் எண்ணத்தை அறிந்ததைப் போல செல் போனின் மணியொலித்தது... பாலமுரளிதான் பேசினான்...

"ஸாரி மாமா... ஏதோ கோபத்தில் எழுந்து வந்துட்டேன்... மதியம் சாப்பிட வீட்டுக்கு வருவேன்... அப்போ பேசிக்கலாம்..."

"அதனால் என்ன முரளி... நீங்க வாங்க..."

மைத்துனன் மன்னிப்புக் கேட்டதில் ராஜராஜனின் மனம் லேசாகிப் போனது... மேகலா நிம்மதியுடன் எழுந்தாள்.. மதிய விருந்து தயாரிப்பிற்காக ராதிகா

எழுந்தாள்.. காவேரியும்.. மீனாட்சியும் சமைத்துக் கொண்டிருக்க.. அவர்களுடன் பேசிய படி அவளும் சமையலறையில் உதவி செய்து கொண்டிருந்தாள்.. அதைப் பார்த்த பாலசரஸ்வதிக்கு பற்றிக் கொண்டு வந்தது...

"ஏம்மா... என்னவோ இவதான் சமைத்துக் கொட்டுகிறதைப் போல வேசம் கட்டிக்கிட்டு நிற்கிறாளே.. எனக்கெல்லாம் இப்படி நடிக்க வராதும்மா.. அடேங்கப்பா.. பெரிய கைகாரிதான்..."

"இப்பத்தான் உன்தம்பி கோவிச்சுட்டுப் போனான்.. அப்படியும் நீ அடங்கலையா..? மாப்பிள்ளை பக்கத்தில் இல்லைங்கிற தைரியமா..?"

"உலகத்திலேயே... பெத்த பெண்ணை... அவ புருசனை விட்டு மிரட்டி வைக்கிற அம்மா நீங்க ஒருத்தங்கதான்ம்மா..."

"என்ன செய்கிறது சரசு.. நீ அப்படி என்னை ஆக்கி வைச்சுட்டியே..."

"சமைக்க காவேரி இருக்கா.. மேல் வேலைக்கு மீனாட்சி இருக்கா... இவளுக்கு அடுப்படியில் என்ன வேலைண்ணேன்..?"

"அப்படி நினைக்காம... நம்ம நாத்தனார் குடும்பத்துக்கு விருந்து சமைக்கிறதுக்கு நாமும் ஒத்தாசை பண்ணலாமுன்னு நினைக்கிறா பாரு.. அதை நீ மெச்சிக்க வேணாமா..?"

"அதுதான் எனக்கும் சேர்த்து நீங்க பெத்திருக்கறிங்களே.. அது போதும்.. அடேங்கப்பா.. வந்து ஒரு மாசம்தான் ஆகுது.. அதுக்குள்ளே குடும்பமே இவ கைக்குள்ளயா..?"

"அதைப் பார்த்து நீயும் பழகிக்க.. இப்போப் போய் மாப்பிள்ளைக்கு இந்த ஜீனைக் குடுத்துட்டு வா..."

"எனக்கில்லையா...?"

"உனக்குத்தான் முதலில் கொடுக்கனும்.. பேசிப்பேசி உன் தொண்டைத்தண்ணி வத்திப் போயிருக்கும் பாரு.. இந்தா.. இதைக் குடிச்சு தொண்டையை நனைச்சுக்க..."

எதற்கும் அலட்டிக் கொள்ளாமல் பதிலளித்த மேகலாவை உறுத்துப் பார்த்தாள் பாலசரஸ்வதி... அவளுடைய பிறந்த வீட்டில்.. அவளுக்கான உரிமை பறிபோய் விட்டதைப் போல உணர்ந்தாள்.. மீண்டும் அந்த இடத்தைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்ற ஆவேசம் அவளுக்குள் தோன்றியது...

மதிய உணவுக்கு வந்திருந்த பாலமுரளி... ராஜாராஜனைத் தேடிப் போய் மன்னிப்புக் கேட்டான்.. தன்மையாகப் பேசினான்.. என்னதான் மனைவியின் மீது தவறிருந்தாலும்.. மைத்துனன் தனக்காக பார்க்க வேண்டாமா என்ற சிறுதுளி கோபம் ராஜாராஜனின் மனதில் இருந்தது.. முரளியின் தன்மையான பேச்சில் அது மறைந்து விட்டது.. மதிய உணவின் போது அவன் மீண்டும் விருந்துக்கு அழைக்க.. அந்தவார இறுதியில் வருவதாக பாலமுரளி கூறினான்.. பாலசரஸ்வதியிடம் கோபத்தை மறந்து சிரித்துப் பேசினான்....

இரவில் ராதிகா இறுக்கமான முகத்துடன் படுக்கைக்கு வந்தாள்... எதையோ படிப்பதைப் போல படுத்திருந்த பாலமுரளியின் பார்வை ஆராய்ச்சியுடன் அவள் முகத்தில் படிந்தது... அவன் முகம் பார்க்காமல் ஒருக்களித்து படுத்துக் கொண்டவளின் பக்கம் திரும்பி

"என்னடி..?" என்று கேட்டான்...

"என்னடின்னா..? என்ன அர்த்தம்..?"

"எதுக்கு முகத்தை தூக்கி வைக்கக்கிட்டு இருக்கேங்கிற அர்த்தம்தான்..."

"இங்கே கலகலன்னு சிரிக்கிறதைப் போதான் என்னம் நடக்குதா..?"

"இப்படி முகத்தை ஒரு முழ நீளத்துக்கு தூக்கி வைக்கக்கிறதைப் போல என்ன நடந்திருக்க..? என் அக்கா யதார்த்தமா ஒரு வார்த்தை சொல்லி வைச்சிருக்க.. அதுக்கா இந்தப் பாடு...?"

"ஆமாங்க... எனக்கு பட்டப் பெயர் வைத்து உங்க அக்கா பேசுகிறது யதார்த்தமான பேச்சுத்தான்.. அதுக்காக நான் வருத்தப்படறதில யதார்த்தமில்லை தான்.. தப்புத்தாங்க.. பெரிய மனசு பண்ணி என்னை மன்னிச்சுருங்க..."

"ராதிகா..."

"எனக்கு தூக்கம் வருது.. ப்ளீஸ்.. டோன்ட் டிஸ்டர்ப்.. மி..."

'இவளை என்ன கையையா பிடித்து இழுத்தேன்..? தொந்தரவு பண்ணாதேன்னு சொல்கிறா.. தூக்கம் வருதாமில்ல.. அந்ததூக்கம் எனக்கு வருதா...?'

முரளி மனதிற்குள் பொருமிக்கொண்டிருக்க.. ராதிகா தூங்கிப் போனாள்...

உன்கைபிடித்து நடக்கும் போது..
கானகம்கூட அரண்மனையே...

ராஜராஜன் ஊருக்கு கிளம்பியபோது.. பாலசரஸ்வதி தேங்கி நின்றாள்... 'என்னடி...' என்று புருவம் உயர்த்தியவனிடம் இரண்டு நாள்கள் பிறந்த வீட்டில் இருந்து விட்டு வருவதாக அனுமதி கேட்டாள்.. ராஜராஜனுக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை..

"அதுதான் இந்த வாரக் கடைசியில் முரளியும்.. ராதிகாவும் விருந்துக்கு வருகிறாங்களே சரஸ்..." என்றான்..

"அவங்கதானே வராங்க.. அம்மா வரலையே.."

பாலசரஸ்வதியின் பதிலில் ராஜராஜன் கிளம்பி விட்டான்... மேகலாவுக்கு மனதிற்குள் கலவரம் மூண்டது.. மகள் இருப்பதில் அவளுக்கு சந்தோசம்தான்..

ஆனால்.. அவள் தாய் வீட்டில் சீராட மட்டும் இருப்பதாகத் தெரியவில்லையே.. அதற்கு மேலும் ஏதோ இருப்பதாக மேகலாவின் அடிமனதில் தோன்றுகிறதே...

பாலசரஸ்வதி இயல்பாக இருப்பதைப் போல்தான் முதல்நான் வீட்டைச் சுற்றிவந்தாள்... மீனாட்சியிடம் சொல்லி.. தோட்டத்து முல்லை மலர்களை தொடுத்து தலையில் வைத்துக் கொண்டாள்.. காவேரியிடம் சொல்லி பால்கோவா கிண்டிச் சாப்பிட்டாள்...

மகள் உண்மையிலேயே பிறந்த வீட்டில் சீராடத்தான் நினைக்கிறாள் என்று மேகலா.. கலவரத்தை விட்டபோது.. பாலசரஸ்வதி தன் வேலையை ஆரம்பித்தாள்...

மறுநாள் மதிய உணவிற்குப் பின்னால் மேகலா கண் அயர்ந்திருந்த நேரம் பார்த்து மாடியேறினாள் பாலசரஸ்வதி... ராதிகாவின் அறைக் கதவைத் தட்டினாள்.. கதவைத் திறந்துவிட்ட ராதிகா அவசரமாக...

"வாங்கண்ணி..." என்றாள்...

அவளது வரவேற்பை லட்சியம் செய்யாமல் அலட்சியமாக அறைக்குள் நுழைந்து பார்வையை சுழல விட்ட பாலசரஸ்வதி...

"வரவேற்பெல்லாம் பலமாயிருக்கு.. இது என்ன உன் தனிக்குடித்தன வீடுன்னு நினைச்சிட்டியா..?" என்று எகத்தாளமாக கேட்டாள்...

ராதிகாவுக்கு பற்றிக்கொண்டு வந்தாலும் பதில் பேசாமல் நின்றாள்.. அவளை வரவேற்காமல் இருந்திருந்தாலும்

அதற்கும் குதர்க்கமாக எதையாவது பாலசரஸ்வதி சொல்லி வைப்பாள் என்று அவளுக்குத் தெரியும்...

'ம்ஹீம்.. பேய்க்கு வாழ்க்கைப் பட்டா.. முருங்கை மரத்தில ஏறித்தானே ஆகனும்...'

இந்த நினைவை வாய் விட்டுச் சொன்னால் முரளிக்கு எப்படியிருக்கும் என்ற நினைவில் அவளுக்கு சிரிப்புவந்து விட்டது...

"என்ன சிரிப்பு..? என்னைப் பார்த்தா உனக்கு சிரிக்கனும் போல இருக்கா..?"

பாலசரஸ்வதியின் முறைப்பில் ராதிகாவின் சிரிப்பு உதட்டிலேயே உறைந்து.. மறைந்து போனது...

"உட்காருங்கண்ணி..."

மீண்டும் வாங்குப்பெற நேரிடும் என்று தெரிந்தே உபசரித்து வைத்தாள் ராதிகா...

அவள்தான் பேய்க்கு வாழ்க்கைப் பட்டு தொலைத்தவளாயிற்றே.. முருங்கை மரத்துக்கு பயந்தால் முடியுமா..?

"இப்போத்தானே சொன்னேன்..? தனிக் குடித்தன கனவில இருக்காதேன்னு.. அதுக்குள்ள மறந்து தொலைச்சிட்டயா..?"

ராதிகாவைத் தாளித்தபடி அங்கிருந்த சோபாவில் தோரணையாக கால்மேல் கால் போட்டு அமர்ந்தாள் பாலசரஸ்வதி...

'அடேங்கப்பா.. மைசூர் மகா ராணிதான்...'

மனதில் நினைத்தை அவசரமாக அழித்தபடி எதிரே அமரப் போனாள் ராதிகா...

"என்ன.. நீயும் உட்காரக் கிளம்பிட்ட..?" அதட்டினாள் சரஸ்வதி...

"வேனும்னா வெளியே போய்விடவா..?" பவ்யமாக கேட்டு வைத்தாள் ராதிகா...

"கிண்டலா...?" பாலசரஸ்வதியின் பார்வை ராதிகாவை சுட்டெரித்தது...

"அதெல்லாம் இல்லைண்ணி.. உங்க முன்னாலே நின்னாலும் குற்ற மாகிருமோ.. என்னவோன்னு தோணுச்சு... எதுக்கு வம்புன்னு வெளியே போயிடலாம்ன்னு பார்த்தேன்.." மரியாதையான குரலில் சிரிக்காமல் சொன்னாள் ராதிகா...

"அப்போ.. நான் வம்புக்கு அலைகிறவன்னு சொல்றியா..?" பாலசரஸ்வதி சண்டைக்கு வந்தாள்...

"அப்படியெல்லாம் நான் சொல்லுவேனா அண்ணி..?"

"ஏன் சொல்லித்தான் பாரேன்..."

"உங்களுக்கு என்னதான் வேணும் அண்ணி...?"

"அடேங்கப்பா.. நான் கேட்டதைக் கொடுக்கிற அளவுக்கு நீ பெரிய ஆளா..?"

"அப்படின்னா சரிண்ணி.. நான் எதுவும் கேட்கலை.."

"அதுதான் சாக்குன்னு பேசாம இருந்துருவியா..."

இன்றைக்கு விடிந்த விடியல் சரியில்லை என்ற நினைவில் ராதிகா தலையைப் பிடித்துக் கொண்டாள்.. எதைப் பேசினாலும் அதற்கு ஏட்டிக்குப் போட்டியாக பேசிக் கொண்டு வருபவளிடம் அவள் என்னதான் செய்வாள்...?

அசையாமல் நின்றிருந்த ராதிகாவை உற்றுப் பார்த்த பாலசரஸ்வதி ஒரு முடிவுடன்...

"எங்கே... உன் நகைகளைக் காட்டு..." என்றாள்...

ராதிகா மௌனமாக அவளது நகைப் பெட்டியைக் கொண்டுவந்து பாலசரஸ்வதியின் முன்னாலிருந்த டீப்பாயின் மேல் வைத்தாள்.. திறந்து பார்த்த பாலசரஸ்வதி அவற்றின் ஒளிர்வில் அயர்ந்து போனாள்...

"அத்தனையும் வைரம்..! எல்லாம் என் அம்மா கொடுத்ததா..?"

இகழ்ச்சியுடன் பாலசரஸ்வதி கேட்க.. ராதிகா உதடுகளை மடித்து தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டுவந்தபடி...

"ம்ம்ம்..." என்று முணுமுணுத்தாள்...

"நான் ஒருத்தி... இதைப் போய் உன்னிடம் கேட்கிறேனே... நீ தங்கத்துக்கே.. தகிடத்தோம் போடற குடும்பத்தில பிறந்தவளாச்சே.. வைரத்தை இதுக்கு முன்னாலே நீ கண்ணாலேயாவது பார்த்திருக்கியா..?" பாலசரஸ்வதி இளப்பமான குரலில் கேட்டாள்...

'அது என்ன பெரிய குற்றமா..?' எரிச்சலுடன் நினைத்த ராதிகா.. இல்லையெனும் விதமாக தலையை ஆட்டினாள்...

"உனக்கு வந்த வாழ்வைப் பாரேன்.. இத்தனை நகையும் இந்தக் குடும்பச் சொத்து... எனக்கு கொடுக்க மாட்டேன்னு அம்மா சொல்லிட்டாங்க.." பொறாமையுடன் சொன்னாள் பாலசரஸ்வதி...

இதற்கு ராதிகா என்ன பதிலைச் சொல்ல முடியும்..? பேசாமல் மௌனமாக நிற்கத்தான் முடியும்...

"அதுக்குன்னு என்னை ஒன்னும் சும்மா அனுப்பிடலை... இந்த நகைகளை விட அதிகமான வைர நகைகளை செய்து போட்டுத்தான் அனுப்பி வைச்சாங்க.. உன்வீடு மாதிரியில்லை... என்வீடு.." பாலசரஸ்வதியின் குரலில் பெருமை வழிந்தோடியது...

"ம்ம்ம்..."

"மருமகளுக்குத்தான் குடும்ப நகைகள் போகனுமாம்... இது என்ன நியாயம்ன்னே தெரியலை... ஆமா... இது என்ன புது மாதிரியான வைர செட்..? அழகாயிருக்கே... இது எங்க குடும்ப நகை இல்லையே.. புதுசா வாங்கினதைப் போலத் தெரியுதே..."

பாலசரஸ்வதியின் கணிப்பு மிகச் சரியானதாக இருந்தது... அவள் காட்டிய வைர நகை செட்டைத்தான் பாலமுரளி ராதிகாவுக்கு நிச்சயதார்த்த விழாவின் போது போட்டுக்கொள்ள வென்று வாங்கிக் கொடுத்திருந்தான்..

"ஆமாம்.. இது புதுசுதான்..."

"எனக்கு இதைப் பிடிச்சிருக்கு.. நான் எடுத்தக்கறேன்..."

பாலசரஸ்வதி.. அந்த நகையை வைத்துக் கொண்டு.. மற்றவற்றை பெட்டியில் வைத்து பூட்டவும்.. ராதிகாவுக்கு திக்கென்று ஆகிவிட்டது...

"அண்ணி.. அந்த நகைசெட்டைக் கொடுங்க..." என்றாள்...

பாலசரஸ்வதியின் முகம் மாறிவிட்டது.. அவள் உண்மையிலேயே அந்த வைரநகைகளின் வடிவமைப்பில் மயங்கியிருந்தாள்.. ராதிகாவை தாழ்த்திப் பேசி வம்பிழுக்கவென்றுதான் அவள் நகைப் பெட்டியைக் கேட்டாள்.. அந்த நகைகளுக்கூடே இருந்த புதிய நகை அவளை வசீகரித்துவிட.. அந்த நகையின் மீது ஆசைப்பட்டு விட்டாள்...

"உனக்கு காதென்ன செவிடா..? இதை எனக்குப் பிடிச்சிருக்குன்னு நான் சொன்னேனா... இல்லையா..?"

"பிடிச்சதையெல்லாம் உங்களுக்கு சொந்தமாக்கிக் கனும்னு நினைக்காதீங்க.. உங்களாலே சொந்தமாக்கிக்க முடியாததும் உலகத்தில இருக்கும்... அந்த நகை எனக்கு வேணும்.. வைச்சுருங்க..."

"ஏய்ய்.. இது என்ன உங்க அப்பா வீட்டுச் சொத்தா..? என் அப்பாவீட்டுச் சொத்து.. இதை எடுத்துக்கக் கூடாதுன்னு சொல்ல நீ யாருடி..?"

"மரியாதையாய் பேசுங்க அண்ணி.. என்னை வாடி போடின்னு கூப்பிடுகிற உரிமை என் புருசனுக்கு மட்டும் தான் இருக்கு.. அந்த நகை என்னோடது.. எனக்குச் சொந்தமானது... அதை நீங்க எடுத்துக்க முடியாது.. நான் கொடுக்க மாட்டேன்..."

ராதிகாவின் கடுமையான பேச்சில் பாலசரஸ்வதி வெகுண்டாள்...

"இதைக் கொடுக்க மாட்டேன்னு சொல்ல உனக்கு அதிகாரம் கிடையாது..."

"இதை எடுத்துக்கிறதுக்கு உங்களுக்கு உரிமை கிடையாது..."

"இது என் அப்பாவீட்டுச் சொத்து..."

"இப்ப.. இது என்னோட சொத்து.."

"ராதிகா.."

"போதும்.. நீங்க அரட்டினா.. நான் மிரள மாட்டேன்.. என்னால அந்த நகையைக் கொடுக்க முடியாது..."

ஏறக்குறைய அந்த நகையை பாலசரஸ்வதியின் கையிலிருந்து பறித்தாள் ராதிகா.. நகைப் பெட்டியை பீரோவின் உள்ளறையில் வைத்து.. பாலசரஸ்வதியின் கண் முன்னாலேயே சாவி போட்டு அதை இறுக்கமாக மூடினாள்.. சாவியுடன் அறையை விட்டுப் போய் விட்டாள்...

பாலசரஸ்வதியால் நடந்ததை ஜீரணிக்கவே முடியவில்லை.. என்னதான் முன்புபோல பிறந்தவீடு

இல்லையென்று அவள் சொன்னாலும் அதை வெறும் வாய் வார்த்தையாகத்தான் அதுவரை சொல்லி வந்தாள்... முதல் முறையாக.. அவள் சொன்னது நிஜமாகிப் போனபோது.. அவளால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் போய்விட்டது...

எத்தனை நேரம் அசைவற்று அமர்ந்திருந்தாளோ... அவளுக்கே அது தெரியவில்லை.. சாதனா அவளைத் தேடிவந்து...

"அம்மா.. பாட்டி உங்களை டிபன் சாப்பிட வரச் சொன்னாங்க..." என்று சொன்ன போதுதான் அவளுக்கு உணர்வே மீண்டது..

அவளை அறையில் அமர வைத்துவிட்டு அலட்சியமாக வெளியே போய்விட்ட ராதிகாவின் உதாசினத்தை நினைத்த போது பாலசரஸ்வதியின் ரத்தம் கொதித்தது..

"எனக்கு டிபனும் வேணாம்.. ஒரு மண்ணும் வேணாம்ன்னு போய் சொல்லு.." என்று எரிந்து விழுந்து விட்டு விரைவாக மாடிப்படிகளில் இறங்கினாள்..

அவள் சொன்னதை அப்படியே சாதனா மேகலாவிடம் ஒப்பிக்க மேகலாவை கவலை பிடித்துக் கொண்டது...

"என்னாச்சுன்னு தெரியலையே..." புலம்பியபடி மகளைத் தேடிச் சென்றாள்...

நலைவிரி கோலமாக கட்டிலில் படுத்திருந்த சரஸ்வதியின் கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன...

அதுவரை அதைப் போன்றதொரு கோலத்தில் மகளைப் பார்த்திராத மேகலா அதிர்ந்து விட்டாள்...

"சரசு... என்னடி ஆச்சு...?" பதறியபடி மகளின் அருகே சென்றாள்...

"பேசாதீங்கம்மா... எல்லாம் உங்களாலேதான்..." பாலசரஸ்வதியின் கண்களில் இருந்து வெளிப்பட்ட கண்ணீர் நிற்காமல் வழிந்தோடியது...

மேகலாவினால் மகளின் கண்ணீரைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை... ஒற்றைமகளின் கண்களில் சிறு வருத்தம்கூட ஏற்படாமல் வளர்த்திருந்த அந்தத் தாயின் மனம் துடித்தது...

எவ்வளவோ கெஞ்சிப் பார்த்து விட்டாள்.. பாலசரஸ்வதி என்ன நடந்தது என்று அவளிடம் சொல்லவில்லை... அதே சமயம் கண்ணீர் விடுவதை நிறுத்தவுமில்லை... காபி பலகாரம் சாப்பிட வரவுமில்லை...

செய்வதறியாமல் பாலமுரளிக்கு போன் செய்தாள் மேகலா.. அவனும் உடனே வந்து விட்டான்... நடப்பதை மௌனமாக பார்த்துக் கொண்டிருந்த ராதிகாவின் அடிவயிறு ஜில்லிட்டது.. தொண்டைக்குள் கலவரப் பந்து சுற்றுவதை அவள் உணர்ந்தாள்...

'என்ன மாதிரியான கல்யாணம் இது..?'

அவளுக்கு அழவேண்டும் போல இருந்தது... அவள் அழுதால் கேட்க யாரிருக்கிறார்கள்...? சாய்ந்து கொள்ள

யார் தோளிருக்கிறது..? என்ற நினைவில் கண்ணீரை கட்டுப் படுத்திக் கொண்டாள்.. தனிமைப் பட்டு விட்ட துயரம் அவள் மனதில் பொங்கியது.. ஏன்று கேட்க ஆளில்லாமல் அநாதையாகி விட்ட தன்னிரக்கத்தில் அவள் மௌனம் கொண்டாள்...

"என்னம்மா...? எதுக்காக அப்படியொரு போனைப் பண்ணினீங்க..? அக்காவுக்கு என்ன..?" முரளி விசாரித்தான்...

"தெரியலைடா முரளி... அழுதுகிட்டே இருக்கிறாடா... என்னன்னு கேட்டா சொல்வே மாட்டேங்கிறா.." மேகலாவின் கண்களும் கலங்கியிருந்தன...

"என்னது.. அக்கா அழுகுதா..?" முரளியின் புருவங்கள் உயர்ந்தன...

அவன் வேகமாக பாலசரஸ்வதியைத் தேடிச் சென்றான்... தம்பியைக் கண்டதும் அவளின் கண்ணீர் அதிகமானது...

ஜனுகு உனை நினைத்தும்...
உன் மனது இரங்கவில்லை...

பாலசரஸ்வதி துடிக்கும் இதழ்களுடன்.. கண்ணீர் திரையிட்ட விழிகளுடன் தம்பியை ஏறிட்டாள்... தங்கையை தகப்பனாக வளர்த்த அந்த தம்பியின் இதயம் துடித்தது...

"என்னக்கா ஆச்சு..? ஏன் இப்படி அழுகிற...?"

"இந்த வீட்டில் நான் யாருடா..?"

"ச்சே... அபத்தமாய் பேசாதே... எப்பப் பார்த்தாலும் இதே கேள்விதானா..?"

"நான் கேட்டதுக்கு பதிலைச் சொல்லு..."

"நீ என் அக்கா... இந்த வீட்டுக்கு மூத்தமகள்..."

"எனக்குன்னு இந்த வீட்டில் எந்த உரிமையும் இல்லையா..?"

பாலசரஸ்வதியின் குரலில் தெரிந்த பரிதவிப்பில் முரளி உருகிப்போய் விட்டான்... ஆண்பிள்ளை சிங்கமாய் அவனிருக்க... அவன் கூடப் பிறந்தவள் கண்ணீர் விடுவதா..?

"ஏன் இல்லை..? இது நீ பிறந்து வளர்ந்த வீடுக்கா.. உனக்கில்லாத உரிமை இங்கே வேற யாருக்கு இருக்கு..?"

"உன் பெண்டாட்டிக்கு இருக்குடா..."

பாலசரஸ்வதியின் பேச்சில் முரளியின் நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்தன... அவனுக்கு ராதிகாவின் மீது சரஸ்வதி கோபமாக இருக்கிறாள் என்று தெரியும்.. அந்த கோபத்தில் ராதிகாவை அவள் அதட்டுவாளே தவிர இப்படி கண்ணீரை உகுத்துக் கொண்டு உட்கார்ந்திருக்க மாட்டாளே... அது அவளின் இயல்பல்லவே...

பாலசரஸ்வதி பெரிய வீட்டில் பிறந்த பெண்.. பரம்பரை கோடிஸ்வரான மாணிக்கவாசகத்தின் மகள்.. அந்த வட்டாரத்திலேயே பெருந்தொழிலதிபளான பாலமுரளியின் அக்கா.. அவளாவது நியாயம் கேட்டு கண்ணீர் விடுவதாவது...

அவளுக்கு அதட்டித்தானே பழக்கம்..? அடிபட்ட உணர்வுடன் கண்ணீர் விட்டுப் பழக்கமில்லையே....

'என்னவோ... நடந்திருக்கு...' அவன் முகம் மாறிவிட்டது...

"உனக்கு உரிமையில்லைன்னு அவ சொன்னாளா..?"

முரளி புயலை உள்ளடக்கிய அமைதியுடன் கேட்க.. அதை அறைக்கு வெளியே நின்று கேட்டுக் கொண்டிருந்த ராதிகாவின் உடல் பதறியது..

"ஆமாம்..." பாலசரஸ்வதி தேம்பினாள்...

அவனை விட வயதில் மூத்தவள்.. பத்துவயதில் ஒன்று... எட்டு வயதில் ஒன்று என்று இரண்டு குழந்தைகளுக்கு தாயானவள்.. இப்படித் தேம்பி அழுததில் பாலமுரளியின் மனம் பாதிப்பையடைந்தது....

"கம்மா அழுகாதேக்கா.. முதலில் அழுகையை நிறுத்து.. நீ அழுது நான் கேட்கிறதா..?"

"பிறந்த வீட்டில் உரிமையில்லைன்னு ஆகிப் போனா.. எந்தப் பொண்ணுதான் அழாம இருப்பா..? எனக்கு இங்கே உரிமையில்லையாம்.. அவளுக்குத்தான் இங்கே எல்லா உரிமையும் இருக்காம்... உன் பெண்டாட்டி சொல்லிட்டா... முரளி.."

மகளின் கண்ணீரைக் கண்டு பதைப்புடன் அருகே அமர்ந்திருந்த மேகலாவுக்கும் என்னவோ போல ஆகிவிட்டது....

'ராதிகாவா... இப்படிச் சொன்னா...?'

என்னதான் மருமகள் மேல் பாசமிருந்தாலும்.. மகளின் மனம் புண்படப் பேசுவதை எந்தத் தாய்தான் அனுமதிப்பாள்...?

அவள் பாலமுரளியை கேள்வியாய் நோக்க... அவன் வெகுண்டான்...

"ராதிகா..."

அவன் போட்ட சத்தத்தில் சாதனாவும்.. ராஜீவும் பயந்து போய் மேகலாவின் புடவை முந்தானையின் பின்னால் பதுங்கிக் கொண்டார்கள்... சமையலறையில்

கைவேலையாக இருப்பதைப் போல பாவனை செய்தபடி காதைத் தீட்டிக் கொண்டிருந்த காவேரி... அவசரமாக வந்து எட்டிப் பார்த்தாள்.. மீனாட்சியின் கையிலிருந்த பாத்திரம் நழுவி தரையில் விழுந்து... அதன் பங்குக்கு 'டமார்...' என்ற சப்தத்தை எழுப்பி வைத்தது...

ராதிகா நடுக்கத்துடன்.. பாலமுரளியின் முன்னால் வந்து நின்றாள்... அவனின் கோபப்பார்வை அவளைத் துளைப்பதை உணர்ந்தும் அவளால் தலைநிமிர்ந்து அவனைப் பார்க்க முடியவில்லை....

"ஏய்ய்.... நிமிர்ந்து பாருடி..." அவன் ரௌத்திரமானான்....

மெதுவாக தலை நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்த ராதிகா பயந்து விட்டாள்... அவ்வளவு ரௌத்திரத்துடன் அதற்கு முன்னால் இரண்டு முறை அவனைப் பார்த்திருக்கிறாள்... அந்த இரண்டு முறையும் அவன் அவளுக்கு வாழ்நாளிலேயே மறக்க முடியாதபடி மிகக் கடுமையான தண்டனைகளை அளித்திருக்கிறான்..

இது மூன்றாம் முறை... இப்போது என்ன நடக்கப் போகிறதோ என்ற நினைவில் அவள் மேனி நடுங்கியது...

அவளது நடுக்கத்தைக் கண்டவனின் ரௌத்திரம் இன்னும் அதிகமானது.. குற்றம் செய்யாதவள் ஏன் நடுங்க வேண்டும் என்ற உக்கிரத்துடன் அவளை எரித்து விடுவதைப் போல முறைத்தான் பாலமுரளி...

"அக்காகிட்ட என்னடி சொன்ன...?"

"அண்ணி மதியம் நம்ம ரூமுக்கு வந்திருந்தாங்க..."

"அக்காவை என்ன சொன்னன்னு கேட்டேன்..."

"என் நகைகளைப் பார்க்கனுமுன்னு சொன்னாங்க.."

"இன்னும் நான் கேட்ட கேள்விக்கு நீ பதில் சொல்லலை...."

"அதில ஒரு வைர நகை செட்டைப் பார்த்துட்டு அவங்களுக்கு வேணும்னு எடுத்துக்கப் போனாங்க..."

ராதிகா விவகாரத்தின் ஆணிவேரை அடைந்து விட்டதை உணர்ந்த முரளியின் புருவங்கள் முடிச்சிட்டன...

"எடுத்துக்கிட்டா.. எடுத்துக்கட்டுமே.. நீ அதைத் தடுத்தியா..?"

அவன் அழுத்தமான குரலில் கேட்க... பயந்து நடுங்கி பின் வாங்கினாள் ராதிகா... முரளி அவளின் பயத்தை லட்சியமே செய்யவில்லை... தன் கேள்வியிலேயே அவன் நின்றான்...

"சொல்லுடி.. நீ அதைத் தடுத்தியா...?"

ராதிகா செய்வதறியாதவளாக வீட்டைச் சுற்றிப் பார்வையை ஓட விட்டாள்.. சமையலறையில் காவேரியும்.. ஹாலில் மீனாட்சியும்.. வாசலில் தோட்டக்காரனும் நின்று கொண்டிருப்பது தெரிந்தது... போதாக்குறைக்கு டிரைவர் வேறு வந்து கொண்டிருந்தான்...

இத்தனை பேரின் மத்தியில் வைத்துத்தான் இவன் விசாரணை நடத்த வேண்டுமா என்று மனதில் புகைந்தாள்...

தனிமையில் இதைக் கேட்டால் ஆகாது என்றிருந்தது அவளுக்கு... ஆனால் இதை அவனிடம் யார் சொல்வது...?

சொல்ல வேண்டிய மேகலாவே மகளின் விசாரணைக்கு ஒத்துழைப்பை கொடுத்துக் கொண்டிருக்கும் போது.. ராதிகாவிற்கு ஆதரவாக அங்கே யார் பேசப் போகிறார்கள்...?

பதிலைச் சொன்னால் என்ன நடக்கும் என்று மிக நன்றாகவே தெரிந்திருந்தும்.. பதிலைச் சொன்னாள் ராதிகா...

"ஆமாம்..."

அடுத்த நொடியில் பாலமுரளி ஓங்கிவிட்ட அறையில் சுருண்டு கீழே விழுந்தாள் ராதிகா.. அவள் காதுகளில் 'ஙொய்' என்ற சத்தம் மட்டுமே கேட்டது.. அசைய முடியாமல் கிடந்தவளின் முடியைப் பற்றித் தூக்கி அடுத்த அறையை விட்டான் பாலமுரளி...

இப்போது ராதிகா உணர்விழந்து விழுந்துவிட...

"ஐய்யோ..." என்று வாய் பொத்தினாள் மேகலா...

ராஜிவும்.. சாதனாவும் ராட்சஸனைப் பார்ப்பதைப் போல பாலமுரளியைப் பார்த்தபடி.. நகர்ந்து பின்னுக்குச் சென்றார்கள்.. மீனாட்சி தண்ணீர் குவளையுடன் ஓடிவர.. மேகலா தரையில் அமர்ந்து ராதிகாவின் முகத்தை தூக்கி மடியில் வைத்து.. தண்ணீரைத் தெளித்தபடி...

"இப்படிப் போட்டு அடிச்சிட்டயே முரளி.. கோபம் வந்தால் கண்மண் தெரியாமல் தான் வந்து தொலைக்குமா..? பாவம்... பச்சை மண்ணு.. உன் கோபத்தை இவ தாங்குவாளான்னு நினைச்சுப் பார்த்தியா..." என்று புலம்பினாள்...

"இவ பண்ணுகிற வேலைக்கு... நொறுக்கித் தள்ளனும்மா..." அவனது கோபம் குறையவில்லை...

தண்ணீர் தெளித்ததில் ராதிகா கண் விழித்துப் பார்த்தாள்... முரளியை அவளது நிலைமை கொஞ்சம் கூட அசைக்கவில்லை.. அவள் முகத்துக்கு நேரே குனிந்து அவன் கர்ஜித்தான்...

"சொல்லுடி... அக்காவுக்கு அந்த நகையைக் கொடுக்க மாட்டேன்னு சொன்னியா...?"

"விடுடா.." மேகலா தடுக்க...

"ஆமாம்..." என்று தீனமான குரலில் சொல்லிவிட்டு மீண்டும் அடி வாங்கினாள் ராதிகா...

"இவளைக் கொல்லனும்னு நினைக்கறியாடா.." மேகலாவின் விழிகள் கனலைக் கக்கின...

"சாகட்டும்மா... நகைஆசை பிடிச்சவ எனக்கு வேணாம்..." அவன் வெறுப்புடன் சொன்னான்...

"என்ன நடந்திருந்தாலும் உனக்கு இத்தனை கோபம் ஆகாது முரளி..." மேகலாவின் குரலில் கண்டிப்பிருந்தது..

பாலமுரளி அதைக் கண்டு கொள்வதாகவே இல்லை..

"சொல்லுடி... அந்த நகைக்காக என் அக்காவுக்கு உரிமையில்லைன்னு சொன்னியா..?" பாலமுரளி விடாக் கண்டனாக அதிலேயே நின்றான்...

அன்று அவனறிந்த ராதிகாவின் இன்னொரு முகத்தை அவன் ரசிக்கவில்லை.. அழகான பின் மாலையும்... முன்னிரவும் சந்தித்துக் கொள்ளும் அற்புதமான பொழுதில்... தோட்டத்தில் மலர் செடிகளின் மத்தியில் தேவதையைப் போல நின்று நிலவைக் குறித்து பாடலைப் பாடிய அந்த ராதிகாவா இவள்.. என்று மனம் கசந்தான் அவன்...

'கடைசியில் அக்கா சொன்னதைப் போல.... என் பணத்துக்காகத்தான் இவ என்னை அந்தப் பார்வை பார்த்தாளா...'

நினைவே அவனை தகித்தது.. அந்த தகிப்பைப் பொறுக்க மாட்டாதவனாக.. அதை அப்படியே அவளிடம் காட்டினான் அவன்...

"சொல்லு... ஏன் பேசாம இருக்க..?"

"போதும் முரளி... அவளால பேச முடிகிறதைப் போலவா நீ அடிச்சு வைச்சிருக்கிற.. குத்துயிரும் குலையுயிருமா ஆக்கிட்டு அவகிட்ட விடாம விசாரணை நடத்தறியே... உனக்கு கொஞ்சம்கூட இரக்கமே இல்லையா...?"

"இவளுக்குப் போயி இரக்கம் காட்டறிங்களேம்மா.. நகைமேல ஆசைப்பட்டு நீங்க பெத்த பொண்ணுக்கே இந்த

வீட்டிலே உரிமையில்லேன்னு இவ சொல்லியிருக்கா.. அதை நினைச்சுப் பாருங்கம்மா..."

"இவ எதைச் செய்திருந்தாலும் இப்போதைக்கு இது போதும்.. விட்டுவிடு..."

"முடியாது.. இது புருசன் பெண்டாட்டி பிரச்னை.. நீங்க இதில் தலையிடாதீங்க..."

இப்படிச் சொல்லி விட்டவனிடம் அவள் எதைச் சொல்லி தடுத்து நிறுத்துவது...

"சொல்லு.." பாலமுரளியின் கண்கள் சிவந்தன...

"ஆமாம்... சொன்னேன்.. அந்த நகையை எடுத்துக்க உங்க அக்காவுக்கு உரிமையில்லைன்னு சொன்னேன்.. எனக்குத்தான் அந்த நகைமேல உரிமையிருக்குன்னு சொன்னேன்..."

பேசமுடியாத அந்த நிலைமையிலும்.. மெல்லிய குரலில் நிறுத்தி நிதானமாக பதில் சொன்ன மருமகளின் மேல் கவிழ்ந்து.. மகனின் அடியிலிருந்து அவளைப் பாதுகாத்து விட்டாள் மேகலா...

"நீங்க விலகுங்கம்மா..." அவன் கொதித்துக் கொண்டிருந்தான்...

"முடியாது.. இனி ஒரு அடியை நீ அடிச்சாக்கூட இவ தாங்க மாட்டா..." மேகலா விலக மறுத்தாள்...

"போய் சேரட்டும்.." முரளி வெறுப்பை வார்த்தைகளில் உமிழ்ந்தான்...

"இதுக்காடா.. நீ இவ மேல ஆசைப்பட்டு கட்டிக்கிட்ட..?" மேகலாவின் குரலில் குற்றச்சாட்டு இருந்தது..

"ஆசை...! ச்சே... இவமேல நான் ஆசைப்பட்டேன்.. இவ என்னடான்னா.. நகைமேல ஆசைப்பட்டிருக்கா.. நம்ம வீட்டில இல்லாத நகைகளா..? இவ கேட்டா நான் வாங்கிக் கொடுக்க மாட்டேனா..? அதை விட்டுட்டு.. ஆசைப்பட்டு கேட்ட அக்காகிட்ட.. என்ன வார்த்தையைச் சொல்லியிருக்கா... அக்காவுக்கு பிடிச்ச நகையை எடுத்துக்க இவ எப்படி தடைசொல்லலாம்...?"

"பிடிச்சதையெல்லாம் உங்களுக்கு சொந்தமாக்கிக் கணும்னு நினைக்காதீங்க அண்ணி... உங்களாலே சொந்தமாக்கிக்க முடியாததும் உலகத்திலே இருக்கும்ன்னு உன் பெண்டாட்டி சொன்னாடா முரளி..."

பாலசரஸ்வதி நிறுத்தி வைத்திருந்த அழுகையை மீண்டும் ஆரம்பித்துவைக்க.. என்ன பெண் இவள் என்று மேகலாவுக்கு தலை வேதனையாக போய்விட்டது...

"ஏண்டா.. உன் பெண்டாட்டியை மட்டும் குத்தம் சொல்றியே... ஏன்.... உன் அக்காவுக்கு பிடிச்சிருந்தா உன்கிட்ட கேட்க வேண்டியதுதானே.. நீ உடனே வாங்கித் தரமாட்டியா..? அதை விட்டுட்டு.. இப்பத்தான் கல்யாணமாகி வந்திருக்கிற புதுப் பொண்ணுகிட்டப் போயி கேட்கலாமா..?"

"என்னம்மா நீங்க.. உங்க மருமக பக்கமே நியாயம் பேசறிங்க.. இது என் அப்பா வீட்டுச் சொத்துன்னு சொன்னேன்ம்மா... அதுக்கு இவ.. இப்ப இது என்னோட சொத்துன்னு சொல்றாம்மா..." பாலசரஸ்வதி எடுத்துக் கொடுத்தாள்...

"அப்படியாக்கா சொன்னா..?"

"ஆமாம்டா தம்பி..."

"நீங்க விலகுங்கம்மா சொல்றேன்... அப்ப சொத்தை உரிமை கொண்டாடத்தான் எனக்கு இவ கழுத்தை நீட்டினாளா...?"

ரௌத்திரம் கொண்ட முரளியுடன் மேகலா சரி மல்லுக்கு நின்றாள்...

நீர்போல குணம் கொண்டவனே..!
நெருப்பாக ஏன் மாறி நின்றாய்...?

"முரளி... உன் அப்பா அடிக்கடி ஒரு வார்த்தை சொல்லுவார்... உனக்கு அது மறந்து போச்சா..?"

தகப்பனாரைப் பற்றிய பேச்சில் முரளியின் வேகம் கொஞ்சம் தடைபட்டது...

"ஒவ்வொருத்தருக்கும் அவங்க பக்கம் ஒரு நியாயம் இருக்கும்ன்னு அடிக்கடி சொல்லுவார்.. நினைவிருக்கா..?"

நினைவிருந்தது.. மாணிக்கவாசகம் அந்த வார்த்தைகளை அடிக்கடி சொல்வார்தான்.. அவரின் நினைவில் முரளி உதடுகளைக் கடித்தான்...

"அதுபோல இவ பக்கமும் ஒரு நியாயமிருக்கலாம்டா..."

"ஊஹூம்... உங்களுக்குத் தெரிந்தது இவ்வளவு தான்.. நியாயத்துக்கும்... இவளுக்கும் ரொம்பத் தூரம்மா..."

"அப்படிச் சொல்லாதே.. விசயத்தை ஆறப்போடு.. நாளபின்னே இவகிட்ட என்ன ஏதுன்னு விசாரிப்போம்..."

"எனக்கு இப்பவே இதுக்கு ஒரு முடிவு தெரிஞ்சாகனும்..."

முரளியின் பிடிவாதக் குரலில் தளர்ந்து எழுந்து அமர்ந்தாள் ராதிகா... எழுந்து கொள்ள முடியாமல் அவள் கால்கள் தொய்ந்து விழ... மேகலா அவளைத் தாங்கிப் பிடித்தாள்...

"அப்படியே உட்காரும்மா..."

"இல்லைஅத்தை.. உங்க மகன் சொல்கிறதுதான் சரி.. இப்பவே இதுக்கு ஒரு முடிவு கட்டிடனும்..."

அடிவாங்கிய வேதனையுடன்... பலகீனமான மனதுடன் மெதுவாக மாடிப்படியேறியவளை கல்லைப் போன்ற கடினமான முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் பாலமுரளி...

தன் பிறந்த வீடு.. தனக்காக எதையும் செய்யும் என்ற புத்துணர்வுடன்... அதை புதிதாக வாழ வந்தவளும் இனி புரிந்து கொள்வாள் என்ற இறுமாப்புடன் பாலசரஸ்வதி வரப்போகும் நகைகளுக்காக காத்திருந்தாள்.

ராதிகா நகைப் பெட்டியுடன் திரும்பி வந்தாள்.. பரம்பரையாய் வந்த குடும்ப நகைகளையும்.. மேகலா புதிதாக வாங்கி... மருமகளுக்கென்று போட்டு விட்டிருந்த புதிய வைர நகைகளையும் பாலமுரளியின் முன் குவித்து வைத்தாள் ராதிகா..

"இதையெல்லாத்தையும் உங்க அக்காவுக்கே கொடுத்து விடுங்க... எனக்கு வேணாம்..."

மேகலாவின் புருங்கள் மேலேறின.. பரம்பரையாய்.. வந்த குடும்ப நகைகளின் மதிப்பு பலகோடிகளைத் தாண்டும்... அவற்றை வேண்டாமென்று ராதிகா சொல்கிறாளா...?

"முரளி... நான் இதைக் கேட்கலை... ஏற்கனவே நான் ஆசைப்பட்டுக் கேட்டப்ப.. பரம்பரை நகைகள்ன்னு அம்மா இதையெல்லாம் கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்க... நான் கேட்டது வேற ஒன்னு..." பாலசரஸ்வதி.. அதிலேயே நின்றாள்...

"உங்க அக்கா இந்த நகை செட்டைத்தான் கேட்டாங்க..."

அமைதியான முகத்துடன் ராதிகா நீட்டிய நகை செட்டைப் பார்த்த பால்முரளி... உடனே அதை இனம் கண்டு கொண்டான்...

'இதையா இவ கொடுக்க மாட்டேன்னு சொன்னா..'

அவன் விழிகள் மின்னின... அந்த நகைகளை வாங்கிய மாலைப் பொழுதும்.. அதன் பின்னால் பண்ணை

வீட்டில் நிகழ்ந்த நிகழ்வும் அவன் நெஞ்சின் அடி ஆழத்திலிருந்து எழும்பி.. மேலே வந்து மிதந்தன...

"இந்த நகை நீங்க என் கழுத்தில கட்டியிருக்க தாலிக்கு நிகரானது... இதை எப்படி நான் கொடுப்பேன்..? இந்த நகையை மட்டும்தான் எனக்கு உரிமையானதுன்னு சொன்னேன்.. இந்த நகை மேல மட்டும் தான் உங்க அக்காவுக்கு உரிமையில்லைன்னு சொன்னேன்.. இதைத்தான் என் சொத்துன்னு சொன்னேன்.. நீங்க சுயமாய் சம்பாதிச்ச பணத்திலே வாங்கிக் கொடுத்த நகைதானே இது..? இது எப்படி உங்க அக்காவின் அப்பா வீட்டுச் சொத்தாகும்..? உங்க அக்காவுக்கு பிடிச்சிருக்கு என்கிறதுக்காக இந்த நகையை நான் விட்டுக் கொடுத்திர முடியுமா..? அதனாலேதான்.. பிடிச்சதையெல்லாம் உங்களுக்கு சொந்தமாக்கிக்கனும்னு நினைக்காதீங்க.. உங்களாலே சொந்தமாக்கிக்க முடியாததும் இந்த உலகத்தில இருக்குன்னு உங்க அக்காகிட்டச் சொன்னேன்..."

நிற்க முடியாத அந்த நிலையிலும்.. சுவரில் சாய்ந்து நின்று கொண்டு.. உறுதியான குரலில் பேசினாள் ராதிகா.. முரளியின் முகத்திலிருந்த கடினம் மறைந்து விட்டது.. அவனுக்கு அவள் சொல்ல வருவது எதை என்பது தெளிவாக புரிந்து விட்டது...

அந்த நகையை அவன் வாங்கிக் கொடுத்தபோது.. அவன் அவள் கழுத்தில் தாலியைக் கட்டியிருக்கவில்லை.. ஆனால்.. ஒரு கணவனுக்கான உரிமையை அவள்மீது பதிவு செய்து விட்டிருந்தான்..

அவளைப் பொறுத்தவரை.. அந்த நகைதான் அவளுக்கான தாலி...! அதை எப்படி அவள் பாலசரஸ்வதியிடம் கொடுப்பாள்..?

ஒவ்வொருவருக்கும் அவர் தரப்பில் ஒரு நியாயம் கட்டாயம் இருக்குமென்று மாணிக்கவாசகம் சொன்னது எவ்வளவு ஆணித்தரமான உண்மை என்று அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது...

அவனுடைய கோபம் முற்றிலுமாக வடிந்துவிட்டது.. பாலசரஸ்வதியின் பக்கம் திரும்பினான்.. ராதிகாவின் மறுப்பு ஏதோ ஒரு வகையில் அவன் மனதை குளிர்விப்பதை அவன் உணர்ந்தான்...

"அக்கா.. குடும்ப நகைகள் மகளிடம் இருக்கக் கூடாதுன்னு சட்டமிருக்கா என்ன..? உனக்கு எந்த நகையைப் பிடிச்சிருந்தாலும் இதில இருந்து எடுத்துக்க.."

முரளியின் பேச்சில் தன் தோல்வியை உணர்ந்த சரஸ்வதிக்கு அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை...

"முரளி.. நான் கேட்டது அந்த நகையைடா..."

"அதுக்குத்தான் அவ இப்ப விளக்கம் சொன்னாளே.. நான்கூட நீ எந்த நகையை கேட்டேன்னு தெரியாம அவசரப்பட்டு கை நீட்டிட்டேன்.. உனக்கு அதுதான் வேணும்னா நாளைக்கு நீ ஊருக்கு கிளம்பும் போது.. அதைப்போல ஒரு வைர நகைசெட் உன் கையில இருக்கும் போதுமா..?"

போதாது என்று சொல்லி.. அதற்கு மேலும் வேலையாள்கள் முன்னிலையில் தந்நிலையை தாழ்த்திக் கொள்ள பாலசரஸ்வதி என்ன முட்டாளா...?

அவள் சம்மதமாய் தலையசைக்க.. பேச்சு வார்த்தை முடிந்தது என்ற பாவனையில் பாலமுரளி எழுந்து கொண்டான்...

"அம்மா மில்லில போட்டது போட்டபடி கிடக்க விட்டுவிட்டு வந்துட்டேன்... நான் திரும்பிப் போயாகனும்.."

எதுவுமே நடக்காததைப் போல செல்போனில் பேசியபடி அவன் சென்றுவிட.. மருமகளின் பக்கம் திரும்பினாள் மேகலா...

பாலமுரளியின் அடியைக்கூடத் தாங்கி விடலாம் போல ராதிகாவுக்கு இருந்தது... மேகலாவின் இரக்கமான பார்வையை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

அவள் பார்வையை விலக்கிக் கொண்டவளாய் அங்கிருந்து நகர்ந்தாள்... மேகலா அவளை அழைத்தாள்...

"ராதிகா... உன் நகைப் பெட்டியை எடுத்துக்கிட்டு போம்மா..."

"வேண்டாம் அத்தை.." உறுதியான குரலில் மறுத்துவிட்டாள் ராதிகா...

"என்ன பொண்ணும்மா நீ.. இதெல்லாம் உன் நகைகள்..."

"இந்தக் குடும்பத்தோட நகைகள் அத்தை..."

"இது உனக்குச் சொந்தமானதில்லையா..?"

மேகலாவின் கேள்வியில் விரக்தியுடன் சிரித்தாள் ராதிகா... அதை உணர்ந்து கொண்ட மேகலாவின் மனதில் வேதனை கவிழ்ந்தது...

"உங்க வாரிசுகளுக்குச் சொந்தமானது அத்தை.. அவங்களுக்கு கொடுங்க.. எனக்கு வேணாம்..."

"அவன் ஒரு வார்த்தை கோபத்தில் சொல்லிட்டா.. அதைப் பெரிசா எடுத்துக்கலாமா..? குடும்பம்ன்னு இருந்தா இந்த மாதிரி சண்டை சச்சரவு வர்றது சகஜம்தானேம்மா..."

"அவர் திட்டினது எனக்குப் பெரிசில்லை அத்தை.. அவர் அடிச்சது கூட ஒன்னுமேயில்லை.. அவர்தானே அடிச்சார்...? ஆனா.. நகைமேல ஆசைப் படுகிறவன்னு சொன்னாரே ஒரு வார்த்தை.. அதைத்தான் என்னால தாங்கிக்க முடியலை அத்தை..."

ராதிகாவின் கண்களில் இருந்து சாரைசாரையாய் கண்ணீர் பெருகியது.. வீட்டில் வாழவந்த மருமகளின் துக்கம் கண்டு மேகலாவுக்கு தாங்கவில்லை...

"அழாதேம்மா.. ஆம்பளைக்கு ஆயிரம் ஜோலி இருக்கும்... அதில வர்ற உளைச்சல்களையெல்லாம் அவங்க யாரிடம் காண்பிப்பாங்க..? பெண்டாட்டிகிட்டத் தானே காண்பிப்பாங்க...?"

இதைச் சொல்லும்போதே.. கேட்டுக் கொண்டிருக்கும் மருமகள் வயதில் மிகச் சிறிய பெண்.. ஒரு மாதத்துக்கு

முன்பு வரை கல்லூரிக்கு போய்க் கொண்டிருந்த கல்லூரி மாணவி என்ற நினைவு மேகலாவின் மனதில் உறுத்தியது..

பிடிவாதமாக நகைப் பெட்டியை வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டு... மாடிப்படிகளில் தளர்ந்த நடையுடன் ஏறினாள் ராதிகா...

முரளி பேசிய ஒவ்வொரு வார்த்தையும் நெருஞ்சி முள்களாய் அவள் மனதில் தைத்துக் கொண்டிருக்க.. அந்த வேதனை தாளாமல் அப்படியே கட்டிலில் சரிந்து கண்மூடிக் கொண்டாள்...

முரளி திரும்பிய போது.. இரவு வெகு நேரமாகியிருந்தது... அமைதியுடன் காணப்பட்ட வீட்டின் பிரவேசித்தவன்.. வழக்கமாக அவனுக்காக காத்திருக்கும் ராதிகாவிற்குப் பதில் மேகலா ஹாலில் அமர்ந்திருப்பதைக் கண்டான்... அவன் புருவங்கள் கோபத்துடன் உயர்ந்தன..

'ஆத்திரத்தில கை நீட்டிட்டா.. இவ எனக்காக காத்திருந்து டிபன் எடுத்து வைக்க மாட்டாளாமா..? இவ சாப்பிடாம காத்திருப்பான்னுதானே நானும் கொலைபட்டினியாய் வீடு வந்து சேருகிறேன்...?'

"அவ எங்கேம்மா..?"

"மாடியில..."

ஒற்றை வார்த்தையில் பதில் சொன்ன மேகலாவின் குரலில் குற்றச்சாட்டு இருந்தது.. அதைக் கவனிக்காமல் பாலசரஸ்வதியின் அறையைப் பார்த்தான் முரளி...

"அக்காவும்.. குழந்தைகளும் சாப்பிட்டாச்சா..?"

"ம்ம்ம்..."

"அக்கா தூங்கிருச்சா...?"

"தெரியலை..."

அப்போதும் கூட தாயின் குரல் வேறுபாட்டை அவன் உணரவில்லை...

"அக்கா.." என்று பாலசரஸ்வதியை தேடிச் சென்று விட்டான்...

என்னதான் அழகாக துவக்கம் அமைந்திருந்தாலும்.. கடைசியில் வெற்றி ராதிகாவின் பக்கம் போய் விட்டதே என்ற துயரத்துடன் படுத்திருந்த பாலசரஸ்வதி.. தம்பியின் குரலில் எழுந்து கதவைத் திறந்தாள்..

"இந்தாக்கா..."

பாலமுரளி நீட்டிய கையில் நகைபெட்டி இருந்தது..

"என்னதுடா..?" பாலசரஸ்வதியின் விழிகள் விரிந்தன...

"ம்ம்.. நீ கேட்ட நகை.. உன்தம்பி உனக்காக உடனே வாங்கிக்கிட்டு வந்திட்டான்.. போட்டு அழகு பார்த்துக்க..." பாலமுரளியின் பின்னால் நின்று கொண்டிருந்த மேகலா வெறுப்பைக் கக்கினாள்...

"பாருடா... அம்மா என்மேல கோபப் படறாங்க.." தம்பியிடம் சிணுங்கியபடி நகைப் பெட்டியை வாங்கித் திறந்து பார்த்தாள் பாலசரஸ்வதி...

அச்சு அசல்.. ராதிகாவிடம் இருந்த அதே நகையைப் போன்ற வடிவமைப்புடன் இருந்த நகையைக் கண்டதும் அவள் முகம் பூவாய் மலர்ந்து விட்டது...

'நாளைக்கு அவ கண்ணு முன்னாலே இந்த நகையை போட்டுக்கிட்டுத்தான் ஊருக்கு கிளம்பனும்.. பாருடி... நான் கேட்டவுடன் அதே மாதிரி நகையை என்தம்பி வாங்கிக் கொண்டு வந்து விட்டான்னு சொல்லாம சொல்லிக் காட்டனும்...'

தமக்கையின் முகத்தில் நிலவிய பெருமிதத்தில் முரளியின் மனம் நிறைந்தது.. மகளின் முகத்தில் தோன்றிய வெற்றிக்குறியீட்டில் மேகலாவின் மனம் நைந்தது...

"இப்போ உனக்கு சந்தோசம்தானே..?" கனிவுடன் கேட்டான் முரளி...

"ம்ம்.." குழந்தையாய் தலையாட்டினாள் சரஸ்வதி...

"தூங்கு.. காலையில ஊருக்கு கிளம்பனுமில்ல.."

அக்கா பிள்ளைகளுக்கு வாங்கி வந்திருந்த இனிப்பு வகைகளை அவளிடம் கொடுத்து விட்டு.. டைனிங் டேபிளுக்கு சென்றான் முரளி...

மௌனமாக மேகலா தட்டை எடுத்து வைத்து பரிமாற ஆரம்பிக்க.. மீண்டும் அவன் மனதில் சினம் மூண்டது...

"ஏன்.. மகாராணி.. மாடியை விட்டு கீழே இறங்கி வர மாட்டாளோ.. வயசான காலத்தில நீங்க கண்முழிச்சு

எனக்கு சாப்பாடு போடனும்னா இந்த வீட்டில அவ எதுக்காக இருக்கிறா..?"

"வேணும்னா.. அவளை அவ வீட்டுக்கு அடிச்சுத் துரத்தி விட்டுட்டு நீயும்.. உன் அக்காவும் நிம்மதியாய் இருங்க..."

தாயின் வெறுப்பான வார்த்தைகளில் நிமிர்ந்து அவள் முகம் பார்த்த முரளியின் புருவங்கள் சுருங்கின...

அப்போதுதான் மேகலா அவன் முகம் பார்க்காமல் பரிமாறிக் கொண்டிருப்பது அவன் கவனத்தில் பட்டது... அவள் முகம் கடினமாக இருந்தது...

"அம்மா..?"

"த்ச்சு.. சாப்பிடுடா..."

மேகலாவின் குரலில் அதிருப்தியும் கோபமும் விரவிக் கிடந்தன...

விடியலின் கீற்றுக்காக...
இருளினிலே தவமிருந்தேன்...

"என்னம்மா.. ?"

"ஏண்டா.. உன் அக்காவும் அக்கா பிள்ளைகளும் சாப்பிட்டாங்களான்னு கேட்டியே.. உன் பெண்டாட்டி சாப்பிட்டாளான்னு ஒரு வார்த்தை கேட்டியா... ?"

மேகலாவின் குரலில் கோபமிருந்தது.. பாலமுரளிக்கும் அந்த நினைவிருந்ததுதான்.. அவன் சாப்பிடாமல் அவள் சாப்பிட மாட்டாளே.. இன்று அவன் வரவுக்காக காத்திருக்காமல் மாடிக்குப் போய் விட்டாளே என்றுதான் அவன் கோபப்பட்டான்....

அவள் சாப்பிடாமல் போயிருப்பாள் என்று அவன் நினைத்தும் பார்க்கவில்லை...

'அவ இன்னும் சாப்பிடலையா.. ?'

சாப்பாட்டைத் தொடப் போனவனின் கை அப்படியே நின்று விட்டது.. அவன் எழுந்து மாடியை நோக்கிப் போனான்...

"எங்கேடா போற.. ?" மேகலா குரல் கொடுத்தாள்..

"அவ கன்னத்தில நாலு அப்பு அப்பி சாப்பிட இழுத்துட்டு வர்றேன்... கட்டிக்கிட்டவன் கோபத்தில கை நீட்டிட்டா.. இவ துக்கம் கொண்டாடிக்கிட்டு சாப்பிட வராம இருப்பாளா.. ? என்ன நினைச்சுக்கிட்டிருக்கா.. ? பெரிய இவன்னு நினைச்சுக்கிட்டிருக்காளா.. ?"

"போப்பா.. போயி.. அப்பு.. அப்புன்னு அப்பு.. அவ ஏற்கனவே காய்ச்சல் வந்து கண்முழிக்காம கிடக்கிறா.. நீ இன்னும் ஒரு அப்பு அப்பினாக் கூடப் போதும்.. போய் சேர்ந்துடுவா.. நீயும் கொள்ளி வைச்சுட்டு நிம்மதியாய் இருப்ப.. அதுக்குத்தானே அக்காவும்.. தம்பியும் ஆசைப் பட்டுக்கிட்டு கிடக்கறிங்க..."

மேகலாவின் கண்களில் நீர் தளும்பிவிட.. அவள் பேசிய வார்த்தைகளின் வீரியம் பொறுக்க மாட்டாதவனாக முரளி அதிர்ந்து விட்டான்...

"அம்மா..."

"காலாகாலத்தில கல்யாணம் பண்ணியிருந்தா.. இப்ப நீயும் ரெண்டு பிள்ளைகளுக்கு தகப்பனாயிருப்ப.. கல்யாணத்தை தள்ளிப் போட்டு.. தள்ளிப் போட்டு.. ஒருவழியாய் ஒருத்தி மேல ஆசைப்பட்டு தாலியைக் கட்டின... இனியாவது என் பேரன் பேத்திகளை கண்ணில பார்த்துப் புடலாம்ன்னு பார்த்தா அந்தக் கொடுப்பினையை எனக்கு நீ கொடுக்க மாட்ட போல இருக்கு..."

தாயின் வார்த்தைகளில் இருந்த உண்மையில் பாலமுரளி உதட்டைக் கடித்துக் கொண்டான்.. அவன்

ராதிகாவை தொட மறுத்து விலக்கி வைத்திருக்கும் நிலையில் தாய் கேட்கும் பேரன் பேத்தியை அவனால் எப்படிக் கொடுக்க முடியும்..?

"பெரிசா சொன்னியே.. அவ நகைமேல ஆசைப்படுகிறவன்னு.. உன் நகையே வேணாம்ன்னு நகைப் பெட்டியைத் தூக்கிக் கொடுத்திட்டா.. போ... போயி அதையும் எடுத்து உன் அக்கா கையில கொடுத்து அனுப்பு..."

"என்னம்மா.. நீங்க... அவளப் போலவே விவரமில்லாம பேசிக்கிட்டு இருக்கீங்க... இப்படி விசயம்ன்னு நான் கனவா கண்டேன்..? இவ சொல்லியிருக்கனுமா இல்லையா..?"

"அவ சொல்லாமலா நீ தெரிஞ்சுக்கிட்ட..?"

"அவ சொன்னதும்தான் நான் பேசாம வெளியே போயிட்டேனே..."

"அவ சொல்கிறதுக்கு முன்னாலேயே அவளை பேயடி அடிச்சு வைச்சியே.. அந்த அடியைத் தாங்க முடியாம அவளுக்கு ஜன்னியே வந்திருச்சு..."

"அம்மா..."

"ஆயிரம்தான் இருந்தாலும் உன் அக்காகாரியை நான் பெத்துத்தொலைச்சிருக்கேனே... அவளுக்கும்.. வீட்டில வேலை செய்கிறவங்களுக்கும் விவரம் தெரிஞ்சா.. அது பெரிசாகிடும்.. உன் அக்காவும் நிம்மதியா ஊருக்குப்

போயாகனும்.. வீட்டில வேலை செய்கிற வேலையாளுக... நம்ம வீட்டில பொறந்த பொண்ணை கொடுமைக்காரியாய் வெளியே பேசி வைச்சிரவும் கூடாது... அதனால மூடி மறைச்சுக்கிட்டு.. உள்ளுக்குள்ள துடிச்சுக்கிட்டு இருக்கேன்..."

அதற்கு மேல் அங்கே ஒருநொடி கூட நிற்காமல் மாடிப்படிகளில் புயல் வேகத்தில் தாவியேறினான் பாலமுரளி... அறைக் கதவைத் திறந்து உள்ளே சென்று பார்த்தவனுக்கு.. மனம் வலித்தது...

ஏதோ பிதற்றியபடி.. கட்டிலில் உடலை முறுக்கிக் கொண்டு நினைவில்லாமல் கிடந்தாள் ராதிகா.. அந்த நிலையிலும்.. அவள் கையில் இறுக்கிப் பிடித்திருந்த அந்த நகையைக் கண்டதும் பாலமுரளியின் மனதில் குற்ற உணர்வு ஏற்பட்டது...

"ராதிகா..."

அவளைத் தொட்டவன் அதிர்ந்தான்.. அவளது உடல் நெருப்பாக கொதித்துக் கொண்டிருந்தது...

'பாவி.. நான் பாவி...' அவன் மனம் குழுங்கியது...

மீண்டும் அவள் உடலை வளைத்து முறுக்க.. கட்டிலில் இருந்து கீழே விழப் போனாள்... முரளி அவளைத் தாங்கிப் பிடித்து கைகளில் பூமாலை போல ஏந்திக் கொண்டான்... படிகளில் விரைவாக இறங்கினான்...

நள்ளிரவைத் தொடும் அந்த நேரத்தில் அனைவரும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்க... அவனது கார்..

ராதிகாவையும்.. மேகலாவையும் கமந்தபடி மருத்துவ மனையை நோக்கிப் பறந்தது...

"எப்போதிருந்து இப்படி இருக்காங்க...?"

ஜன்னி கண்டிருந்த ராதிகாவை பரிசோதித்தபடி வினவினாள் டாக்டர் மாலதி...

"காலையிலே நல்லாத்தான் இருந்தா டாக்டர்..." சங்கடத்துடன் தாயைப் பார்த்தான் முரளி..

"சாயங்காலமா.. காய்ச்சல்ன்னு சொல்லி படுத்தா.. திடிர்ன்னு ஜன்னி கண்டிருச்சு...", மகனின் முகம் பார்க்காமல் டாக்டரின் கேள்விக்கு பதில் சொன்னாள் மேகலா...

"திடிர்ன்னு காய்ச்சலும்.. ஜன்னியும் வந்ததா..? ஆச்சரியமாய் இருக்கே..." ராதிகாவின் கன்னத்தில் படிந்திருந்த விரல் தடங்களைப் பார்த்தாள் மாலதி...

"இது என்ன..? கன்னத்தில அடிபட்டதைப் போல கன்றிச் சிவந்திருக்கு..."

பாலமுரளி.. ஜன்னல் வழி வெளியே தெரிந்த இருளை வெறிக்க... விதியை நொந்தபடி அதற்கும் பதில் சொன்னாள் மேகலா...

"காய்ச்சல் வேத்தில கட்டிலில் இருந்து கீழே புரண்டு விழுந்துட்டா டாக்டர்... அதில அடிபட்டிருக்கு..."

"ஓஹோ..." மாலதியின் குரலில நம்பாத தன்மை அப்படியே அப்பட்டமாய் ஒலித்தது...

இதைப் போல எத்தனை பொய்களைக் கேட்டிருப்பேன் என்ற தினுசில் ஒரு மார்க்கமாக பாலமுரளியை பார்த்து விட்டு.. ஊசி மருந்தை ராதிகாவின் கையில் செழுத்தினாள் அவள்...

"ஏதோ அதிர்ச்சியான நிகழ்ச்சி அவங்க மனசை பாதிச்சிருக்கு.. அதான் இந்த ஜன்னி... கட்டிலில் இருந்து கீழே விழுந்து அடிபட்டுட்டதா சொன்னீங்கள்ல.. அந்த வலிதாங்க முடியாம காய்ச்சல் வந்திருக்கு.. இந்த டேப்லெட்டை கன்டினியூஸா கொடுங்க... நாளைக்கு கூப்பிட்டுக்கிட்டு வாங்க.." அவள் மாத்திரைச் சீட்டை எழுதி நீட்டினாள்...

அர்த்த ராத்திரியில் வந்திருந்தாலும்.. பாலமுரளி அந்தப் பகுதியின் முக்கியஸ்தன்... அவன் மனைவிக்கு வைத்தியம் பார்க்க... நேரம் காலம் பார்க்க அவளால் முடியாது... அப்படிப்பட்ட பிரபலமான பணக்காரனிடம் அதற்கு மேல் கேள்வி கேட்கவும் அவளால் இயலாது..

"ஓகே சார்... பத்திரமாய் பார்த்துக்கங்க..."

"ஒன்னும் சீரியஸில்லையே..."

"அதெல்லாம் இல்லை... ஏதோ மன அதிர்ச்சி... சரியாப் போயிரும்..."

நடக்க முடியாமல் துவண்ட மனைவியை மீண்டும் கைகளில் ஏந்திக் கொண்டான் முரளி...

அவனின் அந்தச் செய்கையில்.. கண்டு கொள்ளாத நன் கணவனைப் பற்றிய நினைவு மாலதிக்குள் எழுந்தது..

'ம்ஹூம்.. எதுக்கும் கொடுத்து வைச்சிருக்கனும்...'

இப்படிப்பட்ட புருசனிடம் அடிவாங்கினால் கூடத் தகும் என்ற நினைவு வருவதை அவளால் தடுக்க முடியவில்லை...

பின்சீட்டில் மேகலாவின் மடிமீது படுத்திருந்த மனைவியை முன்பக்க கண்ணாடியின் வழி பார்த்தபடி காரை ஒட்டிய முரளிக்கு என்ன பேசுவதென்று பிடிபடவில்லை...

"அம்மா..." அவன் தயக்கத்துடன் ஆரம்பிக்க...

"ராத்திரி நேரம்.. குண்டும் குழியுமான பாதை... நீ ரோட்டைப் பார்த்து வண்டியை ஒட்டு..", என்று சொல்லி விட்டாள் மேகலா....

சப்தங்கள் அடங்கிய வீட்டில் போன சுவடு தெரியாமல் நுழைந்து.. மாடியேறியவனுக்கு... முதன் முதலாக மயங்கிய நிலையில் கிடந்த ராதிகாவை இது போல கைகளில் ஏந்திக் கொண்டு பண்ணை வீட்டின் மாடியேறிய நினைவு வந்து தொலைத்தது...

அன்றும் இப்படித்தான்... வாடிய பூமாலை போல கண் விழிக்காமல் கிடந்தாள் என்று நினைத்தபடி அவளைக் கட்டிலில் படுக்க வைத்தவன் கன்றிச் சிவந்திருந்த அவளின் கன்னத்தை தடவிக் கொடுத்தான்.

மருந்தின் வேகத்தில் அவனின் தொடுகையை உணராமல் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தவளின் முடி கோதிவிட்டான்...

'ஒரு போனை போட்டு விவரம் சொல்லாம... இப்படி அடி வாங்கிக்கிட்டு.. கண்ணைத் திறக்காம கிடக்கறேயேடி...'

இன்னும் அவள் மனதில் புருசன் என்ற இயல்பான உரிமைஉணர்வு எழவில்லையென்ற மனத்தாங்கல் அவனுக்குள் எழுந்தது...

'இவ புருசன்னு நினைச்சிருந்தா.. உடனே என்கிட்ட சொல்லியிருக்க மாட்டாளா..? அக்காவை விவரம் சொல்லவிட்டு தள்ளி நின்னு கையைப் பிசைஞ்சுக்கிட்டு நின்னிருப்பாளா..? நான் யாரு..? இவ புருசன் தானே.. என்னங்க.. இப்படியிப்படி.. உங்க அக்கா நீங்க ஆசையாய் முதன்முதலா வாங்கிக் கொடுத்த வைர நகைமேல கண் வைக்குதுங்கன்னு ஒருவார்த்தை முன்னாலேயே என் காதில் போட்டு வைச்சிருந்தா... நான் அக்கா கிட்ட பக்குவமாய் எடுத்துச் சொல்லியிருக்க மாட்டேனா..? எதையும் சொல்லாம... மூணாம் மனுஷியைப் போல தள்ளி நின்னுட்டு... அடிவாங்கிக்கிட்டாளே...'

அவளின் பஞ்சு போன்ற மேனியில் அவன் விரல்கள் படிந்தன...

'பட்டுப்போல இருந்து தொலைக்கிறா.. என் அடியை இவ தாங்குவாளா..? கொஞ்சமாவது அதை நினைச்சுப் பார்க்கிறாளா...?'

அவனது நியாயம் இப்படித்தான் இருந்து வைத்தது... அவளது பிஞ்சு போன்ற மேனி... அவனின் அடியைத்

தாங்காது என்று அவன் நினைத்துப் பார்க்க மாட்டானாய்... அவள்தான் நினைத்துப் பார்க்க வேண்டுமாம்...

அறைவாசலில் காலடியோசை கேட்டது... விலகி அமர்ந்தான்... மேகலா... கையில் பாத்திரங்களுடன் உள்ளே வந்தாள்... வயதான தாயை வேலை வாங்குகிறோமே என்றிருந்தது பாலமுரளிக்கு...

"என்னைக் கூப்பிட்டிருந்தா நான் வந்திருக்க மாட்டேனா.. இந்த வயசில ராத்தூக்கமில்லாம நீங்க மாடிக்கும் கீழேயுமா அலையனுமா..?" தாயைக் கடிந்து கொண்டான்...

"நீயும் சாப்பிடலை... ராதிகாவும் வெறும் வயிறாய் கிடக்கிறா... அவ மாத்திரை சாப்பிட்டாகனுமே... இந்த நேரத்தில கீழே லைட்டு எரிஞ்சா.. யார் கண்ணிலயாவது பட்டுத் தொலைக்கும்.. அதான்... நானே மாடிக்கு கொண்டு வந்திட்டேன்..."

மேகலா... கூடான கஞ்சியை தம்ளரில் ஊற்றி மகனிடம் நீட்டினாள்... அவன் ராதிகாவைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டு சிறுகுழந்தைக்கு புகட்டுவதைப் போல கொஞ்சம்.. கொஞ்சமாக அவளுக்கு புகட்டினான்...

அவள் குடித்து முடிந்ததும்.. மாத்திரையை விழுங்க வைத்தான்.. அவளை படுக்கையில் படுக்க வைத்து.. சீராக போர்த்தி விட்டு... இரண்டு இட்லிகளைப் பிட்டு வாய்க்குள் தள்ளினான்...

"இனி நான் பார்த்துக்கறேன்... நீங்க போய் படுங்கம்மா..."

"பத்திரம்டா முரளி..."

ஒருமுறைக்கு பலமுறை எச்சரித்து விட்டு மேகலா படியிறங்கிப் போனாள்... தாயின் கனிவான உதவியில் அவன் மனம் நெகிழ்ந்தது... அறைக் கதவைத் தாழிட்டு விட்டு... கட்டிலை நெருங்கினான்... கட்டிலின் மீது கிடந்த அந்த வைர நகையை எடுத்துக் கையில் வைத்துப் பார்த்தான்... ஏதோ தோன்ற.. அதை ராதிகாவின் கழுத்தில் அணிவித்து விட்டு அருகே படுத்தான்... பாதி உறக்கத்தில் அவள் புலம்பி விழிக்க... அவளை அணைத்துக் கொண்டு நெருங்கிப் படுத்தான்.. அவனது நெருக்கமான அணைப்பில் அமைதி கொண்டவளாக அவனது கைகளுக்குள் அடங்கி அவன் தோளில் முகம் புதைத்து அவள் தூங்கி விட்டாள்...

பாலமுரளிக்குள் இதமான உணர்வலைகள் எழும்ப.. அவள் நெற்யியை வருடி விட்டபடி அவனும் தூங்கி விட்டான்...

காலையில் கண் விழித்தபோது அவன் முகத்துக்கு வெகு அருகாமையிலிருந்த அவளின் முகம் கண்டவனுக்கு அவளை முத்தமிட வேண்டும் போலத் தோன்றியது.. அறைக்கதவு தட்டப்பட்டது...

அவள் நெற்றி மீது கை வைத்துப் பார்த்தான்.. காய்ச்சல் குறைந்திருந்தது... மனது கொஞ்சம் லேசானதாக மாற... எழுந்து சென்று கதவைத் திறந்தான்.. மீனாட்சி காபித் தம்ளர்களுடன் நின்றிருந்தாள்...

"அம்மா எங்கேங்கய்யா..."

அவள் விழிகள் பாலமுரளியின் முதுகிற்குப் பின்னால் ராதிகா தென்படுகிறாளா என்று துழாவின...

"அவ தூங்குறா..." பாலமுரளி தம்ளர்களை வாங்கிக் கொண்டான்...

அந்தச் செய்கையில் மீனாட்சி வியந்து போனாள்...

நின்று பேச நேரமில்லாத அவளுடைய முதலாளி தன் பெண்டாட்டிக்காக காபி கொண்டு போகிறானா...?

பாலமுரளி அப்படியெல்லாம் செய்து பழகியவனில்லை... மேகலாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது கூட அவளைக் கவனிக்க நர்ஸைத்தான் அமர்த்தியிருந்தான். தன்மையாக பேசுவானே தவிர... ஒரு தம்ளர் தண்ணீர்கூட கொண்டு போய் கொடுத்ததில்லை...

அவன் கம்பீரமானவன்... இதுபோன்ற சின்னச் சின்ன வேலைகளைக் கூடச் செய்து பழக்கமில்லாதவன்.

அப்படிப்பட்டவன் காபிதம்ளர்களை வாங்கிக் கொண்டதும் அந்தச் செய்தியை ஒலிபரப்பத் துடித்தாள் மீனாட்சி...

அவளும்தான் என்ன செய்வாள்..? இதை உடனடியாக காவேரியிடம் பகிர்ந்து கொள்ளாவிட்டால் அவள் தலை வெடித்துப் போய் விடாதா...?

அவள் படிகளில் உருண்டோட.. எதற்காக இப்படி ஓடி வைக்கிறாள் என்று புரியாமல் பார்த்தபடி ராதிகாவிடம் போனான் முரளி...

"ராது..."

அவனது மென்மையான அழைப்பில் கண்திறந்த ராதிகா... தன் காதுகளை நம்ப முடியாதவளாக அவனைப் பார்த்தாள்...

'ராது என்றா கூப்பிட்டான்...?'

இப்போதெல்லாம் அவன் அவளை ராதிகா என்று தான் கூப்பிடுகிறான்.. ராது என்ற அழைப்பைக் கேட்டு எத்தனை நாளாகிவிட்டது என்ற தவிப்புடன் அவன் முகத்தைப் பார்த்தாள் ராதிகா...

உன் ஒரவிழிப் பார்வையிலே...
ஓராயிரம் கதைகள் சொன்னாய்...

கண்ணிமைக்காமல் அவன் முகத்தைப் பார்த்த அவள் பார்வையில் எதைக் கண்டானோ... முரளியின் முகத்தில் இதம் பரவியது.. அவனையே அள்ளிப் பருகுவதைப் போல பார்த்துக் கொண்டிருந்தவளின் கண்களில் தெரிந்த காதல் அவனுக்கு ஆச்சரியத்தையூட்டியது...

"என்னடி இப்படிப் பார்க்கிற...?"

அவளது கலைந்திருந்த முடியை விலக்கி விட்டபடி மெதுவான குரலில் அவன் கேட்டான்...

'ஒன்றுமில்லை' என்று சொல்லும் விதமாக லேசாக தலையை அசைத்த ராதிகா அயர்வுடன் கண்களை மூடிக் கொண்டாள்...

"காபி சாப்பிடு ராது... அப்புறமாய் தூங்கலாம்..." பாலமுரளியின் கை அவளது நெற்றியின் மீது படிந்து வருடிக் கொடுத்தது...

அந்தத் தொடுதலில் இமைதிறந்து விழிவிரிய அவனைப் பார்த்தவளின் உதடுகள் துடித்தன... மிக நெருக்கத்தில் அமர்ந்திருந்த அவன் முகத்தில் இதுவரை அவள் பார்த்தறியாத கனிவும்.. பிரியமும் நிரம்பியிருந்தன..

ராதிகா புரண்டு படுத்து.. அவன் மடியில் முகம் புதைத்தாள்.. அவளின் அந்தச் செய்கையை அவனால் நம்பவே முடியவில்லை... அவனின் இடுப்பைச் சுற்றி வளைந்திருந்த அவளது கரத்தில் விரவியிருந்த நடுக்கத்தை அவனால் உணர முடிந்தது.. என்னவோ... விலகி ஓடுகிறவனை இழுத்துப் பிடித்து தக்க வைத்துக் கொள்ள பதற்றம் காட்டுவதைப் போல இருந்தது அவளின் அந்தச் செய்கை...

அவள் பயந்து போயிருப்பதை பாலமுரளியால் புரிந்து கொள்ள முடிந்தது.. அவனின் ரௌத்திரத்தில் அவள் நடுங்கிப் போயிருப்பதை உணர்ந்து கொண்டவனுக்கு அவள்மீது இரக்கம் பிறந்தது...

'ஏன் இப்படி பயப்படுறா...?' தனக்குள் கேட்டுக் கொண்டான் முரளி...

'இது ஏழேழு ஜென்மத்துக்கான பந்தம்ன்னு இவளுக்குத் தெரியாதா..? அடித்தாலும்.. உதைத்தாலும் நான் இவ புருசன்தானே... இவ என் பெண்டாட்டிதானே.. எது மாறிப் போயிரும்ன்னு இவ இந்தளவுக்கு பயப்படறா..?'

"ராதிகா..." அவளது முடிகோதி அழைத்தான் பாலமுரளி...

"ம்ம்ம்..." அவள் முணுமுணுத்தாள்...

"காபியைக் குடிடி..."

"ம்ம்ம்..."

"சூடு ஆறுகிறதுக்கு முன்னாலே குடிச்சிரு ராது.. உன் உடம்புக்கு சரியில்லை..."

அவனது வார்த்தைகளில் எதையோ புரிந்து கொண்டவளாக அவன் முகத்தையே பார்த்தாள் ராதிகா.. விழிகளில் கண்ணீர் திரையிட்டு அவள் பார்வையை மறைத்தது.. அவளது கண்களின் ஓரமாக வழிந்த கண்ணீர் அவன் மடியை நனைத்தது...

"அடச்சீ... கோபத்தில நாலு அப்பு.. அப்பிட்டேன்.. அதுக்குப்போயி கண் கலங்கலாமா..? ஏண்டி.. உன்னை அடிக்க எனக்கு உரிமையில்லையா...?"

'கொல்லக் கூட உரிமையிருக்கு...'

நினைத்ததைச் சொல்லாமல் சோகையாக சிரித்தாள் ராதிகா... அவளின் துயரம் நிரம்பிய முகத்தில்

மின்னல் கீற்றாக ஒளிர்ந்த அந்தச் சிரிப்பை கண்டவனுக்கு மனம் ரணமானது...

முதன்முதலில் அவளைப் பார்த்தபோது அவனை வசீகரித்த அந்த பிரகாசமான நிலவுமுகத்தை மீண்டும் பார்க்க முடியுமா என்று ஏங்கிப்போனான் பாலமுரளி...

'எப்படியிருந்தவ இவ...!'

"எழுந்திருடி..."

இதமான அவனது வற்புறுத்தலில் எழுந்து கொண்ட ராதிகா கட்டிலை விட்டு இறங்கப் போனாள்... அவனது புருவங்கள் உயர்ந்தன...

"எங்கேடி போற...?"

"காபி கொண்டு வர..."

அந்த நிலையிலும்... அவளின் கடமையுணர்ச்சியில் அவனுக்கு பெருமிதம் உண்டானது...

"இப்போச் சொல்லு... நேத்துச் சாயங்காலத்தில இருந்து நான் என்ன ஆனேன்.. எப்படிச் சாப்பிட்டேன்னு உனக்குக் கவலையில்ல... இப்ப காபி கொண்டு வரப் போகிறாளாம்... காபி.. அதெல்லாம் காபி வந்தாச்சு.. இந்தாக்குடி..."

கட்டிலின் பக்கத்திலிருந்த டீப்பாயிலிருந்து தம்ளரை எடுத்து அவன் நீட்ட.. ராதிகாவின் விழிகள் மீண்டும் விரிந்தன...

'இவனா எனக்கு சேவகம் பண்ணுகிறான்...?'

இதை ஏற்கனவே பண்ணை வீட்டில் அவளுக்கு செய்தவன்தான் என்ற நினைவில் அவள் வெட்கப் புன்முறுவலுடன் காபியை வாங்கிக் கொண்டாள்...

"பார்த்து.. கெட்டியாய் பிடிச்சுக்க... உன்னாலே முடியலைன்னா... இப்படிக் கொடு..." அவன் கவலைப்பட்டான்...

'எதுக்கு இப்படிச் சொல்கிறான்..?' அவளுக்கு புரியவில்லை...

'முடியலைன்னா என்ன செய்வானாம்.. பச்சைப் புள்ளைக்கு புகட்டி விடுவதைப் போல எனக்கும் புகட்டி விடுவானா...?'

அவளது நினைவில் ஓட்டத்தை அறிந்து கொண்டவனைப் போல கூர்மையான பார்வையுடன்...

"நேத்து ராத்திரி.. அதைத்தான் செஞ்சேண்டி..." என்றான் முரளி.. அவள் தூக்கிவாரிப் போட்டவளாக அவனைப் பார்த்தாள்...

'இவன் என்ன சொல்கிறான்...?'

"ம்ஹீம்.. இன்னைக்கு கண்முழிச்சதில இருந்து இப்படித்தான் மொச்சைக் கொட்டை கண்ணை முழித்து முழித்து பார்த்து வைக்கிற... நேத்து ராத்திரி கண் முழிக்காம கிடந்த... ஆஸ்பத்திரிக்கு அம்மாவும்... நானுமா கூப்பிட்டுக்கிட்டு போய் வந்தோம்.. உன்னால கண் முழிச்சு கஞ்சி குடிக்க முடியலை.. நான்தான் உன்னை தோளில் சாய்ச்சு புகட்டி விட்டேன்..."

அவன் இயல்பாக பேசிக் கொண்டே போக.. ராதிகா தன் காதுகளை நம்ப முடியாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்...

"எதுக்கு அப்படிப் பார்க்கிறவ..?" காரணம் உறிஞ்சியபடி அவன் கேட்டான்...

அவள் மனம் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது...

"எனக்கு நினைவேயில்ல..."

"நினைவில்லாமத்தான் கிடந்த..."

"அப்புறம் எப்படி ஹாஸ்பிடலுக்கு வந்தேன்...?"

"அது பெரிய விசயம் பாரு..? ஏண்டி இதுக்கு முன்னாலே கூட ஒருதடவை கண்முழிக்காம மயங்கி போனவளா என் காருக்குள்ள கிடந்த... அப்ப நான் என்ன செஞ்சேன்...?"

அவன் புருவங்களை உயர்த்த... அவளின் கன்னங்களில் செம்மை படர்ந்தது... விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள்... அவன் விழிகளில் உல்லாசம் நிரம்பியது...

"அப்பவும் உன்னைக் கையிலதான் தூக்கிக்கிட்டு போனேன்.. நேத்தும் அதைப் போலதான் கையில சுமந்தேன்... சும்மா சொல்லக் கூடாதுடி... கொஞ்சம் கூட கனக்கவேயில்ல... அப்படியே பஞ்சு பொதியைத் தூக்கிக்கிட்டதைப் போல... மெத்து.. மெத்துன்னு கிடந்த.."

ராதிகாவின் முகச் சிகப்பு அதிகரிக்க... அவள்

அவள் வேண்டாத பெண்டாட்டி என்ற உணர்வே அவனுக்குள் ஏற்படவில்லை... என்னவோ.. திருமணமான நாள் முதலாய் அவளோடு பின்னிப் பிணைந்து குடும்பம் நடத்துகிறவனைப் போல... ஒரு மார்க்கமாக அவளை பார்த்து வைத்தான் பாலமுரளி..

ராதிகாவுக்கு எழுந்து கொள்ளவே மனமில்லை... விட்டால் அவன் விலகிச் சென்று விடுவானோ என்ற பயத்துடன் காலி தம்ளரை வைத்துவிட்டு மீண்டும் அவன் மடியில் சரிந்தாள்...

பாலமுரளியும் அதைத்தான் விரும்பினான்... முதல்நாள் இரவிலிருந்து அவளது நெருக்கம் தந்த இதத்தில் மூழ்கிக் கொண்டிருந்தவனுக்கு... அந்த இதம் விலகுவதில் மனமில்லை...

அவன் மடிமீது உரிமையுடன் முகம் புதைத்திருந்தவனின் கூந்தலில் முகம் புதைக்க வேண்டும் போல அவனுக்கு இருந்தது... ஏதோ ஒன்று தடுக்க.. அவளைத் தொட்டு இறுக்கிக் கொள்ளாமலும்... அதேசமயம் அவளை விலக்கி விட்டு விலகிச் செல்லாமலும் அப்படியே அவன் அமர்ந்திருந்தான்...

எவ்வளவு நேமாய் அவர்கள் அப்படியிருந்தார்களோ... அவர்களுக்கே அது தெரியவில்லை... நேரம் ஊர்ந்து நகர்ந்து கொண்டிருக்க... அவன் மடியிலிருந்து முகம் விலக்காமல் அவளும்... அவளை விலக்காமல் அவனும்.. அப்படியே சிலை போல உறைந்திருந்தார்கள்..

அந்த மோனநிலையைக் கலைப்பதைப் போல் செல்போன் அலறியது... அப்போதும் ராதிகா விலகவில்லை... முரளி அவளை விலக்கவில்லை... கைநீட்டி செல்போனை எடுத்து காதுக்கு கொடுத்தவன்...

"ம்ம்ம்... இதோ... கொஞ்சநேரத்தில் கீழே இறங்கி வர்றேன்... நீ ரெடியாய் இரு..." என்றான்...

அவன் பேச்சிலிருந்து அவன் கிளம்பப் போவதை அறிந்து கொண்டவளாய் ராதிகா பெருமூச்சு விட்டாள்... அதை உணர்ந்தவனுக்கும் விலக நேர்வதில் விருப்பமில்லைதான்... ஆனாலும் என்ன செய்வது..? அவன் கிளம்பியாக வேண்டுமே என்று நினைத்தவனுக்கும் பெருமூச்சு வந்தது...

எப்படி அவளை விலக்குவது என்று சங்கடப்பட்டுக் கொண்டிருந்த போது... அவளே விலகி அமர்ந்தாள்...

"ஒன்னுமில்லை... அக்காதான் போனில பேசச்ச... ஊருக்கு கிளம்பனுமாம்..."

என்னவோ தவறை இழைத்து விட்டதைப் போன்ற குற்ற உணர்வுடன் அதைச் சொன்னான் முரளி...

"ம்ம்ம்..."

அவள் தலையசைத்தாள்.. பாலமுரளி எழுந்து கொள்ளாமல் அவள் முகத்தை ஊன்றிப் பார்த்தான்... அவன் கையில் தடங்களின் கன்றல் மாறாமல் அப்படியே இருந்தது...

"ஸாரிடி..." அவனது குற்ற உணர்வு அதிகமானது...

"பரவாயில்ல...", ராதிகா நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்...

"தகப்பனில்லாத பொண்ணுடி... பிறந்த வீட்டிலே தனக்கு பாசம் கிடைக்காம போயிருமோன்னு அது பயப்படுது... அதனாலேதான் அதோட சின்ன மாமியா பொண்ண நான் கட்டனும்னு ஒத்தக் காலில மல்லுக்கு நின்னுச்சு... நான் உன்னைக் கட்டிக்கிட்டேன்.. அதோட பயத்தை நீ உண்மையாக்கிறக் கூடாதுங்கிற கொதிப்பில தான் கையை நீட்டிட்டேன்..."

நாணயத்திற்கு இரு பக்கங்கள் உண்டு என்பது இதுதான் போல என்று நினைத்துக் கொண்டாள்...

இதைத்தான் முதல் நாளில் அவளது மாமியாரும் சொன்னாள் என்பதும் அவளின் நினைவுக்கு வந்தது...

'ஒவ்வொருத்தருக்கும் அவங்க பக்கத்தில நியாயம் இருக்கும்...'

எத்தனை சத்தியமான வார்த்தைகள் இவை...!

இதைச் சொன்ன மாமனாரின் மீது அவளுக்குள் மரியாதை வந்தது...

"அதுக்காக உன்னை அப்படியே விட்டுட்டேன்னு அர்த்தமில்லடி... நீ ஒருவார்த்தை சொல்லியிருந்தா போதும்.. நான் உன்னை ஏன்னே கேட்டிருக்க மாட்டேன்.. உன் கையிலதான் போனிருக்கில்ல... நம்ம ரூமுக்குள்ளே

உட்கார்ந்து இப்படியிப்படின்னு நீ எனக்குப் போய் பண்ணிச் சொல்லியிருக்கலாமில்ல... ?"

அவனது கேள்வியில் இருந்த நியாயத்தில் உதட்டைக் கடித்து மௌனித்தாள் ராதிகா...

சொல்லியிருக்கலாம்தான்.. ஆனால்.. எந்த தைரியத்தில் அவள் அதைச் சொல்லுவாள்..? அவள் சொல்வதை காது கொடுத்து அவன் கேட்பானா என்ற சந்தேகம் அவளுக்குள் துளிர்த்திருந்ததே...

அவனும் அதையேதான் சொன்னான்...

"உனக்குச் சந்தேகம்டி... என்னடா... நம்ம கூட குடும்பம் நடத்த மாட்டேன்னு சொன்னவன்தானே இவன். நாம பேசறதை காது கொடுத்துக் கேட்பானான்னு நினைச்சிட்டேயில்ல..? உன்கூட குடும்பம் நடத்த மாட்டேன்னுதான் சொன்னேன்... ஆனா.. என் வாழ்க்கை உன்னோட தானேடி... நான் உன் புருசன்டி... உனக்கு மட்டும்தான் புருசன்... அந்த தைரியம் உன் மனசில் இல்லாம ஏன் போனது..?"

ராதிகாவின் விழிகளில் கண்ணீர் முத்துக்கள் தோன்றி கன்னத்தில் உருண்டோட... அதை இரக்கத்துடன் பார்த்தான் முரளி...

"அழாதே... உன்னை அடிச்சதில நீ பட்ட வேதனையைவிட நான் அதிகமா வேதனைப் பட்டேன்... உனக்கு அது தெரியாது.. நீதான் எதையும் தெரிஞ்சுக்காம வாழ்க்கை நடத்துறவளாச்சே..."

'அடப்போடா...' என்றிருந்தது ராதிகாவிற்கு...

அவள் எதையும் அறியாமல் வாழ்க்கை நடத்துகிறாளாம்... அவன் சொல்கிறான்...

அவனை மட்டுமே நினைத்து... அவனால் மட்டுமே தொடப்பட்டு... அவனோடு கலந்து.. அவன் கரம் பிடிக்க போராடி... அவன் மனைவியென்று தாலி வாங்கிக் கொண்டவளைத் தள்ளி வைத்து விட்டு... வெட்டியாய் வியாக்கினம் பேசிக் கொண்டு நின்றிருக்கிறான்...

அவன் மீதான அவளின் காதலை என்றாவது ஓர் நாளில் அவன் அறிவானா..?

"என் மனது ஒன்றுதான்...
உன்மீது ஞாபகம்...
வான் நிலவு ஒன்றுதான்...
வான் மீது சத்தியம்..."

தோட்டக்காரனின் எவ்.எம் ரேடியோவில் இருந்து ஒலிபரப்பான பாடல் காற்றோடு கலந்து வந்து ஜன்னல் வழியாக அவர்கள் காதினுள் நுழைய... அந்த அதிகாலை அழகானதாக விடிந்திருப்பதாக உணர்ந்தாள் ராதிகா...

"உன் பக்கமான நியாயத்தை தயங்காம நீ எனக்குச் சொல்லலாம்... நான் என் அம்மாவுக்கு மகன்தான்.. அக்காவுக்கு தம்பிதான்... உனக்கு புருசன்..! அதை மறந்து விடாதே..."

'மறப்பேனா..? அதுக்காகத்தானே போராடினேன்..'

"அவங்களைக் காப்பாத்துற கடமை எனக்கு இருக்கு... அதில பங்கு போட்டுக்கற கடமை உனக்கு இருக்கு.. நீ என்னில் பாதிடி.... நீவேற... நான் வேறன்னு இல்லை... இதை புரிஞ்சு நடந்துக்க..."

'சொல்லிட்டேல்ல... இனிப்பாரு... தூள் கிளப்பிர மாட்டேன்...'

"உண்மையைச் சொல்லப் போனா... இந்த நகைக்காக... அக்காவை அந்த அளவுக்கு நீ எதிர்த்து நின்னதில எனக்கு அம்புட்டு சந்தோசம்டி... ஆயுசு முழுக்க... இந்த சந்தோசம் எனக்குள் இருக்கும்..."

அவன் குளிக்கப் போன பின்னாலும்.. நெடுநேரம் அசைவில்லாமல் அமர்ந்திருந்தாள் ராதிகா...

ஊரெல்லாம் உறங்கையிலே...
உன்நினைவில் விழித்திருந்தேன்...

பாலசரஸ்வதி அந்த வைர நகை செட்டை கையில் எடுத்துப் பார்த்தாள்... அவள் முகத்தில் கர்வம் பொங்கி வழிந்தது... முதல்நாள் மாலையில் தான் அவள் கேட்டாள்... அவன்று இரவே அவளுடைய தம்பி... அவளுக்காக அந்த நகையை வாங்கிக் கொண்டுவந்து கொடுத்து விட்டான்...

அவற்றை அணிந்து கொண்டு கண்ணாடியில் அழகு பார்த்தாள்...

'இப்ப வருவாள்ல... வந்து பார்க்கட்டும்... அந்த ஒற்றை நகைக்காக ஏன் அத்தனை அடிகளையும் வாங்கினோம்ன்னு நொந்து போயிருவா... என்னவோ... அந்த டிசைனை வாங்கவே முடியாதுங்கிறதைப் போலத்தானே அலட்டிக்கிட்டா... இந்தா.. வாங்கியாச்சு... போட்டாச்சு... இப்ப என்ன பண்ணுவா...'

ராதிகாவின் முன்னால் அந்த நகைகளுடன் நின்று அவள் முகம் மாறி இருள்வதைப் பார்த்து விட வேண்டு மென்று ஆசைப்பட்டாள் பாலசரஸ்வதி...

'இன்னும் என்ன பண்ணித் தொலைக்கிறா...'

அவள் விழிகள் எதிர்பார்ப்புடன் மாடிப் படிகளின் மீது படிந்து மீண்டன...

"ஏம்மா... உங்க மருமகளுக்கு இன்னும் விடியலையா..?"

"எதுக்கும்மா கேட்கிற...? நேத்து போட்ட சண்டை உனக்குப் போதலையா..? உன் தம்பியிடம் மூட்டிவிட ஏதாவது மிச்சம் மீதி வைச்சிருக்கியா...?"

எச்சரிகையுடன் மகளைப் பார்வையிட்ட மேகலாவின் மீது பாலசரஸ்வதியின் மனதிற்குள் எரிச்சல் பொங்கியது...

'ம்ஹூம்... இப்படிப்பட்ட அம்மாவின் வயிற்றில் பிறந்த நான் புண்ணியம்தான் பண்ணியிருக்கனும்... எனக்குன்னு வந்து வாய்ச்சிருக்காங்களே..!'

"நீங்க ஒரு ஆளு போதும்மா... தம்பி பெண்டாட்டியைப் பத்தி தம்பிகிட்ட போட்டுக் கொடுக்கிறதுதான் என் பிழைப்புன்னு பட்டம் கட்டறதுக்கு... என்ன வரம் வாங்கி வந்தேனோ..? கடவுளே..."

"காலங்கார்த்தாலே கடவுளைத் தொந்தரவு பண்ணாதே... சின்னப்புள்ளத்தனமா நீ பண்ணி வைக்கிற வேலைகளுக்கு நீ கூப்பிட்ட உடனே... இதோன்னு கடவுள் ஓடி வந்திருவாராக்கும்..."

எப்போதும் கடிந்து பேசாத தாய்... காலையிலிருந்து இப்படித்தாளித்துக் கொண்டிருக்கிறாளே என்றிருந்தது பாலசரஸ்வதிக்கு...

'மகராசி... என்னையும்.. என் தம்பியையும் தான் பிரிச்சு வைக்க வந்திருக்கான்னு பார்த்தா... என்னையும்.. என் அம்மாவையுமில்ல பிரிச்சு வைச்சிட்டா...!'

அவளுக்கு ஆற்றாமையாக இருந்தது...

"இப்ப என்ன சொல்லிட்டேன்னு இந்தக் காய்ச்ச காய்ச்சறிங்க...?"

"இப்ப நீ எதுக்காக அவளைத் தேடற...?"

"இதென்னம்மா வம்பாப் போச்சு... வீட்டுக்கு வந்த மருமக விடிஞ்சு இத்தனை நேரமாகியும் மாடியை

விட்டு கீழே இறங்கி வரலைன்னா அதை ஏன்னு கேட்க மாட்டாங்களா..?"

"அவ வந்து எதைச் செய்யனும்..? உனக்குத்தான் அவளைக் கண்டாலே ஆக மாட்டேங்குதே.. எதுக்கு உன் கண்ணில பட்டு... உன் ரத்த கொதிப்பை அதிகமாக்கனும்னு மாடியிலேயே இருக்கிறா போல... உனக்கு அதுவும் பொறுக்கலையா...?"

"அம்மா... நானும் பார்க்கிறேன்... என்னவோ எதிரிக்காரியிடம் பேசறதைப் போலவே என்னிடம் பேசறிங்க... அப்படி நான் என்ன தப்பைம்மா பண்ணிட்டேன்...?"

"நீ எதுவும் செய்யலை தாயி... சந்தோசமா ஊருக்கு கிளம்பு.."

"ஒரு நகைமேல ஆசைப்பட்டதுக்கு இம்புட்டு கோபமாம்மா..?"

"நீ ஒரு நகைமேல என்ன.. நகைக்கடைமேலேயே ஆசைப்பட்டிருந்தாலும் நான் அதைப்பத்தி கவலைப் பட்டிருக்க மாட்டேன்... உன் அக்காகாரி கேட்கிறதை வாங்கிக் கொடுத்து அனுப்பி வைடா மகனேன்னு உன் தம்பியிடம் சொல்லியிருப்பேன்... நீ அதைச் செய்யலையே.. உன் தம்பி பெண்டாட்டியின் நகைமேலயில்ல ஆசைப்பட்ட..?"

"அது தப்பாம்மா...?"

"பின்னே..? இல்லையா...? உன் புருசன் உனக்கு ஆசையாய் நகை வாங்கிக் கொடுத்து.. அதை உன்

நாத்தனார் ஆசைப்பட்டா.. நீ உடனே கழட்டிக் கொடுத்துட்டுத்தான் மறுவேலை பார்ப்பியா..?"

"அது.. வந்து.. வந்து..."

பதில் சொல்ல முடியாமல் பாலசரஸ்வதி திகைத்து நின்றாள்...

அவளுடைய நகைகளின் மீது அவளின் நாத்தனார் ஆசைப்பட்ட தேயில்லை என்ற உண்மை அவளை உறுத்தியது...

மேகலா மகளை நிமிர்ந்து பார்த்தாள்.. அவளது கூரிய பார்வையில் பாலசரஸ்வதியின் வாயடைத்துப் போனது...

"நீ யாரு சரசு...? உன் அப்பா உன்னை எப்படி வளர்த்தாரு..? அந்த நினைப்பு உனக்கு இருக்கா... இல்லையா..? இந்த ஊருக்கே நியாயம் சொன்ன மகராசன் பெத்த பொண்ணாநீ...? உன் மனசில நியாயம் செத்துப் போச்சா..? அவரிருந்தா நீயிப்படிப் பேசியிருப்பியா..?"

"அம்மா...!" பாலசரஸ்வதியின் கண்கள் கலங்கி விட்டன...

"ராதிகா பாவம்.. சின்னப் பொண்ணு... அவ தப்பே செஞ்சிருந்தாலும் அதை நீ மன்னிச்சு விட்டிருக்கனும்... அப்ப நீ பெரிய மனுஷி..! இப்ப...?"

"நீங்க பேசறது கொஞ்சம் கூட நல்லாயில்லைம்மா.. முரளியே என் பக்கம் நிக்கிறப்போ.. உங்களுக்கென்ன வந்துச்சு...?"

"அவன் நிற்பான்டி... தகப்பனிக்காத பொண்ணு கண்ணில ஒரு சொட்டு கண்ணீர் வந்திரக் கூடாதுன்னு என் மகன் பொறுப்பா நிற்பான்.. ஆனா நீ...? தகப்பனில்லாத தம்பியை தூண்டி விடறோமேங்கிற நினைப்பில்லாமத்தானே அந்த வேலையைச் செஞ்ச...?"

மேகலாவை விட்டிருந்தால் ,பாலசரஸ்வதியை ஒருகை பார்த்திருப்பாள்... அதற்குள் முரளி படியிறங்கி வந்துவிட்டான்...

"என்னக்கா... ரொம்ப நேரமா காத்திருக்கயா...?"

"ஆமாடா... நல்ல வேளையாய் நீ வந்த..."

தாயாரின் சொல்லம்புகளிலிருந்து தம்பி விட்ட நம்பியுடன் தம்பியைப் பார்த்துச் சொன்ன பாலசரஸ்வதியின் வார்த்தைகளில் நன்றியுணர்வு பொங்கி வழிந்தது...

"நீ சாப்பிட்டாக்கா... பிள்ளைகள் எங்கே..?"

"அவங்க அப்பவே காருக்குள் உட்கார்ந்துட்டாங்க.."

பாலசரஸ்வதியின் பார்வை மாடிப்படிகளில் ராதிகா வருகிறாளா என்று தேடி ஏமாந்தது...

ராதிகா வருகின்ற சுவடே தெரியாததில் அவன் மனதில் ஏமாற்றம் துளிர்த்தது...

"சதிஷ் உங்ககூட வருவான்.. பத்திரமா போயிட்டு வாங்க..."

முரளி வாசல் பக்கம் நகர... அதற்கு மேல் பொறுக்க மாட்டாதவளாக பாலசரஸ்வதி வாய் விட்டே கேட்டு விட்டான்...

"உன் பெண்டாட்டி எங்கேடா..?"

"அவளுக்கு தலைவலியாம்.. ரூமில் ரெஸ்ட் எடுத்துக்கிட்டிருக்கா... நீ வா... போகலாம்..."

முகம் மாறாமல் பதில் சொன்ன மகனின் திறமையை மனதிற்குள் மெச்சிக் கொண்டாள் மேகலா....

'தலைவலியா...? எவ்வளவு திமிரிருந்தா என்னை வழியனுப்ப வராம மாடியிலேயே படுத்திருப்பா...' பாலசரஸ்வதி மனதிற்குள் வெகுண்டாள்...

"சரி.. நான் போய் அவகிட்ட சொல்லிட்டு வர்றேன்.."

பாலசரஸ்வதி படிகளில் ஏற ஆரம்பிக்க... முரளியும் மேகலாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்...

"அக்கா இரு... இப்ப அவகிட்ட சொல்லாட்டி என்ன..?"

"அதுசரி... அப்புறம் சொல்லாம ஊருக்குப் போயிட்டேன்னு என்மேல பழி வாரதுக்கா...?"

அவள் நிற்காமல் படியேறி விட்டாள்...

"அடேங்கப்பா... உன் அக்கா பழிபாவத்துக்கு ரொம்ப அஞ்சினவதான்..."

"விடுங்கம்மா... என்னவோ அதுக்கு ஒரு கோபம்... அக்கா குணம் இப்படியா இருந்துச்சு..? கொஞ்ச நாளானா எல்லாம் சரியாப் போயிரும்... அதுக்காக நாமளே அதை குறைவா பேசினா எப்படி..?"

மகனின் தயாள குணத்தில் நெகிழ்ந்து விட்டாள் மேகலா... இப்படிப்பட்ட உடன்பிறப்புடன் பிறந்தவளுக்கு அவனின் அருமை தெரிந்து நடக்கத் தெரியவில்லையே என்றிருந்தது அவளுக்கு...

மாடியிலிருந்த பாலமுரளியின் அறைக்குள் நுழைந்த சரஸ்வதிக்கு பொறாமையுணர்வு பொங்கி எழுந்தது...

திருநெல்வேலியில் அவளுடைய வீடு பணக்காரத்தனத்துடன் இருந்தாலும்... தேனூத்து வீட்டைப் போல... இவ்வளவு பிரம்மாண்டமானதாக இல்லை... அதைப் போலத்தான் அவளுடைய படுக்கையறையும் சாதாரணமாக இருக்கும்...

பாலமுரளியின் அறை... பெரிதாக... அழகாக... ஒரு குட்டிப் பங்களாவைப் போல அனைத்து அம்சங்களும் நிறைந்ததாக இருந்தது... எதையும் கவனத்துடன்... ஓர்விதமான நேர்த்தியுடன் செய்து பழக்கப்பட்டிருந்த பாலமுரளி... அவனுடைய படுக்கையறையை பார்த்துப் பார்த்து வடிவமைத்திருந்தான்...

முன்புறம் வரவேற்பறை... அதையொட்டிய பெரிய அலுவல் அறை... அதையடுத்து படுக்கையறை... அதன் ஒரு பக்கம் அகன்ற பால்கனி... மறுபக்கம் உடை மாற்றும் அறை... அதையொட்டிய குளியலறை... என்று அதி நவினமாக அமைந்திருந்தது அவனுடைய அறை...

அந்த அறை இனி ராதிகாவுக்கு சொந்தம் என்ற நினைவில் பாலசரஸ்வதிக்கு கடுப்பாக இருந்தது...

அறைக்கதவைத் தொட்டதும் அது திறந்து கொண்டது... முன்பக்க வரவேற்பறையைக் கடந்து அலுவல் அறையையும் கடந்து.. படுக்கையறைக்குள் நுழைந்தாள் பாலசரஸ்வதி...

காய்ச்சல் தணிந்திருந்தாலும்.... அயர்வு குறையாதவளாக ராதிகா கண்மூடி படுத்திருந்தாள்...

'என்ன சொகுசு...!' பாலசரஸ்வதிக்கு எரிந்தது...

"ம்க்கும்..." தொண்டையை கனைத்தாள்...

மூடியிருந்த இமைகளை லேசாகத்திறந்து பார்த்த ராதிகா... அவசரமாக எழுந்து அமர்ந்தாள்...

"வாங்கண்ணி..."

"அடேங்கப்பா.. வரவேற்பெல்லாம் நேத்தைப் போலவே பலமாயிருக்கு... நான் உன்கூட கலந்துரையாட வரலை... இதைக் காட்டிட்டுப் போக வந்தேன்..."

பாலசரஸ்வதி... காது.. கழுத்து... கைகளில் அணிந்திருந்த நகைகளைப் பெருமையுடன் காட்ட... ராதிகா... அமைதியாக அவற்றைப் பார்த்தாள்...

"என்தம்பி... நேத்து ராத்திரியே இதை வாங்கிட்டு வந்து கொடுத்திட்டான்.. இப்பவாவது இந்த வீட்டில உன்நிலைமை என்ன... என்நிலைமை என்னங்கிறதை புரிஞ்சு... நடந்துக்க..."

"அதுக்கென்ன அண்ணி... இனி புரிஞ்சு நடந்துக்கறேன்..."

"அசீது... அந்த பயம் இருக்கட்டும்... யாருகிட்ட...?"

வெற்றிப் பெருமிதத்துடன் திரும்பப் போனவளின் கண்களில் ராதிகாவின் கழுத்திலும்.. காது.. கைகளிலும் இருந்த நகைகள் பட்டு விட்டன... அவள் கொதித்து விட்டாள்...

"எவ்வளவு கொழுப்பிருந்தா.. இந்த வைர நகைகளைப் போட்டுகிட்டே தூங்குவ...? முன்ன... பின்ன வைரத்தைப் பார்த்திருந்தாத்தானே அதோட மதிப்புத் தெரியும்..? உனக்கென்ன தெரியும்..? அற்பனுக்கு வாழ்வு வந்தா அர்த்த ராத்திரியில குடை பிடிப்பான்ங்கிறது சரியாத்தான் இருக்கு..."

எதற்கு பாலசரஸ்வதி இந்த அளவுக்கு கோபப் படுகிறாள் என்று கைகளைப் பார்த்த ராதிகாவுக்கு தூக்கி வாரிப் போட்டது...

'இந்த நகைசெட்டை நான் போட்டுக்கவே இல்லையே...'

முதல்நாள் இரவு அதைக் கட்டிக் கொண்டு படுத்திருந்தது அவள் நினைவில் நிழலாக வந்து போனது...

'இதெப்படி என் காது.. கழுத்து.. கைகளுக்கு வந்தது...?'

அவள் புரியாமல் விழிக்க... பாலசரஸ்வதி கொதித்துக் கொண்டிருந்தாள்...

"என்னைக் கடுப்பேத்தேன்னே இதுகளை மாட்டிக்கிட்டு உட்கார்ந்திருக்கயா..? உனக்கு எவ்வளவு திமிர்...?"

"பாருங்கண்ணி... இது என்னோட நகை... இதை நான் தூங்கும்போதுகூட போட்டுக்குவேன்... அது என்னோட இஷ்டம்... இதனால உங்களுக்கென்ன கஷ்டம்..?"

ராதிகா நிதானமாக வினவ... பதில் சொல்ல முடியாமல் தினறிப்போனாள் பாலசரஸ்வதி...

'இவ்வளவு நேரமா... அந்தம்மா கீழே பேசு.. பேசுன்னு பேசி தினற வைச்சாங்க... இவ மாடியிலே தினறடிக்கிறா.. ரெண்டு பேரும் சொல்லி வைச்சுக்கிட்டு செய்யறாங்களோ..'

" என்னக்கா... சொல்லியாச்சா.. போகலாமா..?"

அறைவாசலில் குரல் கேட்க... இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்... பாலமுரளி அறைவாசலில் நின்றிருந்தான்..

"பார்த்தியாடா முரளி..."

தம்பியிடம் வழக்கு வைக்க அவசரமாக ஆரம்பித்தாள் சரஸ்வதி...

"எல்லாம் பார்த்துட்டேன்.. அவதான் சொல்றாள்ல.. அது அவளோட நகை... அதை எப்ப வேணும்னாலும் அவ போட்டுக்குவா... அதில உனக்கு என்ன பிரச்னை..? நீ ஊருக்குப் போறேன்னு சொல்லிட்டுப் போகத்தானே வந்தே..? சொல்லிட்ட இல்ல.. கிளம்பு.." கண்டிப்புடன் பேசினான் முரளி...

பாலசரஸ்வதியின் முகம் சுணங்கிப் போனது... அவள் விர்ரென்று கோபமாக அறையை விட்டு வெளியேறிவிட்டாள்...

அவள் நினைத்து வந்தது என்ன..? இங்கே நடந்தது என்ன..? புதுநகையின் வரவில் அவளுக்கு ஏற்பட்டிருந்த மகிழ்ச்சி இப்போது காணாமல் போய் விட்டிருந்தது...

ராதிகா.. புரியாமல் நகைகளை மீண்டும் பார்க்க... அவள் அருகில் வந்தான் முரளி...

"நான்தான் அதைப் போட்டு விட்டேன்.." என்றான்...

நிமிர்ந்து பார்த்த ராதிகாவின் கண்கள் ஒளிர்ந்தன... அதைப் பார்த்த முரளி... பார்வையை விலக்க முடியாமல் அப்படியே நின்றான்... இருவர் பார்வைகளும் ஒன்றொடொன்று பின்னிப் பிணைந்திருக்க... வார்த்தைகள் தேவைப்படாத ஒரு மோன நிலைக்கு மீண்டும் அவர்கள் சென்றனர்...

"ஐயா.." அறைவாசலில் மீனாட்சியின் சத்தம் கேட்டது...

"சின்னம்மா... ஊருக்குப் போகனுமாம்... உங்களை வரச்சொன்னாங்க..."

பிணைந்திருந்த பார்வைகள் விலகிக் கொள்ள... பெருமூச்சுடன் வெளியே போனான் முரளி... ராதிகாவின் மனதில் பரவசம் படிந்தது...

95

ஊடலொன்று வந்ததினால்...
கூடலில்லா கூடல் கண்டேன்...

அது ஒருவிதமான சுகம்... அடிக்கிற கை அணைக்கும் போது ஏற்படும் ஆனந்தத்தை வார்த்தைகளில் சொல்லி விட முடியாது... தமிழச்சியாகப் பிறந்த ஒவ்வொரு பெண்ணிற்கும் இதன் தாத்பர்யம் புரியும்...

அவள் முறத்தினால் புலியை அடித்து விரட்டும் வீரப் பெண்ணாக இருக்கலாம்... வில்லேந்தி போர் புரியும் ஷத்திரியப் பெண்ணாகவும் இருக்கலாம்.. ஏன் கானகத்தில் வாழ்கின்ற காட்டுவாசிப் பெண்ணாகக் கூட இருக்கலாம்...

இத்தனையிருந்தாலும்... அவள் மனம் கவர்ந்த ஆணுக்கு அவள் அடிமையாகத்தான் ஆகிவிடுகிறாள்...

அது ஏன் என்பதை அறுதியிட்டு இதுவரை யாராலும் சொல்ல முடிந்ததில்லை...

அப்படிப்பட்ட கன்னிகையின் கடைக் கண்பார்வைக்கு அந்த வீரமான ஆண்மகனும் அடிமையாகி விடுகிறான்...

இப்படி அடிமையாகி அடிமை கொள்ளும் அற்புதமான யுத்த யுக்தி காதலில் மட்டுமே சாத்தியமான ஒன்று...

'அடி வெள்ளையம்மா...' உன் காளைக்கு வந்ததடி ஆபத்து... என்று தோழிப் பெண்கள் எச்சரித்தால்... அந்த வெள்ளையம்மாளாகப் பட்ட வீரப் பெண்ணின் மனதில் என்ன வர வேண்டும்...?

பார்த்துப் பார்த்து வளர்ந்து... பயிற்சியளித்த காளையை அடக்க நினைப்பவனின் மீது பகையுணர்வு தானே வரவேண்டும்..? அதை விட்டுவிட்டு.. அவள்.. ஏன் அவன் நினைவில் வெட்கி.. நாணம் கொண்டு... காலின் கட்டை விரலால் நிலத்தில் பள்ளம் பறித்து நீரூற்றைக் கிளம்பச் செய்தாள்...?

'சீதே...! உன் அப்பா வைத்திருந்த வில்லை... அந்த ராமன் உடைத்து விட்டாரடி...' என்று தோழிப் பெண்கள் ஓடி வந்து கூறினால்...

'ஹ...! என் தந்தை காலம் காலமாக பாதுகாத்து வந்த அந்த திடமான வில்லை முறித்தது யார்...?' என்று பொங்கி எழாமல்... கண்ணோடு கண் நோக்கி... யாருக்கும் அஞ்சாத ராம பாணத்தையுடைய ராமபிரானை தன் காதலினால் கட்டிப் போட்டு... அந்த ஒருத்திக்கு மட்டும் சொந்தமாக அந்த ஒருவனை ஏன் அவள் ஆக்கிக் கொண்டாள்...?

காதல் போர்க்களத்தில் எந்தவொரு வீராதி வீரனும் சரணாகதியைத்தான் கடை பிடிக்கிறான்... அவனிடம்

தோற்று... அவனை ஜெயிக்கும் வித்தையை காலம்.. காலமாய் பெண் கடை பிடித்துத்தான் வருகிறாள்...

பாலமுரளி ராதிகாவின் மேல் காதல் கொண்டான்... அவள் காதலை அறியாமல் சந்தேகம் கொண்டான்... சூழ்நிலைகள் ராதிகாவுக்கு எதிராக சதி செய்ய அவள் சங்கரின் காதலை அங்கீகரித்து விட்டதாக அவன் முடிவே செய்து விட்டான்...

அவளை சிறையெடுத்தான்... பலவந்தப் படுத்தினான்.. அவள் மனதை சொந்தம் கொண்டு விட்டதை அறியாமல்.. அவளது உடலை சொந்தம் கொண்டாடி விட்டதாக வெற்றி முரசு கொட்டினான்...

ராதிகாவுக்கு வேறு வழி தெரியவில்லை... அவனை கைபிடிக்க அவன் சந்தேகப்பட்ட வழிமுறையையே கையாண்டு அவன் கைபிடித்தாள்.. அதன் மூலம்... அவன் மனதில் நிரந்தரமான வடுவொன்று ஏற்பட்டு விட அவளே காரணகர்த்தாவாக மாறிவிட்டான்...

அவளைத் தொட்டவனே... தொடமறுத்து விலகி நின்றான்... அவன் மனதை வெல்லும் மார்க்கம் புரியாமல் கலங்கி நின்றவளுக்கு கலங்கரை வெளிச்சமாக அமைந்து விட்டது... அவன் அடித்த அடி...!

அடிவாங்கிய ராதிகாவின் போராட்டத்திற்குப் பின்னாலிருந்த காரணத்தில் முரளி மனம் மலர்ந்து விட்டான்... அவனின் கனிவில் ராதிகாவும் மனம் மலர்ந்து விட்டாள்...

"முயக்கத்தைத் தந்தவன் யாரடி...?
மணமகன் பேரென்ன கூறடி...
மறைவினில் நடந்தது என்னடி..?
நீ சொல்லடி... கதை மாறாமலே..."

என்னவோ... முதல் நாள் இரவில்தான் அவளுக்கு முதலிரவு நடந்ததைப் போல... கன்னம் சிவக்க.. பாடியபடி எழுந்தவள்.. அப்படியே அமர்ந்து விட்டாள்..

பாலசரஸ்வதியை அனுப்பிவைத்து விட்டு.. ராதிகாவை டாக்டரிடம் அழைத்துப் போவதற்காக மாடிக்கு திரும்பி வந்திருந்த முரளி.. அங்கே நின்று கொண்டிருந்தான்...

அவன் முகம் பார்க்க முடியாமல் ராதிகாவை வெட்கம் சூழ்ந்து கொண்டது... உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் தலையைக் குனிந்து கொண்டாள்...

அவள் முகத்திலிருந்த பார்வையை விலக்காமலே அருகில் வந்தான் முரளி.. ராதிகாவின் இதயம் படபடத்தது.. அவள் குனிந்த தலையை நிமிர்த்தவில்லை.. முரளியின் உடலில் ஓர்விதமான ரசாயனமாற்றம் நிகழ ஆரம்பித்தது... அவளருகில் அவன் அமர்ந்து கொண்டான்... அவள் உடல் மீது அவனது பார்வை உளார்ந்து மேய்ந்தது...

"மங்கையரில் மகராணி...!
மாந்தளிர் போல் செம்மேனி..!
எல்லையில்லா கலைவாணி..!
என்னுயிரே யுவராணி...!"

தோட்டக்காரனின் எப்.எம் நிற்பதாக தெரியவில்லை.. அந்தப் பாடலை கேட்டவனின் மனம்... 'நிஜம்தான்' என்று நினைத்துக் கொண்டது...

அவன் தொட்டபோது துடித்துக் குழைந்த அவள் மேனி... தளிரைவிட மென்மையானது என்ற நினைவில் அவனுடல் சூடேறியது...

'இவள் என் பெண்டாட்டி... என் ராணி...'

அவனது பார்வையின் தீட்சண்யம் தாங்க மாட்டாதவளாக... ராதிகா தவித்துப் போனாள்... அவன் தொட்டு விட்டால்... அனலில் பட்ட மெழுகாக உருகிக் கரைந்து விடும் தாபத்துடன் அவளிருந்தாள்...

அவனது செதுக்கி வைத்ததைப் போன்ற உடலமைப்பில் அவளது மனம் மயங்கியது.. தேர்ந்த ரோமானிய சிற்பி வடிவமைத்ததைப் போன்ற முகவடிவு அவளை அலைக்கழித்தது... அவள் உடல் பூராவும் படிந்த அவனது நெருக்கத்திற்காக அவள் ஏங்கினாள்...

"கோடையிலே மழை போல் நீ..!
கோவிலிலே சிலை போல் நீ...
ஆடவரில் அழகன் நீ...!
உன் அடிமை நான் யுவராணீ...!"

அவளது கலங்கிய விழிகளில் தெரிந்த காதலின் தீயில் அவன் தகிப்படைந்தான்... படபடவென்று பட்டாம் பூச்சிகளைப் போல சிறகடித்த அவள் இமைகள்.. உயர்வதும்.. தாழ்வதுமாக இருக்க.. அவள் நிலையை அவன் தெள்ளத் தெளிவாக உணர்ந்தான்..

அவன் மீதான அவளது தேடுதலில் அவனது ஆண்மை கர்வம் கொண்டது... அவள் தேடுவதைக் கொடுத்து விட்டால்தான் என்னவென்று அவன் மனம் கேட்டது...

'சின்னப்பெண்..! அறியாமல் அவன் பேசினதுக்கு மறுப்புச் சொல்லாம நின்னுட்டா.. நேத்து நான் வாங்கிக் கொடுத்த இந்த நகைக்காக அத்தனை தூரத்துக்கு போராடினாளே.. இதுக்கு மேலயும் இவள நான் தள்ளி வைக்கனுமா..? மன்னிச்சு ஏத்துக்க வேணாமா..?'

அவள் மீதான அவனது தேடுதலுக்கு.. விளக்கம் சொல்ல வழி ஏற்படுத்திக் கொள்ள முனைந்தான் முரளி..

"ராதிகா.."

வேட்கையை உள்ளடக்கிய அவன்குரலில் அவள் தடுமாறிப் போனாள்... அந்தக்குரலில் அவளை என்னவோ செய்தது...

"ம்ம்ம்..."

பதிலுக்கு அவள் முணுமுணுத்த விதத்தில் அவன் கிளர்ந்தான்.. நெருங்கி அமர்ந்தான்.. ராதிகாவின் இதயத்துடிப்பு அதிகமானது... என்றோ ஒருநாள் அவள் உணர்ந்த உணர்வின் நிகழ்வுகளை எதிர்பார்த்து ஆனந்தத் தவிப்பில் ஆழ்ந்தது...

"ஆனந்த ராகம்...
கேட்டால் தீருமோ..

அடிக்கடி.. இசைக்குயில்..
ராகம் பாடுமோ..."

தோட்டத்திலிருந்து வந்த கானமழை அவர்கள் இருவரையும் நனைத்தது.. ராதிகாவின் காய்ச்சலுக்காக ஏஸியைப் போடாமல் ஜன்னல் கதவுகளைத் திறந்து விட்டிருந்த முரளி.. அது எவ்வளவு நல்லதாகப் போனது என்று நினைத்துக் கொண்டான்...

அப்படிப்பட்ட சூழ்நிலையில்... அவர்களை மயக்கிய பாடலின் வரிகள்.. அந்தச் சூழலின் ரம்யத்தை அதிகப் படுத்துவதாக அவர்கள் இருவருமே உணர்ந்தார்கள்...

"ராத்திரி நல்லாத் தூங்கினியா..."

சம்பந்தமில்லாமல் கேட்டு வைத்த அந்த வீரத் திருமகனின் தடுமாற்றத்தைக் கண்டு.. ராதிகாவுக்கு சிரிப்பு வந்தது...

இதைக் கேட்கத்தான் இவன் இவ்வளவு நெருக்கமாக உட்கார்ந்திருக்கிறானா என்ற நினைவில் அவள் முகத்தில் கேலி படர்ந்தது...

அதை அவன் உணராமல் இல்லை...

பெரிதாக சபதம் போட்டு அவளைதள்ளி வைத்து விட்டு.. ஒரு மாதத்திலேயே அதை உடைக்க நேர்வதில் அவனுக்குள் ஓர்விதமான தடுமாற்றம் ஏற்பட்டிருந்தது...

"ம்ம்ம்... தூங்கினேன்..."

"எதுக்குக் கேட்கிறேன்னா... விடியவிடிய புலம்பிக்கிட்டே இருந்தே.. அதான்..."

அவன் விளக்கம் சொல்லிய விதத்தில்... அவள் லேசாக விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள்...

'உன்னை எனக்குத் தெரியாதா...?' என்று அந்தப் பார்வை அவனைப் பார்த்துக் கேட்டது...

"கனவு கண்டிருப்பேன்.." அவள் விழிதாழ்த்திக் கொண்டாள்...

"அப்படியா..?" அவன் பெருமூச்சு விட்டான்...

அவனது பெருமூச்சின் அனல்காற்று அவள்மீது படிய... அவள் உதட்டைக் கடித்தாள்.. என்ன சொல்வதென்று தெரியாமல்... எதையோ சொல்ல வேண்டும் என்பதற்காக...

"அத்தை கூப்பிட்டாங்களா..?" என்று கேட்டாள்...

"ஊஹூம்... அவங்க ரூம் கதவு சாத்தியிருக்கு..."

அவன் விழிகள் எதையோ சொல்லின... அவனது தாயின் இடையூறு இருக்காது என்பதை மறைமுகமாக வலியுறுத்தின...

"ராத்திரி கனவுகள் ஓயட்டும்...
ஓயுமோ...?
மூத்தவர் கதவுகள் சாத்தட்டும்...
சாயுமோ...?
தீபத்தின் ஒளியும் குறையட்டும்...
குறையுமோ...?"

அவர்களின் சம்பாஷணையை பாடல் தொடர.. அதற்குமேல் தாளமாட்டாதவளாக அவன் தோள் சாய்ந்தாள் ராதிகா...

அவனது தயக்கத்தை அவள் உடைத்ததில் அவன் மடைதிறந்த வெள்ளமாக அவளை ஆக்ரமித்தான்...

அவளை மயக்கிய அவனது முகம்.. அவளது முகமெங்கும் முத்தங்களைப் பதிக்க... 'ஹா..!' என்று அவள் கிறங்கிப் போனாள்...

"ஆடைகொடு...
ஆளை விடு...
தேகம் தொடு...
போதும் விடு...
தாகம் ஊறுதே..."

அவளது சேலை முந்தானையின் வாசம் பிடித்தவன் முன்னேற அவளது வளைக் கரம் உணர்வின் வேகம் தாங்காமல் அவன் முடிகோதிப் பிணைந்தது...

"அடிக்கடி வளைக்கரம்...
ஆசை மூட்டுதே..."

அவள் வளைக்கரத்தில் அவன் முத்தம் பதித்தான்... அவள் கண்மூடி கிளர்ந்து சரிய... அவள் மேல் சரிந்து... பரவிப் படர்ந்தான்...

அவன் முதுகின் மீது படர்ந்த அவளின் கைகளின் இறுக்கத்திலே அவன் மனதிலிருந்த சந்தேகங்களும்..

சஞ்சலங்களும் கரைந்து மறைந்து கொண்டிருந்த போது... செல்போன் ஒலித்தது... அவன் அதை அலட்சியம் செய்தான்... இடைவிடாமல் மீண்டும்.. மீண்டும்.. மணியொலிக்க...

"த்ச்சு... முதலில் இதை ஆஃப் பண்ணித் தூரப் போடனும்..." என்ற கோபத்துடன் அதை கைநீட்டி எடுத்தான்.. முகம் மாறினான்...

ஒலித்துக் கொண்டிருந்தது அவனின் செல்போனல்ல... ராதிகாவின் செல்போன்... அழைத்துக் கொண்டிருந்ததும் வேறு யாருமில்ல...

சங்கர்...!

சட்டென்று பாலமுரளியின் அனைத்துச் செல்களிலும் பரவியிருந்த வேட்கையும்.. வேகமும் காணாமல் போய்விட.. அவன் விலகி அமர்ந்தான்...

'ஏன்...?' ராதிகாவின் முகத்தில் அப்பட்டமான ஏமாற்றத்தின் சாயல் படர்ந்தது...

'சங்கர் அழைக்கிறான்...'

செல்போன் ஒளிர்ந்ததில்... முரளியின் முகம் இறுகி.. கல்லைவிட கடினமானதாக மாறியது...

"இன்னும் இவன் நம்பரை நீ வைச்சுக்கிட்டு இருக்கியா...?"

அவன் கேட்ட விதத்தில் கலவரமான ராதிகா அவசரமாக எழுந்து போனை வாங்கிப் பார்த்தாள்...

'கடவுளே...! இவன் எதுக்கு என்னைக் கூப்பிடறான்..?'

அவள் செல்போனை அணைக்க முயல.. முரளியின் முகம் கடுமையானது...

"பேசுடி..." அதட்டினான்...

"ஹலோ..." ராதிகா நடுக்கத்துடன் பேசினாள்...

"கடைசியில் எனக்கு இன்விடேசன் கூடக் கொடுக்காம மேரேஜ் பண்ணிக்கிட்டிங்கள்ல..?" சங்கரின் குரலில் குற்றச்சாட்டு தொணித்தது...

'ஆமாண்டா.. இப்ப இதுதான் ரொம்ப முக்கியம்... கல்யாணம் விசாரிக்க நீ நல்லநேரம் பார்த்த போ...'

ராதிகாவுக்கு சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது...

"இப்ப எப்படியிருக்கீங்க ராதிகா..."

அவன் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே போனை அணைத்து தூக்கிப் போட்ட முரளி...

"நீ நல்லாயில்லைன்னு சொன்னா.. அவன் என்னடி பண்ணுவான்..?" என்று கேட்டான்...

அவன் போனை வீசியெறிந்த வேகத்திலேயே அவனது கோபத்தின் பரிணாமம் புரிய... பதில் பேச முடியாமல் நடுங்கினாள் ராதிகா...

96

சாபத்திலே பிறப்பெடுக்கும்...
வரம்வாங்கிப் பிறந்தேனா...?

"சொல்லுடி... அவன் என்ன பண்ணுவான்...?"

முரளி விடாமல் கேள்வி கேட்க... களைத்துப் போனாள் ராதிகா...

"கத்தியைத் தூக்கிட்டு வந்திருவானா..? வரச் சொல்லுடி..."

"என்ன பேச்சு இது...?"

ராதிகா அதிர்ந்து நிமிர... அவன் விழிகள் தீக்கங்குகளாக கனன்று ஜொலித்தன...

"எப்படியிருக்கேன்னு கேட்கிறானே.. அதைக் கேட்க இவன் யாருடி..?"

அவன் யாரென்று அவள் சொல்லுவாள்..? அவளென்ன எனக்குப் போன் பேசுடா என்று சங்கரிடம் சொன்னாளா..? அவனாக போன் செய்தால் அதற்கு அவள் பிணையா..?

"பேசுடி... ஏன் பேசாம இருக்க..?"

என்னத்தைப் பேச..? அவளுக்கு வாய்விட்டு அழவேண்டும் போல இருந்தது... முதல்நாள் மாலையில் உணர்ந்த அநாதரவான உணர்வை மீண்டும் அவள் உணர்ந்தாள்...

அந்த நொடி முதல் அவள் உணர்ந்த இன்ப உணர்வுகளுக்கு ஆயுள் இவ்வளவுதானா..?

"ச்சே... எப்படிப்பட்ட ஏமாளிடி நான்..? நீ மாறிட்டன்னு நினைச்சிட்டேனே.. உன்கூட குடும்பம் நடத்தத் துணிஞ்சிட்டேனே.. இல்லைடி... நீ மாறலை.. மாறவும் மாட்ட..."

நிலையாக நிற்பவளிடம் அவன் என்ன குற்றம் கண்டான்..? அவள் மாறிவிட்டாள் என்று நினைப்பதற்கு..

இல்லை.. என்ன மாற்றம் கண்டான்..? அது இல்லாமல் போவதற்கு...

இந்தக் கேள்விகளை அவனிடம் யார் கேட்பது..? கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நடக்கும் இந்த அந்தரங்கப் போராட்டத்தில் அவள் தரப்பு வழக்கறிஞராக யாரை அவள் நியமிக்க முடியும்...?

"இதையொன்னைக் கண்டு வைச்சிருக்கடி.. நான் எதைச் சொன்னாலும் வாய் பேசாம... ஊமைபோல உட்கார்ந்துக்கிறதுக்கு... இனி உன்கிட்ட இதைப் பற்றி பேசி பிரயோசனமில்லைடி... நீ இப்படித்தான்னு ஆன பின்னாலே பேருக்குத்தாண்டி நீ எனக்கு பெண்டாட்டி..."

ஆரம்பித்த இடத்திலேயே அவளது குடும்ப வாழ்க்கை வந்து நின்று விட.. இதுதான் அவள் விதியோ என்று மருகிப் போனாள் ராதிகா....

மனம் விட்டுச் சிரிக்கக் கூடாதென்ற சாபம் வாங்கி அவள் பிறந்திருக்கிறாளா...? எது கிடைத்தாலும்.. அதற்கான முழுஉரிமையும்... அங்கீகாரமும் கிடைக்காமல் அலைபாயும் தன்மையுடன்தான் அவள் இருப்பாளா...?

"யாரோ போன் பண்ணினதுக்கு நான் எப்படி பொறுப்பாவேன்..?" பொறுக்க முடியாமல் மனம் குமுறினாள் ராதிகா...

"யாரோவா..?" அவன் கண்கள் இடுங்கின...

"சங்கர் காலிங்ன்னு உன் போன் சீரியல் லைட்டை எரியவிட்டு சொல்லுது... நீ யாரோன்னு கதை சொல்ற... என்னடி..? உனக்கு என்னைப் பார்த்தா எப்படியிருக்கு..?"

அவளுக்கு அவனைக் கட்டிக் கொள்ள வேண்டும் போலதான் இருந்தது... அதை அவனிடம் யார் சொல்வது..? என்று புரியாதவளாக தலையை பிடித்துக் கொண்டாள்...

அவளின் சோர்ந்த தோற்றத்தில் பாலமுரளி தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு எழுந்து சென்று விட்டான்...

"ராதிகா எங்கேடா..?" என்ற மேகலாவின் கேள்விக்கு...

"படுத்திருக்கிறாம்மா..." என்று பதில் சொன்னான்..

"இன்னும் சாப்பிடலையே..." மேகலா கவலையுடன் மாடியேற... அவன் வாசலில் காரில் ஏறிக் கொண்டிருந்தான்..

அன்று மதியம் அவனைத் தேடி உணவு வரவில்லை..

'ம்ஹூம்.. இவ காட்டின அக்கறை இவ்வளவுதானா..?'

காலையிலும் சரியாகச் சாப்பிடாத வயிறு பசிக்க... ஹோட்டலுக்குச் சென்று எதையாவது கொட்டிக் கொள்ளலாம் என்று அவன் கிளம்பிய போது மேகலா போனில் அழைத்தாள்...

"முரளி.. ராதிகாவுக்கு திரும்பவும் காய்ச்சல் வந்திருச்சுடா..."

'இது வேறா..?' என்ற எரிச்சலுடன்...

"காலையிலே நல்லாத்தான் இருந்தாம்மா... மாத்திரையைக் கொடுத்தீங்களா..?" என்று விசாரித்தான் முரளி...

"கொடுத்தேண்டா.. ஆனாலும் காய்ச்சல் நிற்கலையே.."

"சரிசரி.. நான் உடனே வந்து சேர்றேன்.. நீங்க உடம்பு சரியில்லாதவங்க... அவளுக்கு ஒன்னுன்னு நீங்க பதறாதீங்க.. அப்புறம் நீங்களும் படுத்துக்கிட்டா என்னால சமாளிக்க முடியாது..."

தாயை அதட்டிவிட்டு.. காரை வீட்டுக்குச் செழுத்தினான்...

மாடியறைக்குள் நுழைந்தபோது... ராதிகா அறற்றிக் கொண்டிருந்தது அவன் காதில் விழுந்தது...

'நிஜமாவே அனத்துறா... என்ன ஆச்சு...'

மகனைக் கண்டதும்.. கட்டிலில் ராதிகாவின் தலைமாட்டில் அமர்ந்திருந்த மேகலா கவலையுடன் எழுந்தாள்...

பாலமுரளி... மனைவியின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்.. காய்ச்சல் கனன்றது.. அவனது ஸ்பரிசத்தை உணர்ந்தவளாக கண்விழித்த ராதிகாவின் விழிகளில் கனவனைக் கண்டதும் ஒளிர்வு வந்தது...

அதைக் கண்டு கொண்ட பாலமுரளிக்கு அவளைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை...

'இவ எனக்காக ஏங்குகிறதைப் போலவே இருக்கு.. கிட்ட நெருங்கினா.. அந்த சங்கர் பயலோட போன் வந்து தொலைக்குது...'

அவன் கண்களில் மனதில் பொருமலைக் கண்டாளோ.. என்னவோ...

"நான் யாரோடவும் பேசலை..." என்று தீனமான குரலில் சொன்னாள் ராதிகா...

"இவ என்ன சொல்றா முரளி..?" மேகலாவுக்கு விளங்கவில்லை...

"காய்ச்சல் வேகத்தில புலம்புறாம்மா... நீங்க போய் ஜூடா கஞ்சியைக் கொண்டு வாங்க..."

மேகலா வெளியேறியதும்.. கட்டிலின் அருகே சோபாவை இழுத்துப் போட்டு உட்கார்ந்தான் முரளி...

'என் பக்கத்தில உட்காரக் கூட மாட்டானாமா..' ராதிகா ஏங்கினாள்...

அவள் கண்களில் நீர் கோர்த்தது... அதைக் கண்டும்.. காணாதவனைப் போல.. விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தான் பாலமுரளி..

"என்னை நம்புங்க..." மன்றாடும் குரலில் பேசினாள் ராதிகா...

உணர்வுகள் துடைக்கப்பட்ட முகத்துடன் அவளை சொந்தமற்ற பார்வை பார்த்தான் பாலமுரளி...

"இப்ப உனக்கு காய்ச்சல்.. முதல்ல இதுக்கான வைத்தியத்தைப் பார்க்கலாம்... நம்ம பிரச்னையைப் பத்திப் பேச இது நேரமில்லை..."

"ஆனா..."

"ராதிகா... என் அம்மா இதயநோய் வந்தவங்க.. அவங்க மனசு நோகக் கூடாதுன்னு நான் பார்த்துப் பார்த்து நடக்கிறேன்.. நீ வந்த நாளில இருந்து.. இப்ப வரைக்கும் ஏதாவது ஒரு விசயத்தில அவங்களை மனம் நோக செஞ்சிடறே..."

"நானா அப்படிச் செய்ய்றேன்..?" ராதிகாவுக்கு தாங்கவில்லை...

"நீ நேரடியா இதைச் செய்யலைதான்.. ஆனா.. உன் சம்பந்தப்பட்ட பிரச்னைகள்தான் அம்மாவுக்கு மன உளைச்சலைத் தருது..."

"அதுக்கு நான் என்ன செய்யணும்..?"

"கொஞ்சம் படுத்தாம வாயை மூடிக்கிட்டு இருக்கணும்.. காலையில போன காய்ச்சல் இப்ப எப்படி வந்தது..?"

"நான் வெத்தல பாக்கு வைச்சுக் கூப்பிட்டேனா..?"

அந்த நிலைமையிலும்.. அவளுக்குள் இருந்த பழைய ராதிகா வாய்திறந்தாள்.. அவன் தாடையைத் தடவியபடி தலைசாய்த்து அவளைப் பார்த்தான்...

"ஒருவகையில் இது அப்படித்தான்..."

"என்னது..?"

"ஆமாம்.. தேவையில்லாம மனசைப் போட்டு ஏன் உழட்டிக்கறே..? என் மேலயும் தப்பிருக்கு.."

அவன் இப்படிச் சொன்னதும்.. நான் உன்னைப் புரிஞ்சுக்காம வீணாக சண்டைபோட்டு விட்டேன் என்ற விதமாய் அவன் எதையாவது சொல்வானோ என்ற எதிர்பார்ப்புடன் அவன் முகத்தை ஆவலுடன் பார்த்தாள் ராதிகா..

அவனோ.. அவளது எதிர்பார்ப்பை தவிடு பொடியாக்கினான்...

"உன்கிட்ட கட்அன்ட்ரைட்டா சொல்லிட்டு தாலி கட்டியவன் தள்ளியே நின்னிருக்கணும்.. அதைவிட்டுட்டு ஒரு நிமிசம் நானும் உணர்ச்சிவசப் பட்டுட்டேன.."

அவன் வெகுவாக வருந்த.. அடப்பாவி என்றிருந்தது ராதிகாவிற்கு..

'நானென்ன அடுத்தவன் பெண்டாட்டியா..? ஐயோ.. கையைப் பிடித்து இழுத்துவிட்டேனேன்னு இவன் இந்த அளவுக்கு கவலைப் படறதுக்கு..? இவன் தாலி கட்டின பெண்டாட்டி.. இந்த நினைப்பு துளியாவது இவன் மனசில இருக்கா..?'

நினைவுகளின் வேகத்தில் அவள் தலை வேதனை அதிகமாக தலையை தலையனையில் அழுந்தி வைத்து.. இங்கும்.. அங்குமாக உருட்டினாள்...

"த்ச்சு.. இப்பத்தானே சொன்னேன்.. தேவையில்லாம உழட்டிக்காதேன்னு.. சொன்ன பேச்சை கேட்கக் கூடாதுங்கிற முடிவோட நீ இருக்கியா..?"

முரளி... மாலை வரை அவளுடன்தான் இருந்தான்.. மதியம் அவளை கஞ்சி குடிக்க வைத்து.. மாத்திரைகளை விழுங்க வைத்துவிட்டு தூங்க வைத்தான்.. அவனும் சாப்பிட்டு விட்டு.. கொஞ்ச நேரம் படுத்துத் தூங்கினான்..

மாலையில் காபியுடன் வந்த மேகலா.. மருமகளின் நெற்றியில் கை வைத்துப் பார்த்துவிட்டு.. காய்ச்சல் குறைந்திருக்கிறது என்று சந்தோஷித்தாள்.. ஆனாலும் ராதிகாவை மருத்துவ மனைக்கு கிளம்பச் சொன்னான் முரளி

"உனக்கு உடம்பில எந்த நோயும் இல்லைடி.. மனசிலதான் எல்லாமும் இருக்கு... நான் பக்கத்தில இருந்தா உனக்கு காய்ச்சல் பறந்து போயிரும்.. அதுவே வேலையைப் பார்க்கண்னு வெளியே போனா போன காய்ச்சல் திரும்பி வந்து ஒட்டிக்கும்..."

'தெரியுதில்ல... அப்புறம் எதுக்காக விட்டுட்டுப் போறே'

"பொழைப்பைப் பார்க்கனும்..."

அவளது மனதைப் படித்தவனைப் போல அவன் பதில் சொல்லிவைக்க... இவனுக்கு இதுதான் பிழைப்பென்று நினைத்துக் கொண்டாள் ராதிகா...

மனதைப் படிக்கத் தெரிந்தவனுக்கு... அதைப் புரிந்து கொள்ளத் தெரியாமல் போய் விட்டதே என்று அவளுக்கு வருத்தமாக இருந்தது...

மருத்துவமனையில் அவளை பரிசோதித்த டாக்டர் மாலதி... இப்போது பரவாயில்லை என்று சொன்னாள்... எதற்கும்... இரண்டு மூன்று நாள்கள் தொடர்ச்சியாக ராதிகாவை மருந்து... மாத்திரைகளை சாப்பிடச் சொன்னாள்...

அவளுக்கு நன்றி சொல்லி விட்டு... ராதிகாவை அழைத்துக்கொண்டு வெளியில் வந்தான் பாலமுரளி...

வீட்டில் காத்திருந்த மேகலா... விவரத்தை கேட்டு விட்டு... பாலசரஸ்வதியின் வீட்டு விருந்துக்கு போகும் பயணஏற்பாடை ரத்து செய்யச் சொன்னாள்...

"அது எதுக்கும்மா..?" பாலமுரளி ஆட்சேபித்தான்...

"இந்த உடம்போட எப்படிடா இவ விருந்துக்கு வருவா..?" மேகலா கவலைப் பட்டாள்...

"ரெண்டு மூணு நாளிலே சரியாப் போகும்ன்னு டாக்டர் சொல்லியிருக்காங்களேம்மா..."

"எனக்கென்னவோ இது சரியாப்படலைடா முரளி... உன் அக்கா வீட்டு விருந்து எங்கே ஒடிறப் போகுது..? போன் போட்டு விசயத்தை சொன்னா அவங்க கேட்டுக்க மாட்டாங்களா...?"

வேற வினையே வேணாம்... எதுடா சாக்குன்னு அலைகிற அக்காவுக்கு நாமே காரணத்தைத் தூக்கி கையில குடுக்கிற மாதிரி இருக்கும்... வேணாம்மா... இ மாத்திரையை முழுங்கிக்கிட்டாவது கூடவரட்டும்...

அக்காவும்... மாமாவும் நேராவே வந்து கூப்பிட்டு போயிருக்காங்க... போகலைன்னா தேவையில்லாத பேச்சுக் கிளம்பும்...

"இவளுக்கு முடியலையே முரளி..."

"எல்லாம் முடியும்..."

எரிச்சலுடன் சொன்ன முரளி... ஜவுளிக்கடைக்கு போய் விட்டான்... மேகலாவின் கவலையைக் கண்ட ராதிகா மனம் நெகிழ்ந்தாள்...

"கவலைப் படாதீங்கத்தை... எனக்கொன்னுமில்ல..."

"காய்ச்சல் விட்டுவிட்டு வருதேம்மா..."

"மாத்திரை சாப்பிட்டா ஒடிறப் போகுது... இதுக்குப் போயி நீங்க இவ்வளவு தூரத்துக்கு கவலைப்படனுமா..? விருந்துக்குப் போறோம்.. போன இடத்தில உடம்பை அலட்டிக்கிறதைப் போல என்ன வேலையிருக்கு..? சாப்பிட்டுச் சாப்பிட்டு தூங்க வேண்டியதுதானே...?"

"அதுக்கில்லை ராதிகா... நீங்களும் கல்யாணமான நாள் முதலா எங்கேயும் போகலை... சென்னைக்கு மறுவீட்டு விருந்துக்கு வந்தவன் காலில கடுதண்ணிய ஊத்திக்கிட்டு.. மூணாம் நாளே உன்னைக் கூப்பிட்டுகிட்டு ஓடி வந்திட்டான்... இப்ப திருநெல்வேலிக்கு போறிங்க... இருந்து நாலு இடத்தை சுத்திப் பார்த்துட்டு வரலாமில்ல..? அதுக்க... தேன்நிலவு... அது இதுன்னு ஊர் சுத்துதுக... இங்கேதான் அவனுக்கு நகர வழியில்லாம வேலை குமிஞ்சு கிடக்கே.. விருந்துக்கு போற சாக்கிலயாவது நாலு இடத்தை கண்ணில காட்ட மாட்டானான்னு நினைச்சேன்.. உனக்கு காய்ச்சல் வந்திருச்சு..."

மேகலாவின் அதீத அக்கறையில் கரைந்து போனாள் ராதிகா... என்ன மாதிரியான பாசம் இது என்று அவள் மனம் பொங்கியது...

முதல் நாளும் இப்படித்தான்.. பெற்ற மகளை மருமகளுக்காக கண்டித்தாள்... மருமகளுக்காக மகனிடம் போராடினாள்.. வாதாடினாள்... அவள் காய்ச்சலில் விழுந்ததும் தாயினும் சாலப்பரிந்து சேவைகள் செய்தாள்...

இவளுடைய பாசம் கிடைத்திருக்கும் போது... கை நழுவிப் போகும் காதலை எண்ணி அவள் அழுது.. அந்தத்தாயையும் வருந்த வைக்க வேண்டுமா..?

ராதிகாவின் மனதிலிருந்த அநாதரவான நிலை மறைந்தது... அவளைப் பற்றி கவலைப்படவும் ஒரு ஜீவன் அந்த வீட்டில் இருக்கிறது என்ற நிம்மதியுடன் அன்றிரவு தூங்கிப் போனாள்...

மறுநாள் காலையில் எழுந்தவருக்கு.. காய்ச்சல் ஓடிப் போயிருந்தது...

காற்றாக நானிருந்தால் - உன்
கன்னத்தையே தொட்டிருப்பேன்...

பாலமுரளிக்கு தேவையான உடைகளை அடுக்கி பெட்டியை இறுக மூடினாள் ராதிகா... அறைக்குள் வந்தவன் பெட்டியைப் பார்த்தான்... புருவங்களை உயர்த்தினான்...

"என்னடி செஞ்சு வைச்சிருக்க...?"

"பார்த்தாத் தெரியலை... உங்க டிரெஸ்ஸை பேக் பண்ணியிருக்கேன்..."

அவனை நிமிர்ந்து கூடப் பார்க்காமல் வெடுக்கென்று அவள் பதில் சொன்னாள்... குனிந்திருந்தவளின் இடுப்பில் செருகியிருந்த சேலை முந்தானையின் மீது அவனது பார்வை படிந்தது...

வாகாக புடவையை இழுத்துச் செருகியபடி அவள் வேலை செய்த விதம் அவனை வசீகரித்தது... அவளது பட்டுப் போன்ற வழவழப்பான இடுப்பில் கிள்ளி வைத்தால் என்ன என்று தோன்ற...

'இவ அதுக்காகத்தானே என் கண் முன்னாலே அலப்பறை பண்ணிட்டம் போடுறா...' என்ற கோபம் அவனுக்குள் வந்தது...

அவளிடம் சொன்னால்... அதை மேகலாவிடம் சொல்லி நியாயம் கேட்க்வா என்று பயமுறுத்துவாள் என்பதால்... வேறு வகையாக அவளிடம் தன் கோபத்தை வெளிப் படுத்தினான் பாலமுரளி...

"உன்னை யாரு இந்த வேலையை யெல்லாம் செய்யச் சொன்னது...?"

எரிந்து விழுந்தவனின் எரிச்சலை லட்சியம் செய்யாமல் ஒரு மார்க்கமாக அவனை பார்த்து வைத்தாள் ராதிகா...

"யாரு சொல்லனும்..?"

"நான் சொல்லனும்.. என் டிரெஸ்ஸை எடுத்து வைக்க நீ யாரு...?"

"நான் யாரு..?, தெரியலையே... வேணும்னா.. அத்தையிடம் போய் கேட்டுட்டு வந்து சொல்லவா...?"

'இதைச் சொல்லியே மிரட்டி வைக்கிறாளே...'

"இங்கே பாரு.. என் வேலையைச் செஞ்சுக்க எனக்குத் தெரியும்... நீ ஒன்னும் சேவகம் பண்ணிக்கிட்டுத் திரிய வேணாம்... புரியுதா..?"

"புரியலை..."

"என்னது..?"

"ஆமாம்.. புரியலைன்னு சொன்னேன்.. இந்த ரூமுக்குள்ள என் வேலை.. உங்க வேலைன்னு எதையும் பிரிச்சுப் பார்க்க முடியாது... இது உங்களுக்குப் புரியுதா..?"

அவன் கேட்டதையே அவள் திருப்பிக் கேட்க...

"கொழுப்பாடி..." என்று அவன் பல்லைக் கடித்தான்...

"வேண்டாம்டி... விட்டிரு..."

அவன் எச்சரித்துக் கொண்டிருக்க... அவள் பெட்டியை தயார்செய்து மூடிவிட்டு நிமிர்ந்த ராதிகா அவனை தீர்க்கமாக பார்த்தாள்...

"நீங்க வேண்டாம்ன்னு சொன்னீங்க.. நானும் கேட்டுக்கிட்டு... விட்டுட்டேன்.. இதுக்கு மேல நான் என்ன செய்யனும்னு நீங்க எதிர் பார்க்கறிங்க.. ?"

நிதானமான அவளது கேள்வி அவனைத் தாக்கியது...

"ஏய்ய்... நான் எதைச் சொன்னா.. நீ எதைச் சொல்லிக்கிட்டு வர்ற..."

"பாருங்க... நான் பாட்டுக்கு என் வேலைகளைப் பார்த்துக்கிட்டு இருக்கேன்... சும்மா.. இதைச் செய்யாதே.. அதைச் செய்யாதேன்னு குடைச்சல் குடுத்தா எனக்கு வேற வழியில்லாம போயிரும்..."

"என்னடி செய்வ... ?"

"எங்க வீட்டில செஞ்சதைப் போலச் செஞ்சிருவேன்..."

'இவவீட்டில அப்படி எதைச் செஞ்சா.. ?'

"செய்யேன் யாரு வேணாம்னது..."

"அப்போச்சரி... பஞ்சாயத்தைக் கூட்டி வேண்டியதுதான்..."

"பஞ்சாயத்தா... ?"

"ஆமாம்... பஞ்சாயத்துதான்.. அத்தைதான் பஞ்சாயத்து தலைவர்..."

"அடிப்பாவி... இதைத்தான் நீ உங்க வீட்டிலே செஞ்சியா... ?"

"நான் மட்டுமில்ல... கீதா.. சுந்தர்.. எல்லாமே.. இதைத்தான் செய்வோம்..."

"இதைப் பாருடா.. பஞ்சாயத்து தலைவர் யாரு.. ?"

"அப்பாதான்... ஆனா.. தீர்ப்புச் சொல்றது மட்டும் அம்மாகைக்கு போயிடும்...."

"அதானே பார்த்தேன்..." முரளிக்கு சிரிப்பு வந்து விட்டது...

"என்ன செய்யலாம்.. ?" ராதிகா அவனை மேல்பார்வை பார்க்க... அவனது சிரிப்பு அதிகரித்தது...

"எதையாவது செய்து தொலைடி..."

அவர்கள் கிளம்பிய போது... மேகலா முரளியிடம் ராதிகாவை பத்திரமாய் பார்த்துக் கொள்ளச் சொல்லி எச்சரித்தாள்...

"அக்கா குணம் முன்ன மாதிரியில்லடா முரளி... ராதிகாவைப் பார்த்துக்க..."

"என்னங்கம்மா இது... நம்ம வீட்டுப் பொண்ணைப் பத்தி நாமளே இப்படிப் பேசலாமா... ?"

"தங்கக் கத்திங்கிறதுக்காக... கையை பதம் பார்த்தாப் பரவாயில்லைன்னு கையை வெட்டிக்கலாமா...?"

காரில் கிளம்பும் போது... முரளிக்கும் அந்தப் பிரயாணம் பிடித்தமானதாகவே இருந்தது...

அன்றைய நாளுக்குப் பின்னால்... அவனிடம் தேவையில்லாத வாக்குவாதங்களை ராதிகா வைத்துக் கொள்ளவில்லை... அவளது காய்ச்சலும் குணமாகி விட்டதில் முரளி.. நிம்மதியடைந்தவனாக தன் வேலைகளில் மூழ்கிப் போனான்...

ராதிகா... அவள் வழக்கப்படி... அவனுக்கான வேலைகளை பார்த்துப் பார்த்துச் செய்தாள்... அவன் ஆட்சேபித்தால்... மேகலாவிடம் வழக்கைக் கொண்டு போய் விடுவதாகச் சொல்லி மிரட்டினாள்...

எது எப்படியிருந்தாலும்.. பழையபடியான இயல்பு நிலைக்கு அவள் திரும்பி விட்டதில் முரளிக்கு மகிழ்ச்சிதான்...

பேச்சுக்கு... பேச்சு பதில் பேசும் அவள் குணத்தை அவன் மனதுக்குள் ரசித்தான்... அதற்காகவே அவளிடம் வார்த்தை வளர்ப்பதை வழக்கமாக வைத்திருந்தான்...

துருதுருவென்று... ஒரு இடத்தில் நிற்காமல்... இங்கும்.. அங்குமாய் வளைய வந்து கொண்டிருப்பவளை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது...

அதைப் பார்வையில் கூட வெளிப்படுத்த முடியாமல் திண்டாடிப் போனான்...

'ம்ஹீம்... லேசாய் ஒரு பார்வை பார்த்தேன்னா போதும்... அவ விழுங்கி விடறதைப் போல பார்த்து வைச்சிருவா... அப்புறம் பச்சக்குன்னு பற்றித் தொலைக்கும்... எதுக்கு வம்பு...?'

அவன் விரதம் காத்தான்... அவளும் அவனது விரதத்தை கலைக்க முனையாமல் ஒதுங்கிப் போனாள்...

சிலநேரம்.. அவளது அந்த ஒதுக்கமே அவனுக்குள் எரிச்சலை மூட்டும்... சுள்ளென்று விழுவான்...

"கடனேன்னுதான் எதையும் செய்வியா..?"

"வேற் என்ன செய்ய..? கொடுத்து வைச்சிருந்தாத்தானே உரிமையோட செய்ய முடியும்..?"

அவளிடம் உடனுக்குடனான பதில் சுடச்சுட கிடைத்து விடுவதால் அவன் வாய் மூடிக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது...

அப்போதும்.. அதைப் போலத்தான்.. குனிந்து.. நிமிர்ந்து எதையோ தேடிக் கொண்டிருந்தவளின் அங்க அசைவுகளில் அவன் மனம் லயித்து தொலைத்தது...

அவளது நீண்ட பின்னல்... அவன் மடிமீது இரண்டு முறைக்கு மேல் விழுந்து புரண்டு விலகியதில் அவன் கிளர்ச்சிக்கு ஆளானான்... அவளது பின்னலில் இருந்து வெளிப்பட்ட நறுமணம்... செண்பகப்பாண்டியனைப் போல... பெண்களின் கூந்தலுக்கு எப்படி இந்த நறுமணம் வந்தது என்ற ஆராய்ச்சியைத் தூண்டிவிட்டது...

அவள் குனிந்து.. நிமிர்ந்தபோது... அவன்மீது பட்டதில்.. அவளை இழுத்து அணைத்து மடியில் சரித்துக் கொள்ள வேண்டும் போல மோகம் பொங்கி எழ... அவன் காரை ஓரம் கட்டி நிறுத்திவிட்டான் மோகம் பொங்கி எழ... அவன் காரை ஓரம் கட்டி நிறுத்திவிட்டான்...

"என்ன ஆச்சு..?" அவள் புரியாமல் பார்த்தாள்...

"என்னத்தை நொன்ன ஆச்சுன்னு கேள்வி கேட்கிறவ...? ஏண்டி.. நீ ஒரு இடத்தில அடங்கி உட்காரவே மாட்டியா..? எதுக்கு குனிஞ்சு.. வளைஞ்சு.. நிமிர்ந்து.. மனுசனை இம்சை பண்ணித் தொலைக்கிற..?"

"அதனால கார் ஏதும் குழுங்கிப் போச்சா..?"

"ஏய்ய்.. கடுப்பைக்கிளப்பாதே... பக்கத்தில உட்கார்ந்திருக்கவ ஆடிக்கிட்டு இருந்தா.. ஒரு மனுசன் எப்படிடி நிம்மதியா காரை ஒட்டுவான்...?"

"ஆமாங்க... இது மேடை பாருங்க... நான் பரத நாட்டியம் ஆடறேன்.. இவர் சொல்ல வந்துட்டார்..."

"மேடையில்லை... கார்ன்னு தெரியுதில்ல.. அப்புறமும் எதுக்காக இந்த ஆட்டம் போடற..? அடங்கி உட்காரு..."

"திரும்பவும் ஆடறேன்னு சொன்னா எனக்குக் கோபம் வந்திரும் சொல்லிட்டேன்.. நானும் பார்க்கிறேன்.. என்னவோ சின்னக் குழந்தையை அரட்டுகிறதைப் போல என்னை அரட்டிக்கிட்டே இருக்கீங்க... எதுக்குங்க இந்த

வம்பு..? நான் உங்க பக்கத்தில உட்கார்ந்தாத்தானே இந்தப் பிரச்னை..? பேசாம பின் சீட்டுக்கு போயிடறேன்.. அங்கதான் எனக்கு வசதி..."

"ஆமாண்டி.. உனக்கு பின்சீட் வசதியாத்தான் இருக்கும்.. நீ முதலாளியம்மா.. தெனாவெட்டா பின்சீட்டில் உட்கார்ந்துட்டு வருவ... நான் உனக்கு டிரைவர்... சாரோட்டிக்கிட்டு வருவேன்.."

அவன் அதற்கும் சண்டைக்கு வர... ராதிகா அவனை தீர்க்கமாக பார்த்து வைத்தாள்...

'எதுக்கு இப்ப இவ.. இப்படி பார்வையிடறா...?'

பாலமுரளியின் புருவங்கள் முடிச்சிட்டன...

"வேண்டாத பெண்டாட்டியின் கைபட்டாலும் குற்றம்... கால்பட்டாலும் குற்றம்ன்னு பழமொழியைக் கேட்டிருக்கேன்.. அதை இப்பத்தான் உணர்ந்து அனுபவிக்கிறேன்.. நான் உங்களுக்கு வேண்டாதவதான்.. அதுக்காக இப்படியா படுத்துவீங்க...?"

ராதிகாவின் தீட்சண்யமான பார்வையைத் தாங்க முடியாமல் அவன் பார்வையைத் திருப்பிக் கொண்டான்...

அவள் சொல்வது சரியோ என்று அவனுக்குத் தோன்றியது... அவள் செய்வதெல்லாம் குற்றமாக ஏன் அவனுக்குத் தோன்றவேண்டும்...?

"பிடிக்கலைன்னா திருப்பி அனுப்பிவிட வேண்டியது தானே...?" நிதானமாக கேட்டாள் ராதிகா...

முரளிக்கு சுர்ரென்னு கோபம் வந்துவிட்டது..

'எவ்வளவு தைரியமிருந்தா.. இப்படிப் பேசுவா..?'

"திருப்பி அனுப்புறதா..? யாரை..?" அவன் முகம் சுளித்தான்...

"வேறு யாரை..? வேண்டாத பெண்டாட்டியைத்தான் திருப்பி அனுப்பனும்..", ராதிகா முகம் திருப்பிக் கொண்டாள்...

"அதாவது... உன்னைத் திருப்பி அனுப்பனும்னு சொல்ற..?" அவளை விட நிதானமான குரலில் அவன் கேட்டான்...

"நான்தானே வேண்டாத பெண்டாட்டி.. அப்ப என்னைத்தானே திருப்பி அனுப்பனும்..?"

அடிவாங்கி செவிப்பறைகிழியப் போவது நிச்சயம் என்று அறிந்திருந்தும் அதை எதிர் கொள்ளும் மனோ தைரியத்துடன் இதைச் சொன்னாள் ராதிகா...

"என்னடி சொன்ன...?"

அவன் கர்ஜிக்க... கண்களை இறுக மூடிக் கொண்டு.. அடிக்குத் தயாரானாள் ராதிகா...

அப்படியெதுவும் நிகழாமல் போக.. ஆச்சரியத்துடன் இமைதிறந்து அவனைப் பார்த்தாள்...

அவனோ.. கைமுஷ்டியை மடக்கி.. தன் கோபத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ள முயன்று கொண்டிருந்தான்...

'என்ன்டா இது அதிசயமா இருக்கு.. இவனாவது.. கைநீட்டாமல் இருப்பதாவது...'

அவள் விழி விரிய அவனைப் பார்க்க.. அவனோ.. அவளை அடிக்க முடியாமல் பல்லைக் கடித்தான்...

"காய்ச்சல்ல விழுந்து எழுந்திருச்சவன்னு பார்க்கிறேன்... இல்லைன்னா பல்லைக் கழட்டியிருப்பேன்.."

'ஓ.. அதுதான் விசயமா..? என்னடா.. இவன் இன்னும் பல்லைக் கழட்டலையேன்னு பார்த்தேன்...'

"அம்மா வேற என் கையை கட்டிப் போட்டு அனுப்பியிருக்காங்க..."

'அட.. இந்த சிங்கம்.. பூவேலியில் மாட்டிக்குச்சா...'

"அக்கா கிட்டயிருந்து உன்னைக் காப்பாத்தச் சொன்னவங்க.. நான் உன்னை அடிச்சதைத் தெரிஞ்சா.. என்கூட பேசக்கூட மாட்டாங்க... அதனால நீ பிழைச்சேடி.."

'இப்பவாவது நான் ஸ்ட்ராங்கான சப்போர்ட்டோட இருக்கேங்கிறதை நீ தெரிஞ்சுக்க...'

"உன்னைத் திருப்பி அனுப்பினா எங்கே போகிறதா உத்தேசம்...?"

அவன் கண்கள் இடுங்க கேட்க... அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது...

"எனக்கு வீடா இல்லை...?"

"அது உன் வீடில்லை..."

"அடேங்கப்பா... இதை இவர் சொல்லி நான் கேட்க வேண்டியிருக்கு..."

"வேற யார் சொல்லி... நீ கேட்ப...?"

"இங்கே பாருங்க... இப்படி கிழக்கே போனா மேற்கே.. தெற்கே போனா வடக்கேன்னு பேசி வைச்சீங்கன்னா என்னால பதில் சொல்ல முடியாது..."

"ஆமாமாம்... நீ அமைதியின் சிகரம்தான்... இன்னொருதரம் இப்படிப் பேசி வைச்சே... அப்புறம்... அம்மா சொன்னதுக்காக கூட நான் பார்க்க மாட்டேன்... கொன்னு புதைச்சிருவேன்...."

அவன் கோபத்துடன் பேச... இப்போது அதைத்தானே செய்து கொண்டிருக்கிறாய்... என்று கேட்கத் தோன்றியது ராதிகாவுக்கு....

காரைக் கிளப்பியவன் சற்றுத் தள்ளியிருந்த மரத்தடியில் நிறுத்தினான்... மரத்தடியில் இருந்த இளநிர்கடையில் இளநியை வாங்கி அவளிடம் நீட்டினான்...

போடா நீயுமாச்சு.. உன் இளநியுமாச்சு என்று சொல்லத்தான் அவள் நினைத்தாள்... அதைச் சொல்ல மறந்தவளாக... இளநீரை வாங்கிக் குடிக்க ஆரம்பித்தாள்..

"போதுமா... இன்னொன்னு வேணுமா..?"

அக்கறையுடன் அவன்கேட்ட போது... இவனை புரிந்து கொள்ள இந்த ஒரு ஜென்மம் போதுமா என்றிருந்தது ராதிகாவிற்கு...

98

உன்னிடம் கேட்டுக் கொண்டா...
நான் காதல் செய்தேன்...?

"குச்சு..." அந்தப் பெண்மணி விரட்ட.. அதைப் பற்றிக் கவலைப் படாமல் அவள் கையிலிருந்த கூடையில் நீட்டிக் கொண்டிருந்த வாழைப்பழத்தை கைப்பற்றியது அந்தக் குரங்கு...

"அடடா... குரங்கு பழத்தை எடுத்திருச்சே..."

சொன்னவர்களைப் பார்த்து.. உர்ரென்று உருமி... பற்களைக் காட்டி பயமுறுத்தியது.. அதன் சககுரங்குகள் அருகில் வந்துவிட... பார்வையாளர்கள் உற்சாகமானார்கள்...

ராதிகா அந்தக் குரங்குகளின் சேஷ்டைகளை ரசித்து வேடிக்கை பார்த்தாள்... மரத்துக்கு மரம் தாவுவதைப் போல... பாறைக்கு பாறை தாவிக் கொண்டிருந்த குரங்குகளைக் காட்டி... ராஜிவையும்.. சாதனாவையும் சிரிக்க வைத்தாள்...

"அந்தக் குரங்கைப் பாரேன்... உர்ருன்னு முறைக்குது..."

"யாரைப் போல அத்தை..."

"அதுசரி... பெயரைச் சொல்லிட்டு மாத்து வாங்குறது யாரு...? நானில்ல... உனக்கென்ன.. நீ பத்திரமாப் நின்னுக்குவ... இந்த விளையாட்டுக்கே நான் வரலைடா.."

பத்து வயது ராஜிவிற்கு அவள் சொன்னது புரியாவிட்டாலும்... பெரிய மனிதனைப் போல தலையாட்டினான்... பாறைகளின் நடுவே மரங்கள் அடர்ந்திருக்க... அதன் ஓரமாக ஆறு ஓடிக் கொண்டிருந்தது...

சென்னையில் பிறந்து வளர்ந்த ராதிகாவுக்கு அதைப் பார்க்க பார்க்க தெவிட்டவில்லை... மற்ற ஆறுகளைப் போல இல்லாமல் இது மலைப் பாங்கான இடத்தில் ஓடிக் கொண்டிருக்க... அவள் கரையோர பாறைகளில் கால் பதித்து... நதிநீரில் கால் நனைத்து சிலிர்த்தாள்...

அத்தை... அத்தையென்று... ராஜிவும்.. சாதனாவும் அவளின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு அலைய... இவளும் அவர்களுக்கு சரிக்கு சரியாக.. குழந்தைபோல பேசிவிளையாடிக் கொண்டிருந்தாள்...

"இதுதான் பாபநாசம் ஆறு..."

புதிதாக வந்திருந்தவரைப் போலத் தெரிந்த ஒருவரிடம்.. மற்றொருவர் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க.. கேட்டுக் கொண்டிருந்தவர் தலையை ஆட்டியபடி.. ஆற்றை விட்டுவிட்டு.. ஆற்றில் விளையாடிக் கொண்டிருந்த ராதிகாவை பார்வையிட்டார்...

அந்தப் பார்வையிடலில் முரளிக்கு கொஞ்சம் கூட உடன்பாடில்லை... கூடவந்த கணவனை விட்டுவிட்டு.. கணவனின் அக்கா பெற்ற பிள்ளைகளோடு குதூகலித்துக் கொண்டிருக்கும் ராதிகாவின் செயல் அவனுக்கு உவப்பானதாக இருக்கவில்லை...

அவள் அழகாக இருந்து தொலைத்தாள்.. பச்சைக் கலரில் லேசான மணிவேலைகளுடன் கூடிய சேலை அவளுக்கு பாந்தமாக அமைந்திருந்தது... அதற்கு பொருத்தமாக அவள் போட்டிருந்த பச்சைக்கல் அட்டிகையும்... மரகதக் கல்பதித்த ஜிமிக்கியும் அவள் அழகை கூட்டிக் காண்பித்தன...

இப்படிப்பட்ட அழகோடு இருப்பவள் அவனுடன் நடந்துவர வேண்டுமென்று அவன் எதிர்பார்த்தான்.. அவளது மேனியின் நறுமணத்தை நுகர்ந்தபடி அவளை கடிந்து கொள்ளும் பாவனையில் பேசிக் கொண்டே ஆற்றின் அழகை ரசிக்க வேண்டுமென்று அவன் ஆசைப்பட்டான்...

அதற்கு வழியின்றி... பாலசரஸ்வதி அவனுடன் நடந்துவர ஆரம்பித்தாள்.. போதாக்குறைக்கு அவள் சொந்த பந்தங்களைப் பற்றிப் பேச ஆரம்பிக்க... ராதிகா விலகி நடந்து.. ராஜிவுடனும்.. சாதானாவுடனும் சங்கமித்தாள்...

'கொஞ்சமாவது புருசன் நினைப்பு இருக்கா..?'

அவன் கடுமையாகப் பார்த்துக் கொண்டிருக்க.. ராதிகா குழந்தைகளுடன் விளையாடியபடி அவனை திரும்பிப் பார்த்தாள்... அவள் முகம் சிணுங்கியது...

'வந்த இடத்திலும் முறைப்புத்தானா..? எனக்குன்னு வந்து வாய்ச்சிருக்கானே...'

அவள் குழந்தைகளுடன் விட்ட விளையாட்டைத் தொடர்ந்தாள்...

அவள் பக்கத்தில் போகலாமா என்று முரளி யோசித்தான்.. நினைத்ததை செயல்படுத்த முடியாமல் சரஸ்வதியின் குரல் அவனைத் தடுத்தது...

"அதைத்தான் நானும் சொன்னேண்டா..."

'இது என்னத்தைச் சொல்லியது...?'

ராதிகாவின் பின்னால் பார்வையை போக விட்டுக் கொண்டிருந்த முரளியின் காதினில் சரஸ்வதி பேசிய பேச்சுக்கள் ஏறவில்லை...

அதை உணராமல் பேசிக்கொண்டிருந்த சரஸ்வதியிடம் விளக்கம் கேட்டால் விபரீதப் பின்விளைவுகள் ஏற்படும் என்ற முன்னெச்சரிக்கையுடன்...

"அப்படியாக்கா..?" என்று சொல்லி வைத்தான் முரளி

ராஜராஜனுக்கு மைத்துனனின் நிலையைக் காண்கையில் பரிதாபமாக இருந்தது... இதற்கு முன்னாலும் பலமுறை முரளியுடன் அவர்கள் இந்த இடத்திற்கு வந்திருக்கிறார்கள்...

அப்போதெல்லாம் பாலசரஸ்வதி இந்த அளவுக்கு பாசப்பிணைப்பை காட்டவில்லை... பொதுவாக இது

போன்ற இடங்களுக்கு வந்தால் அவள் கணவனுடன் தான் ஒட்டிக் கொண்டு அலைவாள்.. பாலமுரளியைத் தேடாட்டாள்...

அன்று அவள் பாசத்தைப் பிழிந்து.. பொழிந்து கொண்டிருந்ததின் பின்னணியை அவன் உணராமல் இல்லை...

அது ஒன்றே ஒன்றுதான்... ராதிகாவின் பக்கம் முரளி போய்விடக்கூடாது... மறந்தும் ராதிகாவின் பேச்சைக் கூடப் பேசாமல் அவள் வார்த்தையை வளர்த்துக் கொண்டிருக்க...

"கொஞ்சம் உன் தம்பியின் காதுக்கு ரெஸ்டைக் கொடு சரஸ்..." என்றான் ராஜராஜன்...

செல்லமாக கணவனை முறைத்தாள் சரஸ்வதி...

"உங்களுக்கு பொறாமை..?" அவள் விளையாட்டாய் சொல்ல...

"அதை நீ சொல்கிறயா..?" என்று கேட்டான் ராஜராஜன்...

கணவனின் கண்கள் சொன்ன செய்தியை பாலசரஸ்வதியால் புரிந்து கொள்ள முடிந்தது... அது எப்படித்தான் அவளை அவன் இனம் கண்டு கொள்கிறான் என்ற சூட்சுமம் அவளுக்கு விளங்கவில்லை...

"கேலி பண்ணாதீங்க அத்தான்..." கணவனை கண்டு கொள்ளாதவளாக அவள் சொன்னாள்...

"கேவி பண்ற வயசிலையா நீயும் நானும் இருக்கோம்..? ராதிகாவும் முரளியும் கேவி பேசிக்கிட்டா அதைக் கேட்க நல்லாயிருக்கும்.. நீயும்.. நானும் பேசிக்கிட்டா சகிக்காது." ராஜாராஜன் பட்டென்று பேசிவிட்டான்...

என்னதான் கண்டு கொள்ளாதவளைப் போலச் சுற்றி வளைத்தாலும் கணவன் அதைப் போட்டு உடைத்து விட்டானே என்றிருந்தது பாலசரஸ்வதிக்கு..

கிடைத்தது வாய்ப்பென்று பாலமுரளி ராதிகாவை நோக்கிப் போய்விட.. பாலசரஸ்வதி ராஜாராஜனிடம் தனியாக மாட்டிக் கொண்டாள் அவன் நிதானமாக மனைவியை... ஏற... இறங்கப் பார்த்தான்...

பாலசரஸ்வதிக்கு என்னவோ போல இருந்தது... இப்படிப் பட்ட அழகான சூழ்நிலையில் கணவனின் இந்த மாதிரியான பார்வைக்கு ஆளாக நேர்ந்ததில் அவள் நொந்து போனாள்...

"உன் தம்பி எதுக்கு வந்திருக்கார் சரஸ்..?" ராஜாராஜனின் பார்வை அவளைத் துளைத்தது...

"விருந்துக்கு.." கிணற்றிலிருந்து பேசுவதைப் போல சப்தமே இல்லாமல் சொன்னாள் சரஸ்வதி...

அவள்குரல் அவளுக்கே கேட்கவில்லை.. பேச வாயும் வரவில்லை... எப்போதுமே கணவனின் முன்னால் தலைநிமிர்ந்து நிற்பதைத்தான் அவள் விரும்புவாள்.. அவள் பிறந்த வீட்டிலிருந்து கொண்டு போயிருந்த சீர்வரிசை அப்படித்தான் அவளை நிற்கவைத்துக் கொண்டிருந்தது..

என்று முரளியின் திருமணப் பேச்சு ஆரம்பமாக ராதிகாவுடனான அவனது திருமணம் உறுதியானதோ... அன்றிலிருந்ததுதான் அவள் அடிக்கடி கணவனிடம் திட்ட நேர்ந்தது...

"வெறும் விருந்துக்கு வரலை.. கல்யாண விருந்துக்கு வந்திருக்கார்.."

"அதுக்கென்னங்க இப்ப..?"

"ஏண்டி.. புதுசாக் கல்யாணமானவர்.. கூட வந்திருக்கற புதுப் பெண்டாட்டிகிட்ட தனியாய் பேசனும்னு நினைப்பாரா.. மாட்டாரா..? அந்த நினைப்பு உனக்கிருந்தா.. நீ உன் தம்பி கூட கை கோர்த்துக்கிட்டு... அவர் பெண்டாட்டியை நம்ம பிள்ளைகூட கோர்த்து விடுவியா...?"

"ஏங்க.. என்தம்பி கூடப் பேசிக்கிட்டு வந்தா.. அதுஒரு குத்தமா..?"

"குற்றம்தான்... போனவாரம் கூட தேனூத்துக்கு போயிருந்ததோம்.. நீயும் இரண்டு நாள் அங்கே தங்கி சீராடி விட்டு வந்த.. அப்போப்பேசாத பேச்சையா இப்பப் பேசப்போற...?"

ராஜாராஜன் கிடுக்கிப்பிடி போட்டதைப் போல கேள்விகளை கேட்டு வைத்த பின்னால் சரஸ்வதி முரளியின் பக்கம் போக முனையவில்லை...

அதனால்... தடுப்பார் எவருமின்றி.. அவன் ராதிகாவை நோக்கிப் போனான்... அவன் வருவதைக்கூடக்

கவனிக்காமல் அவள் நீரை வாரி குழந்தைகளின் மீது இறைத்து விளையாடிக் கொண்டிருந்தாள்...

"ராஜிவ்... சாதனா..." என்று அழைத்தான் முரளி...

"என்ன மாமா.." என்று அவர்கள் கோரஸாக ராகம் போட்டார்கள்...

"அம்மா கூப்பிடுது... ஒடுங்க..."

அவர்கள் பாலசரஸ்வதியைப் பார்த்து ஒடிவிட... அப்படி ஓட முடியாமல் நின்று கொண்டிருந்த ராதிகாவின் பக்கம் திரும்பினான் பாலமுரளி...

சேலையில் குழந்தைகள் வாரி இறைத்திருந்த நீரினால்.. சேலை நனைந்து உடலோடு ஒட்டியிருக்க.. முகத்தில் படிந்திருந்த நீர் திவலைகளுடன் ஒரு மோகினியைப் போல நின்று கொண்டிருந்தாள் ராதிகா.. அவனுக்குள் மோகத்தீ கனன்று எழுந்தது..

அவளை விழுங்குவதைப் போல பார்த்தான் பாலமுரளி...

'இந்த பார்வைக்கொன்னும் குறைச்சலில்லை...' ராதிகாவின் இதயம் படபடத்தது...

"நீ என்னைத்தான கல்யாணம் பண்ணியிருக்க..?" அவன் வழக்கமான நிதானத்துடன் கேட்க.. அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

"அதுகூட மறந்து போயிருச்சா..? விளங்கிரும்.." அவள் வெடுக்கென்று முகம் திருப்பிக் கொண்டாள்...

"எனக்கு மறக்கலைடி... உனக்கு மறந்து போக்கு..."

ஆற்றோரமாக இருந்த பாறையின் திட்டில் அவன் அமர்ந்து கொண்டான்.. அங்கே நிற்பதா.. இல்லை போவதா.. என்று ராதிகாவிற்கு பெருத்த குழப்பமாகி விட்டது...

"மறக்கிற உறவுதான் இந்த உறவா..?" அவள் எரிச்சலுடன் கேட்டாள்...

அந்த மாலை நேரக் காற்றில் விசிராந்தியாக அவன் பாறை மீது அமர்ந்து கால் மேல் கால்போட்டுக் கொண்ட கம்பீரத்தில் அவள் மனம் மயங்கியது...

காற்றோடு கலைந்தாடிய அவனது முடியோடு அவள் மனமும் சேர்ந்து ஆடியது... அவனது வாட்ட சாட்டமான தோற்றத்தில் எப்போதும் போல அப்போதும் அவள் நிலை குலைந்தாள்...

அவர்களைக் கடந்த கல்லூரி மாணவிகளில் சிலர்.. பாலமுரளியைப் பார்த்து தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டதில் ராதிகாவுக்குள் கோபம் கிளர்ந்தது...

'எதுக்கு இப்படிப் பார்க்கிறாளுக...'

அவள் முகம் கடுக்க.. அவன் விழிகள் மின்னின...

"உறவைச் சொல்லிக்கிட்டு தள்ளி நின்னா... இப்படித்தான்..." என்றான்...

'இவன் என்ன சொல்கிறான்..?' அவளுக்கு தலையை பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது...

'இவன் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளச் சொல்கிறானா..?'

அவன் சொன்னால்தான் உட்கார வேண்டுமா என்ற உரிமையுணர்வு மனதில் தலை தூக்க... அவனருகில் பாறைத்திட்டில் வாகாக அமர்ந்து கொண்டு மறக்காமல் அந்த மாணவிகளை அர்த்தம் பொதிந்த பார்வையொன்றையும் பார்த்து வைத்தாள் ராதிகா...

'இவன் என்னுடையவனாக்கும்...'

அவள் விழிகள் சொல்லியும்.. அந்த மாணவிகள் விடாமல் அவனைப் பார்க்க.. அவளின் முகம் இன்னும் கடுத்தது... அதைக் கண்ட முரளி உல்லாசமாகச் சிரித்தான்...

"எதுக்கு இப்பச் சிரிக்கறிங்க...?" அவள் எரிச்சல் பட்டாள்...

"கண்ணுக்குப் பிடிச்சிருந்தா பார்க்கிறவங்க.. பார்க்கத்தான் செய்வாங்க.. உனக்கெதுக்கு பொறாமை..?"

"பொறாமையா.. எனக்கா... ஹ..."

அலட்சியம் போலச் சொன்னாலும்.. ராதிகாவின் பார்வை அந்தப் பெண்களின் மீதுதான் இருந்தது...

அந்தச் சமயம் பார்த்து.. ஒரு இளைஞன் ராதிகாவை ஆர்வமாக பார்த்து வைக்க.. இப்போது முரளி முகம் கடுத்தான்...

"ராஸ்கல்ஸ்.. இவனுக எல்லாம் இயற்கையை ரசிக்கவா வர்றானுக... சைட் அடிக்கத்தான் வர்றானுக..."

அவன் பல்லைக் கடிக்க.. ராதிகா.. களுக்கென்று சிரித்தாள்...

வெகு நாள்களுக்குப் பின்னால்.. மனம் விட்டுச் சிரித்த அவள் சிரிப்பை ரசித்துப் பார்த்தான் முரளி...

"இந்தப் புன்னகை என்ன விலை..?" அவன் கன்சிமிட்டி பாட...

"உன் இதயம் சொன்ன விலை..." என்று கன்னம் குழிய சிரித்துப் பாடினாள் ராதிகா...

அன்றைய இரவின் தனியறையில்.. ராதிகாவை ஒட்டிப் படுத்திருந்த பாலமுரளியின் உடல் சூடானது...

தேனூத்தில் அவனறையில் இருந்த கட்டிலில் ஆறு நபர்படுத்து உறங்கலாம்.. அந்த அளவுக்கு அது பெரியதாக இருக்கும்..

ராஜராஜனின் வீட்டு விருந்தினர் அறையில் அப்படி இல்லை... சிறிய கட்டிலில் விலகிப் படுப்பது சாத்தியமில்லாமல் போக.. அவன் ராதிகாவுடன் உரசிக்கொண்டபடிதான் படுக்க நேர்ந்தது...

ஒருசிறு அனல் பொறி இருந்தாலும் போதும்.. மோகத்தீ பற்றியிருக்கும்... அந்தப் பொறியை மூட்ட ராதிகா முனையவில்லை...

மாலை நேரத்து மயக்கம் பற்றி...
மன்னவனே..! நீ அறிவாயா...?

ஒரு சிறு தொடுகை போதும்... முரளி அவளை ஆக்ரமித்திருப்பான்.. மோகக்கடலில் மூழ்கி முத்தெடுத்திருப்பான்.. ஆனால்.. அந்தத் தொடுகையை உணர்ந்த ராதிகா விரும்பவில்லை...

அவளுக்கு அவன் வேண்டும்தான்.. ஆனால்.. அது சூழ்நிலையின் காரணமாக நிகழ்ந்த நிகழ்வாக இருக்கக் கூடாது.. முழு மனதாக அவனை.. அவளுக்கு அவன் தரவேண்டும்...

சென்னையில் அவளைத் தொட்டான்தான்.. அது அவளை சூறையாட வேண்டும் என்பதற்காக...

அதன் பின்னாலும் ஒருமுறை தொட்டான் தான்.. அது.. அவனுக்கான உடல் தேவைக்காக...

அவளுக்கே.. அவளுக்கென்று.. முழுமனதாக.. அவனை ஒருநாளும் அவன் ஒப்படைத்ததில்லை...

ஒருநாள்.. தென்றலைப் போல வந்து அவன் மனக்கதவைத் தொட்டுத் தட்டித் திறந்து சென்றுவிட்டான்..

அவனைத் தேடித்தேடி உருக்குலைந்து போனவளால்.. அவனைத் தொட்டுச் சொந்தம் கொண்டாட முடியவில்லை...

அவள் தேடாத ஒரு பொழுதில் வந்து சூறாவளியாய் அவளை சின்னா பின்னமாக்கினானே.. அப்போது அந்தத் தொடுகையை உணர்ந்து ரசிக்கும் நிலையில் அவளில்லை...

திருமணம் உறுதியான தினத்தில் அவளை மோகித்து தொட்டானே... அப்போது.. அவன் கேட்டதைக் கொடுக்கும் மனநிலையில்தான் அவளிருந்தாள்... திருமணம் முடியுமா.. முடியாதா... என்ற மனப்போராட்டத்தில் அவனுடன் முழு மனதாகக் கலக்கும் நிலையில் அவளில்லை...

இன்று அவன்.. அவளின் கணவன்.. அவளுக்கே.. அவளுக்கென்று உரிமையானன்.. அவனை அவளது உடலும்.. மனமும்.. தேடுகிறது.. அந்தத் தேடுதலை அவள் உணர்த்தியும்... அவன் அவளை விலக்கி வைத்து விட்டான்...

இது அநியாயம் அல்லவா..?

இதமான இரவுகள் வந்து போகும் போது.. ஏதாவது ஒரு நொடியில் அவனை அவளுக்கென்று கொடுத்து விடமாட்டானா என்று அவள் ஏங்கித் தவித்திருக்கிறாள்..

அப்போதெல்லாம் அவன் அவளது கைக்கெட்டும் தூரத்தில் தான் இருந்தான்.. மனதளவில் வெகு தொலைவில் இருந்தான்...

அவனாக.. அவனைக் கொடுக்காமல்.. அவள் தொட்டு.. அவனது மோகத்தை தட்டி எழுப்பி.. அவனுடன் கூடுவதில் அவளுக்கு துளிக்கூட சம்மதமில்லை...

ராதிகா கண்களை மூடித் தூங்க முயன்றாள்.. வெகு அண்மையில் இருந்த அவனின் வாசம் அவளுக்கு பரிச்சயமானதாக ஆகி விட்டிருந்தது.. அவனது மூச்சுக் காற்று அவள் கன்னத்தின் மீது படிந்ததில் அவள் இன்பமான இம்சைக்கு ஆளானாள்...

முரளி.. பாதி இமைகளை மூடித்திறந்து.. அந்த இடைவெளியில் அவளைப் பார்வையிட்டான்... அவள் தூங்குவதைப் போல பாசாங்கு செய்து கொண்டிருக்க.. அவனுக்குள் ஏமாற்றம் தோன்றியது...

'எப்படித் தூங்கறான்னு பாரு.. கொஞ்சமாவது புருசன்காரன் பக்கத்திலதான் படுத்திருக்கான்கிற நினைப்பு இவ மனசில் இருக்கா.. ?'

அவனுக்கென்ன தெரியும்.. ? அவள் அப்போது அவனைப் பற்றிய நினைவுடன்தான் தூக்கத்தோடு போராடிக் கொண்டிருக்கிறாள் என்பது...

அவள் அசையாமல் படுத்திருக்க.. அவன் பெருமூச்சுடன் எழுந்து பால்கனிக்கு வந்தான்.. ராதிகா புரண்டு படுத்து நிலவொளியில் பால்கனியில் நின்று கொண்டிருந்தவனைப் பார்த்தாள்..

அவள் மனம் பொங்கியது...

"வெண்ணிலா நேரத்திலே..
வேணு கானம்...
மேல்மாடி முற்றத்திலே...
நீயும்.. நானும்..."

எங்கிருந்தோ வந்த பி.சுசிலாவின் தேன்குரல்... குழைந்து அவர்களின் மனதில் நுழைந்தது...

அந்த இரவு நேரமும்.. நிலவொளியும்.. பாடலும்.. அவன் மனதை ஏதோ செய்ய.. அறைக்குள் திரும்பிப் பார்த்தான்... அவள் அவசரமாகக் கண்களை மூடிக் கொண்டு.. தூங்குவதைப் போல நடித்தாள்...

'பாவி...' அவன் பொருமினான்...

'எப்பவுமே இவ இப்படித்தான்... என் உணர்வுகளோட விளையாடறதுதான் இவளுக்கு பொழைப்பா போச்சு...'

அந்தச் சின்னக் கட்டிலில் அயர்ந்து உறங்குவதைப் போல நடித்துக் கொண்டிருந்த ராதிகாவின் இமையோரம் வழிந்த கண்ணீரைப் பற்றி அவனுக்கு எதுவும் தெரியாது...

"கட்டிலில் பாடலாம்...
கைகளில் ஆடலாம்...
தொட்டுத் தொட்டுப் பாடினால்..
தொட்டில் வரை போகலாம்..
தொடங்கட்டும் கண்ணனின்
லீலைகள் எல்லாம்..."

பாடல் ஒலித்துக் கொண்டிருக்க.. அதற்கு மேல் கேட்க முடியாமல் உள்ளே வந்து பால்கனிக் கதவைச் சாத்தித் தாழிட்டான் பாலமுரளி...

'ஊஹும்... இது வேலைக்கு ஆகாது...'

அவன் சந்தடி செய்யாமல் கட்டிலில் இருந்த போர்வையையும்.. தலையணையையும் உருவி தரையில்

விரித்துப் படுத்தான்.. ராதிகா அதைத் தடுக்கவில்லை.. தெரியாதவளைப் போல இருந்துவிட்டாள்...

அங்கிருந்த நாள்களில் அவர்கள் ஊரைச் சுற்றிப் பார்த்தார்கள்.. திருச்செந்தூர் முருகனைத் தரிசித்து விட்டு வந்தார்கள்... கனகராஜீம்... அகிலாவும்.. மருமகளின் தம்பியென்று.. விழுந்து விழுந்து உபசரித்தார்கள்... மூன்று நேரமும் வகைவகையான பதார்த்தங்கள் அணிவகுத்து வர.. விருந்து சாப்பிட்டு.. சாப்பிட்டு.. பாலமுரளி ஒரு சுற்று பெருத்து விட்டான்...

முதல் நாளுக்குப் பின்னர்.. ராதிகாவின் அருகில் படுக்கும் பரிட்ச்சார்த்த முயற்சியில் முரளி இறங்கவில்லை.. ராதிகா தூங்கி விட்டதாக அவன் நினைக்கும் வரை பால்கனியில் நடைபயில்வான்.. அவள் தூங்கி விட்டதைப் போல நடிக்க ஆரம்பித்ததும்... அறைக்குள் வந்து.. தரையில் போர்வையை விரித்து படுத்து உறங்கி விடுவான்..

ராதிகா.. கனகராஜிடமும்.. அகிலாவிடமும் மரியாதையுடன் நடந்து கொண்டாள்... ராஜராஜனிடம் பாசமாக இருந்தாள்... குழந்தைகளுடன் விளையாடினாள்.. பாலசரஸ்வதியைத் தான் அவளால் அணுக முடியவில்லை..

"அண்ணி..." என்று அவள் பேச முனைந்த போதெல்லாம் முகத்தில் முள்ளைக் கட்டிக் கொள்ளாத குறையாக அவளை முறைத்தபடி விலகிச் சென்றாள் பாலசரஸ்வதி...

விலகிப் போனவள்.. அப்படியே இருந்திருக்கலாம்.. அதை விட்டுவிட்டு.. பாலமுரளியிடம் போட்டுக் கொடுத்தாள்.

"முரளி..."

"என்னக்கா..."

"நான் உன்கிட்ட நகை வாங்கிக் கொடுன்னு கேட்டேனாடா..?"

விருந்துக்கு வந்த இடத்தில் தமக்கை எதற்காக இதைக் கேட்கிறாள் என்று புரியாமல் அவள் முகம் பார்த்தான் பாலமுரளி...

"எதுக்குக்கா இப்படிக் கேட்கிற..?"

"உன் பெண்டாட்டி இப்படிச் சொல்கிறாடா.."

பாலசரஸ்வதி சோகமாய் முகத்தை வைத்துக் கொள்ள.. பாலமுரளியின் முகத்தில் கடினம் வந்தது..

"யாருகிட்டச் சொன்னா..? உன்கிட்டயா..?"

"என்னிடம் சொல்லியிருந்தாப் பரவாயில்லையே.. என் மாமியார்கிட்டச் சொல்றாடா..."

"என்னது...??.."

பாலமுரளி ரௌத்ரமானான்.. பாலசரஸ்வதி.. விடாமல் அவனைத் தூண்டி விட்டாள்...

"ஆமாண்டா முரளி.. நான் நம்ம வீட்டுக்கு வந்திருந்தப்ப.. அவ நகையைப் பார்த்து ஆசைப் பட்டுக் கேட்டேனாம்.. அவ கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டாளாம்.. உன்னிடம் வந்து அழுதேனாம்.. நீ போனாப் போகுதுன்னு அதே போல ஒருநகை செட்டை வாங்கிக் கொடுத்தியாம்..."

"இப்படியா சொன்னா..?"

"ஆமாண்டா.. அவ உண்மையைத்தான் சொன்னா.. அதைக் கேட்டுட்டு என் மாமியார் என்னை இளப்பமாய் பார்த்தாங்களே ஒரு பார்வை... என் மனசு துடிச்சிருடா முரளி.. எனக்கு அந்த நகைசெட்டே வேணாம்.. நீ போகும் போது கொண்டு போயிரு..."

வராத கண்ணீரைத் துடைத்தபடி பாலசரஸ்வதி பேச..

"ராதிகா..." என்று கர்ஜித்தான் முரளி...

அவர்களின் தனியறையில் அவர்கள் பேசிக் கொள்வது வெளியே கேட்காது... என்பதினால்தான் அங்கே வந்து பாலசரஸ்வதி போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.. அதையறியாதவளாக...

"என்னங்க..?" என்று வந்து நின்ற ராதிகாவின் கன்னத்தில் மாறி மாறி அறைகளை விட்டான் பாலமுரளி

ராதிகா துடித்துப் போய் விட்டாள்...

வலியும்... வேதனையும் ஒரு புறம் என்றாலும்.. அதை ஆனந்தமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பாலசரஸ்வதியின் முன்னாலேயே இரண்டாம் முறையாக அவன் அடித்து வைக்கிறானே என்ற வேதனை மறுபுறம் அவளை வாட்டியது...

"என்ன தைரியம்டி உனக்கு..."

கோபத்தில் முகம் ஜிவுஜிவுக்க நின்றிருந்தவனின் ரௌத்ரம் வழக்கம் போல அவளுக்கு பயத்தைக் கொடுத்தது

"சரஸ்..."

அறைக்கு வெளியே ராஜராஜனின் குரல் கேட்க.. எங்கே அவன் அறைக்குள் வந்து ராதிகாவின் நிலையைப் பார்த்து விடுவானோ... என்ற பதட்டத்துடன் பாலசரஸ்வதி அங்கிருந்து ஓடிவிட்டாள்...

அடி தாங்க முடியாமல் கன்னத்தை அழுந்தப் பிடித்தபடி கட்டிலில் அமர்ந்து விட்டவளை ரௌத்ரம் குறையாமல் முறைத்துப் பார்த்தான் முரளி..

"சொல்லிக் காட்டறியா..?" அவன் கொந்தளிக்க...

"எதைச் சொல்லிக் காட்டினேன்..?" என்று கேட்டாள் ராதிகா...

பாலமுரளியின் புருவங்கள் முடிச்சிட்டன... அடி வாங்கிய அந்த நிலையிலும்.. நிமிர்வாக அவள் கேட்ட விதம்.. தேனூத்தில் நடந்த சண்டையினை அவன் நினைவுக்கு கொண்டு வந்தது...

அன்றும் அவள் அப்படித்தான் நிமிர்ந்து நின்றாள்.. நிற்க முடியாமல் தள்ளாடிய நிலையிலும்.. தன் பக்கமிருந்த நியாயத்திற்காக போராடினாள்..

இன்றும் அதைப் போலவே குரல் கொடுக்கிறாள் என்றால் ஏதோ இருக்கிறது என்று அவன் மனம் சொன்னது..

"அக்காவுக்கு நான் நகை வாங்கிக் கொடுத்ததை நீ சொல்லிக் காட்டல...?"

"இல்லை..."

"பொய் சொல்லாதே..."

"நான் ஏன் பொய் சொல்லனும்.. ?"

"அக்காவோட மாமியார்கிட்ட நீ சொன்னதை அக்கா கேட்டுருச்சு..."

"எப்ப.. ?"

"இப்ப..."

"உங்களுக்கு ஒன்னு தெரியுமா.. ? காலையிலிருந்தே அவங்க வீட்டில இல்லை.. பக்கதூரில இருக்கிற அவங்க சொந்தக்காரங்க வீட்டு விசேசத்துக்கு போயிருக்காங்க..." நிதானத்தைக் கைவிடாமல் சொன்ன ராதிகாவின் பார்வையில் குற்றச்சாட்டு தெரிந்தது...

"என்னடி சொல்கிற.. ? அப்ப.. அக்கா சொன்னது.. ?"

"பொய்யின்னு என் வாயாலே நான் சொல்ல மாட்டேன்.... நான் நகையைப் பத்தி யாருகிட்டயும்... எதுவும் பேசல.. சந்தேகமிருந்தா.. நீங்க இந்த வீட்டில இருக்கிற அத்தனை பேருகிட்டயும் விசாரிச்சுக்கலாம்..."

அதற்கு மேல் பேச விருப்பமில்லாதவளைப் போல ராதிகா சுருண்டு படுத்துவிட்டாள்...

அவளுக்கு காய்ச்சல் வந்து விடக்கூடாதே என்று பாலமுரளி கவலைப்பட்டான்... அன்று இரவு அவர்கள் தேனூத்திற்கு கிளம்புவதாக இருந்தது... இரவுப் பயணம் வேண்டாமென்று ராஜராஜன் சொன்ன போது.. மறுநாள் மில்லில் முக்கியமான வேலைகள் காத்திருப்பதாகச் சொல்லிவிட்டான் முரளி...

அப்படியாவது.. அன்றைய இரவில் பால்கனியில் நடைபயில்வதிலிருந்து தப்பிக்கலாமே என்ற அபிலாஷை அவனுக்கு...

அப்பேற்பட்ட சூழ்நிலையில் காய்ச்சல் வந்த உடம்போடு ராதிகாவை அழைத்துச் சொன்று மேகலாவின் முன் நிறுத்தினால் அவள் அவனைச் சும்மா விடமாட்டாள் என்ற நினைவுடன் அவன் தன்னையே நொந்து கொண்டான்..

'அக்காதான் அப்படிச் சொன்னா... எனக்கு எங்கே போச்சு புத்தி.. அவசரப்பட்டு இவளை அடிச்சு நொறுக்கிறதே எனக்குப் பிழைப்பாய் போச்சு...'

மாடியை விட்டு அவன் இறங்கிய போது எதிர் பட்ட ராஜராஜன் வீட்டில் யாருமில்லை என்பதை உறுதி செய்தான்...

"என்ன முரளி.. வீடே வெறிச்சுன்னு இருக்கில்ல.. பசங்கரெண்டும் ஸ்கூலுக்கு போயிருச்சுக.. அம்மாவும்.. அப்பாவும் காலையிலேயே பக்கத்து கிராமத்துக்கு போயிட்டாங்க.. நெருங்கின சொந்தக்காரங்க வீட்டு விசேசம்... போகாம தட்டிக் கழிக்க முடியாது... இப்ப வந்துருவாங்க... ராதிகா எங்கே... ?"

அடியைவாங்கிக் கொண்டு அறையில் படுத்திருக்கிறாள் என்று சொல்ல முடியாமல் பால சரஸ்வதியை உறுத்துப் பார்த்தான் முரளி...

'நீயா.. இப்படிச் செய்தது... ?'

அந்தப் பார்வையின் கேள்வியைத் தாங்க முடியாமல் அவள் விக்கித்துப் போனாள்...



சொந்தமென்று உன்னை மட்டும்...
நினைத்ததெந்தன் நெஞ்சம்...

ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்திருந்தன... மழை வருவதற்கான ஆரம்ப அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்க.. எங்கோ பெய்த மழையின் மண் வாசனையை நுகர்ந்தான் பாலமுரளி...

"மழை வரப் போறது மாதிரியிருக்கில்லக்கா..."

அவன் கேட்டதற்கு பாலசரஸ்வதியால் பதில் சொல்ல முடியவில்லை.. அவள் தலை கவிழ்ந்திருந்தது...

"அக்கா வாயேன்.. மொட்டை மாடியில காத்தாடப் போசிட்டு வரலாம்..."

சற்று முன்னால் பாலமுரளி கூப்பிட்ட போது.. சப்த நாடியும் ஒடுங்கினவளாகத்தான் அவள்.. தம்பியைப் பின் தொடர்ந்தாள்..

அதுநேரம் வரை அவன் எங்கேயிருக்கிறானோ.. அந்தப் பக்கம் போகாமல் வேலையிருப்பதைப் போல ஒளிந்து நடமாடிக் கொண்டிருந்தவளுக்கு.. தப்பிக்க மார்க்கமில்லாமல் போய் விட்டது...

அகப்பட்டுக் கொண்ட குற்ற உணர்வுடன் அவன் முகம் பார்க்காமல் வேறு திக்கில் பார்த்தபடி அவள் அசையாமல் அமர்ந்திருந்தாள்...

"உனக்கு நினைவிருக்காக்கா.. மழை வந்தால் உனக்கும்.. எனக்கும் அவ்வளவு கொண்டாட்ட மாயிருக்கும்... மழைத்தண்ணியில நனைஞ்சு ஆட்டம் போடுவோம்... ஒடுற தண்ணியில காகிதக் கப்பல் விடுவோம்..."

அந்த நாளின் ஞாபகத்தில் அவன் கரைந்து விட.. பாலசரஸ்வதியின் கண்களில் லேசாக கண்ணீர் திரையிட்டது...

அப்போதெல்லாம் மாணிக்கவாசகம் உயிரோடிருந்தார்.. அவளும்.. பாலமுரளியும் உடன் பிறந்த பாசத்தோடு ஒட்டிக் கலந்த தோழமையுடன் குதுகலமாக இருந்தார்கள்...

"எனக்கு நல்லா நினைவிருக்குக்கா.. ஒரு சமயம்.. மழைக்காலத்திலே ஒரு பொண்ணு வந்து சாப்பிட வழியில்லைன்னு உன்கிட்ட அழுதுச்சு.. நீ டக்குன்னு உன் கையில இருந்த தங்க வளையலைக் கழட்டிக் கொடுத்துட்ட..."

சரஸ்வதிக்கும் அந்த நினைவு வந்தது...

"அப்பாவும்.. அம்மாவும் உன்கிட்ட நகையெங்கேன்னு கேட்டாங்க.. காணமப் போயிருச்சுன்னு நீ பொய் சொன்ன..."

சரஸ்வதி அப்படித்தான் சொன்னாள்.. நகையைத் தொலைத்து விட்டதாக சொல்லிவிட்டு.. பாவம் போல முகத்தை வைத்துக் கொண்டு நின்றாள்...

"அப்ப நீ சொன்ன பொய்க்கும்.... இப்ப நீ சொல்லியிருக்கிற பொய்க்கும் எத்தனை வித்தியாசம்..! பார்த்தியாக்கா..."

முரளி... சரியான கேள்வியாக கேட்டுவிட...

"முரளி..." என்று அதிர்ந்து நிமிர்ந்தாள் பாலசரஸ்வதி....

. "அன்னைக்கும் ஒரு பொண்ணுக்காகத்தான் நீ பொய் சொன்ன.. இன்னைக்கும் ஒரு பொண்ணுக் காகத்தான் நீ பொய் சொல்லியிருக்க... அந்தப் பொய் அந்தப் பொண்ணைக் காப்பாத்துச்சு... இந்தப் பொய்..?"

முரளியின் கேள்வியில் இருந்த கூர்மை... குத்தீட்டியாக பாலசரஸ்வதியின் இதயத்தில் பாய்ந்தது...

"நீ இப்படிச் செய்யலாமாக்கா..? உனக்கு ராதிகாவைப் பிடிக்கலைங்கிறதுக்கா... அவளைப் பத்தி என்ன வேணும்னாலும் சொல்லிடுவியா..? அவ என்கிட்ட அடிவாங்கித் துடிக்கிறதைப் பார்க்கிறதில உனக்கு அவ்வளவு சந்தோசமா..? அப்படிப்பட்ட குரூரகுணமா உனக்கு..?"

இதற்குப் பதில் தம்பி தன்கையால் நான்கு அடிகளைக் கூட அடித்து விடலாமே என்று குறுகிப் போனாள் சரஸ்வதி...

"உன்னைப் பத்தி ஒருவார்த்தை குறைவா அவ பேச மாட்டாக்கா... நீ அவமேல பழி சொன்னா... தந்நிலை விளக்கம் தான் சொல்லுவா... உன்மேல குற்றம் சொல்ல மாட்டா... அவளை அவ வீட்டில அப்படி வளர்த்திருக்காங்க.... அதைவிட பத்து மடங்கு உயர்வாத்தான் உன்னை அம்மாவும்.. நானும் வளர்த்தோம்.. நீ மட்டும் ஏன்க்கா இப்படி இருக்க..?"

"போதும்டா..." அவள் அழுதுவிட்டாள்...

"நீ பெரிய வீட்டில பிறந்த பொண்ணுன்னு பெருமை பேசினா மட்டும் போதாது... உன் மனசும் பெரிசாய் இருக்கனும்.. இதைப் போல பேசிவைச்சின்னா உன்னை சின்னப்புத்தி படைச்ச பொண்ணுன்னு எல்லாரும் பேசிர மாட்டாங்களா...?"

"என்னைப் பேசியே கொல்லாதேடா..."

"உன்னை வருத்தனும்னு நான் இதைப் பேசலை.. நீ திருந்தனும்னு தான் இதைப் பேசறேன்... என் கூடப் பிறந்தது நீ மட்டும்தான்.. அதைப்போல.. உன் கூடப் பிறந்தவனும் நான் மட்டும்தான்... ராதிகா என் பெண்டாட்டி.. என்னில் பாதி.. அவமேல நீ பழி சொன்னா.. அது என்னைச் சொல்கிறதைப் போல... இது ஏன் உனக்குப் புரியல..?"

"ஏதோ கோபத்திலே... தப்பு பண்ணிட்டேன்..."

"இதை மத்தவங்க செய்யலாம்.. நீ செய்யக்கூடாது.. அவ என்ன குற்றம் செஞ்சா..? என்னைக் கல்யாணம்

பண்ணிக்கிட்டது ஒரு குற்றமா..? அதுக்காக அவளை பழிசொல்வியா...?"

"இனி இதுபோல நடக்காதுடா..."

"நடக்கக் கூடாது.. அவ்வளவுதான் நான் சொல்வேன்.. அவளை நீ விலக்கி வைச்சா.. அது என்னை நீ விலக்கி வைச்சதைப் போலத்தான்... ஒற்றை உடன் பிறப்போட சொந்தம் வேணுமா.. வேணாமான்னு நீயே முடிவு பண்ணிக்க..."

"முரளி..."

"வேணாம்க்கா... உனக்கு இந்தக் குணம் வேண்டாம்.. நான் பார்த்த "காருண்ய குணமான அக்காவாகவே நீ எப்பவும் இரு... மாறாதே..."

தொடர்ந்து பேசப் போன பாலமுரளி.. மாடிப்படிகளில் கேட்ட காலடியோசையில் நிதானித்தான்.. வாய் நிறைய சிரிப்போடு ராஜராஜன் வந்து கொண்டிருந்தான்...

"என்ன... அக்காவும்.. தம்பியுமா வானிலை ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருக்கீங்க...?"

பாலசரஸ்வதி சோர்ந்த விழிகளை கணவனிடம் காட்ட முடியாமல், முகம் திருப்பிக் கொள்ள.. பாலமுரளி புன்னகைத்தான்...

"மழை வர்றதைப் போல இருந்துச்சு மாமா... உடனே.. அந்த நாள் ஞாபகமும் சேர்ந்து வந்துருச்சு..."

"அதனாலே அந்த நாள் ஞாபகத்தை உடன் பிறப்புக இரண்டு பேரும் அசை போட்டுக்கிட்டு இருந்தீங்களாக்கும்..?"

"பரவாயில்லையே.. கண்டு பிடிச்சிட்டிங்களே..."

பாலமுரளி... உற்சாகமாக சிரிக்க... ராஜராஜனும் அவன் பக்கத்தில் கிடந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான்...

"சரஸ்.. இந்த கிளைமேட்டுக்கு சூடா ஏதாவது டிபனை உள்ளே தள்ளி... காபியைக் குடிச்சா எப்படியிருக்கும்..?"

"இதோ.. ஒரு நொடியில் கொண்டு வர்றேன்..."

அங்கிருந்து நகர முடிந்ததில் கிடைக்கப் பெற்ற விடுதலை உணர்வுடன் பாலசரஸ்வதி அவசரமாக அகன்றாள்...

மாடிப்படிகளில் விரைவாக இறங்கி ஓடியவளை ரசித்துப் பார்த்த ராஜராஜன்...

"உங்க அக்கா... புள்ளி மானைப் போல துள்ளி ஓடுறாள்ல முரளி..?" என்று மைத்துனனைப் பார்த்துச் சிரித்தான்...

அவள் எதற்காக... மானைப் போல மாறி ஓடினாள் என்ற விவரம் அறிந்திருந்த பாலமுரளி பேச்சை மாற்றினான்...

பாலசரஸ்வதி... சமையலறைக்கு சென்றபோது... அகிலா வந்திருந்தாள்... சூடான வடைகளைப் பொரித்துக் கொண்டிருந்த சமையல் காரம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தாள்...

"அதுக்குள்ள வந்துட்டிங்களே..." பாலசரஸ்வதி வியந்தாள்...

"உன் தம்பியும்... தம்பி பெண்டாட்டியும் இன்னைக்கு நைட்டே ஊருக்குக் கிளம்பனும்னு சொல்லிட்டாங்க... அப்படியிருக்கிறப்போ அங்கே எனக்கு இருப்புக் கொள்ளுமா..?"

மாமியாரின் அக்கறையில் நெகிழ்ந்து விட்டாள் சரஸ்வதி... மருமகளின் தம்பி என்பதற்காக அகிலா அந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது... கூடப் பிறந்தவளான அவள் என்ன காரியத்தை செய்து வைத்திருக்கிறாள் என்று நினைத்துப் பார்த்த பாலசரஸ்வதிக்கு என்னவோ போல ஆகிவிட்டது...

அவள் ராதிகாவைத் தேடி போனாள்... அவர்களுக்காக கொடுத்திருந்த அறையில் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு விட்டத்தை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்த ராதிகாவைப் பார்த்ததும் அசைவற்று நின்று விட்டாள்... பாலசரஸ்வதியின் நினைவுகளில் அவளுக்குத் திருமணமான புதிதில் நடந்த நிகழ்வுகள் வந்து நின்றன....

இதைப் போல ஒரு நாள்கூட அவள் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு விட்டத்தை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்ததில்லை.. என்ற உண்மை அவளைச் சுட்டது...

வெட்கமும்... காதலும்.. நாணமும்... மிரட்சியும்.. கலந்த அற்புதமான களையென்று அந்நாள்களில் அவள் முகத்தில் தவழ்ந்தது... அதை 'கல்யாண களை..' என்று மற்றவர்கள் சொன்னார்கள்... ஏறக்குறைய இரண்டு வருடகால அளவிற்கு அவள் முகத்தில் அந்தக்களை நிலைத்திருந்தது...

ராதிகாவின் முகத்தில் அந்தக் கல்யாணக் களைக்கான சுவடே இல்லையே.. அது ஏன்...?

எதையோ தொலைத்து விட்டு தேடுகிறவளைப் போல அவள் மிரளமிரள விழித்துக் கொண்டு அமர்ந்திருப்பது யாரால்...?

அது தன்னால்தான் என்ற குற்ற உணர்வில் சரஸ்வதி மனம் நொந்தாள்... ராதிகாவின் அருகில் சென்று அவள் தோளைத் தொட்டாள்...

திடிரென்று ஏற்பட்ட தொடுகை உணர்வில் சட்டென்று திரும்பிப் பார்த்த ராதிகா... சரஸ்வதியைக் கண்டு திகைத்தாள்.. அவள் விழிகளில் தெரிந்த காருண்யத்திலும்.. சொந்தத்திலும்.. அதைவிட அதிகமாக திகைத்தாள்...

"அண்ணி..!" அவள் பதறி எழுந்துகொள்ள முயன்றபோது..

"வேண்டாம் ராதிகா... அப்படியே உட்காரு..." என்று அவள் தோள்களைப் பிடித்து அழுத்தி... அமரவைத்த சரஸ்வதி அவளுருகே அமர்ந்தாள்...

ராதிகாவின் கைகளைப் பிடித்து விரல்களை வருடியபடி அவள் முகத்தை கூர்ந்து பார்த்த சரஸ்வதியின் இதழ்கள் துடித்தன்.. அவள் எதையோ சொல்லத் துடிப்பதை புரிந்து கொண்டவளாக..

"என்னங்கண்ணி..?" என்று வினவினாள் ராதிகா...

"நீ வயதில் சின்னப்பெண்... எனக்கு தம்பி பெண்டாட்டி.. உன்னிடம் மன்னிச்சிருன்னு எப்படிச் சொல்றதுன்னு எனக்குத் தெரியலை ராதிகா..." சரஸ்வதியின் குரலில் நெகிழ்வு தெரிந்தது...

"அண்ணி..! யார்கிட்ட யார் மன்னிப்புக் கேட்கிறது..? நீங்க என்கிட்ட மன்னிப்புக் கேட்கிறதா..? அது எதுக்காக...?"

"உனக்கே தெரியும் ராதிகா..."

"இருக்கட்டும் அண்ணி... உங்களுக்கு என்னைப் பிடிக்கலை... நான் உங்க தம்பி வொய்பா வந்ததில உங்களுக்கு உடன்பாடில்லை... அந்தக் கோபத்தை இப்படி வெளிக்காட்டறிங்க.. இதனால உங்க கோபம் தனிஞ்சா... அதில எனக்கு சந்தோசம்தான்..."

"ராதிகா..."

"விட்டுருங்க அண்ணி... இதை நினைச்சு நீங்க மனசு கஷ்டப்பட வேணாம்.. எல்லோருக்கும் எல்லோரையும் பிடிக்கனும்கிற அவசியம் ஒன்னுமில்லையே... உங்க தம்பிக்கு வொய்பா ஆகிட்டேன்கிற ஒரே காரணத்துக்காக என்னை உங்களுக்கு கட்டாயம் பிடிச்சாகனும்னு சொல்கிறது நியாயமில்லையே..."

ராதிகாவின் அறிவார்ந்த பேச்சில் ஆச்சரியப்பட்டுப் போனாள் சரஸ்வதி... இப்படிப்பட்ட பேச்சுக்களை அவள் ஷோபாவிடம் கேட்டதில்லை... சில நேரங்களில் ஷோபாவின் அதிகமான அலட்டலில் சரஸ்வதிக்கு தலை

வலியே வந்ததுண்டு.. அப்படிப்பட்ட ஷோபாவிற்கே தலைவலியை வரவழைத்து தண்ணி காட்டியவள் ராதிகா என்ற உண்மை தெரியாத சரஸ்வதி.. ராதிகாவை வியப்புடன் பார்த்தாள்...

"சின்னப் பெண்ணாய் இருந்துக்கிட்டு என்னமா நியாயம் பேசற... இந்தப் பெரியமனசு இருந்தாப் போதுமே.. எங்கம்மாவுக்கு மருமகளா வர வேறென்ன தகுதி வேணும்..?"

"ஏன் அண்ணி... உங்களுக்கு பிடிச்ச தம்பி வொய்பா வர என்ன தகுதி வேணும்னு சொல்லுங்கண்ணி... அந்தக் தகுதியை நான் வளர்த்துக்கறேன்..."

ராதிகா ஏக்கத்துடன் கேட்க...

"என் செல்லமே..." என்று அவள் கன்னத்தில் லேசாக தட்டினாள் சரஸ்வதி...

"உன்னைப் பத்தி என் தம்பியிடம் போட்டுக் கொடுத்திருக்கேன்.. நீ எனக்குப் பிடிச்சவளா மாறுகிறது எப்படின்னு கோபப்படாம கேட்கிற.. உன்னால இது எப்படி முடியுது ராதிகா...?"

"உங்கமேல தப்பில்லை அண்ணி.. ஷோபா உங்களோட நாத்தனார்.. அவ எதையாவது இல்லாததும்.. பொல்லாததுமே சொல்லியிருப்பா... நீங்க அதைக் கேட்டுட்டு என்மேல ஏதாவது ஒரு அபிப்ராயத்தை உருவாக்கி வைச்சிருப்பீங்க.. அதனாலதான் என்னைக் கண்டா உங்களுக்கு பிடிக்காம போயிருச்சு..."

இதைச் சொன்ன ராதிகா முகம் மாறாமல் பேசினாள்.. அவளது கள்ளம் கபடமற்ற பால் போன்ற வெண்மையான முகத்தை கூர்ந்து பார்த்த சரஸ்வதி...

"உனக்கும்.. ஷோபாவுக்கும் ஆகாதா..?" என்று யோசனையுடன் கேட்டாள்...

"ம்ம்... அவ எனக்கு கிளாஸ்மேட்... அவ்வளவு தான்.. மத்தபடி அவளிடம் அவ்வளவா நான் பேசிக்க மாட்டேன்.."

"அப்போ.. அவ பிறந்த நாளுக்கு நீ போனது எப்படி..? ஏன் கேட்கிறேன்னா.. அங்கேதான் முரளி உன்னை முதன் முதலா சந்தித்திருக்கிறான்...", சரஸ்வதியின் புருவங்கள் உயர்ந்தன...

"அதையேன் கேட்கறிங்கண்ணி.. அவ பிறந்த நாளுக்கு நான் கட்டாயம் வந்தே தீரனுமுன்னு அவ ஒரு வாரமா என்னைத் தொணத்தியெடுத்தா.. நான் முடியாதுன்னு எவ்வளவோ மறுத்துப் பார்த்தேன்.. அவ நான் வந்தே ஆகனுமுன்னு ஒத்தைக்காலில் நின்னு கெஞ்சினா..."

"என்னது..?"

சரஸ்வதியினால் அவள் காதுகளை நம்ப முடியவில்லை.. ஷோபா சொன்னதற்கும்.. ராதிகா சொன்னதற்கும் இடையே இருந்த அறுபது வித்தியாசங்கள் அவளை யோசிக்க வைத்தன..

"ஏன் நீ மாட்டேன்னு சொன்ன ராதிகா...?"

"எங்க வீட்டில இதுபோல பங்ஷன் நடத்திப் பழக்கமில்ல அண்ணி... பர்த்டேன்னா அம்மா பாயாசம் பண்ணுவாங்க... அப்பா புது டிரெஸ் எடுத்துக் கொடுப்பார்.. தம்பி.. தங்கைக்கு ஏதாவது பிரஸெண்ட் பண்ணுவாங்க... குடும்பத்தோட கோவிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணுவோம்.. அதுக்கப்புறம் அவங்வங்க வேலைகளைப் பார்க்கப் போயிருவோம்.. இவ வேற இருட்டின பின்னால தான் பங்சன் ஆரம்பிக்கும்ன்னு சொன்னா... இருட்டினதுக்குப் பின்னால... எங்க வீட்டிலே வெளியே போகிறதுக்கு பெர்மிசன் தரமாட்டாங்கண்ணி... இருட்டறதுக்குள்ள வீடு வந்து சேரலைன்னா எங்கம்மா.. காலில் சூடே வைச்சிருவாங்க..."

ராதிகா சொல்லச்சொல்ல.. பாலசரஸ்வதிக்கு.. மேகலா அவளை வளர்த்த வளர்ப்புதான் ஞாபகத்தில் வந்தது...

என்னவோ சொல்ல வந்தேன்..
எதையோ சொல்லிச் சென்றேன்...

"எங்க வீட்டிலே பெர்மிசன் கிடைக்காதுன்னும் சொல்லிப் பார்த்தேன்.. அவ கேட்கலை... எனக்கு ஆச்சரியமா போயிருச்சு.. அந்தளவுக்கு அவ வருந்தி..

வருந்திக் கூப்பிடுகிற அளவுக்கு எனக்கும்.. அவளுக்கும் பழக்கமில்லையேன்னு யோசிச்சேன்.. இருந்தும் அவளை அவாய்ட் பண்ண முடியாம போயிருச்சு அண்ணி... அவ அந்தளவுக்கு என்னை போர்ஸ் பண்ணினா..."

"அப்படியா..?"

"ஆமாமண்ணி... என் மத்த பிரண்ட்ஸெல்லாம் அவளைத் திட்டினாங்க... வரமுடியாதுன்னு சொல்கிறவளை ஏன் வற்புறுத்தறேன்னு அவளிடம் கோவித்தாங்க..."

இந்தச் செய்தி பாலசரஸ்வதியின் மூளையைத் தட்டி எழுப்பியது... ஷோபா சொன்ன போது.. அவள் மற்ற தோழிகளை அழைத்ததாகவும்... ராதிகாவே வலிய வந்து எனக்கு அழைப்பில்லையா என்று கேட்டதாகவும் தான் சொல்லியிருந்தாள்...

இப்போது ராதிகா சொல்வது முற்றிலும் மாறாக இருந்தது... அவளை ஷோபா வற்புறுத்தி அழைத்தபோது மற்ற தோழிகள் அதை கண்டித்தாக கூறுகிறாள்...

விவரம் இப்படியிருக்க ஷோபா எதற்காக மாற்றிச் சொன்னாள்...?

"எனக்கு வேற வழியில்லாம போச்சு.. இவ்வளவு தூரம் மெனக்கெட்டு கூப்பிடுகிறாளே... போய் தலையைக் காட்டிவிட்டு வந்துடலாம்ன்னு ஹேமாவிடம் சொன்னேன்."

"ஹேமா யாரு...?"

"எனக்கு பிரண்ட்.. ஷோபாவுக்கு கிளாஸ்மேட்..."

"அப்போ நீ தனியாய் போகலையா...?"

"ஏண்ணி.. இருட்டின பின்னாலே எங்க வீட்டிலே வெளியே அனுப்பறதே பெரிய விசயம்.. இதில தனியா வேற அனுப்புவாங்களா...? கொன்னே போட்டிருவாங்க.. ஹேமா என் வீட்டுக்கு வந்து பத்திரமா கூப்பிட்டுக்கிட்டு போய் வரேன்னு என் அம்மாவிடம் கோரண்டிகொடுத்து கூப்பிட்டுக்கிட்டுப் போனா..."

"எப்படிப் போனீங்க..."

"ஆட்டோவில போனோம்..."

"திரும்பவும்... ஆட்டோவிலதான் வந்தீங்களா...?"

இதற்கான ராதிகாவின் பதில் பாலசரஸ்வதிக்கு அதிமுக்கியமான ஒன்றாக இருந்தது... ஒசி கார் பயணத்துக்கு ஆசைப்படுகிறவளாக ஷோபா ராதிகாவை சித்தரித்திருந்தது உண்மைதானா என்று அவளுக்கு தெரிய வேண்டியிருந்தது...

"ஆட்டோ பிடிக்கத்தான் கிளம்பினோம்... அதுக்குள்ள ஷோபா வந்து உங்க தம்பி காரில எங்களை அனுப்பி வைச்சிட்டா..."

"நீ அவளை காரில் டிராப் பண்ணிவிடச் சொன்னியா..?"

"சேச்சே... அவளெல்லாம் ஒரு மனுஷின்னு அந்த பங்சனுக்கு அட்டெண்ட் பண்ணப் போனோமேன்னு நானே நொந்து போயிருந்தேன்... நானாவது... எங்களை

டிராப் பண்ணுன்னு அவளிடம் போய் கேட்பதாவது... அந்தளவுக்கு நான் வைத்துக்க மாட்டேன் அண்ணி..."

'என்னடா இது...' பாலசரஸ்வதிக்கு தலையைச் சுற்றியது...

"வேற ஒன்னுமில்ல அண்ணி... அவளை நான் கண்டுக்க மாட்டேன்... அதில அவளுக்கு கோபம்.. என்னிடம் அவளோட லெவல் என்னன்னு காட்ட வரச்சொல்லியிருப்பான்னு நினைக்கிறேன்..."

இப்படிக்கூட பெருமை பீற்றல் காஞ்சியங்களாய் இருப்பார்களா என்றிருந்தது பாலசரஸ்வதிக்கு...

ஷோபா இருப்பாள் என்று சொன்னாள் ராதிகா...

"அவ்வளவு தூரத்துக்கு கூப்பிட்டவ... என்னையும்.. ஹேமாவையும் கண்டுக்கவே இல்லைண்ணி.. யாரோ போல பார்த்துக்கிட்டு இருந்தவ திடிர்ன்னு அக்கறை வந்தவளைப் போல கிட்டே வந்து... வேலை மெனக்கெட்டு உங்க தம்பி காரில எங்களை ஏற்றி அனுப்பினது எதுக்காகன்னு இன்னைக்கு வரைக்கும் எனக்குப் புரியலை அண்ணி..."

என்னவாக இருக்கக் கூடும் என்று பாலசரஸ்வதிக்கும்.. புரியவில்லை... அன்று இரவு.. பாலமுரளியும்... ராதிகாவும் கிளம்பிப் போன பின்னால் அதைப்பற்றி ராஜராஜனிடம் பேசியபோது.... அவன் மர்மமாகச் சிரித்தான்...

"எதுக்குச் சிரிக்கறிங்க...?" பாலசரஸ்வதி குழம்பினாள்...

"அந்த பங்சனில் உன்தம்பி மட்டும் கலந்துக்கலை சரஸ்.."

"இதென்னங்க வம்பாப் போச்சு.. நிறையப் பேர் கலந்திருப்பாங்க... இப்ப எதுக்காக இதைச் சொல்கிறீங்க.."

"மத்தவங்களும்... உன் தம்பியும் ஒன்றா சரஸ்...? இவர் ஷோபாவுக்கு முறை மாப்பிள்ளை இல்லையா...?"

பாலசரஸ்வதிக்கு எதுவோ புரிவதைப் போல இருந்தது... மனைவியின் விழிகளில் இருந்து அதை கண்டு கொண்டவனாக ராஜராஜன் தலையை ஆட்டி.. அதை ஆமோதித்தான்...

"நீ நினைக்கிறது சரிதான்.. ஷோபாவுக்கு வேற ஒரு இடத்திலேயும் சித்தி மாப்பிள்ளை பார்த்து வைச்சிருந்தாங்க... அவன் பெயர் சங்கர்.. அவன் மேலதான் ஷோபாவுக்கு அதிகமாக நோக்கம் இருக்கு..."

இது வேறா என்று மலைத்தாள் பாலசரஸ்வதி.. இந்த ஷோபாவைப் பற்றி விசாரிக்கப் போனால்... ஆழத்திலிருந்து இன்னும் எத்தனை கதைகள் வெளிப் படுமோ என்றிருந்தது அவளுக்கு...

"முரளி மேலதான் அவளுக்கு விருப்பம் போல என்னிடம் பேசுவாளே..."

"இப்பாவது உலகத்தைப் புரிஞ்சுக்க... ஆயிரம் தான் இருந்தாலும் அவ என் தங்கையாச்சேன்னு நானும் சிலதை உன்னிடம் சொல்லாம விட்டு வைச்சேன்..."

"மறைச்சீங்கன்னு சொல்லுங்க..."

"அப்படியில்லைடி.. அவ கல்யாணம் ஆக வேண்டிய பொண்ணு... அதான்..."

ராஜராஜன் சங்கடப்பட.. அதை பெரிது பண்ணாமல் விட்டுவிட்டாள் சரஸ்வதி...

"போகுது விடுங்க... அந்த சங்கருக்கும்.. முரளிக்கும் என்ன சம்பந்தம்...?"

"முரளிக்கும்... அவனுக்கும் சம்பந்தம் இல்ல... ஆனா.. இருக்கு..."

என்னத்தை கன்னையா பாணியில் ராஜராஜன் சொல்ல.. பல்லைக் கடித்தபடி அவனை ஒருபார்வை பார்த்தாள் சரஸ்வதி...

"விடுடி.. விடுடி.. என்ன விவரம்ங்கிறதை எனக்குத் தெரிஞ்ச அளவில் சொல்லிடறேன்..."

"முதல்லே அதைச் செய்யுங்க..."

"அந்த சங்கர் நம்ம முரளிக்கு முன்னாலேயே ராதிகாவைப் பெண் கேட்டவர்ன்னு உனக்குத் தெரியும் தானே சரஸ்..?"

"அட... ஆமாம்.."

"அந்த சங்கரும்... ராதிகாவை முதன் முதலா.. ஷோபாவின் பார்த்டே பங்சனில்தான் பார்த்திருக்கான்..."

"ஓ..."

உள்ளங்கை நெல்லிக்கனியாக சரஸ்வதிக்கு அனைத்து விவரங்களும் பிடிபட்டு விட்டன...

"சித்தி என்னிடம் புலம்பினாங்க... கூடப் படிச்சவ இவளை டாமினேட் பண்றதைப் போல இருந்தா.. விட்டு விலகியிருக்கனும்.. அதைவிட்டுட்டு உன் தங்கச்சி... அவளை பார்த்டே பங்கனுக்கு அழைச்சுட்டு வந்திட்டா... வந்தவளப் பார்த்த ரெண்டு மாப்பிள்ளையும் ஷோபாவை விட்டுட்டு அவ பின்னாலே போயிட்டாங்க... இப்படிப்பட்ட கூறுகெட்ட கூதரையை பெத்து வைச்சிட்டேனே ராஜராஜான்னு தலையைப் பிடிச்சிட்டாங்க..."

"ஷோபாதானே தலையைப் பிடிப்பா..."

"இப்ப அந்த வியாதி சித்திக்கும் தொற்றிக்குச்சு.."

"தலைவலி தொற்றுவியாதியா..?"

பாலசரஸ்வதி வெகுவாக கவலைப்பட்டுப் போக.. அவளை ஒருவிதமாகப் பார்த்த ராஜராஜன்...

"ஏண்டி..?" என்றான்...

"இல்லைங்க..."

"என்ன நொல்லைங்க... இதைப் போல ஏடா கூடமாய் எதையாவது அம்மா முன்னாலே சொல்லி வைச்சிராதே.. அவங்களுக்கு சித்திமேல பிரியம் ஜாஸ்தி.."

"நான் ஏங்க வாயைத் திறக்கப் போறேன்..?"

"அஃது.. அந்த பயம் இருக்கட்டும்.. அந்த பர்த்டே பங்சனில் சங்கர்தான் ராதிகா பின்னாலே சுற்றினானாம்..

அவளை உடனடியாக நாடு கடத்தச் சொல்லி சித்திதான் ஷோபாவிடம் சொன்னாங்களாம்.. இவ உன்தம்பி காதில போகச் சொல்லி வற்புறுத்தி அனுப்பி வைச்சாளாம்..."

விவரம் இப்படியிருக்க.. தன்னிடம் ஷோபா.. எப்படியெல்லாம் மாற்றி கதை பிணைத்து சொன்னாள் என்று நினைத்து.. நினைத்து மனம் வெதும்பினாள் பாலசரஸ்வதி...

அவள் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த ராஜராஜன்...

"என்ன சரஸ்... எப்படி இப்படியொரு எடுப்பார் கைப்பிள்ளையாய் மாறிட்டோமேன்னு நினைச்ச வேதனைப்படறியா..?"

"த்ச்ச..."

"இப்பவாவது ராதிகாவைப் புரிஞ்சுக்கிட்டியா..?"

"எப்பவோ புரிஞ்சுக்கிட்டாச்சு..."

"அதான் பார்த்தேனே.. சாயங்காலம் காபி டிபனை நீங்க ரெண்டு பேரும் ஜோடி போட்டுக்கிட்டு கொண்டு வந்தப்போ நான் பார்க்கிறது கனவா.. இல்லை நனவான்னு எனக்குச் சந்தேகமே வந்துருச்சு... சந்தேகத்தைத் தெளிவு பண்ணிக்கலாமுன்னு உன் தம்பியைத் திரும்பிப் பார்த்தா- அவர் இருக்கவா.. இல்லை பறக்கவாங்கிறதைப் போல ஒரு மார்க்கமா என்னைப் பார்த்து முழிச்சு வைச்சார்..."

ராஜராஜன் கேலி பேசப்பேச.. பாலசரஸ்வதிக்கு வெட்கமாகி விட்டது.. அவள் செல்லமாகச்சிணுங்கியபடி ராஜராஜனின் கையைப் பிடித்துக் கிள்ளினாள்...

காரை ஓட்டிக் கொண்டிருந்த பாலமுரளி... லேசாக தொண்டையைச் செறுமினான்.. அவன் பக்கத்தில் அமர்ந்திருந்த ராதிகா ஏனென்றும் கேட்கவில்லை... திரும்பியும் பார்க்கவில்லை... எனக்கென்ன என்று அமர்ந்திருந்தாள்...

'திமிர்...' பாலமுரளிக்குள் கோபம் துளிர் விட்டது...

"ஏய்ய்.." என்றான்...

அதற்கும் அவளிடம் பதிலில்லாமல் போகவும்... அவனது கோபம் அதிகரித்தது...

"உன்னைத்தாண்டி..." என்றான்...

அவள் மௌனத்தை நீடிக்க... பிரேக்கில் காலை அழுத்தமாக மிதித்தான்... கார் 'கிறிச்' சென்ற ஓசையுடன் நின்றது...

அப்போதும் அவள் அலட்டிக்கொள்ளாமல் அமர்ந்திருக்க.. ஒங்கி ஒரு அறை விட்டால்தான் என்ன என்று அவனுக்குள் கோபம் பொங்கி எழுந்தது...

"உன்கிட்டயெல்லாம் கேட்கிற விதமாய் கேட்கனும்டி... இப்படிக் கேட்டா வேலைக்கு ஆகாது..."

"எப்படிக் கேட்பீங்க...?"

ஒரு வழியாக மௌனத்தை கலைத்தாள் ராதிகா-

"ஒங்கி நாலு அப்பு... அப்பிக் கேட்கனும்டி..."

"நினைச்சேன்.. இதைவிட்டா வேற என்ன தோணப் போகுது...?"

"கூப்பிட்டா ஏன்னு கேட்க மாட்டியா...?"

"யாரைக் கூப்பிட்டிங்க..?"

"வழியில போகிறவளையா கூப்பிட்டேன்...?"

"யாருக்குத் தெரியும்..?"

அவள் முகவாயை தோளில் இடித்துக் கொண்டு முகம் திருப்பிக் கொள்ள... வழியில் யாராவது போகிறார்களா என்று பார்த்தான் முரளி...

அந்த அர்த்த ஜாம நேரத்தில் தென்காசிக்குப் போகும் சாலையில் யார் நடமாடப் போகிறார்கள்..?

கார்களும்.. பஸ்களும்.. லாரிகளும் மட்டும் பறந்து கொண்டிருக்க... நடந்து போவாரென்று எவருமில்லை...

"என்னத்தைப் பார்க்கிறிங்க... வழியில எவளாவது போகிறாளான்னா..? இந்த நேரத்தில மோகினிப் பேய்தான் வழியில் போகும்... போங்க.. போய் அதைக் கூப்பிடுங்க..."

நிலவு காயும் அந்த நடுநிசி வேளையில்.. மல்லிகை மணக்க மயக்கும் தோற்றத்துடன் அருகில் அமர்ந்திருந்த வளைப் பார்த்தான் பாலமுரளி...

"மோகினிப் பேய் ரோட்டில போகலைடி.. காருக்குள்ள என் பக்கத்தில வந்து உட்கார்ந்திருக்கு.."

ராதிகா கோபத்துடன் அவன் பக்கம் திரும்ப.. அவன் வெற்றிப்புன்னகையுடன் காரைக் கிளப்பினான்.. சற்று தூரம் போனதும் ஒரு வளைவில் அந்த பெண்ணுருவம் தெரிந்தது.. அவர்களின் காரை வழிமறிப்பதைப் போல நடுரோட்டில் நின்றபடி கையை ஆட்டியது...

102

**என்னை விட்டு இன்னொருத்தி..
உன் இதயம் புகலாமா...?**

"வாயை வைச்சுக்கிட்டு சும்மா இருக்கியாடி..." முரளி அலுத்துக் கொண்டான்...

ராதிகா பயந்து போனாள்.. அந்த இரவு நேரமும்.. தூரத்தில் தெரிந்த வெண்ணிற பெண்ணுருவமும் அவளை பயமுறுத்தின...

"நான் என்னங்க பண்ணினேன்..?" அவள் அழமாட்டாத குறையாக வினவினாள்...

"மோகினிப் பேயைக் கூப்பிடச் சொன்ன... இப்பப்பாரு.. கூப்பிடாமலே அது வந்து வழியை மறிக்குது.." பாலமுரளி பயமுறுத்தினான்...

"பே.. பே.. பேயா..?" ராதிகாவின் விரல்கள் நடுங்கியடிக்க ஆரம்பித்தன...

"இப்ப எதுக்கு பே.. பே..ன்னு உளறி வைக்கிற.. நீயென்ன ஊமையா..?" அவன் கிண்டலடித்தான்...

உனக்கு கிண்டலடிக்க வேறு நேரமே கிடைக்க வில்லையா என்பதைப் போல அவள் அவனை முறைத்தாள்...

"இந்த முறைப்புக் கொன்னும் குறைச்சலில்ல.. உன் வீரத்தை என்னிடம் காட்டாம.. அந்தப் பேயிடம் காட்டு.."

"என்னது..."

வேண்டாம்.. நிறுத்தாதே.. என்று அவள் அறையத்தனிக்கும் போதே அவன்.. அந்த உருவத்தின் அருகே காரை நிறுத்திவிட்டான்...

அவ்வளவுதான்.. ராதிகா முரளியின் மீது அட்டைபோல ஒட்டிக் கொண்டு விட்டாள்...

"ராது.. ஏய்ய்.." பாலமுரளிக்கு சிரிப்பு பீறிட்டது..

பயத்தில் உடல் வெடவெடக்க.. அவள் கண்களைத் திறக்காமல் அவன் மேல் அப்பிக் கொண்டது அவனுக்கு வெகு பிடித்தமானதாக இருந்து வைத்தது..

பயத்தில் நடுங்கிய அவளது தளிர் மேனி அவனோடு ஒட்டிக் கொண்டிருக்க.. அந்த சுகத்தில் லயித்திருந்தவனை..

"தேங்க்ஸ் அத்தான்.." என்ற குரல் கலைத்தது..

'அத்தானா...'

அரண்ட நிலையிலும் அவசரமாக கண் விழித்தாள் ராதிகா..."

என்னதான் பேயாக இருந்தாலும்.. எப்படி இவ்வளவு உரிமையாக ராதிகாவின் கணவனைப் பார்த்து அத்தான் என்று அழைக்கலாம்..?

ஊரில் உள்ள ஆண்களையெல்லாம் மோகினிப் பேய்களுக்கு என்று நேர்ந்தா விட்டிருக்கிறார்கள் என்ற

கோபம் தலைக்கேற விசக்கென்று திரும்பிப் பார்த்தாள் ராதிகா..

வருவது வரட்டும்.. பேயாக இருந்தாலும் மோதிப் பார்த்து விடலாம் என்ற முடிவுக்கு அவள் வந்திருந்தபோது..

"பின் சீட்டில் ஏறிக்க ஷோபா.." என்றான் முரளி..

'ஷோபாவா..?'

ராதிகா கண்களை கசக்கிவிட்டுப் பார்த்தாள்... அங்கே ஷோபாதான் நின்றிருந்தாள்...

'இவ எங்கே இங்கே... இந்த நேரத்தில வந்து தொலைச்சா....?' ராதிகாவுக்கு ஒரு மண்ணும் பிடிபடவில்லை...

"நல்ல வேளை அத்தான்... உங்க நினைப்பு வந்து போன் பண்ணினேன்... நீங்களும் இந்த வழியில.. இந்த நேரத்தில வந்து சேர்ந்தீங்க பாருங்க.. அதுதான் என் லக்.."

'எனக்கு பெட் லக்...' என்று சொல்ல வேண்டும் போல ராதிகா ஆசைப்பட்டாள்...

ஆசைப்பட்டதையெல்லாம் நடத்தி விட முடிகிறதா என்ன...?

"அத்தையும்... மாமாவும் இல்லாம இப்படி நைட்ல தனி வரலாமா...?"

"என்னத்தான் செய்கிறது..? அப்பாவுக்கு திடீர்ன்னு பாரின் போகிற புரோக்ராம் வந்துருச்சு.. அம்மாவும் கூடப்

போகனுமாம்... என்னை பெரியம்மா வீட்டுக்கு தள்ளி விட்டுட்டாங்க..."

'அப்புறம் எதுக்குடி.. அங்கே போகாம இந்தக் காரிலே ஏறி... என் உயிரை குறைக்கிற...'

"இங்கே வருகிற வரைக்கும் கார் ஒழுங்காத்தான் இருந்ததுச்சு... திடிர்ன்னு பார்த்தா... ரேடியேட்டர் குடாகி புகையாய் வர ஆரம்பிச்சிருச்சு..."

'வழக்கமாய் நீதான் புகைவ.. இப்ப உன் காரின் ரேடியேட்டரும் புகைய ஆரம்பிச்சிருச்சா...? பேஷ்.. பேஷ்.. ரொம்ப நன்னாயிருக்கு...'

"என்ன செய்கிறதுன்னு தெரியாம உங்களுக்கு போன் பண்ணினேன்..."

'ஆக்சுவலா... உன் பெரியம்மாவுக்குத்தானே நீ போன் பண்ணியிருக்கனும்..? அதை விட்டுட்டு என் புருசனுக்கு ஏண்டி போனை போட்ட...?'

"என்னவோ தெரியலை அத்தான்... ஆபத்தான நேரத்தில பட்டுன்னு உங்க நினைப்புத்தான் என் மனசுக்குள்ள வந்து நிற்குது..."

'நிற்கும்.. நிற்கும்.. ஆபத்தான நேரத்தில உதவிக்கு அழைக்க அடுத்தவ புருசன்தானே உன் நினைப்பில வருவான்.. சொந்த பெரியாம்மாவும்.. பெரியம்மா மகனுமா நினைப்பில வரப் போறாங்க...'

"இதில ஒரு ஒற்றுமையைப் பார்த்தீங்களா அத்தான்.."

'ஏண்டி.. என் புருசன்கூட ஒற்றுமை கொண்டாடுறதிலேயே குறியாய் இருக்க..? அந்த ஒற்றுமையை என்னிடம் காட்டேண்டி...'

"என் கார் ரிப்பேரான அடுத்த செகண்டில் உங்க கார் வந்து நிற்குது..."

இந்தக் கதையை நம்புவதற்கு ராதிகா தயாராக இல்லை...

'அது எப்படி.. இந்த அர்த்த ஜாம நேரத்திலே இவகார் இதே ரோட்டில ரிப்பேராகி நிற்குமாம்... அடுத்த செகண்டில் எங்க கார் வந்து இவளை அள்ளிப் போட்டுக்கிட்டு பறக்குமாம்.. கதை விடுறா...'

இந்தக் கதையை வேறு எங்காவது போய் சொல்லு.. ானக்கு காது குத்தி கம்மல் மாட்டியாகி விட்டது என்ற நினுசில் காதைத் தடவியபடி ஷோபாவை முறைத்தாள் ராதிகா...

அவளெங்கே அதைப் பார்த்தாள்..? அவளுக்கு பாலமுரளியின் முகத்தைப் பருகுவதைப் போலப் பார்ப்பதற்கே நேரம் சரியாக இருந்ததே...

லைலா கூட மஜ்னுவை இப்படியொரு காதல் பார்வை பார்த்திருக்க மாட்டாள்.. அதைவிட அதீதமான காதலையும்.. ஏக்கத்தையும் கண்களில் தேக்கி பாலமுரளியை பார்வையிட்டுக் கொண்டிருந்தாள் ஷோபா..

பாலமுரளி அதை கண்டு கொள்வதாகவே இல்லை.. அவனது கவனமெல்லாம் விலகி அமர்ந்திருந்த

ராதிகாவின் மீதே இருந்தது... சற்றுமுன் அவள் பயத்துடன் ஒட்டிக் கொண்டபோது உணர்ந்த அவளது உடலின் மென்மையில் நிலை கொண்டிருந்தது அவனின் மனம்...

தள்ளி அமர்ந்திருந்தவளை தாபத்துடன் பார்த்தான்... அவள் முகத்தில் இப்போது எள்ளும்.. கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தன...

"இவ எப்ப போன் பண்ணினா..?"

ஷோபாவை லட்சியம் பண்ணாமல் பாலமுரளியிடம் அதட்டலாக அவள் கேள்வி கேட்ட விதம் பாலமுரளிக்கு புதிதாகவும்.. இனிப்பாகவும் இருந்தது...

அவனது மனைவியென்ற உரிமையுடன் அவனை அவள் கேள்வி கேட்டதில் அவனுக்குள் ஒர்விதமான கிளர்ச்சி உருவானது..

"இப்பத்தான்..." அவன் விட்டேற்றியாக பதில் சொல்வதைப் போலச் சொன்னான்...

அவனுக்குத் தெரியும்.. அவனின் இந்தப் பதிலில் ராதிகாவின் கோபம் அதிகரிக்கும் என்பது...

"இப்பத்தான்னா... எப்ப..? உங்க கூடத்தானே நானும் வர்றேன்.. எனக்குத் தெரியாம எப்ப இவ உங்ககூட பேசினா..?" ராதிகா சிடுசிடுத்தாள்...

"என் காதில என்ன இருக்குன்ன பார்த்துட்டுப் பேசுடி..."

செல்போனின் வயரை காதில் மாட்டியிருந்த பாலமுரளி அதைத் தூக்கிக் காட்டினான்...

"இதில அவ பேசினா.. எனக்குத்தான் கேட்கும்.. உனக்கெப்படி கேட்கும்..?"

'இது வேற நடக்குதா...' ராதிகாவின் விழிகள் எரிகங்குகளாகின.. அவளின் அந்தத் தணல் பார்வையில் குளிர்ந்து போனான் பாலமுரளி... விட்டேற்றியாக தள்ளி உட்கார்ந்திருந்தவள்.. இப்போது கணவனென்ற உரிமையுடன் அவனை அதட்டி ஆயிரம் கேள்விகள் கேட்டதில் அவனுக்குள் வெகுவாக பிரியம் பொங்கி வழிந்தது...

"பதிலுக்கு நீங்க வாயைத்திறந்து எதுவும் சொன்னதா எனக்கு நினைவில்லையே..." ராதிகா குத்தலாகப் பேசினாள்..

"ம்ம்ன்னு சொன்னேன்டி.. உனக்குத்தான் அது காதில் விழுகலை..." பாலமுரளி அவள் பேச்சுக்கு உடனடியாக பதிலைச் சொன்னான்...

"அதுதான் என் காதில் விழலை.. இவ போன் பண்ணியதை என்னிடம் சொல்லக் கூடவா உங்களுக்கு வாய் வரலை..?" வெடுக்கென்று கேட்டாள் ராதிகா...

அவளின் அந்த அதீத புத்திசாலித்தனத்தை ரசித்துச் சிரித்தான் பாலமுரளி.. மற்ற நேரமாக இருந்திருந்தால் அந்தச் சிரிப்பில் மயங்கிப் போயிருப்பாள் ராதிகா... இப்போது அப்படியில்லையே.. ஷோபாவின் அந்த நடுநிசி வருகை வெகுவாக அவளைப் பாதித்திருந்தது.. இனம் புரியாத ஒரு கலவர உணர்விற்கு ஆளானாள் ராதிகா.. அதே சமயம் அதை ஷோபா அறிய வெளிக்

காட்டிக் கொள்ளாமல் அவள் மறைத்துக் கொள்ள வேண்டியிருந்தது..

இத்தனைக்கும் காரணம் இவன்தானே என்று பாலமுரளியின் மீது அவளின் கோபம் பாய்ந்தது...

இவனென்ன ஊருக்கு உழைப்பவனா..? எங்கே பெண்களுக்கு பாதுகாப்பில்லாமல் போனாலும் ஒடோடிப் போய் உதவிக்கரம் நீட்டும் கதா நாயகனா..?

அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. அதை அவளது முகம் உணர்த்த.. பாலமுரளிக்கு சற்று முன் வரை அலுப்பைத் தந்த அந்த இரவு நேரத்தின் பயணம் பிடித்தமானதாக மாறிவிட்டிருந்தது..

மாலையில் அவன் மொட்டைமாடியில்... பால சரஸ்வதியுடன் பேசிக் கொண்டிருந்த போது ராஜராஜன் வந்து சேர.. பாலசரஸ்வதி போய் விட்டாள்.. அவன் ராஜராஜனுடன் ஊர் நடப்பு.. உலகநடப்பு என்று உலகை வலம் வந்து கொண்டிருந்தபோது தான் அந்த அதிசயம் நடந்தது..

என்னவோ.. காலம் காலமாய் இணைபிரியாமல் பழகிய தோழிகளைப் போல... பாசப்பறவைகளைப் போல.. நகமும் சதையும் போல.. பேசிச் சிரித்தபடி பாலசரஸ்வதியும்... ராதிகாவும் ஒற்றுமையாய் வந்து சேர.. மாமனும்.. மச்சினனும் மயக்கம் போட்டு விழத் தெரிந்து.. மயிரிழையில் சுதாரித்து நிமிர்ந்து அமர்ந்தார்கள்...

'என்னடா இது...'

பாலமுரளிக்கு கையைக் கிள்ளிப் பார்க்க வேண்டும் போல இருந்தது... ராஜராஜனின் நினைவில் அதை செயல்படுத்தும் முயற்சியைக் கைவிட்டான்.. இரவு உணவு முடிந்து அவர்கள் கிளம்பும் நேரம் வரை பாலசரஸ்வதியும் ராதிகாவும் ஒட்டிக் கொண்டே அலைந்தார்கள்.. அவர்கள் கிளம்பிய போது அகிலா.. மருமகளைப் பார்த்தாள்..

"இதோ அத்தை..." பாலசரஸ்வதி விரைந்தாள்...

திரும்பி வந்தவளின் கையில் பெரிய வெள்ளித் தட்டு இருந்தது.. அதில் அகலக் கரையிட்ட காஞ்சிபுரம் பட்டுச் சேலையும்.. பட்டு வேட்டி சட்டையும் இருந்தன.. உடைகளுக்கு மேலாக திறந்து வைக்கப் பட்டிருந்த நகைப் பெட்டியில் வைரங்கள் ஒளிர்ந்தன... பூவும்.. குங்குமச் சிமிழில் நிரப்பப் பட்டிருந்த குங்குமமுமாக அவள் அதை ராதிகாவிடம் நீட்டிய போது.. ராதிகாவின் கண்கள் பனித்திருந்தன...

"இப்பத்தான் போய் இந்த நகையை வாங்கிட்டு வந்தேன் ராதிகா... எனக்குத் தெரியும்.. கடைசி வரைக்கும் இந்த நகையை மத்தவங்ககை படாம நீ பாதுகாத்து வைச்சுக்குவேன்னு... சொத்து சுகத்தை விட.. உனக்கு அன்பாக வாங்கிக் கொடுத்த பொருள்கள்தானே முக்கியம்..? எந்தப் பரிசையும் அதன் மதிப்புத் தெரிந்து.. கடைசிவரைக்கும் வைத்துக் காப்பாத்தற மனுசங்களுக்குத் தான் கொடுக்கனும்.. அந்த வகையில் நீ கெட்டி.. இது உனக்காக நான் வாங்கிக் கொடுக்கிற நகை.. பத்திரமாய் வைச்சுக்க.."

நகைப் பெட்டியை நீட்டிக் கொண்டிருந்த பாலசரஸ்வதியிடம் பழைய காருண்ய குணம் மீண்டிருப்பதை கண்டு கொண்டான் பாலமுரளி...

அவனுடைய அன்பான அக்கா திரும்பக் கிடைத்து விட்டதில் அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி பெருகியது.. அதைப் பகிர்ந்து கொள்ளும் ஆவலுடன் மனைவியின் முகம் பார்த்தால்... அவள் உணர்வுகள் துடைக்கப் பட்ட முகத்துடன் சாலையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்...

மாலையில் அவன் அடித்த அடியின் பாதிப்பு அவள் மனதில் தங்கியிருப்பதை புரிந்து கொண்டவனாக அவனும் எதுவும் பேசாமல் காரைக் கிளப்பி விட்டான்.. வழியில் அதே மௌன விரதத்தை அவள் கடைபிடிக்க.. அதை உடைக்கும் முயற்சியில் அன் ஈடுபட்டிருந்த போது... ஷோபா ஊடே வந்து ராதிகாவின் மௌன விரத்தை முற்றிலுமாக உடைத்து விட்டாள்..

"அதைச் சொல்லத்தான் உன்னைக் கூப்பிட்டேன்.. நீ மோகினிப்பேயை கூப்பிடச் சொன்ன..."

அந்த நினைவில் மீண்டும் வாய் விட்டுச் சிரித்தான் பாலமுரளி.. அந்த இருளிலும் தெரிந்த அவனின் வரிசைப் பற்களின் அழகில் அவள் சொக்கிப் போனாள்...

'இவன் ஒருத்தன்.. தனியாய் இருக்கும் போது.. அடிக்கவா.. பல்லை உடைக்கவான்னு.. வம்பைக் கட்டி இழுப்பான்.. கூட இந்த மாதிரி ஒரு ஜென்மத்தை வைச்சுக்கிட்டு.. பல்லைக் காட்டிச் சிரித்து மனதைக் கட்டி இழுப்பான்...'

அவள் உதட்டைக் கடித்தபடி முகத்தை திருப்பிக் கொண்டாள்...

ஷோபாவுக்கு அவர்களின் அன்யோன்யமான பேச்சை கொஞ்சம்கூட பிடிக்கவில்லை... பாலமுரளியின் பார்வை ராதிகாவின் மீதே படிந்திருக்க... அவளுக்குள் பொறாமைக் கனல் பொங்கியெழுந்தது.. ஷோபா இருப்பதை கொஞ்சம் கூட சட்டை செய்யாமல் அவளின் வரவைப் பற்றி ராதிகா பாலமுரளியிடம் கோபப் பட்டதில் ஷோபா மனதிற்குள் கொதித்துப் போனாள்...

'என்னமா.. அதட்டி.. அதிகாரம் பண்றா.. இவனும் தான் இவ கேட்டதுக்கெல்லாம் இப்படி பயந்து பதில் சொல்லனுமா..? இவன் திமிருக்கு இது கொஞ்சம்கூட பொருந்த வில்லையே...'

ஷோபா அறிந்த பாலமுரளி மனிதரை மதித்து நின்று பேச மாட்டான்.. அதுவும் ஷோபாவைப் போன்ற அதீத ஒப்பனை செய்யும் அழகு சுந்தரிகளை இளப்பமாக பார்த்து விட்டு கல்லோ.. மண்ணோ என்று தோள்களைக் குலுக்கி விட்டுப் போய் விடுவான்..

அவனா.. ராதிகாவிடம் இவ்வளவு தன்மையாகவும்.. பணிவாகவும்.. பேசுகிறான்..?

உன்னைப் பார்த்த பின்னாலே...
நானாக.. நானில்லை...

மகள் வீட்டு விருந்துக்குப் போன மகனும்.. மருமகளும் ஷோபாவை கூட வைத்துக் கொண்டு காரைவிட்டு இறங்கியதைக் கண்ட மேகலா புரியாமல் பார்த்தாள்...

பாலமுரளி அவளுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க... அதைக் காது கொடுத்துக் கேட்கக் கூட விருப்பப் படாதவளாக ராதிகா மாடியேறிவிட்டாள்...

அதை ஜாடையாக கவனித்த மேகலாவின் மனதில் பொறிதட்டியது...

"அத்தான்... நான் எந்த ரூமில் தங்கட்டும்...?"

மேகலா என்ற ஒருத்தி அங்கே இருப்பதைப் பார்க்காதவளைப் போல பாலமுரளியிடம் கொஞ்சும் குரலில் வினவினாள் ஷோபா.. மேகலாவின் புருவங்கள் முடிச்சிட்டன... விட்டால் பாலமுரளியின் மடியில் ஏறிக்கொள்வாள் போலத் தோன்றியவளை யோசனையுடன் பார்வையிட்டாள்...

அவளை எந்த அறையில் தங்க வைக்கலாம் என்ற யோசனையை மகன் தன்னிடம் கேட்பான் என்று எதிர்பார்த்த மேகலா ஏமாந்து போனாள்...

"மாடியில தங்கிக்கயேன்.." என்று சொன்ன பாலமுரளி...

"சரிதானேம்மா...", என்று கேட்கவேறு செய்தான்...

"சரியில்லைடா முரளி..."

பட்டென்று பதில் சொன்ன மேகலா தான் மாணிக்க வாசகத்தின் மனைவி என்பதை நிருபித்தாள்...

"ஏம்மா...?"

தாயார் எதற்காக ஆட்சேபம் தெரிவிக்கிறாள் என்று பாலமுரளிக்கு சுத்தமாக புரியவில்லை...

"மாடியில நீயும்.. ராதிகாவும் தங்கியிருக்கீங்கடா.."

"அதற்கென்னம்மா.. எங்க ரூமுக்கு பக்கத்து ரூமில தானே ஷோபாவை தங்கிக்கச் சொன்னேன்.."

என் அறையிலா தங்கிக்கச் சொன்னேன்..? என்ற பாலமுரளியின் மறைமுகக் கேள்வியில் மேகலா முகம் கருத்தாள்.. ஷோபா முகம் மலர்ந்தாள்..

"ஐ ஹேவ் நோ அப்ஜெக்சன் ஆண்ட்டி..."

ஷோபா அவசரமாக குறுக்கிட.. அவளுக்கு எதில்தான் ஆட்சேபனை இருக்கப் போகிறது என்ற எண்ணத்துடன் முகம் சுளித்தாள் மேகலா...

"நீ புரிஞ்சுதான் பேசறியா முரளி... ஷோபா கல்யாணம் ஆகாத பொண்ணு அவளைப் போய் உன் ரூமுக்கு பக்கத்து ரூமில் தங்க வைச்சா ஊர்.. உலகம் என்ன சொல்லும்..?"

இதில் ஊர்.. உலகம் சொல்ல என்ன இருக்கிறது என்று ஷோபாவுக்கு சுத்தமாகப் புரியவில்லை...

ஊர் உலகத்திற்கு இதைக் கவனிப்பதை விட வேறு வேலை இல்லையா என்று கேட்க நினைத்து.. மேகலாவின் கடுமையான முகபாவத்தை கண்டு அவசரமாக அந்த முடிவை மாற்றிக் கொண்டாள் ஷோபா...

"இப்ப என்னதான செய்யனும்கறிங்க.. ?" முரளி எரிச்சலுடன் கேட்டான்...

"இப்ப வந்து கேளு.. இதை முதலிலேயே கேட்கிறதுக்கு என்ன.. ?"

மேகலா மகனின் தவறை சுட்டிக் காட்டினாள்..

"என்ன இது.. என் முன்னாலேயே அத்தானை இந்தக் காய்ச்சு காய்ச்சறிங்க.. சுயமாய் முடிவெடுக்கக் கூட அவளுக்கு உரிமையில்லையா.. ?"

ஷோபாவின் பேச்சு முரளியை தூண்டி விடுவதைப் போல இருப்பதை கவனித்த மேகலா.. கண்கள் இடுங்க.. அவளை கூர்மையாக ஒரு பார்வை பார்த்தாள்.. மேலும்.. எதையோ பேச நினைத்து வாய் திறந்த ஷோபா.. அந்தப் பார்வையை கண்டதும் வாயை மூடிக் கொண்டாள்...

"இது குடும்பம்மா.. இங்கே உரிமைப் பிரச்னைக்கு இடமில்லை.. நீ விருந்தாளியாய் வந்த பொண்ணு.. வீட்டு பிரச்னையில தலையிடக் கூடாது.. மீனாட்சி...!" மேகலா உள்பக்கமாக திரும்பிப் பார்த்து குரல் கொடுத்தாள்...

"அம்மா..." மீனாட்சி ஓடி வந்தாள்...

"இந்தப் பொண்ணை என் ரூமுக்கு பக்கத்து ரூமில தங்க வை..."

"ஆகட்டும்மா.." மீனாட்சி ஷோபாவின் பைகளை தூக்கிக் கொள்ள... ஷோபா தயங்கி நின்று முரளியின் முகம் பார்த்தாள்...

"அங்கேயென்ன பார்வை வேண்டிக்கிடக்கு.. வயசுப் பொண்ணு அடுத்தவங்க வீட்டிலே தங்கனும்னு நினைக்கிறதே தப்பு.. இதில புதுசா கல்யாணமான ஜோடி இருக்கிற ரூமுக்கு பக்கத்து ரூமில தங்கறது அதைவிடத் தப்பு.. போம்மா.. போய் குளிச்சுட்டு ரெஸ்ட் எடு.. சாப்பாட்டு டயத்திலே கூப்பிட்டு விடறோம்.. சாப்பிட வா..."

"அத்தான்... ?"

என்னவோ காலம் காலமாக அத்தானோடு கூட வளர்ந்தவளைப் போல அவள் ஏக்கமாகக் கேட்டு வைக்க.. மேகலாவுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது...

'இந்தப் பொண்ணு என்ன இப்படி நடந்துக்குது.. இவ வீட்டிலே இப்படியா வளர்த்து வைச்சிருப்பாங்க.. இவளப் போயி நம்ம முரளிக்கு கட்டி வைக்க நினைச்சேசேன.. நல்ல வேளை தெய்வமே.. தப்பிப் பிழைச்சேன்...'

"அத்தானை அவன் பெண்டாட்டி பார்த்துக்குவாம்மா... உனக்கு அந்தக் கவலை வேணாம்.. நீ போ.."

ஏறக்குறைய ஷோபாவின் கழுத்தைப் பிடித்து தள்ளுவதைப் போலதான் மேகலா பேசி வைத்தாள்.. ஷோபா அதை தட்டி விட்டுவிட்டு எந்தவிதப் பாதிப்புணர்வும் இல்லாமல் ஆணியடித்ததைப் போல அங்கேயே நின்றாள்..

"உன்னைப் போன்னு சொன்னேனேம்மா..."

"அத்தான் கூட எனக்குக் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு..."

தைரியமாக ஷோபா சொல்ல.. மீனாட்சி விழி விரித்தாள்.. மேகலாவுக்கு கோபம் வந்தால் என்ன நடக்கும் என்று அறிந்தவள் அவள்.. அப்பேற்பட்ட

மேகலாவின் முன்னாலே அவள் மகனிடம் பேச வேண்டியிருக்கிறது என்று ஒரு இளம் பெண் சொல்கிறாள் என்றால் அவள் விழி விரித்துப் பார்க்க மாட்டாளா..?

"ஏன் முரளி... இந்தப் பொண்ணு உன்கூடத் தனியாப் பேசனுமாம்.. நான் வேண்டும்னா.. என் மருமகளையும்.. வேலையாள்களையும் கூப்பிட்டுக்கிட்டு வெளியே போயிரவா..?" மேகலாவின் கேள்வியில் புயலை உள்ளடக்கிய அமைதி இருந்தது...

"அம்மா..!" முரளி தலையைப் பிடித்துக் கொண்டான்....

"பேசாதே.. நடுவழியில் இந்தப் பெண்ணைப் பார்த்தா நீ என்ன செய்திருக்கனும்.. அப்படியே காரைத் திருப்பி.. உன் அக்கா வீட்டிலே இவளை ஒப்படைக்கட்டு வந்திருக்கனுமா.. இல்லையா..?"

"ஏம்மா.. ஷோபா என்ன மூன்றாம் மனுஷியா..? அப்படியே கை கழுவிட்டு வர.. இவ நம்ம உறவுக்காரப் பெண்ம்மா..."

"நல்லாச் சொல்லுங்க அத்தான்... என்னை தேர்ட் பெர்சன் போலவே ட்ரீட் பண்றாங்க.. அதை முதல்ல ஏன்னு கேளுங்க..."

ஷோபா வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருக்காமல் ஊடே புகுந்து பேச... மேகலா இமைக்காமல் அவளையே பார்த்தாள்...

"ஏம்மா.. என்னை ஏன்னு கேட்கச் சொல்லத்தான் எங்க வீட்டுக்கு நீ வந்தியா..?"

"அம்மா..."

"முரளி.. இது சரியாப்படலே.. இந்தப் பொண்ணு தெளிஞ்ச பேதா... இல்லை தெரியாமப் பேசுதான்னு ஒரு விவரமும் பிடிபடலே.. ஒன்னு மட்டும் நல்லாத் தெரியுது.. இது பேசறது நல்லதுக்கில்ல..."

"என்னங்கம்மா நீங்க.. இது சென்னையில பிறந்து வளர்ந்த பொண்ணு.. நம்ம ஊரு பழக்க வழக்க மெல்லாம் இவளுக்கு எப்படித் தெரியும்..? தெரியாத்தனமா பேசி வைக்கிறா.. ஷோபா நீ கொஞ்ச நேரம் பேசாமல் இருந்தாத் தேவலை..."

"நான் தப்பா எதுவும் சொல்லலையே அத்தான்.. உங்ககூட எனக்கு பேச வேண்டியிருக்குன்னு சொன்னேன்... அது தப்பா..?"

"தப்பேயில்லம்மா... இந்தப் பொண்ணு பேசுற லட்சணத்தை.. கேட்டுக்கடா முரளி.. ராதிகாவும் சென்னையில பிறந்து வளர்ந்தவதான்.. இவளப் போலவா பேசி வைக்கிறா..?"

மேகலா ராதிகாவை உயர்த்திப் பேசியதில் ஷோபா பொங்கி விட்டாள்...

"வாட் இஸ் திஸ் ஆண்ட்டி..?"

"ஆண்டியா..? ஏண்டா முரளி.. ஆனானப்பட்ட மாணிக்க வாசகத்தோட பெண்டாட்டி நானு.. இந்த தென்காசிப் பட்டினத்திலே கோட்டையைப் பிடிச்சு கொடியை நாட்டினே உன்னோட அம்மா நானு.. என்னைப் பார்த்து இந்தப் பொண்ணு ஆண்டின்னு சொல்லுது.. கேட்டுக்கம்மா.. என் வம்சம் கோடிஸ்வர வம்சம்.. உங்களைப் போல புதுப் பணக்கார வம்சமில்ல... யாரைப் பார்த்து ஆண்டின்னு சொல்ற...?"

மேகலா காளி அவதாரமெடுக்க.. முரளிக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை...

"உனக்கு பீட்டர் விட வேற ஆள் கிடைக்கலியா ஷோபா..?" என்று ஷோபாவை கடிந்து கொண்டான்..

"இது சின்ன சென்டென்ஸ் அத்தான்... இதுக்கே இந்தப் பாடுன்னா.. இன்னும் நான் பீட்டர் விட்டா உங்க அம்மா தாங்குவாங்களா...?"

ஷோபா கேலியாக கேட்க.. முரளியின் முகம் மாறி கடினமானது... அவன் கண்டிப்பு பார்வை பார்த்தான்...

"உன் இங்கிலீஷ் லாங்குவேஜ் பெருமையை என் அம்மாவிடம் காட்டத்தான் எங்க வீட்டுக்கு வந்தியா..? பதிலுக்கு அவங்க தேனூத்து லாங்குவேஜ் பெருமையைக் காட்டினா நீ தாங்குவியா..?"

முரளியின் கோபக்குரலில் சட்டென்று ஷோபா ஜகா வாங்கினாள்...

"ஐயோ அத்தான்.. நான் ஆண்ட்டியிடம் பெருமை பேசுவேனா...? உங்களிடம் பேசக்கூட அவங்க விட மாட்டேங்கிறாங்களே... இது நியாயமா அத்தான்...?"

"ஏம்மா.. என் மகன்கிட்ட உனக்கென்ன பேச்சு வேண்டிக்கிடக்கு...?"

மேகலாவின் கேள்விக்கு.. ஷோபாவிடமிருந்து உடனடியாக பதில் கிடைத்தது...

"எனக்கு குற்றாலத்துக்கு போகனும் ஆண்ட்டி..."

"அதுக்கு எதுக்கு என் மகனிடம் பேசனும்கிற...?"

"அவர்தானே என்னைக் கூப்பிட்டுக்கிட்டுப் போகனும்...?"

"ஓஹோ... உன்னைப் பார்த்தா.. நடுவழியில கார் ரிப்பேராகி தற்செயலா தேனூத்துக்கு வந்ததைப் போலத் தெரியலையே... தெளிவாத் திட்டம் போட்டு வந்திருக்கிறது மாதிரியில்ல இருக்கு..."

"போங்க ஆண்ட்டி.. கேலி பண்ணாதீங்க..."

"இங்கே பாரும்மா.. இந்த வீட்டில உன் கூடப் படிச்ச பொண்ணு இருக்கா.. அவகூடப் பேசு.. உன் அண்ணியைப் பெத்த அம்மா... நான் இருக்கேன்.. என்கிட்டப் பேசு.. இந்தா மீனாட்சி இருக்கா.. அடுப்படியில காவிரி இருக்கா.. அவங்ககிட்டப் பேசு..."

"ஆக மொத்தம் அத்தானிடம் மட்டும் நான் பேசக் கூடாதுன்னு சொல்றிங்க..." ஷோபா அதிலேயே நின்றாள்...

"ஆமாம்மா..." மேகலாவும் பட்டென்று பதில் சொன்னாள்...

"அதுதான் ஏன்..?" ஷோபா விடவில்லை...

'ஏன்னா.. அவன்.. இன்னொருத்தியோட புருசன்..' சொல்லத் துடித்த நாவைக் கட்டுப் படுத்திக் கொண்டாள் மேகலா.... நிதானத்தை வரவழைத்துக் கொண்டவளாய்..

"அவனுக்கு ஆயிரம் வேலையிருக்கும்மா.. நின்னு பேச நேரமில்லாம ஒடிக்கிட்டு இருக்கிறவன் இவன்.. சாப்பிடக்கூட மறந்து போயி வேலை.. வேலைன்னு அலைகிறவன்.. இவனுக்கு இருபத்தி நான்கு மணி நேரம் போதாதும்மா.. உனக்கு ஊர் சுத்திப் பார்க்கனும்னா ன்கிட்டச் சொல்லு..." என்று சிறு குழந்தைக்கு சொல்வதைப் போலச் சொன்னாள்...

"நீங்களே பாவம் வயசானவங்க.. உங்களைப் போய் தொந்தரவு பண்ணினா நல்லாயிருக்குமா.. ஆண்ட்டி.."

சந்தடிசாக்கில் மேகலாவை 'கிழவி'யென்று ஷோபா சுட்டிக் காட்ட... மேகலா மனதிற்குள் வெகுண்டாள்..

"நல்லாயில்லாததைப் பத்தி நீயெல்லாம் பேசக் கூடாதும்மா... நீ வந்ததில இருந்து பேசுகிறது எதுவுமே நல்லாயில்லை.. எனக்குத் தான் வயசாகிருச்சு... எங்க வீட்டிலேயும்.. மில்லிலேயும்... தோட்டம் வயல்.. செங்கல் சூளை.. ஜவுளிக்கடை.. உரக்கடைன்னு இருக்கிற அத்தனை தொழில்களிலயும் வேலை செய்கிறவங்களுக்கு ஒன்னும் வயசாகிரலை..."

"என்ன அத்தை சொல்கிறிங்க.. வேலையாள்கள் கூட நான் ஊர் சுற்றிப் பார்க்கிறதா...?"

"தப்பில்லைம்மா.. உனக்குத் துணையாய் மீனாட்சி வருவா.. இப்ப நீ போ.."

"என்னத்தான் இது...?"

"முரளி.. நீ மாடிக்குப் போ.."

மேகலாவின் கண்டிப்பான குரலில்... முரளி மாடிப்படி யேறிவிட்டான்...

ஷோபாவினால் அந்தத் தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை... ஒரு கிராமத்துப் பெண்மணி எளிதாக அவளைத் தோற்கடித்து விட்டதை அவளால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை... அதிலும்.. பேச்சுக்கு பேச்சு.. ராதிகாவை உயர்த்தி வைத்து மேகலா பேசியதில் ஷோபா காழ்ப்புணர்ச்சி கொண்டாள்...

ஷோபாவுக்கு மேகலாவைப் பிடிக்காமல் போய் விட்டது...

"இன்னும் ஏம்மா இங்கேயே நிற்கிற.. போய் குளிச்சுட்டுவா... சாப்பிட்டுட்டு ஒய்வெடு.. நாளைக்கு மில்லில் இருந்து இந்தப் பக்கம் பூராவும் தெரிஞ்ச மனுசரா ஒருத்தரை அனுப்பச்சொல்றேன்.. நம்ம டிரைவர் இருக்கான்... மீனாட்சி உன் கூட வருவா.. ஊரைச் சுற்றிப் பாரு.. நாளைக்கு மறுநாள் உன்னைப் பத்திரமா திருநெல்வேலியில் விட்டுவிட்டு வர நானே உன்கூட வர்றேன்... கவலையே படாதே..."

பேச்சோடு பேச்சாக.. இரண்டு நாளில் ஷோபா அங்கிருந்து கிளம்பி விடவேண்டும் என்ற மறைமுக உத்தரவை போட்டு விட்டு மேகலா அகன்று விட்டாள்...

"வாங்கம்மா..." மீனாட்சி ஷோபாவைப் பார்த்த பார்வையில் கடுகளவு கூட மரியாதை தென்படவில்லை..

பல்லைக் கடித்தபடி... அவள் காட்டிய அறைக்குள் சென்ற ஷோபா அறைக் கதவைத் தாழிட்டு அதன் மேல் சாய்ந்து... கண்மூடி நின்றாள்...

அங்கே அவள் எதற்காக வந்திருக்கிறாள் என்ற நினைவில் அவள் மனம் குமுறியது...

ராதிகா..! அவளது சந்தோசத்தை அழிக்க வேண்டும்.. அதற்காகத்தான் அவள் சென்னையிலிருந்து கிளம்பி வந்திருக்கிறாள்...

ஆனால் ராதிகாவைக் காக்கும் பலமான அரணாக மேகலா நிற்கிறாளே...

104

காலைப் பனியின் துளிகளோடு..
கலந்து வரும் என்காதல்...

ஷோபாவின் ஆசேவத்தின் பின்ணணியில் சங்கரின் நிராகரிப்பு இருந்தது... எந்த சங்கருக்காக... பாலமுரளியை தூண்டிவிட்டு ராதிகாவின் கரம் பிடிக்க வைத்தாளோ... அந்த சங்கர் ஷோபவை நிராகரித்து விட்டான்...

எவனைத் திருமணம் செய்து கொள்ள ராதிகா தடையாக நிற்கிறாளென்று பாலமுரளியை விட்டுக் கொடுத்தாளோ.. அவன் ஷோபாவை திருமணம் செய்து கொள்ள மறுத்து விட்டான்...

ஷோபா வின் அப்பா எவ்வளவோ முயன்று பார்த்தும் சங்கரின் மனதை மாற்ற முடியவில்லை...

"நான் என்னடா செய்வேன்..? அவனோ எனக்கு ஒற்றை மகன்.. மேரேஜ் என்கிறது அவன் மனதுக்கு பிடித்ததாக இருக்க வேண்டுமில்லையா..? பிஸினெஸ்ஸில் நிறைய சாதித்தவன்.. பாரினில் படிச்சுட்டு வந்தவன்.. அவனுக்குத் தெரியாததையா நான் அவனுக்குச் சொல்லிவிடப் போகிறேன்..? இது மேரேஜ் மேட்டர்.. அவன் சம்பந்தப்பட்டது... இதில் அவனை ஃபோர்ஸ் பண்ண என்னால் முடியாது.. ஐ ஆம் ஸாரி..."

சங்கரின் தகப்பனார் கையை விரித்து விட்டார்.. நெருங்கின நண்பரே பின் வாங்கி விட்ட பின்னால் எந்த நம்பிக்கையில் சங்கருக்காக ஷோபாவை காத்திருக்க வைக்க முடியும்...?

போதாக்குறைக்கு.. சங்கரின் திருமணம் முடிவாகி விட்டதாக செய்தி வந்து சேர.. ஷோபாவின் தந்தை தீவிரமாக அவளுக்கு மாப்பிள்ளை தேட ஆரம்பித்தார்...

ஷோபாவுக்கு மனம் தாங்கவில்லை.. சுசிலா வேறு அவளை சொல்லிக் காட்டி விட்டாள்...

"ஆற்றிலே ஒரு கால்.. சேற்றிலே ஒரு கால்ன்னு இருந்தா இந்தக் கதிதான்.. நீ ஒரு நிலையாய் நின்றிருக்கனும் ஷோபா.. நான்தான் அருமையான மாப்பிள்ளையாய் பாலமுரளியை பார்த்து வைத்திருந்தேனே.. கிராமம்ன்னு சொல்லி.. நீயும் உன் அப்பாவும் அலட்சியமா இருந்துட்டிங்க... இப்பப் பாரு.. பாலமுரளிக்கும் மேரேஜ் ஆகிருச்சு.. சங்கருக்கும் ஆகப் போகுது.. இரண்டையும் கோட்டை விட்டுட்டு நாமதான் முட்டாள் தனமா முழிச்சுக்கிட்டு நிற்கிறோம்..."

ஷோபாவின் அதிர்ந்த பார்வையில் எதைக் கண்டாளோ.. சுசிலா மகளின் தோளில் கைபோட்டு ஆறுதலாக அணைத்துக் கொண்டாள்..

"உனக்கென்ன குறை ஷோபா..? அழகில்லையா..? படிப்பில்லையா..? அந்தஸ்துதான் இல்லையா..? உன் அப்பாவோட கோடிக் கணக்கான சொத்துக்களுக்கு நீ ஒருத்திதானே வாரிசு.. இதுக்குப் போய் மனம் வருந்தலாமா..? இவங்களைவிட மேலானவனாப் பார்த்து உனக்கு மேரேஜ் பண்ணி வைக்கிறோம்.. டோன்ட் வொர்ரி.. செல்லம்.."

ஷோபாவால் கவலைப்படாமல் எப்படியிருக்க முடியும்..? யாரைத் தோற்கடிக்க வேண்டும் என்ற நினைவில் தலைவலியை வரவழைத்துக் கொண்டு அவதிப் பட்டாளோ.. அந்த ராதிகாவின் காதல் நிறைவேற முட்டாள் தனமாக உதவி விட்டு கவலைப்படாமல் இருக்க முடியுமா...?

பாலமுரளியைத் திருமணம் செய்து கொண்டிருந்தால் ராதிகாவையும் தோற்கடித்திருக்கலாம்.. சங்கரின் முன்னாலும் வாழ்ந்து காட்டியிருக்கலாம்.. இவையிரண்டுமே நடக்காமல் போனது யாரால்..?

அந்த ராதிகாவால்...

இப்படி நடக்குமென்று ஷோபா நினைத்தா பார்த்தாள்...?

அவள் நினைத்தது வேறு.. நடந்ததோ முற்றிலும் வேறு..

சங்கருடனான ராதிகாவின் திருமணம் நிற்க வேண்டும்... அதே நேரத்தில் பாலமுரளியின் தீராத வெறுப்பிற்கும் ராதிகா ஆளாக வேண்டும்...

ஷோபா மட்டும்.. அந்த இருவரில் ஒருவனைத் திருமணம் செய்து கொண்டு.. இன்னொரு வனுக்கு 'டாட்டா' காட்ட வேண்டும்...

இப்படித்தான் நினைத்து அவள் காய் நகர்த்தினாள்.. பாலமுரளிக்கு ராதிகா பேசிய பேச்சுக்களை செல் போனில் பதிவு செய்து அனுப்பி வைத்தாள்.. பாலமுரளியின் மனமும்.. குணமும் ஷோபாவுக்கு மிக நன்றாகவே தெரியும்...

முரளியின் மனதில் ராதிகா இருந்தாள்...

இதை முதல் நாளிலேயே ஷோபா கண்டு பிடித்து விட்டாள்.. யாராலும் அசைக்க முடியாத பாலமுரளியின்

மனதை ராதிகா அசைத்து.. அவன் மனதில் இடம் பிடித்து விட்டதில் ஷோபாவுக்குள் பொறாமை இருந்தது தான்...

ஆனாலும்.. கிணற்று வெள்ளத்தை ஆற்று நீரல் கொண்டு செல்ல முடியாது என்று அலட்சியமாக இருந்து விட்டாள்... முரளியின் அக்காவை அவளது ஒன்று விட்ட அண்ணன் திருமணம் முடித்திருந்தான்.. அந்த அக்காவுக்கு ஷோபாவை பிடித்திருந்தது...

இதைவிட வேறென்ன வேண்டும் என்ற நினைவுதான் ஷோபாவின் பிழைப்பைக் கெடுத்து விட்டது..

அக்கா சொன்னால் கட்டாயம் தம்பி கேட்டு கொள்வான் என்று ஷோபா நினைத்தாள்.. அந்தத் தம்பி.. யார் சொன்னாலும் கேட்டுக் கொள்ளும் ரகமில்லை என்று அவளுக்குப் புரியவைத்து விட்டான்..

பாலமுரளியின் குணம் பற்றி ஷோபா ஓரளவுக்கு கணித்து வைத்திருந்தாள்.. அவனுக்கு வேண்டியவர்கள் என்றால் அவர்களுக்காக அவன் எதையும் செய்வான்.. அதுவே எதிரிகள் என்றால் அவர்களை கூண்டோடு அழிக்க கொஞ்சம் கூட யோசிக்க மாட்டான்..

இந்த குணாதியம் தான் ஷோபாவை பயமுறுத்தி வைத்திருந்தது...

'இவனே இப்படிப்பட்ட ராட்சஸ குணம் படைச்சவனா இருக்கான்.. இவனை மேரேஜ் பண்ணிக்கிட்டா.. லைஃப் முழுவதும் பயந்து சாகனும்... தேவையா..?'

ஷோபாவின் மனம் சங்கரை நாடியதற்கு இதுவும் ஒரு காரணம்... கூடுதலாக சங்கரின் அழகும்.. வெளிநாட்டுப் படிப்பும் இருந்தன...

இப்படிப்பட்டவனுக்காக... சங்கரை தூக்கியெறிந்து விட்டு ராதிகா உருகி நிற்பாள் என்று ஷோபா நினைத்துக் கூடப் பார்த்ததில்லை..

பாலமுரளியின் காதல் ஒருதலையானது என்ற நினைவில்தான் அவனது கோபத்தை தூண்டி விட்டாள் ஷோபா... அவன் கோபம் கொண்டால் ராதிகாவின் கதி.. அதோ கதியாகி விடும் என்பது ஷோபாவின் எதிர்பார்ப்பு..

அவன் நினைத்த ராதிகாவை சங்கர் திருமணம் செய்து கொள்ள ஒருநாளும் பாலமுரளி விடமாட்டான்.. அதே சமயத்தில் சங்கர் மேல் ஆசைப்பட்ட ராதிகாவை திருமணமும் செய்து கொள்ள மாட்டான் என்று தான் ஷோபா நினைத்தாள்...

அவளது முதல் நினைவு பலித்தது... சங்கருடனான ராதிகாவின் திருமணத்தை பாலமுரளி நிறுத்தி விட்டான்..

ஆனால் அவளது இரண்டாவது எதிர்பார்ப்பைத் தான் தவிடு பொடியாக்கி விட்டு.. ராதிகாவைத் திருமணம் செய்து கொள்ள கிளம்பி விட்டான்...

இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்த்திராத ஷோபா நிலை குலைந்து போய்விட்டாள்... இப்பேற்பட்ட கோடிஸ்வரனுக்கு ராதிகா மனைவியாகி விடுவதா என்று வயிறெரிந்தாள்.. அவளால் ஆனமட்டும் அந்தத் திருமணத்தை தடுத்த நிறுத்தும் யத்தனங்களைச் செய்தாள்... என்னதான் அவள் பகீரத பிரயத்தனங்களைச் செய்தாலும்.. பாலமுரளியுடனான ராதிகாவின் திருமணத்தை தடுத்து நிறுத்த அவளால் முடியாமல் போய் விட்டது...

'இந்தக் கோபக்காரனுக்கு கழுத்தை நீட்டா விட்டால் தான் என்ன..?'

அவள் மனதை சமாதானம் பண்ணிக் கொண்டு.. அவனின் திருமண நிச்சயதார்த்தத்திற்குப் போனாள்.. அங்கேதான் அவள் தலையில் இடி விழுந்தது...

ராதிகாவின் மனதிலும் பாலமுரளி இருந்ததை அன்றுதான் அவள் கண்டு கொண்டாள்... அதை அவளால் ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை...

சங்கர் போன்ற கவர்ச்சிகரமான அழகுடன் கூடிய பணக்காரன் சென்னையிலே இருக்க.. அவனைத் திருமணம் செய்து கொள்ள.. வலிய வந்திருக்கும் வாய்ப்பை புறக்கணித்து ராதிகாவின் மனம் தேனூத்து கோபக்காரனிடம் நிலைகொண்டிருக்கும் என்று அவள் நினைத்தும் பார்க்கவில்லையே...

தன் எதிரியைத் தோற்கடிக்கும் வாய்ப்பை கை நழுவ விட்டதுமில்லாமல் அவளது காதல் நிறைவேற தானே மறைமுக காரணமாகி விட்டதை ஷோபாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

அந்த நிலைமையிலும் அவள் ராதிகாவுடன் மோதத்தான் செய்தாள்.. அவளோ பதிலுக்கு எச்சரிக்கை செய்து விட்டாள்...

பாலமுரளியுடனான ராதிகாவின் திருமணம் நின்றால் ஷோபாவுக்குத்தான் சிரமம்.. சங்கரை ராதிகா திருமணம் செய்து கொண்டு விடுவாள்... பாலமுரளியோ ஷோபாவைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டான்...

இப்படியாகப்பட்ட அஸ்திரத்தை ராதிகா எய்ததும்.. ஷோபா யோசனையுடன் பின் வாங்க வேண்டியதாகி விட்டது...

ராதிகா வெற்றிகரமாக பாலமுரளியின் மனைவியாகி விட்டாள.. சங்கரோ ஷோபாவை மறுத்து விட்டான்..

இந்த நிலைமையில் ஷோபாவுக்கு பைத்தியம் பிடிக்காமலிருக்குமா...?

அவள் உன்மத்தம் பிடித்தவளாக சங்கரைத் தேடிப் போனாள்... அவனும் அவளைத் தனிமையில் சந்திக்க வந்தான்.. கடற்கரைச் சாலையில் காரை நிறுத்திவிட்டு மணலில் கால் புதைய அவளுடன் நடந்தான்.. ஷோபாவின் மனக்குமுறல்களை பொறுமையாக கேட்டான்.. அதன் பின்னரும் அவனது மறுப்பைத் தெளிவாகச் சொன்னான்...

"என் மனசில ராதிகா மேல மட்டும் தான் காதல் வந்தது ஷோபா.. அது ஏன்னு தெரியலை.. பார்த்தவுடனேயே அவளை எனக்கு பிடித்துப் போய் விட்டது..."

"அவளுக்குத்தான் மேரேஜ் முடிந்து விட்டதே சங்கர்..?"

"அந்த மேரேஜிக்குப் பின்னாலே நீயிருக்கிறாய்ன்னு.. நான் சந்தேகப்படுகிறேன் ஷோபா..."

நிதானமாக கூறிய சங்கர் தனது புத்திசாலித்-தனத்தை ஷோபாவுக்கு நிருபித்தான்.. ஷோபாவின் விழிகளில் நொடிப் பொழுதுக்கு தோன்றி மறைந்த அதிர்வு அவளை அவனுக்கு காட்டிக் கொடுத்தது...

சங்கர் கடலை வெறித்தான்.. அவன் முகம் இறுகியிருந்தது...

"பாலமுரளி உனக்கு ரிலேடிவ் ஷோபா... நீ என்மேல் ஆசைப்பட்டாய்.. உனக்கும் ராதிகாவுக்கும் ஆகவே ஆகாது... இந்த மூன்றும் போதும்... நீதான்.. இதைச் செய்திருக்கிறாய்ன்னு புரூஃப் பண்ண..."

"நோ சங்கர்... நான் குற்றமற்றவள்..."

சங்கரின் இதழ்கள் இகழ்ச்சியாக வளைந்து.. உன்னை எனக்குத் தெரியாதா என்றன...

"பொய் வேண்டாம் ஷோபா.. ஏதோ நடந்திருக்கிறது.. பாலமுரளியிடம் ராதிகா பயப்படுகிறாள்.. பிளாக்மெயில் செய்துதான் பாலமுரளி அவளை மேரேஜ் பண்ணிக்-கொண்டு போயிருக்கிறான்... நீ ராதிகாவின் வாழ்வை சிதைத்து விட்டாய்.."

"சங்கர்..." ஷோபாவின் குரல் நடுங்கியது..

சங்கரிடமிருந்து வெளிப்பட்ட இந்த அதீதமான கோபத்தை அவளால் எதிர் நோக்க முடியவில்லை...

அவளறிந்த சங்கர் மென்மையானவன்.. அதிர்ந்து பேசாதவன்.. அழகானவன்.. நுனி நாக்கு ஆங்கிலம் பேசும் வெளிநாட்டு படிப்புக்காரன்.. வியாபாரத்தில் பல வெற்றிகளைச் சந்தித்தவன்.. நாசுக்கும்... நாகரிகமும் தெரிந்தவன்..

அவனா இந்த அளவுக்கு அவள்மேல் கோபப் படுகிறான்..?

"இதை நான் மன்னிக்கவே மாட்டேன் ஷோபா... நான் உன்னை வெறுக்கிறேன்.. உன்னைக் கொன்று இந்தக் கடலில் வீசியெறிந்தால் கூடத் தப்பில்லை.. நீ அந்த அளவுக்கு கொடுரமானவள்... ராதிகா பாவம்.. எதையோ மனதில் வைத்துப் பூட்டிக் கொண்டு வெளியே சொல்ல முடியாமல் மருகுகிறாள்.. பாலமுரளியிடம் பயந்து போய்.. அவனை மேரேஜ் பண்ணியிருக்கிறாள் என்றால் எந்த அளவுக்கு அவன் அவளைத் துன்புறுத்தியிருக்க வேண்டும்..? இதற்கெல்லாம் காரணம் யார்..? நீதான்.."

சங்கரின் சுட்டு விரல் அவளை நோக்கி நீண்டு 'நீ குற்றவாளி...' என்றது.. ஷோபா விக்கித்துப் போனாள்...

"நீயும் ஒரு பெண்ணா..? ச்சே... இன்னொரு பெண்ணின் வாழ்க்கையில் குரூரமாக விளையாடி விட்டாயே.. பாவி.. உன்னை நான் மேரேஜ் பண்ணிக்கனுமா..? போய்விடு.. என் கண்ட்ரோலை மீறி உன் கழுத்தை நெறித்துக் கொல்வதற்குள் இங்கேயிருந்து ஓடிவிடு.."

ஷோபா ஒடித்தான் வந்து விட்டாள்.. அதற்கு மேலும் அங்கே நிற்க அவளால் முடியவில்லை... சங்கருடன் திருமணம் என்பது சாத்தியமில்லாத ஒன்று என்று அவளுக்குத் தெரிந்து விட்டது.. மனம் முழுவதும் வெறுப்பையும்.. கோபத்தையும் நிரப்பிக் கொண்டிருக்கும் சங்கரின் மனம் அவள் பக்கம் திரும்பவே திரும்பாது என்று தெரிந்து கொண்டபின்பு.. அவன் முன்னால் நிற்கக் கூட அவளுக்கு தகுதியில்லாமல் போய் விட்டது...

ஷோபா அடிபட்ட புலியானாள்... அவளது ஆக்ரோசம் முழுவதும்.. ராதிகாவின் பக்கம் திரும்பியது...

'இவள் யார்..? ஒரு மிடில் கிளாஸ் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள்.. இவள்மீது இரண்டு கோடிஸ்வரன் களின் பார்வை பட்டது... அது யாரால்..? என்னால்...! அந்த இரண்டு பேருமே எனக்காக பார்க்கப்பட்ட மாப்பிள்ளைகள்.. இரண்டில் ஒன்றை நான் தேர்வு செய்ய வேண்டிய உச்சத்தில் இருந்தேன்... இவளால் அந்த இரண்டுமே கை நழுவிப் போய்விட்டது.. இவள் மட்டும் என் பார்த்டே பங்சனுக்கு வராமல் இருந்திருந்தால் இவையெல்லாம் நடந்திருக்குமா..,'

அந்த பிறந்த நாள் விழாவிற்கு எதற்காக ராதிகாவை ஷோபா வரவழைத்தாள் என்ற நினைவில் கண் சிவந்தாள் ஷோபா...

'என்னைப்பார்... என் லெவலைப் பார்ன்னு காட்டத்தானே இவளைக் கூப்பிட்டேன்.. இது ரெண்டையும் விட்டுவிட்டு.. எனக்காக பார்த்திருந்த மாப்பிள்ளைகள் இரண்டு பேரையும் பார்க்கச் சொல்லி.. இவளுக்கு யார் சொன்னது..? ஒரே நாளில் இரண்டு பேரையும் மயக்கி என் வாழ்க்கையை நாசம் செய்து விட்டாளே.. இவளை எனன் செய்தால் தேவலாம்...'

எது செய்தாலும் தேவலாம் தான் என்ற முடிவுடன் அவள் தேனூத்துக்கு கிளம்பிவிட்டாள்... சங்கர் தென்காசியில் தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறான்... அந்த மணப்பெண் பாலமுரளிக்கு உறவுக்காரப் பெண் என்ற செய்தி அவள் காதுக்கு வந்து சேர்ந்தது... அதை வைத்து விளையாடிப் பார்க்கலாம் என்று அவள் தேனூத்தில் கால் வைத்திருந்தாள்...

105

வாழவா என்று வரவேற்று..
வாசலுக்கு வந்தது தென்றல்காற்று...

"ராதிகாவிடம் பேசுவீங்களா... ஹேமா..." சங்கரின் குரலில் ஏக்கம் கலந்த ஆற்றாமை தொனித்தது...

ஹேமா அவனைக் கருணையுடன் பார்த்தாள்.. அவளுக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது...

"இல்லை... நான் பேசுவதில்லை..."

அவளது பதிலில் அவன் கண்களில் ஆச்சரியம் தெரிந்தது..

"நீங்களும்.. அவங்களும் நெருக்கமான பிரண்ட்ஸாச்சே..."

"யெஸ்... நாங்க திக்பிரண்ட்ஸ்தான்.. பட்.. அவளோட ஹஸ்பெண்டுக்கு ராதிகா யாரோடு பேசினாலும் பிடிக்காது.."

"ஏன்..?" சங்கரின் புருவங்கள் உயர்ந்தன...

'உன்னால் தான்...'

சொல்ல நினைத்ததை சொல்ல முடியாமல் மௌனம் சாதித்தாள் ஹேமா...

ஒரு நொடி பெருமூச்சொன்று சங்கரிடமிருந்து கிளம்பியது.. அந்த பெருமூச்சு வெளிப்படுத்திய ஏமாற்றத்தின் பாரம் தாங்காமல் ஹேமாவின் இதயம் கனத்தது...

இவ்வளவு ஆழ்ந்த காதலை அவள்மேல் வைத்திருக் கிறானே என்று ஹேமா மனம் தவித்தாள்...

'கொஞ்சம் என்னையும்தான் பாரேன்.. அவளைப் பார்த்த அதே நாளில்தானே... என்னையும் நீ பார்த்தாய்.. என்னையேன் உனக்குப் பிடிக்காமல் போனது...?'

வருடக் கணக்கில் சங்கரின் பின்னாலேயே சுற்றிய ஷோபாவை மறந்துவிட்டு.. சில மாதங்களுக்கு முன்னால் அறிமுகமான தன்னை மட்டும் நினைவில் கொண்டு மனதிற்குள் புலம்பினாள் ஹேமா...

அவர்கள் அமர்ந்திருந்த பூங்காவின் மத்தியில் செயற்கை நீருற்று மீறிட்டு வழிந்து கொண்டிருந்தது.. மாலை நேரத்தின் கடல் காற்று அந்த நீருற்றில் பட்டு..

ஈரப்பசையுடன் மலர் செடிகளின் மீது தவழ்ந்து.. அவர்கள் மீது பட்டது.. அதன் குளுமை கூட அந்த இருவரின் மனதிலிருந்த வெம்மையைத் தணிக்கவில்லை...

"ஏன்னு கேட்டா எனக்கு என்ன பதிலைச் சொல்கிறதுன்னு தெரியலை சங்கர்.. அவர் அப்படித்தான்.. பயங்கர கோபக்காரர்.. ராதிகா என்னை சங்கடத்துடன் அவாய்ட் பண்றதைப் போலத் தெரிஞ்சது.. விசாரிச்சேன்.. அவருக்கு யார் கூடப் பேசினாலும் பிடிக்காதுடின்னு மென்று முழுங்கறா.. அதுக்கு மேல என்ன கேட்கிறதுன்னு நானும் விட்டுட்டேன்..."

"ஊஹீம்.. நீங்க செஞ்சது ரொம்பத்தப்பு ஹேமா..."

"தப்பா...?"

இவன் என்ன சொல்கிறான் என்று குழம்பிப் போனாள் ஹேமா...

"யெஸ் ஹேமா.. தப்புத்தான்.. அவன் ராதிகாவைத் தனிமைப் படுத்தறான்... அது உங்களுக்குப் புரியலையா ஹேமா...?"

'உனக்குத்தான் என் மனசு புரியலை...'

இப்போது பெருமூச்சு ஹேமாவிடம் இடம் மாறியது...

"எதுவோ ஒன்னு.. அவளுக்கு இப்போ கல்யாணம் ஆயிடுச்சு.. இனி அவ வாழ்க்கை அவரோடதான்.. அவளாச்சு.. அவராச்சு.. இதில நாம ஊடே போக முடியுமா சங்கர்..?"

ஹேமாவின் வார்த்தைகளில் அப்படி ஊடே போகவும் கூடாது என்ற மறைமுக அறிவுறுத்தல் இருந்தது..

"அப்படியெல்லாம் ஒதுங்கி விடக் கூடாது ஹேமா.. எப்ப பாலமுரளி ராதிகாவை பிளாக் மெயில் பண்ணி மேரேஜ் பண்ணியிருக்கான்னு தெரிஞ்சதோ... அப்போதிருந்தே நாம் அலர்ட்டா இருக்க வேண்டாமா..?"

'அது என்ன தேவைக்கு...?'

இவன் ராதிகாவின் பேச்சைத் தவிர வேறு பேச்சை பேசவே மாட்டானா என்று கடுப்பானாள் ஹேமா...

"ஏன் சார்... அவளை யாரோ கடத்திக் கொண்டு வைத்திருக்கிறதைப் போலவே பேசி வைக்கறிங்களே... அவர் அவளோட ஹஸ்பெண்ட் சார்.. அடிக்கிற கைதான் அணைக்கும்... தெரியுமில்ல..."

ஹேமாவின் பேச்சை சங்கர் துளிக்கூட ரசிக்கவில்லை.. அதை அவனது முகமே காட்டிக் கொடுத்தது.. இவன் இன்னமும் ராதிகாவை பாலமுரளியின் மனைவியாக ஏற்றுக் கொள்ளவில்லை யென்று ஹேமா நினைத்துக் கொண்டாள்... ராதிகாவைச் சுற்றியே அவனின் நினைவுகள் சுழல்வதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது...

அது தவறு என்று இவனுக்கு யார் சொல்வது..?

துயரத்துடன் தொலைதூரத்தில் தெரிந்த தொடு-வானத்தை வெறித்தாள் ஹேமா... அருகிலிருந்தும் விலகியிருக்கும் அவன் மனதைப் பற்றியே அவளது நினைவுகளும் சுழன்றன...

"உங்க மேரேஜ் எப்போ சங்கர்...?"

ஹேமா கேட்டேவிட்டாள்... அதற்கு அவன் விட்டேற்றியாகப் பதில் சொல்வான்... அவனுக்கு ஆறுதல் சொல்லும் பாவனையில் தன் மனக்கிடக்கையை வெளிப் படுத்தி விடலாம் என்பது அவளின் எண்ணமாக இருந்தது...

"நெக்ஸ்ட் மன்த்தில் ஹேமா..." என்று அவளது உள்ளக் கிடக்கையை உடைத்தான் சங்கர்...

"என்ன சொன்னீங்க..?" ஹேமாவுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை....

இவ்வளவு சீக்கிரத்தில் சங்கர் தனது திருமணத்தை முடிவு செய்துவிடுவான் என்று அவள் கொஞ்சம்கூட நினைத்திருக்கவில்லை...

"யெஸ் ஹேமா.. உங்களுக்கு இன்விடேசன் கொடுக்கத்தான் இங்கே வரச் சொன்னே..."

சங்கர் இயல்பாக அவன் கையிலிருந்த திருமண அழைப்பிதழை ஹேமாவிடம் நீட்டினான்...

கையிலே கல்யாண அழைப்பிதழை வைத்துக் கொண்டு ராதிகாவைப் பற்றிக் கவலைப் பட்டானா..?

ஹேமாவுக்கு சங்கரைப் புரிந்து கொள்ள முடியவில்லை.. அவன் மனதில் என்ன இருக்கிறது என்று படிக்க முயல்பவளைப் போல... அவன் விழிகளுக்குள் ஊடுறுவிப் பார்த்தாள்...

அவள் பார்வையைக் கண்ட சங்கர் என்னவென்று கேட்கும் பாவனையில் புருவங்களை உயர்த்தினான்...

"நத்திங் சார்... திடிர்ன்னு கல்யாண இன்விடேசனை நீட்டினீங்களா... நான் திகைச்சுப் போயிட்டேன்..."

"த்ச்ச... மேரேஜை அவாய்ட் பண்ண முடியாது ஹேமா.... பண்ணித்தான் ஆகனும்.. நீ கை நீட்டிய ராதிகாவை பெண் கேட்டோமா இல்லையா...? இப்ப அவ வேறொருத்தனை மேரேஜ் பண்ணிட்டு போயிட்டாளே.. நீ மட்டும் ஏன் தனியாய் நிற்கிறேன்னு என் டாடியும்.. மம்மியும் கோபப் படறாங்க..."

"ஓ... இந்தப் பெண் உங்களுக்கு ரிலேடிவ்வா சார்..?"

"நோ.... நோ..."

அப்படியும் இல்லையா..?

ஹேமா கையிலிருந்த திருமண அழைப்பிதழைப் பிரித்துப் பார்த்தாள்.. மணப்பெண்ணின் பெயர் நித்யா என்று இருந்தது...

'கொடுத்து வைத்தவள்...' ஹேமாவின் கண்கள் லேசாகக் கலங்கின...

"உங்க வீட்டில் பார்த்த பெண்ணா...?"

"அப்படியும் இல்லை..."

"நான் ஒன்று கேட்கலாமா சங்கர்..?"

"ஷ்யூர்.. கேளுங்களேன்..."

"ராதிகா இல்லைன்னு ஆனபின்னாலேதான் இதைக் கேட்கிறேன்.. வேற ஒரு பெண்ணை மேரேஜ் பண்ணிக்க முடிவு பண்ணினீங்களே... அப்போக்கூட என் நினைப்பு உங்களுக்கு வரலையா சங்கர்...?"

ஹேமா கேட்டே விட்டாள்...

"ஹேமா..." சங்கரின் பார்வையில் அப்பட்டமான அதிர்ச்சி தெரிந்தது...

"நீங்க எனக்கு தங்கை மாதிரி..."

'தங்கையா...?' ஹேமா விக்கித்து விட்டாள்...

"தங்கைதான்... உங்களை வேறு மாதிரி என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது ஹேமா..."

ஹேமாவால் தலை நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்க்க முடியவில்லை... அவனை சில நேரங்களில் பெயர் சொல்லி அழைத்திருக்கிறாள்.. சில நேரங்களில் 'சார்' என்று அழைத்திருக்கிறாள்...

ஒரு நேரம்கூட 'அண்ணா..' என்று அழைக்கத் தோன்றியதில்லை... ஆனால் அவன் கண்களுக்கு அவள் தங்கையாக தோன்றியிருக்கிறாள் என்றால் இதை என்னவென்று சொல்லுவது...?

"ஐ ஆம் ஸாரி..." அவளுக்கு குரலே எழும்பவில்லை..

"இட்ஸ் ஆல்ரைட்.." அவன் இயல்பாகச் சிரித்தான்.. அவளால்தான் இயல்பாக இருக்க முடியவில்லை...

"ஈஸி ஹேமா..." சங்கர் அவளை சமாதானப் படுத்தினான்...

"ராதிகா கூடவே நீங்க இருந்தீங்க.. உங்களிடம் தான் நான் என் மனதைச் சொன்னேன்.. நீங்களும் என் காதலுக்கு ஹெல்ப் பண்ணினீங்க.. உங்களிடம் எனக்கு சகோதர பாசமும்.. பிரண்ட்ஷிப்பும் தானே வரும்..? காதல் வராதே..."

"ஐ கேன் அன்டர்ஸ்டாண்ட்..."

"குட்... மறக்காம மேரேஜ்க்கு வந்துருங்க..."

"மறப்பேனா சார்... காலோஜை கட் அடிச்சிட்டு வந்துர மாட்டேன்..?"

"காலேஜை கட் அடிக்கிறதா..? லீவே போடணும்..."

"அது எதுக்கு தேவையில்லாம...?"

"ஏன்னா.. மேரேஜ் நடக்கிறது தென்காசியாச்சே..."

"தென்காசியிலேயா...?"

ஹேமாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.. சென்னையிலே பிறந்து வளர்ந்து... வெளிநாட்டில் படித்து முடித்த கோடிஸ்வரனின் திருமணத்தை நடத்த சென்னையில் மண்டபமே கிடைக்கவில்லையா..?

"பெண்ணின் ஊர் தென்காசி..."

அவளது மனதைப் படித்தவனைப் போல அமைதியாகப் பதில் சொன்னான் சங்கர்...

"ஓ..."

பாலமுரளியின் ஊரான தேனூத்து கிராமம் தென்காசிக்கு அருகில்தான் இருக்கிறது என்ற நினைவு ஹேமாவுக்கு வந்தது...

அவளுக்கு எதுவோ புரிந்ததைப் போல இருந்தது...

"சென்னையில இல்லாத பெண்ணா சார்...?" விளையாட்டாகக் கேட்பதைப் போலக் கேட்டாள்...

சங்கர் பதில் சொல்லாமல் மர்மமாகப் புன்னகைத்தான்... அவர்கள் கிளம்பி.. எதிரும்... புதிருமாகப் பிரிந்து அவரவர் பாதையில் நடந்தார்கள்..

'சோ' வென்ற பேரிறைச்சலுடன் அருவி கொட்டிக் கொண்டிருந்தது... அதைப் பார்க்காமல் வேறு திசையில் செல் போனை காதுக்கு கொடுத்தபடி நடந்தாள ஷோபா..

"என்ன மீனாட்சி.. அருவியைப் பார்க்கச் சொன்னா.. இந்தப் புள்ள வேற திக்கில போய் வைக்குது..?" நாச்சியப்பன் சந்தேகம் கேட்டான்....

"இது அப்படித்தான்ய்யா.. எகனைக்கு மொகனையாத் தான் செஞ்சு வைக்கும்.. நேந்துக் காலையில வந்தவுன்னயே பெரியம்மாவுக்கு நெஞ்சுவலியை வரவைக்கப் பார்த்த புள்ளயில்ல இது..?" மீனாட்சிக்கு ஷோபாவை பிடிக்கவேயில்லை...

"அப்படியாப்பட்ட வில்லங்கம் புடிச்ச புள்ளயா இது..?" நாச்சியப்பன் ஆதங்கப்பட்டுப் போனான்..

ஷோபாவின் நவநாகரிக உடையழகில் அவன் மயங்கியிருந்தான்.. அவளது விரித்து விட்ட வெட்டப்பட்ட கூந்தலையும்... மாசு மறுவற்ற சருமத்தையும் கண்டு அவளது ரசிகனாகவே மாறிவிட்டிருந்தான்.. அப்பேற்பட்ட பெண்... அவனது முதலாளியின் அம்மாவிற்கு நெஞ்சுவலியை வரவைக்கப் பார்த்தாள் என்பதில் அவனுக்கே நெஞ்சுவலி வந்துவிடும் போல இருந்தது...

"அட.. ஆமாம்கிறேன்.. நீ வேற கேள்விமேல கேள்வியா கேட்டுத் தொணதொணக்கிற.. பேசாம வீட்டில இருந்தாலாவது வேலையை முடிச்சிட்டு.. அக்கடான்னு தலையைச் சாய்க்கலாம்.. இன்னைக்கு அதுக்கும் வழியில்லாம போயிருச்சு..."

"என்ன மீனாட்சி... இம்புட்டு தூரத்துக்கு அலுத்துக்கறே..."

"பின்னே என்னய்யா.. இந்த புள்ளைக்கு வால் புடிச்சக்கிட்டு வந்தா.. இது அருவிக்கரையை விட்டுப்புட்டு.. வேற திக்கில போய்க்கிட்டு இருக்கு.. இப்ப இதுக்கு பின்னால ஒடுறதா.. இல்ல.. அருவிக்-கரையிலேயே நிக்கிறதான்னு ஒரு மண்ணும் புரியலையே..."

"அது பின்னாலதான் போகனும்..."

"நல்லாயிருக்குய்யா உன் நாயம்... அது பின்னாலே மனுசக்கழுதையாலே அலைய முடியுமா..? வேணும்னா நீ போ..."

"அந்தப் புள்ளைக்கு துணையாய் போயிட்டு வான்னு சொல்லித்தானே பெரியம்மா உன்னை அனுப்பி வைச்சாங்க..?"

"துணையோட போற ஜென்மமாய்யா இது..? இதைக் காவல் காக்க நம்மால ஆகாது..."

"உன்னால ஆகாதுன்னு சொல்லு..."

"அப்ப.. என்னோட நீ கூட்டுச் சேர மாட்ட..."

"பாவம் மீனாட்சி அது பட்டணத்துக்காரப் பொண்ணு"

"அதுக்கு...?"

"நம்ம ஊரைப் பத்தி அதுக்கென்ன தெரியும்..? வழிதப்பிப் போயிருச்சுன்னா..?"

"உனக்கு இப்ப அது பின்னாலே போயாகனும்.. அதுதானே..?"

எப்படித்தான் இந்தப் பெண்கள் மனதுக்குள் இருப்பதைக்கூட தோண்டியெடுத்து கண்டு பிடித்து

விடுகிறார்களோ என்று ஆயாசமாக இருந்தது நாச்சியப்பனுக்கு...

அவனுக்கு ஷோபாவின் பின்னால் போக வேண்டுமென்ற ஆசை மலையளவுக்கு இருந்தது.. அதைக் கண்டுபிடித்து மீனாட்சி சொல்லிவிட்டபின்னால்... அவள் பின்னால் போவதற்கு யோசனையாகவும் இருந்தது...

போவதா.. வேண்டாமா... என்ற மனப்போராட்டத்துடன் அவன் இருந்தபோதுதான்.. அவன் கையைக் கிள்ளி வைத்தாள் மீனாட்சி...

"ஏய்ய்.. மீனாட்சி.. எதுக்காக புள்ள என் கையைப் பிடிச்சு பிறாண்டி வைக்கிற...?"

ஷோபாவின் பின்னால் அவனை போக விடாத கோபத்தைக் காட்டினான நாச்சியப்பன்..

"அடபோக்கத்த மனுஷா.. அங்கே பாரு கூத்தை.."

மீனாட்சி கை காட்டிய திசையில்.. காருக்குள்ளிருந்து பாலமுரளி இறங்கி... ஷோபாவை நோக்கிப் போனான்...

"நம்மஐயா மாதிரியில்ல இருக்கு...." நாச்சியப்பன் கண்ணுக்கு மேலே கையை வைத்து உற்றுப் பார்த்தான்...

"ஐயா மாதிரியில்ல... ஐயாவேதான்.. நேத்தே நினைச்சேன்.. நேத்தே இந்தப்புள்ள.. வீட்டுக்குள்ளே கூத்துக்கட்டி வைக்காம தேனூத்தை விட்டுப் போகாதுன்னு..." மீனாட்சி வெறுப்புடன் பேசினாள்..

"காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டவரு.. புதுப் பெண்டாட்டிய வீட்டில விட்டுப்புட்டு... ரகசியமா இந்தப் புள்ளய பார்க்க வரலாமா...?"

நாச்சியப்பனுக்கு மனம் தாங்கவில்லை.. அவனது மரியாதைக்குரிய முதலாளி... அவன் பார்வையிட விரும்பிய பெண்ணை பார்வையிட வந்து விட்டால் அவன்தான் என்ன செய்வான்...?

அவனுக்கு அவன் கவலை...!

என்ன செய்தேன் என்று...
என்னைத் தள்ளி வைத்தாய்...?

"சொல்லு ஷோபா... எதுக்காக என்னை வரச் சொன்ன..?" பாலமுரளி கேட்டான்...

"பொறுங்கத்தான்... எவ்வளவு முக்கியமான விவரத்தை உங்களிடம் சொல்லனும்னு துடிச்சுக்கிட்டு இருக்கேன்.. நீங்க அவசரப் படறிங்க..."

ஒயிலாக அவனது காரின் மீது சாய்ந்து நின்று கொண்டாள் ஷோபா... பாலமுரளிக்கு எரிச்சல் மூண்டது.. அதி முக்கியமான வேலையில் இருந்தவனுக்கு போன் பண்ணி.. அதி முக்கியமான விவரம் ஒன்றை நேரில் சொல்ல வேண்டும் என்று சொல்லி அவனை வரவழைத்து விட்டு.. இப்படி மெத்தனமாக ஷோபா நடந்து கொள்வது அவனுக்கு பிடிக்கவில்லை...

"எனக்கு வேலையிருக்கு ஷோபா.. என்னன்னு சொல்லு..." பாலமுரளி கண்டிப்புடன் பேசினான்...

ஷோபாவின் முகத்திலிருந்த விளையாட்டுத்தனம் மறைந்து ஒர்விதமான தீவிரம் வந்தது... பாலமுரளியின் புருவங்கள் முடிச்சிட்டன... ஷோபா ஏதோ ஒரு அணுகுண்டை எடுத்து வீசப் போகிறாள் என்று அவனது உள்ளுணர்வு சொன்னது...

அவளும் அணுகுண்டைத்தான வீசினாள்...

"சங்கருக்கு மேரேஜ் ஆகப் போகுது.. தெரியுமா..?"

அவள் நிதானமாகக் கேட்க... அப்பாடா என்றிருந்தது பாலமுரளிக்கு...

"இதுக்கா என்னை வரச்சொன்ன...?" அவன் கார் கதவைத் திறந்து ஏறிக் கொள்ளப் போனான்..

"இன்னும் நான் சொல்லி முடிக்கல அத்தான்.. சங்கருக்கு பார்த்திருக்கும் பெண் யார் தெரியுமா..?" ஷோபா மர்மக்குரலில் கேட்டாள்....

"நீ தானே..." வேண்டுமென்றே சொன்னான் பாலமுரளி...

'கேலி செய்கிறான்...' ஷோபா முகம் மாறினாள்...

'உன் பெண்டாட்டியையே ஒருத்தன் சுற்றிச் சுற்றி வருகிறான்.. அது தெரியாம நீ.. என்னைக் கேலி செய்யக் கிளம்பிட்டியா..?'

"தென்காசியில உங்களுக்கு கோமதி நாயகம்ன்னு ஒரு சொந்தக்காரர் இருக்காராமில்ல...?"

ஷோபா கேட்கவும்.. பாலமுரளியின் புருவங்கள் உயர்ந்தன...

'இவ எதுக்கு இப்ப கோமதிநாயகம் மாமாவை பேச்சில இழுக்கிறா...' அவன் யோசனையானான்...

"ஆமாம்... எனக்கு மாமா முறையாகனும்..."

"அவரோட பெண்ணைத்தான் சங்கர் மேரேஜ் பண்ணிக்கப் போகிறார்..."

"என்னது...?"

பாலமுரளி இதை எதிர்பார்த்திருக்கவில்லை என்பதை அவனது குரலே உணர்த்தியது.. ஷோபா திருப்தியாக உணர்ந்தாள்.. அணுகுண்டை வீச சரியான தளம் அமைத்து விட்ட மகிழ்ச்சி அவளுக்கு...

"ஆமாம் அத்தான்.. உங்க மாமா பெண்ணைத்தான் அவர் மேரேஜ் பண்ணிக்கப் போகிறார்..."

ஷோபா பாலமுரளியை ஆராய்ச்சியுடன்பார்ப்பதை கண்டுகொண்ட பாலமுரளி சுதாரித்துக் கொண்டான்...

"அப்படியா..? மாமா என்னிடம் சொல்ல-வேயில்லையே.. அப்புறம் என்ன ஷோபா.. நீ வீட்டுக்கு கிளம்பு.. எனக்கு வேலையிருக்கு... நான் போயாகனும்..."

இயல்பான குரலில் அவன் பேசிக் கொண்டே போக... 'நடிக்காதேடா' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் ஷோபா...

அவளுக்கா அவன் குணம் தெரியாது..? அவ்வளவு

மாட்டான்... அவன் மனதில் என்ன இருக்கிறது என்பதை அவனது முகபாவனையை வைத்து கண்டு கொள்வது வெகு சிரமமான ஒன்று....

"ஏன் அத்தான்... நான் தெரியாமல் தான் கேட்கிறேன்.. சென்னையில் ஆயிரம் பெண்ணிருக்க.. சங்கர் எதுக்காக தென்காசியில் வந்து பெண்ணெடுக்-கனும்..?" ஷோபா ஆரம்பித்து வைத்தாள்..

பாலமுரளிக்கும் அதே எரிச்சல்தான்.. அவனால் அதை ஷோபாவிடம் காட்டிக் கொள்ள முடியுமா..?

"அதையே என்னிடம் வந்து கேட்கிற ஷோபா..? அவனிடம் போய் கேளு.."

"கேட்டேனே... அதுக்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா..?"

"என்ன சொன்னான்...?"

"இங்கேதானே ராதிகா இருக்கிறான்னு சொன்னார்.."

"ஏய்ய்..."

ஷோபாவின் கழுத்தைப் பிடித்து விடும் ஆவேசத்துடன் கர்ஜித்த பாலமுரளி.. சுற்றுப் புறத்தை நினைவில் கொண்டவனாக.. தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டவனாக...

"காரில் ஏறு..." என்றான்...

"அத்தான்..." ஷோபா பயந்து போய் அவன் முகம் பார்த்தாள்...

"ஏறுன்னு சொன்னேன்.." அவன் உறுமினான்...

ஷோபா சட்டென்று காரில் ஏறி அமர்ந்து கொண்டாள்... கார் கிளம்பி பறந்து விட்டது..

நடப்பதை சற்றுத் தள்ளி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நாச்சியப்பனும்... மீனாட்சியும் பதறிப் போனார்கள்.. பாலமுரளியும்.. ஷோபாவும் என்ன பேசிக் கொண்டார்கள் என்று அவர்கள் காதுகளில் விழவில்லை..

ஷோபாவைத் தேடி பாலமுரளி வந்தான்.. இருவரும் எதையோ ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள்.. அதன் பின்னர் ஷோபா.. பாலமுரளியுடன் காரில் ஏறிப் போய்விட்டாள்...

இதுதான் அவர்களுக்குத் தெரிந்திருந்தது...

செய்தியைக் கேட்ட மேகலா நெஞ்சைப் பிடித்தபடி அமர்ந்து விட்டாள்.. ராதிகா பதறிப் போய் அவளுக்கு தேறுதல் சொன்னாள்..

"உங்க மகனைப் பற்றி உங்களுக்கு தெரியாதா அத்தை... அந்த ஷோபாவும் தப்புத்தண்டா செய்கிறவளில்லை..."

"அப்புறம் எதுக்காகம்மா அவங்க குற்றாலத்தில சந்திச்சுக்கிட்டாங்க..."

"என்னன்னு உங்க மகன் வரவும் கேட்போம்.. அதுக்கான பதில் நிச்சயமாய் அவரிடம் இருக்கும்.. நீங்க தேவையில்லாம எதையாவது நினைத்துக் கவலைப் படாதீங்க.."

ராதிகாவுக்குள் அச்சம் சூழ்ந்திருந்தது... அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மறைத்து வைக்க அவள் அரும்பாடு பட்டாள்...

ஷோபாவின் வரவும்.. அதன் பின்னால் நடக்கும் நிகழ்வுகளும் நல்லதிற்கான அறிகுறிகளல்ல என்று பயந்தாள் ராதிகா...

அவள் பயந்ததைப் போலவேதான்.. பாலமுரளியுடன் காரில் போய் கொண்டிருந்த ஷோபா போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தாள்...

"உங்க கோமதி நாயகம் மாமா பணக்காரர்தான் அத்தான்.. எங்க அப்பாவை விட அவர் பணக்காரரா..?"

இல்லை என்பதை பாலமுரளி நன்கு அறிவான்.. பரந்தாமனின் சொத்துக்களின் மதிப்பில் பத்தில் ஒருபங்கு வட கோமதி நாயகத்திடம் இருக்காது...

"எங்க அப்பாம்மாவுக்கு நான் ஒரே பெண்.. உங்க கோமதி நாயகம் மாமாவுக்கு ஒற்றைப் பெண்தானா..?"

அதுவும் இல்லை.. கோமதி நாயகத்திற்கு இரண்டு மகன்கள்... இரண்டு பெண்கள்... நித்யாதான் கடைசிப் பெண்...

"அந்த நித்யா என்னைவிட அழகாக இருப்பாளா..?"

இருக்க மாட்டாள்... ஷோபாவின் அழகில் முக்கால் வாசிதான் நித்யாவிடம் இருந்தது... அவள் அழகானவள்.. ஆனால் ஷோபாவை விட அழுகென்று சொல்லிவிட முடியாது..

"என்னை விட அதிகம் படித்தவளா..?"

நித்யா பட்டப்படிப்பு படித்திருந்தாள்.. ஷோபாவோ.. பொறியியல் படிப்பை படித்துக் கொண்டிருப்பவள்...

"சொல்லுங்க அத்தான்.. இத்தனையிருந்தும்... என்னை விட்டுவிட்டு அந்த நித்யாவை மேரேஜ் பண்ணிக்கிற முடிவை ஏன் சங்கர் எடுத்தார்.. அத்தான்..?"

'என் நிம்மதியை குலைக்கத்தான்...'

"நித்யாவை பெண் பார்க்கக்கூட அவர் போக வில்லையாம் அத்தான்.. போட்டோவைப் பார்த்தே 'ஒகே..' பண்ணிட்டாராம்.. தென்காசிப் பக்கம்தான் பெண் வேணும்னு அவரோட பேரண்ட்ஸிடம் கண்டிசனே போட்டாராம்... எதுக்காக அத்தான்...?"

'என்னை கொலைகாரனா ஆக்கத்தான்...'

"மேரேஜை சென்னையிலதானே நடத்தனும்..? இவர் தென்காசியில்தான் நடத்தனும்னு சொல்லிட்டாராம்.. அது ஏன் அத்தான்..?"

'என் வயிற்றெரிச்சலை கொட்டிக்கத்தான்...'

"இத்தனைக்கும் மேலா.. தென்காசியில ஒரு பேக்டரியை ஆரம்பிக்கப் போகிறாராம்.. அதுக்காக.. அவர் தங்க தென்காசியில ஒரு பங்களாவை விலைக்கு வாங்கியிருக்கார்.. அது உங்களுக்கு தெரியுமா அத்தான்..?"

'தெரியாது தான்...'

"இவ்வளவும் எதுக்காக அவர் செய்கிறார் அத்தான்..? கம்யூட்டர் பிஸினெஸ்ஸில் பணத்தை அள்ளிக் குவிக்கிறவருக்கு தென்காசியில் பேக்டரியை நடத்தனும்கிற அவசியம் என்ன அத்தான்..? அவர்

பாரினில் படிச்சவர்... சென்னை வாழ்க்கைக்கு பழகினவர் அவரைப் பெற்றவங்களும் மற்ற தொழில்களும் சென்னையிலிருக்க இவர் ஏன் தென்காசியில தங்கனும்னு நினைக்கிறார் அத்தான்..?"

ஷோபா கேள்விக் கணைகளை தொடுத்துக் கொண்டேயிருந்தாள்... அவற்றின் கூர்மையில் பாலமுரளியின் பொறுமை சின்னா.. பின்னமாகிக் கொண்டிருந்தது... அந்த வெறியோடு வீட்டுக்குள் நுழைந்தவனை...

"நில்லுடா..." என்று அதட்டினாள் மேகலா...

அவள் விழிகள் ஷோபாவைப் பார்த்து வெறுப்பைக் கக்கின...

"முரளி... நீ இந்தப்பக்கத்தில் பெரிய மனுசன்.. அதை நினைப்பில வைச்சுக்க..."

மேகலா சொல்லிக் கொண்டிருந்த போது.. ராதிகா சமையலறையின் உள்ளேயிருந்து காபிக் கோப்பைகளுடன் வெளிப்பட்டாள்.. அவளைக் கண்டதும் முரளியின் மனம் கொதித்தது...

"எனக்கு நினைப்பில் இருக்கும்மா.. சிலதுகளுக்குத்-தான் என்னோட லெவல் என்னாங்கற நினைப்பு மனசில இல்லை..."

ராதிகாவைப் பார்த்தபடியே அவன்கூற.. ராதிகா துணுக்குற்றாள்...

'ஏன் இப்படிப் பேசறான்...?'

பாலமுரளியின் பேச்சில் இருந்த ஏதோ ஒன்று அவளை உறுத்தியது...

"அத்தை.. அவர் இப்பத்தான் வீட்டுக்குள்ள நுழைகிறார்.. காபி சாப்பிடட்டும்.. அப்புறமாய் என்ன.. ஏதுன்னு விசாரிங்க..."

ராதிகா காபிக் கோப்பைகள் இருந்த டிரேயை நீட்ட.. அலட்சிய பார்வையுடன் ஒரு கோப்பையை எடுத்துக் கொண்டாள் ஷோபா இன்னொன்றை எடுத்துக் கொள்ளாமல் பாலமுரளி நிற்க.. ராதிகா அதை எடுத்து அவன் கையில் கொடுத்தாள்...

"அந்தப் பொண்ணுக்குத்தான் அறிவில்லன்னா.. உனக்குமா புத்தி புல்மேயப் போயிருச்சு...?" மேகலா கோபப்பட...

"அம்மா..." என்று ஆத்திரக்குரல் எழுப்பினான் பாலமுரளி...

"யார்கிட்ட என்ன பேசறோம்ன்னு யோசிச்சுப் பேசுங்க... என்புத்தி புல் மேயப் போகலை... சிலதுகளுக்குத் தான் அறிவு கெட்டுப் போச்சு.."

"ஏண்டா... நான் கேட்கிறதுக்கு பதில் சொல்லாம வேற எதையோ பேசி வைக்கிற... இது நல்லாயில்லைடா முரளி..."

"நானும் அதைத்தான் சொல்றேன்.. இது நல்லாயில்லை..."

"நீ எதுக்காக இந்தப் பெண்ணைத் தேடி குற்றாலத்துக்கு போன...?"

மேகலா ஆத்திரமாகக் கேள்வி கேட்பதை மீனாட்சி ஆர்வத்துடன் வேடிக்கை பார்க்க.. பாலமுரளி பேச்சை நிறுத்திவிட்டான்... தாயை உறுத்துப் பார்த்தான்...

பதினைந்து வயதிலேயே குடும்பப் பொறுப்பை எடுத்தக் கொண்ட மகனின் அந்தப் பார்வையில் மேகலா தடுமாறிப் போனாள்...

"இது என்னம்மா புதுப் பழக்கம்..?" அழுத்தமான குரலில் வினவினான் பாலமுரளி...

"முரளி..." மகனின் கண்டிப்பில் கண்கலங்கி விட்டாள் மேகலா...

"எல்லாத்துக்கும் நான் விளக்கம் சொல்லனுமா..?" மகன் விடாப்பிடியாய் கேட்க...

"இல்லைடா முரளி..." என்று பின்வாங்கினாள் மேகலா...

அவளது உடல்நிலையை கவனத்தில் கொண்ட ராதிகா...

"விட்டுவிடுங்க அத்தை..." என்று சொன்னாள்...

அதுவரை மேகலாவிடம் பேசிக் கொண்டிருந்த பாலமுரளியின் பார்வை அவள் பக்கம் திரும்பியது.. அந்தப் பார்வையின் அனல்வீச்சு ராதிகாவைச் சுட்டது... புரியாமல் திகைத்தவளை கூர்மையாகப் பார்த்தபடி...

"ஒன்றைத் தெரிஞ்சுக்கங்கம்மா... என்னோட செயல்களுக்காக நான் யாருக்கும் விளக்கம் சொல்ல வேண்டிய அவசியமில்லை... புரிஞ்சதா.." என்று அதட்டினான் பாலமுரளி...

அந்த வார்த்தைகள் தனக்கானவை என்று தெள்ளத் தெளிவாக புரிந்து கொண்டாள் ராதிகா... ஷோபாவின் முகத்தில் தெரிந்த இகழ்ச்சியை அவளால் கண்கொண்டு பார்க்க முடியவில்லை...

'பாலமுரளியா... இப்படி..?' அவளால் நம்ப முடியவில்லை..

அவனை அவன் நோகடிப்பான்தான்... அதற்காக.. இந்த அளவுக்கு தாம் தாழ்ந்து இறங்கி விடுவானா..?

பெரியம்மாவுக்கே பாட்டு கிடைக்கும் போது... அந்த விவாத்தை அவருக்குச் சொல்லிய தனக்கு என்ன கிடைக்குமோ என்று நினைவில் நடுங்கிப் போனாள் மீனாட்சி..

மெல்ல... வேலையிருப்பதைப் போல அங்கிருந்து அகன்று விட்டாள்..

"நீ உன் ரூமுக்கு போ ஷோபா..." உத்தரவிடும் தொனியில் சொன்னான் பாலமுரளி...

"அத்தான்.. ஆண்ட்டி ஏதோ கேட்டாங்களே..." தயங்குவதைப் போல நடித்தாள் ஷோபா...

'மாய்மாலக்கள்ளி...! எடுத்துக் கொடுக்கிறாளா..' மேகலா மனதுக்குள் கொந்தளித்தாள்...

அந்த நாடகத்தைப் பார்க்க முடியாமல் ராதிகா மாடிக்கு விரைந்து விட... அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த பாலமுரளியின் மனதில் கோபத்தீ கனன்று கொண்டிருந்தது...

'இவ கல்யாணமாகி வந்த பின்னாலும் அவன் இவ பின்னாடியே தென்காசிக்கு வருகிறான்னா... என்ன நோக்கத்தில் வர்றான்..? இவ எப்படி வாழ்கிறான்னு கண்காணிக்க வருகிறானா..? இவ வாழ்க்கை சரியில்லைன்னா என்ன பண்ணுவதாக உத்தேசித்திருக் கிறான்..? இவளுக்கு வாழ்க்கை கொடுப்பானா..?'

"நீ என் விருந்தாளி ஷோபா.. இனி உன்னை யாரும்... எதுவும் கேட்கவும் மாட்டாங்க.. சொல்லவும் மாட்டாங்க.. உன்னைக் கேட்பது.. என்னைக் கேட்பதைப் போல... ரூமுக்கு போ..." பாலமுரளி அழுத்தமான குரலில் சொன்னான்.. பேசுவது தன் மகன்தானா என்று நம்ப முடியாமல் விழிவிரித்தாள் மேகலா...

உன் நிழலாய் தொடர்ந்து வந்தேன்..
வேறுஎன்ன குற்றம் செய்தேன்...?

அறைக்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது.. ராதிகா ஜன்னல் கம்பியில் முகம் புதைத்திருந்தாள்.. திரும்பிப் பார்க்கவில்லை.. அழுத்தமான காலடியோசை அவளை நெருங்கிய போதும் அவள் அசையாமல் அப்படியே நின்றாள்.. அவளது முதுகை துளைக்கும் பார்வை பார்த்தான் பாலமுரளி...

ஜன்னல் கம்பியில் சாய்ந்து நின்றிருந்த அவளின் தோற்றம்.. ஒரு தேர்ந்த ஓவியன் வரைந்த அற்புதமான ஓவியத்தைப் போல இருந்தது... அவளது நீண்ட பின்னல் இடுப்பைத் தாண்டி.. பின்னங்கால்களைத் தொட்டுக் கொண்டிருக்க.. அதை பிடித்து இழுக்க வேண்டும் போன்ற அவன் மனதுக்குள் கிளர்ந்து எழுவதை உணர்ந்த பாலமுரளி நிலைகுலைந்தான்...

அவன் வந்து விட்டதை அறிந்தபின்னும் அதை பொருட்படுத்தாமல் அவள் நின்று கொண்டிருந்ததில் அவன் ஆத்திரப்பட்டுப் போனான்...

"ஜன்னல் வழியா யாரைடி பார்க்கிற..?" வார்த்தைகளால் அவளைச் சுட்டான்...

அவனது கணிப்பு பொய்க்கவில்லை.. சூடு தாங்காமல் துடித்துப் போனவளாக அவள் திரும்பிப் பார்த்தாள்...

"வார்த்தைகளை அளந்து பேசுங்க.." அவள் குரல் நடுங்கியது...

தோள்களை அலட்டிசியமாகக் குறுக்கிய பாலமுரளி ஜன்னலருகில் சென்று வெளியே பார்த்தான்.. தூரத்தில் சாலை தெரிந்தது..

"அந்த ரோட்டையா பார்க்கிற..? சரிதான்.. இது நீ செய்ய வேண்டிய வேலைதான்.."

அவன் குரலில் தொனித்த ஏதோ ஒன்று ராதிகாவைக் குத்தியது.. அவள் கோபம் கொண்டாள்.. செய்வதையெல்லாம் அவனே செய்து விட்டு மற்றவர்களை குற்றவாளிக் கூண்டில் எப்படி நிறுத்துகிறான் என்ற நினைவில் அவள் கொதித்துப் போனாள்...

இவன் மேகலாவைத்தான் அடக்கலாம்.. ராதிகாவையும் அப்படியே ஆக்கிவிடலாம் என்று நினைத்து விட்டானா..?

அதற்கு ஒரு நாளும் இடம் கொடுக்கக் கூடாது.. தட்டிக் கேட்கும் உரிமையும்.. தைரியமும் தாய்க்கு வேண்டுமானால் இல்லாமல் போகலாம்.. மனைவிக்கு இல்லாமல் போய்விடுமா..?

"ரோட்டைப் பார்த்தால் கூடத் தப்பா..?" மிடுக்கான தொனியில் கேட்டாள்..

அவளது மிடுக்கை உணர்ந்தவனின் புருவங்கள் உயர்ந்தன... அவன் மீண்டும் தோள்களைக் குலுக்கி.. அலட்சியமாக கைகளை விரித்தான்...

"ஏன் பார்க்கக் கூடாது.. தாராளமாகப் பார்க்கலாம்.. இந்த ரோட்டைப் பார்க்காமலிருக்க உன்னால் முடியாது தான்..."

'அடக் கடவுளே...!' என்றிருந்தது ராதிகாவுக்கு..

"இந்த ரோட்டுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்..?" எரிச்சலுடன் கேட்டாள்...

"இது தென்காசிக்குப் போற ரோடு..." அமர்த்தலாகப் பதில் சொன்னான் முரளி...

"தென்காசியில யாரிருக்கா..?" வெடுக்கென்று கேட்டாள் ராதிகா..

"இதுவரை யாருமில்லை... இனித்தான் வரப் போறாங்களே...", முரளியின் குரோதப் பார்வை அவளை எரிப்பதைப் போலப் பார்த்தது...

இது வேலைக்கு ஆகாது என்ற முடிவுடன் ராதிகா ஜன்னலை விட்டு விலகி கட்டிலை நோக்கி நடந்தாள்.. அதில் ஏறி அமர்ந்து முழங்கால்களைக் கட்டி அதில் முகம் பதித்துக் கொண்டாள்...

"என்னாச்சு.. என்னவோ வேகமாய் கேள்வி கேட்ட.. தென்காசிக்கு உன்னைத் தேடி.. உனக்கு வேண்டியவங்க வரப் போகிறாங்கன்னு சொன்னதுமே தலையைக் கவிழ்ந்துக்கிட்டு உட்கார்ந்துட்ட..?" பாலமுரளி எள்ளலாகக் கேட்டான்...

"நான் ஏன் தலையைக் கவிழனும்..?" ராதிகா ரோசத்துடன் நிமிர்ந்தாள்...

"வீட்டிலயும்.. தோட்டத்திலேயும் வேலை செய்கிற வேலையாள்க முன்னாலே அந்த ஷோபாகூட ரகசியம் பேசி... உங்க காரில் ஏற்றிக்கிட்டுப் போனீங்களே... அதுக்காக நீங்கதான் தலையைக் கவிழனும்..."

"ஓ..."

அவளது பேச்சல் விழிகள் மின்ன அவளை ஊடுறுவிப் பார்த்தான் பாலமுரளி...

'எப்படிப் பார்க்கிறான்.. எல்லாத் தப்பையும் இவன் செய்துவிட்டு.. எதுவும் நடக்காததைப் போல பார்த்து வைக்கிறானே.. இப்படிப் பார்க்க இவனால்தான் முடியும்..' ராதிகா மனம் குமுறினாள்...

அவனது விழிகளின் மின்னலுக்கான அர்த்தம்.. அன்றைய இரவில் டைனிங் டேபிளில் அவளுக்குத் தெரிந்தது...

பாலமுரளி அருகில் வேண்டுமென்றே அமர்ந்து கொண்ட ஷோபா தாழ்வான குரலில் அவனிடம் பேச ஆரம்பிக்க.. ராதிகாவைப் பார்த்த வண்ணம் அவள் சொல்வதை உன்னிப்பாகக் கவனித்து.. பதில் சொல்லிக் கொண்டிருந்தான் பாலமுரளி...

அந்த நாடகத்தை ஆள் மாற்றி ஆள்.. ஏதோ வேலையிருப்பதைப் போன்ற பாவனையுடன் அங்கே வந்து பார்த்து விட்டுப் போக.. வேலையாள்கள் முன்னிலையில் இதுபோன்ற செயல்கள் நடக்கலாமா என்று வெகுண்டு போனாள் மேகலா...

அதுவரை அவள் கட்டிக்காத்து வந்த பெரிய குடும்பத்தின் கண்ணியம் கேள்விக்குறியாகி விடுமோ என்ற அச்சம் அவள் மனதில் எழுந்தது...

ஓரளவிற்கு மேல் அவளால் அந்த நாடகத்தை சகித்துக் கொள்ள முடியவில்லை...

"முரளி.." கடினமான குரலில் அழைத்தாள்...

"என்னங்கம்மா..." முரளி அவள் பக்கம் திரும்பினான்...

"ஷோபாவை திருநெல்வேலியில் விட்டுவிட்டு வர்றேன்.. நீ நேரத்தோட வீட்டுக்கு வந்துருப்பா.. ராதிகா தனியா இருப்பா... ஷோபா... நீ ராத்திரியே உன் துணிகளை அடுக்கி வைச்சுக்கம்மா... காலையில நாம கிளம்பனும்..."

உத்தரவிடும் தொனியில் மேகலா சொல்ல... ராதிகா நிம்மதியாக உணர்ந்தாள்... இனி நாடகத்தைப் பார்க்க முடியாதோ என்று வேலையாள்கள் ஏமாற்றமாக உணர்ந்தார்கள்...

பாலமுரளியின் பார்வை ராதிகாவின் முகத்தின் மீது படிந்தது... அதில் தெரிந்த நிம்மதியை அவன் கண்டு கொண்டான்... கூர்மையான அவனது துளைக்கும் பார்வையில் எதையோ உணர்ந்த ராதிகாவுகு மனம் 'பக்..பக்..' கென்று அடித்துக் கொண்டது...

அவளது பயத்தை மெய்பிக்கும் வகையில் பாலமுரளி மேகலாவிடம் பேசினான்...

"நாளைக்கே திருநெல்வேலிக்குப் போகிறீங்களா..? ஏம்மா..?"

"இது என்னடா கேள்வி.. ஷோபாவை தனியே அனுப்ப முடியுமா..?"

"அவளை எதுக்காக அனுப்பனும்...?"

ராதிகாவைப் பார்த்தபடியே கேட்டான் பாலமுரளி.. அவன் எதிர்பார்த்ததைப் போலவே அவள் பதைப்புடன் அவனைப் பார்த்தாள்.. அவன் விழிகளில் திருப்தியின் ரேகை படிந்தது..

'வாஹ்ரே.. வா...' ஷோபா மகிழ்ந்தே போனாள்...

முதன்முதலாக அவள் நினைத்ததை ராதிகாவின் விசயத்தில் அவள் செயல்படுத்தப் போகிறாள்...

அந்தப் பொன்னான வாய்ப்பை அவளால் நம்பவே முடியவில்லை...

அவளைக் கண்டாலே காத தூரத்துக்கு விலகி ஓடும் பாலமுரளியா அவளை எதற்காக அனுப்ப வேண்டும் என்று கேட்கிறான்..?

இது ஒன்று போதுமே.. ராதிகாவின் மனதை ஷோபா வெட்டிச் சாய்த்து விடுவாளே...

"புரியாம பேசாதே முரளி.. அவ அவளோட பெரியம்மா வீட்டுக்குப் போகனுமுன்னுதானே கிளம்பி வந்தா.."

"இது யாரு வீடும்மா...? நாம அவளுக்கு உறவுக்காரங்க இல்லையா..? விருந்தாளியாய் வந்தவளை இரண்டே நாளில் அனுப்பி வைச்சா.. அக்காவோட மாமியார் மெச்சுக்குவாங்களா..?"

அவன் பாலசரஸ்வதியை நினைவு படுத்த.. மேகலா அரண்டே போனாள்.. மகளின் மாமியரைப் பற்றிக் கவலைப் படாமல் பெண்ணைப் பெற்ற தாயால் இருக்க முடியாது..?

'சபாஷ்..' ஷோபா பாராட்டுதலாக முரளியைப் பார்த்தாள்.. அதை ராதிகாவும் பார்த்தாள்.. ராதிகா பார்ப்பதை முரளியும் பார்த்தான்..

அவன் கண்கள் இடுங்கின.. மனைவியை பார்வையிட்டபடியே மேகலாவிடம் பேச்சைத் தொடர்ந்தான்..

"அதோட அம்மா.. இப்பத்தான் நானும் ராதிகாவும் திருநெல்வேலிக்கு போயிட்டு வந்தோம்.. உடனடியா நீங்களும் போய் நின்னா நல்லாயிருக்குமா..?"

"நான்தான் ஷோபாவை விட்டவுடனே கிளம்பி விடுவேனே முரளி..."

"அதுக்கு அவங்க விட்டு விடுவாங்களா...?"

முரளி நிதானமாகக் கேட்க.. மேகலா பதில் சொல்ல முடியாமல் திணறிப் போனாள்..

"அதனால்தான் சொல்கிறேன்ம்மா.. ஷோபா இங்கேயே இருக்கட்டும்.."

"அவ வயசுப் பொண்ணு முரளி.."

"இந்த வீட்டில நான் மட்டும் தனியா இல்லையே.. வீட்டுக்குப் பெரியவங்களா நீங்க இருக்கீங்க.. ஷோபாவோட கூடப் படிக்கிற ராதிகா இருக்கா.. வீடு நிறைய வேலையாளுக இருக்காங்க... அப்புறம் என்ன..?"

பேச்சு முடிந்தது என்பதை உணர்த்தியவனாக பாலமுரளி எழுந்து கொண்டான்.. இனி அவன் பேச்சுக்கு எதிர்பேச்சை பேசிவிட முடியாது என்பதை உணர்ந்தவளாக மேகலா பெருமூச்சு விட்டாள்... கை கழுவி விட்டு திரும்பியவன்..

"ஷோபா.." என்று அழைத்தான்..

"அத்தான்.." வள்ளுவரின் வாசுகியாக ஷோபா அவன் முகம் பார்த்தாள்...

"ஊர் சுற்றிப் பார்க்கனுமுன்னு சொன்னியே.. நாளைக்கு காலையிலே ரெடியாய் இரு... கூப்பிட்டுக்கிட்டுப் போறேன்..."

பாலமுரளி மாடிப்படிகளில் ஏறிவிட.. மேகலாவும்.. ராதிகாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்..

இது எங்கு போய் முடியப் போகிறதோ என்ற கவலை மேகலாவை குழ்ந்து மையம் கொண்டது.. அதை அவளது முகக் குறிப்பிலிருந்து உணர்ந்து கொண்ட ராதிகா.. தன் பயத்தை வெளியிடாமல் மனதுக்குள்ளேயே புதைத்துக் கொண்டாள்..

"ஏய்ய்..." ஷோபா ராதிகாவை விரல் சொடுக்கி அழைக்க.. அதைப் பார்த்துக் கொண்டிருந்த மீனாட்சி வெகுண்டு விட்டாள்..

'வீட்டு ஆம்பளையை கைக்குள்ள போட்டுக்கிட்டா தெனாவெட்டு வந்துருமா..? இப்படியாப்பட்ட பெண் ஜென்மத்தை வெட்டிச்சாய்க்க வேணாமா..?'

அவள் கண்ணகியாய் மாறி ஷோபாவை முறைக்க.. ராதிகா அமைதியாக மீனாட்சியை அங்கிருந்து அப்புறப் படுத்தினாள்..

"மீனாட்சி.. இந்தப் பாத்திரத்தை கிச்சனில் கொண்டு போய் வை..."

ஷோபாவின் அழைப்பை பொருட்படுத்தாமல் ராதிகா மீனாட்சியிடம் வேலை சொல்ல.. ஷோபாவுக்குள் வழக்கமான தலைவலி வரவா என்றது...

'இவ கண்ணு முன்னாலேயே இவஹஸ்பெண்ட் என்கூட ஊரைச் சுற்ற வரேன்னு சொல்றான்.. இவ அதுக்கும் அசையல.. நான் வேற கை கொடுக்கி.. 'ஏய்ய்'ன்னு கூப்பிடறேன்.. இவ அதுக்கும் அலட்டிக்கல.. இதெல்லாம் பத்தாதுன்னு என்னை முறைக்கிற வேலைக்காரியை செல்லமா வேலை ஏவிக்கிட்டு இருக்கிறா.. இவளை ஆட்டம் காண வைக்கவே முடியாதா..?'

பழகினதுதான் என்றாலும்.. வழக்கம் போலவே ராதிகாவின் அலட்சியமான போக்கு ஷோபாவை பாதித்தது...

மீனாட்சியோ.. அங்கிருந்து நகருவேனா என்று அடம் பிடித்தவளாக ஷோபாவை முறைத்துக் கொண்டே நின்றாள்.. அது வேறு கூடச் சேர்ந்து ஷோபாவின் ரத்த அழுத்தத்தை எகிற வைத்தது...

"மீனாட்சி... உன்னை கிச்சனுக்கு போகச் சொன்னேன்.."

ராதிகா உத்தரவிடும் தொனியில் பேசியதை ஷோபா ரசிக்கவில்லையென்றாலும்.. ஒருவகையில் அது அவளுக்கு ஆறுதலாக இருந்தது..

கும்மாவே அவளுக்கு வீரதீரமான பெண்மணிகளின் மீது பயம் உண்டு.. யாராவது வாய் தாட்டியமாக 'இன்னாமே..' என்று சொன்னால்.. சென்னையிலேயே அவள் ஜகா வாங்கி விடுவாள்..

இதுவோ தேனூத்து.. மீனாட்சியைப் பார்த்தால்.. மீசையில்லாத 'லேடி கட்டபொம்மனை'ப் பார்ப்பதைப் போலவே இருந்து வைத்தது...

இப்படிப்பட்ட வீரப் பெண்மணிகளிடம் இருந்து விலகி நிற்பதே சாலச் சிறந்தது என்பதை வாழ்க்கை ஷோபாவிற்கு பலசமயங்களில் பாடமாக கற்பித்து வந்திருக்கிறது...

இத்யாதி.. இத்யாதி.. காரணங்களால்.. மீனாட்சியின் கண்பார்வையிலிருந்து தள்ளி நிற்க வேண்டும் என்று ஷோபா மனதுக்குள் உத்தேசித்திருந்தாள்...

அன்று காலையில் குற்றாலத்துக்கு ஷோபாவுடன் துணைக்கு கிளம்பும் போதே.. 'நீயெல்லாம் நான் துணைக்கு வரவேண்டிய நிலையில் இருப்பவளா..' என்ற கேள்வியை உள்ளடக்கிய பார்வையை வீசியபடிதான் மீனாட்சி துணைக்கு வந்தாள்...

அப்போதிருந்தே மீனாட்சியின் பார்வையைக் கண்டால்.. பார்வையை விலக்கிக் கொள்ள வேண்டுமென்ற முடிவோடு ஷோபா இருந்ததால்.. இப்போதும் மீனாட்சியின் முறைப்பைக் கண்டும் காணாதவளைப் போல பார்வையை தழைத்துக் கொண்டாள்...

"சீக்கிரமா வேலையை முடிச்சிட்டு நான் வீட்டுக்குப் போகனும் சின்னம்மா... எனக்கு சின்ன சோலியொன்னு காத்திருக்கு.."

"இதென்ன மீனாட்சி... இப்படிச் சொல்ற.. அப்படி என்ன வேலை உனக்காக காத்திருக்காம்..?"

"வேற ஒன்னுமில்ல சின்னம்மா.. பேயோட்டனும்..."

ஷோபாவைப் பார்த்தபடி மீனாட்சி பல்லை நறநறக்க.. ஷோபா வெலவெலத்துப் போனாள்..

மீனாட்சியின் கையிலிருந்த பாத்திரம் உடுக்கை போல அவளுக்கு தோற்றமளிக்க... 'சேச்சே... இது மனபிரமை..' என்று மனம் தேறினாள்...

ராதிகாவுக்கு அவளைப் பீடித்திருந்த கவலையிலும்.. சிரிப்பு வந்தது... வாய்விட்டு அவள் சிரித்ததில் மேகலாவின் முகமும் தெளிந்தது.. அவளும் மருமகளுடன் கூடச் சேர்ந்து மெல்லச் சிரித்தாள்...

"பேயோட்டப் போறியா... இது என்ன புதுசா சொல்ற..?"

"புதுசில்ல சின்னம்மா.. பழகுதான்... எங்க தெருப் பக்கம் வந்து கேட்டுப் பாருங்க.. எத்தனை பேயை நான் ஒட்டியிருக்கேன்னு அவங்கவங்க.. கதைகதையாய் சொல்லுவாங்க.. பேயோட்டி நாளாச்சு சின்னம்மா.. புதுசா ஒரு பேய் வந்து குதிச்சிருக்கு.. அதை வேப்பிழை அடிச்சு.. ஒட்டாம விட மாட்டேன்..."

"சும்மா சிரிப்பு மூட்டாதே மீனாட்சி.. எனக்கு வயிறு வலிக்குது.."

"அது மனுசங்களுக்கு சின்னம்மா.. சில பிசாசுகளுக்கு வயிறு எரியும்... அந்தப் பிசாசை ஒட்டிட்டுத்தான் வேற வேலை பார்க்கனும்..."

"விட்டா வேப்பிழையை அடிச்சுருவே போல இருக்கே..."

"ஆமா...! கேட்டுக்கங்க சின்னம்மா..!
பட்டினத்து மோகினியோ...!
அத்தையோ..! மாமியோ...!
தேனூத்துக்கு வந்தியோ...

மீதிவாங்கிப் போலியோ..

க்க்க்.. காரி.. சூரி.. காளி.. வாடி..!"

மீனாட்சி தலையை ஆட்டிக் கொண்டு... கால் மாற்றி கையாட்டி இஷ்டத்துக்கு பாடி வைக்க.. ஷோபா அவசரமாக எழுந்து கையைக் கூட கழுவாமல் 'தப்பித்தேன்... பிழைத்தேன்..' என்று அவள் அறைக்கு ஓடி விட்டாள்.. மேகலாவுக்கு எல்லாமே மறந்து விட.. அவள் வயிற்றைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்..

"யாருகிட்ட..?"

மீனாட்சி வெற்றிப் பார்வையுடன் மேகலாவைப் பார்க்க..

"ஏய்ய்.. போடி.. போய் வேலையைப் பாருடி.." என்றாள் அவள்..

மேகலாவின் சிரித்த முகத்தை ஆதுரத்துடன் பார்த்த ராதிகாவின் கண்கலங்கியது... அவர்கள் இருவரையும் பார்த்த மீனாட்சியின் நெஞ்சம் நிறைந்தது..

முதல்கட்டம் முடிவுக்கு வந்தது
அம்மம்மா கோடி தோழி...
பாகம் - 4

அவர் எழுப்பியிருக்கும் கல்விக் கட்டிடங்களைச் சுற்றிக் காண்பித்தார்... கால் வலித்தது... அண்ணாந்து பார்த்து கழுத்து வலித்தது... அவரின் சாதனைகளைக் கேட்டு இதயம் நிறைந்தது...

திரும்பி வரும்போது... அவரின் வெற்றிகளை என் எழுத்தில் பதிவு செய்ய வேண்டுமென்ற எண்ணம் என் மனதில் உதித்தது.. பதிவு செய்து விட்டேன்...

– நட்புடன் –

முத்துலட்சுமி ராகவன்
அனுப்ய: muthulakshmiraghavan24@gmail.com

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

"அம்மம்மா... கேளடி தோழி..!"

பாகம் – IV

எங்கே நீ போனாலும்...
என்னிடம்தான் திரும்பி வருவாய்...

இரவின் நிசப்தம் அறையெங்கும் குழ்ந்திருந்தது... கண்மூடிப் படுத்திருந்த ராதிகா தூங்கவில்லை... அவளுக்கு முதுகு காட்டிப் படுத்திருந்த பாலமுரளியால் தூங்க முடியவில்லை....

அவன் ஷோபாவிற்காக பரிந்து பேசி அவளை அங்கேயே தங்கச் சொன்னதைப் பற்றி ராதிகா கேள்வி கேட்பாள் என்று அவன் எதிர்பார்த்திருந்தான்... அதற்காக சண்டைபோடுவாள்... அப்போது அவளை நான்கு கேள்விகள் கேட்டு விட வேண்டும் என்ற கொதிப்போடு காத்திருந்தான்...

ராதிகா எதையும் கேட்கவில்லை... மௌனமாக அறைக்குள் வந்தாள்... கதவைத் தாழிட்டாள்... விளக்கை அணைத்தாள்... கட்டிலில் ஏறிப் படுத்து இமை மூடித் தூங்க ஆரம்பித்து விட்டாள்...

வெளிப்படையான அந்த உதாசீனத்தில் பாலமுரளி வெகுண்டான்.. அவளை எழுப்பிச் சண்டை போடலாமா என்று கூட யோசித்தான்... அதைச் செய்ய மனமின்றி எழுந்து பால்கனிக்குச் சென்று நடக்க ஆரம்பித்து விட்டான்...

இதுபோன்ற இரவு நேர நடைப் பயிற்சியை திருநெல்வேலியில் தான் அவன் செய்திருக்கிறான்.. தேனூத்தில் செய்ததில்லை... அன்று.. அங்கேயும் அதைச் செய்ய வைத்து விட்ட ராதிகாவின் கழுத்தை நெரித்துக் கொன்று புதைத்து விட்டால்தான் என்ன என்ற வெறி அவன் மனதுக்குள் தலை தூக்கியது...

இரவு நேரத்துக்கேயுரிய இதமான காற்று அவன் உடலில் படிய மெல்ல அவன் மனக் கொதிப்பு அடங்கியது... அறைக்குள் வந்தான்.. அப்போதும் அவள் கண்மூடித்தான் படுத்திருந்தாள்... கோபத்துடன் கட்டிலில் விழுந்தவன் புரண்டு அவள் பக்கமாகத் திரும்பிப் படுத்தான்...

மீனாட்சி தொடுத்துக் கொடுத்திருந்த மல்லிகை மொட்டுக்களின் சரம் தோளில் வழிய... அவள் இமை மூடிப் படுத்திருந்த தோற்றம் அவன் மனதை மயக்கியது... திருநெல்வேலியிலிருந்து திரும்பும் போது மோகினிப் பேய்க்கு பயந்து அவனை இறுக்கிக் கட்டிக் கொண்ட அந்த நிகழ்வு அவன் நினைவுக்கு வந்தது... அவனது உடல்மீது படிந்த அவளின் உடலின் மென்மையை உணர்ந்திருந்தவனுக்கு உடல் சூடேறியது... அருகில் படுத்திருந்தவளை இழுத்து அணைத்து... சுகித்து விட வேண்டும் போன்ற தாபம் அவனுக்குள் தகித்தது...

'ராதிகா...!..' அவன் தாகத்துடன் பெருமூச்சு விட்டான்...

'மோகினி...!' இவளே ஒரு மோகினி...! வழக்கம் போலவே அவன் பொறுமினான்...

'இந்த லட்சணத்தில இவ மோகினியை நினைச்சு பயந்து நடுங்குறா... என்னமா ஓட்டிக்கிட்டா.. பயந்து நடுங்கினாத்தான் என் பக்கத்தில் வருவாளாமா..? இல்லைன்னா கண்டுக்காம ஓரம் கட்டுவாளாமா...?'

இரவு நேர உடையைத் தாண்டித் தெரிந்த அவளது கணுக்காலின் வெளுப்பு... அந்த மெல்லிய வெளிச்சத்தில் தந்தம் போல் மின்னி... அவனைச் சுண்டி இழுத்தது...

மெதுவாக நகர்ந்து அவள் கால்மேல் கால் போட்டால் என்ன என்று தோன்ற...

'இவள் என் பெண்டாட்டிதானே...' என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்...

'அடுத்த பெண்ணின் மீதா நான் ஆசைப்படுகிறேன்.. நான் கட்டிய தாலி... இவள் கழுத்தில் இருக்கிறது.. உரிமையுடன் இவளை ஆண்டால் இவள் என்ன சொல்லிவிடப் போகிறாள்...?'

உரிமையில்லாதபோதே அவளைத் தொட்டுத் தழுவி விட்ட நினைவில் அவன் பார்வை அவள் மீது படிந்து.. உடல் பூராவும் படர்ந்து பரவியது...

'அன்னைக்கும் நான் தொட்டவுடன் வந்து விட்டாள்தானே.. இன்றைக்கு மட்டும் முடியாது என்று மறுக்கப் போகிறாள்...?'

அவள் மறுக்க மாட்டாள்தான்.. அவனுக்கும் அது தெரியும்தான்...

ஆனால்..? அந்த சங்கர்...?

அவனது உணர்வுகள் பொங்கிய வேகத்தில் தணிந்தன.. எப்போதுமே அவனது வேகத்திற்கு ஒரு வேகத்தடையாக சங்கர் இருப்பதை நினைத்து அவன் கோபத்துடன் கொந்தளித்தான்...

'தென்காசியில் பெண் கட்டப் போகிறானா..? அதுவும் கோமதிநாயகத்தின் பெண்ணையா..? என்ன தைரியமிருந்தால்... என் வட்டாரத்துக்கே வந்து.. என் மாமா மகளை கட்டிக் கொள்ள நினைத்திருப்பான்..?'

'சென்னையில் இல்லாத பெண்ணா அத்தான்..?' ஷோபா கேட்ட கேள்வி அவன் மனதில் எதிரொலித்தது...

'என்னைவிட எதில் அந்த கோமதிநாயகத்தின் மகள் உயர்ந்தவள் அத்தான்..?' அவளது கேள்வி அவனைச் சுட்டது...

அவனுக்குத் தெரியும்... சங்கர் எதனால் சென்னையை விட்டுவிட்டு தென்காசியில் பெண் தேடினான் என்று...

அதிலும் பாலமுரளியின் உறவுக்காரப் பெண்ணாக தேடிப் பிடித்திருக்கிறான் என்றால் அதிலுள்ள

உள்நோக்கம் எதுவாக இருக்கக்கூடும் என்பதை புரிந்து கொள்ளாமல் இருக்க பாலமுரளி ஒன்றும் முட்டாள் இல்லையே...

சங்கருக்கு ராதிகாவின் புகுந்த வீட்டின் அருகிலேயே இருந்தாக வேண்டும்...

மற்றபடி... தென்காசியின் வட்டாரப் பெருமை அவனை இழுத்திருக்காது... நித்யாவின் அழகு அவனை ஈர்த்திருக்காது...

சங்கரின் தேவை... ராதிகாவின் அருகாமை...

பாலமுரளி விலகிப் படுத்தான்... இப்போது ராதிகாவின் தோற்றம் அவனை மயக்கவில்லை... அவளது கணுக்காலின் வெண்மை அவனை இழுக்கவில்லை...

அவனை விட்டு விலகி நின்ற உறக்கம் வந்து ஒட்டிக் கொள்ள... அவன் கண்மூடித் தூங்க ஆரம்பித்தான்...

அவன் அயர்ந்து உறங்க ஆரம்பித்த அந்த நொடியில் ராதிகா கண்விழித்தாள்... அருகில் படுத்திருந்தவனின் முகத்தைக் காதலுடன் பார்த்தாள்... அவன் முகத்தில் தெரிந்த கடினத்தில் அவள் மனம் கசிந்தது...

'ஏன் இப்படி உன்னை வருத்திக் கொள்கிறாய்...?' என்று அவன் முடிகோதி... மடியில் போட்டுக் கொள்ள வேண்டும் போன்ற உணர்வு அவளுள் எழுந்தது...

'உன்னைத்தானே நான் நினைத்தேன்..? உன்னைத் தேடித்தானே நான் தவித்தேன்...? நீ தொட்டதால்தானே உன்னுடன் கலந்தேன்...?'

அவள் கன்னங்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது... சப்தமில்லாமல் அவள் அதைத் துடைத்துக் கொண்டாள்... அவள் மனம் துயரத்துடன் குமுறியது...

'உன்னைத்தான் நானறிவேன்...
மன்னவனை யாரறிவார்...?
என் உள்ளமெனும் மாளிகையில்..
உன்னையன்றி யார் வருவார்..?'

பாடலுடன் அவள் மனம் கேள்வி கேட்க... அவள் தூங்க வெகு நேரமானது...

மறுநாள் காலையில் காபியுடன் அவள் எழுப்பிய போது... கண்விழித்த பாலமுரளியின் விழிகள் சிவந்திருந்தன...

'ராத்திரியில் தூங்காம விடிய.. விடிய... பால்கனியில் நடைபழகினா இப்படித்தான்..'

அவள் எதுவும் பேசாமல் காபிக் கோப்பையை நீட்டினாள்...

அவளை உறுத்துப் பார்த்தபடி காபியை வாங்கிக் கொண்டவன்...

"ஷோபா எழுந்திருச்சிட்டாளா...?" என்று கேட்டான்...

அவனுக்குத் தெரியும்... அந்தக் கேள்வி அவளைச் சீண்டிவிடும் என்று...

அவனது எதிர்பார்ப்பு வீணாகவில்லை... இந்தமுறை ராதிகா அமைதியை கடைபிடிக்காமல் அவனை சண்டைக் கோழியாய் முறைத்தாள்...

"எழுந்திருக்கலைன்னா என்ன செய்கிறதா உத்தேசம்..? போய் எழுப்பி விடறிங்களா..?" என்று கேட்டாள்...

அவளை ஒரு மார்க்கமாக பார்த்தபடி...

"அதையும் செய்யலாம்... தப்பில்லை...", என்று அமர்த்தலாக அவன் பதில் சொன்னான்..

"ஆமாமா... ஆம்பளைகளுக்கு எதுவும் தப்பில்லை.." ராதிகாவின் முகம் கோபத்தில் சிவந்து விட்டது...

"யாரைச் சொல்கிற..? என்னையா...?" அவன் வேண்டுமென்றே கேட்டான்...

"நீங்கதானே என் புருசன்... உங்களைத்தான் நான் சொல்லமுடியும்.. ஊரில் இருக்கிறவங்களைச் சொன்னா.. அவங்க அடிக்க வந்து விட மாட்டாங்களா..?" படுக்கையை சரி செய்தபடி ராதிகா அவனை மேல் பார்வை பார்த்தாள்....

"அதெல்லாம் அடிக்க வரமாட்டானுங்க..." முரளியின் முகம் இறுகியது...

அவனது கடினத்தன்மையின் பின்னணியை ஆராய்ச்சி பண்ண ராதிகா முயலவில்லை...

'நினைச்சா சிரிப்பான்... உடனே முறைப்பான்... வானிலையைக்கூட ஆராய்ச்சி பண்ணிரலாம்... இவனோட மனநிலையை ஆராய்ச்சி பண்ண முடியவே முடியாது.. இந்த லட்சணத்திலே பொண்ணுகளோட மனசுதான் ஆழ்கடலாம்... அம்மம்மா...'

"உங்களுக்கென்னங்க... நீங்க சொல்லிட்டுப் போயிடுவிங்க... அடிவாங்கறது யாரு..? நானில்ல..." ராதிகா இயல்பாகக் கூறினாள்...

"இந்த முரளியின் பெண்டாட்டிமேல விரல் தொடக்கூட ஒருத்தன் பிறந்துதான் வரனும்... அடிவாங்குவாளாமில்ல... பல்லைக் கழட்டிருவேன்..." முரளி எரிந்து விழுந்தான்...

"அதானே... அடிச்சுக் கொல்லத்தான் நீங்க இருக்கீங்களே... அந்த உரிமையை மத்தவங்களுக்கு எப்படி விட்டுத் தருவீங்க..?" ராதிகாவும் பட்டென்று சொல்லி விட்டாள்..

"என்னடி சொன்ன...?" பாலமுரளி கர்ஜித்தான்...

ராதிகா முகச் சிணுங்கலுடன் அங்கிருந்து நகரப் போனாள்... அவன் கைபிடித்து நிறுத்தியவன்... அவள் கழுத்தில் விரல் பதித்தான்...

"கொல்லுவேனா...? நானா...?" அவன் கோபப்பட..

"இப்ப என்ன செய்துக்கிட்டு இருக்கீங்க..?" என்று நிதானமாக அவள் கேட்டாள்...

சட்டென்று அவள் கழுத்திலிருந்து கையை எடுத்து விட்டான் முரளி... கழுத்தை நீவி விட்டபடி ராதிகா அவனைப் பார்த்தபடி ஒரு கணம் நின்றாள்... பின்னர் ஒரு பெருமூச்சுடன் நகரப் போனாள்..

பாலமுரளிக்கு அவளைப் போகவிட மனமில்லை...

"ஷோபா காபி சாப்பிட்டுட்டாளா..?" என்று கேட்டான்...

ராதிகா வெடுக்கென்று திரும்பி அவனையே இமைக்காமல் பார்த்தாள்... அவனின் புருவங்கள் சுருங்கின...

"என்னடி..?" என்று கேட்டான்...

"பாலமுரளியின் பெண்டாட்டியின் விரல் தொடக்கூட ஒருத்தன் பிறந்து வரனும்ன்னு சொன்னீங்களே... வேலை வாங்க ஒருத்தி பிறந்து வரலாமா..?"

"என்னது...?" பாலமுரளியின் புருவங்கள் உயர்ந்தன...

"இல்லை... அந்த ஷோபாவுக்கு வேலைக்காரியாய் நான் இருக்கலாமான்னு கேட்டேன்... பாலமுரளியின் பெண்டாட்டி இன்னொருத்திக்கு சேவகம் செய்யலாமா..? அதை பாலமுரளியின் தன்மானம் அனுமதிக்குமான்னு கேட்டேன்..."

அவள் கேட்ட கேள்வியில் அவன் முகம் மாறிவிட்டது...

'இவளை பேசி ஜெயிக்க முடியாது...'

அவன் விழிகளில் லேசான பாராட்டுத் தோன்றி மறைந்தது...

"ஆக... வீட்டுக்கு வந்த விருந்தாளியை உபசரிக்க மாட்டேன்னு சொல்றே..."

"விருந்தாளியா..? அவளா..?"

"பின்னே இல்லைங்கறியா..? அவ வேற யாரு..? வீட்டுக்காரியா...?"

பாலமுரளி நிதானமாகக் கேட்க.. ராதிகாவின் முகம் செந்தணழாக மாறியது...

"வீட்டுக்காரியா..? கொன்னுடுவேன்.." அவள் சீறினாள்...

அவளது கோபத்தில் பாலமுரளி இதம் கண்டான்.. அவனுக்குள் மெலிதான உல்லாசம் பரவியது...

"என்னடி இது.. பெண்கள் மென்மையானவங்கன்னு சொல்லுவாங்க..."

"இந்த விசயத்தில் பெண்டாட்டி மென்மையானவ இல்லை..."

"அதுக்காக கொலை செய்வியா..?"

"கொலையும் செய்வாள் பத்தினின்னு கேள்விப் பட்டதில்லையா...? பார்த்து நடந்துக்கங்க... ஜாக்கிரதை.. வீட்டுக்காரியாமில்ல... இப்படிப் பேச நாக்கு கூசலை..?"

ராதிகா கோபத்துடன் கையிலிருந்த தலையணையைத் தூக்கி படுக்கையின் மீது விட்டெறிந்தாள்...

"என்மேல இருக்க கோபத்தில தலையணையை கிழிக்காதே..." பாலமுரளிக்கு அவளின் கோபத்தைக் காண்பதற்கு வேடிக்கையாக இருந்தது...

"என்கூடப் பேசாதீங்க... சொல்லிட்டேன்..."

"ஏய்ய்.. ராதிகா..."

அவன் கூப்பிடக் கூப்பிட அவள் வேகமாக வெளியேறி விட்டாள்.. முரளியின் மனதிலிருந்த கோபம் தணிந்து உல்லாசம் நிலை கொண்டது...

குளித்து.. உடைமாற்றி அவன் செல் போனை காதுக்கு கொடுத்தபடி படிகளில் இறங்கிய போது... ஹாலில் அவனை எதிர்பார்த்துக் காத்திருப்பதைப் போல ஷோபா நின்றிருந்தாள்...

அவள் காலையிலேயே குளித்து முடித்து.. ஒப்பனைகள் செய்து ஒய்யாரமாக வந்து நின்று விட்டாள்...

"என்னம்மா இது.. இந்தப் புள்ள விட்ட விடிகாலையிலேயே வேசம் கட்டிக்கிட்டு நிக்குது.. எங்கேயாவது கூத்துக்கட்டப் போகுதா..?"

மீனாட்சி ராதிகாவிடம் கேட்டாள்...

"உஷ்ஷ்..." அவள் ஆள்காட்டி விரலை உதட்டின்மீது வைத்து எச்சரித்தாள்...

"வரவர... இந்த வீட்டிலே வாயைத் திறக்கவே முடியல..." பேச்சுச்சுதந்திரம் பறிபோனவளாக மீனாட்சி புலம்பியபடியே வேலைகளை பார்த்துக் கொண்டிருந்தாள்..

பூஜையை முடித்து விட்டு வந்த மேகலா... ஷோபாவைப் பார்த்து...

"சாப்பிட வாம்மா..." என்று அழைத்தாள்...

"அத்தான் வரட்டும் ஆண்ட்டி...", அவள் திரும்பிக் கூடப் பார்க்காமல் பதிலைச் சொன்னாள்...

ராதிகா பல்லைக் கடித்தாள்.. மாமியாரின் முன்னால் கோபத்தை வெளிப்படுத்த முடியாதவளாய் சமையலறைப் பக்கம் போய்விட்டாள்...

மேகலாவுக்கு சங்கடமாக இருந்தது...

'இந்தப் பெண்ணுக்கும் பேசத்தெரியலை... பாலமுரளியும் இவளை அனுப்பித் தொலைக்க மாட்டேங்கிறான்.. ஊருக்கு பெரிய மனுசனா இருந்து என்ன பிரயோசனம்..? பெண்டாட்டியின் மனசறிஞ்சு நடக்கத் தெரியலையே...'

அலுப்புடன் தலையைப் பிடித்துக் கொண்டாள்... சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்த காவேரி...

"ம்ஹிம்... இந்தப் பொண்ணு இந்த வீட்டில் காலடி எடுத்து வைச்ச நாள் முதலா அம்மா தலையைத் தலையை பிடிச்சுக்கிறாங்க... இந்தப் பொண்ணு என்ன... தலைவலியை கூடவே கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்குதா..?" என்று ராதிகாவிடம் கேட்டு வைத்தாள்...

ஷோபா செய்து கொண்டிருந்த 'ளொள்ளு' வேலைகளால் எள்ளும்... கொள்ளும் முகத்தில் வெடிக்க நின்று கொண்டிருந்த ராதிகாவிற்கு சிரிப்பு வந்து விட்டது...

"என்னம்மா... சிரிக்கறிங்க...?" காவேரி ஆவலுடன் கேட்டாள்...

ஷோபாவுக்கும்... தலைவலிக்கும் இடையே உள்ள ஜென்மாந்திர தொடர்பைப் பற்றி இவளுக்குச் சொன்னால்

புரிந்து கொள்வாளா...? என்று நினைவுடன் ராதிகா மேலும் சிரித்தாள்...

சிரித்த முகத்துடன் சமையலறையை விட்டு அவள் வெளிப்பட்டபோது.. டைனிங் ஹாலுக்கு வந்து விட்ட பாலமுரளி.. ஷோபாவைக் கவனிக்காமல் ராதிகாவையே பார்த்தான்....

போகத்தான் நினைத்தாலும்...
போகமனம் வரவில்லை...

ஷோபாவினால் அதை ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை...

முதல்நாள்தான்... சங்கர் ராதிகாவை விடாமல் பின் தொடர்வதைப் பற்றி கதைகதையாய் பாலமுரளியிடம் எடுத்துச் சொல்லியிருந்தாள்... அதைக் கேட்டவனும் முகம் இறுகி... ஷோபாவுக்காக அவனது தாயையே எதிர்த்து வாதாடி அவளை அவன் வீட்டில் தங்க வைத்தான்...

அத்தோடு நிறுத்தினானா...? அவளை ஊர் சுற்றிப் பார்க்க அழைத்துப் போவதாக ராதிகாவின் முன்னாலேயே சொல்லவும் செய்தான்...

இத்தனையும் முதல் நாள் இரவில் செய்து விட்டுத் தூங்கப் போனவன்... மறுநாள் காலையில் ராதிகாவை விழுங்குவதைப் போல பார்த்து வைக்கிறான் என்றால் என்ன அர்த்தம்...?

இரவில் இந்த ராதிகா சரியாக மந்திரித்து விட்டிருக்கிறாள் என்றுதானே அர்த்தம்...?

பாலமுரளியின் பார்வையை கண்டு கொள்ளாமல் ராதிகா தட்டுக்களை வைத்தாள்... ஷோபாவின் முன்னால் அவள் வைத்த தட்டு மட்டும் 'ணங்'கென்று சப்தம் போட்டது...

ஷோபா பாலமுரளியைப் பார்த்தாள்... அவன் மனைவியைத் தீவிரமாக பார்வையிட்டுக் கொண்டிருந்தான்... ஷோபாவின் முன்னால் அவள் தட்டு வைத்த வேகத்தை கண்டிக்கும் நிலையில் அவனில்லை என்பது புரிந்து போக.. ஷோபாவுக்கு தலைவலிக்க ஆரம்பித்தது...

'இவளைத்தான் மேரேஜ் பண்ணித் தொலைச்சிட்டானில்ல... இன்னும் எதுக்காக காதலியைப் பார்ப்பதைப் போல பார்த்து வைக்கிறான்...'

ராதிகாவைப் பார்க்கப் பார்க்க... அவளுக்கு பொறாமை பொங்கி எழுந்தது...

"அத்தான்..."

அவள் அழைத்ததை பாலமுரளி கவனிக்கவில்லை. அவளுடைய கோபம் அதிகரித்தது...

"அத்தான்..." சப்தமாக அழைத்தாள்...

ராதிகாவின் வெட்டும் பார்வையை ரசித்துக் கொண்டிருந்த பாலமுரளி.. இனிய கனவில் தடங்கல் ஏற்பட்டு விட்ட எரிச்சலுடன் ஷோபாவின் பக்கமாக திரும்பினான்...

"என்ன ஷோபா..."

"உங்க வொய்புக்கு விருந்தோம்பல்னா என்னன்னு தெரியுமா அத்தான்...? பாவம்... அவளுக்கு எங்கே தெரிந்திருக்கப் போகிறது...? விலைவாசி விற்கிற விலையில.. அவ வீட்டிலிருக்கிறவங்க மூன்று நேரமும் சாப்பிட்டு.. நல்ல துணிமணி உடுத்தறதே பெரிய விசயம்... இதில வேற இவளை என்ஜினியரிங்ல சேர்த்து விட்டிருந்தாங்க... இந்த லட்சணத்தில் இவ வீட்டுக்கு எந்த கெஸ்ட் வந்திருக்கப் போகிறாங்க...?"

பாலமுரளிக்கே ஷோபாவின் பேச்சு பிடிக்க வில்லையெனும் போது மேகலாவுக்கு மட்டும் பிடித்து விடுமா...?

அவள் முகம் சுளித்தாள்...

"இப்ப எதுக்காகம்மா என் மருமக வீட்டு ராமாயணத்தை இழுக்கற...? உனக்கு என்ன வேனுமோ... அதை மட்டுமே சொல்லு..."

"அதைத்தான் சொல்ல வந்தேன் ஆண்ட்டி.. வேண்டாதவங்களா இருந்தாலும்.. சிரிச்ச முகத்தோட

ட்ரீட் கொடுக்கறதுதான் மேனர்ஸ்... இவளுக்கு டைனிங் டேபிள் கல்ச்சர் தெரியலை.. இப்படித்தான் பிளேட்டை 'ணங்கு'ன்னு வைப்பாங்களா...?"

மேகலாவும் அதைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்... மருமகளின் செயலை மனதுக்குள் பாராட்டிக் கொண்டிருந்தாள்...

'ம்ஹீம்.. நானா இருந்திருந்தா தட்டைத் தூக்கி இவ தலைமேல போட்டிருப்பேன்.. என் மருமகளா இருக்கப் போயி... போனாப் போகுதுன்னு இந்த மட்டிலும் விட்டு வைச்சிருக்கா...'

"பாரும்மா... என் மருமகளுக்கு நாகரிகம் இருக்கா.. இல்லையாங்கிறதைப் பத்தி அப்புறம் பேசலாம்... முதல்ல உனக்கு அது இருக்கா..?"

"நான் என்ன செய்தேன் ஆண்ட்டி..?"

"சொன்னாத் தாங்க மாட்ட.. பேசாம சாப்பிடு..."

மேகலா கண்டிப்புடன் கூற... ஷோபாவின் முகம் விழுந்து விட்டது... 'கிழவி.. மருமகளை விட்டுக் கொடுக்கவே மாட்டாளே...'

மேகலாவிடம் இருந்து ஆதரவு கிடைக்காது என்பது ஷோபாவுக்கு தெரிந்ததுதானே... அவள்...

"அத்தான்..." என்ற சிணுங்கலுடன் பாலமுரளியின் பக்கம் திரும்பினாள்...

அதே நேரத்தில்... ராதிகா கையிலிருந்த கரண்டியை உயர்த்தி... இதனாலேயே ஒரு போடு போட்டு விடுவேன்

என்று பாலமுரளியைப் பார்த்து ரகசிய சமிக்ஞை ஒன்றை செய்து வைக்கவும்... பாலமுரளி தேன் குடித்த நரியைப் போலாகி விட்டான்...

அவனறிந்த வரையில் அவனைப் பார்த்து யாரும் ஒற்றை விரலைக் கூட உயர்த்தியது இல்லை... ராதிகா என்னடாவென்றால்... கரண்டியையே உயர்த்திக் காட்டுகிறாள்...

'பாருடா... இவ என்னை மிரட்டறா...' பாலமுரளியின் கண்களில் சுவாரஸ்யம் தோன்றிவிட்டது...

அவன் விழிகளில் சிரிப்புடன் ராதிகாவைப் பார்த்தபடி....

"சொல்லு ஷோபா..." என்றான்...

'என்னத்தைச் சொல்ல...' ஷோபா கடுப்பானாள்...

இவ்வளவு நேரமும் நடந்ததை அவன் கேட்டுக் கொண்டுதானே இருந்தான்... அதற்குப் பின்னாலும் 'சொல்லு ஷோபா...' என்றால் எதைச் சொல்வது..? அதுவும் சும்மாவும் கேட்கிறானா...? ராதிகாவைப் பார்த்துக் கொண்டே.. ஷோபாவிடம் 'சொல்லு' என்கிறான்...

இப்படி பெண்டாட்டியின் முந்தானையில் தூளிகட்டி ஆடுகிறவனிடம் அவன் பெண்டாட்டியைப் பற்றி குற்றம் சொல்ல முடியுமா..?

இருந்தும் ஷோபாவினால் சும்மாயிருக்க முடியவில்லை... ராதிகாவின் இறுகின முகத்தையும்..

அலட்சியப் போக்கையும் காணக்காண.. அவளது வயிற்றில் அமிலம் சுரந்தது...

"ராதிகா ட்ரீட் பண்ற விதம் சரியில்லை அத்தான்... இதை நீங்க ஏன்னு கேட்க மாட்டிங்களா...?"

"கேட்டுட்டா போச்சு... ஏன் ராதிகா..?"

பாலமுரளி கேட்க... அவனை உறுத்துப் பார்த்தாள் ராதிகா... அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"நீங்களே சிரித்தால் எப்படியத்தான்..?"

"விடுஷோபா.. நீயேன் உன்னை விருந்தாளின்னு நினைச்சுக்கறே..."

பாலமுரளி ராதிகாவைப் பார்த்தபடி சொல்லி வைக்க... அவள் இப்போது அவனை நேரடியாகவே முறைத்தாள்...

"இல்லைன்னு சொல்கிறிங்களா அத்தான்..." ஷோபா குதூகலிக்க ராதிகா குறுக்கிட்டாள்...

"ஏய்ய்... அடங்குடி.. விருந்தும்... மருந்தும் மூணு நாள்தான்.. நீ வந்து மூணு நாளாச்சு... கிளம்பறியா...?"

ராதிகாவின் கேள்வியில் ஷோபா திணறி விட்டாள்...

"நான் ஏன் கிளம்பனும்..? அதுதான் அத்தான் என்னை இங்கேயே தங்கிக்க சொல்லியிருக்காரே..."

"தெரியுதில்ல... அப்புறமும் எதுக்காக விருந்தோம்பல் டைனிங்டேபிள் மேனர்ஸ்ன்னு உனக்

சம்பந்தமில்லாத விசயங்களையெல்லாம் பேசிக்கிட்டு இருக்கே..? இந்த லட்சணத்தில என் வீட்டை வேற இழுக்கறே... என் வீட்டுக்கு கெஸ்ட் வரலைன்னு நீ கண்டியா..? மாதத்திலே இருபது நாள் தாத்தா... பாட்டி.. அத்தை.. மாமா... சித்தி.. சித்தப்பா.. பெரியப்பா.. பெரியம்மான்னு ஒரே கெஸ்ட் மயமாத்தான் இருக்கும்... ஆனா உன்னை மாதிரியான கெஸ்ட் என் வீட்டுக்கு வந்ததில்லை.. என்னதான் நெருங்கின உறவா இருந்தாலும் வேலையிருந்தால் மட்டுமே வருவாங்க... வந்த வேலை முடிஞ்சவுடேன அவங்கவங்க வீட்டைப் பார்த்துப் போயிடுவாங்க... இங்கே தான் என்ன வேலைன்னே தெரியலையே..."

"ராதிகா..."

"பொறுடி... இன்னும் இருக்கு... உன் வீட்டுக்கு கெஸ்ட் வருகிற லட்சணத்தைத்தான் நான் பார்த்தேனே.. இதே அத்தான்.. சென்னைக்கு வந்தால் உன் வீட்டிலா தங்குவார்...?"

"அது.. அது வந்து..."

"என்னடி.. மென்று முழுங்கறே... பதிலைச் சொல்லு.. ஹோட்டலில் ரூம் போட்டுத் தங்குவார்.. வந்த வேலை முடிஞ்சதும்... கிளம்பும் போது உன் வீட்டுக்கு வந்து ஹலோ சொல்லிட்டு வந்துருவார்... அந்த ஹலோ சொல்றதுக்கும் போன் பண்ணிச் சொல்லிட்டுத்தானே உன் வீட்டுக்கு வருவார்...?"

"ஹைகிளாஸ் சொசைட்டியிலே அப்படித்தான் பழக்கம்..."

"அதை நீ சொல்லாதே... எனக்கு பற்றிக்கிட்டு வருது..."

அதுவரை மனைவி பேசுவதை ரசித்துக் கொண்டிருந்த பாலமுரளிக்கு போதுமென்று தோன்றி விட்டது...

"ராதிகா..." கண்டிப்புடன் மனைவியை அதட்டினான்...

"என்னங்க...?" ஏதும் அறியாதவளைப் போல அவள் கேட்டாள்..

"ஷோபாவே சொல்கிறதைப் போல... அவ நம்ம வீட்டுக்கு வந்திருக்கிற விருந்தாளி... அவகிட்ட இப்படித்தான் பேசறதா..?"

"உங்களுக்கும் அத்தைக்கும்தான் அவ விருந்தாளி... எனக்கு அப்படியில்லை..."

பல்லைக் கடித்தபடி ஷோபாவைப் பார்த்த ராதிகாவின் பார்வையில் துளிக்கூட நட்பில்லை....

'இவ என் ஜென்ம விரோதி...'

"வேற என்ன..?" பாலமுரளி புருவம் உயர்த்தினான்.

"என்னங்க நீங்க.. இவ என் கிளாஸ் மேட்டுங்கிறதை மறந்துட்டிங்களா..? இவளும் நானும் இப்படித்தான்

பேசிக்குவோம்.. எங்களுக்கு இது புதுசில்லை... உங்களுக்குத்தான் புதுசு.. இல்லையா ஷோபா..."

ராதிகா கிண்டலாகக் கேட்க... இல்லையென்று சொல்லத்தான் ஆசைப்பட்டாள் ஷோபா... ஆனால் காவேரியும்... மீனாட்சியும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கும் போது அப்படி ஒப்புக் கொள்வது ஷோபாவுக்கு குறைவு என்பதால் பேசாமல் இருந்து விட்டாள்...

"அப்பச்சரி..." பாலமுரளியும் பேச்சை வளர்க்க வில்லை...

சாப்பிட்டு முடித்தவன்... மீண்டும் செல்போனை காதுக்கு கொடுத்தபடி வாசலுக்கு நகர... ஷோபாவின் முகம் மாறிவிட்டது...

"அத்தான்..." அவன் பின்னாலேயே ஓடினாள்...

அவன் செல்போனை அணைத்து விட்டு புருவம் உயர்த்தினான்...

"மறந்துட்டிங்களா அத்தான்... இன்றைக்கு என்னை ஊர் சுற்றிக் காட்ட கூப்பிட்டுக்கிட்டுப் போகிறதாய் சொன்னீங்களே..."

அவள் அழமாட்டாத குறையாய் விளக்கம் சொல்ல.. அவன் "அப்படியா சொன்னேன்..?" என்று அவளிடமே கேட்டான்...

நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த ராதிகாவுக்கும்... மேகலாவுக்கும் சிரிப்பு வந்து விட்டது...

"நம்ம ஐயாவுக்கு வேலை ஞாபகத்தில சாப்பிடனும் கிறதே மறந்து போகும்... இந்தப் புள்ள அது தெரியாம கொடுக்கது..."

மீனாட்சி... ரகசியக்குரலில் சொல்லியது... அவர்களின் சிரிப்பை அதிகப் படுத்தியது...

"அப்படித்தான் சொன்னீங்க அத்தான்..." ஷோபா விடவில்லை...

ராதிகாவின் கண்முன்னாலேயே பாலமுரளியுடன் இணை கோர்த்து வெளியே சுற்றப் போக வேண்டுமென்ற வெறி அவளுக்குள் கனன்று கொண்டிருந்தது....

"அப்படியா.. எனக்கு அர்ஜன்டா மில்லில் வேலையிருக்கே ஷோபா..." முரளி தாடையைத் தடவியபடி யோசித்தான்...

"அப்போ... நானும் உங்க மில்லுக்கு வருகிறேன்... எனக்கு அதைப் பார்க்கனும் போல இருக்கு... உங்க வொர்க் முடிஞ்சதும் நாம் ஊர்சுற்றப் போகலாம்..."

"ம்ம்ம்..."

பாலமுரளி ஒப்புதலாக தலையசைக்க... ஷோபா... விழிகளில் வெற்றிக் குறியுடன் ராதிகாவைப் பார்த்தாள்..

ராதிகா நிதானமாக கையிலிருந்த பாத்திரத்தை டைனிங் டேபிளின் மீது வைத்தாள்... பாலமுரளியைப் பார்த்தாள்...

"ஒரு நிமிசம்..." என்றாள்...

"என்னடி..." என்று அவன் கேட்டது ஷோபாவுக்கு பிடித்தமானதாக இல்லை...

"நானும் வருகிறேன்..." என்று ராதிகா சொன்னதும் ஆச்சரியப்பட்டுப் போனாள் மேகலா...

'இது ஏன்... எனக்குத் தோணலை...?'

"நீயுமா...?" பாலமுரளி யோசித்தான்...

"நானும்தான்.. வெறும் உறவுக்காரப் பெண்ணான இவளுக்கே உங்க மில்லைப் பார்க்கனும்னு ஆசையிருக்கிறப்ப... உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட பெண்டாட்டி... எனக்கு அந்த ஆசையிருக்காதா..?"

ஷோபாவின் திட்டத்தை ஒரு நொடியில் வெகு எளிதாக தவிடுபொடியாக்கி விட்டாள் ராதிகா....

எங்கே அவளும் வந்து விடுவாளோ என்று பதறிப் போனாள் ஷோபா...

அவளுக்கு பாலமுரளியிடம் பேச வேண்டியிருந்தது... அவனுக்கு மூளைச்சலவை பண்ண வேண்டியிருந்தது... ராதிகாவைப் பற்றிப் போட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது... சங்கரைப் பற்றித் தூண்டி விட வேண்டியிருந்தது... இத்தனைக்கும் மேலாக.. 'பார்.. உன் புருசன்... என் கண்ட்ரோலில் இருக்கிறான்..' என்று ராதிகாவிடம் வெற்றி முரசு கொட்ட வேண்டியிருந்தது...

இத்தனையையும் தகர்ப்பதைப் போல ராதிகா கிளம்பவும்... அவள் பாலமுரளியைப் பார்த்தாள்... அவனோ.. அவன் வழக்கப்படி ஷோபாவை விட்டு விட்டு ராதிகாவையே பார்த்துக் கொண்டிருந்தான்...

இது வேலைக்கு ஆகாது என்ற முடிவுடன் ராதிகாவிடமே பேச்சு வார்த்தையில் இறங்கினாள் ஷோபா...

"அத்தானுக்கு ஆயிரம் வேலையிருக்கும் ராதிகா..."

"அது உனக்குத் தெரிஞ்சா சரி..."

"அவர் வேலையைப் பார்ப்பாரா... உன்னையும்.. என்னையும் கவனிப்பாரா...?"

"நீ கூட மத்தவங்க கஷ்டத்தைப் புரிஞ்சுக்கறயே.. வெரிகுட்..."

"அதனால... நீ வீட்டில் இரு..."

"நீ...?"

"நான் அத்தான் கூடப் போறேன்.. நீ வர வேண்டாம்.."

"அதை நீ சொல்லாதே... அவர் சொல்லட்டும்..."

ராதிகாவின் வார்த்தைகளில் தீயின் தீவிரம் இருந்தது... அவள்மீதான பாலமுரளியின் காதல் மீதான உறுதி இருந்தது... அது ஷோபாவைச் சுட்டது...

சொல்லொன்றை சொல்லி விடு...
சொந்தத்தினைக் காட்டி விடு...

'சொல்லி விடுவானா..? ராதிகா எதிர்பார்க்கும் அந்த வார்த்தைகளை உச்சரித்து விடுவானா...?'

ஷோபா மனம் நடுங்கிப் போனாள்...

பாலமுரளி மட்டும் அப்படிச் சொல்லி விட்டால்... அவன் மீதான ராதிகாவின் நம்பிக்கை இறுகி விடும்.. அந்த நம்பிக்கையை ஆட்டிப் பார்க்க வந்திருக்கும் ஷோபாவின் முதல் முயற்சியே தோற்று விடும்...

'சொல்லி விடாதே...' ஷோபா மனதுக்குள் பரிதவித்தாள்...

'வாழ்வின் மீதான இவளது நம்பிக்கையை உடை.. இவளும் வரவேண்டுமென்று சொல்லி விடாதே...'

மனம் பதற ஷோபா பாலமுரளியின் முகம் பார்த்தாள்.. அதே சமயத்தில் ராதிகாவும் அவன் முகம் பார்த்தாள்.. அவள் பார்வையோடு பாலமுரளியின் பார்வை கலந்தது.. இறுகிப் பிணைந்தது...

ஷோபாவைப் போல முகத்தில் செயற்கைப் பூச்சுகளுடன் இல்லாமல் இயற்கையான வணப்புடன்...

இயல்பான உடையலங்காரத்துடன் நின்று கொண்டிருந்தா
ராதிகா...

அவளின் நீண்ட பின்னால் முழங்கால்களை
தாண்டித் தொங்க... 'காலளவு.. கருங்கூந்தல்...' என்
பாடலின் வரி முரளியின் மனதில் ஓடியது.. அவ
தலையில் சூடியிருந்த மல்லிகைச் சரமும்... நெற்
வகிட்டில் தீற்றியிருந்த குங்குமமும் அவளது பெண்மையி
மிளிர்வை அவனுக்கு உணர்த்தி மயக்கின.. ராதிகாவி
கழுத்தில் மின்னிய புதுத்தாலிச் சரட்டில் அவன் பார்வை
படிந்தது...

'இவள் என் பெண்டாட்டி...'

நினைக்கும் போதே மனம் இனிக்க...

"வா..." என்று சொல்லி விட்டான் பாலமுரளி...

ஷோபா விக்கித்துப் போய் நின்று விட்டாள்.
ராதிகாவின் விழிகளில் வெற்றியின் சாயலெல்லா
இல்லை.. அதுவே ஷோபாவின் வெறியை அதிகப்படுத்தியது

'இவன் என் கணவன்.. இவனோடு வெளியி
போவது என் உரிமை... இதில் வெற்றி மூக கொட்ட என்
இருக்கிறது...?'

இதைத் தன் செய்கைகளால் உணர்த்தி விட்டா
ராதிகா...

"போயிட்டு வரேன் அத்தை..." கேகலாவிடம் விட
பெற்றாள்...

"தங்கமாய் போயிட்டுவாம்மா..." முகம் மலர விடை கொடுத்தாள் மேகலா...

'கிழவிக்கு இருக்கிற லொள்ளைப் பாரேன்.. நான் கிளம்பினா மட்டும் இதோட சொத்து கொள்ளை போகிறதைப் போல முகத்தை தூக்கி வைச்சுக்கிட்டு இருந்துச்சு.. இப்ப பல்லைக் காட்டிக்கிட்டு போயிட்டு வான்னு சொல்லுது...'

சற்று முன்புவரை இருந்த திடம் மறைந்து பலவீனமாக உணர்ந்தாள் ஷோபா...

ராதிகாவின் இயல்பான நடவடிக்கைகள் 'இது என்வீடு.. இவர்கள் என் மனிதர்கள்...' என்று சொல்லாமல் சொல்ல... தன்னை மூன்றாம் மனுஷியாக உணர்ந்தாள்...

"போகலாமா ராதிகா..."

அவளை விட்டுவிட்டு மனைவியிடம் பாலமுரளி கேட்டுவைக்க.. ஷோபாவின் ரத்தக் கொதிப்பு உச்ச நிலையை அடைந்தது...

"ம்ம்ம்..."

ராதிகா ஒயிலாக புருவங்களை உயர்த்தி ஒரு மயக்கும் பார்வையை வீசிவிட்டு... அவனுடன் சேர்ந்து நடந்தாள்...

அவனுடன் இணை சேர்ந்து ராதிகா நடந்து வருவதில் எப்போதுமே... பாலமுரளிக்கு தனிவிதமான இன்பம் உண்டு.. அதை அவன் மிகவும் விரும்புவான்..

அப்படி நடக்கும் பொழுதுகளில் அவள் கையோடு கை பிணைக்க வெகுவாக ஆசைப்பட்டிருக்கிறான்.. அவன் போட்டிருந்த சபதத்தினால் அது முடியாமல் போய் விட்டிருந்தது.. ஆனாலும் அதை ஈடுகட்டுவதைப் போல.. ராதிகா அவன் தோளோடு.. தோள் உராயத்தான் நடந்து வைப்பாள்... முக்கியமான தருணங்களில் அவன் கை மீது கை வைத்து தோள் மீது... தலை சாய்த்து தூங்கி விடுவாள்...

வாழ்க்கை அழகான பல தருணங்களை அவனுக்கு அள்ளி வழங்கிக் கொண்டுதான் இருந்தது...

அடித்தால் அடியை வாங்கிக்கொண்டு தன் கருத்தில் நிலையாக நின்று... கோபப்பட்டுப் பேசினால் பதிலுக்கு தன் கோபத்தைக் காட்டிப்பேசி.. சண்டையென்றில்லாமல் ஊடலை உணர்த்தி... அதே சமயம் அவனை விட்டுக் கொடுக்காமல்... விலகி நிற்காமல்... உறுதியாக தன் உறவில் பிணைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்திய ராதிகா ஒவ்வொரு தருணத்திலும் ஒவ்வொரு விதமான பரிணாமத்தை உணர்த்தி அவன் மனதை மயக்கிக் கொண்டிருந்தாள்..

கழுத்தில் கூர்மையான கத்தியை வைப்பவனை காதலுடன் பார்க்க முடியுமா...?

ராதிகாவால் அது முடிந்தது...

அவன் என்ன செய்தாலும்.. எதிர்த்து போராடியவள் அடுத்த சில மணித்துளிகளிலேயே அதை மறந்து அவனைக் காதலுடன் பார்த்தாள்....

'இவளை என்னதான் செய்வது...?'

எவ்வளவோ செய்யலாம்தான்.. கட்டியணைத்து முத்தம் கொடுக்கலாம்... கைகளுக்குள் நிறுத்திக் கொள்ளலாம்...

இவை அத்தனையையும் செய்ய வேண்டாமென்று பாலமுரளியை யார் தடுத்தது...?

அவனது கோபம் தடுத்துக் கொண்டிருந்தது...

அதை அறிந்திருந்த ராதிகா.. அவனைத் தன் கண்ணசைவில் சிறை பிடித்திருந்தாள்.. என்னை என்ன வேண்டுமானாலும் செய்துகொள்... கொல்ல நினைக்கிறாயா... உன் கையால் சந்தோசமாகச் சாகிறேன்.. வாழ நினைக்கிறாயா.. வந்து விடு.. உன் கையில் என்னைத் தருகிறேன்...

இப்படிப்பட்ட சரணாகதியுடன் ராதிகா அவன் கோபத்தை எதிர்கொண்டாள்... அலைகடலாய் ஆர்ப்பரிக்கும் பாலமுரளியின் மனதை ஒரு பார்வையால் அமைதிப் படுத்தும் சக்தி ராதிகாவிடம் இருந்தது...

அதை ஷோபாவால் புரிந்து கொள்ள முடியுமா..? அவள் வேறு ஒன்றை நினைத்தாள்.. பகலில் கோபம் கொள்பவனை இரவின் நெருக்கத்தில் மயக்கி ராதிகா தன் கைக்குள் நிறுத்திக் கொள்கிறாள் என்று அவள் நினைத்தாள்...

அவளுக்கு என்ன தெரியும்..? ராதிகாவை விட்டு விலகிநிற்கும் சபதத்தை முரளி எடுத்திருக்கிறான் என்பது..

தெரிந்திருந்தால்... அது எப்படி.. உடல் நெருக்கத்தைத் தராமல் ஒரு மனைவியினால் கணவனை கைக்குள் நிறுத்திக் கொள்ள முடியும் என்று திகைத்திருப்பாள்.. ஆச்சரியப்பட்டிருப்பாள்.. பிரமித்துப் போயிருப்பாள்..

அது தெரியாததினால் பல்லைக் கடித்தபடி அசையாமல் நின்றாள்..

அவள்கூட வருகிறாள் என்பதையே மறந்துவிட்டு சன்னக்குரலில் பேசியபடி பாலமுரளியும்.. ராதிகாவும் நடந்துவிட.. தனியே நின்றவளை மீனாட்சி கேலிப் பார்வை பார்த்தாள்...

"என்னம்மா.. நீங்க போகலியா..? போகனும்னா.. அவங்க பின்னாடியே ஓடுங்க.. இல்லைன்னா.. விட்டுட்டு போயிருவாங்க..."

மீனாட்சியின் பேச்சுக்கு... காவேரியின் சிரிப்பு.. சமையலறையில் இருந்து எதிரொலித்தது... மேகலா புன்னகையுடன் கண்டு கொள்ளாமல் அமர்ந்திருக்க.. அந்த வீட்டு தாய்க்குலத்தின் ஒட்டுமொத்த ஆதரவும் ராதிகாவுக்கு இருப்பதை உணர்ந்து கொண்டாள் ஷோபா.

மீனாட்சி சொன்னதைப் போலவே.. பாலமுரளி அவளைத் திரும்பியே பார்க்கவில்லை...

"என்னடி... புதுசா மில்லுக்கு கிளம்பி வர்ற...?" என்று மனைவியிடம் கேட்டுக் கொண்டிருந்தான்...

"வேற என்ன செய்யறது....? இப்படி ஒட்டிக்கிட்டு நானா வந்தால்தான் உண்டு போல.. மத்தபடி என்னை

வெளியே கூப்பிட்டுப்போகனும்கிற நினைப்பு உங்களுக்கு வர மாட்டேங்குதே..."

ராதிகா சரஸமாகப் பேசியது முரளிக்கு பிடித்திருந்தது...

"நீ சென்னைக்காரி... இந்தப் பட்டிக்காட்டில என்ன இருக்குன்னு உன்னைக் கூப்பிட்டுக்கிட்டுப் போய் காட்டச் சொல்கிறவ...?"

"என்ன இல்லை..? அருவி இருக்கு... பாறை இருக்கு... ஆறு இருக்கு... கோவில் இருக்கு... குளிர்ச்சியாகப் பார்க்க... மரம் செடி கொடின்னு பச்சைப் பசேல்ன்னு இயற்கை இருக்கு... சுத்தமான மலைக் காத்து இருக்கு..."

"அடேங்கப்பா... விட்டா... இன்னைக்கு முழுதும் சொல்லிக்கிட்டே இருப்ப போல:.."

"ம்ம்ம்... இன்னும் சொல்லி முடிக்கல..."

"சொல்லு... சொல்லு..."

"இதெல்லாம் போதாதுன்னு இன்னொன்னும் கூட இருக்கு..."

"எது...?"

"நீங்க... பக்கத்தில் இருப்பீங்க..."

ராதிகா வெட்கப் புன்னகையுடன் சொல்லிவிட.. பாலமுரளி கிறங்கிப் போனான்...

அந்த நொடியில் அவள் வேண்டாத மனைவியென்பதே அவனுக்கு மறந்து போய் விட்டது...

அவளைப் பார்த்த அவனது பார்வையில் அப்படியே அவளை அள்ளிச் சாப்பிட்டு விடும் தாபம் தெரிந்தது...

அந்தப் பார்வையின் வீச்சைத் தாங்க முடியாமல் ராதிகா முகம் சிவந்து... வேறு திக்கில் பார்த்தாள்...

'மயக்கறேடி...'

அவன் மனம் சொல்ல... அவன் அவளைப் பார்த்தபடியே காரின் முன்பக்கக் கதவை அவளுக்காகத் திறந்துவிட்டான்...

அவனது பார்வையில் தெரிந்த மயக்கத்தில் கிறங்கிப் போனவளாக அவளும் ஷோபாவைப் பற்றிய நினைவேயில்லாமல் முன் பக்கத்தில் ஏறி அமர்ந்து விட்டாள்...

இனி கௌரவம் பார்த்தால் வேலைக்கு ஆகாது என்ற நினைவுடன் ஷோபா வாசலுக்கு ஓடினாள்...

"எப்படி ஓடுதுன்னு பாருங்கம்மா..."

மீனாட்சி அந்த வேக ஒட்டத்தை வெகுவாக ரசித்தாள்...

"அத்தான்..."

மூச்சிரைக்க வந்து நின்ற ஷோபாவைப் பார்த்ததும் தான் பாலமுரளிக்கு அவளையும் அழைத்துச் செல்வதாக இருந்தது நினைவுக்கு வந்தது...

'இவளும் வரணுமா..?'

அந்த இதமான மனநிலையைக் கெடுத்துக் கொள்ள பாலமுரளிக்கு விருப்பமில்லை... அவனுக்கே அத்தி பூத்தாற்போலத்தான் இதுபோன்ற தருணங்கள் வந்து அமைகின்றன... அத்தோடு.. ராதிகாவை முதன்முதலாக அறிமுகப் படுத்துவதை விட்டுவிட்டு ஷோபாவையும் ஏன் அழைத்துக் கொண்டு போக வேண்டும்...?

தனித்து அவனுடன் ராதிகா வந்து இறங்குவது எப்படியிருக்கும்..? வால் பிடித்ததைப் போல ஷோபாவையும் கூடவைத்துக் கொண்டு இறங்குவது எப்படியிருக்கும்..?

தன் மனைவிக்கான முக்கியத்துவம் சிறிதளவும் குறையக்கூடாதென்று பாலமுரளி நினைத்தான்...

"ஷோபா..."

அவன் அழைக்கும் போதே அவனின் குரல் மாறுபாட்டை உணர்ந்து கொண்ட ஷோபாவிற்கு திக்கென்று இருந்தது... அவள் பயந்ததைப் போலத்தான் அவனும் சொல்லி வைத்தான்...

"நீ வேணும்னா மீனாட்சியோட ஊரைச் சுற்றிப் பார்க்கப் போயேன்... ராதிகா என்னோட வரும்போது நீயும் வந்து இறங்கினா நல்லாயிருக்காது..."

அவன் நாசுக்காக கூறியதைப் புரிந்து கொண்டு ஷோபாவே ஒதுங்கி நின்றிருக்க வேண்டும்... அதைவிட்டு

விட்டு... வாய்க்கு வாய் நாகரிகத்தைப் பற்றியே பேசும் ஷோபா... அதை மறந்து வெகுண்டாள்...

"ஏன் நல்லாமிருக்காது...?"

அவளது கேள்வியில் பாலமுரளி முகம் சுளித்தான்...

"த்ச்சு... என்ன பேசற ஷோபா..? ராதிகா என் பெண்டாட்டி... நாங்க போகப் போறது என்னோட மில்லுக்கு.. நாங்களோ புதுசாக் கல்யாணமானவங்க..." அவன் விளக்கம் சொன்னான்...

"அதனால என்ன அத்தான்..?" அவள் விடாப்பிடியாய் அதிலேயே நின்றாள்...

இப்படிக்கூட ஒரு பெண் இருப்பாளா..? சொன்னால் புரிந்து கொள்ள வேண்டாமா என்றிருந்தது பாலமுரளிக்கு...

"பாரும்மா... இது சென்னையில்லை... தேனூத்து..."

"ஆனா.. நீங்க இப்ப தென்காசிக்குத்தானே போறிங்க...?"

"எங்கே போனாலும் தேனூத்துக்காரன்... தேனூத்துக் காரன்தான்ம்மா... என் மில்லுக்கு வேற பொண்ணு என் கூட வரக்கூடாது..."

பாலமுரளி சட்டென்று காரில் ஏறிக்கொள்ள... ஷோபா பிரமை பிடித்தவளைப் போல நின்று விட்டாள்...

அவருக்கான இடம் எது என்று பாலமுரளி அறிவுறுத்திவிட்டதில் அவள் இடிந்து போயிருந்தாள்...

அப்போது யதார்த்தமாக ராதிகா நிமிர்ந்து பார்க்க... ஷோபாவின் முகம் பயங்கரமாக மாறியது...

எந்த விதத் துரும்பையும் கிள்ளிப் போடாமலேயே ராதிகா வெற்றி பெறுவதன் அடிப்படை எது என்று ஷோபாவால் இனம் காண முடியவில்லை...

ராதிகாவின் வாழ்வை அசைத்துக் காட்டத்தான் அவள் வந்தாள்... ஆனால்.. யாராலும் அசைக்க முடியாத நிலையான இடத்தை பாலமுரளியின் இதயத்தில் ராதிகா பெற்றிருப்பதை அவள் ஷோபாவுக்கு உணர்த்தி விட்டாள்...

என்னதான் வேண்டாத மனைவியாக இருந்தாலும்... பாலமுரளி.. அவளுக்கான இடத்தை யாருக்கும் அளிக்க மாட்டான் என்பதை ஷோபா அன்றுதான் அறிந்தாள்..

எங்கே நீ போனாலும்...
அங்கே நான் தொடர்ந்து வருவேன்...

ராமன் சீதையை விலக்கி வைக்க முடிவு செய்தான்... ஆனால் அரியணையில் அவளுக்குப் பதிலாக வேறு ஒரு பட்டத்து ராணியை பக்கத்தில் அமர விட்டானா...?

பார் புகழும் அசுவமேத யாகம் செய்தபோதும்... அருகில் மனைவிக்குப் பதில்... அவளது உருவச் சிலையை

தங்கத்தால் செய்து அமர்த்தி வைத்தானே தவிர... வேறு ஒருத்தியை மனைவியாக மனதில் வரித்தானா.. ?

இத்தனைக்கும்... பல தார மணம் செய்த தசரத சக்கரவர்த்தியின் மகன் அவன்...

இருந்தும்... 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற உயரிய தத்துவத்தை ஆண்குலத்திற்கு அளித்தவன் அவன்.. அவன்மேல் ஆசை கொண்டு மூக்கையே இழந்தாள் ஒரு அசுரகுல இளவரசி...

அவனுக்காக தவமிருந்து அடுத்த பிறவியில் மணக்கும் வரம் பெற்றாள் வேறு ஒரு இளவரசி...

அத்தனை மாதர்களிடமும் மனம் விடாமல் விலகி நின்று... 'நான் சீதைக்கு மட்டுமே உரியவன்' என்ற வாக்கில் நின்றானே... அவனல்லவோ முழுமையான ஆண்மகன்..! அவனது வீரத்திற்கு இணையேது...?

அப்பேற்பட்ட ராமனின் மனம் கவர்ந்த சீதை பாக்கியசாலி... அப்படிப்பட்ட காதலைப் பெற்றவள் எத்தனை துன்பங்களை அனுபவித்தாலும்... அவையெல்லாம் அவளுக்கு துன்பமாகத் தோன்றுமா..?

ராதிகாவுக்கும் அப்படித்தான்... அவள் பட்ட துன்பமெல்லாம் கானல் நீரென்று தோன்றியது...

கார் சாலையில் சீரான வேகத்துடன் போய் கொண்டிருக்க ராதிகா சாலையை பார்ப்பதை விட்டுவிட்டு கணவனையே பார்த்தாள்... அவனது பக்கவாட்டுத் தோற்றத்தின் கம்பீரத்தை ரசித்துக்

அவன் லேசாகத் திரும்பவும் அவசரமாக பார்வையை விலக்கிக் கொண்டாள்...

பாலமுரளி அவள் பார்வையை கண்டு கொண்டான்.. அவன் மனதிலும் உல்லாசம் பிறக்க...

"என்னடி..?" என்று கேட்டான்...

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவள் விழித்துக் கொண்டிருந்த போது...

"என்னடி விளையாட்டு...
என்று சொன்னவன் மொழிகேட்டு...
ஆசையில் விழுந்தேன் அங்கே..
ஆ... காலையில் கனவுகள் எங்கே.."

என்று காரிலிருந்த சிடியின் பாடல் ஒலித்தது...

ராதிகாவின் உதடுகளில் மெலிதான புன்சிரிப்பு தோன்றியது...

"உன்னை கேட்டா... பாட்டு பதில் சொல்லுது... ஏதும் மந்திரம் போட்டு வச்சிருக்கயா..?" அவனும் சிரித்தான்..

'இவன் சுட்டெரிக்கும் சூரியனாகவும் இருக்கிறான்.. இதமான நிலவாகவும் இருக்கிறான்.. என்ன ஒன்று.. எந்த நேரம் எப்படியிருப்பான்னுதான் கண்டு பிடிக்க முடியலை...' அவள் உதட்டைக் கடித்தாள்...

"உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்..
உன்னை உள்ளமெங்கும் அள்ளித்தெளித்தேன்..

உறவினில் விளையாடி...
வரும் கனவுகள் பல கோடி...."

பாடல் தொடர்ந்து ஒலிக்க... அந்தச் சூழல் மிக ரம்யமானதாக அந்த இருவருக்குமே மாறிப் போனது...

மில்லின் வாசலிலேயே கூட்டம் குழுமியிருந்தது... ராதிகாவின் வியந்த பார்வைக்கு...

"நீயும் வருகிறேன்னு சதிஷிக்கு போன் பண்ணினேன்..." என்றான் பாலமுரளி...

"நானென்ன வி.ஐ.பியா..?" அவளுக்கு கூச்சமாக இருந்தது...

"அவங்களுக்கு விஜயிதான்..." அவன் சாதாரணமாகச் சொல்லிவிட்டு காரை விட்டு இறங்கினான்...

ராதிகாவின் பக்கம் கார் கதவை யாரோ வெகு மரியாதையுடன் திறந்து விட்டார்கள்... தயக்கத்துடன் இறங்கியவளின் விழிகள் பாலமுரளியைத் தேடின.. அதைக் கவனித்தவன் அவளருகில் வந்து நின்றான்...

பாலமுரளிக்கு மாலை அணிவித்தார்கள்...

அவன் கையில் ஒரு ரோஜா மாலையைக் கொடுத்து ராதிகாவின் கழுத்தில் போடச் சொன்னார்கள்...

அவர்களின் ஆர்வமான பார்வை ராதிகாவை கூச்சப்படுத்தியது... மாலை மரியாதை அவளை சங்கடப்

படுத்தியது.. அவள் கல்லூரி மாணவி... இதுபோன்ற ஆரவாரமான வரவேற்புகளுக்கு பழக்கப்பட்டவளல்ல...

அவளது கைவிரல்கள் லேசாக நடுங்கத் தொடங்கின.. ஆதரவு தேடி அவள் விரல்கள்.. பாலமுரளியின் விரல்களோடு பிணைந்து கொண்டதில் அவன் சிலிர்த்துப் போனான்..

"வாங்க சார்... வாங்க மேடம்..."

சதிஷீம்... மற்றவர்களும் அவர்களை உள்ளே அழைத்துப் போனபோது பாலமுரளியுடன் விரல் கோர்த்து நடந்து சென்றாள் ராதிகா...

அது பாலமுரளியின் வெகு நாளைய கனவு.. அவள் கூட இணைசேர்ந்து நடக்கவேண்டும்... அப்படி நடக்கும் போது விரலோடு.. விரல் கோர்த்துக் கொள்ள வேண்டும்...

அந்தக்கனவு இப்படி நிறைவேறியதில் அவனுக்குள் உற்சாகம் பிறந்தது... ராதிகாவுக்கு மில்லைச் சுற்றிக் காட்டினான்... அவள் ஆர்வத்துடன் கேட்ட கேள்விகளுக்கு தெளிவான விளக்கம் சொன்னான்... மில்லில் வேலை செய்யும் தொழிலாளிகளை அவளுக்கு அறிமுகப் படுத்தி வைத்தான்... அவனது அலுவலக அறைக்கு அழைத்துச் சென்று... விருந்தினர் சோபாவில் அவளை உட்கார வைத்து விட்டு.. அவனது சுழல் நாற்காலியில் அமர்ந்து வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தான்...

அவன் வேலை செய்யும் விரைவை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் ராதிகா... ஊடே தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தவன்...

"போரடிக்குதா..." என்று கேட்டான்...

அவன் அப்படிக் கேட்டதில் ராதிகா மகிழ்ந்து போய்விட்டாள்... இல்லை என்று சொல்லும் விதமாக தலையை இடம் வலமாக அசைத்தாள்...

"கொஞ்ச நேரம்தான்... அர்ஜன்ட் வொர்க்கை முடிச்சிட்டா கிளம்பிடலாம்..." சிநேகிதமான குரலில் பாலமுரளி சொன்னபோது...

"நோ... நோ... டேக் யுவர் ஒன் டைம்..." என்று சொன்னாள் ராதிகா...

"என்னாச்சு... ஷோபாவின் காத்து உன்மேலயும் அடிச்சிருச்சா...?" பாலமுரளி... கம்யூட்டரின் திரைப் பக்கம் திரும்பிக் கொண்டான்...

"பேச்சுவாக்கில் வந்திருச்சு..." ராதிகா குற்ற உணர்வுடன் கூறினாள்...

"தப்பில்லை... ஆனா.. அம்மாவுக்கு இங்கிலீஷ்ன்னா அலர்ஜி..."

"அது எனக்குத் தெரியாதா..? நான் பார்த்து பேசிக்குவேன்..."

"அதானே... நீ யாரு...?"

"அதுசரி... நான் யாருன்னு இந்த ஊருக்கே தெரிஞ்சிருக்கு.. உங்களுக்குத் தெரியலையா..?"

"ஊம்..? நீயாருடி..?"

"பாலமுரளியின் பெண்டாட்டி..."

ராதிகா அதை ரசித்துச் சொல்லிய விதத்தில் ஈர்க்கப்பட்டவனாக அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்...

"அதில் உனக்கு சந்தோசமா..?"

திடிரென்று வந்த கேள்வியில் ராதிகா திகைத்துப் போய் விட்டாள்...

"ஏன் இப்படிக்கேட்கறிங்க...?"

அவள் படபடக்க.. அவன் நிதானமாக தோளைக் குழுக்கினான்...

"ஏதோ.. மனசில தோணுச்சு... கேட்டேன்..." அசுவராஸ்யமாகச் சொன்னவன்.. அவளைக் கூர்ந்து பார்த்தான்...

அவள் மனதைப் படிக்க முயல்கிறதைப் போல இருந்தது அவனின் அந்தப் பார்வை.. ராதிகா தடுமாறிப் போனாள்...

"என்னடி.. பதிலைக் காணோம்..."

கம்யூட்டரின் திரையை ஊன்றிப் பார்க்க ஆரம்பித்தவன் மீண்டும் கேள்விக் கணையை வீச... அவள் தன்னை நிதானப் படுத்திக் கொண்டாள்...

"இதே கேள்வியை நானும் கேட்கலாமில்ல..?"

அவன் சுழல் நாற்காலியில் சுழன்று திரும்பினான், அவளைப் பார்த்தான்...

"தாராளமாக கேட்கலாம்... எனக்கு சந்தோசமா இல்லையான்னு சொல்லத்தெரியல... உன்மேல ஆசைப் பட்டுத்தான் காதலிச்சேன்... ம்ப்ச்.. எல்லாமே தலைகீழா போச்சு..."

அவன் குள் கொட்டிய விதத்தில் அவள் மனம் காயப்பட்டது... இந்த வருத்தம் எதற்காக...? அவன் கழுத்தில் தாலி கட்டியதற்காகவா...?

"இதுக்கு பதில் சொல்லலாம்... சொன்னா நீங்க நம்பப் போறதில்ல... அப்புறமும் எதுக்காக இதைப் பத்தி பேசனும்..." ராதிகா மனம் நொந்து பேசினாள்...

"ஓ... அப்போ.. இதைப் பத்தி பேசினா... நோ தான் வீணாய் போகுமுன்னு சொல்றியா..?" அவன் குதர்க்கமாக கேள்வி கேட்டான்...

ராதிகாவிற்கு ஆயாசமாக இருந்தது... அவனை எப்படிச் சமாளிப்பது என்று அவளுக்கு புரியவே இல்லை... அவளை மலையுச்சியிலும் அமர வைக்கிறான்... அடுத்த நோத்தில் அவள் மனம் நோக எதையாவது பேசியும் வைக்கிறான்... இப்படிச் செய்தால் எப்படி அவனால் சந்தோஷிக்க முடியும்...?

கனமில்லாத மனமிருந்தால் தான் எதுவும் கவைக்கும்... இதை அவனுக்கு யார் சொல்வது..? எப்போது பார்த்தாலும் கொட்டும் தேளாக இருப்பவனிடம் மனதை விட்டுவிட்டு.. அதை மீட்கும் வழிதெரியாமல் அவள் துக்கத்தில் புதைந்தாள்...

'நதியோரம் நடந்தபோது...
நிலாச் சோற்றை நெஞ்சம் தேடும்..
கனமில்லாத மனமிருந்தால்..
கவலையான உணவு கூடும்...'

அவள் படித்த கவிதை வரிகள் அவள் நெஞ்சில் ஆடின...

"போகலாமா..."

அவன் எழுந்து கொண்டபோது... எதுவும் பேசாமல் ராதிகா அவனைப் பின் தொடர்ந்தாள்... இடைவெளி விட்டு அவள் வருவதைக் கண்டவனின் புருவங்கள் சுருங்கின... வரும்போது அவனுடன் விரல் கோர்த்து இணையாக நடந்து வந்தவளுக்கு இப்போது என்ன வந்தது என்று கோபம் அவனுக்குள் மூண்டது... தானாக அவளை அழைத்துக் கொள்ளவும் அவனால் முடியவில்லை... கூடவந்த சதிஷிடம் பேசியவாறு சற்றுப் பின்தங்கினான்... ராதிகா அவனுக்கு இணையாக வந்து சேர்ந்துவிட்ட பின்பு நடக்கத் தொடங்கினான்... வழியில் எதிர்பட்டவர்கள் வணக்கம் சொல்ல ஆரம்பிக்க... ராதிகா மீண்டும் அவனுடன் விரல் கோர்த்தாள்... பாலமுரளியின் உடலில் மின்சாரம் பாய்ந்தது...

'இதைச் செய்ய இவளுக்கு இத்தனை நேரமா...'

அவர்கள் காரில் ஏறிக் கொண்டார்கள்... மில்லில் வேலை செய்கிறவர்கள் கையசைத்து வழியனுப்பி வைத்தார்கள்.. பதிலுக்கு கையசைத்த ராதிகா...

"வித்தியாசமான அனுபவம்.." என்று பாலமுரளியிடம் சொன்னாள்...

"அதுக்கேண்டி... அப்படி நடுங்கின...?" பாலமுரளி கேலி செய்தான்...

அவன் இயல்பாக பேசியதில் அவளுக்கு அப்பாடி என்றிருந்தது...

'ம்ஹீம்... இவன் எந்நேரம் எதைப் பேசி வைப்பான்னு தெரியாம... பயந்து பயந்து குடும்பம் நடத்த வேண்டியதா இருக்கே...'

"உங்களுக்கென்ன... நீங்க முதலாளி.. நான் அப்படியா..?"

"போடி பைத்தியம்... நான் முதலாளின்னா நீ யாரு..?"

"இப்படி யார் நீன்னு கேட்டுக்கிட்டே இருங்க... விளங்கிரும்... நான் யாருன்னு தெரியாமல்தான் கூடக் குடும்பம் நடத்தறிங்களா...?"

ராதிகா என்னவோ விளையாட்டாகத்தான் கேட்டாள்... பாலமுரளியின் முகத்திலிருந்த மென்மை மறைந்து கடினம் பரவியது...

"நாம நடத்தறதுக்கு பெயர் குடும்பமா..?" அவன் ஆழ்ந்த குரலில் கேட்டான்...

ராதிகாவிற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை... பதில் சொல்ல முடியாத அவனின் கேள்விகளை தொடர்ந்து எதிர் நோக்கியதில் அவள் களைத்துப் போயிருந்தாள்...

'இவன் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்லிச் சொல்லியே கிழவியாகி விடப் போகிறேன்... அதுக்குப் பின்னாலேயாவது இவன் மனம் இரங்கி என்னை விட்டு வைப்பானா..?' அவளுக்குள் ஏக்கம் எழுந்தது...

"நீங்க உலக விவரம் தெரிஞ்சவங்க... உங்களுக்குத் தெரியாததையா நான் சொல்லிடப் போறேன்...?"

"தப்பிக்கப் பார்க்கிறடி..."

"யாரிடமிருந்து...?"

"வேற யார்கிட்டயிருந்து தப்பிக்கப் பார்ப்ப..? அந்த சங்கர்கிட்ட இருந்தா தப்பிக்கப் பார்க்கப் போகிற...?"

இந்தக் கேள்விக்கு முடிவே கிடையாதா..? என்று மனம் சலித்துப் போனாள் ராதிகா... இதற்காகத்தான் அவளைத் தனிமையில் அழைத்து வந்தானா...?

"மத்தவங்க பேச்சை எதுக்காக இப்பப் பேசனும்..?"

"மத்தவனா..? அவனா..? நீ இருக்கிற ஊருப் பக்கம்தான் பொண்ணு கட்டுவேன்னு பிடிவாதம் பிடிச்சு...

அங்கே சுத்தி.. இங்கே சுத்தி... கடைசியில் என் மாமன் மகளையே அவன் கட்டிக்கப் போறான்... அவனைப் போய் மத்தவன்னு சொல்றியே..."

பாலமுரளி சொல்லிவிட்டான்... ராதிகாவிற்கு தன் செவிகளையே நம்ப முடியவில்லை... அவள் மலைத்துப் போனாள்...

'என்னது... சங்கர்... பாலமுரளியின் மாமா மகளைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறானா...? இது என்ன புதுவம்பு...?'

இமையாக எனைக் காப்பவனே...
முள்ளாக நீ மாறாதே...

"தென்காசியில்தான் கல்யாணமாம்..."

"இதையெல்லாம் யார் சொன்னது..?"

"கோமதிநாயகம் மாமாதான் சொல்லியிருக்கனும்... அவர் சொல்லலை... அடுத்த மாதம் கல்யாணம்ங்கிற நிலைமையில... தென்காசி வட்டாரத்தில இன்னும் இந்தப் பேச்சு பரவல... இதுக்கு என்ன அர்த்தம்...?"

"என்ன அர்த்தம்...?"

"காதும்.. காதும் வைச்சதைப் போல பேச்சு நடந்து முடிஞ்சிருக்குன்னு அர்த்தம்... அந்த கோமதி நாயகம் லேசுப்பட்டவரில்ல... வெட்டி வினயம் பிடிச்சவர்... போதாக்குறைக்கு அந்த சங்கரும் கூட்டுச் சேர்ந்துட்டானில்ல..? வெளியே விசயத்தை கசிய விடாம இவ்வளவு தூரத்துக்கு கொண்டு வந்துட்டானுக..."

பாலமுரளியின் கோபத்தில்... ஆரம்பத்திலேயே இது தெரிந்திருந்தால் தடுத்து நிறுத்தியிருக்கலாமே என்ற கொதிப்பு தெரிந்தது...

அதனாலேயே அந்த கோமதிநாயகம் என்பவர் ரகசியமாக திருமண ஏற்பாடுகளை செய்து முடித்திருக்க வேண்டும் என்று ராதிகா நினைத்துக் கொண்டாள்...

ஆனாலும்.. சங்கருக்கு பெண் கட்ட... தென்காசி வட்டாரம்தான் கிடைத்ததா...? வேறு திசையே கிடைக்க வில்லையா..?

'இவன் எதற்காக என்னையே சுற்றி வந்து தொலைக்கிறான்...' என்று எரிச்சல் பட்டாள் ராதிகா...

அவளுக்கு இருக்கும் துன்பங்கள் போதாதா...? இவன் வேறு வந்து அதிகப் படுத்தி வைக்க வேண்டுமா..? இதை அவனுக்கு யார்தான் சொல்லுவது..?

ஒருவிதத்தில் பாலமுரளியின் கோபத்தில் நியாயம் இருக்கிறது என்றே ராதிகா நினைத்தாள்...

அதைப் புரிந்து கொள்ளாத பாலமுரளி... வெறுப்புடன் வார்த்தைகளை சிதற விட்டுக் கொண்டிருந்தான்...

"அதென்னடி... நீ எங்கே போனாலும் விடாம உன்னையே அவன் தொடுத்துக்கிட்டு வர்றான்..? உன்னை விட்டா இந்த உலகத்தில வேற பெண்ணே அவன் கண்ணுக்குத் தெரியாதா...?"

ராதிகா தலையைப் பிடித்துக் கொண்டாள்... இந்த சங்கர் செய்து வைத்திருக்கும் வேலைக்கு... இன்னும் எத்தனைப் பாட்டு வாங்க வேண்டியிருக்குமோ என்ற பயம் அவளை பிடித்துக் கொண்டது...

"உனக்குக் கல்யாணமாகிருச்சுடி... இந்த நினைப்பு அவன் மனசில இருக்கா... இல்லையா...?"

'இதை அவனிடம்தான் கேட்கனும்.. என்னிடம் கேட்டால் எப்படி..?'

"சென்னையில அழகு கந்தரிக ஆயிரக் கணக்கில இருக்காங்க.. அவங்களையெல்லாம் விட்டுவிட்டு நேனுத்துப் பக்கம் ஏண்டி அவன் வர்றான்...?"

'நானா வரச் சொன்னேன்...?'

"இங்கேயே பேக்டரி ஒன்னை ஆரம்பிக்கப் போகிறானாம்..."

'போச்சுடா... அடேய் சங்கர்... நான் உனக்கு என்னடா கெடுதல் செய்தேன்.. எதுக்காக இந்தப் பாடுபடுத்தற...?'

"அவன் குடியிருக்கிறதுக்காக தென்காசியில பங்களா ஒன்றையும் வாங்கிப் போட்டிருக்கணாம்..."

'இது ரொம்பவும் ஓவர்தான்... என் புருசனுக்கு பி.பி.எகிறாம என்ன செய்யும்..? வேணும்னே அவன் டார்ச்சர் செய்யறானே...'

"இத்தனை விசயமும் ஷோபா சொல்லித்தான் எனக்கே தெரியும்..."

அவ்வளவு நேரமு மறுமொழி கூறாமல் மனதுக்குள்ளேயே பேசிக் கொண்டிருந்தவளுக்கு... கோபம் வந்து விட்டது...

'இத்தனையும் இவள் மூட்டி விட்ட தீதானா..?'

"அதானே பார்த்தேன்.. அவ காரணமில்லாமல் வந்து இறங்க மாட்டாளே..."

பாலமுரளியின் கண்கள் இடுங்கின... அவன் புருவங்களைச் சுருக்கிக் கொண்டு... மனைவியை முறைத்தான்...

"செய்கிறதெல்லாம் அவன்.. நீ அவனை ஒரு சொல் சொல்ல மாட்டேங்கிற... அதைச் சொன்னவ பேரில குத்தம் கண்டுபிடிக்கற... இது கொஞ்சம் கூட நல்லாயில்ல ராதிகா..."

"அவ சொன்னதில தப்பில்ல... அதை எந்தக் குறிக்கோளோட சொன்னா..? அது தான் தப்பு... உங்களுக்கும் அது தெரிஞ்சிருக்கும்... தெரிஞ்சும்... அவ பக்கம் சப்போர்ட் பண்றிங்க... இது மட்டும் நல்லாயிருக்கா..?"

"பேச்சை மாத்தாதே..."

"ஓகே... மாத்தலை... அவ சொன்னது எதுக்கோ.. அதை விட்டுடலாம்... சங்கர் எங்கே பெண்ணைக் கூட்டினா நமக்கென்ன...?"

ராதிகா இப்படிக் கேட்கவும்... பாலமுரளியின் கொதிப்பு கொஞ்சம் குறைந்தது...

'இவள் சொல்கிறதும் நியாயம்தானே..' என்று நினைத்தான்...

"இதைப் பற்றிப் பேசினா நமக்குத்தான் தலை வேதனை.. பேசாம விட்டு விடுகிறதுதான் பெட்டர்... தென்காசியில குடியிருக்கிற அத்தனை பேரும் நமக்கு ஓட்டா... உறவா...? அவங்க வேலையை அவங்க பார்க்கிறாங்க... நம்ம வேலையை நாம பார்க்கிறோம்..."

"ஆனாலும்... அவன் எதுக்குடி தென்காசிக்கு வரனும்...?"

ராதிகாவுக்குள்ளும் அதே கேள்விதான் சுழன்றது... சங்கரின் மீது அதுவரை அவள் மனதின் ஓரத்தில் ஒட்டிக் கொண்டிருந்த மதிப்பும்... மரியாதையும் ஆட்டம் கண்டது...

"வந்தால் வந்துட்டுப் போறான்..? அவனைக் கண்டு நாம ஏன் டென்சன் ஆகனும்..? அவனுக்கெல்லாம் நீங்க இவ்வளவு தூரத்துக்கு இம்பார்டன்ஸ் கொடுக்கனுமா..?"

ராதிகா சுள்ளென்று பேசியதில் பாலமுரளி ஆச்சரியப்பட்டுப் போனான்... அதுவரை ராதிகா சங்கரைப் பற்றி கோபமாகப் பேசியதே இல்லை...

"நீ சொல்றதும் நியாயம்தான்னு தோனுது..." அவன் யோசனையுடன் சொன்னான்...

"இது உங்க ஏரியா... இங்கே வர அவன் தான் யோசிக்கனும்... அவன் வருவதைப் பற்றி நீங்க யோசிக்கனுமா..? அவனுக்கே இவ்வளவு தில்லிருந்தா.. உங்களுக்கு எவ்வளவு இருக்கும்...?"

ராதிகா உசுப்பேற்றிவிட... பாலமுரளியின் கண்களில் சிரிப்பு வந்தது... அதே சமயத்தில் அவன் முகத்திலிருந்த கொதிப்பும் மறையவில்லை...

இணக்கமாக பேசிய மனைவியைப் பார்த்தவனின் மனதில் இருப்பது... என்ன என்று கண்டு பிடிக்க முடியாமல் திணறினாள் ராதிகா...

"உன் கண்களில் ஏனிந்த சிரிப்பு..?
உன் கன்னத்தில் ஏனிந்த கொதிப்பு..?
ஆசையா..? கோபமா...?"

காரின் சிடியில் பாடல் கேள்வி கேட்க... நிஜமாகவே இது மாந்தரிக வேலைதான் என்ற நினைவில் சிரித்து விட்டாள் ராதிகா...

"நிஜமாகவே அவன் இந்த வட்டாரத்தில பொண்ணு கட்டறதைப் பத்தி உனக்கு கோபமா ராதிகா...?"

அவள் முகம் பார்க்காமல் அவன் கேட்டதில் அவள் விழிகளில் நீர்த்தும்பி விட்டது... அவளிடமிருந்து பதிலை எதிர்பார்த்து திரும்பிப் பார்த்தவன் திகைத்தான்...

"ஏய்ய்.. என்னடி இது..? இத்தனை நேரமும் சும்மாயிருந்தவ வீட்டுப் பக்கத்தில வந்ததும் கண்கலங்கி வைக்கிற...? என் அம்மாகிட்ட என்னை மாட்டி விட்டு பிளானில் இருக்கியா..?"

அந்த நிலையிலும் ராதிகாவுக்கு சிரிப்பு வந்துவிட்டது...

"ஆமா... இவரை மாட்டி விடனும்னுதான் நான் பிளான் பண்றேன்... சும்மா டாவடிக்காதீங்க..."

"யாரை டாவடிக்கச் சொல்ற...?"

அவன் சிரிக்காமல் கேட்க.. அவள் முறைத்தாள்...

"நீதானேடி கேட்ட..?" அவன் நியாயம் கேட்டான்...

"வேண்டாங்க சொல்லிட்டேன்... அந்த ஷோபா வந்து இறங்கியதில இருந்து நீங்க ஒரு மார்க்கமாத்தான் இருக்கீங்க..."

"அதுக்காக... அவளை டாவடிக்கச் சொல்றியா..? என்மேல உனக்குக் கோபமிருக்கும்ன்னு தெரியும்டி... ஆனா... இந்த அளவுக்கு கோபமிருக்கும்ன்னு தெரியாது இப்படிப் பழிவாங்குறியே..."

இப்போது ராதிகா கலகலவென்று சிரித்துவிட.. முரளியின் முகத்தின் கடினம் மறைந்து ஓர் விதமான மென்மை பரவியது...

மனம் விட்டுச் சிரிக்கும் மனைவியின் முகத்தையே பார்த்தான் அவன்...

'எப்படிச் சிரிக்கிறா...' அவன் மனம் நெகிழ்ந்தது...

என்னதான் கொட்டுகிற தேளாக அவன் கொட்டிக் கொண்டிருந்தாலும்... கொட்டுப்பட்ட அந்த நொடியில் கண்கலங்கி... அடுத்த நொடியிலேயே முகம் மலர சிரிக்கும் அவளின் தீந்த இயல்பு அவனை வசீகரித்தது...

"அப்பாடி... சிரிச்சு... என்னைத் தப்பிக்க வைச்சிட்டடி..."

"எதிலயிருந்தாம்...?"

"அம்மாவோட கோபத்திலயிருந்து தான்.. இல்லைன்னா... உன்னைத் தனியாக் கூப்பிட்டுக்கிட்டுப் போயி அடிச்சு நொறுக்கிட்டேன்னு என்மேல அபாண்டமா பழி போட்டுருவாங்க..."

அவன் பயந்ததைப் போன்ற பாவனையுடன் கூற... அவள் மேலும் சிரித்தாள்...

"சிரி.. மாமியாரைக் கைக்குள்ள போட்டுக் கிட்டமில்ல... சிரிக்கத்தான் செய்வ... ம்ஹீம்.. உன் காட்டிலதாண்டி மழை கொட்டோ.. கொட்டுன்னு கொட்டுது..."

"அதில உங்களுக்கு இத்தனை பொறாமையா..?"

"இருக்காதா பின்னே...?"

"ம்ஹீம... புருசனைத்தான் கைக்குள்ள போட்டுக்க முடியல.. மாமியாரையாவது கைக்குள்ள வைத்துக்க முடிஞ்சதே.. அந்த மட்டிலும் சந்தோசம் தான்..."

விளையாட்டாகச் சொல்வதைப் போலச் சொன்னாலும்.. ராதிகாவின் வார்த்தைகளில் துயரம் தோய்ந்திருந்தது... அவள் முகத்திலிருந்து சிரிப்பு இப்போது தொலைந்து போயிருந்தது... சோக மேகம் முகத்தில் கவிழ்ந்து கொள்ள... அவள் தொலைதூர தொடுவானை வெறித்தாள்...

"ராதிகா..." மனம் தாங்காமல் அவன் அழைத்தான்...

"ம்ம்ம்..." அவள் திரும்பாமல் முணுமுணுத்தாள்...

"என்னைப் பார்..." அழுத்தமான குரலில் அவன் கட்டளையிட்டான்...

ராதிகா அவனைப் பார்த்தாள்.. லேசாகக் கலங்கியிருந்த அவளது விழிகளின் ஓரமாக நீர் முத்துக்கள் உருண்டு... திரண்டிருந்தன...

நிற்கவா... இல்லை உருக்கவா... என்று அவை கேட்க... பாலமுரளிக்கு அவளை கைநீட்டி அணைத்து தோள்சாய்த்து... விழிநீரைத் துடைத்துவிட வேண்டும் போல இருந்தது...

அப்படிச் செய்ய முடியாமல் அவனைத் தடுப்பது எது..?

கண்ணுக்குத் தெரியாத அந்த இரும்புத்திரையை உடைக்க முடியாமல் உன்மத்தம் பிடித்தவனைப் போலானான் அவன்...

"நான் உன் கைக்குள்ள தான்டி இருக்கேன்.. உனக்கே அது தெரியும்..."

அந்தப் பேச்சில் ராதிகாவின் முகம் பூவாக மலர்ந்தது.. ஷோபாவைப் போன்ற ஒருத்தி வலிய வந்து ஒட்டிக்கொண்டும்.. அதை உதறிவிட்டு.. ராதிகாவின் அன்மையை நாடும் அவன் குணத்தில் அவள் மனம் நிறைந்தது...

"இப்படிச் சொல்லிட்டா ஆச்சா...?"

"வேறென்ன செய்யனும்...?"

என்னுடன் குடும்பம் நடத்தனும் என்று அவள் சொல்லி விடமாட்டாளா என்று அவன் எதிர்பார்த்தான்...

அப்படி அவள் சொல்லிவிட்டாள் உடனே அவளுடன் குடும்பம் நடத்திவிட ஆரம்பித்து விடுவாயா...? என்று அவன் மனம் அவனைக் கேள்வி கேட்டது...

முடியாது என்பது அவனுக்குத் தெரியும்.. அது அவளுக்கும் தெரிந்திருந்ததால் அதைக் கேட்காமல்... வேறு ஒன்றைக் கேட்டாள்...

"தினமும் கொஞ்சநேரம்.. எனக்காக ஸ்பெண்ட் பண்ணனும்..."

"இது பேச்சு..." அவன் சிரித்தான்...

"சும்மா சிரிச்சு மழுப்பாதீங்க... நான் கேட்டதைச் செய்ய முடியுமா.. முடியாதா...?"

அவள் மிரட்டலான தொனியில் கேட்க.. அவன் பலமாகச் சிரித்தான்..

"அடேங்கப்பா.. நீ ரௌடி ரங்கம்மாதாண்டி... இந்த பாலமுரளியையே மிரட்டிப் பார்க்கறியே..."

"என் புருசன்.. நான் மிரட்டிப் பார்க்கிறேன்... அதில உங்களுக்கென்ன வருத்தம்..? நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்க.."

இதைவிட இனிப்பையா... கட்டிலின் சுகம் வாரி வழங்கிவிடப் போகிறது என்று நினைத்தான் முரளி...

வார்த்தைக்கு வார்த்தை 'என் புருசன்.. என் புருசன்..' என்று அவள் உரிமை கொண்டாடியதில் அவனது ஆண்மை கர்வம் கொண்டது...

இந்த நிறைவு கொடுக்கும் இன்பதைவிட பெரிதாக வேறென்ன இருக்கப் போகிறது...?

"உன்னுடன்தாண்டி நான் அதிக நேரத்தைச் செலவளிக்கிறேன்.. என் அம்மாவிடமும்... அக்காவிடமும் கேட்டுப்பார்... அவங்களிடம் நின்று பேச எனக்கு நேரம் இருந்ததில்லை... அக்கா குடும்பத்துகிட்ட வாங்கன்னு தலையசைத்தாலே அதிகப்படிதான்..."

"எனக்கு இந்த நேரமெல்லாம் பத்தாது..." அவள் கறாராகப் பேசியதில் அவன் ஈர்க்கப்பட்டான்...

இருபுறமும் மரங்கள் அடர்ந்த சாலையில்.. வெளிச்சமின்றி லேசான இருளுடன் கூடிய நிழல் பரவியிருக்க... அவன் சாலையோரமாக மரத்தடியில் காரை நிறுத்தினான்...



நேற்றுவரை என்மனவானில் வராமல்
நிலவே! நீயெங்கே போயிருந்தாய்...?

அடர்ந்த மரக்கிளைகளின் அடியில் ஊடுறுவ முடியாமல் சூரிய வெளிச்சம் திகைத்து நிற்க... அந்தச் சுற்றுப்புறத்தின் பசுமையான இயற்கைச் சூழலை ரசித்துப் பார்த்தாள் ராதிகா...

"சொல்லுடி.. இந்த நேரம் பத்தாதுன்னா.. வேற எந்த நேரம் உனக்கு வேணும்...?"

"ஈவினிங் டைம்..."

"எனக்கு வேலையிருக்குமே ராதிகா..."

"ஈவினிங் டயத்தோட மில்லின் வேலை நேரம் முடிஞ்சுவிடாதா...?"

"வேலை செய்கிறவங்கதான் நேரக் கணக்கு பார்ப்பாங்க... முதலாளி பார்க்க முடியுமா..? அதோட.. எனக்கு மில் மட்டும்தான் இருக்குதா..? இன்னும் ஜவுளிக்கடை... செங்கல்சூளை... தோப்பு.. வயல்ன்னு இருக்குது.. அதையெல்லாம் யார் பார்க்கிறது..?"

"நீங்க ஒற்றை ஆளாய் இத்தனையையும் பார்க்கனுமா..?"

அவள் மலைத்தாள்... அவள் விழிகளில் தெரிந்த வியப்பில் அவன் மனம் இதம் கண்டது...

"ஏன்.. இத்தனை நாளாய் இது உனக்குத் தெரியாதா...?"

"தெரியாதுங்க... நீங்க பெரிய ஆள்ன்னு தெரியும் இத்தனையையும் நீங்களே மேனேஜ் பண்ணனும்னு தெரியாது..."

"இப்பத் தெரிஞ்சுக்கிட்டயில்ல... நீயே சொல்லு எனக்கும் உன்கூட சேர்ந்து இருக்கனும்ங்கிற நினைப்புத் தான்... ஆனா நேரம் வேணுமே..."

அவன் மென்மையாகக் கேட்டதில் அவள் காதல் கொண்டாள்... அவனையே இமைக்காமல் பார்த்தவளின் விழிகளுக்கு.. அவனின் உழைப்பு தெரிந்தது.. அவளது கண்கள் கசிந்தன...

"இப்ப எதுக்காக திரும்பவும் டேமைத் திறந்து விடற..?" அவன் செல்லமாக அதட்டினான்...

"இவ்வளவு வேலைகளையும் நீங்களா பார்க்கனுமா..?" அவள் குரல் நெகிழ்ந்தது...

"இதெல்லாம் எனக்குப் பழக்கம் தாண்டி பதினைஞ்சு வயசிலேயே இதையெல்லாம் பார்த்துப் பழகியவன்தான்... இதுக்குப் போயா கண்கலங்கிற...?" அவன் வார்த்தைகள் அவளை வருடின...

ராதிகா.. அவன் கையை எடுத்து.. தன் கைக்குள் வைத்துக்குகொண்டாள்... பாலமுரளியின் உடலில் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வேற்பட்டது... அவளின் மென்மையான கரங்கள்... வலிமையான அவனின் இரும்புக் கரத்தை இறுக்கிப் பிடித்தன... அவன் விரல்களை நீவிவிட்டவள்.. மென்மையாக முத்தமொன்றைப் பதித்தாள்...

பாலமுரளியால் கைகளை உறுவிக் கொள்ள முடியவில்லை.. இதைப் போன்ற காதலுடன் ராதிகா அவனை அணுகும் சுகத்தில் மூழ்கித் திகைத்துக் கொண்டிருந்தவனுக்கு... அதைவிட்டு வெளியே வர மனமில்லை...

ராதிகா.. அவனது இருகரங்களையும் தன் கன்னங்களில் பதித்து... கண்மூடிக் கொண்டாள்.. மூடியிருந்த அவளது குடைபோன்ற இமைகளின் மீது முத்தமிடும் ஆசை அவனுக்குள் வலுத்தது.. அதற்குள் அவள் இமைதிறந்தாள்... அவனது கரங்களை கண்களில் ஒற்றிக் கொண்டாள்...

"ராதிகா...?" அவன் திகைப்புடன் வினவினான்...

"உங்க உழைப்புக்கு முன்னாலே நான் வெறும் தூசிதான் அத்தான்..." குரல் நெகிழ அவள் சொன்னாள்...

'முரளி' என்று அழைத்துக் கொண்டிருந்தவள்... இயல்பாக 'அத்தான்..' என்று அழைக்க ஆரம்பித்து விட்டதில்.. ஓர்விதமான சந்தோச உணர்வு அவனுக்குள் கிளர்ந்தது...

ஆனாலும்... அவள் பெயர் சொல்லி அழைத்த அந்த நாள்களின் மகிழ்வை நினைவில் கொண்டுவராமல் இருக்க அவனால் முடியவில்லை...

"போதும்டி... ரொம்பத்தான் உருகாதே... இப்பப் புரியுதா... உன் புருசன் உன்கூட செலவளிக்கிற நேரமே அதிகம்தான்னு..."

அவள் பதில் சொல்லவில்லை... மௌனமாக.. அவன் கைவிரல்களை நீவி விட்டுக் கொண்டேயிருந்தாள்..

"ராதிகா..."

அவன் அழைப்பில் நிமிர்ந்தவளின் முகத்தில் சிணுங்கல் இருந்தது...

"எனக்கும் புரியுது... ஆனா.. நீங்க என் பக்கத்தையும் கொஞ்சம் கேட்கனும்..."

"கேட்கத்தானே காரை நிறுத்தியிருக்கேன்.. சொல்லு"

"காலையிலே எழுந்ததும் சாப்பிடக்கூட மறந்து போனவரா கிளம்பிப் போயிடறிங்க..."

"நீ விட்டுவிடுகிறியா..? பின்னாலேயே துரத்திவந்து டிபனை சாப்பிட வைச்சுத்தானே அனுப்பி வைக்கிற...?"

"இது ஒரு பெருமையாக்கும்...?"

"பின்னே..? இல்லையாக்கும்..?"

"போங்க... சும்மா கேலி பண்ணிக்கிட்டே இருப்பீங்க.. மதியம் நேரத்தோட சாப்பிட வர்றதில்ல..."

"வருகிறேனா... இல்லையா..? அதைச் சொல்லு.. உன்னைக்கட்டிக்கிட்டு வாரதுக்கு முன்னாலே இதையெல்லாம் செய்ததில்லை..."

"பெருமைதான் போங்க..."

"எங்கே போகச் சொல்கிறவ...?"

"ஓடுகிறதிலேயே குறியாய் இருங்க..."

"என்னை இறுக்கிப் பிடிச்சு இழுத்துக்கற கயிறு உன் கையிலதானேடி இருக்கு...?"

பாலமுரளி புருவங்களை உயர்த்த... ராதிகாவின் முகத்தில் பெருமிதம் கலந்த வெட்கம் பரவியது.. அவள் பற்றியிருந்த பாலமுரளியின் விரல்களைச் சுண்டியிழுத்தாள்...

"நான் இழுத்தவுடனே ஒடி வந்திடற ஆள்தான்..."

"உன் ஆள்டி..."

அவன் இமைகளைச் சிமிட்ட... ராதிகாவின் கண்களில் மின்னல் வந்தது... அதுபோல அவன் செய்வது வெகு அபூர்வமான நிகழ்வு... அந்தத் தருணங்களை பத்திரப்படுத்தி... பொக்கிசம்போல மனதில் பூட்டி வைத்துக் கொள்வாள் ராதிகா...

இது அது போன்ற தருணம் என்பதில்... அவள் மனம் சிலிர்த்தது...

"காலையிலயாவது உட்கார்ந்து சாப்பிடுவீங்க.. மதியம் அதையும் செய்கிறதில்லை... ஒரே ஓட்டம்தான்..."

"வேலை ஞாபகம்டி ராது..."

பேக்கலாக்கில் அவன் 'ராது' என்று அழைத்ததில் அவள் கண்களின் ஒளிர்வு அதிகரித்தது... எங்கே அதைக் கண்டு கொண்டால் பழையபடி கடுமையான முகமூடியின் பின்னால் அவன் ஒளிந்துகொள்வானோ என்ற பயத்துடன் அதை மறைத்துக் கொண்டாள் ராதிகா...

"ஈவினிங் காபி டிபனுக்கு வீட்டுப் பக்கம் வர்றதேயில்ல... அதை ஒரு குறையாவும் சொல்லிட முடியாது.."

"ஆஹா.. என் பெண்டாட்டி என்னைப் புரிஞ்சுக்கிட்டா..."

"சொம்பத்தான் மகிழ்ந்து போகாதீங்க.. நீங்க மதியச் சாப்பாட்டை சாப்பிடறதே ஈவினிங் டயத்திலதானே...?"

ராதிகா சொல்லிய விதத்தை ரசித்துச் சிரித்தான் பாலமுரளி...

"நான் சாயங்காலமும் வீட்டுக்கு வர்றதா நீயே சொல்லிட்ட... இதுக்கு மேலே என்னையெதுக்கு குத்தம் சொல்கிற..."

"போதுமே.. மதியச் சாப்பாட்டை ஈவினிங்கில் அள்ளிப் போட்டுக்கிட்டு ஓடினால்... திரும்பிவர நைட்டாகிடுது..."

"நாங்க வீட்டுக்குத்தானேடி வர்றேன்..."

"ஆஹா.. என்ன தாராள மனது..."

ராதிகா பாராட்டியதில்... லயித்துப் போனவனாக அவளையே பார்த்தான் முரளி... அவளது பேச்சும்.. வேண்டுகோளும்.. அவன் மனதை அசைத்தன..

"இங்கே பாருடி.. என் வேலை நேரத்தை உன்கிட்ட சொல்லிட்டேன்... இதில ஒரு வழியை கண்டுபிடிக்க... உள்ளே உன்னையும் நுழைக்கக்க... நான் மாட்டேன்னா சொல்லப் போறேன்..?"

"அப்படிச் சொல்கிறீங்களா...?"

அவள் யோசிக்கும் பாவனையில் நெற்றியை சுருக்கிவிட்டு... கண்கள் ஒளிர அவனைப் பார்த்தாள்...

"ஐடியா..." என்றாள்...

"ம்ம்... சொல்லு..." புன்னகையுடன் அவன் கேட்டான்...

"மதியச் சாப்பாட்டை சாப்பிடுகிறேன் பேர்வழின்னு ஈவினிங் வீட்டுப் பக்கம் தலையைக் காட்டிட்டு போவிங்கள்ல...?"

"ஆமாம்... அதுக்கென்ன...?"

"அப்ப.. உங்க கூடவே நானும் வர்றேன்..."

"ஏய்ய்.. நான் வேலையைப் பார்க்கனும்டி..."

"நான் உங்களைப் பார்க்கனுமே..."

ராதிகா பிடிவாதமாகக் கூற... அவள் முகத்தையே கூர்ந்து பார்த்தான் பாலமுரளி.. அதில் தெரிந்த காதலின் ஏக்கம்.. அவனைக் குழப்பியது...

"எனக்கு ஒன்னே ஒன்னுதான் புரியலைடி..."

"எதுவாம்..?"

"என் கூடவே இருக்கனும்னு ஆசைப்படற... என்னைப் பார்க்கனும்னு சொல்ற... இதெல்லாம் என்ன..?"

அவன் தவிப்புடன் கேட்டதில் அவள் மனம் நொந்து போனாள்...

இதெல்லாம் ஏன் என்று அவனுக்கேன் தெரியவில்லை..? அப்படி அவனுக்கு தெரியவிடாமல் தடுத்தது எது..? அவனுக்காக அவள் ஏங்கிய ஏக்கத்தை ஏன் அவன் அறியாமல் போனான்..?

தேடியது கிடைத்தும்... அந்தத் தேடலுக்கான பலன் கிடைக்காத அவள் என்ன வரம் பெற்றுப் பிறந்தாள்..?

ராதிகா உதட்டைக் கடித்து தன் உணர்வுகளை அடக்கப் போராடிக் கொண்டிருந்தாள்.. பாலமுரளியின் பார்வை அவளது இதழ்களின் மீது படிந்தது... அவனது பார்வையின் தீவிரத்தை உணர்ந்தவளின் முகம் சிவந்தது... கண்களில் நீர் கோர்க்க அவள் தலையைக் குனிந்து கொண்டாள்...

இது என்ன மாதிரியான உணர்வு...!

கொல்லும் அந்த உணர்வுகளின் வேகம் தாங்காமல் துடித்தது அவளது இதயம்... சிலந்திவலையாய் அவளைச் சூழ்ந்திருந்த சாபத்தின் பிடியிலிருந்து தப்பிக்கும் மார்க்கம் தெரியாமல் அவள் பரிதவித்தாள்... அவளது ஏக்கங்களின்

ஓசைகள் அவன் இதயக்கதவைத் தட்டித்திறக்கும் நாள் வருமா என்று அவன் முகம் பார்த்தாள்...

அவனும் அப்போது அவள் முகத்தைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.. அதில் தெரிந்த வேதனையின் சாயலில் அவள் துடித்துப் போனாள்...

"ஏண்டி அப்படி செஞ்சே..?" அவன் குமுறினான்...

"அவன் பெண் கேட்டு வந்ததைப் பெருமையாய் பேசினயே... எந்த விதத்தில் அவன் என்னை விட உயர்த்தியாய் போனான்...?"

அவனது கேள்விகள் அவளைச் சுட்டன...

'இப்படியெல்லாம் நடக்கும்ன்ன தெரிஞ்சிருந்தா.. நான் அன்றைக்கு அப்படிப் பேசி தொலைத்திருக்க மாட்டேனே... அந்த ஷோபாவின் காதில என் பேச்சு விழுந்தா... அவ சங்கருடனான என் கல்யாணத்தை நிறுத்துவான்னுதானே நான் நினைச்சேன்..? இப்படி உங்களுக்கு என் பேச்சை ரிகார்டு பண்ணி அனுப்பி வைச்சுத் தொலைப்பான்னு கனவா கண்டேன்..?'

நினைத்ததை வாய்விட்டுச் சொன்னால்.. அவன் நம்பவா போகிறான் என்ற நிராசையுடன்.. அவன் கரத்தை விட்டாள் ராதிகா... பாலமுரளியின் மனம் அதிர்ந்தது...

'அவன் பேச்சை எடுத்தால்... என் கையைக்கூட தொட மாட்டாளா...?'

தன் காதல் கடைசிவரைக்கும் அவனால் உணரப் படாமலே போய்விடுமோ என்ற பயம் ராதிகாவைப் பீடித்துக் கொண்டது....

செல்லரிக்கும் சூழ்நிலைகள்... தன் காதலைத் தின்று அழித்து விடுமோ என்ற கவலையில் ஆழ்ந்தாள் அவள்...

'இப்படிக் கவலைப்பட்டு... கவலைப்பட்டு.. கடைசியில் காணாமல்தான் போகப்போறேன்...'

அவள் ஒய்ந்து போனவளாக ஜன்னல் கண்ணாடியின் மேல் தலை சாய்த்தாள்...

ஒரு இனிமையான சூழலை தன் பேச்சினால் கெடுத்து விட்டோமோ என்று பாலமுரளிக்குத் தோன்றியது... அவளை அந்த நிலையில் பார்க்க அவனுக்கு மனம் தாளவில்லை... எதைச் சொன்னால் அவள் அந்த சோக மூட்டத்திலிருந்து வெளியே வருவாள் என்பது அவனுக்குத் தெரிந்த ஒன்றுதான்...

"ஆனா ஒன்னுடி.. உசுப்பேத்தி விடறதில உன்னை மிஞ்ச ஆளில்ல..."

அவன் எதற்காக.. திடிரென்று இப்படிப் பேசி வைக்கிறான் என்று புரியாதவளாக அவள் அவன் முகம் பார்த்தாள்...

"நீ மட்டும் அன்னைக்கு அப்படிப் பேசலன்னு வையேன்... நான் உன்னை சிறையெடுத்திருக்க மாட்டேன். என் பெண்டாட்டியாய் ஆக்கியிருக்கவும் மாட்டேன்..."

அவன் கண்சிமிட்ட.. அந்த நாளின் நினைவில் ராதிகாவின் முகம் சிவந்து விட்டது... அவன் எதிர்பார்த்ததும் அதைத்தானே... லேசாக நகர்ந்து அமர்வதைப் போல... அவன் நெருக்கமாக அமர்ந்து கொள்ள.. ராதிகாவின் மனம் சோகத்திலிருந்து வெளியே வந்தது...

"பிஞ்சாக... நானிருந்தேனே...
பெண்ணாக மாற்றிவிட்டானே..."

காரின் சிடியில் பாடல் ஒலிக்க.. அவள் மீண்டும் உதட்டைக் கடித்தாள்... இப்போது அவள் உதட்டைக் கடித்தது... வேறு வகையான உணர்வின் அலைகளில் அவள் சிக்கி விட்டதற்காக...

"அம்மம்மா... கேளடி தோழி..!
நிலாவில் நின்றொரு நாழி...
சொல்லாலே உரைத்தது பாதி...
தன்னாலே அறிந்தது மீதி...
அம்மம்மா...!"

அதற்குமேல் தாங்க முடியாதவளாக ராதிகா அவன் மேல் சரிந்தாள்... பாலமுரளியின் உடலில் மின்சார அலைகள் பரவின.. அவளைக் கையில் எடுத்துக் கொள்ளச் சொல்லி... அவனது உணர்வுகள் அவனைத் தூண்டின...

அலைமீது செல்லும் துரும்பு...
உன்மீது காதல் கொண்ட அரும்பு...

ஒரு சிறு அணைப்பு போதும்... பாலமுரளி உருவாக்கிக் கொண்டிருந்த மனத்தடைகளை அவளே உடைத்து சுக்கு நூறாக்கி எறிந்து விட...

அந்த அணைப்பைத் தரத்தான்.. அவன் கைகள் நீண்டன... அவன்மேல் சரிந்திருந்தவளை நிமிர்த்தி அவளைத் தழுவிக் கொள்ள அவன் யத்தனித்துக் கொண்டிருந்த போது அவனது செல்போன் அலறியது...

"த்ச்சு..."

அவன் செல் போனை எடுக்க... ஏமாற்றத்துடன் ராதிகா விலகி அமர்ந்தாள்... எப்போது அவன் மோக வெள்ளத்தில் மூழ்கி அவளைத் தொடுகிறானோ... அப்போதெல்லாம் செல் போனின் மணி ஒலிப்பதற்கான தாத்பர்யம் என்னவாக இருக்கக்கூடும் என்று அவள் மண்டையைக் குடைந்து யோசித்துக் கொண்டிருந்தாள்...

"ம்ம்... ம்ம்.. எப்ப...? எதுக்காம்..? ம்ம்.. வர்றோம்..."

அவன் இறுகிய முகத்துடன் போனை வைத்து விட்டு.. அவளிடம் எதுவும் பேசாமல் காரைக் கிளப்பி... புயல் வேகத்தில் ஓட்ட ஆரம்பித்தான்...

'போச்சுடா... இப்ப... எந்தவினை போனில் வந்திருக்காம்...'

"அவன்தான் வந்திருக்கானாம்..."

'எவன்... அவன்...?'

"வேற எவன் வருவான்..? அந்த சங்கர் பயல்தான்.."

'கடவுளே...! இங்கேயென்ன வேலையாம்...?'

"கல்யாணப் பத்திரிக்கை கொடுக்க வந்திருக்கிறானாம்..."

அவள் மனம் நினைத்தவைகளுக்கெல்லாம் அவன் பதிலை சொல்லி வைக்க.. அவள் தலையைப் பிடித்துக் கொண்டாள்...

'ம்ஹீம்... இந்த ஷோபா வந்தாலும்.. வந்து தொலைச்சா... தலை வலியே வராதவங்களுக்கெல்லாம் தலையை வலிச்சுத் தொலைக்குது...'

"அது எப்படிடி.. கழுகுக்கு மூக்கு வியர்க்கிறதைப் போல நான் உன்னைத் தொட நினைக்கிறப்பல்லாம் கரெக்டா... அவன் செல்போனில வந்து நிக்கிறான்...?"

ராதிகாவுக்கும் அது புரியவில்லை.. அதைச் சொன்னால் பாலமுரளி காது கொடுத்துக் கேட்கப் போவதில்லையென்பதால் மௌனமாக இருந்தாள்...

"கல்யாணம் பண்றதா இருந்தா... பண்ணித் தொலைக்கட்டுப் போக வேண்டியதுதானே... அதை விட்டுட்டு கல்யாணப் பத்திரிக்கை வைக்க என் வீட்டுக்கு ஏன் வர்றான்...?"

இதற்காகத்தான் அவன் பாலமுரளியின் உறவினரின் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தானோ என்று ராதிகாவுக்குத் தோன்றியது...

"இவனெல்லாம் பத்திரிக்கை வைக்க வரலைன்னு யார் அழுதா...?"

ராதிகா பொறுமையிழந்தவளாக நகம் கடித்தாள்.. பாலமுரளியின் கோபத்திலிருந்த நியாயம் அவளுக்குப் புரியாமல் இல்லை... இருந்தும் அவளால் எந்த வகையில் அவனுக்குச் சமாதானம் சொல்ல முடியும்...?

பாலமுரளியின் வீட்டுக் காம்பவுண்டிற்குள் கார் நுழைந்தது... பிரம்மாண்டமான போர்டிகோவில்... சங்கரின் வெளிநாட்டுக் கார் நின்று கொண்டிருந்தது... பாலமுரளி கடுப்புடன் காரை விட்டு இறங்கினான்.. ராதிகா பின் தொடர வீட்டுக்குள் போனான்...

"என்ன செய்யறது தங்கச்சி... உங்க எல்லாத்தையும்... கலந்துக்கிட்டு.. முன்னால நிற்க வைக்கத்தான் இந்தக் கல்யாணத்தை முடிவு பண்ணியிருக்கனும்... ஆனா பாரு.. திடிர்ன்னு உன் மருமகளுக்கு கல்யாணம் கூடிவந்திருக்க.. நீ எப்படி உன் மகனோட கல்யாணத்தை அவசர அவசரமாக முடிவு

பண்ணினயோ... அதப்போலவே நானும் செய்ய வேண்டியதாப் போச்சு..."

கோமதிநாயகம் நீட்டி முழங்கிக் கொண்டிருக்க... அவரருகில் சோபாவில் அமர்ந்திருந்த சங்கர் கம்மா உட்காராமல் கால்மேல் கால் போட்டு தோரணையாக உட்கார்ந்திருந்தான்... அந்தத் தோரணையைக் கண்ட பாலமுரளிக்குள் கோபம் துளிர்த்தது...

"அதுக்கென்னங்க அண்ணே... கல்யாண வயசில பொண்ணை வீட்டுக்குள்ளேயே வைச்சிக்கிட்டு இருக்க முடியுமா..? தோதான இடம் வந்தா சட்டுப் புட்டுன்னு கல்யாணத்தை பேசி முடிச்சு... கட்டிக் கொடுத்து அனுப்பிர வேண்டியதுதானே.. இதுக்குப் போயி என்கிட்ட விளக்கம் சொல்லனுமா...?"

அலட்டிக் கொள்ளாமல் பதில் சொன்ன மேகலா.. தான் பாலமுரளிக்கு அன்னை என்பதை கோமதி நாயகத்திற்கு உணர்த்தினாள்...

உன் வீட்டுத் திருமணத்தை நீ நடத்துகிறாய்... இதில் எனக்கென்ன ஆட்சேபனை இருக்கப் போகிறது என்ற விதத்தில் மேகலா... பட்டுக் கொள்ளாமல் விலகிக் கொண்டதில் கோமதிநாயகம் மன உளைச்சலுக்கு ஆளானார்...

அவரின் மனைவியான தங்கம்... பாலமுரளியின் தந்தையான மாணிக்கவாசகத்திற்கு சொந்த சித்தப்பாவின் மகள்... பெற்றவர்களுக்கு ஒற்றை மகளாகப்

பிறந்த தங்கத்தின் பிள்ளைகளுக்கு.. தாய்மாமன் சீரை மாணிக்க வாசகம்தான் செய்ய வேண்டும்... அவளுடைய இடத்திலிருந்து அந்தச் சீர்களை.. பாலமுரளிதான் செய்து வந்தான்...

அப்படிப்பட்ட நெருங்கின உறவு முறையில் இருந்து கொண்டு பட்டும்படாமல் மேகலா பேசியவிதத்தில் கோமதி நாயகத்தின் மனம் கொந்தளித்தது...

இருந்தாலும்.. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தன்மையாகவே அவர் பேசினார் என்றால்... அதற்கு ஒரு பலமான காரணம் இருந்தது...

அந்த வட்டாரத்திலேயே பெரும் புள்ளியான பாலமுரளியின் உறவுக்காரர் என்ற பெருமையை பெற்றிருப்பவர் அவர்... ஏதாவது ஏடாகூடமாக அவர் பேசிவைத்து.. அதுதான் சாக்கென்று... பாலமுரளியும்... மேகலாவும் அவர் வீட்டுத் திருமணத்தை புறக்கணித்து விட்டால்... அந்த வட்டாரத்தில் அவர்தலை நிமிர்ந்து நடக்க முடியாது...

பாலமுரளி வந்ததுமே... கோமதி நாயகம் தானாக எழுந்து நின்று கரம் குவித்து...

"வாங்க... மாப்பிள்ளை..." என்று வாயெல்லாம் பல்லாக வரவேற்று வைத்தார்...

'வாட் இஸ் திஸ்...?'

வந்திருக்கும் விருந்தாளிகளை வீட்டுக்கு உரிமையாளனாக பாலமுரளிதான் வரவேற்க வேண்டும்..

அதைவிட்டுவிட்டு... கோமதி நாயகம் எழுந்து நின்று பாலமுரளியை வரவேற்றதில் சங்கருக்கு கொஞ்சம்கூட உடன்பாடில்லை...

அவனுக்கு பெண் கொடுக்கப் போகும் வருங்கால மாமனார்... அவனது எதிரியான பாலமுரளிக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதா...?

அவனது கடுப்பை அதிகப் படுத்துவதைப் போல பாலமுரளி லேசாகத் தலையசைத்து கோமதி நாயத்தின் வணக்கத்தையும் வரவேற்பையும் அங்கீகரித்தானே–யொழிய... மருந்துக்குக்கூட... 'வாங்க...' என்ற பதில் வரவேற்பைத் தரவில்லை... சங்கரை கண்டு கொள்ளவுமில்லை...

சங்கருக்கு எதிரில் கிடந்த பிரம்மாண்டமான சோபாவில் கால்மேல் கால் போட்டு அமர்ந்து... சோபாவில் சாய்ந்து அமர்ந்து... இது என்வீடு என்று சொல்லாமல் சொல்லியவன்.. கைக்கடிகாரத்தையும் ஒருமுறை பார்த்துக் கொண்டான்...

"ஹி... ஹி... மாப்பிள்ளைக்கு வேலை அதிகமிருக்கும்.." கோமதிநாயகம் வழிந்தார்...

'அப்ப... இவன் வீட்டுக்கு வந்திருக்கிற நான் வேலையில்லாதவனா...' மாமனாரை போகும் வழியில் ஒருபிடி பிடிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மனதிற்குள் நிறைவேற்றினான் சங்கர்...

"என்ன விசயம் மாமா... இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க...?" மிடுக்காகக் கேட்டான் பாலமுரளி...

"அதைத்தான் இம்புட்டு நேரமா.... தங்கச்சி கிட்ட ஒப்பிச்சிக்கிட்டு இருந்தேன் மாப்பிள்ள...", கோமதி நாயகம் பவ்யமாகக் கூறினார்...

"அப்பச்சரி.. நீங்க வந்த வேலையை அம்மாகிட்டயே சொல்லிருங்க... எனக்கு முக்கியமான வேலைகள் இருக்கு..."

பாலமுரளி லேசாகத்தான் கையை அசைத்தான்.. அதற்கே பதறிப்போய் விட்டார் கோமதி நாயகம்...

"என்ன மாப்பிள்ள... இப்படிக் கோவிச்சக்கறிங்க.. நம்ம நித்யாவுக்கு கல்யாணம் மாப்பிள்ள..."

"நம்ம நித்யாவா...?" புருவம் சுருக்கினான் பாலமுரளி...

"என்னோட கடைசிப் பொண்ணு பேரு நித்யா மாப்பிள்ள.. மறந்துட்டிங்களா..?" கோமதி நாயகத்தின் முகம் கருத்துவிட்டது...

"பேரெல்லாம் யாருக்குத் தெரியும்...? ஆயா மாமா.. பெண்ணுக்கு கல்யாணம்னா.. பெண் பார்க்க வர்றாங்களா..?" வேண்டுமென்றே விசாரித்தான் பாலமுரளி...

"அதெல்லாம் முடிஞ்சிருச்சு மாப்பிள்ள... தாய்மாமன் வீட்டுக்கு கல்யாணப் பத்திரிக்கை வைக்கனுமில்ல.. அதுக்காகத்தான் மாப்பிள்ளையோட நானே நேரில் வந்தேன்..." கோமதி நாயகம் குற்றவாளியைப் போல் மென்று விழுங்கினான்...

பாலமுரளியின் விழிகளில் தீயின் ஜ்வாலை தெரிந்தது...

"பெண் பார்க்க வாரதை தாய்மாமன் வீட்டுக்குச் சொல்லனும்கிற முறை உங்ககிட்ட கிடையாது... கல்யாணம் பேசி முடிக்கிறப்போ... தாய்மாமன் வந்து சபையில உட்காரனும்ங்கிற முறையும் உங்ககிட்ட கிடையாது... இப்ப மட்டும் எந்த முறையைச் சொல்லிக் கிட்டு பத்திரிக்கை வைக்க வந்திருக்கீங்க...?"

"மாப்பிள்ளை..."

விட்டால் கோமதிநாயகம் அழுது விடுவார் போலத் தோன்றிவைக்க.. மேகலாவுக்கு அவரைப் பார்க்க பாவமாக இருந்து வைத்தது...

"விடுடா முரளி... இதையெல்லாம் பெரிசு பண்ணினா எப்படி..? அவரும் விளக்கம் சொல்லிட்டாரு.."

"அந்த விளக்கத்தை நீங்களே கேட்டுக்கங்கம்மா.. உன் மாமன் வீட்டுக் கல்யாணம் முடிவாகிருச்சாமே... உனக்குத் தகவல் தெரியாதான்னு நாலு பேர் என்னைக் கேட்டா.. எனக்கும் அதுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லைன்னு நான் சொல்லிட்டுப் போறேன்..."

பாலமுரளி கோபத்துடன் எழுந்து மாடிப்படிகளில் கால் வைத்தான்... எதையோ நினைத்துக் கொண்டதைப் போலத் திரும்பியவன்...

"ராதிகா..." என்று அழைத்தான்...

"என்னங்க..." அவள் அவசரமாக அருகில் வந்தாள்..

"என்னோட டைரி எங்கே..? வந்து தேடிக்கொடு..."

அவன்கூடவே வந்து விடும்படியான மறைமுக கட்டளை அதில் தொக்கிநிற்க.. ராதிகா நிம்மதியாக உணர்ந்தாள்...

ஹாலில் வாகாக சாய்ந்து அமர்ந்து.. பாலமுரளியின் முகத்தையும்... ராதிகாவின் முகத்தையும் கேலி பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்த ஷோபாவின் முன்னிலையிலிருந்து விலகுவதில் அவளுக்குள் ஆழ்ந்த அமைதி ஏற்பட்டது...

அத்தோடு.. இன்னமும் ராதிகா சங்கரை கண்டு கொண்டதாகவே காண்பித்துக் கொள்ளவில்லை.. அவனை 'வா'வென்று வரவேற்கவுமில்லை...

பாலமுரளியின் முன்னால் இதையெல்லாம் அவளால் செய்துவிட முடியாது.. பாலமுரளி அகன்று விட்டால்.. அவள் சும்மா நின்றாலும் சங்கர் சும்மா இருப்பானா...? எப்படியிருக்கிறாய் என்று நலம் விசாரித்து வைக்க மாட்டானா...?

அந்த வம்பு எதற்கு என்ற எண்ணம் ராதிகாவுக்கு அது தவிர்க்கப்பட்டு விட்டதில் ஏற்பட்ட நிம்மதியுணர்வுடன்..

"இதோ.. வரேங்க..." என்று கணவனைப் பின் தொடர்ந்து மாடியேறி விட்டாள்..

பாலமுரளியின் வெளிப்படையான உதாசீனத்தில் வெகுண்டு போனார் கோமதிநாயகம்... வருங்கால மாப்பிள்ளை அவருடைய மதிப்பைப் பற்றி எப்படி எடை போடுவாரோ என்ற கவலை அவரைப் பீடித்துக் கொண்டது...

அதைவிட.. ராதிகா அவர்களை 'வா'வென்று அழைக்காததில் அவருக்கு கோபம் ஏற்பட்டு விட்டிருந்தது...

"எங்களுக்கில்ல ஆயிரம் இருக்கும்.. இந்த வீட்டில் வாழவந்த பொண்ணுக்கு வளமை... சளமை தெரிஞ்சிருக்க வேணாமா தங்கச்சி...?"

பாலமுரளியின் மீது ஏற்பட்டிருந்த கோபத்தை ராதிகாவைக் குறை சொல்வதன் மூலம் வெளிப் படுத்தினார் கோமதி நாயகம்...

"அது பாவம்.. சின்னப்பொண்ணு.. சென்னையிலே பிறந்து வளர்ந்தது... அதுக்கு ஒன்னும் தெரியாது அண்ணா.. நீங்க எதையும் மனசில வைச்சுக்காதீங்க..."

"இதென்னதங்கச்சி.. அதிசயமா இருக்கு..? வீட்டுக்கு வந்தவங்களை வான்னு கூப்பிற வளமை கூடவா... உன் மருமகளுக்குத் தெரியாம போச்சு..?"

"அவ வான்னு சொல்றதுக்குள்ளதான் உங்க மருமகன் அவளுக்கு வேலை சொல்லிட்டானே.. உங்க மருமகனின் குணம்தான் உங்களுக்குத் தெரியுமே

அண்ணா... அவன் ஒரு வேலையைச் சொல்லிட்டா.. உடனடியா அதைத்தான் பார்க்கனும்.. வேற பேச்சு பேசினா அவனுக்கு பழியா கோபம் வந்துரும்..."

மேகலா சொன்னது உண்மையென்பதால் கோமதி நாயகத்தின் வேகமும் கொஞ்சம் தணிந்தது.. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஷோபாவுக்குத்தான் வயிற்றின் எரிச்சல் அதிகரித்தது...

'இப்படித் தாங்குதே இந்தக் கிழவி... ராதிகாவை அவளுடைய அம்மாகூட விட்டுக் கொடுத்திருவாங்க போல... இந்தக் கிழவி மருமகளை விட்டுக் கொடுக்க மாட்டேங்குதே...!'

அழையாத விருந்தாளியாக அங்கே அமர்ந்திருப்பதைப் போல உணர்ந்தான் சங்கர்...

அவன் வந்தது ராதிகாவைப் பார்ப்பதற்காக... அவளது புகுந்தவீட்டின் நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை அறிந்து கொள்வதற்காக...

அவன் நினைத்ததைவிட பாலமுரளியின் தகுதி வெகு பிரம்மாண்டமாக இருந்ததில் அவனுக்குள் பொறாமை எழுந்திருந்தது... அதுவும் அரண்மனை போன்ற பாலமுரளியின் வீட்டைப் பார்த்தபோது...

'நோ... சான்ஸ்... இது வீடில்லை... மாளிகை..' என்றே அவனுக்கு நினைக்கத் தோன்றியது...

அவனுக்கு பெண் கொடுக்கும் வசதி வாய்ப்பில் இருந்த கோமதிநாயகம் பாலமுரளியின் முன்னால் எழுந்து

நின்றார்... அவன் சந்தித்த அந்த வட்டாரத்துக்காரர்கள் அனைவரும் பாலமுரளியின் பெயரை மரியாதையுடன் உச்சரித்தார்கள்...

இவை அனைத்தும் பாலமுரளியின் உயரத்தை அவனுக்கு உணர்த்தின...

இவற்றை சங்கர் ரசிக்கவில்லை... அவனைவிட பலவானாக... பணக்காரனாக.. அந்த வட்டாரத்தில் பிரசித்தி பெற்றவனாக பாலமுரளி இருப்பதில் அவனுக்கு விருப்பமில்லை...

சங்கர் ராதிகாவைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்... அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல்... மிரண்டு விழித்தபடி... பாலமுரளியின் உத்தரவுக்கு கீழ்படிந்து அவன் பின்னாலேயே போய் விட்ட ராதிகா அந்த வீட்டில் சிறை பட்டிருப்பதாகத்தான் அவன் நினைத்தான்...

'மிரட்டி வைச்சிருக்கான்...' அவன் விழிகள் சிவந்தன...

நீ போகும் போது கொண்டுசென்றது... எதை...? என் மனதையா...?

"அந்த பாலமுரளிக்கு நீங்க இந்த அளவுக்கு இம்பார்டன்ஸ் கொடுத்திருக்க வேண்டாம்... ஐ டோன்ட் லைக் திஸ்...."

காரில் திரும்பிக் கொண்டிருந்தபோது சங்கர் கூறினான்... அவசரமாக டிரைவரைப் பார்த்துக் கொண்ட கோமதிநாயகம்... குரலை தழைத்து ரகசியக் குரலில் பேசினார்...

"சத்தமாப் பேசாதீங்க மாப்பிள்ளை... டிரைவர் இருக்கான்..."

என்னடா இது என்றாகிவிட்டது சங்கருக்கு.. மனதில் நினைத்ததை காருக்குள் பேசக்கூட அவனுக்கு சுதந்திரம் இல்லாமல் போய் விட்டதா...? அந்த பாலமுரளி என்ன எங்கும் ஏகாபித்து இருக்கிறானா...?

இப்படியென்று தெரிந்திருந்தால் இந்தப் பக்கமே சங்கர் பெண்ணெடுத்திருக்க மாட்டான்...

"எனக்கு இது பிடிக்கலை..." சங்கரின் முகம் பாறையானது...

கோமதிநாயகம் பதறிப்போனார்.. அவருடைய வருங்கால மாப்பிள்ளையின் கோபத்துக்கு ஆளாக நேர்ந்ததில் அவருக்கு மட்டும் விருப்பமா என்ன..?

ஆனால் அவர் நித்யாவுக்கு மட்டும் தகப்பனில்லையே... அவளுக்கு முன்னாலேயே மூன்று பிள்ளைகள் இருக்கிறார்களே... அவர்கள் அத்தனை பேரும் அந்த தென்காசி வட்டாரத்தில்தானே குடியிருக்கிறார்கள்...? பாலமுரளியைப் பகைத்துக் கொண்டு அவர்களால் அந்தப் பக்கத்தில் இருக்க முடியுமா..?

"என்ன மாப்பிள்ளை செய்கிறது.. அவர்தான் தாய்மாமன் முறை செய்தாகனும்... அந்த மரியாதையை பார்க்கனுமில்ல..."

"அதே மரியாதையை அவனும் உங்களுக்கு கொடுக்க வேண்டாமா...?"

"அவனா..? எவன்...?"

கோமதிநாயகத்திற்கு விளங்கவில்லை... சங்கர் பாலமுரளியைத்தான் அவன் என்று குறிப்பிடுகிறான் என்று அறியாதவராக அவர் வினவினார்...

இப்படிக் கேள்வி கேட்ட வருங்கால மாமனாரை சங்கர் விசித்திரமாகப் பார்த்து வைத்தான்...

"இப்ப நாம் யாரைப் பற்றிப் பேசிக்கிட்டு இருக்கோம்..?"

"பாலமுரளி மாப்பிள்ளையைப் பத்தி..." என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே... அவனைத்தான் சங்கர் 'அவன்' என்று குறிப்பிட்டிருக்கிறான் என்பது கோமதிநாயகத்தின் புத்தியில் உறைக்க... அவர் மனதிற்குள் அலறினார்...

'இந்த மாப்பிள்ளை எனக்கு பாலமுரளியை பகையாய் மாத்தி விடறதிலேயே குறியாய் இருக்கிறாரே...'

"உங்களுக்கு இந்த சுத்துப்பட்டு வட்டாரத்தைப் பத்தி எதுவும் தெரியாது மாப்பிள்ளை..." அவர் வினயத்துடன் சங்கருக்கு புரிய வைக்க முயன்றார்...

"எனக்குத் தெரிந்து என்ன ஆகப் போகுது..?" அவன் அலட்சியமாகப் பதில் சொன்னான்...

'உங்களுக்கொன்னும் ஆகாது... ஆகிறதெல்லாம் எனக்கும் என்னோட பிள்ளைகளுக்கும் தானே...' மனதுக்குள் புலம்பித்தள்ளினார் கோமதிநாயகம்...

"அப்படி ஒரேயடியாய் ஒதுக்கித் தள்ளிர முடியாத மாப்பிள்ளை... நீங்க இந்தப் பக்கம்தான் பேக்டரியை ஆரம்பிக்கனும்னு ஒரே பிடிவாதமா இருக்கீங்க..." மனத் தாங்கலுடன் சொன்னார் கோமதிநாயகம்...

மகள் சென்னையில் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள் என்று பெருமைப்பட முடியாமல்... சென்னையிலிருக்கும் கம்யூட்டர் கம்பெனி மருமகன்.. தென்காசியில் பேக்டரியை ஆரம்பிக்கப் போவதாகக் கூறினால் அவருக்குத்தான் எப்படி இருக்கும்...?

சங்கரின் மனநிலை குறித்தான ஐயப்பாடு மனதில் எழுந்தாலும்... அவனைப் பற்றி அவர் விசாரித்து அறிந்த விவரங்கள் அந்த ஐயப்பாட்டை முற்றிலுமாக அழித்து விட்டன....

'என்னதான் இருந்தாலும்... சென்னைப் பட்டினத்திலே... காரு... பங்களா.. கம்யூட்டர் கம்பெனின்னு அமோகமா இருக்கிற மாப்பிள்ளை... அது அத்தனையையும் விட்டுப்புட்டு... தென்காசிப் பக்கம் வரேன்னு ஏன் சொல்றாரு..? இவரு வேற வெளிநாட்டுப் படிப்பைப் படிச்சவரு... சென்னையை விட.. தென்காசி பெரிய பட்டினமா...?'

அடி மனதில் சந்தேகம் எழுந்தாலும்.. அவர் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை... அதுதான் கோமதி நாயகம்...! தேடிப் பிடித்தாலும் கிடைக்காத மாப்பிள்ளை... தானாக மகளுக்கு அமைந்திருக்கும் போது... இப்படிப் பட்ட ஆராய்ச்சிகளை கேள்விகளாக்கி... அந்த மாப்பிள்ளையை கை நழுவ விடுவதில் அவருக்கு துளிக்கூட விருப்பமில்லை...

அதனால் சங்கர் எதைச் சொன்னாலும் 'ஆமாம் சாமி' போடுவதை அவர் கடமையாகக் கொண்டிருந்தார்.. அந்த ஆமாம் சாமியை பாலமுரளியின் விவகாரத்திலும் சங்கர் எதிர்பார்த்து வைக்க... அவரால் அதைச் செய்ய இயலாமல் போய் விட்டது...

"பாலமுரளி மாப்பிள்ளைக்கு... இந்த தென்காசி வட்டாரத்திலே செல்வாக்கும்... சொல்வாக்கும் அதிகம்

தம்பி... அவரை எதுத்து நின்னா நீங்க இந்தப்பக்கம் தொழில் பண்ணிர முடியாது..."

"என்ன செய்து விடுவான்..?" சங்கரின் வார்த்தைகளில் மிதமிஞ்சிய சினம் தெரிந்தது...

அதில் கோமதிநாயகம் கவலைக்கு ஆளானார்...

எதற்காக சங்கர்... பாலமுரளிக்கு எதிராக கத்தியைத் தூக்கித்தான் தீருவேனென்ற பிடிவாதத்தைப் பிடிக்கிறான் என்று விளங்காமல் மண்டை காய்ந்து போனார்...

'ம்ஹீம்... பெத்ததும்தான் பெத்தேன்.. நாலையும் ஆம்பளைப் புள்ளையாய் பெத்துத் தொலைச்சிருக்கக் கூடாதா...?'

இதுவரை வராத விசனம் அவருக்கு இப்போது வந்து தொலைத்தது...

"எதுவும் செய்வார் மாப்பிள்ளை... எதுக்கும் நீங்க அவரை அவன்... இவன்னு சொல்லி வைக்காம.. மரியாதையாய் பேசினா நல்லது..."

"அதெல்லாம் என்னால் முடியாது மாமா..."

"இப்படிச் சொன்னா எப்படி மாப்பிள்ளை...?"

"அது இப்படித்தான்..."

சங்கர் தீர்மானமாகச் சொல்லிவிட்டான்.. எதிர்காலத்தில் பாலமுரளியுடன் உறவு நிலைத்திருக்குமா-

நிலைத்திருக்காதா... என்ற கவலையில் ஆழ்ந்த கோமதி நாயகம்... இப்போதைக்கு விட்டுப் பிடிப்போமென்ற முடிவுக்கு வந்தார்...

'நித்யாவின் கழுத்தில் தாலி ஏறனுமே...'

பெண்ணைப் பெற்று விட்டால் பல சந்தர்ப்பங்களில் வாயிருந்தும்... ஊமையாகத்தானே ஆக வேண்டியிருக்கிறது...

மாடியை விட்டு மதிய உணவுக்காக கீழே இறங்கிவந்த முரளியின் முகத்தில் கோபக் கனல் தெரிந்தது... ஹாலின் நடுவிலிருந்த டீப்பாயின் மீது.. அகன்ற வெள்ளித்தட்டில்... பூ... பழம்... வெற்றிலை பாக்கு.. திருமணப் பத்திரிக்கை.. இவற்றுடன்.. தங்கத்தால் செய்யப்பட்ட ரூபாய் நோட்டு ஒன்றும் இருந்தது...

இது உச்சபட்ச மரியாதை...

பணம்... பாக்கு வெத்தலையோடு பத்திரிக்கை வைப்பது ஒருவரின் செல்வாக்கை மதிக்கும் மரபு... அந்தப் பணத்தை தங்கத்தால் செய்து கொடுப்பது அதைவிட உயரிய மரியாதைக்குரியவர் அவர் என்பதை உணர்த்துவதாகும்...

அந்த மரியாதையை பாலமுரளிக்கு... கோமதி நாயகம் கொடுத்திருந்தார்.. இருந்தும்... அந்த வெள்ளித் தட்டைக் கண்டதும் பாலமுரளி கண்சிவந்தான்...

"இதை எதுக்காகம்மா வாங்கினீங்க..?" என்று இறைந்தான்...

"வாங்கித்தானேடா ஆகனும்... வீடு தேடி வந்து தாய்மாமன் பத்திரிக்கையை முறையோட அவரு வைக்கிறப்போ.. நாம வாங்க மாட்டேன்னு சொல்ல முடியுமா..?"

"எல்லாத்தையும் முறையோடதான் அவர் செய்தாரா...?"

"அவர் நிலைமை எப்படியோ... ஆனா.. இன்னைக்கு பத்திரிக்கை வைக்கிறப்போ... மாப்பிள்ளை வீட்டு சார்பா மாப்பிள்ளையையே நேரில் கூப்பிட்டுக்கிட்டு வந்தாரே நீ அதை நினைச்சுப் பாரு..."

எதை மறக்க விரும்பினானோ... அதையே நினைத்துப் பார்க்கச் சொல்லிச் சொன்னாள் மேகலா...

மகனின் மனதிலிருப்பது அவளுக்கு எப்படித் தெரியும்...? அதைத் தெரிந்து வைத்திருந்த ஷோபாவின் முகத்தில் ஏளனப் புன்னகை உதித்தது...

"அவனை அழைச்சுக்கிட்டு வரச் சொல்லி நாம சொன்னோமா...?" பாலமுரளியின் முகத்தில் கோபம் தாண்டவமாடியது...

மகன் எதற்காக இந்த அளவுக்கு கோபப்படுகிறானென்று மேகலாவுக்குப் புரியவில்லை...

"உனக்கு இவ்வளவு கோபம் ஆகாது முரளி... பெரியமனுசன்.. நல்ல சம்பந்தம் கை நழுவிப் போயிரக் கூடாதுன்னு அவசரத்திலே நம்மகிட்ட ஒருவார்த்தை

சொல்லாம கல்யாணத்தை முடிவு பண்ணியிரக்கலாம்.. அதுக்காக அவரை ஒதுக்கி வைச்சிடறதா..?"

"ஒதுக்கி வைச்சாத்தான் என்ன...?"

"உன் கல்யாணத்தில அவருகிட்ட ஒத்த வார்த்தை நாம கேட்டோமா..?"

"அதுக்கும்... இதுக்கும்.. அவரு முடிச்சுப் போட்டுப் பார்க்கிறாரா...?"

"இந்தப் பேச்சுக்கு முடிவிருக்கா...?"

"ஆனா... இந்தக் கல்யாணத்தைப் பத்தி எனக்கொரு முடிவிருக்கு..."

"என்னடா...?"

"இந்த வீட்டிலிருந்து யாரும் இந்தக் கல்யாணத்துக்கு போகக்கூடாது..."

பாலமுரளி இதைத்தான் சொல்வானென்று ஷோபாவுக்கு தெரியும்... ராதிகாவுக்கும் தெரியும்... அதைத் தெரிந்து கொள்ளாத மேகலாவின் நெற்றி சுருங்கியது...

"அவர் யாருங்கிறது மறந்து போச்சா முரளி...?"

"அம்மா..."

"உன் அப்பாவோட ஒன்னுவிட்ட தங்கச்சியோட புருசன்... அவங்க வீட்டுப் பிள்ளைகளுக்கு தாய்மாமன் முறையைச் செய்ய கடமைப்பட்டவரு உன் அப்பா... அவரோட கடமையில உனக்குப் பொறுப்பில்லையா...?"

"அம்மா..."

"தங்கத்தையும்.. கோமதிநாயகம் அண்ணனையும் தள்ளி வைச்சா உன் அப்பாவோட ஆத்மா நம்மை மன்னிக்குமா...?"

மேகலாவின் கேள்விகள் சுட்டதில் உன்மத்தம் பிடித்தவனாக... பாலமுரளி சாப்பாட்டை மறந்து வெளியேறப் போனான்.. ராதிகா அவசரமாக அவனைப் பின்தொடர்ந்து ஓடினாள்...

"சாப்பிட வாங்க..."

"எனக்கு சாப்பாடு வேணாம்..."

"உங்க கோபத்தை என்மேல காட்டுங்க.. தாங்கிக்கறேன்... சாப்பாட்டு மேலக் காட்டாதீங்க.. அதைத் தாங்கிக்க மாட்டேன்.."

ராதிகா அவன் முன்னால் வழிமறிப்பதைப் போல நின்றுவிட... பாலமுரளியின் வேகம் குறைந்தது... மனைவியின் கண்ணீர் முகம் அவனை அசைத்தது...

"நீங்க சாப்பிடலைன்னா.. நானும் சாப்பிட மாட்டேன்... நினைவிருக்கில்ல..?"

"ஏண்டி.. துயரம் பண்ற...?"

"ப்ளீஸ்... எனக்காக சாப்பிட வாங்க..."

"என் மனசு சரியில்லை ராதிகா.."

"நீங்க இந்த வீட்டுக்கு தூண்... அஸ்திவாரம்... உங்க மனசு சரியில்லாமப் போகக்கூடாது... அத்தை அவங்க

பக்கத்தைச் சொன்னாங்க... நீங்க உங்க பக்கத்தைச் சொல்லுங்க..."

"எப்படி?"

"அப்ப அவங்க போக்கில விட்டுருங்க..."

"ராதிகா..."

"இந்தப் பிரச்னைக்கு ஆணிவேரே நான்தான்... இது அத்தைக்குத் தெரியாது... அவங்க மாமாமேல இருக்கிற அன்பில.... அவரோட தங்கை வீட்டு விசேசத்துக்கு நீங்க போக மாட்டேன்னு சொல்றிங்கன்னு உங்களைக் குறைவாய் நினைப்பாங்க... அதில எனக்குச் சம்மதமில்லை..."

"அதுக்காக...?"

"நான் அத்தையிடம் பேசறேன்.. நடந்ததைச் சொல்றேன்.. அதுக்கப்புறம் உங்களை அவங்க வற்புறுத்து வாங்களா...?"

"அடிச்சுப் பல்லைக் கழட்டி விடுவேன்.. புருசன் பெண்டாட்டி பிரச்னையை அவங்ககிட்டச் சொல்லப் போறியா..? அறிவில்ல உனக்கு...?"

"வேற என்னதான் செய்கிறது..?"

"அதை நான் பார்த்துக்கிறேன்.. நீ உளராம உள்ளே வா..."

மேகலா தலையைப் பிடித்தபடி ஹாலிலேயே உட்கார்ந்திருந்தாள்... ஷோபா அதைக் குதுகலமாக

வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க காவேரியும்
மீனாட்சியும் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்
அந்தக் காட்சியைக் கண்ட பாலமுரளிக்கு குற்ற உணர்
ஏற்பட்டது... அதுவரை.. அவன் தாயின் மனம் நோக
போசியதில்லை... கண்டிப்பைக் காட்டியிருக்கிறான்
கடமைகளை புறக்கணித்ததில்லை...

"அம்மா..." மேகலாவின் அருகே உட்கார்ந்தான்...

நிமிர்ந்து பார்த்த மேகலாவின் கண்க
கலங்கியிருந்தன...

"விட்டுத்தள்ளுங்க.. வெளியே நாலுபேரு... உ
மாமன் வீட்டுக் கல்யாணத்தைப் பத்தி உனக்கு எதுவ
தெரியாதான்னு கேட்டு வைச்சிட்டாங்க... அந்த
கோபத்தில பேசிட்டேன்..."

"இதைப்பத்தி உனக்கு முன்னாலேயே தெரியுமா
முரளி...?"

"தெரியும்..."

"கோமதியண்ணனும்.. தங்கமும் செய்ததி
எனக்கு மட்டும் சம்மதமா..? என்னதான் அவங்
பக்க நியாயத்தைச் சொன்னாலும்... அவங்க செய்த
தப்புத்தான்... அவங்களைத் தள்ளி வைக்கனும்
எனக்கும் ஆத்திரமாத்தான் இருக்கு... ஆனா... உ
அப்பாவோட நினைப்பு வந்து அதை தடுக்குதுடா முரளி
அவர் செய்ய வேண்டிய தாய்மாமன் சீரை.. நாம செய்
மறுக்கலாமா முரளி...?"

மேகலா அழுதுவிட்டாள்... தாயின் கண்ணீரைத்
துடைத்து விட்ட பாலமுரளியின் மனமும் இளகிவிட்டது...
அவன் சமாதான வார்த்தைகளைச் சொல்லி... தாயிடம்
சமாதானம் ஆனான்.. அவர்கள் பேசியபடியே சாப்பிடப்
போய்விட்டார்கள்... ஷோபா மட்டும் ஹாலில் தனித்து
நின்றாள்...

ஒரு நொடியில் வரவிருந்த பூகம்பம் தவிர்க்கப்பட்டு
விட்டதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

'இந்த ராதிகா.. சூறாவளிக் காற்றைக்கூட தென்றல்
காற்றாய் மாற்றி விட்டாளே...'

சில்லென்ற மழைத்துளியாய்..
சொல்லி விட்டாய் காதல் மொழியை...

ஷோபா பெட்டிகளைக் கொண்டு வந்து
ஹாலில் வைத்தாள்... சும்மா நின்று கொண்டிருந்தால்
அவளது பெட்டிகளை சுமக்க வேண்டிவந்து விடுமோ
என்ற நினைவில் இல்லாத துசியைத் தட்டிவிட்டுக்
கொண்டிருந்த மீனாட்சி மகிழ்ந்தே போனாள்...

"ஏம்மா.. நிசமாவே இந்தப் புள்ள ஓடிப் போகப்
போகுதா..?" என்று ராதிகாவிடம் கேட்டாள்...

"மீனாட்சி... மீனாட்சி... பார்த்துப் பேசக் கூடாதா..?" கற்று முற்றும் பார்த்துக் கொண்டாள் ராதிகா...

"ஏம்மா- நிசமாவே இந்தப்புள்ள ஓடிப் போகப் போகுதா-?" என்று மீண்டும் ராதிகாவிடம் கேட்டாள்... மீனாட்சி

"அக்கம்... பக்கம் பார்த்துப் பேசச் சொன்னேன்- அவளே வயசுப்பொண்ணு.." ராதிகா புத்திமதி சொல்ல ஆரம்பிக்க...

"அந்த நினப்பு எனக்கிருந்து என்ன பிரயோசனம்..? அந்தப் புள்ளக்கில்ல இருக்கனும்..?" என்று நியாயம் கேட்டாள் மீனாட்சி...

"ஸ்ஸ்.. மீனாட்சி... அவளும்.. நீயும் ஒன்றா..?"

அப்படியாவது மீனாட்சி அடங்க மாட்டாளா என்ற அபிலாஷை ராதிகாவுக்கு... மீனாட்சி அசையவில்லை...

"அதானே... நாயும்.. பேயும் ஒன்னாகிடுமா..?" என்ற பொன்மொழியை உதிர்த்து வைத்தாள்...

"இது உனக்கே நல்லாயிருக்கா மீனாட்சி..?"

"எதைச் சொல்கிறிங்கம்மா... இந்தச் சேலையையா..? காலம்பர கட்டறப்பவே நினைச்சேன்... கருமம் புடிச்ச கலரு நல்லாயில்லையேன்னு..."

"சோதிக்காதே மீனாட்சி.. அவ ஓடிப்போகப் போகிறாளான்னு கேட்கலாமா..?"

"யதார்த்தமாத்தானே கேட்டேன்...?"

"அவளைப் போயி நாயின்னு சொல்லலாமா...?"

"ஏம்மா... என்னைப் பேயின்னு சொன்னேன்.. அதை ஏன்னு ஒரு வார்த்தை நீங்க கேட்கலை... அந்தப் புள்ளைக்கு மட்டும் தாங்கிக்கிட்டு வர்றீங்க... இது நாயமில்லைம்மா..."

இந்தப் பேச்சுக்கு முடிவே இருக்காது என்ற ஞானோதயம் வரப்பெற்றவளாக ராதிகாவே பேச்சை நிறுத்திக் கொண்டாள்.. இரண்டு.. மூன்று தடவை அவளிடம் வாய்கொடுத்துப் பார்த்த மீனாட்சி.. அவள் வாயைத் திறக்கும் உத்தேசத்தில் இல்லையென்பதை கண்டு கொண்டவளாக காவேரியைத் தேடிப் போனாள்..

"என்னம்மா.. கிளம்பிட்டியா..?" மூக்குக் கண்ணாடியை சரிசெய்தபடி மேகலா கேட்டாள்...

ஒரு பேச்சுக்குக்கூட.. அதற்குள்ளேயா கிளம்பி விட்டாய்... இருந்து விட்டுப் போகலாமே என்ற உபசார வார்த்தைகளை அவள் சொல்லவில்லை... அதுதான் சாக்கென்று ஷோபா இருந்து விட்டுப் போகிறேன் என்று சொல்லி விட்டால் என்னசெய்வது என்ற பயம் மேகலாவுக்கு...

"ம்ம்ம்..." முணுமுணுப்பு மட்டுமே ஷோபாவிடமிருந்து வந்தது...

பாலமுரளி அவனது வழக்கப்படி செல்போனைக் காதுக்கு கொடுத்தபடி படிகளில் இறங்கிவந்தான்...

"ராதிகா அவனைப் பிடிச்சு வச்சுக்கம்மா... கர்ணனுக்கு கவசக்குண்டலம் போல... இவனுக்கு

செல்போன் வந்து மாட்டியிருக்கு... அவன் பாட்டுக்கு பேசிக்கிட்டே கிளம்பிப் போயிடப்போறான்.. ஷோபா வேற ஊருக்கு கிளம்பிப் போகத் தயாராகி நிற்கிறா..."

மேகலாவின் கவலை.. பாலமுரளி சாப்பிடாமல் போய்விடப் போகிறானே என்பதற்காகவா.. இல்லை.. ஷோபா ஊருக்குக் கிளம்பிப் போய்விடாமல் தேங்கிவிடப் போகிறாளே என்பதற்காகவா... என்ற ஆராய்ச்சியில் ஷோபா இறங்கினாள்...

"நான் சொல்றேன்.. அந்தப் புள்ள இன்னைக்கு கட்டாயம் போயிருமுன்னு..", மீனாட்சி உறுதியாகச் சொன்னாள்...

"எனக்கென்னவோ... அது போகாதுன்னு தோனுது.. சும்மா 'ஷோ' காட்டுதுன்னு தோணுது..." வாணலியில் காய்களை வதக்கியபடி காவேரி மறுத்துப் பேசினாள்...

"என்னா பெட்டு...?" மீனாட்சி கட்டைவிரலை உயர்த்த...

"இதுக்கெல்லாம் நானு ஆளில்லைடி ஆத்தா.. என்னவோ.. தோணுச்சு... சொன்னேன்..." என்று வெற்றிகரமாக பின்வாங்கினாள் காவேரி...

"சொன்னதும்தான் சொன்னவ... நல்லதா நாலு வார்த்தை சொல்ல வேணாமா...? இந்தப் புள்ளையை வீடு தங்க வைக்கனும்னு நினைக்கறியே... நீயெல்லாம் இந்த வீட்டு உப்பைத்தின்னு என்ன பிரயோசனம்..?"

மீனாட்சி வெடியைப் பற்றவைக்க...

"அடிப்பாவி..." என்று அலறினாள் காவேரி...

"ஏண்டி.. நானாச்சு... இந்த அடுப்பாங்கரையாச்சுன்னு இருக்கிறவளப் பிடிச்சு வில்லங்கத்தில இழுத்து விடப் பாக்கறியே... இந்தப் புள்ளய இருக்கச் சொல்ல எனகென்ன கிறுக்கா பிடிச்சிருக்கு..?"

அவள் அலைகடலாய் பொங்கிவிட... அவசரமாக வெள்ளைக் கொடியை பறக்கவிட்டாள் மீனாட்சி...

"அதானே பார்த்தேன்... நீ அப்படிப் பேசற ஆளில்லையே..."

"மொத்தத்தில் உன்கிட்டயே நான் பேசியிருக்கக் கூடாதுடி..." காவேரியும் அமைதியாகி விட...

'என்னடா இது... நாம எங்கே போயி வாயைத் திறந்தாலும்... அங்கே இருக்கிறவங்க பேசா மடந்தையாய் ஆகிடறாங்க...?' என்று ஒற்றை விரலை நெற்றியில் தட்டியபடியே யோசனையில் ஆழ்ந்தாள் மீனாட்சி...

மேகலாவின் கணிப்புப்படி... ஹாலில் பெட்டிகளோடு நின்று கொண்டிருந்த ஷோபாவைக் கண்டு கொள்ளாமல் வெளியேறப் போனான் பாலமுரளி...

ராதிகாவிற்கு அவன் செய்கையைக் கண்டு சிரிப்பு வந்து விட்டது... கண்களால் மாமியாரை அமைதிபடுத்திய படியே அவள் கணவனைப் பின் தொடர்ந்து சென்றாள்... மனைவியைக் கண்டதும் செல்போனை காதை விட்டு எடுத்த பாலமுரளி புருவங்களை உயர்த்தினான்...

'கல்லுக்குண்டு போல வழியில இத்தனை பெட்டிகளோடு நான் நிற்கிறேன்... என்னை இவன்

கண்ணுக்குத் தெரியல... அதுவே இந்த ராதிகா வோ அசைஞ்சாக்கூடப் போதும்.. அது இவன் கண்ணுக்குத் தெரிந்து விடுது... அப்படி என்னதான் மந்திரம் போட்டு வைத்திருக்காளோ...'

ஷோபா மனதுக்குள் காய்ந்தாள்... அதை உணராத ராதிகா கணவனை செல்லக் கோபத்துடன் முறைத்தாள். அதைக் கண்டவன் கிறங்கிப் போனவனாக மொத்தத்தில் செல்போனை அணைத்தே விட்டான்...

"என்னடி... ?"

அவன் கேட்டவிதத்தில் ஷோபா பல்லைக்கடித்தாள்.

'இதுக பண்ற ரொமான்ஸ் தாங்கலை... அப்பப்பா. அதான் தாலிகட்டி.. குடும்பமும் நடத்த ஆரம்பிச்சிட்டாங்கள்ல... அப்புறமும் எப்படி இப்படிக் கொஞ்சிக்கிறாங்க...'

ராதிகாவின் அதிர்ஷ்டத்தை நினைத்து அவள் மனதில் பொறாமை பொங்கி எழுந்தது...

'ம்ப்ச்... நான் பொறுமி என்ன ஆகப் போகுது. இவளை அழிக்கனும்னு வந்தேன்... கடைசியில அசைக்கக் கூட முடியாம தோற்றுப் போய் திரும்பிப் போறேன்.. இந்த ஜென்மம் பூராவும் இங்கேயே டேரா போட்டாலும் பாலமுரளி இவளை வெறுக்க மாட்டான்னு தெரிஞ்சு போன பின்னாலே.. இங்கே இருந்து என்ன ஆகப் போகுது...?'

அணுகுண்டாய் வெடிக்க வந்தவள்.. புஸ்வானமாகி திரும்பிப் போக நேர்வதில் ஷோபாவுக்குள் துயரம்

எழுந்தது... மீண்டும் மீண்டும் ராதிகாவிடம் தோற்க நேர்கிறதே என்று அவளுக்கும் துக்கம்தான்.. என்னதான் முயன்றாலும் ராதிகாவைத் தோற்கடிக்கவே முடியாது என்று ஆகிவிட்டபின்பு அவளுடன் மோதுவதால் ஷோபவுக்கு என்ன பலன் ஏற்பட்டு விடப் போகிறது...?

சங்கரும் இல்லையென்றாகி விட்ட பின்பு.. தன் வாழ்வை செப்பனிட்டுக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் ஷோபா இருந்தாள்...

ஒரு பெண்ணுக்கு அவள் விரும்பும் ஆண்மகனின் காதல் கிடைப்பதென்பது ஒருவரம்... அவன் மனதில் அவளைத் தவிர வேறு ஒரு பெண்ணிற்கு இடமில்லை என்ற கொடுப்பினை கிடைப்பது.. அதைவிட பெரியவரம்..

இவையிரண்டும் ராதிகாவிற்கு வாய்த்திருந்தன.. அசைக்க முடியாத சக்தியாக அவள் நிற்கும் போது... அவளிடம் மோதிப் பார்த்து காலத்தை விரயம் பண்ண ஷோபா தயாராக இல்லை...

பாலமுரளி ராதிகாவை வெறுப்பானென்றாலாவது ஷோபா தன் எதிர்காலத்தை பணயம் வைக்கலாம்... அவன் அதையும் செய்து தொலைக்க மாட்டேன் என்கிறான்.. ஷோபா எதைச் சொன்னாலும் உணக்கையாகக் கேட்டுவிட்டு பல்லைப் பல்லைக் கடிக்கிறானே தவிர ராதிகாவைத் தள்ளி வைக்க மாட்டேன் என்கிறான்...

இப்படிப்பட்ட காதல் கணவனைக் கொண்ட ராதிகாவுடன் மோதிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு..

சென்னைக்குப் போய் பச்சைக்கொடியை காட்டி வைத்தால்.. மறுகணமே பரந்தாமனும்.... சுசிலாவும் கோடிஸ்வர மாப்பிள்ளைகளை கொண்டு வந்து நிறுத்தி விடுவார்கள்... அந்தக் கால சுயம்பரம் போல... பிடித்த மணமகனைத் தேர்ந்தெடுத்து அவன் கழுத்தில் மாலையைப் போடுவதை விட்டுவிட்டு இந்தப் பட்டிக்காட்டு வீட்டில்... வேலைக்காரியிடமெல்லாம் மல்லுக்கட்டிக் கொண்டு நிற்க வேண்டுமா என்ன..?

அவளுக்கென்ன தலைவிதியா..? அவள் தகுதி என்ன.. தராதரம் என்ன... அனைத்தையும் மறந்து விட்டு.. ராதிகாவை அழிப்பதற்காக அவமரியாதைகளைத் தாங்கிக் கொள்ள வேண்டுமா...?

ஷோபாவின் மனதில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் அலை மோதிக் கொண்டிருந்தன.. ராதிகாவும்.. பாலமுரளியும் கண்களாலேயே பேசிக் கொண்டதில் அவள் மனதில் கல்யாண ஆசை எழுந்து விட்டிருந்தது.. அவர்கள் இருவரும் பார்வையிலேயே ஒருவரையொருவர் சாப்பிட்டுக் கொண்டதில் அவள் கிளர்ந்திருந்தாள்.. சங்கரும் திருமண அழைப்பிதழ்களை விநியோகிக்க ஆரம்பித்து விட்டதில் அவளது ரோசம் விழித்துக் கொண்டது... அவனது திருமணத்திற்கு முன்னால் அவளது திருமணம் நடந்தாக வேண்டும் என்ற வன்மம் தலை தூக்கியதில் அவள் சென்னைக்கு கிளம்பிவிட்டாள்..

ஷோபா தேனூத்துக்கு கிளம்பி வந்ததில் பரந்தாமனுக்கும்... சுசிலாவுக்கும்.. கொஞ்சம்கூட உடன்பாடில்லை...

"இல்லை டாடி... அவளை ஏதாவது ஒரு விதத்தில் அபெக்ட் பண்ணனும்.. அதுக்கப்புறம்தான் என்னோட மேரேஜ் பத்தியே நினைப்பேன்..."

ஷோபா உறுதியாக சொல்லி விட்டதில் அவர்களால் ஏதும் செய்ய முடியாமல் போய் விட்டிருந்தது...

தினமும் சுசிலா போனில் பேசிக் கொண்டிருந்தாள்..

"துரும்பைக் கூடக் கிள்ளிப் போட முடியலை மம்மி.. நல்லாத்தான் ஆரம்பித்தது... இந்த பாலமுரளியும் என் முன்னாலேயே ராதிகாவை இர்ரிட்டேட் பண்ணினான்.. அவ முன்னாலேயே என்கூட ஊர் சுற்றப் போறேன்னு சொன்னான்.. முதநாள் நைட் சொல்றான்.. மறுநாள் மார்னிங்கில் அப்படியா சொன்னேன்னு என்னிடமே கேட்கிறான்..."

"இதைப் பாருடா... அப்புறம்..?"

சுசிலா சுவராஸ்யமாக கேட்ட விதத்தில் ஷோபாவுக்கு கோபமே வந்து விட்டது...

"என்ன மம்மி... நான் என்ன கதையா சொல்றேன்..? இவ்வளவு இன்ட்ரெஸ்டா கேட்கறிங்க..."

"இல்லைடா செல்லம்... அந்த ராதிகாவைப் பார்த்தியா.. எவ்வளவு சமத்தா குடும்பம் நடத்தறான்னு..."

சுசிலா எடுத்துக் கொடுத்தாள்.. ஷோபாவுக்கும் அதே நினைவுதான்..

"அதனாலேதான் சொல்றேன்... நீ அவளை அழிக்கறேன்னு டயத்தை வேஸ்ட் பண்ண வேணாம்..

கிளம்பிவா.. அந்த சங்கரை விட பெட்டரா நாங்க மாப்பிள்ளை பார்க்கிறோம்.. அவனுக்கு முன்னாலே உனக்குக் கல்யாணம் நடந்தாத்தானே சொஸைட்டியில நமக்கும் பெருமையாய் இருக்கும்...?"

"அப்படியா சொல்கிறிங்க...?"

"ஆமாண்டா செல்லம்... அந்த ராதிகா எங்கே ஓடிவிடப் போகிறா..? அவ நாத்தனார்... என் அக்காவுக்கு மருமகள்.. அவளை எப்படிக் கவனிச்சுக்கனுமோ அப்படி நான் கவனிச்சுக்கறேன்... நீ கிளம்பி வாடாம்மா..."

"இருந்தாலும் மம்மி... இந்த ராதிகா..."

"நான் தான் சொல்கிறேனில்ல... அவளை நான் பார்த்துக்கறேன்.. அவளெல்லாம் ஒரு ஆளா..? சரஸ்வதியைக் கிளப்பி விட்டால் அவதம்பி பெண்டாட்டியை உண்டு இல்லைன்னு ஆக்கி வைச்சுருவா... எங்கே தட்டினா... எங்கே வலிக்கும்ன்ன எனக்குத் தெரியும் ஷோபா... இப்ப உடனடியா நீ செய்ய வேண்டியது கல்யாணம்... பழி வாங்கற நடவடிக்கையில்லை..."

சுசிலாவின் பேச்சில் ஷோபாவின் மனதிலிருந்த கொஞ்ச நஞ்ச தயக்கமும் ஓடிவிட.. அவள் கிளம்பி விட்டாள்...

இது தெரியாமல் மீனாட்சி... அவள் கிளம்புவாளா.. மாட்டாளா என்று பட்டி மன்றம் நடத்தக் கிளம்பி விட்டாள்...

பாலமுரளியைத் தடுத்து நிறுத்திய ராதிகா.. தளர்வாகப் பின்னலிட்டு.. தலையில் பூச்சரத்தை குடியிருந்தாள்.. காலை பூஜையில் மாமியாருடன் கலந்து

கொண்டதன் அடையாளமாக நெற்றியில் குங்குமமும் விபூதியும் கலந்த கீற்று தெரிந்தது.. உச்சியில் அவள் வைத்திருந்த குங்குமத்தில் மங்கலகரமாக தெரிந்தாள்...

மனைவியின் குடும்பப் பாங்கான வனப்பில் எப்போதும் போலவே அப்போதும் மயங்கிப் போனான் பாலமுரளி...

"ஏங்க.. காதில செல்போனை வைச்சிட்டா.. சுத்திலும் நடக்கிறது... சுத்தமா மறந்து போகுமா...?"

"பேச்சுவாக்கில் வெளியே வந்திட்டேன்... இதுக்கொரு பாட்டா...?"

"அடேங்கப்பா... இன்னைக்குத்தான் புதுசா இவர் வெளியே வர்றாரு... இவர் மேல தேவையில்லாம குத்தம் சொல்லிட்டோம்..."

"இப்ப உனக்கு என்ன வேணும்...?"

"சாப்பிடனும்..."

"செஞ்சுட்டாப் போச்சு..."

மறந்தும்.. ஷோபா ஊருக்குப் போக வேண்டும் என்று ராதிகா சொல்லவில்லை... அனத மாமியார் சொல்லிக் கொள்ளட்டும் என்ற நினைவுடன் பாலமுரளிக்கு காலைப் பலகாரத்தை எடுத்து வைக்க டைனிங் டேபிளுக்குச் சென்றாள்...

வீட்டுக்குள் வந்த முரளி.. அப்போதுதான் ஷோபாவைப் பார்த்தான்... அவளருகிலிருந்த பெட்டிகளைப் பார்த்ததும் புருவங்களை உயர்த்தினான்...

"என்னாச்சு ஷோபா.. ?"

"ஊருக்குக் கிளம்பறேன் அத்தான்..."

"உன் அப்பாவும்.. அம்மாவும் பாரின் போயிருக்கிறதா சொன்னியே..."

"டிரிப் கேன்சலாகிருச்சாம்... திரும்பி வந்துட்டாங்க.."

"அப்படியா.. ? நீ இன்னும் கொஞ்சம் நாள் இங்கே இருப்பேன்னு நினைச்சேன்..."

'எதுக்கு.. ? நீயும் உன் பெண்டாட்டியும் கூடிக் குழாவிக்கிறதைப் பார்த்து வயிறு எரிகிறதுக்கா... ?'

"மம்மி... டாடியை விட்டுட்டு நான் தனியா இருந்ததில்லை அத்தான்.. இந்த தடவைதான் இப்படியாகி விட்டது..."

ஷோபா இப்படிப் பேசிக் கொண்டிருக்க.. டைனிங் டேபிளில் மீனாட்சி ராதிகாவின் காதைக் கடித்தாள்...

"அப்படியே பாப்பாவைப் போலவே பேசி வைக்குதே இந்தப் பீப்பா.. இந்த நாடகசாலையை எங்கேம்மா தேடிப் பிடிச்சீங்க.. ?"

ஊர்வாயைக் கூட மூடி விடலாம்... இந்த மீனாட்சியின் வாயை மூடவே முடியாது என்ற நினைவுடன் உதட்டில் ஒற்றைவிரலை வைத்து அவளை எச்சரித்தாள் ராதிகா...

117

உன்மீது கொண்ட ஆசை...
உள்ளம் மட்டும் அறியும் ஓசை...

ஷோபாவை சென்னைக்கு அனுப்பி வைத்து விட்டான் பாலமுரளி.. அவள் வரும் தகவலை பரந்தாமனுக்கும் போன் மூலம் தெரிவித்து விட்டான்.. அவர் நன்றி சொல்லாமல்... தேனூத்திலிருந்து சென்னைக்கு விமானப் போக்குவரத்து இல்லையா என்று விசாரித்தார்.. அப்படியாகப்பட்ட கிராமத்திற்கு ஷோபா வந்திருக்க வேண்டாம் என்ற அவரது கருத்தையும் தெரிவித்தார்.. அதனால்தான் அவளை உடனடியாக அனுப்பி வைத்து விட்டோம் என்று சொல்லலாமா என்று பாலமுரளி ஆசை கொண்டான்... பாலசரஸ்வதியின் முகத்திற்காக விட்டு விட்டான்...

புயலடித்து ஒய்ந்ததைப் போல வீடு இருப்பதாக மீனாட்சி அபிப்ராயம் தெரிவித்தாள்.. மற்றவர்கள் மனதிலும் அதே நினைவுதான் என்றாலும் அதை வாய் விட்டுச் சொன்னால்.. அவள் உடனே வார்த்தைகளை வளர்த்துக் கொண்டிருப்பாள் என்பதினால் மௌனம் சாதித்து தப்பித்தார்கள்.. மாலை நேரங்களில் பாலமுரளியுடன் சென்று விடுவதை ராதிகா

வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.. அவனும் அதை மனதிற்குள் மிகவும் விரும்பி ஏற்றுக் கொண்டான்.. அவளைத் தொட்டு ஆள முடியாத தாபத்தை அவளைக் கிட்டேவைத்து ரசிப்பதன் மூலம் ஈடுகட்டி விட அவன் மனம் துடித்தது...

தினந்தோறும் மில்லுக்குச் சென்றாலும்.. மாலை வேலைகளில் மற்ற தொழில்களில் ஏதாவது ஒன்றைத்தான் அவன் பார்வையிடப் போவான்... அப்படிப் போகும் தருணங்களில்தான் ராதிகா அவனுடன் ஒட்டிக் கொண்டாள்...

நாள் முழுவதும் வேலை செய்த களைப்பு மறைந்து.. ஓர்விதமான புத்துணர்வு அவளது அருகாமையில் கிடைப்பதை உணர்ந்தான் பாலமுரளி... பூவாசத்துடன்.. சேலைமுந்தானை காற்றில் பறந்து வந்து அவன் முகத்தின் மீது படியும் போது அவன் உணரும் நறுமணத்தில் அவனது மாலைப் பொழுதுகள் மனம் மயக்கும் தருணங்களாக மாறிப்போயின...

"இதுதான் நம்ம தோப்பா...?"

முதன்முதலாக.. அவனது தோப்புக்களுக்கு அவளை அழைத்துச் சென்றபோது... விழிவிரிய அவள் கேட்ட விதத்தில் பாலமுரளி சொக்கிப் போனான்... அதுவும்.. 'நம்ம தோப்பு...' என்று உரிமையுடன் அவள் பேசிய விதத்தில் வெகுவாக ஈர்க்கப்பட்டான்..

"ம்ம்ம்.. நம்மதோப்புத்தான்... இந்தப் பக்கம் பூராவும் தென்னந்தோப்பு.. அந்தப்பக்கம் கொய்யா தோப்பு இருக்கு.."

"அப்புறம்..?"

"மாந்தோப்பு... மாதுளந்தோப்புன்னு நீண்டுக்கிட்டே போகும்..."

"இவ்வளவும் உங்களுக்குச் சொந்தமா..?"

குழந்தைபோல வினவியவளை உறுத்துப் பார்த்தான் பாலமுரளி.. என்னதவறு செய்தோம்.. என்று புரியாமல் பேந்தப் பேந்த விழித்தாள் ராதிகா...

"இம்புட்டு நேரமும் ஒழுங்காத்தானே பேசிக்கிட்டு இருந்தவ... இப்ப என்னத்துக்கு பேச்சு மாறுது...?"

"அப்படி என்னத்தைங்க சொல்லிட்டேன்...?"

"உங்களுக்குச் சொந்தமான்னு கேட்டா என்ன அர்த்தம்..? உனக்கு இது சொந்தமில்லையா...?"

இவ்வளவுதானா என்ற நிம்மதியுடன் அவன் மார்பில் லேசாகக் குத்திச் சிரித்தாள் ராதிகா...

"ஹப்பா... பயந்தே போயிட்டேன்..."

அவளின் அந்தச் செய்கை பாலமுரளிக்குப் பிடித்திருந்தது... அவன் அவளைத் தொட்டு ஆளாமல் விலக்கி வைத்திருந்ததை பொருட்படுத்தாமல் ராதிகா காட்டும் இயல்பான நெருக்கத்தில் அவன் வசீகரிக்கப்பட்டான்... அவனும் அதே இயல்புடன் அவளிடம் பேசிச்சிரிக்க நேர்வதில் சுகமானதொரு அனுபவத்தை அவன் உணர்ந்தான்...

"நீ ரொம்ப பயந்தவதான்..."

"பின்னே.. இல்லையா..."

"இதை உன் மாமியாரிடம் சொல்லு.. நம்பிடுவாங்க.. நான் நம்ப மாட்டேன்..."

"மாமியார் நம்புவாங்க.. மாமியார் பெத்த மகன் மட்டும் நம்ப மாட்டாருன்னா என்னங்க அர்த்தம்..? எந்த ஊர் நியாயம் இது...?"

"தேனூத்து நியாயம் இதாண்டி.."

"சென்னையில பிறந்து வளர்ந்த அப்பாவிப் பொண்ணை மிரட்டிப் பயமுறுத்தறிங்க..."

"திரும்பவும் பயந்து போனதா பிலிம் காட்டாதே.. பயமே உன்கிட்ட பயப்படும்ன்னு உன் மாமியாருக்குத்தான் தெரியாது... எனக்குத் தெரியும்..."

"அப்படித் தெரிஞ்சதாலதான் மோகினிப் பேய்ன்னு சொல்லி என்னை பயமுறுத்தப் பார்த்தீங்களா...?"

ராதிகா சிணுங்க.. அந்த நள்ளிரவு கார் பயணத்தின் நினைவில் பாலமுரளி... பலமாகச் சிரித்தான்...

"சரியான பயந்தாக்குளிடி நீ... மனுசருக்குப் பயப்படாதவ பேய்க்குப் போய் அம்புட்டு பயம் பயந்தியே.."

இப்படிக் கேலி பேசியவனை விசித்திரமாகப் பார்த்தாள் ராதிகா...

"பேய்க்கு பயப்படாம இருக்க முடியுமா..?"

"என்னவோ போ.. தென்னையில காய் இறக்கிற சமயங்கள்ல.. நான் நடுராத்திரின்னு கூடப் பார்க்காம

இந்த தோப்புப் பக்கம்தான் கத்திக்கிட்டு இருப்பேன்.. பதினஞ்சு வயசிலேயிருந்து அதே பழக்கம்தான்.. உன்னை மாதிரி பயந்தா வேலைக்கு ஆகுமா..?"

"நீங்களும் நானும் ஒன்னா..?"

ராதிகா பேக்கக்காக கேட்டுவிட...

"இல்லைங்கறியா..?" என்று ஆழமான குரலில் கேட்டான் முரளி..

அவனின் அந்தக்குரலில் ஆகர்ஷிக்கப் பட்டவளாக தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் ராதிகா.. அவளை ஊடுறுவிப் பார்த்தது அவனது பார்வை... இருவரின் பார்வைகளும் பின்னிப் பிணைய.. ஆசையாமல் அவர்கள் இருவரும் நின்றார்கள்...

எங்கோ ஒரு குயில் கூவிப் பறந்த ஒலியில்.. தன்னுணர்விற்கு மீண்ட ராதிகா சிறு விம்மலுடன் அவன் மார்பில் சாய்ந்தாள்.. பாலமுரளியின் கரங்கள் ஒர்நொடி தயங்கி.. மறு நொடியில் அவளைச் சுற்றி வளைத்துக் கொண்டன.. திக்குத் தெரியாத காட்டில் வழிதப்பிப் போனவள் தன்வீடு திரும்பி விட்டால் பெறும் அமைதியை அன்று உணர்ந்தாள் ராதிகா.. அவன் மார்பில் சாய்ந்து நிற்கும் போது கிடைத்த மன அமைதிக்கு நிகரில்லை என்பதை அன்று கண்டு உணர்ந்து தெளிந்தாள்...

பரந்து விரிந்திருந்த தோப்பைச் சுற்றிப் பார்க்க ஒரு வாரத்திற்கு மேலாகவும் ஆகக் கூடும் என்று பாலமுரளி சொன்னான்... ஆனாலும் அதைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்றே விருப்பத்தை ராதிகா தெரிவித்தாள்...

அவளது விருப்பத்தை நிறைவேற்றுவதில் அவனுக்கும் விருப்பமிருந்தது... இரவு நேரத் தவிப்புகளுக்கான ஆறுதல் அந்த மாலை நேரங்களின் நெருக்கத்தில் அவனுக்கு கிடைத்து விடுவதை அவன் உணர்ந்தான்...

முதல்நாள் முழுவதும் தென்னந் தோப்பை சுற்றிப் பார்த்தார்கள்.. சலசலத்து ஓடிய வாய்க்கால் நீரில் கால் பதித்து சிலிர்த்து ராதிகா சிரித்தபோது.. தேவலோகத்து மாதர்களின் அழகை பரிபூரணமாக அவளிடம் கண்டான் முரளி...

அவள் சென்னைவாசி.. மழைக்குக்கூட கிராமத்துப் பக்கம் ஒதுங்கியிராதவள்.. அவளுக்கு இயற்கை அழகு நிறைந்த தோப்புக்களைப் பார்க்கப் பார்க்க தெவிட்டவில்லை...

கொய்யாத் தோப்புக்கு போன போது.. குழந்தையைப் போல குதூகலித்தாள் ராதிகா... மரத்தில் தொங்கிய வெண்மை கலந்த பசுமை நிறத்துடன் இருந்த கொய்யாக்காய்களை பறித்துக் கொடுக்குமாறு முரளியிடம் கொஞ்சிக் கேட்டாள்.. அவனும் பறித்துக் கொடுத்தான்...

"டேஸ்டா இருக்குமா..?"

அவள் சந்தேகம் கேட்க.. சிரித்தபடி ஒரு காயைக் கடித்துச் சாப்பிட்டான் முரளி...

"ரொம்ப டேஸ்டாயிருக்கு.. இந்தா சாப்பிடு..."

அவன் நீட்டிய காயை வாங்காமல்... அவன் கடித்து வைத்திருந்த காயை வாங்கிக்கடித்து சுவைத்தாள் ராதிகா..

"ரொம்ப டேஸ்டாயிருக்கு..."

கண்களில் காதலுடன் சொன்னவளை அள்ளிக் கட்டிக்கொள்ள வேண்டும் போல அவன் கைகள் பரபரத்தன...

சொல்லி விட்ட சொல்லில் அவன் கைகளை கட்டுப் படுத்திக் கொள்ள.. எந்தவித மனத்தடைகளும் இல்லாதவளாய் அவள் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்... கண்கள் மின்ன அவனும் பதிலுக்கு அவளைத் தழுவிக் கொண்டான்...

மாதுளந் தோப்புக்குள் சென்றபோது.. இயல்பாக அவர்களின் கரங்கள் பிணைந்து கொண்டன.. எந்த விரல் கோர்ப்பிற்காக பாலமுரளி ஏங்கினானோ... அந்த விரல் பிணைப்பை வெகு இயல்பாக அவனுக்கு அளித்தாள் ராதிகா...

அவனிடம் கேட்பதற்கு அவளிடம் ஏராளமான கேள்விகள் இருந்தன...

"அது என்ன செடி...?"

"வாலை ஆட்டிக் கொண்டு பறந்து போகுதே.. அது என்ன பறவை..? குருவியா..? மைனாவா..? குயிலா..?"

"இந்த மரத்துக்குப் பெயர் என்ன...?"

"இந்தப் பூ எப்படி இவ்வளவு வாசமாயிருக்கு..? இந்த மலர் செடிகளை இங்கே நட்டு வைத்தது யார்..?"

குழந்தை போல அவள் கேட்கக் கேட்க.. அதை ரசித்தபடி பதில் சொல்லிக் கொண்டிருந்தான் பாலமுரளி...

அலுப்பைத் தரும் மாலைப் பொழுதுகள் இவ்வளவு அழகானதாக எப்படி மாறின என்ற கேள்வியை மட்டும் மனதுக்குள் அவனாக கேட்டுக் கொண்டான்.. அதற்கு விடையாக நின்றாள் ராதிகா...

தோப்புக்கு வரும்போத மறக்காமல் செல் போனில் பாடல்களை ஒலிக்க விட்டுக் கொண்டிருந்தாள்.. அவளுக்குப் பிடித்த காட்சிகளை அதே செல்போனில் பதிவு பண்ணவும் செய்தாள்...

"இது மாலை நேரத்து மயக்கம்...
பூ மாலை போல் உடல் மயக்கும்...
இதழோடு.. இதழ் சேர...
அந்த இன்பம் தேடுது எனக்கும்..."

பாடல் ஒலிக்கும் போது அவளும் கூடப் பாடியபடி அவனையே பார்த்தாள்... அந்தப் பார்வை..! அதில்தான் எத்தனை யெத்தனை செய்திகள்...!

அவனை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்த அவளின் விழிகளில் அழைப்பு இல்லை... ஆசை இருந்தது.. காமம் இல்லை.. காதல் இருந்தது.. தாகம் இல்லை... தாபம் இருந்தது...

இதுபோன்ற உணர்வுகளுக்கு என்ன விதமான பதிலைத் தருவது என்ற திடுக்கிடலுடன் பாலமுரளி திகைத்து நின்றான்...

மன்மதனின் மலர் பாணங்களாய் அவளது பார்வை அவனைக் குறிவைத்துக் கொண்டிருந்த போது... கைகள் கட்டப் பட்டிருந்தவனாக அவளுடன் கலக்க முடியாமல் அவன் கலங்கி நின்றான்...

அவன் தேடிய காதல் அவள் விழிகளில் கொட்டிக் கிடந்தது... அதை அள்ளிக் கொள்ள முடியாத வறியவனாக அவன் உறைந்து நின்றான்... அவள் மீது கொண்ட ஆசை அவனை அலைக்கழித்தது... தாள முடியாமல் மனம் தத்தளித்தான்...

"உன் மேல கொண்ட ஆசை...
உத்தமியே மெத்தை உண்டு...
சத்தியமாச் சொல்லுறேண்டி...
தங்க ரத்தினமே...!
தாள முடியாது கண்ணே..
பொன்னு ரத்தினமே...!"

அவனது தாபத்தை உணர்ந்தாளோ.. என்னவோ.. மாமரத்தின் கிளையில் சாய்ந்து நின்ற ராதிகா.. அவனை நோக்கி இரு கரத்தையும் நீட்டி அழைத்தாள்...

அந்தச் செய்கையில் ஆகர்ஷிக்கப் பட்டவனாக முரளி அவள் கைகளுக்குள் புகுந்தான்.. அவனைத் தழுவிக் கொண்ட ராதிகாவின் முத்தங்கள் அவன் முகமெங்கும் படிந்தன... தாள முடியாத தாபத்துடன் அவள் கழுத்து வளைவில் அவன் முகம் புதைத்துக் கொள்ள.. கருணையுடன் அவன் தலை கோதினாள் ராதிகா.. அது கூடலில்லாத கூடலாக அந்த இருவருக்கும் இருந்தது..

அன்று வீடு திரும்பும் போது... அவன் மனதில் எல்லையில்லாத அமைதி வியாபித்திருந்தது...

என் மடிமீது நீ உறங்கு...
தாலாட்ட நான் இருக்கிறேன்...

"இன்னையோட தோப்பு முழுசையும் நீ சுத்திப் பார்த்திட்ட..."

பாலமுரளி சொன்னதும் கண்கள் முழுவதும் சந்தோசத்தை நிரப்பி...

"அப்படியா...?" என்று ஆச்சரியப்பட்டாள் ராதிகா...

"என்ன அப்படியா..? என்னமோ மலையை வெட்டி முடிச்சதைப் போல பெரிசா பில்ட் அப் கொடுக்கிற... தோப்பைத்தானே சுத்திப் பார்த்த...?"

"எவ்வளவு பெரிய தோப்பு இது.. இதைச் சுற்றிப் பார்த்து முடிச்சிட்டேனே.. எனக்கு இது பெரிய விசயம்தான்.."

"ம்ஹீம்... செடியை வைச்சுத் தோப்பாக்கின எங்க பாட்டன் முப்பாட்டன்கூட இந்த அளவுக்கு பெருமைப்

பட்டிருக்க மாட்டாங்க டி.. இந்த ஒருவாரமே தோப்பைச் சுத்திட்டு இப்படி பெருமைபட்டுக்கற...? நான் ஒரு மணி நேரத்திலேயே இத்தனையையும் சுத்தி வருவேன்.. தெரியுமா...?"

"உங்ககூட போட்டிக்கு வந்தேனா...?"

"வந்துதான் பாரேன்..."

"அத்தை முன்னாலே குணசாலியைப் போல பேசி கூப்பிட்டுக்கிட்டு வந்துட்டு... தனியா உங்ககிட்ட மாட்டினவுடனே போட்டிக்கு கூப்பிடறீங்களா..? இருங்க அத்தைக்கு போன் போடறேன்..."

"அடிப்பாவி.. புருசனையே மிரட்டறியா...?"

அவன் கேலி பேசியபடியே லேசாகத் திரும்பிப் பார்க்க... ராதிகா இமைகளைச் சிமிட்டினாள்...

"ஏய்ய்..." அவன் நின்றே விட்டான்...

"என்ன..?" ஒன்றும் அறியாதவளைப் போல அவள் வினவினாள்...

"கண்ணடிக்கிறயேடி.." ஆச்சரியப்பட்டான்...

"யாரு நானா...?" அவள் அப்பாவியாய் இமை கொட்டினாள்...

பாலமுரளிக்கு சிரிப்பு வந்து விட்டது... அவளது காதைப் பிடித்துத் திருகியதில்...

"ஆ.. அத்தான்.. வலிக்குது..." என்று பொய்யாக அவள் அலறினாள்...

அவளின் குறும்புத்தனத்தில்... அவன் நெடுநேரத்திற்கு சிரித்துக் கொண்டிருந்தான்... அடர்ந்த செடி கொடிகளின் இடையே போன பாதையில் அவன் திரும்பிய போது...

"எங்கே போகிறோம்...?" என்று அவள் கேட்டாள்...

"தோப்பைப் பார்த்து முடிச்சாச்சு.. இது பக்கத்திலே வேறொன்று இருக்கு.. அதைப் பார்க்க வேணாமா...?" அவன் மர்மமாகப் புன்னகைத்தான்.

'என்னவா இருக்கும்...' ராதிகாவின் மனம் குறுகுறுத்தது...

அதை அறியும் ஆவலில் வாயடிப்பதைக் கூட மறந்து போனவளாக சுற்றுப்புறத்தின் பசுமையை ரசித்தபடி மௌனமாக அவன் கூடப் போனாள் ராதிகா...

அந்தப் பாதையின் முடிவிலிருந்த திருப்பத்தில் அவள் திரும்ப முனைந்த போது...

"பொறு..." என்றான் முரளி...

எதற்காக நிற்கச் சொல்கிறான் என்று புரியாதவளாக அவள் நின்றபோது... அவன் கரங்கள்.. அவள் கண்களைப் பொத்தின...

"இப்ப நட..." என்றான்...

அவள் நடந்தாள்... சில அடிகளை அவள் எடுத்து வைத்த பின்னால்.. அவள் கண்களைப் பொத்தியிருந்த அவனது கரங்கள் விலகின.. கண்களைக் கசக்கியபடி எதிரே பார்த்த ராதிகா பிரமித்து விட்டாள்...

'ஹோ...'வென்ற பேரிறைச்சலுடன் அருவி கொட்டிக் கொண்டிருந்தது... வெள்ளைப் பஞ்சுப் பொதிகள் மொத்தமாக விழுவதைப் போலத் தோன்றிய அந்தக் காட்சியில் ராதிகா மெய் மறந்து விட்டாள்...

பக்கத்தில் பாலமுரளி நின்று கொண்டிருப்பதையும் மறந்தவளாக...

"ஹை.. அருவி.." என்று கைகொட்டி.. குதூகலித்தாள்..

"எப்படிங்க... இங்கே அருவி இருக்குன்னு இதுவரைக்கும் எனக்குத் தெரியாதே..."

அவள் குழந்தையாகக் கேட்டபோது பாலமுரளி செல்லமாக அவள் தலையில் சின்னதாக ஒரு குட்டை வைத்தான்...

"மக்கு.. மக்கு.. நீ இருக்கிறது தேனூத்து..."

"அதுக்கென்னவாம்...?"

"இது குற்றாலத்துக்குப் பக்கத்து கிராமம்டி.. இங்கே அருவி கொட்டாம இருந்தால்தான் ஆச்சரியப்படனும்.. அருவி கொட்டினா ஆச்சரியப்படுவியா..?"

"ஹையோ.. நான் நினைச்சே பார்க்கலை தெரியுமா...?"

"நினைக்காத பல விசயங்களை நாம பார்க்க நேர்வதுதான் வாழ்க்கை... புரியுதா... ?"

"இதுதான் சாக்குன்னு பாடம் எடுக்க ஆரம்பிக்க வேணாம்..."

பாலமுரளியிடம் விளையாட்டாகப் பேசியபடி திரும்பியவள் அப்படியே நின்று விட்டாள்.. அசையாமல் நின்றவளை பதட்டத்துடன் அணுகிய பாலமுரளி...

"என்னடி ஆச்சு... ?" என்று கவலையுடன் கேட்டான்..

ராதிகா பேச வாய் திறந்தாள்... அவளால் பேச முடியவில்லை...

"அங்கே.. அங்கே.." குழறியபடி அவள் கை காட்டிய திசையில் ஊன்றிப் பார்த்தான் பாலமுரளி...

அருவி கொட்டிக் கொண்டிருந்த இடத்தில் பெரும் பள்ளம் இருந்தது.. அதில் வழிந்து நிரம்பிய அருவிநீர் ஆறாகப் பெருகி ஓடிக் கொண்டிருந்தது... ஆற்றோரமாக கரை இருந்தது.. ஆற்றங்கரையில் பெரிய அரசமரம் இருந்தது... அரச மரத்தடியில் பெரிய சிமிண்ட் மேடை இருந்தது... மேடையின் மேல் பிள்ளையார் வீற்றிருந்தார்...

ராதிகாவின் விரல் கோவிலை நோக்கித்தான் நீண்டிருந்தது...

"அரசமரத்தடி பிள்ளையார்..! வா.. போய் சாமி கும்பிடலாம்..."

ராதிகாவின் திக்பிரமை எதனால் ஏற்பட்டது என்பதை உணராதவனாக பாலமுரளி அவளை...

பிள்ளையாரின் அருகே அழைத்துச் சென்றான்.. ராதிகாவின் விழிகளில் தெரிந்த மிதமிஞ்சிய ஆச்சரியத்தையும்... பயத்தையும் பார்த்தவனுக்கு... அது ஏனென்று விளங்கவில்லை...

"சாமி கும்பிடுடி.." கைகளைக் கூப்பினான்...

செழுத்தப்பட்டவளைப் போல.. இயந்திரமாக ராதிகாவும் கரங்களைக் குவித்தாள்... பிள்ளையாரின் முன்னாலிருந்த விபூதியையும்... குங்குமத்தையும் எடுத்து அவள் நெற்றியில் இட்டபோதுதான் பாலமுரளி அதை உணர்ந்தான்...

ராதிகாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது...

"ராதிகா..." திகைப்புடன் அவன் அவளை உலுக்கினான்...

"நம்ப முடியலைங்க..." அவள் விசும்பினாள்...

'எதைச் சொல்றா...' அவன் யோசித்தான்...

'ஒருவேளை.. இவகிட்ட இவ்வளவு இணக்கமா நான் பேசிப் பழகறதை நம்ப முடியலைன்னு சொல்கிறாளோ...'

அவனால் மறுமொழி கூற முடியவில்லை... ராதிகா... பிள்ளையார் கோவிலின் படிகளில் அமர்ந்து விட்டாள்.. அந்த அருவிக்கரையும்.. அரச மரமும்... அதனடியில் வீற்றிருந்த பிள்ளையாரும்... அன்றொரு நாள் அவள் கண்ட கனவின்.. நிஜ வடிவங்களாக அவள் கண்முன் நின்றதில் அவள் அதிர்ந்து போயிருந்தாள்...

'இது எப்படி சாத்தியம்...'

அவளால் நம்ப முடியவில்லை... சில மாதங்களுக்கு முன்னால் அவள் ஒரு கனவைக் காண்கிறாள்.. அதில் அருவி வருகிறது.. ஆற்றங்கரை வருகிறது.. அரசமரத்தடி வருகிறது.. அதில் வீற்றிருக்கும் பிள்ளையாரும் வருகிறார்... அந்தக் கனவின் முடிவில் அவளை அந்த ஆற்றங்கரையில் இறக்கி விட்டுவிட்டு மேகம் பறந்து விடுகிறது.. அவள் அங்கேயே நிலை கொள்கிறாள்...

அடுத்த சிலதினங்களில் அவள் ஒருவனைச் சந்திக்கிறாள்.. அன்மேல் காதல் கொள்கிறாள்... அவனுடன் அவளுக்கு திருமணமும் நடந்து முடிந்து விடுகிறது... அவனுடன் வாழ வந்தவள்.. அவள் வாழ்க்கைப் பட்ட கிராமத்தில்... அவள் கனவில் கண்ட அதே அருவிக் கரையையும்.. அரச மரத்தடி பிள்ளையாரையும் பார்க்கிறாள் என்றால் இதை என்னவென்று சொல்லுவது...?

"இதைக் கடவுளின் சித்தம்ன்னு சொல்லனும்மா..." மெய்சிலிர்த்துச் சொன்னாள் மேகலா...

பாலமுரளியிடம் அதைப் பற்றி எதுவும் சொல்லாமல் வீடுதிரும்பிய ராதிகா.. இரவு உணவிற்குப் பின்னால்... பாலமுரளி மாடிக்குச் சென்று விட்ட பிறகு... மேகலாவைத் தேடிச் சென்று அதைச் சொன்னாள்...

மேகலா ஆச்சரியப்பட்டுப் போனாள்...

"கடவுளே.." என்று கரம் கூப்பி கன்னத்தில் போட்டுக் கொண்டாள்...

"ஒரு செகண்ட் எனக்கு பயம் வந்திருச்சு அத்தை..." ராதிகாவின் கண்களில் மிரட்சி இருந்தது...

"எதுக்கு பயம்...? பைத்தியம்..."

"அது எப்படி அத்தை...? அப்படியே நான கனவில் பார்த்ததைப் போலவே அந்த இடம் இருக்கு... அரசமரத்தடி பிள்ளையாரும் இருக்கிறார்..."

ராதிகா இன்னமும் அந்த அதிர்விலிருந்து மீளவில்லை என்பதைக் கண்டு கொண்டவளாக மேகலா.. மகனை செல்போனில் அழைத்தாள்...

"ஏம்மா... சயின்ஸ் வளர்ந்துருச்சுங்கிறதுக்காக... ஒரே வீட்டில இருந்துக்கிட்டு மாடியில இருக்கிறவனை போன் பண்ணிக் கூப்பிட்டு வைக்கனுமா...?" என்று கேட்டபடி பாலமுரளி கீழே வந்தான்...

"இவ பயந்து போயிருக்காடா..."

திரும்பவும் காய்ச்சல் என்று ராதிகா விழுந்து வைத்து விடுவாளோ என்ற பயம் மேகலாவுக்கு... அதை உணர்ந்தவனாக பாலமுரளி வாய் விட்டுச் சிரித்தான்...

"என்னடி.. சாப்பிட்டதும் தூங்க வராம.. இங்கே உட்கார்ந்து அம்மாவை அரட்டிக்கிட்டு இருக்கியா..? என்ன விசயம்...?"

மேகலா விவரத்தைச் சொன்னதும் அவன் ஆச்சரியப்பட்டுப் போனான்...

"அதனாலதான் இவ அப்படி முழிச்சு வைச்சாளா..? நான் என்னவோ... ஏதோன்னு நினைச்சேன்..."

"என்னடா நினைச்சே,, ?"

"உங்களுக்குத் தெரியாதும்மா,, இவ வெறும் வாய்தான் அடிப்பா,, மத்தபடி,, தைரியத்துக்கும்,, இவளுக்கும் ரொம்பத்தூரம்.. இப்படித்தான் திருநெல்வேலிக்கு போயிட்டு வர வழியில் ஷோபாவை தூரத்திலே பார்த்துட்டு மோகினிப் பேய்ன்னு அலறிட்டா,,"

பாலமுரளி சிரித்தபோது,,, கூடச் சேர்ந்து மேகலாவும் சிரிக்கவில்லை,,, மாறாக மகனை முறைத்தாள்...

"ஏண்டா,,, என் மருமகளை உன் அக்கா வீட்டு விருந்துக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போறதாய் என்கிட்டச் சொல்லிட்டு,, பயம் காட்டத்தான் கூப்பிட்டுக்கிட்டுப் போனயா,,, ?"

"இதுவேற பழியா,, ? கேட்டுக்கடி,, என் அம்மாவிடம் போட்டுக் கொடுக்கத்தான் கீழே தேங்கினயா,,, ?"

"ஆமாம்டா,,, அவளுக்கு அதுதான் வேலை,,, நட்ட நடுராத்திரியில நல்ல மனுசங்களைப் பார்த்தாலே பேய்ன்னுதான் தோனும்,, அந்த ஷோபாவைப் பார்த்தா மனுஷியாவா தோனும்,, ?"

"விடுங்கம்மா,,, அவதான் சென்னைக்கு கிளம்பிப் போயிட்டாளே,,,"

"அதில உனக்கு ரொம்ப வருத்தம் போல இருக்கே,, ராதிகா கவனிச்சுக்கம்மா,,,"

"ஆமாம்மா,,, அவளுக்கு ஒன்னுமே தெரியாது,, நீங்க வேற கிளப்பி விடுங்க,, சும்மாவே இவ

உடுக்கையில்லாம சாமியாடி வைப்பா,, நீங்க வேற உடுக்கையை அடிச்சிட்டிங்களா,,, இனி விடிய விடிய சாமியாட்டம் தான்,,"

"அதுக்கெல்லாம் அசருகிற ஆளா நீ,,,"

"அதுசரி,,, மாமியாரும் மருமகளுமா பலமான கூட்டணியைப் போட்டுட்டிங்க,, நான் ஜகா வாங்கிக்க வேண்டியதுதான்,, ஆனாம்மா,,, இவ பேயை நினைச்சுத்தானே அலறிவைச்சா,, சாமியைப் பார்த்து எதுக்காக பயந்தான்னு எனக்குப் புரியாம இருந்துச்சு,, இப்பத்தான் புரியுது,,,"

பாலமுரளி விச்ராந்தியாக மேகலாவின் அறையிலிருந்த சோபாவில் அமர்ந்து விட்டான்... ராதிகா ஒன்றைச் சொல்ல,, அதற்கு அவன் கேலிபேச,, மேகலா மருமளுக்காக பரிந்து கொண்டு வர என்று நேரம் போனதே தெரியாமல் அங்கே அரட்டைக் கச்சேரி களை கட்டியது... ஒருவழியாக,,, பாலமுரளியும் ராதிகாவும் தூங்கப் போய் விட்ட பின்னால் படுக்கையில் சாய்ந்த மேகலாவின் மனம் நிறைந்திருந்தது...

'இப்படி வீடு கலகலன்னு இருந்து எத்தனை வருசமாச்சு...'

தொலைந்து போன கடந்த காலத்தின் சிரிப்பையும்,, சந்தோசத்தையும் மீட்டுக் கொடுத்து விட்ட ராதிகாவின் மீது அவளுக்குள் அன்பும்,, பாசமும் பொங்கின...

மாணிக்கவாசகத்தின் இறப்பிற்கு முன்னால் அந்தவீடு கலகலப்பாக இருந்தது... எல்லாவற்றையும்

பார்த்துக் கொண்ட மாணிக்க வாசகம் குடும்பத்தையும் மிக நன்றாகவே பார்த்துக் கொண்டார்.. கவலையற்று இருந்த பாலமுரளி... பாலசரஸ்வதியிடம் சதா.. வம்பிழுத்துக் கொண்டே இருப்பான்.. தம்பியைப் பற்றி அக்கா புகார் சொல்ல.. அவன் அதற்கும் கிண்டல் செய்ய என்று.. வழக்கு வளர்ந்து கொண்டே இருக்கும்.. அவர்களுக்குள் வழக்கு தீர்த்து விடுவதற்குள் மேகலாவுக்கு போதும்.. போதுமென்று ஆகிவிடும்...

மாணிக்கவாசகம் போனார்.. அவருடன் சேர்ந்து அந்தக் குடும்பத்தின் சந்தோசமும் போய்விட்டது.. மேகலா சிரிக்க மறந்தாள்.. பாலமுரளி குடும்ப பாரத்தை தோளில் ஏற்றிக் கொண்டான்.. பாலசரஸ்வதி... எதிர்காலத்தைக் குறித்த பயத்தில் மூழ்கினாள்...

கமையைச் கமக்க ஆரம்பித்த பாலமுரளி அதை சகமானகமையாக மாற்றிக் கொண்டு... வெற்றிமேல் வெற்றியை ஈட்ட ஆரம்பித்தபோது.. பாலசரஸ்வதி எதிர்காலத்தைக் குறித்த பயத்திலிருந்து மீண்டாள்... ஆனால்.. திருமணமாகி கணவரின் வீட்டிற்குப் போய் விட்டாள்...

உழைப்பாளியான மகன் அருகிலிருந்தும்.. அவனின் அருகாமை மேகலாவுக்கு கிடைக்கவில்லை... மகளோ புகுந்த வீட்டிற்குப் போய்விட்டாள்.. மேகலாவின் வாழ்வில் தனிமை சூழ்ந்திருந்தது... அன்றுதான் தனிமை விலகியது...

119

உன் வளையோசையின் கலகலவிவாலி..
கவிதைகளைக் கொட்டுவதை அறிவாயா..?

வீட்டில் ஓர் வெறுமையை உணர்ந்தான் பாலமுரளி.. எப்போது அவன் வந்தாலும்.. வாசலிலேயே காத்து நின்று அவன் கையிலிருக்கும் பெட்டியை வாங்கிக் கொண்டு போகும் ராதிகா இல்லாத வீட்டில் கால் வைக்கவே அவனுக்கு பிடிக்கவில்லை... அதை வார்த்தைகளால் சொல்லி விடவும் முடியாது.. மேகலா வருத்தப்பட்டு விடுவாள்...

இதிலிருந்து தப்பிப்பதற்காகத்தான் அவன் வேலையில் தன்னை மூழ்கடித்துக் கொண்டான்...

"ஏண்டா மதியம் சாப்பிட வராம என்ன பண்ணிக்கிட்டு இருக்க..?" மேகலா போனில் அழைத்த போது...

"வேலையிருக்கும்மா... எனக்காக காத்திருக்க வேணாம்..." என்று சொல்லி விட்டான்...

"பழையபடி ஆரம்பிச்சிட்டியா... இதுக்குத்தான் ராதிகா இருக்கனும்கிறது... அவகிட்ட உன் பாச்சாவெல்லாம் செல்லுபடியாகாது... அவ வந்தால்தான் நீ சரிப்படுவ..."

'அதைச் செய்யுங்க முதல்ல...' என்று அவனுக்குச் சொல்லத் தோன்றியது...

ஆயாசத்துடன் போனை வைத்து விட்டான்... அன்று இரவில் வழக்கமான நேரத்தில் அவனுக்குப் போன் செய்த ராதிகா...

"மதியம் லன்ச்சுக்கு வராம டிமிக்கி கொடுத்திட்டிங்க போல..." என்று விசாரித்தாள்...

அவளது குரலைக் கேட்டதும் அவனுக்குள் கிளம்பும் தாபமும்... வேகமும் அப்போதும் கிளம்பின...

"யாருடி சொன்னது...?"

"வேற யார் சொல்வாங்க..? அத்தைதான் சொன்னாங்க..."

"அவங்களிடம் பேசினியா...?"

"ஊம்.."

"எப்ப...?"

"மதியம்..."

"அவங்களிடம் பேசத்தெரியுது... அதே போனை எனக்குப் போட்டுப் பேசத் தெரியலையா...?"

அவனுக்குள் கோபம் பொங்கியது... மறுமுனை மௌனம் சாதித்தது...

"என்னடி... பேச்சைக் காணோம்.."

"நீங்க வேலையாய் இருப்பீங்கன்னு நினைச்சேன்..."

"அப்ப.. வெட்டியாய் இருந்தாத்தான் நீ பேசுவ... அப்படித்தானே...?"

"எதுக்காக இப்படிக் கோவிச்சுக்கறிங்க...?"

"ஊம்..? அப்படியொரு வேண்டுதல்... வைடி போனை.."

அதட்டினானேயொழிய அவன் போனை வைக்க வில்லை... அவள் மெதுவான குரலில் விசாரித்தாள்...

"மதியம் எங்கே சாப்பிட்டிங்க...?"

"தென்காசியில்..."

"தென்காசியில்ன்னா... எங்கே...?"

"ம்ம்ம்.. அங்கே எனக்கொரு அத்தை மக இருக்கா.. அவ வீட்டிலதான் சாப்பிட்டேன்... போதுமா...?"

"பெண்டாட்டியை ஊருக்கு அனுப்பி வைச்சிட்டு.. அத்தை மகவீட்டில விருந்து சாப்பிடறது நீங்க... இதில போதுமான்னு என்னைக் கேள்வி கேட்கறிங்களா...? உங்களுக்கு போதுமா..? அவ ஒருத்திதானா... இல்லை.. இன்னும் அடுத்தடுத்து லைனில் நிற்கிறாங்களா..?"

"அதையேண்டி கேட்கிற... வீதிக்கொருத்தி நிற்கிறாளுக... இப்ப என்னங்கிற..?"

"திமிரா...?"

"இல்லேன்னு சொல்ல மாட்டேன்... இவ்வளவு பேசறவ... எதுக்காக கிளம்பிப் போன...?"

"ம்ம்ம்... என் அம்மா வீட்டில விருந்து சாப்பிட வந்திருக்கேன்... கேள்வியைப் பாரேன்... எக்ஸாம் எழுத

கிளம்பி வந்தவனைப் போயி எத்தனைக் கேள்விகளைக் கேட்கிறாரு..."

"போனயில்ல... அப்புறம் எதுக்காக... என்னோட அக்கறைப்படறதைப் போல சீன் காட்டற... நான் மதியம் சாப்பிட்டா உனக்கென்ன... சாப்பிடலன்னா உனக்கென்ன...?"

பாலமுரளி கள்ளென்று பேசியதும்... ஆற்றாத குரலில் ராதிகா கேட்டாள்...

"எனக்கொன்னுமில்லையா...?"

அந்த ஒரு கேள்வி... அவனின் உயிருள் நுழைந்து ஆட்டி வைத்தது... அவளைத் தொட்டுத் தழுவி கலக்க முடியாவிட்டாலும்.. கிட்டத்தில் வைத்தாவது பார்த்துக் கொண்டிருந்தவன்... அதுவும் முடியாத சூழ்நிலையில் குழறினான்...

"பேசாதேடி..."

"அத்தான்..."

"பேசாதேன்னு சொன்னேனே..."

"எக்ஸாம் எழுதத்தானே வந்தேன்...?"

"அதை எழுதலன்னு என்ன கட்டாயம்..?"

"படிச்ச படிப்பை முடிக்க வேணாமா..?"

"அதை வைத்துத்தான் பிழைக்கப் போகிறயா..?"

"அதுக்காக.. எக்ஸாம் எழுதாம இருக்கலாமா..?"

"ம்ப்ச்..."

பாலமுரளி போனை வைத்து விட்டான்... அவளில்லாத கட்டிலில் படுக்கவே அவனுக்குப் பிடிக்கவில்லை...

மேஜை விளக்கின் ஒளியில் கூர்ந்து படித்துக் கொண்டிருந்தாள் ராதிகா... அவள் பின்னால் சப்தமில்லாமல் வந்து நின்ற கீதா..

"எதுக்குடி இப்படி வருத்திக்கற...?" என்று கேட்டாள்...

"இன்னுமாடி நீ தூங்கல.." ராதிகா புத்தகத்தை மூடினாள்...

"எங்கே தூங்கறது... எனக்கு இத்தனூண்டு வெளிச்சம் இருந்தாக்கூட தூக்கம் வராது... நீயென்னடான்னா.. இவ்வளவு பெரிய லைட்டை எரிய விட்டுக்கிட்டு இருக்க.. எப்படித் தூக்கம் வரும்..?"

"நான் பாட்டுக்கு மூலையில உட்கார்ந்து படிச்சிக்கிட்டு இருக்கேன்... இது உனக்கு டிஸ்டர்ப்பா இருக்கா...?"

"ஆமாம்ன்னுதானே சொல்லிக்கிட்டு இருக்கேன்.."

கீதா.. மேஜை விளக்கை அணைத்து எரிய விட்டாள்... ராதிகா உஷ்ணப் பார்வை பார்த்தாள்...

"எதுக்குடி முறைக்கிற...?"

அறியாச் சிறுமியைப் போல இமை கொட்டினாள் கீதா...

"அடிச்சுப் பல்லைக் கழட்டி விடுவேன்..."

"அத்தான் பாஷை உனக்கும் ஒட்டிக்கிச்சா...? அச்சு அசல் தேனூத்துக்காரியாவே மாறிட்டபோ..."

"அவர் பேசினதை நீ எப்பக் கேட்ட..."

"இதைத்தானே அவர் அடிக்கடி சொல்லி வைப்பார்..? எனக்குத் தெரியாதா என்ன...?"

"பேச்சை மாத்தாதே... இப்ப எதுக்காக டேபிள் லேம்ப்பை ஆஃப் பண்ணிப் போட்ட...?"

"நான் சும்மா நோண்டினேன்... நீயென்ன இதுக்கெல்லாம் கேள்வி கேட்கிற...?"

"ஏய்ய்.. எனக்குத் தெரியாதுன்னு நினைக்காதே... நீ பார்த்த அதே சினிமாவை நானும் பார்த்திருக்கேன்... யாருக்கு சிக்னல் கொடுத்த...?"

"கொடுத்திட்டாலும்..."

"எதுக்குடி நீட்டி முழக்குற...?"

"போ ராது... எல்லாமே மக்கு பிளாஸ்திரியும்.. டியுப் லைட்டுமா இருக்குது.. இதில இந்த சிக்னலை எந்த ஜென்மம் புரிஞ்சுக்கும்ன்னு நீ நினைக்கிற...?"

"அப்புறம்... எதுக்காகடி சிக்னலைக் கொடுத்த..?"

"உன்னை வம்பிழுக்கத்தான்... உன்னிடம் திட்டு வாங்கி எத்தனை நாளாச்சு... ஐ மிஸ்டு யு ராது... நீ என்னை நினைச்சியா...?"

கீதா ராதிகாவின் அருகே அமர்ந்து அளின் கையைப் பிடித்துக் கொள்ள... ராதிகா மனம் நெகிழ்ந்தாள்.. அவளுக்குள் குற்ற உணர்வு எழுந்தது...

அவள் சென்னைக்கு வந்த நாளிலிருந்து வீட்டிலிருந்த அனைவரும் அவளையே சுற்றிச் சுற்றி வந்தார்கள்...

"சுந்து.. உன் பேனா பத்திரம்டா.. ராதிகா வந்திட்டா..." என்ற கீதாவின் எச்சரிக்கைக்கு...

"நோ பிராப்ளம்.. எத்தனை பேனாவை வேண்டும்னாலும் கை வைச்சுக்கக்கா.. நீ எங்ககூட இருந்தால் போதும்," என்று சொன்னான் சுந்தர்...

அடாது மழை பெய்தாலும்... விடாது அலுவலகம் செல்லும் கர்மவீரரான கிருஷ்ணமூர்த்தி... மகளைக் கண்டதும்.. மருத்துவ விடுப்பைக் கொடுத்து விட்டார்...

நல்லா வந்திரும் 'வாயிலே... நல்லா வந்திரும் வாயிலே என்று வீட்டில் உள்ளவர்களை மிரட்டிக் கொண்டிருந்த லேடி ஹிட்லர் ராஜேஸ்வரிக்கு வாயெல்லாம் பல்லாக மாறி விட்டிருந்தது..

"அச்சு அசல் புன்னகை அரசி கே.ஆர்.விஜயாதான்.. லேடி ஹிட்லரை இப்படிப் பார்த்தாத்தான் நல்லாயிருக்கு.. ஆனா.. இதையாரு அவங்ககிட்டச் சொல்றது..?" கீதா ஆதங்கப் படவும்...

"ஏன் நீதான் சொல்லேன்..." என்று யோசனை சொன்னான் சுந்தர்...

"பூனைக்கு மணிகட்ட நான் தயாரா இல்லை... அந்த வேலைக்கு ராதிகாதான் லாயக்கு... ராது... இதுக்காகவே நீ கொஞ்சநாள் எங்க கூடவே இரேண்டி..." கீதா ராதிகாவின் கழுத்தைக் கட்டிக் கெண்டாள்...

அவளைச் சுழ்ந்திருந்த அவளின் பெற்றவர்களும்... உடன் பிறந்தவர்களும் அவளது வருகையில் வெகுவாகச் சந்தோசப் பட்டுப் போயிருந்தனர்.... அனைவரும் தினமும் பலமுறையாவது ராதிகாவை நினைத்துப் பார்த்ததாகச் சொன்னார்கள்... அவள் மனதில் அந்த அளவுக்கு அவர்களைப் பற்றிய நினைவில்லை என்ற எண்ணத்தில் ராதிகா சங்கடப்பட்டுப் போனாள்...

'நான் இத்தனை சுயநலவாதியா...?'

அதே சமயத்தில்... பிறந்த வீட்டு சொந்தங்களின் மத்தியில் இருந்தாலும்... அவள் மனம் பூராவும் தேனூத்திலேயே நிலை கொண்டிருந்தது...

'இந்நேரத்துக்கு அத்தை எழுந்திருச்சிருப்பாங்க... அவர் என்ன பண்ணிக்கிட்டு இருப்பார்..? சாப்பிட்டிருப்பாரா.. எங்கே சாப்பிட்டிருக்கப் போகிறார்..? செல்போனை காதில் வைச்சுக்கிட்டு சாப்பிட மறந்து காரில ஏறியிருப்பார்...'

அவளது சிந்தனை பூராவும் இப்படியே இருந்தது... இதை அறியாத அவளின் தாய்வீடு அவளைக் கொண்டாடிக் கொண்டிருந்தது...

காலை நேரத்தில் பாலமுரளி கிளம்பிக் கொண்டிருப்பான் என்ற நினைவில் அவள் போன் செய்வதில்லை... மதியத்தில் அவன் எங்கே இருக்கிறானோ.. சுற்றிலும் யார் இருப்பார்களோ என்ற தயக்கத்தில் போன் செய்ய யோசித்தாள்.. இரவின் அமைதியில் பேசினால்தான் அவன் நிதானமாக

இரண்டு வார்த்தைகளாவது பேசுவான் என்று அவள் இரவில் அவனுக்கு போன் செய்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்...

பாலமுரளி அதிலும் குற்றம் கண்டு பிடித்தான்.. சுள்ளென்று பேசினான்.. ராதிகாவிற்குள் ஆதங்கம் பொங்கியது... அவள் அவனை நினைக்கும் அளவிற்கு... அவன் அவளை நினைக்கவில்லை என்று அவள் நினைத்தாள்...

'எப்படா இவ தலை மறையும்ன்னு காத்திருந்தார் போல... நான் இருந்த வரைக்கும்.. கடமைக்காகவாவது வீட்டுக்கு வருவார்.. இப்ப அதுவும் இருக்காது...'

இரவின் அமைதியில் அவளது நினைவு பூராவும் அவன் மீதே மையம் கொண்டிருந்தது...

ராதிகா பரிட்சை எழுதப் போக வேண்டும் என்று நினைத்தாலும் அதை பாலமுரளியிடம் சொல்லப் பயந்து கொண்டிருந்தாள்... அப்போது தான் கிருஷ்ணமூர்த்தி மருமகனுக்கு போன் பண்ணி... ராதிகாவின் பரிட்சையை அவனுக்கு நினைவூட்டினார்... மாமனாரே சொல்லி விட்ட பின்பு பாலமுரளியால் அதை மறுத்துப் பேச இயலாமல் போய்விட்டது...

அப்படியிருந்தும் அவன் ராதிகாவிடம் சொல்லிப் பார்த்தான்...

"எனக்கென்னவோ.. இதெல்லாம் தேவையில்லைன்னு தோணுது... ராதிகா..."

"எது...?"

"இந்தப் பரிட்சை..."

"நான் ஹால் டிக்கெட் வாங்கினப்பவே உங்களுக்குத் தெரியும் தானே... கிளாஸைத்தான் அட்டெண்ட் பண்ண முடியல... நல்ல வேளையாய் நான் லீவே எடுத்ததில்ல... அதனால தேவையான அட்டெண்டன்ஸ் கையில் இருக்கு... எக்ஸாமையாவது அட்டெண்ட் பண்ணியாகனுமில்ல.."

"நீ படித்து வேலைக்குப் போய் யாரைக் காப்பாற்றப் போகிற...?"

அவனின் குதர்க்கமான கேள்விக்கு ராதிகா பதில் சொல்லவில்லை... அவனுக்கு சம்மதமில்லை என்று தெரிந்த பின்னால் அதைப் பற்றிப் பேசாமல் மௌனம் சாதித்தாள்.. அவனே ஒருவழியாக இறங்கி வந்து...

"கிளம்பு..." என்று சொல்லிவிட்டான்...

"இவ சென்னைக்குப் போகனுமாம்மா... பரிட்சை எழுதனுமாம்..."

மேகலாவிடம் குற்றச்சாட்டைக் கூறுவதைப் போலக் கூறிவைத்தான்... 'எதற்கு அதெல்லாம்..? வேண்டாம்..' என்று அவள் மறுத்து விடுவாள் என்று எதிர் பார்த்தான்.. அப்படி அவள் சொல்லி விட்டால்.. அதுதான் சாக்கென்று ராதிகாவை பரிட்சை எழுதவிடாமல் நிறுத்தி விடலாம் என்ற நினைவு அவனுக்கு...

மேகலாவோ.. அவன் நினைவில் கல்லைத்தூக்கி போட்டாள்...

"அப்படியா ராதிகா...? தாராளமாய் போயிட்டு வாம்மா... நல்லாப் படிச்சு பரிட்சை எழுது.. என் மருமக மார்க்கைச் சொல்லி நான் பெருமைப் பட்டுக்கனும்.. அப்படி நீ பரிட்சை எழுதனும்.." என்று சொல்லி விட்டாள்..

ராதிகாவை அழைத்துக் கொண்டு போய் சென்னையில விட்டுவிட்டு வருவதைத் தவிர.... பாலமுரளிக்கு வேறு வழி இருக்கவில்லை...

உம்மென்று முகத்தை தூக்கி வைத்துக் கொண்டுதான் அவன் சென்னைக்கு கிளம்பினான்.. வழி நெடுக ராதிகா என்ன பேசினாலும்... பதில் பேசாமல் இருந்தான்... அவள் வீட்டில் போய் இறங்கிய போதும் அதே பாரா முகம்தான் தொடர்ந்தது...

"என்ன அத்தான்... கல்யாணமாகி இரண்டு மாதம்கூட ஆகலை... அதுக்குள்ள சிரிப்பை தொலைச்சிட்டிங்க...?"

கீதாவின் கேள்விக்கு வலுக்கட்டாயமாக அவன் சிரித்து வைக்க...

"இதுக்கு நீங்க சிரிக்காமலே இருந்திருக்கலாம் அத்தான்..." என்று அவள் சொல்லி விட்டாள்...

தொலை தூரத்தில் நீயிருந்தாலும்...
என்னருகே உன் நினைவுதான்...

அன்றைய நாளின் நினைவில் இன்றும் சிரித்தாள் ராதிகா...

"என்னடி.. உனக்கு நீயாய் சிரிச்சுக்கறே..." என்ற கீதாவின் கேள்விக்கு கண்களைச் சிமிட்டினாள்...

"ஏய்ய்.. ராது.. நீகூடத் தேறிட்ட... என்ன..? அத்தான் டியுசன் எடுத்தாரா..?" கீதாவும் கண் சிமிட்டினாள்...

"அவர் சொல்லிக் கொடுத்திட்டாலும்..." கீதாவைப் போலவே நொடித்தாள் ராதிகா...

"யாரைச் சொல்கிற..? நம்ம்ம்ம்ம... அத்தானையா சொல்கிற...?"

கீதா வேண்டுமென்றே 'நம்ம' என்பதில் அழுத்தம் கொடுக்க... ராதிகா அவளை முறைத்தாள்...

"அவர் என்னோட அத்தான்..."

"எனக்கு மட்டும் அண்ணனா...?"

"அடிவாங்கப் போறேடி... போ.. போய் படுத்துத்தூங்கு..."

கீதாவை விரட்டிவிட்டுவிட்டு படுத்த ராதிகாவிற்கு தூக்கம் பிடிக்கவில்லை...

'இந்நேரம் அவர் என்ன பண்ணிக்கிட்டு இருப்பார்..? நான் இருக்கும் போதே பால்கனியில் நைட் வாக்கிங் போவார்.. இப்ப நானும் இல்லை.. விடியவிடிய வாக்கிங்தானா...?'

அவள் தாபத்துடன் புரண்டு படுத்து முரளியின் நினைவில் கீதாவின் மீது கையைப் போட்டு வைக்க... அவள் எழுந்து விளக்கைப் போட்டாள்...

"என்ன கீதா...?"

"முதல்ல தள்ளிப் படுடி... அதென்ன..? உங்களுக்குன்னு ஒரு ஆள் கிடைச்சிட்டா... பக்கத்தில படுத்திருக்கிறவங்களை தூங்க விடாம டார்ச்சர் பண்ணுவீங்களோ...?"

ராதிகாவுக்கு வெட்கமாகி விட்டது.. அவள் அவசரமாக எழுந்து கீதாவின் வாயைப் பொத்தினாள்...

"சத்தம் போடாதேடி..."

"உனக்கும்.. எனக்கும் நடுவில தலையணையைப் போட்டாத்தான் சரிப்படும்... ம்ஹீம்.. இத்தனை நாளாய் இது என் ரூமா இருந்துச்சு... வந்ததுதான் வந்த.. அத்தானையும் கூட இருக்க வைச்சிருக்கலாமில்ல..?"

"ஒருநாள்.. இரண்டு நாள்ன்னா அவர் கூட இருப்பார்... இத்தனை நாளாய் இருப்பாரா...?"

"அதுக்காக... என் ரூமில்.. என் சுதந்திரத்தைப் பறிக்கனுமா..?"

கோபமேயில்லாமல் சொன்ன கீதா.. ராதிகாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்...

"நீ சைவக் கொக்கு.. நீயே இந்தப் பாடுபடறியே.. அங்கே அத்தானின் நிலைமை எப்படியிருக்கும்...?"

பாலமுரளியின் நிலைமை படு மோசமாக இருந்தது.. கட்டிலில் உருண்டு புரண்டவன்.. தரையில் விழுந்து வைத்தான்.. கண் விழித்துத் தரையில் கிடப்பதை உணர்ந்தவன்.. தலையணையைத் தூக்கி அடித்தான்...

'என்னவோ தினமும் அவகூட குடும்பம் நடத்தினதைப் போலத்தான் நினைப்பு.. அவபாட்டுக்கு அந்த மூலையிலே படுத்திருப்பா.. நீ பாட்டுக்கு இந்த மூலையிலே படுத்திருப்ப... அது நின்னு போச்சுன்னா இந்த ஆட்டம் காண்பிக்கிறே...'

கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தைப் பார்த்தபடி மனதிற்குள் திட்டித் தீர்த்தான்...

மாடிப்படிகளில் இறங்கும் போதே... டைனிங் ஹாலில் ராதிகாவைத் தேடி.. ஏமாந்தன அவன் விழிகள்...

'அவதான் பரிச்சை முக்கியம்ன்னு சென்னைக்கு ஓடிட்டாள்ல.. இன்னும் எதுக்கு அவ நினைப்பு...?'

நினைக்காமலிருக்கத்தான் அவன் முயற்சி செய்தான்.. என்னதான் அவளை நினைக்கக் கூடாது என்று அவன் போராடினாலும்.. அவன் மனம் அவளைத் தான் நினைத்து வைத்தது..

காரில் ஏறினால் பக்கத்தில் அவள் அமர்ந்திருப்பதைப் போலத் தோன்றும்...

'மோகினிப் பேய்ன்னு என்மேல அட்டைபோல ஒட்டினாளே...' அவன் உடல் சூடேறும்...

மில்லுக்குள் நுழைந்தால்... அவன்கூட இணை சேர்ந்து அவள் நடந்து வந்த தினம் நினைவுக்கு வரும்..

'ஊருபட்ட வாயடிப்பா.. ஆனா.. கும்பலா நாலு பேர் சேர்ந்து நின்னுட்டா பயந்து போயிருவா.. என் கையைப் பிடிச்சுத் தொங்கிக்கிட்டே தானே வந்தா...'

தோப்புக்குள் அவன் நின்ற இடமெல்லாம் ராதிகாவின் நினைவு கால் பதித்து வரும்...

'என்னவோ.. இந்தத் தோப்பையே அவதான் உண்டாக்கினதைப் போல சுத்திசுத்தி வந்தாளே...'

அவள் பிரியமாக கடித்துத் தின்ற அவனின் எச்சில்பட்ட கொய்யாக்காயின் நினைவில் அவன் கொய்யாத் தோப்பைச் சுற்றி வந்தான்...

'அதுக்குப் பெயர் என்னங்க..? வாலாட்டிக் குருவியா..?'

குழந்தை போல குதூகலித்தவளின் நினைவில் அந்தப் பறவையை அவனின் செல்போனில் படம் பிடித்தான்.. கடைசியாக அருவிக்கரைக்குப் போனதும் அப்படியே நின்று விடுவான்..

அருவிக்கரையின் ஓரமாக நின்ற அரசமரத்தடி பிள்ளையாரின் காலடியில் அமர்கின்ற பொழுதில் அவன் மனம் தளும்பும்...

'அவள் கனவில் உன்னைக் கண்டாளா..?'

தினமும் அருவிக்கரைக்கு போக அவன் தவறவில்லை...

அவன் மனமும்.. உடலும்.. 'ராதிகா.. ராதிகா..' என்று துடிக்க.. அவனாகப் போட்டிருந்த இரும்பு வேலி பொடிப் பொடியாய் தகர்ந்து நொறுங்கியது...

'ஏன் இப்படித் தவிக்கனும்..? பேசாம சென்னைக்குப் போய்... பண்ணை வீட்டிலே இருந்துக்கிட்டு.. அவளை பரிட்சை எழுத விட்டா என்ன..? பரிட்சை முடிஞ்சதும் கூப்பிட்டுக்கிட்டு வந்திட்டாப் போச்சு...'

மனமிருந்தால் மார்க்கமும் இருக்கத்தானே செய்யும்..?

பாலமுரளி முடிவு செய்து விட்டான்.. அவனால் ராதிகா இல்லாமல் இருக்க முடியாது எனும் போது.. ஏன் அவளைத் தள்ளி வைக்க வேண்டும்...?

'பண்ணை வீட்டுக்கும்.. எனக்கும்தான் ராசி போல.. கல்யாணத்துக்கு முன்னால அவளைத் தொட்ட அதே வீட்டில்தான்.. கல்யாணத்துக்குப் பின்னாலேயும் அவளைத் தொடனும்னு இருக்கும் போல இருக்கு..'

அவனது உடலின் உஷ்ண நிலை அதிகரித்தது...

'எனக்கு அவ வேணும்...'

இந்த நினைவு வந்தவுடன் பாலமுரளியால் தேனூத்தில் இருக்க முடியவில்லை.. சென்னைக்கு கிளம்பி விட்டான்...

"அம்மா... சென்னையில வேலை இருக்கு..."

மேகலாவைத் தனியாக விட்டுவிட்டுப் போகிறோமே என்ற தயக்கத்துடன் அவன் சொன்னபோது.. பரிவுடன் அவனைப் புரிந்து கொண்டவிதமாக சிரித்தாள் மேகலா..

"அதுக்கென்னப்பா.. போயிட்டு வா..."

"திரும்ப கொஞ்ச நாளாகும்..."

"ஆனா ஆகிட்டுப் போகுது.. எனக்கென்ன குறை..? வீட்டில வேலையாளுக இருக்காங்க.. வெளியே போய்வர கார் இருக்கு... டிரைவர் இருக்கான்.. அவசர ஆத்திரம்ன்னா உதவிக்கு ஒடிவர நாச்சியப்பனும்.. சதிஷீம் இருக்கானுக.. நீ மகராசனாய் போயிட்டுவா..."

"நம்ம பண்ணை வீட்டிலதான் தங்கப் போறேன்ம்மா.."

"ஏண்டா.. உன் மாமனார் வீட்டில தங்க வேண்டியது தானே...?"

"எனக்கு அது சரிப்படாது..."

"அப்புறம் உன் இஷ்டம்.. எதுக்கும் அவங்க வீட்டிலே ஒருநாள் தங்கிட்டு.. அப்புறமாய் ராதிகாவைக் கூப்பிட்டுக்கிட்டுப் போ... அங்கே இருக்கிற வரைக்கும்.. ஊடும்... பாடும்.. ராதிகாவோட வீட்டுக்கு போய்ட்டு வந்துக்கிட்டு இரு.. பாவம்.. பெண்ணைப் பெத்தவங்க.. அவங்களுக்கும் ராதிகாவை கூட வைச்சுக்கனும்கிற ஆசை இருக்காதா..?"

"ஆகட்டும்மா..."

பாலமுரளி கிளம்பி விட்டான்.. சென்னையில் நுழைந்ததும் மணியைப் பார்த்தான்.. காலை பதினொன்று என்றது...

'ம்ம்.. இன்னைக்குத்தானே பரிட்சை ஆரம்பிக்குது? முதல்நாள் பரிட்சை... அவ எழுத ஆரம்பிச்சிருப்பா.. பண்ணை வீட்டுக்குப் போய் குளிச்சு முடிச்சு.. வயித்திலே எதையாவது போட்டுட்டு.. அப்புறமாய் அவளைக் கூப்பிட்டுக்கிட்டு வர.. காலேஜிக்கே போயிரலாம்... அவ பரிட்சை எழுதிட்டு வரும்போது என்னைப் பார்த்தான்னா சந்தோசப்பட்டுப் போயிருவா..'

நினைக்கும் போதே அவனுக்கு 'ஜிவ்' வென்று ஆகிப் போனது...

'இந்தக் காதல்தான் மனுசக் கழுதையை என்ன பாடு படுத்துது..' தனக்குள் சிரித்துக் கொண்டான்...

பண்ணை வீட்டின் முன்னால் நின்ற காரின் ஹாரன் ஒலியில் எட்டிப் பார்த்த பொன்னுச்சாமி அவசரமாகக் கதவைத் திறந்து விட்டான்... நீண்ட சிமிண்ட் பாதையில் ஓடிய கார் போர்டிகோவில் நின்றது... காம்பவுண்டின் இரும்புக் கதவைச் சாத்திய பொன்னுச்சாமி விரைந்து வந்தான்...

"வள்ளி.. வள்ளி..."

அவன் போட்ட சத்தத்தில்... தோட்டத்து அவுட் ஹவுஸில் இருந்து வெளியே வந்தாள் வள்ளியம்மாள்...

"இன்னாய்யா.. இன்னாத்துக்கு கூச்சல் போடற..?" என்று சொன்ன பாஷையில் விசாரித்தபடி வந்தவள்.. பாலமுரளியைக் கண்டதும் சப்தத்தைக் குறைத்துக் கொண்டாள்...

"ஐயா.. வாங்கய்யா.."

"என்ன.. வள்ளி சௌக்கியமா..?"

"உங்க தயவில.. சௌக்கியத்துக்கு இன்னாய்யா குறைச்சலு... அம்மா வல்லீங்களா..?"

"அவ ஏற்கனெவே இங்கே வந்திட்டா.."

"எங்க...?"

வள்ளியம்மாளின் கண்கள்.. சுற்று முற்றிலும் துழாவி வைக்க.. பாலமுரளி சிரித்தான்...

"இங்கேன்னா.. இங்கேயில்லை.. சென்னைக்கு வந்திட்டா.. அவ என்ஜினியரிங் படிச்சுக்கிட்டு இருந்தாள்ல.. அதான்.. பரிட்சை எழுதலாம்ன்னு வந்திருக்கா.. போனவாரம்தான் அவளைக் கூப்பிட்டுக் கிட்டு வந்து அவ அப்பா வீட்டிலே.. விட்டுட்டுப் போனேன்.."

"இங்கே வரலையேய்யா.." வள்ளியம்மாள் குறைபட்டாள்...

"வந்தவுடனேயே போக வேண்டியதாப் போயிருச்சு.. ஒரு நேரமாவது மாமனார் வீட்டிலயும் கை நனைச்சாகனுமில்ல.. அதான்.. வந்த சுருக்கில் அவளை விட்டவுடன் போயிட்டேன்..."

"இப்பவாவது அம்மா வருவாங்களா..?"

"அதுக்குத்தானே வந்திருக்கேன்.. அவ இங்கேயிருந்துதான் பரிட்சை எழுத போய்வரப் போறா.. செமத்தியா சமைச்சு வை.. மதியச் சாப்பாட்டுக் கெல்வாம் அவளை இங்கே கொண்டுவந்து சேர்த்துடறேன்..."

'மதிய உணவுக்குப் பின்..' பாலமுரளியின் நாடி நரம்பெங்கும் ஓர்விதமான உற்சாக அலை எழுந்து விழுந்தது...

"அதுக்கென்னய்யா.. தோ.. ஒரு நொடியில வேலையை ஆரம்பிச்சுட மாட்டேனா.. தா.. இன்னாத்துக்கு வாயைப் பார்த்துக்கிட்டு நிக்கிற... கடைக்கு ஓடிப்போயி நா சொல்லுறதை வாங்கிட்டு வா..."

வள்ளியம்மாள் சேலையை இழுத்துச் செறுகிக் கொள்ள.. பாலமுரளி பர்ஸை திறந்து பணத்தை எடுத்தான்..

"இந்தா பொன்னுச்சாமி... வள்ளி கேட்கிறதை வாங்கிட்டு வந்து கொடு... பத்தலைன்னா என்னிடம் கேட்டு வாங்கிக்க..."

"இன்னாத்துக்கு பத்தாம போகுது.. இதுவே அதிகம்.. கேட்டுக்க மச்சான்... தக்காளி அரைகிலோ..."

வள்ளியம்மாள் கணவனிடம் சமையலுக்கு தேவையான பொருள்களை பட்டியல் போட்டுக் கொடுத்துக் கொண்டிருக்க.. பாலமுரளி மாடியேறினான்..

"ஐயா.. காலம்பர நாஷ்டாவை ரெடி பண்ணிடறேன்.. நீங்க குளிச்சுட்டு சாப்பிட வாங்க..."

வள்ளியம்மாள் குரல் கொடுக்க.. சிரித்தபடி தலையசைத்தான்...

குளியலறைக்குள் புகுந்து குளிர்ந்த நீரில் தலையைக் கொடுத்தபோது... ராதிகாவின் நினைவு வந்தது...

'தினமும் என்கூட கொஞ்ச நேரம் ஸ்பெண்ட் பண்ணனும்...' அவள் குரல் காதில் ஒலித்தது...

'கொஞ்ச நேரம் போதுமா..?' தனக்குள் கேட்டுக் கொண்டவன் சிரித்துக் கொண்டான்..

ஈரத்தலையைத் துவட்டும் போது.. அவளுடன் எங்கேயாவது வெளியூருக்குப் போய்விட்டு வரவேண்டும் என்று தோன்றியது...

'அம்மாதான் தனியா இருந்துக்குவேன்னு சொல்லிட்டாங்கள்ல.. அவகூட ஹனிமூனுக்கு போயிட்டு வந்தா என்ன..?'

உடையணிந்தபடியே.. எந்த ஊருக்குப் போவது என்று யோசித்தான்..

'ஊட்டி..? கொடைக்கானல்...? ஊஹூம் வேண்டாம்.. இதெல்லாம் அவ பார்த்திருப்பா.. வடக்கே கோவா.. சிம்லான்னு கூப்பிட்டுக்கிட்டுப் போகலாமா...'

ராதிகாவை அழைத்து வர கல்லூரிக்குப் போய் விட வேண்டும் என்ற எண்ணத்துடன் கார் சாவியைக் கையில்

எடுத்துக் கொண்டவனுக்கு... இவை அனைத்தையும் விட்டுவிட்டு.. வெளிநாட்டுக்கு போய் வந்தாலென்ன என்று தோன்றியது...

'அதான் சரி.. அந்த சங்கர் வெளிநாட்டில தான் படிச்சான்.. இந்த பாலமுரளி.. பெண்டாட்டியை ஹனிமூனுக்காக வெளிநாட்டுக்கே கூப்பிட்டுக்கிட்டு போனான்னு இருக்கனும்..' உற்சாகத்தில் அவன் விசிலடித்தான்..

நீ விட்டுச் சென்ற நினைவுகளில்..
மூழ்கியே மூச்சுத் திணறினேன்...

விசிலடித்தபடி மாடிப்படிகளில் இறங்கி வந்த பாலமுரளியைக் கண்டதும் வள்ளியம்மாள்.. பொன்னுச்சாமியின் காதுகளில் கிசுகிசுத்தாள்...

"பாத்தியாய்யா... பொஞ்சாதியைப் பிரிஞ்சு ஒருவாரம்தான் ஆகுதாம்... அதைத் திரும்பப் பார்க்கப் போறதுக்கு ஐயா மனசுக்குள்ள கும்மாளம் கொடிகட்டிப் பறக்குது... நீயும் இருக்கியே..."

"இன்னாம்மே.. சந்தடி சாக்கில எங்கால வாரி வுடற.."

"ஐய்யே.. அடங்குய்யா.. நமக்கு கண்ணாளம் ஆனவுடனே ஆடிமாசம் வந்து தொலைச்சது..."

"அதுவா வந்ததுக்கு நான் இன்னாம்மே பண்ணுவேன்... நானா அதை இட்டாந்து வுட்டேன்...?"

"போய்யா.. நீயும் உன் பேச்சும்.. ஆடிமாசம் போனவள... தேடி வந்தியாய்யா..."

"அதான் உங்க வூட்டுல இருந்து இட்டாந்து வுட்டாங்களே..."

"வுட்டாங்க.. நீயிருந்தியா வூட்டுல..? அதான் சாக்குன்னு.. ஆடி மாசமே கழண்டுக்கிட்டு போன ஆளு.. ஆடிபோயி.. ஆவணிபோயி.. புரட்டாசியும் போயி.. ஐப்பசி மாசம் தானேய்யா வந்து சேந்த..."

"அது.. அதுவந்து.."

"இன்னா.. வந்து போயின்னு ராகம் போடற..."

"சேக்காளி.. பசங்க கூப்பிட்டாங்கம்மே..."

"எங்கே.. சினிமாவுக்கா..?"

"இல்லேம்மே.. கேரளா பக்கம் போயிட்டு வரலாமுன்னு சொன்னாங்க..."

"நீயும் பின்னாடியே போயிட்ட... அந்தப் பக்கம் பொஞ்சாதி.. அப்பன் வூட்டுக்குப் போனா.. இந்தப் பக்கம் கம்பியை நீட்டின ஆளுதான நீ... அங்கன பாருய்யா.. புருசன் பொஞ்சாதின்னா இப்படி இருக்கனும்..."

வள்ளியம்மாள் ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்க...

"என்ன பொன்னுச்சாமி.. வள்ளியம்மா என்ன சொல்லுது..?" என்று கேட்டபடி டைனிங் டேபிளில் அமர்ந்தான் பாலமுரளி...

"ஒன்னுமில்லங்கய்யா.. அம்மா எப்ப வருவாங்கன்னு பேசிக்கிட்டு இருந்தோம்..."

வள்ளியம்மாள் பதவிசாகப் பதில் சொல்லியபடி பாலமுரளியின் முன்னால் தட்டை வைத்துப் பரிமாற ஆரம்பித்தாள்...

"பரவாயில்லையே... நீ கிச்சடி கூடப் பண்ணுவியா...?" பாலமுரளி ஆச்சரியப்பட்டான்...

"செட்டியார் வீட்டில வேலை செஞ்சவ முதலாளி.. அவங்க கைப்பக்குவம் அப்படியே வரும்..", பொன்னுச்சாமி பெருமைப்பட்டுக் கொண்டான்...

வயிற்றுப் பசியை அப்போதுதான் உணர்ந்தவனாக திருப்தியுடன் சாப்பிட்டு முடித்த பாலமுரளி...

"ருசியாய் இருந்துச்சு வள்ளி.. இதுக்காகவே பொன்னுச்சாமிக்கு இந்த மாசத்திலயிருந்து சம்பளத்தை ஆயிரம் ரூபாய் அதிகமாக்கிட்டேன்..."

"ஐயா..!"

கணவனும்... மனைவியும் ஆனந்தத் திகைப்பில் ஆழ்ந்திருக்க... பாலமுரளி வாசலுக்கு வந்து காரில் ஏறினான்.. ராதிகாவைப் பார்க்கப் போகும்

நினைவில் அவன் மனதில் சந்தோச நீரூற்று பொங்கிக் கொண்டிருந்தது...

அப்போதிருந்த மனநிலையில் யார் எதைக் கேட்டாலும்.. இதோ வைத்துக் கொள் என்று தந்து விடும் மனநிலையில் அவன் இருந்தான்...

கொடுப்பதில் இருக்கும் சந்தோசத்தை உணர வைத்த ராதிகாவின் மீது அவனுக்குள் காதல் அதிகமானது.

'வந்துக்கிட்டே இருக்கேண்டி...'

அவனைப் பார்த்தவுடன் அவள் முகம் எப்படி மலரும் என்ற நினைவில் அவன் மனதில் எதிர்பார்ப்பின் அலைகள் உற்பத்தி ஆகின...

'காலையில போயி.. மதியம் சாப்பிட வர்றதுக்கே அந்தப் பார்வை பார்ப்பா.. இப்ப பார்த்து ஒரு வாரமாச்சு.. ஓடிவந்து கட்டிக்கிட்டாலும் ஆச்சரியப்படறதுக்கில்ல...'

தென்னந்தோப்பில் ராதிகா காட்டிய நெருக்கம் தந்த நினைவில் அவன் காரின் வேகத்தைக் கூட்டினான்..

'ம்ம்... என்னதான் விழுந்தடிச்சுக்கிட்டு ஓடினாலும்.. அவ வரும்போதுதானே வருவா.. பரிட்சையை பாதியில விட்டுவிட்டா வரமுடியும்...'

தன் வேகத்தைக் குறித்து மனதிற்குள் சிரித்துக் கொண்டான்...

சிக்னலில் கார் நின்றது.. அவனுக்கு முன்னாலிருந்த ஹீரோஹோண்டாவில் அமர்ந்திருந்த பெண்ணின் நீண்ட பின்னலில் அவன்மனம் ஆடியது.. 'அவ முடியை விரிச்சு

விட்டா தரையைத் தொடும்.. அப்படியே மோகினிதான்.. மயக்கும் மோகினி...!'

அவனறிந்த அவளின் உடலழகில் அவன் மனம் மயங்கியது...

'த்ச்சு.. தேவையில்லாம அவளைத் தள்ளி வைச்சுட்டு இப்ப அவஸ்தைப் படறேன்... அவ கண்ணு பூராவும் என்மேலயே இருக்கு... லேசாப் பார்த்தாலே மயங்கிப் போறா.. அவளைத் தொட்டு ஆளாம... விட்டு விலகி நின்னு.. இத்தனை நாளையும் வீணடிச்சுட்டேனே..'

பார்க்கப் போவது மனைவியை என்பது பாலமுரளிக்கு மறந்து விட்டிருந்தது.. என்னவோ.. காதலியை முதன் முதலாகச் சந்திக்கப் போவதைப் போல ஒரு பரவச அலை அவன் மனதில் உற்பத்தி ஆகியிருந்தது...

'ஹப்பா... ஒருவழியா சிக்னல் விழுந்துருச்சு...'

காரைக் கிளப்பியவன் படு வேகமாக ஓட்டினான்.. வாயுவேகம்... மனோ வேகம்.. என்பதைப் போல சாலையில் கார் பறந்தது... ராதிகாவின் கல்லூரி வளாகத்திற்குள் காரைச் செழுத்தியவன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்..

'இன்னும் நேரமிருக்கு போல...'

காரை விட்டு இறங்கினால் எங்கே உட்காருவது என்ற சிந்தனையுடன்... காருக்குள்ளேயே ஏஸியை போட்டுவிட்டு பாடலை ஒலிக்க விட்டபடி உட்கார்ந்து விட்டான் பாலமுரளி...

"அம்மம்மா.. கேளடி தோழி..!
நிலாவினில் நின்றொரு நாழி...!
சொல்லாலே உரைத்தது பாதி...
தன்னாலே அறிந்தது மீதி...
அம்மம்மா...!"

எல்.ஆர். ஈஸ்வரியின் ஆழ்ந்த குரலில் ஒலித்த பாடலின் நுணுக்கங்கள் உணர்த்திய உணர்வில் அவன் மூழ்கி விட்டான்...

அந்தப் பாடல்... ராதிகாவிற்கு பிடித்தமான பாடல்.. அடிக்கடி இதை ஒலிக்க விட்டுக் கேட்டுக் கொண்டிருப்பாள்... அவள் விரும்பினாளே என்றுதான் பழைய பாடல்களின் சிடியில் அந்தப் பாடலையும் சேர்த்து பதிவு பண்ணியிருந்தான் பாலமுரளி...

இப்போது அந்தப் பாடல் ஒலித்த போது... ராதிகா அவன்மீது மயக்கத்துடன் கிறங்கிச் சரிந்த அந்த நாளின் நினைவு அவன் மனதில் வந்தது..

'அன்னைக்கு மட்டும் இந்த போன் கழுதை சத்தம் போடாம இருந்திருந்தா.. நல்லாயிருந்திருக்கும்... இதுதான் நேரம் காலம் தெரியாம சத்தம் போட்டுக் காரியத்தை கெடுத்து வைக்குதே...'

கொலைவெறியோடு கையிலிருந்த செல்போனை பார்த்தான் பாலமுரளி... விட்டால் கண்ணகி சிலம்பை எறிந்ததைப் போல.. அந்த செல் போனையும் விட்டெறிந்து சுக்கு நூறாக்கியிருப்பான்.. அது பாவம் போல அமைதி காத்ததில் விட்டு வைத்தான்...

செல்போனை உடைத்தெறியும் ஆசை அடிக்கடி அவனுக்கு வருவதுண்டு.. அந்த அளவுக்கு அவனது செல்போனின் அழைப்பு அவனைச் சோதித்திருந்தது...

இரண்டு முறை அவனாகப் போட்ட இரும்பு வேலியை அவன் உடைக்க யத்தனித்துக் கொண்டிருந்த போது.. அந்த செல்போனின் அழைப்புக்கள் அவனது யத்தனத்தையே உடைத்து... இரும்புவேலியை இறுக வைத்திருக்கின்றன.. அந்த செல் போனின் அழைப்புக்கள் மட்டும் வந்திராமல் இருந்திருந்தால்...?

பாலமுரளி... சீட்டில் சாய்ந்து கண்மூடிக் கொண்டான்...

'எவ்வளவு ஆசையாசையா கல்யாணத்துக்கு நாள் பார்த்தேன்...'

பழைய நினைவுகள் அவன் மனதில் வந்து நின்றன..

'அவளும் சந்தோசமாத்தான் இருந்தா.. நிச்சயத்துக்கு முதநாள் நான் கூப்பிட்டதும் பண்ணை வீட்டுக்கு வந்தா.. அதுக்குப் பின்னாலே...'

அந்த அனுபவத்தின் நினைவில் அவன் உடலில் சூடேறியது...

"தள்ளாடி... தள்ளாடி நடமிட்டு..
அவள் வந்தாள்...
சொல்லாமல் கொள்ளாமல்..
அவளிடம் நான் சென்றேன்..

அது கூடாதென்றாள்..
மனம் தானாதென்றாள்..
ஒன்று நானே தந்தேன்..
அது போதாதென்றாள்..."

அவனது மனநிலையை உணர்ந்ததைப் போலக் காரில் பாடல் ஒலித்தது...

'இது யட்சினியின் வேலை போல..' அவன் சிரித்துக் கொண்டான்...

"அனுபவம் புதுமை..
அவளிடம் கண்டேன்...
அந்நாளில் உண்டான..
பொல்லாத எண்ணங்களே...
ஆஹா.. பொன்னான கைபட்டு..
புண்ணான கன்னங்களே...
லாலால.. லாலால.. லா..."

அன்று கண்ட அனுபவத்தை மீண்டும் காணத் துடித்தான் அவன்...

'இன்னும் என்ன செய்கிறா..'

பொறுமையிழந்தவனாக செல்போனை கையில் எடுத்தான்...

'போன் பண்ணிக் கேட்கலாமா...'

அது வேண்டாம் என்று தோன்ற.. செல்போனை காரில் போட்டான்...

'பரிட்சை ஹாலில் போனை அட்டெண்ட் பண்ணலாமோ... கூடாதோ...'

அது மட்டுமில்லாமல் திடிரென்று அவள் முன்னால் சென்று நின்று அவள் கண்களில் தெரியும் மின்னலைக் காண வேண்டும் என்று அவனுக்கு ஆசையாக இருந்தது..

'பிரமிச்சுப் போய் நின்னுடுவா...'

அவனைக் கடந்து இரு பெண்கள் பேசிக் கொண்டே போக.. கைக்கடிகாரத்தை மீண்டும் பார்த்தான்...

'பரிட்சைமுடிகிற நேரம்தான்... இப்ப வந்திருவா...'

இப்போது பெண்கள்.. பரவலாக வெளியே வர ஆரம்பித்தார்கள்.. பாலமுரளி கூர்மையான பார்வையுடன் கவனித்துக் கொண்டிருந்தான்... தொலைவில் ராதிகா வருவதைப் போலத் தெரிந்தது...

'வந்துட்டா..'

வருடக் கணக்கில் பிரிந்திருந்த மனைவியைப் பார்க்கும் தாபத்துடன் அவன் பார்த்தான்..

அவள் சேலை கட்டியிருந்தாள்.. நேர்த்தியான மடிப்புடன் அதை அவள் கட்டியிருந்த விதம்.. அழகானதாக இருந்தது.. பாலமுரளியை வசீகரிக்கும் கூந்தலை நீண்ட பின்னலாக்கியிருந்தாள்.. அவள் நடந்து வந்தபோது... தாள லயத்துடன் அது ஆடிய விதத்தில் பாலமுரளியின் மனம் சிக்குண்டது..

இறங்கி எதிரே நடந்து போய் அவள் கண்முன்னால் நிற்க வேண்டும் போலத் தோன்ற.. கார் கதவில் கையை வைத்தான்...

'அது யாரு... அவ கூட வர்றது... ?'

ஹேமாவை இனம் கண்டு கொண்டவனின் புருவங்கள் சுருங்கின...

'இவ கூடப் பேசக் கூடாதுன்னு சொல்லியிருக்கேன்.. அதை மீறி பேசறாளா... ?'

கோபம் வந்தாலும்.. தனிமையில் அதைக் கண்டித்துக் கொள்ளலாம் என்ற நினைவுடன் கார் கதவைத் திறக்கப் போனான்..

அப்போதுதான் அது நிகழ்ந்தது... அவனது காரைக் கடந்து போன ஒரு கார்.. ராதிகாவை சமீபத்து நின்றது.. கார் கதவைத் திறந்து கொண்டு சங்கர் இறங்கினான்...

'இவனா..! இவன் எதுக்காக இங்கே வந்திருக்கான்...'

பாலமுரளியின் விழிகள் தீங்கங்குகளாக மாறின...

சங்கர்... ஹேமாவின் அருகில் சென்று ஏதோ பேசினான்... அவள் ராதிகாவிடம் எதையோ சொன்னாள்.. ராதிகா.. சங்கருடன் பேச ஆரம்பித்து விட்டாள்...

அவர்கள் மூவரும் சுற்றுப் புறத்தை மறந்தவர்களாக பேசிக் கொண்டிருக்க... பாலமுரளியின் உடலில் இருந்த காதல் உணர்வுகள் காணாமல் போய் கொண்டிருந்தன...

மூவராகப் பேசிக் கொண்டிருந்தவர்களில் ஹேமா மட்டும் விலகி... கல்லூரியை நோக்கிப் போய்விட.. சங்கரும்.. ராதிகாவும் பேசியபடியே நகர்ந்து... மர நிழலில் கிடந்த.. சிமிண்ட் பெஞ்சில் அமர்ந்தார்கள்...

'வேணும்னே இவங்க ரெண்டு பேரையும் கோர்த்து விட்டுட்டு அந்த ஹேமா போயிட்டாளா.. அவளுக்கு இதே வேலைதானா..? வேற பொழைப்பே இல்லையா...?'

பாலமுரளியின் ரத்தம் கொதித்தது...

ஹேமா திரும்பி வந்த பாடாக இல்லை... சங்கரும்.. ராதிகாவும் பேசிக் கொண்டிருந்த பேச்சை நிறுத்தவுமில்லை... வெகுநேரம் கழித்தே ஹேமா திரும்பி வந்தாள்... வந்தவள் கிளம்பும் உத்தேசமில்லாதவளைப் போல.. ராதிகாவின் அருகிலேயே அமர்ந்து விட்டாள்.. அவர்கள் மீண்டும் பேச ஆரம்பித்தனர்..

'இறங்கிப்போய் அவளை நாலு சாத்து சாத்தி.. இழுத்துக்கிட்டு வரலாமா..?' பாலமுரளிக்குள் ஆத்திரம் பீறிட்டது...

சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டவனாக அதை அடக்கிக் கொண்டான்..

ஒருவழியாக சங்கர் காரில் ஏறிக் கிளம்ப... அவனுக்கு ராதிகாவும்.. ஹேமாவும்.. கையசைத்து விடை கொடுத்தார்கள்.. அதைப் பார்த்துக் கொண்டிருந்த பாலமுரளியின் கொலைவெறி அதிகமானது...

'எவ்வளவு திமிரிருந்தா.. அவனுக்குப் போய் டாட்டா காண்பிப்பா...'

அவனுடைய காரைக் கடந்து போக முனைந்த ராதிகாவைக் கண்டதும் பாலமுரளிக்கு வெறுத்துப் போய்விட்டது...

'காரைக் கூடக் கவனிக்கல.. இவ்வளவுதானா... இவ...?'

அதற்குள் ராதிகா காரைக் கவனித்து விட்டாள்.. அவள் கண்களில் மின்னல் வந்தது... அதைக்கண்ட பாலமுரளிக்கு எரிச்சல்தான் வந்தது...

'இதுக்கொன்னும் குறைச்சலில்ல...'

ராதிகா ஆவலுடன் காரின் முன்பக்கமாக வந்து குனிந்து பார்த்தாள்...

காணாமல் போன என்காதல் உணர்வுகளை மீட்டுக் கொடுக்க உனக்கு மனமில்லையா..?

தேனூத்தில் சுழித்தோடிய வாய்க்கால் நீரைப் போலத்தான்.. அங்கும் நீர் சுழித்தோடியது... என்ன ஒன்று.. தேனூத்தில் கிணறு இருக்கும்.. அகலமான ஆழ்கிணறு.. அதிலிருந்து அருவியாக பம்ப்செட் தண்ணீர்பாயும்... மணல் வரப்புகளின் கிணற்றுக்கு அருகேயுள்ள வயல்களுக்கும்... தோப்புக்களுக்கும் நீர் பாயும்...

சென்னையில் அப்படியில்லை... இங்கே ஆழ்துளை கிணறு இருந்தது.. ஆற்றுப் பாசன வயல்களையும்..

தோப்புகளையும் போல பரந்து விரிந்த சாம்ராஜ்யமாக இது இல்லை... பாரதியாரின் காணிநிலத்தைப் போல சிறிதளவில் பரந்திருந்தது... மணல் வரப்புக்கள் இல்லாமல்... சிமிண்டினால் கட்டி விடப் பட்டிருக்கும் வாய்க்காலில் நீர் பாய்ந்து கொண்டிருந்தது...

சென்னையின் பண்ணைவீட்டு வாய்க்காலின் சிமிண்ட் கைப்பிடிச் சுவரில்... மாலை நேரங்களிலும்.. காலை நேரங்களிலும் அமர்ந்து கதை பேசலாம்.. அப்படிப் பேச ராதிகாவுக்கு பிடிக்கும்...

ஒடும் வாய்க்கால் நீரில் கைகளால் அளைந்தபடி பேசுவதில் உள்ள ஆனந்தத்தை வார்த்தைகளில் சொல்லி விட முடியாது...

இன்று நேரமிருந்தது... வாய்க்காலில் நீர் ஓடியது... அவளும் முரளியும்... கைப்பிடி சுவரில்தான் அமர்ந்திருந்தார்கள்.. இருந்தும் நீரோடையில் கை நனைக்க அவளால் முடியவில்லை...

இந்தத் துக்கத்தையும் வார்த்தைகளால் சொல்லி விட முடியாது...

மனம் கனக்கும் சுமையை அறிந்தவர்களால் கூட அடுத்தவர்களின் மனச்சுமையின் பாரம் எந்த அளவில் இருக்கும் என்று அறிந்து விட முடியாது.. ராதிகாவின் மனச்சுமையும் அது போலத்தான்..

மலையளவு கனத்தை அது கொடுத்துக் கொண்டிருந்தது..

அவள் போராடிப் பார்த்து விட்டாள்... எவ்வளவோ விளக்கங்களைச் சொல்லி விட்டாள்.. அது எதையுமே பாலமுரளி நம்பத் தயாராக இல்லை...

அவனது கேள்வியெல்லாம் ஒரே திசையிலேயே பயணித்தன...

"அந்த ஹேமாகூடப் பேசக்கூடாதுன்னு சொல்லியிருந்தேனே.. ஏண்டி பேசின....?"

"நான் தேடிப் போய் பேசலைங்க... நான் சென்னைக்கு வந்திருக்கிற விவரத்தைக் கூட அவளுக்குச் சொல்லலை..."

"அப்புறம் எப்படிடி.. அவ உன்கூட ஜோடி போட்டுக்கிட்டு வந்தா...?"

"எக்ஸாம் எழுதும் போது.. ஒருத்தரை யொருத்தர் பார்த்துக்காம இருக்க முடியுமா..? இரண்டு பேரும் ஒரே ஹாலில்தான் எக்ஸாம் எழுதினோம்..."

"நீ முதலிலேயே முடிச்சிட்டு ஓடி வந்திருக்க வேண்டியது தானே...?"

அப்படி அவள் வந்திருந்தால்... அடுத்தடுத்த என்னென்ன நிகழ்வுகள் நிகழ்ந்திருக்கக் கூடும் என்ற நினைவில் பாலமுரளி பொங்கினான்...

அதையறியாத ராதிகா.. அதற்கு அவசியம் தான் என்ன என்று வாதம் செய்தாள்...

"அவ என்ன கடன் கொடுத்தவளா...? நானென்ன அவளிடம் கடன் வாங்கியவளா..? எதுக்காக அவளைப்

பார்த்து பயந்து எக்ஸாமைக் கூடச் சரியா எழுதாமல் நான் ஓடி வரனும்...?"

பாலமுரளி அவளை உறுத்துப் பார்த்தான்.. இந்த ராதிகா.. தேனூத்தில் அவன் பார்த்த ராதிகாவாக இல்லை என்று அவன் மனம் சொல்லியது... சென்னையில் கால் வைத்தவுடன் இவள் மாறிவிட்டாள்... இல்லாவிட்டால்.. தேனூத்தில் வீட்டுக்கு வந்த சங்கரை 'வா' வென்று வரவேற்காதவள்... சென்னையில்... பட்டப்பகலில்.. கல்லூரி வளாகத்திற்குள் நின்று அவனுடன் பேசத் துணிவாளா..?

"ஒ.. எதுத்துக் கேள்வி கேட்கிற...?"

"கேள்விதான் கேட்கிறேன்.. உங்களை எதிர்த்து கேள்வி கேட்கலை..."

"நான் ஒன்னு சொன்னா.. அதைச் செய்யாம.. ஏன் அதைச் செய்யனும்ன்னு கேள்வி கேட்டா.. அது எதுத்துக் கேள்வி கேட்கிறதில்லையா..?"

ராதிகா ஆயாசமாக உணர்ந்தாள்.. அவன் இவளைப் புரிந்துகொள்ளவே மாட்டானா என்ற ஏக்கம் அவளுக்குள் எழுந்தது...

உயிருக்குயிராய் பழகின தோழி... ஒரே அறையில் அமர்ந்து பரிட்சை எழுதுகிறாள்... ராதிகா பரிட்சையை எழுதி முடித்து வெளியே வரும் அதே நேரத்தில் அவளும் வெளியே வருகிறாள்... மாதக் கணக்கில் பார்க்காமல் இருந்த தோழியிடம் ஆவலாக அவள் பேசவந்தால் முகம் திருப்பிக் கொள்ள முடியுமா..?

"திருப்பியிருக்கனும்..." என்றான் பாலமுரளி...

"அவயாரு... நீ யாருடி..? நீ எதுக்காக அவகிட்ட நின்னு பேசனும்...?"

"உங்க பிரண்ட்ஸிடம் நீங்க பேச மாட்டிங்களா..?"

"என்னோட நண்பர்கள் யாரும் இப்படி குடியைக் கெடுக்கிற வேலையைப் பண்றதில்ல..."

ஹேமாவின் மீது எப்போப்பட்ட பழி விழுந்திருக்கிறது என்று மனக்கஷ்டப் பட்டாள் ராதிகா...

அவள்.. பாவம்.. சூது.. வாதறியாதவள்.. அவள் சொல்லியா எல்லாம் நடந்தது...?

"அவதாண்டி... அவளால்தான் எல்லாமும்... இல்லேன்னா... நீ காலேஜிக்கு வந்திருக்கிற விவரம்.. அந்த சங்கருக்கு எப்படித் தெரிந்தது..?"

"அதை ஹேமா சொல்லலை..."

"நீ சொன்னயா..?"

வேட்டைக்காரனின் விழிகளின் பளபளப்பை பாலமுரளியின் விழிகள் பிரதிபலித்தன... அந்த நேரத்தில் அவன் முகத்தைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது.. அந்த பயங்கரமான முகத்தையும் ஆசையுடன் கண்களில் காதலைத் தேக்கி அவள் பார்த்தாள்.. அந்தப் பார்வையைக் கண்டவனின் முகம்.. இன்னும் பயங்கரமாக மாறியது...

"இப்படிப் பார்க்காதே..." அவன் உறுமினான்...

"இப்படிப் பார்த்துப் பார்த்தானேடி என்னை ஒருவழி பண்ற...? என்பெயரைச் சொன்னா தேனூத்தே நடுங்கும்.. உனக்கு என்மேல் பயமில்லாம போயிருச்சு... என்னை எதிர்த்து நிற்க யாரும் துணிஞ்சதில்ல... நீ துணிஞ்சு நிற்கிற..."

"இப்படிப் பேசாதீங்க ப்ளீஸ்..." ராதிகாவின் விழிகளில் கண்ணீர் ததும்பியது...

"மத்தவங்களும்.. நானும் ஒன்றில்லை... உங்களிடம் எதுக்காக நான் பயப்படனும்... நீங்க என்ன சிங்கம்... புலி.. கரடியா..? இல்லை பேய்.. பிசாசா...? என் புருசன்..! உங்களிடம் எனக்கு பயம் எப்படி வரும்..? ஆசைதான் வரும்..."

வெட்கச் சிகப்பு முகத்தில் படற... நாணம் கலந்த துக்கத்துடன் இதைச் சொன்னாள் ராதிகா...

"ஆசை..! உனக்கு என்மேல ஆசை...! இதை நம்பச் சொல்றியா..? போடி... போய் காதில பூச்சுத்தியிருக்கிற இளிச்சவாயன் எவனாவது இருப்பான்... அவனிடம் போய் இந்தக் கதையைச் சொல்லு... நான் பாலமுரளி... ஞாபகம் வைச்சுக்க..."

'என்றைக்குத்தான் நீ என் மனதை புரிந்து கொண்டிருக்கிறாய்..? இன்று புரிந்து கொள்ள...'

ராதிகா வெறுமையுடன் வானம் பார்த்தாள்...

அவளுக்காக அவன் தேனூத்தை விட்டுக் கிளம்பி வந்ததில் அவளுக்குள் நந்தவனமே மலர்ந்து நின்றது... இதை யாரறிவார்..? மற்றவர்கள் அறிந்தாலும்..

அறியாவிட்டாலும்... அதைப்பற்றி அவளுக்கு யாதொரு கவலையும் இல்லை... பாலமுரளி அறிவானா..? இதுதான் அவளைப் பிய்த்துத் தின்று கொண்டிருந்தது...

ஒவ்வொரு முறையும் அவனாக அவளைத் தேடி வரும் போதெல்லாம் ஊடே வந்து அவனைத் தடுத்து நிறுத்தும் சக்தி எது...?

ராதிகாவுடன் முழுமனதாக அவனைக் கலக்க விடாமல் தள்ளி நிறுத்தும் அந்த கொடும் சக்தியின் இரும்புக் கரத்தை பொடிப் பொடியாக்கி விட ராதிகா மனம் துடித்தாள்...

"ஹேமாவைப் பார்த்து பேசினதுக்குத்தான் நீ ஆயிரம் கதை சொல்லிட்ட.. சங்கரை பார்த்ததுக்கு என்ன சொல்லப் போற...?"

பாலமுரளி கேட்டே விட்டான்.. எந்தக் கேள்வியை எதிர் நோக்கப் பயந்தவளாக ராதிகா அஞ்சி நின்றாளோ.. அந்தக் கேள்வியை அவன் கேட்டு விட்டான்... நடுக்கத்துடன் அவன் முகம் பரித்தாள் ராதிகா...

அதில் கருணை சிறிதளவும் இல்லை... கடுமை விரவிக் கிடந்தது... சொந்தமில்லாத பார்வை பார்த்தவனின் மனதில் இனியும் அவளுக்கான இடம் காத்திருக்குமா என்று அவள் துக்கித்தாள்...

"அவனை நான் பார்க்கல... அவன்தான் வந்து தொலைத்தான்..."

"நினைச்சேண்டி... நீ இந்த பதிலைத்தான் சொல்லு வேன்னு நினைச்சேன்.. ஹேமாகூட ஏன் பேசினேன்னு

கேட்டா... அவகூட நான் பேசலை.. அவளாத்தான் வந்து பேசினான்னு கதை சொன்னவதானே நீ... இதுக்குப் அதைத்தான் சொல்லுவேன்னு நினைச்சேன்.. மாமனை நீ கொஞ்சம் கூட ஏமாத்தலைடி..."

'மாமனா.. யார் அவன்..?' என்று கேட்க நினைத்த ராதிகா... பாலமுரளியின் பேச்சு வழக்கை நினைவு கூர்ந்தவளாக.. சட்டென்று நாவடக்கித் தப்பித்தாள்...

பாலமுரளியின் அகராதிப்படி.. மாமனும் அவன்தான்.. மச்சானும் அவன்தான்... ஆகையினால் மாமன் என்று அவன் குறிப்பிட்டது... சாட்சாத் அவனையேதான் என்று மனம் தெளிந்தாள் ராதிகா...

அவனின் இந்தச் சேட்டையில் மனம் லயித்தவளுக்கு அவன் மீதான ஆசை அதிகரித்தது... அதைச் சொல்ல முடியாத சூழ்நிலையில் மாட்டிக் கொண்டவளாக அவள் விதியை நொந்து கொண்டாள்...

"எது உண்மையோ.. அதைத்தான் நான் சொன்னேன்.."

"ஹ... நீ பெரிய உண்மை விளம்பி.. எனக்குன்னு வந்து வாய்ச்சியே... உன்னைச் சொல்லிக் குத்தமில்லைடி.. உன்ன மாதிரி பெண்ணரசியைக், தேடிப்பிடிச்சுக் காதலிச்சு வைச்சேன்... என்னைச் சொல்லனும்..."

'யார் சொல்வது...?'

ராதிகா அவன் முகத்தைப் பாராததைப் போல் பார்த்தாள்... கோபத்தின் கடுமையுடன் இருந்தவனின் முகவடிவைக் காணக்காண அவளுக்குத் தெவிட்டவில்லை..

'இவனைப் போய் குறை சொல்ல முடியுமா..?'

"நிஜத்தைத்தான் நான் சொன்னேன்னா.. நீங்க இப்படிப் பேசி வைப்பீங்க... அப்புறம் நான் என்னதான் பண்றது...?"

எதுவுமே அறியாதவளைப் போல அவள் வாதிட்டதில் கோபம் அதிகமானவனாக.. அவளை எரித்து விடுவதைப் போல பார்த்து வைத்தான் பாலமுரளி.. உறுத்துப் பார்த்த அவன் பார்வையை தைரியமாக எதிர் கொண்ட அவள் பார்வையில் அவன் புருவங்கள் சுருங்கின...

நெற்றியில் சிந்தனை ரேகை படிய... இமை மூடி யோசித்தவன்.. ஒரு பெருமூச்சுடன் தன்னை நிதானப்படுத்திக் கொண்டான்...

"சரி... நீ உண்மை சொல்கிறதாகவே இருக்கட்டும்.. நீ அவனைத் தேடிப் போகலை... அவன்தான் உன்னைத் தேடி வந்தான்.. வந்தவனிடம் பேசாமல் நீ விலகிப் போயிருக்கலாமே... ஏன் நின்று பேசின...?"

"ம்ப்ச்... அவன் சொன்னது அப்படிப்பட்ட விசயம்..."

"ஒ.. அப்படிங்களா மகாராணி..? நீங்க கவலைப் பட்டு.. கால்கடுக்க நின்று.. ஒரு மணி நேரமா.. அவன் முகத்தையே உத்து உத்துப் பாத்துப் பேசற அளவுக்கு அப்படி என்ன முக்கியமான விசயத்தை அவன் சொல்லிப்புட்டான்..."

"ஒரு மணி நேரமா பேசினேனா..? இது அபாண்டம்..

"ஏய்ய்.. விசயத்துக்கு வாடி.. ஒரு கெகண்டிலயா அவனைப் போகச் சொன்ன..? குத்துக்கல்மாதிரி நின்னு அவனிடம் பழமை பேசிட்டு.. என்னிடம் வியாக்கினம் பேசறயா..?"

"அத்தான்... ப்ளீஸ்..."

"இந்த அத்தான்.. பொத்தான் போடற வேலையெல்லாம் என்னிடம் வேணாம்.. கேட்ட கேள்விக்கு பதிலைச் சொல்லு..."

"ஹேமாவை ஒரு மாப்பிள்ளை பெண் கேட்டு வந்தாராம்..."

"இதுவேறயா.. யார் அந்த தியாகி...?"

ராதிகா பதில் சொல்லாமல் முரளியை இமைக்காமல் பார்க்க...

"போதும்டி..." என்றான் அவன்...

"இதுதானே வேணாம்கிறது... மத்தவங்க வீட்டுப் பெண்ணை கமெண்ட் பண்ணலாமா..?"

"என்வீட்டுப் பெண்ணின் மனசைக் கலைச்சா.. தாராளமா கமெண்ட் பண்ணலாம்..."

முகம் இறுகப் பதில் சொன்னான் முரளி... அது இல்லையென்று வாதிட முடியாமல் தலையைப் பிடித்துக் கொண்டாள் ராதிகா...

சங்கருக்காக ஹேமா பரிந்து பேசியது உண்மைதானே.. ஆனாலும் அது திருமணத்திற்கு முன்பல்லவா...?

இதை பாலமுரளியிடம் சொன்னால்... தாலி ஒன்று தானே கட்டவில்லையென்று குதர்க்கமாக கேட்டு வைப்பான்... அவன் சொல்வதில் நியாயம் இருந்தாலும்.. அது ஹேமாவுக்கு எப்படித் தெரியும்...?

வீண்வாதம் செய்யாமல் விட்டு விடுவதே காலச் சிறந்தது என்ற முடிவுக்கு வந்தாள் ராதிகா...

"சங்கரோட பிரண்டாம்...", என்று வறண்டகுரலில் சொன்னாள்...

"ஓ.. அவன் இப்ப.. புரோக்கர் வேலைகூட செய்கிறானாமா..?" பாலமுரளியின் குரலில் கேலி இருந்தது...

மறந்தும் அவன் கல்யாண புரோக்கர் என்று சொல்ல வில்லை என்பதை மனதில் குறித்துக் கொண்டாள் ராதிகா....

ஒருவரைப் பிடிக்கவில்லை யென்றால்... இப்படியெல்லாம் கூடப் பேசலாமா என்றிருந்தது அவளுக்கு...

இதை அவனிடம் யார் சொல்வது...?

சொல்வதாக இருந்தால் ராதிகாதான் சொல்ல வேண்டும்... அதற்குத்தான் அவளுக்கு வழி இல்லாமல் போய்விட்டதே...

"காலம் ஒரு நாள் மாறும்-நம்..
கவலைகள் யாவும் தீரும்...
வருவதையெண்ணிச் சிரிக்கின்றோம்..
வந்ததையெண்ணி அழுகின்றோம்..."

தோட்டத்தில் நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த பொன்னுச்சாமியின் எப்.எம் ரேடியோவிலிருந்து பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது...

இப்போதெல்லாம் உழைப்பாளிகளுக்கு... அந்த உழைப்பின் அலுப்புத் தெரியாமலிருக்கும் மருந்தாக இந்த எப்.எம் ரேடியோக்கள் கை கொடுக்கின்றன என்று நினைத்துக் கொண்டாள் ராதிகா...

மூட்டை தூக்கும் தொழிலாளியின் இடுப்பில் ஒரு ரேடியோ.. கட்டிட வேலை செய்யும் சிற்றாளின் கூடையில் ஒரு ரேடியோ... தெரு முனையில் துணிகளுக்கு இஸ்திரி போகும் கை வண்டிக்காரனிடம் ஒரு ரேடியோ... கடற்கரையில் சுண்டல் விற்கும் சிறுவனிடமும் ஒரு ரேடியோ...

இப்படி... அனைத்து இடங்களிலும் வியாபித்திருக்கும் எப்.எம் ரேடியோக்களின் சேவை மகத்தானது... என்ற பாராட்டுதல் அவளுக்குள் எழுந்தது...

சலசலக்கும் நீரைப் போல..
சலசலக்கும் என் மனதைப் பார்...

'மாறுகின்ற காலம் வரை காத்திருக்க யாரால் முடியும்..? அந்த நாள் வரும் போது நான் இருப்பேனோ.. இல்லை.. தொலைந்திருப்பேனோ...'

மனதில் துக்கம் கொண்டாள் ராதிகா.. அவளுக்கு அழ வேண்டும் போல இருந்தது... அழ முடியாமல்... ஒடும் நீரையே வெறித்துப் பார்த்தாள்...

இந்த நீர்மேல் கோலம் போட்டால் அது நிலைத்திருக்குமா..? அது போல்தான் ராதிகாவும் காதலும் ஆகிவிட்டதா...?

"சிலர் சிரிப்பார்... சிலர் அழுவார்...
நான் சிரித்துக் கொண்டே அழுகின்றேன்..."

பாடல் முடிந்து விட்டது... அதன் பாரம் மட்டும் ராதிகாவின் மனதை விட்டு அகலாமல் பாறாங்கல்லாய் ஏறி அமர்ந்து கொண்டது..

'இப்ப சங்கரை கல்யாணப் புரோக்கர் என்கிறார்... முதலில் ஹேமாவைக் கல்யாணம் பண்ணிக்கப் போற தியாகி யாருன்னு கேட்டார்... மத்தவங்க பேசினாக்கூட கண்டுக்காம போயிடலாம்.. இவர் இப்படிப் பேசலாமா..?' ராதிகாவின் மனம் வலித்தது...

"வேண்டாம் அத்தான்.. நீங்க இப்படிப் பேசாதீங்க.."

"அப்படித்தாண்டி பேசுவேன்.. அதுக்கு இப்ப என்னாங்கிற.. அவனோட பிரண்டுக்கு ஹேமாவை கல்யாணம் பேசினா.. பேசிட்டுப் போகட்டுமே.. அதுக்கெதுக்கு உன்னைத் தேடி வந்தான்...?"

"அவன் என்னைத் தேடி வரலை.. ஹேமாவைத் தேடி வந்தான்..."

"இது ஒரு சாக்கு.. அதுக்கு எதுக்கு காலேஜுக்கு வரனும்..? உன் பிரண்டுக்குன்னு வீடு இல்லையா...?"

"இந்த விசயம் அவ வீட்டுக்குத் தெரியாது..."

"இதைப் பாருடா... வீட்டுக்குத் தெரியாம அவனே மாப்பிள்ளைத் தேடிக்கிட்டாளா..? ஒடுகாலி... எப்ப ஓடப் போறாளாம்..?"

திரும்பவும் இமைக்காமல் முரளியின் முகத்தையே ராதிகா பார்க்க வேண்டியதாகி விட்டது... அவளது பார்வைக்கான தன் அதிருப்தியாக...

"த்ச்சு.." என்றான் பாலமுரளி...

"இப்படிப் பேச.. எப்படித்தான் உங்களுக்கு மனம் வருதோ..."

"அது என் மனசுடி... வரும்..."

"ஹேமாவுக்கே அவளைப் பெண் கேட்பது தெரியாதுங்கிறப்போ... அவ வீட்டுக்கு எப்படித் தெரியுமாம்..? இது தெரியாம நீங்க வார்த்தையை விடறிங்களே..."

"அவளுக்கே தெரியாதா...? ம்ம்.. இன்னும் என்னவெல்லாம் கதை சொல்லப் போறியோ... உன் மேல் ஆசைப்பட்டுட்ட கொடுமைக்காக... நான் இப்படியெல்லாம் பார்த்துக்கிட்டும்... கேட்டுக்கிட்டும் எதையும் பதிலுக்கு பேச முடியாம கல்லுக்குண்டைப் போல உட்கார்ந்திருக்க வேண்டியதாப் போச்சே..."

"இதை நான் சொல்லனும்..."

"இதை நீ சொல்ற..? விதிடி..."

"சங்கரோட பிரண்டுக்கு பெண் தேடினாங்களாம்... உடனே சங்கர் ஹேமாவைப் பத்திச் சொன்னானாம்..."

"அதுக்கு அவனே அவளைக் கட்டியிருக்கலாமே..."

"அவனுக்குத்தான் அவமேல அண்ணனைப் போல பாசமாமே..."

"உன் பிரண்டில்லையா..? பாசமலரைத்தான் வளர்ப்பான்.."

"நமக்கெதுக்கு அது..."

"அப்படி நீ விட்டுத் தொலைச்சா வினையே வந்திருக்காதேடி.." பாலமுரளி பார்வையால் அவளைச் சுட்டான்...

'நானாங்க வினையைத் தேடிப் போனேன்..? அதுவா வந்து தொலைக்குதே...' ஏக்கப்பட்டுப் போனாள் ராதிகா...

"இதில தலை கொடுக்கனும்னு நான் நினைக்கலைங்க.. ஹேமாவுக்கே இதைப் பற்றித் தெரியாதே.. சங்கர் அவனோட பிரண்டிடம் ஹேமாவைப் பற்றிச் சொன்னதும்.. அவர் இவளைப் பார்க்கனும்னு சொன்னாராம்..."

"அந்தக் கருமத்துக்குத்தான் அவன் வந்தானா....? வந்து தொலைச்சவன் அவளைக் கூப்பிட்டுக்கிட்டுப் போக வேண்டியது தானே... அதை விட்டுட்டு.. உன்னிடம் ஏண்டி வாய் வளர்த்தான்..? நீயா பொண்ணு...?"

'இல்லைதான்.. ஆனா.. பெண்ணுக்கு பிரண்டார்ச்சே' சொல்ல முடியாமல் மௌனித்தாள் ராதிகா...

"காலக் கொடுமைடி.. எவளையோ பொண்ணு பார்க்க வந்தவன்.. அவளை காலேஜிக்குள்ள ஒட்டி விட்டுட்டு.. உன்கூட மரத்தடி நிழலில் உட்கார்ந்து கதை பேசறான்... அதை கண்கொண்டு பார்த்துக்கிட்டு.. நானும் உட்கார்ந்திருக்கேன்.. த்ச்சு..."

"ஹேமா ஹால் டிக்கெட்டை மறந்து வைச்சுட்டு வந்திட்டாங்க.. அதை எடுக்க அவ போனா.. அவ வருகிறவரைக்கும் நாங்க பேசிக்கிட்டு இருந்தோம்..."

"எதைப்பத்தி..."

"அவ கல்யாணத்தைப் பத்தி..."

"அதை அவதானே பேசனும்... நீ எதுக்காக பேசின.. சரி.. அவதான் ஹால் டிக்கெட்டை எடுக்கப் போனான்னு கதை சொல்ற... போனவ உடனே திரும்பி வராம.. ஒரு மணி நேரம் கழிச்சு ஏன் திரும்பி வந்தா..?"

"எக்ஸாம் ஹாலில் அவ ஹால் டிக்கெட் இல்லையாம்... வழியில எங்கேயாவது விழுந்திருக்குமோன்னு தேடினாளாம்..."

"வழியில கிடைச்சதா..?"

"அங்கேயும் கிடைக்கலையாம்..."

"கிடைக்காதே.. அவ ஜில்லா கேடியில்ல.. எப்படியெல்லாம் திட்டம் போட்டு.. உனக்கும் சங்கருக்கும் நேரத்தை உண்டாக்கிக் கொடுக்கிறா..."

"அபாண்டமா பேசாதீங்க..."

"எந்த மண்பாண்டமாவும் பேசலை.. உள்ளதைத்-தான் சொல்றேன்... கடைசியில் அவ ஹால் டிக்கெட் அவகையில தான் இருந்திருக்கனுமே..."

"அதுதான் இல்லை..."

"வேற எங்கே இருந்துச்சாம்.. அவ நோட்டுக்குள்ளயா..?"

"ஊஹீம்.. திரும்பவும் எக்ஸாம் ஹாலுக்கே போயிருக்கா.. மேஜைமேலே மட்டும் பார்க்காம.. தரையெல்லாம்.. தேடியிருக்கா.. எக்ஸாம் ஹால் மூலையிலே அவ ஹால் டிக்கெட் கிடந்துச்சாம்..."

"இதைப் பாருடா.. அவதான் மூலையிலே இருக்க வேண்டியவன்னா... அவ ஹால் டிக்கெட்டும் மூலையிலே கிடந்திருக்கு.. அப்புறம்..?"

பாலமுரளி கோபம் கலந்த கிண்டலுடன் கதை கேட்க.. பதிலுக்கு அவனை முறைக்க முடியாமல் தலையைப் பிடித்துக் கொண்டாள் ராதிகா...

ஹேமாவின் அமைதி கலந்த சுபாவம் நினைவுக்கு வந்து அவளை இம்சித்தது...

எத்தனை அருமையானவள் அவள்..! ராதிகாவால் தானே அவள் இந்த அளவுக்கு பாலமுரளியின் வாயில் அரைபட நேர்கிறது...

"இதோ பாருங்க.. என்னை என்ன வேண்டும்னாலும் சொல்லுங்க.. என்கூட பழகின பாவத்துக்காக ஹேமாவை

வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசாதீங்க.. அவ ரொம்ப நல்லவ..."

"அப்படிங்களா..? அடேங்கப்பா.. பிரண்டைச் சொன்னவுடன் ரோசம் பொத்துக்கிட்டு வருது.. கூடப் படிச்சவ மேல வைச்சிருக்க பாசத்தில கொஞ்சத்தையாவது கட்டினவன் மேல வைடி..."

"இப்ப யாரு ஆசை வைக்காம இருந்ததாம்..."

"நான் பாசத்தைச் சொன்னேன்.. ஆசையைச் சொல்லலை... எனக்கு உன்னையும் தெரியும்.. உன் ஆசையையும் தெரியும்.. என்மேல ஆசை வைச்சிருக்கவ என்னை நினைச்சுக்கிட்டு இருந்திருக்கனும்.. ஆனா.. உன் நினைப்பெல்லாம் அவன் மேலதானே இருந்துச்சு.. அன்னைக்கும் சரி... இன்னைக்கும் சரி.. நீ மாறவே இல்லைடி..."

"அவன் கூடப் பேசினதை வைத்து.. நீங்களா ஒரு முடிவுக்கு வராதீங்க... நாங்க பேசின விசயமே வேற.."

"எதைப் பத்திம்மா பேசினீங்க... கூடங்குளப் பிரச்னையைப் பத்திப் பேசினிங்களா..? இல்லை.. இந்தியா பாகிஸ்தான் ஒற்றுமையைப் பத்திப் பேசினிங்களா..? எதைப் பத்தி பேசிக் கிழிச்சீங்க...?"

"எல்லாம் ஹேமா கல்யாண விசயமாத்தான் பேசினோம்..."

"ஓஹோ.. அதைப்பத்தி.. அவ இல்லாதப்ப.. நீங்களா பேசினீங்களாக்கும்..."

"ப்ளீஸ்... புரிஞ்சுக்கங்க.. சங்கரோட பிரண்ட் ஹேமாவை ஏற்கனவே பார்த்து முடிச்சாச்சாம்..."

"அப்புறமும் எதுக்குடி அவன் வந்தான்..? அந்த பிரண்டுக்கு.. உன் பிரண்டைப் பிடிக்கலையா..?"

'இவன் வாயில் நல்ல வார்த்தையே வராதா..?'

எரிச்சலான எரிச்சல் வந்தது ராதிகாவிற்கு... அவன் பார்க்க.. சங்கருடன் உட்கார்ந்து பேசிவிட்ட கொடுமைக்காக இன்னும் எத்தனையெத்தனை பேச்சுக்களை பாலமுரளியிடம் கேட்க வேண்டுமோ என்று அவள் விசனப்பட்டுப் போனாள்...

"எல்லாம் பிடிச்சிருக்காம்..."

"அவனுக்குப் பிடிக்கலைன்னாலும்... இவன் பிடிக்க வைச்சிருவானே... நன்றிக்கடனை கழிக்க வேண்டாமா..?"

"ஹேமாவிடம் சங்கருக்கு என்ன நன்றிக்கடன் இருக்கப் போகுது..?"

"என்னடி.. இப்படிச் சொல்லிட்ட.. ஆயிரம்தான் இருந்தாலும்.. அவமாதிரி சங்கருக்கு யாரு தூது வருவாங்க...?"

"ம்ப்ச்.. சும்மாயிருங்க..."

'சும்மாயிருக்காம இவ கையைப் பிடிச்சா இழுத்தேன்..? எப்பவெல்லாம் எனக்கு அந்த நினைப்பு வருதோ.. அப்பவெல்லாம் அந்த நினைப்பை ஆணிவேரோட பிடுங்கி எறிஞ்சுட்டு.. பேசறா பாரு பேச்சு...'

"சங்கரோட பிரண்டுக்கு ஹேமாவை பிடிச்சுப் போச்சாம்.. இந்த வாரம் முறைப்படி பெண் கேட்டு போறதா இருந்தாராம்.. அதுக்குள்ள இந்த செய்திக்கு இறக்கை முளைச்சுப் பறந்து.. உங்க அத்தை மகள் காதில் விழுந்து வைச்சிருச்சு..."

"என் அத்தை மகளா..? அது யாருடி..?"

பாலமுரளி புரியாமல் கேட்க.. ராதிகாவிற்கு அவனை முத்தமிட வேண்டும் போல ஆசை வந்து தொலைத்தது..

'இவனுக்கு... என்னைத் தவிர.. வேற யாரு நினைப்பும் இருக்காது...'

இப்படிப்பட்டவனுக்கு அவள் மனது புரியாமல் போய் விட்டதே என்ற துயரம் அவள் மனதில் மண்டியது...

"ஷோபா யாராம்..? உங்க சித்தி மகளா...?"

"நீ அவளைச் சொல்றயா..? நான் யாரோன்னு நினைச்சேன்.. இப்ப எதுக்குடி அவளை வம்புக்கு இழுக்கறே..?"

"அவதான் எங்க வம்புக்கு வருகிறா..."

ராதிகா யதார்த்தமாகச் சொல்லிவிட்டு.. பாலமுரளியின் கடும் கண்டனப் பார்வைக்கு ஆளானாள்..

அடுத்தடுத்து அவனுக்குப் பிடிக்காத வார்த்தைகளை உதிர்த்து விட்டுக் குற்றவாளிக் கூண்டில் ஏறி நிற்பதே தனக்குப் பிழைப்பாகப் போய் விட்டது என்று மனம் நொந்து போனாள் ராதிகா...

"'உங்க..'? ...ம்ம்ம்..? நல்லாப் பேசறடி.. நீங்க மூணுபேரும் ஒன்னு.. நான் மட்டும் தனி.. அப்படித்தானே..?"

"ஐயோ.. அந்த அர்த்தத்தில் சொல்லலைங்க..."

"வேற எந்த அர்த்தத்தில் சொன்ன..?"

"வாய் தவறி வந்துருச்சுங்க.."

"அடியேய்... பெண்டாட்டி... சட்டியில இருக்கறது தாண்டி அகப்பையில வரும்.. உன் மனசில இருக்கறது தான் வாய் வார்த்தையில வரும்..."

"தெரியாம பேசிட்டேங்க..."

"தெரிஞ்சிருந்தா மறைச்சுப் பேசியிருப்ப.. அப்படித்தானே..?"

அப்படித்தானே.. அப்படித்தானே என்று அவன் ராதிகாவின் உயிரை எடுக்க.. எதைச் சொன்னால் அவன் மனம் இரங்கும் என்று புரியாதவளாக கிறுக்குப் பிடித்துப் போனாள் ராதிகா...

"அத்தான்... உங்க காலில் வேணும்னாலும் விழுகறேன்.. தயவுசெய்து இப்படிப் பேச்சிலேயே என்னைக் கொல்லாதீங்க..."

நிஜமாகவே ராதிகா கைகூப்பிவிட.. அவளையே பார்த்தபடி அசையாமல் அமர்ந்திருந்தான் பாலமுரளி.. அதன்பின்.. என்ன நினைத்தானோ...

"ம்ம்.. சொல்லு.. என் அத்தை மக.. உன் பிரண்டு கல்யாணத்தில என்ன செஞ்சு வைச்சா..?" என்று கேட்டான்...

"அந்த பிரண்டோட பேரண்ட்ஸீக்கு போனைப் போட்டு.. ஹேமாவைப் பற்றி.. இல்லாததையும்..

பொல்லாததையும்.. சொல்லியிருக்கா.." ராதிகா ஆதங்கப்பட...

"அவ அப்படியெல்லாம் சொல்லியிருக்க மாட்டாளே.." என்று சொல்லி.. அவள் ஆத்திரத்தை தூண்டினான் பாலமுரளி...

"வேண்டாம் அத்தான்.. உங்களுக்கே அவளைப் பத்தி நல்லாத் தெரியும்... தெரிஞ்சும் அவருக்கு எத்துக்கிட்டுப் பேசாதீங்க..."

"நீ மட்டும் ஹேமாவுக்கு எத்துக்கிட்டு பேசலாமா..?"

பாலமுரளியின் 'ஏட்டிக்குப் போட்டி..' ராதிகாவுக்குப் புரிந்தது... நீ ஹேமாவுக்கு ஆதரவாகப் பேசினால்.. நான் ஷோபாவிற்கு ஆதரவாகப் பேசுவேன் என்று அவன் கொடிபிடித்தான்...

நீ என்னவோ செய்து விட்டுப் போ என்று ராதிகாவும் அதை விட்டு விட்டாள்...

"அந்த மாப்பிள்ளையோட பேரண்ட்ஸ் யோசிக்க ஆரம்பிச்சிட்டாங்க..."

"யோசிக்காம இருப்பாங்களா..? எல்லாருமே என்னைப் போல கேணயனாவா இருப்பாங்க...?"

பாலமுரளி மீண்டும் இடக்குப் பேச.. இவன் கேணயனா என்றிருந்தது ராதிகாவுக்கு...

இவன் ஆளப் பிறந்தவன்.. எவ்வளவு பெரிய கூட்டத்தில் இருந்தாலும் தனித்து தெரிபவன்.. எதிர்ப்பவர் யாராக இருந்தாலும் துவம்சம் செய்து விடும் வல்லமை கொண்டவன்...

இவனைப் போல யாரிருக்கிறார்கள்..?

"போதுமே.. சமயம் கிடைச்சிருக்கன்னு என்காலை வார வேண்டாம்... இந்த விவரத்தைச் சொல்லிட்டுப் போகத்தான் சங்கர் வந்தான்..."

"ஓஹோ.." பாலமுரளி மௌனமாக யோசித்தான்...

அவனது யோசனையைக் கண்டு ராதிகாவிற்கு கலையாக இருந்தது...

'இதோட கேள்விகள் முடிஞ்சிருச்சா..? இல்லை.. இன்னும் ஏதாவது பாக்கியிருக்கா..?'

அவனுக்கு இருந்தது.. கண்கள் இடுங்க ராதிகாவை கூர்ந்து பார்த்தான்...

'என்ன கேட்கப் போகிறானோ..' ராதிகாவின் அடிவயிறு கலங்கியது...

"ஹேமாவோட வாழ்க்கையைப் பத்தி நீயும் சங்கரும் எதாவது ஒரு முடிவைப் பண்ணியிருப்பீங்களே.. என்ன முடிவு பண்ணியிருக்கீங்க..?"

"அத்தான்...!"

"தெரியும்டி.. உனக்கு அவ ஆருயிர் தோழி... அவளுக்கு வர இருக்கிற நல்ல வாழ்க்கை ஆட்டம் கண்டு போனா.. நீ அதைப் பார்த்துக்கிட்டு சும்மா இருப்பியா..? சீர் பண்ண கிளம்பிர மாட்டியா..?"

"அத்தான்..."

"அதானே அவன் திட்டம்..? அவ வாழ்வை சீராக்க நீயும்.. அவனும் சேர்ந்து அவனோட பிரண்டு வீட்டுக்கு

ஜோடி போட்டுக்கிட்டுப் போய் பேசறதா இருக்கீங்க.. எப்படி...? சரியாய் சொல்லிட்டேனா...?"

அவன் மிகச் சரியாகச் சொல்லி விட்டான்... ராதிகா உதட்டைக் கடித்தாள்...

அந்த முடிவைத்தான் அவளும் சங்கரும் எடுத்திருந்தார்கள்...

உன் மூச்சுக் காற்றில் திளைத்த...
என் கூந்தல் ஆடுகிறது.. என் மனத்தைப் போலவே..

அறியாயத்துக்கு இவன் அதிபுத்திசாலியாய் இருந்து தொலைக்கிறானே என்றிருந்தது ராதிகாவிற்கு... எப்படித்தான் இவ்வளவு துல்லியமாக மற்றவர்களின் மனதில் ஓடும் யோசனைகளை இவன் அறிகிறானோ என்று ஆச்சரியப் பட்டுப் போனாள் அவள்...

சங்கர் அதைத்தான் சொன்னான்...

"நாம போகலாம் ராதிகா... மாதேஷோட பேரண்ட்ஸை கன்வின்ஸ் பண்ணலாம்.. நான் சொன்னா அவங்க கேட்டுக்வாங்குதான்.. ஆனா.. நீங்க ஷோபாவோட கிளாஸ்மேட்.. அவ குணம் எப்படிப்பட்டதுன்னு உங்களால தான் அவங்களுக்குப் புரிய வைக்க முடியும்..."

ராதிகாவால் மாட்டேன் என்று எப்படிச் சொல்ல முடியும்...?

"அதெப்படிடி உன்னாலே மாட்டேன்னு சொல்ல முடியும்...? நான் சொல்லியிருந்தா நீ மாட்டேன்னு சொல்லிருப்ப... அவன் சொன்னா மாட்டேன்னு சொல்லிருவியா..?" பாலமுரளி மிகத் தெளிவாகக் கேட்டான்...

"நீங்க எதைச் சொல்லி நான் மாட்டேன்னு சொல்லியிருக்கேன்... பேசனும்னு பேசாதீங்க...", ராதிகா ரோசப்பட்டாள்...

"ஆமாண்டி... நீ ஊரான் பெண்டாட்டி பாரு... உன்கிட்ட பேசனும்கிறதுக்காக... என்னத்தையோ பேசி வைக்கிறேன்... அப்படியே ஒரு அப்பு... அப்பினேன்னு வை.. முப்பத்திரண்டு பல்லும் கழண்டு விழுந்திரும்..." அவன் பல்லைக் கடித்தான்...

"அப்பத்தானே... நீங்க என் பெண்டாட்டி கிழவியாகிட்டான்னு சொல்லி வேற ஒருத்தியை தேடிக்க முடியும்...?"

சும்மாயிருக்காமல் ராதிகா வாய் விட்ட விதத்தில் பாலமுரளி சீற்றம் கொண்டவனாக ஓர் பார்வை பார்த்தான்.

அந்தப் பார்வையில் அவன் சொன்னதை செய்துவிடும் உத்தேசம் தெரிந்ததால் ராதிகா அவசரமா வாயை மூடிக் கொண்டாள்...

"என்ன தைரியமும்... தெனாவெட்டுமிருந்த என்னைக் கேட்காம.. அவன் சொன்னதுக்கு சரின்னு சொல்லியிருப்ப..?"

"இது ஹேமாவோட வாழ்க்கைங்க..."

"நீ உன்னோட வாழ்க்கையை மட்டும் பாரு.. ஊரில இருக்கிற யார்யாரோ... எப்படியோ போனா உனக்கென்ன வந்தது..? சமூகசேவை செய்ய ஊரில நிறைய பேர் இருக்காங்க உனக்கெதுக்கு அந்த வேலை..?"

"ஹேமா யாரோ இல்லைங்க.. என் பிரண்ட்..."

"நான் உன் புருசன்.. எனக்கு நீ இதில ஈடுபடறதில துளிக்கூட விருப்பமில்லை.. அவன் தெளிவா காய் நகர்த்தறாண்டி.. எதைச் சொன்னா உன்னை அவன்கூட வரவைக்க முடியும்ன்னு தெரிஞ்சு பிளான் பண்றான்.. தேனூத்துக்கு வந்தப்போ... அவனை வான்னு கூட கூப்பிடாதவ நீ.. உன்னை அவனோடு சேர்ந்து ஒரு இடத்துக்கு வரவைக்கிறான்னா அவன் எவ்வளவு கெட்டிக்காரன்னு நினைச்சுப் பாரு.."

'அப்படியும் இருக்குமோ...'

ராதிகாவுக்கு யோசனையாக இருந்தது... திடிரென்று சங்கர் வந்து அந்தச் செய்தியைச் சொன்னதும்.. ஹேமாவும்.. அவளும் திகைத்துப் போய் விட்டார்கள்.. ஹேமாவுக்கு சங்கரின் நண்பனான மாதேஷை யார் என்றே தெரியாது... சங்கர் செய்த திருமண ஏற்பாட்டைப் பற்றி அவள் அறிந்திருக்கவில்லை... ஆனால்.. முன்பின் தெரியாத அந்த மாதேஷின் குடும்பத்தார் அவளைத் தவறாக நினைக்கின்றார்கள் என்பதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

"அந்த ஷோபாவுக்கு நான் என்னடி கெடுதல் பண்ணினேன்..? ஏன் என்னைப்பத்தி இல்லாததையும்.. பொல்லாததையும் போட்டுக் கொடுக்கிறா..?" என்று வெகுவாக வருத்தப்பட்டுப் போனாள் ஹேமா...திடிரென்று

"ஹால் டிக்கெட்டை காணோம்டி..." என்றாள்...

"எங்கேடி தொலைச்ச...?" ராதிகா கடிந்து கொண்டாள்...

"எக்ஸாம் ஹாலில் விட்டுட்டு வந்திருப்பேனோ..? இருடி நான் போய் பார்த்துட்டு வந்துடறேன்..", ஹேமா விரைந்து விட்டாள்...

அவள் வரும் வரைக்கும்... சங்கருடன் பேசிக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயம் ராதிகாவுக்கு நேர்ந்து விட்டது... அவனும் ஹேமாவிற்கு வந்திருக்கும் இக்கட்டை எப்படித் தவிர்ப்பது என்று பேச ஆரம்பிக்க... தோழியைப் பற்றிய அக்கறையில் ராதிகாவும் ஆழ்ந்து பேச ஆரம்பித்து விட்டாள்...

பாலமுரளி அவள் நினைவில் வாடுவான்... அவனாகப் போட்டுக் கொண்டிருந்த இரும்பு வேலியை தகர்க்கும் முடிவை எடுப்பான்.. அவளைத் தேடிக் கல்லூரிக்கே வந்து விடுவான் என்று அவள் கனவா கண்டாள்...?

'என்ன வரம் வாங்கிப் பிறந்தேனோ...'

இப்போதெல்லாம்... இப்படிச் சலித்துக் கொள்வதே ராதிகாவிற்கு வாடிக்கையாகிப் போனது...

இருந்திருந்து பாலமுரளி வரும் நேரம் பார்த்துத்தானா... அந்த சங்கர் வந்து தொலைக்க வேண்டும்...?

இதே போல் அவன் ஏற்கனவே செய்திருக்கிறான் என்ற நினைவில் அவளுக்கு சங்கரின் மீது வெறுப்பு வந்தது.

"ரோயாவுக்காக பார்க்கிறேன்..." அவன் முணுமுணுத்தான்...

"அப்பட நீயும்.. நானும் விலக வேண்டியிருக்கும்..." பாலமுரளி தெளிவாகச் சொல்லிவிட்டான்...

அவனின் அதிர்ந்த பார்வையில் எதை உணர்ந்தானோ.. விகலேசாக உதட்டை மடித்துக் கடித்தான்.. பின் தோளைக் குலுக்கியபடி அழுத்தமான குரலில் சொன்னான்...

"எனக்கு வேற வழியில்லை.. நானும் ஆனமட்டும் சொல்லிப் பார்த்துட்டேன்... நீ கேட்கிற பாடாய் இல்லை.. இங்கே எதுக்காக வந்திருக்கிற..? பரிட்சை எழுதத்தானே வந்திருக்க..? அந்த வேலையை விட்டு விட்டு வேற எந்த எந்த வேலையையோ பார்த்துக்கிட்டு இருக்கிற.. ஒழுங்காய் பரிட்சையை மட்டும் எழுதறதுனா இங்கே இரு.. இல்லை.. மத்த சமூக வேலையைத்தான் செய்வேன்னா.. உன் அப்பாவிட்டில கொண்டு போய் விட்டு விடுகிறேன்.. அப்புறம் உன் பாடு.. உன் வீட்டாருக பாடு.. எனக்கும் உனக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை.."

ராதிகா இடிந்து போய் விட்டாள்...

இப்படி அவன் இதற்கு முன்னால் பேசியதே இல்லை.. பேச்சுக்குக்கூட பிறந்த வீட்டை.. என்வீடு என்று ராதிகா சொல்லி விடக்கூடாது.. உடனே சண்டைக்கு வந்து

விடுவான்... அவளை தனிமரமாய்த்தான் தள்ளி வைத்திருந்தான்.. அவனுடைய வாழ்க்கையிலிருந்து தள்ளி வைக்கவில்லை... பிடிக்காத வாழ்க்கையை வாழ்ந்தாலும்.. மனைவியென்ற உரிமையையும்.. பரிவாதையையும்.. அவளுக்கு பரிபூரணமாக அளித்து வந்தான்...

அப்படிப் பட்டவனின் வாயிலிருந்து இது போன்ற வார்த்தைகள் வரலாமா...?

"உங்களுக்குப் பிடிக்காததை நான் பேசினா.. செய்தா.. அதற்காக என்னைத் திட்டுங்க.. அடிங்க.. உங்களுக்கு அதுக்கான உரிமை இருக்கு.. அதுக்காக உங்களுக்கும்... எனக்கும் சம்பந்தமில்லைன்னு எப்படி நீங்க சொல்லலாம்...?"

ராதிகா சண்டைக்கு கிளம்பிவிட்டாள்... பாலமுரளியின் ஆழ்ந்த பார்வை அவளை ஊடுருவியதில் அவளின் முதுகுத் தண்டு ஜில்லிட்டது.

"எனக்கு இதுதான் வேலையா...? வேற வேலை வெட்டி எனக்கில்லையா..? தேனூத்தில் இருந்தா ஒரு பேச்சு.. சென்னையில் கால் வைச்சா ஒரு பேச்சுன்னு நீ இருக்கிறதை சகிச்சுக்கிட்டு என்னால் இருக்க முடியாது."

"அதுக்காக வாய்க்கு வந்ததையெல்லாம் பேசுவீங்களா...?"

"நீ மனதில் தோணினதையெல்லாம் செய்துகிட்டே இருந்தா... நான் வாய்க்கு வந்ததை பேச மாட்டேனா..?"

"இதே வார்த்தையை உங்க அம்மாவைப் பார்த்தோ.. இல்லை உங்க அக்காவைப் பார்த்தோ சொல்லுவீங்களா..?"

மனக் குமுறலோடு கேட்டாள் ராதிகா... கண்கள் இடுங்க அவளைப் பார்த்தவனின் புருவங்கள் சுருங்கின...

"புரியலை...", என்றான்...

"உங்களுக்குப் பிடிக்காத ஒன்னை உங்க அம்மா செய்துடறாங்க... உடனே உங்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லைன்னு சொல்லி.. உங்க வாழ்க்கையில இருந்து அவங்களை விலக்கி வைச்சுடுவீங்களா...?"

"ஏய்ய்ய்..."

"உங்க அக்கா.. இப்பத்தான் குணசாலியாய் பேசறாங்க... இதுக்கு முன்னாலே.. பொய்யாய் என்மேல பழி போட்டுப் பேசலையா.. அவங்களை நீங்க என்ன செஞ்சீங்க...? அவங்களுக்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லைன்னு சொல்லி.. உங்க வாழ்க்கையிலிருந்து தள்ளி வைச்சுருவீங்களா...?"

"அறிவில்லாம பேசாதே..."

"கோபம் வருதில்ல... ஏன்..? அவங்க ரெண்டு பேரும் உங்களுக்கு ரத்த சம்பந்தம்.. சொந்தம்.. ஒருத்தங்க உங்களைப் பெத்தவங்க... இன்னொருத்தங்க உங்க கூடப் பிறந்தவங்க... நான் யார்...?"

பாலமுரளி அசைவற்று நின்றுவிட.. ராதிகா கோபாவேசத்துடன் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள்...

"விவாகம் தாங்க ரத்தாகும்.. பெத்த உறவு.. கூடப் பிறந்த உறவெல்லாம் ரத்தாகாது... என்னவோ.. புருசன் பெண்டாட்டி சொந்தத்தை ஏழேழுஜென்ம சொந்தம்ன்னு கொண்டாடுகிறோமே.. அதுக்கு ஆயுள் இவ்வளவுதானா..?"

அவள் இப்படியெல்லாம் பேசக்கூடும் என்று அப்போதுதான் கண்டான் பாலமுரளி.. அவளின் அடி மனதிலிருந்த கோபமும்.. ரோசமும் பொங்கியெழுந்தது கொண்டிருக்க... ஒரு புது ராதிகாவை அன்று அவன் கண்ணெதிரே பார்த்தான்...

"அக்கினியை சாட்சியாய் வைத்து அதைச் சுற்றி வலம் வந்தோமே.. அந்த அக்கினி வந்து உங்களை கேள்வி கேட்காதா..? மந்திரங்களைச் சொல்லி என் கழுத்தில் மூன்று முடிச்சைப் போட்டிங்களே... அந்த மந்திரங்களுக்கு சக்தி இல்லையா..? அதுக்கான பதிலை நீங்க சொல்ல வேண்டாமா...?"

அவளது குமுறலில் வெளிப்பட்ட கோபத்தீயில் அவன் குளிர் காய்ந்து கொண்டிருந்தான்... திருமணத்தின் பவித்திரத்தில் அவள் கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கையும்.. பக்தியும்.. வெளிப்பட வெளிப்பட.. அவன் மனதில் ஜீவாலை குறைந்து கொண்டே வந்தது...

"பிரிக்க முடியாத பந்தம்... புருசன் பெண்டாட்டி பந்தம்ன்னு சொல்லுவீங்களே... அந்த வார்த்தை ஏன் மாறிப் போனது..? உங்களோடு நான் வாழ வந்த வாழ்க்கைப் பாதை ஒருவழிப் பாதைன்னு சொல்லுவீங்களே.. இன்னைக்கு வந்த பாதையிலேயே திரும்பிப் போகச் சொல்ல உங்களுக்கென்ன அதிகாரம் இருக்கு...?"

ராதிகாவின் கையில் சிலம்புதான் இல்லை... மற்றபடி அவள் கற்பின் கனலாக.. கனன்று கொண்டிருந்தாள்...

"நீங்க வான்னா வருகிறதுக்கும்... போன்னா போகிறதுக்கும்... நான் உங்க தோட்டத்து கிள்ளுக் கீரையில்லை..."

'இதை ஏற்கனெவே சொல்லிட்டாளே...'

"இந்த வார்த்தையை அத்தை முன்னாலே நீங்க சொல்லிருங்க பார்க்கலாம்..."

'எதுக்கெடுத்தாலும்.. இந்தப் பஞ்சாயத்தை மட்டும் கூட்டிவிடுவா'

"அவங்க என்னைத்தள்ளி வைக்கனும்னு சொன்ன உங்களைத்தான் தள்ளி வைப்பாங்க..."

'அந்த தைரியம்தானேடி உனக்கு...'

"உங்களுக்கு எப்படியோ.. எனக்கு கல்யாணம்கிறது வாழ்க்கையில ஒருதரம் தான்..."

'அடேங்கப்பா.. நான் மட்டும் ஏழுதரம் பண்ணிக்கிட்டேனா.. போடி.. போ..'

"தேனூத்து தான் என் ஊர்.. உங்க வீடுதான் என்வீடு.. இதை நினைப்பில வைச்சுக்கங்க..."

'நீ முதல்ல இதை நினைப்பில வை...'

"இவருக்கும்.. எனக்கும் சம்பந்தமில்லையாமில்ல.."

ராதிகா அழுது விட்டாள்.. சிந்திய கண்ணீர் துளிகளுடன் அவள் பண்ணை வீட்டின் மாடியறையில்

தஞ்சம் புகுந்து விட.. அவளின் செல்போன் அலறியது.. எடுத்துப் பார்த்தான்.. ராஜேஸ்வரி அழைத்துக் கொண்டிருந்தாள்.. பேசுவதா.. வேண்டாமா.. என்று யோசித்தவன்.. வேறு வழியின்றி பேசினான்...

"மாப்பிள்ளை...! நீங்களா...!"

மரியாதை கலந்த உற்சாகத்துடன் ராஜேஸ்வரி கேட்க..

'மாமியாரே.. இது நீங்கதானா..' என்று கேட்கத் தோன்றியது பாலமுரளிக்கு...

"ராதிகா எக்ஸாம் முடிந்து இவ்வளவு நேரமாகியும் வீட்டுக்கு வரலைன்னு கவலையாகிருச்சு மாப்பிள்ளை.. அதுதான் போன் பண்ணினேன்..."

"கவலைப்படாதீங்க.. அவ என் கூடத்தான் இருக்கா.."

"அப்படிங்களா..? எப்ப வீட்டுக்கு வருவீங்க...?"

"அது.. வந்து அத்தை.. நாங்க, எங்க வீட்டில இருக்கோம்..."

"எங்க வீடுன்னா..? தேனூத்திலயா..? அதுக்குள்ள எப்படி அங்கே போகமுடியும்..?"

"ஊஹீம்.. இங்கே சென்னையிலதான்... ராதிகா பேரில நான் வாங்கியிருக்க ஃபார்ம் ஹவுஸில இருக்கோம்..."

"ஓ... அது எதுக்கு மாப்பிள்ளை..? சென்னையில நம்மவீடு இருக்கிறப்போ... நீங்க தனியாய் தங்கறதா..? அது நல்லாயிருக்குமா..?"

"இருக்கட்டும் அத்தை.. இதுவும் எங்க வீடுதானே.. சென்னைக்கு வரும் போதாவது இங்கே வந்து தங்கிப் போனாத்தானே நல்லா இருக்கும்...?"

"உங்களுக்கு நல்லாயிருக்கும்... எங்களுக்கு அப்படியிருக்காது.. இன்னைக்கு வேணும்னா அங்கே இருந்துட்டு வாங்க.. ஆனா.. விடிஞ்சதும் டான்னு இங்கே ஆஜராகிடனும்.. ஆமா.. சொல்லிட்டேன்.." ராஜேஸ்வரி போனை வைத்து விட்டாள்...

ராதிகா மதியமும் சாப்பிடவில்லை... மாலையில் காபி டிபன் சாப்பிடவாவது அவளை அழைத்துச் செல்லலாம் என்று மாடியறைக்குச் சென்ற பாலமுரளி திடுக்கிட்டான்..

ராதிகாவிற்கு காய்ச்சல் வந்திருந்தது...

நில்லென்று நீசொன்னால் நின்றுவிடுவேன்..
செல்லென்று நீசொன்னால் செத்து விடுவேன்..

'இவ கிட்ட இதுஒன்னு இருக்கு...'

பாலமுரளிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.. அது எப்படி.. ஏதேனும் வாக்குவாதம் வந்தால் உடனே அவளுக்கு காய்ச்சல் வந்து விடுகிறது என்று அவன் குழம்பிப் போனான்...

'காய்ச்சலை இவ மடியில கட்டிக்கிட்டு இருக்காளா..'

அவளைத் திரும்பிக்கூட பார்க்கக் கூடாதென்ற வைராக்கியம் மறந்து போக... அவளருகில் அமர்ந்து நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்.. அனலாகக் கொதித்துக் கொண்டிருந்தது...

'டாக்டரிடம் கூப்பிட்டுக்கிட்டுப் போகனும்....'

அவனுக்கு காய்ச்சலைப் பற்றிக்கூட அவ்வளவு பயமில்லை.. காய்ச்சல் முற்றிப் போய் ஜன்னி வந்து தொலைத்து விட்டால் என்னசெய்வது என்றுதான் அதிகமாக கவலைப்பட்டுப் போனான்...

'ஜன்னி வந்தா... எதைப் பேசனும்.. எதைப் பேசக் கூடாதுங்கிற தன்னுணர்வு இல்லாம மனசில இருக்கிற எல்லாத்தையும் கொட்டிக் கவிழ்ப்பாளே...'

இது தேனூத்து இல்லை.. சென்னை.. மேகலாவின் உதவி இங்கே அவனுக்கு கிடைக்காது... ராஜேஸ்வரியிடம் சொல்லலாமென்றால்... அவள் மகளின் நிலையைப் பார்த்தால் பதறிப் போய் விடுவாள்.. அந்தநேரம் பார்த்து ராதிகா எதையாவது புலம்பி வைத்தால்... வேறு வினையே வேண்டாம்... ராதிகா பாலமுரளியைத் தள்ளி வைக்கிறாளோ இல்லையோ... ராஜேஸ்வரி காலம் காலத்துக்கும் அவனை மருமகன் என்ற உறவிலிருந்து தள்ளி வைத்து விடுவாள்...

இப்போதுதான் முகம் கொடுத்துப் பேச ஆரம்பித்திருக்கிற மாமியாருடன் முகம் முறித்துக் கொள்வதா என்று பாலமுரளிக்கு யோசனையாக இருந்தது..

"வள்ளி..." வெளியே எட்டிப் பார்த்து குர கொடுத்தான்...

"இன்னாங்கய்யா...", அடுத்த நொடியே பிரசன்னமானாள் வள்ளியம்மாள்...

"ராதிகாவுக்கு காய்ச்சல் வந்திருக்கு..."

"அடக்கடவுளே.. மதியானம் வரச் சொல்றப்ப நல்லாத்தானே கீந்தாங்க.. இப்ப இன்னா கருமத்துக்கு காய்ச்சல் கண்டிருக்கு...?"

"தெரியலை... டாக்டரிடம் காண்பிக்கனும்..."

"வெறும் வயித்தோடயா இட்டுக்கிட்டுப் போவிங்க..? செத்த பொறுங்கய்யா... சூடா... கஞ்சி வைச்சு கொண்டாரேன்.. அத்தைக் குடிச்ச பின்னாலே... இட்டுக்கிட்டு போங்க..."

வள்ளியம்மாள் அவசரமாக ஓடினாள்... சில நிமிடங்களில் சூடான கஞ்சியுடன் வந்து ராதிகாவின் அருகே அமர்ந்தாள்...

"நான் கிள்ளுக்கீரையா..?" ராதிகா உடம்பை முறுக்கினாள்...

'போச்சுடா...' தலையில கைவைத்துக் கொண்டாள் பாலமுரளி...

அவன் நினைத்ததைப் போலவே ஜன்னி வந்து தொலைத்து விட்டதே...

"அம்மா இன்னாவோ சொல்றாங்க.. அது இன்னான்னு தான் தெரியல...", வள்ளியம்மாள் புரியாமல் விழித்தாள்...

பாலமுரளியோ வந்து விட்ட 'இன்னா'வை எப்படி எதிர்கொள்வது என்று தலைகாய்ந்து கொண்டிருந்தான்...

"அது ஒன்னுமில்லை வள்ளி... தோட்டத்தில கீரையைப் பார்த்தாளா... அவளுக்கு கீரைன்னா ரொம்ப இஷ்டம்... அதனாலே அதைப் பத்தியே பேசறா..." பாலமுரளி சமாளித்தான்...

"நா இன்னாத்தை சொல்லுவேன்... அம்மா மனசுல கீரை மேல இம்புட்டு இஷ்டம் கீதா..? இம்மாங்காலமா... இது எனக்குத் தெரியாம பூடுச்சே..." வள்ளியம்மாள் வருத்தப்பட ஆரம்பித்தாள்..

'இவவேற.. நேரம் காலம் தெரியாம எதையாவது பேசிவைப்பா...' பாலமுரளிக்கு எரிச்சல் வந்தது...

"தெரிந்திருந்தா என்ன பண்ணியிருப்ப..?"

"மதியமே கீரைக் குழம்பு... கீரைக் கடைசல்.. கீரைப் பொரியல்ன்னு.. கீரையா ஆக்கி வைச்சிருக்க மாட்டேனா..?"

'ம்ஹீம்.. செட்டிநாட்டு கைப் பக்குவத்தை மூட்டை கட்டி வைச்சுட்டு.. என்னை துரத்தி விட இவ பிளான் பண்ணிட்டா...'

வாய்க்கு ருசியாக சமைத்துப் போடும் வள்ளியம்மாள்.. இனிக் கீரையை மட்டுமே சமைத்துப் போட்டு விடும் உத்தேசத்திற்கு மாறி விடுவாளோ என்ற பயத்துக்கு ஆளானான் முரளி...

அதற்குள்... ராதிகா கஞ்சியைக் குடித்து விட்டிருந்தாள்... சோர்வுடன் அவள் கட்டிலில் சரிந்து

மீண்டும் தலையை தலையணையில் உருட்ட ஆரம்பித்த போது.. பாலமுரளியின் செல்போன் ஒலித்தது.. மேகலா பேசினாள்...

"முரளி.. எங்கேடா இருக்க...?"

மேகலா இப்படிக் கேட்கவும்.. அவளுக்கும் ஏதாவது வந்து விட்டதோ என்று பதறிப் போய் விட்டான் பாலமுரளி

"உங்களுக்கும் உடம்பு முடியலையாம்மா.. கதீஷ் பக்கத்தில் இருக்கானா..? இருந்தா அவனிடம் போனைக் குடுங்க..."

அவன் பரபரப்பாய் கேட்க...

"ராதிகாவுக்கு என்னடா ஆச்சு..?" என்று அதட்டினாள் மேகலா...

"அம்மா..." கையும் களவுமாக மாட்டினான் முரளி..

"என்ன..? காய்ச்சலா...?"

"ம்ம்ம்..."

"நினைச்சேன்.. நீ அவளைத் தேடிப் போகும் போதே நினைச்சேன்... ஏண்டா இப்படியிருக்கிற..? இப்படித்தான் திருநெல்வேலிக்கு விருந்துக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போறேன் பேர்வழின்னு அவளை கூப்பிட்டுக்கிட்டு போன.. போன இடத்தில சும்மா இருந்தியா..?"

"மலையுச்சியில இருந்து அவளைத் தள்ளியா விட்டேன்..? நீங்க ஒரு ஆள் போதும்மா.. வேற சாட்சியே வேணாம்..."

"அப்புறம் எப்படிடா.. அங்கேயும் அவளுக்கு காய்ச்சல் வந்துச்சு...?"

"அவளுக்கு காய்ச்சல் வரணும்னு எனக்கு மட்டும் நேர்த்திக் கடனாம்மா..? என்னவோ மந்திரிச்சு அவளுக்கு காய்ச்சலை வரவைச்சதைப் போல நீங்க பேசறது கொஞ்சம் கூட சரியில்லம்மா..."

"நீ மந்திரிச்சு ஏண்டா விடனும்..? உனக்குத்தான் கோபம் வந்தா கண்ணு மண்ணு தெரிஞ்சு தொலைக்காதே.. திருநெல்வேலியில அவளை அடிச்சு வைச்சதானே..."

"நீங்களா எதையாவது சொல்லக் கூடாது..."

"நானாச் சொல்லலைடா மகனே..."

"ராதிகா சொன்னாளா...?"

"பூனைக்குட்டி வெளியே வந்திருச்சா..? அவ என்னைக்குடா உனக்கு எதிரா ஒத்தச் சொல்லு.. சொல்லியிருக்கா..? உன் அக்காதான் சொன்னா..."

"த்ச்சு.. இன்னைக்கு அதுபோலல்லாம் எதுவுமில்லம்மா..."

"பின்னே.. அவளுக்கு எப்படித்தான் காய்ச்சல் வந்துச்சு..? இன்னைக்குத்தானே அவளுக்கு பரிட்சை ஆரம்பிக்குது..? அவ பரிட்சை எழுதினாளா இல்லையா..?"

"ம்ம்.. அதெல்லாம் காலையிலேயே எழுதப் போயிட்டா..."

"பரிட்சை எழுதற இடத்திலே காய்ச்சல் வந்துருச்சா..?"

"இல்லம்மா.. மதியம் நான் கூப்பிடப் போனப்ப கூட நல்லாத்தான் இருந்தா..?"

"நேரா அவ வீட்டுக்குத்தானே போனீங்க...?"

"ஊஹீம்.. நம்ம பண்ணை வீட்டுக்கு கூப்பிட்டு வந்துட்டேன்..."

"அதான் அவளுக்கு காய்ச்சல் வந்திருச்சு.. ஏண்டா அவளைப் போட்டு பிடுங்கி எடுக்கிற..?"

"என்னம்மா.. நீங்களே இப்படிப் பேசிவைக்கறிங்க..?"

"எனக்கு உன்குணம் தெரியாதாடா மகனே..? நீ எதுவும் சொல்லாம அவ காய்ச்சலில் விழுந்திருக்க மாட்டா.. இதுக்குத்தான் வேலை மெனக்கெட்டு.. ஊருக்கு கிளம்பிப் போனயா...? பொண்டாட்டி மேல ஆசையா நம் மகன் போறான்னு நினைச்சேன்.. நீ கன்னத்தில ரெண்டு பூசை கொடுக்க இல்ல போயிருக்க..."

என்னவோ.. பக்கத்திலிருந்து பார்த்ததைப் போல மேகலா பேசிவைக்க.. முரளிக்கு தலைவேதனையாக இருந்தது.. எவ்வளவு தொலை தூரத்தில் இருந்தாலும்.. மேகலாவின் சிந்தனையெல்லாம் மருமகளிடமே மையம் கொண்டிருப்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது...

'இவ மேல இவ்வளவு அக்கறையா..?'

அவனுக்கு பொறாமையாக இருந்தது.. முரளிக்கு என்று வந்தால் மேகலா பெற்ற மகளைக்கூட எதிர்த்து

நிற்பாள் அப்படிப்பட்டவள்.. நேற்றுவந்த மருமகளுக்காக.. முரளியை எதிர்த்து நிற்கிறாளே...

"காய்ச்சல் மட்டும்தானா.. ஜன்னியும் சேர்ந்து வந்திருச்சா..?"

முரளி.. வள்ளியம்மாள் எங்கேயென்று எட்டிப் பார்த்தான்.. முரளி போனில் பேச ஆரம்பித்தபோதே.. அவள் நாகரிகம் கருதி.. அறையை விட்டு வெளியேறியிருந்தாள்...

"காய்ச்சல் மட்டும் தாம்மா..." அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே...

"சம்பந்தமில்லையா..? எனக்கும்.. உங்களுக்கும் சம்பந்தமில்லையா..?" என்று ராதிகா பிதற்றி வைத்தாள்..

"அவ என்னடா சொல்றா.." மேகலா கவலையுடன் கேட்டாள்...

தாயின் காதுகள் இந்த வயதிலும்.. இவ்வளவு கூர்மையுடன் செயல்படுவதில் முரளிக்கு மகிழ்ச்சிக்குப் பதில் எரிச்சல் வந்தது...

"பரிட்சை ஞாபகத்தில உளறிவைக்கிறாம்மா..?"

"அதைத்தான் உளறிவைக்கிறாளா... இல்ல.. வேற ஏதாவது இருக்கா..?" மேகலா சந்தேகத்துடன் கேட்டாள்..

"அம்மா.. நீங்க போனை வைச்சாத்தான் நான் அவளை டாக்டர் கிட்ட கூப்பிட்டுக்கிட்டுப் போக முடியும்.."

"பார்த்துக்கடா முரளி.. அவ்வளவுதான் சொல்வேன்.. அவ வீட்டுக்குத் தெரியுமா..?"

"தெரியாது..."

"அதானே பார்த்தேன்.. தெரிஞ்சிருந்தா.. ராஜேஸ்வரி உன்னை விட்டுட்டு எனக்கில்ல போனைப் போட்டு காய்ச்சி எடுத்திருப்பா..?"

"ஏம்மா.. காய்ச்சல் வந்தா.. அது ஒரு குத்தமா..?"

"காய்ச்சலை வரவைச்சா.. அது குத்தம்தான்..."

இவ்வளவு தெளிவான நீதிபதி மாமியாரின் ஆதரவு இருந்தால் இவள் ஏன் ஆட்டம் போட மாட்டாள் என்ற கோபம் பாலமுரளிக்குள் கனன்றது.. மேகலா ஆயிரம் 'பத்திரம்'களை சொல்லி விட்டு போனை வைத்து விட்டாள்.. பாலமுரளி ராதிகாவை எழுப்பினான்.. அவள் லேசாக கண்திறந்து.. 'யார்.. நீ..' என்பதைப் போலப் பார்த்தாள்...

'இது வேறா..' பாலமுரளி நொந்தே போனான்...

கம்பெடுத்து அடிப்பதற்குப் பதிலாக இவள் காய்ச்சலாலேயே அடித்து வைக்கிறாள் என்ற நினைவு அவனுக்குள் எழுந்தது...

"எழுந்திருடி... டாக்டரிடம் போகலாம்...", என்று அவளை எழுப்பி உட்கார வைக்க முயன்றான்..

"அவருக்கும்.. எனக்கும் சம்பந்தமில்லையாமே.." அவள் அவனிடமே நியாயம் கேட்டாள்...

பாலமுரளிக்குள் கவலை சூழ்ந்தது...

'இவளுக்கு என்னைத் தெரியலையே...'

"ராது.. நான்தாண்டி உன் புருசன்..."

"அவர்தான் விட்டுட்டுப் போயிட்டாரே..."

"அடிப்பாவி... நான் எங்கேடி போனேன்..?"

"தேனூத்துக்கு போயிட்டாரே..."

"அதெல்லாம் போகலை.. நீயில்லாம போனா.. என்னைப் பெத்த அம்மா.. வீட்டு வாசப்படி ஏறவிட மாட்டாங்களே.. அப்படியில்ல நீ மாமியாரைக் கைக்குள்ள போட்டு வச்சிருக்க..."

பாலமுரளியின் பேச்சு.. ராதிகாவின் காதுகளில் ஏறியதாகவே தெரியவில்லை... அவள் தன் போக்கில்..

"அவருக்கும்.. எனக்கும் சம்பந்தமில்லையாமில்ல.." என்றே புலம்பிக் கொண்டிருந்தாள்..

பாலமுரளியால் தாங்க முடியவில்லை.. அவளை எழுப்ப முயன்றால்.. அவள் நிற்காமல் விழுந்து வைக்க.. வேறு வழியில்லாமல் கைகளில் ஏந்திக் கொண்டான்...

'என்னைக்கு இவளைப் பார்த்து தொலைச்சேனோ.. அப்பயிருந்து இவளைக் கையில தூக்கித் தொலைக்கிறதே எனக்கு பிழைப்பாப் போச்சு.. கல்யாணமானா எல்லோரும் பிள்ளையைத் தூக்கி சுமப்பாங்க.. நான் பொண்டாட்டியைத் தூக்கிக்கிட்டு அலைகிறேன்...'

பூமாலையாய் துவண்டு கிடந்தவளைப் பார்த்தபோது.. அவனுக்குள் கழிவிரக்கம் பொங்கியது..

'உன் மனசில என்னதாண்டி இருக்கு.. அன்னைக்கும் சரி.. இன்னைக்கும் சரி.. என் அடிதாங்காம உனக்கு

காய்ச்சல் வரல.. என் சொல் தாங்காமத்தான் உனக்கு காய்ச்சல் வந்து தொலைக்குது.. எனக்கும்.. உனக்கும் சம்பந்தமில்லைன்னு சொன்னதுக்காக.. இந்த அளவுக்கு துயரப்படறியே.. இப்படிப்பட்டவ ஏண்டி அவன்கூட உட்கார்ந்து பேசின...'

படிகளில் இறங்கி வந்த முரளியைக் கண்டதும்.. பதட்டத்துடன் ஓடி வந்தாள் வள்ளியம்மாள்...

"அம்மாவுக்கு இன்னாங்கய்யா ஆச்சு.. வெறும் காய்ச்சல்தானே...?"

"இவளுக்கு பூஞ்சை உடம்பு வள்ளி... லேசாத் தலைவலி வந்தாக்கூட தாங்கிக்க மாட்டா... காய்ச்சல் வந்ததில நிற்க முடியாம தள்ளாடறா.. நீ கொஞ்சம் ஹாஸ்பிடல் வரைக்கும் கூட வரனுமே..."

"இன்னங்கய்யா இப்படிக் கேட்கறிங்க.. அம்மாவுக்கு இம்மாந்தூரத்துக்கு காச்ச கண்டிருக்கப்ப நான் கூட வராம வூட்டிலயா குந்தியிருப்பேன்..?"

வள்ளியம்மாள் காரின் பின்சீட்டில் அமர்ந்து ராதிகாவைத் தாங்கிக் கொள்ள.. முரளி.. காரைக் கிளப்பினான்...

"வூட்டைப் பார்த்துக்கய்யா.." கணவனுக்கு கட்டளையிட்டாள் வள்ளியம்மாள்...

"தா.. அத்தை நீ சொல்ல வேணாம்மே.. எனக்குத் தெரியும்.. நீ முதல்ல.. பத்திரமா அம்மாவோட பூட்டு வா.." கேட்டைச் சாத்தினான் பொன்னுச்சாமி..

ராதிகாவை பரிசோதித்த டாக்டரம்மாள் ஊசி மருந்தை எடுத்தபடி பாலமுரளியை யோசனையாகப் பார்த்தாள்...

"எப்போதிருந்து பீவர் இருக்கு...?"

"மதியத்திலிருந்து மேடம்..."

"காலையில நார்மலாத்தான் இருந்தாங்களா..?"

"எக்ஸாம் எழுத போனாளே..."

"ஈஸீட்.. அப்புறம் எப்படி பீவர் வந்தது..."

டாக்டரம்மாளின் விழிகளில் சந்தேகம் எட்டிப் பார்க்க...

'இங்கேயுமா...' என்று நொந்து போனான் பாலமுரளி..

கத்தியின்றி.. ரத்தமின்றி காய்ச்சலினாலேயே யுத்தம் புரிகின்ற மனைவியை நிராயுதபாணியாக ஓர்பார்வை பார்த்துக் கொண்டான்...

"தெரியலை மேடம்..."

"பிட்ஸ் வேற வந்திருக்கு..?"

"அதுவும் தெரியலை மேடம்..."

"அவருக்கும் எனக்கும் சம்பந்தமில்லையாமேன்னே கேட்கிறாங்களே... யார் அந்த அவர்..?"

எவர் அந்த அவர் என்று சொல்ல முடியாமல் பரிதாபமாக ஓர்பார்வையை பாலமுரளி பார்த்து வைக்க.. போனால் போகிறது என்று விட்டுவிட்டாள் அந்த டாக்டரம்மாள்..

உள்ளங் கவர்ந்த கள்வன் சொன்னதை..
நினைத்துப் பார்த்தால் நெஞ்சம் துடிக்குது...

அந்த இரவு பாலமுரளியின் உறக்கத்தை தின்று விட்டு நகர்ந்தது...

மணிக்கொருதரம்.. ராதிகாவின் நெற்றியில் கைவைத்துப் பார்ப்பதே வேலையாக அமர்ந்திருந்தான் அவன்....

முதலிரண்டு மணி நேரத்துக்கு...

"எனக்கும்.. அவருக்கும் சம்பந்தமில்லையாமே.." என்று அவனிடமே நியாயம் கேட்டுக் கொண்டிருந்தாள் ராதிகா...

மெல்ல... மெல்ல.. காய்ச்சலின் வேகம் குறைய ஆரம்பிக்க...

"உங்க அம்மாவிடம் இப்படிச் சொல்வீங்களா..?" என்று நியாயம் கேட்டாள்...

'அப்பாடி.. ஒருவழியா என்னை அடையாளம் கண்டு பிடிச்சுட்டா...' அவன் நிம்மதியானான்..

விடியும் போது...

"இருங்க.. அத்தையிடம் உங்களைப் பத்தி வழக்கு வைக்கிறேன்.." என்று மிரட்டிவிட்டு அவள் தூங்கிப் போனாள்...

'ஆமாண்டி... இதுக்குத்தானே.. விடிய.. விடிய கண் முழிச்சேன்...'

பல்லைக்கடித்த போது... அவளுடைய உடல் நிலை சீராகி விட்டதில் அவன் நிம்மதியாக உணர்ந்தான்...

காலைக்காபியுடன் வந்த வள்ளியம்மாள்...

"இன்னாங்கய்யா.. அம்மா கண் முழிச்சாவது பார்த்தாங்களா...?" என்று நலம் விசாரித்தாள்...

"அவ எங்கே கண்முழிச்சா..? அவளுக்குப் பதிலா.. நான்தான் விடிய விடிய கண்முழிச்சேன்..." அவன் அலுத்துக் கொண்டபடி காபியை வாங்கிக் கொண்டான்...

தளர்வாக எழுந்து அமர்ந்த ராதிகா களைத்திருந்தாள்.. சோர்ந்த அவள் முகத்தில் படிந்திருந்த முடிக்கற்றைகளை விலக்கி அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்த வள்ளியம்மாளின் முகத்தில் திருப்தி நிலவியது...

"காச்ச விட்டிருச்சுங்கய்யா..." குதூகலமாகச் சொன்னாள்...

"அதெல்லாம் விட்டிரும்..." சாதாரணமாகச் சொல்லிவிட்டு பாலமுரளி எழுந்து கொள்ள...

"இன்னாங்கய்யா.. இப்படிச் சொல்லிப்புட்டிங்க.. இம்மா நேரமா அம்மா கண்முழிக்காம பினாத்திக்கிட்டு

கிடந்தாங்க... நீங்க சல்லிசா.. ஒத்த வார்த்தையில பேசிப்புட்டிங்களே..." வள்ளியம்மாள் ஆதங்கப்பட்டாள்...

"உனக்குத் தெரியாது வள்ளி... காய்ச்சலுக்கும் இவளுக்கும் நெருங்கின சிநேகிதம் இருக்கு.. இவ வான்னா அது வந்து நிற்கும்.. இவபோன்னா ஓடியே போயிரும்..", பாலமுரளி ராதிகாவை ஒரு மார்க்கமாகப் பார்த்தபடி சொன்னான்...

"போங்கய்யா.. தன்னாலே.. காச்ச வந்து துடியாய் துடிச்சவங்கள கேலி செய்யாதீங்க..." வள்ளியம்மாள் பரிவுடன் ராதிகாவின் கையில் காபிதம்பளரை கொடுத்தாள்..

"விடு வள்ளி.. அவர் அப்படித்தான் பேசுவார்..." நலிந்த குரலில் கூறிவிட்டு எழுந்து கொள்ளப் போனாள் ராதிகா...

"இப்ப எதுக்கு எழுந்திரிக்கிறாளாம்... படுத்து ரெஸ்ட் எடுக்கச் சொல்லு வள்ளி...", பாலமுரளி அதட்டினான்...

"நான் எக்ஸாமுக்கு படிக்கனும் வள்ளி...", ராதிகா பிடிவாதமாக எழுந்து நின்றாள்..

"இந்த உடம்போட எக்ஸாமுக்கு போகப் போறாளா..?" கடுமையாகக் கேட்டான் பாலமுரளி...

"இன்னைக்கு எக்ஸாம் இல்லை.... இன்னும் இரண்டு நாள் கழித்துத்தான் அடுத்த எக்ஸாம் வருது..", மெதுவாகச் சொன்னாள் ராதிகா...

"ஊடே ரெண்டு நாள் இருக்கில்ல.. எல்லாம் நாளைக்குப் படிச்சுக்கலாம்.. இம்சை படுத்தாம ரெஸ்ட் எடுக்கச் சொல்லு.. இவளுக்கென்ன.. காய்ச்சலை இழுத்து விட்டுகிட்டு... போர்த்திப் படுத்துக்குவா.. இவ அம்மாவுக்கும்.. மாமியாருக்கும் யாரு பதில் சொல்றது..? நான்தான் சொல்லனும்.. ரெண்டு பேரும் என்னைக் காய்ச்சி எடுத்திருவாங்க வள்ளி..." பாலமுரளி கோபம் கொப்புளிக்க பேசினான்...

"வேணும்னா எழுதிக் கொடுத்திடறேன்னு சொல்லு வள்ளி..." ரோசத்துடன் சொன்னாள் ராதிகா....

'கொழுப்பைப் பார்... விடிய.. விடிய.. அவருக்கும் எனக்கும் சம்பந்தமில்லையான்னு பினாத்திட்டு.. இப்ப எழுதிக் கொடுக்கிறேங்கிறா... எத்தனை அப்பு அப்பினாலும்... இவ அடங்கவே மாட்டாளா...?'

பாலமுரளியின் பார்வை அவளை எரிக்க...

"இன்னாத்தைம்மா எழுதிக் கொடுக்கிறதா கீறிங்க..?" என்று தமிழை கீறு கீறென்று கீறினாள் வள்ளியம்மாள்...

"எனக்கு காய்ச்சல் வந்தா... அதுக்கும்... இவருக்கும் யாதொரு சம்பந்தமுமில்லைன்னு எழுதிக் கொடுத்திடறேன்.. அப்புறம் இவரோட அம்மாவும்.. மாமியாரும் இவரைக் கேள்வி கேட்க மாட்டாங்க..." ராதிகா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

அவர்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள் வள்ளி..

"இன்னாதாங்கய்யா நடக்குது.. நேத்து வாரப்ப.. அம்மா சிரிச்ச மூஞ்சியாத்தானே வந்து சேர்ந்தாங்க..

அதுக்குள்ளார உங்களுக்குள்ள சத்தம்.. கித்தம் வந்துருச்சா..?"

வள்ளியம்மாளின் கேள்வியில் ராதிகாவை முறைத்தான் பாலமுரளி.. அவளுக்கு போன காய்ச்சல் திரும்பவும் வந்து விடும் போல ஆகிவிட்டது.. எதற்கு வம்பு என்று பேசாமல் இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துவிட்டாள்...

"இப்படிச் சொன்னதைக் கேட்டா எனக்கேன் கோபம் வரப் போகுது..? பரிட்சைக்கு படிக்கிறேன்னு காய்ச்சலை இழுத்து விட்டுக்கறா.. அடங்குடின்னா சொன்னா... காதில போட்டுக்க மாட்டேங்கிற... அந்தக் கோபம்தான்... வேற பெரிசா எதுவுமில்லை வள்ளி.. நீ போய் வேலையைப் பாரு..."

"இம்புட்டுத்தானா... நான் இன்னாவோன்னு நினைச்சேன்... இன்னாத்துக்குய்யா.. அம்மா படிக்கிறதை வேணாம்ங்கறிங்க... என்னையெல்லாம் படிக்க விட்டிருந்தா... இம்மா நேரத்துக்கு கலெக்டராவே ஆகியிருப்பேன்... அம்மாவாச்சும்.. படிக்க நினைச்சதை படிக்கட்டும்ய்யா..."

"ஒஹோ.. உன் படிப்பை யார் நிறுத்தினது...?"

"வேற யாரு... நான் படிச்ச பள்ளிக்கூடத்து வாத்தியாருகதான்..."

"எதுக்காம்..?"

"வேற எதுக்கு.. ஒரே கிளாஸிலயே ஒம்போது வருசமா குந்திக்கினு கீறியே.. உன்னாலே.... மத்த

புள்ளைகளும் பள்ளிக்கூடத்துக்கு வரப் பயப்படுதுன்னு சொல்லிப்புட்டாங்க..."

"இது வேறயா...? ஆமாம்... நீ ஒன்பது வருசமா... ஆழ்ந்து படிச்ச கிளாஸ்... எந்த கிளாஸ்...?"

"ஒன்னாங்கிளாஸ்..."

வள்ளியம்மாள் சோகமாய் முகத்தை வைத்துக் கொள்ள.. இப்படியாகப்பட்ட கல்விக் கதைகளை கேட்க வைத்த ராதிகாவை தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தான் பாலமுரளி... அவள் பயந்து போனவளாக கண்களை இறுக மூடிக்கொண்டாள்...

"அதுசரி... பெரிய படிப்புத்தான் படிச்சிருக்கே... உன் படிப்பைக் கெடுத்து... நீ கலெக்டராகி விடாமலிருக்க... சதி செய்த வாத்தியார்களை என்ன பண்ணினாலும் தப்பில்லைதான்... இப்பப் போய் வாயிக்கு ருசியா டிபன் பண்ணு பார்க்கலாம்..."

"சரிங்கய்யா..."

கடந்த காலச் சோகத்தில் கண்கள் கசிந்து விட்ட வள்ளியம்மாள் கண்ணீரைத் துடைத்தபடி போய் விட்டாள்..

"உன்னைச் சொல்லனும்டி..." என்று அதற்கும் ராதிகாவைத் திட்டி விட்டு பாலமுரளி குளியலறைக்குள் நுழைந்தான்...

காலைடிபனுக்கு... ராதிகாவுடன் கீழே வந்த பாலமுரளி திகைத்து விட்டான்...

டைனிங்டேபிளில் பச்சைப் பசேலென்ற யதார்த்தங்கள் அணிவகுத்து நின்றன...

"இதெல்லாம் என்ன வள்ளி...?"

சந்தேகத்துடன் பாத்திரங்களைப் பார்த்தபடி கேட்டான் முரளி...

"இது கீரை வடைங்கய்யா... இது கீரை இட்லி... இது கீரை தோசை... இது கீரை பணியாரம்..."

"கடவுளே.. இதுக்கு தொட்டுக்க என்ன பண்ணியிருக்க...?"

"கீரைமசியலும்... கீரைக் குருமாவும் இருக்குங்கய்யா. பத்தாக்குறைக்கு கீரைசட்னியும் அரைச்சு வச்சிருக்கேன்.."

டைனிங் டேபிளின் பதார்த்தங்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு கொலைவெறியோடு ராதிகாவை அவன் முறைக்க...

"என்னை எதுக்கு முறைக்கறிங்க..?" என்று கேட்டாள் ராதிகா...

"எல்லாம் உன்னாலதாண்டி..." அவன் பற்களை நறநறத்தான்...

"எதுக்கெடுத்தாலும் என்னையே குத்தம் சொல்லாதீங்க... வள்ளி கீரையாய் சமைத்து வைத்திருக்கிறதுக்கும்... எனக்கும் என்ன சம்பந்தம்..?"

"உன்னை யாருடி.. ஜன்னி கண்டு பினாத்தச் சொன்னது..?"

"பினாத்தினேனா..? என்ன சொன்னேன்...?"

"ம்ம்... கீரைக்காய்க்கு உப்பில்லைன்னு சொன்ன... அடிச்சா.. பல்லு பூராவும் உதிர்ந்திரும்... உன் மாமியாருக்காக பார்க்கிறேன்... நானென்ன கிள்ளுக் கீரையான்னு இவகிட்டப் போய் கேட்டு வைச்ச..."

"அடக் கடவுளே..."

"இவ என்னான்னு கேட்டா... உனக்கு கீரைபிடிக்கும்ன்னு வாய்க்கு வந்ததைச் சொல்லி வைச்சேன்..."

"அதோட எபக்ட்தான் இதா...?"

ராதிகாவுக்கு சிரிப்பு வந்து விட்டது... சோர்வுடன் இருந்த முகத்தில் மின்னல் கீற்றாய் தெரிந்த சிரிப்பில் ஓர்கணம் பாலமுரளியின் மனம் லயித்தது... மறு கணம் அதிலிருந்து அவன் வெளிப்பட்டன்...

"போதும்... பல்லைக் காட்டாதே.. பல்லு களுக்கிக்கப் போகுது..." கடினமான குரலில் சொன்னான்...

ராதிகாவின் முகம் விழுந்து விட்டது.. புரியாமல் நின்று கொண்டிருந்த வள்ளியம்மாளிடம் சிநேகிதமாகச் சிரித்தாள் அவள்...

"வள்ளி.. எனக்கு கீரை பிடிக்கும் தான்... அதைவிட.... நான் வெஜ் அயிட்டம்தான் ரொம்ப பிடிக்கும்.."

"மெய்யாலுமா...? இஃது தெரிஞ்சிருந்தா.. இம்மாம் நோத்துக்கு.. செட்டிநாட்டு வறுவலை அசத்தியிருப்பேனே.."

"இப்பவந்து இதைச் சொல்லு... உன் கைப்பக்குவத்தில் நம்பிக்கை வைச்சு.. நாக்கை சப்புக் கொட்டிக்கிட்டு சாப்பிட வந்தா.. நீ கீரையாய் நிரப்பி வைச்சிருக்கிற... நான் என்னத்தை சொல்ல..?" ஏமாற்றத்துடன் சொன்னான் பாலமுரளி...

"இன்னாத்தை செய்யுவேன்... தோ... ஒரு நிமிசத்தில நான் ஆக்கி வறுத்துக் கொண்டாந்து அடுக்கிர்றேங்கய்யா... நீங்க அதுக்குப் பின்னால சாப்பிட வாங்க..."

"பரவாயில்லை விடு.. இப்ப இதையெல்லாம் உள்ளே தள்ளலாம்.. மதியத்தில உன் கைவரிசையை காட்டு.. நாங்களும் ஒரு கை பார்க்கிறோம்..."

பாலமுரளி வள்ளியம்மாளிடம் சமாதானமாகப் பேசிவிட்டு சாப்பிட உட்கார்ந்தான்... பிரிய மில்லாமல் வள்ளியம்மாள் செய்து வைத்திருந்த உணவு வகைகளை ருசித்தவனின் முகம் மலர்ந்தது...

"அட.. இதெல்லாம் செம டேஸ்டா இருக்கே.. இன்னும் கொஞ்சம் போடு..." கேட்டு வாங்கிச் சாப்பிட்டான்...

அவன் சாப்பிட்டு முடித்து எழுந்தபோது.. டைனிங்க டேபிளில் இருந்த பதார்த்தங்கள் அனைத்தும் காலியாகி இருந்தன...

"கீரையில கூட உன் திறமையைக் காட்டிட்ட வள்ளி.. பரவாயில்ல..போ..."

"இன்னாங்கய்யா.. இம்மாம் சாதாரணமா சொல்லிட்டிங்க... கீரைன்னா உங்களுக்கு அவ்வளவு இளக்காரமா பூடுச்சா..?"

வள்ளியம்மாள் சிலிர்த்துக் கொள்ள...

"அதை என்கிட்டச் சொல்லாதே... இவகிட்டச் சொல்லு... இவதான் கிள்ளுக்கீரையைப் பத்தியே பேசிவைப்பா...", என்று கழன்று கொண்டான் பாலமுரளி..

ராஜேஸ்வரி போன் பண்ணியிருந்தாள்... மறுநாள் வருவதாகச் சொன்னான் பாலமுரளி.. ராதிகாவின் மாற்றுடைகள் பண்ணை வீட்டிலும் இருந்ததால்.. அதைப்பற்றி ராஜேஸ்வரி கவலைப்பட வழியில்லாமல் போய் விட்டது...

பாலமுரளி... அவனுடைய வியாபார சம்பந்தமான வேலைகளில் ஈடுபட ஆரம்பித்து... வெளியே கிளம்பி விட்டான்.. அவன் இல்லாத நேரத்தில் ராதிகா பரிட்சைக்கு படிக்க ஆரம்பித்தாள்.. மதிய உணவுக்கு வீடு வந்தவன்.. அதைப் பார்த்து விட்டு முறைக்க.. புத்தகங்களை மூடி விட்டு சாப்பிட வந்தாள்...

மறுநாள் அவர்கள் இருவரும் கிருஷ்ணமூர்த்தியின் வீட்டிற்குச் சென்றார்கள்...

"இது அநியாயம் அத்தான்..." கீதா சண்டைக்கு வந்தாள்...

"என்னாச்சு.. நான் என்ன செய்தேன்..?" அவன் விளக்கம் கேட்டான்...

"இவளை எங்க வீட்டுக்கு அனுப்புறதைப் போல அனுப்பிட்டு.. பின்னாடியே வந்து நீங்க அலேக் பண்ணிட்டுப் போயிட்டா நாங்க என்ன செய்வோம்ன்னு நினைச்சுப் பார்த்திங்களா... ?"

"என் பெண்டாட்டியைத்தானே நான் அலேக் பண்ணினேன்... ?"

"இதில வேற இப்படி நியாயம் பேசறிங்களா..? மேரேஜ் பண்ணிக்கிட்டா... இவளை எங்க கண்ணிலயே காட்டக் கூடாதுன்னு ஏதும் சட்டமிருக்கா... ?"

"இல்லைதான்.. ஆனா.. எனக்கு இங்கே வேலையிருக்கே..."

"வேலையிருந்தா எங்க வீட்டில தங்கறது..."

"அது எப்படி முடியும்..? மாமனார் வீட்டில விருந்து சாப்பிடலாம்.. வீட்டோட தங்கக் கூடாது.."

"இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க..."

"சரி.. சரி.. உனக்கும் வேணாம்.. எனக்கும் வேணாம்.. ஒருநாள் நாங்க இங்க இருக்கோம்.. மறுநாள் எங்க பார்ம் ஹவுஸில் இருக்கோம்.. சரிதானே..."

ராதிகாவின் பிறந்த வீடு சந்தோசமாக சரியென்று சொன்னது... ராதிகாவும்.. பாலமுரளியும்.. கிருஷ்ண மூர்த்தியின் வீட்டில் ஒருநாள்... பண்ணை வீட்டில் ஒருநாள் என்று மாறிமாறித் தங்கினார்கள்.. ராதிகா அவளுடைய பரிட்சைகளை வெற்றிகரமாக எழுதி முடித்து விட்டாள்... அவர்கள் தேனூத்துக்கு கிளம்பினார்கள்...

மறந்தும்.. அவர்கள் தனியே இருக்கும் தருணங்களில் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளவில்லை...

127

நீ நிந்தனைகள் செய்தாலும்...
என் சிந்தனைகள் உன் மீதுதான்...

செல்போனைக் காதுக்கு கொடுத்தபடி... மாடிப்படிகளில் இறங்கிவந்து கொண்டிருந்தான் பாலமுரளி.. குனிந்த தலை நிமிராமல் டைனிங் டேபிளில் பதார்த்தங்களை வைத்துக் கொண்டிருந்த ராதிகாவின் மீது அவன் பார்வை படிந்தது...

'நிமிர்ந்து பார்க்கிறாளான்னு பாரு...' பல்லைக் கடித்தான்...

அவள் தலை நிமிரவில்லை... சென்னையிலிருந்து வந்த தினம் முதலாய் இப்படித்தான் செய்கிறாள்.. முதலில் செய்ததைப் போல.. அவன் பின்னாலேயே ஓடிவந்து வழியை மறிப்பதில்லை... சாப்பிடாமல் போகக் கூடதென்று மிரட்டுவதில்லை...

அவனும் முதலிரண்டு தினங்களில் வேலையின் ஞாபகத்தில் சாப்பிட மறந்து கிளம்பிச் சென்று விட்டான்.. ராதிகா போனிலும் நினைவு படுத்தாததினால்.. மதிய உணவையும் அவள் இல்லாத தினங்களில் வெளியே சாப்பிட்டதைப் போலவே சாப்பிட்டு விட்டான்.. இரவு

நெடுநேரமான பின்னால் வீடு திரும்பியவனுக்கு மேகலா கதவைத் திறந்து விட்டாள்..

"நீங்க தூங்கப் போகலையாம்மா..? அந்த மகாராணி எங்கே...?"

அப்போதுதான் ராதிகாவின் நினைவு வந்தவனாக அவன் கேட்டான்...

"என்னடா ஆச்சு..?" மேகலா அவன் முகத்தை கூர்ந்து பார்த்தாள்..

'அம்மாவோட பார்வையே சரியில்லையே... அவ எதையாச்சும் பத்தவைச்சுட்டாளா...?'

"ஒன்னும் ஆகலையே..."

"அப்புறம் எதுக்காக... காலையிலேயே சாப்பிடாமல் கூட ஓடிட்ட..?"

அதுவரை அவனுக்கு அந்த நினைவேயில்லை.. மேகலாவின் கேள்வியில் அவன் உதட்டைக் கடித்தான்...

'அவதானே வழியை மறிப்பா..? இன்னைக்கு மறிக்கலையே... போனும் பண்ணலையே...'

"வேலைம்மா... அதான் ஓடிட்டேன்..."

"நீ ஓடிட்ட.. ராதிகாதான் பாவம்..."

'அவளுக்கென்ன கொள்ளை வந்தது..? பட்டினியாப் போனது நான்.. எங்க அம்மா பாவப்படறது அவளப்பார்த்து.. நேரம்...'

"ஏன்.. அவளுக்கு என்ன ஆச்சு...?"

"இதுவரைக்கும் ஒன்னும் ஆகலை... இனியாவது அவ வயித்துக்குள்ள எதையாச்சும் போட்டாத்தான்... வேற ஏதும் ஆகாம இருக்கும்..."

மேகலாவின் பீடிகையில் முரளி எரிச்சல்பட்டுப் போனான்...

'நாள் பூராவும் சுத்தியலைஞ்சிட்டு.. கொஞ்சநேரம் துங்கி எழுந்திருக்கலாம்ன்னு ஒரு மனுசன் வீடு தேடி வந்தா... அவ ராத்தூக்கத்துக்கு வழியில்லாம செய்துகிட்டு இருக்காளே... இதென்ன அவளுக்கு புதசா.. மகாசி... என்னைக்கு என் கண்ணில பட்டாளோ... அன்னையில இருந்துதான் நான் ராத்தூக்கத்தை தொலைச்சிட்டேனே..'

"என்னன்னுதான் சொல்லுங்கம்மா..."

"காலையில இருந்து அவ பல்லில.. பச்சைத் தண்ணி படலைடா..."

"என்னது..?"

முரளி திகைத்துப் போனான்.. ராதிகாவின் இதுபோன்ற போர் முறையை எதிர்நோக்க நேரிடும் என்று அவன் நினைத்தும் பார்க்கவில்லை...

"ஏம்மா... அவ சாப்பிடறதுக்கென்ன..?"

"என்னைக் கேளு.. நானா பட்டினி கிடக்கச் சொன்னேன்..? அவகிட்டப் போய் இந்தக் கேள்வியை கேளுடா..."

'அவகிட்ட கேட்டுட்டாலும்...'

"ஏன் நீங்க சொல்ல மாட்டிங்களா...?"

"தினமும் அவரை வழி மறிச்சாத்தான் அவர் நிற்பாரா அத்தைன்னு அவ கேட்கிறாடா.. போன் பண்ணினாத்தான் மதியச்சாப்பாட்டுக்க வருவாரா... அவருக்கா அந்த நினைப்பிருக்க வேணாமான்னு கேட்கிறா... எத்தனை நாளைக்குத்தான் இப்படியே வழி மறிச்சு... போனில கூப்பிட்டு சாப்பாட்டைப் போடறது..? அவருக்கா தோண வேணாமான்னு கேட்கிறா.. அவ கேட்கிறதிலயும் நியாயம் இருக்கில்ல...?"

ராதிகாவின் சரஸமான வழிமறித்தலின் நினைவில் பாலமுரளியின் மனதில் ஏமாற்றம் படர்ந்தது.. அவள் போனில் பேசும் கொஞ்சலான மிரட்டல்களை இனிக் கேட்க முடியாதா என்ற ஏக்கம் அவன் நெஞ்சில் சூழ்ந்தது..

'தப்பிக்கப் பார்க்கிறா...'

"அதுக்காக... பட்டினி கிடப்பாளாமா..?"

"ஆமாம்ன்னு சொல்றாடா.. அவர் வீட்டில சாப்பிட்டா நான் சாப்பிடறேன்.. அவர் வீட்டில சாப்பிடலைன்னா... எனக்கும் சாப்பாடு வேணாம்ன்னு சொல்றா.. இதுபோல அவ சோர்ந்து பேசி நான் பார்த்ததே இல்லைடா முரளி.. சென்னைக்கு போனவன்.. அவளை என்னதான் பண்ணித் தொலைச்சே..."

என்ன பண்ணினான்..? எப்போதும் போல அவள் கன்னத்தில் நாலு அப்பு அப்பினான்.. அதற்காகவா அவள் மௌனப் போராட்டத்தை நடத்துகிறாள்...?

'இல்லை.. இது வேற ஒன்றுக்காக...'

அந்த ஒன்று எது என்ற நினைவில் அவன் மனம் கனத்தது..

'எனக்கும்.. அவருக்கும் சம்பந்தமில்லையாமே..' அவள் ஜன்னி கண்டு பிதற்றிய பிதற்றலின் நினைவில் அவன் உதட்டைக் கடித்தான்...

இந்த வார்த்தை அவள் மனதில் ரணமாக பதிந்திருப்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது...

"ஏம்மா.. நீங்க வேற.. அவளுக்கு அவ அம்மா வீட்டிலேயே தங்கனும்னு ஆசை.. நான் விடலை.. நம்ம பண்ணை வீட்டிலே ஒருநாள்.. அங்கே ஒரு நாள்ன்னு... மாறிமாறித் தங்க விட்டேன்.. அந்தக் கோபத்தில உம்முன்னு இருக்கா..."

"அதுக்குத்தான் படிச்சுப்படிச்சுச் சொன்னேன்.. பெத்தவங்களுக்கும் பொண்ணு மேல பாசமிருக்கும்.. பொண்ணுக்கும் பெத்தவங்க மேல பாசமிருக்கும்ன்னு.. நீ கேட்காம பின்னாலேயே ஓடின..."

"அதனால என்னம்மா கெட்டுப் போச்சு...?"

"அவ... அக்கடான்னு அவ அம்மா வீட்டில இருந்துட்டு வர்றது கெட்டுப்போச்சில்ல...?"

"அக்கடான்னு அம்மா வீட்டில இருக்கிறதுக்கா எனக்கு கழுத்தை நீட்டினா..?"

"உன்கூடப் பேச என்னால ஆகாதுடா தம்பி..."

"பெத்தவங்க மேல வைக்கிற பாசத்தை புருசன் மேல இனிமே திருப்பச் சொல்லுங்க.. அப்படியெல்லாம் அவ இஷ்டத்துக்கு அவங்கம்மா வீட்டில போய் இருக்க முடியாது..."

"என்னடா முரளி பிடிவாதம் பிடிக்கிற... ?"

"இப்ப உங்களுக்கு என்னம்மா வேணும்..? அவ சாப்பிடனும்.. அவ்வளவுதானே.. நான் போயி கூப்பிட்டுக்கிட்டு வர்றேன்..."

"டேய்.. அடிச்சுக் கிடிச்சு வச்சிராதேடா.. அவ ஏற்கனவே பட்டினியாய் கிடக்கிறவ...", மேகலா பயந்து போய் விட்டாள்..

'என்னை என்ன ராட்சஸன்னு இவங்க நினைக்கிறாங்களா..?'

பாலமுரளிக்கு ஆயாசமாக இருந்தது.. அப்படி நினைக்க வைத்த ராதிகாவை... உண்மையிலேயே நான்கு அப்பு அப்பினால் என்ன என்ற ஆவேசம் அவனுக்குள் கிளர்ந்தது...

"நான் அடாவடிக்காரன்னே முடிவு பண்ணிட்டிங்களா..?"

பாலமுரளியின் கோபத்தில் மேகலா அடங்கிப் போனாள்- அதே வேத்துடன் தடதடவென்று மாடியேறினான்..

புயல்வேகத்தில் அறைக்குள் வந்தவனை நிமிர்ந்து பார்த்த ராதிகா சோர்ந்திருந்தாள்.. பாலமுரளியின்

கோபத்தில் கன்றியிருந்த முகத்தைப் பார்க்கப் பயந்தவளாக தலை கவிழ்ந்தாள்...

"உன் மனசில என்னடி நினைச்சுக்கிட்டு இருக்கே..?"

அதுவரை அவளுடன் தனிமையில் இருக்கும் போது பேசாதவன்.. மௌனத்தைக் கலைத்து பேசிவிட்டதில்.. அவள் உதட்டைக் கடித்தபடி முகம் திருப்பிக் கொண்டாள்..

"உன்னைத்தாண்டி கேட்கிறேன்..." அவன் உறுமினான்...

"நான் எதையும் நினைக்கல..." மெல்லிய குரலில் பதில் சொன்னாள் ராதிகா...

"எங்க அம்மாவை எனக்கெதிரா தூண்டிவிடறயா..?"

"எனக்கு அதெல்லாம் வராது..."

"பட்டினி கிடக்க மட்டும் வருமா..?"

"அதில உங்களுக்கென்ன கஷ்டம்..?"

"ஒங்கி ஒரு அப்பு அப்பினேன்னு வையி.. இருக்கிற பல்லு பூராவும் உதிர்ந்துரும்..."

"இதானே உங்களோட நீண்டநாள் ஆசை..? அந்தக் குறை உங்களுக்கெதுக்கு..? சொன்னதைச் செஞ்சிருங்க.."

ராதிகா அசையாமல் பதில் கொடுக்க.. பாலமுரளி அவளையே உறுத்துப் பார்த்தான்.. அவன் பார்வையை உணர்ந்தாலும் அவள் நிமிர்ந்து கூடப்பார்க்கவில்லை...

"இங்கே பார்.. புருசன் பெண்டாட்டி சண்டை.. பெட்ரூமை விட்டுக் கடக்கக் கூடாது..."

"அது எனக்கும் தெரியும்.."

"தெரிஞ்சவ எதுக்காக அம்மா என்னிடம் கேள்வி கேட்கிறதைப் போல நடந்துக்கனும்...?"

"அது உங்களுக்கே தெரியும்..."

"உனக்கு இப்ப என்ன வேணும்..? நான் வீட்டிலே சாப்பிட்டாகனும்... இனி மறக்காம அதைச் செய்து வைக்கிறேன்.. இப்ப எழுந்திருச்சுவா..."

"எதுக்கு...?"

அவளது கேள்வியில் அவன் முறைத்தான்....

"ஏண்டி... என் உசிரைப் போட்டு இப்படிக்-குறைக்கிற..? விடிய விடிய ராமாயணம் கேட்டுட்டு.. கைகேயி பெத்த பிள்ளை ராமன்னு சொல்லி வைக்கிறயே.. உன்னை என்னதான் பண்ணலாம்...? சாப்பிட வாடி.. நீ சாப்பிடலைன்னா.. இன்னைக்கு எனக்கு ராத்தூக்கம் போயிடும்டி.. என் அம்மா என்னை தூங்கவிடாம வறுத்து எடுத்துருவாங்க..."

ஆக அம்மாவுக்காகத்தான்... அவளது கோபத்திலிருந்து தப்பிக்கத்தான் அவன் அவளைத் தேடிவந்து பேசுகிறான்.. சாப்பிட அழைக்கிறான்... அவளுக்காக இல்லை.. அவள் பட்டினி கிடக்கிறாளே என்பதற்காக இல்லை...

ராதிகாவின் மனம் வலித்தது.. அந்த வலியிலும் அவள் கேட்டாள்...

"நீங்க...?"

"நானும்தான் கொட்டிக்கறேன்... போதுமா... எழுந்திருச்சு வா... பட்டினி கிடக்கிறாளாம் பட்டினி.. இதுக்கொன்னும் குறைச்சலில்ல.. செய்கிறதெல்லாம் ஏட்டிக்கு போட்டி.. இதில மாமியார் மெச்ச பட்டினி கிடந்து எனக்கு பாட்டு வாங்கிக் கொடுக்கிறா... அராஜகம் பண்றடி..."

அவளைத் திட்டினாலும்... அவள் கூடவந்து அமர்ந்து.. அவளுக்கு பரிமாறிவிட்டு.. அவனும் சாப்பிட ஆரம்பித்தான்...

மறைவாக நின்று.. மகனையும்.. மருமகளையும் கண்காணித்துக் கொண்டிருந்த மேகலாவின் முகத்தில் நிலவிய திருப்தியை ராதிகா பார்த்து விட்டாள்..

அதுவரை.. அவளுக்காக அவன் காண்பித்த மெலிதான அக்கறையில் அவள் மனம் நெகிழ்ந்திருந்தது.. மேகலாவைப் பார்த்தவுடன் அந்த நெகிழ்வு மறைந்து போய் விட்டது..

'ம்ஹீம்.. எனக்காக இவன் இதைச் செய்யலை.. இவனோட அம்மாவுக்காக செய்கிறான்...'

கணவனின் அக்கறையை நடிப்பென்று நினைத்த பின்னால் அவள் தொண்டையில் உணவு இறங்கவில்லை...

"என்னடி..?" அவன் அதட்டினான்..

"போதும்..." அவள் மறுத்தாள்..

"என்ன போதும்..? காலையில இருந்து பட்டினி கிடந்தவ ரெண்டே இட்லியில் எழுந்திருக்கிறாளாம்.. ஒழுங்காய் சாப்பிடு.. இல்லைன்னா நடக்கிறதே வேற..."

மிரட்டி அவளைச் சாப்பிட வைத்தவன்.. அன்றைய இரவின் தனிமையில் அவளிடம் சொன்னான்...

"எங்க அம்மா பாவம்... வயசானவங்கடி.. அவங்களைப் போட்டு படுத்தி எடுக்காதே..."

"நான் என்னவோ.. அத்தைகூட மல்லுக்கு நிற்கிறதைப் போலயில்ல பேசி வைக்கறிங்க..."

"அவங்க அதைக் கூட தாங்கிக்குவாங்க.. மகன் வாழட்டும்ன்னு அதை என்கிட்டச் சொல்லாமக்கூட மறைச்சுருவாங்க... ஆனா... என்கூட நீ மல்லுக்கு நிக்கறேன்னு தெரிஞ்சதுன்னு வைய்யி... அவங்களாலே அதைத் தாங்கிக்கவே முடியாது..."

'இவன்கூட நான் மல்லுக்கு நிற்கிறேனா..?' ராதிகா மனம் வெதும்பினாள்...

"உங்ககூட நானொன்னும் சண்டை போடல..."

"இப்ப நீ செஞ்சுக்கிட்டு இருக்கிறதுக்கு பேரென்ன..?"

"இது சண்டையா..?"

"பின்னே.. இதென்ன சமாதானமா..? இப்படி எதிரும் புதிருமா நீயும் நானும் நின்னா.. அம்மா தூண்டித் துருவ ஆரம்பிச்சிடுவாங்க... அதனால..."

"அதனால...?"

"நீ எப்பவும் போல இருந்து தொலைடி..."

"புரியலை..." ராதிகா பிடிவாதமாக விளக்கம் கேட்டாள்...

'இவளுக்கா புரியாது...' பாலமுரளியின் முகம் கோபத்தில் ஜிவுஜிவுத்தது...

'சொல்லாலே உரைத்து பாதி...
தன்னாலே அறிந்தது மீதி...'

அவளுக்குப் பிடித்த பாடல் வரிகளை எண்ணமிட்டான்.. இவளுக்கு அவன் என்ன சொல்ல வருகிறானென்று புரியாதாம்...

'பாவி... மகாபாவி...' மனதிற்குள் அவளைத் திட்டித் தீர்த்தான்...

"சென்னைக்கு போறதுக்கு முன்னாடி எப்படி இருந்தியோ.. அப்படி இருந்து தொலை..."

அவன் சொல்லிவிட்டான்... ராதிகா உதட்டைக் கடித்துக் கொண்டு அவன் முகத்தையே இமைக்காமல் பார்த்தாள்... அந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம் என்று சத்தியமாக பாலமுரளிக்கு பிடிபடவில்லை...

'உனக்கு காதல் வேணுமா..? நீ என்னைத் தொட மாட்ட.. ஆனா நான் உன்னைத் தொட்டுத்தழுவனும்.. நீ எனக்காக ஏங்க மாட்ட.. ஆனா நான உனக்காக ஏங்கித் தவிக்கனும்.. நீ என்கூட குடும்பம் நடத்த மாட்ட.. ஆனா.. நான் உன்கூட குடும்பம் நடத்தத் துடிக்கனும்... எத்தனை போசைடா உனக்கு...? என் உடலென்னா இரும்பா..? இல்லைடா.. அது பெழுகு... ஒவ்வொரு முறையும் உன்னைத் தொட்டுத் தழுவி.. நீயும் என்னைத் தொட ஆரம்பிக்கும் போது... ஏதாவது ஒரு வினைவந்து நீ விலகித் தொலைக்கிற.. அதுக்குப் பின்னால நான் படற பாட்டை நீ அறிவாயா..?'

ராதிகாவின் ஆழ்மனம் குமுறியது...

வாழ்க்கை போடும் கணக்குகள்..
வாழ்ந்து பார்க்காமல் புரிந்து விடுமா..?

"என்னால உங்களுக்கு எந்தத் தொந்திரவும் இருக்காது.."

பட்டுக் கொள்ளாத குரலில் ராதிகா கூறி ஏமாற்றமாய் உணர்ந்தான் பாலமுரளி..

இவ்வளவுதானா...? இவ்வளவேதானா..? இண்டே வி பதிலில் எல்லாவற்றையும் இவள் முடிந்து விட்டாளா..?

"என்னடி சொல்ற...?"

"அத்தை பார்க்கிற மாதிரி உங்ககூட நான் கோபமாய் பேச மாட்டேன்... என்னை நீங்கள் நம்பலாம்.."

"இதைத்தான் நான் கேட்டேனா..?"

"வேற எதைக் கேட்டிங்க...?"

உணர்வுகள் துடைத்த முகத்துடன் நிதானமாக அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்து அவள் கேட்டாள்..

"உனக்குத் திமிர்டி..."

"அப்படியா...?"

எந்த விதப் பாதிப்பும் இல்லாமல் அவள் கேட்டு வைத்ததில் அவனுக்கு கோபம்.. கோபமாக வந்தது..

"அம்மா முன்னாலே நாம முகப்திருப்ப முடியாது ராதிகா..."

"நான் முகம் திருப்ப மாட்டேன்..." அழுத்தமான குரலில் சொன்னாள் அவள்.. நீ முகம் திருப்பிக் கொண்டு போனால்.. பின்னால் வந்து கொஞ்ச மாட்டேன்.. என்ற மறைமுகமான செய்தி அதில் பொதிந்திருக்க.. அவளையே இமைக்காமல் பார்த்தான் பாலமுரளி..

ஊடலுவும் அவனது இது போன்ற பார்வைகளில்.. வழக்கமாக அவள் முகம் சிவந்து தடுமாறிப் போவாள்..

இப்போது அவ்வாறு செய்யவில்லை.. மாறாக.. அவன் பார்வையை சலனமில்லாத பதில் பார்வையால் எதிர்கொண்டாள்...

"முடிவா என்னதாண்டி சொல்ற..?" ஆத்திரத்துடன் அவன் கேட்டான்...

"எனக்குத் தூக்கம் வருது..."

அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே... கட்டிலின் ஓரமாகப் படுத்தவள்... இமைகளை மூடி விட்டாள்...

கோபத்துடன் அவன் உதைத்த சோபா... சுவரில் மோதிக் கவிழ்ந்தது.. அந்த சப்தத்தில் அவள் அசையவில்லை...

மறுநாளில் இருந்து அவள் பட்டுக்கொள்ளாமல்.. தாமரையிலைத் தண்ணீராய் வாழும் வாழ்க்கையினை வாழ ஆரம்பித்தான்...

அவனுக்காக காபி கொண்டு வருவாள்.. மற்றவர்கள் முன் அவன் கையில் தருபவள்... தனியறையில் டீப்பாயின் மேல் வைத்து விட்டு நகர்ந்தாள்.

அவன் குளித்து முடித்து வந்தால்... அவனுக்கான மாற்றுடைகளை எடுத்து வைத்திருப்பாள்... ஆனால் அறையில் இருக்க மாட்டாள்..

டைனிங் டேபிளில் அவனுக்கு தட்டு வைத்துப் பரிமாறுவாள்.. ஆனால் அவன் சாப்பிடாமல் போனால் பின்னால் ஓடிவந்து கூப்பிடமாட்டாள்...

இரவில் அவன் வரும்போது கண் விழித்துக் காத்திருந்து கதவைத் திறந்து விடுவாள்.. ஆனால்.. அவள்

கண்களில் அவனைக் கண்டதும் தோன்றும் மின்னல் தோன்றாது.. ஏன் தாமதம் என்றும் கேட்க மாட்டாள்...

ஒன்றே ஒன்றை மட்டும் மறக்காமல் செய்து மேகலாவிடம் நல்லபெயர் வாங்கிக் கொண்டாள்...

அது... பாலமுரளி சாப்பிட வராவிட்டால் அவள் பட்டினிகிடப்பது...

"ஏண்டா... அவளை பட்டினி போடற...?"

மேகலா பிலுபிலுவென்று பிடித்து... மகனைத் திட்டி விடுவாள்... மறந்தும்.. அவன் சாப்பிட்டானா என்று விசாரிக்க மாட்டாள்...

'என் குடுமிய இவ கையில வைச்சுக்கனும்னு பார்க்கிறாளா..?'

கோபம் வந்தாலும்.. மேகலாவின் நினைவில் அதை வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல் அவன் தவித்தான்...

அவன் முகம் பார்க்காமல் ராதிகா பரிமாறும் போது...

'போடி... நீயுமாச்சு... நீ போடுகிற சாப்பாடுமாச்சு...' என்று தட்டைத் தள்ளி விட்டு எழுந்து கொள்ளும் ஆசை அவன் மனதில் தளும்பும்...

அந்த நேரம் பார்த்து... ஆயாசமாக அவன் எதிரில் வந்து அமர்ந்து புன்னகைக்கும் மேகலாவின் முகத்தைப் பார்த்ததும் அந்த ஆசை சொல்லாமல்... கொள்ளாமல் ஓடிவிடும்...

"முரளி..."

யோசனையுடன் மாடிப் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தவனை அழைத்தாள் மேகலா...

சிந்தனை கலைந்தவனாக தாயைப் பார்த்தான்...

"என்னம்மா..?"

"நீ பாட்டுக்கு சாப்பிடாம போயிடாதப்பா... அப்புறம் ராதிகாவும் சாப்பிடாம கொலை பட்டினியா கிடப்பா..."

அவள் கவலை அவளுக்கு...

மகன் சாப்பிடாமல் போவதைப் பற்றிக்கூட அவள் கவலைப்படவில்லை... மருமகள் சாப்பிடாமல் இருந்து விடுவாளே என்பது தான் அவளது கவலையாக இருந்தது...

'நான் கொடுத்து வைத்தவன்..! எனக்கு இப்படிப்பட்ட அம்மா..!' அவனுடைய அம்மா ராதிகாவின் மாமியாராக பேசுவதில் அவன் நொந்தே போனான்...

"கவலையே படாதீங்கம்மா... உங்க மருமகளை பட்டினி போட்டுற மாட்டேன்.. சாப்பிடத்தான் போறேன்.."

அவன் இறுக்கமான குரலில் கூற... அதை விளையாட்டுப் பேச்சாக நினைத்துக் கொண்ட மேகலா..

"போடா.. போக்கிரி..." என்று சிரித்தாள்...

இப்படிப் புரிந்து கொள்ளாமலே அவள் இருந்து விட வேண்டும் என்ற வேண்டுதலோடு சாப்பிட அமர்ந்தான் பாலமுரளி...

முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு பரிமாறுகிறவளைப் பார்த்து அவனுக்குள் எரிச்சல் மண்டியது...

'எதிரிக்கு சாப்பாடு போடுகிறாளா...'

மனதுக்குள் மண்டிய எரிச்சலை சாப்பாட்டுடன் விழுங்கி விட்டு எழுந்து கை கழுவியபடி ராதிகாவைப் பார்த்தான்.. அவளோ அவனைப் பார்க்காமல் டைனிங் டேபிளில் இருந்த பாத்திரங்களை அகற்றுவதில் மும்முரமாக இருந்தாள்...

'கடமையை முடிச்சிட்டாளாம்... ம்ஹீம்.. எனக்கு இப்படி ஒரு பெண்டாட்டி...'

நொந்தபடி ஹாலுக்கு வந்தவனின் விழிகள் கூர்மையாகின... அங்கே.. ஹேமா வந்து கொண்டிருந்தாள்..

'இவ எங்கே.. இங்கே வந்து நிற்கிறா...'

வந்தவளை 'வா' வென்று அழைக்காமல் அவன் புருவங்களை உயர்த்த... ஹேமா அவனை சிநேகிதமாகப் பார்த்து சிரித்தாள்...

"எப்படியிருக்கீங்க...?"

அவளை அவன் நலம் விசாரிக்க வேண்டும்... மாறாக... அவள் அவனை நாம் விசாரித்து வைக்க... வேறு வழியில்லாதவனாக அவன் தலையசைத்தான்...

"யாருடா இந்தப் பொண்ணு...?"

மேகலாவின் கேள்விக்கு அவன் பதிலைச் சொல்லவில்லை.. ஹேமாவே அதற்கான பதிலைச் சொன்னாள்...

"நான் ராதிகாவின் பிரண்ட் ஆண்ட்டி..."

"அப்படியா..? உட்காரும்மா... ராதிகா.. இங்கே யாரு வந்திருக்கிறது பாரு..."

மேகலாவின் வரவேற்பில் பாலமுரளிக்கு துளிக்கூட உடன் பாடில்லை இவளுக்கு இந்த அளவுக்கு வரவேற்பு தேவையா என்று மனதுக்குள் வெகுண்டான்...

அதற்குள் ராதிகா வந்துவிட்டாள்... வந்தவளின் முகம் பூவாக மலர்ந்ததில் பாலமுரளிக்குள் கோபம் கொந்தளித்தது...

'கட்டின புருசனை யாரோ போலப் பார்க்கிறா.. கூடப் படிச்சவளைக் கண்டதும் மகிழ்ந்து போறா... இவளுக்கு என்னைவிட இவ முக்கியமா போயிட்டாளா..?'

"ஹேமா.." ராதிகா கைகளை விரித்துக்கொள்ள....

"ராது" என்று அவள் ராதிகாவைக் கட்டிக் கொண்டாள்...

அதைப் பார்த்த பாலமுரளியின் கண்கள் இடுங்கின.. உரிமையுடன் ஹேமாவின் அருகில் அமர்ந்து கதை பேச ஆரம்பித்து விட்டவளை வன்மத்துடன் பார்த்தான்...

"இவ்வளவு சிநேகிதியாய் இருக்கியே... எப்படிம்மா வந்த..? தனியாவா வந்த..?" மேகலா விசாரிக்க ஆரம்பித்தாள்...

"இல்ல ஆண்ட்டி... உங்க சொந்தக்காரங்க கூடத்தான் வந்தேன்..." என்றாள் ஹேமா...

"எங்க சொந்தக்காரங்களா..? யாரும்மா அது...?"

மேகலாவைப் போலவே... இவளை அழைத்துக் கொண்டு வந்த உறவுக்காரர் யாராக இருக்கும் என்ற சிந்தனை பாலமுரளிக்குள்ளும் எழுந்தது...

"உங்க சொந்தக்காரர்ன்னா.. இனிச் சொந்தக்காரரா ஆகப்போகிறவர்ங்கிற அர்த்ததில் சொன்னேன் ஆண்ட்டி.... அவர் உங்க ஒன்று விட்ட அண்ணன் மகளை மேரேஜ் பண்ணிக்கப் போகிறாராமே.. அவர் பெயர் சங்கர்..."

ஹேமா மேகலாவிடம் சொல்லி கொண்டிருக்க... ராதிகாவிற்கு 'திக்'கென்று ஆகிவிட்டது... ஓரக் கண்ணால் பாலமுரளியின் முகத்தைப் பார்த்தாள்... அவள் எதிர்பார்த்தபடியே அது பயங்கரமாக மாறியிருந்தது...

'இவ எதுக்காக சங்கரின் பெயரைச் சொல்லித் தொலைச்சா...'

"இரு ஹேமா... உனக்கு குடிக்க ஏதாவது கொண்டு வர்றேன்..."

அந்தச் சாக்கில் ராதிகா உள்ளே நழுவி விட்டாள்.. மில்லுக்குப் போவதாக இருந்த எண்ணத்தை கைவிட்ட முரளி... அங்கேயே அமர்ந்து விட்டான்.. சங்கரின் பெயரைக் கேட்ட பின்னால் ஹேமாவை ராதிகாவிடம் தனித்துப் பேச அனுமதிக்க அவனுக்கு மனமில்லை....

அதையறியாத மேகலா... அவனைக் கேள்வியாக பார்த்தாள்...

"நீ கிளம்பலையா முரளி... ?"

"இல்லைம்மா... வராத விருந்தாளி வந்திருக்காங்க... இவங்களை அனுப்பி வைச்சுட்டு... அப்புறமா மில்லுப் பக்கம் போறேன்..."

'அனுப்பி...' என்ற வார்த்தையை பாலமுரளி அழுத்தமாக உச்சரிக்க... அதைக் கேட்டுக் கொண்டே வந்த ராதிகாவின் மனம் வருந்தியது...

'இதை ஹேமா புரிஞ்சுக்காம இருக்கனுமே...' கவலையுடன் தோழியின் முகம் பார்த்தாள்...

அவள் வெள்ளையாக சிரித்ததில்.. ராதிகா நிம்மதியானாள்...

"உட்காரேண்டி..."

ஹேமா... ராதிகாவை இழுத்து வைத்துக் கொண்டு விட்ட கதையை மீண்டும் பேச ஆரம்பித்தாள்...

'இவளுக்கு கிளம்பிப் போற உத்தேசமே இல்லையா..? இங்கேயே டேரா போட்டு விடுவாளோ...'

பாலமுரளி கைக்கடிகாரத்தைப் பார்த்து விட்டு.. ஹேமாவையும் குறிப்பாக பார்த்தான்...

"ராதிகா... உன் பிரண்ட் எங்கே போகனும்னு சொன்னா.. நான் போற வழியிலேயே அவங்களை இறக்கி விட்டுப் போவேனில்ல..."

கொஞ்சம்கூட தயவு தாட்சண்யம் பார்க்காமல் இவனால் எப்படி இப்படிப் பேசி வைக்க முடிகிறது என்று நொந்து போனாள் ராதிகா...

'ஹேமா என்ன நினைச்சுக்குவா..?'

அவள் எதையும் நினைக்கவில்லை.. இயல்பாக பாலமுரளியைப் பார்த்துச் சிரித்தாள்...

"தேங்க்ஸ்... இதைத்தான் நான் சங்கரிடம் சொன்னேன்... அவர் என்னை பிக்-அப் பண்ணிக்க வரனுமான்னு கேட்டார்.. நான் வேணாம்ன்னு சொல்லிட்டேன்.. ராதிகாவோட வீட்டுக்குப் போறேன்.. அவளோட ஹஸ்பெண்ட் என்னை டிராப் பண்ணிடுவார்.. வீணாய் இன்னொருதரம் நீங்க அலைய வேணாம்ன்னு சொன்னேன்..."

"இன்னொரு தரமா..?" பாலமுரளியின் புருவங்கள் மீண்டும் உயர்ந்தன...

"ம்ம்ம்... அவர்தானே என்னை இங்கே டிராப் பண்ணினார்.. இப்ப தென்காசிக்குப் போயிருக்கார்..."

"ஓஹோ.. அப்படி என்ன முக்கியமான வேலையைப் பார்க்க நீங்க தேனூத்துக்கு கிளம்பி வந்தீங்க...?"

"பார்த்தீங்களா... நீங்க கேட்டதும்தான் நினைவுக்கு வருது.. வந்த வேலையை மறந்துட்டு பேசிக்கிட்டே இருக்கேன்.. எனக்கு மேரேஜ் பிக்ஸ் ஆகியிருக்கு சார்.. இன்விடேசன் கொடுக்க வந்தேன்..."

அதுவரை... ஹேமாவை பாலமுரளி நடத்திய விதத்தில் கோபம் கொப்பளிக்க அமர்ந்திருந்த ராதிகா ஆனந்தத்துடன் துள்ளினாள்...

"ஏய்ய்.. எப்போடி..? எனக்குச் சொல்லவே இல்லை பார்த்தியா..."

அவளது குதூகலத்தை கொஞ்சம் கூட பாலமுரளி ரசிக்கவில்லை...

'இவ கல்யாணத்துக்கு கூட இந்த அளவுக்கு சந்தோசம் பட்டிருக்க மாட்டா.. இந்தத் துள்ளு துள்ளாராளே..'

அதைக் கவனிக்காமல் தோழியுடன் இழைந்து கொண்டிருந்தாள் ராதிகா...

"நீதான் தேனூத்துக்கு ஓடி வந்திட்டியே..." ஹேமா குறைபடும் குரலில் கூற...

'இங்கே என் பெண்டாட்டி வந்ததில இவளுக்கு எதுக்கு இத்தனை வருத்தம்..?' என்று பல்லைக் கடித்தான் பாலமுரளி...

"மாப்பிள்ளை யாருடி..? எந்த ஊர்..? என்ன பேர்..?"

"மெல்லடி.. கொஞ்சம் மூச்சு விட்டுக்க.. எல்லாம் உனக்கும் தெரிந்த மாப்பிள்ளைதான்..."

"எனக்குத் தெரிந்தவரா.. யார் அது..?"

"மாதேஷ்... சங்கரோட பிரண்ட்..."

"ஆனா ஹேமா... அவர் வீட்டிலே ஷோபா எதையோ சொல்லி பிரச்னை ஆகிருச்சே..."

அந்த விவகாரத்தில் தோழிக்கு உதவாமல் தேனூத்துக்கு கிளம்பி வந்து விட்ட குற்ற உணர்வுடன் கேட்டாள் ராதிகா...

"சங்கரும்.. நானும் நேரில் போய் பேசினோம்... பிரச்னை சால்வ் ஆகிடுச்சு..."

"அப்பாடி.." நிம்மதியாகச் சொன்னாள் ராதிகா...

"ஆக்சுவலா.. நான் சங்கருக்கு ரொம்பவும் நன்றிக் கடன் பட்டிருக்கேன் ராதிகா... அவர்தான் எனக்காக மாதேஷைப் பார்த்தார்.. அதில் பிராப்ளம் வந்ததும்.. என்சார்பா மாதேஷோட பேரண்ட்ஸிடம் பேசினார்.. இந்த மேரேஜ்.. அவரால்தான் நடக்கிறது..."

நன்றிப் பெருக்குடன் சொன்னாள் ஹேமா.. இந்த ஒரு காரணத்திற்காகவே.. இவளை ராதிகாவிடமிருந்து தள்ளி நிறுத்த வேண்டும் என்று மனதில் வெறி கொண்டான் பாலமுரளி...

தென்றல் கூட எனக்குப் பகையாகும்..
உனக்கும்.. எனக்கும் நடுவில் வந்தால்...

பாலமுரளி நட்பை மதிப்பவன்தான்.. நட்புக்காக உயிரைக் கூட கொடுக்கிறவன்தான்... இதே ஹேமா.. சங்கரின் பக்கம் நிற்காமல்.. பாலமுரளியின் சார்பாக நின்றிருந்தால்.. மாதேஷைவிட உயர்ந்தவனாக அவளுக்கு மாப்பிள்ளை பார்த்து... பிறந்து வீட்டுச் சீரையும் செய்து திருமணம் செய்து வைத்திருப்பான்...

அப்படியில்லாமல் ஹேமா... சங்கரின் பக்கமாக நின்று விட்டாள்... அதை பாலமுரளியும் உணர்ந்து விட்டான்.. அதன் பின்னால் முரளிக்கு ஹேமாவைக் கண்டாலே கட்டோடு பிடிக்காமல் போனதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது..?

ஹேமாவைப் பார்க்கும் முரளியின் பார்வையில் வெறுப்பிருந்ததை உணர்ந்த ராதிகா.. அதை ஹேமா உணர்ந்து கொள்ளாமல் இருக்க வேண்டுமே என்று தவியாய் தவித்தாள்...

ஹேமா அதை உணர்ந்து கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை... வெள்ளைச் சிரிப்புடன்.. திருமண அழைப்பிதழை எடுத்து... பாலமுரளியின் பெயரையும்.. ராதிகாவின் பெயரையும் எழுதி அவன் கையில் கொடுக்கப் போனாள்... அவன் அதை வாங்கிக் கொள்ளவில்லை...

"உங்க பிரண்டிட்டமே கொடுங்க...", என்று சொல்லி விட்டான்...

அப்போதும் முகம் மாறாமல் சிரித்தபடியே ராதிகாவிடம் அழைப்பிதழை நீட்டினாள் ஹேமா...

"அத்தையிடம் கொடுடி.." என்றாள் அவள்...

"அவங்க பெரியவங்க... அவங்களுக்கு தனியா இன்விடேசன் இருக்கு... உங்ககூட அவங்களை கூட்டுச் சேர்த்துக்கச் சொல்றியா...", கலகலவென்று சிரித்தாள் ஹேமா...

ராதிகாவிற்கு தோழியின் செய்கையைக் கண்ட ஆறுதலாக இருந்தது.. ஹேமா மட்டும்... முரளியின் அலட்சியப் போக்கில் முகம் கன்றியிருந்தால் அதை ராதிகாவினால் தாங்கிக் கொள்ள முடியாமல் போயிருக்கும்... ஹேமா அதைச் செய்யவில்லை... முரளி எவ்வளவுதான் உதாசீனமாகப் பார்த்தாலும்.. அவள் சிரித்த முகமாகவே இருந்தாள்.. சொந்தமில்லாமல் அவன் பேசினாலும்... அவள் ராதிகாவின் மீதான சொந்தத்தில் நிலையாக நின்றாள்..

"ஆண்ட்டி.. இது உங்களுக்கான இன்விடேசன்.."

மேகலாவின் கையில் அழைப்பிதழைக் கொடுத்து விட்டு.. அவள் பாதம் பணிந்தாள்...

"ஆசிர்வாதம் பண்ணுங்க ஆண்ட்டி..."

"நல்லா இரும்மா..."

மனம் நிறைந்த ஆசிர்வாதத்தை அளித்தாள் மேகலா..

மருமகளின் சிநேகிதி.. மருமகளைப் போலவே பதவிசாக இருப்பதில் மேகலா மகிழ்ந்து போனாள்.. கிளம்ப வேண்டும் என்ற ஹேமாவை அதட்டி உட்கார வைத்தாள்..

"சாப்பிடாமப் போறதா.. நல்ல கதையாய் இருக்கே.."

"பரவாயில்லை ஆண்ட்டி.. இன்னொரு நாள் வர்றேன்..."

"ஆமாம்மா.. நீ இந்தா இருக்கிற குற்றாலத்தில தான் குடியிருக்க.. இன்னைக்கு வர முடியலைன்னாலும்..

நாளைக்கே வந்து சாப்பிடப் போற.. அம்புட்டுத் தொலைவில இருந்து சிநேகிதியைப் பார்க்கிறதுக்காக கிளம்பி வந்த பொண்ணு... சாப்பிடாம வெறும் வயித்தோடப் போறதா..? காவேரி... இங்கே வா..."

ஹேமாவின் மறுப்பை லட்சியமே செய்யாமல் மேகலா காவேரியை அழைத்து பாலமுரளிக்கு பிடிக்கவில்லை... இந்தச் செயலை ராதிகா செய்திருந்தால் முறைத்திருப்பான்... மேகலாவை அவனால் முறைக்க முடியவில்லை...

"எனக்கு மில்லுக்கு நேரமாச்சேம்மா..." என்றுதான் சொல்ல முடிந்தது...

"நீ போய்ட்டு வாப்பா..." கனிவுடன் மகனிடம் சொல்லிவிட்டு காவேரிக்கு மதிய உணவுக்கு என்னென்ன வகைகள் செய்ய வேண்டும் என்று சொல்ல ஆரம்பித்து விட்டாள் மேகலா...

பாலமுரளியின் முகக்குறிப்பிலிருந்து எதை உணர்ந்தாளோ.. ஹேமா சிரித்த முகத்துடன் மேகலாவின் விருந்தோம்பலை மறுக்கத்தான் செய்தாள்...

"நீங்க சொன்னாலும்... சொல்லாவிட்டாலும்... நான் இந்தப் பக்கம்தான் வரப்போறேன் ஆண்ட்டி.. தென்காசியில் சங்கர் ஆரம்பிக்கப் போகிற பேக்டரியில் மாதேஷீம் பார்ட்னரா இருக்கார்.. மேரேஜீக்கு அப்புறம் நாங்க தென்காசியில்தான் தனிக்குடித்தனமா இருக்கப் போகிறோம்... அதனால... அப்ப வந்து மொத்தமா விருந்து சாப்பிட்டுக்கறேனே..."

ஹேமா சொல்லிய இந்தச் செய்தியில் பாலமுரளின் முகம் கருத்து விட்டது.. சங்கரின் தொழிலில் பங்குதாரராக இருப்பவனின் வருங்காலமனைவிக்கு.. அவன் வீட்டில் விருந்து அளிப்பதா..?

"அதான்... அவங்க வேணாம்ன்னு சொல்றாங்களேம்மா... இன்னொருநாள்தான் வரட்டுமே.. நானும் மில்லுக்குப் போற வழியில இவங்களை இறக்கி விட்டுட்டுப் போகனுமே..."

இன்னொருநாள் இந்த வீட்டுப் பக்கம் அவள் வந்து விடுவாளா என்று மனதிற்குள் கருவிக் கொண்டான் பாலமுரளி...

"யோசிக்காம பேசாதேடா.. நம்ம வீட்டுப் பெண்ணுக்காக... இவ்வளவு தூரம் வந்திருக்கிற பெண்ணை கை நனைக்காம நான் அனுப்பி வைக்க முடியாது... நீ மதியச் சாப்பாட்டுக்கு வந்துட்டுப் போகும் போது இந்தப் பெண்ணைக் கூப்பிட்டுக்கிட்டுப் போ..." மேகலா கறாராகச் சொல்லி விட்டாள்...

அதற்கு மேலும் பேசினால்.. அவள் என்ன சொல்லி வைப்பாள் என்று பாலமுரளிக்குத் தெரியும்...

'உன் அப்பா இருக்கிறப்போ.. இந்த வீட்டு வாசப்படியை யார் மிதிச்சாலும்... அவங்க சாப்பிடாமப் போகக் கூடாதுன்னு சட்டமே போட்டிருந்தார்.. நீ அவரோட மகன்டா.. அவரு இருந்தாலும் இல்லாட்டியும்... அந்தக் கடமையை மறப்பியா...' என்று கேட்டு வைப்பாள்...

அதற்குப் பயந்தவனாக... ராதிகாவை முறைத்தபடி அவன் கிளம்பிப் போய் விட்டான்.. அவன் போகும் வரை... முள்ளின் மேல் இருப்பதைப் போலத் தவித்துக் கொண்டிருந்த ராதிகாவுக்கு.. அவன் வெளியேறியதும் ஓர்விதமான விடுதலையுணர்வு முகத்தில் பரவியது...

இயல்பாக.. தோழியின் கையைப் பிடித்தபடி சரளமாக பேச ஆரம்பித்தவளை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ஹேமாவின் விழிகளில் ஏதோ தெரிந்தது..

"நீங்க சிநேகிதப் புள்ளைக.. பேசறதுக்கு ஆயிரம் விசயமிருக்கும்.. ராதிகா.. மாடிக்கு உன் சிநேகிதியைக் கூப்பிட்டுக்கிட்டுப் போ.. சமையலை காவேரியும்... மீனாட்சியும் கவனிச்சுக்குவாங்க... சாப்பிடக் கூப்பிடறப்போ மட்டும் நீங்க ரெண்டு பேரும் கீழே இறங்கி வந்தாப் போதும்..."

மேகலாவின் உத்தரவில்.. சந்தோசமான ராதிகா.. தோழியின் கையைப் பிடித்தபடி மாடிப் படிகளில் ஏறினாள்.. ராதிகாவின் அறையைக் கண்ட ஹேமாவின் முகத்தில் பிரமிப்பும்.. ஆச்சரியமும் போட்டி போட்டுக் கொண்டு வந்தன...

"அசத்தலா இருக்குடி உன் ரூம்.. நீ கொடுத்து வச்சவதான்.. ஆக்சுவலாய் உன் வீடு இவ்வளவு கிராண்டாய் பேலஸைப் போலவே இருக்கும்ன்னு நான் எதிர்பார்க்கலை... இதனாலதான் உன் ஹஸ்பெண்ட் மத்தவங்கள மதிச்சு பேச மாட்டேன்கிறாரா...?"

மறைமுகமாக அவளை பாலமுரளி அவமதிப்பதை கட்டிக்காட்டும் விதத்தில் ஹேமா பேசியதில் ராதிகா சங்கடப் பட்டுப் போனாள்...

"ஸாரி... ஹேமா..." தோழியின் கையைப் பிடித்துக் கொண்டாள்...

"விடுடி.. நீ என்ன பண்ணுவ...? உன் ஹஸ்பெண்டுக்கு எதனாலோ என்னைப் பிடிக்காம போயிருக்கு... அது எதனாலன்னுதான் எனக்குத் தெரியலை..." யோசனையுடன் சொன்னாள்...

அதைத் தெரிந்த ராதிகா.. வாய்விட்டு அதைச் சொல்ல இயலாமல் உதட்டைக் கடித்தாள்...

"நீ சந்தோசமா இருக்கியாடி..." ஹேமா ராதிகாவின் முகத்தை நிமிர்த்தி அவள் கண்களுக்குள் பார்த்துக் கேட்டாள்...

"ம்ம்ம்..." ராதிகாவின் விழிகளில் நீர் தளும்பியது...

"உனக்கு பொய் சொல்ல வராது ராதிகா...."

"த்ச்சு.. விடு.. என்னென்னவோ நடந்திருச்சு..."

"என்னன்னு என்னிடம் சொல்லக் கூடாதா..?"

தோழியின் ஆறுதலான வார்த்தைகளில் மனம் உடைந்தாள் ராதிகா... மனதில் இருக்கும் வலிகளைக் கொட்டி அழ... தாயின் மடியைவிட.. தோழமையின் நிழல் உகந்தது.. ஆனால்.. அதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே...

என்னவென்று அவளால் சொல்ல முடியும்..? அவள் காதலித்தவனே அவளது காதலை அறியாமலிருக்கும் போது... அதைப்பற்றித் தோழியிடம் சொல்லி அழ ராதிகாவுக்கு மனமில்லை...

அதைச் சொன்னால் அத்தோடு நின்று விடுமா..? அடுத்து பாலமுரளி வகுத்த வியூகங்களைப் பற்றி சொல்ல வேண்டி வந்து விடாதா..?

என்னதான் நெருங்கிய தோழியாக இருந்தாலும்.. ராதிகாவுடைய அந்தரங்கத்தை அவளிடம் சொல்லி விட முடியுமா...? தோழமைக்கும் ஒரு எல்லை உண்டுதானே...

"என் கதையை விடுடி- அதான் எல்லாம் முடிஞ்சிருச்சே- உன் கதைக்கு வா... என்ன சொல்கிறார் உன் ஆள்..."

ராதிகா ஹேமாவின் கழுத்தில் கைகளை மாலையாகப் போட்டுக் கேட்க.. அவள் வெட்கி முகம் சிவந்தாள்...

"போ ராது... அவர் ரொம்ப மோசம்..."

"அடிப்பாவி... அந்த அளவுக்கு போயிட்டியா...?"

"சேச்சே.. அவர் என் பின்னாலேயே சுத்திச் சுத்தி வர்றார்.. அதைச் சொன்னேன்..."

"இதை நான் நம்பனுமாக்கும்..."

"நம்பாட்டிப் போ..."

என்னவோ நகைச்சுவையைச் சொல்லி விட்டதைப் போல அவள் சிரிக்க.. ராதிகாவும் சேர்ந்து சிரித்தாள்...

எதையோ நினைத்துக் கொண்டவளின் முகத்தில் சிரிப்பு மறைந்து.. வருத்தம் பரவியது...

"ஸாரிடி ஹேமா... நீ என்னைப் பற்றி செல்பிஷ்ன்னு நினைச்சிருப்ப இல்ல.. சங்கர் கூட மாதேஷின் வீட்டுக்குப் போகிறேன்னு சொல்லிட்டு.. சொன்ன சொல்லை நிறைவேத்தாம தேனூத்துக்கு வந்திட்டேன்னு மனசுக்குள்ள திட்டியிருப்ப இல்ல..."

வருத்தத்துடன் பேசிய தோழியின் கைகளில் ஆதரவாகத் தட்டிக் கொடுத்தாள் ஹேமா...

"நீ வரமாட்டேன்னு எனக்கும் தெரியும்.. சங்கருக்கும் தெரியும் ராது..."

"எப்படிடி..." ராதிகா வழிவிரித்தாள்...

"உன் ஹஸ்பெண்டோட கார்.. ரொம்ப நேரமா காலேஜிக்குள்ளேயே நின்னுக்கிட்டு இருந்தது.. அது உன் ஹஸ்பெண்டோட கார்ன்னு எனக்குத் தெரியாது.. காஸ்ட்லி கார்ங்கிறதால நோட் பண்ணினேன்... அதுக்கப்புறமா பார்த்தா... அது உன் ஹஸ்பெண்டோட காரா இருக்குது.. அப்பவே எனக்கத் தெரியும்... நீ வரமாட்டேன்னு...: உன்னை அவர் திட்டியிருப்பாரோ... அதனால நீ கஷ்டப்பட்டிருப்பியோன்னுதான் நானும்... சங்கரும் கவலைப் பட்டோம்..."

அதற்கு மேல் ஹேமாவும் பேசவில்லை... ராதிகாவும் பேசவில்லை.. மௌனமாக அமர்ந்திருந்தார்கள்.. ஹேமா.. குளியலறைக்குள் போக... ராதிகா யதேச்சையாக அறை வாசலைப் பார்த்தாள்... அங்கே நிழலாடியது..

'யாராக இருக்கும்...'

அவள் சென்று பார்த்தபோது... பாலமுரளி படிகளில் இறங்கிக் கொண்டிருந்தான்...

'இவன் மில்லுக்குப் போனானே...'

ராதிகாவின் இதயத்தில் ரயில் ஓட ஆரம்பித்தது... அவன் அருகில் இல்லையென்ற நினைவில் சுதந்திரமாக ஹேமாவுடன் பேசியவளின் மனதில் பயம் சூழ்ந்தது...

"அம்மா.. உங்களையும்.. உங்க சிநேகிதப் புள்ளையையும் சாப்பிடக் கூப்பிட்டாறச் சொன்னாங்கம்மா..." மீனாட்சி வந்து அழைத்தாள்..

"இதோ.. வர்றோம் மீனாட்சி..."

"ஏம்மா.. எனக்கொரு சந்தேகம்..."

"என்னவாம்..?"

"இந்தப் புள்ளயும் உங்ககூட படிச்சதுன்னு சொல்றிங்க.. அந்த ஷோபாப் புள்ளயும் உங்க கூடத்தான் படிச்சதுன்னு சொன்னீங்க..."

"ஆமாம்.. அதுக்கென்ன இப்ப...?"

"இது மட்டும் அடக்க ஒடுக்கமா.. பொம்பளப் புள்ளையா.. லட்சணமா இருக்குது.. அந்தப் புள்ள மட்டும் ஏம்மா.. அப்படி இருக்குது..."

"இதுக்கு நான் என்ன பதிலைச் சொல்ல முடியும்.. படைக்க வைச்ச பகவான்தான் இதுக்கொரு பதிலைச் சொல்லனும்..."

"அவருகூட அந்த ஷோபாப் புள்ளயப் பத்தி கொல்ல யோசிப்பாரும்மா..."

மீனாட்சியின் பேச்சைக் கேட்டுக் கொண்டே.. குளியலறையில் இருந்து வெளிவந்த ஹேமா சிரித்து விட்டாள்.. கூடச் சேர்ந்து சிரிக்கும் மனநிலையில் ராதிகா இல்லை...

"என்னடி ஆச்சு...? சோர்ந்து தெரியற... இப்ப வரைக்கும் நல்லாத்தானே இருந்த..?" ஹேமா கவலையுடன் விசாரித்தாள்...

"ஏம்மா.. காய்ச்சல்.. கீய்ச்சல் வந்துருச்சா..?" மீனாட்சி சந்தேகமாய் பார்த்தாள்...

"இவ ஏண்டி இப்படிப் பார்க்கிறா.." ஹேமாவுக்கு புரியவில்லை...

"அதை என்கிட்டக் கேளும்மா... இந்தம்மாவுக்கு சரக்குன்னா காய்ச்சல் வந்திரும்..." மீனாட்சி விளக்கம் சொன்னாள்...

"இவளுக்கா காய்ச்சல் வரும்..? இருக்காதே..." ஹேமா அடித்துப் பேசினாள்...

"அப்ப... நான் பொய்யா சொல்றேன்...?" மீனாட்சி சண்டைக்கு வந்தாள்..

"அதுக்கில்லை மீனாட்சி.. நீ சொன்ன ஷோபாவுக்குத்தான் இவ தலைவலியை வர வைப்பா.. ஆனா... ஒருநாளும்.. இவ தலை வலிக்குதுன்னு கூட

சொன்னதில்ல.. இவளுக்குப்போய் காய்ச்சல் வரும்... அதுவும் அடிக்கடி வரும்ன்னு சொன்னா.. அதை என்னால நம்ப முடியுமா..?"

"அது அப்போ... இது இப்போ... அதென்னவோம்மா.. இப்பல்லாம் எங்க சின்னம்மா.. அடிக்கடி காய்ச்சலில் விழுந்துடறாங்க..." மீனாட்சி வெகுவாக வருத்தப் பட்டு விட்டு கீழே இறங்கிப் போனாள்...

ராதிகாவைப் பார்த்தால் காய்ச்சல் வந்தவளைப் போலவே இருந்து வைக்க ஹேமா கவலைக்கு ஆளானாள்..

"என்னடி..?" என்று துளைத்தெடுத்தாள்...

"ஒன்றுமில்லடி..." குரல் நடுங்க மறுத்து விட்டு.. அவளை சாப்பிட அழைத்துக் கொண்டு போனாள் ராதிகா..

மதிய விருந்து தடபுடலாக இருந்தது.. சாப்பிட்டு முடிந்ததும் ஹேமா விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.. அவளை பாலமுரளியுடன் அனுப்பி வைத்துவிட்டு உள்ளே திரும்பிய ராதிகாவிடம்... மகனைப் பற்றி சிலாகித்தாள் மேகலா...

"உன் சிநேகிதிக்காக... உன் புருசன் இன்னைக்கு மில்லுக்குக் கூடப் போகலை.. இப்பத்தான் போறான்..."

"ஆனா.. அவர் கிளம்பிப் போனாரே அத்தை..." ராதிகாவின் குரல் கிணற்றுக்குள் இருந்து வருவதைப் போல ஒலித்தது...

"ஊஹீம்.. தெருமுனை வரைக்கும் போனவன்.. திரும்பி வந்துட்டான் நேரே.. மாடிக்குத்தானே வந்தான்.. உன்னிடம் சொல்லலையா...?"

அன்று இரவு... மீண்டும் ராதிகாவுக்கு காய்ச்சல் வந்து தொலைத்தது...

சிரபுஞ்சி மழையாக - என் மனம்
காதல் பொழிவதை அறிவாயா..?

ஹேமா போய்விட்டாள்...

அவளுடன் ராதிகாவின் சிரிப்பும் சேர்ந்து போய்விட்டது... மீண்டும் வாடிய முகத்துடன் வீட்டை வலம் வந்து கொண்டிருந்தாள்... மேகலா வாய் விட்டேச் சொல்லிவிட்டாள்...

"அது உன்கூட நல்லாப் பழகின புள்ளையாம்மா..?"

"ஆமாம் அத்தை..."

"அதான் உன் முகம் வாடிப் போயிருக்கு.. என்ன செய்றது..? பெத்தவங்களையும்.. கூடப் பிறந்தவங்களையுமே இந்தப் பெண்ணாய் பிறந்தவங்க பிரிகிறப்போ.. கூடப் பழகின சிநேகிதங்களைப் பிரியாம

இருக்க முடியுமா..? அதிலயும் கொடுத்து வைச்சது.. ஆம்பளைகதான்.. அவங்களுக்கு எந்தப் பிரிவும் இல்லை.."

மாமியாரின் இதமான வார்த்தைகளைக் கேட்ட ராதிகா சோகையாகப் புன்னகைத்து விட்டு பேசாமல் இருந்து விட்டாள்...

இரவு வெகுநேரமான பின்னால்தான் பாலமுரளி வீட்டுக்கு வந்தான்.. வீடே உறக்கத்தில் ஆழ்ந்திருக்க.. உறங்காமல் காத்திருந்த ராதிகா கதவைத் திறந்து விட்டாள்..

அவளை உறுத்துப் பார்த்த வண்ணம் உள்ளே வந்தான் பாலமுரளி.. மௌனமாக டைனிங் டேபிளின் அருகே சென்றவளின் பின்னாலேயே சென்றவன்.. தாழ்ந்த குரலில்...

"என்னடி..? பேச்சையே காணோம்.. ஆகாதவனைப் பார்க்கிறதைப் போல என்னைப் பார்த்து வைக்கிற... அந்த ஹேமாகிட்ட அம்புட்டுச் சிரிப்பு சிரிச்சயே.. அந்த சிரிப்பு எங்கே போச்சு..?" என்று கேட்டான்...

ராதிகாவுக்கு நன்றாகவே தெரியும்... நிச்சயம்... ஹேமாவை மையமாக வைத்து பாலமுரளி அவளிடம் வம்பிழுப்பான் என்று.. அதனால் அவள் உதட்டைக் கடித்தபடி அமைதி காத்தாள்...

"அவ சங்கருக்கு வேண்டப்பட்டவ.. அவளைக் கண்டா உனக்கு சிரிப்பு பொங்கி வழியும்.. நான் யாரு..?

அந்த சங்கருக்கு வேண்டாதவன்தானே.. என்னைப் பார்த்தா எதிரியைப் பார்க்கிறதைப் போலத்தான் உனக்கு இருக்கும்.." குத்தலாகப் பேசினான் முரளி...

ராதிகா வாயைத் திறக்கவே இல்லை...

"எதுக்குடி அவ வந்தா..? கல்யாணப் பத்திரிக்கை வைக்க வந்தாளா..? இல்ல.. நீ உன் பெண்டாட்டியை சமரசம் பேச அனுப்பி வைக்கலேன்னாலும்.. என் கல்யாணத்தை சங்கர் நடத்தி வைப்பான்னு என்கிட்ட சொல்லச் சொல்ல வந்தாளா..?"

ராதிகா தட்டை எடுத்து வைத்து.. பரிமாற ஆரம்பித்தாள்...

"யாருக்குடி போடற..?" என்றான் அவன்...

பரிமாறிய அவளின் கை நின்றது.. அவள் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை... அந்தச் செய்கை பாலமுரளியின் சினத்தை அதிகப் படுத்தியது...

"ஏய்ய்.." அவன் அதட்டினான்...

ராதிகாவின் கைவிரல்கள் மெதுவாக நடுங்க ஆரம்பிக்கையில்.. மேகலாவின் அறைக் கதவு திறந்தது...

"முரளி...?" புருவங்கள் முடிச்சிட அவள் வெளியே வந்தாள்... அவள் பார்வை சுவர் கடிகாரத்தில் படிந்தது...

"என்னடா.. இம்புட்டு நேரமா என்ன செஞ்ச..?"

"த்ச்சு.. வேலையிருந்துச்சும்மா..."

"அர்த்த ராத்திரி ஜாமத்தில வந்துட்டு.. காலைகாலத்தில சாப்பிடாம ராதிகாகிட்ட என்னத்தை கேட்டுக்கிட்டிருக்க...?"

"சும்மா பேசிக்கிட்டு இருந்தேன்..."

"பேசு.. அவ உன் பெண்டாட்டிதானே.. தாராளமா பேசு.. வயித்தில சாப்பாட்டைப் போட்டுட்டு... உங்க ரூமுக்குப் போய் பேசு.. அதைவிட்டுட்டு சாப்பிடற இடத்தில லைட்டை எரிய விட்டுப் பேசினா என்ன அர்த்தம்...? இந்த வீட்டில அவளும்.. நீயும் மட்டும்தான் இருக்கீங்களா..? வாசலிலே காவல்காரன் இருக்கான்.. தோட்டத்திலே நாச்சியப்பன் படுத்திருக்கான்.. சமையல் கட்டுக்கு பக்கத்து ரூமில மீனாட்சியும்.. காவேரியும் தூங்கிக்கிட்டு இருக்காங்க.. நினைப்பு இருக்கில்ல...?"

மேகலாவின் கண்டிப்பான தொனியில் பேச்சை நிறுத்திவிட்டு ராதிகா பரிமாறியவற்றை அவசர கதியில் உள்ளே தள்ளினான் முரளி... கை கழுவி விட்டு திரும்பியவனின் பார்வை...

'மேலே வாடி.. பேசிக்கிறேன்...' என்றது...

ராதிகா நடுங்கிப் போனாள்...

'இன்னைக்குத் தூக்கம் அம்பேல்தானா..?'

"நீயும் சாப்பிடும்மா..." மேகலா பரிவுடன் சொன்னாள்..

"நான் சாப்பிட்டுக்கறேன்.. நீங்க போய் படுங்க..." ராதிகா சங்கடத்துடன் சொன்னாள்...

"எல்லாம் படுத்துக்கலாம்.. தூக்கம் எங்கே போயிறப் போகுது.. அவனே முசுட்டுப் பயல்.. முன் கோபக்காரன்.. காலையில உன் சிநேகிதியாலே அவன் வேலை கெட்டுப் போச்சுன்னு உர்ருன்னு இருக்கான்.. அதான்.. நான் வந்தேன்.. நீ சாப்பிடு..."

வேலை கெட்டுப் போனதால் மட்டுமா அவன் கோபமாக இருக்கிறான்..? அதன் உண்மைக் காரணத்தை அறிந்த ராதிகாவின் உள்ளம் நடுங்கியது... பேசாமல் டைனிங் ஹாலிலேயே படுத்து உறங்கி விடலாமா என்று கூட யோசித்தாள்.. ஆனால் அதை நினைத்து மட்டுமே பார்க்க முடியும்... செய்ய முடியாது... அவள் அந்த வீட்டின் ஏதாவது ஒரு அறையில் படுத்துத் தூங்கினாலே அது செய்தியாகி விடும்.. அந்தச் செய்தி காட்டுத்தீ போல பரவியும் விடும்...

'தெரியுமா சேதி... சின்னம்மா.. ஐயாவோட ரூமில தூங்காம தனியாப் படுத்து தூங்கினாங்களாம்...' என்று ஆரம்பிக்கும் அந்தச் செய்தி..

'கேட்டியாடி கதையை.. நம்ம பெரிய வீட்டு ஐயாவும்.. அவரோட பொண்டாட்டியும் தனித்தனியா பிரிஞ்சு போயிட்டாங்களாம்.. வார முகூர்த்தத்தில.. ஐயாவுக்கு மறு கல்யாணமாம்..' என்பதில் வந்து நின்று விடும்..

அந்த அபாயத்திற்கு அஞ்சினவளாக... அடிமேல் அடியெடுத்து வைத்து மாடிப்படிகளில் ஏறினாள் ராதிகா.. காலைத் தூக்கி வைக்க முடியாமல் பாதம் பாறாங்கல்லாய் கனத்தது...

அறைக்கதவைத் திறந்த போது.. அறையில் குழ்ந்திருந்த இருளில் அவள் நிம்மதியாக உணர்ந்தாள்...

'அப்பாடி... இவன் தூங்கிட்டான் போல...'

தினறிக் கொண்டிருந்த சுவாசம் சீராகிவிட.. ஆழ்ந்த மூச்சை இழுத்து விட்டவளாக.. இனம செருகப் படுத்தவள் தூங்கப் போனாள்...

அறையில் பளீரென்று பரவிய வெளிச்சத்தில் உடல் தூக்கிப் போட எழுந்து அமர்ந்தாள்...

'இன்னும் இவன் தூங்கலையா..?'

செக்கச் செவேலென்று சிவந்திருந்த அவன் விழிகள்.. அவனுக்கு தூங்கும் உத்தேசமில்லையென்பதை அறிவிக்க.. ராதிகாவுக்கு நெஞ்சை அடைத்தது...

'ஹேமா.. பேசாம இன்விடேசனை தபாலில் அனுப்பியிருக்கலாம்...' நொந்து கொண்டாள் ராதிகா...

"எப்படியெப்படி.. நான் உன்னை அனுப்ப மாட்டேன்னு.. அவளுக்கும் சங்கருக்கும் தெரியுமா..? என் காரை அவமட்டும் அடையாளம் பார்த்தாளா... இல்ல.. அவனும் சேர்த்துப் பார்த்தானா..? நான் பார்த்துக்கிட்டு இருக்கிறதை தெரிஞ்சுக்கிட்டே உன்கூட பேச்சை வளர்த்தியிருக்கான்னா.. அது யார் கொடுத்த தைரியம்..?"

'நிச்சயமாய் நான் அந்த தைரியத்தைக் கொடுக்கவில்லை...'

ராதிகாவிற்கு துக்கம் தொண்டையை அடைத்தது.. அவளுக்கென்று வினைகள் எந்த ரூபத்திலெல்லாம் வருகின்றன...?

"நீ சந்தோசமா இருக்கியான்னு கேட்டாளே... அதை அவளாக் கேட்டாளா...? இல்ல... அந்த சங்கர் கேட்டுவிட்டானா...?"

'கடவுளே...' ராதிகா மனம் துடித்தாள்...

"என்னன்னு அவகிட்டச் சொல்லச் சொன்னாளே.. சொல்ல வேண்டியதுதானே.. அதை அப்படியே கொண்டு போய் சங்கரிடம் கொட்டுவாளில்ல.. நல்ல சான்ஸை கோட்டை விட்டுட்டியேடி..."

'போதும்.. இத்துடன் நிறுத்திக் கொள்.. உனக்குப் புண்ணியமாப் போகும்...'

"உன் கதையை விட்டு விடனுமா.. உனக்கு எல்லாம் முடிஞ்சிருச்சா...? எம்புட்டு விரக்தியாப் பேசினடி..? அவனைக் கல்யாணம் பண்ணமுடியாமப் போன விரத்திதானடி அது..?"

'கொல்லாதே...'

"உன்னை நான் கொடுமை பண்ணிருவேனோன்னு அவளும் அந்த சங்கரும் கவலைப் பட்டாங்களாமே.. த்ச்சு.. த்ச்சு.. கொடுமை பண்ணினதை சொல்லிவிட வேண்டியது தானே.. அவன் மறுவாழ்வு கொடுப்பானில்ல..."

அதற்கு மேல் கேட்க முடியாதவளாக ராதிகா காதைப் பொத்திக் கொண்டாள்.. அவள் காதுகளில்

தீக்கங்குள் விழுவதைப் போலிருந்தன.. அவளது துடிப்பைக் கண்டும் பாலமுரளியின் மனம் இரங்கவில்லை..

'இவ்வளவு பேசறேன்.. வாயைத் திறக்கிறாளான்னு பாரு.. அந்த ஹேமாகிட்ட மட்டும் பல்லைப் பல்லைக் காட்டிப் பேசினாளே... அந்தப் பேச்சும் சிரிப்பும் எங்கே போச்சு...?'

அவனது கோபம் கனன்று எழுந்தது...

"நடிக்காதேடி.. உன் பாசாங்கெல்லாம் எனக்குத் தெரியும்.. இதுக்கு பேசாம.. அவகூடவே போயிருக்க வேண்டியதுதானே..? அவ உன்னை சேர்க்க வேண்டிய இடத்தில சேர்த்திருப்பாள்ல..?"

ராதிகா சட்டென்று எழுந்தாள்.. அவள் என்ன செய்யப் போகிறாள் என்று பாலமுரளி யூகிப்பதற்குள் பால்கனிக் கதவைத் திறந்து அந்தப் பக்கமாக தாழிட்டுக் கொண்டு விட்டாள்..

"ஏய்ய்..." பாலமுரளி கதவை இழுத்துப் பார்த்தான்.. அது திறக்கவில்லை...

ஊதக்காற்றில் ஜன்னல் கதவுகள் ஆட.. கவலையுடன் வெளியே பார்த்தான்.. வானத்தில் பளிரென்ற வெளிச்சக் கோடு மின்னி மறைந்தது...

மழை வருவதற்கான அறிகுறிகள் தெரிய.. பாலமுரளி பலமாகக் கதவைத் தட்டினான்...

"ராதிகா.. ராதிகா..."

மறுபக்கம் பதிலில்லை... அதற்குள் சடசடவென்று மழைத்துளிகள் சாரைசாரையாய் கொட்டத் தொடங்கி விட்டன.. பாலமுரளி கதவைத் தட்டிய சப்தத்தை மழைச் சப்தம் அமிழ்த்திவிட.. பாலமுரளி ஓங்கி கதவை ஆட்டினான்..

அந்தக் காலத்து தேக்கு மரக் கதவு.. அசைந்து கொடுக்கவில்லை...

'இவகூட பெருத்த இம்சை...'

பால்கனியை ஒட்டியிருந்த ஜன்னல் கதவைத் திறந்து பார்த்தான்... பால்கனியில் பாதிப் பகுதி மேற் கூரையுடன் இருக்க... மீதிப் பகுதி வெட்ட வெளியாக இருக்கும்...

அந்த வெட்ட வெளிப் பகுதியில் கண்மூடிப் படுத்திருந்தாள் ராதிகா... மழைநீர் வெள்ளமாக அவளைச் சுற்றித் தேங்கி.. அவளது ஆடைகளை நீரில் மூழ்கடித்து... அலையடித்துச் சென்றது...

'அடிப்பாவி...' பாலமுரளி அதிர்ந்து விட்டான்...

ராதிகா இப்படிச் செய்து வைப்பாள் என்று அவன் நினைத்தும் பார்க்கவில்லை... கண்ணெதிரே மழை நீரில் அமிழ்ந்து கிடக்கும் அவளது தோற்றத்தைக் கண்டவனுக்கு வேகம் பிறந்தது...

அறைக் கதவைத் திறந்தவன்.. தடதடவென்று மொட்டை மாடிக்குச் செல்லும் படிகளில் ஏறினான்..

கொட்டும் மழையில் சொட்டச் சொட்ட நனைந்தவனுக்கு அதைப் பற்றிய நினைவு துளிக்கூட இல்லை.. அவனது எண்ணமெல்லாம்.. அதே மழை நீரில் நனைந்து போய் கிடந்த ராதிகாவின் மீதே இருந்தது...

'என்ன காரியத்தை செஞ்சு வைக்கிறா..'

மொட்டைமாடியின்.. பக்கவாட்டுச் சுவரின் மீது ஏறி... தண்ணீர் வழிந்தோடப் பதிக்கப்பட்டிருந்த பெரிய சிமிண்ட் குழாயைப் பிடித்து.. இறங்க ஆரம்பித்தான்...

மழைநீரில் கால் வழுக்கியது... கை பற்றுவதற்கு சரியான பிடிப்பில்லாமல் நழுவ யத்தனித்தது.. சமாளித்து இறங்கியவன்.. பால்கனியின் சுற்றுச்சுவராருகே வந்ததும்.. அதைப் பற்றிக் கால்பதித்து.. பால்கனிக்குள் குதித்தான்.. மழை நீரில் தெப்பமாக நனைந்து கிடந்த ராதிகாவை நெருங்கினான்...

"ஏய்ய்.. எழுந்திருடி..." அவளை உலுக்கினான்...

அவள் தொய்ந்து விழுகவும்தான்.. அவனுக்கு அது உறைத்தது...

'இவ நினைவில்லாமக் கிடக்கிறாளே...'

அதனால்தான் அவள் கதவைத் திறக்கவில்லை என்பது புரிந்துவிட.. வழக்கம்போல அவளைக் கைகளில் ஏந்தித் தூக்கினான்.. வாடிப் போன பூமாலையாய்.. அறுந்து போன கொடியாய்.. தொய்ந்து கிடந்தவளைப் படுக்கையில் கிடத்தியவன்.. முதல் காரியமாக பால்கனிக் கதவை இறுக மூடினான்..

"ராதிகா.. ஏய்ய்.. ராதிகா..." அவள் கன்னத்தில் தட்டிப் பார்த்தான்... அவள் கண்ணைத் திறக்கவே இல்லை...

அவள் முகத்தில் தண்ணீரைத் தெளிக்காமா என்று அபத்தமாக யோசித்தவன்.. அவள் முகத்தில் படிந்திருந்த மழைநீர் திவலைகளில் நிதானித்தான்...

'ச்சே.. எனக்குக் கூட புத்தி வேலை செய்ய மாட்டேங்குது.. இவளே மழைத் தண்ணியில தான் முங்கிக் கிடந்தா.. அதில மயக்கம் தெளியாதவளா.. நான் அடிக்கிற தண்ணியில மயக்கம் தெளியப் போறா...?'

ராதிகாவின் ஈர உடைகளின் மீது அவன் பார்வை படிந்தது...

'இப்படியே விட்டா... ஜன்னியிலதான் கொண்டு போய் விடும்.. அப்புறம் அம்மாவுக்கும்.. அந்த டாக்டரம்மாவுக்கும் பதில் சொல்லி முடியாது...'

அவளது ஈர உடைகளை அகற்றி.. உலர்வான உடைகளை அணிவிக்க அவனால் முடியுமா...?

சும்மாவே அவளைக் கண்டால் அவனுக்கு புத்தி தடுமாறும்.. அந்த நிலையில் மயங்கிக் கிடந்தவளின் ஈர உடைகள் உடலோடு ஒட்டியிருக்க.. அவன் கண்கள் அவள் உடல்மீது படர்ந்து மேய ஆரம்பிப்பதை தடுக்கவே அவனால் முடியவில்லை...

இந்த லட்சணத்தில்.. அவனாவது.. அவளின் ஈர உடைகளை அகற்றி.. உலர்ந்த உடைகளை அணிவிப்பதாவது-

'அவ்வளவுதான்... இன்னைக்கு ராத்திரியே.. இவகூட குடும்பம் நடத்த ஆரம்பிச்சுருவேன்.. இந்த விசப்பரிட்சையே எனக்கு வேணாம்...'

தனக்குள் அவன் சொல்லிக் கொண்ட போது.. அவனின் ஆழ்மனது...

'அடேங்கப்பா.. அப்படி அவகூட குடும்பம் நடத்தினாத்தான் என்ன..?' என்று கேட்டது...

பாலமுரளி.. அவளின் ஈர உடைகளை மாற்றிவிட தைரியமில்லாமல் பின்வாங்கிவிட்டான்...

அம்மம்மா... கேளடி தோழி-என்னைத் தொடாமல் அவன் தொட்டானடி...

"ராதிகா..."

அவளை மெதுவாக உலுக்கினான்... நினைவு தப்பியவள்.. தப்பியவள்தான்... கண் திறக்கவேயில்லை.. அவனைக் கவலைபிடித்துக் கொண்டது...

'பேசாம அம்மாவைக் கூப்பிட்டு விடலாமா..?'

அவசரமாக அந்த எண்ணத்தை அழித்தான்.. கட்டின மனைவியின் ஈர உடையினை மாற்ற தாயின்

உதவியை மகன் நாடினால்.. அவள் ஏனென்று யோசிக்க மாட்டாளா...?

'வேற வினையே வேண்டாம்...'

என்ன செய்வது என்று புரியாமல் அவன் யோசித்தான்.. ஒன்று தோன்றவும்.. அவசரமாகப் படியிறங்கிப் போய்.. சமையலறையைத் திறந்தான்.. பிரிட்ஜைத் திறந்து பாலை எடுத்து குடு பண்ண ஆரம்பித்தான்...

"முரளி...!" அந்த இருளில் அமானுஷ்யமாக மேகலாவின் குரல் கேட்டது...

அவன் தூக்கி வாரிப் போட்டவனாக திரும்பினான்.. கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டவனைப் போல... கையும்... அதிலிருந்த பால் தம்ளருமாக அகப்பட்டுக் கொண்டவன் திருதிருத்தான்...

"என்னடா இது..?" மேகலா விசித்திரமாக மகனைப் பார்த்தாள்...

"ஹி.. ஹி.. பால்ம்மா..."

"அது தெரியுது.. நீ படுக்கப் போகிறதுக்கு முன்னாலே பாலைக் குடித்துட்டுத்தானே போன..."

"ஆமாமாம்..."

"எதுக்கு இத்தனை ஆமாம் போடற..? இப்ப ஜாமமாச்சு.. இப்பப் போயி அடுப்பாங்கரைக்குள்ள... சட்டியையும்.. முட்டியையும் உருட்டிக்கிட்டு இருக்கயே என்னதாண்டா ஆச்சு..?"

"ஒன்னுமில்லைம்மா.. சூடா எதையாச்சும் குடிச்சாத் தேவலைன்னு இருந்துச்சு.. அதான் இறங்கிவந்தேன்..."

"அதுக்கு நீதான் வரனுமா..? ராதிகா எங்கே..?"

கண்திறக்காமல் மயங்கிக் கிடக்கிறாள் என்று சொல்ல பாலமுரளிக்கு தைரியம் வரவில்லை...

"தூங்கிட்டாம்மா..."

உண்மையுமில்லாத... பொய்மையுமில்லாத பதிலைச் சொன்னான்...

"அவளே தூங்கிட்டா.. நீயின்னும் தூங்காம அடுப்பாங்கரையில வந்து நிற்கிற.. சீக்கிரமா சூடு ஆறுகிறதுக்குள்ள பாலைக் குடிச்சு முடி..."

மேகலா அவசரப்படுத்த... பாலமுரளி... ஏக்கத்துடன் மாடிப் படியைப் பார்த்தான்...

'இதைக் கடந்து போகிறதுக்குள்ள இத்தனை சோதனைகளா..?'

"மாடிக்குப் போய் குடிச்சுக்கிறேன்ம்மா..."

"அது என்ன தேவைக்கு..?"

விசித்திமாகப் பார்த்த மகனை வினோதமாகப் பார்த்தாள் மேகலா...

'எனக்குத் தேவையில்லம்மா.. உங்க மருமகளுக்குத் தான் தேவை...'

"சமையல்கட்டுல குடிச்சா.. எனக்குப் பிடிக்காதும்மா.."

"அப்போ.. டைனிங் டேபிள்ல உட்கார்ந்து குடி.."

இந்த அம்மாவுக்கு தூக்கமே வந்து தொலைக்காதா.. என்று பாலமுரளியின் மனதில் எரிச்சல் மண்டியது...

"இதென்னம்மா வம்பாப் போச்சு.. இதை என் ரூமுக்கு கொண்டு போய் குடிக்கிறதில உங்களுக்கு என்ன பிரச்னை..?"

அவன் வள்ளென்று எரிந்து விழ.. மேகலா அவனை ஒருமார்க்கமாக பார்த்தாள்...

"இன்னைக்கென்னவோ.. நீ சரியாய் இல்லை முரளி..."

"விட்டா.. விடியவிடிய நீங்க பேச்சு வார்த்தை நடத்திக்கிட்டு இருப்பீங்க.. வழியை விடுங்கம்மா.. எனக்குத் தூக்கம் வருது..."

"மகராசனாய் தூங்கப் போ.. நான் என்ன உன் கையையா பிடிச்சு நிறுத்தியிருக்கேன்..."

மேகலா வழி விட்டாள்.. தப்பித்து ஒடுகிறவனாக முரளி இரண்டிரண்டு படிகளாய் மாடிப்படியை தாவிக் கடப்பதை யோசனையுடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்...

அறைக்குள் நுழைந்த முரளி... கட்டிலில் ஈர உடையுடன் கிடந்த ராதிகாவின் கன்னம் தட்டினான்...

இதற்கெல்லாம் நான் மசிவேனா என்று அவள் பாட்டுக்கு கண்திறக்காமல் கிடந்தாள்...

'இது வேலைக்காகாது...'

அவளைத் தூக்கி தோளில் சாய்த்துக் கொண்டவன்.. மெதுவாக சூடான பாலை... அவள் வாயில் புகட்டி விட்டான்... லேசாக அவள் அசைந்தாள்... அவ்வளவுதான்.. வேறு முன்னேற்றமில்லை...

என்னதான் கொதியான பாலை அவள் வாயில் ஊற்றினாலும் உஷ்ணநிலைக்கு கொண்டு வர முடியாது என்று உணர்ந்தவனாக... அவன் நெற்றிப் பொட்டில் ஒற்றை விரலைத் தட்டி.. ஆழமாக யோசித்தான்...

'வேற வழியே இல்லை...'

கண்களை மூடிக் கொண்டு செயலில் இறங்கினான் பாலமுரளி...

'இவளைப் பார்த்தால்தானே-வம்பு...'

இப்படி நினைத்தவனின் கைகள்.. அவளது உடலின் மீது உராய்ந்து.. கைகள் பட்டாலும் வம்பு வரும் என்று அவனுக்கு உணர்த்தின..

வெண்ணையைப் போன்ற குழைவான அவளின் மேனியில் விரல்பட்டு.. ஒரு சமயம் அவன் உணர்ந்த உணர்வலைகளை உணர்த்த... பாலமுரளியின் வைராக்கியம் ஆட்டம் கண்டது...

'ம்ஹீம்.. விசுமாத்திரர் என்ன பாடுபட்டிருப்பாருன்னு இப்பத்தான் புரியுது.. ஈஸியா ஒத்தை வரியில சொல்லி விடலாம்.... மேனகைகிட்ட அவர் மயங்கிப் போயிட்டாருன்னு.. இந்த மாதிரி சூழ்நிலை அமைஞ்சா விசுமாத்திரர் மயங்காம தவமா பண்ணுவார்..?'

அவன் மனம் விசுவாமித்திரரின் தடுமாற்றத்திற்காக வக்காலத்து வாங்கியது...

மயங்கிக்கிடந்த அவனது மேனகையின் ஈர உடைகளை ஒருவாறாகக் களைந்தவன்.. உலர்ந்த நைட்டிக்கு அவளை மாற்றிவிடும் வரை கண்திறக்காமல் இருக்க வெகுவாகச் சிரமப் பட்டான்...

'தோத்துராதேடா முரளி...' அவன் மனம் எச்சரித்தது..

அந்த எச்சரிக்கையை ஆழ்கடலில் கட்டு மரம் கிடைத்ததைப் போல இறுக்கமாகப் பற்றிக் கொண்டு... அவன் காரியத்தை முடித்தான்...

ஒருவழியாய் அவளுக்கு நைட்டியை மாட்டி முடித்தவனுக்கு.. மலையை வெட்டியெடுத்தைப் போலக் களைப்பாக இருந்தது...

'ஹப்பா... என்னா பாடுப்பா..?'

தைரியமாக இமை திறந்து.. விழி விரிய அவளைப் பார்த்தவன்.. அவளது ஈரக் கூந்தலை துவட்டி விட முனைந்தான்...

நனைந்து கிடந்த அவளது பின்னலை பிரித்து விட்டபோது.. அது தரையைத் தொட்டுப் பரவிப் படர்ந்தது..

ஒரு நொடி.. அலைபோலப் பரவிக் கிடந்த அவளது கூந்தலில் முகம் புதைத்துக் கொள்ளும் ஆசை

'உன் கூந்தல் பாமில் துயின்றால்...
மனதில் காதல் வருமா..?
இல்லை.. மோதல் வருமா..?
எதுவந்த போதும்.. என்னை நீ
கட்டிவிடு.. உன் கூந்தல் கயிறால்...'

மனதுக்குள் கவதை வர.. சொல்லிப் பார்த்துக் கொண்டவன்.. துண்டை எடுத்து அவளது கூந்தலை துவட்டினான்.. அதற்குள் பின்பும் அசையாமல் கிடந்தவளின்.. உள்ளங்கால்களை அழுத்தித் தேய்த்து.. வெப்பம் உன்டாக்கினான்.. அவளது உள்ளங் கைகளிலும் அதையே செய்தான்...

விடாத அவன் முயற்சிக்கு.. சிறிதளவு பலன் ஏற்பட்டது.. ராதிகா லேசாகக் கண்திறந்து பார்த்தாள்...

'அப்பாடி.. கண் முழிச்சிட்டா...'

முரளியின் மனதில் சந்தோசம் குமிழிட்டது...

"ராதிகா.. ஏய்ய்.. என்னைப் பாருடி..."

அவள் மிரண்டு விழித்தாள்.. விட்டால்.. மீண்டும் பால்கனிப் பக்கம் போய் விடுவாள் என்று தோன்றியதால்.. கவனமாக பால்கனிக் கதவை அடைத்து.. சாவியை கையில் எடுத்துக் கொண்டான் பாலமுரளி...

அதை அவன் செய்திருக்க வேண்டிய அவசியமேயில்லை என்பதைப் போல... சோர்ந்த விழிகளை மூடிக் கொண்டாள் ராதிகா

'தூங்க ஆரம்பிச்சுட்டா...'

முரளியின் கனத்த இமைகள் அவனை தூக்கத்தில் ஆழ்த்த.. அவனும் அயர்ந்து உறங்கி விட்டான்...

காலையில் காலிங் பெல்லின் சத்தத்தில் உடல் தூக்கிப் போட எழுந்தவன்.. கோபத்துடன் பக்கத்தில் பார்த்தான்.. ராதிகா அப்போதும் கண் விழிக்காமல் தூங்கிக் கொண்டிருந்தாள்...

எப்போதும் அவள்தான் அவனுக்காக காபி கொண்டு வந்து.. அவனை உறக்கத்திலிருந்து எழுப்பித் தருவாள்..

இன்று அந்த நினைவேயில்லாமல் அவள் உறங்குவதில் அவனுக்குள் அடக்க முடியாத சினம் எழுந்தது...

'இவளோட பிரண்டையும்.. அந்த சங்கரையும் ஒரு வார்த்தை சொல்லிட்டேனாம்.. அதுக்காக என்னமா படுத்தி எடுத்துட்டா... ராத்திரி மழையில கொஞ்ச அழிச்சாட்டியமா பண்ணினா..? விட்டா போய் சேர்ந்திருப்பா.. என்னைப் பழியெடுக்க.. இதுதான் சான்ஸீன்னு நினைச்சிட்டாளா...?'

அதே கோபத்துடன் கதவைத் திறந்தவன்.. கையில் காபிக் கோப்பைகளோடு நின்றிருந்த மேகலாவைக் கண்டதும்.. முகம் மாறினான்...

"நீங்களாம்மா..? மீனாட்சி எங்கே...?"

"ராதிகா எங்கேடா..?"

அவனது கேள்விக்குப் பதில் சொல்லாமல் மருமகளைப் பற்றி கவலையுடன் தாய் கேட்டதில் அவனுக்கு எரிச்சல் அதிகமாகியது...

"உங்க மருமகளை.. நான் கடிச்சுத் தின்னுடலை... உள்ளதான் தூங்கிக்கிட்டு இருக்கா..."

"இவ்வளவு நேரம் அவ தூங்க மாட்டாளே..." மேகலா விடாமல் கேள்வி கேட்க... அவன் தாயை வெளிப்படையாக முறைத்தான்...

"தூக்க மாத்திரை கொடுத்திருப்பேன்னு சந்தேகப் படறிங்களா..?"

"யாருடா இவன்..? விடிஞ்சு சூரியன் உச்சிப் பொழுதுக்கு வந்தாச்சு.. இன்னும் வீட்டுக்கு வந்த மருமக எழுந்திருக்கலை.. என்னன்னு பார்க்க வந்தா.. குதர்க்கமா பேசறான்... நகரு..."

"எதுக்கு..?"

"ராதிகாவை பார்க்கப் போகனும்..."

"ஏம்மா.. எழுப்பி விட்டா அவ எழுந்திருக்கப் போறா.. இதுக்காக வேலை மெனக்கெட்டு... நீங்க மாடியேறி வரனுமா..?"

"அம்மா மேல அக்கறைப்பட்டவன்தான்.. போடா.."

அவள் எளிதாக மகனை விலக்கிவிட்டு.. ராதிகாவின் அருகில் சென்றாள்.. கண் திறக்காமல்

படுத்திருந்த மருமகளைக் கண்டதும்.. அவளது புருவங்கள் சுருங்கின...

"எதுக்கும்மா இத்தனை பில்ட் அப்பு..?"

கேலியாகக் கேட்டபடி காயியை உறிஞ்சிக் கொண்டிருந்தவனை கவனிக்காமல் ராதிகாவின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தவளின் முகம் கவலைக்கு மாறியது...

"நினைச்சேண்டா..."

"என்னத்தைம்மா நினைச்சீங்க...?"

"நேத்து இவசிநேகிதியை நீ முறைச்சு முறைச்சு பார்த்தப்பவே எனக்கு சந்தேகமாத்தாண்டா இருந்தது..."

'இது வேறயா...?'

பாலமுரளி ஏறக்குறைய அலறியே விட்டான்...

"அம்மா...! நீங்க பாட்டுக்கு எதையாவது பேசி வைக்காதீங்க.. அவளை நான் பார்த்திட்டாலும்.. ச்சே..! ஏம்மா இப்படிப் பேசறிங்க...?"

"ஏண்டா நீ வேற... நான் 'அந்த'ப் பார்வையைச் சொல்லலைடா..."

'ஹப்பாடி.. பிழைச்சேன்..' அவன் சுவாசம் சீரானது..

"வேற எந்தப்பார்வையைச் சொன்னீங்க..?"

"கடுப்பாய் பார்த்தேடா..."

"பின்னே... காதலாவா பார்க்கமுடியும்...?"

"கன்னா பின்னான்னு பேசாதே.. என் மகனாடா நீ..?"

"பின்னே... இல்லையா..? என்னை தவிட்டுக்கு கிவிட்டுக்கு வாங்கிட்டு வந்தீங்களா..? என்னடா இது..! பேசாம டி.என்.ஏ டெஸ்ட் எடுத்துப் பார்த்துடலாமா...?"

தீவிரமான குரலில் கேட்டவனை.. தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தாள் மேகலா... அப்படியே அவன் முதுகில் நான்கு போடு போட்டால் என்ன என்ற யோசனை அவள் மனதில் ஓடுவதை அவளது முகம் தெள்ளத் தெளிவாக படம் பிடித்துக் காட்டியது...

"ஏண்டா சோதிக்கறே...?"

அவள் பரிதாபமாக கேட்டதில்... அதற்கு மேல் மொக்கை போட்டால் அவள் தாங்க மாட்டாள் என்ற ஞானோதயம் ஏற்பட்டு விட.. பாலமுரளி வாயை மூடிக் கொண்டான்...

"இவளை என்னடா செய்தே...?"

அடுத்த அவளின் கேள்வியில் அவனது ஞானோதயம் காற்றில் பறந்தது... இரவு நேரப் போராட்டத்தின் நினைவில் பல்லை நறநறத்தவன்...

"என்ன செய்யலாம்..? அதையும் நீங்களே சொல்லுங்க..." என்று கடுப்படித்தான்...

"தூக்குடா இவளை..." என்று அவள் சொல்லவும் அவனுக்குள் கோபம் பீறிட்டுக் கொண்டு எழுந்தது...

'எனக்கென்ன வேற வேலை வெட்டியே இல்லையா..? எப்போப் பார்த்தாலும இவளைத் தூக்கி.. தாலாட்டறதுதான் என் பிழைப்பா..?'

"மருமகளை சீராட்டனும்னு நினைச்சா.. நீங்களே தூக்கிக் கிட்டு சீராட்டுங்க.. எனக்கு ஆயிரம் வேலை இருக்க..."

"அடி வாங்க போறடா முரளி.. இவளே காய்ச்சல் வந்து கண்முழிக்காம கிடக்கா.. அதைக் கூடத் தெரிஞ்சுக்காம நீ இருந்திருக்கிற... என்ன புருசன்டா நீ..! உன் அப்பாவெல்லாம் என்னைத் தங்கத்தட்டில வைச்சுத் தாங்குவாரு..."

சந்தடி சாக்கில்.. அவள் கணவனுடன் வாழ்ந்த வாழ்க்கையை நினைவு கூற.. அது காதில் விழுகாதவனாக.. பாலமுரளி.. பதட்டத்துடன் ராதிகாவின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்...

ராதிகாவின் உடல்.. அனலாகக் கொதித்துக் கொண்டிருந்தது...

'கடவுளே...! ஜன்னி வந்திருமோ...'

அவன் பேசிய பேச்சுக்களை.. அவள் தண்ணுணர்வு இல்லாமல் சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற கவலை அவனை பீடித்துக் கொண்டது...

என்னதான் விடிய விடிய அவளுக்கு சிசுரூஷைகள் செய்தாலும்... காய்ச்சல் வருவதைத் தடுக்க முடியாமல் போய்விட்டதே என்று அவனுக்குள் கொலைவெறி மூண்டது-

சின்னச் சின்ன பார்வைகளில்..
சிறைபிடித்தாய் எந்தன் மனதை...

மேகலா அவனைக் காய்ச்சு.. காய்ச்சென்று காய்ச்சி எடுத்து விட்டாள்...

பாலமுரளி ஒரு குறிக்கோளோடு செயல்படுகிறான்.. ராதிகாவிற்கு காய்ச்சல் வர வைப்பதே... அவனுக்கு வாடிக்கையாகி விட்டது... ராதிகா பாவம்... அப்பாவி... அடித்தால் கூட அவளுக்கு அழத் தெரியாது... அப்படிப் பட்டவளை பாலமுரளி எப்படி வைத்துக் கொள்ள வேண்டும்...? அவனுடைய அப்பா மாணிக்க வாசகம் மேகலாவை தங்கத்தட்டில் வைத்துத் தாங்கியதைப் போல அவன் தாங்க வேண்டாம்... அவளை தடியெடுத்து அடிக்காமலாவது இருக்கலாமல்லவா...?

"அம்மா... இது அநியாயம்..." என்றான் பாலமுரளி...

"என்னடா அநியாயத்தைக் கண்டு விட்ட..?" மேகலா எதிரியைப் பார்ப்பதைப் போல மகனைப் பார்த்து வைத்தாள்...

"இவளை நான் தடியெடுத்தா அடிச்சு வைச்சேன்..?" அவன் நியாயம் கேட்டான்...

அவ்வளவுதான்... மேகலா ருத்ர அவதாரம் எடுத்து விட்டாள்...

"அந்தக் குறை வேற உனக்கு இருக்கா..? தனியா தடியை எடுத்து வேற நீ அடிக்கனுமா..? நீ கையால அடிச்சாலே... தடியைக் கொண்டு அடிச்சதைப் போலத்தானே இருக்கும்.. கையாடா அது... சரியான இரும்புக் கை மாயாவிடா நீ..."

விட்டால் அவள் நாள்முழுக்க பாலமுரளியை அர்ச்சனை செய்து விடுவாள் என்ற பயம் பிடித்து ஆட்ட.. அவசரமாக ராதிகாவைத் தூக்கிக் கொண்டான் பாலமுரளி....

'ச்சே... எனக்கு இதே பிழைப்பாப் போச்சு...'

மேகலாவின் விழிகளும் அதையே சொல்லியதால்... தாயின் முகம் பார்க்காமல் விரைவாகப் படிகளில் இறங்கினான்... மேகலா அவனைப் பின் தொடர்ந்தாள்...

"என்னம்மா..? சின்னம்மாவுக்கு காய்ச்சலா..?" எதிர்பட்ட மீனாட்சி கேட்டாள்...

"ம்ம்ம்..." மகனை முறைத்துக் கொண்டே பதில் சொன்னாள் மேகலா...

"நினைச்சேன்..." என்று மீனாட்சி சொன்னதில் பாலமுரளிக்கு பற்றிக் கொண்டு வந்தது...

பெற்றதாய் முதல்... வீட்டில் வேலை செய்யும் வேலையாள்கள் வரை... எப்படி.. அவ்வளவு சர்வ

நிச்சயமாக.. ராதிகாவிற்கு காய்ச்சல் வரும் என்று கணித்தார்கள் என்ற விவரம் அவனுக்கு பிடிபடவில்லை..

ராதிகாவைப் பரிசோதித்த டாக்டரின் பார்வையும் 'அடேய்... பாதகா...' என்பதைப் போல இருந்து வைக்க.. பாலமுரளி எரிச்சலானான்...

"அதென்னங்க... உங்க வொய்புக்கு மட்டும் அடிக்கடி காய்ச்சல் வருது...?" டாக்டர் சந்தேகம் கேட்க..

"இவளுக்கு அப்படியொரு வேண்டுதல்ங்க..." என்று இடக்காக பதில் சொன்னான் அவன்...

"ஓஹோ..." அவனுடைய பதிலில் டாக்டர் அலட்டிக் கொள்ளவேயில்லை...

ராதிகாவுக்கு ஊசி மருந்தை ஏற்றியபடியே... பாலமுரளியின் முகத்தைப் பார்க்காமல்...

"அப்படியாகப்பட்ட நேர்த்திக்கடனை எந்த சாமியிடம் நேர்ந்துக்கிட்டு இருக்காங்களாம்..? உங்களிடமா...?" என்று கேட்டு வைத்து.. அவளின் புத்திசாலித் தனத்தையும் நிரூபித்தாள்...

'எல்லாம் இவளாலே வந்தது...'

ராதிகாவை உண்மையிலேயே அடித்துத் துவைத்து காயப் போட்டுவிடும் கொலைவெறி அவனுக்குள் கிளர்ந்தது...

அதை உணர்ந்தவளைப் போல நிதானமாக அவனைப் பார்த்துவிட்டு...

"இவங்களைப் பத்திரமாப் பார்த்துக்கங்க மேடம்.." என்று மேகலாவிடம் சொன்னாள் அந்த டாக்டர்...

நல்லவேளையாக ராதிகாவுக்கு ஜன்னி வரவில்லை... பாலமுரளியின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் காய்ச்சலோடு அவள் அவனை விட்டு வைத்தாள்...

'அந்த மட்டிலும் பரவாயில்லை.. இவ காய்ச்சலோட விட்டு வைச்சா... ஜன்னிமட்டும் வந்து.. இவ உளறிக் கொட்டி கிளறி மூடியிருந்தா அம்மாவுக்கு பதில் சொல்லி நான் தப்பிக்க முடியாது...'

சென்னையின் பண்ணை வீட்டிலேயே ராதிகா.. வள்ளியம்மானை கீரைப் பதார்த்தங்களாக செய்ய வைத்தவள் என்ற நினைவில் பாலமுரளி தலையை ஆட்டி.. கன்னத்தை உப்ப வைத்து...

'ஊப்ப்...' என்று மூச்சை வெளியே விட்டு தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டான்...

'என்னைத் தலையாலேயே தண்ணி குடிக்க வைக்கிறாளே...'

யாராலும் அசைக்க முடியாத இரும்பு மனிதனான பாலமுரளிக்கே தண்ணீர் காட்டும் ராதிகாவை என்ன செய்தால் தன் மனக் கொதிப்பு அடங்கும் என்ற தீவிர ஆலோசனையில் இறங்கிய பாலமுரளி.. அதை உணர்ந்ததைப் போல.. முகச்சுளிப்புடன் அவனைப் பார்த்த.. மேகலாவின் பார்வையைக் கண்டதும்.. அவசரமாக... அந்த ஆலோசனையைக் கைவிட்டான்...

மேகலா மருமகளை விட்டு.. இந்தப் பக்கம்.. அந்தப் பக்கம் நகரவேயில்லை... கோழி தன் குஞ்சைப் பாதுகாப்பதைப் போல... அவள் மருமகளை அடை காத்தாள்.. அதில் பாலமுரளிக்கும் மன வருத்தம்தான்.. என்னவோ அவன் கொடுமைக்காரனைப் போலவும்... அவனது கொடுமைகளிலிருந்து மருமகளைப் பாதுகாக்க மேகலா காவல் காப்பதைப் போலவும் தாய் தடந்து கொண்டதில் ராதிகாவின் மீதான அவனது கோபம் அதிகரிக்கத்தான் செய்தது... அவனுக்கும்.. அவனைப் பெற்ற தாய்க்கும் இடையில் ராதிகா வந்து விட்டாளே என்று எரிச்சலடைந்தாலும்.. அந்த அளவுக்கு.. அவனைப் பெற்ற தாமின் அபிமானத்தை ராதிகா பெற்றிருக்கிறாள் என்பதில் அவனுக்குள் வியப்பு ஏற்பட்டது... மாமியாருக்கும் மருமகளுக்கும் இடையில் நிலவிய அந்த அதீதமான பாசப்பிணைப்பில் அவன் மனம் நெகிழ்ந்தான்..

ராதிகா தேறிவிட்டாள்.. இந்த முறை மேகலா தன் பலத்த கண்டனத்தை பாலமுரளியிடம் தெரிவித்து விட்டிருந்ததால்.. அவனும் ராதிகாவுடன் வார்த்தை வளர்க்காமல் அமைதிகாத்தான்...

அதனால் ராதிகாவுக்கு மன அமைதி ஏற்படவில்லை.. மாறாக அவன் விலகிப் போவதைப் போல அவள் உணர்ந்தாள்...

வழக்கமாக அவளைக் கண்டதும்.. அவன் கண்களில் மின்னும் ஒளிர்வை அவளால் காண முடியவில்லை... அவளைத் தேடும் அவனது பார்வையை

அவள் தேடினாள்.. அவனது அதீதமான கோபத்தில் விழும் வார்த்தைச் சாட்டையடிகளுக்காக மனம் ஏங்கினாள்...

இப்போதெல்லாம்... அவன் செல் போனைக் காதுக்கு கொடுத்தபடி சாப்பிட மறந்து.. வாசலுக்கு ஓடுவதில்லை... அப்படி அவன் ஓடினாலாவது அவனைத் தடுக்கும் சாக்கில் ஓடி.. வழிமறித்து.. அவன் கேட்ட... காதல் உணர்வுகளை அவனுக்குக் கொடுத்து விடலாமே என்று அவள் தவித்தாள்... அதைக் கொடுக்க அவள் தவிக்கும் தவிப்பை அறியாதவனாக.. பாலமுரளி.. அவள் முகத்தை நிமிர்ந்து கூடப்பார்க்காமல் டைனிங் டேபிளுக்கு வந்து... கடமையாற்றும் கடமை வீரனைப் போல போட்டதைச் சாப்பிட்டு விட்டு நடையைக் கட்டினான்...

'என்னத்துக்கு இப்படி மந்திரிச்சு விட்ட கோழியைப் போல ஒரு மார்க்கமா இருக்கிறான்..' என்ற நினைவு மேகலாவுக்கு வந்தாலும்... ராதிகாவின் உடல் நலனைக் கருத்தில் கொண்டு.. அவன் அப்படியே இருப்பதுதான் உசிதம் என்ற முடிவுக்கு வந்தவளாக அதைப்பற்றி எதையும் அவனிடம் கேட்டு வைக்காமல் வாயை மூடிக் கொண்டாள்...

மாமியாரின் தலையிடாக் கொள்கையில் அதிகமான மனபாதிப்புக்கு ஆளானாள் ராதிகா...

'அத்தையாவது அவரை என்னன்னு ஒரு வார்த்தை கேட்கலாமில்ல...' என்பது அவளின் ஆதங்கமாக இருந்தது...

அவளாக மேகலாவை உசுப்பி விடலாமென்றால்.. அதற்கும் வழிவகை தோன்றவில்லை...

'என்னன்னு கேட்கச் சொல்றியே.. அந்த 'என்ன..' என்னம்மா..? என்று மேகலா கேட்டு விட்டால்... அந்த 'என்ன'வை.. என்னவென்று அவள் சொல்லுவாள்..?'

அதனால்.. தனிமையில் இருக்கும் போது அவனின் கவனத்தைக் கவர முயற்சிப்பதே சாலச்சிறந்தது என்ற முடிவுக்கு வந்தவளாக.. அவள் மோக அஸ்திரத்தை கையில் எடுத்தாள்..

காலையில் அவனுக்கு காபி கொடுத்துவிட்டு.. படுக்கையை சரிசெய்தபடி.. அவனை ஓரக் கண்ணால் பார்த்தபடி...

"மலர்கள் நனைந்தது பனியாலே-என்
மனமும் குளிர்ந்தது அவனாலே..
பொழுதும் விடிந்தது கதிராலே - சுகம்
பொங்கி எழுந்தது உறவாலே..
சேர்ந்து மகிழ்ந்து போராடி -தலை
சீவி முடித்தேன் நீராடி...
கன்னத்தைப் பார்த்தேன் முன்னாடி-பட்ட
காயத்தைச் சொன்னது கண்ணாடி.."

என்று பாடி வைத்தாள்..

அவனோ.. காதில் பஞ்சை வைத்து அடைத்தவனைப் போல.. செய்தித் தாளை பார்வையால் மேய்ந்து விட்டுக் குளிக்கப் போனான்...

மதிய உணவுக்கு பின் ஓய்வாக.. அவர்களின் அறையில் ஒரு நிமிடம் உட்கார்ந்து செல்பவனின் முன்னால்... கால் கொழுசு சப்திக்க... இங்கும் அங்கும் நடைபழகியபடி...

"முயக்கத்தைத் தந்தவன் யாரடி...
மணமகன் பேரென்ன கூறடி...
மறைவினில் நடந்தது என்னடி..?
நீ சொல்லடி.. கதை மாறாமலே.."

என்று முணுமுணுத்து வைத்தாள்...

அவன் ஏறெடுத்தும் பார்க்காமல் கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி நடையைக் கட்டினான்...

மாலையில் எப்போதாது அவன் காபி டிபன் சாப்பிட வீட்டுக்கு வந்து விட்டால்... அவள் மனம் துள்ளும்...

மல்லிகை மணக்க.. அவனருகில் அமர்ந்தபடி..

"பொன் அந்தி மாலையில்...
நீ தொடும் போது..
எண்ணத்தில் என்ன சுகமோ...?
இன்பத்தின் அறிமுகமோ...?"

என்று மயக்கும் குரலில்.. மயங்கிப் போன குரலில் பாடிப் பார்த்தாள்..

அந்தப் பாட்டுச் சத்தத்திலும்.. செல்போனைக் காதுக்கு கொடுத்தபடி மும்முரமாய் பேசிக் கொண்டிருப்பவன்- அவளைத் திரும்பியும் பார்க்கவில்லை..

இரவு நேரம்.. அவளுக்கு தோதான நேரமாகத்தான் இருந்தது... அலுவல்களின் அழுத்தங்கள் இல்லாமல் அவனும்.. இதமான மனநிலையுடன்தான் இருந்தான்.. அவனை அசைத்துப் பார்க்க.. அதைவிட தோதான நேரம் அமையாது என்று தோன்றிவிட.. அவளும் அவனுக்குள் மோகத்தீயை மூட்டி விட முயன்றாள்..

ஒய்வாக.. கை கால்களைத் தளர்வாக விட்டு படுத்திருந்தவனின் பக்கமாக திரும்பிப் படுத்து மெல்லிய குரலில் பாட ஆரம்பித்தாள்...

"காதோடுதான் நான் பாடுவேன்...
மனதோடுதான் நான் பேசுவேன்...
விதியோடுதான் விளையாடுவேன்...
உன் மடிமீதுதான் கண் மூடுவேன்..."

இந்த வரிகளைப் பாடுபவளின் மனம் தளும்பி.. கண்களில் நீர் தளும்பியது.. ஓர் நொடி.. அவனிடம் ஓர்விதமான அதிர்வு ஏற்படுவதை அவள் உணர்ந்தாள்.. அடுத்த நொடியில் அவன் தன்னை சரிப்படுத்திக் கொண்டதில் அவளுக்குள் ஏமாற்றம் ஏற்பட்டது...

"வளர்ந்தாலும் நான் இன்னும்..
சிறு பிள்ளைதான்...
நான் அறிந்தாலும் அதுகூட..
நீ சொல்லித்தான்.."

அவள் குரலின் லேசான விசும்பல் ஒலியில் அவன் மனமும் அசையத்தான் செய்தது.. அந்த வார்த்தைகளில்

இருந்த உண்மையை அவன் அறிவான்... கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தவளை சிறையெடுத்து அவனது உடைமையாக்கிக் கொண்ட நினைவில் அவனும் உதட்டைக் கடித்தான்...

அவன் முகத்தையே ஏக்கத்துடன் ராதிகா பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தும்.. அவன் மனம் பாறையாய் இறுகித்தான் இருந்தது...

"உனக்கேற்ற துணையாக..
எனை மாற்றவா..?"

அவளது பாடலில் கேள்வி இருந்தது... அவன் அவள் முகத்தைக் கூடப் பார்க்கவில்லையென்பதை உணர்ந்தவளின் நெஞ்சில் துயரம் மண்டியது..

"உனக்கேற்ற துணையாக...
எனை.. மாற்ற.. வா..."

பாடல் வரிகளைத் திருப்பி பாடியவளின் வார்த்தைகளில் இருந்த அழைப்பை அறிந்தும் அறியாதவனைப் போல அவன் விழி மூடிக் கொண்டான்..

"குல விளக்காக... நான்வாழ...
வழி.. காட்ட.. வா..."

அவள்குரல் தேம்பி அடங்கி.. வெகுநேரம் கழித்து கண்விழித்தவன் அவள் முகத்தைப் பார்த்தான்.. இருளில் அவன் கண்கள் பளபளத்தன.. அவளின் முகத்தில் தெரிந்த கண்ணீர் கோடுகளை அறையில் சூழ்ந்திருந்த மெல்லிய வெளிச்சத்தில் கண்டவன் துக்கம் கொண்டான்....

'வேணாம்டி.. நாம இப்படியே இருந்துட்டுப் போயிடுவோம்.. எனை மயக்க நினைக்காதே.. உன்னை நெருங்கி வருகிறப்பல்லாம்.. ஒன்னு அந்த சங்கர் குறுக்கே வருவான்.. இல்லைன்னா.. அவனோட போன் கால் வரும்.. அதுவும் இல்லைன்னா.. அவன் சம்பந்தப்பட்ட செய்தி வந்து சேரும்.. அலுத்துப் போயிட்டேண்டி.. இந்த ஜென்மத்தில் நம்மள புருசன் பெண்டாட்டியா வாழ அவன் விடமாட்டான்.. அதை மீறத்தான் உன்னை சிறையெடுத்தேண்டி.... மீறித்தான் உன்னை ஆண்டு முடிச்சேண்டி.. இருந்தும் என்ன பயன்..? அதுக்காக மட்டும் தானே நீ எனக்கு கழுத்தை நீட்டின..? அது நடக்காம போயிருந்தா..? இந்தக் கேள்வி என் நெஞ்சிலிருக்கும் வரை.. நான் நிம்மதியா உன்னைத் தொட முடியாதுடி.. உன் மனசில நானில்லடி.. புருசன்கிறதுக்காக.. நீ என் பக்கத்தில் வர நினைக்கிற.. எனக்கு மனசில்லைடி....'

அவன் தூங்க வெகுநேரமானது என்பதை.. ராதிகா அறியவில்லை...

மழையாக உன்காதல் பொழியும் போது-
வயலாக மாறாமல் எப்படியிருப்பேன்..?

ஷோபாவின் திருமண அழைப்பிதழை கொடுக்க பரந்தாமனும்.. சுசிலாவும் நேரடியாக வந்திருந்தார்கள்.

மகளின் சின்ன மாமியாரும்.. அவள் கணவரும் வந்திருக்கிற உணர்வில் அவர்களுக்கு அதிகமான முக்கியத்துவத்தை கொடுத்து வரவேற்று விருந்து வைத்தாள் மேகலா.. மில்லுக்கு தகவல் போனதில் பாலமுரளியும் வந்து விட்டிருந்தான்... வந்தவர்கள் மேகலாவிடம் பேசினார்கள்.. பாலமுரளிமிடம் பேசினார்கள்.. ராதிகாவை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.. அப்படி ஒருத்தி அந்த வீட்டில் இல்லாததைப் போல அவர்கள் நடந்து கொண்டவார்கள்.. ராதிகாவாக...

"வாங்க அங்கிள்.. வாங்க ஆண்ட்டி..." என்று வரவேற்றபோது... தலையைக் கூட அசைக்காமல்...

'எங்களுக்கு நீ இணையா..?' என்ற கர்வப் பார்வையுடன் கால்மேல் கால் போட்டு சோபாவில் அமர்ந்து விட்டார்கள்..

"யாரும்மா இந்த மண்டைக்கனம் பிடிச்ச ஜென்மங்க..?"

மீனாட்சி விசாரித்தாள்.. அவளுக்கு முதல் பார்வையிலேயே அவர்களைப் பிடிக்காமல் போய்விட்டது..

"இவங்களை உனக்குத் தெரியாதா..?" ஆச்சரியத்துடன் கேட்டாள் ராதிகா...

"தெரியாதேம்மா..." கண்களை அகலமாக விரித்தாள் மீனாட்சி...

"இவங்கதான் ஷோபாவோட அப்பாம்மா..." ராதிகா சொல்ல...

"இம்புட்டுத்தானா..?" என்று அலட்சியக்குரலில் சொன்னாள் மீனாட்சி...

"நீங்க கேட்டதைப் பார்த்ததும் என்னவோ.. பெரிய மனுசங்களப்போல இருக்கேன்னு வாயைப் பொளந்துட்டேன்.. இதுகதானா.. அது..? இதுகளைத் தான் ராணி மங்கம்மாவைப் பத்திச் சொல்றதைப் போல சொல்லி வைச்சீங்களா..?"

"ஸ்ஸ்... மீனாட்சி.. அடக்கி வாசி.. அவங்க காதில விழுந்துரப் போகுது..."

"விழுந்தா விழுகட்டுமே... எனக்கொன்னும் பயமில்ல.."

"எனக்கு பயமிருக்கே..."

"என்னம்மா இப்படிச் சொல்றிங்க..?"

"வேற எப்படிச் சொல்லச் சொல்ற..? வந்திருக்கிறது யாரு..? நம்ம அண்ணியோட சின்ன மாமியார்.."

"இதென்னம்மா கூத்தாயிருக்கு... இந்தம்மா.. நம்ம சரசம்மாவோட மாமியாரோட கூடப் பிறந்த தங்கச்சியா..?"

"எதுக்கு ரயில் தண்டவாளம் போல இத்தனை சுத்து சுத்திவர்ற...?"

"என்னால நம்பவே முடியலையே... நிசமாவே இந்தம்மா அந்தம்மா கூடத்தான் பிறந்துச்சா...?"

"அப்படித்தான் சொல்லிக்கிறாங்க..."

"அந்தம்மா பாவம் சாது.. அப்பிராணி..."

நல்லவர்களை இந்த உலகம் எப்படியெல்லாம் பெயர் வைத்து அழைக்கிறது என்று நினைத்துக் கொண்டாள் ராதிகா...

'நல்லவங்களா இருந்தாப் பாவமா..? அவங்கள்ளாம் அப்பாவியா...?'

"இப்ப அதுக்கு என்னாங்கிற..?"

"என்னத்தைச் சொல்ல..? இதுவும் காலக் கொடுமைதான்..."

"இவங்களை இதுக்கு முந்தி நீ பார்த்ததே இல்லையா..?"

"பார்த்திருப்பேன்.. ஆனா.. தனியாப் பார்த்ததே இல்லை.. ஏதாச்சும் விசேசம்ன்னா.. கும்பலோடு வந்து கும்பலோடு போயிருப்பாங்களா இருக்கும்..."

"இவங்க மகள்தான் ஷோபா..."

"என்னது..?! நிசமாவா..?"

"பின்னே.. பொய்யா..? இந்த விசயத்தில பொய் சொல்லி எனக்கென்ன ஆகப் போகுது..?"

"விடுங்கம்மா.. நான் போயி.. இந்தம்மாவ நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி நாலு கேள்வி கேட்டுட்டு வந்துர்றேன்.."

"அத என்ன தேவைக்கு...?"

"இப்படியா மகளை வளத்து வைச்சு.. அடுத்தவங்க குடியைக் கெடுக்க அனுப்பி வைப்பாங்க...? செய்கிறதையெல்லாம் செஞ்சுட்டு.. நம்ம வீட்டுக்குள்ளேயே வந்து கால்மேல கால்போட்டு உக்காந்திருக்கிறதைப் பாருங்களேன்..."

"விடு மீனாட்சி.. அவங்க கால்.. அவங்க போட்டுக்கிறாங்க.. அதில நமக்கென்ன கஷ்டம்...?"

"இதுக என்னவோ லண்டனுக்கு படிக்கப் போயிருக்கிறதா சொன்னாங்களே..."

மீனாட்சியின் கேள்வியில் ராதிகாவுக்கு சிரிப்பு வந்து விட்டது...

மீனாட்சி பழைய படங்களின் பிரியை..! 'பட்டிக்காடா.. பட்டணமா..!' என்ற படத்தை ஆயிரம் முறை பார்த்து.. கின்னஸ் சாதனை படைத்த சாதனையாளி.. அந்தப் படத்தில் கதாநாயகி 'நான் லண்டனில் படித்தவ..' என்று அடிக்கடி சொல்லுவதால்... மீனாட்சியைப் பொறுத்தவரை வெளிநாடெல்லாம் லண்டன்தான்.. வெளிநாட்டுப் பயணமெல்லாம் லண்டனில் படிக்கப் போவதற்காகத்தான்...

"போதும் மீனாட்சி.. விட்டுரு.. இதுக்கு மேல தாங்காது..." ராதிகா வாயைப் பொத்தி.. சிரிப்பை அடக்கப் படாதபாடு பட்டாள்...

"ஏம்மா சந்தேகம் கேட்டா... அதைத் தீர்த்து வைக்காம.. இப்படிச் சிரிச்சு வைக்கறிங்க..." மீனாட்சி குறைபட்டாள்..

"அவங்க போனதா அவ பொய் சொல்லியிருப்பா.. இவங்க பேச்சைப் பார்த்தா.. அப்படிப் போனதாவே தெரியலையே..."

ராதிகா சரியாக கணித்து விட்டாள்.. ஷோபா கதை பிணைந்திருந்ததை மறந்து விட்டு.. சுசிலா தன் போக்கில் பெருமையடித்துக் கொண்டிருந்தாள்...

"இந்த ஆறுமாசமா.. மாப்பிள்ளை வீட்டில நடையாய் நடந்தாங்க அண்ணி.. ஷோபா படிச்சுக்கிட்டிருக்கான்னு சொல்லிப் பார்த்துட்டோம்... அவங்க கேட்டபாடாய் இல்லை.. லேடிஸ் கிளப்பில இருக்கிற என் பிரண்டஸிட மெல்லாம் ரெகமெண்ட் பண்ணச் சொல்லிக் கேட்டிருக்காங்க... அவங்களும் சேர்ந்துக்கிட்டாங்க.. என்னால பதில் சொல்ல முடியலை.. தினமும் அவங்க.. ஃபோர்ஸ் பண்ணிக்கிட்டு இருந்ததில... ஷோபா நிம்மதியாய் படிக்க முடியலேன்னுதான் தேனூத்துக்கு கிளம்பி வந்தா..."

சுசிலாவின் பேச்சில் மேகலாவின் புருவங்கள் கருங்கின...

"ஷோபா வேற மாதிரிச் சொன்னாளே..."

கசிலாவிற்கு அந்த நினைவேயில்லை.. அவள் மகளின் திருமணப் பெருமையை பறைசாற்றுவதிலேயே குறியாய் இருந்தாள்...

"என்னவோ அண்ணி.. ஷோபாவுக்கு இந்த மாப்பிள்ளைதான்னு எழுதி வைச்சிருக்கு போல... எனக்கும் மனதில இந்த இடம்தான்னு தோணிப்போச்சு.. அதான்.. ஷோபாவுக்கு போன் போட்டுக் கிளம்பிவரச் சொல்லிட்டேன்...."

பாலமுரளியின் பார்வையும்.. மேகலாவின் பார்வையும் சந்தித்துக் கொண்டன...

"அவ எங்களிடம் இதைப் பத்திச் சொல்லவே இல்லையே..."

"கல்யாணப் பெண்ணில்லையா.. வெட்கமா ஃபீல் பண்ணியிருப்பா..."

இதைச்சொன்ன கசிலாவின் முகத்தைப் பார்த்த மேகலா பதில்சொல்லவே இல்லை.. பாலமுரளியோ.. வேறு திக்கில் பார்க்க ஆரம்பித்துவிட்டான்...

"அந்தப் புள்ளைக்கா வெக்கம் வந்திருச்சு..? அடக்கடவுளே..! இந்தக் கொடுமையை எங்காச்சும் கண்டிருக்கோமா..? வெக்கம்ன்னா கிலோ என்ன விலைன்னு அது கேட்டு வைக்குமே.." மீனாட்சி அங்கலாய்த்தான்...

கடைசிவரை ராதிகாவைக் கண்டு கொள்ளாமலே அவர்கள் கிளம்பிப் போய்விட்டார்கள்..

'இவனுக்கு இதெல்லாம் தெரியாது...' பொருமினாள் ராதிகா...

அவனுக்குத் தெரிந்திருந்தது.. அது ஷோபாவின் திருமணத்துக்கு கிளம்ப வேண்டுமென்று மேகலா சொல்லியபோது தெரிந்தது...

"நீங்க மட்டும் போய்ட்டு வாங்கம்மா.. உங்களைத் திருநெல்வேலியில் விட்டுவிட்டு வர்றேன்.. அக்கா வீட்டோட சேர்ந்துக்கங்க... அவங்களோட திருநெல்வேலிக்கே திரும்பி வந்துருங்க.. நான் வந்து கூப்பிட்டுக்கிட்டு வர்றேன்.. மத்தபடி.. அவளும்.. நானும் இந்தக் கல்யாணத்தில கலந்துக்கிறதா இல்லை..." கண்டிப்பான குரலில் கூறிவிட்டான்...

மேகலாவிற்கு அதற்கான காரணம் பிடிபட்டு விட்டது போல...

"நானும் கவனிச்சேண்டா... அவங்க செஞ்சது சரியில்லைதான்.. ஆனா முரளி.. உன் அக்காவுக்காக நாம பார்க்க வேணாமா..?"

"மாமாகிட்ட பேசிட்டேன்ம்மா.. முக்கியமான வேலை இருக்கு.. அம்மா மட்டும் வரட்டும்ன்னேன்.. சரின்னு சொல்லிட்டாரு..."

அதற்கு மேல் மேகலா மறுத்துப் பேசவில்லை.. ராதிகாவின் மனதில் இதம் படர்ந்தது.. என்னதான்

வேண்டாத மனைவியாக இருந்தாலும் அவளின் மரியாதையைக் காப்பாற்ற நினைக்கும் கணவனின் மேல் அவளுக்கு காதல் பிறந்தது...

'ம்ஹரிம்.. நான் நினைச்சு என்ன பிரயோசனம்.. அவன்தான் என்னைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டேன்னு பிடிவாதமாய் இருக்கானே...'

ராதிகா பெருமூச்சுடன் மாமியாரை வழியனுப்பி வைத்தாள்...

துணைக்கு மேகலா இல்லையென்பதாலோ என்னவோ.. பாலமுரளி சீக்கிரமாக வீடு திரும்பினான்... அவளிடம் இரண்டொரு வார்த்தைகள் பேசவும் செய்தான்.. அதிலேயே ராதிகா காற்றில் பறப்பதைப்போல உணர்ந்து சந்தோசப் பட்டுப் போனாள்.. அவன் சிந்திய அந்த ஒரிரண்டு வார்த்தைகளை சேகரித்து அவளது மனப் பெட்டகத்தில் பூட்டி வைத்துக் கொண்டாள்...

ஷோபாவின் திருமணத்தில் கலந்து கொள்ளப் போன மேகலா.. புதிய செய்தியொன்றை கொண்டு வந்தாள்...

"ராதிகா... நம்ம வீட்டுக்கு வந்திருந்தாளே உன் சிநேகிதி..." என்று அவள் பேச்சை ஆரம்பிக்க...

"ஹேமாவைச் சொல்றிங்களா அத்தை..?" என்று ஆவலுடன் கேட்டாள் ராதிகா..

மதிய உணவுக்காக வந்திருந்த பாலமுரளி தாயை முறைக்க முடியாமல் அவளை முறைத்தான்...

அவனது கண்டனப் பார்வையால் அவனுக்கு பரிமாறிக் கொண்டிருந்த ராதிகாவின் கைவிரல்கள் தந்தியடித்தன...

"நானா.. அவள் பேச்சை எடுத்தேன்...?" அவள் மெல்லியகுரலில் அவனுக்கு மட்டும் கேட்கும்படி நியாயம் கேட்டாள்...

அதற்குப் பதில் சொல்லாமல் அவன் பல்லைக் கடித்தபடி சாப்பாட்டை மென்றான்...

"அவளேதாம்மா.. அவளைக் கல்யாணம் பண்ணப் போகிற மாப்பிள்ளையைத்தான் ஷோபாவுக்கு முதலில் பார்த்தாங்களாம்.."

"அட..!"

ராதிகா கணவனின் கோபத்தை மறந்து தன் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினாள்...

"ஆமாம்மா... ஆனா.. அந்த மாப்பிள்ளை ஹேமாவைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதாய் சொல்லிட்டானாம்..."

"அதனாலதான்.. அவங்க வீட்டிலே.. இவ இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிவைச்சாளா..?"

தோழிக்கான ஆதங்கத்தை ராதிகா வெளிப்-படுத்திவிட.. இப்போது பாலமுரளி வெளிப்படையாகவே அவளை முறைத்தான்.. ராதிகா தன் வாயை நொந்து கொண்டாள்...

'வாயைத் திறக்காம இருந்திருக்கலாம்...'

அதையறியாத மேகலா.. ஆவலுடன் கதை கேட்டாள்..

"யாரும்மா சொன்னது..? யாருகிட்ட சொன்னது..? என்ன விசயமாம்...?"

மாமியாரின் கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் இருக்க முடியுமா..? ராதிகா தயக்கத்துடன் கணவனைப் பார்த்து.. கண்களால் அனுமதி கேட்டாள்...

"அதான்.. ஆரம்பிச்சுட்டல்ல..? அப்புறமும் என்ன பார்வை வேண்டிக்கிடக்கு.. கொட்டித் தொலை..." அவன் அடிக்குரலில் வெறுப்பை உமிழ்ந்தான்...

விதியை நொந்து கொண்டே.. ராதிகா விவரம் சொன்னாள்...

"ஏண்டா முரளி.. இந்தப் பொண்ணு எதுக்காகடா இப்படியெல்லாம் செஞ்சு வைக்குது..?" தாங்க முடியாத மேகலா.. மகனிடம் கேட்டாள்...

"வேணும்னா.. அடுத்த பிளைட்டைப் பிடிச்சு சென்னைக்கு பறந்து போயி அந்த ஷோபாகிட்ட இதுக்கென்ன பதில்ன்னு கேட்டுட்டு வரட்டுமா..?" பவ்யமான குரலில் கேட்டான் பாலமுரளி...

"என்னடா தம்பி கோவிச்சுக்கறே..."

"பின்னே என்னம்மா..? அடுத்தவங்க வீட்டுக்கதை நமக்கெதுக்கு..? நாம.. நம்ம கதையைப் பார்ப்போம்.."

தாயை அதட்டிவிட்டு.. மனைவியை முறைத்துவிட்டு பாலமுரளி போய் விட்டான்...

ஹேமாவின் திருமணநாள் நெருங்கி வந்து கொண்டிருக்க.. ராதிகாவிற்கு தவிப்பாக இருந்தது.. எப்படி பாலமுரளியிடம் அதை நினைவு படுத்துவது என்று தெரியாமல் அவள் திகைத்தாள்... நல்ல வேளையாக மேகலா அதை நினைவில் வைத்திருந்தாள்.. ஹேமாவின் திருமணத்திற்கு இரண்டு நாள்களுக்கு முன்பாகவே.. மகனிடம் அதைச் சொல்லியும் விட்டாள்...

"அந்தப் பொண்ணோட கல்யாணத்துக்கு போறிங்கதானே முரளி...?"

"எந்தப் பெண்ணோட கல்யாணம்மா..?"

நினைவில்லாததைப் போல அவன் கேட்டான்.. ராதிகாவிற்கு நிச்சயமாகத் தெரியும்.. ஹேமாவின் திருமணதினத்தை அவன் நினைவில் வைத்திருப்பான் என்று...

'மறந்ததைப் போலப் பேசுகிறான்...'

"அதாண்டா.. ராதிகாவோட சிநேகிதி ஹேமாவோட கல்யாணம்..."

"ஏம்மா... அக்காவோட சின்ன மாமியாரோட மக கல்யாணத்துக்கே என்னால போக முடியலை.. இவ கூடப் படிச்ச பொண்ணோட கல்யாணத்துக்கு என்னால போக முடியுமா..?"

"நம்ம வீடு தேடி வந்து பத்திரிக்கை வச்சிருக்குடா.."

"அதுக்காக..? வேலை வெட்டியெல்லாம் விட்டுட்டு சென்னைக்கு போயிட்டு வர என்னால முடியுமா..?"

"உன் அப்பா மனுசரை மதிக்கிறவர்டா முரளி..."

"ஆரம்பிச்சிட்டிங்களா.. இன்னும் ரெண்டு நாள் இருக்கில்ல.. பார்க்கலாம்..."

அவன் ஹேமாவின் திருமணத்தில் கலந்து கொள்ளப் போவதற்கான வழிமுறைகளைப் பார்ப்பான் என்ற நம்பிக்கை... சிறிதளவு கூட ராதிகாவுக்கு இல்லை... அன்றைய இரவில் அவன் அதை நிருபித்தான்...

நீ சொன்ன வார்த்தைகளை..
நினைத்து தவிக்கும் எந்தன் இதயம்...

இரவின் அமைதி அறையில் சூழ்ந்திருந்தது.. ராதிகா அறைக்குள் நுழைந்ததும் எப்போதும் போலக் கணவனை ஏக்கத்துடன் பார்த்தாள்.. எப்போதுமே அவளது பார்வையைக் கண்டு கொள்ளாமல் ஏதேனும் ஒரு புத்தகத்தில் ஆழ்ந்திருப்பவன் அன்று வெறுமையான பார்வையொன்றை பதிலுக்கு பார்த்து வைத்தான்..

அந்தப் பார்வையிலேயே மகிழ்ந்து போய் விட்டாள் ராதிகா...

பசுவைத் தேடும் கன்றைப் போல... ஆவலுடன் அவன் பார்வையில் காதலைத் தேடியபடி அருகில் அமர்ந்தவளை சொந்தமில்லாத பார்வை பார்த்தபடி...

"உன்னிடம் கொஞ்சம் பேசனும்.." என்றான் அவன்..

"பேசுங்க..." ஆனந்தத் தவிப்புடன் கூறினாள் ராதிகா...

கட்டிலில் அவனருகில் முழங்கால்களைக் கட்டியபடி வாகாக அமர்ந்து கொண்டவளைக் கண்டதும் அவனுக்கு மனதை என்னவோ செய்தது...

அவனுக்குத் தெரியும்... அவன் நிச்சயமாகக் காதல் மொழிகளைப் பேசப் போவதில்லையென்பதை அவள் மிக நன்றாக அறிவாள் என்பது...

இருந்தும் அவள் ஆவலுடன் அவன் முகம் பார்க்கிறாள் என்றால் அதை என்னவென்று சொல்லுவது..?

அவன் கடிந்துதான் பேசுகிறான்... ஆனாலும் அவள் காதலுடன் முகம் பார்க்கும் போது அவனுக்கு என்னவோ போல ஆகிவிடுகிறது... அவள் முன்னால் அணிந்திருக்கும் கடுமை முகமூடியை கழட்டி வைக்க... தோப்புப் பக்கம் அவன் போய் விடுவான்...

'ஏண்டி அப்படிப் பார்த்து வைக்கிற...' என்ற மரங்களடர்ந்த தனிமையில் மறுகுவான்...

'உன்னை நெருங்கி வந்து வந்து அலுத்துப் போயிட்டேண்டி... இனியும் உன்னைத் தேடி வந்து...

உனக்கும்... எனக்கும் நடுவில் அவன் வந்துன்னு கண்ணாமூச்சி விளையாட்டு விளையாட எனக்குப் பிடிக்கலைடி.. நான் மனுசன்டி...'

அந்த வட்டாரத்திலேயே.. இரும்பு மனிதன் என்று அழைக்கப்படும் அந்த சாதனையாளன்... தனிமையில் மனம் குமுறுவான்...

அவனையறியாமல் அவன் கால்கள்... அருவிக் கரையை நோக்கிச் செல்லும்... அருவிக்கரையில் வீற்றிருக்கும் பிள்ளையாரையே இமைக்காமல் பார்த்தபடி நிற்பான்...

'எனக்கும்... அவளுக்கும் நீதானே முடிச்சும் போட்டு வைச்ச...? இப்ப எதுக்காக.. என் கண் முன்னால.. பெண்டாட்டிங்கிற சொந்தத்தோட அவள நடமாட வைச்சு.. அவளைத் தொட முடியாம.. கைகளையும் கட்டிப் போட்டு வைச்சிருக்க...?'

பிள்ளையாரிடம் கேள்விக் கணைகளை மௌனமாக தொடுத்து விட்டுத் திரும்பி வந்து விடுவான்...

மௌனம் பேசுமா...?

பேசும் என்பதை அவன் அறிந்திருந்தான்... திருமணத்திற்கு முன்னால் ஒரு மௌனப் பார்வையிலேயே மற்றவர்களை கதிகலங்க வைப்பான்.. அப்போதெல்லாம் அவனது மௌனம் ரௌத்திரத்தைத்தான் பேசியது...

இப்போது...?

ராதிகாவிடம் சிலநேரம் மௌனப் பார்வைகளில் பேசியிருக்கிறான்... அந்தப் பார்வைகளின் வீச்சைத் தாங்க முடியாமல் பேச்சிழந்து நிற்கும் அவளது மௌனப் பார்வைகளும் கதை பேசியிருக்கின்றன...

பேச்சுக்களால் நிரப்பப்படும் பொழுதுகளைவிட பேச்சற்ற மௌனங்களால் நிரப்பப்படும் பொழுதுகள் ஆத்மார்த்தமானவை... அர்த்தம் நிறைந்தவை...

அப்படிப்பட்ட தருணங்களில்தான் அவனும் ராதிகாவும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்...

மனம் தளும்பும் நேரங்களில் மற்றவர்கள் முன்னால் உணர்வுகளை காட்ட முடியாத அந்த இரும்பு மனிதன்.. அருவிக் கரையின் பிள்ளையாரைத்தான் தேடிப் போயிருக்கிறான்..

அப்படிப்பட்ட ஒரு தருணத்தில்தான்... அந்தக் காட்சியைப் பார்த்தான்...

அருவிக்கரையின் அரசமரத்தடியில் சிமிண்ட் மேடையில் பிள்ளையார் வீற்றிருக்க... அந்தச் சின்னத் திறந்த வெளிக் கோவிலின் படிக்கட்டில் அமர்ந்து பிள்ளையாரையே மௌனப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள் ராதிகா... அவளது பார்வையில் ஆயிரமாயிரம் உணர்வுகள் அலை மோதின... தாயைத் தேடிவந்து அவளிடம் தன் துன்பங்களை ஒப்பிக்கும் மழலையாக அமர்ந்திருந்தவளைக் கண்டதும் அவன் கால்கள் பின்னடைந்து விட்டன...

'இவ எப்ப வந்தா..? எப்படி வந்தா...?..'

அவன் கேள்விகளுக்குப் பதில் சொல்வதைப் போலச் சற்றுத் தொலைவில் கார் நின்று கொண்டிருந்தது.. காரின் மீது சாய்ந்து நாச்சியப்பன் நின்று கொண்டிருந்தான்...

பாலமுரளியைக் கண்டதும்... அவசரமாக எட்டெடுத்து அவன் வரமுயன்றபோது.. உதட்டின் மீது கை

வைத்து அவனை எச்சரித்து விட்டு.. அவனை வரவேண்டாமென்ற சைகையையும் செய்து விட்டு பாலமுரளி... ஒரு மரத்தடியில் ஒதுங்கி நின்றான்...

என்னவெல்லாம் நினைத்தாளோ.. எவற்றையெல்லாம் அந்த ஆனைமுகனிடம் ஒப்பித்தாளோ... கண்ணீர் திரையிட.. ராதிகா எழுந்து கொண்டாள்... நாச்சியப்பன் அறியாமலிருக்கும் பொருட்டு... கண்களை நாசுக்காக துடைத்துக் கொண்டவள்.. காரில் ஏறிப்போய் விட்டாள்..

அன்றை இரவிலும் பாலமுரளிக்கு தூக்கம் பிடிக்க வெகுநேரமானது...

அவனுக்காக அவள் ஏங்கும் ஏக்கத்தை அறிந்த பின்னாலும் அவன் மனம் இளகவில்லை... பட்டவனுக்குத்தான் அதன் வலியும்... வேதனையும் தெரியும்... அவன் பட்டவன்... விலகியே நின்றான்...

அன்றும் அவனது சின்னஞ்சிறு பேச்சில் மனம் சிறகடிக்க அவன் முகத்தையே அள்ளிப் பருகுவதைப் போல ஆவலுடன் பார்த்தபடி அமர்ந்திருந்தவளைப் பார்த்தவனுக்கு மனம் வலித்தது... அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் கடினமான குரலில் பேசினான்...

"உன் பிரண்டோட கல்யாணத்துக்கு போகிறதில எனக்கு இஷ்டமில்ல..."

அவளுக்குத்தான் தெரியுமே.. அவன் இதைத்தான் பேசப் போகிறான் என்று தெரிந்துதானே அவளும் அமர்ந்தாள்...

"நான் போகனும்னு சொல்லலையே..."

"அம்மா சொல்றாங்களே..."

"அத்தை அப்படிச் சொன்னதுக்கும்.. எனக்கும்.. யாதொரு சம்பந்தமுமில்லை..."

"எனக்கும் அது தெரியும்.."

உணர்வுகள் துடைத்த முகத்துடன்தான் அவன் இதைச் சொன்னான்.. ஆனாலும் அவள் முகம் மலர்ந்து விட்டாள்...

"தேங்க்ஸ்..."

நன்றி சொல்லச் சொல்லி உன்னை நான் கேட்டேனா என்பதைப் போல அமர்த்தலான பார்வை ஒன்றை அவள் பக்கம் வீசிவிட்டு.. அதே உணர்வுகள் துடைத்த முகத்துடன் அவன் மீண்டும் பேசினான்...

"அம்மாவிடம் மறுத்துப் பேச என்னால் முடியாது.. அவங்க உடனே என் அப்பாவை பேச்சில் இழுத்து விட்டுவிடுவாங்க... அதைக் கேட்ட பின்னாலே எப்படி என்னால் மறுத்துப் பேச முடியும்..?"

அவன் சாதாரணமாகத்தான் சொன்னான்.. ஆனால்.. ராதிகாவோ.. அவன் உணர்வுகளை அவளுடன் பகிர்ந்து கொள்வதைப் போல மகிழ்ந்து போனாள்...

வாத்சல்யத்துடன் அவளது பார்வை அவனை வருடியது...

"முடியாது தான்..." அவள் பரிவுடன் சொன்னபோது.. அவன் அவளை நிமிர்ந்து ஓர் பார்வை பார்த்தான்...

உணர்வுகள் இல்லாத.. சொந்தமற்ற பார்வைதான்.. ஆனால்.. அந்தப் பார்வையில் ஏதோ ஒரு செய்தி புதைந்திருப்பதை ராதிகா உணர்ந்தாள்...

'என்ன சொல்லப் போகிறான்..?' அவள் இதயம் படபடத்தது...

"அதனால நீயே உன் பிரண்டோட கல்யாணத்துக்கு போக முடியாதுன்னு சொல்லி விடு.."

அவன் சொல்ல வந்ததை சொல்லி விட்டான்...

"நானா..?" அவள் திகைத்துப் போய்விட்டாள்...

"நீதான்..." அழுத்தமான குரலில் அவன் சொன்னான்..

"என்னால் எப்படி அப்படிச் சொல்ல முடியும்..?"

அவள் குரலில் லேசான மறுப்பிருக்க... அவன் உஷ்ணப்பார்வை பார்த்தான்... அவள் கைவிரல்கள் வழக்கம் போல தந்தியடிக்க ஆரம்பித்தன...

"ஏன் சொல்ல முடியாது..?" அவன் உறுமினான்...

"நான் சொல்லலை...? ஷோபாவின் கல்யாணத்துக்கு நீ போக வேண்டிய அவசியமில்லாம நான் பண்ணலை...? நீ கேட்டுக்கிட்டா அதைச் செய்தேன்..?" அவன் கேள்வியில் கனல் வீசியது...

"அது.. அது..." ராதிகா தடுமாறினாள்...

"என்னடி மென்று விழுங்கற... உனக்கொரு நியாயம்.. எனக்கொரு நியாயமா..? உனக்காக நான் பேசும்போது.. எனக்காக நீ பேச மாட்டியா..? அந்த ஷோபா.. உனக்குத்தான் எதிரி... எனக்கு எதிரியில்லை.."

அவனது வார்த்தைகளில் சட்டென்று நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள் ராதிகா... அவளது உதடுகள் எதையோ சொல்லத் தவித்தனவாய் துடித்தன...

அதைக் கண்டவனின் பேச்சு.. ஓர் நொடி நின்றது.. மறுநொடியில் எப்போதும் போலத் தன்னைச் சமாளித்துக் கொண்டவனாக.. அவன் பேச ஆரம்பித்தான்...

"அப்படியிருந்தும் நான் பேசலையா...?"

"இப்ப நான் என்ன பண்ணனும்..?" ஒரு முடிவுக்கு வந்துவிட்டவளாக கனத்த இதயத்துடன் ராதிகா கேட்டாள்...

"அந்த ஹேமாவைக் கண்டாலே எனக்குப் பிடிக்கலை... அவநிழல்கூட உன்மேல படக்கூடாதுன்னு நான் நினைக்கிறேன்... அவ யாரோ... நீ யாரோ..."

பாலமுரளியின் உத்தரவில் ராதிகாவின் இதயம் மௌனக் கண்ணீரை விட்டது...

பள்ளிப் பருவத்திலிருந்து கூடப் படித்துப் பழகிய உயிர்தோழி..! ராதிகா சேர்ந்த அதே பொறியியல் கல்லூரியில் தான் தானும் சேருவேன் என்று அடம் பிடித்து சேர்ந்த அன்புச் சிநேகிதி..! இத்தனைக்கும்... அவளுக்கு வேறு ஒரு கல்லூரியில் மதிப்பெண்களின் அடிப்படையில் இடம் கிடைத்திருந்தது... அவள் அங்கே சேர மறுத்து விட்டாள்.. அவளது பிடிவாதத்திற்காக... அவளின் தந்தை.. கல்லூரியின் பண ஒதுக்கீட்டு இடத்தில் அவளைச் சேர்த்து விட்டார்... அதற்காக அவர் வெகுவாகச் சிரமப்பட வேண்டியிருந்தது...

அப்படிப்பட்ட சிநேகிதியை ராதிகா பிரிய வேண்டும்...

ராதிகாவின் திருமணத்தில் ஹேமாவுக்கு விருப்பமில்லலை.. இருந்தும் அவள் முதல் ஆளாக... முன்னால் நின்றாள்... நிச்சயதார்த்தம் நடக்கப் போவதைப் பற்றியே அவருக்குத் தெரியாது.. இருந்தும்.. அவள் விட்டுக் கொடுக்காமல் ராதிகாவின் பக்கத்தில் வந்து நின்றாள்.. வரவேற்பு முதல்... சமையல் ஏற்பாடுவரை.. ஓடி ஓடி அவள் வேலை செய்தது நினைவுக்கு வர... கண் கலங்கினாள் ராதிகா...

'ஷோபாவும் ஹேமாவும் ஒன்றா...? குணியக்காரியும்... தேவதையும் ஒன்றாகி விட முடியுமா..?' அவள் மனம் வலித்தது...

இதை பாலமுரளியிடம் யார் சொல்வது...?

தன் பிடிவாதத்திலிருந்து.. சற்றும் மனம் தளராதவனாக... கல்லைப் போல அமர்ந்திருந்தவனை ஏக்கத்துடன் பார்த்தாள் ராதிகா...

அவளது கண்ணீரும்... ஏக்கப் பார்வையும் அவனைக் கொஞ்சம் கூட அசைக்கவில்லை...

"அவ இந்த வீட்டுக்கு வரக்கூடாது..."

"வரமாட்டா..." ரோசத்துடன் பதில் சொன்னாள் ராதிகா...

"மதியாதார் தலை வாசலை அவ ஏன் மிதிக்கப் போறா...?"

"மிதிப்பாடி... உனக்காக மிதிப்பா.. அவதான் உனக்கு அந்தரங்கத் தோழியாச்சே... கட்டாயம் மிதிப்பா.. அவ்வளவு கௌரவம் பார்க்கிறவளா சுயமரியாதையாய்

இருக்கிறவளா இருந்திருந்தா... அன்னைக்கு நான் பேசின பேச்சுக்கு.. இந்த வீட்டில கை நனைக்காம போயிருக்கணுமே... அவ அதைச் செய்யலையே.. அதிலிருந்தே தெரியுதே.. உன் சிநேகிதி.. உனக்காக எதையும் செய்வான்னு..."

பாலமுரளி... தனது அதீத புத்திசாலித்தனத்தை அப்போதும் நிருபித்தான்... அப்படிப்பட்டவளின் திருமணத்தை விலக்கி வைக்க நேர்ந்ததில் ராதிகா மனதிற்குள் துடித்துப் போனாள்...

"எனக்குத் தெரிஞ்சதெல்லாம் ஒன்னே ஒன்னுதான்.. அவ என்னோட எதிரியின் பக்கம் நிற்கிறவ... என் எதிரியைச் சேர்ந்த யாராக இருந்தாலும்.. அவங்களும் எனக்கு எதிரிதான்.. என்னோட எதிரி உனக்குத் தோழியாயிருந்தா.. நான் உன்னையும் எதிரியாய் நினைக்க வேண்டியிருக்கும்.. உனக்கு எது தோதுன்னு நீயே முடிவு பண்ணிக்க..."

அத்தோடு பேச்சு முடிந்தது என்பதற்கு அடையாளமாக அவன் விளக்கை அணைத்து விட்டுப் படுத்து விட்டான்...

'என்னையும் எதிரியாய் நினைப்பானா..?' ராதிகா துக்கப்பட்டாள்...

வெகுநேரம்.. அவள் உட்கார்ந்த நிலையிலேயே முழங்கால்களில் முகத்தைப் புதைத்து கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.. அதை பாலமுரளியும் உணர்ந்துதான் இருந்தான்.. இருந்தாலும்.. பிடிவாதமாக.. அதை ஏனென்று கேட்காமல் கண்மூடிப் படுத்திருந்தான்...

மறுதினம்... அவர்கள் இருவருமே ஊமையைப் போல நடமாடிக் கொண்டிருக்க... அவர்களுக்கிடையே எந்தவித உரையாடலுமின்றி அன்றையப் பொழுது கழிந்தது...

அதற்கு அடுத்த தினத்தில்... காலையில் சாப்பிட வந்த முரளியிடம்...

"இன்னைக்கு கிளம்பப் போறிங்கதானே முரளி..?" என்று கேட்டாள் மேகலா...

"எங்கேம்மா..?" பாலமுரளி புருவங்களை உயர்த்தினான்...

"இது ஒன்னு உன்கிட்ட இருக்குடா மகனே.. எதைச் சொன்னாலும் அதை அப்படியே மறந்துருவே.. ஏம்மா... ராதிகா.. நியாவது சொல்லக் கூடாதா..?" என்றபடி மருமகளைப் பார்த்த மேகலா திகைத்து விட்டாள்...

ராதிகா தன் தலையில் இறுக்கமாக துண்டைக் கட்டிக் கொண்டு நின்றாள்...

முன்மீது நடக்கச் சொன்னாய்...
மலரென்று நான் நடந்தேன்...

"என்னம்மா.. தலையில துண்டைக் கட்டியிருக்க..?" மேகலா பதட்டத்துடன் மகனைப் பார்த்தாள்...

அவனோ.. அதற்கும்.. அவனுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதைப் போல சாப்பாட்டில் கவனமாக இருந்தான்...

"ஒரே தலைவலி அத்தை...", தீனமான குரலில் கூறினாள் ராதிகா... சட்னிக் கிண்ணத்தை வைத்து விட்டுப் போகும் சாக்கில்.. அங்கேவந்த மீனாட்சி...

"ஏம்மா.. ஒத்தைத் தலைவலியா..? இல்லை.. ரெட்டைத்தலைவலியா..?" என்று விளக்கம் கேட்டாள்...

'அதான் தலைவலின்னு சொல்றேனில்ல.. இவ என்ன அதில ஆயிரம் டெபனிசன் கேட்கிறா..?'

ஏற்கனவே தோழியின் திருமணத்தை தன் வாயால் பொய் சொல்லி தடுத்து நிறுத்த வேண்டியதாகப் போய்விட்டதே என்ற மனவேதனையுடன் இருந்தவளுக்கு.. இந்த வேதனையும் சேர்ந்து கொண்டது...

"அப்படின்னா..?" அவள் பதிலுக்கு விளக்கம் கேட்டாள்...

நெருப்பை... நெருப்பே சில நேரம் அணைத்து விடுவதுண்டு.. அதைப் போல... விளக்கம் கேட்பவளிடமே.. விளக்கம் கேட்டு.. அவள் வாயை மூட வைக்க வேண்டும் என்று ராதிகா செய்த யுக்தி மீனாட்சியிடம் பலிக்கவில்லை...

"ஒத்தை தலைவலின்னா... தலையோட ஒத்தைப் பக்கம் மட்டும் வரும்மா... அப்படியே நரம்பை சுண்டிச் சுண்டி இழுக்கும்.. எப்படின்னா.. இப்படித்தான்..."

மீனாட்சி புருவத்தை சுருக்கிச் சுருக்கி... செய்முறை விளக்கம் செய்து காண்பித்தாள்...

ராதிகா கொலைவெறியோடு பற்களை நறநறத்தாள்..

"ரெட்டைத் தலைவலின்னா தலையோட ரெண்டு பக்கமும் வலிக்கும் எப்படின்னா.. சுத்தியலை எடுத்து ரெண்டு பக்கமும் டமார்.. டமார்ன்னு அடிச்சா எப்படியிருக்கும்..? அப்படியிருக்கும்..."

மீனாட்சி பேசிய பேச்சில்.. உண்மையிலேயே ராதிகாவுக்கு தலைவலி வந்து விட்டது.. வலியின் வேதனை அவள் முகத்தில் தெரிய.. மேகலா மீனாட்சியை அதட்டினாள்..

"ஏற்கனெவே.. என் மருமக.. தலைவலியிலே துடிச்சுக்கிட்டு இருக்கா.. இதில நீ வேற ரம்பம் போடனுமா..? விட்டா நீயே சுத்தியலைக் கொண்டுவந்து என் மருமக மண்டையை பிளந்துருவ போல இருக்கே..."

"அதுக்கில்லம்மா... என்ன மாதிரியான தலைவலின்னு தெரிஞ்சாத்தானே அதுக்கு வைத்தியம் பண்ண முடியும்...?"

"அதை நாங்க பார்த்துக்கறோம்.. நீ போய் உன் அலுவலைப் பாரு... சட்னியைக் கொண்டு வந்துட்ட.. சாம்பார் எங்கே...? அதுவா கால் முளைச்சு வருமா..?"

"அதுக்குள்ல அம்மாவுக்கு தலைவலி வந்துருச்சேம்மா..."

"இதுவந்தா.. சாம்பார் வரக்கூடாதுன்னு சட்டமிருக்கா...."

மேகலா போட்ட போட்டில் அவசரமாக இடத்தைக் காலிசெய்தாள் மீனாட்சி.. மருமகளை கவலையுடன் பார்த்த மேகலா...

"காய்ச்சல்... கீய்ச்சல் இருக்காம்மா..?" என்று விசாரித்தாள்...

'விட்டா... அத்தை என்னை நோயாளியாவே ஆக்கிடுவாங்க... ஏற்கனெவே இவன் என்னைத் திரும்பிப் பார்க்காம இருக்க.. எதுடா சாக்குன்னு அலையறான்.. இந்த லட்சணத்தில இவங்க பேசிவைச்சா... இவனுக்கு வேற சாக்கே வேணாம்...'

"அதெல்லாம் இல்லைத்தை..."

"அப்படியெல்லாம் அலட்சியமா சொல்லிவிட முடியாதும்மா... நீயே காய்ச்சல்காரப் புள்ள..."

மேகலாவின் கவலை தோய்ந்த வார்த்தைகளைக் கேட்ட ராதிகா...

'போதுமா..?' என்ற பாவனையில் கணவனை முறைத்தாள்...

அவன் லேசாக புருவங்களை உயர்த்தி மிதப்பான பார்வையொன்றை பார்த்து வைத்தான்...

"வெறும் தலைவலிதான் அத்தை.. டேப்லெட் போட்டுக்கிட்டு ரெஸ்ட் எடுத்தாச் சரியாகிடும்..."

"ம்ஹீம்.. உன் சிநேகிதியின் கல்யாணத்துக்கு போகனுமுன்னு ஆசை ஆசையாய் இருந்த.. உன் புருசனும் கிளம்ப ரெடியாத்தான் இருந்தான்.. ஊட.. இந்தத் தலைவலி வந்து சோறனுமா..?"

இதற்காகத்தானே தலைவலியே வந்தது என்ற எண்ணத்துடன் பாலமுரளியை பார்த்தாள் ராதிகா.. அவன் அலட்டிக் கொள்ளாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்...

அவனது பட்டுக் கொள்ளாத தன்மையில் அவளுக்குள் எரிச்சல் மூண்டது...

"வேணும்ன்னா டேப்லெட் போட்டுக்கிட்டு போய்ட்டு வரட்டுமா...?"

கணவனைப் பார்த்தபடி.. வேண்டுமென்றே மேகலாவிடம் கேட்டு வைத்தாள் ராதிகா.. அவள்.. எதிர்பார்த்ததைப் போல அவனின் பார்வை உயர்ந்து அவளைச் சுட்டது...

"ஒய்வெடுக்கனும்னு சொன்னியேம்மா..."

"காரின் பின்சீட்டில தலையணையைப் போட்டு படுத்துத் தூங்கினா போச்சு..."

ராதிகா அதற்கும் வழிசொல்லி.. பாலமுரளிக்கு கடுப்பேற்றிவிட்டாள்... அவன் அசைவேனா என்பதைப் போன்ற பார்வைக்கணையை அவளை நோக்கி வீசிவிட்டு..

"இவ சொல்றதும் சரிதான்ம்மா..." என்றான் தாயிடம்..

'என்னடா இது...! இவனா இப்படிச் சொல்கிறான்..'

ராதிகாவிற்கு அவள் காதுகளையே நம்ப முடியவில்லை...

"அப்படியா சொல்ற முரளி.. அப்போக் கிளம்பறிங்களா..?" மேகலா கேட்டாள்...

"ம்ம்ம்.. வீணா எதுக்குப் பயப்படனும்..? இவ காய்ச்சலுக்கு வைத்தியம் பார்க்க தென்காசியில மட்டும் தான் டாக்டர் இருக்கிறாங்களா..? சென்னையில் இல்லையா..? அதான்.. எங்க போனாலும் இவ காய்ச்சலை இழுத்து விட்டுக்கிறாளே... போன தடவை சென்னைக்கு போனப்ப இவ காய்ச்சலில் விழுந்து வைச்சா.. அதுக்கு ட்ரீட்மென்ட் கொடுத்த டாக்டர்கிட்டயே இப்பவும் கூப்பிட்டுக்கிட்டுப் போயிட்டா போகுது.. காய்ச்சலில் படுத்தா தூங்கிக்க பண்ணைவீடு இருக்கு.. சமைச்சுப் போட்டு ஒத்தாசை பண்ண வள்ளியம்மா இருக்கா.. நீங்க ஏன் கவலைப்படறிங்க.. எதுக்கும்.. சதிஷ்கிட்டச் சொல்லி வைச்சுட்டுப் போறேன்..."

மேகலாவின் மனதில் பீதியைக் கரைத்து ஊற்றியபடி சாவாதானமாக பாலமுரளி பேசப்பேச.. ராதிகாவின் உதடுகளில் இளநகை அரும்பியது...

'அதானே பார்த்தேன்.. இவனாவது.. என்னை ஹேமாவின் கல்யாணத்துக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போறதாவது...'

"என்னத்தைடா சொல்லி வைக்கப் போற..?" மேகலா பயந்து போனாள்...

"போனதடவை இவ காய்ச்சலில் விழுந்தப்பவே.. தேறி எழுந்திருக்க.. ரெண்டு வாரமானது... இப்ப ஒரு மாசமாகுமோ.. இல்ல.. ரெண்டு மாசமாகுமோ.. உங்களைக் கவனிச்சுக்க வேணாமா..? எதுக்கும் நிங்களும் எங்ககூட வந்துடறீங்களா..?"

பாலமுரளி.. கேட்ட விதத்தில் மேகலாவுக்கு கோபம் வந்துவிட்டது...

"ஆமடா.. இங்கே பொழைப்பே இல்லைபாரு.. நாமே மூணுபேரும் வீட்டைக் காலி பண்ணிட்டு சென்னைக்கு போயிடலாம்... இங்கே இருக்கிற தொழிலை யாரோ பார்த்துக்கட்டும்.. எப்படிடா இப்படிப் பேசற..? உன் அப்பா ஒருநாள் ஒரு பொழுது கூட இப்படிச் சொன்னதில்லடா.."

"அவருக்கு காய்ச்சலில் விழுகற பெண்டாட்டி இல்லையே.. இப்ப என்ன சொல்றிங்க..? நாங்க சென்னைக்கு கிளம்பட்டுமா...?"

"வேண்டாம்டா ராசா... உனக்குப் புண்ணியமாப் போகும்.. தலைவலியோட இருக்கிறவளுக்கு அலுப்புக் காய்ச்சலை வர வச்சிராதே..."

"அப்ப.. இவ சிநேகிதியோட கல்யாணத்துக்கு யார் போறது..?"

"இப்ப அதான் முக்கியமா..? யார் போனாலும்.. போகாட்டியும்.. அவளுக்குக் கல்யாணம் நடக்கிறது.. நடக்கத்தான் போகுது... நாம.. நம்ம பொழைப்பைப் பார்ப்போம்..."

"அப்போச் சரி..."

அர்த்த புஷ்டியுடன் மனைவியைப் பார்த்தான் பாலமுரளி...

'எப்புடி..?' என்று அவன் விழிகள் கேட்க.. உதட்டைக் கழித்து அழகு காட்டினாள் ராதிகா...

"உன்கிட்ட ஒன்னு கேட்கனும்னு நினைக்கேண்டா முரளி..."

கைகழுவப் போனவன்.. தேங்கி நின்றான்...

"என்னம்மா...?"

மேகலா உடனே எதையும் சொல்லாமல் கற்றுமுற்றும் பார்த்துக் கொண்டாள்.. மெல்லக் குரலைத் தழைத்தவள்..

"ராதிகாவை என்னடா சொன்ன..?" என்று கேட்டாள்...

"இதென்னம்மா கேள்வி..?" அவன் கோபமானான்...

"கம்மா நிறுத்துடா.. நீ படுத்தின பாட்டிலதான் அவளுக்கு தலைவலி வந்திருக்கு.. ஏண்டா இப்படியிருக்க..? வெளியில இருக்கிற கோபதாபத்தை பொண்டாட்டிகிட்டத் தான் வந்து காட்டனுமா..? நல்லவேளையா அவ தலைவலியோட தப்பிச்சா... அப்படியில்லாம காய்ச்சல் வந்து தொலைச்சிருந்தா.. அந்த டாக்டரம்மாவுக்கு யாருடா பதில் சொல்றது..?"

பாலமுரளி நொந்தே போய்விட்டான்.. ராதிகாவுக்கு சிரிப்பு வந்துவிட.. அவள் அதை அடக்க முயற்சித்தபடி முகம் திருப்பிக் கொண்டாள் அவளை ஒரு மார்க்கமாக பார்த்தபடி அவன் போய் விட்டான்...

ராதிகா போகாமலே.. ஹேமாவின் திருமணம் நடந்து முடிந்து விட்டது...

பாலமுரளியால் ஷோபாவின் திருமணத்தையும்.. ஹேமாவின் திருமணத்தையும் தான் தவிர்க்க முடிந்தது...

எவனைத் தன் வாழ்நாள் முழுமைக்குமான எதிரியென்று நினைத்தானோ.... அந்த சங்கரின் திருமணத்தை தவிர்க்க முடியாமல் போய் விட்டது...

"உங்க அப்பாவை நினைச்சப்பாருடா...." என்று சொல்லி விட்டாள் மேகலா...

"கோமதி நாயகம் அண்ணன் செய்தது தப்புத்தான்.. அவரை உனக்குப் பிடிக்காதுதான்... அதுக்காக... அவர் மக கல்யாணத்தை தள்ளி வைக்க நினைக்காதேடா முரளி.. ஆயிரம்தான் இருந்தாலும்.. அவரோட பெண்டாட்டி.. உன் அப்பாவுக்கு ஒன்று விட்ட தங்கச்சிங்கிறதை மறந்துராதேடா மகனே.."

என்னவோ.. கோமதிநாயகத்தின் மீதான வெறுப்பில் தான் பாலமுரளி அவர் மகளின் திருமணத்தை புறக்கணிக்கிறான் என்ற நினைவில் மகனுக்கு கிதோபதேசம் செய்து கொண்டிருந்தாள் மேகலா...

அவளுக்கு என்ன தெரியும்..? சங்கருக்கு பெண் கொடுக்க முனைந்ததால்தான் கோமதிநாயகமே பாலமுரளியின் வெறுப்பிற்கு ஆளானார் என்பது...

சங்கரைப் பற்றி மேகலா நினைத்துக் கூடப் பார்க்கவில்லை... சென்னையில் வாசம் செய்த சங்கருக்கும்... தேனூத்தில் பிறந்து வளர்ந்த பாலமுரளிக்கும்... ஏதேனும் ஒருவகையில் சம்பந்தம் இருக்கக்கூடும் என்ற எண்ணமே அவளுக்கு வரவில்லை..

மேகலாவைப் பொறுத்த வரையில் சங்கர் யாரோ.. எவரோ... பாலமுரளியைப் பொறுத்தவரையில் சங்கர்

பாலமுரளியின் ஜென்மஎதிரி என்பது அவளுக்குத் தெரியாது...

"சரிம்மா... அப்பாவுக்காக நான் வர்றேன்.. ஆனா.. ராதிகா இந்தக்கல்யாணத்துக்கு வரவேணாம்..."

இப்படிச் சொன்னவனை விசித்திரமாகப் பார்த்தாள் மேகலா...

"அறிவோடதான் பேசறயா முரளி..."

"ஏம்மா...?"

"நீ எதுக்காக அவங்க வீட்டுக் கல்யாணத்தில கலந்துக்கப் போற..?"

"இந்தக் கேள்வியத்தானே நானும் கேக்கறேன்.. நீங்கதான் எதையெதையோ சொல்லி.. என் வாயை அடைச்சுட்டிங்களே..."

"ஏண்டா நீ வேற.. உங்க அப்பாவோட சார்பா.. தாய்மாமன் சீரைச் செய்யப்போற.. இதைக்கூட நான்தான் நினைவு படுத்தனுமா..?"

"அதுக்கென்ன...?"

"என்னவா..? தாய்மாமன் சீரைச் செய்யப் போறவன்.. கட்டின பெண்டாட்டி.. பக்கத்தில இல்லாம சீர் செய்யப் போகலாமா..?"

'இது வேறயா...?'

பாலமுரளியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

எவனின் பார்வை.. ராதிகாவின் மேல் படக்கூடாது என்று அவன் நினைக்கிறானோ.. அந்த சங்கரின்

திருமணத்துக்கு... பாலமுரளியே ராதிகாவை அழைத்துச் செல்வதா..?

அவனுக்கு வேறு வழியிருக்கவில்லை.. ராதிகாவை அழைத்துக் கொண்டுதான் அவன் போனான்.. மனைவியுடனும்.. தாயுடனும்.. திருமண மண்டபத்தில் அவன் போய் இறங்கியபோது...

"ஏன் மாப்பிள்ளை.. நீங்கதான் என் பெண்ணைக் கட்டிக்க மாட்டேன்னு சொல்லிட்டிங்க... வேற இடத்தில கட்டிக் கொடுக்கிறதுக்காவது காலாகாலத்தில் கிளம்பி வர வேணாமா..?" என்று பஞ்சாயத்து வைத்தார் கோமதி நாயகம்...

"அதான் வந்துட்டேனில்ல..? அப்புறமும் எதுக்காக குறைசொல்றிங்க..." பாலமுரளி சிலிர்த்துக் கொண்டபோது.. கோமதி நாயகம் விழித்துக் கொண்டார்..

'ஆஹா.. மாப்பிள்ளையே கோபத்தில இருக்காரு.. இதில நாம ஏதாவது சொல்லப்போக... அவர் இதுதாண்டா சாக்குன்னு கல்யாணவீட்டில கை நனைக்காம ஓடிப் போனா.. என் கதி என்னத்துக்கு ஆகிறது..?'

கோமதிநாயகத்தின் வாய் தானாக மூடிக் கொண்டது...

136

சில்லென்ற மழைக்காற்றில்...
என்தேகமெல்லாம் உனைத்தேடுதடி..

பாலமுரளியும் என்னென்னவோ செய்து பார்த்தான்.. எரிந்து விழுந்து பார்த்தான்... முறைத்துப் பார்த்தான்... போதிமரத்தடி புத்தரைப் போல... புன்னகை மன்னனாக நின்ற கோமதிநாயகம் அசைந்து கொடுக்க வில்லையே...

ஏதேனும் ஒரு வகையில் அவரை வம்புக்கு இழுத்து.. அதுதான் சாக்கென்று.. அந்தத் திருமணத்திலிருந்து வெளிநடப்பு செய்துவிட உத்தேசித்திருந்த பாலமுரளியின் உத்தேசம் எதுவும் எடுபடவில்லை...

கோமதிநாயகம் கூப்பிய கரத்தை இறக்கவேயில்லை...

"பாருடா இந்த அண்ணனை... இவரைப் போய் நீ கோவிச்சுக்கிட்டியே... பெண்ணைக் பெற்றுவிட்டா.. எப்பேற்பட்ட பணக்காரரா இருந்தாலும்.. தழைஞ்சுதான் போகனும்கிறதுக்கு இவருதான் சாட்சி..."

மேகலாவே பரிதாபப் பட்டுவிட்டாள்... அதற்கு மேலும் பாலமுரளியால் அவரிடம் வம்பு வளர்க்க முடியவில்லை... கடனே என்று... செய்ய வேண்டிய முறைகளை செய்து வைத்தான்...

திருமண மேடையில் இருபக்கத்து தாய்மாமன் மாரும்.. எதிரெதிரே அமர்ந்து சம்பந்தம் பேச வேண்டிய சம்பிரதாயத்தின் பொருட்டு.. அவனும்... ராதிகாவும் மணமேடைக்குச் செல்ல நேர்ந்தது...

அப்போதுதான் பாலமுரளி அதைக் கவனித்தான்...

திருமண மாப்பிள்ளையாக அமர்ந்திருந்த சங்கரின் பார்வை முழுதும்.. ராதிகாவின் மீதே படிந்திருந்தது... லேசு பாசாகக் கூட தன் அருகில் மணமகளாக அமர்ந்திருந்த நித்யாவை அவன் திரும்பிப் பார்க்கவில்லை...

பாலமுரளியின் ரத்தம் கொதிக்க ஆரம்பித்தது... என்னதான் ராதிகா குனிந்த தலையை நிமிராமல் அவன்கூடவே இருந்தாலும்... அவளைத் தேடியலையும் சங்கரின் பார்வையில் கொலைவெறிக்கு ஆளானான் பாலமுரளி...

'இவனை வெட்டிப் போடனும்...'

அதற்குள் சம்பிரதாயம் முடிந்துவிட.. மனைவியுடன்.. மணமேடையை விட்டு இறங்கினான் பாலமுரளி...

'இந்த இடத்தைவிட்டு எவ்வளவு சீக்கிரத்தில் கிளம்ப முடியுமோ.. அவ்வளவு சீக்கிரத்தில் கிளம்பிரனும்..'

அவனது கொதிநிலையை அறியாதவளாக மேகலா.. அங்கிருந்த உறவினர் கூட்டத்தோடு கலந்துரையாடிக் கொண்டிருந்தாள்...

"ஆமாக்கா.. நான்கூட நினைச்சேன்.. நம்ம தாமரை இப்படிச் செய்ய மாட்டாளேன்னு.. இதான் விசயமா..?"

மேகலா சுவராஸ்யமாக கதை பேசிக் கொண்டிருக்க..

'இப்ப இதான் ரொம்ப முக்கியம்...' என்று எரிச்சலடைந்தான் பாலமுரளி...

எந்தத் தாமரை எப்படிப் போனால் மேகலாவுக்கென்ன வந்தது.. கொஞ்சமாவது பாலமுரளியின் மனநிலையை உணர்ந்து அந்த இடத்தை விட்டுக் கிளம்ப முனைகிறாளா..?

"நீ சொல்லவே இல்லியே செல்வி..."

அதற்குள் மேகலா... அடுத்த பெண்ணிடம் கதை கேட்க ஆரம்பித்து விட்டாள்...

பாலமுரளிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை... மேகலாவைச் சொல்லியும் குற்றமில்லை... மாணிக்க வாசகத்தின் மனைவியும்.. பாலமுரளியின் அன்னையுமான அவளிடம் பேச... உறவினர் கூட்டம் நீ முந்தி.. நான் முந்தி... என்று அலைமோதியது... அவளும் அவர்களின் மனம் கோணாமல் சில வார்த்தைகளைப் பேச வேண்டிய கடமைக்கு ஆளாகியிருந்தாள்...

தீவிரமான மன உளைச்சலுக்கு ஆளான பாலமுரளி.. முள்ளின் மேல் அமர்ந்திருப்பதைப் போல உணர்ந்தான்...

கெட்டி மேளத்துடன் நாதஸ்வரம் ஒலிக்க ஆரம்பித்தது... ராதிகாவைப் பார்த்தபடியே... நித்யாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான் சங்கர்... அதற்கு மேலேயும் அந்தக் கொடுமையை வேடிக்கை பார்க்க முடியாமல் பாலமுரளி எழுந்து விட்டான்...

"என்னடா..." மேகலா ஆட்சேபித்தாள்...

"மில்லில ஏதோ பிரச்னையாம்மா... நான் உடனே போயாகனும்..."

"அதுக்காக... கல்யாணம் முடிஞ்சதும் கை நனைக்காம ஒடுறதா..? நம்ம உறவுஜனம் பார்த்தா என்ன சொல்லும்..?"

"எதையோ சொல்லிட்டுப் போகட்டும்... அதைப்பத்தி எனக்கு கவலையில்லை... ஏய்ய்.. வாடி..."

"இப்ப எதுக்காக ராதிகாவையும் உன்கூடக் கூப்பிடற...?"

"அவ என் பெண்டாட்டி... அதனால கூப்பிடறேன்.."

"உனக்கு வேலையிருந்தா நீபோ... நானும் என் மருமகளும் சாப்பிட்ட பின்னாலே வர்றோம்..."

"நீங்க இருங்க... நான் தடுக்கலை... ஆனா இவ என்கூட வந்தாகனும்..."

"எதுக்குடா பிடிவாதம் பிடிக்கிற...?"

"கடுப்பைக் கிளப்பாதீங்கம்மா... ஏய்ய்... உனக்கு வேற தனியாச் சொல்லனுமா..? போய் காரில் ஏறு..."

பாலமுரளியின் அதட்டலில் ராதிகா அங்கிருந்து விரைவாக அகன்று விட்டாள்... பாலமுரளி தாயை முறைத்தபடி.. அவள் பின்னால் போய் காரில் ஏறிப் பறந்து விட்டான்... கோமதிநாயகம் கூப்பிட வருவதற்குள் கார் பறந்துவிட... அவர் மேகலாவிடம் முறையிட்டார்...

"நீ என் மகளை உன் மகனுக்கு கட்டி வைக்கலை.. சரி... நம்ம சொந்த பந்தத்திலயாவது ஒரு பொண்ணைப் பார்த்து கட்டி வைச்சிருக்கலாமில்ல...?"

"ஏன்னே... என் மருமகளுக்கென்ன...?"

"இது நியாயமா தங்கச்சி... தாய்மாமன் சீரு செஞ்சா போதுமா... கல்யாண வீட்டுக்கு வந்திட்டு கை நனைக்காம போகலாமா...?"

"இதுக்கு என் மருமகளை எதுக்காக குத்தம் சொல்றிங்கண்ணே..?"

"பார்த்தியில்ல... உன் மகனுக்கு முன்னாலே உன் மருமகதான் வெளியேறுச்சு... அதுக்கு என்னத்துக்காக என்மக மேல இம்புட்டு வெறுப்பு...? பெண்டாட்டி போனதால... புருசனும் பின்னாலேயே போயிட்டார்... உன் மருமகளைச் சொல்லிக் குத்தமில்ல தங்கச்சி... எல்லாம் எங்க நேரம்..."

கோமதிநாயகம் ராதிகாவின் மீது பழிபோட...

"உன்னாலதான் எல்லாம் வந்தது..." என்று வீட்டுக்கு வந்த பின்னால் மகனிடம் சண்டைக்குப் போனாள் மேகலா...

அவனே உன்மத்தம் பிடித்தவனைப் போல இருந்தான்... காரை விரட்டு... விரட்டென்று விரட்டியவன்.. வீடுவந்து சேர்ந்ததும்.. ராதிகாவை மட்டும் இறக்கி விட்டுவிட்டு... அவளிடம் ஒருவார்த்தை கூடச் சொல்லாமல் பறந்து விட்டான்...

'சாப்பிடாமப் போறானே...'

அலறும் சாப்பிடாமல் படுத்து விட்டாள்... மாலையில் வீடு திரும்பிய மேகலாவும் உடல் அயர்வினால் படுத்து உறங்கி விட்டாள் இரவு உணவுக்கு வெகு நேரம் கழித்து வீடு திரும்பிய பாலமுரளியை ஒரு பிடி பிடித்தாள்...

"இது ஆம்பளைகளுக்கான உலகம் முரளி... அவங்க செய்ற அத்தனையும் பொம்பளை தலையிலதான் வந்து விடியும்... நீ பாட்டுக்கு ஓடிட்ட... உன்னை அங்கே இருக்க விடாம ராதிகாதான் இழுத்து வந்துட்டான்னு இப்ப பேச்சு வந்திருச்சு... இதுக்கு என்ன சொல்லப் போற...?"

"எதுவும் சொல்லப் போறதில்ல... ஏய்ய்... தட்டைப் போடுடி..."

"அவளை எதுக்குடா அரட்டறே... இப்பத்தான் கொஞ்ச நாளா காய்ச்சலில் விழுகாம இருக்கா.. உனக்கு அது பொறுக்கலையா..?"

"அரட்டறது நீங்களா.. இல்லை... நானா..? அவ யாரும்மா...?"

"உன் பொண்டாட்டி..."

"தெரியுதில்ல... அவளை என்ன சொன்னேன்.. தட்டை எடுத்துச் சாப்பாட்டைப் போடச் சொன்னேன்.. அதையும் சொல்லக் கூடாதுன்னா இனி நான் சொல்லலை.. மீனாட்சி.. நீ தட்டைப் போடும்மா..."

'இருந்திருந்து இந்த ஒரு உரிமையைத்தான் உருப்படியா இவன் எனக்குக் கொடுத்திருக்கான்... அதை அதுக்கும் வேட்டு வைக்கப் பார்க்கிறாங்களே...'

மீனாட்சியை கண்களால் அதட்டிய ராதிகா... வெற்றிகரமாக தட்டைக் கையிலெடுத்தாள்... அவன் முன்னால் தட்டை வைத்து பரிமாற ஆரம்பித்தாள்...

"ம்ஹூம்... புருசனுக்கேத்த பொண்டாட்டி..."

தலையில் அடித்துக் கொண்ட மேகலா... அங்கு போய் விட்டாள்...

"தண்ணியைக் குடுடி..."

"கட்டினியை யார் வேணாதுறது...? கவனமெல்லாம் எங்க இருக்கு...?"

"ஏய்ய்... தட்டைப் பார்த்தும் போடுடி..."

"சாம்பாரை தட்டில் ஊத்தச் சொன்னா... தரையில் ஊத்தி வைக்கிற... புத்தி புல் மேய்ய போயிருக்கா...?"

சங்கரின் மேல் கனன்று எழுந்த கோபத்தை யெல்லாம் ராதிகாவிடம் காட்டிக் கொண்டிருந்தான் பாலமுரளி... சாட்டையடிகளைப் போன்ற அவனது வார்த்தைகளில் பம்பரமாய் சுழன்று கொண்டிருந்தாள் ராதிகா...

காவேரிக்கே பொறுக்கவில்லை...

"ம்ஹூம்... என்னா பொண்ணோன்னப்படி நப்ப னென்ன்ன்...? யாரு மேலயோ இருக்கற காட்டத்தை இந்தப்பா மேல ஏபா கொட்டிக்கிட்டு இருக்காரே... இந்தப்பாவே பாவம் பச்சை மண்ணு... இவரோட கோபத்தையும்... வேகத்தையும் இவங்க தாங்குவாங்களா...?"

"இதைத்தானேடி இப்புட்டு நேரமா... பெரியம்மாவும் சொன்னாங்க... நானும் சொன்னேன்... அப்பல்லாம்

காதில பஞ்சை அடைச்சதைப் போல பேசாம இருந்துட்டு.. இப்ப வந்து உன் கரிசனத்தைக் காட்டறயாக்கும்...", என்றாள் மீனாட்சி...

"என்னமோ... போ மீனாட்சி... பொழைப்பைப் பார்க்க வந்திருக்கோம்.. மத்தவங்க பேச்சு நமக்கெதுக்குன்னு நினைச்சேன்...?"

"இப்ப அந்த நினைப்பு எங்கே போயிருச்சு..? ஐயா சொன்னாதைப் போல... புல் மேயப் போயிருச்சா...?"

"போ மீனாட்சி..."

"எங்கேடி போகச்சொல்ற...? நீ மட்டும் பெரிய வீட்டில இருந்து வேலை பார்க்கனும்.. நான் ஒடிப் போகனுமா..? என்னமா திட்டம் போட்டு ஆளைக் கவுக்கிறடி நீ..."

"யாருடி இவ... அந்தம்மாவே பாவம் அல்லாடுது... அந்தக் கொடுமையைப் பார்த்தா மனசுக்கு தாங்கலை... அந்த வேதனையில ஒரு பேச்சை விட்டா.. நீ அதுதான் சாக்குன்னு ஆடிப் பார்க்கிற..? அடங்குடி..."

"ஆகமொத்தம்... இந்த தென்காசிப் பட்டினத்துக்கே இந்த மீனாட்சியை அடக்கிப் பார்க்கிறது மட்டும் தான் குறிக்கோளாய் இருக்கும் போல இருக்கு.. அதென்னடி.. யாரு வாயைத் திறந்தாலும்... இந்த ஒத்த வார்த்தைய மட்டும் மறக்காம சொல்லிடறிங்க...?"

"பேசாம போவியா..."

"இந்தா பாரு காவேரி... உனக்கு கோவம் வந்தா நாலு அடி வேண்டும்னாலும் அடிச்சுரு... ஆனா வாய்

பேசாம மட்டும் இருக்கச் சொல்லாதே... என்னால அது முடியுமாடி..?"

"அதைச் சொல்லு..."

"ஆனா ஒன்னு காவேரி... இந்தம்மாவைப் போல குணசாலியை உலகம் பூரா தேடினாலும் கிடைக்க மாட்டாங்க... அது இந்த ஐயாவுக்கு புரிய மாட்டேங்குதே.."

"அதைச் சொல்லு..."

"அழகு ரதியைப் போல பொண்டாட்டி.. தேனூத்தைப் போல ஊரு... திரும்பின பக்கமெல்லாம் அருவி... இத்தனையையும் வைச்சுக்கிட்டு ஆண்டு அனுபவிக்காம.. மத்தவங்களை விரட்டறதைப் போல இந்தம்மாவையும் விரட்டிக்கிட்டு இருக்காரே நம்ப ஐயா..?"

"அதைச் சொல்லு.."

"கட்டிக்கிட்டு வந்து ஆறு மாசமாகப் போகுது... இந்நேரத்துக்கு இந்தம்மா.. வாந்தியெடுத்திருக்க வேணாமா...?"

"அதைச் சொல்லு..."

"எங்கே..? இப்படி எண்ணைச் சட்டியில போட்டு வறுத்தெடுக்கிறதே குறிக்கோளாய் ஒரு மனுசர் இருந்தா.. வாந்தி எங்கேயிருந்து வரும்...?"

"அதைச் சொல்லு..."

"ஆமாண்டி... சொல்லுறதையெல்லாம் கேணச்சியைப் போல நான் சொல்லி மாட்டிக்குவேன்.. நீ அதைச்சொல்லு... அதைச் சொல்லுன்னு உனக்கையாய் காதைத் தீட்டி நொட்டை விட்டுக்கிட்டு அத்தனையையும் கேட்டுட்டு..

ஒன்னும் தெரியாததைப் போல அடுப்பாங்கரைக்குள்ள போயி ஒண்டிக்குவே.. கெட்டிக்காரிடி நீ...."

"அடேங்கப்பா... நான் கெட்டிக்காரின்னா.. நீ யாரு..?"

வழக்கடித்துக் கொண்டிருந்த காவேரியும்... மீனாட்சியும் ராதிகாவைக் கண்டதும் பேச்சை நிறுத்திக் கொண்டார்கள்.. ராதிகாவைப் பார்த்த அவர்கள் பார்வையில் பரிதாபம் இருந்தது... அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

அவருக்குத் தெரியும்... அவர்கள் அவளுடைய அபிமானிகள் என்பது... சிரித்த முகத்துடன்... வேலையாள்களையும்... சக மனிதர்களாக பாவித்து தோழமையுடன் பழகும் ராதிகாவின் மீது அந்த வீட்டிலும்... தோப்பிலும்... வயலிலும் வேலை செய்த வேலையாள்களுக்கு எல்லையற்ற வாஞ்சை இருந்தது... ஆனால்.. அவள் அந்த வீட்டின் எஜமானி அல்லவா..?

ஒரு வீட்டின் எஜமானி... அந்த வீட்டின் வேலையாள்களின் அன்புக்கு பாத்திரமாகலாம்... பரிதாபத்திற்கு ஆளாகலாமா..?

ராதிகாவின் கண்களில் நீர் முட்டியது...

பாலமுரளி அவளை காய்ச்சு காய்ச்சென்று காய்ச்சிக் கொண்டே இருந்தான்... அதைக் கவனித்துக் கொண்டிருந்த மீனாட்சி அன்றிரவில் கட்டாயம் ராதிகாவுக்கு காய்ச்சல் வந்து விடுமென்று காவேரியிடம் ஆருடம் சொன்னாள்... வேலையைக் காப்பாற்றிக்

கொள்ள வேண்டிய கட்டாயத்திலிருந்ததால்... காவேரி அதற்குப் பதில் சொல்லவில்லை... ராதிகா பதில் பேசாமல் வேலையைக் கவனித்தபடி இருந்தாள்...

இரவு முழுவதும் தூங்காமல் பாலமுரளி திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தான்...

"அவன் யாரைக் கட்டிக்க மேடையில உட்கார்ந்-திருந்தாண்டி..?"

'இதையேன் என்னிடம் கேட்கறிங்க... இது ஊருக்கே தெரியுமே...'

"கட்டிக்கப் போறவளை விட்டுட்டு உன்னையே ஏண்டி அவன் பார்க்கனும்...?"

'என் தலைவிதி...! வேறென்னத்தைச் சொல்ல...?'

"கெட்டிமேளம் கொட்டுது... உன்னைப் பார்த்துக்-கிட்டே... கல்யாணப் பொண்ணோட கழுத்தில தாலியைக் கட்டாம காதில கட்டி வைச்சானே.. அவனை என்ன செய்தால் தகும்..?"

'எதுவும் செய்யலாம்தான்...'

"யாருடி அவன்..?"

'உனக்குத் தெரியாதா..?'

"அவனுக்கும்... எனக்கும் என்ன சம்பந்தம்..?"

'ஒரு மண்ணுமில்லை...'

"அப்புறமும் எதுக்குடி என் முன்னாலே வந்து வந்து நிற்கிறான்..?"

ராதிகா மனதிற்குள்.. பதில் சொல்லிச் சொல்லி சோர்ந்து விட்டாள் ஒரு கட்டத்திற்கு மேல் முடியாதவளாய் பாலமுரளியை எதிர்த்து விட்டாள்...

அதுதான் அவள் வாழ்க்கையில் அடுத்துச் செய்த தவறு...

பாலமுரளியின் மேல் காதல் கொண்டவளால் அவனைக் கண்டு பிடித்துக் காதல் சொல்ல முடியவில்லை தான்.. ஆனால் அவன் நேரில் வந்து பூங்காவில் முதன்முதலாக... அவள் முன் சுட்டு விரலை நீட்டி சங்கரை அவள் காதலிப்பதாக குற்றம் சாட்டினானே.. அப்போதே அதைச் சொல்லியிருக்க வேண்டும்...

'அடேய் மாக்கா..! நான் அவனைக் காதலிக்கலைடா... உன்னைத் தாண்டா காதலிக்கிறேன்..' என்ற வார்த்தைகள் அவள் மனதில் ஓடி என்ன பயன்..? அவனிடம் அதைக் கொட்ட வேண்டாமா..? அதற்குள் தான் அவன் தந்த முதல் முத்தத்தில் அவள் பிரமை பிடித்தவளாக நின்றுவிட்டாளே...

அதற்கு பின்பாவது... அவன் இருப்பிடத்தைக் கண்டறியும் முயற்சியில் இறங்கியிருக்கலாம்தான்... அவன்தான் மேகலாவின் இதயநோயில் அவளருகேயே இருக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி விட்டானே...

முதல் கோணல்... முற்றிலும் கோணல் என்பார்கள்.. ராதிகாவின் வாழ்வில் அது உண்மையாகி விட்டது... பாலமுரளியின் முத்தத்தில் நடுங்கிப் போனவளாக...

கண்ணுக்கு முன்னால் வந்து நின்றவனிடம் காதல் சொல்லாமல் அவள் ஓடிய தவறினால் அடுத்தடுத்த இன்னல்களுக்கு அவள் ஆளானாள்...

முகமறிந்தும்... முகவரி அறியாத ஒருவனின் முகவடிவை இதயத்தில் பதித்துக் கொண்டதற்காக... சங்கருடனான திருமணத்தை நிறுத்த... பொய்யாய் சில வார்த்தைகளை ஷோபாவின் முன்னால் பேசினாள்.. அது அவள் செய்த இரண்டாவது தவறு...

அதனால் அவளது வாழ்வு சின்னாபின்னமாக... இருந்து மயிரிழையில் தப்பியது... அப்படித் தனது வாழ்வு சின்னா பின்னமாகமல் இருக்க மீண்டும் ஒரு பொய்யை அதே ஷோபாவின் முன்னால் அவள் உதிர்த்தாளே... அது மூன்றாவதாக அவள் செய்த தவறு...

இப்படித் தவறுகளால் அவளைச் சுற்றி ஓர் அகழியை அவளாகவே எழுப்பிவிட்டு அதைக் தாண்டவில்லை என்று பாலமுரளியிடம் கோபப்பட ஏதேனும் நியாயம் இருக்கிறதா:.?

அதைச் சிந்தித்துப் பார்க்காமல் வாய்விட்டு.. நான்காவது தவறையும் செய்து வைத்தாள் ராதிகா...

"மோதுறதா இருந்தா அவனிடம் மோதுங்க... அதைவிட்டுவிட்டு என்னிடம் மோதாதீங்க..."

அவனிடம் கேட்க வேண்டிய கேள்வியை என்னிடம் ஏன் கேட்கிறாய் என்ற அர்த்தத்தில்தான் ராதிகா இதைச் சொன்னாள்... ஆனால்... பாலமுரளியின் முகம் பயங்கரமாக மாறிவிட்டது...

"ஒ... அப்படியா... அவன் பெரிய இவன்.. அவனிடம் மோத என்னால முடியாதா..? இவ்வளவு தூரத்துக்கு நீ பேசின பின்னாலே.. உனக்கும்... எனக்குமிடையே இனி ஒன்னுமேயில்லைடி..."

அவன் விலகிப் படுத்துவிட... ராதிகா விக்கித்துப் போய் அமர்ந்துவிட்டாள்...

அன்றொரு நாளின்.. அந்திமழைப்பொழுதை..
அன்பே.. நீ மறந்தாயோ...?

மழைக்காற்று உடல் துளைத்தது... ராதிகா சேலையின் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.. சென்னையைப் போல தேனூத்தில் அவளால் சுடிதாரைப் போன்ற உடைகளை அணிய முடிவதில்லை... நைட்டியைக் கூட.. இரவு நேரங்களில் தூங்கும் வேளையில் மட்டுமே அணிகிறாள்.. அவளுக்கும்.. பாலமுரளிக்குமான அறைக்குள் மட்டும்தான் அவள் அதையும் அணிய முடியும்...

"அம்மா... காய்ஞ்ச துணிகளை கொண்டாந்-திருக்கேன்..." மீனாட்சி குரல் கொடுத்தபடி அவற்றை மாடி ஹாலில் இருந்த சோபாவில் போட்டாள்...

"நான் பார்த்துக்கிறேன்.. நீ போ.." ராதிகா பால்கனியை விட்டு விலகி ஹாலுக்குள் வந்தாள்...

அன்னம் போன்ற நடையுடன் வந்தவளைப் பார்த்த மீனாட்சிக்கு 'ஐயோ... பாவம்...' என்றிருந்தது...

'ம்ஹீம்... இந்த வீட்டுக்கு மருமகளா வர்றப்போ இந்தம்மா புள்ளி மானைப் போல துள்ளிக் குதிச்சிக்கிட்டு இருந்தாங்க... இப்ப என்னடான்னா... அழுத்தி மிதிச்சா தரைக்கு வலிச்சுருமோன்னு... மெதுவா நடந்து வர்றாங்க.. பெரியவீட்டு மருமகளா ஆனா இப்படித்தான் ஆகனுமா.. நல்ல வேளைடா சாமி.. எனக்கு இந்த பொழைப்பு இல்லை..'

மீனாட்சி கீழே போய் விட்டாள்.. ராதிகா நிதானமாக அமர்ந்து துணிகளை மடிக்க ஆரம்பித்தாள்... கையில் துணியிருக்க... அவள் சிந்தனை எங்கேயோ இருந்தது...

மாடிப்படிகளில் அழுத்தமான காலடியோசை கேட்டது... அவள் மனம் படபடத்தது... எதிர்பார்ப்புடன் மாடிப் படிகளின் வளைவில் விழி பதித்தாள்... அவளது எதிர்பார்ப்பு வீனாகவில்லை... அங்கே பாலமுரளிதான் வந்து கொண்டிருந்தான்... அவனைக் கண்டதும் ஒளிர்ந்த அவள் கண்களைக் கண்டதும்... அவனது இமை துடித்தது.. பேசாமல் அறைக்குள் போய் விட்டான்...

'இந்த மௌன விரதம் எதற்காக..?' ராதிகாவின் கண்களில் அழுகை கொப்பளித்துக் கொண்டு வந்தது.. அடக்கிக் கொண்டாள்...

'எதிரிகூட இரக்கம் காட்டி விடுவாங்க... இவன் அதைவிட கொடுமையாய் என்னை நடத்துகிறானே...'

உதட்டைக் கடித்தபடி எழுந்தவள்... மடித்து வைக்கப்பட்ட உலர்ந்த துணிகளில் அவளுக்கும்..

பாலமுரளிக்குமானதை பிரித்து எடுத்து அங்கேயே வைத்துவிட்டு.. மேகலாவின் துணிகளை மட்டும் எடுத்துக் கொண்டு மாடிப்படிகளில் இறங்கினாள்...

இரவுச் சமையலுக்காக காவேரியிடம் உத்தரவிட்டுக் கொண்டிருந்த மேகலாவிடம் துணிகளைக் காட்டியவள்...

"உங்க ரூமில் வைத்து விடவாத்தை..?" என்று வினவினாள்...

"இருக்கட்டும்மா... இப்படிக்கொடு... நான் கொண்டு போய் வைச்சுக்கறேன்... முரளி வந்துட்டான்... நீ அவனைக் கவனி..."

"ஆகட்டும்..."

மேகலாவின் கையில் துணிகளைக் கொடுத்து விட்டு.. பதுமையைப் போல சமையலறைப் பக்கம் நகர்ந்த ராதிகாவின் மீது மேகலாவின் பார்வை படிந்தது...

"என்ன மேகலா.. உன் மகனுக்கு கல்யாணமாகி ரெண்டு வருசமாகப் போகுது... இன்னுமா உனக்கு பேரன்.. பேத்தி வேணும்னு தோணலை...?"

கோவிலுக்குப் போயிருந்தபோது... அங்கே பெருமாளை சேவிக்க வந்திருந்த பொன்னுமணி வேண்டுமென்றே கேட்டது அவள் நினைவுக்கு வந்தது...

இப்போதெல்லாம் இதுபோன்ற கேள்விகளை அவள் அடிக்கடி கேட்க நேரிடுகிறது... ஆரம்பத்தில் இந்தக் கேள்விகளை மேகலா அலட்சியம் செய்தாள்...

"அதுக்கென்ன அவசரம்..? மருமக சின்னப் பொண்ணு... படிச்சுக்கிட்டு இருக்கிறப்பவே என்மகன்

தாலியைக்கட்டி கூப்பிட்டுக்கிட்டு வந்துட்டான்... மெதுவாத்தான் பெத்துத் தரட்டுமே..." என்று சொன்னாள்...

மெல்ல... மெல்ல... கேள்விகளின் வீரியம் கூடி.. பதில்களின் அழுத்தம் தேய்மானமானது...

"அதுக என்ன விவரம் தெரியாததுகளா..? ஒரு வருசம் ஆறப்போட்டு புள்ளையைப் பெத்துத் தரலாமுன்னு இருப்பாக..." என்று சொல்ல ஆரம்பித்தவள்...

"நம்ம கையில என்ன இருக்கு..? எல்லாம் அந்த பெருமாளின் கையில தான இருக்கு..?" என்று பதில் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டாள்...

மறந்தும் கூட இவற்றைப் பற்றி அவள் மருமகளிடம் சொல்வதில்லை.. ஏனிப்படி என்று கேட்பதில்லை...

ஆனாலும்... மாமியாருக்கான அந்த இன்னல்களை ராதிகா மிக நன்றாகவே அறிவாள்...

மேகலாவின் கூடவே போகும் மீனாட்சிதான் உலகச் செய்திகளை ஒலிபரப்புவதில் கெட்டிக்காரி ஆயிற்றே.. மற்றவர்களை சமாளிக்க முடியாமல் மேகலா திணறுவதை ராதிகாவிடம் ஒப்பிக்கா விட்டால் அவளுக்கு தலை வெடித்து விடாதா..?

கூடவே... அவற்றைக் கேட்டாவது... அந்த வீட்டில் மழலைச் சத்தத்தை ராதிகா ஒலிக்கச் செய்து விடமாட்டாளா என்ற அவளின் அடிமனதின் ஆசையும் இருந்தது...

"கேட்டிங்களாம்மா சேதியை..." என்று ஆரம்பித்து அவள் செய்தியை ஒலிபரப்பி முடிக்கும் போது ராதிகாவின் முகம் வாடிவிடும்...

'ஏன் இந்தம்மா இப்படி விசனப்படுது..?' மீனாட்சிக்குப் புரியாது...

அது என்னவோ... எல்லா விவரங்களையும்... செய்திகளையும் அலசி ஆராய முனைபவள்... இதைப் பற்றி மட்டும் பேசவே மாட்டாள்... அதுதான்... ராதிகாவிற்கு அவள் கொடுத்து வந்த மரியாதைக்கு அடையாளமாக இருந்தது... மறந்தும் கூட மீனாட்சி.. ராதிகாவின் அந்தரங்கத்தை ஆராய முற்பட்டதில்லை...

சமையலறையிலிருந்து... சூடான வடைகளையும்.. காபித் தம்ளரையும் டிரேயில் ஏந்திக் கொண்டு வெளியே வந்த ராதிகாவின் பார்வை... மேகலாவின் பார்வையை சந்தித்தது...

அவர்கள் பேசிக் கொள்ளவில்லை... இருந்த போதிலும்.. மாமியாரின் மனதில் செல்லரித்துக் கொண்டிருக்கும் கவலையை ராதிகாவால் உணர முடிந்தது... அவள் பார்வையை தழைத்துக் கொண்டு மாடி யேறினாள்...

"சூடா.. வடையும்.. காபியும் கொண்டு வந்திருக்கேன்..."

ராதிகா அறையிலிருந்த டீப்பாயின் மீது டிரேயை வைத்தபோது அவன் எதுவும் சொல்லாமல்... பால்கனிக்கு எழுந்து சென்றான்...

'இவன் என்னை என்னன்னு நினைச்சிருக்கான்..?' ராதிகாவின் மனதில் கோபம் துளிர்த்தது...

அவள் கோபப்பட்டு என்ன ஆகப்போகிறது என்ற நினைவுடன் உதட்டைக் கடித்தபடி.. அவள் பால்கனிக்கு டிரேயைத் தூக்கிச் சென்று அங்கிருந்த ஸ்டூலில் அதை வைத்தாள்...

கைகளை மடித்து தலைக்கு அணைவாய் கொடுத்தபடி.. சாய்வான மூங்கில் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து.. கொட்டும் மழையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவன்.. காபியின் வாசனையை நுகர்ந்தவனாய் திரும்பிப் பார்த்தான்.. அவனது உதாசீனத்தில் மனம் புண்பட்டிருந்த ராதிகா அங்கிருந்து அகன்று விட்டாள்.. அவளில்லாத பால்கனியில் குழ்ந்திருந்த வெறுமை அவன் மனதிலும் நுழைய... வடையை எடுத்துக் கடிக்க ஆரம்பித்தான்...

மழை நேரம் என்பதால் இருள் குழ்ந்து விட்டிருந்தது.. எவ்வளவு நேரமாக சிந்தனையுடன் கொட்டும் மழை நீரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்... என்று அவனுக்கே தெரியவில்லை... ஏனென்று கேட்க யாருமில்லாத அநாதையைப் போல அவன் உணர்ந்தான்...

ராதிகா அவனிடம் அதிகம் பேசுவதில்லை... அவள் பேசும் ஒன்றிரண்டு வார்த்தைகளுக்கும் அவன் பதில் சொல்வதில்லை... சளசளவென்று பேசிக் கொண்டிருக்கும் மேகலாவோ... எப்போதும் ஏதேனும் ஓர் சிந்தனையுடன் மௌனமாக இருக்கிறாள்...

அந்த வீட்டில் ஓர்விதமான சோகமூட்டம் படிந்திருப்பதை அவனால் உணர முடிந்தது... அதை உடைக்க அவன் எந்தவொரு முயற்சியையும் செய்யவில்லை... முடிந்தவரை.. வீட்டுக்கு வராமல் தொழில்களிலேயே தன்னை அமிழ்த்திக் கொண்டிருந்தான்... அதையும் மீறி வீட்டுக்கு வரும் நேரங்களில்... தனிமையில் தன்னை புதைத்துக் கொண்டான்...

அவளைச் சுற்றி அவன் எழுப்பிவிட்ட அகழியைத் தாண்ட... அவன் தாயும் முயலவில்லை... ராதிகாவும்

முனையவில்லை... அவர்களும் தனித்தனித் தீவுகளாக அந்த வீட்டில் சிதறுண்டார்கள்...

வானம் கிடுகிடுத்தது... கரிய மேகத்துக்கிடையே.. நீண்ட வெளிச்சக்கோடு... வெள்ளியாய் மின்னி மறைய... அவன் அறைக்குள் போக எழுந்தான்... அறையில் ராதிகா இல்லை... அறையை விட்டு வெளியே வந்தான்... மாடி ஹாலின் முடிவிலிருந்த மற்றொரு பால்கனியில் ராதிகா அமர்ந்திருப்பது தெரிந்தது... பாலமுரளி மாடி ஹாலில் நின்று கொண்டிருப்பதை அறியாதவளாக.. அவனுக்கு முதுகு காட்டி.. மழையிருட்டை வெறித்தபடி... அவள் மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்தாள்...

"சில காலமாய் நானே...
சிறை வாழ்கிறேன்...
உனைப் பார்த்ததினால்தானே...
உயிர் வாழ்கிறேன்...
பூக்கள் விரிக்கிறேன்...
பூக்கள் வளர்க்கிறேன்...
சில பூக்கள்தானே... மலர்கின்றன...
பல பூக்கள் ஏனோ.. உதிர்கின்றன...
பதில் என்ன கூறு...
பூவும் நானும் வேறு..."

அந்த ஹாலில் பரவி விரவிய அந்தப் பாடல் வரிகளில் முகிழ்ந்த சோகத்தில் முரளியின் மனதில் வேதனை படர்ந்தது... பால்கனிச் சுவரில் சாய்ந்து அமர்ந்திருந்த அவளின் தோற்றம்... சோகச் சித்திரத்தைப் போல இருந்தது...

"குலதெய்வமே..! எந்தன்...
குறை தீர்க்க... வா...
கை கூப்பி நின்றேன்...
கரை சேர்க்க வா...
நீயே அணைக்க வா...
தீயை அணைக்க வா...
நீ பார்க்கும் நேரம் பனியாகிறேன்..
உன் மார்பில் சாய்ந்து
குளிர் காய்கிறேன்..
எதுவந்த போதும்...
இந்த அன்பு போதும்..."

தீனமான அவளது குரலில் பாலமுரளியின் இதயம் குழுங்கியது... இந்த அன்பு போதுமென்கிறாளே... எந்த அன்பை அவன் அவளுக்குத் தந்தான்..? அன்பில்லாத வாழ்க்கையை வாழ்பவள் எதை வைத்து இந்த அன்பு போதுமென்று கொண்டாடுகிறாள்...? தண்டனை கொடுப்பதற்கென்று தாலியைக் கட்டியவனிடம் என்ன சுகத்தை அவள் கண்டாள்..? பார்வையிலே அமிலத்தை உமிழ்கிறவனின் பார்வை பார்த்து எப்படி அவள் பனியாகிறாள்...? சாய்ந்து கொள்ள அவன் தோள் கூடக் கொடுக்கவில்லை... அப்புறம் எப்படி... அவன் மார்பில் சாய்ந்து அவளால் குளிர்காய முடியும்...?

"ஏதேதோ எண்ணம் வளர்த்தேன்..
உன்கையில் என்னைக் கொடுத்தேன்..
நீ தானே புன்னகை மன்னன்..!
உன் ராணி நானே...
பண்பாடும் பாடகன் நீயே...
உன் ராகம் நானே..."

அவளது குரல் குழைந்து நெகிழ்ந்து ஒலித்தது... அந்தப் பாடலில் சிறைபட்டிருந்தவன் அவளையே பார்த்த வண்ணம் அசையாமல் நின்றான்... அவளது நீண்ட பின்னல் தரையில் படர்ந்திருக்க... அவள் முழங்கால்களைக் கட்டியபடி அமர்ந்திருந்தாள்...

அடிக்கடி அவள் இப்படித்தான் அமர்கிறாள் என்று அவன் நினைத்துக் கொண்டான்... முழங்கால்களில் தலையும் சாய்த்துக் கொள்கிறாள்... அவளுக்கு சாய்ந்து கொள்ள.. அதைவிட்டால் வேறு புகலிடம் இல்லையோ என்ற கழிவிரக்கத்தில் அவன் மனம் வலித்தது...

வெளியே கொட்டிக் கொண்டிருந்த மழை நீரின் திவலைகள் அவள்மேல் தெறித்து விழுந்தன... அவளைக் கூப்பிட்டுச் சொல்லலாமா என்று வாய் திறந்தான்.. பின்னர் ஒரு பெருமூச்சுடன் தோளைக் குலுக்கிக் கொண்டு.. ஹாலில் இருந்த சோபாவை சப்தம் எழும்ப இழுத்துப் போட்டான்... அவனது முயற்சி பலித்தது... அந்த சப்தத்தில் திரும்பிப் பார்த்த ராதிகா சட்டென்று எழுந்து வந்து.. அவனைக் கடந்து மாடிப் படிகளில் இறங்கிப் போய் விட்டாள்...

'ஒரு வார்த்தை பேசியிருக்கலாம்...' அவன் மனம் ஏங்கியது... அவளிடம் அவன் பேசமாட்டான்தான்... ஆனாலும்... அவள் பேசுகின்ற வார்த்தைகளை கேட்க அவனுக்குப் பிடிக்கும்.. மெல்லிய சங்கீதமாக ஒலிக்கும் அவளது குரலோசையில் அவன் கட்டுண்டு போவான்.. ஆனால்.. அதை வெளிக்காட்டிக் கொள்ள மாட்டான்...

இதுதான் வாழ்க்கை என்ற முடிவுக்கு அவன் வந்து விட்டான்.. அவளுக்கும் அதை உணர்த்தி விட்டான்.. அதற்குப் பின்னால்... வீணையின் ஸ்வரங்களாக

தினம்தும் இந்த சின்னச்சின்ன ஆசைகளால் யாருக்கு என்ன பயன்..?

அவள் மனதில் வாழ்வின் மீதான ஆசை துளிர் விடுவதை அவன் விரும்பவில்லை.. அந்த விதையை விதைத்து ஆதரவு நீருற்றுவதால் வருத்தப்படப் போவது அவன்தான் எனும்போது.. அதை ஆரம்பத்திலேயே தவிர்ப்பதுதான் அவளுக்கு அவன்செய்யும் நன்மையாக இருக்கும் என்று அவன் எண்ணினான்...

தாமரையிலைத் தண்ணீராய் தாமரை இருக்கலாம்... தம்பதிகள் இருக்கலாமா..?

138

காதலினைச் சொல்லாமல்...
காதலினால் கொல்கிறாயே...

வாசலில் அழைப்பு மணி ஒலித்தது... எப்போதும் போல ஹாலில் கிடந்த சோபாவில் சிந்தனையுடன் கண்மூடி அமர்ந்திருந்த மேகலா.. உள்பக்கமாகத் திரும்பிக் குரல் கொடுத்தாள்...

"மீனாட்சி... வாசலிலே யாருன்னு பாரு..?"

"அதுக்கென்னம்மா... இந்தாப் போயி ஒரு எட்டில பார்க்கறேன்..."

மீனாட்சி... பத்து எட்டை ஒரு எட்டாக வைத்து வாசல் பக்கம் பாய்ந்தாள்.. அவளும்தான்... என்ன செய்வாள்..? மாமியார் ஒரு மூலையில்.. மருமகள் ஒரு மூலையில் என்று வீட்டின் எஜமானிகள் விட்டத்தை பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள்...

"ஒரு பேச்சுத்துணைக்கு இந்த வீட்டில ஆளிருக்கா..?" என்று காவேரியிடம் அங்கலாய்த்தால்.. அதற்கென்ன... என்று அதைத் தரப் பயந்தவளாக அவள் வாயை இறுக மூடிக் கொண்டதில் மீனாட்சி பித்துப் பிடித்தவளைப் போலாகியிருந்தாள்...

'அப்பாடி... இந்தமாதிரி வீட்டுக்கு நாலு ஜனம் வந்து போனாத்தான் பேச்சுச் சத்தமே நம்ம காதில விழுகுது... நாமளும் வாய் திறந்து நாலு வாய் பேச முடியுது... இல்லைன்னா.. எனக்கே பேச்சு மறந்து போயிரும் போல இருக்கே..."

மீனாட்சியால் அப்படியொரு நிலையை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை... அவளாவது.. பேச்சை மறந்து விடும் நிலைக்கு ஆளாகிறதாவது...

அவளது பேச்சை தக்க வைக்க.. அந்த வீட்டுக்கு வரும் உறவினர்களையும்.. வேலையாள்களையும் அப்படியொரு உபசரிப்பை அவள் உபசரிப்பாள்...

"யாரு.. சதீஷி அண்ணனா...? அடேங்கப்பா.. பாத்து எத்தனைநாளாச்சு..? ஏன் அண்ணே.. எப்போச் சோறு போடப் போறிங்க..."

"சோறு போடறதா..?"

சதிஷ் பேந்தப் பேந்த விழிப்பான்...

"அதான் அண்ணே.. கல்யாணச் சோறு... அண்ணனுக்கு அது தெரியல ஹா..ஹா..."

இதே மீனாட்சி... சதிஷைப் பார்த்தவுடன் விரோதியைப் போல முறைத்துப் பார்த்த காலமும் உண்டு..

அது அவனின் நடையுடை பாவனைகளையும்... அழுக்குப் படியாத நேர்த்தியான உடையையும்... படிப்பையும்... மில்லின் மேனேஜர் என்ற பதவியையும் பார்த்து மீனாட்சிக்குள் எழுந்த பொறாமையின் விளைவு...

"அடேங்கப்பா.. வெள்ளையும்.. சொள்ளையுமா வந்தா இவன் பெரிய ஆளுன்னு மனசுக்குள்ள நினைப்பா..? பெரிசா கெத்துக் காண்பிக்கிறான்... கழுத்தில கட்டியிருக்க பட்டையைப் பாரு காவேரி.. அப்படியே ஜிம்மிக்கு கட்டியிருக்காப் புல இல்ல..? இவனும் ஐயாகிட்ட வேலை பார்க்கிறான்... நாமளும் பாக்கிறோம்... அப்புறம் எதுக்கு இந்த கித்தாய்ப்பு.. அதுவும் யாருகிட்ட..? இந்த மீனாட்சி கிட்டயேவா..?" என்று காவேரியிடம் சிலுப்புவாள்...

காவேரி 'ஊம்' என்று கூடச் சொல்ல மாட்டாள்.. அதைப்பற்றி கவலைப் படாமல் மீனாட்சி பொரிந்து தள்ளுவாள்...

அப்பேற்பட்ட மீனாட்சி.. சதீஷை இழுத்து வைத்து.. திருமணச் சாப்பாட்டை எப்போது போடுவாய் என்று கேட்கும் அளவிற்கு உரிமை கொண்டாடினால்... அவள் எந்த அளவுக்கு பேச்சுக்காக ஏங்கிப் போயிருப்பாள்...?

அன்றும் அதைப் போலத்தான்.. வாய்திறந்து பேச வாய்ப்புக்கிடைத்து விட்ட சந்தோசத்துடன் அவள் வாசல் பக்கம் பாய்ந்திருந்தாள்...

"என்ன மீனாட்சி... தங்கச்சி வீட்டில இல்லையா...?" என்று கேட்டபடி கோமதிநாயகம் வாசலில் நின்றிருந்தார்...

அவரைப் போல வேலையாள்களிடம் பேசுவதெல்லாம் தன்னால் முடியாத காரியம் என்று முகக் குறிப்பில் உணர்த்தியபடி... கர்வத்துடன் தங்கமும் கூட நின்றிருந்தாள்...

"அடடே... ஐயாவா..? வாங்கய்யா.. வாங்கம்மா.."

விட்டால்... வலது காலை எடுத்து வைத்து உள்ளே வா என்று சொல்லி விடுபவளைப் போல ஆரவாரத்துடன் மீனாட்சி வரவேற்று வைக்க... அவளை விசித்திரமாகப் பார்த்தாள் தங்கம்...

"என்னங்க.. வரவேற்பெல்லாம் பலமாய் இருக்கு..." கணவனிடம் கிசுகிசுத்தாள்...

"அதான் எனக்கும் தெரியலைடி...," பதிலுக்கு கோமதி நாயகமும் கிசுகிசுத்தார்...

என்ன..? ஐயாவும்.. அம்மாவும் ரகசியம் பேசிக்கிறிங்க... அதை என்கிட்ட சொன்னா ஆகாதா..?"

மீனாட்சி தானாக உரிமையெடுத்துக் கொண்டு... அப்படிப் பேசியதை தங்கம் ரசிக்கவில்லை...

"என்னங்க... இவ..? மேகலாகிட்ட பேச வந்தா.. அவ வீட்டு வேலைக்காரி... பேச்சு வார்த்தைக்கு கூப்பிடறா..? என்ன நடக்குது இங்கே..? இவ முன்னால நீங்க எங்கிட்ட ரகசியம் பேசக்கூடாதா...? கட்டாயம் அதை இவகிட்டச் சொல்லி உத்தரவு வாங்கித்தான் பேசனுமா...? எத்தனை நாளா இந்தக் கூத்து நடக்குது..? இதுக்குத்தான் தொங்கச்சியைப் பாக்கப் போறேன்...

தொங்கச்சியைப் பாக்கப் போறேன்னு தேனூத்துப் பக்கமே வட்டமடிக்கிறிங்களா..?"

தங்கம் ரகசியக்குரலில் கோமதிநாயகத்தை காய்ச்சு.. காய்ச்சென்று காய்ச்ச ஆரம்பித்து விட்டாள்... அவள் சந்தேகப் பட்டதைக்கூட கோமதிநாயகம் பொருட்படுத்தவில்லை... மீனாட்சியுடன் சேர்த்து வைத்துச் சந்தேகப் பட்டதில் அவர் ஏகப்பட்ட மனப்பாதிப்புக்கு ஆளானார்...

"ஏண்டி... இருந்திருந்து எனக்கு ஜோடி சேர்க்க இவதான் உனக்கு அகப்பட்டாளா...?" ரகசியக்குரலில் மனைவியிடம் பல்லைக் கடித்தார்...

"ஓ... ஐயாவுக்கு... அப்சரஸ்... மேனகான்னு கேட்குதோ... இளமை திரும்பிட்டதா நினைப்பா....? வீட்டுக்கு வாங்க பேசிக்கறேன்..." தங்கத்தின் முகம்... தங்கத்தின் நிறத்திற்கே மாறி ஜிவு ஜிவுத்தது...

அந்த வீட்டின் வாசல் படியில் கால் வைக்கும் போது ஒற்றுமையான மனமொத்த தம்பதிகளாக கால் வைத்தவர்களை... நீதிமன்றத்தின் வாசல் படியில் கால் வைக்காமலே விவாகரத்து வரை கொண்டு சென்று விட்ட மீனாட்சியை என்ன செய்தால் தகும் என்ற கொலைவெறியோடு கோமதி நாயகம் பார்க்க... அவளோ எல்லையற்ற வாத்சல்யத்தோடு அவரைப் பார்த்து புன்னகை பூத்தாள்...

"பாத்து எம்புட்டு நாளாச்சு... கண்ணே பூத்துப் போச்சு போங்க... இப்படித்தான் ஆடிக்கொருதரம்.. அம்மாவாசைக் கொரு தரம்ன்னு இங்க வந்து

போவிங்களா..? அடிக்கடி வந்து போனாத்தானே உறவு நிலைச்சு நிற்கும்..?"

மீனாட்சி போட்ட வெடி குண்டில்... அவள் மீதான கொலைவெறியை மறந்து விட்டு அலறிவிட்டார் கோமதிநாயகம்...

"உறவு..? நிலைச்சு...? நிற்குமா..? ஒஹோ..!"

தங்கம் மீனாட்சியை விட்டுவிட்டு... கோமதி நாயகத்தைப் பார்த்து 'ஒஹோ' போட்டதில் அவர் கதிகலங்கி விட்டார்...

"ஏய்ய்... எனக்கு ஒன்னுமே தெரியாதுடி..."

"தெரியாமலா இவ இம்புட்டுப் பேச்சுப் பேசறா..?"

"அதான் எனக்கும் புரியலைடி..."

"ஆனா... எனக்குத் தெளிவா புரிஞ்சிருச்சு..."

"போடி.. நீயும்.. உன் தெளிவும்... ஏம்மா வில்லகந்துக்கு பொறந்த மீனாட்சி.. என் பாசமலர் உடன்பிறப்பு மேகலா எங்கேம்மா..?"

"அம்மா உள்ளாரதான் இருக்காங்க.. ஏன்ய்யா... உங்க தங்கச்சி கூட மட்டும்தான் பேசுவீங்களா.. எங்கிட்ட பேச மாட்டிங்களா...?"

கணவன் மனைவியின் ரகசிய வாக்குவாதத்தைக் கவனிக்காமல் தன் போக்கில் மீனாட்சி ஏக்கப்பட...

"கேட்டிங்கள்ல..?" என்று காளி அவதாரமெடுத்தாள் தங்கம்...

"அடியேய்... நான் நிசமாவே ராமன்டி..."

"சொக்கநாதன்னு இல்ல இந்த மீனாட்சிசொல்றா.."

"நீயே பேரை மாத்தாதே..."

"ஆளே மாறிப் போயிட்டிங்க... பேரு மாறினதுலதான் குறைவு வந்துருச்சாக்கும்..."

"எங்கேடி போற..?"

"எதுக்கு வந்தோம்ன்னு உங்களுக்குத்தான் மறந்து போயிருச்சு.. எனக்குமா மறந்து போயிரும்..? வந்த வேலையைப் பார்க்கப் போறேன்..."

"இருடி.. நானும் வர்றேன்..."

"அது எதுக்கு தேவையில்லாம..? நீங்க இருந்து இவகிட்ட பேச வேண்டியதையெல்லாம் பேசி முடிச்சிட்டு.. அப்புறமா உள்ளே வாங்க... அவசரமேயில்ல..."

"தங்கம்... தங்கம்..."

கோமதி நாயகம் கூப்பிடக்கூப்பிட.. நிற்காமல் கோபத்துடன் தங்கம் வீட்டுக்குள் போய் விட்டாள்... அவள் பின்னாலேயே போக முடியாமல் மீனாட்சி... பாதிவழியை கதவால் மூடி... மீதிவழியில் அவள் நின்று என்று... வழியை மறித்துக் கொண்டிருந்தாள்... அவளை உராய்ந்து கொண்டு தங்கம் போனதைப் போல போக அவருக்கும் ஆசைதான்.. ஆனால்.. அதை மறைவாக நின்று தங்கம் பார்த்துக் கொண்டிருப்பாளோ என்ற சம்சயத்தில் அந்த ஆசையை அடக்கிக் கொண்டார்...

"அம்மா எதுக்காக இம்புட்டு விரசா உள்ளே போறாங்க...?" மீனாட்சி சந்தேகம் கேட்டாள்...

கேட்டவளை ஒரு மார்க்கமாக ஏற இறங்கப் பார்த்து வைத்தார் கோமதிநாயகம்...

பளிச்சென்ற தோற்றத்துடனும்.. கண்டாங்கிச் சேலையுடனும் கொண்டையில் மல்லிகைப் பூவுடனும் நின்று கொண்டிருந்த மீனாட்சி... என்றுமில்லாத பேரழகோடு அன்று அவர் கண்ணுக்குத் தெரிந்தாள்...

'இத்தன நாளா இவளக் கண்டுக்காம போயிட்டேனே...'

ஏகத்துக்கும் ஏக்கப்பட்டவர்... அப்போதாவது அவளை கண்டு கொள்ளலாமா என்ற யோசனையை ஆரம்பித்தபோது...

"என்னங்க..." என்ற அபாயச் சங்கு அலறியது...

"வந்துட்டேண்டி தங்கம்.." கனவு கலைந்தவராக வீட்டுக்குள்ளே பாய முற்பட்டார் கோமதிநாயகம்...

"பொறுங்கய்யா..." மீனாட்சி தடுத்தாள்...

"ஹி..ஹி... என்னத்துக்கு மீனாட்சி நிக்கச் சொல்ற..?" தன் தகுதியையும்... வயதையும் கோமதிநாயகம் மறந்தேபோனார்...

"இதுக்குத்தான் நிக்கச் சொன்னேன்..."

வாய் நிறையப் புன்னகையோடு கதவை அகலமாகத் திறந்து விட்டு விலகி நின்றாள் மீனாட்சி...

"ஏன்.. அப்படியே இருந்தா ஆகாதா..?"

அவளை உராய முடியாத ஏமாற்றத்தோடு கேட்டார் கோமதிநாயகம்...

"அப்படியே இருந்தா.. எப்படி நீங்க உள்ளே போவிங்களாம்..?"

வாய் வளர்க்க வாய்ப்பு கிடைத்தால் மீனாட்சி சும்மா விடுவாளா..? அவளும் பேச வேண்டுமென்ற ஆசை தீர பேசி வைத்தாள்...

"தங்கம் எப்படிப் போனாளாம்..?"

மீனாட்சியின் மேல் உராயும் சாக்கில் ஒங்கி ஒரு இடி இடித்தபடி உள்ளே சென்ற மனைவியின் நினைவில் கோமதி நாயகம் வழிந்தார்...

முந்தய தினமாக இருந்திருந்தால் அந்த வழிசலை எளிதாக இனம் கண்டிருப்பாள் மீனாட்சி..

'ஐய்யே... வழியுது...' என்று ஜாடை பேசியிருப்பாள்..

இப்போதுதான் அவளுக்கு எல்லாம் மறந்து போய் விட்டதே... பேச்சு மறக்காமலிருக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் பேசிக் கொண்டிருந்தவளுக்கு... அவரின் வழிசலை இனம் காண முடியவில்லை...

எனவே... யதார்த்தமாகத்தான் அவர் கேட்டு வைக்கிறார் என்ற நினைவில்.. யதார்த்தமாகவே அவளும் பேசிவைத்தாள்...

"போங்கய்யா... அம்மாவும் நீங்களும் ஒன்னா..? அம்மா என்னை இடிச்சுக்கிட்டுப் போனாங்க... நீங்களும் அப்படியே போயிர முடியுமா..?"

'ஏன் போனால்தான் என்ன..?' என்று கேட்க வாயெடுத்தவர் மேகலாவின் தலையைக் கண்டதும்.. வாயை இறுக்கமாக மூடிக் கொண்டார்...

"என்னண்ணே... வந்தவங்க வாசலோட நின்னுட்டிங்க... எங்க மேல ஏதாச்சும் கோபமா..?"

மேகலாவின் கேள்வியில்... மீனாட்சியின் மீது உற்பத்தியாகியிருந்த மோகம் பறந்தோட... அவசரமாக பூவுலகில் கால்பதித்தார் கோமதிநாயகம்...

"என்ன தங்கச்சி... இப்படியொரு வார்த்தய சொல்லிப்புட்ட...? யாரு மேல யாரு கோபப்படறது..? எந்தங்கச்சி மேல நான் கோபப்படுவேனா..? இல்ல.. நீயும்.. மாப்பிள்ளயும் கோபமா முறைச்சுக்கிட்டுப் போனாலும் விட்டு ஒதுங்கிருவேனா..?"

கேள்விக்குறியைப் போல அவரது உடல் தானாக வளைந்ததை மீனாட்சி ரசித்துப் பார்க்கிறாளே என்ற எண்ணம்கூட அவருக்கு வரவில்லை...

அந்த அளவுக்கு அவருக்கு பாலமுரளியின் தயவு தேவைப்பட்டது...

"அடடா... ஐயாவைப் போயி பதறடிக்கறிங்களேம்மா.. நான்தான் வழியை மறைச்சு நின்னுக்கிட்டு இருந்தேன்.. அதனாலதான் வீட்டுக்குள்ள வரமுடியாம ஐயா வாசலிலேயே நிக்கிறாரு..." மீனாட்சி விளக்கம் சொன்னாள்...

"ஏண்டி... அறிவு கெட்டவளே... யாருகிட்ட.. எப்படி நடந்துக்கனும்னு ஒரு வரைமுறை வேணாமா..? அண்ணன் வந்திருக்காரு... அப்பப்போயி வாசலிலேயே அவரை நிக்க வைக்கறியே..." மேகலா மீனாட்சியை கடிந்து கொண்டாள்...

"விடு தங்கச்சி.. அது பாவம் அப்பாவிப் பொண்ணு.."

எந்நாளுமில்லாத திருநாளாக அவர் மீனாட்சிக்காக பரிந்து பேசியதில் மேகலா வெகுவாக ஆச்சரியப்பட்டுப் போனாள்... பேச்சுக்காக ஏங்கியதன் பலன் என்னவென்பதை அறியாத மீனாட்சி.. வாயெல்லாம் பல்லாக உள்ளே போனாள்...

உன் மூச்சுக் காற்றின் வெப்பத்தில்...
என் சுர உடைகள் தீப்பிடித்தன...

"காபி சாப்பிடுங்க அண்ணே..." என்று உபசரித்ததென்னவோ மேகலாதான்.. அவளை விட்டுவிட்டு... அதைக் கொண்டு வந்த மீனாட்சியிடம் நன்றிப் புன்னகையொன்றை உதிர்த்து விட்டு காபியை எடுத்துக் கொண்டார் கோமதி நாயகம்...

தங்கத்துக்கும் காபியை கொடுத்து விட்டு உள்ளே போகாமல் அங்கேயே நின்ற மீனாட்சியின் மீது... அவரின் பார்வை படிந்து விலகி யதேச்சையாக தங்கத்தின் மீது படிந்தது...

அவளின் கோபத்தை அப்பட்டமாக அவளது கண்கள் பிரதிபலித்ததில் நடுங்கிப் போன கோமதிநாயகம் ஒரே மடக்கில் காபியை காலி செய்தார்...

'உங்களுக்கு வீட்டிலே இருக்கு...'

தங்கத்தின் கண்கள் பேசிய மொழியை அவர் மட்டுமே அறிவார்... அதற்குப் பின்னால் மீனாட்சியின் பக்கம் திரும்ப முனைவாரா என்ன..?

"வாங்க மாப்பிள்ளை..."

எப்போதும் போல பாலமுரளியின் வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு அவனையே வரவேற்று வைத்தார் கோமதிநாயகம்...

வாசலிலேயே கோமதிநாயகத்தின் காரைப் பார்த்து விட்டிருந்தான் பாலமுரளி... சங்கருக்கு பெண் கொடுத்த மனிதர் அவனது வீட்டிற்கு வந்திருப்பதில் அவனுக்கு பிடித்தமில்லை...

'இந்த ஆள் எதுக்காக வந்திருக்கான்..?' என்ற நினைவோடு உள்ளே வந்தவன்... கோமதிநாயகத்தின் வரவேற்பை அங்கீகாரம் செய்து தலையைச் கூட அசைக்கவில்லை...

தன்போக்கில் ராதிகா தென்படுகிறாளா என்று பார்த்தபடி மாடிப்படியில் காலை வைத்தவனை மேகலாவின் குரல் தடுத்தது...

"முரளி... மாமா வந்திருக்காரு பாரு..."

'யார்.. யாருக்கு மாமா...?'

எரிச்சலோடு திரும்பிய பாலமுரளி வேண்டா வெறுப்பாக தலையை மட்டும் ஆட்டிவிட்டு.. மீண்டும் மாடிப்படியில் ஏற முனைந்தான்...

"இப்படி வந்து உட்காரு முரளி..." மேகலாவின் குரலில் கண்டிப்பிருந்தது...

பாலமுரளி முகம் சுளித்தான்... அவனுக்கு கோமதி நாயகத்தின் முன்னால் உட்கார விருப்பமில்லை...

"ஒரே தலைவலி...." கோமதி நாயகத்தைப் பார்த்தபடி அவன் கூற... தங்கம் முகம் கருத்தாள்...

தலைவலியென்று அவன் குறிப்பிடுவது யாரையென்று அவளுக்கும் தெரியும்.. புன்னகை மாறாமல் பாலமுரளியின் முகத்தையே பருகு... பருகென்று பார்த்துக் கொண்டிருந்த கோமதி நாயகத்திற்கும் தெரியும்...

ஆனாலும் அவர்... மனைவியைப் போல முகம் மாறாமல் புன்னகை மன்னனாகவே இருந்தார்...

வேறு எதற்காக இல்லையென்றாலும்... இதற்காகவாவது முரளி அவர் முன்னால் அமர்ந்து ஓரிரண்டு வார்த்தைகள் பேசலாம் என்று நினைத்துக் கொண்டாள் ராதிகா...

"வந்துட்டேன் அத்தை..."

அதற்குள் காபியுடன் பிரசன்னமாகி விட்ட மருமகளைக் கண்டதும் மேகலாவின் கண்களில் பாராட்டுத் தோன்றியது...

"வந்துட்டியாம்மா... உன் புருசனுக்கு தலைவலியாம்.. காபியைக் கொடு...", வாத்சல்யத்துடன் கூறினாள்...

மருமகளின் மீது மேகலா காட்டிய அன்பையும்... பரிவையும் பார்க்கப் பார்க்க தங்கத்தின் வயிறு எரிந்தது... அவளது மகள் நித்யாவை ஒரு பொருட்டாக சங்கரின் தாய் நினைத்ததில்லை என்ற நினைவு வந்து அவளை இம்சித்தது...

"ம்ஹீம்... எங்க சங்கரோட லெவலுக்கு.. இங்கே வந்து பெண் கட்டனுமா...? எல்லாம் தலையெழுத்து..."

தங்கத்தின் காது படவே சொல்வாள் அவள் யாருக்கும் அஞ்சியதில்லை... கோமதி நாயகத்திற்கும்... தங்கத்திற்கும் மரியாதை கொடுத்ததுமில்லை...

உனக்கெல்லாம் ஒரு கணக்கா...? என்பதைப் போன்ற அலட்சியப் பார்வையுடன்தான் தென்காசிக்கு வந்து போவாள்...

"உன் மாமியாரின் ராங்கித்தனத்தை உன் புருசனின் காதில போட்டு வை நித்யா..." தங்கம் கோபப்பட்டாள்..

"அப்புறம்... என்னைப் பிறந்த வீட்டிலேயே அவர் போட்டு வைச்சிருவாரு.. அது பரவாயில்லையா..?" பதிலுக்கு கேட்டாள் நித்யா...

"என்னடி..?" தங்கம் திகைத்து விட்டாள்...

"அவரே ராங்கி பிடிச்சவர்தான்ம்மா... என்கிட்ட சரியாவே பேச மாட்டார்... அம்மாவும்... மகனுமா இங்கிலீஷில் பேசித் தள்ளுவாங்க... என்னை சட்டை பண்ணிக்கவே மாட்டாங்க... அவருக்கு அவரோட அம்மாமேல பாசம் ஜாஸ்திம்மா... அவங்களை குறைவாகப் பேசிட்டு அவர்கூட வாழ்ந்துர முடியாதும்மா..."

இப்படிப் பேசும் மகளிடம்... ஊஹீஹீம்... உன் வாழ்க்கை பேனாலும் பரவாயில்லை... உன் மாமியாரை ஒரு கை பார்... என்றா சொல்ல முடியும்...?

"என்னமோ நித்யா... பார்த்து பிழைச்சுக்கோ... அந்தம்மா பாட்டுக்கு இருந்துட்டுப் போகுது.. அது ராங்கியா இருந்தா நமக்கென்ன வந்துச்சு... நீ பொறுமையா போம்மா... மாப்பிள்ளையை அனுசரிச்சு நடந்துக்க..." என்று தான் சொல்ல முடியும்...

காலம்... காலமாக இதைத்தானே இந்தியத் தாய்மார்கள் செய்து வருகிறார்கள்..?

அந்தப் புத்திமதியினையே மகளுக்கும் அள்ளி விட்ட தங்கம்... ராதிகாவின் கொடுப்பினையைப் பார்த்து மனம் கொதித்தாள்...

'இம்புட்டு நேரமா... நானும் என் புருசனும் இங்க தான் உட்கார்ந்திருக்கோம்.. இவ வந்து நின்னு பேசலை... 'வா'ன்னு கூப்பிடலை... ஆகாதவங்களுக்கு

கொடுக்கிறதைப் போல... காபியை வேலைக்காரியிடம் கொடுத்தனுப்பிச்சா... இப்ப புருசனைக் கண்டதும்... கையில காபியோட ஓடி வந்து நிற்கிறாளே... அதை மாமியார்காரியும் மெச்சிக்கிறாளே... அடேங்கப்பா... இப்புடி புருசனையும்... மாமியார்காரியையும் கைக்குள்ள போட்டுக்கிற வித்தையை இவ எங்கே கண்டு பிடிச்சா..?'

அப்படிப்பட்ட வித்தையைக் கற்று கைக்குள் வைத்திருக்க முடியாத நித்யாவை நினைத்து பல்லைக் கடித்தாள் தங்கம்...

'எனக்கும் ஒன்னு பிறந்திருக்கே...'

வந்திருக்கும் விருந்தாளிகளின் வயிறு எரிவதை உணராமல் அமைதியுடன் இங்கும் அங்கும் நடமாடிக் கொண்டிருந்த ராதிகாவை வன்மத்துடன் பார்த்தாள் தங்கம்...

எதையாவது செய்து ராதிகாவை புண்படுத்தி விடவேண்டும் என்ற மனத்துடிப்பு அவளுக்கு அதிகமானது...

"என்ன விசயமா வந்திருக்காராம்..? சொல்ல வந்ததை இவர் சீக்கிரமாச் சொன்னாத் தேவலைம்மா... நான் மாத்திரையைப் போட்டுக் கிட்டு படுத்துத் தூங்கனும்..."

பாலமுரளி கறாராகப் பேசியது வேறு தங்கத்தின் வன்மத்தை அதிகப் படுத்தியது...

'உனக்கு எங்களையெல்லாம் பார்த்தா ஆளாத் தெரியாதா...? உன் பொண்டாட்டி வீட்டு மனுசங்களா இருந்திருந்தா இப்படிப் பேசுவியா...? இருக்குடா உனக்கு..'

கணவருக்குப் பதிலாக களத்தில் இறங்கி பேச்சை ஆரம்பித்தாள் தங்கம்...

"அது வேற ஒன்னுமில்ல அண்ணி..."

"ஏம்மா.. ஒன்னுமில்லாததுக்கா இவங்க இவ்வளவு தூரத்துக்கு காரைப் போட்டுக்கிட்டு வந்தாங்க...?"

"ஹா..ஹா.. தங்கம் ஒரு பேச்சுக்காக சொன்னா மாப்பிள்ளை.."

"ஓஹோ... உங்களுக்கு என்னைப் பார்த்தா விளையாட்டுப் பிள்ளைபோல தெரியுதா..?"

பாலமுரளியின் முறைப்பில் பதறிவிட்டார் கோமதி நாயகம்...

"ஐயோ மாப்பிள்ளை... நான் அப்படிச் சொல்வேனா..? நம்ம நித்யாவுக்கு வளைகாப்பு மாப்பிள்ளை... அதுக்காக உங்க வீட்டை அழைக்க வந்தோம்..."

ஏதோ வேலையாக இருந்த ராதிகாவின் முகத்தில் ஓர்நொடியில் தோன்றி மறைந்த ஏக்க உணர்வில் தவித்துப் போனான் பாலமுரளி...

'இதைச் சொல்ல இவங்க வரலைன்னு யாரு அழுதது...?'

"ஏம்மா... வீட்டை அழைக்க வந்தா... இவரு வீடுகிட்ட இல்ல பேசனும்..? வீட்டில இருக்கிற மனுசங்கள ஏன் படுத்தி எடுக்கிறாரு...?"

பாலமுரளி சுள்ளென்று பேசியதில் முகம் சுருங்கினாள் தங்கம்....

"என்ன அண்ணி இது.. எங்க அண்ணன் போன பின்னால... எனக்கான சொந்தம் இந்த வீட்டில இல்லாம போயிருச்சா...?"

அவள் கெட்டிக்காரி... எதைக் கொண்டு எதைத் தாக்க வேண்டும் என்ற யுக்திகளை அறிந்தவள்... என்ன ஒன்று... அந்த யுக்திகளில் அவளை விட கை தேர்ந்தவளாக சங்கரின் தாய் இருந்து தொலைத்தாள்... தங்கம் பெற்ற மகளான நித்யாவுக்கோ... அந்த யுக்திகளைப் பற்றிய புத்தியே கிடையாது...

மாணிக்கவாசகத்தின் யெரைச் சொன்னால்... மேகலா அலறியடித்துக் .கொண்டு மகனைக் கண்டிக்க கிளம்பி விடுவாள் என்று அவள் அறிந்து வைத்திருந்தாள்..

அவள் விடுத்த அஸ்திரம் வீண்போகவில்லை... மற்றவர்களைப் போலவே... மகனிடம் தணிந்து.. பணிந்து பேசும் மேகலா... உடனடியாக குரலை உயர்த்தினாள்...

"கேட்டுக்க முரளி... உன் அத்தை வருத்தப்படறதை கேட்டுக்க.. உன் அப்பாவோட சொந்தம் இல்லாமப் போச்சுன்னு அது புலம்பறதைக் கேட்டுக்க..."

பாலமுரளிக்கு உண்மையிலேயே தலைவலி வந்து விட்டது...

"விடுங்கம்மா... ஏதோ... தலைவலியில பேசிட்டேன்.. இப்ப என்ன..? இவங்க மக வளைகாப்புக்கு அழைக்க வந்திருக்காங்க... அவ்வளவுதானே.. செய்ய வேண்டிய சீர்.. இவங்க வீட்டுக்கு போய் சேர்ந்திரும்... போதுமா.. ஆளை விடுங்க..."

பாலமுரளி எழுந்து கொள்ள முனைய... அப்படியயெல்லாம் உன்னை போக விட்டு விடுவேனா என்பதைப் போல தங்கம் பேச்சைத் தொடர்ந்தாள்...

"வார புதன்கிழமைதான் வளைகாப்பு செய்யப் போறோம்... மறக்காம வந்திருங்கண்ணி..."

"அதுக்கென்ன அண்ணி... வந்திட்டாப் போச்சு..."

"அப்புறம் ஒன்னு அண்ணி.. நீங்க என்னைத் தப்பா நினைச்சிரக் கூடாது..."

பாலமுரளியைப் பார்த்தபடி தங்கம் போட்ட பீடிகையில் ஏதோ இருப்பதைப் போல அவனுக்கு தோன்றிவிட... புருவங்கள் முடிச்சிட.. அவன் அமர்ந்து விட்டான்...

"என்ன விசயம் தங்கம்..?"

"வளைகாப்புக்கு நீங்க மட்டும் வந்தாப் போதும் அண்ணி... உங்க மருமகளை கூப்பிட்டுக்கிட்டு வந்திர வேணாம்..."

அதுவரைக்கும் எதையோ அவள் சொல்லிக் கொண்டிருக்கிறாள் என்ற நினைவுடன் கேட்டுக் கொண்டிருந்த கோமதிநாயகம் மனதில் அலறி விட்டார்...

'அடிப்பாவி... காரியத்தையே கெடுத்திட்டியே.. எங்கே வந்து என்ன சொல்லி வைக்கிற...? இவன் பெண்டாட்டி வரக்கூடாதுன்னா... தென்காசியே நம்மளத் தள்ளி வைச்சிருமே...'

தங்கத்தின் நினைவோ.. வேறு விதமாக இருந்தது...

'பெத்தது அத்தனையையும் கட்டிக் கொடுத்துட்டேன்.. இவன் ஒரு பெண்ணைக்கூட கட்டிக்கலை... இவனோட

அக்காவையும் வெளியே கட்டிக் கொடுத்தான்.. இனி.. இவன் தயவு நமக்கெதுக்கு...'

கோமதிநாயகத்திற்குத் தான் தெரியும்.. பாலமுரளியின் தயவு காலகாலத்திற்கும் வேண்டும் என்பது...

'கட்டிக் கொடுத்திட்டா மட்டும் போதுமா.. அந்தப் புள்ளைக பொழைக்க வேணாமா..? பாலமுரளியை பகைச்சுக்கிட்டா... இந்த தென்காசி பட்டினத்தில இருந்து பிழைச்சிர முடியுமா...?'

வீட்டுக்குப் போனதும்... அவரை அவர் மனைவி கவனிக்க வேண்டிய நிலைமை மாறி... அவர்... மனைவியை செமத்தியாக கவனித்தே ஆக வேண்டிய கட்டாயம் அங்கே உருவாகி விட்டது...

பாலமுரளியால் ராதிகாவின் முகத்தைப் பார்த்துத் தாங்க முடியாமல் போனது... அவள் முகம் அவமானத்தில் கன்றிச் சிவந்திருந்தது... மேகலா பதறிப் போயிருந்தாள்... பாலமுரளியின் முகத்தில் கனன்ற கோப ஜீவாலையில் அவளுக்கும் சம்மதமிருந்தது...

"என்ன அண்ணி..? எங்கே வந்து.. என்ன பேசறிங்க..?"

"இதுக்குத்தான் கோவிச்சுக்க வேணாம்ன்னு முதல்லேயே சொன்னேன் அண்ணி..."

"இதைச் சொல்லத்தான் எங்க வீடு தேடி வந்தீங்களா..?"

"நான் என்ன செய்யட்டும் அண்ணி... போன மாசம் நீங்க குற்றாலத்தில நம்ம ரெங்கண்ணன் மருகமளுக்கு வளைகாப்புன்னு போயிருந்தீங்களா...?"

"ஆமா.. அதுக்கென்ன..?"

"கூட உங்க மருமகளையும் கூப்பிட்டுக்கிட்டு போனிங்களா...?"

"சொல்ல வந்ததைச் சொல்லுங்கண்ணி..."

"உங்க மருமக... தள்ளி நிக்காம அந்தப் பொண்ணுக்கு நலங்கு வச்சிருக்கு.. நீங்க இந்தப் பக்கம் வந்தவுடனே... அந்தப் பக்கம் அந்தப் பொண்ணு வயித்து வலியாலே துடிச்சுப் போச்சாம்..."

"அது சூட்டுவலின்னு சொன்னாங்களே.. அந்தப் பொண்ணுக்கு நேத்துத்தானே சுகப்பிரசவம் ஆச்சு..?"

இந்த விவரம் தங்கத்துக்கு தெரியாது.. அவள் யதேச்சையாக அந்த வீட்டின் விசேசத்துக்கு போயிருந்தாள்... அவள் போன போதுதான் மேகலா... ராதிகாவுடன் காரில் ஏறிக் கொண்டிருந்தாள்.. அவர்களை வழியனுப்பும் மும்முரத்தில் தங்கத்தை யாரும் கண்டு கொள்ளவில்லை... அந்த மனப் புழுக்கத்தில் தங்கமும் அதிக நேரம் அந்த வீட்டில் இருக்கவில்லை... அவள் அங்கிருந்த கொஞ்ச நேரத்தில் அந்த வீட்டின் கர்ப்பிணிப் பெண் லேசாக வயிற்றை வலிப்பதாகக் கூறினாள்... சுற்றியுள்ளவர்கள்.. அவரவருக்குத் தெரிந்த வைத்தியங்களைச் சொல்லிக் கொண்டிருக்க.. இவள் எதையும் சொல்லாமல் கிளம்பிவந்து விட்டாள்... அந்த விவரத்தை இப்போது பயன்படுத்திக் கொண்டாள் அவ்வளவேதான்...

140

உன் கண்ணீர் நீர் சுரந்தால்...
என் நெஞ்சம் தாங்கிடுமா...?

"அது என்னவோண்ணி... எனக்குத் தெரியாது... அங்கேயிருந்த பெரியவங்க பேசிக்கிட்டதைத்தான் நான் சொன்னேன்... அவங்க சொன்னதிலேயும் தப்பில்லையே.. உங்க மருமகளைக் கட்டிக்கிட்டு வந்து வருசம் ரெண்டாச்சு... இன்னும் இந்தப் பொண்ணு வயித்திலே வாரிசு வளரலையே..."

தங்கம் சரியான இடம் பார்த்துக் குத்திவிட்டாள்... ராதிகா வேதனையில் துடித்துப் போய் விட்டாள்... கடைசியில் அவளுக்கு இந்தப் பட்டம் வேறு கிடைத்து விட்டதா...?

"உங்க மகனோட கல்யாணத்துக்கு பின்னாலே தான் எங்க பொண்ணுக்கும் கல்யாணமாச்சு.. எங்க மாப்பிள்ளையோட சிநேகிதப் புள்ளையைக் கட்டியிருக்கிற.... உங்க மருமகளோட சிநேகிதிக்கும் கல்யாணமாச்சு... அந்தப் பொண்ணு கல்யாணமான மறு மாசமே வாந்தியெடுத்து... இப்ப கையில எட்டு மாசக் குழந்தையோட நிக்குது... இந்த வகையில எங்க பொண்ணுகூட கொஞ்சம் தாமதம்தான்... என்னமோ தெரியலைம்மான்னு தட்டிக் கழிக்கிறார்ன்னு

சொல்லிச் சொல்லி வருத்தப்பட்டுச்சு... கூட்டுச் சேர்ந்து தொழில் பண்ற சிநேகிதப் புள்ளை குழந்தை பெத்துக்கிட்டவுடனே... எங்க மாப்பிள்ளைக்கும் மனசு மாறிருச்சு... இந்தா.. ஏழாம் மசாம் வளைகாப்பு நடத்தப் போறோம்... இப்படி இருக்கனுமா இல்லையா..?"

அதற்கு மேல் தாங்க முடியாதவளாக ராதிகா மாடிப் படியில் ஏறி ஓடிவிட... பாலமுரளி எழுந்து நின்று விட்டான்.. அவனது சுட்டுவிரல் வாசலை நோக்கி நீண்டிருந்தது...

"வெளியே போங்க..."

கோமதி நாயகத்தின் பயமும்... பதட்டமும் அவர் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது... பாலமுரளி ஒன்றில் நிலையாக நிற்பவன்... அவன் வாயிலிருந்து வெளியே போ என்ற வார்த்தை வந்து விட்டது... அந்த வார்த்தைக்கான அர்த்தம்... அவனது வீட்டிலிருந்து வெளியேறுவது மட்டுமல்ல.. அவனது வாழ்விலிருந்தும் வெளியேற வேண்டும் என்பதாகும்...

இனி பாலமுரளியின் சொந்தம் கிடைக்காது என்று ஆனபின்னால் எதிர்காலத்தைக் குறித்த பயம் கோமதிநாயகத்தின் மனதில் சூழ்ந்தது...

"அடேங்கப்பா... இவன் என்ன பெரிய இவனா..? இவனைப் போல நம்ம மாப்பிள்ளையும் பெரிய ஆள்தான்... இவங்க தயவாலேதான் நாம பிழைக்கனுமா...? நமக்கென்ன... சொத்தில்லையா... சுகமில்லையா..? காசில்லையா..? பணமில்லையா...? ஆள் அம்பு படையில்லையா..? எதிலங்க நாம குறைஞ்சு போயிட்டோம்...? இவன் பெயரைச் சொல்லித்தான் நாம பிழைக்கனுமா...?"

வீட்டுக்கு வரும் வரை ஒருவார்த்தை கூடப் பேசாத கோமதிநாயகத்திடம் வீட்டுக்குள் வந்ததும்... வராததுபோல தங்கம் எகிற... அவர் ஓங்கி ஒரு அறை விட்டார்...

"அம்மா..." அவள் கன்னத்தைப் பிடித்தபடி சுருண்டு விழுந்தாள்...

"என்னப்பா... என்ன ஆச்சு..? எதுக்காக அம்மாவைப் போட்டு அடிக்கறிங்க...?"

கோமதி நாயகத்தின் மகன்கள் கோபப்பட... மருமகள்கள் மாமியாரை எழுப்பி உட்கார வைத்தார்கள்...

"நானும் சொல்லிச் சொல்லிப் பார்க்கிறேன்... இவ திருந்தின பாடாய் இல்லைடா... இப்ப என்ன சோலிக்காக தேனூத்துக்கு போனோம்...?"

"முரளி மச்சானையும்... அத்தையையும் நம்ம நித்யாவோட வளைகாப்புக்கு அழைச்சிட்டு வரப் போனிங்க..."

"அதை மட்டும் சொல்லிட்டு இவ வந்து தொலையனுமா... இல்லையா...? அதை விட்டுட்டு.. முரளியோட பெண்டாட்டியை கூப்பிட்டுக்கிட்டு வந்துராதீங்கண்ணின்னு மேகலாகிட்ட சொல்லி வைக்கிறாடா... இவள என்ன செய்தால் தேவலாம்...?"

கோமதிநாயகத்தின் மிதமிஞ்சிய கோபத்திற்கான காரணத்தைக் கேட்ட மகன்கள் அசையாமல் நின்றுவிட அவருடைய மருமகள்கள் மாமியாரிடமிருந்து விலகி அமர்ந்தார்கள்...

"எதுக்காகம்மா அப்படிச் சொன்னிங்க...?"

"அதை அவகிட்ட ஏண்டாக் கேட்கறிங்க... என்கிட்டக் கேளுங்க... இவ வருணாசலத்தை... வளைத்து

கட்டிக்கிட்டு நான் சொல்றேன்... அந்தப் பொண்ணுக்கு கல்யாணமாகி ரெண்டு வருசமாச்சாம்... இன்னும் குழந்தை பிறக்கலையாம்..."

"ரெண்டு வருசமெல்லாம் ஒரு கணக்காப்பா... ?"

"அதை இவகிட்டச் சொல்லு... அத்தோட விட்டாளா... அதுக்கு மேலயும் பொய்பொய்யா சொல்லி வைக்கிறாடா... ?"

என்ன பொய்யென்று அவரது மகன்கள் கேட்கவில்லை... இனித் தொழில் வட்டாரத்தில் பாலமுரளியின் பகைவர்களாக தாங்கள் மாறப் போவதைக் குறித்த அச்சம் அவர்கள் மனதில் எழுந்தது...

"இவ வாயைத் திறந்தாலே வில்லங்கம்தாண்டா... இவ குற்றாலத்தில ரெங்கன்வீட்டு வளைகாப்புக்கு போனாளாம்.. அங்கே.. மேகலாவும் அந்தப் பொண்ணும் வந்திருந்தாங்களாம்... அந்தப் பொண்ணு பாவம்... நலங்கு வைச்சிருச்சாம்... உடனே அந்தக் கர்ப்பிணிப் பொண்ணு வமித்து வலிவந்து கதறிக்கதறி துடிச்சிட்டாளாம்... அதை இவ கண்கொண்டு பார்த்தாளாம்... அள்ளி விடுறாடா... என்னாலேயே இவ பேசற கொடுமையை காது கொடுத்துக் கேட்க முடியலை... அந்த பாலமுரளி சும்மாயிருப்பானா.. ?"

"அதெப்படி சும்மாயிருப்பார்... ? கட்டின பெண்டாட்டியை... மத்தவங்க குறை சொன்னா.. எந்த ஆம்பளையாவது கேட்டுக்கிட்டு சும்மாயிருப்பானா.. ?"

இதைச் சொன்னது கோமதிநாயகத்தின் மகனல்ல.. அவரது மூத்த மருமகள் சொன்னாள்...

அவள் திருமணமாகி புகுந்த வீட்டிற்கு வந்த பின்னால் உண்டாக ஆறுமாத காலம் பிடித்தது... தங்கம் அப்போது அதைச் சொல்லிக்காட்டுவாள்...

'அந்த ஆறுமாசத்தில் இந்தம்மா ஆடின ஆட்டமிருக்கே... அப்பப்பா... இந்த மனுசன் அதை ஏன்னு கேட்டிருப்பாரா.. ?'

பழைய நினைவில் அவள் கணவனை முறைத்து வைக்க.. அவன் தனது ஆண்மையின் கம்பீரம் குறைவதை உணர்ந்தான்... அந்த கோபம் தாயின் பக்கம் திரும்பியது...

"ஏம்மா... வாயை வைச்சுக்கிட்டு சும்மாயிருக்க மாட்டிங்களா... உங்களாலே எங்க உசிருதான் குறையுது.."

அன்று பேச முடியாத பேச்சை இன்று அவன் பேசியதில் அவன் மனைவியின் முகத்தில் தெளிவு வந்தது.

'அப்பாடி.. சரியாகிட்டா... பிழைச்சேன்..' தன் ஆண்மையின் கௌரவம் மீண்டதில் அவன் நிம்மதிப் பெருமூச்சை விட்டான்...

"அதையேண்டா கேட்கிற... அந்த பாலமுரளி வீட்டை விட்டு வெளியே போன்னு சொல்லிட்டாண்டா..." கோமதிநாயகம் புலம்ப... மற்றவர்கள்...

"என்னது..?!.." என்று ஒருமித்த குரலில் அலறினார்கள்...

"என்னப்பா சொல்றிங்க... முரளி மச்சான் அப்படியா சொல்லிட்டாரு..?"

"ஆமாண்டா... ஆமாம்..."

அதைக் கேட்ட மகன்கள் கொதிப்பார்கள்.. பாலமுரளியை வாய்க்கு வந்தபடி ஏசுவார்கள்.. அது எப்படி... அப்படியொரு வார்த்தையை... இவ்வளவு பெரிய மனிதர்களைப் பார்த்துச் சொல்லலாம் என்று சண்டைக்கு கிளம்புவார்கள் என்று எதிர்பார்த்த தங்கம் ஏமாந்து போனாள்...

"அடக்கடவுளே..! என்னடா தம்பி இப்படியாகிருச்சு.. ?"

"ஆமாண்ணே... இனித் தொழில் வட்டாரத்தில நம்ம பேச்சு எடுபடாது..."

"ஏம்மா... உங்களை யாரு இப்படியெல்லாம் பேசச் சொன்னது.. ?"

"ஏன்ப்பா.. அம்மா குணம்தான் உங்களுக்குத் தெரியுமில்ல... அப்புறமும் எதுக்காக... இந்த அம்மாவை கையில பிடிச்சுக்கிட்டு போனிங்க.. நீங்க தனியாய் போய் அழைச்சிட்டு வர வேண்டியதுதானே.. ?"

"அப்படி பொம்பளைகளும் கூடப் போய் கூப்பிட்டுத்தான் ஆகனுமுன்னு இருந்தா... எங்ககிட்ட சொல்றது... எங்க ரெண்டு பேரில யாராவது ஒருத்தரு.. பெண்டாட்டியோட போயி அழைச்சிட்டு வந்திருப்போமில்ல.. ?"

"அதைச்சொல்லு... எதுக்கெடுத்தாலும் முந்திரிக் கொட்டை மாதிரி... நானு.. நானுன்னு அலைஞ்சிட்டு... கடைசியில இந்தக் கதிக்கு கொண்டாந்திட்டாங்களே..."

"அப்பாவை.. ஏண்டா கோவிச்சுக்கறே... அவரு சரியாத்தான் இருக்காரு... இந்தம்மாதான் பேசத் தெரியாம பேசி... இல்லாத வில்லங்கத்தையெல்லாம் இழுத்து விட்டிருக்கு..."

"இவங்களுக்கா பேசத்தெரியாது.. ? நீ வேறண்ணே.. வீட்டில இருக்கிற மருமகள்களைப் பேசச் சொல்லு... மணிமணியா பேசித் தள்ளுவாங்க... இவங்க திட்டம் போட்டே சதிவேலை பண்ணியிருக்காங்கண்ணே..."

பாலமுரளி கோமதி நாயகத்தின் குடும்பத்தை விலக்கி வைத்து விட்டான் என்று தெரிந்த சில மணித்

துளிகளிலேயே.. அதற்குக் காரணமான தங்கம்... கோமதி நாயகத்தின் வீட்டில் ஓரம் கட்டப்பட்டாள்...

விட்டால்... கோமதிநாயகத்திற்கு வேறு ஒரு பெண்ணைப் பார்த்து அவரது மகன்கள் மணமுடித்து வைத்து விடுவார்கள் போலத் தோன்றியதில் தங்கம் முகம் வெளிறிப் போனாள்...

இனி யாதொரு காரியத்திற்கும் தங்கம் முன்னால் வந்து நிற்கக்கூடாது என்று அந்த வீடு ஏகமனதாக முடிவு செய்தது...

வரலாறு காணாத வகையில்... ஒரே நாளில்... அவளின் ராஜ்யம் அவளிடமிருந்து பிடுங்கப்பட்டு.. மருமகள்களின் ஆளுமைக்கு போய் விட்டது...

இனிப் போட்டதைத் தின்று விட்டு.. அந்த வீட்டின் ஏதாவது ஒரு மூலையில்... அவள் தாராளமாக சாம்ராஜ்யத்தை நடத்திக் கொள்ளலாம் என்ற அனுமதி அவளுடைய மருமகள்களிடமிருந்து அவளுக்கு கிடைத்தது...

'எப்படியிருந்த நானு... இப்படியாகிப் போனேனே..' தங்கம் நொறுங்கிப் போய் விட்டாள்...

பாலமுரளி கோபத்தின் உச்சியில் இருந்தான்.. கோமதி நாயகத்தை வீட்டை விட்டு வெளியேறச் சொன்னவன்.. அவர்கள் போன மறு நிமிடமே.. காரில் ஏறிவிட்டான்...

தோப்புக்குள் சுற்றி வந்த போதும் அவன் மனக் கொதிப்பு அடங்கவில்லை... அருவிக் கரைக்கு போய்... பிள்ளையாரையே இமைக்காமல் பார்த்து விட்டு... ஒரு பெருமூச்சுடன் வீட்டுக்குத் திரும்பினான்...

வீட்டில் அமைதி குழ்ந்திருந்தது... ஹாலின் சோபாவில் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்த மேகலா.. மௌனமாக மகனை ஏறிட்டுப் பார்த்தாள்...

"அவ எங்கேம்மா..?"

"மாடியில..."

ஒற்றைச் சொல்லில் பதில் வந்தது...

"அம்மா அப்ப போனவங்கதான்ய்யா... இன்னும் கீழே இறங்கி வரலே..." மீனாட்சிதான் கோர்வையாகச் சொன்னாள்...

உதட்டைக் கடித்த முரளி... மாடிக்குப் போனான்... அவனது அறைக்கதவைத் திறந்து உள்ளே பிரவேசித்தான்.. முன்னறையில் அவளில்லை... உள்ளேயிருந்த படுக்கையறையில் ராதிகாவின் விசும்பல் சத்தம் மட்டும் கேட்டது.. அந்த தேம்பல் ஒலி.. பாலமுரளியின் இதயத்தை கசக்கிப் பிழிந்தது...

அந்த நிலையிலும்... எதற்காக சங்கர்.. உடனடியாக குழந்தை பெற்றுக் கொள்ளாமல் தள்ளிப் போட்டான் என்ற கேள்வி அவன் நெஞ்சில் சுழன்றது..

உள்ளேயிருந்து கேட்ட ராதிகாவின் அழுகைச் சப்தத்தில் அந்த நினைவு காணாமல் போய்விட்டது...

'ச்சே... எந்த நேரத்தில எதை நினைச்சு வைக்கிறேன்னு பாரு...'

அவன் தன்னைத்தானே கடிந்து கொண்டு.. உள்ளே போனான்.. கட்டிலில் குப்புறப் படுத்திருந்த ராதிகாவின் முதுகு குழுங்கிக் கொண்டிருந்தது... அவளது நீண்ட பின்னல்... தரையைத் தொட்டுப் பரவிக் கிடந்தது...

விலகியிருந்த சேலையில் அவளது கணுக்காலின் வெளுப்பும்... இடுப்பின் வழவழப்பும் தெரிய...

'அழகி... பேரழகி...' என்று அவன் பெருமூச்சு விட்டான்..

இப்பேற்பட்ட அழகுடனும்... இயல்பான நடையுடை பாவனையுடனும் ஈர்க்கும் புன்னகையுடனும்.. அவனைத் தேடும் பார்வையுடனும்.. கட்டிப் போட்ட பாடலுடனும்தான் அவள் அவனுக்கு அறிமுகமானாள்...

காணக் கிடைக்காத ஒருத்தியை கண்டபின்னால்.. அவளை சங்கரிடம் தோற்றுவிட பாலமுரளியால் முடியுமா..?

அவன் ஜெயிக்கப் பிறந்தவன்.. ராதிகாவின் மனத்தை ஜெயித்தான்.. அதையறியாமல்... அவளது உடலை ஜெயித்தான்.. அதற்கடுத்து... அவளது வாழ்வை தன் வசமாக்கிக் கொண்டான்...

இத்தனையையும் செய்தவனுக்கு... அவளது கண்ணீரை ஏன் நிறுத்த முடியவில்லை..?

தண்டனையென்று சொல்லி அவளைத் தள்ளி வைத்தானே... தண்டனை அவளுக்கா..? இல்லை அவனுக்கா..?

அவனது இன்ப துன்பம் அவளைப் பாதிக்கும் போது.. அவளது இன்ப துன்பமும் அவனைப் பாதிக்கத்தான் செய்யும் என்பதை ஏன் அவன் உணராமல் போனான்..?

"ராதிகா..!"

நீண்ட நெடுநாள் கழித்து.. அவள் பெயரைச் சொல்லி அவன் அழைத்ததில் அவள் பிரமித்துப் போய் அவனைத் திரும்பிப் பார்த்தாள்...

அழுதழுது முகம் வீங்கியிருந்தவளைப் பார்க்க.. பாலமுரளிக்கு கஷ்டமாக இருந்தது... அவளது வீங்கியிருந்த இமைகளும்.. சிவந்திருந்த கண்களும்... கண்ணீரினால் நனைந்திருந்த முகமும்.. நெடுநேரமாக அவள் அழுது கொண்டிருப்பதை அவனுக்கு உணர்த்தின..

அந்த நிலையிலும்... அழகு குறையாதவளாக.. அவன் முகம் பார்த்தவளைப் பார்க்கும் போது... தூசு படிந்த ஓவியத்தைப் பார்ப்பதைப் போல பாலமுரளிக்கு இருந்தது...

மாசு மறுவற்ற தேவதையைக் கையாளத் தெரியாமல் கையாள்கிறோமோ என்று அவன் துயரம் கொண்டான்...

அவள் ஒரு கலைப் பெட்டகம்... அவளைப் போற்றிப் பாதுகாக்காமல் இப்படி தூசு படிய விட்டது அவன் செய்த குற்றமல்லவா..?

உன்னை மடிதாங்க நானிருந்தும்...
மனம் துடிக்க சோர்ந்து விழுந்தாய்...

அவனை நிமிர்ந்து பார்த்த ராதிகாவின் கண்களில் எல்லையற்ற சோகம் தெரிந்தது... அவளின் கண்ணீர் நிற்கவில்லை... துடைக்கத் துடைக்க அது பெருகிக் கொண்டேயிருக்க.. அவளை மடிசாய்த்துக் கொள்ள வேண்டும்போல அவன் தவித்துப் போனான்...

அசைவற்று அவளை அவன் பார்க்க... அவனைப் பார்த்த ராதிகாவின் பார்வையில் இறைஞ்சல் இருந்தது...

"அவங்கள்லாம் ஒரு ஆளா..? அவங்க பேசினதுக்கு இம்புட்டுத் தூரத்துக்கு நீ அழுது தீர்க்கனுமா...?"

உரிமையுடன் அவன் கடிந்து கொண்டதில்... அவள் விழி விரித்தாள்...

"வேணும்னே பேசி வைக்கிறாங்கடி... அது தெரியாம உன்னை நீ வருத்திக்கறே... இப்படியாப்பட்ட ஆளுகளை போ சாட்டைன்னு எதிர்த்து நிற்க வேணாமா..?"

ராதிகா கண்ணீர் வழிய... தலை குனிந்து கொண்டாள்...

"ஷோபாவை ஒருகை பார்த்தவதான நீ... இந்த தங்கம் எம்மாத்திரம்..? அவ சொன்னான்னு அழுதுகிட்டு இருக்கியே.. வா.. வந்து எனக்கு டிபன் எடுத்து வை.."

அவளுக்கு வேலை கொடுத்து... மனச் சோர்விலிருந்து அவளை விடுவிக்க அவன் முனைவது.. அவளுக்கும் புரிந்தது... அவன் சொல்லி... அவள் எதை மறுத்தாள்..? கண்களைத் துடைத்துக் கொண்டு.. கட்டிலை விட்டு இறங்கினாள்... குளியலறைக்குள் நுழையப் போனவள்... ஒரு நொடி நிதானித்து அவன் முகம் பார்த்தாள்...

"அவங்க சொன்னதுக்காக நான் அழலை.. அவங்க சொன்னதில உண்மை இருக்குங்கிறதுக்காக அழுகிறேன்.."

சட்டென்று அவள் குளியலறைக்குள் போய் விட்டாள்.. பாலமுரளியின் முகத்தில் ஆயிரம் உணர்வலைகள் எழுந்தன... குளியலறையை விட்டு வெளியே வந்தவள் முகம் கழுவியிருந்தாள்.. லேசான ஒப்பனையுடன் அறையை விட்டு வெளியேறினாள்...

அவளுக்கே உரித்தான சுகந்த நறுமணம் அறையை நிரப்பியிருப்பதை அவன் உணர்ந்தான்...

'அவங்க சொன்னதில உண்மையிருக்கு...'

சாட்டையடியாய் அவன் மனதில் அந்த வார்த்தைகள் விழுந்தன...

அவன் கீழே இறங்கி வந்தபோது... ராதிகா டைனிங் டேபிளின் அருகில் நின்றிருந்தாள்... மேகலா அதே நிலையிலேயே அமர்ந்திருக்க...

"அம்மாவைச் சாப்பிடக் கூப்பிடுடி.." என்றான் முரளி...

மகன்.. மருமகளிடம் பேசியதில் மேகலா நிமிர்ந்து பார்த்தாள்...

"வாங்கத்தை..." ராதிகா எதுவும் நடக்காததைப் போல... அமைதியான முகத்துடன் அழைத்தாள்...

பசியில்லை என்று மறுத்தால்.. மகனும்.. மருமகளும் சேர்ந்து பட்டினி கிடப்பார்கள் என்பதை அறிந்து வைத்திருந்ததால்... மேகலா எழுந்து வந்தாள்..

"நீயும் உட்காரும்மா... மீனாட்சி பரிமாறுவா..."

மேகலாவின் கனிவில் ராதிகாவின் கண்கள் கலங்கிவிட்டன...

'இப்படிப்பட்ட மாமியார் யாருக்கு கிடைப்பாங்க...'

தனக்காக இல்லாவிட்டாலும்... மாமியாருக்காகவாவது மலர்ந்த முகத்துடன் இருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றி விட்டது...

"அதுக்கென்ன அத்தை... எனக்கும் மீனாட்சி கையால சாப்பிடனும் போலத்தான் இருக்கு.. என்ன மீனாட்சி எனக்கு டிபன் எடுத்து வைப்பியா...?"

ராதிகா பேசியதில் முகம் மலர்ந்து போனாள் மீனாட்சி...

"ஆத்தி.. அதுக்குத்தானே நானிருக்கேன்..? மாட்டேன்னு சொல்லுவேனா..? நீங்க உட்காருங்கம்மா.."

பாலமுரளி ராதிகாவிடம் இயல்பாக பேச முயன்றான்.. அதைக் கண்டு கொண்டவளாக அவளும் பதில் சொன்னாள்.. அவர்களின் பேச்சில் மேகலாவையும் இணைத்துக் கொண்டார்கள்.. யாரும் அழைக்காமல் தானாகவே தன்னை அந்தப் பேச்சில் நுழைத்தக் கொண்டாள் மீனாட்சி...

அங்கே சிந்திச் சிதறிய பேச்சுத் துளிகளின் சாரல் வறண்டு கிடந்த அந்த வீட்டில் மழைத்துளிகளாக விழுந்து நனைத்தன... வெகு நாள்களுக்குப் பின்னால் எழுந்த கலகலப்பான பேச்சுசப்தத்தில் காவேரி வியப்புடன் சமையலறையை விட்டு வெளியே எட்டிப் பார்த்தாள்...

கோமதிநாயகத்தின் வீட்டு வளைகாப்புக்கு பாலமுரளியின் வீட்டிலிருந்து சீர் அனுப்பப் பட்டது... யாரும் போகவில்லை... அவர்களின் சார்பாக சதிஷ் அதைக் கொண்டு போய் கொடுத்தான்...

"என்ன கோமதி.. தேனூத்து பெரிய வீட்டிலிருந்து வேலை செய்கிறவங்க மூலமா சீர் வந்து சேர்ந்திருக்கு.. என்ன விசயம்..? அந்தத் தம்பிக்கு உன்மேல கோபமா..?"

இந்தக் கேள்வியை வளைகாப்புக்கு வந்திருந்த பெரியமனிதர்கள் மாற்றிமாற்றி கேட்டு வைத்தார்கள்... பெண்கள் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள்.. பாலமுரளியின் வீடு... கோமதி நாயகத்தின் குடும்பத்தை ஒதுக்கி வைத்துவிட்ட செய்தி அடுத்த சில நொடிகளில் தென்காசி வட்டாரத்தில் பரவி விட்டது...

"தெரியுமாலே சேதி..."

"என்னவாம்...?"

"தேனூத்து பெரிய வீட்டுக்காரரு கோமதி நாயகத்தை தள்ளி வைச்சுட்டாராமில்ல..."

"அப்படியா சேதி... அடங்கொப்புராளே..."

"என்னய்யா நீரா புலம்பிக்கிட்டு வாரீரு...?"

"நம்ம தேனூத்து பெரிய வீட்டுக் காரங்களுக்கும்.. கோமதிநாயகம் வீட்டுக்கும் தீராப்பகை உண்டாகிருச்சாம்டி..."

"இதைப் பாருலே... இப்படிக் கூட ஆகிப் போச்சா..?"

"என்னக்கா.. நீ என்னவோ யோசனையாவர்ற.."

"தேனூத்து பெரிய வீட்டுக்கும்... கோமதி நாயகம் வீட்டுக்கும் வெட்டுப்பழி... குத்துப்பழின்னு பகை வந்திருச்சாம்டி... இனிமே ரெண்டு வீட்டிலயும் தண்ணி புழங்கிக்க மாட்டாங்களாம்..."

கோமதிநாயகம் தலையில் கைவைத்து உட்கார்ந்தே விட்டார்... மகளின் வளைகாப்புக்கு வந்திருந்தவர்களில் முக்கால்வாசி உறவினர்கள்.. பாலமுரளியின் வீட்டுச் சீரை.. அவன் குடும்பத்தவர் எடுத்து வரவில்லையென்று தெரிந்த மறுகணமே இடத்தை காலி செய்து விட்டதில் அவர் கலவரமடைந்திருந்தார்...

"சீராவது... ஒன்னாவது.. வாட் இஸ் திஸ்.. நித்யா..? அந்த முரளியின் குடும்பம் வந்தா நமக்கென்ன.. வராவிட்டால் நமக்கென்ன..? ஹீ இஸ் தட் முரளி..? அவன் என்ன பெரிய இவனா..? உன் அப்பா.. அவன் வராததற்காக வருத்தப்படறதை நான் விரும்பலை... சொல்லிவை..." என்று சங்கர் பேசிய பேச்சில் அதைவிட ஆடிப் போய்விட்டார்...

"ஐயோ மாப்பிள்ளை.. சத்தமா பேசி வைக்காதீங்க.. யார்காதிலயாவது விழுந்து வைச்சா வம்பாப்போயிரும்.."

அவருடைய பயத்தில் சங்கர் வெறுத்தே போய்விட்டான்...

"என்னடி இது..? உன் அப்பாவுக்கு நான் மாப்பிள்ளையா... இல்லை அவன் மாப்பிள்ளையா..? எனக்கு முன்னாலேயே அவனை மாப்பிள்ளை... மாப்பிள்ளைன்னு உருகுகிறார்.. இன்றைக்கு என்னன்னா.. என் கோபத்துக்கு பயப்படாம.. அவன் பகை வந்திருச்சேன்னு பயப்படறார்.. என்னதான் நடக்குதுடி..?"

"இல்லைங்க.. இந்த சுத்து வட்டாரத்தில.. முரளி அத்தானுக்குத்தான் முதல் மரியாதை..." நித்யா மென்று விழுங்கினாள்...

"அத்தானா..?" சங்கர் கண் சிவக்க...

"நான் விவரம் தெரிஞ்ச நாளில இருந்து அவரை அப்படித்தான் கூப்பிடறேன்.. இன்னைக்கு புதுசாய் மாத்திக் கூப்பிட முடியுமா..?" என்று நியாயம் கேட்டாள்..

"இதோ பார் நித்யா.. உன் அப்பாவை மாற்ற முடியாது... ஆனா.. நீ மாறியாகனும்... அந்த முரளி எனக்கு எதிரி..."

"ஏன்..?" நித்யா புரியாமல் கேட்டாள்...

ஏனென்ற அந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் சிவந்த தன் விழிகளைத் திருப்பி வேறு திசையில் பார்த்து வைத்தான் சங்கர்...

ஏனென்ற கேள்விக்கு என்ன விடையைச் சொல்வான்..?

'நான் ஆசைப்பட்ட பெண்ணின் கழுத்தில் அவன் தாலியைக் கட்டி விட்டான்..' என்ற உண்மையை எப்படி அவனால் தன் மனைவியிடம் சொல்ல முடியும்..?

திருமணம் செய்து கொண்டாலும் நித்யாவிடம் கலகலப்பாக பேசிப் பழகாமல் சதா சிந்தனையுடன் இருந்தவனை... தன் பக்கம் இழுக்க... நித்யாவும் பகீரதப் பிரயத்தனங்களை செய்துதான் பார்த்தாள்... அவள் முயற்சி தோற்றுத்தான் போனது... ஆனாலும்... ஓர்நாளில் அவனாக அவளருகில் வந்தான்... காதலைக் காட்டாவிட்டாலும்... இருளில் கணவனென்ற உரிமையைக் காட்டினான்... பதிலே பேசாமல் அதையும் ஏற்றுக் கொண்ட நித்யா... வளைகாப்பு வரை வந்து நின்றிருக்கிறாள்...

இப்படிப்பட்ட வாழ்வில்.. அவன் முகம் திருப்பிக் கொண்டதும் அவள் மனதுக்குள் பதறிப் போனாள்...

"விடுங்க... நீங்க ஆம்பளைங்க... உங்களுக்குள்ள பகைவர ஆயிரம் காரணமிருக்கும்.. வீட்டிலிருக்கிற பொம்பளைகளுக்கு அதைப்பத்தி என்ன தெரியும்..? நாங்க தெரிஞ்சுக்கிட்டுத்தான் என்ன ஆகப்போகுது..? நீங்க என்ன சொல்றிங்களோ... அதை நான் கண்ணை மூடிக்கிட்டு செய்துட்டுப் போறேன்..."

"அந்த முரளிக்கு நீ இம்பார்டன்ஸ் கொடுக்கக் கூடாது..."

"அவரோட நான் அதிகம் பேசினதே இல்லை..."

"நான் சொன்னதைச் செய்.. அதை விட்டுவிட்டு தேவையில்லாமல் பேசாதே... அவன்கூட அதிகம் பேசித்தான் ஆகனுமா...?"

சங்கர் முறைத்த முறைப்பில் நித்யா நடுங்கி விட்டாள்...

"டிங்... டிங்.." என்று கோவில் மணி அடித்துக் கொண்டிருந்தது... கண்மூடி வேண்டிக் கொண்டிருந்த ராதிகாவின் கன்னத்தில் லேசான கண்ணீர்கோடு தெரிந்ததில் பாலமுரளி சங்கட்டப் பட்டுப் போனான்... கோவில் பிரகாரத்தை வலம் வந்தபோது... ராதிகா கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்...

அவள் மனதுக்கு ஒரு மாற்றமாக இருக்கும் என்றுதான் அவன் அவளை கோவிலுக்கு அழைத்து வந்திருந்தான்..

"கோவிலுக்குப் போகலாமா..?"

வழக்கம் போல பால்கனியில் தஞ்சம் புகுந்திருந்தவளைத் தேடிப் போய் அவன் கேட்டபோது அவள் விழிகளில் ஆச்சரியம் தெரிந்தது...

மறுத்துப் பேசாமல் கிளம்பி.. அவனுடன் வந்து விட்டாள்...

பிரகாரத்தை வலம் வரும்போது... அவன் மௌனத்தைக் கலைத்தான்...

"மழை நேரத்து சாயங்காலம்.. குளிர்ச்சியா இருக்கில்ல..?"

"ம்ம்ம்..."

"இந்த காத்தை ஊதக்காத்துன்னு எதுக்காக சொல்றாங்கன்னு தெரியலை... உனக்கு இதைப்பத்தி ஏதும் தெரியுமா...?"

"எனக்கு ஊதக்காத்துன்னாலே என்னன்னு தெரியாது..."

"குளிர் காத்தைத்தான் நாங்க ஊதக்காத்துன்னு சொல்வோம்..."

பேசியபடி மனைவியுடன் நடந்த பாலமுரளி... பிரகாரத்தின் வளைவில் "அத்தான்.." என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டு திரும்பிப் பார்த்தான்... அங்கே நித்யா நின்றிருந்தாள்...

'இவ எதுக்காக என்னைக் கூப்பிடறா...' பாலமுரளியின் முகம் சுருங்கியது... மனதுக்குள் கோபம் தோன்றியது...

ராதிகாவை சிநேகிதத்துடன் பார்த்தபடி அவர்களுக்கு அருகில் அவள்வர... ராதிகா நித்யாவின் மேடிட்ட வயிற்றைப் பார்த்தாள்... பாலமுரளியின் கோபம் அதிகமானது...

"அம்மா பேசினது தப்புத்தான் அத்தான்.. அதுக்காக நான் உங்ககிட்ட மன்னிப்புக் கேட்டுக்கறேன்..."

அதற்கு முன்னால் அதைப்போல அவள் கோர்வையாக பேசி முரளி கேட்டதில்லை... தவிர்க்க

முடியாத சில உறவனர் வீட்டு விசேசங்களில் அவளை சந்தித்திருக்கிறான்... ஓரிரு வார்த்தைகள் பேசியிருக்கிறான்... மற்றபடி... அவளை சமதையாக நினைத்து என்றுமே அவளிடம் முரளி நின்று பேசியதில்லை...

அப்படிப்பட்டவனிடம் நித்யா பேச வந்ததில் அவனுக்கு சிறிதளவுகூட உடன்பாடில்லை...

'சங்கருக்கு பெண்டாட்டியாகிட்டா... இவ பெரிய மனுஷின்னு நினைப்பு வந்திருச்சா... எங்கிட்டயே பேச்சு வார்த்தை நடத்த வர்றாளே...'

"பாரும்மா... இதையெல்லாம் நீ பேசி நான் கேட்கிற நிலைமையில இல்லை... என்கிட்ட மன்னிப்புக் கேட்கவும் ஒரு தராதரம் இருக்கனும்... உனக்கு அது இல்லை... பேசாம போயிரு..."

பாலமுரளியின் உதாசின வார்த்தைகளைப் பொருட் படுத்தாமல் நித்யா ராதிகாவின் அருகில் வந்து... அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள்... அவள் கண்கள் கலங்கியிருந்தன...

"எங்கம்மா ஒரு ஸாடிஸ்ட்... உங்களோட மனசை அவங்க புண்படுத்திட்டாங்க... அந்தப் பேச்சை மன்னிக்க உங்களாலே முடியாதுதான்... அத்தானோட கோபத்திலயும் நியாயம் இருக்குதான்.. ஆனா.. ராதிகா.. நான் அம்மா பேசின பேச்சுக்காக வெட்கப்படறேன்... ஒரு பொம்பளையா இருந்தும்... இன்னொரு பொம்பளையின் மனசை அவங்க புண்ணாக்கியிருக்காங்க... அவங்களை எங்க வீட்டில பேசாத பேச்சில்லை.. சொல்லுங்க.. நான் என்ன செஞ்சா.. உங்க மனசு ஆறும்..?"

மனதார வருந்தியவளின் பரிதவிப்பு முகத்தில் தெரிய... அவளின் கைகளை அழுத்தினாள் ராதிகா...

"நீங்க மனசை அலட்டிக்காம இருந்தாலே என் மனசு ஆறிவிடும்.. இந்த நிலைமையில நீங்க மனசை உழட்டிக்கக்கூடாது..."

மனைவியின் நித்யாவின் மீதான பரிவைவிட.. அவளின் தாய்மை மீதான பரிவில் பால முரளியின் மனதுக்குள் கோபம் கனன்றது...

வாராது வந்த மாமணிபோல்..
வந்தவனே..! எனையே ஏன் வெறுத்தாய்?

"அவகிட்ட அப்படி தணிஞ்சு பேசனும்கிற அவசியம் உனக்கில்ல... நானே பேசலைங்கிறப்போ... நீ எதுக்காக தேவையில்லாம அவகிட்டப் பேச்சை வைச்சுக்கிட்ட...?"

பாலமுரளி.. அன்றிரவு சீறிய போது... ராதிகா பெருமூச்சுவிட்டாள்... கடைசியில் பேச்சுச் சுதந்திரம் கூட அவளிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டதா...?

"பாவம்.. கர்ப்பிணிப் பெண்... என் கையைப் பிடிச்சு கண் கலங்கி நிற்கிறா... அந்த நிலையிலே இருக்கிறவகிட்ட ஆதரவாப் பேசினா... அதுவும் தப்பா..?"

"ஓ... கர்ப்பிணிப் பெண்... அதுதானே உன் கண் முன்னால வந்து நிற்குது...? அந்த சங்கர் பெண்டாட்டியை கர்ப்பிணியாக்கிட்டான்... நான் அப்படி... ஆக்காம பெண்டாட்டியை பேச்சுக்கேட்க வைச்சிட்டேன்... அதைச் சொல்லிக் காட்டற... அப்படித்தானேடி..."

"த்ச்சு... அப்படியெல்லாமில்லை..."

"அப்படியேதாண்டி... உனக்கு அதுதான் நினைவு.."

'ஆமாண்டா.. அதுதான் என் நினைவு...' என்று சொல்லி விட்டால்தான் என்ன என்ற வேகம் அவளுக்குள் கிளர்ந்தெழுந்தது...

நினைவு நினைவாகவே இருக்க.. மனமெல்லாம் ரணத்துடன் கண்மூடி உறங்க முயன்றாள்...

இரண்டு நாள் உர்ரென்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருந்தாலும்... அதை நீடிக்காமல்.. சீக்கிரத்திலேயே... இயல்பு நிலைக்கு திரும்பி விட்டான் பாலமுரளி...

"வாடி... கோவிலுக்குப் போகலாம்..."

அந்த வார இறுதியில் அவளை அழைத்துக் கொண்டு கோவிலுக்குப் போனான்... முடிந்த வரை அவளை வெளியில் அழைத்துச் செல்ல ஆரம்பித்தான்...

"படிச்ச படிப்பை வீணாக்காம... எனக்கு எதையாவது உருப்படியாய் செய்து உதவி பண்ணு..."

அவளை மில்லில் கொண்டு போய் அமர வைத்தான்... அவளுடைய மன ஆறுதலுக்காக அவன் செய்தது... உண்மையிலேயே அவனுக்கு பேருதவியாக மாறிவிட்டது...

ராதிகா அவனது மில்லின் வேலை நுணுக்கங்களைத் தெளிவாக அறிந்து கொண்டு விட்டாள்.. தொழிலாளர்களிடம் அவள் காட்டும் வழக்கமான கனிவில்... மில் அவளது கட்டுப் பாட்டுக்குள் மிக இயல்பாக வந்து விட்டது... பாலமுரளியின் வேலைப்பளு... அவனே எதிர்பாராத வகையில் குறைந்து விட்டது...

"தேவலையே... உன் தலையிலயும் மசாலா இருக்குடி.." முரளி பாராட்டினான்...

மற்ற தொழில்களைப் பார்க்க அவனுக்கு நேரம் கிடைத்ததில்.. அவன் புதிதாக பேக்டரி ஒன்றைத் தொடங்கும் ஏற்பாட்டில் இறங்கினான்.. அது சங்கருக்கு போட்டியான பேக்டரியாக உருவெடுக்கப் போகிறது என்று சதீஷ் கூற... ராதிகா அறிந்து கொண்டாள்... அதைப்பற்றி எந்த அபிப்ராயத்தைக் கூறினாலும் அது வில்லங்கத்தில் வந்து முடிந்து விடும் என்பதால் வாய் மூடி மௌனமாகி விட்டாள்...

புதிய தொழிலைத் தொடங்குவதற்கான வேலைகளுக்காக முரளி அடிக்கடி சென்னைக்கு போய் வர வேண்டியிருந்தது... அப்படி அவன் போகும் நாள்களில் ராதிகா மில்லையும்.. மற்ற தொழில்களையும் கவனித்துக் கொண்டாள்...

முதலிரண்டு தடவைகள்... அவளும் அவனுடன் சென்னைக்குக் கிளம்பிப் போய் விட்டு வந்தாள்.. ஆனால்.. அப்படி அவர்கள் போகும் தருணங்களில் ஏதேனும் ஒன்று நிகழ்ந்து... அவர்கள் பயணத்தை ரத்து செய்து விட்டு பாதியிலேயே திரும்பி வந்து விடும்படி ஆனது...

முதல்முறை... மேகலாவுக்கு காய்ச்சல் வந்து விட்டது.. மறுமுறை... ஜவுளிக்கடைக்கு சரக்குக் கொண்டு வந்த லாரி... விபத்துக்கு உள்ளானது... மூன்றாம் முறை.. மில்லில் இருந்த உயர்தர மெஷின் ஒன்று பழுதானது..

அதற்குப் பின்னால்... முரளியை மட்டும் சென்னைக்குப் போகச் சொல்லிவிட்டு... ராதிகா தேனூத்திலேயே தங்கி விட்டாள்...

"நம்ம ரெண்டு பேரில யாராவது ஒருத்தர் இங்கேயிருந்தா தேவலை..."

அவள் அப்படித் தேங்கி விட்டதில் முரளிக்கு உடன் பாடில்லை... அதை வாய்விட்டுச் சொல்லவும் அவனால் முடியவில்லை...

'என்கூட வந்தா மட்டும் என்ன சுகம் கிடைச்சிரப் போகுதுன்னு இவ நினைக்கிறாளா...?'

அவளது அருகாமை கிடைக்காததில் அவனுக்குள் கனல் கனன்று கொண்டிருந்தது... அதை அறியாமல்.. வாழ்வின் மீதான தன் ஆசைத் தீயை அணைக்கும் முயற்சியாய் வேலைக்குள் தன்னை அமிழ்த்திக் கொண்டாள் ராதிகா...

தனியாக சென்னைப் பயணங்களை மேற்கொண்ட முரளியின் மனதில் மட்டும்... மனத்தாங்கல் வளர்பிறையாய் வளர்ந்து கொண்டே இருந்தது...

அவன் தேனூத்தில் இருக்கும் நாள்களில்.. அவளருகிலேயே இருக்க விழைந்தான்.. அதையறியாதவளாக

ராதிகா வேலையில் மூழ்கும் போது அவனுக்குள் கோபம் துளிர்விட்டது...

ஒரு மாலை நேரப் பொழுதில்.. அவர்கள் கோவிலுக்குப் போய் விட்டு திரும்பிக் கொண்டிருந்த போது... எதிரே.. சங்கரும்.. நித்யாவும் குழந்தையுடன் வந்தார்கள்..

ராதிகாவைப் பார்த்தவுடன் சங்கர் தேங்கி நின்றுவிட.. அவன் கூட இருந்த நித்யாவிற்காக பல்லைக் கடித்தபடி.. முரளி அவர்களைக் கடந்து போகாமல் தேங்கி நின்றான்...

"எப்படியிருக்கீங்க ராதிகா..?" மலர்ந்த முகத்துடன் நித்யா கேட்டாள்...

"நல்லாயிருக்கேன்... நீங்க எப்படியிருக்கீங்க.." பதிலுக்குக்கேட்ட ராதிகாவின் பார்வை.. நித்யாவின் கையிலிருந்த பெண் குழந்தையின் மீது படிந்தது...

அதை உணர்ந்தவளாக நித்யா.. பெருமையுடன் சிரித்தாள்...

"பாப்பாவுக்கு என்ன பெயர் வைச்சிருக்கீங்க..?" ராதிகா ஆவலுடன் கேட்டாள்...

"ராதா... இவர்தான் பெயர் வைச்சார்.." நித்யா சங்கரை காதலுடன் பார்த்துக் கொண்டாள்...

பதிலுக்கு காதலாக மனைவியைப் பார்க்காமல்... ராதிகாவையே பார்த்துக் கொண்டிருந்தான் சங்கர்... அவனின் அந்தப் பார்வையிலும்.. 'ராதா..' என்ற பெயரிலும்... பாலமுரளி எரிமலையாகியிருந்தான்...

பேசிக் கொண்டிருக்கும் போதே.. நித்யாவின் கையிலிருந்த குழந்தை வழுக்கிக் கொண்டு நழுவ...

"பார்த்து.. நித்யா.. குழந்தை பத்திரம்.." என்றபடி.. சட்டென்று குழந்தையை தாங்கிப் பிடித்துக் கொண்டாள் ராதிகா...

"இவ இப்படித்தான் ராதிகா.. கையில நிற்காம விசும்பிக்கிட்டே இருப்பா.." தாய்மையின் பெருமிதத்தோடு கூறினாள் நித்யா...

ராதிகாவின் கையிலிருந்த குழந்தையின் பட்டுப் போன்ற மென்மையில் அவள் குழைந்து போயிருந்தாள்.. பூப்போன்ற அந்தக் குழந்தை தன் பொக்கை வாயைத் திறந்து சிரிக்க... ராதிகாவின் விழிகள் ஒளிர்ந்து விட்டன..

"என்னம்மா..? என்ன செல்லம்...?"

தன்னை மறந்து குழந்தையை கொஞ்சிவிட்டாள் ராதிகா...

அன்று இரவு அவளைத் தூங்க விடாமல் வசை பாடிக் கொண்டிருந்தான் முரளி...

"நீ வேணும்னே அவன் குழந்தையை வாங்கினடி.. அதுக்கு ராதான்னு பெயர் வைச்சிருக்கானே... அதுக்காக வாங்கினயா..?"

"இல்லைங்க.. அது கீழே விழப் பார்த்துச்சு..."

"அதுக்காக... நீ கையில தூக்கனுமா..? அதைப் பெத்தவ அதைப் பார்த்துக்க மாட்டாளா...?"

முரளியின் பேச்சில் கண்கலங்கி விட்டாள் ராதிகா...

"என்னால பெத்துக்கத்தான் முடியாது.. மத்தவங்க பெத்த குழந்தையைத் தூக்கி.. கொஞ்சவும் கூடாதா..?"

அந்தக் கேள்வி.. சம்மட்டியாய் முரளியின் இதயத்தை தூக்கியது...

'இவ மனசில குழந்தைக்காக... இந்த அளவுக்கு ஏக்கம் இருக்கா..?'

அன்று இரவு முழுவதும் அவன் தூங்கவேயில்லை.. சற்று நேரத்தில் தூங்கி விட்ட ராதிகாவின் நிர்மலமான முகத்தைப் பார்த்தபடி.. விடியும் வரை விழித்திருந்தான் பாலமுரளி..

குளித்து விட்டு வந்த முரளி தயாராக எடுத்து வைக்கப் பட்டிருந்த உடைகளை அணிந்து கொண்டான்.. அதன் பொருத்தமான நிறத்திலும்.. நேர்த்தியிலும் அவனுக்குள் பாராட்டுத் தோன்றியது...

அவனுக்கான உடைகளை ராதிகாதான் வாங்கி வருவாள்.. அதிலெல்லாம் பாலமுரளி தலையிடமாட்டான்.. அதைப்போல... அவன் வெளியூருக்குப் போகும் போதெல்லாம் கண்ணில் பட்டு.. கருத்தைக் கவரும் சேலைகளையும்.. நகைகளையும் அவளுக்கென்று வாங்கி வந்து குவித்து விடுவான்.. அதை ராதிகா விரும்பி அணிந்து கொண்டாலும் அவள் முகத்தில் மலர்ச்சி இருக்காது.. அதை வரவழைக்க என்னசெய்வது என்று தான் முரளி தலையைப் போட்டுப் பிய்த்துக் கொண்டான்.. தலைவலித்ததுதான் மிச்சம்.. ஒரு வழியும் தென்படவில்லை..

மாடிப்படிகளில் இறங்கியபோதே ஹாலில் ஒலித்துக் கொண்டிருந்த பாட்டுச் சத்தம் அவன் காதில் விழுந்தது...

"பூவாகி... காயாகி...
கனிந்த மரம் ஒன்று..
பூக்காமல்... காய்க்காமல்...
இருந்த மரம் ஒன்று..."

பாலமுரளியின் புருவங்கள் சுருங்கின... அவன் வேகமாகப் படியிறங்கினான்.. அவன் நினைத்ததுதான் அங்கே நடந்து கொண்டிருந்தது...

அவனுக்கு காலை உணவை பரிமாற வேண்டிய கடமையை மறந்து போனவளாக ராதிகா டிவியைப் பார்த்தபடி கற்சிலையாக நின்று கொண்டிருந்தாள்.. அவள் கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது...

பாலமுரளி உதட்டைக் கடித்துக் கொண்டான்.. இந்தக் காட்சியைக் கட்டாயமாக வீட்டிலிருக்கும் மற்றவர்கள் கவனித்துக் கொண்டிருப்பார்கள் என்று அவனது உள்ளுணர்வு சொல்லியது... பார்வையைச் சுழற்றினான்.. அவன் நினைத்ததுதான் நடந்து கொண்டிருந்தது... ராதிகாவை பரிதாபத்துடன் பார்த்தபடி மீனாட்சி கண்ணைக் கண்ணைத் துடைத்துக் கொண்டிருந்தாள்...

'ம்ஹீம்.. இவ பழைய சினிமாவைப் பார்த்துப் பார்த்து கண்ணீர் விடறவளாச்சே.. இதைப் பார்த்தா சும்மாயிருப்பாளா...' மானசீகமா தலையில் கை வைத்துக் கொண்டான் பாலமுரளி..

மேகலா பூஜையறையை விட்டு வெளியே வரவேயில்லை... சமையலறையே கதியென்று கிடக்கும் காவேரி... அடிக்கடி தலையை வெளியே நீட்டி ராதிகாவை கருணைப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள்...

'இவளை என்ன செய்தால் தேவலாம்...?'

கோபமாகத்தான் நினைத்தான்... ஆனால் ராதிகாவைப் பார்த்தவுடன் அந்த கோபம் பறந்தோடி விட்டது... அவளது சோகமுகம் அவனது நெஞ்சத்தைக் கிள்ளியது...

'ஏண்டி இப்படி துயரம் பண்ற...?'

எப்போதும் அவளிடம் கேட்கும் கேள்வியை மனதில் நினைத்துக் கொண்டான்.. அவளின் குழந்தை மீதான ஆசையை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது... ஆனால்.. இந்த அளவுக்கு அவள் பாதிப்புக்கு ஆளாவாள் என்று அவன் நினைத்துப் பார்க்கவில்லை...

இரண்டு நாள்களுக்கு முன்னாலும் இப்படித்தான்..

வீட்டுக்கு வந்தவன்.. அவளைக் காணாமல் மாடிக்குத் தேடிப் போனான்..அவளை அங்கே காணோம்.. மாடிப் பால்கனியிலிருந்து பாட்டுச் சப்தம் மட்டுமே காற்றில் தவழ்ந்து வந்தது...

"இலையில்லாத பூக்களா...?
கிளையில்லாத கொடிகளா..?
மகவில்லாத அன்னையா..?

மகனே..! நீ இல்லையா...
சொல்லச் சொல்ல தாய் மனம்...
மெல்ல மெல்ல வேர் விடும்..
தெய்வமே..! தாமிடம்..
தேரேறி ஓடி வரும்..."

பாலமுரளியைச் சூழ்ந்து நின்ற பாடல் வரிகளில் ஸ்தம்பித்து நின்று விட்டான் அவன்.. அவளுடைய கண்ணீர் தோய்ந்த குரல் விசும்பிக் கொண்டிருந்தது...

அவனுடைய மனக்கண்ணில் அவனது குழந்தையை கையில் ஏந்தி ராதிகா கொஞ்சிக் கொண்டிருந்தாள்.. அவள் குரலில் வழிந்தோடிய தாய்மையுணர்வு... அவள் முகத்தில் வழிந்தோடியது.. அவனது மகனைக் தூக்கிக் கொண்டிருந்தவளைப் பார்க்கப் பார்க்க... அவனுக்குள் ஆண்மையின் கர்வம் இமயமாக எழுந்து நின்றது...

"சொல்லடா... வாய்திறந்து...
அம்மா...! என்று..
துன்பமே மறந்து விட்டேன்...
உன்னால்.. இன்று..."

'அம்மா...' என்ற அழைப்பிற்காக அவள் ஏங்கும் ஏக்கத்தை அவளின் விசும்பல் ஒலி... பிட்டுப் பிட்டு வைக்க.. முரளி.. அப்படியே திரும்பி வெளியே போய்விட்டான்... அன்றிரவு அவன் தூங்க நெடுநேரமானது..

உன்னிடம் யாசகம் கேட்க...
என்னிடம் தயக்கம் இல்லை...

அந்த வார இறுதியில் பாலமுரளி சென்னைக்கு கிளம்ப வேண்டி வந்தபோது... சஞ்சலத்துடனே கிளம்பிச் சென்றான்... ராதிகாவின் மனதிலிருந்த ஏக்கத்தை அறிந்த பின்பும்.. அதைத் தீர்த்து வைக்க அவன் விரும்பவில்லை.. அவன் போட்டிருந்த வேலியைக் கடக்காமல் மீதி வாழ்க்கையை நடத்திவிட வேண்டுமென்றே அவன் நினைத்தான்...

'கொஞ்சநாள் மருகுவா.. அதுக்கப்புறம் சரியாகிருவா..'

எப்படிச் சரியாவாள் என்று நினைத்துப் பார்ப்பதை அவன் தவிர்த்தான்... அந்த நிலைமையில் அடிக்கடி அவளைப் பிரிந்து வெளியூர் செல்வதும் சரியான ஒன்றுதான் என்று அவன் நினைத்துக் கொண்டான்...

முரளி சென்னைக்குப் போன பின்பு... வெறிச்சோடிக் கிடந்த அவர்களின் அறையில் தனித்துத் தூங்கமுடியாமல் தலையணையை கண்ணீரால் நனைத்தாள் ராதிகா.. பாதி இரவுக்கு மேல் அவள் தூங்க முயன்ற போதுதான்.. அவளது அறைக்கதவு தட்டப்பட்டது... திறந்தவள் திகைத்து நின்றாள்..

"ரா... ராதிகா.." மேகலாவின் மூச்சுத் திணறியது...

"அத்தை... என்னாச்சு..?" ராதிகா பதறிவிட்டாள்..

எப்போதும் மேகலாவிற்கு துணையாக படுத்துக் கொள்ளும் காவேரி... அந்த வீட்டோடு இருந்தாள்... எந்த நேரத்திலும் அவளின் சேவை தேவைப்பட்டதால்... பக்கத்து கிராமத்திலிருந்து.. வீட்டோடு தங்கியிருந்து சமையல் செய்ய வேண்டும் என்று சொல்லி அழைத்து வரப்பட்டவள் அவள்..

அன்றைக்கென்று பார்த்து... அவள் வீட்டிலிருந்து ஆள் வந்து அவளை அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள்...

காவேரிக்கென்று யாரும் இல்லை... சொந்த மென்று சொல்லிக்கொள்ள... அவளது தம்பி குடும்பம் மட்டும்தான்...

"தம்பி மகளுக்கு சடங்கு சுத்தறாங்கம்மா... அத்தையா நான் முன்னால நின்னு சீர் செய்யனும்..."

அவள் கேட்டபோது கூடாது என்று சொல்ல... அந்த வீட்டாரால் எப்படி முடியும்...?

காவேரி ஊருக்குப் போய் விட்டிருந்தாள்... மீனாட்சியின் உதவியுடன் ராதிகா சமையலை சமாளித்து விட்டிருந்தாள்.. அன்று இரவில் படுக்க வரவதற்கு முன்னால்.. மேகலாவிற்கு கொடுக்க வேண்டிய மாத்திரை மருந்துகளைக் கொடுத்து விட்டுத்தான் ராதிகா தூங்க வந்தாள்...

அப்படியிருக்கும் போது.. மேகலா ஏன் இப்படி நிற்கிறாள்..?

ராதிகாவை பயம் பீடித்துக் கொண்டது.. அவள் மேகலாவைத் தாங்கிப் பிடித்து.. சோபாவில் படுக்க வைத்தாள்... மேகலாவின் நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பியிருந்தன...

"நெஞ்சு வலிக்குது... ராதிகா..." அவள் புலம்பித் தவித்தாள்...

நள்ளிரவு வீட்டில் காவல்காரனும்... தோட்டக்காரனும் மட்டும்தான்.. அவர்கள் இருவருக்கும் கார் ஓட்டத் தெரியாது... நாச்சியப்பனும் அங்கே இல்லை... மீனாட்சி பதறிப் போனாள்... சமையலுக்கு அவள் உதவலாம்... காரை எப்படி ஓட்டுவாள்..?

ராதிகா வினாடிப் பொழுதிற்கு மேல் தாமதிக்கவில்லை...

"அத்தை வாங்க..." மேகலாவை கைத்தாங்கலாக தாங்கிக் கொண்டாள்...

அவளை மெதுவாக நகர்த்தி... காரின் பின் சீட்டில் படுக்க வைத்து விட்டு.. காரை எடுத்து விட்டாள்...

அதுவரை அவள் காரை ஓட்டியதில்லை... காலேஜில் படித்துக் கொண்டிருந்த போது... கூடப் படித்த திவ்யாவின் காரில்.. சில நாள்கள் ஓட்டிப் பழகியிருக்கிறாள்... அந்தப் பரிச்சயம் மட்டும்தான்...

என்ன தைரியத்தில் அவள் காரை வெளியே எடுத்தாளென்று அவளாலேயே சொல்ல முடியவில்லை.. எப்படியாவது மேகலாவைக் காப்பாற்றி விட வேண்டுமென்ற வெறி மட்டுமே அவளை ஆட்சி செய்து கொண்டிருந்தது...

கிராமத்தைக் கடந்து.. தென்காசிக்குச் செல்லும் சாலையில் கார் கிளம்பிய போது.. வழியில் எதிர்படும் வாகனங்களை நடுக்கத்துடன் எதிர்கொண்டாள் ராதிகா.. நல்ல வேளையாக... அந்தச் சாலையில் அதிகமான போக்குவரத்து இருக்கவில்லை... ஒரு வழியாக அவள் மருத்துவ மனையை அடைந்து... பதட்டத்துடன் காரை விட்டு இறங்கி.. மேகலாவை கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு.. மருத்துவ மனைக்குள் நுழைந்து விட்டாள்..

"கொஞ்சம் சிவியரான அட்டாக்தான் மிஸ்டர் முரளி... ஒரு நிமிசம் தாமதிச்சிருந்தாக்கூட.. உயிருக்கே ஆபத்து வந்திருக்கும்.. பட்... உங்க வொய்ப்... மகா தைரியசாலி... அந்த மிட்நைட்டில் தனியாய் காரை டிரைவ் பண்ணி.. உங்க அம்மாவை கரெக்டான நேரத்தில கொண்டு வந்து சேர்த்திட்டாங்க..."

சென்னையிலிருந்து திரும்பி வந்த முரளியிடம் டாக்டர் இதைக் கூறியபோது.. ராதிகா அதைக் கவனிக்காமல்... மேகலாவின் முகத்தைத் துடைத்து விட்டுக் கொண்டிருந்தாள்...

அவளின் கடமை மறவாத சேவையை கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் பாலமுரளி...

'இவளுக்கு நான் கடன் பட்டிருக்கிறேன்.. இவள் என் தாயின் உயிரைக் காப்பாற்றிக் கொடுத்தவள்..' அவனுக்குள் நன்றியுணர்வு பொங்கி எழுந்தது...

"உங்க அம்மா மனதிலே ஏதோ வேதனையிருக்கு முரளி... அது இருக்கக் கூடாது... அதனாலதான்... இந்த அட்டாக்..."

டாக்டர் கூறியபோது அவனால் எதையும் பேச முடியவில்லை...

மேகலா உடல்தேறி வீட்டிற்கு வந்து விட்டாள்.. வீடு இயல்பு நிலைக்கு திரும்பி விட்ட ஓர் நாளில்.. பாலமுரளி ராதிகாவுக்கு நன்றி சொன்னான்...

"உனக்குத் தெரிஞ்சது கொஞ்சம்டி... தெரியாதது அதிகம்... என் அப்பாமேல உசிரை வைச்சிருந்த எங்க அம்மா... அவர் போனபின்னாலே அவரோட போகாம இந்த பூமியிலே இருந்தது எங்களுக்காகத்தான்.. நீ அவங்க உயிரைக் காப்பாத்திக் கொடுத்திட்ட.. ரொம்ப நன்றிடி..."

அவளென்ன மூன்றாம் மனுஷியா..? இவன் எதற்காக நன்றி சொல்கிறான் என்ற நினைவில் ராதிகா மௌனித்தாள்...

"கேளுடி.. உனக்கு என்ன வேணும்னு கேள்... இதுக்காக உனக்கு பரிசு கொடுக்கனும்னு நான் ஆசைப்படுகிறேன் ராதிகா.. வைர நகை வேணுமா..? உனக்குன்னு ஒரு கார் வேணுமா..? சென்னையிலே உன் பெயரில் பங்களா வேணுமா..? இல்லை... வெளிநாட்டுக்கு சுற்றுப் பயணம் போகனுமா..? என்ன வேணுமோ கேளுடி.. நீ எதைக் கேட்டாலும் தருகிறேன்..."

அதுவரை அவளை மூன்றாம் மனுஷியாக அவன் பாவித்துக் கொண்டிருக்கும் நினைவில் முகம் வாடி

நின்றவளின் முகம் ஒளிர்ந்தது... நிமிர்ந்து அவன் முகத்தை தீர்க்கமாகப் பார்த்து.. கண்கள் ஜ்வலிக்க கேட்டாள்...

"நான் எதைக் கேட்டாலும் தருவீங்களா..?"

"நீ எதைக் கேட்டாலும்.. கட்டாயம் நான் அதைத் தருவேன்..." அவன் உறுதியான குரலில் வாக்குக் கொடுத்தான்...

"எனக்கு உங்க குழந்தைக்கு அம்மாவாகும் வரம் வேணும்..." அவள் கேட்டு விட்டாள்..

நிறுத்தி நிதானமாக அவள் கேட்ட விதத்தில் அவன் அதிர்ந்து விட்டான்.. இப்படியொரு வேண்டுகோளை அவன் எதிர்பார்க்கவில்லை...

"என்னது..?"

"யெஸ்.. நான் உங்க குழந்தைக்கு அம்மாவாகனும்.."

"ராதிகா..."

"நானா எதையும் கேட்கல.. நீங்கதான் உனக்கு என்ன வேணுமோ கேள்ன்னு சொன்னீங்க... எனக்கு வைர நகை எதுக்கு...? கார் எதுக்கு..? பங்களா எதுக்கு..? உலகத்தைச் சுற்றிப் பார்க்கிற வெல்டு டூர்தான் எதுக்கு..? இது அத்தனையும் உங்க குழந்தைக்கு ஈடாகுமா...?" அவளது கேள்வியில் இருந்த நியாயத்திற்கு அவனால் பதில்சொல்ல முடியவில்லை...

"ராதிகா..."

"உங்க குழந்தையை நான் வயிற்றிலே சுமக்கனும்.. என்னைப் பார்த்து இவ இன்னும் குழந்தையைப்

பெத்துக்கலன்னு பேசுறவங்க முன்னாலே பெருமையா வலம் வரனும்.. என்னை வளைகாப்புக்கு வரக்கூடாதுன்னு சொன்னவங்க முன்னாலே... நானும் வளைகாப்பு செய்துக்கனும்.. அவங்க கண்ணு முன்னாலே உங்க குழந்தையைப் பெத்துக் காட்டனும்.. அந்தக் குழந்தை என்னை அம்மான்னு கூப்பிடறப்போ... ஆனந்தத்திலே மகிழ்ந்து போகனும்.."

அவள் கண்கள் ஜ்வலிக்க பேசிக் கொண்டே போனாள்...

"ராதிகா..."

"அவனை என் மடியில் படுக்க வைச்சு... தாலாட்டுப் பாடித் தூங்க வைக்கனும்... அவனுக்கு நிலாவைக் காட்டி.. கதை சொல்லி சோறுட்டனும்..." அவள் விழிகளில் தாய்மை மிளிர்ந்தது...

"ராதிகா..."

"இந்த வரத்தைத்தான் நீங்க கொடுக்கனும்.. எனக்கு வேற எதுவும் வேணாம்... எனக்கு ஏதாவது கொடுக்கனும்னு நினைச்சா... உங்க குழந்தைக்கு அம்மாவாகிற பாக்கியத்தைக் கொடுங்க..."

ராதிகா பேசப்பேச... அவளின் விழிகளில் பிரதிபலித்த ஆயிரமாயிரம் உணர்ச்சி கலவைகளில் பாலமுரளி சிலையாக நின்று விட்டான்... மனதில் இருப்பதை கொட்டி முடித்துவிட்ட ராதிகா கீழே இறங்கிச் சென்று விட்டாள்... பாலமுரளியும் வெளியே போய் விட்டான்...

அன்று இரவு வந்தது... நிலவும் வந்தது.. அவனும் வீட்டுக்கு வந்தான்... சோர்வாக அமர்ந்திருந்த மேகலாவின் அருகில் அமர்ந்து... அவளின் உடல் நலத்தை விசாரித்தான்...

"சாப்பிட்டிங்களாம்மா..."

"இந்நேரம் வரைக்கும் சாப்பிடாம இருந்தா உன் பெண்டாட்டி என்னை சும்மா விட்டு விடுவாளா... அப்பவே சாப்பிட வைச்சிட்டா..." மேகலாவின் குரலில் பெருமிதம் தொனித்தது...

"மாத்திரை போட்டுக்கிட்டிங்களா..."

"அதையும் ராதிகா கொடுத்திட்டாப்பா..."

அவனுக்கென்று எந்தக் கடமையையும் வைக்காமல்... அவனது தாயை தன் தாயைப் போல... பரிவுடன் பார்த்துக் கொள்ளும் மனைவியின் மீது அவனுக்குள் பிரியம் பொங்கியது...

திரும்பிப் பார்த்தான்... தாயிடம் அவன் பேசுவதைப் கேட்டும்... கேட்காததைப் போல.. அவனுக்காக தட்டை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள் ராதிகா...

'இவளுக்கு என் குழந்தைக்கு அம்மாவாகனுமாம்..'

அவளை ஊன்றிக் கவனித்தான்.. அவள் முகத்தில் சாந்தம் நிலவியது... முதன் முதலில் அவளைப் பார்த்தபோது இருந்த துறுதுறுப்பு மறைந்து போய்.. நிதானம் வந்திருந்தது... நீண்ட பின்னலில் பூ வைத்திருந்தாள்... அது அவளது தோளின் மீது வழிந்து..

அவளின் அழகை அதிகப் படுத்திக் காட்டியது... நெற்றி வகிட்டின் குங்குமத்தில் மங்கலமாக அவள் தெரிந்தாள்.. புடவைத் தலைப்பை இழுத்துச் செருகி.. பொறுப்பான குடும்பத் தலைவியாக... இங்கும் அங்கும் அவள் நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தபோது... அந்த ராதிகாவா.. இந்த ராதிகா..? என்று அவனுக்குக் கேட்கத் தோன்றியது..

அவன் பார்ப்பதை அவள் உணராமல் இருக்க மாட்டாள் என்பது அவனுக்குத் தெரியும்... அதைத் தெரிந்தும்... தெரியாததைப் போல அவள் பாவனை செய்து கொண்டிருந்தாள்...

"சாப்பிடப் போடா..." மேகலா சொன்னாள்...

'ஏன்... அவ சாப்பிடக்கூப்பிட மாட்டாளா..?' அவன் அசையாமல் அமர்ந்திருந்தான்...

அவன் வந்து விடுவான் என்ற எதிர்பார்ப்பில்... மீனாட்சியிடம் இருந்த பாத்திரங்களை வாங்கி வைத்துக் கொண்டிருந்தவள்.. அவன் எழுந்து வராததில் விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள்... அவனும்.. அவளையே பார்த்துக் கொண்டிருக்க.. இருவர் பார்வையும் பின்னிப் பிணைந்தன...

அவள் முகத்தில் வெட்கச் சிகப்பு பரவ... அவசரமாய் விழிதாழ்த்திக் கொண்டாள்.. பாலமுரளியின் கண்கள் மின்னின...

இது போன்ற உணர்வை அவன் உணர்ந்து வெகு நாள்களாகி விட்டிருந்தன... ஒன்று அவள் மௌனித்தாள்.. இல்லையென்றால் அவன் மௌனித்தான்...

இப்படி மௌன நாடகம் ஆடிக் கொண்டிருந்தவர்களின் மத்தியில் பூ மலருமென்றோ.. அதன் நறுமணத்தை நுகர்ந்து இருவரும் மனம் மயங்கிப் போய் விடுவார்களென்றோ... அவன் நினைத்தும் பார்க்கவில்லை..

"ராதிகா காத்திருக்கிறா பாரு... போயேண்டா..." மேகலாவின் குரலில் வற்புறுத்தல் இருந்தது...

பாலமுரளி அசையவேயில்லை.. அந்த இரும்பு மனிதனின் கண்களில் தெரிந்த ஏதோ ஒன்றில் ராதிகா பேச்சிழந்தாள்.. அவளைப் பேசவைக்க வேண்டுமென்ற அவனது எண்ணம் அவளுக்கும் புரிந்தது... பேச அவளுக்கும் ஆசைதான்...

ஆனால் பாவம்... அவள்தான் என்ன செய்வாள்..? அவள் வாயைத் திறந்தால் காற்றுத்தானே வந்து தொலைக்கிறது... குரல் எழும்ப மாட்டேனென்று பிடிவாதம் பிடிக்கிறதே...

'எனக்கென்ன நேற்றுத்தான் இவனுடன் கல்யாணம் ஆகியிருக்கிறதா..'

தன்னையே அவள் கடிந்து கொண்டாள்.. இந்த வெட்கம் எதற்காக என்று விரட்டிப் பார்த்து விட்டாள்... என்ன செய்வது..? அவளை விட்டுப் போக மாட்டேனென்று அடம் பிடித்துக் கொண்டு.. வெட்கம் அவள்மேல் அட்டை போல ஒட்டிக் கொண்டிருக்கிறதே...

அவள் அழைக்காமல்... அவன் சாப்பிட வரமாட்டான் என்பது அவளுக்குத் தெரிந்து விட்டது- வேறு வழியில்லாமல் தரையைப் பார்த்தபடி...

"சாப்பிட வாங்க..." என்று அழைத்து விட்டாள்...

எழுந்து வந்தவனின் முகத்தில் சிரிப்பிருந்தது..

'என் வெட்கத்தைப் பார்த்தால்.. இவனுக்கு சிரிப்பாய் வருகிறதாமா..?' அவள் மனதிற்குள் வெகுண்டாள்...

டைனிங் டேபிளில்.. அவன் அவளைத் தொட்டுத் தொட்டுப் பேசினான்.. அவள் பரிமாறுப் போது... அவள் கையைப் பிடித்து தடுத்து மறுத்தான்... ராதிகாவின் கை விரல்கள் நடுங்க ஆரம்பித்தன... என்றைக்குமில்லாமல் அவன் காட்டிய நெருக்கத்தில்... அவளது கோரிக்கையை அவன் ஏற்றுக் கொண்டு விட்டதைப் போல அவள் உணர்ந்தாள்...

இதயம் படபடக்க... கால்கள் பின்ன... கைவிரல்கள் நடுங்க... முதலிரவு அறைக்குள் அடியெடுத்து வைக்கும் புதுமணப்பெண்ணைப் போல... அவர்களின் படுக்கையறைக்குள் அடியெடுத்து வைத்தாள் ராதிகா...

'என்ன முடிவெடுத்திருப்பான்...?

நான் கேட்ட வரத்தைத் தருவானா...?

இல்லை மறுப்பானா..?'

அவள் இதயம் கேட்டது...

முத்துலட்சுமி பதிப்பகம்

அம்மம்மா கேளடி தோழி...

பாகம் - 5

ாஜி பதிப்பகம் ★ அம்மம்மா கேளடி தோழி... பாகம் - 5 ★ முத்துலட்சுமி ர

ஜென்மங்களை சுட்டுக் கொன்றிருக்க மாட்டார்களா..?

வெள்ளயரை விரட்டி விட்டோம்... விடுதலையை வாங்கி விட்டோம்... எதற்காக..? இப்படி சாலையில் நடந்து போகும் பெண்களை சின்னாப் பின்னமாக்கி.. நடுச்சாலையிலும்... புதர்களிலும்.. ரயில்வே தண்டவாளங்களிலும்... தூக்கி எறிவதற்காகவா..?

டெல்லியில் மட்டுமா இது நடக்கிறது..? நாடெங்கும் நடக்கிறது.. அங்கே சீறி எழுகிறார்கள்.. மற்றவர்கள் வேதனையுடன் மனதுக்குள் பொருமுகிறார்கள்.. மற்றபடி அங்கே வெடிக்கும் துக்கம்... இங்குள்ளவர்களின் மனதிலும் வெடிக்காமல் இல்லை...

பெண்ணாக பிறந்து விட்டேன்.. என் மனம் நடுங்குகின்றது... உயிர் துடிக்கின்றது.. இறந்து போன பெண்களின் மரணக்குரலின் அவலங்கள் என் தூக்கத்தை சிதைக்கின்றன... சொல்லி அழ வார்த்தைவராத என்னால் என்ன செய்ய முடியும்..?

என் மன வலியை எழுத்தில் பதிவு செய்வதைத் தவிர...

– நட்புடன் –

முத்துலட்சுமி ராகவன்
அனுப்ப: muthulakshmiraghavan24@gmail.com

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

"அம்மம்மா... கேளடி தோழி..!"

பாகம் – V

நீ சொன்ன சொல்லுக்காக...
நின்சரணை நான் ஏற்றேன்...

அந்த இரவு குளுமை நிறைந்ததாக இருந்தது... மார்கழிப் பனியின் மகிமையை உணர்த்துவதாக இருந்தது... மாடி ஹாலை ஒட்டியிருந்த பெரிய ஜன்னல்களின் வழியாக வந்த ஊசி போன்ற பனிக்காற்று ராதிகாவின் உடலைத் தீண்டி விளையாடியது... அந்த குளிர் காற்றின் உபயத்தினால் ராதிகாவின் உடல் குளிர்வதற்குப் பதிலாக தகிக்க ஆரம்பித்தது...

'என்ன முடிவெடுத்திருப்பான்..?'

அவளால் அனுமானிக்கவே முடியவில்லை... உனக்கு என்ன வேண்டுமோ கேள் என்றான்... எனக்கு உன் குழந்தைக்கு அம்மாவாகும் பாக்கியம் வேண்டும் என்று அவள் சொன்னாள்... அவள் சொன்னதைக் கேட்டவன் மறுமொழி கூறாமல் வெளியே சென்று

விட்டான்.. திரும்பி வந்தவனின் இறுகிப் போன முக பாவத்திலிருந்து எதையும் அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை... அவன் மறுப்பானோ.. இல்லை அவளை அணைப்பானோ என்று அறியாதவளாய் படபடக்கும் உள்ளத்தோடு.. அவள் அடிமேல் அடியெடுத்து வைத்து... அவர்களின் அறைக்குள் நுழைந்தாள்...

ஏஸியின் இதமான குளிர் அவளுக்கு மார்கழிப் பணிக்காற்றை நினைவூட்டியது... அந்த ஊதக்காற்று உடலைத் துளைத்ததைப் போல... ஏஸியின் குளிர்காற்று.. அவள் உடல் தொட்டு விளையாடியதில் அவள் தொய்ந்து போனாள்...

'என்ன வாழ்க்கை இது...!'

அவள் கண்களின் ஓரமாக கண்ணீர் அரும்பு கட்டியது... ஒரு வருடமா.. இல்லை இரண்டு வருடமா..? அவற்றையும் தாண்டி பாலமுரளி தள்ளி நிற்கும் விரதத்தை தீவிரமாக கடைபிடித்து வந்தால் அவளும்தான் என்ன செய்வாள்..?

குற்றவாளிக்கு தண்டனை கொடுக்கலாம்.. குற்றம் செய்தவன் தண்டனை அனுபவிக்கலாம்...

இங்கே அவளும் குற்றம் செய்யவில்லை... அவனும் குற்றம் செய்யவில்லை.. இருந்தும் அவளுக்கு தண்டனை கொடுத்துவிட்டு அவனும் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறானே.. இதை எங்கே போய் சொல்வது..?

கடவுளிடம்தான் சொல்ல முடியுமென்று அவளும்.. இரவு பகலாய் அந்தக் கடவுளின் காலடியில் கதறிவிட்டாள்.. ஏனோ தெரியவில்லை... எல்லோரின் குறைகளையும் தீர்க்கும் பரந்தாமனுக்கு.. பாலமுரளியின் குறையைத் தீர்க்க மனமில்லை... ராதிகாவின் கதறல் அவன் செவிகளை எட்டவில்லை...

இதுதான் வாழ்க்கை என்றான பின்னாலே... அதோடு இசைந்து வாழப் பழகிக் கொண்டாள் ராதிகா.. இரவு நேரங்களில் அவனது அருகாமையை உணரும் போது... என்றோ ஓரிரு தினங்களில் அவனோடு கூடிய அந்தக் கூடல்களின் நினைவு வந்து அவளை அலைக்கழிக்கும்... அவளது தூக்கத்தைத் தின்று.. இரவு முழுவதும் அவளை இமை மூடாமல் செய்துவிடும்...

அந்த நேரங்களில் அழுது தீர்த்து விடுவாள் ராதிகா... விடிய விடிய அவளின் விசும்பல் ஒலி கேட்டுக் கொண்டிருக்கும்... அது பாலமுரளியைப் பாதித்ததா... இல்லையா என்று அவள் அறிந்ததில்லை... அவளுக்கு முதுகு காட்டிப் படுத்திருப்பவன்... அந்த தினங்களில் அவளுக்கு முகம் காட்டாமல் விடியலிலேயே வேலையைக் காரணம் காட்டிப் போய்விடுவான்..

அடங்க மறுக்கும் உள்ளத்தை... ஆறுதல் படுத்திக் கொள்ள அவளும் வேலையில் தன்னை மூழ்கடித்துக் கொள்வாள்.. இருந்தபோதிலும்.. மேகலாவின் வாடிய முகத்தைப் பார்க்கும் போதோ... இல்லை... தங்கத்தைப் போன்றவர்களின் வார்த்தை ஈட்டிகள் அவளை குத்திக்

கிழிக்கும் போதோ... அவள் உடைந்து நொறுங்கி விடுவாள்..

பாலமுரளிக்கு அவள் மீது அதீதமான காதல் இருந்தது... அதை ராதிகா மிக நன்றாகவே அறிந்து வைத்திருந்தாள்... அவனின் காதல்மீது அவளால் குறைகாண முடியவில்லை... அந்த வட்டாரத்திலேயே மிகப் பெரிய மனிதனாக உலா வருபவன் அவன்... பெண்களின் மத்தியில் கதாநாயகனாகத் திகழ்பவன்... திருமணமான பின்னாலும்.. அவனின் மனைவியான ராதிகாவின் முன்னாலேயே அவனிடம் குழைந்து பேசிய பெண்களை அவள் அறிவாள்... யாரிடமும் நின்று அவன் பேசியதில்லை... அவன் பார்வை ராதிகாவை விட்டு அகன்றதில்லை.. அப்படிப்பட்ட ஆண்மகனின் மனதைக் கவர்ந்து விட்ட கர்வத்தில் ராதிகாவின் விழிகளில் பெருமிதம் படரும்... அதைப் பொறாமையுடன் பார்க்கும் பெண்களின் மத்தியில் அவன் கை தொட்டு நடப்பதில் அவளுக்குள் ஒரு உற்சாகம் கிளம்புமே.. அதற்கு ஈடு இணையென்று எதுவுமே இல்லை...

அந்த பாலமுரளி.. அனைத்து வசதிகளையும் மனைவிக்கு ஏற்படுத்திக் கொடுத்தான்... அவளை வைரங்களாலேயே அலங்கரித்தான்... கண்ணில் படும் உயர்ந்த ரகப் புடவைகளை வாங்கிக் குவித்தான்...

அதனாலெல்லாம் அவள் முகத்தில் சிரிப்பைக் கொண்டுவர முடியவில்லை... அவள்தான் தெளிவாக ஒரு பாடலில் தன் மனதைப் பிட்டுப்பிட்டு வைத்து விட்டாளே..

'மலரில்லாத தோட்டமா..?
மகனில்லாத அன்னையா..
மகனே நீ இல்லையா...'

என்று அவள் ஏக்கத்துடன் பாடியதைக் கேட்டபோது அவன் உயிர் துடித்ததே... அதை ராதிகா அறிய மாட்டாள்..

அவள் அறிந்தாளா... மேகலா நோயின் பிடியில் மாட்டுவாள் என்று..? பாலமுரளி பக்கத்தில் இல்லாத நள்ளிரவு நேரத்தில் தனிமனுஷியாக... அவனது அன்னையின் உயிரை அவள் காத்துக் கொடுப்பாள் என்று....?

அது நடந்தது... பரந்தாமனின் செவிகளில் அவளது கதறல்ஒலி கேட்டு விட்டதற்கு அறிகுறியாக பாலமுரளியும் மனைவியிடம் கேட்டான்...

'உனக்கு என்ன வேண்டுமோ... கேள்..' என்று...

அவள் அவளுக்கு வேண்டியது எதுவென்பதை கூறிவிட்டாள்... அவன் என்ன செய்வான்..? அவள் கேட்டதைத் தருவானா...?

மெல்லிய வெளிச்சம்... அறையில் பரவியிருக்க... ராதிகா அறைக் கதவை மூடித் தாழிட்டாள்...

முதலிரவு அறைக்குள் வந்து விட்ட புதுமணப் பெண்போல அவளின் தொண்டை உலர்ந்தது... நாக்கு வறண்டது... கால்கள் பின்னின... கட்டிலை நெருங்க முடியாமல் அவள் சிரமப்பட்டாள்...

அவன் திரும்பவில்லை... அசையாமல் படுத்திருந்தான்...

'தூங்கியிருப்பானோ... ?'

அவள் ஏமாற்றமாக உணர்ந்தாள்... ஏனோ தெரியவில்லை.. அவளுக்கு தொண்டையில் துக்கப்பந்து வந்து நின்று அடைத்தது...

அவளை அடித்துச் செல்லும் உணர்வலைகள் அவனை அடித்துச் செல்லவில்லையா..? அவளை உருக்கும் அந்த இதமான இம்சை அவனை நெருங்கவில்லையா..?

"அலைமேல் துரும்பானேன்...
அனல்மேல் மெழுகானேன்...
ஐயன் கை பட்டவுடன்..
அழகுக்கு அழகானேன்..."

அவள் மனம் மெல்லப் பாடியது... அவள் அலைமேல் துரும்பாகத்தான் அலைக்கழித்துக் கொண்டிருந்தாள்.. அனல் மேல் மெழுகாக.. உருகிக் கரைந்தோடிக் கொண்டிருந்தாள்.. அவன் கை படுவதற்காக காத்திருந்தாள்...

இந்த உணர்வுகள் அவனைச் சென்றடையவில்லையா..? அவளைக் கொன்று தின்னும் இந்த இதமான இன்ப இம்சையின் நிழல்கள் அவன்மீது படியவில்லையா..? அவள் கேட்ட வரத்தைக் கொடுக்கும் தயாள குணம் அவனுக்கில்லையா...?

ராதிகா கட்டிலை அடைந்து விட்டாள்.. அதன் விளிம்பின் அருகே சரிந்து படுத்தபோது அவளின் இமையோரம்... ஏமாற்றம் கண்ணீராக வடிந்தோடியது...

"அம்மம்மா... கேளடி தோழி...!"

திடீரென்று அந்த இரவின் அமைதியை கிழித்துக் கொண்டு வெளிப்பட்ட எல்.ஆர் ஈஸ்வரியின் குரலில் அவள் திகைத்துப் போனாள்...

கண்ணீரைத் துடைக்க மறந்து அவனைத் திரும்பிப் பார்த்தாள்.. அவன் செல்போனில் பாடலை ஒலிக்க வைத்து... அருகிலிருந்த டீப்பாயின் மீது வைத்து விட்டு.. அவளை நிதானமாக நெருங்கினான்...

அவள் தோள்மீது அவன் கரம் விழுந்ததில் அவள் ஆனந்தப் பிரமிப்பை அடைந்தாள்... அவளது திக்பிரமையை உடைப்பதைப் போல... பாடல் அவளை ஆட்கொண்டது...

"அம்மம்மா.. கேளடி தோழி..!
சொன்னானே ஆயிரம் சேதி..."

அவனது விரல்கள் அவள் மேனிமீது பரவிப் படர்ந்து ஆயிரம் சேதிகளைச் சொல்லாமல் சொல்லின... இதமான அந்த இம்சையின் நிகழ்வில் அவள் கிளர்ச்சி கொண்டு கண்மூடிக் கிறங்கினாள்... நினைவில் வந்தவை... நிஜமாவதை நம்ப முடியாதவளாக.. அவள் தவித்துப் போனபோது அவன் மீசையின் முடிகள் அவள் முகத்தில் உராய்ந்து... இது கனவில்லை... நனவு என்று அறை கூவி அவளது நம்பிக்கையை உசுப்பி விட்டன...

"அம்மம்மா... கேளடி தோழி...!
சொன்னானே ஆயிரம் சேதி..
கண்ணாலே தந்தது பாதி..

சொல்லாமல் வந்தது மீதி...
அம்மம்மா..."

பாடலின் இனிமை அறையெங்கும் பரவியது... இந்த நேரத்தில்.. இந்தப் பாடலை.. அவளுக்காகத்தான் அவன் ஒலிக்க விட்டிருக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது..

இது அவளுக்குப் பிடித்தமான பாடல் என்பதை அவன் நன்கு அறிவான்.. அடிக்கடி அவள் இதை முணுமுணுப்பதை அவன் கேட்டிருக்கிறான்.. அதை அவன் செல்போனில் பதிய வைத்திருப்பான் என்று அவள் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை...

"பிஞ்சாக நானிருந்தேனே...
பெண்ணாக வளர்த்து விட்டானே..
அஞ்சாமல் அணைத்து விட்டானே..
அச்சாரம் கொடுத்து விட்டானே..."

கண்மூடிக் கிடந்தவளின் முகத்தோடு அவன் முகம் புதைத்த அந்த நொடியில்.. அறியாப் பெண்ணாக அவன் கைகளில் அகப்பட்டுக் கொண்ட அந்த நாளின் நினைவு வந்து அவள் நெஞ்சில் சூழ்ந்தது...

அஞ்சாமல்தான் அன்று அவளை அணைத்தான்.. அவனுக்குத்தான் அவள் என்பதை உறுதி செய்து முடித்தான்.. அவன் கைகளில் குழைந்த இந்த வேளையில்.. அந்த வேளை நினைவுக்கு வந்தபோதும்... அவளுக்கு அந்த நினைவு கசக்கவில்லை... ஏதோ ஒரு வகையில் இனிப்பாகவே இருந்தது..

'நினைத்தாலே இனிக்கும் என்பது இதுதானோ...' அவள் நினைத்துக் கொண்டாள்.. அவனது பின்னந்தலையில் அவளது கை பரவி அவன் முடியை இறுக்கிப் பிடித்ததில் அவன் உடலில் ஏற்பட்ட சிலிர்ப்பை அவள் உணர்ந்தாள்...

அவள் முகமெங்கும் அவன் தந்த முத்தங்களின் ஈரம் படர்ந்து நனைத்தது... இத்தனை நாளாய் இந்த வித்தைகளை எல்லாம் எங்கே ஒளித்து வைத்திருந்தான் என்று அவள் கண்கள் கசிந்தாள்... தினசரி மலர் படுக்கை போன்ற நுரை மெத்தை மேல் படுத்தாலும்... முள்ளின் மீது உறங்குவதைப் போல அவளைத் திணற வைத்தானே... அவள் மேல் இரக்கம் காட்ட மறுத்தானே... நூலைப்போல் இளைக்க வைத்து.. பாலைப் போல் வெளுக்க வைத்து பாடாய் படுத்தி எடுத்தானே...

அவள் மனம் தேம்புவதை அறிந்ததைப் போல... அவன் முத்தங்களால் அவளை குளிர வைத்தான்... இடைவிடாத முத்தங்களினால் மூச்சுத்திணறிப் போனாள் ராதிகா...

"முத்தாரம் சரிய வைத்தானே...
முள்மேலே தூங்க வைத்தானே..
நூலாக இளைக்க வைத்தானே..
பாலாக வெளுக்க வைத்தானே.."

முள் படுக்கையை... மலர் படுக்கையாய் அவன் மாற்றிவிட்ட அந்த நேரத்தில்.. எல்.ஆர்.ஈஸ்வரியின் ரகசியக்குரல் அறையெங்கும் நிரம்பியது...

"தன்னாலே பேச வைத்தானே...
தண்ணீரை கொதிக்க வைத்தானே..
தள்ளாடி நடக்க வைத்தானே...
தானாகச் சிரிக்க வைத்தானே..."

அவளது கொதித்த மேனியைக் குளிர வைக்கும் விதமாய்... அவன் அவள்மேல் பரவிப் படர்ந்தான்.. அவள் கரங்களுக்குள் கண்மூடி அடங்கிக் கிடந்தவளைப் பார்க்கும் போது.. அவனுக்குள் ஆண்டுக்கணக்கில் விலகி நின்ற தாபம் கனன்று எரிந்தது...

அவன் எரிமலையாகி வெடித்துப் பரவினான்.. கண்முன் அவளிருந்தும்.. சபதம் போட்டு தொடாமலிருந்த காலம் அவன் மனதில் எழுந்தது... கழிந்து போன காலங்களை மீட்டுவிடத் துடிப்பவனைப் போல வேட்கையுடன் அவளை ஆக்ரமித்தான் பாலமுரளி..

அவன் போட்டிருந்தது பூவேலியல்ல... இரும்பு வேலி.. அதைப் பொடிப்பொடியாய் ஒரு சிறு வேண்டுகோளில் நொறுக்கி விட்டிருந்தாள் ராதிகா... அணையுடைந்த வெள்ளமாய் அவர்கள் கலந்தபோது... அந்த இரவுகூட முற்றுப்பெற மறந்து மிக நீண்ட இரவாக நீடித்து நின்றது..

நடக்குமா என்ற ஏக்கத்திலிருந்த ராதிகாவும்.. நடக்காது என்ற வைராக்கியத்துடனிருந்த பாலமுரளியும் தூக்கத்தை மறந்து பின்னிப் பிணைந்தனர்..

காற்றோடு கலந்து விட்டேன்..
கண்ணா..! உன் கைவிரல் பட்டதினால்..

பூஜையறையிலிருந்து வெளியே வந்த மேகலா... சுவர் கடிகாரத்தை யோசனையுடன் பார்த்தாள்...

'இன்னுமா ராதிகா எழுந்திருக்கல..?'

அவளுக்கு கவலையாக இருந்தது... சமையலறையிலிருந்து வெளியே வந்த மீனாட்சி.. பதவிசாக மேகலாவின் அருகே வந்து நின்று அவள் முகம் பார்த்தாள்... எதையோ கேட்கத் துடிக்கும் துடிப்பு அவள் முகத்தில் தெரிய... புருவங்களை நெரித்தாள் மேகலா...

"என்ன..?" கடுமையாக வினவினாள்...

"இல்லம்மா.. நேத்து.. நம்ம ஐயா கோபமா.. கீபமா இருந்து வைச்சாரா..?" மீனாட்சி இழுத்தாள்...

"எதுக்குக் கேட்கிற..?" மேகலாவுக்கு புரியவில்லை..

"அதில்லம்மா... பொழுது விடிஞ்சு இம்மாந்நேரமாச்சு.. இன்னும் நம்ம சின்னம்மா எழுந்திருச்சு வரலையே..." மீனாட்சி விளக்கம் சொன்னாள்..

"அதுக்கு..?" இன்னமும் மேகலாவுக்கு புரியவில்லை..

"எனக்கென்னவோ.. சந்தேகமா இருக்கும்மா..." மீனாட்சி மீண்டும் இழுவையாக இழுத்தாள்...

"எதுக்குச் சந்தேகப்படற..?" மேகலாவுக்கு சுத்தமாக எந்த விவரமும் பிடிபடவில்லை...

"நம்ம அம்மா காய்ச்சலில் படுத்துட்டாங்களோன்னு..."

மீனாட்சி சொல்லவும்தான்.. ஏன் அவள் இத்தனை சுற்றுக் கேள்விகளை கேட்டு வைத்தாள் என்ற விவரமே மேகலாவுக்கு பிடிபட்டது...

பாலமுரளியின் கோபத்திற்கும்... ராதிகாவின் காய்ச்சலுக்குமிடையே உள்ள கனகச்சிதமான சம்பந்தத்தை... வீட்டு வேலையாள்கள் முதற்கொண்டு தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதில் மேகலாவுக்கு காய்ச்சல் வந்து விடும்போல இருந்தது...

"போடி போய் வேலையைப் பாரு.. காவேரி காவேரி.."

மேகலாவின் கோபக்குரல்... சமையல்கட்டை எட்டி காவேரி கரண்டியுடன் பிரசன்னமானாள்...

"என்னங்கம்மா..."

"இவளை சமையல்கட்டுக்கு இழுத்துக்கிட்டு போயி ஏதாவது வேலையை வாங்கு.."

"ஐயையோ.. வேண்டாம்மா... இவ என் உயிரை வாங்கிருவா..."

காவேரி கையெடுத்துக் கும்பிடாத குறையாக அலறிவிட்டு சமையலறைக்குள் சென்றுவிட மீனாட்சிக்கு கோபம் வந்துவிட்டது...

"அவ பேசறதை கேட்டிங்களாம்மா..." என்று மேகலாவிடம் நியாயம் கேட்டாள் அவள்..

"நீயிருக்கிற இடத்தில.. மத்தவங்க பேசறதை கேட்க முடியுமா..? மொத்தப் பேச்சையும் நீயே குத்தகைக்கு எடுத்துக்கறியே..."

"எதுக்கும்மா இப்புடி சடைச்சக்கறிங்க..? எனக்கு வேலை சொல்றதுன்னா.. நீங்க சொல்லுங்க... ஐயா சொல்லட்டும்.. நம்ம சின்னம்மா சொல்லட்டும்... அவ யாரும்மா எனக்கு வேலை சொல்ல..?" மீனாட்சி சண்டைக் கோழியாய் சிலிர்த்தாள்...

"எவளைச் சொல்ற..?"

"அதான்... அந்தக் காவேரியைச் சொல்றேன்... அவள்ளாம் ஒரு ஆளு.. அவ சொல்லி நான் வேலையைச் செய்யனுமா..?"

"அதானே.. நீ நாங்க சொன்னாலே நகர மாட்டியே காவேரி சொன்னாலா கேட்டுக்கப் போற..?"

"இந்த மீனாட்சி... சொடக்கு போடற நேரத்தில மயில்வாகனன் போல இந்த உலகத்தைச் சுத்திவர்ற ஆளும்மா... நானா நகர மாட்டேன்..?"

"மயல்வாகனனா..? நீ எந்த மயில்வாகனனைச் சொல்ற...? தென்காசியில நம்ம ஜவுளிக்கடைக்குப்

பக்கத்தில கடை போட்டிருக்க அந்த மயில்வாகனனையா சொல்ற..? அவனே ஆடி அசைஞ்சு.. யானை போல வந்து சேருகிற ஆளு.. அவனா சொடக்குப் போடற நேரத்தில உலகத்தைச் சுத்தி வருகிற ஆளு..?"

"ஏம்மா... தேனூத்தில இருந்துக்கிட்டு.. தென்காசியில இருக்கிற மயில்வாகனனை நான் ஏம்மா இழுக்கப் போறேன்...?"

"அடிப்பாவி..! அவன் ஐஞ்சாறு புள்ளயப் பெத்த ஆளுடி.. அவனைப் போய் இழுக்கப் போகிறதில இணை கூட்டற...?"

"அவனை இழுத்துட்டாழும்...! கழுதையில.. விளங்கிப் போயிரும்.. அவன்கூடக் குடித்தனம் பண்ணனும்னு அவன் பெண்டாட்டிக்குத்தான் தலைவிதி.. பாவம்.. அவ வாங்கி வந்த வரம் அப்படி... பேச்சில கூட அவனை இழுக்கனும்னு எனக்கென்னம்மா தலைவிதி..?"

"என்னைக் கேட்டா.. எனக்கென்னடி தெரியும்..?"

"நான் தென்காசி மயில் வாகனனைச் சொல்லலைம்மா... ஆனைமுகனுக்கு தம்பியாப் பொறந்திருக்கிற.. முருகக் கடவுளைச் சொன்னேன்... அவர்தானே.. மயில்மேல வர்ற மயில் வாகனன்..!"

மீனாட்சி கூறிய விளக்கத்தில் ஆச்சரியப்பட்டுப் போனாள் மேகலா.. முகவாயில் கையை ஊன்றி...

"அடி ஆத்தி..! உனக்கு இம்புட்டுத் தூரத்துக்கு புராணம் தெரியுமாடி..." என்று வியந்து போனாள்...

"பின்ன..? என்ன யாருன்னு நினைச்சீங்க..? அடுப்பங்கரையே கதின்னு கிடக்கிற... அந்த அரை வேக்காட்டு காவேரின்னு நினைச்சீங்களா..?"

மீனாட்சி பெருமையுடன் பீற்றிக் கொண்டு இருந்தபோது... சமையலறைப் பக்கமிருந்து சத்தம் வந்தது..

"இன்னும் கொஞ்ச நேரத்தில வயித்தைப் பசிக்கும்டி.. அப்ப கொட்டிக்க எங்கிட்டத்தான் நீ வந்து நிக்கனும்.. அப்பப்பாரு.. நீ சொன்னதைப் போலவே.. வெந்ததும்.. வேகாததுமா.. அரைவேக்காட்டில ஆக்கி வைச்சு.. தட்டில போட்டுத் தர்றேன்..."

மீனாட்சியா அந்த அரட்டலுக்கு பயப்படுவாள்..? அவள் தயங்காமல் அந்த அறை கூவலை எதிர்கொண்டாள்...

"அதுசரி.. நீ எந்தக் காலத்தில ஒழுங்காய் ஆக்கிப் போட்ட காவேரி..? நீ ஆக்குறதெல்லாம்.. அரை வேக்காடாய்த்தானே இருக்கும்..?"

காவேரியின் கோபம் வார்த்தைகளாக வராமல்... சமையலறையிலிருந்து... பற்பல சப்தங்கள் மூலம் வெளிவர.. மேகலா ரசித்துச் சிரித்தாள்...

"காலங்கார்த்தாலேயே... வம்பைக் கட்டி இழுத்துட்டயா..? கொஞ்ச நேரமாவது.. வாயை மூடிக்கிட்டு சும்மா இருக்க மாட்டியா..?"

"சும்மா இருக்கச் சொன்னா.. இருக்கறேன்ம்மா.. வாயை மூடிக்கிட்டு மட்டும் இருக்கச் சொல்லாதீங்க.. என்னால ஆகிற காரியமில்ல அது.."

"அதானே..."

அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது.. மெலிதான கொழுகொலி கேட்டது...

"சின்னம்மா வந்துட்டாங்க போல..." மீனாட்சி ஆவலுடன் திரும்பிப் பார்த்தாள்...

ஈரத்தலையில் டவலைச் சுற்றிக் கட்டியிருந்த ராதிகா... என்றுமில்லாத புதுவிதமான சோபையோடு மிளிர்ந்தாள்.. அவள் முகத்தில் படர்ந்திருந்த நாணச் சிகப்பும்.. கண்களில் மின்னிய மின்னலின் ஒளிர்வும்.. மேகலாவின் கவனத்தைக் கவர்ந்தன...

"அப்பாடி.. சின்னம்மாவுக்கு காய்ச்சலில்ல.." மீனாட்சி சந்தோசப்பட்டுப் போனாள்..

"என்னவாம்..? கொஞ்ச நேரம் அசந்து தூங்கிட்டா.. எனக்கு காய்ச்சல் வந்துருச்சுன்னு பெயர் கட்டி விடுவயா..?" சிரிக்கும் குரலில் கேட்ட ராதிகா.. மாமியாரை நிமிர்ந்து பார்க்கவில்லை..

அவள் முகத்தின் செம்மை மேகலாவுக்கு எதையோ சொல்லியது.. கடந்த காலத்திற்கு அவளை அழைத்துப் போனது.. மாணிக்கவாசகம் உயிருடன் இருந்த காலங்களை நினைவு கூர்ந்தாள் மேகலா...

அப்போது அவள் முகத்திலும் இதே செம்மைதான் படர்ந்திருந்தது என்ற நினைவில் அவள் நெஞ்சம் குளிர்ந்தது...

"கொஞ்சநேரம் அசந்து தூங்கினிங்களா..? ஏம்மா.. இதான் கொஞ்ச நேரமா..? வெளியே போயி... அண்ணாந்து வானத்தைப் பாருங்க.. சூரியன் உச்சிப் பொழுதுக்கு வந்தாச்சு..."

ராதிகாவுக்கு காய்ச்சலில்லை என்ற மகிழ்வில் மீனாட்சி வாய் வளர்த்துக் கொண்டிருக்க.. கேமலா.. மீனாட்சியை அதட்டினாள்...

"உச்சிப் பொழுதுக்கு எழுந்திருக்கக் கூடாதுன்னு ஏதும் சட்டம்.. கிட்டம் இருக்கா..? அவளுக்கு தூக்கம் வந்திருக்கும்.. தூங்கியிருப்பா.. இதுக்குப் போயி உனக்கு விளக்கம் சொல்லனுமா..?"

மீனாட்சியும் மாமியாரும் பேச ஆரம்பித்ததுமே ராதிகா அங்கிருந்து நழுவி சமையலறைக்குப் போய் விட்டாள்...

"என்ன காவேரி...?" என்றபடி அவள் காபியைக் கலக்க ஆரம்பித்தபோது...

"எல்லாம் இந்த மீனாட்சியால வர்ற ரோதனைம்மா.." என்று காவேரி அவளிடம் வழக்கு வைக்க ஆரம்பித்தாள்..

அறை வாசலில் நிழலாடியது...

"காவேரி..." கண்டிப்புடன் அழைத்தபடி மேகலா அங்கே நின்றிருந்தாள்..

"அம்மா..?"

"முரளிக்கு ராதிகா காபி கொண்டு போகனும்.. அவளை விட்டுட்டு உன் வழக்கை எங்கிட்டச் சொல்லு.. நான் தீர்த்து வைக்க முடியுதான்னு பார்க்கிறேன்..."

காவேரியிடமிருந்தும் ராதிகாவுக்கு மேகலை விடுதலை வாங்கிக் கொடுக்க.. குனிந்த தலை நிமிராமல் காபி ஜக்குடன் மாடிக்குச் சிட்டாகப் பறந்தாள் ராதிகா..

ஓட்டமும்.. நடையுமாக.. ஒரு மான் குட்டியின் துள்ளலுடன் மாடியேறியவளைப் பார்த்தபடி.. நின்றிருந்த மேகலாவின் மனதில் இனம் புரியாத நிம்மதி விரவியது..

"மீனாட்சி... தட்டைப் போடுடி..."

"உங்களுக்காம்மா..?"

"வேற யாருக்குன்னு நினைச்சே...?"

"ஐயாவும்.. சின்னம்மாவும் வரலையேம்மா.."

"அதுக்கென்ன..?"

"எப்பவும் ஐயாதான் முதல்ல சாப்பிடுவாரு அதுக்கப்புறம் சின்னம்மாவும்.. நீங்களும் சேர்ந்து பேசிக்கிட்டே சாப்பிடுவீங்க.. அதனால கேட்டேன்.."

"இன்னைக்கு அவங்க மாடியிறங்கி வர நேரமாகும் யாரு கண்டா.. காலைப் பலகாரத்தை மாடிக்கே கொண்டு வரச் சொல்லி.. சொன்னாலும் சொல்லலாம்..."

மேகலா ஆருடம் சொல்லி விட்டு.. நிதானமாக ரசித்து.. ருசித்து சாப்பிட ஆரம்பித்தாள்... அவள் ஆருடம் பலித்தது.. சற்று நேரத்திலேயே மாடியிலிருந்து முரளி போன் செய்தான்..

"எனக்குச் சரியான தலைவலிம்மா..."

"அடடா..."

"ராதிகாவுக்கு காய்ச்சல்..."

ஈரத்தலையில் டவலைக் கட்டியபடி.. துள்ளல் நடையுடன் வந்து போன மருமகளின் நினைவில் மேகலா புன்னகைத்துக் கொண்டாள்...

"அப்படியாப்பா..? டாக்டர்கிட்டக் கூப்பிட்டுக்கிட்டுப் போகலாமா..?"

வேண்டுமென்றே அவள் கேட்க.. அவள் எதிர்பார்த்த பதில் வந்தது..

"வேண்டாம்மா.. டேப்லட் சாப்பிட்டிருக்கா.. ரெஸ்ட் எடுத்தா சரியாப் போயிரும்.." அவசரமாகச் சொன்னான் மகன்..

"அப்பச்சரி... நீ அவளை பக்கத்தில இருந்து பார்த்துக்க.." நமட்டுச் சிரிப்புடன் கூறினாள் தாய்...

"அதுக்கென்னம்மா.. நீங்க சொன்னபடியே செய்யறேன்.. நீங்க மட்டும் டிபனையும்.. மதியச் சாப்பாட்டையும்.. மாடிக்கே கொடுத்து விட்டிருங்க..."

"அதுக்கென்னடா முரளி.. மீனாட்சியை கொண்டு வரச் சொல்றேன்.. அவளுக்கும்தான் அதைவிட வேற வேலை என்ன இருக்கு..?"

மேகலா போனை வைத்து விட்டு மீனாட்சியைப் பார்க்க அவள்...

"எப்புடிம்மா...?" என்று விழி விரித்தாள்...

வழக்கமாக அவள்தான்.. ராதிகாவுக்கு காய்ச்சல் வருமென்ற ஆருடத்தைச் சொல்லி வைப்பாள்.. இன்று அவளது ஆருடம் பொய்த்துப் போய்.. மேகலாவின் ஆருடம் பலித்து விட்டதில் அவளுக்கு ஏகப்பட்ட வருத்தம்..

"என்னவோம்மா.. இந்த வீட்டில் என்னென்னவோ நடக்குது... ம்ம்.." இந்த மீனாட்சி காலைப் பலகாரத்தை சுமந்தபடி மாடியேறிப் போனாள்...

'எது நடந்தாலும்.. அது நல்லதாகத்தான் நடக்குது..' மேகலா பூரித்துப் போனாள்...

அவளுக்கு.. அவளுடைய பேரக்குழந்தை அந்த வீட்டில் கால் பதித்து நடக்க வேண்டும்.. அதற்கான அறிகுறிகள் ஆரம்பமாகி விட்டதில் அவள் மகிழ்ந்து போயிருந்தாள்...

மாடிக்குப் போய் திரும்பி வந்த மீனாட்சி.. ராதிகாவின் ஆரோக்கியத்தில் குறைவிருப்பதாகத் தெரியவில்லை என்று சொன்னாள்... அதைப் பற்றி அவளுக்கென்ன கவலையென்று காவேரி கேட்டாள்... அவர்களுக்குள் கலவரம் மூண்டது... மேகலா வழக்குத் தீர்க்க வந்தாள்..

அந்த வீட்டில் காணாமல் போயிருந்த கலகலப்பு மீண்டும் வந்தது...

உன்னைத் தொட்ட பொழுதில்..
அந்த விண்ணைத் தொட்டுவந்தேன்...

ராதிகாவின் கன்னம் வெட்கத்தினால் செவ்வானம் போல சிவந்து விட்டதை ரசனையுடன் பார்த்தபடி.. போனை வைத்தான் பாலமுரளி...

"அத்தை... என்னன்னு நினைச்சுக்குவாங்க...?" சங்கோஜத்துடன் பேசிய ராதிகாவுக்கு வார்த்தைகள் தொண்டையில் சிக்கிக் கொண்டன...

"என்ன நினைப்பாங்க..? என்னடா.. வீரதீர பராக்கிரமசாலியான நம்ம மகன் இப்படி பெண்டாட்டியின் முந்தானை முடிச்சில சிக்கிக்கிட்டானேன்னு நினைச்சுக்குவாங்க... நினைச்சா.. நினைச்சிட்டுப் போகட்டும்... அந்தக் காலத்தில என் அப்பாவும்.. அம்மாவோட முந்தானை முடிச்சில் சிக்கியிருந்தவர்தானே..." அவன் இமைகளைச் சிமிட்டிச் சிரித்தான்...

"போதுமே..." ராதிகா முகத்தை மூடிக் கொண்டாள்..

அவளின் அந்தச் செய்கையில் பாலமுரளி கிறங்கிப் போனான்... அவளை நெருங்கி.. அவள் விரல்களைப் பிரித்து முகம் பார்த்தான்... அவன் முகம் பார்க்க முடியாத லஜ்ஜையுடன் அவள் இமை மூடிக் கொண்டாள்...

துடிக்கும் அவளின் இதழ்களையும்... படபடக்கும் இமைகளையும்... ஊன்றிக் கவனித்தவனுக்கு... மோக வெள்ளம் பெருக்கெடுத்தது.. அவளை ஆளும் வேட்கை அதிகரித்தது...

"பிள்ளை வரம் கேட்டவ... போதும்ன்னு சொல்லக் கூடாது..."

அவள் உதடுகளின் மீது.. அவனது ஆள்காட்டி விரல் அழுந்திக் கீழே இறங்க... அவள் மயங்கிப் போனாள்...

"அதுக்காக... அத்தையிடம் மாட்டி விடனுமா..?"

"இது மாட்டி விடறதா..?"

"பின்னே... இல்லையா...?"

"வேற... என்ன செய்திருக்கனும்னு நீ நினைக்கிற..?"

"வேலையைப் பார்க்கக் கிளம்பிப் போயிருக்கலாமில்ல..."

"இதுவும் வேலைதான்டி..."

அவன் மீண்டும் கண்சிமிட்ட... அவளது ரத்த நாளங்களில் சூடேறியது... அதன் தகிப்பைத் தாங்க முடியாமல் அவள் தவித்துப் போனாள்...

அவன் கைகள் அவள்மீது பரவிப்படற... அதை விலக்க முடியாத தாபத்தோடு... அவன் காதோரமாக முணுமுணுத்தாள்...

"ராத்திரின்னு ஒன்னு வரும்..."

"வரட்டுமே.. அப்பத்தான் பெண்டாட்டியைத் தொடனும்னு சட்டம் ஏதும் இருக்கா..?"

அவன் சட்டம் பேசினான்... அவளைப் பேச விடாமல் செய்தான்...

'ஹம்மா...' என்று கிறங்கிப் போனவளின் மேல் பரவிப் படர்ந்து விட்ட வேலையைத் தொடர்ந்தான்...

கதவைத் தட்டிய மீனாட்சியிடம் அவனே பதில் சொல்லி அனுப்பினான்... சாப்பிடக்கூட கீழே போக விடாமல் அவன் ஆக்ரமித்ததில் அவள் வெட்கப்பட்டுப் போனாள்...

"என்னங்க இது... சாப்பிடக் கூட கீழே போகக்-கூடாதுன்னா எப்படிங்க...?"

"அது அப்படித்தான்..."

பாலமுரளி அட்டைபோல அவளுடன் ஒட்டிக் கொண்டதில் அவளுக்கும் விருப்பம் உண்டுதான்.. ஆனாலும் அதுவீடு... அந்த வீட்டில் அவர்களைத் தவிர மாமியாரும்.. இதர வேலையாள்களும் இருக்கிறார்கள் என்பதில் அவளுக்கு சில சங்கடங்கள் இருந்தன...

அன்றைய இரவில்... பாலமுரளியின் மார்பு மீது தலைவைத்துப் படுத்திருந்தவள்... இதமாக எடுத்துச் சொன்னாள்...

"அத்தை நம்மை என்கரேஜ் பண்ணலாம்... வீட்டில் அவங்க மட்டுமா இருக்கிறாங்க..? மத்தவங்க இல்லையா..?"

"அதுக்கு...?"

"நீங்க எப்போதும் போல தொழிலைப் பார்க்க கிளம்புங்க... நாம நைட்டில் மீட் பண்ணிக்கலாம்..."

பாலமுரளியால் அதை கடைபிடிக்க முடியவில்லை.. ராதிகாவினால் அது வீடென்ற நினைவை மறந்து... பகல் வேளையில் அவனோடு கூட முடியவில்லை...

"இதுக்கு ஒரு வழி பண்றேண்டி..."

அவன் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்து விட்டான்.. அவன் என்ன யோசித்தான் என்பது மறுநாள் காலையில் டைனிங் ஹாலில் வெளிப்பட்டது...

ராதிகாவையே அள்ளிப் பருகுதைப் போலப் பார்த்தபடி அவன் தட்டிலிருந்ததைக் கவனிக்காமல் சாப்பிட்டுக் கொண்டிருக்க.. அவள் வெட்கச் சிவப்புடன்... மேகலாவின் பக்கமாக கண்ஜாடை காட்ட முயன்று தோற்றுக் கொண்டிருந்தாள்...

என்னவோ... முதல் நாள்தான் அவளுக்குத் தாலி கட்டியிருந்ததைப் போல அவன் வைத்த பார்வையை விலக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருக்க... அவன் பார்வை வட்டத்திலிருந்து தப்பிக்கவும் முடியாமல்.. தப்பிக்கும் மார்க்கமும் தெரியாமல் அவள் தவித்துப் போனாள்...

மேகலாவுக்கு இந்தப் பார்வை பரிமாற்றம் பிடித்தமானதாக இருந்து வைத்தது... இத்தனை காதலை மனைவியின் மேல் வைத்திருக்கும் மகன்... இதுநாள்வரை

அதை வெளிக்காட்டாமல் எங்கே ஒளித்து வைத்திருந்தான் என்று அவள் மனதிற்குள் ஆச்சரியப் பட்டுப் போனாள்...

"ஏண்டா... நீயெல்லாம் காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு வெளியே சொல்லிராதே... வெட்கக்கேடு.. சரக்குன்னா அவளை அடிச்சு வைச்சு.. காய்ச்சலில படுக்க வைச்சிடுற... ஒரு நாளாவது அவகிட்ட அன்பா நாலு வார்த்தை பேசியிருக்கயா..? எப்பப் பார்த்தாலும் கண்ணில சாட்டையை வைச்சுக்-கிட்டு.. அவகிட்ட குத்தம் கண்டுபிடிச்சு விளாசித் தள்ளுறதிலயே குறியாய் இருக்கயே... இது கொஞ்சம் கூட நல்லாயில்லைடா முரளி.. சொல்லிட்டேன்.."

அடிக்கடி அவள் வாயிலிருந்து இந்த வார்த்தைகள் தான் வெளிவரும்.. அந்த மகன்.. மனைவியை ஒரு மார்க்கமாக பார்ப்பதையும்... அந்தப் பார்வையைத் தாங்க மாட்டாமல் மருமகள் வெட்கப் பட்டு முகம் சிவப்பதையும்.. காணக்காண அவளுக்கு தரையில் கால் பாவவில்லை...

'பெருமாளே..! நீ கண்திறந்து எங்களைப் பார்த்திட்டயா...' அவள் பரவசப்பட்டுப் போனாள்...

அந்தப் பரவசத்துடன் இருந்தவளிடம்...

"அம்மா.." என்று ஆரம்பித்தான் பாலமுரளி...

"சொல்லுடா..."

"எனக்கு வெளிநாட்டில கொஞ்சம் வேலை இருக்கும்மா..."

அவன் சொல்லவும்.. மேகலா பதைத்துப் போனாள்.. இந்த இரண்டு நாள்களாகத்தான்.. அவன் மனைவியை.. மனைவியாக நினைக்க ஆரம்பித்திருக்கிறான்.. இப்போது பார்த்தா.. அவனுக்கு வெளிநாட்டில் வேலை வரண்டும்..?

ராதிகாவின் திகைத்த முகத்தைப் பார்த்தவருக்கு.. அவருக்கும் இந்த விவரம் புதிது என்ற விவரம் பிடிபட்டது..

"அறிவோடதான் பேசறயா..?" மகன்மீது எரிந்து விழுந்தாள் மேகலா...

"ஏம்மா...?"

"இப்ப வீடும்... நானும் இருக்கிற நிலைமையில ராதிகாவை தனியாய் சமாளிக்க விட்டுட்டு நீ மட்டும் வெளிநாட்டுக்கு பறக்கலாம்ன்னு நினைக்கிறது தப்பு முரளி"

'ராதிகாவை இங்கே விட்டுட்டு.. நான் மட்டும் பறக்கிறதா..?'

பாலமுரளிக்கு பற்றிக்கொண்டு வந்தது.. ஆனாலும் அவனால் அந்தக் கோபத்தை தாயிடம் காட்ட முடியவில்லை.. அத்தனை நாள்களாக.. அவன் அதைத்தானே செய்து வந்தான் என்ற நினைவில் மனைவியின் முகம் பார்த்தான்.. அவள் முகமும் வாடியிருந்தது...

'அம்மாதான் புரியாம பேசறாங்கன்னா.. இவளுக்கு எங்கே போக்கு அறிவு..? இதோ இருக்கிற தென்காசிக்கு இவளை விட்டுட்டுப் போக என்னால முடியலை.. இந்த லட்சணத்தில இவ இல்லாம தனியா.. வெளிநாட்டுக்குப் பறக்கப் போகிறேனா..?'

"இதையெல்லாம் நான் யோசிக்காம இருப்பேனாம்மா..?"

"என்னத்தை யோசிச்ச...?"

"இது டிசம்பர் மாசம்.. ஸ்கூல் பிள்ளைகளுக்கு லீவு விடற சமயம்..."

"அதுக்கு..?"

"அக்காவையும்.. குழந்தைகளையும் வரச் சொல்லியிருக்கேன்... அவங்க வந்து உங்களைப் பார்த்துக்குவாங்க..."

"ராதிகா உன் தொழிலைப் பார்த்துக்குவாளா..? கெட்டிக்காரன்தாண்டா நீ... எல்லாத்துக்கும் ஒரு பதிலைச் சொல்லிட்டு.. தனியாய் தப்பிச்சு ஓடப் பார்க்கிறதில நீ மன்னன்டா..."

"பொறுங்க... பொறுங்க.. ராதிகாவை இங்கே விட்டுட்டுப் போறேன்னு யார் சொன்னது..?"

"என்னது..?!"

ஆனந்தத்துடன் ஆச்சரியக்குரல் எழுப்பிய மேகலா மருமகளைப் பார்க்க... அவள் அவற்றை விழிகளில் பிரதிபலித்தவளாய் மாமியாரைப் பார்த்தாள்...

"சதிஷ் எதுக்காக இருக்கான்..? அவன் பார்த்துக்குவான்... அக்காவை ஸ்கூல் திறந்தாலும்.. ஒரு வாரம் சேர்த்து இருக்கச் சொல்லியிருக்கேன்... அதுவும் சரின்னு சொல்லியிருக்கு..."

"ஒரு வாரம் என்னடா.. ஒரு மாசம்கூட இருடின்னு நான் சொன்னா.. உன் அக்கா இங்கேயே இருந்துக்குவா.. பிள்ளைகளைப் பார்த்து ஸ்கூலுக்கு அனுப்ப மருமகன் இருக்கார்.. அவனோட மாமனார்.. மாமியார் இருக்காங்க.. நீ கவலையில்லாம போயிட்டு வாடா தம்பி..."

மாமியார் காட்டிய உற்சாகத்தில் ராதிகாவின் கண்கள் பனித்து விட்டன... இப்படிப்பட்ட மாமியார் கிடைக்க... என்ன தவம் செய்தோமென்று அவள் நெகிழ்ந்து போனாள்...

ராதிகா... பாலமுரளியுடன் வெளிநாட்டிற்குப் பறக்கப் போகிறாள் என்ற செய்தியைக் கேட்டதும்.. மீனாட்சி.. ஏகத்திற்கும் கவலைப் பட்டாள்...

"ஏம்மா.. நம்ம சின்னம்மா.. அங்கே போய் காய்ச்சலில் விழுந்து வைச்சிட்டா.. யாரு பார்த்துக்குவாங்க..?"

மகன் மருமகளைப் பார்க்கும் பார்வையைப் புரிந்து வைத்திருந்த மேகலாவுக்கு சிரிப்புத்தான் வந்தது..

"அவ புருசன் பார்த்துக்குவாண்டி..."

"அதுசரி.. ஐயாதான..? நம்ம சின்னம்மாவை காய்ச்சலில் விழ வைப்பாரு.. அவரு பார்த்துக்கிட்டாலும்.. எனக்கென்னவோ.. நம்ம சின்னம்மா.. ஐயாவை நம்பி வெளிநாட்டுக்குப் போகிறது.. சரியாய் படலை..."

"ஏண்டி.. கட்டின புருசனை நம்பி அவன் பின்னால போகாம உன்னை நம்பி உன் பின்னால அவளை வர சொல்றியா..?"

"அதக்கில்லைம்மா..."

"அடச்சீ.. வாயைக் கழுவு.. எப்பப்பாரு.. ஏதாவது ஒரு வியாக்கினத்தைப் பேசிக்கிட்டு... முந்திரிக் கொட்டையைப் போல முன்னால வந்திருவா.. இப்ப ராதிகா வெளிநாட்டுக்குப் போகிறது... சரியா.. சரியில்லையான்னு உன்கிட்ட யாராச்சும் யோசனை கேட்டாங்களா..?"

மேகலா கேட்டதும்.. காவேரி வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்... அவள் அப்படிச் சிரித்ததில் மீனாட்சிக்கு பலமான மனப்பாதிப்பு ஏற்பட்டது... என்னதான் இருந்தாலும்.. பெரியம்மா.. காவேரியின் முன்னால் மீனாட்சியைக் கண்டித்து பேசியிருக்கக் கூடாது என்ற மனத்தாங்கலுக்கு மீனாட்சி ஆளானாள்...

"நான் உங்க வீட்டு உப்பைத் தின்னவம்மா..."

"இதென்னடி கூத்தா இருக்கு.. வேளா வேளைக்கு வகை தொகையாய் சமைச்சு போடறோம்... இதில உப்பை மட்டும் ஏண்டி தின்னு வைச்சே..?"

காவேரியின் சிரிப்பு அதிகமாக... மீனாட்சியின் கொதிப்பு அதிகமானது...

"ஒரொருத்தங்களைப் போல.. நான் மனசில ஒன்னு.. வாக்கில ஒன்னுன்னு இருக்கிறவ இல்லம்மா..."

"ஓஹோ.."

"வேலைதான் பெரிசு.. என்னைச் சுத்தி எது நடந்தாலும் எனக்கென்ன வந்துச்சுன்னு கண்டுக்காம போகிற ஜென்மம் நானில்ல..."

"அப்படியா.. ?"

"மனசில பட்டதை அப்படியே வெளியே கொட்டிருவே
வெள்ளந்தி மனசும்மா.. என் மனசு.. மத்தவங்களை மா
வினயம் புடிச்ச மனசில்ல... என் மனசு..."

"த்ச்சு.. த்ச்சு.."

மீனாட்சியின் மறைமுகத் தாக்குதல்க
காவேரியின் ரத்த அழுத்தம் எகிறிக் கொண்டிரு
மேகலாவோ.. அதை ரசித்துப் பதில் சொல்
கொண்டிருந்தாள்...

"நான் விசுவாசிம்மா.. தூக்கத்தில எழுப்
கேட்டாக்கூட.. இந்த வீட்டைப் பத்தித்தான் நா
பேசுவேன்.. மத்தவங்களைப் போல சொந்த வீட்
பத்திப் பேச மாட்டேன்..."

அதற்கு மேல் தாள மாட்டாத காவேரி.. பொங்
வரும் காவேரியானாள்... அதற்காகவே காத்திரு
மீனாட்சி.. அவளை எதிர்கொண்டாள்...

"யாரைப் பார்த்துடி ஜாடைப் பேச்சு பேசற..
விசுவாசின்னா நான் யாரு..? காட்டிக் கொடுக்கிறவளா

"அது எனக்கு எப்படித் தெரியும்...?"

"தெரியாமலா இம்புட்டு நேரமும்.. இம்புட்
பேச்சைப் பேசின...?"

"உன்னத்தான் பேசினேன்னு எப்படிடி நீ சொல்ற
அப்ப.. நான் சொன்ன அத்தன குணமும் உன்கி
இருக்குன்னுதானே அர்த்தமாகுது...?"

அங்கே சண்டை களைகட்ட.. மேகலா அதை சுவாரஸ்யமாக கன்னத்தில் கைவைத்து வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.. தோட்டத்தில் புல்லை செதுக்கிக் கொண்டிருந்த நாச்சியப்பன் வியப்புடன் வீட்டைத் திரும்பிப் பார்த்தான்... அப்போதுதான் உள்ளே வந்து கொண்டிருந்த மருதமுத்து..

"என்னப்பா... வீட்டுக்குள்ள ஒரே சத்தமா இருக்கு..?" என்று விசாரித்தான்...

"இப்பத்தான் வீடு.. பழைய வீடா தெரியுது மருது.." என்று பதில் சொன்னான் நாச்சியப்பன்...



தூங்காத இரவுகளின் முடிவில்...
தூங்க முடியாத இரவுகளை நான்பெற்றேன்...

கட்டிலின் மீது துணிவகைகள் பரந்திருக்க.. அவற்றை பெட்டிகளில் அடுக்கிக் கொண்டிருந்தாள் ராதிகா... சப்தமில்லாமல் அறைக்கதவை மூடித் தாழிட்டு விட்டு.. அவள் பின்னால் வந்து இறுக்கிக் கட்டிக் கொண்டான் பாலமுரளி... பின்னங் கழுத்தில் அவனின் வெப்பமான மூச்சை உணர்ந்த ராதிகா கண்மூடி அவன் மடியில் சரிந்தாள்.. அவள் முகம் நோக்கிக் குனிந்தவனின் கழுத்தை அவள் கரங்கள் வளைத்துக் கொண்டன...

மோக வெள்ளத்தில் அவன் மூழ்க ஆரம்பித்தா
அவன் காதோரமாக அவள் கிசுகிசுப்பான குர
கேட்டாள்...

"எப்படிங்க.. இப்படியொரு யோசனையை க
பிடிச்சீங்க..?"

"வேற என்ன செய்வேன்னு நினைச்சே...?"

"நிஜமாவே நீங்க வேலை விசயமா என்
விட்டுட்டு வெளிநாட்டுக்கு போயிடுவீங்களோன்னு ந
பயந்து போயிட்டேன்.."

"உன்னை விட்டுட்டுப் போறதா..? என்னால
முடியுமாடி..?"

கேள்வியைக் கேட்டவனுக்கு.. அதுநாள்வ
அவன் அப்படித்தானே போய் கொண்டிருந்தான் எ
விவரமே சுத்தமாக மறந்து விட்டிருந்தது.. அவற்
கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு அதை நினைவு ப
விருப்பமில்லை...

அவனுக்கு இசைந்து கொடுத்தபடி.. அ
முன்னுச்சி முடியில் விரல்விட்டு கோதினவ
காதலுடன் பார்த்தான் பாலமுரளி...

"நிஜமாவே வெளிநாட்டில் வேலை இருக்
ஆனா... அதோட இதை தேநிலவாய் மாத்திக்கல
ஐடியாவும் ஐயாவோட மனசுக்குள்ள இருக்கு..."

"ஹனிமூனா...?"

"யெஸ்... ஏன்.. நாம தேநிலவு கொண்டாடக் கூடாதா..?"

அது புதிதாக திருமணமானவர்களுக்குத்தான் என்று சொல்லாமல் அவள் மௌனித்தாள்.. அதைப் புரிந்து கொண்டவனாக.. அவன்.. அவள் காதில் முணுமுணுத்தான்...

"எனக்கென்னவோ.. நாமதான் புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடின்னு தோணுதுடி..."

"தோணும்.. தோணும்..."

"உன்னை நான் தொட்டிருக்கேன்தான்.. அப்பல்லாம்.. இத்தனை இணக்கமாய் என்னை நீ அனுமதிக்கல..."

அவன் பேசியதில் அவளுக்கு லஜ்ஜை ஏற்பட்டு விட்டது... அவனைப் பேச விடாமல்.. அவன் வாய் பொத்தி அவள் தடுத்தாள்.. அவள் விரல்களை அவன் செல்லமாக கடித்ததில்.. இன்பமான ஒரு இம்சை மனதில் உண்டாக.. அதன் ஆக்ரமிப்பில் அவள் தவித்துக் கிறங்கிப் போனாள்..

"ஹப்பா..." கண்மூடி அவள் தவித்ததைக் கண்டவனுக்குள் வேட்கை கிளர்ந்தது...

"இது... இதைத்தான் நான் சொல்றேன்... இப்படியெல்லாம்.. அப்ப.. நீ இருந்ததில்லை..."

"ப்ளீஸ்.. சொல்லாதீங்க.. எனக்கு என்னவோ போல இருக்கு..."

"இல்லடி... நான் சொல்லித்தான் ஆசனும்.. முதமுறை உன்னைத் தொட்டப்ப.. நான் வில்லனா

இருந்தேன்.. உன்னை வேட்டையாடறதில குறியாய் இருந்தேன்.. நான் தொட்டதுக்கு நீ கதறி அழுத... அந்த அழுகை என்னை எப்படியெல்லாம் பாதிச்சதுன்னு தெரியுமாடி..? எத்தனை நாள் நான் தூக்கமில்லாம என்னையே நொந்துக்கிட்டேன்னு உனக்குத் தெரியுமா..? உன்னை சீரழிச்சுட்டேன்னு என்மனசில குற்ற உணர்ச்சி உண்டாச்சுடி.. அதில எனக்கு சந்தோசம் இல்லடி... மனசெல்லாம் வேதனைதான் இருந்துச்சு..."

பாலமுரளி விவரித்ததில்.. ராதிகாவின் மனதில் துயரம் மண்டியது... அவளுக்கு விருப்பமானவன்.. அவளை விரும்பியவன்.. அவளை முதன் முறையாகத் தொட்டு ஆண்டான்.. அந்த அனுபவம் இனிமையானதாக அமையாமல்... துயரம் மிகுந்த 'வடு'வாக ஏன் அவன் நெஞ்சத்தில் பதிந்து போனது..? இது யார் கொடுத்த சாபம்..?

"அதனாலதான்.. கல்யாணத்தை பக்கத்தில வைச்சுக்கிட்டு.. பொறுத்திருக்க முடியாம உன்னை ரெண்டாம் முறையாய் தொட்டேன்... நிச்சயத்துக்கு முந்தின அந்த நாளில.. நீயும் என்னை மறுக்கல ஆனாலும்கூட... நான் செய்த தப்புக்கு பரிகாரம் செய்யாம உன்னைத் திரும்பவும் தொடறேனேன்னு என்மனசு என்னைக் குத்திக் காட்டுச்சுடி... உன் கழுத்தில தாலியைக் கட்டாம தொடறதில எனக்குள்ள குற்ற உணர்வும்.. உனக்குள்ள தயக்கமும் இருந்துச்சுடி... அதில முழுமையான சந்தோசம் எனக்குக் கிடைக்கல... என்னை

மறுக்க முடியாம நீ ஏத்துக்கிட்ட அந்த உறவுல என்ன சந்தோசம் இருக்க முடியும்..? சொல்லு..."

பாலமுரளியின் கேள்விக்கு... ராதிகாவால் என்ன பதிலைச் சொல்ல முடியும்..? அவன் சொல்லிய அத்தனையும் அட்சர சுத்தமான உண்மை என்றிருக்கும் போது.. அவள் என்ன வார்த்தைகளால் அவனைச் சமாதானப் படுத்துவாள்..?

"நான் நம்ம கல்யாணத்துக்காக காத்திருந்தேண்டி.. அதுக்குப் பின்னால... ராப்பகலா உன்னைத் தொட்டு ஆளனும்கிற வெறி எனக்குள்ள தீயாய் எரிஞ்சுக்கிட்டு இருந்துச்சுடி.. அது முடியாமப் போச்சே... கல்யாணத்துக்கு முன்னாலேயே.. உன்னைத் தள்ளி வைக்கனும்கிற சபதத்தை நான் போட்டுட்டேனேடி..."

ராதிகாவின் மனதில் துயர மேகம் கவிந்தது.. அது அவளைப் பீடித்த சாபம்.. அவளைக் காதலித்தவனால்... அவளது காதலை உணர்ந்து கொள்ள முடியாமல் போன துயரம்...

"நீ கிட்டக்கிட்ட வருவேடி.. நானும் உன்னைத் தொட்டு ஆளனும்னு வெறியாகிருவேன்.. த்ச்சு.. அது முடிஞ்சதா..?"

அவனது கோபமான வெறுப்பில்... சங்கரின் பெயரை உச்சரித்து... அந்த நேரத்தின் இனிமையைக் கலைக்க விரும்பாத அவனின் மனது வெளிப்பட்டது... அதில் ராதிகா கரைந்து போனாள்... அவனது இந்த அணுகுமுறை

அவளுக்குப் புதிதாகவும்... உவப்பானதாகவும் இருந்தது
கணவனின் இந்த இதமான மாற்றத்தில் அவள் மனம் இத
கண்டது. அவனுடனான நெருக்கத்தை அவள் அதி
படுத்தினாள்...

பாலமுரளியின் கண்கள் மின்னின.. தன்னுட
ஒட்டிக் கொண்ட மனைவியை அவன் இறுக்கி
கொண்டான்...

"நீ துடிச்சு அழுகிறப்பல்லாம் என் உயிர் துடிக்கும்டி
குழந்தைக்காக நீ ஏங்கிய ஏக்கத்தில்... எனக்கு.. எ
மேலேயே கொலைவெறி வரும்டி... என்னிடம் என்ன
குறையிருக்கு..? உன்னை ஆயிரம் குழந்தைகளுக்
அம்மாவாக்கும் ஆசை என் மனசில குமிஞ்சிருக்குடி
ஆனாலும் உன்னைக் குழந்தைக்காக ஏங்க வைச்சேன்
இது கொடுமைதானே ராதிகா..?"

அவள் இல்லையென்று தலையை ஆட்டி மறுத்தா

"இல்லைன்னு நீ சொன்னாலும்.. அதுதான் உண்ம
ராதிகா... நான் கொடுமைக்காரன்தான்.. இப்பக்கூ
குழந்தை வேணும்ன்னு நீயாய் கேட்கிற வரைக்கும் நா
தள்ளித்தானே நின்னேன்..?"

அவள் மௌனம் சாதிக்க.. அவள் நெற்றியில் அவ
மென்மையாக முத்தமொன்றைக் கொடுத்தான்...

"ஆனா ஒன்னு ராது..."

வெகுகாலமாக காணாமல் போயிருந்த 'ராது' என்
அந்த அழைப்பில்... அவள் சிலிர்த்துப் போனாள்... அந்

சிலிர்ப்பை உறுவிப் போடும் வார்த்தைகளை அடுத்து அவன் சொன்னான்...

"நீ குழந்தை வேணும்ன்னுதான் என்கிட்ட இத்தனை இணக்கமாய் இருக்கிற... எனக்கும் அது தெரியுதுடி.. எனக்கு அப்படியெல்லாம் இல்லைடி.. நீ கேட்டது எனக்கொரு வாய்ப்பா அமைஞ்சிருச்சு.. என் மனசில அடக்கி வைச்சிருந்த ஆசையை உன்மேல கொட்டிக்கிட்டு இருக்கேன்... உனக்கு என்குழந்தை வேணும்... எனக்கு நீ வேணும்.. இது ஒன்னுதான் நமக்குள்ள இருக்கிற வித்தியாசம்... மத்தபடி நான் ரொம்ப சந்தோசமா இருக்கேண்டி... இதைக் கொண்டாட தேநிலவுக்கு போகனுமா.. வேணாமா...?"

அடுத்து... அவன் பேசிய எதுவுமே ராதிகாவின் காதுகளில் ஏறவில்லை... அவள் தனக்குள் உறைந்து விட்டாள்...

அவளுடைய முரளி இன்னும்கூட அவளை உணரவில்லையா..? அவன்மீது அவள் கொண்டிருக்கும் ஆசையின் அளவையும்... காதலின் வேகத்தையும் கண்டு கொள்ளவில்லையா..? குழந்தைக்காகத்தான் அவனுடன் ஒட்டி உறவாடுவதாக அவன் நினைத்துக் கொண்டிருக்-கிறானா..? அவனுடைய குழந்தைக்கு அவள் அம்மாவாக வேண்டுமென்று துடிக்கிறாள்தான்... அதற்கு முன்னால்.. அவனக்கு மனைவியாக.. அவனது காதலியாக... அவனுடன் கலக்க வேண்டுமென்று துடிக்கிறாளே.. அந்தத் துடிப்பை அவளுடைய அத்தனை செயல்பாடுகளிலும் அவள் காண்பிக்கிறாளே.. அதை அவன் உணரவில்லையா..?

அவன் கைகள் அவள் மீது பரவியதில் அவளுக்குள் இதமான இம்சை தோன்றுவதற்குப் பதிலாக தன்னிரக்கம் பொங்கியது...

அவள் மீதான அவனது வேட்கையில் அவள் கிளர்ந்தாலும்.. இந்தக் கிளர்ச்சி... அவனுக்கானது என்பதை அவன் புரிந்து கொள்ளவில்லையே என்ற துயரம் அவளுக்குள் எழுந்து நின்றது...

அவள்கூட தனிமையில் இருக்க வேண்டும்... இரவு.. பகல் என்ற வேறுபாடு தெரியாமல் அவளுடன் கூடுவதற்கு தடை இருக்கக் கூடாது என்று அவன் வேகம் காட்டியதில் அவளுக்குள் காதல் கலந்த காமம் கணன்றாலும்.. இதையும் அவன் குழந்தைக்காக என்றுதானே எடுத்துக் கொள்வான் என்ற நினைவில் கண்ணீர் வந்தது...

"பதினைந்து நாள்ன்னுதான் சொல்லிட்டு கிளம்பப் போறோம்.. ஆனா... நாமதிரும்பி வர ஒரு மாதத்துக்கும் மேலேயே ஆகும்..."

"ம்ம்ம்..."

"ஆனா.. எனக்கு நீ வேணும்டி... ராப்பகலா நீ என் பக்கத்தில் இருக்கனும்... இத்தனை நாளா... உன்கூட வாழ முடியாத வாழ்க்கையை நான் வாழ்ந்து முடிக்கனும்... அதுக்கு இந்த இரண்டுமாச தனிமை அவசியம்டி..."

அது நேரம்வரை ராதிகாவின் மனதிலிருந்த துயர மேகம்... அவன் வார்த்தைகளைக் கேட்டதும்... கலைந்து விலகி ஓடி மறைந்தது...

தன்னிலேயே நின்றதில் அவள் தன்னையே கடிந்து கொண்டாள்... அவன் யார்..? அந்த தென்காசிப் பட்டினத்திலேயே பெரியமனிதனாக அறியப் படுகிறவன்.. அவன் கண்ணசைவில் பட கன்னியர் கூட்டம் இன்னமும் காத்திருக்கிறது... அவன் எங்கு சென்றாலும்... அங்கே அவனுக்குத்தான் முதல் மரியாதை கிடைக்கிறது... அவனுடன் பேசுவதற்கு... பெரியவர்கள் முதல்.. சிறியவர்கள் வரை அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு ஆர்வம் காட்டுகிறார்கள்...

அப்படிப்பட்டவன்... கோடிஸ்வரக் குடும்பங்களில் பிறந்த பெண்களை விட்டுவிட்டு... மத்தியதரக் குடும்பத்தில் பிறந்த... அவள் மேல் ஆசை கொண்டான்..

அவனைப் பொருத்தவரை... ராதிகா அவனைக் காதலிக்கவில்லை... அவள் சங்கரைத் திருமணம் முடித்துக் கொள்ளவே விரும்பினாள் என்றுதான் அவன் நினைத்தான்...

அப்படியிருந்தபோதும்... அவள் உள்ளம் கவர்ந்த அந்தக் கள்வன்... அவளைக் கவர்ந்தான்... அவளை பெண்டாண்டு முடித்தான்... அவள் கழுத்தில் தாலியையும் கட்டினான்... அவளது காதலை அறியாமலே.. அவள் காதலை வாழ வைத்தான்...

அவளுக்காக... இத்தனையையும் செய்த அவனுக்கு அவள் என்ன கைம்மாறை செய்தாள்..? அவனே சொல்வதைப் போல... அவள் மீதான அவனின் ஆசைத்தீயை

அணைக்க முயன்றிருக்கிறாளா..? அவனின் மோகவெறியை தணிக்க அவனைத் தழுவியிருக்கிறாளா..?

இல்லையே... இத்தனையையும் அவன் வேண்டி நிற்கும் போது அதைக் கொடுக்க மறந்து.. அவன் சொன்ன வார்த்தைகளிலேயே அவள் உழன்று நிற்கலாமா..?

அவனுக்கு இது வாய்ப்பெனும் போது... அவளுக்கும் இதுதானே வாய்ப்பு...?

அவன் கேட்டதைக் கொடுப்பதற்காக... அவள் மனதிலிருந்த அத்தனை துயரங்களையும் தூரத்தூக்கி விட்டெறிந்து விட்டு அவனை நெருங்கினாள்... அவன் கேட்டதைவிட அதிகமாக அவள் அள்ளிக் கொடுத்ததில் அவன் கள்ளுண்ட வண்டாக மனம் மயங்கிப் போய் அவளை ஆக்ரமித்தான்...

ஆனானப் பட்ட முண்டாசுக் கவிஞனையே...

'மோகத்தைக் கொன்றுவிடு - அல்லால்
என் மூச்சை நிறுத்தி விடு..'

என்று பாடாய் படுத்திய மோகத்தீ... அவர்கள் இருவரையும் சும்மா விட்டு வைக்குமா..?

அது அவர்களைச் சுற்றி வளைத்தது... அவர்கள் அதில் பற்றி எரிந்தார்கள்.. அது தித்திக்கும் தீயாக இருந்தது... அதைத் தீண்டத்தீண்ட சுவை கொடுத்துக் கொண்டேயிருந்தது...

மோகத்தீயில் மூழ்கும் போது...
அது சுடாமல் குளிர்ந்தது ஏன்...?

பாலமுரளியும்... ராதிகாவும்... வெளிநாட்டிற்குப் பறந்து விட்டார்கள்... அவர்கள் இல்லாத நாள்களில் மாமியாரைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்வதாக ராஜராஜன் வாக்களித்தான்...

"சந்தோசமா போயிட்டு வா ராதிகா... குழந்தைகளைக் கவனிக்க என் மாமனார்.. மாமியார் இருக்காங்க... வாரக் கடைசியில் அவங்களைக் கூப்பிட்டுக்கிட்டு என் புருசன் வந்துடுவாரு... இரண்டு மாசம் என்ன.. அதுக்கு மேலே ஆனாக்கூட பரவாயில்லை.. அம்மாவை நான் கவனிச்சுக்கிறேன்.. தொழில்களில் ஏதும் பிரச்னை வந்தா என் புருசன் பார்த்துக்குவார்..."

பாலசரஸ்வதியின் கனிவான வார்த்தைகளில் ராதிகாவுக்கு அதிகமான நெகிழ்வு வந்தது... ஆரம்ப காலத்தில் அவள்மீது பாலசரஸ்வதி காட்டிய கோபத்தையும்.. வெறுப்பையும் நினைத்துப் பார்க்கும்போது.. அது கனவென்று அவளுக்குத் தோன்றியது... அதைச்

செய்ததெல்லாம் பாலசரஸ்வதியல்ல என்பதை
போலத்தான் சரஸ்வதியும் அவளிடம் நடந்
கொண்டாள்... உண்மையான பாசத்தையும்... அன்பையும்
நட்பையும் காண்பித்தாள்...

பாலமுரளிகூட இதைக் கேலி செய்திருக்கிறான்...

"இந்தப் பொம்பளைக சண்டையும்... குழந்தை
சண்டையும் ஒன்னு... இன்னைக்கு அடிச்சுக்குவாங்க
நாளைக்கே கூடிக்குவாங்க... பஞ்சாயத்து பண்ண
போனவங்கதான் பகையாளியாய் நின்னு வைப்பாங்க
பார்த்துக்கங்க மாமா... உங்க பெண்டாட்டியும்
என் பெண்டாட்டியும் கூடிக் குழாவிக்கிட்
இருக்கிறத.. இவங்க சண்டைக்கு நாம பஞ்சாயத்துக்
போயிருந்தோம்ன்னா... என்ன கதி ஆகிறது...?"

"தப்பிச்சோம் முரளி... நல்ல வேளையா
அப்படிஎதுவும் நடக்கலை..."

ராஜராஜன் மைத்துனன் கூடச் சேர்ந்து சிரிப்பான்

மாறாதது என்று இந்த உலகில் எதுவும் இல்லை
மாற்றம் ஒன்றுதானே... மாற்றமில்லாதது..?

பாலசரஸ்வதியின் மன மாற்றத்தில் ராதி
நிம்மதியடைந்திருந்தாலும்... மாறாத பாலமுரளியின்
மனத்தினால் நொந்து நூலாகியிருந்தாள்...

அந்த முரளியும் இப்போது மனம் இரங்கியிருந்தான்
அவளுக்காக மனம் மாறியிருந்தான்... இப்படிப்பட்

அருமையான பொழுதுகளும் அவள் வாழ்வில் வரக்கூடும் என்று ராதிகா நினைத்தும் பார்த்ததில்லை...

வெளிநாட்டிற்குப் போவதற்கு முன்பு... சென்னையில் இரண்டு நாள்கள் தங்கியிருந்தார்கள்... பண்ணை வீட்டிற்கு கார் சென்ற போது ராதிகா அதை ஆட்சேபித்தாள்...

"இங்கே... எப்ப வந்தாலும்... நீங்க பண்ணை வீட்டிலேயே தங்கிட்டு வந்துடறிங்க... அம்மா இதைச் சொல்லி ரொம்பவும் வருத்தப்பட்டாங்க..."

"அங்கே போகாம நான் வந்ததில்லையேடி..."

"என்னத்தைப் போனீங்க... ஏதாவது ஒரு சாயங்காலப் பொழுதில் டீ சாப்பிட போவிங்களாம்..."

"அது 'டீ'யா..? காபின்னுல்ல நான் நினைச்சேன்.."

பாலமுரளியின் சந்தேகத்தில் ராதிகா கோபமாகி விட்டாள்... 'உர்'ரென்று முகத்தை வைத்துக் கொண்டு அவள் வேறு திக்கில் பார்த்து வைக்க... பாலமுரளி வெள்ளைக் கொடியை பறக்க விட்டான்...

"சரிடி... கோவிச்சுக்காதே... நீயில்லாம நான் மட்டும் அங்கே போய் தங்கினா நல்லாயிருக்காது ராதிசா..."

"இப்ப நானும்தானே கூட இருக்கேன்..?"

"நாளைக்கு முழுவதும் உங்க அம்மா வீட்டிலேயே விருந்தாடலாம்... நாளைக்கு மறுநாள்தானே பிளைட் ஏறனும்...?"

"இன்னைக்கு என்ன ஆச்சு...? நாள் நல்லாயில்லையா...?"

அவன் பதில் சொல்லாமல் அவளை இறுக்கிக் கொண்டான்... அவனது நெருக்கத்தில் ராதிகாவுக்கு அவன் மீதான கோபம் மறந்து விட்டது...

"இது ஒன்னைக் கண்டுபிடிச்சு வைச்சிருக்கீங்க..." அவள் செல்லக் கோபத்துடன் சிணுங்கினாள்...

"அடி என் முட்டாள் பெண்டாட்டியே... இந்த வீட்டை உன்னாலும்... என்னாலும் மறக்க முடியுமா...?"

காதோரமாக அவன் கேட்டதில் அவள் கிறங்கிப் போய் மறக்க முடியாது என்று சொல்லும் விதமாய் தலையை அசைத்தாள்...

எப்படி மறக்க முடியும்..? அவளை முதன்முதலாக அவன் தொட்டு ஆண்ட இடம் அந்த வீடல்லவா..? அதை மறக்க அவளால் முடியுமா...?

"அதுக்காகத்தான் இந்த வீட்டையே நான் வாங்கினேன்... நாம எப்ப சென்னைக்கு வந்தாலும் இங்கேதான் தங்கனும்... ஊடே ஒருநாள்... இரண்டு நாள்.. உன் அம்மா வீட்டுக்குப் போயிட்டு வரலாம்... மத்தபடி... இதுதான் நம்ம வீடு.. புரிஞ்சதா..?"

அவளுக்குப் புரியாமலிருக்குமா...?

"ம்ம்ம்..." என்று தலையை ஆட்டினாள்...

"இதைப் பார்த்துக்கன்னு ஒரு குடும்பத்தையே இங்கே குடி வைச்சிருக்கேன்... இவ என்னடான்னா..

அதைப் புரிஞ்சுக்காம அம்மா வீட்டுக்குப் போகனும்... ஆட்டுக்குட்டி வீட்டுக்குப் போகனும்ன்னு சொல்லி வைக்கிறா..."

அம்மாவுக்கும்... ஆட்டுக்குட்டிக்கும் இடையில் என்ன சம்பந்தம் இருக்கக் கூடுமென்று அவளுக்குப் பிடிபடவில்லை...

முரளி எப்போதுமே அம்மாக்களைப் பற்றிச் சொல்லும் போது ஆட்டுக்குட்டியையும் சேர்த்தே சொல்லியிருக்கிறான்... அதற்கான விளக்கத்தை அவனிடம் கேட்டபோது... விளக்கம் தராமல் அவளை முறைத்தான்...

"ஏண்டி... ஒரு மனுசன்... இரண்டு வருசமா கல்யாணமாகியும் பிரம்மச்சாரியாய் இருந்து தொலைச்சுப்புட்டு... ஒருவழியாய்... பெண்டாட்டி கூடக் குடும்பம் நடத்தலாமுன்னு கிளம்பிவந்தா... நீ அம்மாவுக்கும்.. ஆட்டுக்குட்டிக்கும் இடையே இருக்கிற சம்பந்தத்தை விளக்கச் சொல்லி பாடம் கேட்டுக்கிட்டு இருக்கிறயே.. நீ படிக்க வேண்டிய பாடமே வேறடி..."

அவன் கற்றுக் கொடுக்கும் ஆசிரியனானான்.. அவன் கற்பித்த பாடங்களில் அரிச்சுவடியைக் கூட அறிந்திராத அவளை வைத்துக் கொண்டு.. எப்படி பாடம் கற்பிப்பது என்று அவன் கோபப் பட்டான்...

கற்றுக் கொள்பவள் பணிந்து நின்றாள்... அவன் கற்றுக் கொடுக்கும் பாடங்களை சிரத்தையாக கற்றுக் கொள்வதாக உறுதிமொழியையும் அளித்தாள்...

தேநிலவு முடிந்து திரும்பும் போது அந்த பாடங்களில் அவள் கை தேர்ந்தவளாக தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற எச்சரிக்கையுடன் அவள் கற்றுக் கொடுப்பதை தொடர்ந்தான்...

வள்ளியம்மாளிடம் முன்னெச்சரிக்கையாக அவளுக்கு அசைவம்தான் பிடிக்குமென்று சொல்லி விட்டாள் ராதிகா...

"கீரையைக் கூட வைத்துக்கலாம்... அதை விட்டுட்டு.. கீரைக் குழம்பு... கீரைப் பொரியல்.. கீரைக் கூட்டு... கீரை வடை.. கீரை தோசைன்னு போட்டு.. என் வீட்டுக்காரரை தேனூத்துக்கு திரும்பி ஓட வைச்சிராதே வள்ளி..."

"நான் இன்னாத்தைக் கண்டேன்ம்மா..? நீங்க பாட்டுக்கு... கீரை.. கீரைன்னு புலம்பி வைச்சீங்க. ஐயாவைக் கேட்டா.. உங்களுக்கு கீரை பிடிக்கும்ன்னு சொல்லி வைச்சாரு... என்னைக்கோ ஒரு நாளைக்கு வர் அம்மாவுக்கு புடிச்சதா ஆக்கிப் போடலாமுன்னு நம்ப தோட்டத்தில ஒரு கீரைப் பாத்தியையே கால பண்ணினேன்னா பார்த்துக்கங்களேன்..."

வள்ளியம்மாளின் விளக்கத்தில் செய்வதறியாத-வளாக ராதிகா பாலமுரளியைப் பார்த்தாள்..

அவன் உதடுகளில் சிரிப்புப் படர்ந்தது... அவளுக்கு மட்டும் கேட்கும் படியாக மெதுவான குரலில் முணுமுணுத்தான்...

"மொச்சைக் கொட்டை கண்ணை முழிச்சுக்கிட்டு என்னையே பார்த்தா என்னடி அர்த்தம்..? பெரிசா.. நானென்ன கிள்ளுக்கீரையான்னு நீதானே வசனம் பேசி வைச்ச..? அதை இவகேட்டுட்டா... நான் வாயில வந்ததை சொல்லி வைச்சேன்... மகராசி.. கீரையாய் ஆக்கிப் போட்டு.. கறியும் சோற்றையும் வாயில வைக்க முடியாம செஞ்சுட்டா..."

முரளியின் சிரிப்பு.. ராதிகாவையும் தொற்றிக் கொண்டது...

"அதை விட்டுவிடு வள்ளி..."

"வுட்டுட்டேன்..."

"நீ நான்வெஜ் சமைக்கிறதில எக்ஸ்பர்ட்டாமே..."

"இன்னாம்மா இப்படிக் கேட்டுப்புட்டிங்க..? உங்களுக்கு இன்னா வேணும்..? காடை..? கவுதாரி..? நாரை..?"

பறவையினங்கள் அனைத்தையும் அவள் ஒப்பிக்க ஆரம்பிக்க... ராதிகா பயந்தே போனாள்...

"வேணாம் வள்ளி... ஏற்கனவே சிட்டுக்குருவி இனம் அழிஞ்சுக்கிட்டு இருக்குது... மத்ததிலயும் நாம கை வைக்காம ஒதுங்கியே நிற்போம்... நமக்குன்னு பிராய்லர் கோழி இருக்கு... நீ அதைப் பிடி... நாங்க நீ சமைச்சு வைக்கிற அயிட்டங்களை ஒரு பிடிபிடிக்கிறோம்..."

"அப்படிங்கறிங்க..?"

"அப்படிங்கிறேன்.. போதுமா..."

வள்ளியம்மாளுக்கு அது போதவில்லை... அனை
இனங்களிலும் அவளது கைவரிசையைக் காண்பித்
பாராட்டுப் பெற முடியவில்லையே என்று ஏகத்துக்
வருத்தப்பட்டாள்...

அதற்கென்று ஒருமுறை வந்து.. ஒரு மாத அ
தங்கி.. தினமும் ஒரு இனமாக அவள் சமைத்
போடுவதை ருசித்துப் பார்ப்பதாக ராத்
உறுதியளித்ததின் பேரில்.. சமாதானமாகி.. வேலை
கவனிக்கச் சென்றாள்...

"ஆமாம்.. இப்போவெல்லாம் நீ கிள்ளுக்கீரை
விட்டு வைச்சிட்டயே... என்னடி ஆச்சு..? அது பிழை
போகட்டும்ன்னு மனசிரங்கிட்டயா..?"

தனிமையில் பாலமுரளி அவளை வம்
இழுத்தான்...

"உங்களுக்கு அவ்வளவு ஆவலாய் இரு
வள்ளியைக் கூப்பிட்டு அவ முன்னாலே கிள்ளுக்கீரை
பத்தி பேசிவைக்கட்டுமா..?"

ராதிகா வள்ளியைக் கூப்பிடுவதைப்
பாவனைசெய்தாள்...

"அடிப்பாவி...!" என்று அவள் கையைப் பி
தடுத்தான் பாலமுரளி..

"என்னங்க..? நீங்கதானே கிள்ளுக்கீரை
ஆசைப்பட்டிங்க..? வள்ளிகிட்டச் சொன்னா...

கீரையைக்கிள்ளி.. கடைஞ்சு வைப்பாள்ல..?" ராதிகா நியாயம் கேட்டாள்...

"ஏண்டி.. காடை.. கவுதாரின்னு மனுசன் மனசில ஆசையைக் கிளப்பி விட்டுட்டு... நீ சைவச் சமையல்ல இறங்கறியே... உனக்கே இது நியாயமாய் இருக்காடி..?"

"நான் தேமேன்னுதானே இருந்தேன்..? கிள்ளுக் கீரையைப் பத்திப் பேசினது யாரு..? நீங்களா..? இல்லை நானா..?"

"இந்த கோபிநாத் வேலையெல்லாம் மூட்டையைக் கட்டித் தூக்கிப் போடு..."

"போட்டுட்டு..?"

"வந்த வேலையைக் கவனிடி..."

அவன் அவளை அருகே இழுத்துக் கொண்டான்.. தள்ளி நின்றபோது வாயடித்தவள்... அவன் கைகளுக்குள் அடங்கிய போது வாயடைத்துப் போனாள்...

"என்னடி பேச்சைக் காணோம்...?"

ஆண்மையின் கர்வத்தோடு.. அவன் கண்சிமிட்டிய போது.. பெண்மையின் நாணத்தோடு.. பேச்சிழந்து அவன் மார்பில் ஒன்றிக் கொண்டாள் ராதிகா.. அவன் முகத்தில் திருப்தி படர்ந்தது...

நீ போகும் பாதை தேடி..
நினைவாலே பயணம் செய்தேன்...

"ஹை.. அக்கா வந்தாச்சு.." சுந்தர் குதித்துக் கொண்டு ஓடி வந்தான்...

"ஏண்டா... என்ஜினியரிங் காலேஜில சேர்ந்துட்ட... இன்னமும் சின்னப் பையனைப் போலவா குதிச்சு வைப்ப..?"

கிருஷ்ணமூர்த்தி மகனைக் கண்டித்து வைத்தார்... அவன் அதைக் கொஞ்சம்கூட கண்டு கொள்ளவில்லை.. அவன் காரை அணுகுவதற்குள் அவனைத் தள்ளிவிட்டு.. ஒட்டப்பந்தய வீராங்கனையைப் போல கீதா முன்னால் ஓடினாள்...

"பார்த்தீங்கள்ல.. நானாவது என்ஜினியரிங் காலேஜில இப்பத்தான் காலடி வைச்சிருக்கேன்.. உங்க அருமை மக.. எந்த வருசத்திலே படிக்கிறா..? அவ குதிக்கிற குதியை விடவா நான் அதிகமா குதிச்சுட்டேன்..?" வழக்கு வைத்தான் சுந்தர்...

"விடுடா.. அவளைத் திருத்த முடியுமாடா..?" கிருஷ்ணமூர்த்தி சமாதானத்திற்கு வந்தார்...

"திருந்தாத கேஸ்களை வீட்டில வைச்சுக்கிட்டு.. என்னைத் திருத்தனும்னு நீங்க புறப்பட்டா எப்படிப்பா..?" சுந்தர் போர்க்கொடியை உயர்த்தினான்...

"அவ சொன்னதைக் கேட்க மாட்டாடா..."

"ஓ..."

"நீ அப்படியா..?"

"அப்படித்தான்..."

ஒரே போடாக சுந்தர் போட்டுவிட.. அதற்கு மேல் பேச்சை வளர்க்க முடியாதவராக.. மனைவியை பரிதாபமாகப் பார்த்தார் கிருஷ்ணமூர்த்தி...

"டேய்.. சுந்தர்..." ராஜேஸ்வரி மகனை அதட்டினாள்..

"என்னம்மா...?"

"அப்பாகூட சரிக்குச் சரியாய் பேசலாமாடா...?"

"கூடாதுதான்... ஆயிரம்தான் இருந்தாலும் நான் வருங்கால என்ஜினியர்... அந்தக் கெத்தோடு இருக்கனும்தான்... எங்கே..! நான் விலகி.. விலகிப் போனாலும் இவர் விடமாட்டேன்னு பேச்சுக்கு வர்றாரே..."

'இப்ப... இவன் என்னதான் சொல்ல வர்றான்.. இவனுக்கு நான் இணையில்லைன்னு சொல்ல வர்றானா..?' கிருஷ்ணமூர்த்தி மண்டை காய்ந்து போனார்...

மகனிடம் விளக்கம் கேட்டால்.. அவன் ஆமாமென்று சொல்லி விடுவான் என்ற பயத்தினால் அவர் அத்துடன்

பேச்சை நிறுத்திக் கொண்டவராக... மூத்த மகளை மருமகனையும் வரவேற்க ஆரம்பித்தார்...

"வாம்மா... ராதிகா.. வாங்க மாப்பிள்ளை..."

அவர் வரவேற்றுக் கொண்டிருக்க...

"அதான் வந்துட்டாங்கள்ல.. அதுக்கப்புற எதுக்கு பார்மாலிட்டீஸ்...?" என்று குறுக்கிட்டாள் கீத

"அதானே.. உன்னை என்னன்னு கேட்க முடிய அக்காவை வரவேற்க வந்திட்டார்.." சுந்தர் கீதா தலையில் குட்டினான்...

"என்னை என்னடா கேட்கணும்..? எதுக்கா கேட்கனும்..? அப்பாவுக்கு தெரியும்டா..."

"என்ன தெரியுமாம்..."

"யார் பிளாக் ஷீப்.. யார் வொயிட் ஷீப்ன்னு..."

ராதிகாவும்... கீதாவும் சிவந்த நிறத்துடனிரு சுந்தர் மட்டும் சற்று நிறம் கம்மியாக இருப்பான்.. அந்த காரணத்தினாலேயே... கீதா வெள்ளை ஆடாகவும்.. சு கருப்பு ஆடாகவும் மாறிப்போனதில் சுந்தர் கடுப்புக்கு ஆளானான்...

"ஆட்டைப் பத்தியெல்லாம் நீ பேசாதே..."

"ஏண்டா..?"

"நீயென்ன ஆடா...?"

"பின்னேயென்ன.. மாடா..?"

"ஆமாண்டி.."

"பல்லை உடைப்பேண்டா..."

"உன் கையை முறிப்பேண்டி.."

"உன் காலை உடைப்பேண்டா..."

அங்கே ரணகளமாய் யுத்தம் உருவாக... பாலமுரளி வெகு சுவாரஸ்யமாக வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டான்...

"ஏய்ய்... என்ன ஆச்சு ரெண்டு பேருக்கும்..? எத்தனை நாள் கழிச்சு வீட்டுக்கு வந்திருக்கேன்... வாசலிலேயே வழக்கடிக்க ஆரம்பிக்கிறிங்களே..."

பெரியவளாய் லட்சணமாய் ராதிகா அவர்களை கடிந்து கொண்டாள்...

"பாருடி.. இவன் பேசறதை..."

"இவ பேசறது மட்டும் ஒழுங்காக்கா...?"

"தினமும் என்கூட மல்லுக்கு நிற்கிறாண்டி.."

"தினமும் என் உயிரை குறைக்கிறாக்கா..."

ராதிகாவின் இருபக்கமும்... நின்று கொண்டு அவர்கள் வழக்கு வைக்க... ராஜேஸ்வரியின் நீதிபதி பதவியைப் பறித்துக் கொண்டு திடீர் நீதிபதி ஆன ராதிகா... தீர்ப்புச் சொல்லியபடி உள்ளே போய் விட்டாள்...

தனித்து நின்ற பாலமுரளியிடம் சங்கடத்துடன் புன்னகைத்தாள் ராஜேஸ்வரி...

"உள்ளே வாங்க மாப்பிள்ளை..."

அவன் உள்ளே வந்தபோது... ராதிகாவும்... சுந்தரும் சோபாவில் அமர்ந்திருக்க... மாடிப்படியின் அருகில் நின்றபடி... கையில் அகப்பட்ட எதையோ எடுத்து... சுந்தரின் மீது விட்டெரிந்து கொண்டிருந்தாள் கீதா...

அவனோ... "கேட்ச்..." என்று அனாசியமாக அதைப் பிடித்தான்...

பாலமுரளி ராதிகாவின் பக்கத்தில் உராய்ந்தபடி உட்கார...

"அத்தான்... உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணமாகி.. ரெண்டு வருசமாச்சு..." என்றாள் கீதா...

"ஏண்டி இப்படிச் சொல்ற...?" ராதிகா விழித்தாள்...

"புதுப் பெண்டாட்டியை உரசுகிறதைப் போல அத்தான்... உன்னை இந்த உரசு... உரசுகிறாரே..." கீதா விளக்கம் சொல்ல...

"ஏய்ய்..." என்று முகம் சிவந்து போனாள் ராதிகா...

பாலமுரளியோ மைத்துனியின் பேச்சை ரசித்தவனாக உரக்கச் சிரித்தான்...

இளையவர்கள் பேசட்டும் என்று இங்கிதமாக... பெரியவர்கள் உள்ளே போய் விட... நிம்மதியான ராதிகா.. கீதாவின் காதைப் பிடித்து திருகினாள்...

"அறிவிருக்காடி உனக்கு..?"

"ஏனாம்.. உனக்கு கொஞ்சம் கடனாய் கொடுக்கனுமா..?"

"உன்கிட்ட கடனாய் வாங்கிட்டாலும்... விளங்கிரும்.. நீ என்கிட்ட கடன் கேட்காம இருந்தாச்சரி..."

"அடேங்கப்பா.. அப்படியாப்பட்ட அறிவுக்கடல் என்கிட்ட எதுக்காக இந்தக் கேள்வியைக் கேட்டாளாம்..."

சுந்தரை வைத்துக் கொண்டு கீதா இந்தக் கேள்வியைக் கேட்டதில் ராதிகா பதில் சொல்ல முடியாமல் திணறிப் போனாள்...

அவள் திணறுவதை பாலமுரளி ரசித்துப் பார்த்ததில் அவளது கோபம் அவன் பக்கமாகத் திரும்பியது...

"எதுக்காக அப்படிப் பார்க்கறிங்க..? இது வீடு.. தியேட்டர் இல்லை.. இங்கே யாரும் பிலிம் காட்டலை..."

அவள் எரிந்து விழ... கீதா எடுத்துக் கொடுத்தாள்...

"இது வெறும் வீடில்லை அத்தான்... வியட்நாம் வீடு.."

"அதை நீ வேற சொல்லனுமா...? நீ சொல்லாமலே எனக்கு அது தெரியுமே..."

"நீங்கதான் செம விவரமான ஆளாச்சே..."

இதை சொல்லி வைத்த கீதா... சும்மா சொல்லியிருக்கலாம்... அவள் அதை விட்டுவிட்டு.. பாலமுரளியைப் பார்த்து உற்சாகமாக கண்ணடித்து வைத்ததை ராதிகா ரசிக்கவில்லை...

அந்த கண்ணடிப்பை கண்டு கொள்ளாமல் இருந்திருக்க வேண்டிய பாலமுரளி அதைச் செய்யாமல் பதிலுக்கு கண்ணடித்து வைத்ததில் ராதிகாவின் ரத்த அழுத்தம் எகிறி... உச்சநிலையை அடைந்தது...

அவள் கீதாவுடன் பேசுவதை தவிர்த்து.. சுந்தரிடம் பேசலானாள்... கீதாவோ... அதை சட்டை செய்யாமல் எனக்கென்ன என்று பாலமுரளியிடம் உற்சாகமாக கதை பேச ஆரம்பித்து விட்டாள்...

வெளிநாட்டைப் பற்றிக் கேட்க அவளிடம் நிறைய கேள்விகள் இருந்தன... அதற்கான பதிலைச் சொல்லும் மும்முரத்தில் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மனைவியின் பக்கம் திரும்பிப் பார்க்க மறந்து விட்டான் பாலமுரளி...

ராதிகாவுக்கு பல்லைக் கடித்துக்கடித்து.. பல் கூச்சமே வந்து விட்டது... அவளும்தான் பொறுமை-சாலியைப் போல வேசம் கட்டிக் கொண்டு... எத்தனை நேரத்திற்குத்தான் சுந்தரின் கல்லூரிக் கதைகளைக் கேட்டுக் கொண்டிருப்பதைப் போல... பாவனை செய்து கொண்டிருப்பாள்..?

கீதாவும் கேள்விகளை நிறுத்திய பாடாக இல்லை.. பாலமுரளியும் ராதிகாவின் பக்கம் திரும்பிய பாடாக இல்லை...

'என்னதான் கண்ணுக்கு அழகாய் பெண்டாட்டி இருந்தாலும் மச்சினிச்சிகளிடம் கடலை போடாமலிருக்க இந்த ஆம்பளைகளால் முடியவே.. முடியாதோ...'

அவள் பொருமித் தவித்துக் கொண்டிருந்த போது... அவளை அந்தப் பொருமலிலிருந்து மீட்க வந்த ரட்சகனைப் போல கிருஷ்ணமூர்த்தி அங்கே வந்தார்..

"பிரியாணி ரெடி மாப்பிள்ளை..." என்று அவர் அறிவிக்க...

"ஏம்ப்பா... நீங்க முனியாண்டி விலாஸா நடத்தறிங்க...? என்கிட்ட சொல்லவே இல்லை பார்த்தீங்களா..." என்று வம்புக்கு இழுத்தான் சுந்தர்...

"சொன்னா... நீ ஒரு ஆளாவே அத்தனை அயிட்டத்தையும் மொக்கிருவன்னு பயந்து போயிருப்பார்.. நான் சொன்னது சரிதானேப்பா...", கீதா அவள் பங்குக்கு பேசிவைத்தாள்...

கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பார்த்த பார்வையில்... மூத்தமகளோடு நிறுத்திக் கொள்ளாமல்.. அடுத்தடுத்து பிள்ளைகளைப் பெற்று விட்ட ஆற்றாமை தெரிந்தது...

'ம்ஹீம்... ஒற்றை மகளோடு நிறுத்தியிருக்கலாம்...' காலம் கடந்த பெருமூச்சை அவர் வெளியேற்றினார்...

தலை வாழை இலை போட்டு... அதில் அசைவ பதார்த்தங்களை பரப்பியிருந்தாள் ராஜேஸ்வரி...

"வாவ்... சிக்கன் வறுவல்.. மீன் பொரியல்... அவிச்ச முட்டை... மட்டன் பிரியாணி... மட்டன் சுக்கா.. ம்மா... உங்களுக்கு இத்தனை அயிட்டமும் பண்ணத் தெரியும்ன்னு

எனக்கு இப்பத்தான்ம்மா தெரிஞ்சது.." நாக்கை சப்புக் கொட்டினாள் கீதா..

"இத்தனை காலமும் இதையெல்லாம் நீ கண்ணால் கூட கண்டதில்லையா...?" ராஜேஸ்வரி நெற்றிக் கண்ணைத் திறந்தாள்...

"அதில்லைம்மா.. சேர்ந்தாற்போலப் பார்த்ததில்லைன்னு சொன்னேன்..." ஜகா வாங்கினாள் கீதா...

"ஒவ்வொண்ணா சமைச்சு வைச்சதை சாப்பிட்டதுக்கே உனக்கு கொலஸ்ட்ரால் தலைக்கு மேல ஏறிப்போயிருக்கு... இதில... இத்தனை அயிட்டத்தையும் ஒரே நாளில பண்ணிப் போட்டேன்னு வை.. இந்த வீடு தாங்காது..."

'கொழுப்பு...' என்பதை ஆங்கிலத்தில் 'கொலஸ்ட்ரால்..' என்று சொல்லி வைத்தாலும்... இளைய மகளை ராஜேஸ்வரி முறைத்த முறைப்பில் தமிழ் வார்த்தைதான் தெறித்து விழுந்தது...

"ஹா...ஹா...அம்மாவா... கொக்கா..? இவ வாயை அடக்க அம்மாதான் லாயக்கு... கேட்டுக்கடி..." சுந்தர் ஆரவாரித்தான்...

"உஸ்ஸ்... இதென்ன டைனிங் டேபிளா.. இல்ல... காய்கறி மார்க்கெட்டா..? மூச்..! வாயைத் திறக்காம சாப்பிடுங்க..." ராஜேஸ்வரி அதட்டினாள்...

"வாயைத் திறக்காம எப்படிம்மா சாப்பிட முடியும்..?" கீதா சிணுங்கினாள்...

"அதானே பார்த்தேன்... என்னடா... இன்னமும் இந்த பேமஸ் டயலாக்கை இவ எடுத்து விடலையேன்னு.." சுந்தர் பிரியாணியை ருசித்தபடி கூறினான்...

"பேமஸ் டயலாக்கா..?" ராதிகாவுக்கு புரியவில்லை..

"ஆமாங்க்கா... இவ இப்படித்தான்.. நான் என்ன சொன்னாலும் அதை அப்படியே காப்பியடிச்சுருவா.. ஒரிஜினலா மண்டையில ஒன்னுமே இல்லை போல..." சுந்தர் புதிர் போட்டான்...

"என்னடா சொல்ற..?" ராதிகா புருவங்களை உயர்த்தினாள்...

"இவ இதையே ஒரு பிழைப்பா வைச்சிருக்காக்கா... ஒருநாள் நான் மோகினிப் பேயைப் பத்தி காமெடியாப் பேசினேன்... அடுத்த ஒரு வாரத்திலேயே இவ அதைப் போலப் பேசிசெய்து காமிச்சுட்டா.." சுந்தர் விவரிக்க ஆரம்பித்தான்...

"நிஜமாவா..." ராதிகா கீதாவை ஆச்சரியத்துடன் பார்க்க... அவள் தோள்களைக் குலுக்கி... கைகளை விரித்துக் காண்பித்தாள்...

"கொடுமைக்கா... என் பிரண்டுகிட்ட நான் 'யார்.. நீ'ன்னு செல்போனில கலாய்ச்சுக்கிட்டு இருக்கேன்... கொஞ்ச நேரம் கழிச்சுப் பார்த்தா... இவதான் அந்த கலாய்ப்பைக் கண்டு பிடிச்சதைப் போல... இவ பிரண்டு மீனாட்சிகிட்ட பீலா விட்டுக்கிட்டு இருக்கா..."

சுந்தர் பேசப்பேச... ராதிகாவுக்கு ஆச்சரியம் அதிகரித்தது...

இரவலில்லா கற்பனை எனது...
இதைத்திருடும் களவு உனது...

மற்றவர்களின் கற்பனையையும்.. பேச்சுத் திறனையும் தனதாக எப்படிக் கூற முடிகிறது என்று ராதிகாவிற்குப் புரியவில்லை...

சொத்தைத் திருடுவதும்... மற்றவர்களின் கற்பனையைத் திருடுவதும் ஒன்றுதானே... இரண்டுக்கும் வித்தியாசம் எதுவுமில்லையே...

அறிவு என்பது மிகப் பெரிய செல்வம்.. அதைப் பெற்றவர்கள் சொல்வதை... மற்றவர்கள்.. கவர்ந்து கொள்தல் முறையான செயலில்லையே...

"இவ பெரியஆளுக்கா... இவ என்ன செய்தாலும்.. நான் தட்டிக்கேட்க முடியாதுங்கிற தைரியம்... இப்படித்தான் நான் அப்பாகிட்ட பாசமலரை வளர்க்கறீங்களான்னு வேடிக்கையா கேட்டுக் கிட்டு இருக்கேன்.. பத்தே நிமிசத்தில.. பக்கத்து விட்டு சரவணன் கிட்ட இந்தக் கேள்வியை இவ கேட்கிறா..."

"ஏண்டா.. நீ நினைச்சதை இவளும் நினைச்சிருக்கலாமில்லையா...?"

"அப்படித்தான்க்கா... முதலில் நானும் நினைச்சேன்.. ஆனா.. நான் நினைக்கிற அத்தனை நினைப்பையுமா இவ நினைப்பா..? அப்படி நினைக்கிறவ.. எனக்கு முதல்ல... அந்த நினைப்பை வெளியில் சொல்லியிருக்கலா-மில்லையா.. அதை விட்டுட்டு.. போன வாரம் நான் பேசிவைக்கிற பேச்சை... அடுத்த வாரம் அப்படியே பேசிவைச்சா என்னக்கா அர்த்தம்...?"

"அது தப்புத்தாண்டா..."

"அதை இவகிட்ட யார் சொல்றது..? நான் ஒரு பாதை போட்டு நடந்தா.. அதில இவ உரிமை கொண்டாடிக்கிட்டு கூட வர்றா.."

"வந்தா.. வந்துட்டுப் போகட்டும்டா... நீ உன் வழியில போ..."

"நான் அப்படித்தான்க்கா இருக்கேன்.. என்வழி தனிவழின்னு யார் பேச்சுக்கும் போகாம.. நான் உண்டு.. என் வேலை உண்டுன்னு இருக்கேன்.. இவளுக்குத்தான் என்னை காப்பியடிக்கிறதே பிழைப்பாய் இருக்கு..."

"அது எத்தனைநாள் நிலைக்கும்டா சுந்தர்..? ஒரிஜினாலிட்டி தான் நிலைச்சு நிற்கும்..."

"இதைச் சொல்லி மனதை ஆற்றிக்க வேண்டியது தான்.. இப்படியாப்பட்ட பிறவிகளுக்கு மத்தியிலே இருந்து தொலைக்கிறோமே... வேற என்னதான் செய்கிறது..? நான் பேசற ஒவ்வொரு வார்த்தையையும் அட்சர சுத்தமாய் அப்படியே காப்பியடிக்கிறாக்கா.. இதில.. இவ பேசறதை

ரசிக்க ஒரு கூட்டமே இருக்கு.. என்ன ஒன்னு.. இ
பேசறதைக் கேட்டுட்டு அவங்க எனக்கு போன் பண்ண
சொல்லுவாங்க..."

"என்னன்னு..?"

"அவபேசறது அப்படியே நீ பேசறதைப் போல
இருக்குடாம்பாங்க..."

"இதுதாண்டா சுந்தர்... இந்த வார்த்தை உன்
நிருபிக்கும்.. அவ பேசற பேச்சில அவளைப் பார்க்க
உன்னைப் பார்த்தாங்கன்னா.. அதுதாண்டா
ஒரிஜினிலாட்டியோட வெற்றி..."

"அப்படியா சொல்ற...?"

"ஆமாண்டா சுந்தர்... எதைச் செய்தாலும்... அ
வேலை செய்கிறவங்களோட முகம் தெரியனு
அவங்களோட திறமை தெரியனும்.. அதை விட்டுட்
அடுத்தவங்களோட முகத்தைப் போல முகமூடி
போட்டுக்கிட்டு அதுக்குப் பின்னால ஒளிஞ்சு நின்
வேலை செஞ்சா.. பணம் கிடைக்கலாம்... மனத்திருப்
கிடைக்காது.. ஆயிரம் தான் நாம இ
உருவாக்கியிருந்தாலும்... இதில் மத்தவங்களோ
கற்பனையையும்.. பேச்சுத் திறமையையும் களவா
கலந்திருக்கோம்ன்னு அவங்க மனச்சாட்சி அவங்க
உறுத்தும்.. அந்த வெற்றியெல்லாம் ஒரு வெற்றியாடா.
அது அடுத்தவங்களின் யுக்தியையும்.. கற்பனையை
களவாடி.. கலந்து பெற்ற வெற்றி..."

"மனச்சாட்சி இருந்தாத்தானேக்கா அது உறுத்தப்
போகுது..? இப்படியாப்பட்ட ஆளுகளுக்கெல்லாம்
மனச்சாட்சி இருக்கும்கிற..?"

"அது இருக்காதுதான்..." என்று ஒப்புக் கொண்டாள்
ராதிகா...

"அது இருந்தா இப்படிச் செய்வாங்களா..?"

"அதைச்சொல்லு... இதெல்லாம் பேசித் தீர்க்கிற
விசயமேயில்லை..."

"பார்த்துக்கிட்டே இருக்கா.. ஒருநாள் இல்லைன்னா..
ஒருநாள் இப்படிக் காப்பியடிச்சு பொழைப்பு நடத்தறவங்க
மேல கேஸைப் போட்டு கூண்டில ஏத்தத்தான் போறேன்..."

"அதை அப்பப் பார்க்கலாம்.. இப்ப டென்சன் ஆகாம
சாப்பாட்டைக் கவனி..."

சாப்பிட்டு முடித்த பாலமுரளியிடம் வெற்றிலைத்
தட்டை நீட்டினாள் ராதிகா...

"அம்மா கொடுத்தாங்க.."

அவன் முகம் பார்க்காமல் சொன்னவளின் கையைப்
பிடித்து இழுத்து அருகில் அமர வைத்துக் கொண்டான்
பாலமுரளி...

"அதையேண்டி விரோதிகிட்டக் கொடுக்கிறதைப்
போலக் கொடுக்கிற...?"

"யாரும் என்னிடம் பேச வேணாம்..."

"ஏய்ய்.. வேற யாரும் உன்கிட்டப் பேசிற முடியும கையைக் காலை முறிச்சிற மாட்டேன்...?"

கோபப்பட்டவனை... ஊன்றிப் பார்த்தாள் ராதி அவள் பார்வையில் தெரிந்த கொதிப்பில் மு புருவங்களை உயர்த்தினான்...

"என்கிட்ட மட்டும் யாரும் பேசிற முடியாது.. கையைக் காலை முறிச்சிருவீங்க... ஆனா.. கண்முன்னாலேயே.. மச்சினிகிட்ட கடலை போடுவீ அவளும் உங்ககிட்ட சரசமாப் பேசுவா... நான் ஏ கேட்காம.. உத்தம பத்தினியைப் போல வாயை மூடிக் இருக்கனும்... என்னே உங்க நியாயம்... புல்லரி போங்க..."

"போர்வையால போர்த்திக்க.. ஆடு மேய்ஞ்சிரப் போகுது... யாருடி இவ..."

"அது தெரியாதுதான்... இப்ப மச்சினிதானே கண்ணுக்குத் தெரிவா..? நான் யாருன்னுதான் கேட்பீ

"இந்தக் கோபத்திலதான் சுந்தர்கூடச் சேர் கிட்டு.. உன்தங்கையை அப்படித்தாளிச்சியா..?"

"இல்லேன்னாலும் அவ பண்ற காரியத் மெச்சிக்கனும்தான்... சுந்தர் எதைக் கேட்டாலும்.. கு தூக்கிட்டுப் போயிருச்சுன்னு சொல்லி வைப்பான்.. இ இவ அப்படியே எதுத்த வீட்டில ஏழாம் கிளாஸ் படி பையன்கிட்ட குரங்கு தூக்கிட்டுப் போயிருச் சொல்லி வைக்கிறா.."

"ஏழாம் கிளாஸ் பையன் கிட்டக்கூட இவ கலாய்ப்பாளா... ஹா... ஹா..."

"போதும்.. அவன்கிட்ட சுந்தர் சொல்ற இன்னொரு டயலாக்கையும் சேர்த்துச் சொன்னா..."

"அது என்னவாம்..."

"யாராச்சும் என் வாயாலே இதை எப்படி சொல்வேன்னு சொன்னா... சுந்தர் உடனே... யோவ்.. உன் வாயாலேதான்ய்யா.. நீ சொல்ல முடியும்... என் வாயாலேயா சொல்ல முடியும்ன்னு கலாய்ச்சு வைப்பான்.. இவ.. அதை இவளோட சொந்தக் கலாய்ப்பா.. அந்தப் பையன்கிட்ட அள்ளி விடறா..."

"விடுடி... தம்பியோட டயலாக்கை... தன் டயலாக்கா அவ நினைச்சிருப்பா..."

"ஹலோ.. என்ன பாஸ்... மச்சினிமேல இரக்கம் பொங்கி வழியுது..."

"ஆயிரம்தான் இருந்தாலும் அவ என் மச்சினி..!"

"அதை ஜொள்ளுங்க.. என்னதான் இருந்தாலும்.. மச்சினி மச்சினிதான்.. பெண்டாட்டி... பெண்டாட்டிதான்.."

இதைச் சொன்னவளின் இதழ்மீது அழுத்தமான முத்தமொன்றைப் பதித்து... தன்னோடு இறுக்கிக் கொண்டான் முரளி...

"ஒன்னும் வேணாம்..."

மனச் சிணுங்கலுடன் முகம் திருப்பிக் கொண்டாள் ராதிகா... அவளின் அந்தக் கோபத்தில் அவன் மனதில் சாரல் அடித்தது... அவளை விலக விடாமல் அவன் இறுக்கிப் பற்றிக் கொள்ள... அவள் திமிறினாள்...

"விடுங்க என்னை..."

"அடி என் முட்டாள் பெண்டாட்டியே...! அவ சின்னக் குழந்தைடி... அவ நோக்கமே உன்னை வம்புக்கு இழுக்கனும்கிறதுதான்... அதைப் புரிஞ்சுக்கிட்டு நானும் உன்னை கடுப்பேத்திப் பார்த்தேன்..."

"அதுக்காக இப்படியா..?"

ராதிகா அழுதுவிட்டாள்... அவள் கண்கள் உதிர்த்த கண்ணீரை கைகளில் ஏந்திக் கொண்ட பாலமுரளி... அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்...

"ராது.." அவன் குரல் ஆழ்ந்து ஒலித்தது...

"ம்ம்ம்..."

"என் மனசைத் தட்டியெழுப்ப உன்னால் மட்டுமே முடியும்... நான் பெண்டாளனும்னு நினைச்சா.. உன்னைத் தான் ஆள முடியும்.. மத்தவங்க மேல அந்த நினைப்பு கூட எனக்குள் வராது... நான் உனக்கு மட்டும்தாண்டி புருசன்.."

மாடியறையின் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்த தென்னங்கீற்று... பாலமுரளியின் பேச்சுக்கு சாட்சியாக நின்றது.. பிற்பகல் நேரத்தின் காற்று... வெப்பம் குறைந்ததாக அவர்களின் உடல் தழுவிச் சென்றது...

பாலமுரளியின் பேச்சு அவளைத் தாலாட்டி சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்ல... அவள் கண்மூடி அவன் மார்பில் முகம் புதைத்தாள்...

மாலையில் அவளை கோவிலுக்கு அழைத்துச் சென்றான் முரளி... பிரகாரத்தை சுற்றி வரும்போது...

"இந்தக் கோவிலுக்குத்தான் நீ அடிக்கடி வருவ... இங்க வைச்சு உன்னிடம் காதல் சொல்லனும்னு தொடுத்து வந்தேன்.." என்று அந்த நாள்களை நினைவு கூர்ந்தான்...

அவன் சொல்ல வந்ததை சொல்ல முடியாமல் போனதை அவன் நினைவு படுத்தாததில் ராதிகாவின் மனதில் சந்தோசப்பூ பூத்தது...

திரும்பி வரும்போது... ராதிகாவிற்கு முதல் முத்தத்தை அவன் தந்த பூங்காவிற்குள் நுழைந்து விட்டான் முரளி...

அவனைப் பின் தொடர்ந்த ராதிகாவிற்குள்ளும் அந்த நாளின் அந்தத் தருணம் எழுந்து நின்றது...

"இந்த பெஞ்சிலதான் நீ உட்கார்ந்திருந்த... நான் உன் முன்னாலே வந்து நின்னேன்..."

அவன் பேசப்பேச... அந்த முதல் முத்தத்தின் நினைவுக்கு அவள் போனாள்...

"அப்ப நீ விலகவே இல்லைடி.. ரொம்ப நாளா அதுதான் என் மனசில நின்னுச்சு..."

அப்படிப்பட்டவள் எதற்காக... சங்கரைத் திருமணம் செய்து கொள்ளும் முடிவை எடுத்தாள் என்ற கேள்வியைக்

கேட்காமல் அவன் மௌனித்து விட.... அந்த பெரு
களிவுடன் தடவிப் பார்த்த ராதிகா மிருதுவான கு
வினவினாள்...

"அதுக்கப்புறமா நீங்க எங்கே போனீங்க..?"

அந்தக் கேள்வியில் பாலமுரளியின் கண்
ழ்வலித்தன...

"நீ என்னைத் தேடினயா..?" பரபரப்பான குர
கேட்டான்...

'ஆமாம்' என்று ராதிகா சொல்லியிருக்கலா
அனைத்து உண்மைகளையும் அவனிடம் கொட்டியிருக்க

இருள் கவிய ஆரம்பித்திருந்த அந்த ஏகா
வேளையில் அவளின் கடந்த காலக் காதல் கதை
பிட்டுப்பிட்டு வைத்திருக்கலாம்...

அவனைத் தேடித்தேடி ஓய்ந்து போன அவ
அவல நிலையை அழுது புலம்பியிருக்கலாம்...

ஆனால்.. அதை அவள் செய்யவில்ல
அவற்றைச் சொன்னால் அவன் நம்புவானோ
மாட்டானோ என்ற சஞ்சலம் அவளைச் சொல்ல விடா
வாயைக் கட்டிப் போட்டு காவல் காத்து வைத்தது...

அவனுக்கு மனைவியாகி விட்டதினால்.. அ
மனதை அவள் பக்கமாகத் திருப்ப... அவள் க
சொல்கிறாள் என்று அவன் நினைத்து விட்டால்.. அ
ஒரு பேச்சில் வெளிப்படுத்தி விட்டால்... அவளால் அ
தாங்கிக் கொள்ளவே முடியாது...

அவளின் காதல் ஆத்மார்த்தமானது... அவனை ஆராதிக்கும் தன்மையுடையது... அவள்.. அவனை மட்டுமே நினைத்தாள்... அதை என்று அவன் உணர்கிறானோ.. அன்று அவள் தன் காதலை அவனிடம் வெளிப் படுத்துவாள்...

அதுவரை அதைச் செய்ய அவளால் முடியாது...

"தேடினேன்னு சொல்ல முடியாது... தினமும் தெரு முக்கில நிற்கிறவங்க மத்தியில நீங்க நிற்கிறிங்களான்னு பார்ப்பேன்..."

உண்மை சேர்ந்த பதிலை அவள் சொன்னாள்... அவனுக்கு அந்த பதிலே சந்தோசத்தைக் கொடுத்தது...

"நீ அப்படிப் பார்க்க மாட்டியே..."

"அங்கதான் நிற்பேன்னு நீங்க அன்னைக்கு சொன்னதால... அடுத்த நாளில இருந்து நீங்க இருக்கீங்களான்னு பார்க்க ஆரம்பிச்சேன்.." மெதுவான குரலில் அவள் சொல்ல...

"ஓ..." என்று பரவசப்பட்டுப் போனான் முரளி...

"நான் மறு நாளில் இருந்து உன் கண்ணில் பட்டிருந்தா.. ஒருவேளை... நீ என்னையே காதலிச்-சிருக்கலாம் இல்லையா ராதிகா... த்ச்சு.. அம்மாவுக்கு உடம்பு சரியில்லைன்னு நடுராத்திரியில போன் வந்திருச்சு- உடனே ஊருக்கு ஓடிட்டேன்... இல்லேன்னா... உன்னைத் துரத்தித்துரத்தி என்னைக் காதலிக்க வைச்சுட்டுத்தான் மறுவேலை பார்த்திருப்பேன்.."

அவனை மட்டும் காதலிப்பவளிடம்... அவளது காதலைப் பெறமுடியாத மன துயரத்தை வெளிப்படுத்தினான் முரளி... ராதிகாவின் கண்கள் கசிந்தன...

சொல்லி விடலாம் வார்த்தையிலே-அதை..
சொல்லத்தான் ஓர் வார்த்தையில்லை...

கடல்நீர் நடுவே குடிநீர் தேடும் துயரம் ராதிகாவை மட்டும் துரத்திக் கொண்டிருப்பதின் தாத்பர்யத்தில் மனம் நொந்து போனாள் ராதிகா...

அதற்கு கூடக் கொடுப்பினை வாய்த்திருக்க வேண்டுமோ.. அப்படி அவள் என்னதான் பாவம் செய்தாள்..? யார் குடியைக் கெடுத்தாள்..? யார் வாழ்வில் மண்ணை அள்ளிப் போட்டாள்..?

எவரையும் சிநேகிக்கும்... எவரையும் சிநேகிக்க வைக்கும் தன்மை.. அவளது தன்மை..!

யார் மனதையும் காயப் படுத்தி விடாமல்.. மயிலிறகைப் போல மனம் வருடும் வார்த்தைகள்... அவள் பேசும் வார்த்தைகள்..

மற்றவர்களின் சிரிப்பினில் சந்தோஷிப்பார்... அவர்களின் துயரத்தில் கண்ணீர் விடுவாள்... அவளுக்குப்

போய் இத்தனை துயரங்களும்... வாழ்க்கைப் போராட்டங்களும் அணி வகுத்து வரவேண்டுமா..?

அவள் துன்பப் படுவதைக் கண்டு.. தெய்வம் இரக்கம் கொள்ளவில்லையா...?

'எல்லாத்துக்கும் முகராசி வேணும்...' ராதிகா விரக்தியுடன் நினைத்துக் கொண்டாள்...

'இது ஷோபா போல இருப்பவர்களுக்கான உலகம்..'

அவர்களைச் சுற்றிப் படர்ந்திருந்த இருளின் போர்வையிலே... அவர்கள் இருவரும் மௌனத்தை அரணாகக் கொண்டு... கடந்த கால நிகழ்வுகளின் நினைவை அசை போட்டனர்...

முரளி அந்த பெஞ்சில் கால்நீட்டி அமர்ந்தான்... பக்கத்தில் அமர்ந்த ராதிகாவின் தோள் மீது அவனது கரம் விழுந்து... அவளை மடிமீது இழுத்தது... மறுத்துக் கூறாமல் அவன் மடிமீது தலைவைத்துப் படுத்து விட்டாள் ராதிகா.. அவள் முடிகோதியபடி அவன் இருளுக்கு மத்தியில் எதையோ தேடுகிறவனைப் போலப் பார்வையில் துழாவிக் கொண்டிருந்தான்...

மாலைநேரத்தில் பூங்காவில் விளையாட வந்திருந்த குழந்தைகள்... கலைந்து போகும் சந்தடி கேட்டது... யாரோ இரு வயோதிகர்கள்.. அவர்களின் முதுமையினால் விளைந்திருக்கும் தனிமைப் படுத்துதலைப் பற்றிய குமுறலை பகிர்ந்து கொண்டே அவர்களைக் கடந்து சென்றார்கள்.. கூட்டுக் குடும்பத்திலிருந்த கணவனிடம்..

மனைவி... அவளுக்கான மனக்குறைகளை கொட்டி முடித்து விட்டு எழுந்து கொண்டாள்.. அவளுக்கான ஆறுதல் மொழிகளைக் கூறிய கணவனுடன் அவளும் சென்று விட்டாள்... கலகலவென்று சிரித்த வண்ணம் ஒரு பள்ளி மாணவி ஓட.... அவளது தோழி அவளைத் துரத்திக் கொண்டு ஓடினாள்.. ராதிகாவும்.. முரளியும் இருந்த பெஞ்சுக்கு அந்தப்புறமாக இருந்த செடியின் மறைவிலிருந்து கிசுகிசுப்பான பேச்சுச் சத்தமும்.. இனம் விளங்காத ஒலிக்கலவைகளும் கேட்டுக் கொண்டிருந்தன..

"காதல் ஜோடி போல.." மௌனத்தைக் கலைத்தான் முரளி..

"ஒருவேளை... நீ என் காதலை ஏற்றுக்கிட்டு இருந்தின்னா.. இந்தப் பார்க்கில.. இதைப்போல... இருட்டு வேளையில... நீயும்.. நானும் சந்தித்துக் கொஞ்சிக் குழாவியிருக்கலாம்..."

அவன் விட்ட பெருமூச்சில் அவள் மேனி சுட்டது.. அவன் பேச்சில் நிறைவேறாத அவனது காதல் கனவுகளைப் பற்றிய கதை இருந்தது...

"அதில பாருடி.. உனக்காக நான் ஏங்கிக்கிட்டு இருப்பேன்.. என்னைச் சுத்தி.. இப்படியாப்பட்ட ஜோடிகளாத்தான் இருப்பாங்க... என் மனசுக்குள்ள ஏக்கமா இருக்கும்... எங்கே... அதெல்லாம் முடியாத கதைகளாகிப் போச்சேடி..."

முடிந்திருக்கலாம்.. அந்தக் கோடிஸ்வரனின் ஆசைப்படி.. அவன் காதலியாக அவன் கரம் பிடித்து...

அந்த சென்னை மாநகரைச் சுற்றி அவள் வலம் வந்திருக்கலாம்.. அது நடக்கக்கூடாது என்று யார் விதித்தது..? அவர்கள் சிரிக்கக்கூடாது என்று யார் சபித்தது..?

சாபத்தின் மத்தியிலே பிறப்பெடுக்கும் மாவரத்தை... அவர்களைத் தேடிப் பிடித்து யார் கொடுத்தது..?

ஒரு நாளா... இரண்டு நாளா..? அவளை அவன் சொல்லாலே வதைத்தது எத்தனை நாள்களாய்..? அவளைத் தீண்டாமல் விலக்கி வைத்தது எத்தனை தினங்களாய்..? தூங்காத இரவுப் பொழுதுகளை அவளும்.. அவனும் எதிர் கொண்டது... எந்தக் காரணத்தினால்...?

இன்று அவன் கையில் அவளிருக்கிறாள்... அவன் மடியில் தலை வைத்திருக்கிறாள்... இடையில் வந்த கசப்பான தினங்கள் கசப்பு நிகழ்வுகள் மனதில் பாரமாகப் படிவதிலிருந்து அவர்களால் தப்பித்து ஓட முடியுமா..? இடையில் வந்த இளமைக்காலங்கள் இனியும் வருமா..?

ராதிகாவின் மீது.. மலர் ஒன்று உதிர்ந்து விழுந்தது.. அதன் மணம் நாசியை வருட... ராதிகா இருளை ஊடுறிவிக் கொண்டு அவன் முகம் பார்த்தாள்... செதுக்கி வைத்ததைப் போன்ற அவன் முகவடிவில் அவள்மனம் என்றும் போல... அன்றும் நிலை கொண்டது...

'இவன் ரோமானியச் சிற்பம்..!'

அவனின் கம்பீரமான வடிவில்... அவளுக்குள் காதல் பொங்கியது... இப்படிப்பட்ட ஆண்மகனின்

காதலுக்கு பாத்திரமானதில் என்றும் போல அன்றும் அவள் கர்வம் கொண்டாள்..

இருளில்... கூடுகளைத் தேடியலையும் பறவைகளின் படபடக்கும் சிறகொலியும்... அலைகள் எழுப்பிய குரலொலியும்.. கலவையாகச் சேர்ந்து... முன்னிரவு நேரத்தை அவர்களுக்கு உணர்த்திக் கொண்டிருந்தன...

"எனக்கு மண்டைக் கனம் ஜாஸ்திடி..."

அவன் பார்வை தொலைவில் நிலைத்திருக்க... ஆழ்ந்தகுரலில் அவன் பேசினான்... அந்த முன்னிரவுப் பொழுதின் ஏகாந்தமான சுகந்த வேளையில்... அவன் பேசுவதை அவன் மடிமீது தலை வைத்துக் கேட்பதிலும் ஓர்விதமான சுகம் ஊடுறிவியிருந்ததை உணர்வலைகள் உணர்த்தியதில் பரவசமான ஓர் மோனநிலைக்குள் அமி ஆரம்பித்திருந்தாள் ராதிகா...

"நான் தொட்டதெல்லாம் துலங்குச்சு... பதினைஞ் வயசிலே என் அப்பா.. குடும்ப பாரத்தை என் தோள் மே ஏற்றிவைச்சுட்டுப் போனப்ப... தேனூத்தே என்னைத்தான் திரும்பிப் பார்த்துச்சு..."

"ம்ம்ம்..."

"அப்ப நான் அந்த ஊருக்கு பெரிய மனுச பெற்றெடுத்த பிள்ளை... தேனூத்து பெரிய குடும்பத்தின் ஆண் வாரிசு...!"

"ம்ம்ம்..."

"இந்தச் சின்னப் பையன் என்ன செய்யப் போகிறான்னு கொஞ்சப் பேர் அனுதாபப் பட்டாங்க... இனி இந்த ஊருக்கு பெரிய மனுசனா நாம வந்திரலாம்ன்னு எங்களுக்கு அடுத்த நிலையில இருந்தவங்க ஆசைப் பட்டாங்க..."

"ம்ம்ம்..."

"அம்மாவுக்கு வெளியுலகம் தெரியாது... அவங்க மட்டுமில்லை... பொதுவா.. கிராமத்தில இருக்கிற பெண்களை வீட்டுப்படி தாண்டி.. வெளியுலகில் கால் வைக்க ஆம்பளைக அனுமதிச்சதில்லை..."

அப்படியிருக்க... அவளை மட்டும் ஏன் அவன் தொழில் பயிற்சி கொடுத்து... அவன் தொழில்களை மேற்பார்வையிட இழுத்து விட்டான்...? என்ற கேள்வி அவள் நெஞ்சத்திலே எழுந்து நின்றது...

அதை உணர்ந்தவனைப் போல.. அவள் முடி கோதி மெதுவாக ஆனால் கனமான அவனது பிரத்யேக குரலில் அவன் சொன்னான்..

"என் அம்மாவைப் போல நீயும் இருக்கக் கூடாதுன்னு நான் நினைச்சேண்டி... நானில்லாத சமயங்களிலும் நீ என் இடத்தில இருந்து அத்தனையையும் சாமாளிக்கனும்.. அதுக்கான பயிற்சியைத்தான் நான் உனக்கு கொடுத்தேன்.."

அவனில்லாமல் அவளிருப்பதா...?

அவள் உடல் நடுங்கியது.. அப்படியொ
வாழ்க்கையை வாழ அவளால் முடியுமா..?

"என்ன பேச்சுப் பேசறிங்க...?"

பதட்டத்துடன் அவன் வாய் பொத்தினாள் ராதி
அவளின் அந்தப் பதட்டத்தில் அவன் மனம் கனிந்த
அவன் இதழ்மீது படிந்திருந்த அவள் விரல்கள
மென்மையான முத்தமொன்றைப் பதித்தவன்.. அவ
கரத்தையெடுத்து அவன் கன்னத்தின் மீது வைத்
அழுத்திக் கொண்டான்...

அவனது சொரசொரப்பான கன்னப் பகுதியில் வி
படிந்திருக்க.. அவனது மீசையின் ரோமங்களின் உராய்வ
உணர்ந்தாள் ராதிகா...

"நீ அருமையான பெண்டாட்டிடி... அதில எனக்
சந்தோசம்தான்.. உன் காதல் கிடைக்கலேன்னாலும்
உன்னோட வாழ முடிஞ்சதில கொஞ்சமா என்மன
ஆறுதுதான்.. ராதிகா.. நான் செத்தா உன்னையு
என்கூடக் கூப்பிட்டுக்கிட்டுப் போயிடுவேண்டி.. தனி
விட்டுட்டுப் போக மாட்டேன்..."

அவனது உறுதியான குரலில் உடல் ஜில்லிட்டு
போனாள் ராதிகா...

"உன்னைக் கொன்று என்கூட கொண்
போயிடுவேன்.. அதனால அப்படியொரு நினைப்பி
பதட்டப்படாதே.. நானில்லாத நாளிலேன்னா... நா
ஊரிலில்லாத நாளிலேன்னு அர்த்தம்... புரியுதா...?"

அவனின் அந்த வெறித்தனமான காதலில் மனம் இளகிப் போயிருந்தாள் ராதிகா.. அவன் பேச்சுக்கு பதில் பேசக்கூட அவளால் முடியவில்லை...

"ம்ம்ம்..."

"அம்மாவுக்கு எதுவும் தெரியாதுடி... அப்பா காலத்தில... வயல்.. தோப்பு.. துரவுன்னு விவசாயத் தொழில் மட்டும்தான் எங்க கைவசத்தில இருந்தது... அதில கூட என்ன நடக்குதுன்னு அம்மாவுக்குத் தெரியாது.. எந்த நிலத்திலே எதை விதைச்சிருக்கோம்.. எந்த தோப்பை.. எவ்வளவு ரூபாய்க்கு குத்தகைக்கு விட்டிருக்கோம்ங்கிற வரவு... செலவு கணக்கெல்லாம் அப்பாவுக்கு மட்டும்தான் தெரியும்.. அம்மா அதையெல்லாம் கேட்டுக்கவே மாட்டாங்க..."

"ம்ம்ம்..."

"எங்க பாட்டன்.. முப்பாட்டன் காலத்திலேயே... அழியாச் சொத்துக்களா.. தோப்புக்களை உருவாக்கி வைச்சிருந்தாங்க.. குத்தகைப் பணம் வந்து குமியும்... அதை வயல்களாவும்.. வைர நகைகளாகவும் தான் அவங்க மாற்றினாங்க... நான் தொழில்களிலே அந்தப் பணத்தைப் போட்டேன்..."

தேனூத்தில்.. பெரிய வீட்டின் ஆண் வாரிசாகப் பிறந்து.. பதினைந்து வயதிலேயே குடும்பத் தலைவனாக மாறிய சிறுவன் ஒருவன்.. எப்படித் தென்காசிப் பட்டினத்திற்கே பெரிய மனிதனாக உருமாறினான் என்ற வெற்றிக் கதையை சொல்ல ஆரம்பித்தான் முரளி..

"அம்மா பயந்தாங்க... அக்காவோட படிப்ப நிப்பாட்டிட்டு அவங்க சொந்தத்திலே பெ கொடுத்துடலாம்ன்னு சொன்னாங்க... வீட்டோ மருமகனா.. அவங்களோட படிக்காத சித்தப்பா மக கொண்டு வந்திட்டா... அவர் என்னையும்.. தோ தூரவையும் பார்த்துக்குவாருன்னு நினைச்சாங்க..."

"உங்க அக்கா என்ன சொன்னாங்க...?"

"அது என்ன சொல்லும்..? அதுவே பயந்து மே கிடந்தது... அப்பா இல்லை.. அம்மாவோ ஊரு முன்னாலே பெரிய மனுசங்களா இருக்கிற குடும்ப கௌ குலைஞ்சிரக் கூடாதுன்னு பயக்கிறவங்க.. நா வயசில சின்னவன்.. தம்பி.. அதாலே என்ன சொ முடியும்..?"

"பாவம்.." ராதிகாவின் மனம் கசிந்தது...

"பாவம்தான்... உன்னைப் போல.. கீதாவைப் பே எல்லாம் உரிமை பேச முடியாம வளர்ந்தது என் அக்க எதையும் வெளியில் சொல்ல முடியாம மனசுக்குள்ளே அழுதுக்கிட்டு இருந்துச்சு... அதோட படிப்பை நிறுத்தி வயசு வித்தியாசம் அதிகமா இருக்கிற... படிக்க அந்த முரட்டு மாமனுக்கு அம்மா கல்யாண பண்ணி வைச்சிருந்தாலும் மறு பேச்சு பேசாம அ ஏத்துக்கிட்டுத்தான் இருக்கும்.. அது நிலை அப்படியிருந்துச்சு.."

"இதென்னங்க அநியாயமாய் இருக்கு..."

"அம்மாவுக்கு அதுதான் நியாயம்.. அவங்களுக்கு நான் வாக்குக் கொடுத்தேன்.. அப்பா சம்பாதிச்சு வைச்சிருந்த பெயர் குறையாம குடும்பத்தை நான் காப்பாத்தறேன்னு சொன்னேன்.. அக்காவோட படிப்பைத் தொடரவைச்சேன்... அது ஆசைப்படி படிக்க வைச்சு... படிச்ச மாப்பிள்ளைக்கே அதைக் கல்யாணமும் பண்ணிக் கொடுத்தேன்.. அக்கா என் கையைப் பிடிச்சுக்கிட்டு அழுதுச்சு.. நீ என் தம்பில்லைடா.. தகப்பன்னு சொல்லுச்சு.."

அந்த நிமிடங்களின் நெகிழ்வை தன் வார்த்தைகளில் உணர்த்திக் கொண்டிருந்தான் முரளி... அதைச் சிந்தாமல்... சிதறாமல்... சேகரித்து... தன்மனதில் நிரப்பிக் கொண்டிருந்தாள் ராதிகா...

"இவன் தொழிலை ஆரம்பிச்சு என்ன செய்யப் போறான்னு என் முதுகுக்குப் பின்னால பேசி சிரிச்சவங்கள்ளாம்... என் முன்னாலே கைகட்டி நின்னாங்க... நான் நிற்க வைச்சேன்... ஒன்னுக்கு பத்தா தொழில்களைத் தொடங்கினேன்.. அந்தந்த தொழில்களிலே வேலை தெரிஞ்சவங்களா.. எனக்கு விவுவாசிகளா ஆள்களைத் தேர்ந்தெடுத்து மேற்பார்வை பார்க்கிற பொறுப்பைக் கொடுத்தேன்... தென்காசியையே என்னைத் திரும்பிப் பார்க்க வைச்சேன்.. என் அப்பா லட்சாதிபதிடி.. ஆனா நான் கோடிஸ்வரன்.. என் சொத்தில்லாத ஊரில்லை... உன் புருசன் ஜெயிச்சவண்டி.. பெரிய பணக்காரன்... அதனாலதான் எனக்குள்ல அப்படியொரு மண்டைக்கனம் இருந்துச்சு.. நான் ஜெயிக்கப்

பிறந்தவன்னு ஆணவம் இருந்துச்சு... என்னால ஜெயிக்க முடியாமல் போனதுன்னு இந்த உலகத்தில ஒன்னே ஒன்னுதாண்டி இருக்கு..."

முரளி பேச்சை நிறுத்த... அவன் என்ன சொல்ல போகிறான் என்ற எதிர்பார்ப்பில் அவன் முகம் பார்த்து காத்திருந்தாள் ராதிகா... அவனும் அந்த வார்த்தைகளை உதிர்த்தான்.. ராதிகாவின் உயிர் துடித்தது...

"அது எது தெரியுமா..? அதுதாண்டி.. உன் மன

வென்று விட்டாய் என் மனதை - அதையறியாம
கொன்று விட்டாய் என் மனதை...

அவன் ஜெயிக்கப் பிறந்தவன்.. பதினை வயதிலேயே வாழ்க்கையை தன் வசப்படுத் கொண்டவன்... வானத்தை வில்லாக வளைத்தவ அவனுடைய அக்கா அவனிடம் சொல்லி அழுதிருக்கிற

'நீ என் தம்பியில்லைடா.. தகப்பன்..!' என்று...

அவனும் அப்படித்தான் இருந்திருக்கிறான்.. தா காக்கும் காவலனாக... தமக்கைக்கு வாழ்க்கையமை கொடுக்கும் தீரமானவனாக.. எதிலும் வெற்றியை மட் சந்தித்த சாதனையாளனாக இருந்திருக்கிறான்..

அவன் ஒரு பெண்ணைச் சந்தித்தான்.. அவனது கடைக்கண் பார்வைக்காக... காத்திருப்போர் பலரிருக்க.. அவன் அந்தப் பெண்ணின் கடைக்கண் பார்வைக்காக காத்திருந்தான்.. அது அவனுக்கு கிடைத்தது.. அதை அறியாமல் அவன் மனம் குமுறிக் கொண்டிருக்கிறானே இதற்கு ராதிகா என்ன பதிலைச் சொல்லுவாள்...?

அவனால் ஜெயிக்க முடியாததா அவள் மனம்..?

அதுதான்.. அவனைக் கண்டு கொண்ட நாள் முதலாக அவன் காலடியிலேயே கிடக்கிறதே... நீயே சரண் என்று அடைக்கலம் கேட்டு நிற்கிறதே.. அதையறியாமல் அவனிருந்தால் அவள்தான் என்ன செய்வாள்..?

ராதிகாவிடம் அசைவில்லாததை உணர்ந்த பாலமுரளி.. அவளது கன்னத்தைத் தொட்டுப் பார்த்தான்.. அவளது கண்ணீர் துளிகள் அவன் கைவிரலை நனைத்தது..

"ராதிகா... ஏய்ய்.. அழுகிறாயாடி..?"

அவளை எழுப்பி உட்கார வைத்தவனின் தோள் சாய்ந்து அவள் விசும்பினாள்...

"ஊஹீம்.. நாளைக்கு நாம் தேநிலவுக்கு பறக்கிறோம்.. இந்த நேரத்திலே நீ அழுகக் கூடாது.. எவ்வளவோ காலத்துக்குப் பின்னாலே நாம சந்தோசமா இருக்கிறோம்.. இந்த மனநிலையை அழுது கெடுத்துக்காதே.."

அவள் விழிநீரைத் துடைத்து விட்டான் முரளி... இருவரும் சற்று நேரத்திற்கு எதையும் பேசிக்

கொள்ளவில்லை... மௌனம் அவர்களைச் சூழ்ந்திருக்க அமைதியாக அமர்ந்திருந்தார்கள்...

"போகலாமா... அம்மா தேடுவாங்க..." ராதிகா அந்த மௌனத்தைக் கலைத்தாள்...

"போயிட்டா போச்சு..." முரளி எழுந்து கொண்டான்.

பூங்காவை விட்டு வெளியே வந்தபோது.. எதிரே கீதா வந்து கொண்டிருந்தாள்...

"நம்மைத்தான் தேடி வருகிறா போல.." என்றாள் ராதிகா...

"கீதா.." பாலமுரளி கைதட்டி அவளை கூப்பிட்டான்.. திரும்பிப் பார்த்த கீதா...

"நினைச்சேன் அத்தான்.. நீங்க இங்கேதான் இருப்பீங்கன்னு..." என்றபடி அருகில் வந்தாள்...

'இவளுக்கு அத்தானைத்தான் கண்ணுக்குத் தெரிகிறதா.. அத்தானுக்குப் பக்கத்திலே நிற்கும் இந்த அக்காவைத் தெரியலையா...' ராதிகா பல்லைக்கடித்தாள்.

"அதெப்படி.. கீதா..? நாங்க இங்கே வர்றோம்ன்னு வீட்டில சொல்லிட்டு வரலையே... நாங்க இங்கேதான் இருப்போம்ன்னு நீ கரெக்டா கண்டுபிடிச்சிருக்கயே.. கெட்டிக்காரிதான்..." முரளி பாராட்டினான்...

'மச்சினியைப் பாராட்டனும்னா வாயே வலிக்காதே' ராதிகா எரிச்சல் பட்டாள்...

"அதுவா அத்தான்.. அது ரொம்ப சிம்பிள்.. உங்க கல்யாணம் நடக்கிறதுக்கு முன்னால.. உங்க பெண்டாட்டி

இங்கேயேதான் குடியிருப்பா.. அதை வைக்கத்தான் நான் இங்கே தேடி வந்தேன்.."

கீதா இலகுவாகச் சொல்ல... பாலமுரளியின் கண்களில் யோசனை வந்தது... அதைக் கண்ட ராதிகா கவலையானாள்...

'நான் இவனை நினைக்கக்கிட்டு இந்தப் பார்க்கில குடியிருந்தா இவன் வேற மாதிரி நினைக்கத் தொலைப்பானே... அந்த சங்கரைக் சந்திக்கத்தான் இங்கே வந்திருந்தேன்னு நினைக்குத் தொலைச்சிட்டா என்ன செய்யறது..? இரண்டு வருசமா கதற வைச்சிட்டு.. இப்பத்தான் என்னை ஏறெடுத்துப் பார்த்திருக்கான்.. தேநிலவு வரைக்கும் வந்திருக்கான்.. இவ பேசற பேச்சில.. பிளைட்டில ஏற விடாம திரும்பவும் தேனூத்துக்கு கூப்பிட்டுக்கிட்டு போயிருவான் போல இருக்கே...'

பாலமுரளி அவள் கவலைப்படும்படியாகத்தான் பேசி வைத்தான்...

"உன் அக்காவுக்கு இந்த பார்க்கில என்ன வேலை..? பிரண்ட்ஸை மீட் பண்ண வருவாளோ...?"

அவன் 'பிரண்ட்..' என்று குறிப்பிட்டது யாரையென்று ராதிகாவுக்கா தெரியாது...?

'இதில இருந்து விடுதலையே கிடைக்காதா..'

எரிக்கும் பார்வையுடன் கீதாவை முறைத்தான் அவள்...

'எல்லாம் இவளாலே வந்தது.. இப்ப இதை இவனிடம் சொல்லச் சொல்லி யாரும் கேட்டாங்களா...?'

கீதா தமக்கையின் முறைப்பை கண்டு கொள்ளவேயில்லை...

"ஐய்யோ.. நீங்க வேற.. இவ பிரண்ட்ஸெல்லாம் ஹைடெக் இவளை மாதிரி இலை தழையை ரசிக்கிற ரகமில்லை..."

இப்படிச் சொன்னவளை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான் முரளி...

"ஒஹோ.. அப்ப.. இலை.. தழையை ரசிக்கிறவங்களெல்லாம் ஹைடெக் இல்லைன்னு சொல்ல வர்ற... அப்படித்தானே..."

"பாருங்க அத்தான்.. உங்களுக்காக பொய் சொல்ல எனக்குப் பிடிக்காது... இந்த வயசில பார்க்குக்கு வந்து.. பூவையும்.. வண்டையும் பார்த்துக் கவிதை எழுதறதெல்லாம் வேஸ்ட்.. உங்க பெண்டாட்டி அதைத்தான் செய்வா..."

"ஓ... அப்ப இவ யாரையும் பார்க்க வரலையா...?"

"ஊஹூம்.. இவ பாட்டுக்கு வருவா.. ஒரு டைரியை எடுத்து எதையாச்சும் எழுதிக்கிட்டே இருப்பா.. அப்புறமா முழங்காலைக் கட்டிக்கிட்டு... எங்கேயாவது வெறிச்சுப் பார்த்துக்கிட்டு இருப்பா..."

"இதெல்லாம் உனக்கெப்படித் தெரியும்..?"

"நீங்க வேற... இவ ஒருசமயம் பித்துப் பிடிச்சதைப் போல இருந்தா அத்தான்... அம்மாகூட காத்துக் கருப்பு

அடிச்சிருச்சோன்னு கவலைப் பட ஆரம்பிச்சிட்டாங்க.. அப்புறமாய் நான்தான் அவங்களை கன்வின்ஸ் பண்ணினேன்.."

"நீ அதெல்லாம் கூடச் செய்வியா..?"

"என்னை என்னன்னு நினைச்சீங்க... நான் யார் தெரியுமா...?"

"அடேங்கப்பா.. யாரு நீ...? படா கில்லாடியாச்சே... அத்தையை என்ன சொல்லி கன்வின்ஸ் பண்ணின..?"

"இது சென்னைம்மா.. இங்கேயெல்லாம் காத்து... கருப்பு அண்டாது... அது குற்றாலம் பக்கமாத்தான் உலாவும்ன்னு சொல்லி கன்வின்ஸ் பண்ணினேன்..."

பாலமுரளி இமைக்காமல் கீதாவைப் பார்க்க... ராதிகாவுக்கு சிரிப்பு வந்து விட்டது..

"ஆக.. தேனூத்திலதான் காத்தும்.. கருப்பும் வாசம் செய்யுதுன்னு சொல்லி வைச்சிருக்கிற..."

"என்மேல குற்றமில்லை அத்தான்.. நீங்களும்.. அத்தையும்தான் வார்த்தைக்கு வார்த்தை.. காற்று வாங்கனும்னா குற்றாலத்துப் பக்கம்தான் வரனும்னு சொல்லி வைச்சீங்க..."

"யம்மாடி.. நாங்க சொன்ன காற்று வேற... நீ சொல்ற காத்துக் கருப்பு வேற..."

"எனக்கென்னவோ ரெண்டும் ஒன்னுன்னுதான் தோணுச்சு..."

"ஒஹோ.. உன்கிட்டப் பேசும் போது ஒரு தடவைக்கு ரெண்டு தடவை யோசிச்சுத்தான் பேசனும் போல..."

முரளி இதைச் சொல்லியதும் ராதிகாவின் முகம் ஒளிர்ந்தது.. அதை ஜாடையாகப் பார்த்துக் கொண்ட கீதா...

"உங்க பெண்டாட்டி முகத்தில பல்பை எரிய வைக்கனும்னா கடைத்தெருவுக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போய்... நகை.. துணின்னு வாரிக் கொடுக்கனும்.. அதை விட்டுட்டு மச்சினியை வாரக்கூடாது அத்தான்..." என்றாள்...

"ஹா.. ஹா.. ஆமாம்.. காத்துக் கருப்பை பாதியில விட்டுட்டியே... அதுக கோவிச்சுக்காதா...?"

"பயமுறுத்தாதீங்க அத்தான்... இவ பயந்ததைப் போல இருக்கவும் அம்மாதான் இவளை பாஃலோ பண்ணச் சொன்னாங்க.. நானும் பாஃலோ பண்ணினேன்.."

கீதா சொல்லிய விளக்கத்தைக் கேட்டவன் மனைவியை உற்றுப் பார்த்தான்...

உற்றுப் பார்த்தவன் அத்தோடு நிற்காமல்...

"ஏண்டி.. அப்படிச் செஞ்ச..?" என்று கேட்டு வேறு வைத்தான்..

"நல்லாக் கேளுங்க அத்தான்.. மொட்டை மாடியில நடுராத்திரியில மோகினியைப் போல தனியா உலாத்திக்கிட்டு தானா அழுதுக்குவா.. ஏண்டின்னு கேட்டா பதில் சொல்ல மாட்டா..."

"இதெல்லாம் எப்ப நடந்தது...?"

"நீங்க இவளைக் கொண்டு வந்து வீட்டில டிராப் பண்ணிட்டுப் போனிங்கள்ல.. அப்ப இருந்துதான் இவ ஒரு மார்க்கமா இருக்க ஆரம்பிச்சா..."

"ஓ..."

"அந்த சங்கர் பெண் கேட்டுப் போன பின்னாலே அது அதிகமா ஆயிருச்சு..."

கீதா பேசிக் கொண்டேயிருக்க...

"என்னது..?" என்று புருவம் உயர்த்தினான் முரளி..

"என்ன அத்தான்..?" கீதாவுக்கு புரியவில்லை...

"நீ என்ன சொன்ன..? திரும்பச் சொல்லு..."

"அதுவா.. அந்த சங்கர் பெண் கேட்டு வந்த பின்னால அம்மா அங்கே பெண் கொடுத்துரலாமுன்னு சொன்னாங்க.. ராதிகா மாட்டேன்னு சொன்னா.. வீட்டில சண்டை ஸ்டார்ட் ஆகிடுச்சு.. இவ அமைதியைத் தேடி பார்க்குக்கில போய் குடியிருக்க ஆரம்பிச்சா..."

'எது நடந்ததோ... அது நன்றாக நடந்தது என்பது இதுதானா...' ராதிகா ஆனந்தத் திகைப்பை அடைந்தாள்..

இதை அவள் எதிர்பார்க்கவில்லை... அவளையறியாமல்... அவளிடம் எதுவும் கேட்காமல்... முரளியும்.. கீதாவுமாக பேசிக் கொண்டிருந்த பேச்சில்... சங்கருடனான திருமணப் பேச்சை ராதிகா மறுத்தது வெளியில் வந்து விட்டது...

'ஆண்டவன் எப்போதும் கோவிலில் தூங்கிக் கொண்டிருப்பதில்லை போல...' ராதிகாவின் கண்கள் பனித்தன...

"நீ என்ன சொல்ற கீதா.. ராதிகாவுக்கு அந்தக் கல்யாணப் பேச்சு பிடிக்கலையா..? அதை அவள் மறுத்தாளா...?"

இப்படிக் கேட்ட முரளியை விசித்திரமாகப் பார்த்தாள் கீதா...

"என்ன அத்தான் இப்படிக் கேட்கறிங்க.. அவதான் உங்களைக் காதலிச்சாளே... அப்புறமெப்படி சங்கரைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிப்பா...?"

பாலமுரளி யோசனையுடன் முன்னால் நடக்க.. ராதிகாவும்... கீதாவும் பின் தங்கினார்கள்.. கீதா முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு வந்தாள்... ராதிகாவுக்குள் கீதாவின் மீதான பிரியம் பொங்கி எழுந்தது...

"கீது..." மிருதுவாக அழைத்தாள்..

"என்கிட்ட பேசாதே..."

"ஏண்டி..?"

"பின்னே.. நீ அவன்கூட கூட்டுச் சேர்ந்துக்கிட்டு என்னைப் போட்டுத் தாக்கறயே..."

"எவன் கூட..."

"சுந்தர் கூட.."

"ஏய்ய்.. அவன் நம்ம தம்பிடி..."

"அது உனக்கு..."

"உனக்கு மட்டும் என்னவாம்...?"

"பகைவன்..."

"போடி பைத்தியம்..."

"சும்மா எனக்கு பட்டம் கட்டாதே... அத்தான்கூட கொஞ்சிப் பேசினால் உனக்குப் பொறாமையும்... கோபமும் வரும்ன்னு எனக்குத் தெரியும்.. உன்னைச் சீண்டிப் பார்க்க ஆசைப்பட்டேன்.. அத்தானும் கோ-ஆபரேட் பண்ணினார்... நீ உடனே சுந்தர்கூட கூட்டணி போட்டுட்ட.."

"என்..கீது..."

ராதிகா எல்லையில்லாத வாஞ்சையுடன் தங்கையை அணைத்துக் கொண்டாள்..

திரை மறைவினில் இருப்பதை..
இவ்வுலகில் யாரறிவார்...?

கீதா இரண்டே நிமிடத்தில் சமாதானமாகி விட்டாள்... காரில் ஏறிய மைத்துனியின் பக்கம் திரும்பிய முரளி...

"கடை வீதிப் பக்கம் போய் வரலாமா...?" என்று கேட்டான்...

"அதை உங்க பெண்டாட்டி கிட்ட கேளுங்க அத்தான்...", என்றாள் கீதா...

"ஏன்.. உன்னிடம் கேட்டா ஆகாதா..?"

"எனக்கெதுக்கு அத்தான் பொல்லாப்பு...?"

"நீ கூடப் பயப்படுவியா..? காத்து கருப்புக்கே பயப்படாத ஆளு நீ..."

"இப்படிச் சொல்லிச் சொல்லியே.. காத்து கருப்பு கையில என்னைப் பிடிச்சுக் கொடுத்துடுவீங்க போல இருக்கே..."

"என்ன ராதிகா... வரப் போற புருசனை காத்து கருப்புன்னு உன் தங்கை சொல்கிறதைப் போல இருக்கில்ல...?"

அவன் உற்சாகமாகப் பேசியபடி நகைக் கடையின் முன்னால் காரை நிறுத்தினான்... ராதிகா அவளுக்குப் பிடித்த நகைகளை எடுத்துக் கொண்டு.. அழகான நகைசெட் ஒன்றை வாங்கி கீதாவுக்கு பரிசளித்தாள்...

"எனக்கே.. எனக்காடி.." கீதா விழிகளை விரித்தாள்..

சுந்தருக்காக விலையுயர்ந்த கைக்கடிகாரம் ஒன்றை வாங்கிக் கொண்டாள் ராதிகா... அவர்கள் வீடு திரும்பிய போது ராஜேஸ்வரி கவலை படர்ந்த முகத்துடன்

வாசலிலேயே காத்திருந்தாள்.. இளைய மகளுக்கும்.. மகனுக்கும் மருமகன் பரிசுகளை வாங்கித்தந்ததில் அவளுக்குள் ஒரு நிறைவு ஏற்பட்டது...

அன்றை இரவில்... பாலமுரளி என்றையும் விட அதிகமான நெருக்கத்தை ராதிகாவிடம் காண்பித்தான்.. கூடி முடித்த களைப்பில் ராதிகா கண்மூடிக் கிடந்த போது... மெதுவான குரலில் வினவினான்...

"எனக்குப் புரியலை ராதிகா..."

"எது..?" அவள் கண்திறவாமல் கேட்டாள்...

"உன் தங்கையோட வார்த்தைக்கும்.. நீ பேசினதா ஷோபா ரெகார்டு பண்ணி அனுப்பின உன் வார்த்தைகளுக்கும் இடையே ஏகப்பட்ட வித்தியாசம் இருக்கே.. உன் தங்கை என்னடான்னா... உனக்கு சங்கர் பெண் கேட்டு வந்ததில இஷ்டமே இல்லைங்கிறா.. நீ என்னடான்னா.. சங்கர் உன்னைப் பெண் கேட்டு வந்தது நீ செய்த புண்ணியம்ன்னு பேசி வைச்சிருக்கே.. இரண்டும் இடிக்குதேடி.."

ராதிகா பதில் சொல்லவில்லை.. அவனும் அவளுடைய பதிலை எதிர்பார்க்கவில்லை.. என்ன நினைத்தானோ... ராதிகாவை அனைத்து அவள் நெற்றியில் மிருதுவான முத்தமொன்றைப் பதித்தான்.. அப்படியே தூங்கி விட்டான்.. அந்த ஒரு செய்கையில் ராதிகாவின் கண்நிறைந்து விட்டது.. எத்தனையோ தினங்களுக்கு பின்னர் இனம் புரியாத அமைதி அவள் நெஞ்சில் வியாபித்தது...

மறுநாள் அவர்கள் கிளம்பிய போது... ஆயிரம் முறை "பத்திரம்.." என்று எச்சரித்தாள் ராஜேஸ்வரி...

"என்ஜாய் பண்ணிட்டு வாங்க...", என்றார் கிருஷ்ணமூர்த்தி...

கீதாவும்.. சுந்தரும்.. அவர்களுக்கு வாங்க வரவேண்டிய பொருள்களை பட்டியலிட்டு அவர்கள் கையில் கொடுத்தார்கள்...

"கீதா.." ராஜேஸ்வரி ஆட்சேபக்குரல் எழுப்பினாள்..

"என்னம்மா இது... என்கிட்டத்தானே கேட்கிறாங்க" ராதிகா பதிலுக்கு ஆட்சேபித்தாள்..

எல்லோரும் கையாட்ட.. விமானத்தில் ஏறி அமர்ந்த போது.. இது கனவா.. இல்லை நனவா என்ற பிரமிப்பு அவள் நெஞ்சில் எழுந்தது..

முதல் முறை விமானத்தில் பயணம் செய்கிறாள் என்பதால் முரளி அவளுக்கு சீட்பெல்டைப் போடச் சொல்லிக் கொடுத்தான்.. விமானம் எழும்பி வானில் பறந்தது...

வெளிநாட்டில் இருந்த நாள்களில் முரளி கேட்ட அந்தத் தனிமை அவர்களைச் சுற்றிப் பரவிப் படர்ந்திருந்தது.. அவனின் வேட்கை மிகுந்த ஆக்ரமிப்பில் தன்னை ஆழ்த்திக் கொண்டாள் ராதிகா.. முதல் ஒரு வாரம் முழுவதும்.. சாப்பாடு.. தூக்கத்தை மறந்து

அவளில் மூழ்கி முத்தெடுப்பதே குறியாக இருந்தான் முரளி... மறு வாரத்தில் ஊரைச் சுற்றிக் காட்ட அவளை வெளியே அழைத்துப் போனான்... அவளின் இடையோடு அவன் கை இறுக்கிக் கொள்ள.. நெருக்கத்தை விடாமல் அவன் ஊர் சுற்றியதில் அவள் சங்கோஜப் பட்டுப் போனாள்..

"இது தேனூத்தில்லைடி..." அவன் கண்சிமிட்டி.. சுற்றிலும் காட்டினான்...

இயல்பான முத்தப் பரிமாற்றங்களுடன்.. ஒருவரோடு ஒருவர் பசைபோட்டு ஒட்டிக் கொண்டதைப் போல ஆணும் பெண்ணும் அங்கே நடமாடிக் கொண்டிருந்ததில் ராதிகாவின் சங்கோஜம் சற்றே அகன்றது...

பாலமுரளிக்கு அங்கே வியாபார நிமித்தமான வேலைகள் சில இருந்தன... அவற்றைக் கவனிக்க அவன் போகும்போது ராதிகா தனியாக அறையில் இருப்பாள்.. சிலசமயம் அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலின் நீண்ட நடைபாதையில்.. புல்வெளியின் மத்தியில் நடந்து கொண்டிருப்பாள்...

அப்படியொரு நாள் நடந்து கொண்டிருந்த போது...

"ராதிகா..." என்று யாரோ அழைக்கும் சப்தம் கேட்டது...

நிமிர்ந்து பார்த்தவள் அதிர்ந்து போனாள்.. அங்கே சங்கர் நின்று கொண்டிருந்தான்...

'இவனா...'

பதட்டத்துடன் சுற்று முற்றும் பார்த்தாள் ராதி அதைக் கவனித்த சங்கரின் கண்களில் இரக்கம் மிதந்

"ஏன் பயப்படறிங்க ராதிகா..? முரளி இங்கேயில்

'அதைக் கவனிச்சுட்டுத்தான் நீ இங்கே வந்தா ஏண்டா என்னைப் பாடாய் படுத்தற..? வெளிநாட்டு வந்தாலும் நீ விடமாட்டியா..? இங்கேயும் தொடுத்துக் வருவியா...?'

"இது பிஸினெஸ் டிரிப் ராதிகா... இந்த ஹோட்ட தான் தங்கியிருக்கேன்..."

அவன் எதுவுமே நடக்காததைப் போல இயல் பேச.. ராதிகா குற்ற உணர்வுடன் உதட்டைக் கடித்தா

அவளது புறக்கணிப்பை அவன் பெரிதாக எடுத் கொள்ளவில்லையே...

எதையாவது கேட்க வேண்டுமே என்பதற்காக..

"நித்யா வரலையா..?" என்று விசாரித்த ராதிகா..

அந்தக் கேள்வியை அவன் விரும்பவில்லை என்னவோ.. சட்டென்று முகம் மாறினான் அவன்...

"அவ எதுக்கு...?"

"என் ஹஸ்பெண்டும் பிஸினெஸ் டிரிப்பாத்தி வந்திருக்கார்.. ஆனா.. என்னையும் கூப்பிட்டுக்கி வந்திருக்காரே.. அதனாலேதான் நான் கேட்டேன்..."

ராதிகாவின் வார்த்தைகளில் தொனித்த மறைமுகக் குத்தலில் அவன் அவளையே உறுத்துப் பார்த்தான்... பின் ஒரு பெருமூச்சுடன் சொன்னான்..

"முரளிகூட நீங்க வந்திருக்கீங்களே..."

ராதிகா மீண்டும் அதிர்ந்தாள்.. அவன் பேச்சில் வெளிப்பட்ட அப்பட்டமான பொருமலை அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை...

அவளுடைய கணவனுடன் அவள் வந்திருக்கிறாள்.. அதை சங்கர் பேசிய விதத்தில் அவள் அருவெறுப்படைந்தாள்...

"உங்க கூட நித்யா வந்திருக்கனுமே..." அழுத்தமான குரலில் கூறினாள்...

அவளின் குரல் அழுத்தத்தை சங்கர் உணர்ந்து கொண்டதாகவே தெரியவில்லை... தன் போக்கிலேயே அவன் பேசினான்...

"கடமைக்காக செய்த கல்யாணம்... தென்காசியில தான் அவ முகத்தைப் பார்க்கனும்னா.. இங்கேயும் அவளை கூப்பிட்டுக்கிட்டு வரச் சொல்றிங்களா..?"

ராதிகா சட்டென்று அறைக்குத் திரும்பி விட்டாள்.. முரளி வந்து கதவைத் தட்டியபோது... பயத்துடன் கதவிலிருந்து பாதுகாப்பு வளையத்தைப் பொருத்தி யாரென்று பார்த்த பின்பு திறந்து விட்டாள்.. அவளது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கண்ட பாலமுரளியின் புருவங்கள் முடிச்சிட்டன..

"என்னடி..?"

விவரத்தைச் சொன்னால் அந்த வினாடியிலே அவன் தேனூத்துக்குக் கிளம்பச் சொல்லி விடுவா என்பதை அறிந்திருந்தவள் தேநிலவு பாதியிலயே முடி போகும் ஏக்கத்தில் பெருமூச்சு விட்டாள்...

"என்னன்னு கேட்டேன் ராதிகா..?" பாலமு அதட்டினான்.. சொல்லாமல் இருக்கவும் முடியாது.. அ பின் விளைவுகள் மிக விபரீதமாக அமைந்து விடக் கூ என்ற அச்சத்தில் ராதிகா தன்னை நிதானப் படுத்தி கொண்டாள்...

தேநிலவைக் கொண்டாட முடியாமல் போனா பரவாயில்லை... என்ற முடிவிற்கு வந்தவளாக...

"அவனைப் பார்த்தேன்..." என்று சொல்லி விட்ட ராதிகா...

"எவனை..?"

"அதான்.. அந்த சங்கரைப் பார்த்தேன்... இ ஹோட்டலில்தான் தங்கியிருக்கானாம்..."

"எப்பப் பார்த்த...?"

"நீங்க வருகிறதுக்கு கொஞ்ச நேரத்து முன்னாலேதான்..."

முரளியின் முகச்சுளிப்பு மறைந்து.. அவன் முகத் மெலிதான ஆச்சரியம் படர்ந்தது...

"ஓ..! அதனாலதான் நீ கதவைத் திறக் பயந்தியா..?"

ராதிகா பதில் சொல்ல முடியாத சங்கடத்துட மௌனித்தாள்... முரளி உடையை மாற்றிக் கொண்டு.. அவளைப் பார்த்தான்...

"சாப்பிடப் போகலாமா...?"

ராதிகாவின் விழிகள் விரிந்தன... இவ்வளவு தானா..? இதற்குமேல் சங்கரைப் பற்றிக் கேட்க எதுவுமேயில்லையா..?

"நாம ரூமிலயே சாப்பிட்டுக்கலாமா..?" தயக்கத்துடன் கேட்டாள்...

"ஏன்..? இன்னைக்கு முழுவதும் நானில்லாம நீ ரூமிலேயே சாப்பிட்டுட்டு அடைஞ்சு கிடந்திருப்ப.. இப்பவாவது வெளிக் காற்றை சுவாசிக்க வா..." அவன் வற்புறுத்தினான்...

"அதில்லைங்க.." ராதிகா சங்கடப்பட்டாள்...

"ராது..." அழுத்தத்துடன் அழைத்தான் பாலமுரளி..

அவன் முகத்தைப் பார்த்தவளுக்கு... எதுவோ புரிவதைப் போல இருந்தது...

"வான்னு சொல்றேனில்ல..."

அதற்கு மேல் வாதாடாமல் அவனுடன் இணைந்து வெளியே நடந்தாள் ராதிகா.. வழக்கம் போல முரளியின் கரங்கள் அவளின் இடைமீது படிய.. மனதிலிருந்த சஞ்சலங்கள் விலகி விட்டதை உணர்ந்தாள் அவள்...

அன்றைய இரவில்.. அவன் நெருங்கிய போது.. அவளுக்குள் இருந்த கொஞ்ச நஞ்ச மனக்கிலேசமும் விலகி ஒடிவிட்டது.. அவனின் அருகாமையைத் தவிர வேறு எதுவும் அவள் நினைவில் நிற்கவில்லை... அவன் கைகளுக்குள் உருகிக் கரைந்து கலந்து விட்டாள்..

மறுநாள் காலையில் அவன் முகத்தைப் பார்த்தபோது... அவன் முகத்தில் எதுவோ தெரிந்தது... இனம் விளங்காத பார்வையுடன் முரளி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. அந்தப் பார்வை சொல்வது எதை..? படபடக்கும் நெஞ்சத்துடன் அவன் பார்வையை எதிர்கொண்டாள் ராதிகா.. ஒரு புன்னகையுடன் அவளை அவன் இழுத்துக் கொண்டபோதுதான் அவளுக்கு சீரான சுவாசமே வந்தது..

'அப்பாடி.. எதுவும் சிக்கலில்ல..'

முரளி வெளியே கிளம்பலாம் என்று சொன்னபோது ராதிகாவுக்கு ஆச்சரியமாகி விட்டது...

'இவன் தேனூத்துக்கு கிளம்பச் சொல்வான்னு பார்த்தா... ஊரைச் சுற்றலாம்.. வாடின்னு கூப்பிடறான்..'

"என்னாச்சு ராது...?"

விழிவிரிய நின்று கொண்டிருந்தவளை விரல் சொடுக்கி தன்னுணர்விற்கு கொண்டு வந்தான் முரளி..

இப்போதெல்லாம் அடிக்கடி அவன் 'ராது' என்று தான் அழைக்கிறான் என்ற நினைவில் வெட்கப் புன்முறுவலைப் பூத்தாள் ராதிகா..

"ஒன்னுமில்ல..."

"ஒன்னுமில்லாததுக்கா அப்படி நின்ன..?"

அவளால் என்ன சொல்ல முடியும்..?

'அடேய் புருசா..! நீ மூட் அவுட் ஆகி தேனூத்துக்கு என்னைக் கிளம்பச் சொல்லிவியோன்னு நினைச்சிருந்-தேண்டா.. அது மாறிவிட்டதில மயக்கமே வந்திருச்சுடா..' என்றா சொல்ல முடியும்..?

அவள் மீண்டும் ஒரு சிரிப்பைச் சிந்த.. அவன் மயங்கிப் போனான்...

"ஏய்ய்... தேனூத்தை விட்டு வந்ததில இருந்தே... நீ ஒரு மார்க்கமாத்தாண்டி இருக்கிற... எள்ளுன்னு நான் நினைச்சு முடிக்கிறதுக்குள்ள எண்ணையா நிற்கிற.. இதையெல்லாம் தேனூத்தில ஏண்டி ஒளிச்சு வைச்சிருந்த..?" என்றபடி அவளைக் கைகளுக்குள் இழுத்துக் கொண்டான்...

அவன் கழுத்தில கைகளை மாலையாக்கி... சூரியனை சூரியகாந்திப் பூ பார்ப்பதைப் போல... அவன் முகத்தை அண்ணாந்து பார்த்தவளின் முகம் அந்தப் பூவைப் போலவே மலர்ந்து விகசித்திருந்தது... இது போன்ற ஒருநாள் இனியும் வருமா என்று அவள் நெஞ்சம் கேட்டுக் கொண்டது...

முந்நூறு நாள் கழித்து...
முத்தாக மகன் வருவான்...

மீனாட்சிதான் முதலில் அதைக் கவனித்தாள்...

படியிறங்கி வந்து கொண்டிருந்த ராதிகாவின் கால்கள் தள்ளாடியதைக் கவனித்தவள் பதட்டத்துடன் கையிலிருந்த பால் செம்பை நழுவவிட்டாள்.. அதிலிருந்து பால் வழிந்து ஹாலில் பரவ... தோப்பைப் பற்றி நாச்சியப்பனுடன் பேசிக் கொண்டிருந்த முரு கோபத்துடன் அவளை முறைத்தான்... அந்த முறைப்பை லட்சியம் பண்ணாதவளாக அவள் மாடிப்படிகளை நோக்கிக் கை நீட்டினாள்...

"ஐயா.. சின்னம்மாங்க..."

அவள் விரல் நீட்டிய திசையில் பார்த்தவன் நாச்சியப்பனை மறந்தவனாக.. இரண்டே எட்டில் மாடிப் படிகளைத் தாண்டி.. துவண்டு சரிந்து கொண்டிருந்த ராதிகாவை கைகளில் ஏந்திக்கி காண்டான்.. ஒருவினாடி அவன் தாமதித்திருந்தால்கூட ராதிகா மாடிப்படிகளில் சரிந்திருப்பாள்...

பூமாலை போல கைகளில் கிடந்த ராதிகாவை அவன் ஹால் சோபாவில் படுக்க வைத்த போது.. வீடே அவனைச் சூழ்ந்து கொண்டது...

"என் மருமகளுக்கு என்னடா ஆச்சு..?" மேகலா பதறிப் போனாள்...

"அம்மாவுக்கு காய்ச்சல் வந்திருச்சு போல காவேரி.. சூடா காபிய கலந்துக்கிட்டு வா..."

ராதிகாவைத் தொட்டுப் பார்க்காமலே மீனாட்சி காவேரிக்கு உத்தரவு போட.. அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. சுற்றிலும் மற்றவர்கள் இருக்கும் போது கோபத்தைக் காண்பிப்பது உசிதமில்லை என்ற நினைவில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினாள் அவள்..

"அதுக்கென்ன மீனாட்சி.. நீ சொன்னதைச் செய்யத்தானே நான் இந்த வீட்டில் வேலைக்கிருக்கேன்.. நான் காபியக் கொண்டு வந்தா.. அதை வாங்கிக் குடிக்க அம்மாவுக்கு நிணைப்பிருக்கனுமில்ல.. நினைவு தப்பிக் கிடக்கிறவங்களுக்கு சூடா காபித் தண்ணியக் குடுக்கக் கூடாது மீனாட்சி.. சில்லுன்னு குளிர்ந்த தண்ணிய முகத்தில தெளிக்கனும்.. எங்கே.. இதெல்லாம் மூளையிருக்கிறவங்களுக்கு புத்தியில உறைச்சிருக்கும்.. நீதான் புத்திய கடன் கொடுத்திருக்கவளாச்சே..."

காவேரியின் இடக்கான பேச்சில் மீனாட்சிக்கு ரோசம் வந்துவிட்டது...

'யாருக்குடி புத்தியில்ல..? உனக்குப் புத்தியில்ல.. உன் புருசனுக்கு புத்தியில்ல.. நீ பெத்ததுகளுக்கு புத்தியில்ல.. ஏன்.. உன் வம்சத்துக்கே புத்தியில்ல... நான் புத்திசிகாமணி வம்சத்தில வந்தவடி.. என்னைப் பார்த்தா இந்தக் கேள்வியைக் கேட்கிற...?'

மனதுக்குள் சராமரியாக உதித்த வார்த்தைகளை வாய் வழியே உதிர்க்க அவள் தயாரான போது மேகலா அவளை அனல் பார்வை பார்த்தாள்...

"அதான் அவ சொல்கிறாள்ல.. அப்புறமும் எதுக்காக அசையா மரம் போல நின்னுக்கிட்டு இருக்க..? போ.. போயி.. பிரிட்ஜில இருக்கிற ஐஸ் தண்ணியக் கொண்டு வா..."

காசேரியின் முன்னிலையில்.. காவேரியை விட்டு விட்டு.. மீனாட்சியை வேலை வாங்கியதில் மீனாட்சிக்கு கொஞ்சம் கூட உடன்பாடில்லை... அதிலும்.. மேகலாவின் உத்தரவைக் கேட்டதும்.. காவேரி.. வாய்மூடி சிரிப்பை அடக்கிக் கொண்டதில் அவள் கொதிநிலையின் உச்சத்துக்கே போனாள்...

'இருக்குடி.. உனக்கு...' அவள் கண்களாலேயே காவேரியை எச்சரிக்க...

'போடி.. போ... உன்ன மாதிரி எத்தன பேரை நான் பார்த்திருக்கேன்...' என்ற பதில் பார்வையைக் கொடுத்தாள் காவேரி...

விழிகளால் பேசியபடி.. பார்வை யுத்தம் செய்து கொண்டிருந்தவள் மேகலாவின் கனல் வீசும் பார்வைக்கு அஞ்சியவளாக உள்ளே நகர்ந்தாள்..

அவள் கொண்டு வந்த குளிர் நீரை வாங்கி.. மெதுவாக ராதிகாவின் முகத்தில் தெளித்து... கைக்குட்டையால் அவள் முகத்தை துடைத்து விட்டான் முரளி... அவள் மெல்லக் கண்திறந்து பார்த்ததில்...

"அப்பாடி..." என்று நிம்மதிப் பெருமூச்சை விட்டாள் மேகலா..

"ஏனுங்கய்யா.. அம்மாவுக்கு காய்ச்சல் வந்திருச்சுங்களா..?" மீனாட்சி பவ்யத்துடன் வினவ...

"ஆ.. ஊன்னா.. இவ இதைச் சொல்லியே உயிரைக் குறைக்கிறாடா முரளி..." என்று தலையைப் பிடித்துக் கொண்டாள் மேகலா...

"அதுக்கில்லங்கம்மா... வழக்கமா நம்ம சின்னம்மா மயக்கமா படுத்தா.. அது காய்ச்சலாத்தானே இருக்கும்..?"

விளக்கம் சொல்ல ஆரம்பித்த மீனாட்சி.. பாலமுரளியின் பார்வை உயரவும்.. அப்படியே பேச்சை அந்தரத்தில் விட்டுவிட்டு...

"என்னமோ கருகுற வாசனை வருதே.. ஏண்டி காவேரி.. அடுப்பில எதைக் கருக விட்டுட்டு இங்க வந்து நின்று வாய் பார்த்துக்கிட்டு இருக்க..?" என்று காவேரியின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டாள்..

'என் வயிறுதாண்டி எரியுது.. அந்த வாசனைதான் உன்னை வந்து கருக்குது...' காவேரி ருத்ர அவதாரம் எடுத்தாள்...

"இவ வாயைத் தைக்க ஊசி நூல் இருக்கா நாச்சியப்பா...?"

தாங்க முடியாமல் மேகலா கேட்டாள்...

"அதை இனிமே யாராவது பிறந்து கண்டு பிடிச்சுக் கொடுத்தான் உண்டும்மா.. உலை வாயை மூடலாம்.. ஏன்..? ஊர் வாயைக்கூட மூடலாம்.. இவ வாயை மூடறதுங்கிறது சாமானியப்பட்ட சமாச்சாரமில்லம்மா.. இவளைப் படைச்ச ஆண்டவனாப் பார்த்து மனசிரங்கினாத் தான் அது நடக்கும்.." மீனாட்சியை ஒரு மார்க்கமாகப் பார்த்தபடி பதில சொன்னான் நாச்சியப்பன்..

அவனுக்கு நீண்ட நாள்களாவே மீனாட்சியின் மீது ஒருகண் உண்டு.. அதை அவன் மீனாட்சியிடம் வெளிப் படுத்திய போது... இரண்டு கண்ணிருக்க.. ஒரு கண்ணை மட்டும் எதற்காக அவள்மீது அவன் வைத்தான் என்ற இடக்கு மடக்கான கேள்வியை அவள் எழுப்பிவைத்தாள்.. அதற்குப் பின்னால் அவளிடம் மனதைத் திறந்து சொல்ல அநேக சந்தர்ப்பங்கள் வாய்த்தபோதும்.. அவளின் அந்த வாய்க்கு அஞ்சியே வாய்மூடி நகர்ந்து விடுவான் நாச்சியப்பன்...

அவனுடைய ஆற்றாமையை வெளிப் படுத்திக் கொள்ள அருமையாக கிடைத்த வாய்ப்பை விட்டு விடாமல் அவன் பற்றிக் கொண்டதில் காவேரி குஷியாகி விட்டாள்...

அர்த்தம் பொதிந்த.. நட்புக் கலந்த பார்வையொன்றை அவள் நாச்சியப்பனின் பக்கம் வீச... அந்தப் புரிதல் கலந்த பார்வையில் புல்லரித்துப் போனான் நாச்சியப்பன்...

'என்னடா இது.. பசு மாட்டுக்கு தண்ணி காட்டினா.. கண்ணுக்குடியோட நிற்கிற மாடு.. புல்லைக் கேட்குது...'

அவர்களின் பார்வைப் பரிமாற்றத்தில் மீனாட்சிக்குள் ரணகளமே உருவானது... அவளை மட்டும் பார்த்துக் கொண்டிருந்த நாச்சியப்பன் காவேரியையும் சேர்த்துப் பார்ப்பதில் அவள் கொலைவெறி கொண்டாள்...

இது எதையும் கவனிக்காதவனாக.. ராதிகாவின் கன்னம் தட்டி அவளைக் கண்விழிக்க வைத்துக் கொண்டிருந்தான் முரளி...

"என்னடி செய்யுது..?" கவலையுடன் அவன் கேட்க..

"தெரியல... மயக்கம்.. மயக்கமா வருது.." ராதிகா பேச முடியாமல் கண்மூடினாள்...

அவர்களின் பேச்சில்.. நாச்சியப்பனிடம் நட்புக்கரம் நீட்டுவதை மறந்து காவேரி.. ராதிகாவின் பக்கம் கவனத்தைத் திருப்பினாள்...

"ரெண்டு நாளாவே அம்மா சரியா சாப்பிடறதில்லிங்கய்யா... எதைச் சாப்பிட்டாலு வாந்தியெடுத்திடறாங்க..."

அவள் கூறிய வாக்குமூலத்தில் மீனாட்சிக்கு பி கிடைத்து விட அவள் உற்சாகமானாள்...

"இவ அந்த லட்சணத்தில ஆக்கிப் போட்டிருக்கு அம்மா கேட்டுக்கங்க.. ஐயா கேட்டுக்கங்க.. யோ பச்சோந்தி நாச்சியப்பா...! நீயும் இதைக் கேட்டுக்கய்யா இவ ஆக்கிப் போட்டச் சாப்பாட்டைச் சாப்பிட்டதி அம்மாவுக்கு வாந்தி வந்து.. அது மயக்கத்தில கொண் வந்து நிப்பாட்டிருச்சு.. இதுக்கு என்ன சொல்றிங்க..?"

அவள் ஆர்ப்பரிக்க...

"ம்ம்ம்.. உன் திருவாயை மூடச் சொல்றேன்.." என் சிரித்த முகத்துடன் சொன்னாள் மேகலா...

ராதிகாவின் மயக்கத்தை மறந்து... நாச்சியப்பா எதற்காக பச்சோந்தியென்று மீனாட்சி அழைக்கிறா என்ற ஆராய்ச்சியில் இறங்கினாள் காவேரி...

மீனாட்சி கிளப்பி விட்ட பீதியில் மனைவியி உடல்நிலை குறித்து பலத்த கவலையை அடைந்திருந்த பாலமுரளி.. தாயின் சிரிப்பை வினோதமாகப் பார்த்தான்.

"அம்மா.." அவன் ஆச்சரியக்குரல் எழுப்ப...

"ஒன்னுமே இல்லைடா தம்பி.. நீ நம்ம லேடி டாக்டருக்கு ஒரு போனைப் போடு..." என்றாள் மேகலா.

அந்த லேடி டாக்டர் வரும்போதே பாலமுரளியை முறைத்துக் கொண்டு வந்தாள்.. ஸ்டெதஸ் கோப்பை காதில் வைத்து ராதிகாவை பரிசோதிக்க ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே...

"என்ன..? திரும்பவும் காய்ச்சல் வந்திருச்சா..? இந்தப் பெண்ணைக் காய்ச்சலில் தள்ளி விடுகிறதையே குறிக்கோளாய் வைச்சிருக்கீங்களா..?" என்று மீனாட்சியைப் பார்த்துக் கேட்டாள்...

வீட்டில் அத்தனை ஜீவன்கள் இருக்க.. அவர்கள் அத்தனை பேரையும் விட்டுவிட்டு.. அவள் மீனாட்சியிடம் கேள்வி கேட்டதில் மீனாட்சி நொந்தே போய் விட்டாள்..

அவளுக்கெப்படித் தெரியும்..? அந்த வட்டாரத்தின் பெரிய மனிதனான பாலமுரளியிடம் அந்தக் கேள்வியைக் கேட்க முடியாத டாக்டரம்மாள்.. மீனாட்சியிடம் கேட்பதைப் போல.. மறைமுகமாக அந்தக் கேள்வியைக் கேட்டு வைக்கிறாள் என்று...

முரளி இமைக்க மறந்த பார்வையொன்றை வெறுத்துப் போனவனாக தாயின் பக்கம் வீச...

"இது காய்ச்சலில்லை டாக்டரம்மா... வேற ஒன்னு... முரளி.. ராதிகாவை உன் ரூமுக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போ.. டாக்டரம்மா அங்கே வந்து பார்க்கட்டும்..", என்று மகனுக்கு உத்தரவு போட்டாள் மேகலா...

"அது என்னாத்துக்கு..? சின்னம்மாவுக்கு என்னாச்சோ.. ஏதாச்சோன்னு.. நாங்க இம்புட்டுப் பேரும்

கவலையா நிற்கிறோம்... எங்களை விட்டுட்டுட்டு அம்மாவை மட்டும் தனியாப் பார்க்கச் சொன்னா எப்படி..?"

இப்படி தைரியமாக நீதி கேட்க மீனாட்சியால் மட்டுமே முடியும்...

எலி தானாகவே பொறியில் மாட்டிக் கொள்வதில் காவேரிக்கு மகா சந்தோசம்.. அவள் நாச்சியப்பனுடன் தன் சந்தோசத்தை பகிர்ந்து கொள்ளப் பார்த்தாள்.. நாச்சியப்பனோ.. காவேரியின் மீதான அவனது மார்க்கப் பார்வையை மீனாட்சி இனம் கண்டு கொண்டு அவனைப் 'பச்சோந்தி..' என்று விளித்து விட்ட கவலையில் இருந்தான்.. அதனால் அவன் காவேரியின் கண் சமிக்ஞையையும் கவனிக்கவில்லை... நமட்டுச் சிரிப்பையும் மனதில் பதிய வைத்துக் கொள்ளவில்லை..

ஆனால்.. அந்த இரண்டையும் மீனாட்சி கவனித்து விட்டாள்.. அதையெல்லாம் செய்த காவேரியை விட்டுவிட்டு அவள் நாச்சியப்பனை பார்வையால் பொசுக்க ஆரம்பிக்க.. அவன் எதற்காக இந்தக் கொதிப்பு என்று புரியாமல் திருதிருத்தான்...

மேகலா மீனாட்சியை கண்டிப்புடன் பார்த்தாள்...

"உன் வேலை என்னடி..? அதை மட்டும் பாரு.. அதை விட்டுட்டு முந்திரிக் கொட்டையைப் போல மூக்கை நுழைக்காதே... உன் சின்னம்மாவைப் பார்த்துக்க அவ புருசன் இருக்கான்.. நானிருக்கேன்.. எங்களுக்கு

இல்லாத கவலை உனக்கெதுக்கு..? எந்த நேரம் எதைப் பேசறதுன்னு தெரியாம.. பேச வந்திட்டா.. காலாகாலத்தில கழுத்தில மூணு முடிச்சு விழுந்திருந்தா உனக்கு அந்த இங்கிதம் தெரிஞ்சிருக்கும்.. ஏழு கழுதை வயசாகியும் எவனுக்கும் கழுத்தை நீட்டாம வாயடிச்சுக்கிட்டு நின்னா.. உனக்கெப்படி இங்கிதம் தெரியும்..? போடி.. போ.."

முரளி ராதிகாவைத் தூக்கிக் கொண்டு மாடிக்கு விரைந்தான்.. டாக்டரம்மாளிடம் தாழ்ந்த குரலில் ராதிகாவின் உடல்நிலையைக் குறித்த தன் ஐயப்பாட்டைப் பகிர்ந்தபடி மேகலா மாடியேறினாள்.. கண்களில் நீர் முட்ட நின்ற மீனாட்சியை கேலிப் பார்வை பார்த்துவிட்டு காவேரி சமையலைறப் பக்கம் நகன்றாள்.. திடிரென்று கிடைத்து விட்ட அரிதான தனிமையில் நாச்சியப்பன் மீனாட்சியின் அருகே வந்தான்..

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.. எப்போதும் மீனாட்சியைக் கடிந்து கொள்ளாத மேகலா அவளைக் கடிந்து பேசிவிட்டாள்.. கண்ணீர் என்றால் எப்படியிருக்கும் என்று கேட்கும் மீனாட்சி கண்ணீர் விடுகிறாள்...

'என்னடா இது.. இவகூட பச்சைப் புள்ளபோல அழுவாளா...?' அவன் அதிசயப் பட்டுப் போனான்..

அதுவரை மற்றவர்களின் கண்ணிரைக் கண்டு மனமிரங்கி நல்லதாக நான்கு வார்த்தைகளைப் பேசிக் கண்ணீரைத் துடைத்து விடும் செயலைத்தான் மீனாட்சி செய்து வந்திருந்தாள்...

'என்னய்யா இது.. பேசிக்கிட்டு இருக்கும் போதே பொசுக்குன்னு அந்தம்மா கண்ணில தண்ணியை விடுது.. அணைக்கட்டு எதுவும் அது கண்ணுக்குள்ள இருக்கா..' என்று விகடம் பேசிச் சிரித்த மீனாட்சி.. முதன் முதலாய் அந்த அணைக்கட்டை உணர்ந்தாள்..

துடைக்கத் துடைக்க நிற்காமல் பெருகிக் கொண்டிருக்கும் கண்ணீரில் நனைந்த அவளின் முகம் கலங்கிச் சிவந்திருந்தது...

பெண் மனதின் பெட்டகத்தின்
திறவுகோலை அறிந்தவர் யார்..?

"மீனாட்சி..."

இரக்கத்துடன் நாச்சியப்பன் அழைக்க.. வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு.. தோட்டத்தின் பக்கம் விரைந்து விட்டாள் மீனாட்சி..

நாச்சியப்பன் பின் தொடர்ந்தான்.. விசும்பிக் கொண்டிருந்த மீனாட்சியின் அருகே சென்று...

"அழுகாதே.. புள்ள..." என்றான்

"நான் அழுவுறேன்.. இல்ல சிரிக்கிறேன்.. அது என் இஷ்டம்.. நீ யாருய்யா அதைக் கேட்க..?" ஆக்ரோசத்துடன் கேட்டாள் மீனாட்சி..

அந்தத் துயரமான மனநிலையிலும்.. தன் கோபத்தை விடாமல் சிலிர்த்து கொண்ட அவள் இயல்பில் மனம் லயித்தான் நாச்சியப்பன்..

'இது.. இது.. இதுதான்.. இவ...'

அவளின் வாயாடித்தனத்தின் தீவிர ரசிகன் அவன்.. தினமும் அவளிடம் வம்பிழுத்து வாங்கிக் கட்டிக் கொள்வதுதான் அவனுக்கு பரம சுகம்..

"நான் யாரா..? அதைத்தான் கெஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீ சொன்னயே.."

"சுரைக்காய்க்கு உப்பில்லைன்னு நான் ஆயிரம் சொல்வேன்.. அதை இந்தக்காதில வாங்கி.. அந்தக்காதில் விட்டுட்டுப் போற ஆளுதான நீ.. இன்னைக்கு என்ன புதுசா கரிசனம் பொங்கிவழியுது..?"

"ஏன் புள்ள.. உனக்கே இது நாயமாய் இருக்கா..? என் கரிசனம் உனக்குப் புதுசா..? இன்னைக்கு.. நேத்தா உம்மேல நான் கரிசனப்படறேன்..? உன்னைக் கண்டுகிட்டு நாள் முதலா.. கட்டினா உன்னத்தான் கட்டனுமுன்னு உன் பின்னால 'தோ.. தோ' நாய்க்கட்டியைப் போலல்ல சுத்திச் சுத்தி வர்றேன்..?"

"இந்தக் கதையெல்லாம் எங்கிட்டச் சொல்லா
நாய் குட்டின்னா உனக்கு அத்தனை இளக்கா
போச்சா..? அது நன்றியுள்ள ஜீவன்ய்யா... ஒருத்
பிடிச்சிருந்தா அவங்க பின்னால மட்டும்தான் அது வா
ஆட்டிக்கிட்டு அலையும்.. உன்னப் போல.. நிமிசத்துக்கு
தரம் நிறம் மாறாது.."

"ஒஹோ.. அதனாலதான் அம்மணி.. எ
'பச்சோந்தி'ன்னு பெயர் வைச்சுக் கூப்பிட்டாங்களாக்கும்

நாச்சியப்பன் கோபமில்லாத புன்னகையுடன் கே

"ஆமாய்யா.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?" எ
சிலிர்த்துக் கொண்டாள் மீனாட்சி...

"நான் எதுக்கு புள்ள.. என்னான்னு சொ
போறேன்..? என்ன எப்படி வேண்டும்னாலும் நீ கூப்
உனக்கில்லாத உரிமையா..? நீ எப்படிக் கூப்பிட்டா
நான் ஓடிவந்து நிக்கப்போறன்... அப்புறம் எதுக்காக
நீ கோவிச்சுக்கறே.." நாச்சியப்பன் குழைந்தான்.

அவன் குழையலுக்கெல்லாம் மீனாட்சி மசியவில்
உன்னைப்போல எத்தனை ஆள்களை நான் பார்த்திருப்
என்ற பார்வையினை அவள் பார்த்தாள்..

"நீதானே.. அதெல்லாம் கூப்பிட்ட குரலுக்கு உ
ஓடிவந்து நிப்ப.. என்ன ஒன்னு.. நான் கூப்பிட்டாலும்
வருவ.. அந்த வித்தராக் கள்ளி.. விறகொடி
மாய்மாலக்கள்ளி காவேரி கண்ணாடிச்சாலும்.. ஈன்னு

நிப்ப.. அப்புறம்.. அவயாரு..? மெட்ராஸ் பட்டினத்தில இருந்து வந்தாளே ஒரு மேனா மினுக்கி ஜெகஜால மோகினி.."

மீனாட்சி.. கண்ணீரை மறந்து.. கோபத்துடன் நீட்டி முழக்கிக் கொட்டிருக்க.. நாச்சியப்பன் வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்காமல்..

"யாரைச் சொல்ற புள்ள.. அந்த ஷோபாப் பொண்ணையா சொல்ற..?"என்று கேட்டு வைத்தான்..

"பேரெல்லாம் மறக்க மாட்டியே..." மீனாட்சியின் கண்களில் தீப்பொறி பறந்தது...

"ஏம்புள்ள.. உன் மனசைப் படிக்கிறவன் நான்.. நீ யாரைச் சொல்றன்னு.. எனக்குத் தெரியாதா..?" அவன் புளகாங்கிதப்பட்டுப் போனான்...

"சொல்லுவய்யா சொல்லுவ.. சொல்கிறவ கூமுட்டையா இருந்தா சோளக்காட்டுல நெல் விளையுதுன்னு சொல்லுவ.."

"நீ பேசு புள்ள.. நீ எதைப் பேசினாலும் கேக்கத்தானே இந்த நாச்சியப்பன் பொறப்பெடுத்திருக்கேன்..?"

"கேப்பய்யா.. கேப்ப.. பேசறவ கேணாச்சியா இருந்தா.. நீ கேப்பையில் நெய் வடியுதுன்னு கேப்ப.."

"பாரு புள்ள.. நானே பச்சோந்தின்னு எதுக்குச் சொன்னன்னு விளக்கம் கேக்க வந்து நிக்குறேன்.. நீ அதுக்கு விளக்கம் சொல்லாம சொலவடைக்கு மேல..

சொலவடையாய் அள்ளி விட்டுக்கிட்ட இருந்தா அர்த்தம் என்ன புள்ள..? மனுசன் விளக்கம் தெரியாம மண்ண காய்ஞ்சு போயிற மாட்டானா..?"

"நீ காய்ஞ்சு போன மாடுதானய்யா..? என்ன ஒன்ன கழனிப்பக்கம் மேயப் போகாம... காய்.. காய்ச்ச மரத்துப் பக்கம் சுத்திக்கிட்டு இருக்க.."

கண்ணீரை பொலபொலவென்று உதிர்க்கும் அந்த நிலையிலும் பொடி வைத்துப் பேசிய காதலியின் பேச்சுத் திறமையில் அவள்மீது காதலோ.. காதலென்று காதலாகிப் போனான் நாச்சியப்பன்.. அவள் என்ன பேசுகிறாள் என்ற விவரம் புரியாவிட்டாலும்... அவள் எதையோ மறைத்துப் பேசுகிறாள் என்ற விவரம் புரிந்ததில் தன் அறிவை தானே மெச்சிக் கொண்டான்..

"நீ பொடி வைச்சுப் பேசற புள்ள.."

"அத இப்பத்தான் புரிஞ்சுக்கிட்டியாக்கும்..?"

"ஆனா.. என்னத்தைப் பேசறன்னுதான் ஒரு மண்ணும் புரியல.."

"அதெல்லாம் மூளைபிருக்-கிறவங்களுக்குத்தான் புரியும்.. மூளைக்குப் பதிலா களி மண்ணு இருக்கிறவாய்களுக்கு ஒரு மண்ணும் புரியாது.."

"அதுக்கென்ன புள்ள.. எந்தலையில இருக்கிறது களிமண்ணாவே இருக்கட்டும்.. அதை வைச்சு சட்டி பானை செய்ய நீயிருக்கயே எனக்கு அது போதும்.."

பேசியபடியே.. மீனாட்சியின் விழி நீரை துடைக்க அவன் முயல...

"எடுய்யா.. கையை..." என்று சீறினாள் மீனாட்சி..

"மீனாட்சி..?" அவன் மன்றாடலுடன் கெஞ்சினான்

"என் பேரைச் சொல்லாதய்யா.. உனக்கு அந்த யோக்கியதை கிடையாது.."மீனாட்சி பொருமினாள்..

"ஏன் புள்ள அப்படிச் சொல்ற..?"

"பேசாதே.. சொல்லிப் புட்டேன்.. நீயெல்லாம் ஒரு மனுசப்பிறவியாய்யா..? அந்த ஷோபா சிறுக்கி பின்னால வாலை ஆட்டிக்கிட்டுப்போன ஆளுதானய்யா நீ..?" அவள் சீறினாள்..

பெண்களின் மனதை.. கடலை விட ஆழமானதென்று சொல்கிறார்களே.. அந்த ஆழத்தின் அடியில் அமிழ்ந்திருக்கும்.. ஏமாற்றங்களையும்.. துயரங்களையும்.. அவலங்களையும்.. மனக் காயங்களையும் அவர்கள் அறிவார்களா..?

சிரிக்கும் பெண்ணை நம்பாதே என்று சொல்பவர்கள்.. அந்தச் சிரிப்பின் பின்னால் உறைந்திருக்கும் அவளின் போராட்டங்களைப் புரிந்து கொள்வார்களா..?

அந்தச் சிரிப்பை ஒரு முகமூடியாகத்தான் அவள் அணிந்திருப்பாள்.. அதன் பின்னால்.. ஆழ்கடலை விட ஆழமான மனதிருக்கும். அதில் அமிழ்ந்து கிடக்கும் மனத்துயரங்களிருக்கும்..

மனம் போன போக்கில் வாழ்வதாகக் கூறப்படும் பெண்கூட.. அவள் மனம் போன போக்கில் வாழ்ந்திருக்க

மாட்டாள்.. ஏதாவது ஒரு ஆணின் மனம் போன போக்கி
வாழ்ந்திருப்பாள்...

சொல்வதென்றால் ஆயிரம் என்ன.. லட்சம் என்ன
கோடி என்ன... ஏன்.. இந்த பிரபஞ்சத்தின் அளவை வி
பெரிதான.. பெண்களின் மனத்துயரங்களைப் பற்றி
சொல்லிக் கொண்டேயிருக்கலாம்.. வாழ்க்கையா
வஞ்சிக்கப்பட்ட... இந்த சமுதாயத்தினால் ஒடுக்கப்பட்
பெண்களின் அவல நிலையைப் பிட்டுப் பிட்டு வைக்கலா

அதனால் என்ன பயன்..?

ரணமாகிக் கிடக்கும் மனங்களின் வலியை ஆற்
விட அவற்றால் முடியுமா..? மாறாக.. அந்த ரணத்தை
குத்திக் கிளறி.. அதன் வேதனையை பன்மடங்கா
பெருக்கத்தான் அவற்றால் முடியும்..

மயிலிறகாய் மனம் வருடிச் செல்
வார்த்தைகளால்.. மனக்காயங்களை மறக்கடி
முடியுமென்றால்.. அதை விட்டு விட்டு.. கோடாளியை
கையில் எடுக்கலாமா..?

மீனாட்சியின் மனமும் அப்படிப் பட்டதுதான்.. அவ
மனதில் இருந்ததை அறிந்தவர் யாருமில்லை.. அவ
கூடப் பழகும் காவேரி.. அவளை எதிரியாகத்தா
பாவித்தாள்..

அவளை நேசிப்பதாய் சொல்லிக் கொண்
பின்னால் வந்த நாச்சியப்பன் அவள் முன்னாலேயே.. மற்
பெண்களிடம் கடலை போட்டான்..

அவற்றைக் கூட அவன் சகித்துக் கொண்டாள்..
பொறுத்துக் கொண்டாள்..

எனக்கு நீ நிகரா..? என்ற அலட்சியப் பார்வையுடனும்..
பேச்சுக்களுடனும் அவற்றை எதிர் கொண்டாள்..

ஆனால்.. அவளைப் பெற்ற தாயை விடப் பெரிதாக
பேணி வளர்த்த மேகலாவே கடிந்து கொண்டதில்
அவளுடைய மனவலிமை தகர்ந்து விட்டது.. மனதிற்குள்
மாறாத துயரமும்.. தனிமையும் குடி கொண்டு விட்டது..
அந்த மனநிலையில் அவள் மனம் வெளிப்பட்டு விட்டது..

என்றோ வந்து போன ஷோபாவின் நினைவில்
இன்றும் மீனாட்சி இருக்கிறாளென்றால் அதற்கு என்ன
அர்த்தம்..?

அதைப் புரிந்து கொண்ட நாச்சியப்பனின் கண்கள்
மலர்ந்தன..

"புள்ள.." அவன் பரவசப்பட்டுப் போனான்..

"யோவ்.. கைப்புள்ளையைக் கூப்பிடறதைப் போல
என்னையும் கொஞ்சிக்கிட்டு இருந்தீன்னா.. நடக்கிறதே
வேற.. ஆமாம்.. சொல்லிப் புட்டேன்.. யாருக்கு.. யாருய்யா
புள்ள..?"

அவளின் ஆட்சேபனையை நாச்சியப்பன் காதில்
போட்டுக் கொள்ளவேயில்லை..

"ஏன் புள்ள.. இத இத்தனை நாளா ஏம்புள்ள கேட்டு
வைக்கல.."என்று அவன் கேட்டு வைத்தான்..

"உன்கிட்ட நான் எதுக்காகய்யா கேட்கனும்.. நீ துணுக்கு சேலையைக் கட்டி விட்டிருந்தா கூட.. பின்னாலேயே போற ஜாதின்னு தெரிஞ்ச பின்னால.. உனக்கு கடிவாளம் போட நான் எதுக்காகய்யா மெனக்கெடனும்..?"

"நான்தான் அந்த ஜாதியாய் இருந்தேன்னா.. நீ என் பெண்ஜாதியாய் மாறி என்னைத் திருத்தலாமில்ல..?"

"ஆமாய்யா.. அதுக்குத்தானே என்னோட அப்பனும்.. ஆத்தாளும் என்னைப் பெத்து.. அம்போன்னு அநாதையாய் விட்டுட்டு மேலோகம் போயிருக்காங்க..? ஏன்னு கேட்க ஒரு நாதியிருந்தா இப்படி ஒரு கேள்வியை என்னப் பார்த்து நீ கேட்பியாய்யா..?"

மீனாட்சியின் கண்ணீர் துளிகள் சிதறிய போது.. நாச்சியப்பனின் மனமும் கூடச் சேர்ந்து சிதறியது...

மனதார அவன் காதலிக்கும் காதலி நாதியில்லாதவளைப் போல கண்ணீர் சிந்தியதில் அவன் மனம் வலி கொண்டது.

"இந்தா பாரு புள்ள.. இப்ப என்னத்தை நான் கேட்டுப்புட்டேன்னு அழுது புலம்புறவ..? துணுக்கு சேலையைக் கட்டிவிட்டிருந்தா ஒரு ஆம்பளையாகப்-பட்டவன் நின்னு ஒரு பார்வை பார்க்க மாட்டானா..? அதுக்குப் போயி என்னா பேச்சுப் பேசற..? ஏன்புள்ள.. நானிருக்கப்ப நீ நாதியில்லாதவளா ஆகிருவியா..? ஏன்னு என்னைக் கேட்கனும்னா நீ ஆயிரம் கேள்வியைக்

கேளு நான் சலாம் போட்டுக்கிட்டு பதிலைச் சொல்றேன்.. உன்னை யாராச்சும் ஒத்தக் கேள்வியைக் கேட்டாக்கூட அதை என்கிட்ட வந்து சொல்லு புள்ள.. ஏன்னு கேட்க உனக்கு நானிருக்கேன் புள்ள.. கேட்ட ஜென்மத்தை நார்.. நாரா கிழிச்சுப் போட்டிற மாட்டேன்..?"

கண்கள் சிவக்க.. கை முஷ்டியை மடக்கிக் காற்றில் குத்தியவாறு.. மனதிற்குள் போனவாரம் பார்த்த திரைப்படத்தின் கதாநாயகனைக் கொண்டு வந்து வீர வசனம் பேசினான் நாச்சியப்பன்...

அவனை அலட்சியமாய் மேழும் கீழுமாய் ஒரு பார்வை பார்த்து விட்டு.. ஒரே வார்த்தையில் புரட்டிப் போட்டாள் மீனாட்சி..

"கிழிச்ச.."

நாச்சியப்பனுக்கு மீசை துடிக்க ஆரம்பித்த விட்டது.. அவன் எந்தப் பக்கம் போனாலும் அதற்கு எதிர்பக்கமாகத்தான் போவேனென்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்த மீனாட்சியை உக்கிரமாகப் பார்த்தான்..

"உன்னையே சுத்திச் சுத்தி வர்றேன்னுதான உனக்கு இத்தனை இளக்காரம்..?"

"ஆமா.. நீ என்னை மட்டும்தான் சுத்தி வந்த.. போய்யா.. உன் வகிசியை எனக்குத் தெரியாதா..? கொஞ்ச நேசத்துக்கு முன்னாலதான அந்தக் காவேரி

உன்னைப் பார்த்து கண்ணடிச்சா..? நீயும் 'ஈ'ன்னு முப்பத்திரண்டு பல்லையும் காட்டிக்கிட்டு அவளைப் பார்த்த..? அதுக்கப்புறமும் என்கிட்ட வந்து குழையறியே.. உனக்கு மனச்சாட்சியே இல்லையா..?"

மீனாட்சி நாச்சியப்பனை புறக்கணித்தவிட்டு வீட்டுக்குள் சென்றுவிட்டாள்...

ஊரெல்லாம் ஜனமிருக்க..
உன்னைச் சுத்தி என் மனசிருக்கு...

மேகலா எதிர்பார்த்த பதிலைத்தான் சொன்னாள் டாக்டர் மாலதி... ராதிகாவை பரிசோதித்து விட்டு முன்னறைக்கு வந்தவள் சிரித்த முகத்துடன் பால முரளியைப் பார்த்தபோதே மேகலாவிற்கு என்ன செய்தி வரப் போகிறது என்று தெரிந்து விட்டது...

ராதிகாவின் உடல்நிலையைக் குறித்த கவலையுடன் இருந்த முரளி ஆச்சரியமானான்.. எப்போதும் அவனை மனைவியைக் கொடுமை செய்யும் கொடுமைக்காரக் கணவனாகவே பார்க்கும் மாலதி அன்று சிரித்த முகத்துடன் பார்த்ததும் அவன் தாயைப்

பார்த்தான்.. மேகலாவும் சிரித்த முகத்துடன் தான் இருந்தாள்..

'இங்கே என்னதான் நடக்குது..?'

அவனுக்கு ராதிகாவிடம் போக வேண்டுமென்ற துடிப்பு.. ஆனால் முன்னறையில் மேகலாவும்.. மாலதியும் இருக்கும் போது... அவர்களைக் கடந்து.. அடுத்த பகுதிக்குள் நுழைய அவனால் முடியவில்லை.. அந்த ஒரு காரணத்தினாலேயே பல்லைக் கடித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்...

"கங்கிராஜீலேசன்ஸ் சார்..."

'இது எதுக்காம்..?'

"நீங்க அப்பாவாகப் போறிங்க.."

அவன் மீது பூச்சாரல் பொழிந்தது.. சிறு வயதிலேயே குடும்பபாரத்தை ஏற்று.. அனேக வெற்றிகளை ஈட்டிய அந்தச் சாதனையாளன்.. அவற்றில் பெற்ற சந்தோசத்தை விட அதிகமான சந்தோசத்தை அன்று பெற்றான்...

"தேங்க் யு டாக்டர்.. தேங்க் யு வெரிமச்.."

என்னவோ.. மாலதிதான் மந்திரத்தை போட்டு ராதிகாவின் வயிற்றுக்குள் வாரிசைக் கொண்டு வந்து விட்டதைப் போல முரளி மகிழ்ந்து போய் அவளுக்கு நன்றி சொன்னான்

"கண் திறந்திட்ட பெருமாளே..!"

மேகலாதான் சரியான மார்க்கமாக கடவுளுக்கு நன்றி சொல்லி இரு கைகளையும் குவித்தாள்..

ஆனந்தப் பாவசத்துடன் இருந்த முரளி.. சட்டென்று தன் முன்னாலிருந்த செக் புக்கை எடுத்தான்.. மாலதி மயக்கம் போட்டு விழும்படியான தொகையொன்றை எழுதிக் கையெழுத்துப் போட்டு அவளிடம் நீட்டினான்..

"வாட் இஸ் திஸ்..!"

மாலதியின் அகன்ற விழிகளில் மயக்கம் வருவதற்கான ஆரம்ப அறிகுறிகள் தெரிந்தன. சுதாரித்துக் கொண்ட மேகலா.. அவள் கைகளை நன்றி சொல்வதைப் போல இறுக்கிப் பிடித்து.. அவளை மயக்கத்திலிருந்து தப்பிக்க வைத்தாள்..

"உங்க ஹாஸ்பிடலுக்கான என்னோட டொனேசன்.."

"ஆனாலும் இது அதிகம் சார்.."

"இருக்கட்டும்.."

"நான் என்ன ட்ரீட்மெண்ட் கொடுத்தேன்னு இவ்வளவு பெரிய தொகையை எனக்குக் கொடுக்கறிங்க.. சார்..?"

"என் சந்தோசத்தைப் பகிர்ந்துக்கறேன் மேடம்.."

அவன் மிகப்பெரிய உயரத்தில் இருப்பவன். கோடிஸ்வரன்.. தென்காசி வட்டாரத்திலேயே பெரிய புள்ளி.. தேனூத்து என்றாலே அவன் பிறந்த ஊர் என்று பிறந்த குழந்தை கூடச் சொல்லும்.. என்பது போன்ற

இத்யாதி.. இத்யாதி விவரங்களை அறிந்தவள்தான் டாக்டர் மாலதி..

ஆனால் சந்தோசமான செய்தியைச் சொன்னால் இவன் இவ்வளவு பெரிய தொகையை வழங்குவான் என்று அவள் நினைத்தும் பார்த்ததில்லை..

அந்த பிரமிப்புடன் அவள் மாடியிறாங்கினாள்..

"என்னடி இது..? சின்னம்மா மயக்கம் போட்டதுக்காக வந்த டாக்டரம்மா.. மயக்கம் போடறதைப் போலவே முகத்தை வைச்சுக்கிட்டுப் போறாங்களே.. என்னவாய் இருக்கும்..?"

சற்று முன்தான் ஜாடை பேசிய நினைவு மறந்தவளாக பக்கத்தில் நின்ற மீனாட்சியிடம் விசாரித்தாள் காவேரி.. அழுது வீங்கியிருந்த முகத்துடன் நின்றிருந்த மீனாட்சி பதில் சொல்லவில்லை.. அந்தப் பதிலை.. முகம் மலர இறங்கி வந்த மேகலாதான் சொன்னாள்..

"காவேரி.. இனிப்பாய் எத்தனை வகை பலகாரம் பண்ண முடியுமோ அது அத்தனையையும் பண்ணுடி.."

"என்னங்கம்மா விசேசம்..?"

எப்போதும் வாயைத்திறந்து எதையும் கேட்காமல் மீனாட்சி மூலமாகவே விசயத்தை கறந்து விடும் காவேரியே.. மேகலாவின் உற்சாகத்தற்கான காரணத்தை அறியும் ஆவலில் வாயைத்த திறந்து கேட்டு விட்டாள்...

எந்த விவரமும் இல்லாத போதே தூண்டித்துருவிக் கேள்விகளைக் கேட்டு.. தொண்டைக்குள் இருக்கும் வார்த்தைகளை தோண்டியெடுத்த விடும் வல்லமை படைத்த மீனாட்சி மட்டும் அசையாமல் பேசாமடந்தையாக நின்றாள்..

அதீத உற்சாகத்திலிருந்த மேகலா அதைக் கவனிக்கவில்லை..

"எனக்குப் பேரப்புள்ள பிறக்கப் போகுதுடி.."

அவளின் சந்தோசம் மற்றவர்களையும் தொற்றிக் கொண்டது...

"அடியாத்தி.. அதனாலதான் சின்னம்மா மயக்கம் போட்டு விழுந்தாங்களா..?"

"ஆமாம் காவேரி.."

"ரெண்டு நாளா வாமில எதையும் வைக்க முடியாம வாந்தியெடுத்துக்கிட்டு இருக்கிறப்பவே நினைச்சேன்.."

"எனக்கும் அதே நினைவுதான்.."

அவர்கள் பேசியப்படியே உள்ளே சென்றுவிட.. மீனாட்சி மெதுவாக மாடிப் பக்கம் திரும்பிப் பார்த்தாள்..

'அதனாலதான் பெரியம்மா என்ன அதட்டினாங்களா..? நான் ஒரு கூறு கெட்டவ.. விவரமில்லாம பேசிவைச்-கட்டேன்.. அம்மா சொன்னதைப் போல.. காலாகாலத்தில என் கழுத்திலயும் ஒரு மூணு முடிச்சு விழுந்திருந்தா

இதெல்லாம் தெரிஞ்சிருக்கும்.. சும்மா வெறும் வாயை அசைக்கிட்டு இருந்தா என்னத்தை தெரியும்..? ம்ஹீம்.. அதையெல்லாம் செஞ்சு வைக்க.. எனக்குன்னு யாரு இருக்கா..?'

ஊமைச் சோகத்துடன் அவள் கூட்டிப் பெருக்கிக் கொண்டிருந்தாள்.. காவேரியிடம் உத்தரவுகளை பிறப்பித்து விட்ட வந்த மேகலா அப்போதுதான் மீனாட்சியைப் பார்த்தாள்..

"ஏண்டி.. நீ இங்கேதான் இருக்கியா..?" ஆச்சரியத்துடன் வினவினாள்..

"ஆமாம்.. பெரியம்மா.." தீனமான குரலில் சொன்னாள் மீனாட்சி..

"வெறும் பேச்சுக்கு எட்டுரைக் கூட்டுவ.. இப்ப.. இவ்வளவு பெரிய விசயம் நடந்திருக்கு.. நீ வாயைத் திறக்காம கூட்டி மெழுகிக்கிட்டு இருக்க.. என்னடி ஆச்சு..?"

"ஒண்ணுமில்ல பெரியம்மா.."

அப்போதுதான் மீனாட்சி.. முகம் பார்க்காமல் பதில் சொல்லிக் கொண்டிருந்ததைக் கவனித்தாள் மேகலா.. அவள் முகம் மாறியது...

'இவளுக்கு என்ன ஆச்சு..?' புருவங்களை உயர்த்தியவள்...

"இங்கே வாடி.." என்று அதட்டல் போட்டாள்..

"என்னங்கம்மா.." குனிந்த தலை நிமிராமல் விளக்குமாறும்.. கையுமாக வந்து நின்றாள் மீனாட்சி.

"ஏண்டி.. தலையைக் குனிஞ்சுக்கிட்டு நிற்கிற
என் முகத்தைப் பார்க்க மாட்டியோ.. நானென்ன உன்
பொண்ணுப் பார்க்க வந்திருக்கும் மாப்பிள்ளையா
எதுக்காக இப்படி மண்ணுக்குள்ள புதையலைத் தேட

மேகலா கேலி பேசினாள்.. அப்போதும் மீனா
முகத்தை நிமிர்த்தாமல் நிற்க.. அவளுக்கு கோபம்
விட்டது...

"அடச்சீ.. நிமிர்ந்து பாரு.."

மெதுவாக மீனாட்சி முகத்தை உயர்த்த.. மேக
பதறிப் போனாள்...

"என்னடி முகமெல்லாம் வீங்கிக்கிடக்கு..?"

அவளது கேள்விக்குப் பதில் சொல்லாமல் மீனா
நிற்க.. கிடைத்தது வாய்ப்பென்று.. போட்டுக் கொடுத்த
காவேரி...

"வேற ஒன்னுமில்லைம்மா.. நீங்க சும்மா பேச்
ஒத்தைப் பேச்சுக்கு.. இம்புட்டு நேரமும் இவ அழுது தீர்த்த

"அவ சொல்றது நிசமா மீனாட்சி..? நான் பேச்
பேச்சுக்கா இப்படி முகம் வீங்க அழுது வைச்ச..?"

மேகலா அதட்டிய அதட்டலில் மீனாட்சிக்கு மீண்
அழுகை வந்து விட்டது...

"நீயாடி அழுகிறது..?" மேகலா அதிசயப் பட்
போனாள் ....

"அதைத்தான்ம்மா நானும் கேட்டேன்.. இவ
ஊரையே அழுக வைப்பா.. இவ அழுது வைக்கிறதை
இப்பத்தான் நானும் பார்க்கிறேன்.."

அப்படியொரு காட்சியைக் காண.. ஆண்டாண்டு
காலமாக ஆவலுடன் தவமிருந்த காவேரி மகா
சந்தோசமாக கூறினாள்..

"இங்கே வா மீனாட்சி.."

மேகலா அன்புடன் மீனாட்சியை அருகே அழைத்து..
தன் முந்தானையால் அவளது கண்ணீரைத் துடைத்து
விட.. காவேரி 'ஆ' வென்று வாய் பிளந்தாள்..

'பெரிய வீட்டம்மா சேலை முந்தாணையில இவ
கண்ணீரை துடைச்சு விடறாங்களே..' அவளுக்குள்
பொறாமை கனன்றது..

அவளது எரிகின்ற பொறாமைத்தீயால் இன்னும்
கொஞ்சம் எண்ணையை ஊற்றும் விதமாக.. மீனாட்சியின்
தலை கோதி விட்டாள் மேகலா..

"நான் பேசினதுக்கா இம்புட்டுக் கண்ணீரை விட்ட..?"

அவளது பாசத்தில் உருகி விட்டாள் மீனாட்சி..

"இல்ல பெரியம்மா.. நீங்க பேசறதைப் போல நான்
விவரம் கெட்டத்தனமா பேசிப் புட்டேன்.."

"போடி பைத்தியம்.. முரளி பதறிப் போயிருந்தான்..
எனக்கு மனசில ராதிகா பிள்ளையாண்டிருக்காளோன்னு
ஒரு நினைப்பு.. அதுதான்னு நிச்சயமாகத் தெரியாம
எதையும் வெளியே சொல்லவும் முடியல..

அப்படியில்லன்னு ஆகிப்போனா.. ராதிகாவின் மன சங்கடப்படாதா..? அதனால்தான் டாக்டரம்மாவை வ சொன்னேன்.. அந்த விவரம் தெரியாம நீ பேசிவைச்ச நானும்தான் என்ன பண்ணுவேன்..? நீயே சொல்லு.."

அவ்வளவு பெரிய மனுஷி.. அந்த வீட்டுக் எஜமானி.. தேனூத்து பெரியதனக்காரான மாணிக் வாசகத்தின் மனைவி.. தென்காசி வட்டாரத்தின் பெரி புள்ளியான பால முரளியைப் பெற்றெடுத்த அம்மா.. ஒ சாதாரண வேலையாளிடம் தனது பேச்சிற்கா விளக்கத்தைக் கூறியதில் மீனாட்சிக்கு திரும்பவு கண்ணீர் வந்து விட்டது..

"என்கிட்டப் போயி இந்த அளவுக்கு விளக்க சொல்லுனுமாம்மா.."

"சொன்னா என்ன தப்பு..? ஏண்டி.. எனக்கு உன்னைப் பேச உரிமையில்லையா..? நீ இத்தனூண்டா இருக்கிறப்ப தாய்.. தகப்பனில்லாத பொண்ணுன்னு உங் பெரியாத்தா கிழவி கூப்பிட்டுக்கிட்டு வந்து எ பொறுப்பில் விட்டுட்டுப் போனா.. போனவளும் பே போய் சேர்ந்துட்டா.. நீ இங்கேதானடி வளர்ந்த..?"

"பெரியம்மா.."

"அழுகாதே மீனாட்சி.. ஏழுகழுதை வயசாகி இன்னும் கல்யாணம் பண்ணிக்காம நிற்கிறேங்கி கோபத்தில பேசிட்டேன்.. ஊரில பார்க்கிறவங்க என்ன சொல்லுவாங்க..? இந்தா பாரு.. சின்னப்புள்ளை

இருக்கிறப்பவே.. பெரிய வீட்டில வேலைசெய்ய மீனாட்சி வந்திட்டா.. இன்னமும் அவகிட்ட வேலையை மட்டும் வாங்கிக்கிட்டு.. அவ கழுத்தில தாலி ஏற வகை செய்யாம பெரிய வீட்டம்மா இருக்கிறாங்களேன்னு பேசமாட்டாங்களா..?"

நாதியில்லாமல் போய் விட்டோமே என்று கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த மீனாட்சி.. கண்ணீரை மறந்தவளாக.. மேகலாவை பிரமிப்புடன் பார்த்தாள்..

'பெரிய வீட்டம்மா மனசில இப்படியும் ஒரு நினைப்பிருக்கா..'

"என்னடி அப்படிப் பார்க்கிற..? அடைக்கலம்ன்னு எங்க வீட்டில நீ வந்து சேர்ந்திட்ட.. உனக்கு நாங்கதானடி எல்லாத்தையும் செஞ்சு வைக்கனும்..? வெளியிடத்தில மாப்பிள்ளை தேடலாமுன்னா.. நாச்சியப்பன் குறுக்க வந்து நிக்கிறான்.. அவனப் பத்தி உங்கிட்டப் பேசலாமுன்னு பார்த்தா.. நீ அவனைக் கண்டால பத்ரகாளியாய் மாறி வைக்கிற... உங்க ரெண்டு பேத்தையும் ஒருநா சேர்ந்தாப்புல உட்கார வைச்சு இதையெல்லாம் விலாவரியாக பேசி முடிக்கனுமுன்னு இருந்தேன்.. அதைச் செய்ய முடியாம.. ராதிகாவோட கவலை என் மனசைப் போட்டு அரிச்சிக்கிட்டு இருந்துச்சு.. இப்பத்தான் அந்தக் கவலை தீர்ந்துருச்சே.. அடுத்த கவலையான உன் கல்யாணத்தையும் பேசி முடிச்சிர வேண்டியதுதான்.."

'எனக்குக் கல்யாணத்தை செய்து வைக்க.. எனக்குன்ன யாரு இருக்கா..'

தன் மனதில் ஓடிய நினைவுகளுக்கு பதில் கிடைத்து விட்டதில் மீனாட்சியின் சோர்வும்.. சோகமும்.. பறந்தோடி விட்டது.. மேகலா.. ஆதுரத்துடன் பேசுவதை பொறாமையுடன் பார்த்துக் கொண்டிருந்த காவேரியை வெற்றிப் பார்வை பார்த்தாள் அவள்..

"இனிமே அழுகாதேடி மீனாட்சி.."

"நீங்க இருக்கிறப்ப நான் எதுக்காக அழுகப் போறேன் பெரியம்மா..? ஏன் காவேரி.. இப்படி வாயைப் பார்த்துக்கிட்டு நிக்கறியே.. அம்மா சொன்ன இனிப்புப் பலகாரத்தை ஆக்கி வைக்க யாரு வருவா..? போ.. போயி வேலையைப் பாரு.. வந்துட்டா.. வாயைப் பார்க்க.. போயி அடுப்படியைப் பாரு.."

மீனாட்சி.. பழைய மீனாட்சியாகி விட்டாள்..

இமையோர நினைவுகளில்..
எந்த நினைவு உந்தன் நினைவு..?

கண்மூடி.. சேர்ந்து படுத்திருந்தாள் ராதிகா.. அவளது கூந்தல் கலைந்திருந்தது.. மயங்கி விழுந்து முரளி அவளைத் தாக்கிக் கொண்டு வந்ததில் அவளது உடையும் கசங்கியிருந்தது.. இது அத்தனையிருந்தும் அவள் முகம்

அன்றுதான் பூத்த புது மலரைப் போல பொலிவுடன் மலர்ந்திருந்ததைக் கவனித்தபடி அவளருகே சென்று அமர்ந்தான் பால முரளி.

"ராது.."

அவள் முடியைக் கோதி விட்டபடி.. வார்த்தைக்கு வலிக்குமோ என்று மென்மையான குரலில் அழைத்தான் பாலமுரளி...

அவனது விரல்களின் பழகிய ஸ்பரிசத்தில் கண் விழித்துப் பார்த்தாள் ராதிகா.. அவள் முகத்துக்கு நேராகக் குனிந்திருந்த அவளின் காதல் கணவனின் முகத்தில் தெரிந்த கனிவை அவள் பார்வை கணக்கிட்டது..

"ம்ம்ம்..."

"நீ கேட்ட வரத்தைக் கொடுத்துட்டேண்டி..."

அவன் இமை சிமிட்டியதில் அவள் முகத்தில் செம்மை படர்ந்தது.. வெட்கம் முகத்தில் சூழ.. அருகிலிருந்தவனின் கையில் செல்லமாகக் கிள்ளினாள் ராதிகா...

"ம்ஹீம்... எறும்பு கடிச்சாப்புலக் கூட இல்ல.. இதுதான் நீ தாக்கற லட்சணமா..?"

"நீங்க இரும்புல செஞ்சு வைச்ச மனுசர்.. உங்களத் தாக்க யாராலேயும் முடியாதப்ப.. என்னால மட்டும் அது முடிஞ்சிருமா..?"

அவள் புரண்டு அவன் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டாள்.. பால முரளி கால்களை நீட்டிக்

கட்டிலில் சாய்வாக அமர்ந்து அவளை வாகாக மடியில் படுக்க வைத்துக் கொண்டான்..

"இந்த இரும்பு மனுசனையும் இளக்கிட்டயேடி..."

குனிந்து அவள் நெற்றியில் அவன் முத்தத்தைப் பதித்தபோது.. கண்மூடி அந்த நொடியில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டாள் ராதிகா..

'இவன் உண்மையாகத்தான் சொல்கிறானா..?'

அவன் மனதில் சந்தேகம் எழுந்தது.. அவளே சொன்னதைப் போல அவள் வரம் கேட்டாள்.. அவனும் வரம் கொடுத்தான்.. இதில் இளகல் எங்கிருந்து வந்தது என்று நினைத்துப் பார்த்தாள் ராதிகா..

"அதிகமா யோசிக்காதேடி.."

அவளது யோசனையில் சுளிந்திருந்த புருவங்களை நீவி விட்டான் பால முரளி..

"உன் வயிற்றிலே என் புள்ளையிருக்கு.. மனசைப் போட்டு அலட்டிக்கக் கூடாது..."

மிருதுவாக அவன் பேசியபோது.. இவன் கனிவு இதற்காகத்தானோ என்ற எண்ணம் ராதிகாவுக்குள் தோன்றியது...

'இவன் குழந்தை என் வயிற்றில் வளர்கிறது.. அந்த பாசத்தில்தான் இப்படி உருகுகிறான்...'

எதற்காக இப்படியெல்லாம் நினைவுகள் வந்து அலைக்கழிக்கின்றன என்று ராதிகாவிற்கே புரியவில்லை

விழிப்புமில்லாத.. மயக்கமுமில்லா அந்த இரண்டுங் கெட்டானான மசக்கை நிலையில் இப்படித்தான் ஏதாவது நினைவுகள் வந்து சூழுமோ என்று கலவரத்துடன் அவள் நினைத்துக் கொண்டான்...

"இனி அந்த கோமதி நாயகத்தின் பொண்டாட்டி எங்கே போய் முகத்தை வைச்சுக்கும்ன்னு பார்க்கலாம்.."

அவளது மனநிலையை அறியாமல் பேசிக் கொண்டிருந்தான் பால முரளி.. அவன் குரலில் தொனிந்த உற்சாகத்தில் தகப்பனாகப் போகும் குதூகலம் அப்பட்டமாகத் தெரிந்தது..

'இவன் மனசிலயும் அந்த ஏக்கம் இருந்திருக்கலாம்..' ராதிகா நினைத்துக் கொண்டாள்..

இருந்தால்தான் என்ன தவறு என்று அவளுக்கு நினைக்கத் தோன்றவில்லை.. ஊருக்கு முன்னால் அவனுடைய வெற்றியைப் பறைசாற்ற இது ஒரு நல்ல வாய்ப்பு என்றே நினைக்கத் தோன்றியது..

"அம்மாவுக்கு தரையில கால் படலைடி... அப்படியே அந்தரத்தில் மிதக்கிறாங்க.. இத்தன நாளா அவங்க முகத்தைப் பார்க்க முடியாம ஒரு குற்ற உணர்ச்சி என் மனதிலிருக்கும்.. இப்ப அத காணாமல் போயிருச்சுடி ராது..."

அவள் கன்னத்தில் படிந்த அவனின் கையின் தொடுகையில் அவன் உடலில் ஒடிய சிலிர்ப்பை ராதிகாவால் உணர முடிந்தது..

"பிள்ளை வரம் கேட்டு இது அத்தனையையும் சாதிச்சிட்ட ராது.. நீ கெட்டிக்காரிடி..."

இல்லையென்றால் இவன் என்னைத் தொட்டிருக்க மாட்டான் என்று சொல்கிறானோ என்று மனம் குமைந்தாள் ராதிகா..

"என்னமோ போடி ராதிகா... நீ மட்டும் வாய் திறந்து இப்படியொரு வரத்தைக் கேட்கலைன்னா.. காலம் முழுவதும் நீயும்.. நானும் பிரிஞ்சே நின்னுருப்போம்..."

அவன் வார்த்தைகளின் வீரியம் தாங்காமல் கண்களை இறுக மூடிக் கொண்டாள் ராதிகா.. தாள மாட்டாத அவளது உணர்வுகள் அவளின் இமையோரமாக கண்ணீராக பொங்கி வழிந்தது..

அவன் மடி நனைந்த ஈரத்தில் அவள் விழிநீரைத் துடைத்தவன் அதட்டினான்..

"எதுக்காகடி இப்பப் போய் அழுது வைக்கிற..? பழசையெல்லாம் நினைச்சு அழ இதுதான் நேரமா..? வயித்திலே பிள்ளையை வைச்சுக்கிட்டு அழுகிறா பாரு.. இந்த மாதிரி சமயத்திலே உன்னை அறைஞ்சு வைக்க மாட்டேங்கிற தைரியமா..?"

முரளியின் கோபத்தில் ராதிகா கண்ணீரை கட்டுப் படுத்திக் கொண்டாள்...

"வீடேசந்தோசம் கொண்டாடுது.. இவ மட்டும் கண்ணீரை விட்டுக்கிட்டு இருக்கா.. அழுக எதுடா

சாக்குன்னு காத்திருப்பயா..? உம்முன்னு முகத்தை வைச்சுக்கிட்டு இருக்காம சிரிச்ச முகமாய் இருடி.."

"ம்ம்ம்.."

"இதையும் உம் முன்னுதான் சொல்லனுமா..? ஏன்.. மகராணி வாயைத்திறந்து.. சரின்னு சொல்ல மாட்டிங்களா..?"

"சரி.."

"அதைச் சிரிச்சுக்கிட்டே சொல்ல மாட்டிங்களா..?"

ராதிகா லேசாக இதழ் விரித்துச் சிரித்தாள்.. அந்தச் சிரிப்பில் மயங்கிப் போன முரளி.. அவள் இதழ் மீது முத்தத்தை பதித்தான்..

'இந்த முத்தம் எதற்காக..? இவன் மகனைப் பெற்றுக் கொடுக்கப் போகிறேனே.. அதற்காகவா..?'

என்னதான் போராடினாலும் இந்த எண்ணம் மனதில் சூழ்வதை அவளால் கட்டுப் படுத்தவே முடியவில்லை.. அவள் இப்படி நினைத்துக் கொண்டிருக்க அவனோ வேறு ஒன்றை சொல்லி வைத்தான்..

"பாருடி.. இத்தனை நாளா பிள்ளைக்காக என்கிட்டக் கொஞ்சிக் குழாவிட்டு.. நினைச்சது கிடைச்சதும் என்னைக் கண்டுக்காம பட்டினி போட்டேன்னு வையய்யி.. எனக்கு கொலைவெறி கிளம்பிடும்.. சொல்லிட்டேன்.. பார்த்து நடந்தக்க.."

ராதிகாவின் மனதில் இன்னமும் அதிகமாக சோர்வு குழத் தொடங்குவதை புரிந்து கொள்ளாமல் அவள் கன்னத்தில் தட்டினான் அவன்..

இவன் இப்படியேதான் பட்டம் கட்டுவான் என்ற சோர்வு அவளுக்குள் கிளம்பியது..

குழந்தைக்காகத்தான் அவனிடம் கொஞ்சி குழாவினாள் என்றே சொல்லப் போகிறான்.. காலம் முழுவதும் இந்த வார்த்தைகள் அவளைத் துரத்தப் போகின்றன என்ற நினைவில் அவள் கண்கள் கலங்க ஆரம்பித்தன.. அதற்கும் அவன் திட்டுவான் என்ற நினைவில் இமை கொட்டி அந்தக் கண்ணீரை அடக்கிக் கொண்டாள் ராதிகா...

"கீழே போகனும்.."

மாலையில் முரளி கடிந்து கொண்டும் பிடிவாதமாக படியிறங்கி வந்தாள்.. வீட்டிலிலுள்ள வேலையாள்கள் அவளைச் சூழ்ந்து கொண்டார்கள்.. அவர்கள் முகத்தில் நிலவிய உண்மையான சந்தோசத்தில் ராதிகாவின் மனதிலிருந்த சோர்வு பறந்தோடியது...

"அப்பவே நான் நினைச்சேன்ம்மா.. உங்க முகமெல்லாம் பளபளன்னு இருந்துச்சு.. அம்மாவுக்கு மசக்கையா இருக்குமோன்னு மனசுக்குள்ள நினைப்பு வந்துச்சு.." என்று காவேரி சொல்ல.. மீனாட்சி நொடித்தாள்-

"அடேங்கப்பா.. இவங்க பாட்டி வைத்தியம் சொல்கிறவங்க.. உடனே கண்டுபிடிச்சிட்டாங்க.. போடி.. போ.. அம்மா மூஞ்சி எப்பயுமே பளபளன்னுதான் இருக்கும்.. உன்னப் போல அழுது வடிஞ்சுக்கிட்டா இருக்கும்..? நீங்க இங்க பாருங்கம்மா..."

காவேரியின் பேச்சை மீனாட்சி கிண்டல் பண்ணியதில் அவள் கொதித்த விட்டாள்..

"ஆமாம்மா.. இவ முகத்தையே பார்த்துக்கிட்டு இருங்க.. நீங்க மயக்கம் போட்டு விழுந்ததுக்கு காய்ச்சல்தான் காரணமாயிருக்கும்ன்னு சொன்ன அறிவுக்கடல்தான இவ.."

அவ்வளவுதான்.. மேகலாவின் வார்த்தையைக் கேட்டு விட்ட மனத்தாங்கலில் சற்று வாய் மூடியிருந்த மீனாட்சி கச்சை கட்டிக் கொண்டு சண்டைக்கு கிளம்பி விட்டாள்...

"ஏண்டி.. என் அறிவுக்கென்ன குறைச்சல்..?"

"ஊம்..? அது இல்லாததுதான் குறைச்சல்.."

"உனக்கு மட்டும் அது ரொம்ப இருக்கோ.. கையெழுத்து போடத் தெரியாத அறிவுக்கடலெல்லாம் அறிவைப் பத்திப் போசுது.."

"ஆமாண்டி.. நான் கைநாட்டுத்தான்.. நீ என்ன நாட்டு..? பெரிசா பட்டம் வாங்கி கலெக்டர் வேலை

பார்க்கறியோ.. நீ ஒன்னாங்கிளாசிலேயே ஒடி வந்தவ உன்னப் பத்தி எனக்குத் தெரியாதா..?"

"நான் கலெக்டர் வேலை பார்க்கலைதான்..அம்மா என்ன வேலை பார்க்கறிங்களாம்..? கலெக்டர் வேலையா இல்ல.. கரண்டி பிடிக்கிற வேலையா..?"

"எதப் பத்தி வேணும்னாலும் பேசு.. ஆனா கரண்டியப் பத்தி மட்டும் பேசாதே.."

"அது எதுக்காம்..? பேசினா.. கரண்டியிலேயே மண்டையில ஒரு போடு போட்டிருவயோ..?"

"உன் வயித்திலே போட்டிருவேன்.. பாருங்கம்மா இவளுக்கு இனிமே தண்ணியும் கஞ்சியும்தான் ஆக்கி போடப் போறேன்.. நீங்க யாரும் என்னக் குத்தம் சொல்லக் கூடாது.."

காவேரியின் திடீர் முடிவைக் கேட்ட ராதிகா சிரித்தாள்..

"அவரசப் பட்டு எந்த முடிவுக்கும் வந்துராதே காவேரி.. பாவம்.. மீனாட்சிக்கு வகை தொகையாப் சாப்பிட்டுப் பழக்கம்.. அவ வயிற்றைக் காயப் போட்டிராதே"

"அப்படின்னா வாயை அடக்கிக்கிட்டில்ல இருக்கனும்..?"

"அவளாலே அது முடியுமா..? நீயும்தான் அவளாக செய்ய முடிஞ்ச காரியத்தைச் சொல்ல வேணாமோ.. ஆமா.. அத்தையை எங்கே காணோம்.."

ராதிகா கேட்டவுடன் காவேரியை முறைத்துக் கொண்டிருந்த மீனாட்சி.. உற்சாகமாக பதில் சொல்ல ஆரம்பித்தாள்..

"ஏம்மா.. இத்தன நாளா.. கோவிலுக்கு சாமி கும்பிடப் போனவங்கள சாமியக் கும்பிட விடாம கேள்வி கேட்டு நோகடிச்சவங்களுக்கு பதிலச் சொல்ல வேணாமா..? அதுக்காகத்தான் அம்மா பொழுதிருக்கப்பவே கோவில் பக்கம் போயிட்டாங்க.."

"என்ன கேள்வி..? என்ன பதில்..?"

"என்னாம்மா.. இப்படிக் கேட்டுப்புட்டிங்க.. எனக்குப் பேரன் பிறந்தாச்சு.. மகளுக்குப் பேரன் பிறந்தாச்சு.. உனக்கு இன்னும் பேரப்புள்ள வரலையான்னு கேள்வி கேட்ட வித்தாரக்கள்ளிகளோட வாயை அடைக்க வேணாமா..?"

மீனாட்சியின் பேச்சுக்கு பதில் சொல்ல முடியாத சங்கடத்தோடு ராதிகா மௌனமானாள்..

"அதான்.. கேட்டுக்கங்கடி பெண்ணரசிகளா.. எனக்குப் பேரப்புள்ள வரப்போகுதுன்னு அத்தனை பொம்பளைகிட்டயும் சொல்லிட்டு வர அம்மா போயிருக்காங்க.."

மீனாட்சியின் வாய் மொழிப்படி.. உற்சாகமாக திரும்பிவந்தாள் மேகலா.. மருமகளைக் கண்டதும்.. அவள் நெற்றியில் குங்குமப் பிரசாதத்தை இட்டு விட்டாள்..

கோவிலில் வந்திருந்த பெண்களிடம் இந்த சந்தோசத்தை சொல்லி விட்ட சந்தோசத்தை மீனாட்சியிடம் பகிர்ந்து கொண்டாள்.. வளைகாப்பிற்கு யார்.. யாரை அழைக்கலாம் என்ற ஆலோசனையை அப்போதே மகனிடம் கேட்டாள்.

தாயினும் சாலப் பரியும் மாமியாரின் அந்த அதீத உற்சாகத்தில் ராதிகாவின் மனதிலிருந்த கொஞ்ச நஞ்ச மனத்தாங்கலும் மறைந்து விட்டது.

புலர்கின்ற பொழுதை..
சேவல் மட்டும் எப்படி அறிந்தது..?

"கோவிலுக்குப் போயிட்டு வரலாமா ராதிகா..?"

முரளி அழைத்ததும் மறுக்காமல் கிளம்பினாள் ராதிகா.. பெருமாள் கோவிலுக்குப் போவதற்கு முன்னால்.. அருவிக் கரையிலிருந்த பிள்ளையார் கோவிலுக்கு அழைத்துச் சென்றான் முரளி..

"இதுதானேடி.. உன்னையும்.. என்னையும் சேர்த்து வைச்ச தெய்வம்.. .முழுமுதற்கடவுள்.. விநாயகப் பொருமான்.. இவரைக் கும்பிட்டுக்க.. அதுக்கப்புறம் இவரோட மாமனைக் கும்பிடப் போய்க்கலாம்.."

தனித்தனியே அந்த கணபதியிடம் முறையிட்டுக் கொண்டிருந்த அந்தத் தம்பதிகள் இருவரும் சேர்ந்து நின்று கணபதியை வணங்கினார்கள்..

அருவிக் கரையில் அமர்ந்தபோது ராதிகா லேசாக தடுமாற.. பதறிப்போய் அவளைத் தாங்கிப் பிடித்தான் முரளி..

"பார்த்து நடக்க மாட்டயாடி.."

அவனது அக்கறை அவள் மனதிற்கு இதத்தைத் தந்தது..

பெருமாள் கோவிலுக்குப் போனபோது அங்கே கூட்டமிருந்தது.. முரளியின் அருகே நின்ற ராதிகாவைப் பார்த்த பெண்கள் கூட்டம் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டது..

'இங்கே எதிலயும் பிரைவஸி இருக்காது...'

ராதிகா நினைத்தக் கொண்டாள்.. அவள் தாய்மையடைந்திருக்கும் செய்தி... அந்த வட்டாரம் முழுவதும் பரவியிருக்கும் என்ற நினைவில் அவள் முகத்தில் செம்மை படர்ந்தது.. பெருமாளையும்.. தாயாரையும் சேவித்து விட்டு அவர்கள் திரும்பிய போது.. ஹேமா எதிரே வந்து கொண்டிருந்தாள்..

"ராது.. " அவள் பரவசத்துடன் அழைத்தபோது.. முரளியின் கோபத்துக்கு அஞ்சியவளாக ராதிகா அவன் முகம் பார்த்தாள்..

"உன் சிநேகிதி வந்திருக்காப்புலயில்ல.. பேசேன்"
முரளியின் வார்த்தைகளில் அனுமதி மறைந்திருந்தது.

ராதிகா முகம் மலர்ந்து போனாள்.. ஹேமா
குழந்தை ராதிகாவிடம் தாவினான்.. அதைத் தூக்
கொண்ட ராதிகாவின் முகத்தில் குழந்தைக்கான ஏக்
இல்லாததைக் கவனித்த முரளியின் மனம் கனிந்தது.

முன்பொரு முறை.. அத்தி பூத்தாற்போல ராதிகா
இதே போலக் கோவிலுக்கு அழைத்துக் கொண்
வந்திருந்தான.. அப்போதும் இதே போலதான் ஹே
குழந்தையுடன் வந்திருந்தாள் குழந்தையும் ராதிகாவி
தாவியது.. அதைத் தூக்கிக் கொஞ்சிய ராதிகாவி
முகத்தில் குழந்தைக்கான ஏக்கம் அப்பட்டமாகப் பொங்
வழிந்தது..

'பூவாகி காயாகி
கனிந்த மரம் ஒன்று...
பூக்காமல் காய்க்காமல்
இருந்த மரம் ஒன்று...'

அன்றைய இரவில் பால்கனியின் தனிமையி
அவள் பாடிய பாடல் முரளியின் நெஞ்சை வாள்கொண்
அறுத்தது...

இன்று அப்படியில்லாமல் பிள்ளைச் செல்வத்
அள்ளி வழங்கி விட்ட பெருமாளிற்கு மனதிற்குள் நன்
சொல்லிக் கொண்டான் முரளி...

அவர்கள் திரும்பி வந்த போது வாசலிலேயே மேகலா காத்திருந்தாள்... முரளி புருவங்களை உயர்த்தியபடி காரிலிருந்து இறங்கினான்...

"என்னம்மா...?"

"ஏண்டா.. பிள்ளைத்தாய்ச்சிப் பொண்ணைக் கூப்பிட்டுக்கிட்டுப் போயிருக்க.. நீ திரும்பி வருகிற வரைக்கும் பதட்டமா இருக்காதா..?"

மேகலாவின் பார்வை ராதிகாவை அளக்க.. முரளிக்கு சுர்ரென்று கோபம் வந்து விட்டது..

"அவ என் பெண்டாட்டி..! அந்த நினைப்பு மனசில இருக்கில்ல..?"

"அடேங்கப்பா... எதுக்குடா உனக்கு இம்புட்டுக் கோபம்வருது..?"

"பின்னே என்னம்மா.. என் பெண்டாட்டியை வெளியில கூப்பிட்டுக்கிட்டுப் போக எனக்கு உரிமையில்லையா...?"

"யாருடா இவன்..."

"உங்க மகன்..! மருமக நினைப்பில அதுவும் மறந்து போயிருச்சா...?"

முரளியின் கோபத்தை மேகலா பொருட்படுத்தாமல் செல்லமாக அவன் முதுகில் ஒரு போடு போட்டாள்..

"பச்சைப்புள்ள மாதிரி பேசறான் பாரு... அதிர்ந்து கூட நடக்கக் கூடாதுடா முரளி..."

அன்றைய இரவில் ராதிகாவிடம் புகைந்தான் முர

"வரவர.. உன்னைத் தொட்டுப் பேசக் முடியலைடி.."

இரவு நேரத்தின் குளுமையில்.. முரளி பேச்சில் ராதிகாவின் மனதில் தென்றலடித்து பிடிவாதக்காரச் சிறுவனாக முகத்தைத் தூக்கிவைத் கொண்டிருந்தவனின் முடிக்குள் கைகளை அ விட்டாள்...

"இப்படி என்னை யாரும் தொட்டதில் தெரியுமா..." முரளிகூற.. முரளியின் பேச்சில் சிரித் ராதிகா...

"இவரை மட்டும் யாரும் தொடக்கூடாதாம்.. இவர் மட்டும் என்னைத் தொட்டுப் பேசனுமாம்..."

அவளது சரஸத்தில் கிறங்கிப் போனவனாக பக்கமாகத் திரும்பிப் படுத்தான் முரளி... அவன் ராதிகாவை அரவணைத்துக் கொண்டன...

"என் முடியைக் கலைக்கிறதை நான் சொன் இந்த தைரியம் யாருக்கும் வந்ததில்ல... எனக்கு த கலைந்தா பிடிக்காது.. அம்மா சில நேரம் தல தடவிக் கொடுப்பாங்க... அதுக்கே எனக்கு வந்துரும்..."

"ம்ஹீம்... உங்க கோபத்தைப் பத்தி எங்கிட்ட சொல்லனுமா..? நீங்கதான் மூக்குக்கு மேல கோபத்தை வைச்சுக்கிட்டு இருக்கிறதுர்வாச முனிவராச்சே..."

"நீ எப்படி வேணும்னாலும் என்னைக் கூப்பிடு... ஆனா முனிவர்ன்னு மட்டும் சொல்லாதே... நானே இத்தனை நாள் கழிச்சு.. இப்பத்தான் பெண்டாட்டியை வாசம் பிடிக்க ஆரம்பிச்சிருக்கேன்.. இப்பப் போய் முனிவர் அது இதுன்னு சொல்லி வைச்ச... அறைஞ்சு பல்லைக் கழட்டிருவேன்..."

ராதிகாவின் தோள் தடவியபடி அவன் சொல்ல...

மனதிற்குள் நகைத்துக் கொண்டாள் ராதிகா...

'அறைகிற ஆளைப் பார்...'

ஆனாலும்.. பயப்படுவதைப் போல பாவனையும் செய்து வைத்தாள்...

"அடிக்கப் போறிங்களா..? அப்புறமாய் காய்ச்சல் வந்துருமே.. சாயங்காலம்தான் மீனாட்சி சொன்னா..?"

"என்னத்தைச் சொன்னா..?"

அந்த இரவு நேரத்தில் சிருங்காரமாகப் பேசாமல்... மீனாட்சியைப் பற்றி ராதிகா பேசியதில் முரளி எரிச்சல் பட்டான்...

"வேற என்னத்தைச் சொல்லுவா..? இப்பல்லாம் அம்மாவுக்கு காய்ச்சலே வர்றதில்லைன்னு சொன்னா... அத்தை கூட அவளைத் திட்டினாங்க..."

"அவங்க என்னத்தைத் திட்டினாங்க..?"

"ஏண்டி... இப்படியெல்லாம் பேசற..? நாளே வயிற்றிலே நெருப்பைக் கட்டிக்கிட்டு.. முரளிக்கு கோபம் வந்துடக் கூடாதுன்னு ஊரில இருக்கிற சாமிக் கிட்டயெல்லாம் வேண்டிக்கிட்டு இருக்கேன்.. இதில நீ வேற பீதியைக் கிளப்பறியேன்னு அவளைத் திட்டித் தீர்த்தாங்க..."

"ஆக மொத்தம் உன்னை அடிச்சுக் காய்ச்சலில் விழ வைக்கிறதுதான் என்னோட வேலைன்னு ஒட்டு மொத்த குடும்பமே முடிவு பண்ணிட்டிங்க..."

முரளியின் குரலில் கனன்ற கோபத்தை 'களுக்' கென்று ரசித்துச் சரித்தாள் ராதிகா...

"சிரிக்காதேடி... உன்னை வெளியில கூப்பிட்டுக்கிட்டுப் போனா திரும்பி வர்ற வரைக்கும்... வாசலிலேயே.. நம்பியாரைப் போலக் கையைப் பிசைஞ்சுக்கிட்டு அம்மா நிற்கிறாங்களே... அவங்க மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்காங்க...?"

"அவங்க நினைப்பைப் பத்தி என்னிடம் கேட்டா... அதைப்பத்தி எனக்கென்ன தெரியும்..?"

"ஓஹோ... உன் மனசில என்ன நினைச்சுக்கிட்டு இருக்கே..."

முரளி எரிச்சலுடன் கேட்க... ராதிகா நகர்ந்து... அவனை ஒட்டிப் படுத்துக் கொண்டாள்...

அவளின் அந்த நெருக்கத்தில் முரளியின் எரிச்சல் தனிய ஆரம்பித்தது...

அவனின் முடியை விருப்பத்துடன் கலைத்து விட்டபடி... ராதிகா மெல்லிய குரலில் சொன்னாள்...

"உங்களைத்தான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்..."

காதோடு ஒலித்த அவளின் கிசுகிசுப்பான குரலில் போதையேறிப் போனவனாக... முரளி அவளை ஆக்ரமித்தான்.. அவனின் முரட்டுத்தனமில்லாத... ஆனால் வேகம் குறைவில்லாத அணைப்பில் கிறங்கிப் போனவளாக... ராதிகா அவனது முன்னுச்சி முடியை மீண்டும் கலைத்தாள்...

"நீ இதையே ஒரு பிழைப்பாய் வைச்சிருக்கடி..." அவன் கோபமில்லாத குரலில் சொன்னான்...

"அப்படித்தான் செய்வேன்... அதுக்கு இப்ப என்னாங்கறிங்க...?" ராதிகா சண்டைக் கோழியானாள்..

"அடேங்கப்பா... சண்டைக்கு அழைக்கிற... ரொம்பத் தைரியம்தான்... என் அக்காவைக் கூட.. என் தலைமுடியைக் கோத நான் அனுமதிச்சதில்ல தெரியுமா..?"

அவள் கைகளை விலக்காமல்... அவள் விரல்களுக்கு தடை சொல்லாமல்... தலைமுடியை அவளிடம் ஒப்படைத்தவனாக அவன் பேசியபோது... ராதிகா அவன் முடியை இறுக்கிப் பிடித்தாள்...

"என்னடி..?"

"சும்மா.. அக்கா.. சொக்கா... அம்மா... ஆட்டுக்குட்டின்னு எதையாவது பேசிக்கிட்டு இருந்தீங்கன்னா எனக்குக் கோபம் வந்திரும்..."

"இதைப்பாருடா... என் பெண்டாட்டி கோவிச்சுக்கிறா... கோபம் வந்தா என்னடி செய்வ...?"

"கடிச்சு வைச்சிருவேன்..."

மிக அருகில் தெரிந்த முரளியின் கன்னத்தை ராதிகா கடித்துவிட பாலமுரளிக்குள் இன்பம் கிளர்ந்து எழுந்தது... அவள் தோளை வளைத்திருந்த அவனின் கைகள் அவளை இறுக்கிக் கொள்ள... ராதிகா அவனுக்குள் புதைந்தாள்...

"உனக்கு கோபம் வந்தா... இப்படித்தான் தண்டிப்பியா...?"

அவன் குரலில் வழிந்தோடிய போதை அவளை நனைத்தது...

"ஆமாம்... அப்படித்தான்.. நீங்க எனக்கு மட்டும் தான் சொந்தம்..."

அவள் குரலில் வழிந்தோடிய உரிமையில் அவன் கிறங்கிப் போனான்... அவள் கொண்டாடிய உரிமையில் அவன் மனம் சிறகடித்துப் பறந்தது...

"இல்லேன்னு நான் சொன்னேனா...?"

"உங்களை என்ன வேணும்னாலும் செய்வேன்..!

"எடுத்துக்க.. நான் தடுத்தேனா...?"

"நீங்க முழுசாவே எனக்குச் சொந்தம்கிறப்ப முடியைக் கோதக் கூடாதுன்னு நீங்க எப்படிச் சொல்லலாம்...?"

"இனிமேப்பட்டு.. அதை நான் சொன்னா... ஏன்னு கேளுடி..."

அவன்... அவளிடம் தன்னை ஒப்புக் கொடுத்தான்.. உரிமைக்காரியான அவள்.. தனது உடமைப் பொருளான அவனை.. அவனது சொல் பிரகாரம் எடுத்துக் கொண்டாள்... வெள்ளம் அணையுடைத்தது... பொங்கிப் பெருகிய அருவியாய்... அவன் மீதான காதல் உணர்வுகளை அவள் கொட்ட... அவன் அதில் மூச்சுத் திணறிப் போனான்... தடைகளில்லாத ஓட்டம்... அவளுடையதாக இருந்தது... அதில் முரளி கடமையைக் காணவில்லை... காதலைக் கண்டான்... அந்த இரவு முடிந்து... பொழுது விடிந்தபோது... அவன் முழுமையாக அவளுக்குச் சொந்தமானவனாக ஆகிப் போயிருந்தான்..

வழக்கம் போல செல் போனை காதுக்குக் கொடுத்தபடி இறங்கி வந்த மகனிடம் தீபாதரனைத் தட்டை நீட்டினாள் மேகலா...

கற்பூர ஜோதியைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டவனின் முகத்தில் என்றுமில்லாத திருப்தியைக் கண்டவளின் கண்கள் கேள்வியைக் காட்டின... தாயின்

முகத்தைக் கவனித்தவன்.. லேசாகச் சிரிக்க... அந்தச் சிரிப்பில் மனம் நிறைந்து விட்டவளாக மேகலா பூஜையறைக்குள் போய்விட்டாள்...

டைனிங் டேபிளில் தட்டை வைத்துக் கொண்டிருந்த ராதிகா.. நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்... அவர்களின் பின்னிக் கொண்ட பார்வையில் பொதிந்திருந்த அந்தரங்கத்தில் அவர்களின் மனங்கள் சிலிர்த்தன...



சொத்தெல்லாம் வந்தவளின்..
சொத்தாகவே அவனாகிப் போனான்...

நாச்சியப்பன் அன்று வெகு சந்தோசமாக இருந்தான்... அவனின் வெகு நாளைய கனவு பலிக்கப் போகும் உற்சாகத்தில் இருந்தான்... சன்னமாக விசிலடித்தபடி வாப்பில் நடந்து வந்து கொண்டிருந்தவனை பார்த்த மருதமுத்து... தலையில் முண்டாசாகக் கட்டியிருந்த துண்டை அவிழ்த்துத் தோளில் போட்டபடி அவனிடம் பேச்சுக் கொடுத்தான்...

"என்னலே.. நாச்சியப்பா.. படு குஷியா இருக்கிறாப்புல தோணுதே..."

"ஏன்லே.. அது உன் கண்ணை உறுத்துதா..?"

"ஏன் உறுத்தப்படாதோ..?"

"ஆமாம்லே... உன் காலுக்கு கீழே வழிதப்பிப் போற வாய்க்காத் தண்ணிய.. ஒழுங்கா பாத்திப்பக்கம் திருப்பனுமுன்னு உன் மனசுக்கு உறுத்தாதுலே... வரப்பில கால் வைச்சு.. வழியோட போறவன வம்புக்கு இழுக்கலைன்னாத்தான் உன் மனசுக்கு உறுத்தும்.. இருலே.. நான் பெரிய வீட்டுக்குத்தான் போறேன்.. நீ தண்ணி பாய்ச்சற லட்சணத்தை அங்கே பத்த வைச்சுட்டு வாரேன்..."

அப்போதுதான் தன் பாதங்களை நனைக்கும் நீரின் தொடு உணர்வை உணர்ந்தான் மருதமுத்து... அவசரமாக குனிந்து பார்த்தான்... வாய்க்கால் தண்ணீர் பாத்திக்குள் போகாமல் தன் போக்கில் பாய்ந்து பரவிக் கொண்டிருந்தது...

அவசரமாக... தன் தோளில் போட்டிருந்த மண்வெட்டியை இறக்கி... வரப்பை வெட்டி வாய்க்கால் தண்ணீரை சரியான திசையில் திருப்பி விட்டான் மருதமுத்து...

"இத முதல்லேயே செய்யறதுக்கென்ன..? மம்பட்டியக் கையில புடிக்கிறத விட்டுட்டு தோளில போட்டிருந்தா இந்தக்கதிதான்..."

நாச்சியப்பன் கேலி பேசினான்.. தண்ணீரை சரியான பாதையில் திருப்பி விட்டிருந்த மருதமுத்து தலை நிமிர்ந்தான்...

'என்னைக்குமில்லாம இன்னைக்கு பயபுள்ள படு தெனாவெட்டா இருக்கானே... என்ன சங்கதியா இருக்கும்...?'

அதைத் தெரிந்து கொள்ளாவிட்டால் அவன் தலை வெடித்து விடாதா..?

"அத நீ சொல்லி நான் செய்யனும்னு இருந்திருக்கு நாச்சியப்பா... தண்ணிக் கதையை விடு... அதைத்தான் திருப்ப வேண்டிய திசையில திருப்பியாச்சே.. உன் கதைக்கு வா..."

"என் கதையில என்னலே இருக்கு..?"

இப்படிக் கேட்ட நாச்சியப்பனின் முகத்தில் தெரிந்த ஒளிர்வே எதுவோ இருக்கிறது என்பதை உணர்த்த.. அதை அறிந்து கொள்ளும் ஆவல் மருதமுத்துக்குள் அதிகமானது...

"சும்மா சொல்லுலே... காலங்கார்த்தாலேயே பெரிய வீட்டுப்பக்கம் நடயக் கட்டறயே.. என்ன விசேசம்...?"

"ஏன்.. நீ விடிஞ்சும்... விடியாம அங்கே போயி நின்னதில்லையாக்கும்...?"

"சோலி இருந்துச்சு போயிருக்கேன்..."

"எனக்கு மட்டும் சோலிக்கழுதை இல்லையா...? நானும் பெரிய வீட்டுத் தோட்டத்தைப் பார்த்துக்கிறவன் தான்..."

"நான் பார்க்கலையா...? நீ மட்டும்தான் பார்த்தியா..?"

"தெரியுதில்ல... ரெண்டு பேரும் கூட்டுப் போட்டுக்கிட்டு பார்க்கிற சோலி அங்கே இருக்கில்ல... அப்புறம் என்னத்துக்காக நீ மட்டும் தனியாப் போகிறயாம்..?"

"ம்ம்.. என்ன ஐயாவே வரச்சொல்லியிருக்காரு மருது..."

நாச்சியப்பனின் கண்சிமிட்டலில் மருதமுத்து ஆச்சரியப்பட்டுப் போனான்...

"ஏன்லே... ஏய்ய்.. நிசமாத்தான் சொல்றயா...?"

"பின்ன.. பொய்யா சொல்றேன்..?"

"ஐயாவப் பார்க்கனுமுன்னா நாமாத்தான் போகனும்.. ஐயாவே வரச் சொன்னாருன்னு சொல்றியே.. எதுக்காம்...?"

"எல்லாம் சுப காரியம்தான்..."

"நீ தோப்பையும்.. துரவையும் கட்டிக்கிட்டு இருக்கிறவன்.. உன்கிட்ட என்னத்தைப் பேசப்போறாரு.."

"இத்தன நாளா தோப்பையும் துரவையும் கட்டிக்கிட்டு இருந்தேன்ல.. அதில மகிழ்ந்து போயி.. மீனாட்சியையும் சேர்த்து கட்டிக்கன்னு பேசப் போறாரு..."

"என்னது... ?"

மருதமுத்துவின் கையிலிருந்த மண்வெட்டி நழுவி விழுந்து.. அதில் சந்தோசப் பட்டுப் போனான் நாச்சியப்பன்..

மீனாட்சியைத் திருமணம் செய்து கொள்ளப் போகும் சந்தோசத்தை விட.. அதில் மருதமுத்துவை ஜெயித்து விட்ட சந்தோசம்தான் அவனுக்கு அதிகமாக இருந்தது..

நீண்ட நெடும் நாள்களாகவே மீனாட்சியின் மீது.. மருதமுத்தும் ஒரு கண்ணை வைத்திருந்ததை நாச்சியப்பன் நன்கு அறிவான்... இனம்.. இனத்தை அறியாதா..? தோப்பிலிருக்கும் இளநீகளையெல்லாம் மீனாட்சியின் காலடியில் நாச்சியப்பன் போடும் போது.. மருதமுத்து வேர்கடலையை அவளிடம் நீட்டுவான்...

மாங்காய்களையும்.. கொய்யாக்காய்களையும்.. மீனாட்சிக்கு நாச்சியப்பன் சமர்ப்பித்தால்.. மருதமுத்துவுக்கு கொடுக்க.. வெள்ளரிக் காயும்.. திராட்சைக் கொத்தும் இருந்தன...

இரண்டு பேரின் சமர்ப்பணத்தையும் மீனாட்சி திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள்...

"யோவ்.. இத்தனையும் உன் தோப்பில விளைஞ்சதா..?" என்று நாச்சியப்பனிடம் கேட்பாள்..

"உன் வயலிலே பயிர் செஞ்சயோ..?" என்ற மருதமுத்துவை முறைப்பாள்...

"யாரு வீட்டுச் சொத்த.. யாரு தானம் பண்றது..? ஊரான் வீட்டு நெய்யே.. என் பொண்டாட்டி கையேன்னு சொல்கிறாப்புல... ஐயா வீட்டு தோப்பிலயும்.. வயல்லேயும் விளைஞ்சதை.. அள்ளிக் கொடுக்கறியாக்கும்.. இதயெல்லாம் நீ கொடுத்துத்தான் நான் வாங்கிக்கனுமா..? நானா பறிச்சுத் தின்ன எனக்கு உரிமையில்லையா..? பெரியம்மா கையாலே சோறு சாப்பிட்டு வளந்தவய்யா நானு.. இங்கே விளஞ்சதத் திங்க எனக்கில்லாத உரிமை உனக்குக்கூட இல்ல... ஒடியே போயிரு..."

மீனாட்சி அவர்கள் இருவரிடமும் தனித்தனியே திட்டிப் பேசி அனுப்பினாலும்.. ஒரே திட்டலைத்தான் திட்டுவாள்.. ஒருவர் வாங்கும் திட்டை மற்றவர் மறைந்திருந்து கேட்டுவிட்டு..

'அப்பாடி... எனக்கொன்னும் அதிகமா திட்டு விழலை..' என்று ஆறுதல் பட்டுக் கொள்வார்கள்...

என்ன ஒன்று.. நாச்சியப்பனைத் திட்டும் போது.. அவள் முகத்தில் கேலிப் புன்னகை தவழும்... இடக்குப் பேச்சு கொடி கட்டிப் பறக்கும்.. அதே பேச்சை மருதமுத்துவிடம் பேசும் போது மட்டும்.. அவள் முகத்தில் கடுமை தவழும்.. கோபப் பேச்சு.. கொடிகட்டிப் பறக்கும்..

இந்த வேறுபாட்டை நாச்சியப்பன் அறிந்திருந்தானோ.. இல்லையோ.. மருதமுத்து.. மிக நன்றாக அறிந்திருந்தான்.. அப்போதெல்லாம் அவன் மனதில் பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரியும்...

'அவன் கிட்டப் பேசினா மட்டும் அவ வாயிலயிருந்து விகடமா வெளியே வந்து கொட்டுது.. என்கிட்டப் பேசினா மட்டும்.. வில்லங்கமா வெடிச்சுத் தள்ளரா...'

அப்படியாகப்பட்ட மருதமுத்து.. நாச்சியப்பனுக்கும் மீனாட்சிக்குமான திருமணப் பேச்சில் குதூகலம் கொண்டாடுவானா என்ன..?

"அப்படின்னு உனக்கு யாரு சொன்னது...?"

"ஐயாதான் சொன்னாரு..."

"அவரு எதைச் சொன்னாரோ... நீ எதை எடுத்துக்கிட்டியோ..."

"ஏன்லே.. வேறு எதில வேணும்னாலும் வே அர்த்தத்த எடுத்துக்கலாம்... கல்யாணப் பேச்சில போ எந்த அர்த்தத்த எடுத்துக்கச் சொல்ற...?"

"இருலே... நானும் வாரேன்..."

"அது என்ன சோலிக் கழுதக்கி..? இங்கே தண்ணி பாய்ச்சறத யாரு பாக்குறது...?"

மருதமுத்தவை முடிந்தவரை கடுப்படித்து விட்டு பாலமுரளியின் வீட்டை நோக்கி நடையைக் கட்டினான் நாச்சியப்பன்...

ஹாலில் அமர்ந்திருந்த பாலமுரளி.. கால்மேல் கால் போட்டு தோரணையாக சாய்ந்து.. யாருடனோ செல்போனில் பேசிக் கொண்டிருந்தான்...

'கர்ண மகராசனுக்கு கவசக் குண்டலமுன்னா.. எங்க ஐயாவுக்கு செல்போனு...'

நாச்சியப்பன் கைகளைக் கட்டியபடி மரியாதையுடன் பாலமுரளியின் முன்னால் போய் நின்றான்... அவன் விழிகள் நாலாபக்கமும் மீனாட்சியைத் தேடித் துழாவின.. அவள் தென்படவில்லை... மாறாக.. பாலமுரளியின் எதிரேயிருந்த சோபாவில் அமர்ந்திருந்த மேகலாதான் தென்பட்டாள்.. நாச்சியப்பனின் தேடும் கண்பார்வையைக் கண்டு கொண்ட சிரிப்பு அவள் கண்களில் தென்பட்டது...

செல்போனை பேசி முடித்த பாலமுரளி... அதை அருகில் வைத்துவிட்டு.. நாச்சியப்பனை நிமிர்ந்து பார்த்தான்.. அவனின் துளைக்கும் பார்வையில் நாச்சியப்பனின் பவ்யம் கூடியது...

"என்ன நாச்சியப்பா..."

"ஐயா..!"

"அம்மா என்னென்னவோ சொல்றாங்களே.. அது நிஜமா...?"

"எதைப் பத்திங்கய்யா..?"

"நீ மீனாட்சி கல்யாணத்துக்கு குறுக்கே நிற்கறியாமே..."

"அது அப்படியில்லைங்கய்யா..."

"வேற எப்படி நாச்சியப்பா..?"

"மீனாட்சி கல்யாணத்தில்.. அவ பக்கத்தில நி
நிற்கனும்னு ஆசைப்படறேன்ங்கய்யா..."

பாலமுரளி... நாச்சியப்பனின் வினயமான பே
அயர்ந்தே போனான்... நாச்சியப்பன்கூட அத்த
விவரமாகப் பேசக்கூடும் என்று அதுநாள்
அவனுக்குத் தெரியாமலிருந்தது...

'இதப் பாருடா.. இந்தக் காதல் மனுசக் க
எப்படியெல்லாம் மாத்தித் தொலைக்குதுன்னு... நே
வரைக்கும் ஒத்த வார்த்தய இவன் உருப்படியா
மாட்டான்... இன்னைக்கென்னன்னா.. வார்த்தையாலே
பந்தல் போட்டு.. புகுந்து விளையாடறானே...'

பாலமுரளி.. மேகலாவை அர்த்தம் பொ
பார்வையுடன் பார்க்க.. மகனின் பார்வையைப் பு
கொண்ட சிரிப்பை அவள் தந்தாள்...

"கேட்டிங்களாம்மா... நான் சொல்ல
நாச்சியப்பன் நீங்க நினைக்கிறதைப் போல இல்லேன்

அவன் விசமமாகப் பேசியபோது.. ரா
மாடியிலிருந்து இறங்கி வந்து.. அவனருகே அமர்ந்
கணவனின் பேச்சை ரசிக்கும் புன்னகை அவள் உத
இருந்தது...

மனைவியின் புன்னகையில் பாலமு
உற்சாகமாகிவிட.. நாச்சியப்பனோ கலவரமாகி விட்டா

'ஐயா என்னத்தச் சொன்னாரு.. அம்மா என்னத்த
நினைச்சாங்க...'

"இவன் தங்கம்மா..."

'இப்ப எதுக்காக ஐயா இப்படிப் பாராட்டி வைக்கிறாரு..'

"மீனாட்சி கல்யாணத்தில பக்கத்தில நிற்கனும்னு
தான் ஆசைப்படறான்.." பாலமுரளி... ராதிகாவைப்
பார்த்து இமைசிமிட்ட அவள் முகம் சிவந்தாள்...

'ஹப்பாடி.. ஐயா விசயத்துக்கு வந்திட்டாரு..
என் மனசைப் புரிஞ்சுக்கிட்டாரு...' நாச்சியப்பன்
நிம்மதியடைந்தான்..

"மீனாட்சி கல்யாணத்துக்கு குறுக்கேயெல்லாம்
நிற்கமாட்டான்..."

மனைவியை ஒரு மார்க்கமாகப் பார்த்தபடி.. அடுத்த
அணுகுண்டை அவன் தூக்கிப் போட.. நாச்சியப்பனின்
நிம்மதி பறந்தது...

'இதுக்கு என்ன அர்த்தம்..? ஒன்னும் புரியலையே..'

"அதனாலம்மா.. நான் என்ன முடிவுக்கு
வந்திருக்கேன்னா.. நம்ம மீனாட்சி கல்யாணத்தில...
நாச்சியப்பன் மாப்பிள்ளைத் தோழனா.. மாப்பிள்ளைக்குப்
பக்கத்தில நிற்க வைச்சிருவோம்... நாச்சியப்பன்
ஆசைப்பட்டபடி... மீனாட்சி கல்யாணத்தில அவ
பக்கத்தில அவன் நிற்பான்.. உங்க மனசுப்பிரகாரம் அவ

கல்யாணத்துக்கு குறுக்கே நிற்கவும் மாட்டான்... என்ன ராதிகா.. நான் சொல்றது சரிதானே...?"

தாயிடம் பேச்சை ஆரம்பித்து.. மனைவியிடம் கேள்வி கேட்டு அவன் பேச்சை முடிக்க.. நாச்சியப்பன் அலறி விட்டான்...

அவன் சொன்னது என்ன..? அதை பாலமுரளி புரிந்து கொண்ட விதம்தான் என்ன..?

"ஐயா... நான் அப்படிச் சொல்லலைங்க..."

அவனது பதட்டத்தைக் கண்ட ராதிகாவும் மேகலாவும் குலுங்கிச் சிரித்தபோதுதான் அவனுக்கு பாலமுரளியின் கிண்டல் புரிந்தது...

முகத்தில் குடம்.. குடமாக அசடு வழிய.. அவன் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்...

"போதும்ங்க.. பாவம்.. நாச்சியப்பன் அரண்டு போயிட்டாரு.."

ராதிகாவின் பரிந்துரையில் நாச்சியப்பனின் போன உயிர் மீண்டும் வந்தது...

'அப்பாடி... தப்பிப் பிழைச்சேண்டா சாமி.. அம்மா சொல்லி ஐயா மாட்டேன்னு சொல்லிருவாரா...'

அவன் சீராக சுவாசத்தை விட ஆரம்பித்தான்.. பாலமுரளி உள் பக்கமாகத் திரும்பி...

"மீனாட்சி.." என்று அழைத்தான்...

என்றைக்குமில்லாத முகச் செம்மையோடு மீனாட்சி அங்கே வந்து சேர நாச்சியப்பனின் முகத்தில் பரவசம் படர்ந்தது...

நான் சொல்லாத சொல்லினையும்..
அவனறிந்தானே அது எப்படி தோழி..?

ராதிகா கன்னத்தில் கை வைத்து வேடிக்கை பார்க்கத் தோதாக சோபாவில் சாய்ந்து கொண்டாள்... மீனாட்சியின் கால்கள் பின்னிய தளர்நடை.. அவள் கண்களில் சிரிப்பை வரவழைத்தது...

ராதிகாவின் முகத்தில் தோன்றிய சுவராஸ்யத்தைக் கண்ட முரளி புருவங்களை உயர்த்தினான்.. அவன் காதருகே வாகாக சரிந்து ராதிகா மெதுவான குரலில் கிசுகிசுத்தாள்...

"நம்ம வீட்டு ரவுடி ரங்கம்மா... எப்படி வெட்கப் பட்டு வந்து நிற்கிறான்னு பாருங்களேன்..."

"இந்த பயபுள்ள மட்டும் என்னவாம்.. ஊரில இருக்கிற அத்தனை பொண்ணுகளையும் ஒரு மார்க்கமாகத்தான் பார்ப்பான்.. இவன் நால்விடாத முறைப்பொண்ணே இல்லே..."

இதைக்கேட்டதும் ராதிகாவுக்குள் முரளியைச் சுற்றிக் கொள்ளும் அவனுடைய முறைப் பெண்களின் நினைவு வந்தது...

"அதானே.. தேனூத்தில பிறந்த ஆண்மகன்கள்தான் கொடுத்து வைச்ச பிறவிகளாச்சே... உங்களுக்குன்னு எப்படித்தான் முறைப் பெண்கள் கூட்டம்.. கூட்டமா வந்து வாய்க்கிறாங்களோ..."

ராதிகாவின் நொடிப்பில் அவளின் மனச்சிணுங்கல் புரிய பாலமுரளிக்கு சிரிப்பு வந்தது...

"விடுடி.. நம்ம பஞ்சாயத்தா இப்ப முக்கியம்..? இவங்க பஞ்சாயத்தை முதலில முடிச்சு வைக்கலாம்..."

"என்னத்தைச் சொல்ல.. மீனாட்சிக்கு என்ன குறை..? வாய்தான் எட்டு ஊருக்கு நீளும்.. மத்தபடி குணத்தில தங்கமில்ல..."

"யாரு இல்லேன்ன சொன்னது...?"

"பேச்சாலேயே கடலைபோட நினைக்கிற ஆளைக் கூட துரத்தி விடற கெட்டிக்காரியாச்சே..."

"அதுக்கென்னடி இப்ப...?"

"ம்ஹீம்.. இப்படிப்பட்ட பொண்ணுக்கு... ஜொள்ளுவிட ஆள்தான் கிடைச்சிருக்கு..."

"ஓ... நீ அப்படி வர்றயா..? ஒன்னை நீ யோசிச்சுக்கனும்டி.."

"எதை யோசிக்கனுமாம்..."

"என்னதான் நூல் விட்டாலும்.. மஞ்சக்கயிறுன்னு ஒன்னைக் கட்டினா.. மீனாட்சி கழுத்திலதான் கட்டுவேன்னு பிடிவாதமா காத்திருக்கான் பாரு... அங்கே தான் அவன் நிற்கிறாண்டி..."

பாலமுரளி சொன்னதைக் கேட்ட ராதிகா திரும்பிப் பார்த்தாள்... நாச்சியப்பன் பவ்யமாக நின்று கொண்டிருந்தான்...

"இல்லையே... அவர் இங்கேதான நிற்கிறார்..?" என்றாள்... முரளி அவளையே இமைக்காமல் பார்க்க..

"போதும்... பார்த்தது... அத்தை நம்மளையே பார்க்கிறாங்க..." என்று முணுமுணுத்தாள்...

"மாடிக்கு வாடி... உனக்கு இருக்கு... கடிஜோக் சொல்ல உனக்கு வேற நேரமே கிடைக்கலியா.. இந்தக் கடி கடிக்கிறயே..."

மனைவியை செல்லமாக கடிந்து விட்டு.. மீனாட்சியின் பக்கமாக திரும்பினான் பாலமுரளி...

"என்ன மீனாட்சி.. நம்ம நாச்சியப்பன் பிரச்சனையையும் கொஞ்சம் கவனிக்கிறது..?" என்று அவன் சொல்ல... மீனாட்சி திருதிருத்தாள்...

அவள் பேசமுடியாமல் மேகலாவைப் பார்க்க அவள் பேச்சைத் தொடர்ந்தாள்...

"அதாண்டி.. கட்டினா உன்னைத்தான் கட்டுவேன்னு நம்ம நாச்சியப்பன் ஒத்தைக்காலில நிக்கறானில்ல.. அதத்தான் முரளி சொல்றான்..."

மீனாட்சி.. நாச்சியப்பனை ஓரக் கண்ணால் பார்க்க.. அவன் இரண்டு கால்களையும் தரையில் ஊன்றி... கம்பீரமாக நிற்க முயன்றான்...

"இன்னொரு காலில அடிபட்டிருக்கும்மா... அதனால இந்த ஆம்பள அப்படி நின்னிருக்கும்..."

அவள் இடக்காகப் பேச... நாச்சியப்பன் பதில் சொன்னான்...

"எனக்கு எந்தக் காலிலயும் அடிபடலங்கய்யா... எம்மாம் உசரமான தென்ன மரமானாலும் ஒத்த ஆளா.. உயரத்தில ஏறி.. காய் பறிச்சுப் போடற ஆளு நானு.. எனக்காவது அடி படறதாவது..."

"அப்ப தென்னமரத்தக் கட்டிக்க வேண்டியது தானேம்மா..."

"இவளக் கட்டிக்கிறதும்.. தென்னமரத்தக் கட்டிக்கிறதும் ஒன்னுதானங்க ஐயா..?"

"மரத்தோட பொழைச்சுப் பொழைச்சு... இந்த மனுசனுக்கு மரத்தைப் போலவே புத்தியும் இருக்கும்மா..."

"மரமா இருக்கிறது.. நானா.. இல்ல இவளாங்கய்யா..? என் மனசைப் புரிஞ்சுக்காம.. மரம் மாதிரியே நிற்கிறாய்யா..."

"இந்த விகடமெல்லாம் எங்கிட்ட வேணாமுன்னு சொல்லுங்கம்மா..."

"வேற யாருகிட்டயும் விகடம் பேசறதா நானில்லன்னு சொல்லுங்கய்யா..."

"ஊரெல்லாம் ஆளை வைச்சுக்கிட்டு யாருகிட்ட சரடு விடுதுன்னு கேளுங்கம்மா..."

"வெறும் சரடைத்தான் எங்கயும் விட்டிருக்கேன்.. மஞ்சச் சரடை இவ கழுத்தில மட்டும்தான் கட்டுவேன்னு சொல்லுங்கய்யா..."

"இந்தக் கதையை நம்ப நான் தயாரில்லைன்னு சொல்லுங்கம்மா... என்னமோ.. என்னக் கட்டிக்க இந்த ஆளு ஒத்தக்காலில் நிக்குதாம்... பாண்டி விளையாட யாராவது கோட்டைக் கிழிச்சிருப்பாங்க... இந்த ஆளு அதைத் தாண்ட ஒத்தக் காலில நின்னிருக்கும்.. மத்தபடி.. இந்த ஆளாவது.. ஒரு மனசா நிக்குறதாவது.. எனக்கு நம்பிக்கையில்லம்மா..."

"இப்ப அவ என்னதான் சொல்றான்னு கேளுங்கய்யா.."

"இந்த ஆள நம்பி.. இது பின்னால போக நான் தயாரா இல்லன்னு சொல்லுங்கம்மா..."

பாலமுரளிக்கும்... மேகலாவிற்கும் வேலையே வைக்காமல்... நாச்சியப்பனும்.. மீனாட்சியும் மோதிக் கொள்ள.. ராதிகா சுவாரஸ்யமாக அதை ரசித்துக் கொண்டிருந்தாள்...

முரளியும்... மேகலாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்...

"ஏண்டி.. இதுக ரெண்டும் அடிச்சுக்கிட்டு நிற்குதுக.. நீ அதை வேடிக்கைப் பார்த்து ரசிச்சுக்கிட்டு இருக்க... உன்னை என்னதாண்டி செய்யறது..?"

மனைவியிடம் முறைத்த பாலமுரளியின் பார்வையிலும் கோபமில்லை... வார்த்தையிலும் கோபமில்லை... அவர்களின் ரகசிய உரையாடலில் மேகலாவின் முகம் கனிந்தது...

"இதில ஒரு டெக்னிக்கை ரெண்டு பேரும் ஃபாலோ பண்ணிக்கிட்டு இருக்காங்க... அதை நீங்க கவனிச்சீங்களா..?" ராதிகா கேட்டாள்...

"இதுக ரெண்டும் நேராப் பேசிக்கலையாம்.. இவன் என்கிட்டத்தான் பேசரானாம்.. அவ.. அம்மாகிட்டத்தான் பேசறாளாம்.. அதைத் தானே சொல்ற..." முரளி இமைசிமிட்டினான்...

"அஃதே..."

கணவனின் இமை சிமிட்டலில் மயங்கிப் போன ராதிகா... அந்த மயக்கத்தை விழிகளில் பிரதிபலித்தவளாக சொன்னாள்...

அவளின் மயக்கத்தை உணர்ந்தவனின் மனதில் ஆண்மையின் கர்வம் சூழ்ந்தது... அவளுடன் ரகசியப் பேச்சுப் பேசுவதில் ஓர் அந்தரங்கத்தை உணர்ந்தான் பாலமுரளி...

"இதுகளை மோத விட்டா.. இன்னைக்குப் பூரா இன்ட்ரெஸ்டா வேடிக்கை வேணும்னா பார்க்கலாம்.. ஆனா.. வேலைக்கு ஆகாது..."

"அது எனக்கும் தெரிஞ்சிருக்கு.. நான் நாச்சியப்பனை ஒரு அதட்டல் போட்டாப் போதும்... அவன் அடங்கிருவான்..."

"மீனாட்சியை அடக்க அத்தை இருக்காங்க..."

"இதுகளை அடக்கினா மட்டும் போதுமா..?"

"அதுதானே..? அதுக்கா இவங்க ரெண்டு பேரையும் ஒன்னா பேச்சு வார்த்தைக்கு அழைச்சிருக்கீங்க...?"

"இந்த மீனாட்சிக்கு என்னதாண்டி பிரச்னை..? அவ மனசில நாச்சியப்பன் மேல நோக்கமிருக்கிறது போலத்தான் எனக்குப் படுது.. இருந்தும் இவ இந்தப் பேச்சு பேசறாளே...?"

"இதுக்கு நான் ஒரு வழியைப் பண்றேன்..."

"அதை முதலில் செய்டி.. அம்மாவுக்கு இந்த மீனாட்சியோட கவலையில திரும்பவும் உடம்புக்கு முடியாமல் போயிருமோன்னு யோசனையாய் இருக்கு.."

"கவலையே படாதீங்க.. உங்க பெண்டாட்டி நானிருக்கேன்..."

அவள் அபயம் அளித்ததைவிட.. அந்த அபயத்தை 'உங்க பெண்டாட்டி...' என்ற சுய அறிமுகத்துடன்

அளித்ததில் முரளியின் மனதில் ரகசிய சந்தோசம் ஊற்றெடுத்தது...

"என்னடி செய்யப் போற...?"

"வெயிட் அன்ட் ஸீ..."

ராதிகா மீனாட்சியின் பக்கமாக பார்வையைத் திருப்பினாள்...

"விடாதே மீனாட்சி.. வெளுத்துக்கட்டு.. நான் உன் கட்சிதான்.." என்று திடிர் ஆதரவை அளித்தாள்...

'இது என்னத்துக்கு...' மீனாட்சி பேந்தப் பேந்த விழித்தாள்...

"என்னடி..?" ரகசியமாக கேட்ட முரளியிடம்...

"நீங்க நாச்சியப்பனுக்கு வக்காலத்து வாங்கி.. என்ன விசயம்ன்னு என்னிடம் கேளுங்க...", என்று முணுமுணுத்தாள் ராதிகா...

'மனைவி ஒரு மந்திரி...' என்பதை அந்த நொடியில் ஏற்றுக் கொண்ட முரளி.. மனைவி போட்டுக் கொடுத்த பாதையில் பயணித்தான்...

"என்ன ராதிகா..? நாச்சியப்பனைப் பத்தி அவ கன்னா பின்னான்னு பேசறா.. நீயும் அவளை சப்போர்ட் பண்ற.. நாச்சியப்பன் குணத்தில தங்கம்.. தெரியுமில்ல..."

அவ்வளவுதான்.. கணவனை நோக்கி.. அமைதியாய் இருக்கும்படி கண்சமிக்ஞை செய்து விட்டு.. ராதிகா பொரிந்து தள்ள ஆரம்பித்தாள்...

"அப்படியிருந்தா.. மீனாட்சி எதுக்காக இப்படிக் கோபப்படப் போறா..? நீங்க ஆயிரம்தான் சொல்லுங்க.. நாச்சியப்பனுக்கு குணம் சரியில்லைன்னுதான் நான் சொல்லுவேன்..."

ராதிகாவின் ஆணித்தரமான வாதத்தில் மீனாட்சி திகைத்துப் போய் ஊடே தடுத்துப் பேசினாள்...

"சின்னம்மா..."

"நீ கவலைப்படாதே மீனாட்சி.. நான் கேட்கிறேன்.. ஏங்க.. இந்த நாச்சியப்பனெல்லாம் மனிதனா...?"

"சின்னம்மா..."

"மீனாட்சியோட அழகுக்கும்.. அறிவுக்கும்.. அவளோட கால்தூசிக்கு நாச்சியப்பன் இணையாவாரா..?"

"சின்னம்மா..."

"சேச்சே.. இந்த நாச்சியப்பன உடனே வேலையில இருந்து தூக்குங்க.. மீனாட்சி கோபப்பட்டா அதில ஒரு நியாயமிருக்கும்..."

"ஐயோ.. சின்னம்மா..."

"இந்த வீட்டுப்பக்கமே சேர்க்காம தூரத்தியடிங்க.. அப்பத்தான் மீனாட்சி நிம்மதியாயிருப்பா..."

ராதிகா நிறுத்தாமல் பேசிக் கொண்டிருந்தாள்.. நாச்சியப்பனைப் போன்ற மனிதப் பிறவிக்கு அந்த தென்காசிப் பட்டினத்திலேயே இடம் தரக்கூடாது என்று சொன்னாள்...

மீனாட்சியின் மனதில் நாச்சியப்பனின் மீது எந்த அளவுக்கு வெறுப்பிருந்தால்... இப்படியெல்லாம் பேசுவாள் என்ற கேள்வியை முன் வைத்தாள்..

அப்படிப்பட்ட நாச்சியப்பனுக்கு யாரும் பெண் தரமாட்டார்கள் என்று ஆருடம் சொன்னாள்.. அப்படி மீறிப் பெண் கொடுக்க முனைந்தால்.. ஒரு மொட்டைக் கடிதத்தை தட்டி விட்டு.. அதன் மூலம் அதை தடுத்து நிறுத்துவாள் மீனாட்சி என்று சூளுரைத்தாள்..

நாச்சியப்பனின் கண் முன்னாலேயே.. மீனாட்சியின் திருமணம் அமோகமாக நடக்கும் என்ற ஆசிர்வாதத்தை அளித்தாள்...

பொங்கி வரும் வெள்ளமாக.. வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்த ராதிகாவின் மணிப்பிரவாகப் பேச்சில் குறுக்கிட.. 'சின்னம்மா.. சின்னம்மா...' என்று குரல் எழுப்பி பகீரதப் பிரயத்தனங்கள் செய்து ஒய்ந்து போன மீனாட்சி பொங்கி வெடித்தாள்...

"நிறுத்துங்க.. சின்னம்மா..!"

இடைவிடாத பேச்சினால் மூச்சு வாங்கிக் கொண்டிருந்த ராதிகா...

'இப்பவாவது நிறுத்தச் சொன்னாளே...' என்று ஆறுதல் பட்டுப் போனாள்...

மனைவியைக் காருண்யப் பார்வை பார்த்த முரளி.. அருகிலிருந்த தண்ணீர் ஜக்கைத் தூக்கி அவளிடம் கொடுக்க.. அதை வாங்கியவள் அப்படியே அதை தொண்டையில் சரித்தாள்...

அவள் பேச்சை நிறுத்திய மீனாட்சி.. பேச ஆரம்பித்து விட்டாள்...

"யாரை பார்த்தும்மா மனுசனான்னு கேட்டிங்க..? இந்த மனுசன் மனுசனில்லன்னா.. வேற யாருதான் மனுசன்..?"

மீனாட்சியின் கேள்வியில் முரளியின் முகம் பார்த்த ராதிகாவின் விழிகளில் வெற்றிப் பெருமிதம் இருந்தது.. அதைக் கவனித்த மேகலாவின் விழிகளில் வியப்புத் தெரிந்தது... அவளும்தான் தலையால் தண்ணீர் குடித்துப் பார்த்தாள்.. மீனாட்சியின் பிடிவாதத்தை தளர்த்தி விட அவளால் முடிந்ததா..?

அதை ஒரு நிமிடத்தில் ராதிகா செய்து முடித்து விட்டாளே...

'எப்புடி..?' ராதிகா புருவங்களை உயர்த்தி.. விழிகளால் கணவனிடம் கேட்டாள்...

'பிரமாதம்டி.. கிழி.. கிழின்னு கிழிச்சிட்ட..' அவன் இரண்டு விரல்களையும் ஒன்று சேர்த்து கிழிப்பதைப் போல பாவனை செய்தான்..

"உங்க வீட்டு உப்பைத் தின்ன மனுசன்மா இந்த மனுசன்.. இதுக்கு சூது.. வாது தெரியாது.. இதுக்கா குணமில்லன்னு சொல்றீங்க.. இது குணசாலிம்மா..."

ராதிகா விரித்த வலையில் தான் மாட்டிக் கொண்டிருப்பதை அறியாத கிராமத்து மீனாட்சி.. தன் மனதை வெளிப் படுத்திக் கொண்டிருந்தாள்...

மனதுக்குள் ஊற்றெடுக்கும்..
எண்ணங்களை யாரறிவார்..?

அடுத்த ஒருமணிநேரத்துக்கு நாச்சியப்பன் எப்படிப்பட்ட நல்லவன்.. வல்லவன்.. நாலும் தெரிந்தவன்.. என்பதை அநேக உதாரணங்களையும்.. நிகழ்வுகளையும் முன்வைத்து மீனாட்சி எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தாள்...

"என் கால் தூசிக்கு இணையாகுமான்னு இந்த ஆம்பளையைப் பார்த்துக் கேக்கறிங்களே சின்னம்மா.. இதோட கால் தூசிக்குத்தான் நானு இணையாக மாட்டேன்.. அது தெரியுமா உங்களுக்கு..?"

"தெரியாது மீனாட்சி..."

"எனக்கென்னம்மா அழகு இருக்கு..?"

"இல்லேன்னு நீயே ஒப்புக்கறியா.. இதை காவேரிகிட்டச் சொல்லிரவா..?"

"அவ என்னம்மா நாட்டாமை பண்றது..? நான் சொல்றேன் கேளுங்க..."

"கேட்டுட்டாப் போச்சு.. நீ சொல்லு..."

"இந்த ஆளு.. அழகுல அர்ச்சுனன்..."

"அப்படியா..?"

ராதிகா கிண்டலுடன் கேட்டபடி முராளியைப் பார்க்க.. அவன் மீனாட்சி சொல்லுவது உண்மைதானா என்று அவதானிப்பவனைப் போல நாச்சியப்பனை ஏற.. இறங்க பார்த்தான்..

நாச்சியப்பனோ கூச்சத்துடன் நெளிந்தான்...

"அறிவுல தர்மரு..."

தர்மருக்கும் அறிவுக்கும் உள்ள சம்பந்தத்தை மீனாட்சியிடம் விளக்கச் சொல்லலாமா என்று ராதிகாவிற்குள் ஆவல் எழுந்தது... முராளியின் முறைப்பிற்கும்.. மேகலாவின் கொட்டாவிக்கும் பயந்து அந்த ஆவலை அவள் அடக்கிக் கொண்டாள்..

"இது உனக்கே ஓவராத் தெரியாலையா மீனாட்சி..?"

"எட்டாளு வேலைய ஒத்த ஆளா பார்த்து முடிக்கிற ஆம்பளையைப் போயி வேலய விட்டுத் தூக்கச் சொல்றிங்களே.. இது நாயமா சின்னம்மா..?"

"நியாயமில்லைங்கறியா..?"

"இதோட விசுவாசத்துக்கு இதுதான் சம்பளமா..?

"என்னமோ.. போ மீனாட்சி.. நீ பேசற 'லேபர் வை
வைக் கேட்டு அசந்து போயிட்டேன்.. பார்த்துக்கங்க
அத்தை.. நம்ம மீனாட்சி கூடிய சீக்கிரமே யூனியன்
ஆரம்பிச்சிருவா.."

"இத வீட்டுப்பக்கம் சேர்க்காம துரத்தியடிக்கனுமா..?
இந்த வீட்டுத் தோட்டத்தக் கேட்டுப் பாருங்கம்மா.."

"அட.. அட.. அடா... அசத்தறே மீனாட்சி..
அப்படியே என் வீட்டுத் தோட்டத்துப் பூவெல்லாம் கேட்டு
பார்ன்னு பாடற மாதிரியே இருக்கு போ.. அடுத்து என்ன
கேட்கப் போற மீனாட்சி..? இந்த வீட்டு ஜன்னல்
கம்பியையும்.. தென்னந் தோப்பையும் கேட்கச் சொல்லப்
போறியா..?"

"அதான்ம்மா.. எப்புடிக் கண்டு பிடிச்சிங்க..?"

"குருவி ஜோஸியம் பார்த்தேன்.. நீ கொட்டு.."

"இந்த வீட்டுச் சுவரைக் கேட்டுப் பாருங்கம்மா.."

"அது என்ன சொல்லும்..? அதையும் நீயே சொல்லிரு"

"இது அடிச்ச பெயிண்டைச் சொல்லும்.."

"ஜன்னல் கம்பியும் அதைத்தானே சொல்லும்
மீனாட்சி..?" ராதிகா உறுதிப் படுத்திக் கொள்ள முனைய

"ஏண்டி..?" என்றான் தாங்க முடியாத பாலமுரளி

"அதைச் சொல்ல நம்ம மீனாட்சி டயத்தை வேஸ்ட்
பண்ணக் கூடாதுங்கிற நல்ல எண்ணம்தாங்க.." என்று
சாதுவாக பதில் கொடுத்தாள் ராதிகா...

சிரிக்க முடியாத பாலமுரளி மேகலாவைப் பார்க்க..
அவளோ சிரிப்பை அடக்க பிரயத்தனம் பண்ணிக்
கொண்டிருந்தாள்..

'இவ அடிக்கிற லூட்டி இருக்கே...'

பாலமுரளிக்கு... முதன் முதலாக ராதிகாவின்
பேச்சை ரசித்த அந்த தினம் நினைவுக்கு வந்தது...

'அதுக்கப்புறமா இப்பத்தான் இந்தப் பேச்சு பேசறா..'

அவன் மனம் கனிந்தது.. அதைக் கவனிக்காதவளாக..
மீனாட்சியுடன் உற்சாகமாக உரையாடிக் கொண்டிருந்தாள்
ராதிகா...

"ஜன்னல் கம்பியென்னம்மா.. கதவுகூட இது அடிச்ச
பெயிண்டைச் சொல்லும்..."

"அடுத்து தோப்புத்தானே மீனாட்சி..."

ராதிகா எடுத்து கொடுக்க...

"ஆமாம்மா..." என்றாள் மீனாட்சி...

"ஹப்பா.. கண்டுபிடிச்சிட்டேன் பார்த்தீங்களா.."
முரளியிடம் ராதிகா பீற்றிக் கொள்ள...

"அறிவுக் களஞ்சியம்தான்..", என்று மெச்சிக்
கொண்டான் பாலமுரளி...

"இது தோப்பே கதின்னு கிடக்கிறதால்தான் இ
தென்னந்தோப்புல காயெல்லாம் காய்க்கக் குலுங்குது

"அப்படியா..? இது எனக்குத் தெரியாம போச்சே
நான்கூட தண்ணி பாய்ச்சி.. உரம் வைக்கிறதாலதா
தோப்பில காய் காய்க்குதுன்னு நினைச்சிட்டேன்.. அடுத்
என்ன சொல்லப் போற மீனாட்சி..? மாந்தோப்புல கூ
மாங்குயிலையெல்லாம்... நாச்சியப்பன்தான் வெத்
பாக்கு வைச்சு அழைத்துக்கிட்டு வந்தாருன்னு சொல்
போறியா..?" ராதிகா கேலியாக கேட்டு வைக்க...

"பின்ன.. இல்லையா..?" என்று ஒரு போ
போட்டாள் மீனாட்சி...

"அடிச்சக்கை.. அப்புறம்..?"

"இந்த ஏரியாவிலேயே இது இருக்கக் கூடாதுன்
எப்படிம்மா நீங்க சொல்லலாம்..?"

"சொல்லக் கூடாதுதான்..."

"இந்த தேனூத்தில பொறந்து வளர்ந்த ஆளுக்
தென்காசிப் பட்டினத்தில இருக்க உரிமையில்லயா..?"

"இருக்குதான்..."

"என் மனசில இது மேல வெறுப்பிருக்குன்னு நா
சொன்னேனா..?"

"சொல்லலைங்கறியா..?"

"இதுக்கு யாரும் பொண்ணு தர மாட்டாங்களா..?

"தந்துருவாங்கங்கறியா..?"

"மீறிப் பொண்ணு கொடுத்தா நான் மொட்டைக்
கடுதாசியை தட்டி விடுவேனா..?"

"விடாம.. கல்யாணத்துல கலந்துக்கிட்டு அட்சதை
போடுவியா..?"

"அத எப்படிம்மா செய்ய முடியும்..?"

"முடியாதில்ல.. அதத்தான் நானும் சொன்னேன்..."

"அதுக்காக இப்படியாம்மா சொல்லுவீங்க..? இது
கண்ணுக்கு முன்னாலேயே நான் இன்னொருத்தனுக்கு
கழுத்தை நீட்டுவேனா..?"

"நீட்ட மாட்டியா..?"

"ஒரு நாளும் மாட்டேம்மா..."

"இதை.. இதை.. இதைத்தான்.. நீ சொல்லி.. நாங்க
கேட்கனும்னு எதிர்பார்த்தேன்.. எப்படி.. நீயாய்.. இதை
உன்வாயாலேயே ஒப்புக்கிட்டயா..?"

ராதிகா சிரித்த பின்னால்தான்.. தன் வாயால் தன்
மனதிலிருந்த நாச்சியப்பனின் மீதான அபிமானத்தை
வெளியிட்டு விட்டதை உணர்ந்து கொண்டாள் மீனாட்சி..
வெட்கத்துடன் தலை கவிழ்ந்தாள்...

"ஏண்டி.. மனசுக்குள்ள இம்புட்டு ஆசையை
வைச்சுக்கிட்டு.. அவன கண்ணில பாக்குற நேரமெல்லாம்

கரிச்சுக்கிட்டு இருந்தியே.. நீ சரியான வேசக்காரிடி..." கேமலா கடிந்து கொண்டாள்...

"அத இப்பத்தான் தெரிஞ்சுக்கிட்டிங்களாம்மா...?"

அதுவரை ஒரமாக நின்று.. நடந்து கொண்டு பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த காவேரி குரல் கொடுத்தாள்..

மீனாட்சி.. வெட்டும் பார்வையென்றை அவள்மீது வீசி வைத்தாள்...

"என்னம்மா செய்யலாம்..?" முரளி தாயிடம் ஆலோசனை கேட்டான்...

"வார தை மாசத்தில... முத முகூர்த்தத்தில இதுக ரெண்டுக்கும் கல்யாணத்த நடத்தி வைச்சுப் புடலாம் முரளி.. என்ன ராதிகா..?"

"வெரிகுட் டிசிசன் அத்தை.. இதில மாப்பிள்ளை வீடு யாரு..? பொண்ணு வீடு யாரு...?"

ராதிகா சிரித்துக் கொண்டே கேட்க.. அங்கே திருமணப் பேச்சு களைகட்ட ஆரம்பித்தது...

நாச்சியப்பனும் மீனாட்சியைப் போல.. பாலமுரளியின் நிழலில் வாழ்பவன்தான்.. என்ன ஒன்று.. மீனாட்சி சிறு வயதிலேயே தாய்தந்தையை பறிகொடுத்தவள்.. நாச்சியப்பன் வளர்ந்த பின்னால் அவர்களை ஒருவர்பின் ஒருவராக பறிகொடுத்தவன்...

அந்தக்குறை தெரியாமல் அந்த இருவருமே.. அந்தக் குடும்பத்தின் வேலையாள்களாக சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்..

திருமணம் என்று வந்த போது அந்தக் குறை தெரிய இருவர் முகமும் வாடியது.. அதைக் கவனித்த பாலமுரளி..

"நான் மாப்பிள்ளை வீட்டுக்காரன்..." என்றான்...

நாச்சியப்பன் முகம் மலர்ந்தான்...

"நான் பொண்ணு வீட்டுக்காரி..." என்றாள் கேமலா..

"இது தெரிந்த விசயம்தானே.." சிரித்தாள் ராதிகா..

அவர்களின் அரவணைப்பில் மீனாட்சியின் மனம் நெகிழ்ந்தது...

யாருமில்லாத ஆள்களென்று யாரும் இவ்வுலகில் இல்லை... ஒருவருக்கொருவர் உறவுக்கரம் நீட்ட.. சங்கிலித் தொடராய் அது தொடரும்...

தொட்டுத் தொடரும் நமது பாரம்பர்யம் போன்றது இந்த உறவுச் சங்கிலி...

"பொண்ணுக்கு என்ன போடுவீங்க..?" கறாராக கேட்டான் முரளி...

"பொண்ணை நொட்டை சொன்னா.. எங்க பொண்ணு மாப்பிள்ளை மேல ரெண்டு போடு போடுவா..", என்றாள் மேகலா...

"இதென்னடா நாச்சியப்பா வம்பாயிருக்கு.. உனக்கு இந்தப் பொண்ணு வேணுமா..?" முரளி வினவினான்...

"இந்தப் பெண்ணுதான் வேணும் முதலாளி..." மீனாட்சியை பல மார்க்கமாகப் பார்த்தபடி பதில் சொன்னான் நாச்சியப்பன்...

அவன் கம்மாவே அவளை ஒரு மார்க்கமாகத்தான் பார்த்து வைப்பான்.. அன்று அவள் வெளிப்படுத்திய பல்வேறு பரிணாமங்களில் அவளை பல மார்க்கமாக பார்த்து வைத்தான்...

"போகுது போங்க.. எங்க பையனுக்கு உங்க பொண்ணு சொக்குப்பொடி போட்டுட்டதால.. போனாப் போகுதுன்னு இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்கறேன்..", முரளி முகத்தை தீவிரமாக வைத்துக் கொண்டான்...

"ஆமாண்டா.. உன் தோப்புக்கார பய புள்ள மட்டும் குனிஞ்ச தலை நிமிராதவன்தான்.. இவ பின்னால அவன் சுத்தின சுத்தில எனக்கில்ல தலைசுத்தல் வந்துச்சு...", மேகலா அலுத்துக் கொண்டாள்..

"அதான்.. கல்யாணத்துக்கு ஒப்புக்கிட்டோமுல்ல.."

"நீ ஒப்புக்காம வேற போயிருவியாக்கும்.. நீ வளர்த்த பய இந்தக் கல்யாணப் பேச்சு முடியாம.. இந்த வாசப்படிய தாண்டியிருக்க மாட்டான்..."

"அதாண்டா நாச்சியப்பா.. படிச்சுப்படிச்சு சொன்னேன்.. நீ அடக்கி வாசிச்சிருக்கனும்.. இப்பப் பாரு.. எதையும் போடாம பொண்ண தாட்டி விடப் பாக்குறாங்க.."

"அப்படியெல்லாம் நாக்கு மேல பல்லப்போட்டு.. ஒத்தச் சொல்ல சொல்லிராதேப்பா.. பொண்ணுக்கு பத்து பவுனுக்கு நகை போடறேன்... பண்ட பாத்திரம் எடுத்துக் கொடுக்கிறேன்.. தனிக்குடித்தனம் வைக்கிறப்ப.. அரிசி.. பருப்பை வாங்கி வைக்கிறேன்.. அங்கே என்ன செய்யப் போற..?"

"நாங்க ஒன்னும் குறைஞ்சவங்க இல்ல.. பொண்ணுக்கு தாலிச் செயின் போடுறதும்.. முகூர்த்தப் பட்டு எடுக்கிறதும் எங்க செலவு.. இது போல கல்யாணத்தையும் நடத்திக்குவோம்.. நீங்க பொண்ணை அனுப்பி வைச்சா மட்டும் போதும்..."

"தாராளம்.. தண்ணி பட்ட பாடுதான்.. நம்மல்ல.. மாப்பிள்ளை வீட்டிலதான கல்யாணம் நடக்கும்..? இதில பொண்ண மட்டும் அனுப்பி வைக்காம.. கல்யாணத்தை நடத்தியா வைப்போம்...?"

தாயும்.. மகனும் சம்பந்தி சண்டை போட்டுக் கொண்டதை ரசித்துப் பார்த்தாள் ராதிகா.. அந்த வீட்டின் தாராள மனது அவளை வசீகரித்தது.. அப்படிப்பட்ட மனிதர்களுடன் வாழும் கொடுப்பினை கிடைத்ததற்கு அந்தக் கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொண்டாள் அவள்..

சிநேகிக்கும் மனிதர்களை பார்த்திருக்கிறோம்... உறவினராக சுவீகரிக்கும் மனிதர்களைப் பார்த்திருக்கிறோமா..?

ராதிகா அப்படிப்பட்ட மனிதர்களை அன்றுதான் பார்த்தாள்.. வேலையாள்கள் என்று நினைக்காமல்.. வீட்டு மனிதர்களாக அவர்களை மாற்றிவிட்ட தன் புகுந்த வீட்டின் பெருமையை நினைத்து மனம் கரைந்து போனாள்..



சில்லென்ற காற்று வந்ததிலே..
என்மனம் அவனைத் தேடுதடி...

நாச்சியப்பனுடனான மீனாட்சியின் கல்யாணம் அமோகமாக நடந்து முடிந்தது.. வேலையாள்களின் திருமணத்தைப் போலில்லாமல்.. வீட்டு மனிதர்களின் திருமணத்தைப் போலவே.. அழைப்பிதழ் அடித்து.. விநியோகம் செய்து.. மண்டபம் பிடித்து.. மூன்று வேளையும் குறைவில்லாமல் விருந்து கொடுத்து.. அதை நடத்தி முடித்திருந்தான் பாலமுரளி...

'இவன் அண்டி வருகிறவர்களுக்கு ஆலமரம் போல நிழல் கொடுத்து.. ஆதரித்து வாழ வைப்பவன்...'

ராதிகாவின் மனம் பொங்கியது.. அவனின் அந்தத் தன்மையில் ஆகர்ஷிக்கப்பட்டாள் அவள்...

'இவன்தான் எப்பேற்பட்ட குணமுடையவனாக இருக்கிறான்..!'

அவள் வியந்து போனாள்.. அரசன் மகனான அர்ஜீனனை அரவணைத்த கண்ணபிரான்.. அதே நட்போடு குசேலனையும் அரவணைத்ததை புராணாங்களில் படித்திருக்கிறாள்.. அன்றுதான் அதே போன்ற ஒரு நிகழ்வை நேரில் பார்த்தாள்...

முரளியின் மீதான அவளின் காதல் அதிகமாகியது.. அதை அவளது கண்கள் உணர்த்தியதில் முரளியின் கண்கள் மின்னின...

மணமக்களை ஆசிர்வதித்து விட்டு வந்தவன்.. மனைவியின் பக்கமாக குனிந்து.. ரகசியக் குரலில்...

"என்னடி.. ஒரு மார்க்கமாப் பார்த்து வைக்கிற... என்ன விசயம்..?" என்று வினவினான்...

சுற்றிலும் ஆள்கள் இருக்க... அவர்களின் மத்தியில் எதையும் சொல்ல முடியாத ராதிகாவின் முகம் சிவந்தது.. அதை ரசித்தவன்...

"பாரு.. பாரு.. யாரைப் பார்க்கிற.. உன் புருசனைத்தானே பார்க்கிற.. நீ பார்க்கத்தானே நானிருக்கேன்...", என்றான்...

ராதிகா முகச்சிகப்பு அதிகரிக்க.. அவன் கையில் ரகசியமாக கிள்ளினாள்...

"இரும்பை.. எறும்பு கடிக்கிறதுன்னா இப்படித்தானா..?" அவன் சிரித்தான்...

"வீட்டுக்கு வாங்க.. இருக்கு உங்களுக்கு..."

அவள் கோபத்துடன் சொல்ல... அவன் பரபரத்தான்..

"என்னங்க..?" அவள் புரியாமல் வினவினாள்...

"எப்ப வீட்டுக்குப் போவோம்ன்னு இருக்குடி..."

"எதுக்காம்..?"

"நீ செமத்தியாய் கவனிப்பயே..."

அவன் கண்கள் சிமிட்டியதில் அவள் மீண்டும் கன்னம் சிவந்தாள்.. பேசியபடியே நாற்காலியில் வாகாக சாய்ந்து கொண்டவனின் கை அவள் தோள் மேல் படர்ந்து அவளை சுற்றி வளைத்துக் கொண்டதில் அவளுக்குள் இன்பமான இதம் பரவியது...

அவன் அப்படித்தான் செய்வான்.. வீட்டில் மேகலாவுடன் பேசிக் கொண்டிருந்தாலும் சரி.. வெளியிடங்களுக்குப் போய் ஜனக்கூட்டத்தின் மத்தியிலிருந்தாலும் சரி.. அவனது கை.. இயல்பாக அவள் தோள்மீது விழுந்து சுற்றி வளைத்துக் கொள்ளும்..

ராதிகாவுக்கு அவனின் இந்தச் செய்கையை மிகவும் பிடிக்கும்.. அதை அவன் உணர்ந்திருக்கிறானா..

இல்லையா என்பதை அவள் அறிய மாட்டாள்.. அவன் கை அவள் தோள் மேல் விழுந்து சிறைபிடிப்பதை அவள் மிகவும் விரும்பினாள்..

முரளியுடனான ராதிகாவின் அன்யோன்யத்தில் மேகலா நிம்மதியடைந்திருந்தாள்.. அவர்களுக்குள் அடிக்கடி வரும் சண்டைகளைப் பற்றி அவள் அறிந்திராத போதிலும்.. மகனின் முகத்திலிருந்து அவன் கோபத்தையும்.. ராதிகாவின் காய்ச்சலில் இருந்து அவள் சோகத்தையும் மேகலா உணர்ந்துதான் இருந்தாள்..

அவை விலகி.. அவர்கள் இருவரும் காட்டிக் கொண்ட அந்தரங்க கண்ஜாடைகளில் மேகலாவின் மனதில் சூழ்ந்திருந்த கவலை மூட்டம் விலகியிருந்தது...

மீனாட்சியும்.. நாச்சியப்பனும் குடித்தனம் பண்ண... தோப்பு வீட்டை குடுத்திருந்தான் முரளி.. அவர்களின் குடித்தனத்திற்கு தேவைப்படும் பொருள்களை மேகலா வாங்கிக் கொடுத்திருந்தாள்.. ராதிகா அவள் பங்குக்கு புதுப்புடவைகளை வாங்கி பரிசரித்திருந்தாள்.. அவர்கள் வெற்றிகரமாக குடும்பம் நடத்த ஆரம்பித்து விட்டார்கள்.. நாச்சியப்பன் வழக்கம் போல தோப்பையும் பார்த்துக் கொண்டு.. முரளியின் தேனூத்து வீட்டின் தோட்ட வேலையையும் கவனித்துக் கொண்டான்.. மீனாட்சி காலையில் வந்து.. மாலையில் திரும்பி விடும் வழக்கத்திற்கு மாறிக் கொண்டாள்..

தினமும் நாச்சியப்பனின் சைக்கிளில் ஏறி வந்து அவள் இறங்கும் போது அவள் முகத்தில் பெருமை பொங்கி வழியும்...

"என்னமோ.. புல்லட் ஓட்டற புருசன் பின்னாலே சொகுசா உட்கார்ந்து வந்து இறங்கற மாதிரிதான் சிலுப்பிக்கிறா..."

காவேரி பொறாமையில் வெந்து போவாள்.. ராதிகாவும் அதைக் கவனித்திருக்கிறாள்.. மாடி பால்கனியில் நின்று கொண்டிருக்கும் போது.. நாச்சியப்பனுடன் சைக்கிளில் வரும் மீனாட்சியின் முகபாவத்தை முரளிக்கு காட்டுவாள்...

"அவளுக்கு அது புல்லட்தாங்க... அவ மனசுக்கு நாச்சியப்பன்தாங்க பெரிய ஹீரோ..." என்று சொல்வாள்.

அதைக் கேட்கும் முரளியின் முகத்தில் கோடிட்டுப் போகும் உணர்வுகளுக்கான அர்த்தம் என்னவென்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடிவதில்லை...

ஆனால்... அதன் பின்னால் அவளை இறுக்கிக் கொள்ளும் முரளியின் ஆவேச அணைப்பிற்குப் பின்னால் ஏதோ இருக்கிறது என்பது மட்டும் அவளுக்கு நிச்சயமாய் தெரியும்...

ராதிகாவின் வயிறு மேடிட ஆரம்பித்தது.. தாய்மையின் வளர்ச்சியை அவளது தளர்நடை உணர்த்த.. மேகலா அவளை உள்ளங்கையில் தாங்காத குறையாய்

பார்த்துக் கொண்டாள்.. முரளியோ அவளை உண்மையாகவே கைகளில்தான் சுமந்தான்...

அவளால் நடக்க முடியாத இடங்களில் தயங்காமல் அவளைக் கைகளில் தூக்கிக் கொள்வான்.. சுற்றிலும் மற்றவர்கள் இருக்கிறார்களே என்று யோசிக்க மாட்டான்.. வெட்கத்துடன் ராதிகா அவன் கைகளில் இருந்து இறங்க முயன்றால் பார்வையினாலேயே அதட்டுவான்...

அவனின் அந்த ஆண்மையான காவலில் ராதிகா சிலிர்த்துப் போவாள்.. அவன் மீதான காதலில் தினறிப் போனாள்...

அவன் மீதான அவளின் காதல்.. வளர்பிறையைப் போல வளர்ந்து கொண்டிருந்தது.. அவர்களுடைய காதலின் அடையாளமாக அவள் வயிற்றில் வளரும் அவனின் குழந்தையும் வளர்பிறை போல வளர்ந்து கொண்டிருந்தது.. சென்னையிலிருந்து பதினைந்து நாள்களுக்கு ஒரு தரமென்று.. கிருஷ்ணமூர்த்தி குடும்பத்துடன் வந்து போனார்... ராதிகாவின் மசக்கையைப் போக்கும் குழம்பு வகைகளையும்.. அவளுக்குப் பிடித்த பலகார வகைகளையும் செய்து டப்பாக்களில் நிரப்பிக் கொண்டு.. வருவாள் ராஜேஸ்வரி.. மேகலாவுக்கு அதில் பலத்த ஆட்சேபம் உண்டு...

"இதை எதுக்கு வீணாய் சுமக்கிற ராஜி..?" என்று கடிந்து கொள்வாள்

"வேற என்ன செய்யறது அண்ணி..? பெண்ணைப் பெத்தவளாப் போயிட்டேன்.. மசக்கைக்கு தாய் வீட்டில இருந்து வாய்க்கு உணக்கையா சாப்பிட்டு சீராடனும்.. நாங்க ராதிகாவை அனுப்பி வையுங்கன்னு கெஞ்சினோம்.. நீங்க அனுப்பினீங்களா..? ராஜேஸ்வரியின் குரலில்.. மனத்தாங்கல் மறைந்திருக்கும்..."

"நானா மாட்டேன்னு சொன்னேன்..? உன் மருமகன்தானே மாட்டேன்னு ஒரே வார்த்தையிலே வாயை அடைச்சுட்டான்..? அவனைப் போயி கேளு..."

"அவரை யார் கேட்கிறது...?"

"தெரியுதில்ல.. அப்புறம் என்கிட்ட எதுக்காக கோவிச்சுக்கறே..?"

"இது கோபமில்ல அண்ணி... தவிப்பு.. மூணு பிள்ளைகளைப் பெத்தவ நானு.. மசக்கை எப்படிப் பாடாப் படுத்தும்ன்னு எனக்கும் தெரியும்.. உங்களுக்கும் தெரியும்.."

"பார்த்துக்க நானிருக்கேன் ராஜி.."

"அதைச் சொன்னா.. என் மனசு கேட்கணுமே.."

"சரி.. உனக்குத் தோணினதைச் சமைச்சுப் போடு... நான் வேணாம்ன்னு சொல்லலை... அதை எதுக்காக சென்னையிலேயே செஞ்சு சுமந்துக்கிட்டு வர்றேன்னுதான் நான் கேட்கிறேன்.. நம்ம வீட்டில வந்த செஞ்சு போடு..."

"இது என் மக வீடுண்ணி.. என் வீடில்ல..."

ராஜேஸ்வரி.. தெளிவான.. உறுதியான தொனியில் கூறிவிட்டாள்..

"தாய் கையில சமைச்சது.. தாய் வீட்டில செஞ்சதா இருக்கனும் அண்ணி.. எனக்கு அது முக்கியம்..."

மேகலாவுக்கு ராஜேஸ்வரியைப் புரிந்திருந்ததால் அவள் அதற்கு மேல் எதையும் சொல்லாமல் விட்டு விட்டாள்... இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை வரும் ராதிகாவின் பிறந்த வீட்டினர் ஒரு நாளுக்கு மேல் அங்கே தங்க மாட்டார்கள்..

"சென்னையிலே ஆயிரம் வேலை இருக்குண்ணி..."

அதற்கான பதிலும்.. ராஜேஸ்வரியிடமிருந்து உடனடியாக வந்துவிடும்.. மேகலாவின் வற்புறுத்தலுக்கு கிருஷ்ணமூர்த்தி புன்னகையைத்தான் பதிலாகக் கொடுப்பார்.. ராஜேஸ்வரிதான் வார்த்தைகளில் பதில் சொல்வாள்... அவளின் அந்த நிமிர்வு மேகலாவுக்கு பிடித்துப் போனது...

"ராஜேஸ்வரியின் வளர்ப்பில்ல... அப்படித்தான் இருக்கும்..."

ராதிகாவின் செயல்களைப் பாராட்ட வேண்டுமென்றால் மேகலா இப்படிச் சொல்லித்தான் பாராட்டுவாள்..

"யாரு பெத்த பொண்ணு.. ராஜேஸ்வரி பெத்த பொண்ணாச்சே..." என்று சிலாகிப்பாள்...

பாலமுரளி மேகலாவின் பாராட்டுதலை அடிக்கு கிண்டல் செய்வான்...

"மாமியார் மெச்சின மருமகள்ன்னு கேள்வி பட்டிருக்கேன்ம்மா.. சம்பந்தியை மெச்சும் சம்பந்தி இப்பத்தான் பார்க்கிறேன்..." என்பான்...

"போடா.. உனக்கு எல்லாமே கேலிதான்..."

இப்படிச் சொல்லும் மேகலாவின் முகத்தில் அந்த பிணைப்பின் வலிமை பிரதிபலிக்கும்...

தேனூத்தில் இருக்கும் அந்த ஒருநாளில்.. குற்றாலம் பார்க்க கீதாவும்.. சுந்தரும் போய்வருவது வழக்கமாக இருந்தது.. அவர்களின் துணையாக மீனாட்சியும்.. நாச்சியப்பனும் போய் வருவார்கள்.. அப்படி சென்றிருந்த சமயத்தில் ஹேமாவை குற்றாலத்தில் சந்தித்தவர்கள்.. அவளது அழைப்பை மதித்து.. தென்காசியிலிருந்த அவளின் வீட்டிற்கும் போய் வந்து விட்டார்கள்...

"ஹேமாக்காவைப் பார்த்தோம்க்கா..."

டைனிங் டேபிளில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது சுந்தர் உற்சாகமாகச் சொல்ல.. ராதிகாவின் மனதில் பதட்டம் சூழ்ந்தது.. பரிமாறிக் கொண்டிருந்தவளின் கை நடுங்க ஆரம்பித்தது.. சுந்தரை நிமிர்ந்து பார்த்த முரளியின் கடினமான முகத்திலிருந்து அவளால் எதையும் கண்டு கொள்ள முடியவில்லை...

"அவளை எங்கேடா பார்த்தீங்க..?" ராஜேஸ்வரி ஆர்வமாக விசாரித்தாள்...

"குற்றாலத்தில்ம்மா.. உனக்குத் தெரியுமா ராது.. ஹேமாக்காவின் குழந்தை என்கிட்ட அப்பிக்கிருச்சு.. லோ.. குவிட்.. பேபி.." கீதா ரசித்துச் சொன்னாள்...

"ஏன் ராதிகா.. நீ அடிக்கடி அவளைப் பார்க்கிறதுண்டுதானே..?" கிருஷ்ணமூர்த்தி கேட்ட போது.. ஆமாம் என்று சொல்ல முடியாமலும்.. இல்லையென்று மறுக்க முடியாமலும்.. தோராயமாக ஒரு திசையில் தலையை ஆட்டி வைத்தாள் ராதிகா...

"இல்ல தம்பி.. ராதிகா ஹேமாவைப் பார்க்கப் போகிறதில்ல.. அவளும் இங்கே வாரதில்ல..", மேகலாதான் ராதிகாவின் சார்பாக பதில் சொன்னாள்...

"ஆச்சரியமாயிருக்கே.. உங்களுக்குத் தெரியாது அத்தை.. இவளும் ஹேமாக்காவும்.. 'மாற்றாள்' போல ஒட்டிக்கிட்டே அலைவாங்க...", கீதா ஆச்சரியப்பட்டாள்..

"அதென்னடி 'மாற்றாள்..'?" ராஜேஸ்வரிக்கு புரியவில்லை..

"அதான்ம்மா.. 'மாற்றான்'னு ஒரு சினிமாவிலே ரெட்டைப் பிறவியான ஹீரோ ஒட்டிக்கிட்டே அலைவாங்க.. அதைத்தான் இவ சொல்ற..", சுந்தர் விளக்கம் சொன்னான்..

"சினிமாவைக் கூட நீ விட்டு வைக்க மாட்டியாடி..? என்ன பெண்ணோ தெரியலை... நானும் போன தடவையே கேட்கனும்னு நினைச்சேன் ராதிகா.. உனக்கும் ஹேமாவுக்குமிடையே ஏதாவது சண்டையா..? இதோ

இருக்கிற தென்காசியில அவ இருக்கா.. உங்க ரெண்டு பேருக்குமிடையே போக்கு வரத்தே இல்லை போல இருக்கே..."

ராஜேஸ்வரி கேட்டு விட்டாள்.. எந்தக் கேள்வியை எதிர் நோக்க ராதிகா பயந்தாளோ.. அந்தக் கேள்வி அவளுடைய பிறந்த வீட்டிலிருந்து கிளம்பி வந்து விட்டது.

என்னவென்று அவள் சொல்வாள்..? கடந்து வந்த வாழ்வுப் பாதையின் நிகழ்வுகளை மறக்க அவள் முயன்று கொண்டிருக்கும் போது.. அந்த நிகழ்வை எப்படிச் சொல்லுவாள்..?

சாய்ந்து கொள்ளத் தோள் தேடி..
கால் சளைக்க நடந்து விட்டேன்...

ராதிகாவின் அமைதியில் கிருஷ்ணமூர்த்தி கூட நிமிர்ந்து அவளைப் பார்த்தார்.. என்ன சொல்வதென்று தெரியாமல் அவள் தவித்துக் கொண்டிருக்கையில் அவளை மீட்பதைப்போல முரளி உதவிக்கரம் நீட்டினான்.

"அது ஒன்னுமில்ல அத்தை.. ஹேமாவோட கல்யாணத்துக்கு எங்களால போக முடியல.. அவளுக்கு அந்த கோபம்..."

"அப்படியா ராதிகா..?" ராஜேஸ்வரி கேட்டாள்..

"ஆமாம்மா..." ராதிகா நன்றியுடன் கணவனைப் பார்த்தாள்...

"அப்ப.. நீயாவது அவளைப் பார்க்க போயிருக்கலாமில்ல..?" ராஜேஸ்வரி விடவில்லை...

"எப்படிப் போவாங்க..?"

எப்போதும் போல மீனாட்சி.. முந்திரிக் கொட்டையாக மூக்கை நுழைத்தாள்...

"இதென்ன கேள்வி மீனாட்சி.. காரில போகனும்.. இல்லேன்னா நடந்துதான் போகனும்.." கீதா பதில் கொடுத்தாள்...

"ரெண்டும் சரிதான்ம்மா.. அதுக்கு முதல்ல உடம்பு சொகமாயிருக்கனுமில்ல.. அதானே முக்கியம்..?"

மீனாட்சி அலட்டிக் கொள்ளாமல் கேட்டதில் ராஜேஸ்வரி பதறி விட்டாள்...

"உடம்பு சுகமில்லாம இருந்துச்சா..? எப்ப ராதிகா..? ஏன் என்கிட்டச் சொல்லலை...?"

"ஒருநா.. ரெண்டு நான்னா சொல்லியிருப்பாங்க.. இவங்கதான் சரக்குன்னா காய்ச்சலில் விழுந்துருவாங்களே.."

மீனாட்சி அதிர்வெடியைப் பற்ற வைக்க.. ராதிகாவின் பிறந்த வீட்டினர் சாப்பாட்டை மறந்தார்கள்..

"இவ காய்ச்சலில் விழுவாளா..? இருக்காதே...

இவதானே மத்தவங்கள காய்ச்சலில் விழவைப்பா.." கீதா யோசனையுடன் தமக்கையை ஆராய்ச்சியாகப் பார்த்தாள்..

"அக்காவுக்கு காய்ச்சல் வர சான்ஸே இல்லை மீனாட்சியக்கா.." சுந்தர் அடித்துச் சொன்னான்..

"ராதிகா ஆரோக்கியமானவ.. எங்க வீட்டில இருந்தப்ப இவ தலைவலின்னு கூடச் சொன்னதில்ல.." ராஜேஸ்வரி மனதை மறைக்காமல் பேசிவிட்டாள்..

ராதிகாவுக்கு பயம் வந்து விட்டது.. இந்த வார்த்தைகளை புகுந்த வீட்டில் எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்ற கவலையுடன் அவள் மேகலாவைப் பார்த்தாள்.. அவள் முகத்தில் வேறொரு கவலை சூழ்ந்திருந்தது.. மருமகளுக்கு காய்ச்சல் வரும் மர்மத்தை அவள் அறிந்து வைத்திருந்ததால்.. அதை மறைத்து எப்படிப் பேசுவது என்ற தவிப்புடன் அவள் மகனைப் பார்த்தாள்..

'இவனால்தான் எல்லா வினையும்.. கோபம் வந்தா கண்ணு.. மண்ணு தெரியாம கையை நீட்டி வைச்சு.. பெண்டாட்டியை காய்ச்சலில் விழ வைப்பான்.. அந்தக் கதையை பெண்ணைக் கட்டிக் கொடுத்தவங்ககிட்டச் சொல்ல முடியுமா..?'

முரளிக்கு எந்தவிதக் கவலையுமில்லை.. அவன் இயல்பாக கீதாவைப் பார்த்துப் புன்னகை செய்தான்..

"உங்க அக்காவுக்கு வந்த காய்ச்சலைப் பத்தி ஏற்கனவே உன்கிட்டச் சொல்லியிருக்கேனே கீதா.."

"ஆமாம் அத்தான்.. எனக்கும் நினைவிருக்கு.. அப்பவே இவளுக்கும் காய்ச்சலுக்கும் காத தூரம்ன்னு நானும் சொன்னேனே.. உங்களுக்கு அது நினைவில்லையா..?"

"உனக்கே நினைவிருக்கும்போது எனக்கு மட்டும் மறந்து போகுமா? எல்லாம் நினைவிருக்கு.. இவ உங்க வீட்டில இருந்தப்ப எல்லோரையும் அரட்டிக்கிட்டு இருந்தா.. அதனால காய்ச்சலும் இவளக் கண்டா காத தூரத்துக்கு ஒடிருச்சு.. எனக்குப் பெண்டாட்டியாகி என்கூட வந்த பின்னாலே.. எதைக் கண்டாலும் இவ அரண்டு நிக்கிறா.. அதான் காய்ச்சல் இவள போட்டுப் பார்த்துருச்சு.."

"அப்படியா ராது..?"

"இப்பக்கூடப் பாரேன்.. எப்படி அரண்டு போய் நிற்கிறான்னு.. தட்டைப் பார்த்து குருமாவை ஊத்துடி.."

"அட.. ஆமாம் அத்தான்.."

கீதா சிரிக்க.. பாலமுரளி பேச்சின் திசையை மாற்றி விட்டான்.. மாமியாரும்.. மருமகளும்.. நிம்மதிப் பெருமூச்சுடன் பரிமாறுவதை தொடர்ந்தார்கள்.. சாப்பிட்ட விருந்தினர் தூங்கப் போய் விட.. ராதிகா மாடியேறினாள்.. ஹேமாவின் வீட்டிற்கு கீதாவும்.. சுந்தரும் போனதற்காக முரளி எப்படியெல்லாம் கோபித்தக் கொள்ளப் போகிறானோ என்ற பயம் அவளைப் பிடித்து ஆட்டி வைத்துக்கொண்டிருந்தது..

கதவைத் தாழிட்டுவிட்டுத் திரும்பிய போது.. முன்னறையில் லேப்–டாப்பை மடியில் வைத்துத் தட்டிக் கொண்டிருந்த முரளி அவளை அழைத்தான்..

"என்.. என்னங்க..?" பதட்டத்தில் ராதிகாவின் தொண்டை உலர்ந்து விட்டது..

"என்னாச்சு.. உனக்கு..?" விசித்திரமாக அவளைப் பார்த்தான் முரளி..

"ஒன்... ஒன்னுமில்லையே..." வார்த்தைகள் தந்தியடிக்க.. ராதிகா கண் கலங்கி விட்டாள்...

எந்தக் கடவுள் தந்த வரமோ.. கொஞ்ச நாளாகத்தான் அவன் அவளிடம் இணக்கமாகப் பேசிக் கொண்டிருக்கிறான்.. சுந்தரும்.. கீதாவும் செய்த ஹோமா வீட்டுப் பரவேசத்தால் அவளுக்கு என்னவெல்லாம் பாட்டுக் கிடைக்கப் போகிறதோ என்று அவள் மனம் கலங்கியது...

'இந்த மீனாட்சியைச் சொல்லனும்.. அவதான் அடிக்கடி வாய் வைத்தா.. இப்பல்லாம் சின்னம்மாவுக்கு காய்ச்சலே வரதில்லையேன்னு ஏக்கப்பட்டுத் தொலைச்சா.. அவ ஆசைப்படி இன்னைக்கு ராத்திரியே காய்ச்சல் வரப் போகுது...'

விடிவதற்குள் காய்ச்சல் வரப் போவது நிச்சயம் என்ற நினைவில் அவள் விழியில் நீர் முத்துக்கள் உருண்டு திரண்டன...

"என்னடி.. பித்துப் பிடிச்சாப்புல நிக்கிற..?"

"இல்லையே.."

"இல்லையா.. தண்ணி வேணும்னு திரும்பத் திரும்பக் கேட்கிறேன்.. நீ அசையாம நின்னுட்டு.. இல்லைங்கறியே..."

"அதில்லைங்க... நீங்க வேற ஏதும் கேட்கறிங்களோன்னு நினைச்சேன்"

"நினைப்ப.. நினைப்ப.. வரவர.. நீ ஒரு மார்க்கமாத்தாண்டி இருக்க.."

முரளியின் பேச்சில் துணுக்குற்ற ராதிகா.. அவசரமாக அவன் முகம் பார்த்தாள்.. அவன் அமைதியாக லேப்–டாப்பின் திரையைக் கவனித்துக் கொண்டிருந்தான்.. அவன் கேட்ட தண்ணீர் வராததில் நிமிர்ந்தவன்.. அவளது பார்வையைக் கண்டதும் புருவங்களை உயர்த்தினான்..

" ராதிகா..?"

" ஊம்.."

அவள் உடல் தூக்கிப் போட அவனைப் பார்த்ததும் அவனது புருவங்கள் முடிச்சிட்டன.. எழுந்து அவளருகே சென்று.. அவள் முகத்தை நிமிர்த்தி.. விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்..

அவற்றில் தெரிந்த சஞ்சலத்தில் என்ன நினைத்தானோ.. அவள் கையைப் பிடித்து அழைத்துச் சென்று படுக்கையில் அமர வைத்த விட்டு.. அவனாகவே தண்ணீர் ஜக்கை தேடி எடுத்துக் குடித்து முடித்தான்..

அவளிடமும் கொடுத்து குடிக்க வைத்தான்.. விளக்கை அணைத்து விட்டு.. அவளைத் தன் கை வளைவிற்குள் இழுத்துக் கொண்டான்..

"மானைப் போல மிரண்டு விழிக்கறியேடி.. என்கிட்ட உனக்கெதுக்கு பயம்..?"

ராதிகாவிற்கு தன் செவிகளையே நம்ப முடியவில்லை.. தூங்க விடாமல் விடியவிடிய குற்றப் பத்திரிக்கை வாசித்து உயிரை எடுக்கப் போகிறான் என்று எதிர்பார்த்து வந்தால்.. அவன் கனிவோடு கட்டி அணைக்கிறானே..

" உங்களுக்க என்மேல கோபமில்லையா..?" குழந்தையாக அவள் கேட்டாள்..

வயிற்றில் அவனது குழந்தையைச் சுமந்து கொண்டு... குழந்தைபோல அவள் பேசிய விதத்தில் அவனக்கு சிரிப்பு வந்தது...

"எதுக்கு கோபம் வரனும்..?" விளையாட்டாக அவள் தலையில் முட்டினான் முரளி..

அந்த இதமான சூழ்நிலையைக் கெடுத்துக் கொள்ள ராதிகாவிற்கு விருப்பமில்லைதான்.. ஆனாலும்.. அதைச் சொல்லாமலிருக்க அவளால் முடியவில்லை..

"ஹேமா வீட்டுக்கு.. கீதாவும்.. சுந்தரும் போய் வந்திருக்காங்களே.. அதுக்கு கோபம் வரலையா..?"

அவள் சொல்லி விட்டாள்.. விலகி அவள் முகம் பார்த்தவனின் விழிகளில் ஆச்சரியம் மிதந்தது..

"அவங்கதானடி போய் வந்திருக்காங்க..? அதுக்கு உன்மேல எதுக்காக கோபப் படனும்..?"

அவன் கேள்வியில் ராதிகாவிற்கு மயக்கமே வந்து விட்டது...

'என்னடா இது.. எப்பயிருந்து இவன் இவ்வளவு நியாயக்காரனா மாறினான்..?'

இவ்வளவு குணசாலியாகவும் கணவன் பேசக்கூடும் என்பதை அது வரை அறிந்திராத ராதிகா மலங்க மலங்க விழித்தாள்..

ஹேமா என்ற பெயரைக் கேட்டாலே அவனுக்கு எரியும்.. அவன் வழியில் தென்பட்டு விட்டால்.. அன்று முழுவதும் ராதிகாவை அவன் வார்த்தைகளாலேயே வறுத்தெடுத்து விடுவான்.. வேறு வழியின்றி அவளைப் பேச அனுமதித்துவிட்டு.. அவளைத்தான் திட்டுவான்..

அப்படிப்பட்டவனா இப்படி நியாயம் பேசுகிறான்..?

"அவங்க தெரியாமப் போயிட்டாங்க.." அவள் தடுமாறி விளக்கம் சொன்னாள்..

"எனக்கும் தெரியும்டி.. நீ அலட்டிக்காம படுத்துத் தூங்கு.." அவள் இமைகளில் அவன் முத்தமிட்டான்..

"அதில்லைங்க.. அவங்களுக்கு.. அவ மேல பிரியம் ஜாஸ்தி.."

"சின்னவயசில இருந்து பார்த்துப் பழகிவைங்க மேல பிரியம் வருவது இயற்கைதானே ராதிகா.."

"அம்மாவும்... அப்பாவும் கூட அவ பேச்சைப் பேசிட்டாங்க..."

"அந்த அளவுக்கு அந்தப் பொண்ணு மேல பாசம் வைச்சிருக்காங்க... நீ.. தூங்கு"

ராதிகாவுக்கு அதற்கு மேல் பேச வேண்டிய தேவையில்லாமல் போய் விட்டது.. அவன் கோபப்பட மாட்டான் என்பதே அவளுக்குப் பெரிய நிம்மதியைக் கொடுக்க.. அவன் மார்பில் தலைவைத்துக் குழந்தை போலத் தூங்கி விட்டாள்.. அவளை அரவணைத்த முரளி.. அவள் தூங்கும் வரை அவள் முடி கோதிக் கொண்டிருந்து விட்டு.. தானும் தூங்கிப் போனான்..

மறுநாள் பொழுது புலர்ந்தபோது.. என்றும் இல்லாத வகையில் மனதுக்குள் புத்துணர்வு உதித்திருப்பதை உணர்ந்தாள் ராதிகா..

குளித்து விட்டு கீழே இறங்கியவர்.. காபியுடன் திரும்பி வந்தாள்.. உடற்பயிற்சி செய்து கொண்டிருந்த பால முரளிடம்..

"ஒரு ஆலயமாகும் மங்கை மனது...
அதை அன்றாடம்..

கொண்டாடும் காலைப் பொழுது..
நல் காலைப் பொழுது..."

என்று பாடியபடி.. காபியையும்.. பேப்பரையும் நீட்டினாள்.. அவளின் அந்த உற்சாகத்தில் மனம் லயித்தான் பால முரளி...

"என்னடி.. பாட்டெல்லாம் தூள் பரக்குது.." என்று கேட்டபடி இரண்டையும் வாங்கிக் கொண்டான்..

"அது அப்படித்தான்.." என்றபடி.. கட்டிலில் கருண்டு கிடந்த மெத்தை விரிப்புகளையும்.. தலையணைகளையும் சரிசெய்ய ஆரம்பித்தாள் ராதிகா.. அவரின் வாய் தன் போக்கில் பாடிக் கொண்டிருந்தது..

அவளின் பாடலை ரசித்தபடி காபியை உறிஞ்சிக் கொண்டிருந்த முரளி.. பேப்பரை பார்வையிட மறந்தவனாக அவனைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான்..

குளித்து.. முடிந்து.. ஈரத்தலையை டவலில் சுற்றியிருந்தவளின் நெற்றி வகிட்டில் குங்குமம் பளீரிட்டது..

அவளின் குடும்பப் பாங்கான அழகில் அவன் ஈர்க்கப்பட்டான்..

"குலமகள் அவள் கோலம்..
குங்குமச் சிலையாகும்..
தேவனின் சன்னதி...
தேவியென் நிம்மதி..."

பாடிக் கொண்டிருந்தவனை பின்னால் நின்று அணைத்து இறுக்கிக் கொண்டவன்.. அவள் காதோரமாக முணுமுணுத்தான்...

"டாக்டர் என்னன்னா.. உன்னைப் பக்குவமா தொடனும்னு அறிவுரை சொல்றாங்க.. நீ என்னன்னா.. பச்சக்குன்னு அழகாயிருந்துக்கிட்டு.. என் மனசில ஆசைத்தீயை பத்த வைக்கிற.. நான் என்னதாண்டி செய்யறது..? "

அவன் நியாயம் கேட்டான்.. அவள் அவனுக்கு நியாயம் செய்தாள்..

அவன் பார்த்த பார்வைகளில்
என் உயிர் வாழ்ந்ததென்ன தோழி..!

"காய்ந்த தென்னை மரக் கிளைகள் விழுந்த கிடக்க அவற்றைத் திரட்டி ஓரமாகப் போட்டுக் கொண்டிருந்தான் நாச்சியப்பன்.. காய்ந்த தென்னங்கீற்றுக்களை கத்தியால் சீவி.. விளக்குமாறாக மாற்றிக் கொண்டிருந்தாள் மீனாட்சி"

சிட்டுக் குருவியின் சுறுசுறுப்போடு வேலை செய்து கொண்டிருந்தவளைப் பார்த்த நாச்சியப்பன் அவளைக் கடிந்து கொண்டான்..

"ஏ..புள்ள.. எதுக்காக இப்படி விரல் நோக கீத்தை அறுத்துக்கிட்டு இருக்கிறவ..?"

"ஊம்..? பார்த்தாத் தெரியல.. விளக்குமாற செஞ்சுக்கிட்டு இருக்கேன் மச்சான்.."

அவளது 'மச்சான்' என்ற அழைப்பில் மயங்கிப் போனான் நாச்சியப்பன்.. கைவேலையை விட்டுவிட்டு.. அவளருகே வந்து தென்னை மரத்தின் அடியிலிருந்த கனமான வேர்த்திண்டில் அமர்ந்தவன் அவள் மீது ஒரு கள்ளியை விட்டு எரிந்தான்...

அது அவள்மேல் பட்டுத் தெறிக்க.. அவள் சரசமாகச் சிரித்தாள்..

"ஏண்டி.. எதுக்காக இந்த வேலைக் கழுதய அதிகப் படுத்திக்கற..?"

"தோப்பைக் காவல் காக்கிற பொறுப்பு நம்மளது... இதில இருக்கிற காய்க்கு மட்டும்தான் நாம கணக்குக் கொடுக்கணும்... மத்தபடி இந்த காய்ஞ்சு போன கீத்துக்கள்ளாம் கணக்குச் சொல்ல வேணாமுன்னு பெரியம்மா சொல்லிட்டாங்க.. மட்டயத்தான் சூளைக்கு அனுப்பனுமே..."

"அதுக்கு..?"

"புரியாம பேசாதே மச்சான்.. இந்த காய்ஞ்சுபோன மட்டையில நம்ம வீட்டு விரகுக்கானது போக மிச்சத்தை செங்கச் சூளைக்கு அனுப்பனும் காய்ஞ்சு போன

தென்னங்கீத்தில விளக்குமாற்றை செஞ்சு.. சந்தையில வித்தா காசு கிடைக்கும்.."

"ஏன்புள்ள.. காசு கிடைக்குதுங்கிறதுக்காக.. உடம்பு நோக நீ வேலையைக் கூட்டிக்கனுமா..?"

"அங்கே மட்டும் என்னவாம்..? இந்த விட்ட விடியக்காலைல எதுக்காக நீ மட்டையைச் சேர்க்கிற..?"

"செங்கல் சூளைக்கு காய்ஞ்ச மட்டய அனுப்பனும்டி.."

"இத்தனை நாளா இத ஏத்திப் போக மர வண்டி வரும்.. இப்ப நீ வண்டிய வாடகைக்கு எடுத்து நீயே ஏத்திப் போக ஆரம்பிச்சிருக்கயே.. அது எதுக்காம்..?"

"என்னடி புள்ள.. தெரியாததைப் போலக் கேட்கிறவ.. அதுக்கான கூலிய தனியா எடுத்துக்கலாமில்ல.."

"அதத்தான் நானும் செய்யறேன்.."

"ஏண்டி.. இதுக்கா உன்ன நான் கட்டிக்கிட்டு வந்தேன்..? ஏண்டி வேலையைக் கூட்டிக்கறே..?"

"நீயேன் கூட்டிக்கறே.."

"நான் உனக்குப் புருசன்.. நேத்து வரைக்கும் ஒண்டிக்கட்ட.. பார்த்த வேலைய மட்டும் பார்த்தேன்.. இன்னைக்கு அப்படியா.. உன் கழுத்தில தாலியக் கட்டி குடும்பமா ஆயிட்டேன்.. நாளைக்கே நமக்கு புள்ள குட்டி பொறக்கும்.. குடும்பச் செலவு அதிகமாகும்.. அதுக்கெல்லாம் சம்பாத்தியத்தை அதிகப் படுத்திக்க வேணாமாடி.."

நாச்சியப்பனின் பொறுப்பான பேச்சில்.. அவன்மீது வாஞ்சை கொண்டாள் மீனாட்சி..

"ஏன் மச்சான்.. உனக்கே இம்புட்டுப் பொறுப்பு இருந்தா.. பொம்பள எனக்கு எம்புட்டுப் பொறுப்பு இருக்கும்..? நானும்.. நாளைக்கு பொறக்கப் போற.. புள்ள குட்டிக்காகத்தான் இப்பவே சேர்த்து வைக்க ஆரம்பிக்கறேன்.."

அவனை சரசத்துடன் பார்த்தபடி.. அவள் தென்னங்கீற்றை நேர்த்தியாகக் கிழித்துக் கொண்டிருந்தாள்.. அவளின் அந்தச் செய்கையில் நாச்சியப்பனின் மனதில் மோகத்தீ மூண்டெழுந்தது..

"நாளப் பின்ன புள்ள குட்டி பொறக்கப் போகுதுன்னு காசு சேர்த்து வைக்கறியே.. அதுக்கு முதல்ல.. புள்ள குட்டி பொறக்கிறதுக்கான வழியை யோசிக்கறயா..?"

நாச்சியப்பனின் விகடப் பேச்சில் மறைந்திருக்கும் மறைமுக அழைப்பைப் பற்றி மீனாட்சிக்கா தெரியாது..? அவனுக்கே அவ்வளவு தெரியும்போது.. அவளுக்கு எவ்வளவு தெரியும்..!

"நான் மட்டும் யோசிச்சு என்ன கதைக்கு ஆகப் போகுது மச்சான்..? நீயுமில்ல சேர்ந்து யோசிக்கனும்.."

அவள் போட்ட போட்டில் அயர்ந்து விட்டான் நாச்சியப்பன்...

"மீனாட்சி.."

வசிய மருந்தால் தாக்கப்பட்டவன் போல.. மீனாட்சியின் அருகே நகர்ந்து அவள் இடுப்பை வளைத்துக் கொண்டவனை பொய் கோபத்துடன் முறைத்தாள் மீனாட்சி..

"தள்ளி உட்காருய்யா.."

"அது எதுக்கு..?"

"வேலையாய் இருக்கேன்.. கண்ணுக்குத் தெரியுதா..?"

நாச்சியப்பனின் கண்ணுக்கு தெரிந்ததெல்லாம்.. அவளது இழுத்துச் செருகியிருந்த புடவையில் கீழாகத் தெரிந்த அவளின் முழங்கால்களும்.. இடுப்பும்தான் என்பதைத் தெரிந்து கொண்டே அவள் நொடித்தாள்..

"அதை அப்புறமாய் பார்த்துக்கலாம்டி.." அவன் கெஞ்சினான்..

"ம்ஹூம் உனக்கு வாக்கப்பட்டு.. இந்த தென்னங்கீத்தை அறுக்கிறதத் தவிர வேற எதை நான் பார்த்தேன்..?" அவள் வேண்டுமென்றே பெருமூச்சை விட்டாள்..

"எதைடி பார்க்கனும்..?" அவளைப் பார்வையால் மேய்ந்தபடி நாச்சியப்பன் கேட்டான்.

"கூப்பிடு தொலைவில குத்தாலத்தை வைச்சுக்கிட்டு கேப்பய்யா.. கேப்ப.." மீனாட்சி பொய் கோபம் தொண்டாள்..

"அதான் ரெண்டு வாரத்துக்கு ஒருதரம்.. சின்னம்மா வோட தம்பி... தங்கைகளுக்கு காவலா போயிட்டு வாரோமில்ல புள்ள..?" நாச்சியப்பன் கேட்டான்..

"யோவ்.. காவலாத்தான் போறோம்.. காதலா போகலை.." மீனாட்சிக்கு உண்மையிலேயே கோபம் வந்து விட்டது...

"எப்படிடி.. இப்படியெல்லாம் பேசக் கத்துக்கிட்ட..?"

மனைவியின் வாக்குச் சாதுர்யத்தில் மகிழ்ந்து போய்விட்டான் நாச்சியப்பன்..

"உனக்கு கழுத்தை நீட்டியிருக்கேனில்ல.. அதான்.. உன் அறிவுக் காத்துப் பட்டு.. நானும் அறிவுக் களஞ்சியமாயிட்டேன்.. ஏன்ய்யா.. நானும்.. நீயும் தன்னந்தனியா.. ஒருதரமாவது குத்தாலத்தில குளிச்சு வந்திருக்கோமாய்யா..?"

மீனாட்சியின் கேள்வியில் தொனிந்த ஆதங்கத்தில் நாச்சியப்பன் ஆதங்கப் பட்டுப் போனான்..

"நிசம்தாண்டி.. இது ஏன் என் மரமண்டைக்கு உறைக்காமப் போச்சு..?" தன் பின்னந்தலையில் ஒரு போடு போட்டுக் கொண்டான் அவன்..

"அதான்ய்யா.. மரத்தோடு.. மரமா பொழப்பு நடத்தறியில்ல.. அதான் உனக்கு மரமண்டையாப் போயிருச்சு.. பொண்டாட்டி மேல.. ஆசையே இல்லாம அலையற.. அதனால எனக்கும் உன் மேல ஆசையில்லாம போயிருச்சு.."

அவனின் ஆசையின் அளவைத் தெரிந்திருந்தும்.. வேண்டுமென்றே அவனை வம்புக்கு இழுத்தாள் மீனாட்சி..

அவள் கைவேலையை முடித்திருந்தாள்.. செய்து வைத்திருந்த விளக்கு மாற்றுக் கீற்றுக்களை.. தனித்தனியாக பிரித்து அடுக்கி.. நாறால் இருக்கிக் கட்டி.. வரிசைப்படுத்தி அடுக்கி முடித்திருந்தாள்.. அதிக அளவில் கற்றைகள் சேர்ந்திருந்ததில் அவள் மனதிற்குள் திருப்தி வந்திருந்தது... வேலை முடிந்து விட்ட விடுதலையுணர்வில் அவள் மனம் சிட்டுக்குருவியாக விட்டுச் சிறகடித்தது.. அவள் தேகம் நாச்சியப்பனுடன் கூடுவதற்கான கூடலுக்காக விழைந்தது.. மனதின் நினைவுகள் அவளுக்குள் எழுப்பிய உணர்வலைகளில் அவள் சிருங்காரத்தை உணர்த்தியவளாக எழுந்து நின்றாள்..

" உனக்காடி என்மேல ஆசையில்ல..?"

அவளைத் தொட்டு இழுக்க அவன் முயன்றபோது.. அவள் போக்கு காட்டி விலகி ஓடினாள்.. ஓடினவளின் சேலை முந்தானை அவன் கையில் அகப்பட்டுக் கொள்ள.. அவன் வசமாக அதைப் பிடித்து சுண்டியிழுந்தான்.. அவன் மேல் பூமாலையாக அவள் விழுந்தாள்..

"அம்மாக் கண்ணு..
சும்மா சொல்லு..
ஆசையில்லையோ...
என்மேல் ஆசையில்லையோ...
உன்னை அள்ளிக்
கட்டிக் கொள்ளும் போது
எண்ணம் வல்லையோ...
அந்த எண்ணம் வல்லையோ..."

அவன் கேலிக்குரலில் பாடியபோது.. அவனது ஆண்மைநிறைந்த அந்த அணுகுமுறையில் அவள் கிளர்ச்சி கொண்டாள்.. யாருமற்ற தோப்பின் தனிமையில்.. மனதுக்குப் பிடித்தவனுடன் கூடுவதில் உள்ள சுகத்தை அறிந்திருந்தவளின் உடல்.. அந்தக் கூடலுக்கான துடிப்பை அவளுக்குள் உணர்த்திக் கொண்டிருந்தது..

"ஏதோ சொன்னேன்..
கோபம் கொண்டேன்..
பாசமில்லாம...
நீங்க இப்போச் சொன்னா..
எதுவும் செய்வேன்
கோபம் கொள்ளாம..."

அவளின் காதலை அவள் உணர்த்தி விட.. அவனுக்குள் மோகவெறி பொங்கி எழுந்தது.. அடங்காத முரட்டுக் காளையைக் கூட அடக்கி விடலாம்.. ஆனால்.. அடங்காத கன்னி மனத்தை அடக்கி அடைவது எத்தனை சிரமமான காரியம் என்பதைப் புரிந்து வைத்திருந்த நாச்சியப்பன்.. ஆண்மையின் கர்வம் கொண்டான்.. அவளை வெற்றி கண்டுவிட்ட மமதை அவன் குரலில் தெரிய..

"ஆஹா.. ராணி உன்னப்போல
ஒரு ராசாத்தி உண்டோ..?"

அவளை இடுப்பில் கை கொடுத்து அலேக்காக அவன் தூக்கி.. அவன் தோளுக்கு மேலே உயர்த்தினான்...

"ஆஹா... மாமா..! உன்னப்போல
நல்ல மாப்பிள்ள உண்டோ..?"

அவன் தோளிரண்டில்.. கையிரண்டையும் ஊன்றி அவன் முகம் பார்த்துப் பாடினாள் மீனாட்சி...

"நானா வந்து.. தானா நின்னா...
நல்லாயில்லையின்னு..
நான் ஒடிப்பார்த்து.. ஒளிஞ்சு பார்த்து..
வந்தேன்.. சொந்தமின்னு..."

பாடல் வரிகளில் மீனாட்சி அவளை வெளிப்படுத்திக் கொண்டிருக்க... கைதட்டல் சத்தம் பலமாக கேட்டது...

'யாரது..?'

கொலைவெறியோடு திரும்பிப் பார்த்த நாச்சியப்பன்.. பாலமுரளியும்.. ராதிகாவும் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் அவசரமாக மீனாட்சியை இறக்கி விட்டான்...

அவளும் அவன்மேல் சரிந்து இறங்கி.. இன்பமான இம்சையை அவனுக்குள் கிளப்பி விட்டு.. தன் பங்குக்கு அவனுக்கு தனிமை கிடைக்காத கடுப்பை கிளப்பி விட்டாள்...

"தூள் கிளப்பிட்ட மீனாட்சி..." ராதிகா கேலி செய்தாள்...

"இவன் மட்டும் சம்மாவா..? ஆனானப்பட்ட மீனாட்சியையே அடக்கி ஆண்டிட்டானில்ல..", பாலமுரளி நாச்சியப்பனை பாராட்டினான்...

"தோப்புப் பக்கம் போகலாமுன்னு நான் சொன்னேன் மீனாட்சி.. அங்கே என்ன இருக்குன்னு இவர் கேட்டார்.. மீனாட்சி இருக்கான்னு நான் சொன்னேன்.. இங்கே வந்து பார்த்தா 'டூயட்' பாட்டே இருக்குது.. அட..அட.. அடா.. என்னமா பாடின மீனாட்சி.. உன் எக்ஸ்பிரசனைப் பார்த்து அசந்து போயிட்டேன்... தெரியுமா..?" ராதிகா கைகளை ஆட்டியாட்டிப் பேசினாள்..

"கேலி பண்ணாதீங்க சின்னம்மா..!" பாலமுரளியின் முன்னால் டூயட் பாடி மாட்டிக் கொண்ட வெட்கத்தினால் தலைகவிழ்ந்து நின்றிருந்தாள் மீனாட்சி...

"எளநீ.. வெட்டட்டுமாங்கய்யா..?" அரை மனதாக கேட்டான் நாச்சியப்பன்...

"அதைக் குடிச்சா.. எங்க வயிறு குளிரும்.. மனசு குளிராது.. உன் தனிமையைக் கெடுத்துட்டோமோன்னு தோணும்.. அதனால அப்புறமா இளநீக்குலையை வெட்டி வீட்டுக்கு அனுப்பு.. நானும் ராதிகாவும் இப்ப அருவிக் கரைக்குப் போகிறோம்..."

பாலமுரளியின் முடிவைப் பாராட்டிய பாராட்டுதல் ராதிகாவின் விழிகளில் தெறித்து விழுந்தது... அவர்கள்

அந்தப் பக்கமாக நகர.. இந்தப் பக்கமாக.. அவசரத்துடன் மீனாட்சியை இழுத்துக் கொண்டு தோப்பு வீட்டுக்குள் நுழைந்தான் நாச்சியப்பன்...

சொல்லாலே துடிக்க வைத்தவன்..
சொல்லாமல் குளிரவும் வைத்தான்...

நுரையாக பொங்கி வந்த அருவிநீரில் தலை கொடுத்து ஆனந்தமாகக் குளியல் போட்டாள் மீனாட்சி.. தண்ணீரில் நனைந்த சேலை.. அவள் உடல் முழுவதும் ஒட்டிக் கிடக்க.. ஆண்களின் பிரிவில் நனைந்து கொண்டிருந்த நாச்சியப்பனின் பார்வை அவளது மேனியை மேய்ந்தது...

அதை ஜாடையாக பார்த்தபடி குளியலைப் போட்டவளின் மனமும் உடலும்.. சந்தோசத்தில் தத்தளித்தன...

"எதுக்குய்யா அப்படிப் பார்த்த..?"

அருவியை விட்டு வெளியே வந்ததும் அவள் கேட்டாள்...

"என் பொண்டாட்டி... நான் பார்ப்பேன்.. அதைச் சொல்ல நீ யாருடி..."

அவன் உரிமைக் குரல் கொடுத்தான்...

உலர்ந்த உடைக்கு மாறி... நனைந்த உடைகளை அலசி.. கரையில் காய வைத்தவர்கள்.. கரையில் பொறித்துக் கொடுக்கப்பட்ட மீன் துண்டங்களை வாங்கி ருசிக்க ஆரம்பித்தார்கள்...

நாச்சியப்பன் தாழ்ந்த குரலில் பேசிய அந்தரங்க பேச்சுக்களுக்கு முகம் சிவந்த மீனாட்சி.. வெட்கப் புன்னகையுடன்.. அவனை அடித்தும் கிள்ளியும்.. தனது ரசிப்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள்...

"ஹேய்.. யு..?" அவர்களின் அருகில் பெண் குரல் கேட்டது...

யாரோ.. யாரையோ அழைக்கிறார்கள்.. நமக்கென்ன வந்தது என்ற நினைவில்... தங்களின் வேலையை கண்ணும்.. கருத்துமாக அவர்கள் தொடர்ந்தார்கள்..

"நாச்சியப்பா.. ஹவ் ஆர் யு..?"

நாச்சியப்பனின் தோளில் விழுந்த மென்மையான பெண்ணின் கரம் உணர்த்திய ஸ்பரிசத்தில் அவன் மீனாட்சியை மறந்து திரும்பிப் பார்த்தான்..

"எவ.. அவ..?"

தன் மச்சானின் தோளை வேறொரு பெண் தொடுவதா என்ற கொதிப்புடன் மீனாட்சியும் திரும்பிப் பார்த்தாள்...

நாச்சியப்பன் பரவசப்பட்டு விழிக்க.. மீனாட்சி அதிர்ந்து விழித்தாள்...

அங்கே... ஷோபா நின்று கொண்டிருந்தாள்...

"இந்த மேனாமினுக்கி எதுக்காக குத்தலாம் பக்கம் வந்திருக்கா.." கடுப்புடன் அவள் முணுமுணுக்க...

"குளியல் போட வந்திருப்பாடி..." என்று பதிலுக்கு முணுமுணுத்து வைத்தான் நாச்சியப்பன்...

"ஹேய் யங் மேன்.. உன் பேர் நாச்சியப்பன்தானே.."

என்னவோ.. லண்டனில் பிறந்து.. பாரிலில் வளர்ந்தவளைப் போல தமிழை ஷோபா கடித்துத் துப்ப மீனாட்சிக்கு கடுப்பு உண்டானது...

"ஏம்மா.. போன தடவ வந்தப்போ.. நீ நல்லாத்தானே தமிழ் பேசின.. இப்ப எதுக்கு இப்படிப் பேசி வைக்கிற..?" என்று கேட்டே விட்டாள்...

ஷோபாவுக்கு என்னவோ போல ஆகிவிட்டது... அவளைப் போன்ற மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த பெண்ணிடம் கை கட்டி நிற்க வேண்டிய கிராமத்துப் பெண்.. நிமிர்வாகக் கேள்வி கேட்பதில் அவளுக்குள் கோபம் கொந்தளித்தது...

'இவ அந்த ராதிகாவுக்கு சப்போர்ட்டர் ஆச்சே...' குரோத்துடன் மீனாட்சியை முறைத்தாள் ஷோபா...

மீனாட்சி ஆடிய சாமியாட்டத்தை இன்னமும் அவள் மறக்கவில்லை...

"லுக் மேன்..! இவளைப் போல வில்லேஜ் லேடி கூடல்லாம் என்னால ஈக்குவலா பேச முடியாது... நீ ஸ்மார்ட் மேன்னு நினைச்சா.. நீயென்ன.. இவகூட குற்றாலத்துக்கு வந்து நிற்கிற..?"

ஷோபாவின் கேள்வியில் மீனாட்சிக்கு சாமி வர ஆரம்பித்து விட்டது.. அதையுணர்ந்த நாச்சியப்பன் கலவரமானான்.. அதை உணராத ஷோபாவோ.. அவனை வசியம் பண்ண விரும்பியவளாக அவனை நெருங்கி மீண்டும் அவன் தோளில் கை போட்டாள்...

நாச்சியப்பன் பதறிப் போனவனாக தள்ளி நிற்க முனைய.. ஷோபா புருவம் தூக்கினாள்... அவள் மீதான நாச்சியப்பனின் மையலைப்பற்றி அவளுக்கு மிக நன்றாகவே தெரியும்.. அவளைப் பார்த்து ஜொள்ளு விடும் ஆண்வர்க்கம் எந்த வர்க்கமாக இருந்தாலும் அவளுக்கு அதில் உடன்பாடு உண்டுதான் என்பதால் அவன் விடும் ஜொள்ளுகளை அவள் கண்டும்.. காணாமலும் ரசித்துக் கொண்டிருந்தாள்.. அப்படிப்பட்ட நாச்சியப்பன்.. இன்று அவள் கை பட்டதும் அலறி.. மீனாட்சியின் முகம் பார்த்து நடுங்குகிறான் என்றதும்.. ஷோபாவிற்கு என்னவோ இருக்கிறது என்று புரிந்து விட்டது...

'சம்திங் இஸ் ராங்...'

அதற்குள் மீனாட்சி பத்ரகாளியாக மாறிவிட்டாள்...

"என்னாய்யா.. ஸ்மார்ட்டு மேனு.. அதான் அம்மணி கேட்கிறாப்புல இல்ல... என் கூடல்லாம் எதுக்காக குத்தாலத்துப் பக்கம் குளிர்காத்து வாங்க வந்தேன்னு.. பதிலைச் சொல்லு..."

"அவங்க தெரியாம பேசிப்புட்டாங்க மீனாட்சி..."

"இல்லய்யா.. நான்தான் தெரியாம கழுத்தை நீட்டிட்டேன்..."

"நீ.. வா.."

"அது.. எதுக்கு..?"

"உட்கார்ந்து பேசலாம்..."

"அது என்ன தேவைக்கு..? என் கூடல்லாம் உன்னப் போல ஸ்மார்ட்டு மேனு உட்கார்ந்து பேசலாமா..? அதுக்குத்தானே அம்மணி லண்டன்ல படிச்சுப்புட்டு.. குத்தாலத்துப் பக்கமா காத்தாட வந்திருக்குதே.. இது கூட உட்கார்ந்து பேசு.. அப்பத்தான் உனக்கு குளுகுளுன்னு இருக்கும்.."

"ஏண்டி இப்படிப் பேசற...?"

"தப்பாப் பேசிப்புட்டேனா..? இல்லையே... சரியாத்தானே பேசறேன்.. இந்த அம்மணிக்கு எப்பவுமே அடுத்தவ புருசன் மேல கண் வைக்கத்தான் புடிக்கும்.. அடுத்தவ புருசன்கூட ஊர்சுத்தினாத்தான் புடிக்கும்..

அடுத்தவ புருசனோட தோள்மேல கை போட்டாத்தான் பிடிக்கும்..."

மீனாட்சியின் அடுக்குப் பேச்சில் அடுத்தடுத்து வெளிப்பட்ட 'அடுத்தவ புருசன்' என்ற சொற்றொடரில் ஷோபாவுக்கு விவரம் பிடிபட்டு விட்டது...

உண்மையை அறிந்து கொண்டவள் வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்காமல் ஆச்சரியப்பட்டு விட்டாள்...

"ஏன் நாச்சியப்பா.. நீ இவளையா மேரேஜ் பண்ணியிருக்க..?"

மீனாட்சி கண்.. நெற்றிக் கண்ணாக.. நாச்சியப்பன் அதன் வெப்பம் தாங்காமல் புழுவாக நெளிந்தான்...

"வேற எவளைக் கல்யாணம் பண்ணியிருந்தா இந்த அம்மணிக்கு குளுகுளுன்னு இருந்திருக்குமாம்...?"

"ஏய்ய்.. விடுடி.. அவங்க வெள்ளந்தித் தனமா கேட்டுப்புட்டாங்க.."

"யோவ்.. இந்தப் பொம்பளையைப் போயி வெள்ளந்தின்னு சொன்னேன்னு வையய்யு.. உன் ஆயுசுக்கும் நீ வீட்டுப் பக்கம் வந்திர மாட்டே.. என்ன யாருன்னு நினைச்சே.. நான் பெரியம்மாவோட வளர்ப்புய்யா... அவங்ககிட்டப் போயி.. இப்படியிப்படின்னு சொல்லி கண்ணைக் கசக்கினேன்னு வையய்யி.. நீ தேனூத்து பக்கமா தலைவைச்சுக் கூடப் படுக்க முடியாது.."

அதை நாச்சியப்பனும் நன்கு அறிவான்.. அவனுடைய வருத்தமேவேறு.. இப்படியெல்லாம் மிரட்டினால்தான் அவன் மீனாட்சிக்கு உண்மையான கணவனாக இருப்பானா..? இல்லாவிட்டால் தடம் புரண்டு யார் பின்னாலேயாவது போய் விடுவானா...?

"பொறுடி.. நானும் போகுது... போகுதுன்னு பார்க்கறேன்.. நீ ரொம்பத்தான் ஏறி மேயுற... இப்ப என்னடி ஆச்சு..?"

"இன்னும் என்னய்யா ஆகனும்..? ஒரு பேச்சப் பொறுக்க மாட்டாம உனக்கு இம்புட்டு ரோசக் கழுதை பொத்துக்கிட்டு வருதே.. என் கண்ணு முன்னாலேயே.. உன் தோளு மேல இவ கையைப் போட்டு.. என்கூட உனக்கென்ன பேச்சுன்னு கேட்கிறா.. எனக்கு எப்படி இருக்கும்..?"

கேள்வி கேட்ட மீனாட்சி.. அடுத்த நொடியில் கன்னத்தில் அறையை வாங்கினாள்.. நாச்சியப்பன் ருத்ர அவதாரம் எடுத்து விட்டான்...

"எவ்வளவு தைரியமிருந்தா என்கிட்டேயே நீ இப்படியெல்லாம் பேசுவ...? திமிராடி..?"

அவன் கொதிக்க.. அடி வாங்கிய அந்த நிலையிலும்.. கொதிப்பு மாறாமல் மீனாட்சி பதில் கொடுத்தாள்..

"யோவ்.. வெறும் பேச்சுக்கே.. இந்தத் தாண்டு தாண்டறயே.. இதெல்லாம் என் கண்ணு முன்னாலேயே நடக்குதே.. நானு எந்தத் தாண்டு.. தாண்டனும்..?"

"நானாடி இதை வெத்தல பாக்கை வைச்சு அழைச்சேன்..? கருமம்.. அதா வந்துச்சு.. தோள் மேல கை போட்டுச்சு.. எதையோ பேசிச்சு.. நான் பதில் பேசாம நகந்து நின்னேனா இல்லையா..?"

அது வரை 'இவங்க' என்று பேசிக் கொண்டிருந்த நாச்சியப்பன் 'அஃது' 'இஃது' என்று அஃறிணையாய் ஷோபாவை விளித்ததில் ஷோபா நொந்தே போய் விட்டாள்.. அதிலும் 'கருமம்' என்ற அடைமொழி வேறு..

'இவனா இப்படிப் பேசறான்..?' அவளால் நம்பவே முடியவில்லை...

அவள் முதல்முறை வந்திருந்த போது அவள் பின்னால் நாய்குட்டியைப் போலச் சுற்றிய மனிதன் இன்று அவளைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன் என்கிறான் என்றால்.. அதன் பிண்ணனியில் என்ன இருக்கிறது...?

அவள் உற்றுப் பார்த்த போது.. மீனாட்சியின் கழுத்தில் தாலிக் கயிறு இருந்தது...

'ஒரு மஞ்சள் கயிறுக்கு இவ்வளவு சக்தியா..?'

இந்தியத் திருநாட்டின் மஞ்சள் கயிற்றின் மகிமையைப் பற்றி அறியாதவளாக அவள் மலைத்துப் போனாள்...

அவள் கழுத்திலும்தான் அவள் கணவன் தாலியைக் கட்டியிருக்கிறான்... வருடத்தில் பாதி நாள்கள் 'பிஸினெஸ் டிரிப்..' என்று வெளி நாடுகளுக்குப் பறந்து

விடுவான்.. கூட அவள் போக முடியாது.. வெவ்வேறு பெண்கள் போவதாகக் கேள்விப் பட்டும்.. அதை அவனிடம் கேட்க முடியாமல் சிரித்த முகமாய் இருந்து விடுவாள்..

பணம்...! அவளிடமிருக்கும் பணத்தை விட பன் மடங்கு அதிகமாக அவனிடம் இருக்கும் பணம் அவள் வாயை அடைத்து வைத்திருக்கிறது.. அவனின் அந்தஸ்தும்... பொருளாதார மேம்பாடும் அவளைக் கட்டிப் போட்டு.. காவலில் வைத்திருக்கிறது...

அழகிலும்... அறிவிலும்.. பணத்திலும்.. மீனாட்சியால் நினைத்துப் பார்க்கக் கூட முடியாத உயரத்தில் இருப்பவள்தான் ஷோபா.. ஆனாலும் அவளால் கணவனை மீனாட்சியைப் போல ஒரு கண்ணசைவில் கட்டிப் போட முடியாது...

•

ஷோபாவுக்கு.. மீனாட்சியின் மீது பொறாமை உண்டானது...

நாச்சியப்பனின் கோபமான விளக்கத்தில் கொஞ்சம் மலையிறங்கினாள் மீனாட்சி...

"அது வந்து பேசினா.. நீ பேசிப் புடுவியா.."

"பேசலைடி.. நீ பார்த்துக்கிட்டுத்தான் இருந்த..?"

"தோள் மேல கை போட்டா.. தோளக் கொடுப்பியோ.."

"அடிதாண்டி வாங்கப் போற.. நான் தள்ளி நின்னதைக் கவனிச்சியா.. இல்லையா..?"

"நம்பச் சொல்றியா...?"

"நம்புடி.. உன் புருசன் உத்தமன்டி.."

தோப்புக் கரணம் போடாத குறையாக மனைவியை சமாதானப் படுத்தி முடித்தான் நாச்சியப்பன்.. ஒரு வழியாய் சமாதானமாகி கணவனும்.. மனைவியும் கிளம்ப முனைந்தபோது...

"அத்தான் எப்படியிருக்கார் நாச்சியப்பா..?" என்று கேட்டு வைத்தாள் ஷோபா...

நாச்சியப்பன் அரண்டு போனவனாக.. பதில் சொல்லாமல் மனைவியைப் பார்க்க.. அவன் சார்பாக பதில் சொன்னாள் மீனாட்சி...

"ஊம்..? அப்பாவாகப் போகிற சந்தோசத்தில இருக்கார்.. நீ வா மச்சான்.. இந்தப் புள்ள சொந்தக் காரங்களப் பத்தி விசாரிச்சாலும்.. ஆம்பளயப் பத்திதான் விசாரிக்கும்.. பொம்பளையோட பேரு இது வாயில நுழையாது போல..."

அவர்கள் போய் விட.. ஷோபா அசையாமல் நின்று விட்டாள்.. அவள் மனதில் 'வாழ்ந்து காட்டுவேன்..' என்று குளுரைத்த ராதிகாவின் முகம் தோன்றியது...

'வாழ்ந்து விட்டாளா..? முரளியுடன் அவள் வாழ்ந்து காட்டி விட்டாளா...? இன்னும் தாயாகாமல் இருக்கிறாள் என்று அம்மா சொன்னது பொய்யா..? அவள் தாயாகப் போகிறாளா..?'

ஷோபாவின் மனதில் பொம்மைக் கணவனாக... வருடத்தில் சில மாதங்கள் வந்து போகும் அவளது கணவனின் நினைவு வந்தது.. வெம்மை தந்தது...



ஊனுருக பாடி நின்றாலும்..
உன்மனதில் நான் வரவில்லை...

நாச்சியப்பனுடன் பேசியபடி அவனுடைய சைக்கிளின் பின்பக்க இருக்கையில் மீனாட்சி உட்கார்ந்து கொள்ள... நாச்சியப்பன் அவளுக்குத் தலைவாகப் பதில் சொல்லியபடி சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தான்.. மறந்தும் ஷோபாவின் பக்கமாக அவன் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை... அதைக் கவனிக்கும் நிலையிலுப் ஷோபா இல்லை...

தூரத்தில் புள்ளியாக அவர்கள் மறைவதை பார்த்தபடி அசையாமல் நின்றவளின் அருகே வந்த அவளின் கணவன் கோகுல்..

"ஹீ ஆர் தே..?" என்று விசாரித்தான்...

"என் ரிலேடிவ் வீட்டில சர்வன்டா இருக்கிறாங்க.."

"சர்வண்ட்ஸ் கூடவா இத்தனை நேரம் ஸ்பெண்ட் பண்ணின..?"

அவன் ஆட்சேபமாகி பேசியதற்கு ஷோபா பதில் பேசவில்லை...

"இங்கே உன் ரிலேடிவ்ஸ் இருக்கிறாங்கன்னு நீ சொல்லவே இல்லையே..."

அடுத்த கேள்வி கோகுலிடமிருந்து கிளம்பி வர... லேசாக எரிச்சல் பட்டாள் ஷோபா...

"நீங்க கேட்கவில்லையே..."

"ஓ..."

அவ்வளவு பேசியதே அதிகம் என்பதைப் போல அவன் தோளைக் குலுக்கிக் கொண்டு மௌனமாகி விட்டான்.. அவர்கள் இருவரும் மௌனமாக காரை நோக்கி நடந்தார்கள்...

அடிக்கடி அவர்களைச் சூழ்ந்து கொள்ளும் மௌனத்தைப் பற்றி நினைத்துப் பார்த்தாள் ஷோபா.. வெறுமையான இந்த வாழ்வை... இன்னும் எத்தனை நாள்தான் போலியான் சிரிப்புடன் வாழ்வது என்று அவளுக்கு அலுப்பாக இருந்தது.. கடந்து போகும் கசப்பான நிகழ்வுகளை புரட்டிப் போட்டு புது வாழ்வு வாழ்ந்திடும் நாள் அவளுக்கு வாய்த்திடுமா என்ற வழிவகையே அவளுக்குத் தெரியவில்லை...

நினைத்தால் வெளிநாட்டிற்குப் பறப்பவன்.. அரிதாக குற்றாலம் போக நினைத்தது அவளுக்கு ஆச்சரியத்தை

அளித்தது.. அந்தக் குற்றாலப் பயணத்தையும் அவளுடன் போக நினைத்ததில் அதைவிட ஆச்சரியப் பட்டுப் போனாள்...

அரிதிலும்... அரிதாக அவனே அழைத்ததில் அவனுடன் கிளம்பி குற்றாலம் வந்திருந்தாள்.. வந்த இடத்தில் உறவினர்வீட்டைப் பற்றி அவள் சொல்ல வில்லையே என்று அவன் கேட்டால் அவள் அதற்கு என்ன பதிலைச் சொல்வாள்...?

ஹோட்டல் அறைக்குத் திரும்பியதும் அவன் யாருடனோ செல்போனில் பேசிவிட்டு படுத்துத் தூங்கி விட்டான்... ஷோபா பால்கனிக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றாள்.. சுற்றிலும் தெரிந்த குற்றால மலையின் பசுமையழகு அவள் மனதைக் கவரவில்லை... மாறாக.. ராதிகாவின் வெற்றிகரமான திருமண வாழ்வே அவள் மனதைப் போட்டு உறுத்திக் கொண்டிருந்தது...

கையிலிருந்த செல் போனைப் பார்த்தவளின் மனதில் ஓர் எண்ணம் பளீரென உதயமானது... முகம் ஒளிர.. செல்போனை எடுத்து குறுஞ்செய்தியொன்றை அனுப்பி முடித்தாள்... சற்று நேரத்தில் அவள் எதிர்பார்த்தபடி செல் போன் ஒலித்தது...

"ஷோபா..." என்றான் சங்கர்...

கைகளை முன்னால் கட்டியபடி புருவங்கள் முடிச்சிட ஷோபா சொன்னதை கவனமாக கேட்டான் சங்கர்...

"இது ராதிகா பேசிய பேச்சுத்தான் சங்கர்... காலேஜில் எங்க கிளாஸ் மேட்டிடம் இதைப் பேசினா.. நான் ரெகார்டு பண்ணிக்கிட்டேன்..."

"எதுக்காக..? நிச்சயமாய் எனக்கு அனுப்புவதற்காக ரிகார்டு பண்ணியிருக்க மாட்ட..."

"ஷ்யூர்... இதை பாலமுரளிக்கு அனுப்பினேன்...."

"மை.. காட்..!"

சங்கருக்கு அணைத்தும் விளங்கியதைப் போல இருந்தது... தெளிவில்லாமல் அவன் அத்தனை நாளும் அலைந்தது தெளிவாகி விட்டதைப் போல அவன் உணர்ந்தான்.

"ஏன் அப்படிச் செய்தாய் ஷோபா..?"

"உங்களுக்கும்.. ராதிகாவுக்கும் இடையே நடக்கவிருந்த மேரேஜை நிறுத்த எனக்கு வேறு வழி தெரியவில்லை..."

"என்ன காரியம் செய்துட்ட ஷோபா.. கடைசியில் உன்னால்தான் அந்த முரளியிடம் ராதிகா மாட்டிக் கொண்டாளா..?"

"ம்ம்ம்..."

"இப்போதுதான் எல்லாம் புரிகிறது.. அந்த முரளி ராதிகாவை ஏதோ ஒருவகையில் மிரட்டிப் பணிய வைத்திருக்கிறான்..."

'உன் தலை..!' என்று நினைத்துக் கொண்டாள் ஷோபா...

'போடா மடையா..! அவள் முரளியைத்தான் காதலித்திருக்கிறாள்... அது தெரியாம பேக்கு போல நான்தான் முரளியைத் தூண்டிவிட்டு அவளை மேரேஜ் பண்ணிக்கிற அளவுக்கு கொண்டு போய் விட்டுட்டேன்.. அது தெரியாம பினாத்தாதே...'

"என்மேல் ராதிகாவுக்கு விருப்பமில்லையோன்னு என் மனதில் ஒரு மூலையில் எண்ணம் இருந்தது... அது இன்றைக்குத்தான் கிளியராச்சு... அவள் என்னை இந்த அளவுக்கு விரும்பியிருக்கிறாளா..? எனக்கு இது தெரியாமல் போச்சே..."

'இப்பத் தெரிஞ்சுக்கிட்டேயில்ல.. போ.. போய் அவள் பின்னால்.. சுத்து.. கடலை போடு.. முரளிக்கும்.. அவளுக்கும் நடுவில் பள்ளம் பறித்து விடு...'

ஷோபாவுக்கு அதுதான் வேண்டியிருந்தது.. அத்தனை நாளும் அவனிடம் வெளிப் படுத்தாத ராதிகாவின் பேச்சை அன்று அவள் வெளிப் படுத்தியதற்கான காரணம் அதுதான்...

அவள் மனதிற்கு மிக நன்றாகத் தெரியும்.. ராதிகா அந்தப் பேச்சை பொய்யாகத்தான் பேசினாள் என்பது..

அந்தப் பேச்சின் வாயிலாக ஷோபாவின் பொறாமையுணர்வை தூண்டிவிட அவள் முயன்றாள்.. சங்கருடனான ராதிகாவின் திருமணப் பேச்சைப் பற்றிய செய்தியை ஷோபா அறிந்தால் எந்தவகையிலாவது அதை

தடுத்து நிறுத்தி விடுவாள் என்ற கணிப்பின்படியே அவள் அதைப் பேசினாள்...

இதையெல்லாம் என்றோ ஷோபா அறிந்து கொண்டிருந்தாள்.. ஆனால் அந்த உண்மையை பாலமுரளியிடமும்.. சங்கரிடமும் வெளிவிட.. அவளென்ன முட்டாளா..?

"தேங்க்ஸ் ஷோபா..."

'இது எதுக்குடா..?'

"காலம் கடந்தாவது இந்த உண்மையை எனக்கு நீ சொன்னாயே..."

'இது உண்மையே இல்லைடா.. அவ சும்மா ஒரு ஜீஜீபி வேலையைக் காட்டி அவ நினைத்ததை சாதிச்சுக்கிட்டா.. அது தெரியாம நான் முரளியையும் கோட்டை விட்டேன்.. உன்னையும் கோட்டை விட்டேன்..'

"எனக்கு இது போதும்..."

'எனக்கும் இது போதும்டா.. இப்படியே நீ உருகிக்கிட்டு இரு.. நீயும் நிம்மதியா தூங்க மாட்ட.. அவளையும் நிம்மதியா தூங்க விடமாட்ட.. எனக்கு வேறென்ன வேனும்..? நீயே சொல்லு...'

"உன்னால் முடிந்ததை நீ செய்து விட்ட.."

'கொஞ்சமா.. நஞ்சமா..? நிறையச் செய்து விட்டேன்.. ஆனாலும் அவளை அசைக்க முடியலையே..

ஆலமரம் போலயில்ல.. அசையாம நிற்கிறா.. உன்னால முடிஞ்சதை உன் பங்குக்கு நீயும் கொஞ்சம் செய்து பாரு..'

"இந்தப் போன் பேச்சு மட்டும்தான் இனி எனக்கு ஆறுதல்..."

'எனக்கும் அதுதாண்டா ஆறுதல்...'

"குட்பை.. ஷோபா..."

'மகராஜனாய் போயிட்டு வா..' என்று மனதில் சொல்லிக் கொண்ட ஷோபா..

"குட்பை சங்கர்.." என்று முகம் மலர விடை கொடுத்தாள்...

அவள் ஹோட்டலுக்குத் திரும்பிய போது கோகுல் விழித்திருந்தான்... சூடான காபியை வரவழைத்து உறிஞ்சிக் கொண்டிருந்தவன்.. அவளை நிமிர்ந்து பார்த்து புருவம் சுருக்கினான்..

"எங்கே போயிருந்த..?"

"ஜஸ்ட் எ வாக்கிங்..."

"ஒஹோ..."

அதற்கு மேல் கேட்க எதுவுமேயில்லாததைப் போல அவன் காபியில் கவனமாகி விட.. ஷோபா பெருமூச்சுடன் டிவியை உயிர்ப்பித்தாள்...

மீனாட்சி சொன்னதைக் கேட்ட ராதிகா யோசனையானாள்...

"நிஜமாகவே நீ ஷோபாவைப் பார்த்தியா...?"

"பின்ன.. பொய்யாவா பாத்தேன்..? ஏன் சின்னம்மா நீங்க வேற என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கறிங்க.. அந்தக் கருமத்தைப் பாத்தேன்னு சும்மா சொல்ல எனக்கென்ன கிறுக்கா புடிச்சிருக்கு..?"

"அதுக்கில்ல மீனாட்சி.. அவ வந்திருந்தா.. வீட்டுப் பக்கம் வந்திருப்பாளே.. அதுதான் கேட்டேன்.."

"உங்களுக்கு அது வேற குறையாயிருக்கா..? ஏம்மா.. அது வந்து போனா வீடு தாங்குமா..? நீங்க வேற பிள்ளைத்தாய்ச்சிப் பொண்ணா இருக்கீங்க... இப்பப் போயி ரோதனை வேணுமாம்மா..?"

"அடடா.. அவ அத்தைக்கு சொந்தக்காரி மீனாட்சி.. அதை நினைப்பில வைச்சுக்கிட்டுப் பேசு..."

"அதையெல்லாம் என்னால நினைப்பில வைச்சுக்க முடியாதும்மா.. மனுஷியாம்மா அந்த ஜென்மம்..? என் கண்ணுக்கு முன்னாலேயே.. என் புருசன் மேல கை போடுதுங்கறேன்.. அதை உணக்கையாய்.. கேட்டுட்டு.. அது விருந்தாடிக்கிட்டு வரலையான்னு என்கிட்டயே.. எதிர்கேள்வி கேட்கறிங்க.. நல்லா இருக்கும்மா உங்க நாயம்..!"

"ஐயோ மீனாட்சி.. நான் அந்த அர்த்தத்தில சொல்லலை.."

"எனக்கெ ன்னு நல்லா புரிஞ்சு போச்சும்மா..."

"அது... எது...?"

"தலைவலியும்... காய்ச்சலும் தனக்கு வந்தாத்தான் தெரியும்கிறது..."

"இப்ப எதுக்காக காய்ச்சலைக் கட்டி இழுக்கிற..? நான் நிம்மதியா நடமாடினா உனக்குப் பொறுக்காதா..?"

"ஏம்மா பேசமாட்டிங்க.. அவ கையைப் போட்டது என் மச்சானோட தோள் மேலதானே... அதுவே.. உங்க கண்ணுக்கு முன்னாலே ஐயா தோள் மேல அவ கையைப் போட்டிருந்தா இப்படித்தான் அமைதியா வெட்டி நாயம் பேசிக்கிட்டு இருந்திருப்பீங்களாக்கும்...?"

மீனாட்சியின் மனச்சடவு புரிய.. ராதிகா அவளைச் சமாதானப் படுத்துவதில் முனைப்பாக இறங்கினாள்...

"இதோ பாரு மீனாட்சி.. நம்ம வீட்டுக்கு வந்திருந்தப்ப அவ ஆடின ஆட்டத்தை நீயே நேரில பார்த்ததானே... உங்க ஐயா மேலே அவ கையைப் போட யோசிக்கிற ஆளா..?"

"அதைச் சொல்லுங்க..."

"உங்க ஐயா அதுக்கு இடம் கொடுக்கலை..."

"ம்ஹீம்.. ராமனைப் போல புருசன் வந்து உங்களுக்கு வாய்ச்சிருக்கார்... எனக்கும் வந்து ஒன்னு வாய்ச்சிருக்கே..."

மீனாட்சி விட்ட அனல் பெருமூச்சில் அந்தச் சுற்றுப் புறமே சூடாகிக் கொண்டிருந்த அந்த உச்சி மதிய

வேளையில் அவளுக்கென்று வாய்த்திருந்த நாச்சியப்பன் வீட்டுக்குள் நுழைந்து தொலைத்தான்...

"இதோ.. நாச்சியப்பனே வந்தாச்சே..."

தப்பித்தோம்.. பிழைத்தோமென்று ராதிகா கை காட்ட.. திரும்பிப் பார்த்த மீனாட்சியின் முகத்தில் வெடித்த எள்ளையும் கொள்ளையும் கண்டு.. நாச்சியப்பன் திடுக்கிட்டான்...

"என்னடி மீனாட்சி..?"

"ஏன் அதோட நிறுத்திட்ட மச்சான்.. அடுத்து 'சொன்னது என்னாச்சு'ன்னு பாட வேண்டியதுதானே.. உன் பாட்டைக் கேட்டுக் கேட்டுத்தானே இந்தக் கதிக்கு ஆளாகியிருக்கேன்...?"

"ஏண்டி.. உன் கதிக்கு என்ன குறை..?"

"உன்னப் போல ஒரு புருசனை கல்யாணம் கட்டிக்கிட்டேனே அதுதான் குறை..."

"அடிச்சுப் பல்லைக் கழட்டிருவேண்டி..."

"அதைத்தானே அந்தக் காலம் முதலா.. இந்தக் காலம் வரைக்கும் ஆம்பளைக செஞ்சுக்கிட்டு இருக்கீங்க..?"

"உனக்கு என்னதாண்டி ஆச்சு...?"

"அவ கையைப் போட்டா.. தட்டி விட தைரியமில்ல.. அதுக்கு நீளாத கை.. என் பல்லைக் கழட்ட மட்டும் நீளுமோ..?"

எது நீளுமோ... நீளாதோ.. மீனாட்சியின் வாய் மட்டும் எட்டு ஊரின் பரப்பளவுக்கு நீளும் என்பதை அறிந்திருந்த நாச்சியப்பன் தலையில் கை வைத்துக் கொண்டான்...

அவன் பார்வை சொல்லியதென்ன..?
அறிந்தும் அறியாதவனாய் நானிருந்தேன்..

'பெயரைக் கேட்டாலே அதிருதுல...' என்று சூப்பர் ஸ்டார்தான் சொல்லிக் கொள்ள வேண்டுமா..?

ஷோபா சொல்லிக் கொள்ள வேண்டாமா..?

அவள் குற்றாலத்திற்கு வந்து மீனாட்சியின் கண்ணுக்கு முன்னால் அவளுடைய காதல் கணவனின் தோள்மீது கை போட்டாலும் போட்டாள்.. ஷோபாவின் பெயரைக் கேட்டாலே மீனாட்சி அதிர ஆரம்பித்து விட்டாள்...

அவளை மலையிறக்க தன்னால் முடிந்த வரைக்கும் போராடிக் களைத்துப் போன நாச்சியப்பன்...

"பெரியம்மா...!" என்ற அபயக் குரல் எழுப்பினான்.

அப்போதுதான் மதிய உணவைச் சாப்பிட்டு முடித்திருந்த மேகலா சற்று நேரத்திற்கு கண் மூடித்

தூங்கலாம் என்று கிளம்பியிருந்தாள்.. நாச்சியப்பன் போட்ட சத்தத்தில் தூக்கத்தில் சொக்கிய அவளின் இமைகள் படபடவென்று பட்டாம் பூச்சிகளைப் போல அடித்து தூக்கத்தை விரட்டித் தள்ளின.. அலறியடித்துக் கொண்டு அவள் எழுந்து அமர்ந்தாள்...

"எதுக்குடா எட்டூருக்கு கேட்கிறதைப் போல இந்தச் சத்தம் போடற..."

மதியத் தூக்கம் கெட்டுவிட்ட எரிச்சலுடன் மேகலா வந்து சேர்ந்தாள்..

"எட்டூருக்கு நீளற வாயைப் படைச்ச பொம்பளய வளத்து என் தலையில கட்டி வைச்சிருக்கீங்களே.. அதுக்காகத்தான் கூப்பிட்டேன் பெரியம்மா.."

"ஒஹோ.. இவ வாயைப் பத்தி உனக்கு இப்பத்தான் தெரிஞ்சதாக்கும்..? இத்தனை நாளா தெரியலையாக்கும்.. போடா.. போ.. போயி ஏதாவது வேலைக் கழுதையிருந்தா பாரு.. வந்துட்டான்.. உச்சி மதியான வேளையில.. நாயத்தைச் சொல்லுன்னு.."

"இது அநியாயம் பெரியம்மா..?"

"எதுடா அநியாயம்..?"

"நாயம் கேட்க நேரம்.. காலம் வேணுமா..?"

"பின்னே.. வேணாமா..?"

"இவ மட்டும் உச்சி மதியத்தில எண்ணை பேசித் தொலைக்கலாம் நான் அதை என்னான்னு கேளுங்கன்னு உங்க முன்னால வந்திரக் கூடாது.. இது என்னம்மா நாயம்..?"

மேகலாவின் தூக்கம் கலைந்த கோபம் மீனாட்சியின் பக்கம் திரும்பியது.

"ஏண்டி மீனாட்சி.. என்னத்தடி பேசித் தொலைச்ச..?"

"பேசல பெரியம்மா.. கேட்டேன்.."

"என்னத்தைக் கேட்ட..?"

"ஏய்யா.. உன் தோளுமேல ஒருத்தி கையைப் போட்டா.. அதை தட்டி விடாம என்னவோ.. எருமை மாட்டை தட்டிக் கொடுத்ததைப் போல.. சுகமா தோளைக் கொடுத்துக்கிட்டு நின்னன்னு கேட்டேன்.. இது குத்தமாப் பெரியம்மா..."

அவள் நியாயம் கேட்ட விதத்தில் நாச்சியப்பனுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. ராதிகாவோ சிரிப்பை அடக்கிக் கொள்ள படாதபாடு பட்டாள்.. மேகலாவின் எரிச்சல் காற்றில் கரைந்த கற்பூரம் போலக் காணாமல் போய் விட்டது...

"என்னடி சொல்ற.? இவன் தோளுமேல போய் ஒருத்தி கையைப் போடுவாளா..?" மேகலா விளக்கம் கேட்டு வைத்தாள்...

இதற்கு அவள் விளக்கம் கேட்காமலே திருந்திருக்கலாம் என்று நாச்சியப்பன் நொந்தே போய் விட்டான்..

"அப்படித்தான்ம்மா . நானும் அசால்ட்டா இருந்திட்டேன்.." மீனாட்சி மூக்கை உறிஞ்சினாள்..

அது நாச்சியப்பனின் ரத்த அழுத்தத்தை இன்னும் கொஞ்சம் எகிற வைத்தது..

"இவனைக் கட்டிக்கிறதுக்கு நீயே அத்தனை தூரத்துக்கு யோசிச்ச.. அதில.. இவன் தோளிலயும் ஒருத்தி கையைப் போட்டுட்டான்னு பஞ்சாயத்துக்கு வேற வந்து நிற்கிற.. என்ன கூத்துடி இது..?" முகவாயில் கையை வைத்துக் கொண்டாள் மேகலா..

யான் பெற்ற இன்பம் பெறுக இந்த மீனாட்சி என்று மகிழ்ந்து போனாள் நாச்சியப்பன்..

அங்கே சுற்றி.. இங்கே சுற்றி.. கடைசியில் மீனாட்சியையும் 'நீயே..' என்று மேகலா சொல்லி விட்டதில் மீனாட்சியின் ரத்தமும் கொதிக்க ஆரம்பித்து விட்டது...

"ஏம்மா.. எனக்கென்ன குறைச்சல்..? இல்ல.. என் மச்சானுக்குத்தான் என்ன குறைச்சல்..?"

சண்டைக் கோழியாய் அவள் வரிந்து கட்ட.. மேகலா வெடித்தாள்..

"ஒரு குறைச்சலும் இல்லைன்னா என் உயிரை ஏண்டி குறைக்கறிங்க..?"

"வீட்டுக்கும்.. ஊருக்கும் பெரிய வீட்டம்மா நீங்க.."

"அதுக்கு.. என் தூக்கத்தை கெடுப்பியா..?"

"நீங்க அதிலேயே நில்லுங்க பெரியம்மா.. எனக்கு ஒன்னுன்னு ஏன்னு கேட்க யாரிருக்கா..?"

வராத கண்ணீரைத் துடைத்தபடி மீனாட்சி பொறுமை மேகலா மனமிரங்கி விட்டாள்..

"ஏண்டி அப்படிச் சொல்ற..? உனக்கு நானிருக்கேண்டி.. சொல்லு.. இதை யாரு பார்த்தது..?"

"அந்தக் கொடுமையை ஏம்மா கேக்கறிங்க.. நான்தான் என் ரெண்டு கண்ணாலேயும் பார்த்துத் தொலைச்சேன்.."

மேகலாவுக்கு உண்மையிலேயே கோபம் வந்து விட்டது.. நாச்சியப்பனை அவள் முறைத்த முறைப்பில்.. மீனாட்சி எச்சரித்தபடி.. தேனூத்தை மறந்து விட வேண்டுமோ என்று அவன் கதிகலங்கிப் போனாள்..

"என்ன நாச்சியப்பா.. உன்ன நம்பி பொண்ணைக் கட்டிக் கொடுத்தா நீ இந்த வேலையைப் பண்ணிட்டு வந்து நிக்கிற..?"

"ஐயோ பெரியம்மா.. நடந்ததே வேற.."

"பேசாதே.. கட்டின பொண்டாட்டி முன்னால இப்படியெல்லாம் நடந்தா ஊமைக்கே ஏழூருக்கு வாய் கிழியும்.. இவ எட்டூருக்கு கேட்கறதைப் போலப் பேச மாட்டாளா..?"

"நானாம்மா போயி தோளக் கொடுத்தேன்..? அந்த ஷோபாம்மாவே வந்து தோளத் தட்டினா நான் என்னத்தைம்மா பண்ணித் தொலைப்பேன்..?"

"ஷோபாவா..?"

மேகலா கேள்வியுடன் ராதிகாவைப் பார்த்தாள்..

"அவதான் வந்திருக்கிறாளாம் அத்தை.. மீனாட்சியும்.. நாட்சியப்பனும் குற்றலாத்துக்கு போயிருந்தாங்களாம்.. அங்கதான் அவ இவங்களப் பார்த்தாளாம்.. கிட்ட வந்தவ நாச்சியப்பன் தோள் மேல யதார்த்தமா கை போட்டுப் பேசிட்டா போல.. நம்ம மீனாட்சிக்கு கோபம் வந்திருச்சு.."

ராதிகா பொறுமையாக விளக்கிக் கொண்டிருக்க.. கொதிநிலையுடன் மீனாட்சி குறுக்கிட்டாள்..

"யதார்த்தமாவா..? யம்மோவ்.. இது கடவுளுக்கே அடுக்காது.."

"விடு மீனாட்சி.."

"ஏன் சொல்ல மாட்டிங்க.. நீங்க தங்கம் பெத்த புருசனக் கட்டியிருக்கீங்க.."

மீனாட்சியின் பெருமூச்சில் நாச்சியப்பன் அனலானான்...

"அப்ப நான் யாருடி..? தகரமா..?"

"அதுக்கும் கீழே.. குப்பை..!"

"கேட்டிங்களாம்மா..?"

நாச்சியப்பன் நியாயம் கேட்க.. அதைக் கேட்காமல்..

"ஏன் அவ நம்ம வீட்டுக்கு வரல ராதிகா..?" என்று மருமகளிடம் கேட்டாள் மேகலா..

"ஏம்மா.. இங்க.. எனக்கும்.. என் புருசனுக்கும் சண்டைக் கழுத பத்திக்கிட்டு இருக்கு.. நீங்க அதப் பத்திக் கவலைப்படாம அந்த ஷோபா இங்கே வரலையேன்னு கவலைப்படறிங்க.. எப்படிம்மா மாமியாரும்.. மருமகளும் ஒன்னு போலவே பேசி வைக்கறிங்க..?"

"யாருடி.. இவ..?"

"நான் மூனாம் மனுஷிதான்.. அவதான் உங்க சொந்தக்கார மனுஷி.."

"த்சூ.. நான் சொன்ன 'யாருடி இவ'க்கு அர்த்தம் வேறடி.. அந்தப் பொண்ணு நம்ம சரஸ்வதிக்கு நாத்தனார்.."

"அதுக்கு..? என் புருசன் தோளக் குடுக்கனுமா..?"

மீனாட்சியின் போர் முரசைக் கேட்ட மேகலாவிற்கு சிரிப்பதா.. அழுவதா என்றே தெரியவில்லை..

"டேய்.. நாச்சியப்பா.. இங்கே வாடா.." அதட்டினாள்..

"என்னங்கம்மா.." அவன் முன்னே வந்தான்..

"ஏண்டா.. டேய்.. நீ ஆசைப்பட்டு.. அலையாய் அலைஞ்சேன்னுதானே மீனாட்சியை உனக்குக் கட்டிக் கொடுத்தேன்..?"

"ஆமாங்கம்மா.."

"அப்ப என்ன சொன்ன..?"

அவன் என்னென்னவோ சொன்னான்தான்.. அவற்றில் எதை மேகலா கேட்கிறாள் என்ற விவரம் புரியாமல் அவன் விழித்தான்..

"இவளக் கட்டிக் கொடுத்தா காலம் பூராவும் கண் கலங்காம வைச்சிருக்கறேன்னு சொன்னயா.. இல்லயா..?"

"சொன்னேம்மா.."

"இப்ப ஏண்டா இவ கண் கலங்கி நிக்கிறா..?"

"வினைம்மா.. சும்மாயிருந்தவன.. குத்தாலத்துக்கு குளிக்கப் போகலாம் வான்னு இவதான் கூப்பிட்டுக்கிட்டுப் போனா.. அங்கே போனா இந்த வினை வந்து நிக்குது.. அது வரும்ன்னு நான் கனாவா கண்டேன்..? கண்டிருந்தா அந்தப் பக்கம் போயிருப்பேனா பெரியம்மா..?"

"அவ தோளத் தொட்டா நீயேண்டா தட்டி விடலை..?"

"தட்டி விடலைதான்.. நகர்ந்து நின்னுட்டேன்.. உண்டா.. இல்லையான்னு இவகிட்டக் கேளுங்க.."

"ஏண்டி அப்படியா..?"

"ஆமாம்.. பெரியம்மா.."

"அப்புறம் எதுக்காகடி அவன் கூட மல்லுக்கு நிக்கிற..?"

"இவளுக்கு இதுதான் பொழைப்பு பெரியம்மா.. நம்ப வீட்டுக்கு சொந்தக்காரப் பொண்ணு.. அது கையைத் தட்டி விட்டா.. உங்களுக்கு யாரும்மா பதில் சொல்றது..? அதான் நகர்ந்து நின்னுட்டேன்... இவ அதைப் புரிஞ்சுக்காம என்கூட சண்டை போடறதிலேயே குறியாய் இருக்கிறா.. ஐயா பேரையே சொல்றா.. ஐயா அந்தப் பொண்ண அதட்டலாம்.. மிரட்டலாம்.. அப்படியெல்லாம் நான் செய்ய முடியுமாம்மா..? துஷ்டரைக் கண்டா தூர ஒதுங்கி போயிரனும்.. நான் ஒதுங்கிப் போனேனா இல்லையான்னு இவகிட்டக் கேளுங்க.."

"என்னடி மீனாட்சி..?"

"இப்படிக் கேட்டதுக்குத்தான் இவ பாட்டுப் பாடறயான்னு என்னக் கேட்டு வைச்சா பெரியம்மா..? இவள விட அழகி.. இந்த உலகத்திலயே இல்லயே பெரியம்மா.. இந்தக் கழுதைக்கு அது தெரியுதா..?"

நாச்சியப்பன் வைத்தாலும் வைத்தான்.. ஐஸ் கட்டியைக் கூட வைக்காமல்.. ஐஸ் மலையையே தூக்கி மீனாட்சியின் தலைமீது வைத்து விட்டான்.. அதில் மீனாட்சி.. உச்சி முதல் பாதம் வரை குளிர்ந்தே போனாள்.

அவள் கண்களில் கனல் மறைந்து காதல் வர.. போர் நிறுத்தத்தை உணர்ந்து.. மற்ற மூவரும் ஆசுவாசப்பட்டுப் போனார்கள்..

"கேட்டுக்கடி மீனாட்சி.. இவன் கண்ணுக்கு நீதான் ரதியாம்.."

"ரதியை விட மேல பெரியம்மா.."

"உன்னப் பாத்த கண்ணால வேற ஒருத்தியப் பார்க்க மாட்டனாம்.."

"வேணும்னா.. கண்ணில துணியக் கட்டிக்கிட்டு.. ஊருக்குள்ள போய் வரட்டுமா பெரியம்மா..?"

"நீதான் இவனுக்கு வாழ்க்கையாம்.."

"உசிரு பெரியம்மா.."

"நீயில்லன்னா இவனுக்கு எதுவுமே இல்லையாம்.."

"போய் சேர்ந்திருவேன் பெரியம்மா.."

மேகலா சொல்லிய அனைத்திற்கும்.. மீனாட்சியைப் பார்த்துக் கொண்டே நாச்சியப்பன் தாளம் போட.. மீனாட்சி அழுது விட்டாள்...

"யோவ்.. வெள்ளிக்கிழமையும் அதுவுமா என்ன பேச்சுப் பேசற..?"

"நீதானேடி பேச வைக்கிற..?"

"கோபத்தில ஒரு வார்த்தை பேசிப்புட்டா.. அதுக்காக இப்படியெல்லாம் பேசிருவயா..?"

"நீ கோவிச்சா நான் தாங்குவேனாடி மீனாட்சி..?"

"வாய்யா.. சாப்பிடலாம்.."

"எங்கேடி.. இங்கேயா..?"

"பெரிய வீட்டுச் சாப்பாட்டை அவங்களே சாப்பிடட்டும்.. உனக்குன்னு பக்குவமா.. பாத்துப் பாத்து நான் ஆக்கி வைச்சிருக்கேன்ய்யா.. நாம நம்ம வீட்டுக்குப் போயி சாப்பிடலாம்.."

"மீனாட்சி.."

"என்னய்யா..?"

"உனக்குத்தான் என்மேல எம்புட்டு ஆசை புள்ள.."

"நீ மட்டும் என்னவாம்.. கட்டினா என்னத்தான் கட்டுவேன்னு ஒத்தக்காலில நின்ன ஆளாச்சே.."

மீனாட்சி.. வெட்டும் பார்வையுடன் ஒரு மார்க்கமாக நாச்சியப்பனைப் பார்த்தபடி ஒயிலாக இடுப்பை அசைத்து முன்னால் நடந்தாள்.. அவளின் நடையழகை ரதித்தபடி கிறங்கிப் போன நாச்சியப்பன்.. அங்கே மேகலாவும்.. ராதிகாவும் நின்று கொண்டிருப்பதை மறந்தவனாக சன்னமாக விசிலடித்தபடி.. சைக்கிளை எடுத்தான்.. மிதித்தான்.. மனைவியின் பின்னால் பறந்து விட்டான்..

"சொக்குப் பொடி மீனாட்சி..
சொக்க நாதன் நான்தாண்டி.."

தொலைவினில் அவன் பாடும் பாடல் சத்தம் கேட்டது.. ராதிகாவும் மேகலாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"இதுக பஞ்சாயத்துக்குப் போனா இந்தக்கதிதான்.." மேகலா செல்லமாக அலுத்துக் கொண்டாள்..

"கடைசியில நம்மள நாச்சியப்பன் கூட மோத விட்டுட்டு அவ ஒன்னாச் சேர்ந்துட்டா.." ராதிகா குலுங்கிச் சிரித்தாள்..

"இதுக்குத்தான்.. புருசன் பெண்டாட்டி சண்டைக்குள்ள யாரும் தல கொடுக்க மாட்டாங்க.. அடிச்சுக்கிட்டவங்க ஒரு பேச்சில ஒன்னாச் சேர்ந்துருவாங்க.. ஊடே விலக்கி வைக்கப் போனவங்க ஆயுசுக்கும் பகையாளியாய் நிற்பாங்க.." என்று சொன்ன மேகலா..

"ஷோபா வந்திருக்கிறாளா..?" என்று கவலையுடன் கேட்டாள்..

பெயரைக் கேட்டாலே கவலைப்படும்படியான செயல்முறைகளைக் கொண்ட ஷோபா.. மூட்டி விட வேண்டிய தீயை மூட்டிவிட்டு.. கவலையற்றவளாக நிம்மதியாக சென்னைக்கு கிளம்பிக் கொண்டிருந்தாள்..

168

வசிய மருந்தை கண்ணில் வைத்தே
வசியம் செய்தாய் எந்தன் உயிரே..!

நடுவில் அரளிப் பூச்செடிகள் கண்ணுக்கு அழகாக வரிசை கட்டி நின்றது.. பார்வைக்கு பூங்காவில் இருப்பதைப் போலக் குளிர்ச்சியாக இருந்தது.. ஏஸியின் இதமான குளிரை உணர்ந்தவளாக ஷோபா சாய்வாக அமர்ந்து கொண்டு.. நான்கு வழிச் சாலையை வேடிக்கை பார்த்துக் கொண்டிந்தாள்.. குளிர் கண்ணாடி முகத்தை மறைக்க.. செல் போனில் ஏதோ ஒரு குறுஞ்செய்தியைப் படித்துக் கொண்டிருந்தான் கோகுல்..

"குற்றலாத்துக்கு வரனும்னு ஏன் சொன்னீங்க..?"

திடிரென்று ஷோபாவிடமிருந்து கேள்வி கிளம்பியது. கோகுல் அவளைத் திரும்பிப் பார்த்தான்.. அவன் என்ன நினைக்கிறான் என்பதை அவனது கண்களிலிருந்து கண்டு பிடித்து விட முடியாதபடி அவன் கண்களை கருப்புக் கண்ணாடி மறைத்திருந்தது..

"வேற எதுக்கு வருவாங்க..? அருவியில் குளிக்கத்தான் வருவாங்க.."

"ஈஸிட்..? பட்.. நீங்க ஒரு நாள்கூட அருவியில குளிச்சதில்லையே.."

"நீ பார்த்ததில்லைன்னு சொல்லு.."

"இருக்கலாம்.. வொய்போட வருகிறவங்கள்லாம் வொய்பை கூட வைத்துக்கிட்டுத்தான் அருவியில குளியல் போடுவாங்க.."

ஷோபாவின் வார்த்தைகளில் தொனிந்த மறைமுகக் குற்றச்சாட்டை கண்டு கொள்ளாதவனாக கோகுல் மீண்டும் செல்போனை பார்வையிட ஆரம்பித்தான்..

ஷோபாவுக்குள் கோபம் மூண்டது.. வாய் விட்டு கேட்டு விட காரை ஒட்டிக் கொண்டிருந்த டிரைவர் தடையாக இருந்தான்..

"மார்னிங் எங்கே போயிருந்திங்க..?"

"ஜஸ்ட் எ வாக்கிங்.."

"என்னையும் கூப்பிட்டுக்கிட்டுப் போயிருக்-கலாமில்ல..?"

"நீ வாக்கிங் போனபோது என்னைக் கூப்பிட்டுக்கிட்டுத்தான் போனியா..?"

கோகுல் தலையைத் திருப்பாமல் பேசினான்.. அவனது அந்த அலட்சியத்தில் மனம் நொந்தாள் ஷோபா..

அவளென்ன அவனுக்கு எதிரியா..? என்னதான் சமமில்லாத அந்தஸ்தில் அவளிருந்தாலும் அவனுக்கு

மனைவியாகி விட்டபின்பு அவனுக்கு இணையானவளாக.. அவனில் சரிபாதியாக அவள் ஆகி விடுவதை அவன் அறிய மாட்டானா..?

"பதிலுக்குப் பதிலா..?" மனம் தாங்காமல் அவள் கேட்டாள்..

"அப்படியும் வைத்துக்கலாம்.." அலட்டிக் கொள்ளாமல் கோகுல் சொன்னான்..

ஒட்டிக் கொள்ளும் மனமில்லாமல் வெட்டிக் கொள்ளும் மனப்பான்மையோடு அவன் பேசி வைத்ததில்.. ஷோபாவின் மனம் பாதிப்புக்கு ஆளானது..

அவள் ஒரு திசையில் பார்க்க.. கோகுல் வேறு திசையில் பார்க்க ஆரம்பித்தான்..

கோவிலுக்குள் பிரவேசித்த போதே பங்கஜத்தை பார்த்துவிட்டாள் மேகலா..

"இவளத்தான் இத்தனை நாளா தேடினேன் ராதிகா.. இன்னைக்குத்தான் அகப்பட்டிருக்கா.." என்றாள்..

"ஏன் அத்தை..?" ராதிகா புரியாமல் கேட்டாள்..

"எப்பப் பார்த்தாலும் ஒரே கேள்வியைத்தான் கேட்டு வைப்பா.. கோவில் பக்கம் வந்துட்டாப் போதும்.. இவ கண்ணில அகப்படாம தப்பிச்சிரனும்னு நானும் படாத படு பாடுவேன்.. முடியவே முடியாது.. ஏதவது ஒரு தூணுக்குப்

பின்னால இருந்து 'டொய்ங்'குன்னு வந்து நிற்பா.." மேகலா ஆயாசப் பட்டு போனாள்..

"வந்தாத்தான் என்னத்தை..?"

"உனக்குத் தெரியாது ராதிகா.. இவ ஒரே கேள்வியைத்தான் மாத்தி மாத்திக் கேட்டு வைப்பா.."

"அப்படி என்ன கேள்வியைத்தான் கேட்பாங்க..?"

பழைய தினங்களை மறந்தவளாகக் கேட்ட ராதிகாவை இரக்கத்துடன் பார்த்தாள் மேகலா.. மருமகளின் மேடிட்ட வயிறின் மீது அவளது பார்வை பெருமிதத்துடன் பதிந்தது..

'பங்கஜம் என்னத்தைக் கேட்பான்னு இவகிட்ட சொல்ல முடியுமா..?' அந்த பங்கஜம் மற்றவர்களின் மனம் நோக அறியாப்பிறவியைப் போலக் கேள்வி கேட்பதில் வல்லவள்..

மேகலாவை எங்கே கண்டாலும் அவள் ஒரே கேள்வியைத்தான் கேட்பாள்..

"என்னங்கண்ணி.. உங்க மருமக இன்னமும் தலைக்கு குளிச்சுக்கிட்டுத்தான் இருக்காளா..?"

இதைக் கேட்கும் போது.. மேகலாவின் கண்களில் தெரியும் துடிப்பைப் பார்ப்பதில் பங்கஜத்திற்கு தனிவிதமான இன்பம் உண்டு..

இதை ராதிகாவிடம் சொல்ல மேகலாவினால் முடியுமா..?

"ஒன்னுமில்லேம்மா.. நீ.. வா.. பெருமாளையும்.. தாயாரையும் சேவிச்சுட்டு வரலாம்.."

பேச்சை மாற்றியவளாக மேகலா சந்நிதானத்தை நோக்கி நடந்தாள்.. கற்பூர ஜோதியில் தெரிந்த பெருமாளையும்.. தாயாரையும் சேவித்து விட்டு.. கோவில் பிரகாரத்தை வலம் வந்தபோது.. எதிரே பங்கஜம் வந்து விட.. மேகலா நின்று விட்டாள்..

"நீ முன்னால போ ராதிகா.. நான் இவகிட்டப் பேசிட்டு வாரேன்.."

மாமியாரின் கட்டளையை மதித்து ராதிகா முன்னால் சென்றுவிட எதிரே நின்ற பங்கஜத்தை இகழ்ச்சியுடன் பார்த்தாள் மேகலா..

"என்ன பங்கஜம்.. ஆளையே காணோம்.. ஊரைக் காலி பண்ணிட்டு ஒடிட்டயோன்னு நினைச்சேன்.."

இந்தக் கேள்வியை மேகலாவைத் தவிர வேறு யாராவது கேட்டிருந்தாள்.. பங்கஜம் அந்த நபரை ஆய்ந்து.. அக்கு வேறு.. ஆணி வேராக.. கழட்டிப் போட்டிருப்பாள்..

அப்படிச் செய்ய வழியில்லாமல் பேசியது மேகலாவாக இருந்து விட்டாள்.. தென்காசிப் பட்டினத்தில் பாலமுரளியைப்

பகைத்துக் கொண்டு வாழ்வது சிரமமென்பதால் அவள் வாய் மூடி.. அதை சிரித்த முகமாக ஜீரணித்துக் கொண்டாள்..

"அண்ணிக்கு என்னைக் கண்டாலே கேலிப் பேச்சுதான் வாயில வரும் போல.. ஆதரிக்க அண்ணியிருக்கிறப்போ நான் எதுக்காக அண்ணி.. ஊரை விட்டு ஒடிரப் போறேன்..?"

"அப்ப.. உள்ளூரிலதான் நீ இருந்தயா..?"

"ஆமாண்ணி..."

"நீயென்ன கருப்பு ஜாக்கெட்காரியா..?"

மேகலாவின் கேள்வியைப் புரிந்து கொள்ள பங்கஜத்தால் முடியவில்லை.. அவள் குழம்பிப் போய்.. தன்னைத்தானே பார்த்துக் கொண்டாள்..

'நான் சிகப்புச் சேலைகட்டி.. சிகப்புக் கலர் ஜாக்கெட்டில்ல போட்டிருக்கேன்.. இந்த அண்ணி என்னமோ கருப்பு ஜாக்கெட்டுன்னு கதையையே மாத்துதே.. என்னடி இது.. பேரப்புள்ள பிறக்கப் போற சந்தோசத்தில அண்ணிக்கு புத்தி வேலை செய்யலையா..?'

மேகலாவின் புத்தி வேலை செய்யும் வேகத்தை அறியாதவளாகப் பங்கஜம் யோசித்து வைத்தாள்..

"இல்லையேண்ணி.. நானு சிகப்புக்கலரு ஜாக்கெட்டில்ல போட்டிருக்கேன்.. அண்ணி பார்க்கலையா..?"

"எல்லாம் பார்த்தாச்சு.. சாமி கும்பிடாத ஆளுகளையெல்லாம் கருப்புச் சட்டைக்காரங்கன்னு சொல்லுவாங்க.. கேள்விப்பட்டிருக்கயா பங்கஜம்..?"

"தெரியாதேண்ணி.."

"உனக்கு எதுதான் தெரியும்..? மத்தவங்க வீட்டு விவகாரம் தெரியும்.. உலகநிலவரம் தெரியுமா..?"

"என்னமோ.. கூறுகெட்ட கூதரையாய் இருந்துட்டேன்.. நீங்கதான் அதப்பத்திச் சொல்லுங்களேன்.. 'ஊம்' கொட்டிக் கேட்டுட்டுப் போறேன்"

"நீ 'ஊம்' கொட்டிக் கதை கேட்கறதிலேயே குறியாய் இரு.."

மேகலா பங்கஜத்தை மட்டம் தட்டுவதிலேயே குறியாய் இருக்க.. பல்லைக் கடித்தபடி அதைச் சகித்துக் கொண்டாள் பங்கஜம்..

"நீங்க சொல்ல.. நான் 'ஊம்' கொட்டினாத்தான் நல்லாயிருக்கும் அண்ணி.."

"இருக்கும்.. இருக்கும்.. சாமி கும்பிடாத ஆம்பளைகளை கருப்புச் சட்டைக்காரங்கன்னு சொன்னா.. சாமி கும்பிடாத பொம்பளைகளை என்னன்னு சொல்றது..?"

"அட.. அதான்.. எங்க அண்ணி.. கருப்பு ஜாக்கெட்காரியான்னு கேட்டு வைச்சாங்களா..?"

"ம்ஹூம்.. இப்பவாவது உன் மரமண்டைக்கு விசயம் புரிஞ்சுச்சே.."

"அப்படியெல்லாம் இல்லைண்ணி.. எதையும் நீங்க சொல்லி நான் கேட்டாக்க.. அதில இருக்கிற சந்தோசமே தனி அண்ணி.."

பங்கஜம் பதவிசாகப் பதில் கூறித் தப்பிக்கப் பார்த்தாள்..

மேகலா அதற்கெல்லாம் மசிகிற ஆளில்லையே..

"உன் சந்தோசத்தைப் பத்தி எனக்குத் தெரியதா பங்கஜம்.. அதிலயும் என் வாயிலே எதையும் கேட்டாத்தான் உனக்கு சந்தோசம் பொத்துக்கிட்டு ஊத்தும்ன்னு எனக்குத் தெரியுமே.."

வசமாக மாட்டிக் கொண்டிருந்த பங்கஜம் எதற்கும் இருக்கட்டுமென்று சிரித்து வைத்தாள்..

"இப்ப எதுக்காக சிரிக்கிற..?"

"அண்ணியை ரொம்ப நாள்கழிச்சுப் பார்க்கிறேனில்ல.. அதான் சந்தோசத்தில சிரிச்சு வைச்சேன் அண்ணி.. இது ஒரு குத்தமா..?"

"இல்லேங்கறியா..?"

"அண்ணி உங்களுக்கு கோபமிருந்தா என் முதுகில நாலு போடு கூட போட்டிருங்க.. அதுக்காக இப்படிப் பேசாதீங்க.."

"என்னத்தைப் பேசிப் புட்டேன்..? நான் ஒருநாள் பேசறதைக் கேட்கிறத்துக்கே இந்த அலறல்.. அலறி வைக்கிறயே.. இத்தனை நாளா.. கோவில் பக்கம் வந்தவள

சாமி கும்பிட விடாம நீ துரத்தித்துரத்திப் பேசினயே.. எனக்கு எப்படியிருந்திருக்கும்..?"

"ஒரு பாசத்தில பேசறதுதான் அண்ணி.."

"அம்புட்டுப் பாசக்காரி.. இத்தன நாளா கோவில் பக்கம் எட்டிக் கூடப் பார்க்காம இருந்திருக்கயே.. நீ சாமி கும்பிடறதை மறந்திட்டயா..?"

"பெருமாள மறந்துட்டு இருப்பேனா அண்ணி.."

"அப்புறம் எதுக்காக கண்ணு.. பெருமாள் கோவில் பக்கம் வர்றதில்ல..?"

"சாமி கோவில்ல மட்டுமா இருக்காரு..?"

"ஓ..!"

"நம்ம மனசில இல்லியா.."

"அப்படிப் போடு.."

"நீங்க சாமி கும்பிட்டுட்டிங்களா அண்ணி..?"

"கும்பிட்டாச்சு.."

"அப்ப.. நான் உத்தரவு வாங்கிக்கவா..?"

"ஏன் பங்கஜம்.. இத்தன நாளா.. என்னைக் கண்ணில கண்டதும் ஒரு கேள்வியைக் கேட்டு வைப்பியே.. அந்தக் கேள்வியை இன்னைக்கு கேட்கலையா.."

"என்ன கேள்விண்ணீ..?"

அப்பாவியாய் கண் விரித்த பங்கஜத்தின் நடிப்பைக் கண்டு மேகலா அயர்ந்து விட்டாள்..

'இவளுக்கு நடிகையர் திலகம் பட்டத்தை தாராளமாக் கொடுக்கலாம்..'

"எனக்குப் பேரப்புள்ள எப்ப வரப்போகுதுன்னு கேள்விமேல கேள்வியாக் கேட்டியே.. அந்தக் கேள்விதான் பங்கஜம்"

"ஏன் அண்ணி..! உங்களுக்கு பேரப் புள்ள பிறக்கப் போகிறதுதான் ஊரறிந்த சங்கதியாச்சே.. அதை நான் தனியா வேற கேட்டுத் தெரிஞ்சுக்கனுமா..?"

"ஏன் சொல்ல மாட்ட.. இத்தனை நாளா துரத்தித் துரத்திக் கேள்வி கேட்டவளுக்கு.. இதைக் கேட்க மட்டும் வாய் வலிக்குதாக்கும்..?"

மேகலா பங்கஜத்துடன் காராசாரமான வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்க.. மாமியாருக்காக காத்திருந்த ராதிகா.. கால் வலித்ததால்.. கோவில் பிரகாரத்தின் படிக்கட்டில் அமர்ந்தாள்.. அவளருகே நீண்ட நிழலொன்று விழுந்தது.. யாராக இருக்கும் என்ற யோசனையுடன் நிமிர்ந்து பார்த்தவள் அதிர்ந்து விட்டாள்..

கண்களில் காதலைத் தேக்கியவனாக.. அவளைக் கனிவுடன் பார்த்த வண்ணம் சங்கர் அவளருகே நின்று கொண்டிருந்தான்..

'இவனா..?' ராதிகா கலவரத்துடன் சுற்று முற்றும் பார்த்தாள்...

அந்தி மயங்கிய அந்த நேரத்தில் கோவிலுக்குள் வந்து போகும் மக்கள் கூட்டம் அதிகரித்துக் கொண்டிருந்தது.. அவர்களின் பார்வை ராதிகாவின் மேல் படிந்து விலகியது... அந்த வட்டாரத்தின் பெரிய வீட்டின் மருமகள்.. பெரிய மனிதனான பால முரளியின் மனைவி அவளைப் பார்த்ததும்.. மீண்டும் ஓர் முறை பார்க்காமல் நகர அவர்களால் முடியுமா..?

ராதிகாவின் மனதை கவலை அரிக்க ஆரம்பித்தது.. அவளை ஆர்வமாக பார்ப்பவர்கள் அருகே நிற்கும் சங்கரையும் சேர்த்துத்தானே பார்ப்பார்கள்..? அவர்களின் மனதின் நினைவோட்டம் எதுவாக இருக்கக்கூடும்..?

அவள் அவசரமாக எழுந்து கொள்ள யத்தனித்தாள்.

"பொறு ராதிகா.." என்றான் சங்கர்..

அவன் உரிமையுடன் ஏக வசனத்தில் பேசியதில் ராதிகாவின் கலவரம் அதிகரித்தது..

"உன்னிடம் பேசனும் ராதிகா.."

சங்கர் அவளருகே அமர முயன்றான்.. சட்டென்று ராதிகா எழுந்து கொண்டாள்.. சங்கரின் கண்களில் கேள்வி தெரிந்தது..

"ராதிகா..?"

"எனக்கு உங்களிடம் பேச எதுவுமேயில்லை மிஸ்டர் சங்கர்..."

"ஏன் பயப்படற..?"

"பயமா..? எனக்கா..? ஹ.."

ராதிகா மாமியாரை மறந்தவளாக வாசலை நோக்கி விரைந்தாள்.. சங்கர் பின்னாலேயே வந்து விடுவானோ என்ற பயத்துடன் சென்றவள்.. எதிரே வந்தவரைக் கவனிக்காமல் மோதிவிட்டாள்..

"ஏண்டி இப்படி ஓடி வர்ற..?"

காதில் விழுந்த கேள்வி தேனாறாக உள்ளே இறங்க.. ராதிகா ஆனந்தத்துடன் தலையுயர்த்திப் பார்த்தாள்.. அங்கே முரளி நின்று கொண்டிருந்தான்..

"நீங்களா..! வந்துட்டிங்களா.."

எல்லையற்ற நிம்மதியுடன் அது கோவில் என்பதை மறந்தவளாக அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள் ராதிகா..

இன்னதென்று விளங்காமல்..
என்மனதை நீ நிறைத்ததென்ன..?

ராதிகாவின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.. அவளின் கைகள் முரளியின் முதுவில் பரவிப் படர்ந்து இறுக்கிக் கொண்டன.. அவளின் இறுக்கமான பிடியில் தன்னை ஒப்புக் கொடுத்த முரளி.. அவளின் தோள் மீது ஆதரவாகத் தட்டி.. அவளின் பதட்டத்தைக் குறைக்க முயன்றான்...

"ஏன் இப்படி பதட்டப்படறடி..?"

அவன் குரலில் பரிவு தொனித்தது... அதற்குள் மேகலா வந்து விட்டாள்... முரளியின் பிடியில் ராதிகா இருப்பதைக் கண்டதும் பதறிவிட்டாள்..

"என்னப்பா.. என்ன ஆச்சு...?"

"ஒன்னுமில்லம்மா.. அங்க உட்கார்ந்திருந்தா.. நான் கூப்பிட்டதும் எழுந்திருச்சு வந்தா.. வேகமா வந்ததில மயக்கம் வந்துருச்சு போல.. தலை சுத்துதுங்க அத்தான்ன தோளில் சாய்ஞ்சிட்டா.."

முரளி அழகாக நிலைமையைச் சமாளித்து விட்டான்.. அவர்களை நெருங்கி வராமல்.. மரியாதை

கொடுத்து குறிப்பிடும் அளவில் இடைவெளி விட்டு நின்றவர்கள்.. தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள்..

மேகலாவுக்கு மகனின்மீது கோபம் வந்துவிட்டது...

"ஏண்டா.. வீட்டில விரட்டறதைப் போல.. கோவிலிலயும் அவள விரட்டி வைச்சா.. அவதான் என்ன பண்ணுவா..? பாவம்.. பிள்ளைத்தாய்ச்சிப் பொண்ணு.. நீ அதட்டற அதட்டலில் தலைசுத்தலே வந்திருச்சு போல.. ராதிகா.. ராதிகா.. இப்ப எப்படிம்மா இருக்கு..?"

அதற்குள் ராதிகா சுதாரித்துக் கொண்டு விட்டாள்.. முரளியை விட்டு விலகி நின்றவளுக்கு வெட்கம் வந்து விட்டது...

"ம்ம்ம்.. இப்பப் பரவாயில்லை அத்தை..."

"நான் ஒரு கூறுகெட்டவ.. உன்னத் தனியா விட்டுட்டு அந்த பங்கஜத்தோட வாயப் பார்த்துக்கிட்டு நின்னிட்டேன்.. நீ வாம்மா வீட்டுக்குப் போகலாம்..."

ராதிகாவை ஆதரவாக.. தோளில் கைபோட்டு அழைத்துக் கொண்டு முரளி நடக்க.. மேகலா கூட நடந்தாள்..

கணவனுடனும்.. மாமியாருடனும்.. பாதுகாப்பாக போகும் ராதிகாவை வெறித்துப் பார்த்தவாறு சங்கர் அசையாமல் நின்றான்..

காரில் போகும் போது.. மேகலாதான் அந்தக் கேள்வியைக் கேட்டாள்...

"ஆமாண்டா முரளி.. நீ எப்படி கோவிலுக்கு வந்த..?"

"இதென்னம்மா வம்பா இருக்கு.. பெருமாள் கோவிலுக்கு நான் வருகிறதென்ன புதுசா..?"

"அப்படியில்லைடா.. நாங்க கிளம்பினப்பவே கூட வந்திருக்கலாமே..."

"அப்பத் தோணல.. அதுக்கப்புறமாத்தான் தோணுச்சு... கிளம்பி வந்தேன்.. வாசல்ல நின்ன காரை வீட்டுக்கு அனுப்பிட்டு.. கோவிலுக்குள்ள வந்தேன்.. ராதிகா தனியா உட்கார்ந்திருந்தா.. சாமியக் கும்பிட்டுட்டு வந்து கூப்பிட்டா.. மயக்கம் போட்டு விழுந்திட்டா..."

"அவள அப்படி அரட்டி வைச்சிருக்கடா மகனே.."

"வேற எந்த சாட்சியுமே வேணாம்மா.. நீங்க ஒராளு சாட்சி சொன்னாப் போதும்... முரளி பொண்டாட்டியை அரட்டி வைச்சிருக்கான்னு இந்த உலகம் முடிவே பண்ணிரும்..."

"இன்னுமா.. அது.. அதைச் செய்யல..?"

மேகலா சிரிக்காமல் கேள்வி கேட்க.. ராதிகா குலுங்கிச் சிரித்தாள்.. மருமகளின் சிரிப்பில் மேகலாவின் பதட்டம் பறந்தோடி விட்டது..

அன்று இரவு.. படுக்கையில் முரளியின் மார்பில் தலை வைத்திருந்த ராதிகா.. மிருதுவான குரலில்...

"அத்தான்.." என்று அழைத்தாள்...

அவளின் அந்த அழைப்பில் முரளி மயங்கிப் போனான்.. இதமான அந்த இரவின் இன்பமான தனிமையில்.. அவளின் கூந்தலில் சூடியிருந்த மல்லிகையின் மலர்வாசம் அவனை சொர்க்கத்துக்கு அழைத்துச் சென்றது.. அவள் தலைமுடியை மென்மையாக கோதியபடி...

"சொல்லுடி..." என்று கிறக்கத்துடன் கேட்டான் முரளி..

"இன்னைக்கு கோவிலில் அவனைப் பார்த்தேன்.."

அவனின் நெருக்கத்தில் மனமும்.. உடலும் நெகிழ்ந்து கொண்டிருந்த அந்த வேளையில்... அதைச் சொல்ல ராதிகாவுக்கு மனமில்லைதான்... ஆனாலும்.. அவளால் அதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை...

"எவன்..?"

முரளி.. முடிகோதுவதை நிறுத்தவில்லை...

"அவன்தான்.. சங்கர்..!" ராதிகா சொல்லி விட்டாள்..

'இதோ.. முடி கோதுவதை நிறுத்தப் போகிறான்.. இன்னும்.. ஒருநொடிதான்.. என்னிடமிருந்து விலகிப் படுக்கப் போகிறான்...'

ராதிகாவின் மனம் கலங்கியது.. கண்மூடி.. அந்த நொடிகளை ஜீரணித்துக் கொள்ளத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டிருந்தாள்...

'ஒன்... டூ... த்ரீ...'

மனதிற்குள் சொல்லிக் கொண்டிருந்தவள்.. எண்ணிக்கை பத்தைத் தாண்டியும் அவன் விலகாமல் முடி கோதிக் கொண்டிருந்ததில் ஆச்சரியம் பட்டுப் போனவளாக கண் திறந்து அவனைப் பார்த்தாள்..

அவன் முகத்தில் மென்மையுடன் கூடிய காதல் தெரிந்ததில் அவளது ஆச்சரியம் கூடியது..

"என்னடி..?"

அவளது ஆச்சரியத்தை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தவன் வினவினான்..

"உங்களுக்கு கோபம் வரலையா..?" அவள் குழந்தைத் தனத்துடன் வினவியதில் அவனது ரசிப்பு அதிகமானது..

"வரலையே.."

விளையாட்டாய் அவள் கன்னம் தட்டிச் சிரித்தவனின் முகத்தில் தெரிந்த ஏதோ ஒன்றில் அவள் குழப்பிப் போனாள்..

அது என்னவாக இருக்கக்கூடும் என்ற அனுமானத்தில் அவள் மனம் இறங்கியது.. எதுவாக இருந்தாலும்.. சங்கரை ராதிகா கோவிலில் பார்த்த சம்பவத்தை அவன் இத்தனை இலகுவாக எதிர் கொள்வான் என்று நினைத்துக் கூடப் பார்த்திராததில் ராதிகாவுக்கு ஆச்சரியம்தான்..

"ஏன் கோபம் வரலை..?"

இப்படிக் கேட்டவளை உற்றுப் பார்த்தவனின் முகத்திலிருந்த அந்த ஏதோ ஒன்றின் ஒளிர்வு அதிகரித்தது..

"எதுக்கு வரனும்..?"

பதிலுக்கு கேள்வி கேட்டவனை.. முகத்தோடு முகம் வைத்துப் புதியவனைப் பார்ப்பதைப் போலப் பார்த்தாள் ராதிகா...

அவனும் அதையேதான் கேட்டான்..

"என்னடி.. புதுசாப் பாக்கற..?"

"நீங்க புதுசாத் தெரியறிங்க.. அதான்.. புதுசாப் பாக்கறேன்.."

"அப்ப.. இன்னைக்கு ராத்திரியை புதுராத்திரியா கொண்டாடிடலாமா..?"

அவன் கண்சிமிட்டியதில் அவள் முகம் சிவந்து போய்..

"ச்சீய்.." என்று செல்லமாக அவன் மார்பில் குத்தினாள்.. குத்திய அவள் கையைப் பிடித்து.. அவள் விரல்களில் செல்லமாக முத்தமிட்டான் முரளி..

"ஆனாலும் என்னால நம்ப முடியலைதான்.." ராதிகா அவன் மார்பில் முகம் புதைத்து.. கழுத்தைச் சுற்றிக் கைகளால் வளைத்து அவனைக் கட்டிக் கொண்டாள்..

"ராதிகா.." அவன் குரல் ஆழ்ந்து ஒலித்தது..

அந்தக் குரலில் முகம் நிமிர்த்தி.. அவன் முகம் பார்த்தாள் ராதிகா..

"ம்ம்ம்.."

"கோவிலுக்கு ஆயிரம் பேர் வருவாங்க.. போவாங்க.. அவனும் வந்திருப்பான்.. அவன் வரக் கூடாதுன்னு சட்டம் போட நம்மால முடியுமா..?"

முடிந்திருந்தால்.. இவன் அதைச் செய்திருப்பான் என்ற நினைவில் ராதிகாவிற்கு லேசான புன்னகை வந்தது.

"முடியாதுதான்.. ஆனா.. அவன் என்னிடம் பேச வந்தான்.."

தயக்கத்துடன் ராதிகா சொல்லி விட்டு.. அவன் கோபத்தை எதிர்நோக்கப் பயந்தவளாக வேறு திக்கில் பார்த்தாள்..

"தெரிஞ்சவங்கன்னு பேச வந்திருப்பான்.."

அவன் அதையும் இலகுவாக எதிர் கொண்டதில்.. ராதிகா... தன் கையை தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.. வலித்தது..

'கனவில்லை.. நிஜம்தான்..'

"எப்படிங்க..?" தாங்க முடியாமல் கேட்டே விட்டாள் ராதிகா..

இத்தனை தூரத்துக்கு குணசாலியாக அவன் மாறிவிட்ட விந்தையில் அவளுக்கு மயக்கமே வந்து விட்டது.

"விடுடி.. இந்த நேரத்தில.. அவன் பேச்சைத்தான் பேசணுமா..? உனக்குப் பேச வேற பேச்சே கிடைக்கலியா..?"

கோபமில்லாத குரலில் கோபப்பட்டு.. அந்தப் பேச்சை முடித்து வைத்து விட்டு.. அடுத்த கதையை ஆரம்பித்தான் முரளி..

அதற்குப் பின்னால் ராதிகாவை மேகலாவுடன் கூடத் தனியாக வெளியே அனுப்பாமல் தன் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வந்து விட்டான் முரளி..

"எங்கேம்மா கிளம்பிட்டிங்க..?"

"ஏண்டா.. போகும்போது.. எங்கேன்னு கேட்கலாமா..?"

"அதெல்லாம் கேட்கலாம்.. நீங்க பதிலைச் சொல்லுங்க..."

"வேறெங்க போகப் போகிறோம்.. கோவிலுக்குத்தான்.."

"கொஞ்சம் இருங்க.. நானும் வர்றேன்.."

"நீ எதுக்குடா..?"

"சாமி கும்பிடத்தான்.. பெருமாள் கொடுக்கிற வரத்தையெல்லாம் மாமியாரும்.. மருமகளுமா.. மூட்டைகட்டி.. முந்தாணையில முடிச்சுக்கிட்டா எனக்கு வந்து சேந்திருமா..? நானும் வந்து என் பங்குக்கு வரத்தை வாங்கி.. சட்டைப் பையில ரொப்பிக்கிட்டா ஆகாதா..?"

"ஏண்டா.. பொம்பளைக.. கோவிலுக்குப் போனா.. திரும்பி வர கொஞ்ச நேரமாவது ஆகத்தான் செய்யும்.."

"ஏனாம்..? விழுந்து விழுந்து சாமி கும்பிடுவீங்களா..?"

"நாலு மக்க.. மனுசங்களப் பாப்போம்.."

"பாத்து..?"

"நல்லாயிருக்கீங்களான்னு கேட்டுக்குவோம்.."

"புறணி பேசுவீங்கன்னு சொல்லுங்க.."

"ஆமாண்டா.. பொம்பளைக மட்டும்தான் புறணி பேசறோம்.. ஆம்பளைக யதார்த்தமா இருக்கீங்க.."

"பின்னே.. இல்லையா..?"

"இல்லைடா.. கேட்டுக்கம்மா ராதிகா.. இந்த ஆம்பளைக இருங்க்களங்களே.. அழுக்குனிங்க.."

மாமியாருடன் உடனடியாக கூட்டணி போட்டு விட்டாள் ராதிகா.. எப்போதுமே இது போன்ற ஆண்வர்க்கத்தைத் தாக்கும் பேச்சில்.. மாமியாரை ஆதரித்துப் பேச.. அவளுக்கு மிகவும் பிடிக்கும்..

"ஆமாம்.. அத்தை.." என்றாள்..

முரளி.. மனைவியை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான்..

"ஆமாம் சாமி.. போடறயா..?" என்றான்..

"இல்லையே.. ஆமாம்.. அத்தைன்னுதானே சொன்னேன்..?"

ராதிகா அப்பாவியாக இமை கொட்டினாள்..

"வாடி.. ராத்திரிக்கு இதைப் பத்திப் பேசி ஒரு முடிவைப் பண்ணிடலாம்.."

செல்லமாக அவன் மிரட்ட.. உடனே அதைப்பற்றி மேகலாவிடம் போட்டுக் கொடுத்து விட்டாள் ராதிகா..

"அத்தை.. இவரு என்னை மிரட்டறாரு.."

மேகலா உடனே தன் பழைய பல்லவியை ஆரம்பித்து விட்டாள்...

"ஏண்டா.. டேய்.. என் மருமகள காய்ச்சலில் தள்ளுனும்னு சதித்திட்டம் தீட்டறியா..?"

"ஆரம்பிச்சுட்டிங்களா..? ஏம்மா.. மீனாட்சியே இதை மறந்துட்டு அவ உண்டு.. நாச்சியப்பன் உண்டுன்னு.. குடும்பத்துக்குள்ள ஐக்கியமாயிட்டா.. நீங்க மட்டும் இதை மறக்காம புடிச்சுக்கிட்டு தொங்கறிங்களே.. இது நியாயமாம்மா..?"

"அவ இருப்பாடா.. அவளுக்கு அவ குடும்பம்.. எனக்கு என் குடும்பம்.."

"ரொம்ப சந்தோசம்.. நீங்க குடும்பத்தைப் பார்த்துக்கங்க... நான் என் பொண்டாட்டியைப் பார்த்துர்கறேன்.."

"என்னடா மகனே.. வெளியே.. வா.. பார்த்தக்கிறேன்னு சொல்ற தினுசில சொல்லி வைக்கிற.." என்று நிஜமாகவே மகனை முறைத்தாள் மேகலா..

"எதுக்கெடுத்தாலும் சந்தேகம்ன்னா.. ஒரு மனுசன் எங்கே போவான்..?"

"நீ எங்கே வேணும்னாலும் போ.. நாங்க இப்ப கோவிலுக்குப் போறோம்.."

"நாங்க இல்ல.. நாம.."

"அப்ப நீயும் கோவிலுக்கு வருவ.."

"ஆமாம்.. அதுக்கு இப்ப என்னாங்கறிங்க..?"

"ஒன்னும் 'ங்' கலே.. வந்து சேரு.."

அவர்களுடன் கோவிலுக்கு முராளியும் போனாள். மேகலா மற்ற பெண்களுடன் வாய் வளர்க்கும் போது.. அவனும்.. ராதிகாவும்.. கோவில் பிரகாரத்தில் அமர்ந்து கதை பேசினார்கள்..

இதமான அந்த பொன் மாலைப் பொழுதுகள் ராதிகாவை தாலாட்டின..அவளுக்காக.. தனது அனைத்து வேலைகளையும் ஒதுக்கி விட்டு.. அனைத்து அடையாளங்களையும் மறந்து விட்டு அவளுடைய கணவனாக.. அவளுக்கு மட்டும் சொந்தமானவனாக.. அவளுடன் அவன் செலவளித்த அந்த மணித்துளிகளில் மனம் நிறைந்தாள் ராதிகா..

அதைப் போன்ற பொழுதுகள்.. அதற்கு முன்னால் வந்ததில்லையென்று அவளுக்குத் தோன்றியது.. அவளருகே அமர்ந்து.. கோவில் கோபுரத்தின் மாடப் புறாக்களை வேடிக்கை பார்த்த படி அவளுடன் கதை பேசிய பால முராளி.. அவளுக்குப் புதியவனாக இருந்தான்.. அந்த இதமான பொன்மாலைப் பொழுதுகளில் மனம் நனைந்தாள் ராதிகா..

அவன்.. அவனைக் கண்ணை இமை காப்பதைப் போலக் காத்தான்.. எந்நேரமும் விட்டுப் பிரியாமல் அவளருகே வலம் வந்தான்.. அந்த இனிய நாள்களின் தொடர்ச்சியாக வளைகாப்பு நாளும் வந்தது..

வரம் கேட்டு வந்தவளுக்கு..
வரமாக உனைத் தந்தாய்...

அவர்கள் அருவிக்கரைப் பாதையில் வந்து கொண்டிருந்தார்கள்..

ராதிகாவின் வயிறு வளர்ந்திருந்தது.. மேடிட்ட வயிற்றுடன் தளர்வாக நடந்தவளின் முகம் தாய்மையின் பொலிவுடன் மிளிர... அதைக் காதலுடன் கவனித்தான்

பாலமுரளி.. அவள் முகத்தில் பூத்திருந்த வியர்வை முத்துக்களைத் தன் கைக்குட்டையால் ஒற்றி எடுத்தான்..

"யாராச்சும் பார்க்கப் போறாங்க.." ராதிகா சிணுங்கினாள்...

"என்னடி இது.. அநியாயமாய் இருக்கு..! உன்மேல என் விரல் கூடப் படல.. ஆறடி தள்ளி நின்னு.. கர்சீஃபால முகத்தை துடைச்சு விடறேன்.. இதுக்குப் போயி இந்தச் சிணுங்கு சிணுங்கறயே.. நானென்ன உன்னை ஸ்வாஹா பண்ணிட்டேனா..?"

முரளி அவள் காதருகே குனிந்து.. கிசுகிசுப்பான குரலில்.. அவன் அதைச் செய்தானா.. இல்லை.. இதைச் செய்தானா.. என்று நியாயம் கேட்கக் கேட்க.. முகம் சிவந்த ராதிகா.. அவன் தோளில் ஓர் அடியை வைத்தாள்..

"ஹப்பா..! என்ன போடு.. போடறடி..! புருசனைக் கைநீட்டி அடிக்கலாமா..?" தோள்பட்டையைத் தடவியபடி கேட்டவனின் கண்களில் குறும்பு கொப்பளித்தது..

"எல்லாம்.. இந்தப் புருசனை அடிக்கலாம்.." அவள் முகம் மேலும் சிவந்தது..

"இருடி.. எங்க ஊரு பஞ்சாயத்தைக் கூட்டி நியாயம் கேட்கிறேன்.."

"கேளுங்க.. நானும் கேட்கிறேன்.."

"என்னன்னு கேட்ப..?"

"நாட்டாமை.. தீர்ப்பை மாத்திச் சொல்லுங்கன்னு கேட்பேன்..."

"அதை உன் தம்பி.. சுந்தர்தானே கேட்டு வைப்பான்..?"

பேச்சின் ஊடே.. ராதிகாவின் பிறந்த வீட்டைப் பற்றிய நினைவுகளை பாலமுரளி இழுத்து விட.. அந்த நினைவுகளில் ஆழ்ந்து போனாள் ராதிகா..

"அம்மாவைப் போல.. அப்பாவுக்கு பேச வராது.."

"பேசத் தெரியாதுன்னு சொல்லு.."

"நீங்க கண்டிங்க.. பேசத் தெரியாதவர்தான்... ஆபிஸரா வொர்க் பண்றாரா..?"

"அதுக்கும்.. பேச்சுக்கும்.. என்னடி சம்பந்தம்..?"

"பேசாம.. எப்படிங்க.. அவருக்கு கீழே வேலை பார்க்கிறவங்கள மேனேஜ் பண்ண முடியும்..?"

"அப்புறம் ஏண்டி வீட்டில பேச மாட்டேங்கிறாரு..?"

"நீங்க இப்படிச் சொல்றிங்க.. ஆனா என் பாட்டி என்ன சொல்வாங்க தெரியுமா..?"

"தெரியாதே.. நீ பாட்டி வடை சுட்ட கதையைப் போல.. இந்தக் கதையை இதுக்கு முன்னால.. எப்பவாவது என்கிட்டச் சொல்லியிருக்கயா..?"

"த்ச்சு.. கேலி பண்ணாம விசயத்தைக் கேளுங்க.."

"உத்தரவு மகாராணி"

அவள் முன்னால் வில் போல வளைந்து.. கை கட்டி வாய் பொத்திப் போலிப் பணிவு காட்டி நிற்கும் அந்தக் குறும்புக்காரன் அந்தத் தென்காசிப் பட்டினத்தின் கதாநாயகன் என்ற நினைவில் அவள் மனம் கனிந்தது..

'இப்படிப்பட்டவனின் காதலைப் பெற என்ன தவம் செய்தேன்' என்ற நினைவில் முகம் மலர்ந்தாள் கூடவே.. அப்படிப்பட்ட அதீத காதலை அவள்மேல் வைத்திருப்பவன்.. அவளது காதலை உணராமல் இருக்கிறானே என்ற நினைவும் சேர்ந்து வர.. முகம் வாடினாள்...

மாறுபட்ட இருவேறு உணர்வுகளையும் பிரதிபலித்த அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவனின் நெற்றியில் லேசான சிந்தனையின் ரேகைகள் வந்து மறைந்தன.. ஆனாலும்.. அவளுடைய முக மாற்றத்திற்கான காரணத்தை அவன் கேட்கவில்லை. மாறாக.. தன் கேலிப் பேச்சைத் தொடர்ந்தான்...

"என்னடி.. பாட்டி சொன்ன கதையை பாதியிலேயே விட்டுட்டியே.. கதை மறந்து போச்சா..?"

"அதொன்னும் கதையில்ல.."

"பின்னே.. காவியமா..?"

"உங்களை..."

ராதிகா பொங்கிச் சிரித்தாள்.. வாடிய அவளின் முகம் மலர்ந்ததில் முரளியின் மனமும் மலர்ந்தது.. தனது வெளிக்காட்டிக் கொள்ளாமல் புருவங்களை உயர்த்தினான்..

"ஏங்க.. இந்த அட்டூழியம் பண்றிங்க.. பாட்டி கதை சொல்லலை.. காவியமும் சொல்லலை.. அவங்க பெத்த பிள்ளைகளிலேயே அப்பாதான் அதிகம் பேசுவாராம்.."

"அப்படியா..!!"

முரளி அதிகமான ஆச்சரியத்தை வெளிப்படுத்த.. ராதிகா முறைத்தாள்..

"என்னை முறைச்சா.. நான் என்னடி பண்ணுவேன்..? எனக்குத் தெரிஞ்ச என் மாமனார்.. வாயே திறக்க மாட்டார்.. ஏன் ராதிகா.. ஒருவேளை இப்படி இருக்குமோ..?"

அவன் தீவிரமான முகபாவனையுடன் கேட்டத்தில் ராதிகா ஏமாந்து போனாள்... கணவன்.. ஏதையோ சொல்ல வருகிறான் என்ற நினைவில்.. ஆவலுடன்

"என்னதுங்க..?" என்று கேட்டு வைத்தாள்..

"கல்யாணத்துக்குப் பின்னால.. என் மாமனாருக்கு பேச்சு மறந்து போயிருக்குமோ..?" சிரிக்காமல் சந்தேகம் கேட்டு வைத்தான் முரளி..

அவன் பண்ணிய அடாவடித்தனத்தில் அப்போது ராதிகாவிற்குத்தான் பேச்சு மறந்து போனது.. அவள் இமைக்காமல் அவனைப் பார்த்தாள்.. போதாக்குறைக்கு பற்களை வேறு நறநறத்து வைத்தாள்..

"விடுடி.. விடுடி.. நீ வேற வயித்துப் பிள்ளைக்காரி.. மனசில இவ்வளவு கோபத்தை வைச்சுக்கக் கூடாதுடி.. பாரு.. நீ பல்லைக் கடிக்கிற சத்தத்தைக் கேட்டு.. முன்னால போவைன் கூடத் திரும்பிப் பார்த்து வைக்கிறான்.."

உண்மையாகவே அவர்களுக்கு முன்னால் சைக்கிளில் போன ஒருவன் அவர்கள் இருவரையும் பார்க்கும் ஆவலில் திரும்ப பார்த்து வைக்க.. ராதிகாவின் கோபம் அதிகரித்து..

"என்னிடம் பேசாதீங்க.."

"இந்தா பாரு.. இதுக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்ல.. உன் அப்பா அதிகமா பேச மாட்டாருன்னு நீதான் சொன்ன.. நான் சொல்லலை.."

"ஆமாமாம்.. நீங்க அறியாப் பிள்ளதான்.."

"அப்படி நான் சொன்னேனா..? அறியாப் புள்ளதான்.. ஒரு புள்ளைக்கு அப்பனாகப் போறேனா..?"

முரளி கண்சிமிட்ட.. ராதிகாவின் கோபம் பறந்தோடியது..

'கள்ளன்..!' அவன் பேச்சை ரசித்த முகச் சிவப்பு.. அவள் வெட்கத்தை வெளிப்படுத்தியது..

அந்த உள்ளங்கவர் கள்வனின் கை அவள் தோள் மேல் பரவிப் படர.. ராதிகா எல்லையற்ற நிம்மதி தனக்குள் பெருகிப் படர்வதை உணர்ந்தாள்..

அவனது கை வளைவிற்குள் இருக்கும் அந்த சுகத்தில்.. அவனது பேச்சில் தொனிந்த ரகசியக் குறும்பை அவள் கவனிக்காமல் விட்டுவிட்டாள்..

"அது சரி.. ராதிகா.." என்று பேச்சை ஆரம்பித்தவனின் முகத்தை வெகு கவனமாக பார்த்தும் வைத்தாள்..

"என்னதுங்க..?"

"உன் பாட்டி பெத்த பிள்ளைகளிலேயே உன் அப்பாதான் அதிகம் பேச மாட்டாருன்னு உன் பாட்டி சொன்னதா சொன்னியே.."

"ஆமாம்.. அதுக்கு இப்ப என்ன..?"

"ஒன்னுமேயில்ல.. ஒரு சின்ன சந்தேகம்.."

"கேளுங்க.."

"உன் அப்பாவோட சேர்த்து.. உன் பாட்டிக்கு எத்தனை பிள்ளைக..?"

முரளியின் சிரிக்கும் கண்கள் அவனுடைய போக்கிரித்தனத்தை காட்டிக் கொடுத்து விட..

'அதானே.. பார்த்தேன்..' என்ற நினைவுடன் அவனைப் பார்த்தாள் ராதிகா..

அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னால்.. அவன் துணைக் கேள்விகளாக பல கேட்பான் என்று தெரிந்த போதிலும் அவள் பதிலைச் சொல்லத்தான் வேண்டியிருந்தது..

"அது.. அது.. வந்து..."

"அதான் வந்துட்டல்ல..? சொல்லுடி.."

"பனிரெண்டு பிள்ளைகள்.."

சொல்லி முடித்த ராதிகாவின் முகம் சிவந்து விட்டது.. அவனைப் பார்க்காமல் வேறு திசையில் பார்த்தவளைப் பார்க்கப் பார்க்க.. அவனுக்கு சிரிப்பு பொங்கியது..

"ஏண்டி.. பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கன்னுதானே பெரியவங்க சொல்லுவாங்க.. உங்க பாட்டி என்ன பனிரெண்டோட நிறுத்திட்டாங்க..? இன்னும் நாலு பிள்ளைகளச் சேர்த்துப் பெத்திருந்தா கணக்கு சரியாகிருக்குமில்ல..?"

கணக்குக் கேட்டவன்.. அவளைக் கணக்கு பண்ணும் விதத்தில் கண் சிமிட்டி வைக்க.. ராதிகாவின் சிவந்த முகம்.. மேலும் சிவந்தது... அவளால் அந்த அடாவடிக்காரனுக்கு பதில் சொல்ல முடியவில்லை..

"இந்தக் காலத்தில இருக்கிறதைப் போல.. டிவி.. சேனல்கள்.. சினிமா.. அது.. இதுன்னு அந்தக் காலத்தில பொழுது போக்கு அம்சங்களே கிடையாதுடி ராது.."

அதற்கும்.. இதற்கும்.. என்ன சம்பந்தம் என்ற நினைவு வந்த போதும்.. அவனது 'ராது' என்ற அழைப்பில் மயங்கிப் போனாள் ராதிகா.. அந்த மயக்கத்திலேயே.. அடுத்து அவனைப் பேசவும் மௌனப் பார்வையில் அனுமதித்து விட்டாள்..

"அவங்களுக்கு.. இதுதானேடி பொழுது போக்கு.."

அவன் மீண்டும் கண்சிமிட்ட.. அவள் முகம் ரத்தச் சிகப்பை அடைந்தே விட்டது.. பொறுக்க முடியாமல் அவன் கையைப் பிடித்துக் கிள்ளிவிட்டாள் ராதிகா..

"ஏய்ய்.. வலிக்குதுடி.."

"ச்சீய்.. எப்பப் பாரு.. இப்படியேதான் பேசறது.."

அவர்கள் வழக்கடித்துக் கொண்டே.. வீட்டு வாசலை அடைந்தபோது.. மீனாட்சி வாசலில் நின்றிருந்தாள்..

"என்ன மீனாட்சி..?"

"ஊரில இருந்து உங்க அப்பாம்மா.. தங்கச்சி.. தம்பி யெல்லாம் வந்திருக்காங்கம்மா.."

"எப்ப வந்தாங்க.."

ராதிகா வீட்டுக்குள் பாய முனைந்தாள்.. அவள் கைபற்றி நிறுத்திய முரளி அதட்டினான்..

"எதுக்குடி இப்ப பி.டி. உஷாவைப் போல ஓட்டம் பிடிக்கிற..? மெதுவா நடந்த போனா ஆகாதா..?"

"அதானே.. அவங்க வளைகாப்புக்கு வந்திருக்காங்க.. இன்னும் ரெண்டு மூணு நாளைக்கு இங்கேதான இருப்பாங்க..?"

முரளியுடன் சேர்ந்து பேசிய மீனாட்சியின் முகத்தில் ஏதோ ஒரு வித்தியாசம் நிலவியது.. அது என்ன வென்று ராதிகா கேட்டாள்..

"என்னத்தம்மா சொல்றது..?" மீனாட்சி அலுத்துக் கொண்டாள்..

"சும்மா சொல்லு மீனாட்சி.." ராதிகா தூண்டினாள்.

"உங்க அம்மா முன்னால பேச முடியலைம்மா.. வாயைத்திறந்தாலே என் வாயை அடைக்கிறதைப் போல பேசிப்புடறாங்க.."

முரளியின் விழிகளில் சிரிப்புக் கூட.. ராதிகாவிற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை...

"இதைப் பாருடா.. மதுரைக்கு வந்த சோதனையை- மீனாட்சியின் வாயை அடைக்கிறதுக்கும் ஒரு ஆள் வந்துட்டாங்க பார்த்தியா ராதிகா.."

பால முரளியின் கேலியில் ராதிகாவிற்கு ரோசம் வந்தாலும்.. அவளால் அதைக் காட்ட முடியவில்லை.... அவள் தன்னுடைய அம்மாவிற்காக பரிந்து பேசினால் மீனாட்சியின் மனம் வருத்தம் கொண்டு விடும் அபாயம் இருந்ததால் அதைத் தவிர்க்க அவள் மௌனம் சாதித்தாள்.. அதற்குள் கீதா.. வாசலுக்கு வந்து விட்டாள்...

"ஹாய் ராது.. என்னடி.. உனக்கு வளைகாப்பு பண்ண நாங்க வந்து இறங்கியிருக்கோம்.. நீ என்னன்னா அத்தான் கூட ஜோடி போட்டுக்கிட்டு ஊர் சுத்திட்டு வர்ற.. உனக்கே இது நல்லாயிருக்காடி.."

இந்தப் பேச்சுக்கு ராதிகா பதில் சொல்வதற்குள் மீனாட்சி அவளது வழக்கமான பாணியில்.. முந்திரிக் கொட்டையாக முந்திக் கொண்டாள்...

"ஏம்மா நல்லாயிருக்காது.. எங்க சின்னம்மா அவங்க வீட்டுக்காரரோடதான ஊரைச் சுத்திட்டு வர்றாங்க.. இது நல்லாயில்லைன்னா வேற எதுதான் நல்லாயிருக்கும்..?"

"இதப் பாருடா.. மீனாட்சி சர வெடியாய் வெடிக்கிறதை.. என்ன மீனாட்சி.. எங்கம்மாகிட்ட பஞ்சாயத்தை வைச்சிடலாமா..?"

கீதா பயம் காட்ட.. மீனாட்சி சிலிர்த்துக் கொண்டாள்...

"தேனூத்துக்காரியோட பஞ்சாயத்த யாருகிட்ட வைக்கிறது..?"

"ஏன்..? தேனூத்தில வாழ வந்தவளோட அம்மாகிட்ட வைக்கிறது..."

"வேண்டாம்மா.. எங்க சின்னம்மா முகத்துக்காக பாக்கறேன்.."

"அவ முகம்தான் அழகான முகமா..? என் முகத்துக் கென்ன குறைச்சல்..? நீ என் முகத்துக்காகல்லாம் பார்க்க மாட்டியா..? இருந்தாலும் மீனாட்சி.. உனக்கு இத்தனை ஓர வஞ்சனை ஆகாது.."

மீனாட்சியுடன் சண்டைபோடாமலேயே அவளை தினறடித்துக் கொண்டிருந்தாள் கீதா.. மகளைப் பார்க்க ராஜேஸ்வரி வாசலுக்கு வந்து விட.. அவளைக் கண்ட அடுத்த நொடியில் மீனாட்சி அங்கிருந்து காணாமல் போனாள்...

"இங்கேயிருந்த மீனாட்சியை எங்கே கானோம்..?"

கீதா கண்களுக்கு மேல் கையைக் குவித்து.. தேடுவதைப் போலப் பாவனை செய்தாள்.. அங்கே விழா நாளுக்கான களை கட்ட ஆரம்பித்திருந்தது..

சொல்ல முடியாத உணர்வுகளை...
சொல்வதெப்படி.. என் தோழி..?

தாய்மைக்கேயுரிய ஆதரவுமுகத்தோடு... மகளை பாசம் பொங்கப் பார்த்தாள் ராஜேஸ்வரி...

"வந்த நேரமாச்சாம்மா..?"

"இல்லம்மா.. இப்பத்தான் வந்தோம்.. நீங்க ரெண்டு பேரும் வாக்கிங் போயிருக்கிறதா அண்ணி சொன்னாங்க.."

"வழக்கமா.. தோட்டத்திலதான் வாக்கிங் போவோம்.. இவர்தான் இன்னனைக்குன்னு பார்த்து.. அருவிக்கரை வரைக்கும் நடந்துட்டு வரலாமான்னு கேட்டாரு.."

"அதுக்கென்னம்மா.. மாப்பிள்ள துணையோடுதான போயிட்டு வந்த.. தனியாத்தான் போகக் கூடாது.. வா.. வீட்டுக்குள்ள போகலாம்.."

ராஜேஸ்வரி ஆதரவாக மகளை அணைத்தபடி வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள்.. முரளியும் கூட வருகிறானா என்று ராதிகா திரும்பிப் பார்த்தாள்..

அவனிடம் கீதா வாய் வளர்க்கவும் அவன் வாசலிலேயே நின்று விட்டான்... ராதிகாவின் முகம் சுணங்கியது.. அதை ஓரக்கண்ணால பார்த்த கீதா வாய் பொத்திச் சிரித்தாள்..

"எதுக்குச் சிரிக்கிற..?" முரளி புரியாமல் கேட்டான்..

"உங்க லவ்வருக்கு என்மேல காண்டு அத்தான்.. அங்கே பாருங்களேன்.. அவ பார்வையாலேயே நம்மள சுட்டுப் பொசுக்கறதை.."

முரளி திரும்பப் பார்த்தான்.. ராதிகா அவனை பார்வையால் எச்சரித்தபடி உள்ளே போய் கொண்டிருந்தாள்.. கீதாவின் சிரிப்பு முரளியையும் தொற்றிக் கொண்டது...

"கவனிச்சீங்களா அத்தான்.."

"கவனிச்சேன்.. கவனிச்சேன்.. நீயும்தான் உள்ள வந்து அவ முன்னாலே பேசக் கூடாதோ.."

"ஏனாம்.. இங்கே பேசினா ஆகாதோ.."

"உனக்கென்னம்மா.. சொல்லிட்டு நீ பாட்டுக்கு தூங்கப் போயிடுவ.. விடிய விடிய பொண்டாட்டிகிட்ட மாட்டிக்கிட்டு பாட்டு வாங்கப் போறது யாரு..? நான்தானே.."

"நீங்க ஏன் அவகிட்ட மாட்டிக்கறிங்க..?"

"வேற வழி...?"

"ஏன் இல்ல..? ராத்திரி பெட்ரூமில் தூங்காம.. ஹாலில் படுத்துத் தூங்கறதுதானே.."

இப்படிச் சொன்னவளை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான் பால முரளி...

"ஏன் அத்தான் அப்படிப் பாக்கறிங்க..?"

"இல்ல.. இப்படியாப்பட்ட யோசனையெல்லாம் உனக்கு எங்கேயிருந்து உதயமாகுன்னு யோசிச்சேன்.."

"தானா வருகிறதுதான் அத்தான்.."

"போகுது போ.. இதுக்கு மேல.. இந்த மாதிரியான யோசனைகளை வரவிடாம வழியை அடைச்சு வை.."

"அத்தான்..!"

அவன் வாரியதில் கீதா சிணுங்கினாள்.. அந்த நேரம் பார்த்து வெளியில் வந்த மீனாட்சி.. அவர்கள் இருவரையும் சந்தேகத்துடன் ஏற இறங்கப் பார்த்து விட்டு.. கீதாவை விரோதியைப் போல முறைத்தாள்..

"ஹாய் மீனாட்சி.."

"எதுக்கும்மா இப்ப 'ஹை' போடற..?"

"ஹையய்யோ.. ஹையய்யோ... அது 'ஹை' இல்ல மீனாட்சி.. 'ஹாய்..' எங்கே சொல்லு.. 'ஹாய்..'"

"சை.. அதையெல்லாம் என் வாயால நான் சொல்ல மாட்டேன்.."

"வேணும்னா என் வாயை கடன் கொடுக்கவா..?"

"எனக்கெதுக்கும்மா அடுத்தவங்க வாயி..? மீனாட்சி வாயைத் திறந்தா இந்த தென்காசி வட்டாரமே கிடுகிடுக்குமே.."

"இதைப் பாருடா.. இப்படியாப்பட்ட வீரதீரமான ஜான்சிராணி கொஞ்ச நேரத்துக்கு முன்னால எங்கம்மாவைக் கண்டதும் எங்கே காணாமப் போனாளாம்?"

"காணாமல் போக.. நானென்ன கடுகு.. உளுந்தப் பருப்பாம்மா.. மீனாட்சி..! நீயென்ன.. வளைகாப்புக்கு வந்தியா.. இல்ல.. வாசப் பக்கமா நிஞ்னு காத்தாட வந்தியா..?"

மீனாட்சியின் பார்வை சட்டெரிக்கும் சூரியனாய் பால முரளியின் மீது படிந்து.. படிந்து விலகியது..

'சொன்னாக் கேட்டியா..?' பால முரளியின் பார்வை கீதாவைக் கேட்டது...

அவளோ அதை சட்டை செய்யாமல் அலட்சியமாக தோளைக் குலுக்கினாள்..

"ரெண்டுக்கும்தான் வந்தேன்னு வைச்சுக்கயேன் மீனாட்சி.."

"பாரும்மா.. இது ஒன்னிலேயே நிக்கிற ஐயா பொறந்த வீடு.. ரெண்டுங்கிற பேச்செல்லாம் எங்க ஐயாகிட்ட நடக்காது.. அவரு ராமரு.. இந்த வைச்சுக்கிற வேலையெல்லாம் அவரு வைச்சுக்க மாட்டாரு..."

மீனாட்சி மூடகப் பேச்சில் புகுந்து விளையாட.. அலட்சியமாக அதை எதிர்கொண்டாள் கீதா..

"அப்படித்தான்னு நீயா முடிவு பண்ணிக்கிட்டா எப்படி மீனாட்சி.. உன்கிட்ட வந்து அவர் அப்படித்தான்னு சொன்னாரா..?"

"சொல்லலைன்னா.. நீ என்ன வேணும்னாலும் பேசிருவியா..? வேணாம்மா... இது கண்ணகி பிறந்த மண்ணு.."

"ஆ.. ஊன்னா இதையே சொல்லி பயமுறுத்தினா எப்படி மீனாட்சி..? மாதவியும் இந்த மண்ணில்தான பொறந்திருக்கா.."

மீனாட்சியினால் தாங்கவே முடியவில்லை.. பத்தினிப் பெண்களின் உத்தம புருசன்களை களவாட வந்த காரிகையை எப்படிப் பார்ப்பாளோ.. அந்த தினுசில் கீதாவை அவள் எரிப்பதைப் போல பார்த்து வைத்தாள்.. அதன் பின்.. அவளிடம் பேசுவது வேலைக்கு ஆகாது என்ற முடிவை எடுத்தவளாய் முரளியின் பக்கம் கோபக் கனலுடன் திரும்பினாள்..

"ஐயா.. பெரியம்மா உங்கள உள்ளாரக் கூப்பிட்டாங்க.."

"அவர் வருவாருன்னு நீ போய் சொல்லு.."

"அதைச் சொல்ல இந்தம்மா யாருய்யா.."

"உனக்கு அது தெரியாதா மீனாட்சி..?"

"ஐயா.. இந்தம்மாவுக்கும்.. எனக்கும் பேச்சில்ல.. இது கூடல்லாம் நான் பேசறதா இல்ல.. சொல்லிருங்க.."

"ஏன் மீனாட்சி.. என்கூட 'டூ' வா..?"

"இப்ப வர்றீங்களா.. இல்ல.. சின்னம்மாகிட்ட சொல்லிரவா..?"

மீனாட்சி கற்பின் கனலாக பொங்கியெழ.. அவசரமாக பதில் சொன்னான் முரளி..

"இதோ வந்திட்டேன் மீனாட்சி.."

"என்ன அத்தான் இது..? உங்களை வீரபாண்டிய கட்ட பொம்மன் ரேன்ஜிக்கு நான் நினைச்சிருந்தேன்.. கடைசியில இப்படிச் சொதப்பிட்டிங்களே..."

"அம்மா.. தாயே.. உனக்கு கோடி புண்ணியமா போயிரும்.. என் பெண்டாட்டி என்னைத் தேடுவா.. ஆளை விடு.."

பாலமுரளி வீட்டுக்குள் விரைந்து விட்டான்.. மீனாட்சி.. கீதாவை வெற்றிப் பார்வை பார்த்தாள்.. கீதாவுக்கு சிரிப்பு வந்தது.. அதை வெளிக் காட்டாமல் அடக்கிக் கொண்டு சாதுப் பெண்போல இமை கொட்டினாள்.. மீனாட்சியிலைலேயே அவள் செய்த லொள்ளு வேலைகளைத் தாங்க முடியவில்லை..

"நான் பார்த்தாலும் பார்த்தேன்.. உன்னப் போல ஒரு ஆளப் பார்த்ததே இல்லம்மா.."

"எப்படி மீனாட்சி பார்த்திருப்ப..? நீ தென்காசிப் ட்டினத்திலே பிறந்து வளர்ந்தவ.. நானோ ன்னைப் பட்டினத்தில பிறந்து வளர்ந்தவ.. ரு ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கவே முடியாதே னாட்சி.."

"ஏம்மா.. நீ எப்பவுமே இப்படித்தான் பேசி வப்பியா..?"

"அதைவிடு மீனாட்சி.. ஈவினிங்கில நாங்க வந்தப்ப.. ன்னை சைக்கிள் பின் கேரியர்ல உட்கார வைச்சு.. உன் ஜீரோ கொண்டு வந்து விட்டுட்டுப் போனாரே.. அவர் எப்படியிருக்காரு மீனாட்சி..?"

கீதா மீண்டும் இமை கொட்ட.. மீனாட்சியின் வயிறு கலங்கியது.. பாலமுரளி.. ராதிகாவைத்தவிர வேறு யாரையும் மனதாலும் நினைக்காத ராமன் தான்.. அந்த நம்பிகையை மீனாட்சி.. நாச்சியப்பனின் மீது வைக்க முடியுமா..? அவன் புத்தி சேலையைக் கண்டாலே தடுமாறுமே.. கீதாவோ.. சுடிதாரில் வலம் வரும் பைங்கிளி.. அவன் புத்தி பல்டி அடித்து விடாதா..? ஏற்கனவே.. அவன் கீதாவைக் கண்டாலே ஒரு மார்க்கமாக வழிந்து வைப்பான்...

"எனக்கு உள்ளே வேலையிருக்கும்மா.."

"பதிலைச் சொல்லிட்டுப் போ.. மீனாட்சி.."

கீதா கைகளைத் தட்டி அழைக்க.. அழைக்க.. அது காதில் விழாததைப் போல மீனாட்சி உள்ளே ஓடி விட்டாள்...

"அஃது.."

மீனாட்சியை புறமுதுகு காட்ட வைத்துவிட்ட வீராங்கனையாக கீதா உள்ளே சென்றாள்.. ஹாலில் குடும்பத்தினர் கூடியிருந்தார்கள்.. ராஜேஸ்வரியும்.. கிருஷ்ண மூர்த்தியும் தீவிரமாக எதையோ பேச.. அதைவிடத் தீவிரமாக மேகலா அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.. தாய்மையின் அயர்வோடு.. சோபாவில் சாய்ந்து அமர்ந்திருந்த ராதிகாவின் அருகே அமர்ந்து.. அவள் தோள்மீது கை போட்டிருந்த முரளி.. பெரியவர்களின் பேச்சு வார்த்தையை கவனித்துக் கொண்டிருந்தான்.. சுவராஸ்யமில்லாமல்.. நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சுந்தரின் அருகே போய் அமர்ந்தாள் கீதா..

"என்னடா.. வட்ட மேஜை மாநாட்டில் என்னதான் நடக்குது..?" என்று சன்னக்குரலில் கேட்டாள்..

"தீர்மானங்களை தாக்கல் பண்ணிக்கிட்டு இருக்காங்க..." அவளை விட சன்னக் குரலில் பதில் சொன்னான் சுந்தர்...

"யார் தாக்கல் பண்றது..?" கீதா ஆராய்ச்சியாக எதிரிலிருந்தவர்களைப் பார்த்தாள்...

"வேற யார்..? நம்ம அப்பாம்மாதான்.."

"அதுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறது யாராம்.."

"எதிர் தரப்புதான்.."

"ராதுவோட மாமியாரையா சொல்ற..?"

"யெஸ்.."

"போடா..."

"நீ மட்டும் குளுகுளுன்னு தேனூத்தில இருக்கனும்.. ன் மட்டும் சென்னை வெயிலுக்குப் போகனுமா..?"

"அதைச் சொல்லலைடா சுந்தர்.. அவங்க பத்தரை ந்தத் தங்கம்டா..."

"நான் ஒப்புக்க மாட்டேன்.."

"வேணாம்டா சுந்தர்.. அவங்களை பித்தளைன்னு ல்லாதே.. அப்புறம்.. கெட்ட கோபம் வந்திரும்.."

"யாருக்கு..?"

"ராதிகாவுக்குத்தான் வரும்.. பின்னே.. எனக்கா போகுது..? அவங்க எனக்கா மாமியார்..? க்குத்தான் மாமியார்.."

"அதானே பார்த்தேன்.. சிறுத்தை தன்னோட ளைகளை மாத்திக்கவே மாத்திக்காதே.. இவ மட்டும் குணம் மாறினான்னு ஒரு நிமிசம் அசந்தே ட்டேன்.."

"யாரு அசருகிறது..? நீ அசருகிற ஆளா..? போடா.. போய் இதை வேற யார்கிட்டயாவது சொல்லு.."

"அந்த அத்தை தங்கமில்ல கீதா.. வைரம்..!"

"டேய்.. சுந்து..! எங்கேயோ போயிட்டடா.. பிழைச்சுக்குவடா.."

"எல்லாம் உன் ஆசிர்வாதம்தான்.."

"என் ஆசிர்வாதம் எப்பவும் உன் கூடவே இருக்கும்.. இப்ப இரண்டு தரப்பும் எதுக்காக மோதிக்குது..?"

"அதையேன் கேட்கிற.."

"ஏண்டா.. கேட்கக் கூடாதா.."

"அடச்சீ.. ஒரு பேச்சுக்குச் சொன்னா.. உடனே ஆரம்பிச்சிருவியே.. சமையலுக்கு ஆளை ஏற்பாடு பண்ற பொறுப்பு எங்களோடதுன்னு நம்ம அப்பாம்மா சொல்றாங்க.. அதைக் கூட நீயே செய்யனுமான்னு அத்தை கோவிச்சுக்கறாங்க.."

"நியாயம்தானே.. ஆக்சுவலா நாம.. இதையெல்லாம் இழுத்துத் தலை மேலே போட்டுக்காம நாசுக்கா விலகி இருந்துக்கனும்.."

"அப்புறம்..?"

"அவங்க பார்த்துப் பார்த்துச் சமைத்துப் போட்டா முத ஆளா இலையில உட்கார்ந்து உனக்கையால கொட்டிக்கனும்.."

"அதை உன் வளைகாப்பப்போ செய்துக்கலாம்.."

"அடப்பாவி.. உன்னை நம்பி.. ஒருத்தனுக்கு கழுத்தை நீட்ட முடியாது போல இருக்கே.. இந்த லட்சணத்திலதான் எனக்கு நீ சீரு செய்வியா..?"

"உனக்கு மட்டும் ஒழுங்கா எல்லாம் நடக்கனும்.. அதுவே அக்காவுக்குன்னா எதையும் இழுத்து விட்டுக்காம நாசுக்கா ஒதுங்கிக்கனும்.. என்னே உன் நியாயம்..! நீ மனுநீதிச் சோழன் பரம்பரையில பிறந்திருக்க வேண்டியவ கீதா.. தவறிப் போய் எனக்கு சின்ன அக்காவா பிறந்து தொலைச்சிட்ட.."

"ஆனாலும் சுந்தர்.. நீ இப்படியெல்லாம் என்னைப் புகழக் கூடாது.."

"இது புகழ்ச்சியா..? கடவுளே..! இவ கொடுமையில இருந்து என்னைக் காப்பாத்த யாருமே வர மாட்டாங்களா..."

சுந்தர் கை குவிக்க.. மேகலாவின் கவனம் அவன் பக்கமாகத் திரும்பியது..

"என்னப்பா..?" அவள் கனிவுடன் விசாரித்தாள்..

"எல்லாத்தையும் காப்பாத்து கடவுளேன்னு சாமிகிட்ட வேண்டிக்கிட்டு இருந்தேன் அத்தை.." அவன் சமத்தாக பதில் சொன்னான்..

கிருஷ்ணமூர்த்தியும்.. ராஜேஸ்வரியும் விட்டுக் கொடுக்காததினால் மேகலா அரை மனதாக அவர்கள் சொல்வதற்கு ஒப்புக் கொண்டாள்..

"என்னதான் சொன்னாலும்.. அவங்க கடமையிலயிருந்து பின் வாங்க மாட்டாங்களே.." என்று பெருமையுடன் சம்பந்தி வீட்டுக்காரர்களைப் பற்றி மகனிடம் கூறினாள் மேகலா...

"நான்தான் சொல்லியிருக்கேனே அண்ணி.. ஒரு ராஜ்ஜியத்தையே கொடுத்தாலும் அது தாய் வீட்டுச் சீருக்கு ஈடாகாது.." ராஜேஸ்வரி மரியாதையுடன் ஆனால் தனது மதிப்பை விட்டுக் கொடுக்காமல் கூறினாள்..

ராதிகாவிற்கு தன் பிறந்த வீட்டை நினைத்து பெருமையாக இருந்தது...

ஆற்றங்கரையில் காத்திருந்ததை...
அவனறிவானோ..? சொல் தோழி..!

இரவு உணவு முடிந்த பின்னால்.. அனைவரும் ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.. மீனாட்சியைக் கூப்பிட வந்த நாச்சியப்பன் சைக்கிள் மணியை ஒலிக்க விட.. ஒட்டமும்.. நடையுமாக வந்த மீனாட்சி.. அலறியடித்துக் கொண்டு.. அவன் கையை இறுக்கிப் பிடித்தாள்..

"யோவ்.. மணியடிக்காதேய்யா.. அதான் நான் வந்துட்டேனில்ல.. அப்புறமும் யாரைக் கூப்பிட மணியடிச்சு வைக்கிற..?"

"ஏன் புள்ள.. நான் மணியடிச்சதினாலதான.. நீ வந்து சேர்ந்த.."

"உன் தலை.. நான் அப்பவே வந்துட்டேன்.."

"வந்து..?"

"உனக்காக காத்துக்கிட்டு நின்னேன்ய்யா.."

"மீனாட்சி.." நாச்சியப்பன் காதலாகி கசிந்துருகிப் போனான்..

"மீனாட்சிதான்ய்யா.. அதுக்கு இப்ப என்னாங்கிற.."

"ஏன்புள்ள கோவிச்சுக்கறே..?"

"கோவிச்சுக்காம உன்னக் கொஞ்சுவாங்களாக்கும்.. முதல்ல சைக்கிளை விடுய்யா.. நேரத்தில வீடு போய் சேரலாம்..."

கீதாவின் கண்களில் நாச்சியப்பன் பட்டு விடக் கூடாது என்ற மாபெரும் கவலையுடன் மீனாட்சி.. வீட்டுக்குள்ளே பார்த்தபடி நாச்சியப்பனை அவசரப் படுத்திக் கொண்டிருக்க.. அவளுக்கு பக்கவாட்டுத் திசையிலிருந்து தோட்டத்துப் பக்கமாக..

"மீனாட்சி..!" என்ற குரல் அமானுஷ்யமாக கேட்டது..

மீனாட்சிக்கு உடல் தூக்கிப் போட்டு விட்டது. பயந்து போய் அலற இருந்தவள்.. கடைசி நொடியில் அந்தக் குரலை இனம் கண்டு கொண்டாள்..

'இது அந்த கீதாப் பொண்ணோட சத்தமில்ல.. ம்ஹீம்.. இவ கூப்பிட்டதுக்கு.. அந்தப் பேயே கூப்பிட்டிருக்கலாம்..'

தலையில் கை வைத்துக் கொள்ளாத குறையாக மீனாட்சி அலுத்துப் போய் நின்று விட.. கீதா.. தோட்டத்தின் செடி மறைவிலிருந்து வெளிப்பட்டு அவர்களுக்கு அருகே வந்தாள்...

"என்ன நாச்சியப்பன் எப்படியிருக்கீங்க..?"

மீனாட்சியைப் பார்த்தபடி அவள் நாச்சியப்பனை நலம் விசாரிக்க அவன் புளகாங்கிதப்பட்டுப் போனான்..

"ஹி... ஹி.. நல்லாயிருக்கேன்ம்மா.. அம்மா... என்னையெல்லாம் நினைப்பில வைச்சிருக்கீங்க போல.."

அவன் வழிந்த வழிசலில் தோட்டத்துச் செடிகளெல்லாம் நனைய ஆரம்பிக்க மீனாட்சி கனலாகிப் போனாள்.. அதைக் கண்டு கொள்ளாத ஜொள்ளு மன்னனாக நாச்சியப்பன் கீதாவிடம் உரையாடிக் கொண்டிருக்க கீதாவோ.. மீனாட்சியின் கனல் பார்வையை புனல் பார்வை பார்த்தபடி தனது உரையாடலை தொடர்ந்து கொண்டிருந்தாள்..

"மறந்தாத்தானே நினைவில வைச்சுக்க வேண்டி வரும் நாச்சியப்பன்.. நான்தான் மறந்ததேயில்லையே.."

அவள் எதை மறந்ததில்லை என்று மறந்தும் அவள் கூறவில்லை.. அது தெரியாத நாச்சியப்பன் பக்கத்தில் தனது காதல் மனைவி நிற்பதை மறந்தவனாக பரவசப்பட்டுப் போனான்..

"அம்மா.."

"நாச்சியப்பன்.."

"அம்மா..!"

"நாச்சியப்பன்.."

அடுத்து அவன் 'அம்மா என்பதற்குள் மீனாட்சி முந்திக் கொண்டு...

"அம்மா.." என்று ஒரு சத்தம் போட்டாள்..

ஹாலில் பேசிக் கொண்டிருந்த மேகலா.. கன்றின் குரல் கேட்ட தாய்ப்பசுவாகி..வாசல் பக்கம் திரும்பிப் பார்த்தாள்...'

"அது மீனாட்சியோட சத்தம் போல இருக்கே.." ராதிகாவை அவள் பார்க்க..

"ஆமாம்.. அத்தை.." என்றாள் அவள்..

"இன்னுமா அவ வீட்டுக்குப் போகலை..?"

மேகலா எழுந்து வாசல் பக்கம் போய் விட்டாள்..

மீனாட்சி மேகலாவை அழைத்து விடுவாள் என்பதை எதிர்பார்த்திராத நாச்சியப்பன் நடுநடுங்கிப் போய்.. கீதாவை மறந்தவனாக..

"வா புள்ள.. வீட்டுக்குப் போகலாம்.." என்று மீனாட்சியிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான்..

அவளோ.. 'யார்.. நீ..?..' என்பதைப் போல அறிமுகமற்ற பார்வை பார்த்தக் கொண்டிருந்தாள்..

"என்னடி மீனாட்சி.. இன்னும் இங்கே என்னத்தை நோண்டிக்கிட்டு இருக்கே.." மேகலா கேட்டாள்..

"அதை எங்கிட்டக் கேட்காதீங்கம்மா.. இந்த மனுசன்கிட்டக் கேளுங்க.."

மீனாட்சி முகம் திருப்பிக் கொண்டாள்.. அந்த இருளிலும் அவள் கண்களில் கண்ணீரின் பளபளப்புத் தெரிய.. நாச்சியப்பன் மனம் குன்றிப் போனான்..

'ச்சே.. பட்டும் எனக்குப் புத்திவரலையே..'

அவன் தன்னைத்தானே திட்டிக் கொண்டிருப்பதை அறியாதவளாக மேகலா விசாரணையை ஆரம்பித்தாள்..

"என்னடா நாச்சியப்பா.. இன்னைக்கு என்ன அழும்பைப் பண்ணித் தொலைச்சே.."

"ஒன்னுமே பண்ணலைம்மா.."

"நீ ஒன்னும் பண்ணாமலா அவ என்னைப் பஞ்சாயத்து பண்ணச் சொல்லிக் கூப்பிட்டிருக்கா..?"

"நிசமாவே நானா எதையும் பேசலம்மா.."

மறைமுகமாக மனைவியின் கால்களில் அவன் விழுந்து கொண்டிருக்க.. மேகலா கீதாவைப் பார்த்தாள்..

"நீ இங்கேயென்னம்மா பண்ணிக்கிட்டு இருக்க..?"

"சும்மா.. காத்தாட வாசல்பக்கமா நிற்கலாம்ன்னு வந்தேன் அத்தை.."

அவளது பதிலைக் கேட்ட மீனாட்சி.. பல்லைக்கடித்தாள்..

"இந்தப் பொண்ணு வந்ததில இருந்தே காத்தாட உலாவிக்கிட்டே அலையுதும்மா.. அடங்கி வீட்டுக்குள்ள உட்கார மாட்டேங்குது.."

"அவ பட்டினத்துப் பொண்ணு.. அப்படித்தான் இருப்பா.. நீ எதுக்காக இவமேல பாயறே..? ஏம்மா கீதா.. நீயும் இத்தனை நேரமா இங்கதான நின்னுக்கிட்டு இருந்த..? இதுக ரெண்டும் எதுக்காக அடிச்சுக்-கிட்டாங்கன்னு உனக்குத் தெரியுமா..?"

"ஆமாம்மா.. நாயம் பொளக்க நல்ல ஆளைப் பிடிச்சிங்க... வேலிக்கு ஒனான் சாட்சியா..?"

"ஏண்டி மீனாட்சி.. விளங்காமப் பேசற.?"

"உங்களுக்கு விளங்காட்டி விடுங்கம்மா.. விளங்க வேண்டிய ஆளுகளுக்கு விளங்கினாப் போதும்..."

"இப்ப நீ வீட்டுக்குப் போறியா.. இல்லியா.."

"இந்த ஆளுகூடவா..? ஊஹூம்... அதுக்குப் பதிலா.. காவேரி கூடப் படுத்துத் தூங்கிக்கறேன்.."

மீனாட்சியின் தீர்மானத்தில் நாச்சியப்பன் திகிலடைந்து போனவனாக.. "மீனாட்சி.. மீனாட்சி..." என்று கூவிக் கொண்டிருக்க அவள் உன்னையெல்லாம் திரும்பிப் பார்ப்பேனா என்று வீட்டுக்குள் சென்று விட்டாள்..

"உனக்குக் கொஞ்சம் கூட அறிவேயில்லடா.. அவதான் கோவக்காரின்னு தெரியுமில்ல.. அப்புறமும் எதுக்காக அவகூட மல்லுக்கு நிக்கிற...?"

"அதுக்காக.. வீட்டுக்கு வரமாட்டேன்னு போனா எப்படிம்மா..?"

"விட்டுப் பிடிடா.."

"விட்டாப் பிடிக்க முடியாதும்மா.."

"அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்ற..? பொண்ணு கேட்ட.. கட்டிக் கொடுத்தேன்.. அவள கண்ணு கலங்காம பாத்துக்கனுமா இல்லியா..? அதை விட்டுட்டு ரெண்டு நாளைக்கொரு தரம் என்னை பஞ்சாயத்துப்

பண்ண வைக்கிற.. நீ இப்படியிருந்தா.. அவ இப்படித்தான் செய்வா..."

"நீங்க புத்தி சொல்லி அனுப்பி வையுங்கம்மா.."

"அவ என்ன புத்தியில்லாத பொம்பளயா..?"

"ஐயோ கடவுளே..! நான் அப்படிச் சொல்லுவேனா..?"

"சொல்லித்தான் பாரேன்.."

"உங்க காலில வேணும்னாலும் விழுகறேன்.. அவள என்னோட அனுப்பி வைச்சிருங்கம்மா.."

"அப்படியெல்லாம் அனுப்ப முடியாதுடா.. என் காலில விழுகறதுக்குப் பதிலா.. நாளைக்கு வந்து அவகாலில விழு.. அவ வந்தா கூப்பிட்டுக்கிட்டுப் போ.."

"இல்லைன்னா.."

"இங்கேயே இருக்கட்டும்.. எனக்குப் பின்னால அவளை என் மருமக பார்த்துக்குவா..."

"அம்மா.. நாளைக்கு விழுகறதை இப்பவே விழுந்து வைக்கிறேன்.. நீங்க அவளக் கூப்பிடுங்கம்மா.."

"முடியாதுடா.."

மேகலா தீர்மானமாகச் சொல்லி விட.. நாச்சியப்பன் அவளிடம் மண்டி போடாத குறையாகக் கெஞ்சிக்

கொண்டிருந்தான்.. வாசலுக்குப் போனத் தாயைத் தேடிக் கொண்டு வந்த முரளி.. அங்கே நடந்து கொண்டிருந்த வழக்கைக் கண்டு திகைத்தான்..

"என்னம்மா..?"

விவரம் கேட்டபடி கீதாவைப் பார்த்தவனுக்கு அவளது மர்மப் புன்னகையில் விவரம் புரிந்து விட்டது.. மீதி விவரத்தை மேகலாவின் மூலம் அறிந்து கொண்டவன்.. செல் போனை காதுக்குக் கொடுத்தான்..

"ராதிகா.. மீனாட்சி காவேரி ரூமில இருப்பா.. வரச் சொல்லு..."

பேசிவிட்டு போனை அணைத்தவனிடம் மேகலா சண்டைக்குப் போனாள்..

"எதுக்காகடா அவளை வரச் சொன்ன..?"

"வழக்குத் தீர்க்கத்தான்.."

"அதை தீர்க்க முடியாமத்தானே அவளே நொந்து போயிருக்கா.."

"இவன் வெந்து போயிருக்கான்.."

"போகட்டும்.. பொண்டாட்டிய மதிக்கலைன்னா இதுதான் கதி.."

"விடுங்கம்மா.. பிழைச்சுப் போகட்டும்.."

கோபவேசத்துடன் வந்த மீனாட்சி.. முரளியைக் கண்டதும் சாதுப் பெண்ணாக.. தலைகுனிந்து நின்றாள்..

"கோபம் வந்தா வீட்டுக்குப் போயி அவன நாலு மொத்து மொத்து.. அத விட்டுட்டு வீட்டுக்குப் போக மாட்டேன்னா என்ன அர்த்தம்..?" முரளி அதட்டினான்..

"அதில்லங்கய்யா.. இந்த ஆம்பள.. குணம் கெட்ட ஆம்பள..."

"அது தெரிஞ்ச சங்கதிதானே.. திருத்திப் புடலாமுன்னுதானே கழுத்தை நீட்டின..? இப்ப முறைச்சுக்கிட்டு நின்னா எப்படி..? முதல்ல அவன்கூடப் போ.. டேய் நாச்சியப்பா.. சைக்கிளை எடுடா.."

முரளி போட்ட சத்தத்தில் மீனாட்சி அடங்கிப் போனாள்.. பேசாமல் சைக்கிளின் கேரியரில் ஏறி அமர்ந்து கொண்டாள்... மீண்ட சொர்க்கத்தை விட்டு விடாமல் இறுக்கிப் பிடித்துக் கொள்ளும் கெட்டிக்காரனாக நாச்சியப்பன் சைக்கிளை மிதிக்க... அது வேகமாக பறந்தது...

"வாவ்..!"

அந்த வேகத்தை வியந்தாள் கீதா..

"என்ன வாவ்..? பைசா செலவில்லாம.. கோர்ட்டுப் படி ஏறாம அவங்க ரெண்டு பேத்தையும் விவாகரத்து வாங்க வைச்சிருவ போல.. உன் விளையாட்டுக்கு ஒரு அளவே இல்லையா..?"

கீதாவின் காதைப் பிடித்துத் திருகினான் முரளி.. விளக்கம் கேட்ட மேகலாவிடம் எதையோ சொல்லிச்

சமாளித்தான்.. அவர்கள் வீட்டுக்குள் போன போது.. சுந்தர் கூறிய ஏதோ ஒன்றைக் கேட்டு ரசித்துச் சிரித்துக் கொண்டிருந்தாள் ராதிகா..

"ஏண்டி.. இவன் போடற மொக்கைக்குப் போய் சிரிச்சா.. இவன் மண்டையில கனம் ஏறிக்காதா..? அளவாச் சிரிடி.." ராதிகாவின் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள் கீதா..

"மீனாட்சிகிட்ட என்னடி சொன்ன..?" ராதிகா முறைத்தாள்...

"அதுக்குள்ள உனக்கு விசயம் வந்திருச்சா..? பாரு ராது.. என்மேல குத்தமில்ல.. அந்த நாச்சியப்பன் ஜொள்ளு மன்னனா இருக்கான்.. நான் சும்மா நூல் விட்டா.. அவன் ஸ்வெட்டரே பின்ன ஆரம்பிச்சுட்டான்.. அதுக்கு மீனாட்சி எகிறினா நான் என்னடி பண்ணுவேன்..?"

"இது வேறயா..? ஏண்டி.. மாதவிக்கு எதுக்காக வக்காலத்து வாங்கினேன்னு கேட்கக் கூப்பிட்டா.. நீ கதை கதையாய் கவிழ்த்து விடறயே.. இது நான் வாழ வந்த வீடுடி தாயே.."

"அந்த நினைப்பு எனக்கும் இருக்கு.. நம்ம சின்ன எஜமானியோட பேசறோம்கிற நினைப்பு உன் வீட்டு வேலைக்காரனுக்கு இருக்கனுமா.. வேண்டாமா..?"

"சின்ன எஜமானியா..? அது யாருடி..?"

"நான்தான்.. வேற யாருன்னு நினைச்சே..? எஜமானிக்கு தங்கை.. சின்ன எஜமானிதானே..?"

கீதா விளக்கம் சொன்ன விதத்தில் ராதிகாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

"கீதா.."

"என்னடி..?"

"எதுக்கெடுத்தாலும் 'சின்ன' அளவில் யோசிக்காம பெரிய அளவில் நீயேண்டி யோசிக்க மாட்டேங்கிற..?"

"புரியலையே..."

"அதாவது.. பெரிய வீடு.. பெரிய எஜமானி.. பெரிய ஜோலி.. இப்படி பெரிசாவே நினைடி.. அதான் உனக்கும் நல்லது.. ஊருக்கும் நல்லது..."

"டிரை பண்றேன்.."

மிதப்பாக பதிலளித்த கீதாவை கடிந்து கொள்ளாமல் விட்டுக் கொண்டாள் ராதிகா...

ஒரு வார்த்தை சொல்லி விட்டான்..
உறங்காத இரவை அளித்தான்...

மேகலா தயக்கத்துடன் மகனின் முகம் பார்த்தாள்.. காலைக் காபியை உறிஞ்சியபடி பேப்பரில் ஆழ்ந்திருந்த பாலமுரளி.. அவனைத் தேடி மாடிக்கே வந்து விட்ட தாயை வியப்புடன் பார்த்தான்..

"என்னம்மா.. ?"

"கோமதி நாயகத்துக்கும்.. தங்கத்துக்கும் வளைகாப்புக்குக்கு வரச்சொல்லி அழைப்புச் சொல்ல வேணாமா முரளி.."

மேகலா கைகளைப் பிசைந்தபடி கேட்டாள்... பாலமுரளியின் முகம் கோபத்தில் ஜிவுஜிவுத்து விட்டது... மகனின் கோபத்தை உணர்ந்த மேகலாவின் விழிகளில் பயம் சூழ்ந்தது...

முரளிக்கு காபி கொடுத்து விட்டு அருகே அமர்ந்து பேப்பரின் பக்கங்களைப் பார்த்துக் கொண்டிருந்த ராதிகாவுக்கு கவலையாக இருந்தது..

மேகலா மாணிக்க வாசகத்தின் நினைவுகளோடு வாழ்பவள்.. அவரைச் சார்ந்த துரும்புகூட அவளுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.. அப்படியிருக்கும் போது.. மாணிக்கவாசகத்தின் ஒன்று விட்ட தங்கையை ஒதுக்கி வைக்க அவளால் முடியுமா.. ?

முரளியோ கடுங்கோபக்காரன்.. கோமதிநாயகத்தின் மகளுக்கான வளைகாப்பு அழைப்பிற்கு வந்த போது தங்கம் சிதற விட்ட வார்த்தைக் கோடாளிகள் ராதிகாவின் இதயத்தைப் பிளந்ததை அவனால் மறக்க முடியவில்லை.. மன்னிக்கவும் அவன் தயாராக இல்லை..

அவனது கோபத்தின் வீச்சில் கோமதி நாயகத்தின் குடும்பம் ஏற்கனவே பலத்த பாதிப்பிற்கு ஆளாகியிருந்தது.. தென்காசி வட்டாரத்தின் பெரிய மனிதர்களின் வீட்டு விசேங்களுக்கு அவர் குடும்பம் அழைக்கப்படவில்லை..

"அந்தாளைக் கூப்பிட்டா முரளித்தம்பி வரமாட்டாருய்யா.."

கோமதி நாயகத்தின் குடும்பதினரின் நிழல்படும் இடத்தில் கூட முரளி நிற்க மாட்டான் என்பதே அவர் குடும்பத்தை மற்றவர்கள் தள்ளி வைக்க போதுமான காரணமாக இருந்து வைத்தது...

விழா நாளுக்கே இப்படியெனும் போது.. வியாபார நிலவரத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை..

முரளியின் பகைக்காக.. கோமதி நாயகத்தின் மகன்களின் தொழில்களில் பங்கு கொண்டிருந்தவர்கள் பின் வாங்கினார்கள்.. மூலப் பொருள்கள் கிடைப்பத அரிதாக மாறியது.. உருவான பொருள்கள் விற்பனைக்குச் செல்ல முடியாமல் தேங்கின..

"தப்பா எடுத்துக்காதேப்பா.. தேனூத்துக்காரரைப் பகைச்சுக்கிட்டு எங்களால குப்பை கொட்ட முடியாது.."

எல்லாத் தரப்பிலிருந்தும் ஒன்றுபட்ட பதிலைக் கேட்ட கோமதிநாயகத்தின் மகன்கள் மனமொடிந்து போனார்கள்..

இப்படிப்பட்ட நிலைமையில் அவர்களை வைத்திருக்கும் பாலமுரளி தன் மனைவியின் வளைகாப்பு விழாவிற்கு அவர்களை அழைக்கச் சம்மதிப்பானா..?

"வேற பேச்சிருந்தாப் பேசுங்கம்மா.."

அவன் பேச்சு முடிந்தது என்பதற்கு அறிகுறியாக பேப்பரில் விழி பதித்தான்.. மேகலாவின் கண்கள் கலங்கி விட்டன.. அதை இரக்கத்துடன் பார்த்தாள் ராதிகா.. தாய்க்கும்.. மகனுக்குமான மோதலில் தலையிட அவள் விரும்பவில்லை.. அது அவர்களின் பிரத்யேக பாசத்தைப் பகிர்ந்த கொள்ளும் செயலாக இருக்கும் என்ற நினைவில் மௌனம் சாதித்தாள்..

மேகலா பேச்சை விட்டு விட மனமில்லாதவளாகப் பேச்சைத் தொடர்ந்தாள்..

"இதைப் பேசத்தான் வந்தேன் முரளி.."

"இது முடிஞ்சு போன பேச்சும்மா.."

"உன் அப்பாவோட கடமை முடிஞ்சிருச்சுன்னு சொல்றயா..?" தீர்க்கமாகக் கேட்ட தாயை தீர்க்கமாக பார்த்தான் மகன்..

"எப்படிம்மா.. உங்களால மட்டும் இப்படியெல்லாம் பேச முடியுது..? இப்படிப் பேசிப்பேசியே என்னை அடக்கி வைச்சு.. அவர்களை ஆட விட்டிங்க.. கடைசியில என்ன ஆச்சு..?"

அந்த நாளின் நினைவில் ராதிகாவை அவன் பார்க்க.. அவள் பார்வையைத் தழைத்துக் கொண்டாள்...

"அன்னைக்கு நடந்தது உனக்கு மட்டும்தான் நினைப்பிலிருக்கா..? எனக்கு இல்லையா..?" மனத்தாங்கலுடன் கேட்டாள் மேகலா..

"இருந்திருந்தா இப்படிப் பேசிக்கிட்டு வருவீங்களா..?" முரளி எரிச்சல் பட்டான்..

"அதுக்கான விலையை அவங்க கொடுத்திட்டாங்க.. தண்டிச்சது போதும்டா முரளி.."

"எனக்கு மன்னிக்கத் தெரியாதும்மா.."

"உன்னை யாருடா மன்னிக்கச் சொன்னது..? நீ மன்னிக்கவும் வேணாம்.. அவங்க செஞ்சதை மறக்கவும்

வேணாம்.. ஆனா.. செய்ய வேண்டிய கடமையை மட்டும் செஞ்சிரு.."

"இதென்னம்மா வம்பா இருக்கு.. புரிஞ்சுதான் பேசறிங்களா..?"

"அவங்க கூட சம்பந்தம் வைச்சுக்கச் சொன்னா நீ ஏன்னு கேளு.. நாம பொண்ணையும் கொடுக்கல.. பொண்ணையும் எடுக்கல.. ஏன்..? அந்த கோமதி நாயகமும்.. தங்கமும் குணம் கெட்ட மனுசங்க.. அவங்க வீட்டில பொண்ணு கொடுத்து.. பொண்ணெடுத்தா.. என் பிள்ளைகளோட வாழ்க்கை சந்தோசமா இருக்காதுன்னு எனக்குத் தெரியும்.. நான் அதைச் செய்யலையே.."

மேகலாவின் நியாயமான பேச்சிற்கு மறுமொழி கூற முடியாமல் முரளி அவளை மௌனப் பார்வை பார்த்தான்..

"இல்ல.. அவங்ககூட ஒன்னா.. மண்ணாப் போகனுமுன்னு நான் சொன்னா நீ கோவிச்சுக்க.. நானும் மகன்கிட்ட பேச்சு வாங்கிக்கறேன்.. நாம அதையும் செய்ய வேணாமே.. மத்தவங்க வீட்டுக்காவது போய் வருவோம்.. இவங்க வீட்டுப்பக்கம் தலை வைச்சுக்கூடப் படுக்க மாட்டோம்.."

அதுவும் உண்மைதான் என்பதால் முரளி மௌனப் பார்வையைத் தொடர்ந்தான்..

"நான் என்ன கேட்கிறேன்..? உன் அப்பாவோட கடமையை நீ விட்டுறக் கூடாதுன்னுதான் கேட்கிறேன்.. தங்கத்தோட மக வளைகாப்புக்கு நாம போகலை.. ஆனா.. நம்ம வீட்டில இருந்து தாய் மாமன்சீரு போனது.. உண்டா.. இல்லையா..?"

"ம்ம்ம்..."

"அதப் போல இப்பவும் செய்யின்னுதான் சொல்றேன்.. வளைகாப்புக்கு கூப்பிட நீ போக வேணாம்.. நானும் போக மாட்டேன்.. நம்ம நாச்சியப்பன் போகட்டும்.."

"வேலைக்காரன் மூலமா அழைப்பு வருதுன்னு அவங்க வீட்டிலே வராம இருக்க மாட்டாங்கம்மா.. கிடைச்சது சான்ஸீன்னு வந்து தொலைச்சிருவாங்க.."

"வந்தா வரட்டுமே.. நாம அவங்க வீட்டுக்குப் போக வேணாம்.. அவங்க நம்ம வீட்டுக்கு வந்தா அதை தடுக்கவும் வேணாம்.. பகையாளியாய் இருந்தாலும் வீட்டுப்படியேறி வந்திட்டா அவங்கள வான்னு கூப்பிடனும்கிறதுதான் உங்க அப்பாவோட கொள்கைடா.. முரளி.."

"என்னவோ செய்ங்க..."

பாலமுரளி மறைமுகமாக ஒப்புதல் அளித்து விட்டதில் மேகலா முகம் மலர்ந்து போனாள்.. மகனை நன்றியுணர்வுடன் பார்த்து விட்டு படியிறங்கி விட்ட மாமியாரின் சந்தோசத்தை ராதிகாவால் உணர முடிந்தது...

முரளியை நிமிர்ந்த பார்த்த ராதிகாவின் விழிகளில் நிறைந்திருந்த வாத்சல்யத்தில் முரளி பேப்பரை மறந்தான்..

"என்னடி.. ?"

"யு ஆர் ஸோ கிரேட்.."

"ஊஹீம்.. ஒரு புருசன்கிட்டப் பெண்டாட்டி இப்படிச் சொல்லக் கூடாது.."

"வேற எப்படிச் சொல்லனுமாம்.. ?"

"யு ஆர் ஸோ ஸ்வீட்டுன்னு சொல்லனும்.."

முரளி எழுந்தான்.. குனிந்தான்.. கர்ப்பிணியான மனைவியை பூ மாலையைத் தாங்கித் தூக்குவதைப் போலத் தூக்கிக் கொண்டான்.. அவள் இதழ் நோக்கிக் குனிந்தான்.. முத்தமிட்டான்..

அவன் தந்த அந்த முத்தத்தில் ஆயிரம் கோடி சர்க்கரை மூட்டைகளின் இனிப்பிருந்தது.. தாள மாட்டாதவளாக ராதிகா அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு.. காதோரமாக முணுமுணுத்தாள்..

"யு ஆர் ரைட் மைடியர்.. யு ஆர் ஸோ ஸ்வீட்.."

"குட்மார்னிங் அத்தான்.." என்றபடி அங்கே வந்தாள் கீதா...

முரளியின் கையிலிருந்த ராதிகாவைப் பார்த்தவள்..

"ஏண்டி.. ஒரு மார்க்கமா முழிக்கறே.." என்று கேட்டும் வைத்தாள்.. அவளைக் கண்டதும் ராதிகா அவசரமாக இறங்க முயல..

"பொறுடி.." என்று அதட்டினான் முரளி..

மெல்ல.. அலுங்காமல்.. குலுங்காமல் அவளை இறக்கி விட்டவன் மைத்தினியை ஒரு மார்க்கமாகப் பார்த்து வைத்தான்...

"என்னத்தான் பார்வை இந்தப் பக்கமா திரும்புது.. ?"

"இல்ல.. பூஜை வேளைக் கரடி.. பூஜை வேளைக் கரடின்னு ஒன்னை அடிக்கடி சொல்லுவாங்களே.. அது நீதானா.. ?"

"ம்ஹீம்.. ஊரில.. உலகத்தில எல்லாரும் மைச்சினிச்சியைப் பார்த்து.. நீதானா அந்தக் குயில்ங்கிறாங்க.. என் அக்கா ஹஸ்பெண்ட் என்னன்னா.. நீதானா அந்தக் கரடிங்கிறார்.. எல்லாம் நான் வாங்கி வந்த வரம்.."

"உன்னப் போல மச்சினிச்சி அமைஞ்சா.. எல்லாப் பயலுகளும் நான் சொன்னதைத்தான் சொல்லுவாங்க.."

"நினைச்சிக்கிட்டே இருங்க.. மைச்சினிச்சி அழகா இருக்காளான்னு கன்பர்ம் பண்ணிட்டு தாலிகட்டறவங்கதான் அதிகமா இருக்காங்க.."

"உன்கிட்டப் பேசினா வேலைக்கு ஆகாது.. ராது.. நான் குளிச்சிட்டு மில்லுக்குப் போயாகனும்.. உள்ளே வா.."

"நீங்க குளிக்கிறதுக்கு அவ எதுக்காக உள்ளே வரனும்..?"

கேள்வி கேட்டவளை என்ன செய்தால் தகும் என்ற எரிச்சலோடு பார்த்தான் பாலமுரளி...

"பஸ்.. பஸ்.. இப்ப எதுக்காக காதில புகை விடறிங்க அத்தான்.. உங்களுக்கு என்ன வேணும்..?"

"என் பெண்டாட்டிதான் வேணும்.."

"வைச்சுக்கங்க.. யாரு வேண்டாம்ன்னு கையைப் பிடிச்சது..? ஆனா.. இதையெல்லாம் மூணு நாளைக்கு மூட்டை கட்டி வைச்சிருங்க.. நாங்க ஊருக்கு கிளம்பின பின்னாலே உங்க ரொமான்ஸை கன்டினியு பண்ணுங்க.. யாரு வேண்டாம்ன்னு சொன்னது..?"

"நீ அதைக் கூட சொல்லிருவியா.. ஏய்ய்.. நீ வாடி.."

மனைவியை இழுத்துக் கொண்டுதான் அங்கிருந்து அகன்றான் முரளி.. அதில் கீதாவுக்குள் சன்னமான பொறாமையுணர்வு எழுந்தது...

"எப்படிடி.. அத்தானை இப்படி மயக்கி வைச்சிருக்க..?" ராதிகாவிடம் தனிமையின் விசாரித்தாள்...

அவன் ராதிகாவிடம் மயங்கிக்கிடப்பதை விட.. அவனிடம் ராதிகாதான் அதிகமாக மயங்கிக்கிடக்கிறாள் என்ற விவரம் இவளுக்காவது பிடிபடுமா.. என்ற ஏக்கத்துடன் தங்கையைப் பார்த்தாள் ராதிகா..

"நிஜமாவே ஆச்சரியமா இருக்குடி.. நானும் எத்தனையோ லவ்வர்ஸை பார்த்திருக்கேன்.. பார்த்துக்கிட்டு இருக்கேன்.. உன் ஹஸ்பெண்ட் உன்மேல பைத்தியமா இருக்கிறதைப் போல வேற யாரையும் நான் பார்த்ததில்லை ராது.."

"காலையிலேயே ஆரம்பிச்சுட்டியா..?"

"ரியலி.. ஐ அப்ரிஸியேட் ஹிம் ராது.. நீ பக்கத்திலிருந்தா வேற பெண்பக்கமே அவர் பார்வை போக மாட்டேங்குது.. உன்னையே பார்த்துக்கிட்டு இருக்கார்.. நீ அவரை வசியம் பண்ணி வைச்சிருக்கடி.."

அந்த வசியக்காரனை வசியம் பண்ண ராதிகாவால் முடிந்திருக்கிறதா..?

ராதிகாவினால் அதை நம்பத்தான் முடியவில்லை..

"நீ பக்கத்தில இல்லேன்னா மிலிடிரிக்காரனைப் போல விறைப்பா ஆயிடறார்.. கல்லையும்.. மண்ணையும் பார்க்கிறதைப் போல மத்த பொண்ணுகளைப் பார்த்துட்டு.. உனக்கெல்லாம் கணக்கான்னு கண்டுக்காம போயிடறார்.. எப்படி ராது..?"

அது எப்படி..? அவனோ இரும்பு மனிதன்.. அவனை நெருங்க முடியாமல் அவனது காதல் மனைவியையும் தள்ளி நிற்க வைத்தவன்.. இரும்புத் திரை போட்டு.. அதைவிலக்க முடியாமல் அவளை சோர்ந்து விழ வைத்தவன்...

அந்த மாமனிதன்.. அவளைச் சுற்றிச் சுற்றி வருகிறான்.. அவளைத் தன் கைவளைவிற்குள் சிறை படுத்திக் கொள்கிறான்.. நேரம் கிடைக்கும் போதெல்லாம் காதல் புரிகிறான்.. எந்நேரமும் அவள் நினைவோடு.. அவளை விட்டுப் பிரியாமல் அடைகாக்கிறான்..

இதெல்லாம் எப்படிச் சாத்தியமானது..?

சொக்குப் பொடியைப் போட்டது...
நீயா.. இல்லை.. நானா..?

வானத்தில் முழுநிலவு எழுந்திருந்தது... பௌர்ணமி நிலவின் வெளிச்சம் பூமியில் பரவிப் படர்ந்திருந்ததை பால்கனியின் கைப்பிடியில் சாய்ந்து நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தாள் ராதிகா.. அவள் கண்களை வலிமையான கரங்கள் பொத்தின அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது..

'இவன் கண்ணைப் பொத்தினா எனக்குத் தெரியாம போயிருமாக்கும்.'

"என்னாச்சு.. சீக்கிரமாவே மாடிக்கு வந்திட்டிங்க.."

அவள் இவல்பாகக் கேட்டதில் அவன் கரம் அகன்றது.. மனைவியைத் திருப்பி அவள் விழிகளுக்குள் பார்த்தவன்...

"இது சீக்கிரமாடி..?" என்று கேட்டான்..

"நேத்து இதைவிட லேட்டா வந்தீங்களே.. அதனால கேட்டேன்.."

"நேத்து என்னால லேட்டில்லை.. இன்னைக்கும் நானா வந்து சேரலை.."

"பின்னே..?"

"நேத்து உன் தங்கையோட அரட்டைக் கச்சேரியை நடத்திக்கிட்டு இருந்தே.. அது முடிஞ்சு அவ தூங்கப் போன பின்னாலே நான் வந்து சேர்ந்தேன்.. இன்னைக்கு அவ சீக்கிரமாவே போயிட்டா.. நானும் சீக்கிரமா வந்துட்டேன்.."

"ஏன்..? அவ இருக்கிறப்போ வந்திருக்க வேண்டியதுதானே..?"

"ஏண்டி..? அவ வேணும்னே வம்பிழுப்பா.. நானும் மச்சினியாச்சேன்னு எதையாவது பேசி வைப்பேன்.. உனக்கு உடனே டென்சன் ஏறிரும்.. அதுக்கப்புறமா நீ விடிவவிடிய மூஞ்சியைத் தூக்கி வைச்சுக்குவ.. நானும் உன்னை மலையிறக்கப் போராடுவேன்.. இதெல்லாம் தேவையாடி.."

"தேவையில்லைதான்.."

"புரிஞ்சாச் சரி.."

"இதை அவ இருக்கிறப்போ நீங்க சொல்லியிருக்கனும்"

"உனக்கு அது வேற குறையாய் இருக்கா..?"

அவர்கள் மனம் விட்டுச் சிரித்துக் கொண்டார்கள்.. பால்கனியில் இருந்த சோபா ஊஞ்சலில் முரளி அமர்ந்து கொண்டான்.. அவன் மடியில் தலை வைத்து வாகாய் ராதிகா படுத்துக் கொள்ள.. மெல்லத் தரையில் கால் பதித்து உந்தி ஊஞ்சலை ஆட்டினான்.. ஊஞ்சல் ஆடியது... அவர்களின் மனமும் அதனுடன் சேர்ந்து ஆடியது..

'இது போதும் தெய்வமே...'

அந்த நொடியில் நிலைத்து விட்டாள் ராதிகா.. அவளையறியாமல் அவள் இதழ்கள் பாடலை முணுமுணுத்தன...

"அம்மம்மா.. கேளடி தோழி..!
நிலாவினில் நின்றொரு நாழி..
சொல்லாலே உரைத்தது பாதி..
சொல்லாமல் அறிந்தது மீதி...
அம்மம்மா....."

அந்தப் பாடலில் தொனிந்த ஜீவன் முரளியின் மனதை ஆக்ரமித்து அவனை ஆட்கொண்டது..

"இந்தப் பாட்டை சிடியில கேட்டப்ப வேற பாட்டு வரிகள் வந்துச்சேடி.."

"ஆமாம்.."

"இதுக்கு முன்னாலே கூட ஒரு தடவை நீ இப்படித்தான் பாடின.."

"ம்ம்ம்.."

"என் ராது..?"

"முதலில் கேட்டப்போ எனக்கு பாடலின் ராகம் பிடிபட்டிருச்சு.. ஆனா.. என்ன வரிகள்ன்னு பிடிபடலை.."

"ஓ..! இதில இப்படியொன்னும் இருக்கா..?"

"ம்ம்ம்.. இந்தப் பாட்டைத் தேடிக்கிட்டு இருந்தப்போ.. எனக்கு நானா வரிகளைப் போட்டு பாடுவேன்.. அதுதான் இது..."

"உனக்கு எல்.ஆர். ஈஸ்வரியின் வாய்ஸ் பிடிக்குமா..?"

"பிடிக்கும்.. அதுவும்.. இந்தப் பாட்டில ஏதோ ஒன்னு இருக்கும்.. அதை வார்த்தையாலே சொல்ல எனக்குத் தெரியலை.. இந்தப் பாட்டு உணர்த்தும் ஃபீலிஸ்... அது கொண்டு வரும் ரம்யம்.. மனதுக்குள் உருவாகும் ஒருவிதமான ஜில்லிப்புன்னு சொல்லிக்கிட்டே போகலாம்.. ஆனா.. எத்தனை சொன்னாலும் இந்தப் பாட்டோட ஃபீலிஸ்ஸை உணர்த்திர முடியுமான்னுதான் எனக்குத் தெரியலை.."

"ஏய்ய்.. இந்தப் பாட்டுக்கு இந்த அளவுக்கு நீ ரசிகையாடி..?"

"யெஸ்.. நான் மட்டுமில்ல.. எல்.ஆர். ஈஸ்வரியும் இதை ரசித்துப் பாடினாங்களாம்.."

"உன் கிட்ட அவங்க வந்து சொன்னாங்களா..?"

"உலகத்துக்கே சொன்னாங்க.. ஒரு டி.வி. ஷோவில் இந்தப் பாட்டையும் 'காதோடுதான் நான் பாடுவேன்..'ங்கிற பாட்டையும் பாடிக் காட்டினாங்க.. ஒரு பாட்டை வெற்றிகரமா பாடி முடிக்கனும்னா.. அந்தப் பாட்டுக்கு நான் முதல்ல ரசிகையாகிருவேன்னு அப்பத்தான் அவங்க சொன்னாங்க"

"ஆனா.. நீ.. பி. சுசிலாவோட ரசிகையாச்சே..."

"அவங்களை ரசிச்சா.. இவங்களை ரசிக்கக் கூடாதுன்னு இருக்குதா..? எனக்கு இரண்டு பேரோட பாட்டும் பிடிக்கும்.."

"ரெண்டு பேருமே.. வேற.. வேற.. விதமா பாடறவங்களாச்சே.."

"ஸோ.. வாட்..? அவங்க பாடின காலத்திலதான் இசையை அப்படி பிரிச்சு வைச்சிருந்தாங்க.. இப்பப் பாருங்க.. எல்லாரும்.. எல்லாப் பாட்டையும் பாடிருவாங்க.. பி. சுசிலாவின் குரல் தேன்குரல்.. எல்.ஆர். ஈஸ்வரியின் குரலில் சங்கதிகள் துள்ளி விளையாடும்

ஒரு செகண்டில் கேட்கிறவங்களை அவங்களோட பாட்டுக்குள்ளே கொண்டு வந்துருவாங்க..."

"உன் வயசுக்கு.. பழைய பாட்டுக்களா தேடிப் பிடிச்சு ரசிக்கிறதை நினைச்சா ஆச்சரியமாயிருக்குடி.."

"இசைக்கு வயசில்லை.. அதோட.. அந்தக் காலத்தில இப்பப் போல நிறைய நவின இன்ஸ்ட்டுரு மென்ட்கள் எதுவும் இல்லை.. ஆனா.. அவங்க உருவாக்கின பாடல்களை ஜெயிக்க இப்ப வரும் பாடல்களால் முடியவில்லை.. அதுதான் உண்மை..."

"அடேங்கப்பா.. பழைய பாட்டுக்கு எக்கச்சக்கமா வோட்டு கேன்வாஸ் பண்றடி.."

"அது அப்படித்தான்.. அதெல்லாம் எவர் கிரின் பாட்டாக்கும்..."

அவன் கை விரல்களோடு விரல் பிணைத்து அவள் கதை பேசியதில் உள்ள பகிர்ந்து கொள்ளலை முரளி உணர்ந்தான்...

இதுபோன்ற நேரங்கள் நிறைவானவை.. பேசிப் பார்க்கலாம்.. இதமான நிலவின் ஒளியில்.. மொட்டைமாடியில்.. மனைவியை அருகில் அமர வைத்து.. 'உன் மனதில் என்ன இருக்கிறது..? பேசு.. நான் கேட்கிறேன்..' என்று கேட்டுப் பார்க்கலாம்..

அவள் உதிர்க்கும் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து பதில் சொல்லிப் பார்க்கலாம்.. அப்போது

உருவாகுமே ஒரு பிணைப்பு..! அதைக் கட்டிலால் கூடக் கொடுக்க முடியாது.. அப்படிப் பட்ட ஒரு அழமான பிணைப்பு அவர்களுக்குள் உருவாகும்..

முரளிக்கும்.. ராதிகாவுக்கும் இடையே அப்படிப்பட்ட ஆழ்ந்த பிணைப்புக்கள்தான் உருவாகியிருந்தன..

அவளுடன் அவன் செலவிட்ட மணித்துளிகளில்.. அவளைப் பேசவிட்டு.. அவன் காது கொடுத்து அதைக் கேட்டான்.. அதில் அவள் மனம் புரிந்தது.. குணம் புரிந்தது.. அவளின் ரசிப்பு முதற்கொண்ட அத்தனையும் புரிந்தது..

பதிலுக்கு.. திறவுகோல் இல்லாமலே அவன் மனம் தானாகத் திறந்து கொண்டது.. அவனுக்கும் கொட்டுவதற்கு ஆயிரமாயிரம் விவரங்கள் இருந்தன.. அவனும் கொட்டினான்.. அவள் சிரத்தையுடன் அவற்றைக் கேட்டுக் கொண்டாள்.. அவற்றின் வாயிலாக.. அவனை இன்னும் அதிகமாக அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

பேசாத தருணங்கள் அருமையானவை.. மௌனத்தின் குரலோடு மனதைப் புரிய வைக்கும் பார்வையோடு நகரும் மணித்துளிகள் நம்மை அவற்றுள் கரைய வைக்கும் சக்தி வாய்ந்தவை...

அதே போல.. மனம் விட்டுப் பேசும் தருணங்களும் அருமையானவைதான்.. 'உனக்கென நான்.. எனக்கென.. நீ' என்று ஒருவருக்கொருவர் உணர்த்திடும் வார்த்தைகளுக்கான வலிமை அதிகமானது..

முரளியுடனான ராதிகாவின் வாழ்வில் அவள் இந்த இரண்டையும் உணர்ந்தாள்.. அவன் உணரச் செய்தான்.. இரண்டிலும் அவளை மயக்கி தன் வசமாக்கிக் கொண்டான்.. அவள் மனதை வென்றிருந்ததை அறிய முடியாதவன்.. அவள் மனதை மேலும்.. மேலும் வென்று கொண்டேயிருந்தான்..

"ராது.."

"ம்ம்ம்.."

"தூங்கிட்டியா..?"

"ஊஹ்ரீம்.."

"நாளைக்கு வளைகாப்பு.. சீக்கிரமா எழுந்திருக்கனும்.."

"ம்ம்ம்..."

"அதுக்குச் சீக்கிரமாத் தூங்கனும்.."

"ம்ம்ம்.."

முணுமுணுத்தவள் அவன் மடியிலேயே உறங்கிப் போனாள்.. அவன் குழந்தையைச் சுமந்து கொண்டிருந்தவளைக் குழந்தையைத் தூக்குவதைப் போல அவன் தூக்கிக் கொண்டான்.. படுக்கையில் படுக்க வைத்து.. போர்த்தி விட்டான்.. விளக்கை அணைத்து விட்டுப் படுத்தவனின் மனம் நிறைந்திருந்தது.. மெல்லிய வெளிச்சம் படுக்கையறையில் சூழ்ந்திருக்க.. அந்த வெளிச்சத்தில் ஒரு தேவதையைப் போல அவள் தெரிந்தாள்..

"என் கண்ணம்மா..."

அவருடைய தூக்கம் கெட்டு விடக் கூடாது என்று சன்னக் குரலில் முணுமுணுத்தவன்.. அவள் நெற்றியில் முத்தமிட்டு விட்டு கண்மூடிப் படுத்தான்.. மெல்ல.. மெல்ல.. உறக்கம் வந்து அவனைத் தழுவிக் கொண்டது..

தூக்கத்திலும் ராதிகாதான் வந்தாள்.. முழங்கால்களையும் தாண்டி.. நீண்டு தொங்கும் கூந்தலை விரிய விட்டு.. புகை நடுவிலிருந்து ஒரு தேவதையைப் போல வெளிப்பட்டாள்... அவள் கைகளில் குழந்தை இருந்தது.. ஆவலுடன் குழந்தையை வாங்க அவன் கை நீட்டிய போது.. நெற்றியில் மிருதுவான இதழ்களின் ஸ்பரிசம் படிவதை உணர்ந்தான்..

"என்னைச் சொல்லிட்டு.. இன்னும் நீங்க தூங்கறிங்களா..?"

ராதிகாவின் குரல் அவன் காதருகில் ஒலித்ததில் கண் விழித்தான்.. அவன் நெற்றியில் அவள் முத்தமிட்டுக் கொண்டிருந்தாள்.. அவனுடைய முடியில் அவள் விரல்கள் விளையாடிக் கொண்டிருந்தன...

"குழந்தை எங்கேடி..?"

அவன் விழிகள் அவள் கைகளில் படிந்தன.. அங்கே காபிக் கோப்பை இருந்தது.. மேடிட்ட அவள் வயிறு.. அவன் கண்டதை கனவென்று உணர்த்த.. அவன் கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்து அமர்ந்தான்...

"உங்க குழந்தை என் வயிற்றில் பத்திரமா இருக்குது.." சிரித்தபடி காபிக் கோப்பையை நீட்டினாள் ராதிகா...

"சீக்கிரமா குளிச்சிட்டு கீழே இறங்கி வாங்க.. வேலை தலைக்கு மேலே கிடக்குது.."

"அதுக்கு நீயேண்டி அலட்டிக்கற..? மத்தவங்க பார்த்துக்குவாங்க.. நீ இப்படி உட்காரு.."

"இல்லங்க.. நான் போகனும்.. உங்களுக்கு புது டிரெஸ் எடுத்து வைச்சிருக்கேன்.. வாட்ச்.. போனெல்லாம் டேப்பாய் மேல இருக்கு.. பாத்ரூமில் ஹீட்டரை ஆன் பண்ணி வச்சிருக்கேன்... டவலையும் தொங்க விட்டாச்சு.."

"இது போதுமா..?"

"வேறென்ன வேணும்..? அதையும் கொடுத்து முடிச்சாச்சே.."

முரளியின் நீண்ட கைகளுக்குள் அகப்படாமல் விலகிச் சென்ற ராதிகா.. கதவருகே நின்று.. அவனைத் திரும்பிப் பார்த்துக் கையாட்டிச் சிரித்து விட்டுப் போனாள்...

பாலமுரளி குளித்து உடை மாற்றி கீழே இறங்கி வந்த போது வீடே பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.. விருந்தினர்கள் வர ஆரம்பித்திருந்தார்கள்.. வந்தவர்களில்

பெண்களை வரவேற்கும் பொறுப்பை மேகலாவின் மேற்பார்வையுடன் கீதா எடுத்துக் கொண்டிருந்தாள்..

"பரவாயில்லையே.. நீ இதையெல்லாம் கூட செய்வியா..?" முரளி ஆச்சரியப்பட்டான்..

"ஏன் கேட்க மாட்டிங்க.. உங்க கல்யாணத்தில ரிசப்சனில நின்னது யாருன்னு நினைவிருக்கா..?" கீதா சண்டைக்கு வந்தாள்..

"நீயா நின்ன..?" முரளிக்கு உண்மையிலேயே அது நினைவில் இல்லை..

"அதானே.. உங்களுக்கு எப்படி அது நினைவிலிருக்கும்..? உங்க பக்கத்தில் மணவறையில் உட்கார்ந்திருந்தவளைத்தானே கவனிச்சிருப்பீங்க.. என்னையா கவனிச்சிருக்கப் போறிங்க..?" கீதா முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்..

"இதோ பாரும்மா.. நான் மட்டுமில்ல.. நாளைக்கு உன்னைக் கட்டிக்கப் போகிறவனும் மணவறையில உட்கார்ந்திருக்கிறப்போ.. பெண்டாட்டியா வரப் போகிறவளத்தான் பார்ப்பான்.. வரவேற்பில நிக்கிற மச்சினியைப் பார்க்க மாட்டான்.. இப்ப என்ன.. உன் கல்யாணத்தில வரவேற்பில நானும்.. ராதிகாவும் சேர்ந்து நின்னு கணக்கை சரி பண்ணிடறோம்.. சந்தோசம் தானே..." முரளி நகர்ந்து விட்டான்..

அப்போதும் இவன் ராதிகாவின் அருகில் ஜோடியாக நிற்போமென்றுதான் கூறுகிறான் என்ற நினைவில் கீதாவின் மனதில் பாராட்டுதல் எழுந்தது..

சின்னதாக உதிர்ந்த ஒருசொல்லில்..
சிறகடித்து எனைப் பறக்கவைத்தாய்...

அலங்கார நாற்காலியில் அமர்ந்திருந்தாள் ராதிகா.. அகலக் கரையிட்ட பட்டுப்புடவையில் சின்னக் கண்ணன் தவழ்வதைப் போல ஜரிகை வேலைப்பாடு செய்யப் பட்டிருந்தது..

"இப்போ.. முகூர்த்தப் பட்டைப் போல.. வளைகாப்புக்கும் விசேசமா ரெடி பண்ணியிருக்காங்க.. ஜவுளிக்கடையில கேட்டவுடன் இந்தப் பட்டைத்தான் காண்பிச்சாங்க.. உடனே எடுத்துட்டு வந்துட்டோம்.."

யாரிடமோ ராஜேஸ்வரி கூறிக் கொண்டிருந்தது முரளியின் செவிகளில் விழுந்தது.. அவன் மணப்பெண் அலங்காரத்துடன் இருக்கும் மனைவியின் பொழிவையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்..

வரிசையாக பெண்கள் வந்து அவள் கைகளில் வளையல்களை அடுக்கி அவள் கன்னத்தில் சந்தனத்தைத் தீற்றி நலங்கு வைத்தார்கள்.. அந்த வரிசையில் தங்கமும் வந்தாள்.. ராதிகாவைப் பார்த்த அவள் விழிகளில் மன்னிப்புக் கேட்கும் மன்றாடல் தெரிந்தது.. ராதிகா கருணை ததும்பும் விழிகளுடன் தன் கைகளை அவள் முன்னால் நீட்டினாள்.. அந்த ஒரு செய்கையில் மனம் நெகிழ்ந்து விட்ட தங்கத்தின் கண்கள் கலங்கி விட்டன...

கோமதி நாயகத்தின் மருமகள்களும் வளையல்களை அடுக்கி விட்டு.. நலங்கு வைத்தார்கள்.. நாச்சியப்பனின் மூலம் வளைகாப்பிற்கான அழைப்பைப் பெற்ற போதிலும்.. கோமதிநாயகம் கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல் இறுக்கிப் பற்றிக் கொண்டு.. மனைவி மக்களுடன் குடும்ப சகிதமாக நான்கு கார்களில் அணிவகுத்து வந்து இறங்கி விட்டார்...

வரும் வழியில் எதிர் படுபவர்களிடமெல்லாம்.. பாலமுரளியின் வீட்டு விசேசத்தில் கலந்து கொள்ளப்-போவதாகச் சொல்லி விட்டுத்தான் வந்து சேர்ந்தார்..

"வாங்க.. அண்ணே.."

முரளியின் முறைப்பைப் பொருட்படுத்தாமல் மேகலா அழைத்து வைக்க.. பக்கத்திலிருந்தவர்களை...

'பார்த்துக்கங்கப்பா...' என்ற பார்வையைப் பார்த்துவிட்டு..

"நம்ம வீட்டு விசேசத்தில நாங்கதான முன்னே நிக்கனும்.. நீ எதுக்காக வாசலுக்கு வந்து வரவேற்கனும்.. வந்திருக்க மத்த மனுசங்களப்பாரு தங்கச்சி.." என்று தனது சொந்தத்தை உறுதி படுத்திக் கொண்டார் கோமதிநாயகம்...

வேறு வழியில்லாமல் தலையை அசைத்து வைத்தான் பாலமுரளி.. அதற்கே அகமகிழ்ந்து போய்விட்ட கோமதி நாயகம்...

"என் மாப்பிள்ளைக்குத்தான் என்மேல எம்புட்டுப் பாசம்.." என்று பெருமை வேறு பட்டுக் கொண்டார்..

பால சரஸ்வதி தம்பி மனைவிக்கு வைர வளையல்களை பரிசாக அளித்தாள்... அதன் வேலைப்பாட்டில் மயங்கிப் போய் விட்ட கீதா...

"நீ கொடுத்து வைச்சவடி ராது.. இந்தக் காலத்தில எந்த நாத்தனார் தம்பி பெண்டாட்டிக்கு வைர வளையல்களைப் போடறாங்க..?" என்று பொறாமைப் பட்டாள்..

வளைகாப்பு நிகழ்ச்சி.. இனிதாக நடந்து முடிந்தது.. வந்திருந்த விருந்தினர்கள் விடைபெற்றுக் கொண்டு கிளம்பி விட்டார்கள்.. வீட்டில் பழைய அமைதி நிலவ ஆரம்பித்தது... ராஜேஸ்வரி பாலமுரளியின் அருகே வந்தாள்..

"அப்ப.. நாங்களும் கிளம்பறோம் மாப்பிள்ளை.." என்றாள்...

"இன்னைக்கே கிளம்பியாகனுமா..? நாளைக்குப் போகலாமே அத்தை.." என்றான் முரளி..

"அது சம்பிரதாயமில்லை மாப்பிள்ளை.. வளைகாப்பு முடிஞ்சவுடனே பெண்ணை தாய் வீட்டுக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போயிடனும்.. அதுதான் முறை.." ராஜேஸ்வரி குண்டைத் தூக்கிப் போட்டாள்...

"என்னது..?" பாலமுரளி திகைத்தான்...

அது நேரம் வரை... அதை அவன் நினைத்தும் பார்க்கவில்லை... ராதிகாவிற்கு வளைகாப்பை... அவளுடைய பிறந்த வீட்டினர்தான் நடத்த வேண்டும் என்று அவனுக்குத் தெரியும்.. ஆனால்.. அது முடிந்தவுடன் அவளை பிறந்த வீட்டுக்கு அழைத்துப் போய் விடுவார்கள் என்பது அவனுக்குத் தெரியாது...

"என்னடா... என்னதுன்னு கேட்கிற...? எனக்கு வளைகாப்பு பண்ணின கையோடு அம்மாவும்.. நீயும் திருநெல்வேலியிலயிருந்து என்னைக் கூப்பிட்டுக்கிட்டு வந்துட்டிங்க.. அது உனக்கு நினைப்பில் இல்லையா..? மறந்து போச்சா..?" பால சரஸ்வதி புருவங்கள் சுருங்கக் கேட்டாள்...

"நீங்க வேற அண்ணி.. அத்தானுக்கு ராதிகா மட்டும்தான் நினைப்பிலிருக்கும்.. மத்ததெல்லாம் மறந்து

விடும்.. இப்ப நடந்த இவர் கல்யாணத்தில ரிசப்பனில யாரு நின்னாங்கங்கிற விசயமே இவர் நினைவில இல்ல.. எப்பவோ நடந்த உங்க வளைகாப்பில நடந்ததுதானா நினைவில் இருக்கப் போகுது..?" கீதா கிண்டலுடன் கூறினாள்..

பாலமுரளி அதற்குள் சுதாரித்து விட்டான்...

"இப்ப என்ன கேட்டுட்டேன்னு.. ஆளாளுக்கு பேசித் தள்ளறிங்க..? ஏதோ நினைவில கேட்டுட்டேன்.."

"இவ நினைப்பைத்தவிர.. வேற நினைப்பு உங்களுக்கு வராதே அத்தான்..."

"உனக்கு என்னதான் வேணும் கீதா.."

"ஒன்னும் வேணாம்.. யு புரொஸிட்.."

"வீட்டை கோர்ட்டாக்கறே.. அம்மா.. ராதிகாவை சென்னையில விட்டுட்டு.. ஒரு வாரம் கழிச்சுத் திரும்பி வரேன்.."

"அதுக்கென்னடா தம்பி.. இதோ அக்கா வந்திருக்கா.. பிள்ளைகளுக்கும் லீவுதானாம்.. ஒருவாரம்.. பத்து நாள்.. இங்கேதான் தங்கியிருப்பா.. நீ மகராசனாய் போயிட்டு வா..."

மேகலா உடனே விடை கொடுத்து விட்டாள்..

"மகனுக்கேற்ற அம்மா...!"

கீதா மேகலாவுக்கு நற்சான்றிதழ் வழங்கினாள்..

அவர்கள் சென்னைக்குக் கிளம்பினார்கள்.. ராதிகாவை அருகே அமர வைத்துக் கொண்டான் முரளி.. பின் சீட்டுக்களை கீதாவும் சுந்தரும் ஆக்ரமித்துக் கொண்டார்கள்.. கிருஷ்ண மூர்த்தியின் காரில் அவரும் ராஜேஸ்வரியும் ஏறிக் கொள்ள.. அவர்களின் பயணம் துவங்கியது..

முரளியின் காரில் அரட்டைக் கச்சேரி கொடி கட்டிப் பறந்தது.. நடுநிசியைத் தொடும் வேளையில்... கீதாவும்.. சுந்தரும் தூங்கிப் போய் விட... முரளி.. மனைவியைப் பார்த்தான்.. தூக்கம் சொக்கிய கண்களுடன் சோர்ந்து தெரிந்தாள் ராதிகா..

"தோளில் சாய்ஞ்சுக்கடி.." பரிவுடன் சொன்னான்..

"வேணாம்.." ராதிகா.. பின் சீட்டை கண் ஜாடையில் காட்டி மறுத்தாள்..

"ம்த்சு.. சொன்னாக் கேளு.." முரளி அதட்டினான்..

அதற்கு மேலும் மறுக்க முடியாமல் அவன் தோளில் தலை சாய்ந்த ராதிகா தூங்கி விட்டாள்..

விடிவதற்குள் அவர்கள் சென்னையை அடைந்து விட்டார்கள்..

மேகலாவிடம் சொன்னதைப் போல முரளி ஒரே வாரத்தில் திரும்பி வந்தான்தான்.. ஆனால்.. தனியாக வரவில்லை.. ராதிகாவுடன் வந்தான்..

அவன் ராதிகாவையும் கிளம்பச் சொன்னபோது ராஜேஸ்வரியும் கிருஷ்ண மூர்த்தியும் அதை பலமாக ஆட்சேபித்தார்கள்..

"தலைப் பிரவசம் தாய் வீட்டில்தான் நடக்கணும் மாப்பிள்ளை..." வாதாடினாள் ராஜேஸ்வரி..

"யார் இல்லைன்னு சொன்னது..?"

"அப்புறமும் எதுக்காக அவளைக் கூப்பிட்டுக்கிட்டுப் போறேன்னு சொல்றீங்க.."

"இது ஏழாம் மாதம்தானே அத்தை.."

"ஏழாம் மாதம் முடியப் போகுது மாப்பிள்ளை.. அந்தக் கணக்கையெல்லாம் பார்க்காமலா இருப்பேன்..? அதனாலதான் ஏழாம் மாதம் முடியப் போற சமயத்தில வளைகாப்பு செய்யலாம்ன்னு நாங்களும்.. அண்ணியும் பேசி முடிவு பண்ணினோம்.."

மேகலாவும்.. ராஜேஸ்வரியும் இதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள் என்ற நினைவில் ராதிகா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. முரளியும்தான் விட்டுக் கொடுத்தால் என்ன என்று அவளுக்குத் தோன்றியது.. அவளுக்கு மட்டும் அவனைப் பிரிவது கஷ்டமாக இல்லையா..? சில நேரங்களில் அதை ஏற்றுக் கொண்டு தானே ஆக வேண்டும்..? இதை அவனிடம் யார் சொல்வது..?

அவனிடம் அதைச் சொல்ல முடியாமல் மௌனித்தாள் ராதிகா..

"இப்ப ராதிகாவைக் கூப்பிட்டுக்கிட்டுப் போறேன்.. ஒரு மாதம் கழிச்சு.. நானே அவளைக் கூப்பிட்டுக்கிட்டு வர்றேன்.. போதுமா.." என்று கேட்டான் முரளி..

"பிள்ளைத்தாய்ச்சிப் பெண்ணை இங்கேயும்.. அங்கேயுமா இழுத்தடிக்கனுமா..?" ராஜேஸ்வரி தயங்கினாள்..

"பாருங்க அத்தை.. உங்களுக்கு என்ன வேணும்..? ராதிகா பிரசவத்துக்கு தாய் வீட்டுக்கு வரனும்.. அவ்வளவுதானே.. பிரசவத்துக்குத்தான் இன்னும் நாள் இருக்குதே.. இப்பவே அவ இங்கே இருந்தாகனும்னு ஏதும் இருக்கா..? வளைகாப்பு முடிஞ்சவுடன் தாய் வீட்டுக்குப் போகணும்கிறது சம்பிரதாயம்.. அதைச் செய்து முடிச்சாச்சு.. இன்னும் என்ன..?"

முரளியின் ஆணித்தரமான வாதத்திற்கு எதிர்வாதம் செய்ய ராஜேஸ்வரி விரும்பவில்லை.. மகளின் மீது அவளுடைய கணவன் காட்டும் பிரியத்திற்கு தடை போட அவளென்ன முட்டாளா..? அவள் புத்திசாலி.. தானாக பெருகி நிற்கும் பிரியத்தின் அளவை அதிகரிக்கச் செய்வதற்குப் பதிலாக.. குறைக்கும் வேலையை பெண்ணைப் பெற்ற தாய் செய்ய மாட்டாள்..

"இதுக்கு மேல நான் சொல்ல என்ன இருக்கு..? நீங்களாச்சு.. உங்க பெண்டாட்டியாச்சு.. எங்களுக்கு

இருக்கிற அக்கறையைவிட உங்களுக்கு அதிகமான அக்கறையிருக்கும்ன்னு எங்களுக்குத் தெரியாதா..? பத்திரமா போயிட்டு வாங்க.." என்று சொல்லி விட்டாள் ராஜேஸ்வரி...

கீதாவும் சந்தரும்தான் சண்டைக்கு வந்தார்கள்..

"தாலியைக் கட்டிட்டா.. இவ உங்களுக்கு மட்டும் சொந்தமாகி விடுவாளா..? எங்களுக்கு சொந்த மில்லைன்னு ஆகி விடுவாளா..? இவகூட பேச எனக்கு ஆயிரம் விசயமிருக்கு அத்தான்..."

"அதையெல்லாம் ஒரு மாதம் கழித்துப் பேசேன்.."

"அதுவரைக்கும்.. யார் காத்திருப்பது..?"

"போனில் பேசு.."

"போனுக்கு ரீஜார்ஜ் பண்ணியே எங்க அப்பாவோட சம்பளம் கரைஞ்சு போயிடும்..."

"நான் ரீஜார்ஜ் பண்ணி விடறேன்.. ஏன் கவலைப்படற..?"

"அப்படின்னா.. சரி.." கீதா சமாதானமாகி விட்டாள்...

சுந்தர்தான் நீண்ட நேரத்திற்கு போர் முழக்கம் செய்து கொண்டிருந்தான்...

"இவ கூட மனுசன் பேசுவானா அத்தான்..?"

உன்னைப்போல ஒரு மகனை..
உனக்கெனவே நான் தந்தேன்...

ராதிகாவுடன் முரளி திரும்பி வந்தபோது.. அதை எதிர்பார்த்திருந்ததைப் போல இயல்பாக அவர்களை எதிர்கொண்டாள் மேகலா...

"நீங்க சொன்னது போலவே நடந்திருக்கேம்மா..." பால சரஸ்வதிதான் ஆச்சரியப்பட்டாள்..

"பெத்தவளுக்கு பிள்ளை குணம் தெரியாதா..? இவனாவது.. ராதிகாவை விட்டுட்டு இருக்கிறதாவது.. ராதிகாவையும் கையோட அழைச்சுக்கிட்டுத்தான் வருவான்னு நினைச்சேன்.. நினைச்சபடியே நடந்திருக்கு.." மேகலா சிரித்தாள்..

"அதானே.. சின்னம்மாவுக்கு காய்ச்சலை வரவைச்சாலும் வரவைப்பாரு.. ஆனா.. அவங்கள விட்டுட்டு எங்க ஐயா வர மாட்டாரே.." தன் பங்குக்கு மீனாட்சி பேசி வைத்தாள்..

"ஏண்டி.. நீ காய்ச்சல் கதையை விடவே மாட்டியா..?" மேகலா மீனாட்சியை அதட்டினாள்..

"நான் என்னத்தம்மா தப்பா சொல்லிட்டேன்..? நடந்த கதையைத்தான சொன்னேன்.." மீனாட்சி முகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டாள்..

அந்தக் கலகலப்பில் தன்னை பிணைத்துக் கொண்டாள் ராதிகா.. ஒரு மாதம் உருண்டோடியது.. ராஜேஸ்வரியிடமிருந்து.. மேகலாவிற்கு நினைவூட்டல் வந்து விட்டது.. மகனிடம் பக்குவமாகப் பேசும் பொறுப்பை அவள் சிரமேற்கொண்டாள்.. முரளி சாப்பாட்டுக்கு வந்திருக்கும் இதமான இரவு வேளையில் அவள் பேச்சை ஆரம்பித்தாள்..

"முரளி.."

"சொல்லுங்கம்மா.."

"ராதிகாவுக்கு இதுதான் மாசம்.."

"தெரியுமே.."

"தலைப் பிரவசத்துக்கு தாய் வீட்டிலதான் இருக்கனும்.."

"அதுவும் தெரியுமே.."

'தெரிஞ்சுக்கிட்டே ஏண்டா.. பெண்டாட்டியை பொறந்த வீட்டுக்கு அனுப்பி வைக்காம இங்கே நிறுத்தி வைச்சிருக்க...'

மனதுக்குள் எரிச்சல் பட்டாலும்.. வெளியே அதைக் காட்டிக் கொள்ளாமல் புன்னகை பூத்த முகத்துடன் பேச்சைத் தொடர்ந்தாள் மேகலா...

"அப்ப.. ராதிகாவை மெட்ராஸீக்கு அனுப்பி வைச்சிரலாமா..?"

பவ்யமாக கேட்ட தாயை நிமிர்ந்து பார்த்தான் முரளி...

"அவளை அனுப்பி வைக்கலம்மா.. நாமளும் கூடப் போறோம்.." என்று நிதானமாக சொல்லவும் செய்தான்..

'இதென்னடா கூத்தா இருக்கு.. மருமக புள்ளையைப் பெத்துக்க தாய் வீட்டுக்குப் போனா.. மாமியாரும் கூடப் போகனும்னு சொல்றானே.. இந்த கதையை எங்கயும் கேட்டதில்லையே'

மேகலாவின் முகத்தில் ஈயாடவில்லை.. தாயின் மனதைப் படித்தவனைப் போல.. முரளி கை கழுவி விட்டு.. துண்டால் கைகளைத் துடைத்தபடி அவளுக்கு எதிரில் அமர்ந்தான்..

"அம்மா.. ராதிகாவுக்கு இது தலைப் பிரசவம்.."

'அதைத்தானடா.. நானும் சொல்றேன்..'

"அவ கட்டாயம் தாய் வீட்டுக்கு போயாகனும்.."

'ஏண்டா மகனே..! நான் சொன்ன ராமாயணத்த எனக்கேத் திருப்பிச் சொல்றியா..?'

"ஆனாம்மா.. தலைப்பிரவசம்ங்கிறது.. பெண்களுக்கு மறு பிறவி மாதிரின்னு நீங்க அடிக்கடி சொல்லியிருக்கீங்க.."

முரளியின் பேச்சைக் கடனேயென்று காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த மேகலாவிற்கு தூக்கிவாரிப் போட்டது.. அவசரமாகத் திரும்பிப் பார்த்தாள்.. ராதிகா சமையலறையில் காவேரியிடம் எதையோ கேட்டுக்கொண்டிருந்தாள்...

"அவ அங்கேயிருக்காம்மா.. அதைப் பார்த்துட்டுத்தான் இந்தப் பேச்சை எடுத்தேன்.."

"உனக்கு பைத்தியமா பிடிச்சிருக்கு முரளி..? இப்ப எதுக்காக இப்படியெல்லாம் பேசி வைக்கிற..?"

"அவ பிரசவசத்தில சின்ன சிக்கல் வந்தாலும் என்னால அதைத் தாங்கிக்க முடியாதும்மா..."

மகனின் பேச்சில் மேகலா பதறிவிட்டாள்.. அவள் பிரசவ வலியில் துடித்தபோது.. அவள் கைபிடித்து அவள் வேதனையில் பாதியை வாங்கிக் கொண்டவராய் துடித்துப் போன் மாணிக்கவாசகத்தின் நினைவு அவள் மனதில் எழுந்தது...

மகனின் கையை தன் கைக்குள் அடக்கிக் கொண்டாள் மேகலா...

"கலக்கப் படாதேடா முரளி.. நமக்குப் பெருமாள் துணையிருக்கார்.. ஒரு குறையும் வராது.. இப்ப என்ன..? ராதிகாவோட பிரசவ சமயத்தில நீ அவ பக்கத்தில இருக்கனும்.. அவ்வளவுதானே.. நீ அவளைக்

கூப்பிட்டுக்கிட்டு மெட்ராஸீக்குப் போ.. கூடவே இரு.. பேரப்புள்ளயோட நீங்க ரெண்டு பேரும் திரும்பி வாங்க"

"உங்களைத் தனியா விட்டுட்டுப் போகிறதா..?"

"நாச்சியப்பனை வரச் சொல்றேன்.. நம்ம தோட்டத்து வீட்டில அவனும்.. மீனாட்சியும் தங்கிக்கட்டும்.. காவேரி இருக்கா.. தினமும் சதிஷை வந்து பார்த்துட்டுப் போகச் சொல்லு.."

"ஏதாவது அவசரத் தேவைன்னா..?"

"கார் இருக்கு.. காரை ஒட்ட நாச்சியப்பன் இருக்கான்.. தென்காசிப் பட்டினத்தையே வித்துப்புட்டு வர்ற மீனாட்சி இருக்கா.. பக்குவமா.. பத்தியமா சமைச்சுப் போட காவேரி இருக்கா.. நான் பத்திரமா இருந்துக்குவேண்டா தம்பி.. நீ கிளம்பு.."

தாயின் அனுசரணையில் முரளியின் கண்கள் பனித்து விட்டன.. அவளைத் தனியாக விட்டுச் செல்லப் போவதில்லைதான்.. விசுவாசமான வேலையாள்களின் பாதுகாப்பில் அவளை விட்டுப் போகிறான்தான்.. ஆனாலும் அவன் மனம் குற்ற உணர்வில் மறுகியது..

மகனின் மனம் புரிந்தவளாக.. அவன் தோளில் ஆதரவாகத் தட்டிக் கொடுத்தாள் மேகலா..

"எத்தனை தடவை என்னைத் தனியா விட்டுட்டு நீ வெளியூருக்கு போய் வந்திருக்க.. இப்ப மட்டும் என்ய்யா சங்கடப்படற.. அம்மாவே தனியா விட்டுட்டு.. பொண்டாட்டி கூடப் போகிறோமேன்னு தானே உன் மனக கிடந்து தவிக்குது..?"

"அம்மா.."

முரளி அவள் கையில் முகம் புதைத்தான்..

"எனக்குப் புரியுதுடா.. இதைப் புரிஞ்சுக்கலைன்னா நான் உனக்கு அம்மான்னு சொல்லிக்கிறதில அர்த்தமே இல்லையே.. இப்ப நமக்கு ராதிகாதான் முக்கியம்.. நீ அவகூடப் போ.. குழந்தை பிறந்ததும் தகவல் சொல்லு.. பால சரஸ்வதியோட நான் கிளம்பி வர்றேன்.. நம்ம பண்ணை வீட்டிலே தங்கிக்கறோம்.. குழந்தையைப் பார்த்துட்டு நாங்க கிளம்பி வந்தா.. பின்னாலேயே.. பெண்டாட்டியையும்.. பிள்ளையையும் கூப்பிட்டுக்கிட்டு நீ வரப் போற.. கண்ணை மூடித் திறக்கிறதுக்குள்ள நாள் ஓடிப்போயிடும்.. இதுக்குப் போயா இம்புட்டுக் கவலைப்படற..?"

மேகலா எளிதாக அவனைத் தேற்றினாள்.. விவரமறிந்த ராதிகாவின் முகம் ஒளிர்ந்தது.. பிரசவம் குறித்த இனம் புரியாத கவலைகளின் ஆக்ரமிப்பில இருந்தவள்.. கணவனின் அருகாமையில் மனம் தெளியப் பெற்றாள்...

"அதானே பார்த்தேன்.." என்றாள் கீதா..

"என்னத்தைப் பார்த்த..?"

மனைவி இறங்க வாகாக கை கொடுத்தபடி வினவினான் முரளி..

"நீங்களாவது.. ராதிகாவை தனியே அனுப்பி வைக்கிறதாவது.. ம்ஹீம்.. இவளைத் தனியே விடவே மாட்டிங்களா..?"

"ஊஹீம்.. அதுக்கா உன் அக்கா கழுத்தில தாலியைக் கட்டியிருக்கேன்..?"

விளையாட்டாய் பேசியபடி.. ராதிகாவை வீட்டுக்குள் அழைத்துச் சென்றான் முரளி..

சொன்னபடி மகளை பிரசவத்திற்காக மருமகன் அழைத்து வந்து விட்டதில் ராஜேஸ்வரிக்கு ஏகப்பட்ட சந்தோசம்.. ஒடிஒடி உபசரனைகளை செய்தாள்.. பார்த்துப் பார்த்துச் சமைத்துப் பரிமாறினாள்...

முரளி.. சென்னையில் கவனிக்க வேண்டிய வேலைகளை கவனித்து முடித்துக் கொண்டான்.. அவன் வெளியே செல்லும் போது.. ஒருதடவைக்கு பத்து தடவை ராதிகாவிடம் வலி வந்து விட்டதா.. அதன் அறிகுறிகள் தெரிகிறதா என்று விசாரித்து விட்டுத்தான் கிளம்புவான்.. வெளியே இருக்கும் நேரங்களிலும்.. நிமிடத்திற்கொரு முறை போன் பண்ணிக் கேட்பான்..

"ம்ஹீம்.. நானும்தான் ஒன்னுக்கு.. மூணு பிள்ளைகளைப் பெத்தேன்.. ஒரு தடவையாயவது உன் அப்பா இப்படி விசாரித்திருக்கனுமே..." ராஜேஸ்வரியே சொல்லிக் காட்டி விட்டாள்..

அதில் கிருஷ்ண மூர்த்திக்கு மகா வருத்தம்.. அவரும்தான் பாவம் என்ன செய்வார்..? இப்படியெல்லாம் மனைவியைத் தாங்க வேண்டும் என்று அப்போது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.. ராதிகாவின் மீதான முரளியின் அக்கறையில்.. இப்படிக்கூட கணவன்மார்கள் இருப்பார்களா என்று அவர் ஆச்சரியப்பட்டுப் போயிருந்தார்.. அதை மனைவியும் கவனித்து ஏக்கப் பெருமூச்சு விட்டதில்.. ஒரு கணவனுக்கே உரிய எரிச்சல் அவரிடம் உருவாகி விட்டது..

'இவளைக் கிளப்பி விடனும்னே மாப்பிள்ளை கிளம்பி வந்திருக்கிறாரா..?'

இதை அவரால் வெளிப் படுத்தவும் முடியாது.. ஆகையால்.. எப்போதும் போல.. மொட்டை மாடியில் உலாவி தன் மனம் புழுக்கத்தைத் தணித்துக் கொண்டிருந்தார்..

"ஏண்டி.. உன் ஹஸ்பெண்ட் காண்பிக்கிற ஃபிலிமில என்னால நிம்மதியா மொட்டை மாடியில பாடம் படிக்க முடியல.." ராதிகாவிடம் சண்டைக்கு வந்தாள் கீதா..

"அவருக்கும்.. உன் படிப்புக்கும் என்னடி சம்பந்தம்..?"

"அடி ராதிகா..! நாமதான் மத்தவங்களுக்கும்.. நம்மளுக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லைன்னு நினைச்சுக்கிட்டு இருப்போம்.. ஆனா பாரு.. உளருக்கும்.. நமக்கும்.. ஆயிரம் சம்பந்தமிருக்கும்.."

"உளராதே.."

"இது உளரலா.. அப்பாவின் திணறல்டி.. உன் ஹப்பி.. உன்னைத் தலைமேல தூக்கி வைச்சுக்காத குறையாய் தாங்கறாரில்ல.."

"அதில உனக்கென்னடி கஷ்டம்..?"

"எனக்கொரு கஷ்டமுமில்ல.. அப்பாவுக்குத்தான் கஷ்டம்.. உங்களுக்குன்னு வாழ்க்கைப்பட்டு.. என்னத்தைக் கண்டா ராஜேஸ்வரின்னு நம்மளப் பெத்த அம்மா.. முந்தானையில வராத கண்ணீரைத் துடைச்சுக்கிட்டு வசனம் பேசிட்டாங்க.. என் மருமகன் மகளைத் தாங்கறதைப் போல நீங்க என்னைத் தாங்கியிருக்கீங்களான்னு அப்பாவைப் பார்த்துக் கேட்டுட்டாங்க.. அப்பா மனசு தாங்குமா..? உடனே மொட்டைமாடிக்குப் போயிட்டாரு.."

"அங்கே எதுக்குடி போனாரு..? என்னதான் செய்றாரு..?"

"வேற என்னத்தைச் செய்வாரு.. பெருமூச்சை விடுவாரு... வானத்தையே முறைச்சு முறைச்சுப் பார்ப்பாரு... திரும்பவும் பெருமூச்சை கன்டினியு பண்ணிக்கிட்டு.. பின்னங்கையையும் கட்டிக்கிட்டு.. இப்பத்தான் நடை பழகற குழந்தையைப் போல நடை பழகுவாரு..."

கீதாவின் பேச்சைக் கேட்ட ராதிகா சிரித்தாள்.. சிரித்து முடிக்கும் போதுதான்.. அதை உணர்ந்தாள்...

அவளது இடுப்புப் பகுதியில் ஒரு வெட்டு வெட்டி.. வலியின் கீற்று தோன்ற ஆரம்பித்திருந்தது..

அடுத்த நொடியில் அது மறைய.. மீண்டும் தங்கையிடம் விட்ட பேச்சைத் தொடர ஆரம்பித்தாள்..

"மொட்டை மாடியை அப்பா குத்தகைக்கு எடுத்திட்டா நானெங்கே போகிறதாம்..?"

"எங்கேயும்.. எதுக்காகடி போகிற..? உனக்குன்னு ரூம் இல்லையா..?"

"ரூமுக்குள்ள உட்கார்ந்து படிச்சா.. படிப்பு ஏறாதுடி ராது..."

"மொட்டை மாடியில போய் நின்னா மட்டும் ஏறிடுமா..?"

"வெளியுலகத்தைத் தெரிஞ்சுக்கலாமில்ல..?"

"நீ தெரிஞ்சுக்கிற லட்சணத்தைப் பத்தி எனக்குத் தெரியாதா.. ? ஏண்டி இப்படி இருக்க.. ?"

"இதோ பாரு.. ஒளவையார் போல ஆரம்பிச்சுராதே.. நீ மட்டும் கணக்காய் காதல் பண்ணி கல்யாணம் பண்ணிக்குவ.. நான் மட்டும் ரூமுக்குள்ள உட்கார்ந்து பாடத்தை மனம்பாடம் பண்ணி ஒப்பிக்கனுமா.. ?"

கீதா நியாயம் கேட்டுக் கொண்டிருக்கும் போது.. ராதிகாவுக்கு இரண்டாவது வலி வந்து விட்டது.. இந்த முறை வலியை அவளது முகம் பிரதிபலித்து விட.. கீதா பயந்து விட்டாள்..

"ராது.." பதறியவளாக.. அவள் அருகே வந்த போது..

"அம்மா.." என்று தன்னையுமறியாமல் புலம்பியபடி அவள் கையைப் பிடிக்க முனைந்தாள் ராதிகா..

பதறி விழித்த கீதா ஸ்தம்பித்துப் போய் நின்று விட.. ஆதரவு தேடி நீண்ட ராதிகாவின் கையை பால முரளியின் கை இறுக்கமாகப் பற்றிக் கொண்டது...

"வந்துட்டிங்களா..."

விழிகள் மின்னக் கேட்ட ராதிகாவை மூன்றாவது வலி தாக்க.. அவள் இடுப்பைப் பிடித்துக் கொண்டு சரிந்தாள்.. முரளி அவளைத் தாங்கிப் பிடித்துக் கைகளில் ஏந்திக் கொண்டான்...

"அத்தையைக் கூப்பிடு கீதா.."

அவன் காருக்கு விரைய.. அடுத்த சில நிமிடங்களில் அவனுடைய கார்.. ராதிகாவையும்.. ராஜேஸ்வரியையும் சுமந்து கொண்டு மருத்துவ மனையை நோக்கிப் பறந்தது..

கோவிலுக்குப் போய் விட்டுத் திரும்பியிருந்த மேகலாவின் போனுக்கு செய்தி வந்தது...

"அம்மா..! எனக்கு மகன் பிறந்திருக்கான்..."

நீரோடும் நதிக்கரையில் அவனுக்காக..
நிலாப்பொழுதில் காத்திருந்தேன்.. என் தோழி..!

தேனூத்திலிருந்த பால முரளியின் வீட்டு வாசலில் பந்தல் போப்பட்டு.. வாழை மரமும்.. தோரணங்களும் கட்டப் பட்டிருந்தன... வீடு.. விழாக் கோலம் பூண்டிருந்தது.. விருந்தினர்களின் வருகையும் அவர்களின் கலகலப்பான பேச்சும் வீட்டை நிறைத்திருந்தன..

"வாங்க.. பெரியப்பா..."

காரிலிருந்து இறங்கிய பெரியவரை வரவேற்றான் பாலமுரளி...

"என்னய்யா.. முரளி.. அப்பன்காரனா ஆயிட்டே.. எப்படியிருக்கான் உன் புள்ள..?" நரைத்த மீசையின் நடுவே சிரித்தார் அந்தப் பெரியவர்...

"முகம் பார்த்துச் சிரிக்க ஆரம்பிச்சுட்டான் பெரியப்பா.." முரளியின் குரலில் தகப்பனின் பெருமிதம் இருந்தது...

"மூனுமாசமாயிருச்சில்ல.. முகம் பார்க்க ஆரம்பிச்சிருப்பான்.. உன் பொண்டாட்டி எங்கே..?"

"வீட்டுக்குள்ளதான் இருக்கா பெரியப்பா.. கூப்பிடவா..?"

"அது எதுக்கு..? நானென்ன சீமைக்கா போறேன்..? வீட்டுக்குள்ளதான போறேன்.. அங்கே போயி பார்த்துக்கறேன்..."

"பெரியம்மா வரலியா..?"

"அவ தம்பி பேரனுக்கு காதுகுத்து.. அவ அங்கே போயிட்டா..."

"நீங்க போகலியா..?"

"இங்கே என்தம்பி பேரனை தொட்டிலில் போட்டு பேரு வைக்கப் போறாங்களே.. நான் இங்கே வர வேணாமா...?"

மீண்டும் நரைத்த மீசையினுடே அவரது பலத்த சிரிப்பு வெளிப்பட்டது.. அவரை உள்ளே அனுப்பி விட்டு.. அடுத்து வந்த விருந்தினரை வரவேற்க ஆரம்பித்தான் முரளி...

அழகாக உடுத்திக் கொண்டு வாசல் பக்கமாக நடைபயின்று கொண்டிருந்த கீதாவிடம் வந்தான் ஒரு வாலிபன்.. உயரமாக.. அழகாக.. திருத்தமாக இருந்தவனை மேலும்.. கீழுமாக பார்த்து வைத்தாள் அவள்..

"நீங்கதானே கீதா..?" கெத்தாக வினவினான் அவன்...

"யெஸ்..." படு ஸ்டைலாக பதிலளித்தாள் கீதா..

"சென்னையில் இன்ஜினியரிங் காலேஜில படிக்கிறது நீங்கதானே..?"

"ஆமாம்.."

"உங்க தம்பி பெயர் கூட சுந்தர்தானே..?"

"ஆமாங்க.. ஆமாம்.."

"உங்க அப்பாதானே கிருஷ்ண மூர்த்தி..?"

கேள்வி.. துணைக் கேள்வி... துணைக்குத் துணைக் கேள்வி என்று துளைத்துக் கொண்டிருந்தவனிடம்..

'யோவ்.. உனக்கு இப்ப என்னதான்ய்யா வேணும்..?' என்று அவளுக்குக் கேட்கத் தோன்றியது..

"ஹலோ.. எங்க அப்பாதான் கிருஷ்ணமூர்த்தி.. அம்மா ராஜேஸ்வரி.. அக்கா ராதிகா.. தம்பி சுந்தர்.. இந்த விவரம் போதுமா.. இன்னும் கொஞ்சம் வேணுமா..?"

"போதுங்க.."

"அப்படியா.. நீங்க கேட்ட ஜோரைப் பார்த்தா.. எங்கே ஜாதகத்தைக் கேட்டு விடுவீங்களோன்னு நினைச்சேன்.."

"ஹெய்யோ.. எப்படிங்க கண்டு பிடிச்சிங்க..?"

அவன் குதூகலமாய் கேட்க.. 'இவன் என்ன லூஸா..?' என்ற சந்தேகம் கீதாவுக்குள் எழுந்தது..

"உங்களுக்கு என்னதாங்க வேணும்..?" என்று கேட்டே விட்டாள்...

"நீங்கதாங்க வேணும்..?" தெளிவாகப் பதில் சொல்லி அவளைக் குழப்பி விட்டான் அவன்..

"என்ன மிஸ்டர்.. விளையாடறிங்காள.. நான் யார் தெரியுமா..?" கீதா முறைத்தாள்..

"தெரியுமே.. நீங்கதான் கீதா.."

"அங்கே நிற்கிறது என் அத்தான்..."

"அதுவும் தெரியுமே.."

"உங்களுக்கு அது தெரியும் மிஸ்டர்.. நீங்க பண்ற வம்பு அவருக்குத் தெரிஞ்சா.. உங்க கதி என்ன ஆகும்ன்னு தெரியுமா..?"

"அது தெரியாது.. நீங்க தான் தெரிய வையுங்களேன்..."

கேட்டவனின் முகத்தில் தெரிந்த சுவாரஸ்யத்தைப் பார்வையிட்டவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.. கோபத்தில் மூச்சிரைக்க பாலமுரளியிடம் புகார் செய்யப் போனாள் அவள்...

மேல் மூச்சு.. கீழ்மூச்சு வாங்க வந்து நின்றவளைத் திரும்பிப் பார்த்த முரளி திகைத்தான்...

"என்னம்மா.. இப்படி வந்து நிற்கிற..?"

"அத்தான்.. நீங்க என்னவோ பெரிசா பீற்றிக்கிட்டிங்களே.."

"என்னன்னு..?"

"உங்க ஊரில் ஒழுக்கம் கொடி கட்டிப் பறக்கும்.. நேர்மை ஊஞ்சலாடும்.. தூய்மை கிரிக்கெட் விளையாடும்ன்னு.."

அவள் பேசிய விதத்தில் பாலமுரளி பலமாக சிரித்தான்...

"சிரிக்காதீங்க அத்தான்.. ஒழுக்கம் விளையாடும் உங்க ஊரில் ஒரு ஆள் வந்து என் கிட்ட வம்பு பண்றான்.."

"தெளிவாய்ச் சொல்லு... நீ அவனிடம் வம்பு பண்ணியா... இல்ல அவன் உன்னிடம் வம்பு பண்ணினானா..?"

"என்ன அத்தான் இப்படிக் கேட்டுட்டிங்க.."

"வழக்கமா நீதானேம்மா மத்தவங்ககிட்ட வம்பு பண்ணுவ..?"

"நேத்து வரைக்கும் அப்படித்தான் இருந்துச்சு அத்தான்.. இன்னைக்கு கதையே மாறிப் போச்சே.."

"இதைப் பாருடா.. கதையை மாத்தின அந்த ஹீரோ யாரும்மா..?"

முரளி கீதாவிடம் கேட்டுக் கொண்டிருந்தபோது..

"நான்தான்" என்று முன்னால் வந்தான் அவன்...

அவனைக் கண்டதும் கைகளை விரித்த முரளி...

"டேய்.. பார்த்தா.." என்றான்...

"அண்ணா.." என்று முரளியைக் கட்டிக் கொண்டான் அந்த பார்த்தனாகப் பட்டவன்..

"உஸ்ஸ்.." கீதா தாங்க முடியாதவளாக தலையில் கை வைத்துக் கொண்டாள்..

"இவன் யாரு தெரியுமா கீதா..?" உற்சாகமாக கீதாவின் பக்கம் பார்த்தான் முரளி...

"யாராம்..? அடுத்த இந்திய பிரைம் மினிஸ்டரா..?" அலட்சியமாகக் கேட்டாள் கீதா...

"ஏனாம்... இது ஜனநாயக நாடு அண்ணா..! யார் வேணும்னாலும் அரசியலில் குதிக்கலாம்.. மந்திரியாகலாம்..

மார் கண்டது.. நாளைய பிரைம் மினிஸ்டர் நானா இருந்தாலும் ஆச்சரியம் படுவதிற்கில்லை.." என்றான் அந்த 'பார்த்தன்..'

"வந்திட்டாலும்.." கீதா கழுத்தை வெட்ட...

"பார்த்துண்ணா.. கழுத்து சுளுக்கிக்கப் போகுது.." என்று அவன் அக்கறைப் பட்டான்..

இருவரின் மோதலையும் சுவாரஸ்யமாக வேடிக்கை பார்த்த முரளி.. கைகளை விரித்துச் சிரித்தான்...

"உனக்குப் பதில் சொல்லவும் ஒரு ஆள் வந்தாச்சு கீதா.. இவன்தான் பார்த்தன் என்ற பார்த்த சாரதி.. என் ஒன்று விட்ட சித்தப்பா மகன்.."

"ஒஹோ.. இவருக்கு எப்படி என் பயோ-டேட்டா தெரிஞ்சதாம்..?"

"எங்க கல்யாண வீடியோவை பார்த்தவன் உன்னைப் பற்றிக் கேட்டான்.. சொன்னேன்.."

"அடேங்கப்பா.. சார்.. கல்யாணத்துக்கு வராம எங்கே போனாராம்..?"

"அமெரிக்காவில இருந்தான்.."

"அங்கே என்ன அலுவலாம்..?"

"அங்கேதான் அலுவல் பார்க்கிறான்.. சாப்ட்வேர் இன்ஜினியர்.."

பேச்சுவாக்கில திரும்பிப் பார்த்த முரளி... உள்ளே வந்து கொண்டிருந்தவரைப் பார்த்ததும்..

"அடடே.. நம்ம ராமன் வந்திருக்காரே.." என்றபடி அவரை வரவேற்கப் போய் விட்டான்..

கீதா பக்கத்திலிருந்த பூச்செடியைப் பார்க்க.. பார்த்த சாரதி அவளைப் பார்த்தான்.. அவர்கள் இருவரையும் கணவனைத் தேடி வாசலுக்கு வந்த ராதிகா பார்த்தாள்..

"யாருங்க அது..?" என்று முரளியிடம் விசாரித்தாள்.

"என் பங்காளிதான்.. வெளிநாட்டில இன்ஜினியரா வேலைபார்க்கிறான்.."

"கீதாகிட்ட என்ன பேசறார்..?"

"காதல் பேசறான்.."

"என்னது..?"

"ஏண்டி அலறுகிற..? உன் தங்கைக்குத்தான் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கனும்கிற கனவு இருக்கே.. உன் தங்கையை இவனுக்குப் பெண் கேட்டு என் சித்தப்பாவும்.. சித்தியும் வந்தாங்க.. உன் அப்பாம்மாவிடம் பேசினேன்.. ஜாதகம் அனுப்பினாங்க. ஜாதகம் பொருந்தியிருக்குன்னதும் கல்யாணப் பேச்சு ஆரம்பிச்சிருச்சு.. அதைச் சொன்னா உன் தங்கை

ஒப்புக்குவாளா..? அதான்.. நம்ம கல்யாண வீடியோவில அவளைப் பார்த்து பார்த்தன் மயங்கிப் போயிட்டான்னு அவகிட்ட ஒரு கப்ஸாவை அள்ளி விட்டிருக்கேன்.. நீயும் அதையே மெயின்டெயின் பண்ணு.."

"எனக்குத் தெரியாம இவ்வளவு நடந்திருக்கா..?"

ராதிகா திரும்பிப் பார்த்தாள்.. கீதாவின் முகத்தில் செம்மை படர்ந்திருந்தது.. அவளை ரசனையுடன் பார்த்தபடி தாழ்ந்த குரலில் எதையோ பேசிக் கொண்டிருந்த பார்த்த சாரதியின் கண்களில் மயக்கம் தெரிந்தது...

"அவரைப் பார்த்தா நிஜமாகவே மயங்கிப் போயிருக்கதைப் போலத்தான் தெரியுது.. நீங்க சொன்னது கப்ஸா இல்லை.." ராதிகா சொன்னாள்...

"அப்படியா சொல்ற..?" முரளி.. அவர்களைப் பார்த்தான்..

"அட.. ஆமாம்.." ஆச்சரியப்பட்டான்..

"என்னவோ போங்க.. உங்க புண்ணியத்தில ஒரு அரேன்ஜ்டு மேரேஜ்.. லவ் மேரேஜா ஆகிருச்சு.." ராதிகா புன்னகை செய்தாள்..

புன்னகை செய்தவள்.. பூசினாற் போன்ற உடல் வாகுடன்.. தாய்மையின் பொழிவுடன் நின்று கொண்டிருந்தாள்..

அவளின் இயற்கையான.. இயல்பான வனப்பு அதிகரித்திருந்தது.. விழா நாளுக்காக.. அழுத்தமான ஊதா வண்ணத்தில்... ரோஜா வண்ணக் கெட்டி ஜரிகைக் கரையிட்ட காஞ்சிபுரம் பட்டுப் புடவையை அணிந்திருந்தாள்.. தலைமுடியை தளர்வாகப் பின்னி அதில் நெருக்கமாகத் தொடுக்கப்பட்ட மல்லிகைச் சரத்தை தோளில் வழியுமாறு வைத்திருந்தாள்.. முரளி ஆசைப்பட்டான் என்பதற்காக அவள் போட்டிருந்த மூக்குத்தி... அவளது பெண்மையின் பொழிவை அதிகப்படுத்திக் காட்டியது.. மூக்குத்தியில் பதிக்கப் பட்டிருந்த வைரக்கல்லின் ஒளிர்வில்.. அவள் முகமும் ஒளிர்ந்தது..

"ராதிகா.." கிறக்கத்துடன் அழைத்தான் முரளி

"ம்ம்ம்.." அவனது கிறக்கத்தைப் புரிந்த புன்னகை அவள் இதழ்களில் வந்திருந்தது...

"மயக்கறடி.."

"உங்களை விடவா..?"

"ஏய்ய்.."

"இது விசேச வீடு.. நம்ம பிள்ளையை தொட்டில் படுக்க வைத்து பெயர் வைக்கனும்.. வீடு பூராவும் உறவு ஜனம் நிறைஞ்சிருக்கு.. அந்த நினைப்பு உங்க நெஞ்சில் இருக்கா..?"

"அங்கே நீதானேடி இருக்கே.."

"போதும்.. உள்ளே.. வாங்க.."

ராதிகா உள்ளே போனாள்.. அவளின் பின்னழகை ரசித்தபடி அவனும் தொடர்ந்து போனான்.. உறவினர்களின் மத்தியில் ராதிகா தன் மகனைத் தூக்கி தொட்டிலில் படுக்க வைத்து ஆட்டி விட்டாள்...

மலர்ச் சரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த மலர் தொட்டிலில் படுத்திருந்த அவள் மகன் கால்கட்டை விரலைத் தூக்கி வாயில் வைக்க முயன்று கொண்டிருந்தான்...

"கண்ணன் மாதிரி பண்றானில்ல.." ராதிகா பூரிப்புடன் கணவனின் முகம் பார்த்தாள்...

"அப்ப.. கண்ணன்னு பெயர் வச்சிடலாமா..?" முரளி கேட்டபோது.. அதை மற்றவர்கள் ஆமோதித்தார்கள்..

குழந்தையின் காதில் 'கண்ணன்..' என்ற பெயரை வரிசையாக எல்லோரும் சொல்லி முடித்த போது.. அந்த பொக்கை வாய் கண்ணன் அவர்களை மயக்கும் புன்சிரிப்பை சிந்தினான்..

"யாராச்சும் பாடுங்களேன்.." யாரோ சொன்னார்கள்..

"ராதிகாவே நல்லாப் பாடுவாளே.. இவ பாட்டில மயங்கித்தான் எங்க அத்தான் இவ பின்னாடியே வந்திட்டாராம்.." கீதா தமக்கையை மாட்டி விட்டாள்..

மறுத்துச் சொல்லப் போன ராதிகா.. கணவனின் கண்களில் தெரிந்த கோரிக்கையைக் கண்டதும் பாட ஆரம்பித்தாள்...

"நூறாண்டு காலம் வாழ்க..!
நோய்.. நொடி.. இல்லாமல் வளர்க..!
ஊராண்ட மன்னர் புகழ் போலே..
உலகாண்ட புலவர் தமிழ் போலே..
நூறாண்டு காலம் வாழ்க..!
நோய்.. நொடி.. இல்லாமல் வளர்க.."

பாடிக் கொண்டே வந்தவள்...

"மலடென்ற பெயரும் பொய்யாக..
வந்த மகனே!
எந்நாளும் நீ வாழ்க...!"

என்று பாடும் போது விசும்பி விட்டாள்.. முரளியின் கை அவள் தோளை வளைத்துக் கொண்டது.. அவனது கை வளைவிற்குள் நிம்மதியாக உணர்ந்தவள் தொட்டிலில் படுத்திருந்த மகனைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டாள்..

கணவனின் கையில் குழந்தையுடனும்.. அணைப்புடனும் மங்களகரமாக நின்று கொண்டிருந்த மகளைக் கண்டு.. ராஜேஸ்வரியின் மனம் நிறைந்தது- ஆனந்தக் கண்ணீரால் அவளது கண் நிறைந்தது-

விருந்து முடிந்து.. அனைவரும் உறங்க ஆரம்பித்த இரவு வேளையில்.. மகனை அணைத்துக் கொண்டு.. முகத்தில் தாய்மைப் பெருக்கு தவழ்ந்தோடத் தூங்கிக் கொண்டிருந்த மனைவியை அணைத்து அவள் உறக்கம் கலையாமல் அவள் நெற்றியில் முத்தமிட்ட முரளியின் கண்கள் கலங்கியிருந்தன...

உன் கண்ணில் தோன்றும் நீர்முத்தில்..
என் உள்ளம் துடிப்பதை அறிவாயோ...

"ஏண்டி அப்படி அழுதே..?"

தூங்கிக் கொண்டிருந்த மனைவியிடம் அவளது தூக்கத்தைக் கலைக்காமல் முணுமுணுப்பாய் கேட்டான் முரளி..

அவனது மன இளக்கத்தை அறியாதவளாய் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள் ராதிகா...

"என்னைச் சேர்ந்த யாரையும்.. எதுக்காகவும் நான் ஏங்க வைச்சதில்லையேடி.. அம்மா.. அக்கா.. அக்கா பிள்ளைகள்.. ஏன்..? என்னை அண்டி நின்ற அத்தனை பேருக்கும் அவங்க மனசறிஞ்சு.. எல்லாத்தையும்

செஞ்சேனே.. உன்னை மட்டும் ஏண்டி வாய் விட்டுக் கேட்க வைச்சேன்..?"

அவன் மனதுக்குள் துயரம் மண்டியது.. நிறைவான நிம்மதியை முகத்தில் பிரதிபலித்தவளாக உறங்கிக் கொண்டிருந்த மனைவியைக் காதலுடன் பார்த்தான் முரளி...

"பிள்ளை வரம் வேணும்னு நீ கேட்டு.. நான் கொடுக்கிறதைப் போல வைச்சுக்கிட்டேனே.. இந்த வரத்தை ரெண்டு வருசத்துக்கு முன்னாலேயே நான் கொடுத்திருந்தா.. நம்ம கண்ணனுக்கு இப்ப இரண்டு வயசாகியிருக்குமேடி.. அவன் தங்கைக்கு அச்சாரம் போட்டிருப்பேனேடி.."

தனக்குள் பேசிக் கொண்டவனுக்குள் போதை சூழ்ந்தது.. கசங்கிய சேலையுடன் அவன் பக்கமாக புரண்டு படுத்த மனைவியின் இடுப்பில் கை போட்டு வளைத்துக் கொண்டான் முரளி..

"ம்ம்ம்..."

தூக்கத்தில் சிணுங்கியவள்.. அவன் மார்பில் ஒன்றிக் கொண்டு அந்தத் தூக்கத்தைத் தொடர்ந்தாள்..

"உன் மனசில எத்துனை துக்கத்தை தாங்கியிருந்தா.. அப்படி எழுதிருப்ப..? நான் பாவி ராதிகா.."

அவன் இமையோரம் நீர் முத்து சிதறி விழுந்ததில்.. அதன் ஈரம் பட்டு ராதிகா கண் விழித்தாள்.. அவள் முகத்துக்கு வெகு அருகாமையில் தெரிந்த அவன் முகத்தில் தெரிந்து வேதனையில் பதறிவிட்டாள்..

"என்னங்க..?"

"ஏண்டி... அழுத..?"

அவனுடைய குரலில் தொலித்த வேதனையில் ராதிகா துடித்துப் போனாள்.. அவசரமாக எழுந்து அமர்ந்து அவன் முகம் பார்த்தவள் அவனைத் தனக்குள் இறுக்கிக் கொண்டாள்..

அவர்கள் இருவரும் ஒருவரின் அணைப்பில் ஒருவர் ஆறுதலடைந்து தூங்க ஆரம்பித்தார்கள்.. அவர்களின் மத்தியில்.. இரு பக்கமும் தாய்.. தந்தையின் அரணோடு கண்ணன் தூங்கிக் கொண்டிருந்தான்..

"மில்லுக்கு வா.. ராது.."

வெளியே கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்த பால முரளி சொன்னான்..

"நானா..?" ராதிகா ஆச்சரியத்துடன் கேட்டாள்...

"நீதான்.. ஏன்..? இதுக்கு முன்னாலே நீ மில்லுப் பக்கம் வந்ததில்லையா..?" அவன் புருவங்களை உயர்த்தினான்..

"அதுக்காக சொல்லலை.. கண்ணனைப் பார்த்துக்கனுமே.." ராதிகா தயங்கினாள்..

"அவனையும் தூக்கிக்கிட்டு வா..." இலகுவாக வழி சொன்னான் முரளி...

"என்ன சொல்றிங்க..?" ராதிகாவின் ஆச்சரியம் அதிகரித்தது..

"நிஜமாத்தான் சொல்றேண்டி.. காலையில போனா.. நான் திரும்பி வர.. ராத்திரிப் பொழுதாகிருது.. உன்னையும்... பிள்ளையையும் பார்க்காம ஏங்கிப் போயிடறேன்.. அதனாலதான் சொல்றேன்.. மில்லுக்கு கண்ணனையும் தூக்கிக்கிட்டு வா.. மதியம் வரைக்கும் இரு.. மதியச் சாப்பாட்டுக்கு நான் வீட்டுக்கு வரும்போது உங்க ரெண்டு பேரையும் வீட்டில விட்டுட்டுப் போறேன்.. என்ன சொல்ற..?"

அவள் சரியென்று சொன்னாள்.. தினமும் அவன் கிளம்பும் போது ராதிகாவும் குழந்தையுடன் அவன் கூடப் போவது தினசரி நடைமுறையாகி விட்டது...

கண்ணன் ஆறுமாதக் குழந்தையாக இருந்தான்.. அவனுக்குத் தேவையானவைகளை ஒரு கூடையில் வைத்து எடுத்துக் கொள்வாள் ராதிகா.. குழந்தையை முரளி வாங்கிக் கொள்வான்..

"நானே தூக்கிட்டு வர்றேனே.."

ஆசையுடன் குழந்தையைத் தூக்கிக் கொள்பவனின் தோளில் கை போட்டு ஒய்யாரமாக சாய்ந்து கொள்வான்

கண்ணன்.. தகப்பனின் தோள் மீது சாய்ந்து கொள்வதில் அவனுக்கு ஏற்படும் அதீதசந்தோசம் அதில் வெளிப்படும்..

ராதிகா மில்லின் வேலைகளில் பழையபடி மூழ்கி விட்டாள்.. அவள் கூடவே வரும் மீனாட்சி.. கண்ணனைத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பதால் அவள் குழந்தையைப் பற்றிய கவலையில்லாமல் வேலைகளைக் கவனித்துக் கொள்ள முடிந்தது..

"எதுக்காக குழந்தையை அலைய வைக்கிறிங்க..?"

கண்ணன் எட்டு மாதக் குழந்தையாக எட்டு வைக்க ஆரம்பித்த போது.. அவனையும் ராதிகா மில்லுக்குத் தூக்கிக் கொண்டு போவதை ஆட்சேபித்தாள் மேகலா..

"அங்க வந்து மீனாட்சி பிள்ளையைத் தூக்கிக் கிறதை இங்கே செய்ய மாட்டாளா..?"

"ஆனா அத்தை... கண்ணன் என்னைத் தேடுவானே.." ராதிகா கையைப் பிசைந்தாள்..

மேகலாவிற்கு.. ராதிகாவின் தவிப்பைப் புரிந்து கொள்ள முடிந்தது.. அவளைக் கண்ணன் தேடுவான்தான்... ஆனால்.. அவளோடு சேர்த்து வீட்டிலுள்ள மற்ற அனைவரையும் தேடுவான்.. காலையில் எழுந்ததும் பாலமுரளியைத் தேடுவான்.. குளித்து கீழே வந்ததும்.. பூஜையறையிலிருக்கும் மேகலாவைத்

தேடிப் போவான்... அவளைக் போலவே தீபாதாரனைத் தட்டைத் தொட்டுக் கும்பிட்டு.. கன்னத்தில் போட்டுக் கொள்வான்.. மீனாட்சி ஒரு நாள் வராவிட்டாலும் அவனுக்கு கோபம் வந்துவிடும்.. மறுநாள் வருபவளின் தலைமுயைப் பிய்த்து.. கன்னத்தில் அடித்து தன் கோபத்தை வெளிப்படுத்துவான்..

"ம்ஹீம்.. என்னால செய்ய முடியாததை எங்க ஐயாவோட புள்ள செய்யுது.." நாச்சியப்பன் ஆதங்கப்பட்டுப் போவான்..

சமையலறைக்குப் போய் காவேரியின் கையால் பாலை வாங்கிக் குடித்தால்தான் கண்ணனுக்கு பாலைக் குடித்ததைப் போலவே இருக்கும்..

அப்படித் தன்னைச் சுற்றியிருப்பவர்களை அன்புக் கயிறால் கட்டி வைத்திருக்கும் கண்ணனைப் பற்றி ராதிகா கவலைப்பட்டால் மேகலாவிற்கு சிரிப்பு வராதா..?

அவன் கோகுலக் கண்ணன்.! பிருந்தாவனத்தின் நந்தகுமாரன்..! தன்னைச் சுற்றியிருப்பவர்களை மகிழ்விக்கும் ஆயர்பாடிக் கண்ணன்.. கோபியர் கொஞ்சும் ரமணனாய்.. மீனாட்சியாலும்.. காவேரியாலும் கொஞ்சப்படுபவன்.. ராதிகாவின் பிள்ளைக் கலியை தீர்க்க வந்த கற்பக விருட்சம்..

அவனைத் தேடுபவர்கள் அவனைச் சுற்றியிருக்கும் போது அவளைத் தேடுவானே என்று ராதிகா கவலைப்படலாகுமா..?

என்ன ஒன்று.. அனைவரையும் தேடும் கண்ணன்.. அவளை அதிகமாக தேடுவான்.. அனைவராலும் தேடப்படும் கண்ணன் அவளால் அதிகமாகத் தேடப் படுவான்...

"நீ எவ்வளவு நேரம் உன் மகனை விட்டுட்டு இருக்கப் போற..? காலையில போனா.. மதியத்துக்கு ஒடி வந்திரப் போற.. அதிகமா போனா நாலு மணி நேரம்.. அந்த நேரத்தில அவன நாங்க பார்த்துக்க மாட்டோமா..?"

மேகலாவின் வார்த்தைகளில் வற்புறுத்தல் இருந்தது.. ஆனாலும் ராதிகாவால் பதில் சொல்ல முடியவில்லை..

"நீயாச்சும் சொல்லேண்டா..."

மனைவியின் தவிப்பை மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த முரளியிடம் அலுத்துக் கொண்டாள் மேகலா..

"ஊஹீம்.. நான் இதில் தலை கொடுக்கவே மாட்டேன்ம்மா.. அவளாச்சு.. நீங்களாச்சு.."

முரளி தலையிடாக் கொள்கையை அறிவித்து விட்டான்.. மேகலா விடவில்லை.. வாதாடி.. வாதாடி.. ஒருவழியாக மருமகளை சம்மதிக்க வைத்து விட்டாள்..

"கண்ணன் அழுவானே..."

அவனை வீட்டில் விட்டுவிட்டு ராதிகா மட்டும் மில்லுக்குக் கிளம்பிய அந்த முதல்நாளில் அவள் தவித்துப் போனாள்...

மீனாட்சியிடம் விளையாடிக் கொண்டிருந்தவனிடம் எப்படி விடைபெறுவது என்ற தயக்கத்தில் அவள் நின்றபோது.. மேகலா எளிதாக அந்தப் பிரச்னையை தீர்த்து வைத்தாள்..

"குட்டிம்மா.. அம்மா மில்லுக்குப் போகிறா.. டாட்டா சொல்லு.." என்று பேரனிடம் சொன்னான்..

மகன் என்ன சொல்வானோ.. என்று மனம் படபடக்க நின்று கொண்டிருந்த ராதிகாவை ஏறிட்டுப் பார்த்த அவள் மகன் வெகுசமத்தாக டாட்டா சொன்னான்..

"பார்த்தியா.. நான் சொல்லலை.. உன் மகனே போயிட்டு வான்னு டாட்டா சொல்லிட்டான்.. இனிமே என்னம்மா..?"

மேகலா சிரித்தபோது.. ஒரு வகையான ஏமாற்ற உணர்வு மனதில் சூழ்வதை உணர்ந்தாள் ராதிகா..

அவளுடைய மகன்.. அவளைத் தேடாமல் விடைகொடுத்ததில் அவளுக்கு ஏன் சந்தோசமில்லாமல் போனது என்ற கேள்விக்கு அவளுக்கு விடை கிடைக்கவில்லை..

"அவனுக்கு மில்லின் சூழல் பிடிக்காமல் போயிருக்கலாம்.." என்றான் பால முரளி..

ராதிகா பதில் சொல்லவில்லை.. மௌனமாக இருந்தாள்..

"நம்ம வீட்டை அவனுக்குப் பிடிச்சுப் போயிருக்கலும்.. காலை நேரத்தில் தோட்டத்தில் விளையாடுவதில் அவனுக்கு பிரியம் அதிகம்.. உன்கூட மில்லுக்கு வந்தால்.. அந்த தோட்டத்து விளையாட்டை அவன் தியாகம் பண்ண வேண்டியிருக்கும்.. அதனால டாட்டா சொல்லியிக்கலாம்.." முரளி தன் அனுமானத்தைத் தொடர்ந்தான்..

அது உண்மைதான் என்பதை ராதிகாவும் உணர்ந்திருந்தாள்.. அவர்களுடைய வீடு அரண்மனையைப் போன்றது.. அதன் தோட்டம் ஒரு பூங்காவின் அனைத்துப் பரிணாமங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும்..

அந்த அழகான பூங்காவின் காலையிளங் காற்றோடு விளையாடும் விளையாட்டை துறக்க ஒரு குழந்தையினால் முடியாதுதான்..

ராதிகா சமாதானமடைந்தாளோ.. இல்லையோ.. கண்ணனுக்கு மில்லை விட.. வீடும்.. தோட்டமும் தான் பிடிக்கிறது என்பதனால் அவனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட்டாள்...

ராதிகாவின் படிப்பு.. எந்த வகையிலும் வீணாகக் கூடாது என்பதுதான் பாலமுரளியின் நோக்கமாக இருந்தது.. அவள் மீண்டும் மில்லின் பொறுப்பை எடுத்துக் கொண்டதில் அவனின் வேலைப் பளு பெருமளவில் குறைந்தது...

ஆரம்பத்தில் ராதிகாவுடன் மில்லிலேயே இருந்த முரளி.. போகப் போக.. அதைக் கைவிட்டு.. மற்ற தொழில்களைப் பார்க்கப் போகலானான்..

"நீ வீட்டுக்கு வந்திரு ராது.. நான் ஜவுளிக்கடைக்கும் போயிட்டு செங்கல் சூளையைக் கவனிக்கப் போகணும்."

ராதிகாவும் அவனைத் தடுக்கவில்லை.. அவனுடைய தொழில் கணமையைப் புரிந்திருந்ததால் மனப் பூர்வமாக அவன் சொன்னதை ஏற்றுக் கொண்டாள்...

ராதிகாவை மில்லில் விட்டு விட்டு முரளி மற்ற தொழில்களைப் பார்க்கப் போய் விடுவான்.. மதிய நேரத்தில் ராதிகா வீட்டுக்குத் திரும்ப காரை அனுப்பி வைப்பான்.. அவள் வீட்டுக்குப் போய் கண்ணனைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது.. பிற்பகல் நேரத்தில் மதிய உணவுக்கென வந்து சேர்வான்.. அவர்கள் சேர்ந்து சாப்பிடுவார்கள்.. மகனுடன் விளையாடியபடி ஒரு குட்டித்தூக்கம் போட்டு விட்டு.. முரளி மீண்டும் தொழில்களைப் பார்க்கப் போய் விடுவான்.. ராதிகா வீட்டில் இருப்பாள்..

தெளிவான நீரோடை போல அவர்களின் வாழ்வு ஒரு நேர் கோட்டில் போய் கொண்டிருந்தது.. கண்ணனுக்கு முதல் வருடப் பிறந்த நாள் வந்தது.. அந்தப் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் வீடே மூழ்கி கொண்டாடி களித்தது.. மனைவி.. மகனுடன்

கோவிலுக்குப் போய் வந்தான் பாலமுரளி... வரும் வழியில்தான் அவர்கள் சங்கரைச் சந்தித்தார்கள்...

முரளியிடம் எதையோ பேசி உற்சாகமாகச் சிரித்தபடி காரில் ஏறிக் கொண்டிருந்த போதுதான் ராதிகா அவனைப் பார்த்தாள்.. அவளையே உறுத்துப் பார்த்தபடி தலை கலைய நின்றிருந்தவனின் கண்களில் கோபச் சிவப்பு இருந்தது...

'இவன் எதுக்காக இப்படி முறைக்கிறான்..?'

இதற்கு மேல் அவனைப் பற்றி நினைக்க நேரமில்லாமல் போன ராதிகா.. வேறு சிந்தனைகளில் தடம் மாறியவளாய்.. அவற்றைப் பற்றிக் கணவனிடம் பேச ஆரம்பித்தாள்.. அவள் சொன்னதற்கு பதில் சொல்லியபடி காரை ஓட்டிக் கொண்டிருந்த முரளி மட்டும் பலத்த சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.. ராதிகா கேட்டபோது சிரித்து மழுப்பி விட்டான்...

மறுநாள் மில்லுக்குப் போன ராதிகா.. மதிய உணவுக்கு வீடு திரும்பிய போது.. கடத்தப் பட்டாள்..

அம்மம்மா கேளடி தோழி...
என் காதல் கதையிது தானடி..

முதலில் ராதிகா அதைக் கவனிக்கவில்லை.. முதல் நாள் மழைச் சாரலில் கண்ணன் லேசாக நனைந்து விட்டான்.. அதன் தொடர்பாக அவனுக்கு தொந்தரவு ஏதேனும் ஏற்பட்டிருக்கக் கூடுமோ என்ற கவலையில் அவள் ஆழ்ந்திருந்தாள்.. அதே சிந்தனையுடன் வெளியில் பார்த்தவளுக்கு கார் பாதை மாறிப் போய் கொண்டிருப்பது தெரிய வந்தது..

"மாணிக்கம்.. காரை நிறுத்து..." அவசரமாக உத்தரவிட்டாள்..

காரை ஓட்டிக் கொண்டிருந்தவன் திரும்பிப் பார்த்தான்...

"சங்கர்..?" ராதிகா அதிர்ந்தாள்..

'இவன் எப்படி வந்தான்..? மாணிக்கம் எங்கே..?'

"பதறாதே.. இது உன்னோட கார்தான்.. டிரைவர்தான் உன் வீட்டு டிரைவரில்லை.. காபி சாப்பிட வான்னேன்.. வந்தான்.. காபிக்குள்ளே மயக்க மருந்தை

கலந்திருந்தேன்.. அங்கேயே மயக்கம் போட்டு விழுந்திட்டான்.. நான் உன் காரை ஓட்டிக்கிட்டு வந்திட்டேன்.."

கார் வரவும் சட்டென ஏறிவிட்ட தன் முட்டாள் தனத்தை நொந்து கொண்டாள் ராதிகா.. கண்ணாடிக் கதவின் உள்புறமாக டிரைவர் சீட்டில் அமர்ந்திருந்தவன் தலையைச் சரித்திருந்ததால் அவள் சரியாக அவன் முகத்தைப் பார்த்துத் தொலைக்கவில்லை..

"இதென்ன விளையாட்டு சங்கர்..?" அவளுக்கு கோபம் வந்தது..

"யார் விளையாடியது..? என் வாழ்க்கையில் விளையாடியது நீதான்.." அவன் கோபத்துடன் உறுமினான்..

"உங்க வாழ்க்கையில் நான் விளையாடினேனா..?" ராதிகா திகைத்தான்..

'இவன் என்ன.. இப்படி உளருகிறான்..?'

"யெஸ்..யெஸ்.. யெஸ்.. நீதான் என் வாழ்க்கையில் விளையாடிட்ட.. என்னைக் காதலிச்சுட்டு.. முரளிக்கு கழுத்தை நீட்டிட்ட.." அவன் குற்றம் சாட்டினான்..

'இது என்ன புதுக் கதை..?' ராதிகாவுக்கு தலை முடியை பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது..

இன்னொருவனுக்கு மனைவியாகி விட்டவளை.. ஒரு குழந்தைக்கு தாயுமாகி விட்டவளை.. கடத்திக் கொண்டு வந்து காதல் வசனம் பேசுகிறானே.. இவனை என்ன செய்தால் தகும்..?

ராதிகாவுக்குள் கோப அலை எழுந்தது.. அது நாள்வரை சங்கரின் மீது அவளுக்குள் இருந்த அனுதாபம் காணாமல் போய்விட.. அந்த இடத்தை கடுங்கோபம் ஆக்ரமித்துக் கொண்டிருந்தது..

"முதலில் காரை நிறுத்துங்க சங்கர்.." கண்டிப்புடன் கூறினாள் ராதிகா..

"நீ சொன்னாலும்.. சொல்லா விட்டாலும் நிறுத்தத்தான் போகிறேன்.. நம் வீடு வந்து விட்டது.. இறங்கு.." அவன் காரை நிறுத்தினான்..

'நம் வீடா..?' ராதிகாவின் ரத்த அழுத்தம் எகிற ஆரம்பித்தது...

இவன் எங்கே கொண்டு வந்திருக்கிறான் என்ற நினைவுடன் சுற்று முற்றும் பார்த்தவளுக்கு தூக்கி வாரிப் போட்டது...

மரங்கள் அடர்ந்த அந்தக் காட்டுக்குள் தனித்து நின்றது அந்த வீடு.. சூரிய வெளிச்சம் கூட உள்ளே வர முடியாதபடி அடர்ந்து இருண்டிருந்த அந்த காட்டுக்குள் எப்படி வீட்டைக் கட்டி குடியிருக்கிறார்கள் என்று அவளுக்குப் புரியவில்லை..

அந்தக் காடு குற்றாலத்தின் எந்தப் பகுதியில் வருகிறது என்று அவளால் அனுமானிக்க முடியவில்லை.. மூளியுடன் கூடவே போய்.. கூடவே திரும்புகிறவளுக்கு.. குற்றாலத்தின் பிரதானவீதிகள் தெரிந்தாலே அதிசயம்.. இதில்.. காட்டுப் பகுதிகளைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்..?

"இறங்க முடியாது.." அழுத்தம் திருத்தமாக மறுத்தாள் ராதிகா..

"நீ இறங்கித்தான் ஆகனும் ராதிகா.." தீர்மானமாக சொன்னான் சங்கர்..

"கனவு காணாதே.." ராதிகா மரியாதையைக் கைவிட்டாள்..

"கனவுதான் கண்டேன்.. உன்கூட வாழப் போகிற வாழ்க்கையைப் பற்றிய கனவு.. நீதான் அதை அடியோடு புரட்டிப் போட்டு விட்டாயே... புரண்டு விழுந்ததை சரியாக்க வேண்டாமா..? இறங்கி வா.."

"முடியாது..."

"பிடிவாதம் பிடிக்காதே.. நீ மறுத்தால் நான் உன்னை பலவந்தப்படுத்த வேண்டி இருக்கும்.."

"முட்டாள்.." ராதிகா சீறினாள்..

"அறிவில்லாம பேசாதே.. நான் ஒரு குழந்தைக்கு தாய்.. உனக்கு அந்த நினைப்பிருக்கா..?" அவள் கொந்தளித்தாள்..

"முதலில் உனக்கு அந்த நினைப்பிருக்கா..?" நிதானமாகக் கேட்டான் சங்கள்..

"என்ன சொல்கிற..?" அச்சத்தில் விழி விரித்தாள் ராதிகா.. அவளுக்குள் பயம் சூழ்ந்து கொண்டது...

"உன் மகன் இந்த வீட்டுக்குள்தான் இருக்கிறான்.."

"என்னது..?!.."

"நம்ப முடியலையா..? வேணும்னா அவன் கூப்பிடறதைக் கேளு.."

சங்கர் வீட்டின் கதவுகளைத் திறந்து வைத்த போது தெளிவாக கண்ணன் ராதிகாவை அழைத்தான்..

"அம்மா..!"

'இது கண்ணனின் குரல்தான்..'

ராதிகா காரை விட்டு இறங்கி.. வீட்டுக்குள் பாய்ந்து விட்டாள்..

'கண்ணன் எப்படி இங்கே வந்தான்..? இந்த சங்கர் என் மகனையும் கடத்திக் கொண்டு வந்து விட்டானா..?'

மகனின் நினைவில்.. அவன் எப்படி அங்கு வந்து சேர்ந்தான் என்ற பதட்டத்தில் வீட்டுக்குள் ஓடியவள் திகைத்து நின்றாள்..

அங்கேயிருந்த டிவியில்.. பிறந்த நாள் விழாவின் போது எடுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் ஓடிக் கொண்டிருந்தன..

"அம்மா.." கண்ணன் அவளை திரையிலிருந்து அழைத்தான்..

'இதை யார் ரெகார்டு பண்ணினது.. இவன் கையில் எப்படி இது கிடைச்சது..? இதை நம்பி வீட்டுக்குள் வந்துட்டேனே...'

ராதிகா திரும்பி ஓட முனைவதற்குள் சங்கர் கதவை மூடிச்சாவியை கையில் எடுத்துக் கொண்டு விட்டான்.. அவன் முன்னேறிவர.. ராதிகா பின் வாங்கினாள்..

"இந்த சிடி.. நித்யாவிடம் இருந்தது.. ஹேமா கேட்டாளாம்... அவளுக்காக இவ.. உன் வீட்டுக்கு வந்து செல்போனில் பார்த்தே செலரேசனை வீடியோ எடுத்திருக்கா.. என் கண்ணில் பட்டதும் நான் ஒரு பிரிண்ட் போட்டு கையில் எடுத்துட்டேன்.."

"உன் புத்திசாலித் தனத்தை இதைப் போலா தேர்ட்ரேட் வேலைக்கு யூஸ் பண்ணுகிற அளவுக்கு நீ தாழ்ந்து போய் விட்டாயா சங்கர்..?"

"வேற என்ன செய்வது..? உன்னைப் போல முதுகெழும்பில்லாத ஒருத்தியை காதலித்தா இந்தத் கதிதான் வரும்.."

"நான் உன் காதலை ஏத்துக்கவே இல்லையே.."

"பொய்.. நீ என் காதலை ஏத்துக்கிட்ட.. என்னை மேரேஜ் பண்ணிக்கப் போகிற சந்தோசத்தில இருந்த.."

"அது உன் கற்பனை.."

"எது கற்பனை..? முதலில் நீ இதைக் கேளு.."

ஷோபாவின் செல் போனிலிருந்து இடம் பெயர்ந்த ராதிகாவின் அந்நாளைய பேச்சை ஒலிக்க விட்டான் சங்கர்...

ராதிகா திக்பிரமையுடன் உறைந்து நின்று விட்டாள்...

சங்கருடனான அவளுடைய திருமணத்தை நிறுத்துவதற்காக அவள் பொய்யாக பேசிய பேச்சு.. எந்த அளவுக்கு அவள் வாழ்க்கையில் விளையாடிக் கொண்டிருக்கிறது..? இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் இந்தப் பேச்சு அவளைத் துரத்திக் கொண்டிருக்கப் போகிறது..?

இது உனக்கு எப்படித்தெரியும் என்று ராதிகா கேட்கவில்லை..

குற்றாலத்திற்கு வந்து போன ஷோபா அடுத்த வினையின் விதையை ஊன்றி விட்டுச் சென்றிருப்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது..

"பேசு ராதிகா.. இப்போது பேசு.. இது வரைக்கும் வாய் வலிக்கப் பேசினாயே.. அந்தப் பேச்சு எங்கே போனது..? இப்படிப்பட்ட பேச்சை பேசினது நீதானே.. என் கூட வாழ இருந்த வாழ்க்கையைப் பற்றிய சந்தோசத்தில் இருந்தது நீதானே.. அப்புறம் எதுக்காக முரளியை மேரேஜ் பண்ணிக்கிட்ட..? உனக்கு எது

நடந்திருந்தாலும் நான் உன்னை ஏற்றுக்கிட்டு இருப்பேனே.. எதை வைத்து அவன் உன்னை பிளாக் மெயில் பண்ணி பணிய வைத்தான்..?"

ராதிகாவுக்கு அழுகை வந்தது.. அவளுடைய முரளியை வில்லனாக நினைத்து சங்கர் பேசும் பேச்சை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. சுற்று முற்றும் பார்த்தாள்.. டைனிங் டேபிளில் பழங்கள் அடுக்கியிருந்த தட்டு அவள் கண்ணில் பட்டது.. அதிலிருந்த கூர்மையான கத்தியை கைப்பற்றிக் கொண்டாள்..

"கிட்டே வராதே சங்கர்.." கத்தியைக் காட்டி எச்சரித்தாள்..

"குத்தப் போகிறாயா..? குத்து.. சந்தோசமாகச் சாகிறேன்.. இப்படி கண்ணுக்கு முன்னால் உன்னை வைத்துக்கிட்டு.. உன்கூட வாழ முடியாமல் துடிப்பதற்குப் பதில் உன் கையால் செத்து விடலாம்.. வா.. ராதிகா.. வந்து என்னைக் குத்திக் கொன்று விடு." சங்கர் உன்மத்தம் பிடித்தவனாக முன்னேறினான்..

"உன்னைக் குத்த மாட்டேன்.. என்னைக் குத்திக்குவேன்.."

ராதிகாவின் கை கத்தியை அவள் கழுத்தில் அழுந்தப் பதித்தது..

"வேண்டாம்.." பதறிப் போனான் சங்கர்..

"பின்னாலே போ சங்கர்.." உறுதியுடன் பேசினாள் ராதிகா..

"போகிறேன்.. நீ கத்தியை கீழே போடு.." அவன் மன்றாடினான்..

"நான் உன்னைக் காதலிக்கலை சங்கர்.. கடவுளின் மீது சத்தியமாகச் சொல்கிறேன்.. உன்னை நான் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.." ராதிகாவின் கண்களில் நீர் தளும்பியது..

"பொய் சொல்லாதே.." சங்கர் நம்ப மறுத்தான்...

"உண்மையைத்தான் சொல்கிறேன்.. அன்றைக்கு ஷோபாவோட பெர்த்டே பார்ட்டியை அட்டெண்ட் பண்ண நானும் ஹேமாவும் வந்திருந்தப்ப நீங்களும்.. முரளியும் எங்களுக்கு அறிமுகமானிங்க.. இந்த நொடியில் கடவுளை சாட்சியாக வைத்து யாரிடமும் சொல்லாத இந்த உண்மையை உன்னிடம் நான் சொல்கிறேன் சங்கர்.. முரளியைப் பார்த்த அந்த நொடியிலேயே என் மனதை அவரிடம் பறி கொடுத்து விட்டேன்.." ராதிகாவின் கண்களில் கண்ணீர் பெருகி வழிந்தது..

"ராதிகா..!" சங்கர் திகைத்தான்...

"இந்த உண்மை முரளிக்கு கூட இது நாள் வரைக்கும் தெரியாது.." ராதிகாவின் கண்ணீர் கன்னத்தில் வழிந்து.. தரையில் விழுந்து சிதறியது..

சங்கரினால் கண்ணீரின் ஈரம் படிந்த ராதிகாவின் முகத்தைக் காணச் சகிக்கவில்லை.. அவள் சுண்களில் உண்மை இருந்தது.. பொய்யில்லை..

"என்ன சொல்கிற ராதிகா.. உன்னைக் காதலிச்சு மேரேஜ் பண்ணிக்கிட்டதாகத்தானே முரளி எல்லோரிடமும் சொல்லிக் கிட்டிருக்கான்..?" சங்கரின் குரலில் கோபம் மீண்டிருந்தது..

"நிறைய நடந்திருச்சு சங்கர்.. யாரிடமும் சொல்ல முடியாம தனியே நான் அழுது கரைந்த நாள்களெல்லாம் வந்து போயிருச்சு.."

"ஆனா.. அது.. ஏன்..?"

"ஏன்..? இதே கேள்வியைத்தான் கடவுளிடமும் நான் கேட்டுப் பார்த்துட்டேன்... பதில்தான் கிடைக்கலை.. ஏன் நான் முரளியைப் பார்த்தேன்..? ஏன்.. பார்த்த மறு செகண்டிலேயே அவரிடம் என் மனதைப் பறி கொடுத்தேன்...? ஏன் அவருக்கு என் காதல் தெரியாமல் போனது..? இப்படி பல 'ஏன்...'களை என் வாழ்க்கையில் கேட்டுக் கொண்டே இருக்கிறேன்.."

"நீ அவனின் வொய்ப்..."

"யெஸ்.. பட்.. உன்னைப் போல.. இந்தக் கல்யாணத்தை அவருடைய பிளாக் மெயிலுக்குப் பயந்து கட்டாயத்தினால் ஒப்புக்கிட்டு.. அவருக்கு கழுத்தை நீட்டியிருப்பதாக அவர் நினைக்கிறார்..."

"மை.. காட்..!"

"அவரை எனக்குப் பிடிச்சிருந்தது... அவரின் அட்ரஸ் தெரியாம எப்படி அத்தை ஷோபாகிட்டக் கேட்கிறதுன்னும் தெரியாம நான் தவிச்சுக்கிட்டு இருந்தேன்... அப்பப் பார்த்துத்தான் நீ வந்த.. காதல் சொன்ன..."

"நீ ஏத்துக்கலை..." சங்கர் யோசனையுடன் சொன்னான்...

"நீ காலேஜீக்கு வந்த... லைப்ரரிக்க வந்த.. கோவிலுக்கு வந்த.. பார்க்குக்கு வந்த... நான் போகிற இடத்துக்கெல்லாம் நிழல் போல நீ வந்த.. காதல் சொன்ன..."

"ஒவ்வொரு முறையும் நீ தட்டிக் கழிச்ச..."

"அந்த ஒவ்வொரு முறையும் உன் நிழலாய் அவர் நம்மை தொடர்ந்து வந்திருக்கிறார்..."

"ஓ..."

"நீ காதல் சொல்லி... நான் மறுத்துப் பேசிய பேச்சுக்கள் எதையும் அவர் கேட்கவில்லை... தூரத்திலிருந்தே பார்த்தவர்... உன்னை நான் காதலிக்கிறேன்னு தப்பாப் புரிஞ்சுக்கிட்டார்..."

ராதிகாவின் துயரத்தில் சங்கருக்கு எதுவோ புரிவதைப் போல இருந்தது... அவள் முகத்தையே உற்றுப்

பார்த்தவனுக்கு... அவள் விழிகளில் தெரிந்த வேதனையின் சாயல் தெளிவாகத் தெரிந்தது...

"என்னிடம் கேள்வி கேட்டார்... சண்டை போட்டார்.. உன்னைத்தான் காதலிக்கிறேன்னு குற்றம் சாட்டினார்... கோபப்பட்டார்... இத்தனையும் செய்தவர்... என் பதிலை நம்பாம விட்டுவிட்டுப் போயிட்டார்..."

ராதிகாவிற்கு துயரத்தினால் தொண்டை அடைத்தது... இவளின் துயரம் வருடக்கணக்கில் இவளைத் துரத்திக் கொண்டிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான் சங்கர்...

'இவ யாரைக் காதலிச்சாளோ... அவனே இவ காதலை நம்பாதபோது இவளால் மத்தவங்களிடம் அதைச் சொல்ல முடியாமல் போனதில் ஆச்சரியமில்லை...'

எதனால் ஹேமாவிற்கு ராதிகாவின் காதலைப் பற்றித் தெரியவில்லை என்பது இப்போது அவனுக்குத் தெரியவந்தது...

"நீங்க பெண் கேட்டு வந்திட்டிங்க சங்கர்... அம்மாவுக்கு உங்களைப் பிடிச்சுப் போச்சு... வீட்டில் கல்யாணப் பேச்சு ஆரம்பமாகிருச்சு... கல்யாணத்தை நிறுத்த என்ன வழின்னு யோசிச்சேன்... முரளியைத் தேடினேன்.. அவர் எங்கேயிருக்கார்ன்னே தெரியலை.. ஷோபாதான் சரியான வழின்னு கடைசியில தீர்மானிச்சேன்..."

கேட்பதற்கு ஆளிருந்தால்.. சொல்வதற்கான வார்த்தைகள் அருவி போலக் கொட்ட ஆரம்பித்து விடுகின்றன...

ராதிகாவும் தன் மனதைத் திறந்து சங்கரிடம் கொட்டிக் கொண்டிருந்தாள்... அவன்மேல் அவள் கொண்டிருந்த மரியாதையும் மீண்டு வந்திருந்தது..

"அவளுக்கு உங்க மேல நோக்கமிருக்குன்னு எனக்குத் தெரியும் சங்கர்... நீங்க பெண் கேட்டு வந்ததை அவளுக்குத் தெரியப்படுத்தி... அவ பொறாமையைத் தூண்டி விட்டால்... எப்படியும் அந்தக் கல்யாண ஏற்பாட்டை நிறுத்திருவான்னு நினைச்சேன்... அவ காதுபட.. இன்னொரு பெண்ணிடம் பொய்யா நான் பேசின பேச்சுத்தான் இது... இதை ஷோபா ரெகார்டு பண்ணியிருப்பான்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை..."

"இதைப்பத்தி என்னிடம் சொல்லியிருக்கலாமே ராதிகா...?"

"உங்களைப் பிடிக்கலைன்னு சொன்னேனே..."

"முரளியைப் பிடிக்குதுன்னு சொல்லலையே..."

"அதை அவருக்குத் தெரியப் படுத்தாம மத்தவங்க கிட்ட எப்படி நான் சொல்லுவேன் சங்கர்..?"

"அவனிடம் சொன்னாயா..?"

"இல்லை..."

"வாட்..?!" சங்கர் ஆச்சரியப்பட்டான்...

"யெஸ்.. கல்யாணமாகி.. இத்தனை வருசமா அவருடன் குடும்பமும் நடத்தி.. ஒரு குழந்தையையும் பெற்றுவிட்டேன்... இன்னும் என்னுடைய காதலை அவரிடம் நான் சொல்லவில்லை..."

சங்கரின் முகத்தில் மிதமிஞ்சிய ஆச்சரியம் தெரிந்தது...

"ஷோபா பேசின பேச்சை அவர் எப்பவுமே நம்ப மாட்டார்.. ஆனால் நான் பேசின இந்தப் பேச்சை நம்பிட்டார்..." மெதுவாக சொன்னாள் ராதிகா..

"ராதிகா..!" சங்கரிடம் அதிர்வு தெரிந்தது...

"ம்ம்ம்.. நான் உங்களைத்தான் காதலிக்கிறேன்னு அவர் நினைச்சுட்டார் சங்கர்... அந்த நினைப்பை இந்தப் பேச்சு உறுதிப் படுத்திருச்சு.." ராதிகா பெருமூச்சு விட்டாள்...

"அப்புறமும் எப்படி உன்னை மேரேஜ் பண்ணிக்கிட்டான்..?"

எதை வைத்து ராதிகாவை பாலமுரளி பணிய வைத்தான் என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வம் சங்கரின் குரலில் தெரிந்தது...

ராதிகா மறுப்பாக தலையசைத்தாள்

"அந்தரங்கம் புனிதமானது சங்கர்.. எனக்கும்.. என் முரளிக்கும் இடையே ஆயிரம் நடந்திருக்கலாம்.. அதெல்லாம் எங்களுக்கு மட்டுமே சொந்தமானது..."

"ஐ ஆம் ஸாரி ராதிகா..."

"இட்ஸ் ஆல் ரைட்.. தெரிந்தோ.. தெரியாமலோ.. என்னால் உங்க வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அதுக்காக என்னை மன்னிச்சிருங்க சங்கர்..."

"மத்ச்... நான் ஒரு இடியட்.. நீ அத்தனை சொல்லியும்.. கேட்காம உன்னை ஃபாலோ பண்ணிக்கிட்டு என் வாழ்க்கையை குழப்பிக்கிட்டு இருந்துட்டேன்..."

"நித்யா நல்ல பெண்..."

"எனக்கும் அது தெரியும்..."

அதற்கு மேல் ராதிகா எதையும் பேசவில்லை... அந்தரங்கம் என்பது அவளுக்கு மட்டும் தான் புனிதமானதா..? சங்கர் – நித்யாவுக்கும் அப்படித்தானே இருக்கும்...?

"இனி மேலாவது வழி விடுங்க சங்கர்..."

அப்போதும் கத்தியைக் கீழே போடாமல் ராதிகா நின்றிருக்க.. சங்கர் பெருமூச்சுடன் விலகி... கதவைத் திறந்தான்.. ராதிகா.. வெளியேற முயன்ற போது...

"பொறு ராதிகா.." என்று வீட்டுக்குள் குரல் ஒலித்தது...

முரளியின் குரலை ராதிகா இனம் கண்டு கொண்டு திரும்பிப் பார்த்தாள்... வீட்டுக்குள்ளேயிருந்து முரளி வெளியே வந்தான்... சங்கரின் முகம் மாறியது... முரளி சங்கரை முறைத்துக் கொண்டே அவனருகில் சென்று சட்டையைக் கொத்தாகப் பிடித்தான்.. அவன் முகத்தில் கோபம் தாண்டவமாடியது...

"நீ செய்ய நினைத்த வேலைக்கு உன்னைக் கொன்று புதைச்சிருக்கனும்.. எனக்குத் தெரியாத என் பெண்டாட்டியின் மனசை இன்னைக்கு நான் தெரிஞ்சுக்கிட்டேன்.. அந்தச் சந்தோசத்தில உன்னை விட்டு வைக்கிறேன்... இல்லேன்னா உன் உயிர் உன் உடம்பில் தங்கியிருக்காது... இது என் இடம்டா.. நீ காட்டுக்குள்ள புதுசா வந்தவன்.. நான் இந்தக் காட்டிலேயே பிறந்து வளர்ந்தவன்.. எனக்கு நீ ஆட்டம் காட்டறியா.. எனக்குத் தெரியாம இங்கே துரும்பு கூட அசையாது.. இந்த வீட்டுக்கு நீ அட்வான்ஸ் கொடுத்தப்பவே எனக்கு விவரம் தெரியும்... உன்னைச் சுத்தி ஒரு கண்காணிப்பு படையையே வைச்சிருக்கேண்டா.. இந்த பாலமுரளியின் நிழலைத் தொடக்கூட எவனும் பயப்படுவான்... நீ என் பெண்டாட்டியைத் தொட துணிஞ்சிட்ட.. உன்னை உயிரோடு விட்டு வைக்கலாமா..?"

முரளியின் பிடி இறுகியபதில் சங்கர் மூச்சுத் திணறினான்.. ராதிகா பதறினாள்...

"அத்தான்..."

அவளைத் திரும்பிப் பார்த்தமுரளி ரௌத்திரம் குறைத்தான்...

"நீ கொடுத்த காபியை மாணிக்கம் குடிக்கலடா.. பாவ்லா செய்தான்.. உன் ஆட்டத்துக்கு முடிவு கட்ட நான்தான் அவனை அப்படி நடிக்கச் சொன்னேன்... உன்னை வெட்டிப் போடத்தான் இந்த வீட்டுக்குள்ள உனக்கு முன்னாலேயே வந்து காத்திருந்தேன்.. ஆனா..."

முரளி பேச்சை நிறுத்தி ராதிகாவைப் பார்த்தான்.. அவன் முகம் கனிந்திருந்தது...

"இவ மனசு எனக்குத் தெரியலைங்கிறது உண்மைதான்.. ஆனா.. இவகூட வாழ்ந்த இத்தனை வருச வாழ்க்கையில ஒரு நொடி கூட இவளிடம் பொய்யிருந்து நான் பார்த்ததில்லை... அது எனக்குள்ளே கேள்வியை எழுப்பிச்சு.. நாங்க பாரின் போகிறதுக்காக சென்னைக்கு போயிருந்தப்போ இவதங்கை ஒரு விசயம் சொன்னா.. உன்கூட நடக்கவிருந்த கல்யாணத்தில ராதிகாவுக்கு இஷ்டமில்லைன்னு சொன்னா.. ஷோபா அனுப்பின இவ பேச்சுக்கும்.. இவ தங்கச்சி சொன்ன ஸ்டேட் மென்ட்டுக்கும் வித்தியாசம் இருந்தது... அது இடிச்சது... எனக்குள்ள யோசனை ஆரம்பிச்சுச்சு..."

ராதிகாவின் கண்களில் மின்னல் வந்தது.. அன்றைய இரவில் என்றைக்குமில்லாத வகையில் முரளி காட்டிய நெருக்கத்தை அவள் நினைத்துப் பார்த்தாள்.. அவன் முகத்தில் தெரிந்த ஏதோ ஒன்றும் அவள் நினைவுக்கு வந்தது...

"பாரின் போனா.. அங்கேயும் நீ வந்து தொலைச்சே.. நான் இல்லாதப்ப இவளை நீ பார்த்திருக்க.. இவ உன்னைப் பார்த்ததும் பயந்துபோய் ரூமுக்கு ஓடிட்டா.. எனக்காக கதவைத் திறக்கக்கூட பயந்தா.. அது என் மனசில மின்னலா பதிஞ்சிருச்சு.. உன்மேல எண்ணமிருந்தா உன்னைக்கண்டு இவ பயப்படமாட்டாளே.. உன்னைப் பார்த்ததையும் என்னிடம் சொல்ல மாட்டாளே..."

அன்றும் அவன் இரவில் அதிக நெருக்கம் காட்டினான் என்பதை நினைவு கூர்ந்தாள் ராதிகா.. அவன் முகத்தில் தெரிந்த அந்த புரியாத ஒன்றிற்கான விளக்கம் அப்போது அவளுக்குப் புரிந்தது...

"கோவிலில் இவளை நீ பார்த்தப்ப எப்படி பயந்து ஓடி வந்தா தெரியுமா..? அதைப் பார்த்த பின்னாலுமா நீ அந்த ஷோபாவோட பேச்சை நம்பி.. இந்தக் காரியத்தை செய்யத் துணிஞ்ச...?"

ராதிகாவுடன் சேர்ந்து சங்கரும் ஆச்சரியப் பார்வை பார்த்தான்....

"எனக்கு எப்படித் தெரியும்ன்னு நினைக்கறியா..? ஷோபாவோட புருசன் கோகுல்தான் சொன்னான்..."

"அவன் எனக்கும்.. மாதேஷிக்கும் கிளாஸ்மேட்.."

"தெரியும்.. உங்களைப் பார்க்கத்தான் குற்றாலம் வந்தானாம்..."

"அவன் ஷோபாவை மேரேஜ் பண்ணிக்கிட்டது எங்களுக்குப் பிடிக்கலை... அவள் குணத்தைப் பத்தி அவனிடம் சொன்னோம்.. பட்.. இட்ஸ் டூ லேட்..."

"கல்யாணத்துக்குப் பின்னால சொன்னா அது லேட்தான்... அவகூட ஒத்துமையா குடும்பம் நடத்த முடியாம அவன் அவஸ்தைப்படறான்... உங்களுக்கு இது தேவையா..? கல்யாணம்ன்னா உனக்கு விளையாட்டாப் போயிருச்சா..?"

"இதை நாங்க யோசிக்கலை முரளி..."

"நீ எதைத்தான் யோசிச்ச... அவ உன்னிடம் ராதிகாவோட ரெகார்டு பண்ணின பேச்சைக் கொடுத்திட்டதை அவன்தான் எனக்குச் சொன்னான்.. ஜாக்கிரதையா இருன்னு எச்சரிச்சான்..."

"அவன்தான் ஜாக்கிரதையாய் இருக்கனும்.. அது தெரியாம நம்மளை எச்சரிக்கிறான்..."

"நம்மளன்னு... நீயும் என்கூட கூட்டுப் போட்டுக்கறியா..? நேரம்டா.."

கோபமில்லாத குரலில் கூறியமுரளி... சங்கரின் சட்டையை விட்டான்.. அதை நீவி சரி செய்து கொண்ட சங்கர்...

"ஐ ஆம் ஸாரி முரளி..." என்றான்...

"உன்னைக் கொன்னே போட்டிருவேன்.. ஒடிப் போயிரு.. நீ செய்யத் துணிஞ்ச காரியத்துக்கு உன்னை மன்னிக்க முடியுமா..?"

ராதிகாவுடன் வெளியே வந்த முரளி.. ஒரு மரத்தின் மறைவிலிருந்த அவன் கார் கதவைத் திறந்து விட்டான்... அவள் ஏறிக்கொள்ளவும் அவனும் காரில் ஏறிக் காரைக் கிளப்பினான்.. மலைப் பாதையில் கார் ஓட ஆரம்பித்தது.. வீட்டிற்குப் போகாமல் அருவிக் கரையில் கார் நிற்கவும்...

"என்ன பாஸ்... என்னைக் கடத்திக்கிட்டு வந்திருக்கீங்களா..?" என்று விழிகளில் சிரிப்பு மின்னக் கேட்டாள் ராதிகா..

முரளி பதில் சொல்லாமல் காரை விட்டு இறங்கி அருவிக் கரையில் நின்றான்.. கைகளை விரித்து... விழிகளால் அவளை அழைத்தான்..

அதே அருவி..! ராதிகாவின் கனவில் வந்த கொட்டும் அருவி...!

கனவில் மிதந்தவளாய் ராதிகா காரை விட்டு இறங்கினாள்.. புதுமணப்பெண்போல அடிமேல் அடியெடுத்து வைத்து அவன் கைகளுக்குள் புகுந்தாள் அவன் மார்பில் ஒன்றிக் கொண்டாள்...

"ராதிகா..."

அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்ட முரளியின் அணைப்பில் புது வேகம் தெரிந்தது... அவளது காதலுக்கு அவன் மட்டுமே உரியவன் என்ற கர்வம் தெரிந்தது...

"இன்றைய நாள் எனக்கு இனிய நாள்டி..."

"எனக்கும் தான்... நான் உங்களைக் காதலிக்கிறேன் முரளி.. உங்களை மட்டும் தான் காதலிக்கிறேன்..." சொல்லாமல் மறைந்திருந்ததை சொல்லி விட்டாள் ராதிகா...

"ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமேடி..." முரளி உருகினான்...

"அதைச் சொல்கிறதுக்குள்ளதான நீங்க அவசரப்பட்டு என்னைத் தொட்டுட்டிங்களே.. அதுக்குப் பின்னால் நான் என் காதலைச் சொன்னா அது பொய்யாகத்தான் உங்களுக்குத் தோணியிருக்கும்.. நீங்க தொட்டுட்டதற்காக நான் போடும் வேசமாக நீங்க நினைத்திருப்பீங்க..."

அவள் சொன்னதிலிருந்த உண்மையை உணர்ந்தவனின் மனம் பொங்கியது.. ஆவேசத்துடன் அவளை இறுக்கிக் கொண்டான்...

"என் ராது..."

"அதுக்கப்புறம் உங்களிடம் காதலைச் சொல்லவும் என்னால் முடியலை... காலில் விழுந்து கதறி வாழ்க்கைப் பிச்சை கேட்கவும் மனசு வரலை..."

"என்னை மன்னிச்சிருடி..."

அவன் குரல் கரகரக்கக் கூறியபோது அவளுக்கு மனம் தாளவில்லை.. அவன் வாயைப் பொத்திவிட்டு.. அவன் மார்பில் தலைசாய்த்தாள்...

"அந்த ரெண்டையும் செய்யாம உங்களுக்குப் பெண்டாட்டியாகனும்னா என்ன வழின்னு யோசிச்சேன்... ஷோபாதான் திரும்பவும் நினைவுக்கு வந்தா.. அவ காதுபட சங்கரைப் பார்க்கப் போகிறதா சொன்னேன்.. நான் நினைச்சதைப் போல நீங்க மறுபடி வந்து நின்னீங்க.."

"நினைச்சேண்டி.. இப்படித்தான் நீ யோசிச்சிருப்பன்னு இப்ப நினைச்சேன்... ஷோபாவோட புருசன் சொன்ன பின்னாலே சங்கர் உன்னைத் துரத்த ஆரம்பிச்சுருவான்னு எனக்கு தோணிச்சு.. உன்னைத் தனியா விடாம பாதுகாப்பா வைச்சிருந்தேன்..."

"ஓ.. அதனாலதான் டெலிவரிக்குக் கூட நீங்களும் கூட வந்தீங்களா.. ?"

"ஆமாம்.. நீ வீட்டுக்குள்ளேயே இருக்கிற வரைக்கும் பிரச்னையில்லாம இருந்தது.. வெளியே வரவும்.. சங்கர் துரத்த ஆரம்பிச்சுட்டான்..."

"அவர் பாவம்.. நல்லவர்..."

அதற்கு மேல் என்ன சொல்வது என்று புரியாதவளாக ராதிகா மௌனம் சாதித்தாள்... முரளியும் எதையும் கேட்கவில்லை... அவர்கள் அருவிக்கரையிலிருந்து திரும்பிய போதுதான் ராதிகா அதைச் சொன்னாள்...

"திடீர்.. திடிர்ன்னு உங்க முகத்தில ஒரு வெளிச்சம் வந்து போகும்... புரியாத பார்வை பார்ப்பீங்க... அதெல்லாம் இதனால்தானா.. ?"

"ம்ம்ம்... ஒவ்வொரு முடிச்சா... கழன்னுக்கிட்டே.. வர...வர.. நீயென்ன நெருங்கிக்கிட்டே வந்த.. அவனைப் பற்றிப் பேசினாக்கூட உனக்குப் பிடிக்கலை... அவனைப் பத்தின பேச்சு உன்னை எந்த வகையிலயும் பாதிக்கலை... வெளிநாட்டில் நாம தேநிலவில் இருந்தப்ப.. அவனை நீ பார்த்துப் பயந்த.. அன்னைக்கு நைட் நான் உன்னைத் தொட்டப்ப அத்தனையையும் மறந்து என்கூட சந்தோசமா இருந்த... அப்பவே எனக்கு உன் மனசு புரிஞ்சு போச்சு.."

அன்றைய நாளின் விடியலில் முரளியின் முகத்தில் பரவியிருந்த எல்லையில்லாத திருப்திக்கான அர்த்தம் அப்போதுதான் ராதிகாவிற்கு பிடிபட்டது...

"ராது..."

"ம்ம்ம்..."

"நான் உன்னை கொடுமைப் படுத்திட்டேனில்ல..."

"நீங்க என்னைக் கொன்றாக்கூட அது கொடுமையில்லை..."

ராதிகா தன் காதலை நிருபித்தாள்... அவளின் அதீத காதலில் நனைந்த முரளியின் கண்கள் பனித்து விட்டன.. அவர்கள் வீட்டுவாசலில்கார் நின்றது... வாசலிலேயே கையில் குழந்தையுடன் மேகலா காத்திருந்தாள்... அழுதழுது கண்ணனின் கண்கள் சிவந்திருந்தன...

"கண்ணா..."

அனைத்தையும் மறந்து பிள்ளையைத் தேடும் தாயாக ராதிகா காரை விட்டு இறங்கி ஓடினாள்... குழந்தை அவளிடம் தாவி வந்தான்... அவள் கழுத்தை இறுக்கிக் கட்டி... அவள் தோளில் முகம் புதைத்தான்...

"பிடிச்சுக்கம்மா... உன் பிள்ளை உன்னைத் தேடி அழுது வீட்டை ரெண்டு பண்ணிட்டான்... நீ வருகிற நேரத்தை தெளிவா தெரிஞ்சு வைச்சிருக்கான்.. எங்க யாருகிட்டயும் அடங்கி இருக்க மாட்டேன்னு சொல்லிட்டான்..."

மேகலாவின் புகாரில்.. ராதிகா குதூகல மடைந்தாள்...

அவளுடைய மகனுக்கு அவள் மட்டும்தான் வேண்டும்... எத்தனை பேர் அவனைச் சுற்றியிருந்தாலும்.. அவன்.. அவளை மட்டும்தான் தேடுவான்.. அவளுக்கு

அது இமாலய சந்தோசத்தைக் கொடுத்தது... தாய்மையின் பெருமிதத்தோடும் கர்வத்தோடும் மகனை அவள் முத்தமிட்டாள்...

அந்த வார இறுதியில் முரளி... மனைவியையும்... குழந்தையையும் வெளியே அழைத்துக் கொண்டு போனான்...

"எங்கே போகிறோம்..?" என்று ராதிகாவின் கேள்விக்கு...

"சஸ்பென்ஸ்..." என்று சொல்லி விட்டான்...

தென்காசியில் அவன் கார் நின்ற போதுதான் தெரிந்தது... அது ஹேமாவின் வீடு என்பது...

"அத்தான்..." விழி விரியப் பார்த்தாள் ராதிகா...

"நீ கேட்ட எல்லாத்தையும் உனக்கு கொடுத்திட்டேன்... உன் சிநேகிதத்தை திருப்பிக் கொடுக்கலை... அதையும் செய்தாத்தான் என் மனசு ஆறும்டி.."

கதவைத் திறந்த ஹேமா... தோழியைக் கண்டதும் ஆனந்தத்துடன்...

"ராதிகா.." என்று கட்டிக் கொண்டாள்...

அன்றைய மதிய உணவை அவர்கள் ஹேமாவின் வீட்டில்தான் சாப்பிட்டார்கள்.. அப்போதுதான் ஹேமா அந்தச் செய்தியைச் சொன்னாள்...

"என்னன்னு தெரியலை ராதிகா... தென்காசியிலிருக்கிற மில்லை மாதேஷ் பெயருக்கு மாற்றி விட்டார் சங்கர்.. பழையபடி சென்னைக்குத் திரும்பப் போகிறாராம்... அதில் நித்யாவுக்கும் அவரோட மாமனாருக்கும் ரொம்ப சந்தோசம்..."

அது எதனால் என்பதைப் புரிந்திருந்த ராதிகாவும்.. முரளியும் மௌனமாக இருந்தார்கள்... சங்கரின் முடிவு இப்படித்தான் இருக்குமென்று தான் எதிர்பார்த்திருந்தாக காரில் திரும்பும் போது முரளி ராதிகாவிடம் கூறினான்...

அன்று இரவில்... முரளி.. அந்தப் பாடலைப் பாடும்படி ராதிகாவிடம் கேட்டான்... அவளும் பாடினாள்...

"அம்மம்மா.. கேளடி தோழி...!
நிலாவினில் நின்றொரு நாழி...
சொல்லாலே உரைத்தது பாதி...
சொல்லாமல் அறிந்தது மீதி...
அம்மம்மா..."

பாடல் வரிகள் அறையெங்கும் பரவிப் படர்ந்த போது... முரளியும் அவள் மேல் பரவிப் படர்ந்திருந்தான்... ராதிகாவுக்குள் ஒரு பிரவாகம் பொங்கியெழுந்து கரையை உடைத்தது..

இந்த வாழ்க்கைதான் எத்தனை இனிமையானது என்று அவளுக்குத் தோன்றியது... கண்ணாமூச்சி

விளையாட்டில் கை தேர்ந்த இந்த வாழ்க்கை சிலகாலம் விளையாடிப் பார்த்தாலும்.. கடைசியில் கை கொடுத்து வாழ வைத்து விடும் வள்ளலைப் போன்றது என்ற நினைவில் அவள் நெஞ்சம் நிறைந்தது... தன்னையறியாமல் அவள் மீண்டும் முணுமுணுத்தாள்...

"அம்மம்மா.. கேளடி.. தோழி....!"